OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
8 -AUG 1913
MADRAS.

# தென் ... திய
# வியவகார ... ந்தாமணி.

1913] ... [1-ம் பிரதி.

## விஞ்ஞாபனம்.

அங்கிலேய பாஷையில் பயின்றிரா...
இந்திய நண்பர்களுக்கு.

நமது மாட்சிமை தங்கிய பிரிடிஷ் கவர்...
டார் ராஜ்ய பரிபாலனம் செய்து வருவ...
ஜைகளுடைய நியாய பரிபாலனத்தைமே...
கிய அப்சமாய்க் கருதி அநேக விதமா...
திட்டங்களை பலவாராய் ஏற்படுத்தி இன்...
சியமாக இதா நூதன சட்டங்களை. ஏ...
தயாராயிருந்து அப்படிப்பட்ட சட்டங்...
சரித்து நம்மில் ஒருவருக்கொருவர் நட...
வதில் ஏற்படும் வியவகாரங்களைத் தீ...
பொருட்டு நியாயஸ்தலங்களைப் பற்...
ளில் ஸ்தாபித்து அவைகளுக்கு அ...
ரிவிஷன், ரிவியூ என்ற பலவித...
வுக்குறிய சாதனைச் செய்திருப்பது...
தெரிந்த விஷயம். அப்படிப்பட்ட...
எவ்விதம் முடிவுபெறுகின்றனவோ...
கவர்ன்மெண்டார் அங்கிலேய பா...
நன்மைக்காக பிரதி மாதமும்...
ரிபோர்ட்டுகளாக பிரசுரம் செ...
கள். தவிர மற்றும் சிலபல சட...
சாலையில் பயின்று நியாய ஸ்தல...
...ளுக்காக வாகாடும். கொமிஷன...

...று வருகின்றார்கள். ஆகியே இவ்வித பலபிரசுரங்களால் அங்கிலேய பாஷையில் பயின்றவர்களனைவரும் சட்டதிட்டங்கள் எவ்விதமாய் பரிபாலிக்கப்பட்டு வருகின்றனவென்றும் ஒவ்வொரு அம்சமும் எவ்விதம் வழக்காடப்பட்டு எவ்விதம் நியாய ...தலங்களில் முடிவான தீர்மான மடைகிறதென்று அறிய மார்க்கம் உண்டு. ஆனால் அடியேன் விஞ்ஞாபனம் செய்துகொள்ளும் நமது தென் இந்திய திராவிட நேயர்களுக்கு அத்தகைய சாதனங்கள் அதிக சொற்பம்தான். அச்சொற்ப சாதனங்களில் ஒன்றை யான் நிர்வகித்து வருவதாய் எண்ணங்கொண்டு ஸிவில், கிரிமினல் வியவாரங்கள் பல நியாய ஸ்தலங்களில் எவ்விதமாய் நடைபெற்று வருகின்றனவோ அவைகளைத் தமிழ் பாஷையில் மாத மிருமுறையாக வியவகார சிந்தாமணி என்ற பெயர்பூண்ட சிறு புஸ்தக ரீதியாய் பிரசுரம்செய்து வருவதற்கு அநேக காரணங்களுக்குள் நமது நேயர்களை வீணான வியவகாரங்களில் தலையிடாம லிருக்கச்செய்வது முக்கியமானதாகும். என்னால் வெளியிடப்படும் பிரதிகளில் சட்ட சம்பந்தமான சமாசாரங்களையும் தகவல்களையும் தவிர வேறு விதமான வர்த்தமானங்...யாவும் இடம்பெறா.

...ந்தமான பல ஆக்ட்டுகளைப்பற்றி
...ம் திறமையு... ...ாயர்...
...ரூட...

1. இந்தியன் லா ரிபோர்ட்டுகள்.
2. மதராஸ் லா ஜர்னல்;
3. மதராஸ் லா டைம்ஸ்.
4. மதராஸ் மேயில்.
5. கிரிமினல் ரிவியூ
6. மற்ற கவர்ன்மெண்டாரால் அங்கீ
பட்ட சட்ட புஸ்தகங்களும் பிரசுரங்களும்.

இவ்விதமான என் பிரயத்தனத்தை விய
களனைவரும் ஆதரிக்கவும் பிரார்த்திக்கி
ன். பிரதமத்தில் தபால் சார்ஜ உள்பட வரு
சந்தாவை குறைவாய் ரூ. 4-8-0 ஆக ஏற்படுத்
இருக்கிறது.

இங்ஙனம் தங்கள் விதேயன்,
எஸ். சுப்பிரமணியன்.

161989

## வியவகார சிந்தாமணி.

மதராஸ் ஹைகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்ட சில முக்கிய வியவகாரங்களின் சுருக்கம்:—

1. 2-வது அப்பீல், 138 of 1912:—டிசம்பர் 19உ 1912.

ஒரு ப்ராமிஸரி நோட்டபாண்டில் இருவர் கையொப்பம் செய்து கொடுத்தார்கள். ஆனால் இவர்களுக்குள் ஒருவாய் மொழியான உடன்படிக்கையிருந்தது. அதாவது ஒருவன் கடன் தொகையைச் செலுத்த தவறினால் மட்டும் மற்றவன் ஷை கடனுக்குப் பாத்தியப்படவேண்டும். இவ்வித ஒப்பந்தமானது செல்லாது. எழுத்து மூலமாய் இருவரும் கடனுக்கு பாத்தியப்பட்டிருக்க அதற்கு விரோதமான வாய்மொழி யுடன்படிக்கை செல்லாதென்று கும்பகோணம் முனிசிப்கோர்ட், சப்கோர்ட், மதராஸ் ஹைகோர்ட் ஆகிய மூன்று கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமானார்கள்.

2. C. R. P. 757 of 1912:—18 டி
இவட மலையாளத்தில் மு
தீர்மான

எதிரி, ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்ய, அங்கு
புல் பெஞ்சு தீர்மானத்தை யனுசரித்து முதலில்
செய்த தீர்ப்பு சரியென்று சொல்லப்பட்டு ரிவியூ
உத்தரவு ரத்தாகிவிட்டது. மனுதார் ஹைகோர்
ட்டில் ஜில்லா கோர்ட் உத்தரவின்பேரில் ரிவி
ஷன் மனுசெய்து கொண்டார். ஜில்லா கோர்ட்
டார் ஷை ரிவியூ உத்தரவுக்குமேல் அப்பீல் பிடி
க அதிகாரவரம்பு இல்லையென்றும், பொதுவாய்
ி. பி. கோ. ஆர்டர் 47 ரூல் 7 இல்கண்ட கார
ங்களிருந்தால் மட்டும் ரிவியூ அனுமதிக்கு அப்
ப உண்டென்றும் ஹைகோர்டார் தீர்மானித்
ர்கள். ரிவியூவுக்கு அனுமதிகொடுக்க மூன்று
ணங்களுண்டு. அதாவது முன் தென்படாத
ப தகவல் வெளியாகி யிருக்கவேண்டும். எழு
பிசகுகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கவேண்
ரிவியூமனு வைப்பற்றி எதிரிக்கு நோடீசு
பி ஆக்ஷேபனை யிருந்தால் அதைகேட்டு
செய்யவேண்டும். இச்சந்தர்ப்பங்களுக்கு
மாய் ரிவியூ மனுவுக்கு அனுமதி கொடுக்
ால் மட்டும் மேற்படி உத்தரவின்பேரில்
உண்டு. முனிசிப்கோர்ட்டாரின் உத்தரவு
ிய காரணங்களுக்கு விரோதமா யில்லை.
ப் பரிகாரம் வேண்டுமானால் ரிவியூவின்
றக்கும் முடிவான முனிசிப் டிக்கிரீயின்
ில் செய்துகொள்ளலாம். அப்படியிரு
னுமதியின்பேரில் அப்பீல் செய்தது
ு இவ்வித அபிப்பிராயப்பட்டு கேஸை
ர்ட்டுக்கு முடிவு பைசலுக்காக அனு
கள். அவரவர் செலவை அவரவர்
உத்தரவாச்சுது.

ஆக்ட்- தேவஸ்தானம்; 2-வது அப்
of 1912:—

ானத்தில் கமிட்டி மெம்பர்களின்
னையென்று குறிக்கப்படாமலிரு
க்கும் மெம்பர்களின் மெஜாரிடி
கில் ஆஜராகி யிருக்கவேண்டுமெ
ல. ஒரு மெம்பர் மீட்டிங்கில்



ல் கமிட்டியார் எப்போதும் தென்கலை
ய நியமிக்கவேண்டியதில்லை. மானேஜ
டைப்பற்றின வழக்குக்கு அவ்விஷயம் ஓர்
ு ஆதாரமாகும்.

. . 2065 of 191(:—13 Dec. 191.

ஒரு ஹிந்து குடும்பஸ்தன் தன் உத்தியோகத்
ுல் சம்பாதித்த சொத்துக்கள் ஏராளமாய்
ருக்க தான் பித்ரார்ஜித சொத்திலுள்ள தன்
ாகம் (ஒரு தரிசு, காலிமனை ஒன்றைமட்டும் சுவா
ீனப்படுத்திக்கொண்டு) முழுவதையும் காலஞ்
சென்ற தன் சகோதரனுடைய புத்திரர்களுக்குக்
கொடுத்துவிட்டு அதில் தன் அக்கை விடுதலை செ
ய்துகொடுத்துவிட்டான். மேற்படியாருடைய புத்
திரர்களனைவரில் ஒருவன் மேற்படி விடுதலைப் பத்
ிரம் பிறந்தபிறகு விவாகமாகிக் காலஞ் சென்று
விட்டான். இறந்துபோன புத்திரனுடைய பாரி
் தனக்கு ஜீவனாம்சம் கிடைக்கவேண்டுமெ
ு தன் மாமனாரையும் அவருடைய மற்ற புத்தி
ரையும் சேர்த்து தாவா செய்ததில் அசல் அப்
ஆகிய இரண்டு கீழ் கோர்ட்டிலும், பூர்வீக
சொத்து யாதொன்றும் மாமனார் வசமில்லாத காரணத்தால், பிராது தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்த வாதியின் முக்கியவாதமாவது:—மாமனார் சம்பாதித்த ஏராளமான ஸ்வயார்ஜித சொத்தில் ஷை யாரின் சகோதரன் மக்கள் யாதொரு பாத்தியமும் கொண்டாடக் கூடாதென்ற ஓர் ஒப்பந்தத்தின் மேல் ஷை விடுதலைப்பத்திரமாகிய பாக விசுத்திபத்திரம் பிறந்ததாகவும், பூர்வீக சொத்தில் அக்காரணத்தால் தான் தன் பாகத்தை இழந்துவிட்டார் என்றும், அக்கருத்துடன் தான் ஷை விசுத்திப்பத்திரத்தில் தன் சவாதீனத்திலிருக்கிற சொத்துக்கள் தன் சுயார்ஜிதமானதென்ற வசனத்தைக் கண்டு அதில் பங்காளிகளின் கையொப்பமும் அங்கீகாரமும் ஏற்பட்டிருப்பதாயும், பூர்வீகசொத்தில்லாமலிருந்தும் புருஷன் கூடப்பிறந்த சபிண்டர்கள் ஜீவனாம்சம் கொடுக்க ஹிந்து லாப்படிக் கடமைப்பட்டவர்களென்றும், தவிர ஒரு பூர்வீக நிலமானது மாமனார் வசமிருப்பதால் அதில் யாதொரு வருமானமில்லாமலிருந்தும் அதைப் பயன்தரும்படிசெய்து, அதின்பயனிலிருந்து வாதிக்கு ஜீவனாம்சம் அளிக்கப்படவேண்டுமென்றும், மற்ற பலவித ஹிந்துலா, தர்மசாஸ்திரம், முதலிய ஆதாரங்களை
எல்லாம் எடுத்து பலவாராய் வாதிக்கப்பட்டன.

எதிரியின் ஆக்ஷேபனை யாவது—சுயார்ஜிதசொத்தில் பங்காளிகள் பாத்தியம் கொண்டாடாதபடிக்கு அதற்கு பிரதியாக பூர்வீக சொத்தில் மாமனார் தன்பாகத்தை விடுதலை செய்யவில்லையென்றும், தனக்கு ஏராளமான சொத்திருப்பதினால் தயவாக தன் பூர்வீக சொத்தின் பாத்தியதையை பங்காளிக்கு இனமாய் அளித்து, விடுதலை செய்து கொடுத்ததாகவும், மாமனார் வசமிருக்கிற பூர்வீக சொத்தாகிய ஒரு காலி நிலத்தில் வாதியின் புருஷனுக்குறிய 5-இல் ஒரு பாகத்தின் கிரயமாகிய ரூ. 50 வாதிக்குக் கொடுக்கத்தயாராயிருப்பதாயும், ஹிந்து லாப்படி, இச்சந்தர்பமான கேஸில், வாதிக்கு பூர்வீகமில்லாத சொத்திலிருந்து எதிரிகள் போஷணை யளிக்கக் கடமைப்பட்டவர்களல்லவென்ற பற்பல வாதங்களேயாம்.

ஹைகோர்ட்டார், ஹிந்து லாவின் கோட்பாடுகளையும் இவ்விஷயமான பல தீர்மானங்களையும் பலவாராய் விவரித்து தர்ம சாஸ்திரப்படி விதவையை ரக்ஷிக்கவேண்டிய பொருப்பு ஸபிண்டர்களுக்கிருக்கும் சந்தர்ப்பம் ஒவ்வொரு கேஸின் அம்சங்களைப் பொருத்ததென்றும், வாதியின் கணவன் இறந்துபோகுமுன்னும் வாதிக்கு விவாகமாகுமுன்னும், பாகவிஸ்தியாகி விட்டகாரணத்தாலும், அக்காலத்தில் ஷை விடுதலையைப்பற்றி புத்திரர்களொருவரும் ஆக்ஷேபிக்கவில்லையென்றும், தவிர வாதியின் கணவன் மைனராயிருக்கையில் பாகவிஸ்தி நடக்கவில்லையென்றும் வாதியாவது மைனரல்லவென்றும், அல்லது அவள் புருஷன் இறந்த காலத்தில் மைனராயிருக்கவில்லையென்றும், அல்லது ஷை வாதி புருஷன் இறந்த முதல் மாமனார் வீட்டில் குடும்பத்தைச் சேர்ந்தவளாய் வசிப்பதைவிட்டு, தன் பிறந்த வீட்டுக்குச்சென்றுவிட்டனள் என்றும், வாதியின் கணவன் ஜீவியகாலத்தில், குடும்பத்தார் வசம் பூர்வீக சொத்தேதுமிருந்தால் அக்காரணத்தால் அவிபக்த சகோதரர்கள் ஓர் விதவையை ஆதரிக்கக் கடமைப்பட்டவர்களென ஹிந்து லாவின் நோக்கமானாலும், கோர்ட்டார் ஷை சொத்தைப்பற்றின வார்சுகளின் வழக்கு, விவாக சம்பந்தமான வியவகாரம்
சம்ப

கோர்ட்டார் அங்கீகரிப்பது அவசியமில்லை என்றும், பலவாராய் அபிப்பிராயங்கொண்டு, கடைசியில் எதிரிகள் ஒப்புக்கொண்டபடி ரூ 50 மட்டும் வாதிக்கு ஜீவனாம்ச மளிக்கப்பட்டது. அவரவர்கள் செலவு அவரவர்களைப் பொறுத்தது.

5. S. A. 849/1911—ஜனவரி 3உ 1913.

பிசகாய் ஒருவன் சொத்தை, கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு ஜப்தி செய்ததினால் ஏற்பட்ட நஷ்டங்களுக்காக தாவா செய்தால், மாச்சரியத்தினால் ஜப்திசெய்ததாக வாதி ரூபகாரப் படுத்த வேண்டிய அவசியமில்லை.

6. பம்பாய் ஹைகோர்ட்டுக்குமேல் - சீமை அப்பீல் தீர்மானம்:—21 நவம்பர் 1912.

பொருள்தரக்கூடிய ஒரு தஸ்தவேஜை ஒருவன் மற்றொருவனுக்கு மேடோவர் செய்தால், அந்த மேடோவர் எழுத்து மூலமான தஸ்தவேஜால் செய்யப்படவேண்டும். அப்படியிருக்க ஒருவன் தன்னுடைய மரண பண்டின் பாலிஸியை எழுத்தில்லாமல் ஜாமீனாக ஒரு பாக்கிதாரனிடத்தில் ஒப்புவித்தான். மற்றொரு பாக்கிதாரனுக்கு ஷை பாலிஸியை எழுத்து மூலமாய் டிரான்ஸ்பர் செய்ய நேரிட்டது. இதுபிந்தியதானாலும், பிரிவி கௌன்ஸிலாரவர்கள் எழுத்தில்லாத முந்திய மேடோவர் செல்லாதென்றும் டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட் 130-வது பிரிவின் வசனங்கள் அப்படிக் கிடங்கொடுக்கவில்லையென்றும், பம்பாய் ஹைகோர்டார் இங்கிலீஷ் லாவை யனுசரித்து முந்திய மேடோவர்தாரனுக்கு பரிகார மளித்தது பிசகென்றும் தீர்மானித்தார்கள். பிந்திய பராதீனம் பாக்கித் தொகைக்கு ஜாமீனாக செய்யப்பட்டபோதிலும் சரியே, அல்லது சுத்த விக்கிரயமான பராதீனமானாலும் சரியே என்றும், எவ்விதமும் எழுத்தில்லாத மேடோவரைவிட பிந்திய எழுத்துள்ள மேடோவர் சிலாக்கியமானதென்றும் அபிப்பிராயப்பட்டார்கள்.

7. S. A. 950/1911:—9 அக்டோபர் 1912.

[illegible]ன்பட்ட கடனைத் தீர்க்கும்பொருட்டு [illegible]கி கண[illegible]ஷன் தாவாவில், வாதி தன் பிரியாதில் ப[illegible]ரனுடைய கடன் தொகையை தான் கட்டியிருப்பதான வசனம் காணவில்லை என்ற காரணத்தைப்பற்றி, அசல், அப்பீல், இரண்டிலும் [illegible]க்கு விரோதமாய் தாவா தள்ளுபடி [illegible] ஹைகோர்டார் 2-வது அப்பீலில், அப்பி[illegible] பிராதில் சொல்லப்படவேண்டிய அவசியமி[illegible]யென்றும், அனந்தர வார்சுக்கு அனுகூ[illegible] தீர்ப்பு செய்யும் அசல் கோர்ட்டார் டிக்கிரீயி[illegible] தாவா சொத்தைப் பொருத்து பாக்கிதாரனுக்கு சேரவேண்டிய தொகைக்கு ஆதாரங் கொடுக்க படியான வசனம் சேர்க்கலாமென்றும், அபிப்பிராயங்கொண்டு, கேஸை அசல் கோர்ட்டுக்கு விஜாரணைக்கு அனுப்பி விட்டார்கள்.

8. C. R. P. 313/1911:—6 நவம்பர் 1912

கும்பகோணம் சப் கோர்ட்டில் 1-ம் பிரதிவாதியால் வாதிக்கு ஏற்பட்ட நோட் கடனை வசூலிக்கும்பொருட்டு, ஷை 1-ம் பிரதிவாதி ஒருவருக்குத் தன் சொத்து முழுவதையும் நோட்டு பின் நன்கொடை யளித்தமையால், ஷை கொடைதாரனை 2-ம் பிரதிவாதியாக சேர்த்து வாதி தாவா செய்தார். நன்கொடைக்குப்பின் நோட்டில் 1-ம் பிரதிவாதி செல்லு வைத்தார். இச்செல்லு நோட்டுக்குறிய காலாவதி தோஷத்தை நிவர்த்தி செய்தது. ஆனால் 2-ம் பிரதிவாதி அச்செல்லு தன்னைக் கட்டுப்படுத்தாதென்றும், தனக்கு நன்கொடை செய்தபின் நோட்டுக்கு உயிருண்டாக்கின செல்லானது நன்கொடை சொத்தைப் பொருக்காதென்றும், தன்மட்டில் காலாவதி தோஷம் வாதித்தார். அவரை நீக்கி 1-ம் பிரதிவாதியின்பேரில் மட்டும் சப் கோர்ட்டார் டிக்கிரீ கொடுத்தார் வாதி ஹைகோர்டில் ரிவிஷன் மனு கொடுக்க, ஹைகோர்ட்டார் இருவர் பேரிலும் டிக்கிரி யளித்து நன்கொடைச் சொத்தைப் பொருத்து, 2-ம் பிரதிவாதியின் மேல் பரிகாரம் கொடுத்தார்கள். லிமிடேஷன் ஆக்ட் 20-வது பிரிவுப்படி கடனைக் கொடுக்கக் கடமைப்பட்ட யார் செல்லுவைத்தபோதிலும் அச்செல்லு காலாவதி தோஷத்தை நிவர்த்திக்கும். கடன்காரனுடைய தகவலின்றியில் ஒருவனுடைய சொத்தை மற்றொருவன் நன்கொடையால் அடைந்து ஷை யான் கடனை வசூலிக்க யத்தனிக்கும்போது, நன்கொடைக்கு முன்னோ பின்னோ ஷை [illegible] புருஷன் (1-ம் பிரதிவாதி[illegible]



[illegible]செல்லை நிராகரித்து காலாவதி பரிகாரம் தே[illegible]து நியாயமன்று. 19-வது பிரிவுப்படி மூல[illegible]ன் செல்லு அல்லது அங்கீகாரம், அவனிட[illegible] சொத்து பாத்தியதையை அடைந்தவனை [illegible]டுப்படுத்தும். 21-வது பிரிவுக்குறிய அம்[illegible] இந்தக்கேஸில் கிடையாது. அனேவர் சேர்[illegible] செய்த ஒப்பந்தத்தில் ஒருவர் செய்த செல்லானது மற்றவர்களை கட்டுப்படுத்தாது என்பது நியாயமே.

9. S. A. 1569-1911:—17 டிசம்பர் 1912.

ஒரு கோர்ட்டில் செய்த தாவா, பைசலாகு முன், இதர ஜில்லாவிலிருக்கும் சொத்தை ஜப்தி செய்து, தீர்ப்பு பெற்ற பிறகு ஷை சொத்தானது ஏலம் போடப்பட்டு பிரதிவாதியின் ஆக்ஷேபனையில்லாமல் ஏலம் உறுதியாகி ஏல சர்டிபிகேட் பிறந்த பிறகு, ஷை ஏலத்தை ரத்துசெய்ய எத்தனிப்பது செல்லத்தக்கதல்ல. தீர்ப்புக்கு முன் வேறு ஜில்லாவிலிருக்கிற சொத்தை ஜப்திசெய்ய அதிகாரமில்லாமலிருந்தும், ஜப்தியில்லாமலே டிக்கிரீ தொகையை வசூலிக்க சொத்தை ஏலம் போடலாமென்ல பல தீர்மானங்களிருக்கின்றன. அவ்விதம் யோசித்தால் தீர்ப்பின் பிறகு ஏலம் போடப்பட்ட இந்த கேஸின் சந்தர்ப்பம் ரத்தாகத் தக்கதல்ல. பிரதிவாதியிடம் மலரணையாய் கிறயம் பெற்றவனுங்கூட இந்த விதமான ஏலத்தை ஆக்ஷேபிக்க இடமில்லை என்ற இவ்விதமான அபிப்பிராயங்கொண்டு தூதுக்குடி சப்கோர்ட் தீர்மானத்திற்கு அனுசரித்து ஹைகோர்ட்டார் ஏல விக்கிரயத்தை உறுதி செய்தார்கள்.

10. C. M. A. 206-1910:—3 செப்டம்பர் 1912.

மதுரையில் புது மாகாண இன்ஸால்வெண்டு ஆக்ட்படிக்கு, கொடுக்கப்படும் மனுக்களை, கோர்ட்டார் அதிகாரத்தைப்போல், விஜாரணை செய்து பைசல் உத்தரவளிக்க ஹைகோர்ட்டாரால் பவர் பெற்ற அபிஷியல் ரிஸீவர் ஓர் மனுவைத் தள்ளுபடி செய்தார். அதன்மேல் அப்பீல் ஜில்லா கோர்டில் செய்யப்பட வேண்டியதிருக்க நேரில் ஹைகோர்ட்டுக்கு செய்த அப்பீல் பிடிக்கப்படத்தக்கதல்லவென்றும், அந்த அப்பீலை ரிவிஷன் மனுவாக பாவித்து பைசல் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதில், அப்பீல் பரிகாரம் இருக்கையில், ரிவிஷனில் பிரவேசிக்கமாட்டோமென்றும் [illegible]வி ஹைகோர்ட்டா[illegible]பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அபிஷியல் ரிஸீவருக்கு மனுவைத் தள்ளுபடி செய்ய சில சந்தர்ப்பங்களில் அதிகாரமில்லை. சில சந்தர்ப்பங்களில் அதிகாரம் உண்டு. நடத்தவேண்டிய நடவடிக்கைகளை நடத்தாமல் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டால் அதன்மேல் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீலுண்டு. நேரில் ஹைகோர்ட்டுக்கு வரச்சட்டமில்லை.

11. S. A. 744-1911:—11 டிசம்பர் 1912.

தர்ம பரிபாலனத்திற்காக ஏற்பட்ட பல தர்மகர்த்தாக்கள் ஒவ்வொருவித தர்மத்தை ஒவ்வொருவர் தனித்தனியாய் மானேஜமெண்டு செய்து வரும்படி தங்கள் உத்தியோகத்தைப் பகர்ந்து பார்த்துவர, அதில் ஒரு தர்மகர்த்தாவினுடைய ஆதீனத்திலுள்ள சொத்தை தீர்வைக் குத்தகைக்கு ஒப்பந்தம் செய்து அனுபவித்துவந்த ஒரு ரயட்டை ஷை நிலத்திலிருந்து விலக்கும்பொருட்டு அந்த தர்மகர்த்தா செய்த தாவாவில் எல்லா தர்மகர்த்தாக்களும் பார்டிகளாகச் சேரவேண்டியதில்லை. சாச்வத குடி பாத்தியதையில்லாத, அல்லது சாச்வத குடி பாத்தியதையுடையவனிடம் அதிகாரம் பெற்று அனுபவிக்காத, ஒரு ரயட்டானவன் இனாம்தார் அல்லது தர்மகர்த்தாவுக்கு வருஷாவருஷம் தீர்வை செலுத்திவர ஒப்பந்தம் செய்து அனுபவித்தால், அவனை எக்காலத்திலும் நீக்கிவிடலாம். இத்தனை வருஷகாலமென்று குறித்திருதபடி ஒப்பந்தமானாலும் பிரதி வருஷமும் நவீனமாக குத்தகை பாத்தியதையை அடைந்தவனாகிறான்.

12. S. A. 516 of 1911:—29 ஆகஸ்ட் 1912.

இரண்டு அவிபக்த சகோதரர்கள் ஒரு மிராசுதாரனிடம் கூட்டான குடி பாத்தியதையைப்பெற்றவர்களாயிருந்தார்கள். ஒருவன்மட்டும் தனக்கு அச்சொத்தில் சாச்வத குடி பாத்தியதை இல்லை என ஒப்புக்கொண்டு ஒரு முச்சலிக்கை யெழுதிக் கொடுத்தான். மிராசுதார் ரெண்டு ரிகவரி ஆக்ட் 10-வது பிரிவுப்படி, ஷையான்பேரில் பட்டா முச்சலிக்கை மாற்றிக்கொள்ளும்படி தாவா செய்து, அந்தப்படி, தீர்ப்பு பெற்று, அதன்படி குடியான[illegible]வன் நடக்க[illegible]கொள்[illegible]

கசேர்த்து, சுவாதீனமெ் செய்துகொள்ள மிராசுதார் தாவா செய்ததில், குடி பாத்தியம் சாச்வதமென்று தீர்மானிக்கப்பட்டது. மிராசுதார் முன்பிறந்த தீர்ப்பின்படி ஒருவன் பாகத்தைப் பெற்றவனுக பாவிக்கப்பட்டாலும், அந்த பாகத்தை சுயாதீனம் செய்துகொள்ள பாக வியாச்சியம் செய்யவேண்டுமேயொழிய வேறுவிதமாய் கோர்ட்டார், மிராசுதாரனுக்கும் மற்ற குடி பாத்தியஸ்தனுக்கும் கூட்டாய், அனுபவித்துவர உத்தரவு அளிக்ககூடாது. அவிபக்த குடும்பத்தில் ஒருவன் தன் பாத்தியதையை பராதீனம் செய்துவிட்டால், இரு பாகஸ்தரும் கூட்டு அனுபவம் அடையத்தக்க பரிகாரம் பெற முடியாது. பாக வியாச்சியத்தால் தான் தன் பாகத்தை சுயாதீனம் செய்துகொள்ள பிரயத்தனப்படவேண்டும். இவ்விதம் ஹைகோர்ட் தீர்ப்பின் சாராம்சமாகும். ஹைகோர்டில் இரண்டு நியாயாதிபதிகள் இக்கேசை விசாரிக்க ஒருவருடைய அபிப்பிராயமாவது:—மிராசுதார் முதல் பெற்ற தீர்ப்பினுல் அவிபக்த சகோதரர்களின் கூட்டு குடி பாத்தியதை பிரிந்துபோய் விட்டதென்றும் மிராசுதார் அக்குடியானவனின் அக்கை மாற்றிக்கொண்டபடி யாகுமென்பதேயாம். மற்ற ஒரு நியாயாதிபதியவர்கள், முதற் பிறந்த தீர்ப்பினுல் முச்சலிக்கையில் ஒப்புக்கொண்டவனுடைய குடி பாத்தியதை மாறிப் போகாதென்றும் அதனுல் அவன் வார்சுகளின் பாத்தியதை எவ்விதமும் கெடவில்லையென்றும் அபிப்பிராயப்பட்டார்கள்.

### 13. S A. 1919 of 1911:—12-12-1912.

ஒருவன் ஒரு சொத்தை கிறயத்திற்கு வாங்கும்பொழுது செய்துகொண்ட ஒப்பந்தமாவது, தான் தனக்கு எக்காலத்திலும் மேற்படி சொத்தை, பராதீனப்படுத்த மனமிருந்தால், அச்சொத்தை குறித்த விலைக்கு தனக்கு விக்கிறயம் செய்தவனுக்கே மறு விக்கிறயம் செய்யவேண்டும். அவன் இறந்தபிறகு அவனுடைய வார்சுகளும் அவ்விதமாய் நடக்கக் கடமைப்பட்டவர்களா என் ...ர்பாயிண்டானது இரண்டு கீழ்கோர்ட்டுகளில் ...ரிக்கப்பட்டும் ஹைற ...ப் ஒரு கெடுவு அதாவது கால நிற்ணயம் ஏற்படு... படாதமட்டில் ஒப்பந்தக்காரனைப் பொறுக்கு... யொழிய வார்சுகளைப் பொறுக்காது.

### 14. O. S. No. 83 of 1912:—2-12- C. M. P. 2490 of 1912.

மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் பிற... டிக்கிரீக்குப்பிறகு, டிக்கிரீதார் இறந்துவிட்டார். பிரதிவாதியும் டிக்கிரீதாரின் வார்சுகளும் டிக்கிரீயில் கண்டிருக்கிற அம்சங்களுக்கு கொஞ்சம் மாறுதலாக ராஜிநாமா செய்துகொண்டு அந்த ராஜிநாமாவை கோர்ட்டில் தாக்கல் செய்து வாதி தரப்பார் நிறைவேற்று விண்ணப்ப மூலமாய் டிக்கிரியை பைசலானதாக செல்லுவைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அந்த விண்ணப்பத்திற்கு ஆதாரமாக இருகக்ஷியாரும் பிரமாணப்பத்திரிகை தாக்கல் செய்தார்கள். அசல் கோர்ட்டார் ராஜிநாமாப்படிக்கு நிறைவேற்று மனு நடவடிக்கைகளில் பரிகாரம் கொடுக்க சட்டமில்லையென்றும், டிக்கிரீ கொடுத்த கோர்ட்டார் டிக்கிரீயில் கண்டபடி துகை செலுத்தப்படாத விஷயத்தைப்பற்றி ரிகார்டு செய்ய அதிகாரமில்லையென்ற காரணங்களால் மனுவை தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் பிரதிவாதி ராஜிநாமாவை ஊர்ஜிதப்படுத்தவேண்டுமெனக் கருதி அப்பீல் தரப்பில் விண்ணப்பம் கொடுத்து அங்கு செய்த வாதமாவது:—அசல் கோர்ட்டார் ராஜிநாமாவின் அம்சங்களை விசாரிக்கும்படி இருதரப்பாரும் கேட்டுக்கொண்டதின்மேல், அதற்காக ஒரு வாய்தாவும் குறித்துவிட்டிருக்க, அப்படி விசாரியாமல் தமக்கு இத்தகை உத்தரவளிக்க அதிகார மில்லை என விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்தது பிசகென்றும், ராஜியின் அம்சங்களை விசாரிக்கும்படி வாதி கேட்டுக்கொண்டிருக்க, விண்ணப்பம் தள்ளுபடியாய் விட்டபடியால், விசாரிக்க வேண்டியதில்லை என்று முன்போல் டிக்கிரீயை நிலைநிறுத்தக் கோருவது வாதிக்கு சரியல்ல என்பனவாம்.

“(1) வாதி, பிரதமத்தில், பிரதிவாதிசொல்லுகிறபடி, ராஜிநாமாவை எற்றுக்கொண்டு, அந்த விதம் ரிகார்டுசெய்ய சம்மதமெனச் செப்பியிருக்க, மறுபடியும் அந்த அம்சங்களைப்பற்றி கோர்ட்டார் விசாரணை செய்ய அவசியமில்லையென்றும், (2) இத்தகைய உத்தரவுசெய்ய சட்டமில்லாமலிருக்க விசாரணை செய்யவே கூடாதென்றும், (3) அதற்காக ஒ... ...யதா குறிக்கப்பட்ட...



ணத்தால் கோர்ட்டாருக்கு இல்லாத அதிகாரம் உண்டாகாதென்றும் (4) வாதியால் கொடுக்கப்பட்ட விண்ண நடவடிக்கையில், பிரதிவாதி கவுண்டர் பிரமாணப் பத்திரிகை போட்டிருக்க கோர்ட்டார் ராஜி யம்சத்தை விசாரிக்க அதிகாரமில்லையென்றும், (5) பிரதிவாதி எதாகிலும் ராஜியான தகவலை கோர்ட்டில் தெரிவித்து அந்தப்படி டிக்கிரீயை பரிகரிக்க யத்தனப்பட்டால் கோர்ட்டார் ராஜி யம்சத்தை விசாரணைசெய்த, சிலகேசுகளிருக்கின்றனவென்றும், (6) பிரதிவாதி பயில்செய்த கவுண்டர் பிரமாணப்பத்திரிகையை ஒரு பிரத்தியேகமான விண்ணப்பமாய் பாவித்து கோர்ட்டார் விசாரிக்க வேண்டுமென பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கு சட்டத்தில்கண்ட நோடீசு கொடுக்கப்படாத காரணம் இடையூராகிறதென்றும், (7) ஆனுல் பிரதிவாதிக்கு பரிகாரம் வேறு உண்டென்றும் தேவையானுல் சட்டப்படிக்கு அசல் கோர்ட்டில் நடவடிக்கை நடத்திக்கொள்ளலாமென்றும்” அப்பீல் தரப்பில் அபிப்பிராயப்பட்டு பிரதிவாதி செய்த அப்பீலை தள்ளுபடிசெய்து விட்டார்கள்.”

### 15. A. S. 36 of 1910:—27, Nov. 1912.

அவிபக்த ஹிந்து குடும்பத்தில் ஒரு பாகஸ்தன் தன் பாகத்தை மற்றவர்களுக்கு சாஸனம் செய்து, பிரதி பிரயோஜனமாக கொஞ்சம் துகை பெற்றுபோக மிகுதித் துகைக்கு மேற்படியார்களிடம் ஒரு அடமான தஸ்தவேஜு எழுதி வாங்கிக்கொள்வதாய் சாஸன காலத்தில் ஒப்பந்த மாச்சுது. பாக்கித் துகையை செலுத்துமட்டும் மேற்படி சொத்தின்மேல் சாஸனம் செய்தவனுடைய அக்கு பாத்தியம் நீங்காது. பிரதி பிரயோஜனம் பூராவும்செலுத்தப்பட்டு சொத்தை சுவாதீனப்படுத்துமட்டும் மாசூல் வரும்படி சாஸனம் செய்தவனைச் சேரும். சுவாதீனப்படுத்தியிருந்தாலும் பாக்கித் துகைக்குறிய வட்டிக்கு நிகரான மாசூல் அல்லது மாசூலின் கிறயத்திற்கு டையான் பாத்தியதையுடையவனுகிருன். அதற்கு அச்சொத்து ஜாமீனுகிறது. “அடமான தஸ்தவேஜு எழுதிக்கொடுக்கும்படி ஒப்பந்தமிருக்க அடமான தஸ்தவேஜு பிறந்திருந்தாலும் பிறந்திராவிட்டாலும் அடமான பாத்தியதைமட்டும் சாஸனக்காரனுக்கு கிடைக்குமேயொழிய சொத்தில் வேறு ஸ்வதந்தரம் கிடைக்கமாட்டாதென்ற” வாதத்தை ஹைகோர்டார் அங்கீகரிக்கவில்லை.

### 16. L. P. A. 82 of 1912:—28-11-1912.

ஒரு டிக்கிரியை நிறைவேற்றி வசூலித்த துகையிலிருந்து வேரொரு டிக்கிரீதாரன் தனக்கும் பகிர்ந்து கொடுக்கும்படி விண்ணப்பம் செய்ய (எனெனில் பிரதிவாதி இரண்டிலும் ஒருவனே) முனிசீப் கோர்ட்டார் இரண்டாவது டிக்கிரீ ஸி. பி. ஸி. 48-வது செக்ஷன்படிக்கு காலாவதியாகி விட்டதாகச் சொல்லி விண்ணப்பத்தைத் தள்ளிவிட்டார். ஹைகோர்ட்டாரை மேற்படி கோட் 115-வது செக்ஷன்படி பிரவேசிக்க கேட்டுக்கொள்ளப்பட்டதில், முனிசீப் கோர்ட்டாரின் சட்ட சம்பந்தமான அபிப்பிராயம் பிசகாயிருந்தும் 115-வது செக்ஷன்படி பிரவேசிக்க ஹைகோர்ட்டாருக்கு அதிகார மில்லை என்று தீர்மானித்தார்கள்.

### 17. C. R. P. 338/10:—17 டிசம்பர் '12.

ஆஜராவதற்கு சரியான முகாந்தர மில்லாமலிருந்தால் எக் பார்டி டிக்கிரீயை மாற்ற கோர்ட்டாருக்கு அதிகார மில்லை. சட்டத்தில் ஏற்படாத இயல்பான ஒர் அதிகாரத்தைகொண்டு எக்ஸ் பார்டி, டிக்கிரீயை மாற்றுவது தப்பு.

### 18. C. M. P. 2622/12:—10 டிசம்பர் '12.

மதராஸ் நகர் இன்ஸால்வென்டு ஆக்ட்படி இன்ஸால்வென்ஸி மனுக்களை விசாரணை செய்கிற நியாயாதிபதியவர்கள் யாதொருவனை ப்ராஸிகியூஷன் செய்யும்படி சாங்ஷன் கொடுத்தால் அந்தப் பிராஸிகியூஷன் விசாரணை அந்த கோர்ட்டாரே நடத்தவேண்டும். பொதுவாய் சாங்ஷன் கொடுத்தவர்கள் சாட்சி யாகிறார்கள். விசாரிக்கிற அதிகாரி பிரத்தியேகமாக யிருக்கவேண்டும்.

### 19. Crl. R. Case 253/1912 & Cr. R. P. 209/1912:—29-11-12.

ஒருவன் மற்றொருவன்மேல் திருட்டுக்குற்றம் சாட்டி அதன்மேல் போலீஸார் திருட்டுச்சொத்தை எதிரியின் வீட்டில் கண்டெடுத்து பிரதம விசாரணை செய்ததில், வாதி கள்ளத்தனமாய் எதிரி வீட்டில் சொத்தை மறைத்துவிட்டு பொய்க் குற்றம் சாட்டியிருப்பதாய் புலப்பட்டு சார்ஜ் செய்யவில்லை. வாதி நேரில் மாஜிஸ்டிரேட்டிடம் பிரியாது தாகல் செய்ய, அது 203 வது பிரிவுப்படி விசாரணை யில்லாமலே தள்ளுபடியாய்வி...

திருட்டுச் சொத்தை 517-வது பிரிவுப்படி சர்க்கார் வசம் ஒப்பிவிக்கும்படி உத்தரவு பிறந்தது. வாதி கலெக்டர் அவர்களிடம் ரிவிஷன் மனு செய்துகொள்ள கீழ் கோர்ட் தீர்மானம் காயமாச்சுது. அதன்மேல் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுக்கவே, ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்ததுடன் மாஜிஸ்டிரேட் சொத்தை சர்க்கார் வசம் ஒப்புவித்ததற்கு 517-வது செக்ஷன் ஆதாரமல்லவென்றும், விசாரணையான கேசுகளில் சம்பந்தப்பட்ட சொத்தைப்பற்றி 517-வது பிரிவு ஏற்பட்டிருக்கிறதாயும் 203-வது பிரிவுபடி விசாரணை யாகாமல் தள்ளுபடியான கேசில் சம்பந்தப்பட்ட சொத்தை 523 பிரிவுப்படி மாஜிஸ்டிரேட் சொந்தக்காரனிடம் கொடுக்கலாம், அவன் இன்னாரென்று புலப்படாவிட்டால், சர்க்கார்வசம் ஒப்பிவிக்கலாம் அல்லது தன் சித்தம்போல் பைசல் செய்யலாம்; ஆகையால் மாஜிஸ்டிரேட் தன் சித்தம்போல் சர்க்கார் வசம் சொத்தை 523-வது பிரிவுபடி ஒப்பிவித்ததாக பாவிக்கப்பட வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

20. A. S. 76 of 1909:—4, Sept. 1912.

ஒரு வக்கீல் தன் கக்ஷிக்காரனுக்காக கேசை நடத்தி ஜய மடைந்த பிறகு கக்ஷிக்காரனுடைய விருப்பத்தின்மேல் எதிரியின்மேல் மானநஷ்டத்திற்கு தாவா செய்ததில், கக்ஷிக்காரனுக்கு நேர்ந்த செலவுகளில் வக்கீல் பீஸ் வகைக்குச் செலவானதை ருஜூப்படுத்தும்பொருட்டு வக்கீல் தான் பெற்றதைவிட அதிகமான தொகையைக் காண்பித்து ரசீது தயார் செய்து ஷெ நஷ்ட தாவாவில் கக்ஷிக்காரனுக்காக பயில் செய்ததாயும் அந்த பீஸ் ரேட்படி மற்ற எல்லாக் கேசுகளுக்கு பீஸ் சார்ஜ் பண்ணவே, கக்ஷிக்காரன் மனவருத்தப்பட்டு தன் குமஸ்தாவைக்கொண்டு வக்கீலுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் தான் பணம் கொடுத்ததற்குச் சரிசரியான ரசீதைப் பெற்றுக்கொள்ளவில்லை என்றும் பயிலான ரசீது வக்கீல் தானாய் எழுதிக்கொண்டதாகவும், கண்டிருக்கிற கடிதத்தின் வசனங்கள் வக்கீலின் மறியாதைக்குக் குறைவானதாக, மேற்படி வக்கீல் கக்ஷிக்காரன்மேல் மானநஷ்ட தாவா செய்தார். சப் கோர்ட்டார் வக்கீலின் பிராதைத் தள்ளுபடி செய்தார்கள். ஹைகோர்ட் அப்பீலில் மேற்படி ரசீது கக்ஷிகாரனுக்குத் தெரிந்து மேற்படி யான் சம்மதத்தின்பேரில் ...யில் செய்யப்பட்டிருக்க தன் குமாஸ்தாவைக்கொண்டு அவ்விதம் எழுதினது வக்கீலின் மறியாதைக்கு மிக்க குறைவானதென்று தீர்மானித்து, வக்கீலுக்கு ரூ. 200 டாமேஜ் அளிக்கப்பட்டது.

21. A. S. 24 of 1909:—13 ஆகஸ்டு 1912.

ஒரு மகம்மதிய ஸ்திரீ தன் தகப்பனுடைய சொத்திலிருந்து தனக்குச் சேரவேண்டிய பாகத்தைப் பிரித்துக் கொடுக்கும்படியான வியவகாரத்தை தானும் எதிரிகளும் சேர்ந்து மூன்று பெயர் குறித்த மத்யஸ்தர்களிடம் ஒப்புக்கொடுப்பதாய் முச்சலிக்கை யெழுதிக் கொண்டார்கள். அதன் பின் அவள் புருஷன் அவளிடம் பவர் பெற்று, ஐந்து பேர்களல்லாத பஞ்சாயத்துக்கு ஒப்புக்கொள்ள முடியாதென்று 5 தினங்களுக்குள் ஐந்து பேர்களை குறித்துவிடும்படி நோட்டீசு கொடுத்தார். அந்த நோட்டீசுபடி நடக்காததால் கோர்ட்டில் பாகத்திற்காக தாவா செய்யப்பட்டு அதில் முச்சிலிக்கையில் குறிப்பிட்ட மூவரில் இருவர் தாங்கள் அனுமதி யன்னியில் நியமிக்கப்பட்டதாயும் தங்களுக்கு மத்யஸ்தம் செய்ய சம்மதமில்லை என்றும் வாக்குமூலம் கொடுத்தார்கள். எதிரிகளின் வாதமாவது:—பஞ்சாயத்துக்கு ஒப்புக்கொண்ட வழக்கை கோர்ட் மூலமாய்த் தீர்மானம் செய்துகொள்வது தப்பென்பதேயாம். அவ்வாதத்தை ஜில்லா கோர்ட்டார் ஒப்புக்கொண்டு பிராதை தள்ளுபடி செய்தார்கள். ஹைகோர்ட்டார், அப்பீலில் முச்சலிக்கையில் குறிப்பிட்ட நபர்கள் மறுத்துவிட்டமையாலும் அவர்களுக்குப் பதிலாய் வேறு நபர்களை ஏற்படுத்தும்படியான ஓர் அதிகார வசனம் முச்சலிக்கையில் இடையாதபடியாலும், அம்முச்சிலிக்கையின் ஒப்பந்தம் சாத்தியப்படாததென்றும், கோர்டில் தாவா செய்வதைவிட வாதிக்கு வேறு மார்க்கமில்லையென்றும் அபிப்பிராயப்பட்டு தாவாவை சட்டப்படி விஜாரணை செய்யும்பொருட்டு கீழ் கோர்ட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அப்பீல் செலவு எதிரிகளைப் பொறுத்தது.

22. C. M. S. A. 70 of 1911:—22 நவம்பர் 1912.

ஒரு அடமான டிக்கிரிதாரன் டிக்கிரி தொகையை வசூலிக்க 12-தடவை நிறைவேற்று மனுக்கள் செய்து பலமுறை தொகைகள் வசூலாச்சுது. இம்மனுக்களில் வட்டி ஒருவிதமாய் கணிக்கப்பட்டிருந்தது. தொகை பூராவும் வசூலாகாமையால் வாதி 13-வது தடவையாக ஒரு நிறைவேற்று மனு கொடுக்கும்பொழுது தான் முன் வட்டியை கணித்த முறை தப்பென்று கண்டு புது முறையாக வட்டி கணித்து இம்மனுவில் தொகையை அதிகப்படுத்தி வசூலிக்க யத்னப்பட்டான். முனிசிப் கோர்ட்டார் அம்மனுவில் கண்ட புது முறையான வட்டிக்கணக்கை ஏற்றுக்கொள்ளாமல் பழய முறைப்படியே வட்டியைக் கணக்குப்பார்த்து மனுவைத் திருத்திக்கொடுக்கும்படி வாபீசு செய்தார். இதைப்பற்றி எதிரிக்கு நோட்டீசு கிடையாது. வாதி குறித்த டயத்துக்குள் 13-வது மனுவை திருத்திக்கொடுக்கவில்லை. அம்மனு ஒழுங்குப்படி தள்ளுபடி யாச்சுது. தள்ளுபடி உத்தரவு பிறக்குமுன், வாதி 14-வது தடவையாக புது முறைப்படியே வட்டியைக் கணித்து மறுபடியும் நிறைவேற்று மனுதாக்கல்செய்ய, அம்மனுவும் தள்ளுபடி யாச்சுது. 13-வது மனுவின் உத்தரவின் பேரில் அப்பீல் செய்யாமல் 14-வது மனு உத்தரவின் பேரில் ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்ய, முதல் முறைப்படி வட்டி கணித்தது பிசகென்று புது முறையாய்க் கணிப்பதில் யாதொரு பாதகமில்லையென அபிப்பிராயப்பட்டு வாதிக்கு அப்பீலில் அனுகூலமாச்சுது. ஹைகோர்ட்டில் எதிரி 2-வது அப்பீல் செய்தார். ஹைகோர்ட்டார் ஜில்லா கோர்ட் தீர்ப்பை ரத்துசெய்து முனிசிப் உத்தரவைக் காயப்படுத்தினார்கள். முனிசிப் 13 வது மனுவில் செய்த உத்தரவின்மேல் அப்பீல் செய்திருக்கலாமென்றும், அப்பீல் செய்யாததினால் அது காயமென்றும், 'அதற்கு விரோதமாய்ப் பின்னால் வேறு மனு கொடுக்கக்கூடாதென்றும், எதிரிக்கு நோட்டீசில்லாமல் பிறந்த முதல் உத்தரவு அப்பீலுக்கிடங்கொடுக்காத உத்தரவென்ற ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயம் தப்பென்றும், ஏனெனில் (உபமானமாக) ஒரு பிராது காலவதி கடந்ததாக தோன்றினால் எதிரிக்குத் தெரியாமல் தள்ளுபடியாகும் உத்தரவானது எப்படி காயமோ அதுபோலவே முன்சீப் கோர்ட்டாரின் முதல் உத்தரவு காயமானதென்றும், பிரதிவாதிக்கு விரோதமான ஒரு உத்தரவுமட்டும் ஷெ யாருக்கு நோட்டீசில்லாமல் செய்யக்கூடாதென்றும், இக்கேசில் எதிரிக்கு அனுகூலமாய் வட்டித் தொகையை அதிகரிக்கவிடாமல் கோர்ட்டார் பாதுகாத்து செய்த உத்தரவு காயமான உத்தரவென்றும் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்கள்.





23. C. M. A. 30 of 1912.—29 நவம்பர் 1912.

மூல புருஷன் தன் சொத்தை வாதிகளுக்கு தானசாஸனம் செய்து ஷெ யார்கள் வசம் சொத்தும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தது. மூல புருஷன் இறந்தபின் ஷெ யாருடைய உயில் பாத்தியத்தைக் கொண்டாடின பிரதிவாதிகள் துராகிருதமாய் சொத்தில் பிரவேசித்து அறுப்புக்களத்திலிருந்த மாசூலையும் அபஹரித்து 3-பசலி அனுபவித்துவர, 4-ம் பசலியில் பஞ்சாயத்தாரின் தீர்மானத்தின்படி சொத்தின் சமபாதியை தானபாத்தியஸ்தர்களாகிய வாதிகளிடம் ஒப்படைத்தார்கள். பின்னர் வாதிகள் தானத்தை ஸ்தாபிக்கவும் உயிலை ரத்துசெய்யவும் கோர்ட்டில் வழக்கு செய்ததில் ஹைகோர்ட்டாரின் முடிவான தீர்மானப்படி பூரா சொத்தையும் பெற்றார்கள். பிரதிவாதிகள் வசம் சொத்திருந்த காலத்துக்குரிய மாசூல் நஷ்டத்தை ஹைகோர்ட் தீர்ப்பின்படி நிறைவேற்று மனுவில் நிர்ணயிக்கப்படவேண்டியதாயிருந்தது. அசல் கோர்ட்டில் மாசூல் நஷ்டத்தை நிர்ணயிக்கையில் பிரதிவாதிகள் கேட்டுக்கொண்ட சாகுபடிச் செலவு, நிலத்தீர்வை, தண்ணீத் தீர்வை, வைக்கோல் லாபம் ஆகிய இன்னங்கு வஜா அம்சங்களில் வைக்கோல் லாபத்தைமட்டும் அளித்து மற்றவைகளுக்கு அனுமதி கொடுக்கவில்லை. அதன்மேல் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். ஹைகோர்ட்டார் சாகுபடிச் செலவு மட்டும் தள்ளிக்கொடுக்கப்படவேண்டியது நியாயமென்றும், நிலத்தீர்வை தண்ணி தீர்வை இவைகள் வைக்கோல் லாபத்தை விட அதிகமாய் செலுத்தப்பட்டதாக பிரதிவாதிகள் ரூபகாரப்படுத்தாத காரணத்தால் தீர்வைக்கும் வைக்கோலுக்கும் சரியாய்ப் போய்விட்டதென ஏகர் 1-க்கு ரூ. 4 ஆக சாகுப்படிச் செலவைமட்டும் பிரதிவாதிகளுக்கு வஜாசெய்து மாசூல் நிர்ணயம் செய்ய உத்தரவளித்தார்கள்.

24. S. A. 1834 of 1911:—9 டிசம்பர் 1912.

ஒரு இனாம்தாருக்குப் பிறந்த கிராண்டில் அவருக்கு அளிக்கப்பட்ட சொத்தாவது:— ஒரு கிராமத்தில் புரம்போக்கு நிலங்களும் மற்ற சாகுபடிக்கு லாயக்கான நஞ்சை புஞ்சை நிலங்களும். இதில் புரம்போக்கு என்ற வசனத்திற்கு, ஸ்மசானம், கோவில் நிலம், களம், ரஸ்தா, ஆற்றங்கரை ஆகிய கிராம பொது நத்தங்கள் நீங்கல

மற்ற தீர்வைக்கிடமில்லாத நில பாகங்கள் எனக் கருத்தாகும்.

தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களில் ஆற்று மணல் கரைக்கும் ஆற்று வெள்ளத்தைத் தடுக்க ஏற்பட்ட லயன்கரைக்குமிடையிலிருக்கும் படுகை நிலங்கள் ஆற்றங்கரைப் பொது நிலமாக பாவிக்கப்படாது. அப்படுகைகள் இனாம்தாருக்கு பாத்தியப்பட்ட கிராண்டில் கண்ட புரம்போக்கு நிலமாகும். புல் செடி வளர்ந்தும் தீர்வையில்லாத நிலபாகங்கள் சாதாரணமாய் புரம்போக்கில் சேர்ந்ததாகவே பாவிக்கப்படுகின்றன.

25. S. A. 1415 of 1910:—26 பிப்ரவரி 1912.

இந்த சென்னை இராஜதானியில் ஆற்றோர மணல் தரை அல்லது நீரோடையானது கவர்ன்மெண்டாரைச் சேர்ந்ததாக பாவிக்கப்படுகிறது. ஏனெனில் நிலங்களுக்கு நீர் பாசனம் செய்வதற்கு அவசியமான சாதனங்களை ஏற்படுத்துவது கவர்ன்மெண்டாரின் முக்கியமான ஓர் கடமை. ஆறுகளிலிருந்து ஜலத்தை கால்கள் மூலமாய் வெளிப்படுத்துவதற்கு ஆற்றோரத்திலிருக்கிற மணற்பாகமான நிலத்தை கவர்ன்மெண்டார் சுவாதீனமடைந்திராவிட்டால் பாசனத்திற்கு வேண்டிய கலிங்கல் பாலங்கள் முதலிய சாதனங்களைக் கட்டுவதற்கு அந்நியஸ்தர்களிடம் நிலம் இரவல் வாங்கவேண்டும். குடிகளுக்கும் கவர்ன்மெண்டுக்கும் பொதுவாக அத்தகைய மணற் பாகத்தைக் குறிப்பிடுவதும் அசந்தர்ப்பம். ஆகவே புரம்போக்கென்ற பதத்திற்கு முன் சொல்லிய கேசில் விலக்கப்பட்ட பாகங்களில் இந்நில பாகமும் ஒன்றாக மதிக்கப்படுவதற்கு இதுவே காரணம். குறிப்பான வசனங்களால் இவைகள் ஒரு கிராண்டில் விலக்கப்படாவிட்டாலும் விலக்கினதாக பாவிக்கப்பட்டு அது இச்சந்தர்ப்பத்தில் சர்க்கார் வசமான நிலபாகமாக கருதப்படவேண்டும்.

ஒரு ஶ்ரோத்திரிய இனாம்தாருக்கு அளிக்கப்பட்ட கிராண்டில் புறம்போக்கும் சேர்ந்திருக்கிற காரணத்தால், ஆற்றோரமணல் நிலபாகமும் தனக்கு பாத்தியப்பட்டதாக ஶ்ரோத்திரியம்தார் தாவா செய்ததில் முனிசீப் கோர்ட்டில் பிராது தள்ளுபடியாகி ஜில்லா கோர்ட் அப்பீலில் டிக்கிரீ பெற்றார். ஹைகோர்ட் 2-வது அப்பீலில் முனிசீப் தீர்மானம் காயமாச்சுது. ஶ்ரோத்திரயம்தார் தோல்வி யடைந்தார்.

ஶ்ரோத்திரியம் என்பது பொதுவாய் வேதசிரோமணிகளாகிய பிராமணர்களுக்கு அளிக்கப்பட்ட நிலம் அல்லது நில வருமானம். பிற்காலங்களில் அத்தகைய க்ராண்டானது சர்க்காருக்கு ஸிவிலிலும், இராணுவத்திலும் உத்தியோகம் செய்து வந்த இந்து அல்லது மகம்மதியஸ்தர்களுக்கு அவர்கள் முன் செய்துவந்த ஸேவகார்த்தமாகவும் அளிக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஶ்ரோத்திரியம்தாருக்கு நிலங்களில் ஸ்வதந்தர பாத்தியம் கிடையாது. குத்தகைப்பணத்தை ஒழுங்காய்ச் செலுத்திவரும் குடியானவர்களை அப்புறப்படுத்துவதற்கும் அவர்களுக்கு பாத்தியம் இல்லை. உத்தியோகம் இனித் தேவையில்லாத நிமித்தம் அவர்களுக்கு நிலவருமானத்தை இனாமாக அனுபவிக்கும்படியான கருத்துடன் செய்யப்படும் ஏற்பாடுதான் ஶ்ரோத்திரியம். அப்படியிருக்க ஶ்ரோத்திரியம்தாருக்கும் குடிகளுக்கும் பொதுவாய் விலக்கப்பட்ட சிலபுரம்போக்குகளில் ஶ்ரோத்திரியம்தார் ஸ்வய பாத்தியதை கொண்டாடக்கூடாது. இக்கேஸில் ஷை மணல் பாகமானது சர்க்கார் வசமுள்ளதாகும் என்று தீர்மானிக்கப்பட்டது.

26. S. A. 2104 of 1910:—26 நவம்பர்-1912.

ரெவினியூ பாக்கிக்காக போடப்பட்ட ஏலத்தை ரத்துசெய்ய ரெவினியூ ரிகவரி ஆக்ட்படிக்கு 6 மாத காலம் தவணையிருக்க, அந்த ஆறு மாதத்திற்குள் 1908-வது வருஷத்திய லிமிடேஷன் ஆக்ட் நமோதுக்கு வந்துவிட்டமையால் ஷை விஷயமாய் செய்த தாவாவுக்கு புது லிமிடேஷன் ஆக்டில் கண்ட பரிகாரங்கள் உதவுமாவென்ற லா பாயிண்டு இரண்டு கீழ் கோர்ட்டுகளில் வியவகாரமாகி கடைசியில், புது லிமிடேஷன் ஆக்டின் பரிகாரங்கள் இத்தகைய பிரத்தியேகமான சட்டத்தை அதாவது (ரெண்ட் ரிகவரி ஆக்டை) யனுசரித்த தாவாவுக்கு உதவாதென்றும், 6 மாத காலாவதிக்குள் லிமிடேஷன் ஆக்ட் பிறந்து அந்த ஆக்ட் 15-வது பிரிவுப்படி நோட்டீசு தினங்களை நீக்கினால் காலாவதி தோஷம் ஏற்படாதென்ற வாதியின் வாதத்தை ஏற்றுக்கொள்ளாமலும், தாவா தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் தாவா காலாவதியல்லவென்றும் புது லிமிடேஷன் ஆக்டின் பொதுவான நிபந்தனைகளிலிருக்கும் பரிகாரங்கள் ஸ்பெஷல் ஆக்ட்டுகளுங்கு உதவுமென்றும், புதுலிமிடேஷன் ஆக்ட் 29-வதுபிரிவு இக்கேசில் பிரயோஜனப்படா



தென்றும் அபிப்பிராயங்கொண்டு தாவாவை அசல் கோர்ட்டுக்கு சட்டப்படி விசாரணை செய்யும்படி அனுப்பிவிட்டார்கள்.

27. S. A. 1013 of 1911:—10-டிசம்பர்-1912.

ஒரு தர்ம பரிபாலனத்தில் தர்மகர்த்தா வேலையை வகிக்க அடுத்தபடியில் லாயக்குள்ள ஒருவன், ஷை தர்ம பரிபாலனத்தைக்குறித்து, தாவா செய்வதாயிருந்தால், அந்நியர்கள் கொண்டுவரும் தாவாக்களுக்கு ஏற்பட்டபடி அட்வொகேட் ஜெனரலுடைய சாங்க்ஷன் பெறவேண்டிய தவசியமில்லை.

28. A. S. 23 of 1909:—3 அக்டோபர் 1912.

கோர்ட்டரால் ஏற்படுத்தபட்ட கார்டியனுக்குள்ளடங்கிய ஒரு மைனர், வாஸ்தவமாய் மைனர் நீங்காதவனாயிருக்க, ஷை கார்டியனுடைய மோசடவடிக்கையினால் மைனர் நீங்கினவனாக கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டான். அதன்மேல் தன் சொத்தை தன் பெண்சாதிக்கு தானம் செய்துவிட்டான் அவளோ ஷை சொத்தை வேறொருவனுக்கு விக்கிரயம் செய்துவிட்டாள். ஷை விக்கிரய தஸ்தவேஜில் ஷை மைனர் சாட்சி யொப்பம்போட்ட நிமித்தத்தினால், அவன் மேஜரான பிறகு ஷை தானத்தையும் விக்கிரயத்தையும் ரத்துசெய்யத் தகாதவனல்ல. பெண்சாதிக்குத் தானம் செய்ததினால் கலியாண விஷயமாய் மைனரும் தானம் செய்யலாம் என்றும் தானப் பத்திரத்தில் கலியாண காலத்தில் மாமனாருக்கும் மைனருக்கும் இவ்வித ஒரு தானம் செய்து கொடுக்கவேண்டுமென ஏற்பாடிருந்ததாக ஒரு வசனம் கண்டிருந்ததாயும், எதிரி வாதம் செய்ய, அதற்கு கலியாணகாலத்தில் தானம் செய்தாலொழிய அல்லது கலியாணத்திற்கு பிரதி ப்ரயோஜனமாக செய்தாலொழிய அத்தகைய தானம் செல்லாதென்பது ஹைகோர்ட்டாரின் முடிவான தீர்மானம்.

29. S. A. 1293/1911:—4-டிசம்பர்-1912.

ஒரு மிராசுதார் ரிஜிஸ்டரான தஸ்தவேஜை அனுசரித்து குத்தகை பாக்கியை வசூலிக்க லிமிடேஷன் ஆக்ட்படி பாக்கிநின்ற 6 வருஷத்திற்குள் செய்த தாவாவை சப் கலக்டரும் ஜில்லா கோர்ட்டாரும் மதிராஸ் எஸ்டேட் லாண்ட்ஸ் ஆக்ட்படி 3-வருஷ காலாவதி யேற்பட்டிருக்க அதற்குப்பின் செய்த தாவா காலாவதியாகிவிட்டதாக தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் இந்தக்கேசில் வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்டமுதல், மூன்று வருஷங்களுக்குப்பின் மதராஸ் எஸ்டேட் லாண்ட்ஸ் ஆக்ட் நமோதுக்கு வந்தமையால் 6 வருஷ காலாவதியை எதிர்பார்த்திருந்த மிருசுதார் 3-வருஷம் கடந்த பிறகு ஒரு புது சட்டப்படி முந்தியே தாவாகெடு கடந்துவிட்டதென்று தெரிவிக்கப்பட்டால் அவனுக்கு அநீதியாகுமென அபிப்பிராயப்பட்டு காலாவதி தோஷம் இக்கேசில் கிடையாதென கீழ் கோர்ட் தீர்ப்பை ரத்துசெய்து கேசை சட்டப்படி நடத்த உத்தரவு செய்தார்கள்.

30. C. M. A. 53 of 1912:—10 டிசம்பர் 1912.

ஏ-என்பவன் தான் பி யினிடம் பெற்றுக்கொண்ட அடமானப் பத்திரத்தில் கண்டபடி பி. யினுடைய பற்பல கடன்களை தீர்க்க ஒப்புக்கொண்டு, பி-யினுடைய, ஒரு அடமான டிக்கிரீ கடனைத்தவிர மற்ற எல்லாவற்றையும் தீர்த்துவிட்டான். சில காலத்திற்குப்பிறகு தான் செலுத்தின தொகைகளை யெல்லாம் தன் அடமான தஸ்தவேஜைக்கொண்டு தாவா செய்து பி-யினிடமிருந்து வசூலித்துக்கொண்டான். டிக்கிரீ கடன் தீர்க்கப்படாத நிமித்தம் பி-என்பவன் தன் சொத்துக்களை ஸி-என்பவனுக்கு ஷை டிக்கிரீ கடனைக் உட்படுத்தி விக்கிரயம் செய்துவிட்டான். ஏ-என்பவனோ தன் சவுகரியம்போல் விக்கிரயத்தின் தகவலை மதியாமல் தான் ஒப்பக்கொண்டவண்ணம் அடமான டிக்கிரீக்காரன் பாக்கியை செலுத்திவிட்டு அத்தொகையை பி-என்பவனிடமும் விக்கிரயம் பெற்ற ஸி - என்பவனிடமும் வசூலிக்க தாவா செய்தான். அந்த வியாஜ்ஜியத்தில் எதிரிகள்செய்த வாதமாவது:—ஏ-என்பவன் டிக்கிரீ தொகையை செலுத்தின காரணத்தால் டிக்கிரீ பெற்றவனுடைய பாத்தியதை அடைந்த பாவனையாக B-என்பவன்பேரில் ஷை டிக்கிரீயை நிறைவேற்றி தன் தொகையை வசூலிக்கவேண்டுமேயொழிய அசல் தாவா செய்தது பிசகென்பதேயாம். முனிசீப் கோர்ட்டார் ஷை வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் வாதிக்கு பி-ஸி என்பவர்கள் பேரில் டிக்கிரீ யளித்தார்கள். ஜில்லா கோர்ட்டார் அப்பீலில் முனிசீப்பின் அபிப்பிராயங்களுக்கு ஒத்திருந்தும் பி-ஸி. என்பவர்களைப் பொருத்து டிக்கிரீ கொடுத்தது பிசகு என்றும், ஏ. என்

பவன் அடமான டிக்கிரீயைச் செலுத்தாமல் மற்ற கடன்களைத் தீர்த்துவிட்டு அத்துகைகளை தாவா செய்து B-என்பவனிடம் வசூல் செய்தபிறகு தன் அடமான தஸ்தவேஜைக்கொண்டு இரண்டாவது தடவை தாவா செய்யக்கூடாதென்றும், முதல் தாவா செய்தமையால் டிக்கிரீ கடனை தீர்க்கும் கடமையினின்று விலகிக்கொண்ட பாவனையாகிறதாயும் கருதி, ஏ-என்பவன் துகையை யாரிடம் செலுத்தினானோ அவனிடம் பெற்றுக்கொள்ளக் கடவனாக அபிப்பிராயம்கொண்டு முனிசீப் கோர்ட் டிக்கிரீயை ரத்து செய்து சரியான பார்டியின்மேல் பரிகாரம் கொடுக்கும்படி கேசை ரிமாண்டு செய்தார். ஏ-என்பவன் ஹைகோர்ட்டில் ஷை ரிமாண்டு உத்தரவின்பேரில் அப்பீல் செய்ய ஹைகோர்ட்டார் ஜில்லா கோர்ட் தீர்ப்பை ரத்து செய்து முனிசீப் தீர்பைக் காயப்படுத்தினார்கள். ஏ-என்பவன் டிக்கிரீ கடனைத் தீர்த்திருக்க அந்த டிக்கிரீயின் பாத்தியதை இழந்தவனாகானென்றும் பி-என்பவன் டிக்கிரீ கடனைக் உட்படுத்தி விக்கிரயம் செய்தபடியால் ஷை அடமான டிக்கிரீ பாத்தியதையை மட்டும் தேடுகிற ஏ-யின் தாவா சரியானதென்றும் காலதாமதமாய் ஏ-என்பவன் டிக்கிரீ கடனை தீர்த்தமையால் B என்பவனுக்கு ஏதும் நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதற்கு ஏ-கடமைப்படவேண்டும் ஆனால் அவ்வித நஷ்டத்தைப் பற்றி பி-பரிகாரம் தேடவில்லை என்றும் இவ்வித காரணங்களால்பி-வி இருவர்பேரிலும் டிக்கிரீயை உறுதி செய்தார்கள்.

31. S. A. 931 of 1911:---19 நவம்பர் 1912.

ஒரு ஆற்றுக்காலிலிருந்து ஒரு கிளை யோடை வழியாய் ஜலம் 1-2-3 பிரதிவாதிகளின் வயல்களுக்குப் பாய்ந்து அதிலிருந்து 4-ம் பிரதிவாதி வயலின் வரப்புகளுக்குமேல் வடிந்து அங்கிருந்து வரப்பில் பிளந்த சில மார்க்கமாய் அந்த ஜலம் வாதியின் வயலுக்கு பாயும் ஓடையில் வந்து சேர்ந்து விடுகிறது. அந்த ஜலம் வெகு காலமாய் வாதியின் வயலுக்கு உபயோகப்படுகிறது. இப்படி யிருக்க 1-2 3 பிரதிவாதிகள் தங்கள் வயலில் 4-ம் பிரதிவாதி வயலுக்கு மேடான ஓரிடத்தில் அணைபோட்டு ஷை ஜலம் 4-ம் பிரதிவாதி வயலுக்கே பாயாமல் தடுத்துவிட்டார்கள். வாதி ஷை ஜலத்திற்கு பாத்தியம் கொண்டாடி 1-2-3 பிரதிவாதிகள் இனி அவ்விதம் தடுக்கக்கூடாதென இஞ்சங்க்ஷன் உத்தரவைப் பெறும்படி தாவா செய்தான். 4-ம் பிரதிவாதி எக்ஸ் பார்டியாய் இருந்துவிட்டான். ஷை ஜலமானது 1-2-3 எதிரிகளின் வயல்களில் பாய்ந்து அங்கேயே தங்கிவிடுகிறதாயும் 4-ம் பிரதிவாதி நிலத்திற்கு ஒருக்காலும் பாய்வதில்லை என்றும் அப்படிக்கே தேனும் ஜலம் 4-ம் பிரதிவாதியின் வயல்களில் வடிந்தால் அது ஊற்றமாக பாவிக்கப்படவேண்டுமென்றும் ஊற்றத்தண்ணீருக்கு ஒருவரும் பாத்தியம்கொண்டாடக் கூடாதென்றும் எதிரிகளின் வாதம். தவிற ஒரு ஒழுங்கான மார்க்கமாய் பாயாத ஜலம் பாசன ஜலமல்லவென்றும் அப்படி வடிந்த ஜலம் நேரில் வாதியின் வயலுக்கு போகாமல் வேறொரு ஓடையில் விழுவதால் வாதிக்கு நேரான பாசனபாத்தியம் கிடைக்க மாட்டாதென்றும் அப்படி பாய்ந்தாலும் இந்த வடிவு ஜலம் மட்டும் வாதியின் வயலுக்குப் போதுமான தண்ணீரல்ல வென்றும் பலவாராய் வாதிக்கப்பட்டது. முனிசீப் கோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாக ஷை ஜலத்திற்கு வாதி பாத்தியமுடையவனென்றும எதிரிகள் தடுத்தது பிசகென்றும் தீர்மானித்தார்கள். அப்பீலில் ஜில்லா கோர்ட்டார் எதிரிகளின் வாதங்களை ஏற்றுக்கொண்டு பிராதைத் தள்ளுபடி செய்தார்கள். ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் வாதிக்கு அனுகூலமாய் டிக்கிரீ கொடுக்கையில் கொண்ட அபிப்பிராயமாவன:— நிலமையையும் மூலத்தையும் மார்க்கத்தையும் நிர்ணயிக்கவல்லாத ஜலம்தான் ஊற்றத் தண்ணீராகும். தெரிந்த ஒரு மார்க்கமிருக்கின் அந்த ஜலம் ஓடும் ஜலமாகும். ஒரு நிலமையிலிருக்கிற பாயும் ஜலத்தைத் தடுப்பது பிசகு. ஒரு வயலில் நேராய் விழாமல் வேறொரு வயலில் பாய்ந்து அங்கிருந்து மற்றொரு வயலுக்குப் பாயும் காரணத்தாலாவது அல்லது வேறொரு வயலிலிருந்து வடிந்து அல்லது வரப்பில் பிளந்து பாயும் காரணத்தால் ஜலம் பாசனத் தண்ணீரல்லவெனக்கருதக் கூடாது. ஒரு ஓடையின் ஜலமானது ஒருவயலுக்குப் பாசனமூலமென்று ஏற்பட்டால் அந்த ஜலம் எம்மார்க்கமாயாவது ஷை வயலுக்கு வந்து சேர்ந்தால் போதும். 4-ம் பிரதிவாதியின் வயலுக்கு வந்து ஒழுங்கில்லாத மார்க்கமாய் வாதி வயலுக்குப் பாய்ந்தமையால் அத்தண்ணீர் ஊற்றமாக பாவிக்கப்படமாட்டாது.

32. C. M. A. 263 of 1911:—26 நவம்பர் 1912.

ஒரு மைனர் பெற்ற டிக்கிரீயை, டிக்கிரீ பிறந்த 12 வருஷங்களுக்குபின் ஆனால் மேஜரான மூன்று வருஷங்களுக்குள், நிறைவேற்ற மனுப் போட்டதில் மைனராயிருக்கும் காரணமானது காலாவதி தோஷத்தை நிவர்த்திக்காது என்றும் மாசூல் நஷ்டத்தை நிறைவேற்று மனுவில் நிர்ணயிக்கவேண்டுமென பிறந்த டிக்கிரீயின் பரிகாரத்திற்கு ஷை 12 வருஷ காலாவதி தோஷம் உண்டென்றும், மாசூல் நஷ்ட நிர்ணயம், நிறேவேற்று நடவடிக்கையைச் சேர்ந்ததேயொழிய, தாவா பூரணமாகாத நிமித்தம் தாவாவைப்பற்றின நடவடிக்கை யாகமாட்டாதென்றும், ஷை கேசில் நெல்லூர் ஜில்லா கோர்ட்டுக்கு அனுசரித்து ஹைகோர்ட்டார் தீர்ப்பளித்தார்கள்.

33. L. P. A. 60 of 1911.—10th செப்டெம்பர் 1912.

வாதி பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தின்படி கடன் வாங்கிய ரூ 71 யும் 142 மாதத்தில் மாதம் 8 அணா வாக செலுத்தி வருவதாயும் ஒரு வாய்தா கட்டத் தவறினால் 7 தினங்கள் மன்னிப்புக் கொடுக்கப்பட்டு அந்த 7 தினங்களுக்கும் தினம் பை-3 வட்டி சேர்த்து கட்டுவதாயும், அந்த 7 தினமும் தவறினால் பூரா துகை பாக்கியையும் ரூ. 1-க்கு நாள் ஒன்றுக்கு 1-பை வட்டியுடன் செலுத்தக் கடமைப்பட்டிருந்தான். 29 வாய்தா ஒழுங்காய்ச் செலுத்தி 30-ம் வாய்தாவை செலுத்தத் தவறினான். வாதி அசல் பாக்கி ரூ. 51-3 0 யும் பத்திரத்தின் ஷரத்துப்படி வட்டி ரூ. 153-12-0 யும் அதாவது 100-க்கு வருஷத்திற்கு ரூ. 190 வீதமாகிற கணக்குப்படிக்கு வட்டியுடன் சேர்த்து வசூலிக்க தாவா செய்தான். சப்கோர்ட்டாரிடத்தில் பிரதிவாதி முக்கியமாய் இரண்டு வாதம் செய்தார், தான் அதிகமான துகை செலுத்தியிருப்பதாயும் தவிற வட்டிக் கணக்கு மகா அநீதியாயிருப்பதாயும் அதற்கு கோர்ட்டார் சகாயம் செய்து குறைக்கவேண்டுமென்று வாதித்தான். அதிகமாய் செலுத்தியிருப்பதைப்பற்றி வாதி தன் கணக்கு சரி என்று பிரமாணம் செய்ததை பிரதிவாதி ஒப்புக்கொள்ள அந்த வாதம் நீங்கிற்று. வட்டி விஷயமாய், கெடுப்படி அசல் துகையை செலுத்திவந்தால் வட்டி யாதொன்றும் கொடுக்க வேண்டியதேயில்லை என்றும் வாய்தா தவறினால் ஏற்படும் வட்டி மிக அபரிமிதமாயிருப்பதாகவும் அபிப்பிராயப்பட்டு 100-க்கு வருஷத்திற்கு வட்டி ரூ. 24 ஆக கணக்கிட்ட வட்டியுடன் அசல் பாக்கிக்கு சப்கோர்ட்டார் தீர்ப்பளித்தார்கள். வாதி அதன்மேல் ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு செய்துகொள்ள ஒரு ஜட்ஜி அவர்கள் முன் விஜாரணையாகி சப்கோர்ட் தீர்மானமே காயமாச்சுது. ஹைகோர்ட்டில் ஒரு ஜட்ஜி யவர்களின் தீர்மானத்தின்பேரில் லட்டர்ஸ் பேடெண்டு ஆக்ட் 15-வது பிரிவுப்படி இரண்டு ஜட்ஜிமார்கள் முன் அப்பீல் செய்துகொள்ள சட்ட மிருப்பதால் அந்தப்படி வாதி லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் செய்யவே இரண்டு ஜட்ஜிமார்கள் இதை ஓர் முக்கியமான கேசாய் கருதி ஒருவன் எழுத்தில் பிரத்தியக்ஷமாய் கட்டுப்பட்ட ஒப்பந்தத்தை தவறினதால் நேரும் வட்டிநஷ்டத்தைப்பற்றி கோர்ட்டார் பிரவேசித்துக் குறைக்க நினைப்பது சரியா எனப்பல வியவகாரங்களும் பலவாராய் பற்பல கோர்ட்களில் தீர்மானமாகியிருந்தும், அது விஷயமாய் சந்தேகப்பட்டு இந்த கேசு விஷயமாய் ஒரு லாபாயின்டைப்பற்றி புல் பெஞ்சு அபிப்பிராயத்திற்காக ரிபர் செய்தார்கள்.

அதாவது:—

"அசல் துகை செலுத்தும் வாய்தா தவறினாலொழிய யாதொரு வட்டியும் செலுத்தவேண்டிய நிபந்தனையில்லாமலும் வாய்தா தவறினால் மிகவும் அபரிமிதமான வட்டி செலுத்தப்பட வேண்டுமென ஓர் ஒப்பந்தமுள்ள தஸ்தவேஜு விஷயமாய் ஷை அபரிமிதமான வட்டி செலுத்தும் நிபந்தனையை அபராத வட்டியாக பாவிக்கும்படி கோர்ட்டார் யூகிக்க அதிகாரமுண்டா என்றும் அப்படி யூகிக்குமிடத்து அத்தகைய அபரிமிதமான வட்டிக்கு பதிலாக கோர்ட்டாருக்கு யுக்தமாய்த் தோன்றுகிற ஒரு துகையை பிரதி பலனாக வாதிக்கு குறைத்து டிக்கிரிசெய்ய கோர்ட்டாருக்கு அதிகாரத்துவ மிருக்கிறதா."

இந்த லா பாயின்டைப்பற்றி புல் பெஞ்சார் அப்படி யூகித்து குறைவான பிரதி பலனைக்கொடுக்க கோர்டாருக்கு சித்தயுக்தம் உண்டென்று அபிப்பிராயம் கொடுத்தார்கள். ஆகவே வாதிக்கு முதல் பிறந்த சப்கோர்ட் தீர்மானமே காயமானதாகும் போலவும்.

---

## சில முக்கிய வியவகார குறிப்புகள்.

---

### S. A. 1572 of 1911.

ஒரு வர்த்தகவம்சத்தானுக்கு கடன் கொடுத்தால் ஷை துகையை அவன் வியாபார விஷயமாய்த் தானே உபயோகப்படுத்தினான் என்று கடனை

வசூலிக்கும் வாதி ரூபகாரப்படுத்த வேண்டியதில்லை. தொகை கொடுத்து அதிக கால தாமதத்திற்குப் பிறகு கடன்காரன் தாவா செய்யும் கால் தொகை எவ்வகைக்கு உபயோகப்படுத்தப்பட்டதென ருஜூப்படுத்த எதிர் பார்க்கலாமா?

## Crl. A. 506 of 1912.

ஒருவன் மூன்று பிரத்தியேகமான செக்குகளை சிருஷ்டனைசெய்து மாற்றி மோசம் செய்ததாக ஒரே சார்ஜில் விஜாரிக்கக்கூடாது. மூன்றும் வெவ்வேறு குற்றமாகும்.

## C. M. A. 19 of 1912.

தகப்பனைப்பெற்ற பாட்டனுடைய உயில் சாஸனத்தில் நியமிக்கப்பட்ட ஒரு மைனருடைய கார்டியன் ஷை மைனருடைய தாயாருடைய பாத்தியதைக்கு மேலானவனல்ல. தகப்பனைப்பெற்ற பாட்டனுக்கு கார்டியன் நியமனம்செய்ய அதிகாரமில்லை.

## S. A. 1861 of 1911.

ஒரு லாயர் ராஜமஹேந்தரபுரத்தில் ஒரு கேசை நடத்த நியமிக்கப்பட்டார். ஜில்லாக்களைப் பிரித்த காலத்தில் ஷை கேசானது கிருஷ்ணா ஜில்லா கோர்ட்டில் விஜாரிக்கத்தக்கதாயிருந்து அக்கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. அங்கு ஷை வக்கில் ஆஜராகாமல் பைசலாச்சுது. ஷை வக்கிலுக்குக் கொடுத்த பீஸை, ஷை கேசு முடிந்த பிறகு, திரும்பியடைய, வாதிசெய்த தாவாவானது கேசு கிருஷ்ணாவுக்கு மாற்றின தேதிமுதல் மூன்று வருஷத்திற்குள் செய்யப்படாத காரணத்தால் காலாவதிதோஷம் ஏற்பட்டு தள்ளுபடியாச்சுது. மூன்று வருஷ கெடு கேசு பைசலான தேதிமுதல் கணிக்கப்படவேண்டுமென வாதியின் வாதம் அங்கீகரிக்கப்படவில்லை. ஹைகோர்ட்டாரும் அதே அபிப்ராயம் கொண்டார்கள்.

## Crl. R. C. 496 of 1912.

மதராஸ் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்கள் தங்களிடம் கொடுத்த பிரியாதில் கண்ட விஷயங்களைப்பற்றி வாதியினிடம் பிரமாணவாக்கு மூலம் வாங்காமல் 203-வது செக்ஷன்படி தள்ளுபடி செய்யக்கூடாது. ஒருவன் தான் கொடுத்த கடனுக்கு ஆதாரமாக வீட்டுச் சீட்டுகளை வாங்கிக் கொண்டிருக்க ஷை வீட்டுச் சீட்டுகளை வேறொருவனுக்கு ஈடாகவைத்துக் கடன் வாங்கினதில் ஷை யான் ஷை சீட்டுகளில் தனக்குள்ள அக்கைமட்டும் ஈடாக வைத்திருந்தால் அவன் நம்பிக்கை மோசக்குற்றத்திற் காளாகமாட்டான். வாதிக்கு வேண்டுபோது மேற்படி சீட்டுகள் கிடைக்கக்கூடாத அசந்தர்ப்பத்தால் எதிரி கிறிமினல் குற்றத்திற்கு பாத்தியப்பட்டவனல்ல.

## C. M. S. A. 50 of 1912.

ஒருவன் பேரில் பற்பல ஸிவில் வாரண்டுகள் பிறந்தும் எல்லாம் சர்வாகாமல் வாபிசாயின. தவிர தன்னைப் பிடிக்காதிருக்கும்படி அந்நிய இராஜ்ஜியத்தில் மறைந்துகொண்டதாக ஏற்பட்டால், மேற்படி யானுடைய நடத்தையானது, 12-வருஷ காலாவதி கடந்துபோகும்படி டிக்கிரீயை பரிகாரமில்லாமல் நிறுத்திவைக்கிற மோசக் கருத்தாகப் புலப்படுகிறது.

## C. M. A. 3 & 4 of 1912.

ஒரு முனிசீப் கோர்ட் தீர்மானத்தின் பேரில் அப்பீல் செய்திருக்க, ஜில்லாக்களின் வரம்பு மாற்றத்தின்படி அப்பீல் கோர்ட்டார் அப்பீலை விஜாரிக்கத்தகாத போதிலும் இவ்வித மாறுதல் ஏற்படாவிட்டால் எந்த கோர்ட்டார் அப்பீலை விஜாரிக்க நியாயமோ அந்த கோர்ட்டாரே தான் மாறுதலேற்பட்ட பின்னும் விஜாரிக்கவேண்டும்.

---

# பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பின் மேல் செய்யப்பட்ட பிரிவி கௌன்ஸில் அப்பீல் தீர்மானம்.

---

பம்பாயில் லக்ஷ்மிதாஸ் என்னும் ஒரு வர்த்தகன் வெகு காலமாய் கடங்கு கீபராகயிருந்து நல்ல மரியாதையான பெயரும் கீர்த்தியும் பெற்று வந்தும் பின் தனிவர்த்தகம் செய்யத்துடங்கி வருகையில் தான் காலமெல்லாம் பம்பாய் பாங்கியில் பத்து வரவும் செய்து வந்தான். அநேக தடவைகளில் பாங்கிலிருந்து பணங்கள் அட்வான்ஸ் பெற்று வர்த்தகம் செய்து வருவான். அதற்கு ஜாமீனாக தன் வசமிருக்கும் பருத்திச் சரக்குகளை பாங்கியில் டிபாஸிட்செய்து வருவதுடன் மேற்படி சரக்குகளைத் தேவையானபோது விற்பனைசெய்து வந்த போதிலும் தன் பத்துக்குச்சரியான சரக்கை பாங்கில் டிபாஸிட்டில்நிறுத்திவைப்பான்; அல்லது புதிய சரக்குகளை டிபாஸிட்செய்து வருவான். அப்படியிருக்க வாதி தான் கிரயத்திற்கு வாங்கின 343



பேல் பருத்தி மூட்டைகளை லக்ஷிமிதாஸ் வசம் கடங்கு கீபராக ஒப்புவைத்தவுடன் மேர்படியான் மேர்படி சரக்குகளை தன் பாங்கிக்கு ஒப்படைத்துவிட்டார். அதாவது கடனுக்கு ஜாமீனாக கொடுத்துவிட்டார். வாதி மேற்படி சரக்கைத் திரும்பிக்கேட்குமுன், லக்ஷ்மிதாஸ் உத்தரவுபடி மேற்படி சரக்குகளை பாங்கியார் விநியோகம் செய்துவிட்டார்கள். வாதி பாங்கியாரையும் லட்சுமிதாஸையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து தனக்கு மேற்படி சரக்குகள் வாபிசாக வேண்டுமென்றாவது அதன் கிரயமாவது கொடுக்கப்படவேண்டுமென்றாவது, அல்லது இவ்விரண்டு பரிகாரங்களும் கிடைக்காவிட்டால் கோர்ட்டார் தனக்கு எவ்வித பரிகார மளித்தபோதிலும், பாங்கியில் லக்ஷ்மிதாஸ் கட்டியிருக்கிற ஜாமீன் தொகையைப்பொருத்து டிக்கிரீ கொடுக்க வேண்டுமென்று பம்பாய் ஹைகோர்ட் அசல் தரப்பில் பிராது செய்தார். 1-பிரதிவாதியாகிய பாங்கியாரின் வாதமாவது:— தாங்கள் லக்ஷ்மிதாஸை சொந்த வர்த்தகன் என்று எண்ணியிருந்ததாகவும், வெகு காலம் மேற்படியான் அதிக நம்பிக்கையாய் நல்ல பெயரெடுத்து பெரும்படியான வியாபாரம்செய்து வந்ததாகவும், சரக்குகள் அவனுடையதென்று நம்பினதாகவும், வேறொருவருடையதென்று தாங்கள் மேற்படி சரக்குகளை விநியோகம் செய்தவரையில் தங்களுக்குத் தெரியாதென்றும், தங்கள் ஏஜண்டு மேற்படி லக்ஷ்மிதாஸின் இருவிதத்தொழிலைப்பற்றி விஜாரித்து அரிந்தும் அச்சங்கதியை அவன் பாங்கிக்குத் தெரிவிக்கவில்லை யென்றும், அவன் லக்ஷ்மிதாஸுடன் கூட்டாளி அல்லது உடந்தையாயிருக்கவேணுமென்றும், பலவாராய் வாதித்து தாங்கள் நம்பி நல்லெண்ணத்துடன் நடந்ததாகவும் தங்களைப்பொருத்து டிக்கிரீ கொடுக்கக் கூடாதென்று கேட்டுக்கொள்ள, அசல் தரப்பில் 1-பிரதிவாதியாகிய பாங்கியார்களை நீக்கி மற்ற பிரதிவாதியைப் பொறுத்து டிக்கிரீ யளித்தார்கள். அதன்மேல் வாதி அப்பீல் தரப்பில் மற்ற விவாதங்களுடன் பாங்கியார்கள் சரக்குகளை லக்ஷ்மிதாஸ் உத்தரவுபடிக்கு ஒருவனிடம் கொடுத்து அதற்குறிய விலைத்தொகையை லக்ஷ்மிதாஸ் கணக்கில் வைத்தமையால் சரக்குகளைத் திரும்பிக்கொடுத்த பாவனையாகாதென்றும், சரக்குகளை திரும்பிப் பெற்றுக்கொண்டதாக லக்ஷ்மிதாஸ் சொல்லும் சாக்ஷியத்தை நிகார்டு செய்தது பிசகென்றும் (ஏனெனில் ஸ்டேட்மென்டில் பாங்கியார் சரக்குகளைத் திருப்பிக்கொடுத்துவிட்டதாய்ச் சொல்லவில்லை) வாதி பலவாராய் வாதிக்க, அதன்மேல் சரக்கை பாங்கியார் பணமாக மாற்றிக்கொண்ட காரணத்தால் அப்பீலில் வாதிக்கு அனுகூலமாக பாங்கியாரைப் பொறுத்தும் டிக்கிரீயாச்சுது. பாங்கியின் ஏஜண்டுக்கு லக்ஷ்மிதாஸின் கடங்கு கீபர் தொழில் தெரிந்திருப்பதால் அத்தகைய தகவல்களை விஜாரிக்கும் உத்தியோகத்தையுடைய அந்த ஏஜண்டுக்குத் தெரிந்த ஓர் தகவல் பாங்கியாருக்குத் தெரிந்த விஷயமாகவே பாவிக்கப்படவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார்கள். அதன்மேல் பாங்கியார் ப்ரிவி கௌன்ஸிலில் அப்பீல்செய்ய, சரக்கு திருப்பிக்கொடுக்கபட்ட விஷயமாய் சாக்ஷியம் நிகார்டு செய்திருக்கக்கூடாதென்று வாதிக்கப்பட்டு அவ்விஷயத்தைப்பற்றி அசல் அப்பீல் இரண்டு கோர்ட்டாரும் சரக்கு வாபிசு செய்யப்பட்டாதாக அபிப்பிராயப்பட்டிருக்க அதற்கு விரோதமாய் யூகிக்க் கூடாதென்றும் ஒருவன் மோசக்காரனாயிருந்தால். தானிருக்கும் உத்தியோகத்தில். பித்தலாட்டம் செய்யக்கூடுமென்ற காரணத்தால், நல்லபெயரெடுத்த யோக்கியதையுள்ள ஒருவன் அவ்வுத்தியோகம்செய்துவர, அவனை சந்தேகிக்க வேண்டுமென்ற அனுமானம் சரியல்லவென்றும், மற்ற,பாங்கியாரின் வாதங்களை ஒப்புக்கொண்டு அவர்களை நீக்கி 2-ம் பிரதிவாதியின் பேரில் அசல் கோர்ட் டிக்கிரீயைப்போலவே டிக்கிரீ கொடுத்தார்கள். ஆனால் பாங்கியார்கள் தங்கள் ஏஜண்டின் நடத்தையைப்பற்றி கவனியாமலிருந்ததற்கு அவரவர்கள் செலவை அவரவர்களே வகிக்கவேண்டுமென்று உத்தரவளித்தார்கள்.

---

# கல்கத்தா ஹைகோர்ட் தீர்ப்பின் மேல் செய்யப்பட்ட பிரிவீ கௌன்ஸில் அப்பீல் தீர்மானம்:-31-10-1912.

---

ஒரு மூலபுருஷனுக்கு அநேக சொத்துக்களிருக்க அதில் பிரத்தியேகமாய் தன் குடும்ப தேவதையின் கோயிலுக்காக, சில சொத்துக்களை ஏற்படுத்தி அந்தக் கோயிலில் ஆராதனை முதலிய கிறியாம்சங்களைத் தன் குடும்பஸ்தர்களே நடத்திவரவேண்டுமெனக் கருதி, எழுதிவைத்த உயிலில் ஏற்பட்ட வசனங்களாவன:—

எனக்கு இப்பொழுது பிறந்திருக்கிற, முகுந்த மூராரி என்ற, குமாரனே ஷை தேவதைக்குறிய சகல ஆராதனைக்கிறியைகளையும் செய்துவரவேண்டும். அதாவது அக்கோவிலுக்கு (ஷிபேயித்) ஆக யிருக்கவேண்டும். முகுந்து மைனராயிருக்கும் பொழுது, நான் காலஞ்சென்றுவிட்டால் என் இளைய பாரியாளும், ஷை முகுந்தனுடைய தாயாருமாகிய, ஸ்ரீமதி ப்ரஜோமதிதாவி, அவன் மைனராயிருக்கும் காலத்தில், அவனுக்கு கார்டியனாகவிருந்து ஷை பூஜையை நடத்திவரவேண்டும். அவன் வயதுக்கு வந்த உடன், அவனே நேரில் பூஜாக்கிறியைகளை நடத்திவரவேண்டும். கடவுள் கிருபைக் குறைவால் ஒருக்கால் என்னுடைய ஜீவியகாலத்திலாவது, என் மரணத்துக்குப் பிந்தியாவது, ஷை முகுந்தன் காலஞ்சென்றுவிட்டால் அப்பொழுது, ஷை ப்ரஜோமதிதாவி நடத்திவரவேணும்; அவளுடைய மரணத்திற்குப்பிறகு என்னுடைய இரண்டு குமாரத்திகள் அவ்வுத்தியோகத்தை வகித்துவரவேண்டும். ஷை என் பாரியாள், என் புத்திரிகள் மைனர்களா யிருக்கையில் இறந்துவிட்டால் ஷை மைனர் குமார்த்திகளுக்கு அக்காலத்தில் சட்டப்படி கார்டியன்களா யிருக்கப்பட்டவர்கள் யாரோ அவர்கள் ஷை யார்களின் மைனர் தசையில் ஷை கிறியைகளை நடத்திவரவேண்டும். அன்றியும் ஷை பூஜாக்கிறியை செய்துவருகிற (ஷாபேயத்தகள்) எவராகிலும் ஷை தேவதைக்குறிய சொத்துகளை பூஜாவிதிகளுக்காக உபயோகப்படுத்திவருவதைத்தவிற, தானுதிவிநிமய, விக்கிறயங்கள், வீண் துர்விநியோகம் முதலிய விதமாய் கெடுத்துவிடக்கூடாது. என் மைனர் குமாரன் வயதுக்கு வருமட்டும், அவன் தாயாரும் இன்னும் 3 பெயர் குறித்தவர்களும் எக்விகியூகடர்களாக யிருந்து, எவ்விதம் பூஜா தர்மங்களை நடத்திவர மெஜாரிடியான அபிப்பிராயத்துடன் குறிக்கிருர்களோ அவ்விதம் என பாரியாள் நடத்திவரவேண்டும்.''

மூல புருஷன் இறந்துவிட்டார். முகுந்தன், பிரஜோமதி, இரண்டு புத்திரிகள், முகுந்தன் பிறக்குமுன் ஸ்வீகாரம் எடுக்கப்பட்ட எவ்வழக்கில் சம்பந்தப்படாத ஒரு பையன், இவர்களைவிட்டு இறந்துவிட்டார். முகுந்தன் மைனராயிருக்க, தாயார் பூஜையை நடத்திவந்தாள். அவன் வயதை அடைந்த உடனே தானே எல்லாவற்றையும் நேரில் நடத்திவந்தான். சொத்துகளையும் சுவாதீனப்படுத்தி அனுபவித்தும் வந்தான். மூன்று வருஷம் கிறமித்து தனக்குப்பிறந்த ஒரு மைனர் குமாரனையும் மனைவியையும் விட்டுவிட்டு இறந்துவிட்டான். முகுந்தன் இறந்த பிறகு பிரஜோமதி மறுபடியும் ஷை பூஜையை நடத்திவந்து ஷை சொத்துக்களையும் சுவாதீனப்படுத்திக்கொண்டாள். முகுந்தனுடைய மைனர் குமாரனுக்காக ஷையான் தாயார் அதாவது முகுந்தனுடைய பாரியாள், [பிரஜோமதி, ஷை யாரின் இரண்டு குமாரத்திகள் ஆகிய] மூவர் பேரிலும், ஷை பூஜைக்கிறியைகளை செய்வதற்கு முகுந்தனுடைய மைனர் குமாரன் தான் லாயக்கானவனென்றும், அந்த சொத்துகளும் அவனுடைய வசம் ஒப்பிவிக்கப்படவேண்டும் என்றும் தாவா செய்தாள். இந்த தாவா செய்த சொற்ப காலத்திற்குள் பிரஜோமதி இறந்துவிட்டாள். ஷையாளுடைய இரண்டு குமாரத்திகளும் எதிர்வழக்காடினூர்கள். உயில்படி தாங்கள்தான் அவ்வுத்தியோகத்திற்கும் சொத்திற்கும் பாத்தியப்பட்டவர்களென்றூர்கள்.

சப் கோர்ட்டார் வாதிக்குத் தீர்ப்பளித்ததில் முக்கிய காரணங்களாவன:—ஸ்வபுத்திரன் பிறக்குமுன் மூலபுருஷன் முன் எழுதிவைத்த உயிலை ரத்துசெய்துவிட்டார். 2-வது உயிலுடைய கருத்தைப்பார்த்தால் தன் சொத்துக்கள் சிதறப்படாமல் ஆண் வார்சுகளனுபவிக்கவேண்டும் என்ற எண்ணம் புலப்படுகிறது. அந்நியர்களுக்குச் சேர பிரியமில்லாத நோக்கம் துலங்குகிறது. அக்கருத்துடன் தான் உயிலில் புத்திரன் மெஜாரிடி யடைந்த பிறகு, சொத்துக்களின் மானேஜ்மெண்டைப் பற்றி யாதொரு ஏற்பாடும் செய்யவில்லை. ஏனெனில், மைனர் நீங்கின பிறகு நடக்கவேண்டிய விதத்தைப்பற்றி உயில் வசனசூனியமா யிருக்கிறது. ஆகையால் பூஜாக்கிறியை பாத்தியம் முகுந்தனுக்குப்பிறகு மூல புருஷனுக்கு நேர் வார்சான வாதிக்குத்தானுண்டு. உயிலில் முதல் பாகத்தில், மைனர் நீங்கும்வரை நடக்கவேண்டிய விதம் யோஜிக்கப்பட்டிருக்கிறது. அவன் மெஜாரிடி அடையுமுன் இறந்துவிடக்கூடிய ஒரு சம்பவம் நிதானிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய வசனம் குறிக்கப்படாதபோதிலும் உயிலை அவ்விதம் அர்த்தம் செய்யவேண்டும். அவன் இறந்து விட்டால் என்ற வசன மிருக்கும் ஸ்தானத்தையும் தன் குமாரத்திகள் மைனர்களா யிருக்கிற காலத்தில் பாரியாள் இறந்துவிடக்கூடிய சம்பவம் நிதானிக்கப்பட்ட யோஜனையையும் யூகித்தால் மைனரா யிருக்கும்பொழுது இறந்தால் என்ற



அவ்வசனம், நிதானிக்கப்படவேண்டும். 'முகுந்தன் இறந்துவிட்டால்' என்ற வார்த்தையை முகுந்தன் மைனராகவே, விவாக மன்னியில், ஸந்ததி யில்லாமல் இறந்தால் என்ற விதமாய் வியாக்கியானப்படுத்தவேண்டும். ஆகையால் முகுந்தன் மெஜாரிடியடைந்தபிறகு ஆதீனத்திற்கு சர்வ சுதந்தரவாளியாய்விட்டான். அவனுக்குப்பின் அவன் குமாரனுகிய வாதியே பாத்தியப்பட்டவன்.

இவ்விதம் வாதிக்கு சப்கோர்ட்டார் அனுகூலம் செய்தார்கள்.

கல்கத்தா ஹைகோர்ட்டில் பிரதிவாதிகள் அப்பீல்செய்யவே. உயிலுடைய வசனங்களைக்கவனித்தால் முகுந்தன் இறந்த பிறகு ஷை யான் தாயார் அனுபவிக்கவேண்டுமென்றும், அவனுக்குப்பிறகு புத்திரிகளென்றும் விவரமாய்க் கண்டிருப்பதாலும், குடும்ப சொத்தை ஆண் வார்சுகள் அனுபவிக்கவேண்டுமென மூல புருஷனுக்கு எண்ண மிருந்தால் அதற்காக உயில் எழுத அவசியமில்லையென்றும், தேவதா பூஜையைத்தனியான ஒரு கிறியையாகக்கருதி அதைநடத்திவருவதற்கு, குறிப்பான வசனங்களால் செய்த ஏற்பாட்டில் மைனரா யிருக்கும்பொழுது இறந்தால் என்ற அர்த்தத்தை அனுவசியமாய் நுழைக்கக்கூடாதென்றும் அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்தார்கள்.

பிரிவி கௌன்ஸிலார் ஹைகோர்ட் தீர்மானத்தை ரத்துசெய்து சப் கோர்ட் தீர்மானத்தைக் காயப்படுத்தினூர்கள். அவரவர் செலவு அவரவரைப் பொருத்தது.

## S. A. 836 of 1911.

ஒருவன் இறந்த பிறகு அவனுடைய சொத்துக்கள் அவனுடைய இரண்டு சம்சாரங்களுக்கும் கூட்டான பாத்தியத்தையுடன் சென்றன, அவ்விருவர்களில் இளையாள் தன் பாகத்தை வாதிக்கு விக்கிரயஞ் செய்துவிட்டாள். இருவரும் சேர்ந்து கிறயஞ்செய்யாத நிமித்தத்தினுல், வலங்கிமான் முனிசீப் கோர்ட்டாரும் மாயவரம் சப் கோர்ட்டாரும் மூத்தாளையும் அனந்தர வார்சுகளையும் பொருத்தமட்டில் ஷை சொத்தின் அக்கு ஷை கிறயத்தினுல் பத்தமாகாதென்று தீர்ப்பளித்தார்கள். இளையாளுடைய பாத்தியதை, கிறயத்தினுல் நீங்கிவிட்டதாய்ப் பிறந்த டிக்கிரீயின்பேரில் 2-வது அப்பீல் செய்யப்பட்டதில் அந்தத் தீர்ப்பு சரியென்றும் மூத்தாள் இறந்த பிறகு முழுசொத்தைப்பற்றி சுவாதீனமடைய யத்தனித்தால் இத்தீர்ப்பு அதை பாதிக்காதென்றும் அல்லது அனந்தரவார்சுகளின் வியவகாரத்தைப்பற்றி யாதொரு தீர்மானமும் இந்த அப்பீலில் செய்ய மாட்டோமென்றும் அபிப்பிராயப்பட்டு 2-வது அப்பீலைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

## 31. C. R. P. 253 of 1911:—19 ஆகஸ்ட் 1912.

ஒருமலையாளம் தர்வாட்டில் மானேஜ்மெண்டு கர்த்தாவாகிய ஒர் கர்னவன் தர்வாடுக்குறிய சில சொத்துக்களை குடும்பத்திற்கு கட்டுப்படாதபடி பராதீனப்படுத்தின காரணத்தால் கார்ணவனாக இருக்க லாயக்கல்லவென்றும் பராதீனங்களை ரத்து செய்ய வேண்டுமென்றும், வேறு இரண்டு தர்வர்வாடுகளின் கார்ணவன்களுடன் கூட்டாக இரண்டு தேவஸ்தானங்களுக்கும் தர்மகர்த்தாக்களாகயிருந்து ஷை மூன்று கார்ணவன்களும் சேர்ந்து தேவஸ்தான சொத்துக்களைப் பராதீனப்படுத்தினமையால் அத்தகைய பராதீனங்களை ரத்து செய்ய வேண்டுமென்றும் முதல் கூறிய தர்வாட்டில் கார்ணவனுக்கு அடுத்தபடியிலிருக்கிற ஒரு அனந்தர்வன் தன் கார்ணவன் பேரில் தர்வாடைச்சேர்ந்த மற்ற அனந்தரவர்களையும் பிரதிவாதிகளாக சேர்த்து பாபர் வியாஜ்ஜியம் நடத்த அனுமதி கொடுக்கும்படி சப்கோர்ட்டில் மனுக்கொடுத்தான். தன் தர்வாடைச் சேர்ந்த சொத்துக்களைப்பற்றின மட்டில் தான் மற்ற அனந்தரவன்களையும் கலந்து அவர்களை வாதிகளாய்ச் சேர்த்திருக்கவேண்டுமென்றும் அப்படி அவர்களைச் சேர்த்திருந்தால் அவர்கள் இவனைப் போல் பாபரகளல்லவெனத் துலங்குமென்றும், மற்ற இரண்டு தேவஸ்தானங்களின் விஷயமாய்ச் செய்கிற தாவாவில் அந்தந்த தேவஸ்தானத்திலுள்ள மற்றபாத்தியஸ்தர்களைக் கலக்காமல் வாதி தாவா செய்யக் கூடாதென்றும் அவ்விதமாய் தேவஸ்தான சொத்துக்களை விலக்கி தர்வாட்டின் சொத்தைப்பற்றி மட்டும் கவனித்தால் பிராது முனிசீப் கோர்ட்டின் அதிகாரவரம்புக் குட்பட்டமையால் தான் விஜாரிக்கக் கூடாதென்றும் பல காரணங்களைச்சொல்லி பாபர் மனுவை சப்கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் செய்யவே ஹைகோர்ட்டார் சப் ஜட்ஜியின் அபிப்பிராயம் தப்பென்று அடியில் கண்ட காரணங்களைச்

சொல்லி பாபர்மனுவை ஏற்றுக்கொண்டு பிராதை சட்டப்படி விஜாரித்து முடிவு செய்யும்படி உத்தரவு அளித்தார்கள். அக்காரணங்களாவன:—

1. தர்வாட்டின் சொத்துக்களைப் பராதீனம் செய்தால் அதை ரத்துசெய்ய ஒரு மெம்பர் கோர்ட் மூலமாய் வழக்காடலாம். அதற்காக மற்ற மெம்பர்களை (அனந்தரவன்களை) சேறும்படி கேட்க வேண்டியதில்லை. தவிற வாதி தலமையான அனந்தரவனானபடியால் கார்ணவன் நீக்கப்பட்டால் வாதியே கார்ணவனாகப்பட்டவன். ஆகையால் தர்வார்ட் சொத்தைப்பற்றி சப் ஜட்ஜ்கொண்ட அபிப்பிராயம் தப்பு.

2. தேவஸ்தான சொத்து விஷயமாய் மற்ற மெம்பர்களும் உடந்தையாயிருந்து ஷை பராதீனம் செய்துவிட்டதாய் வாதி பிராதில் கண்டிருக்க அவர்களைக் கலந்து வாதி தாவாசெய்ய எதுகரமில்லை.

3. வாதி ஒருவனாய் சொத்தைசுவாதீனம் செய்துகொள்ள லாயக்கில்லாமலிருக்க அவன் தனிமையாய் செய்கிற தாவா சொல்லாதுஎன்ற எதிரியின் வாதம் ஒப்பத்தகாது. ஏனெனில் வாதிக்குக்கேசு ஜயமானால் அவனே கர்ணவனாகிறான். யாதொரு கோர்ட் அனுமதியில்லமலே சொத்துக்களை சுவாதீனப்படுத்திக்கொள்ள பாத்தியமுடையவன்.

4 பல சொத்துக்களைப்பற்றிக் கொடுத்த பிராதில் ஒரு சொத்தைப்பற்றியாவது சரியான வியாஜ்ஜியமூல மிருப்பதாகத் தோன்றினால் பாபர் மறு வைத்தள்ளாமல் பிராதை ஏற்றுக் கொண்டு கிடைக்ககூடிய பரிகாரத்தைக் கொடுத்து மற்றதைத் தள்ளிவிடவேண்டும். பாபர் மனுவைத்தள்ளுபடி செய்திருக்கக்கூடாது. சப்கோர்ட்டார் வியாஜ்ஜியமூலம் கிடையவே கிடையாதென்று மனுவைத்தள்ளுபடி செய்ததாகக் காணப்படவில்லை. மூன்றில் ஒன்றைப்பற்றிமட்டும் வியாஜ்ஜியமூலம் இருந்தும் அதிகாரவரம்பு முனிசிப் கோர்ட்டுக்கென்று சப்கோர்ட்டார் நினைத்து மனுவைத்தள்ளினபடியால் அதன்மேல் ஸி. பி. ஸி. 115-வது பிரிவுப்படி ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசிக்க அதிகார முண்டு.

ஆகிய இக்காரணங்களால் ரிவிஷன் மனு அங்கீகரிக்கப்பட்டு பாபர் மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

## சில முக்கிய கேசுகளின் அபிப் பிராயச்சுருக்கம்.

---

S. A. 1166 of 1911:—10-ஜனவரி-1913.

கிராம கர்ணன் வேலைக்காக சர்க்காரால் சில நிலங்கள் அளிக்கப்பட்டிருந்தால் அந்த கிராண்டு, நிலத்தின் கிராண்டென்றே நினைக்கக் கூடாது. கிராண்டு கொடுக்கப்படும் காலத்தில் அவன் நிலத்தின் சுவாதீனத்தில் இருந்ததாயாவது அல்லது நிலம் தரிசாய்க்கிடந்ததாயாவது ரூபகாரப்படுத்தினால் மட்டும் மேல்வாரம் குடிவாரம் இரு பாத்தியதையும் கிராண்டினால் ஏற்படும். இல்லாவிடில் நிலவருமானமென்றே அந்த கிராண்டை யூகிக்கவேண்டும்.

Crl. R. Case 352 of 1912:—20-1-1913.

ஒரு கிரிமினல் பிராதில் பல குற்றங்களைப்பற்றிச் செப்பியிருந்தும் சில குற்றங்களைமட்டும் குறித்து எதிரிக்கு சம்மன்போய் அவைகளில் விடுதலையானாலும் கிரி. பி. கோ. 403 வது பிரிவின் நிபந்தனையானது பிராதில்கண்ட மற்ற குற்றங்களைப்பற்றி விஜாரணை நடப்பதற்கு தடையாகாது.

L. P. A. 26 of 1912:—23-1-1913.

ஜமீன்தாரின் புஸ்தகத்தில் கம்பட்டம் நிலங்களாக பாவிக்கப்பட்டிருக்க, அவைகளில் குடிபாத்தியதை உண்டென ருஜூப்படுத்தவேண்டியது குடியானவனைச்சேர்ந்த பொறுப்பாகும். கோர்ட் ஆப் உவார்ட்ஸ்களால் ஜமீன்தாரருக்காக கொடுக்கப்பட்ட ஜிரோயதிபட்டாவை ஆதாரமாகக்கொண்டு குடி பாத்தியத்தை ஸ்தாபிக்க யத்தனிப்பது போதாது. அப்பட்டா அவ்வித கருத்தையே தரத்தக்கதல்ல. 12 வருஷங்களுக்குமேல் ஒருவன் குடி பாத்தியதையை கொண்டாடினகாரணத்தால் அதை சாச்வதமாய்ப் பெற்றதாக நிற்ணயிக்கக்கூடாது.

S. A. 16 of 1911.

வேறொரு டிக்கிரீப்படி ஜப்திசெய்யப்பட்ட சில சொத்துக்களில் இக்கேசின் பிரதிவாதிகள் தங்களுக்கு ஹக்குண்டென்று பாத்திய மனு செய்துகொள்ள அம்மனு தள்ளுபடியாச்சுது. அது முதல் 3-மாதத்திற்குள் பிரதிவாதிகள் தங்கள் பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ள அசல் தாவா செய்யவில்லை. அக்காரணத்தால் ஷை சொத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் கிடையாதென்று யூகிப்பது நியாயமன்று. பாத்திய மனு தள்ளுபடியானபிறகு மூன்று மாதத்திற்குள் வேறு காரணங்களால் ஜப்தி விடுதலையாகிவிட்டது. அசல் தாவாசெய்ய ஒரு வருஷ காலாவதியிருக்க அவ்விதம் யூகிப்பது சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்திய மில்லையென்றும் வாதி தனக்கு பாத்தியமென்றும் செய்த இந்த தாவாவில் வாதி தன் பாத்தியதையை சரியானபடி ரூபகாரப்படுத்தாமையால் தாவா ஷை ஜப்தியான சொத்துக்களைப்பற்றினமட்டில் தள்ளுபடியாக்சுது.

Crl. R. Cases 277 & 278 of 1912:—7-1-1913.

ஏராளமான எண்ணையை கடங்கில் வைத்துக்கொண்டு அந்தக் கடங்கிலிருந்து கடைக்கு சில்லரையாய் விற்பதற்காக அடிக்கடி சரக்கை எடுத்துக்கொண்டு வந்து ஸ்டாக்காய் வைத்துக் கொண்டு அந்த ஸ்டாக் விற்று முடிந்தபிறகு மறுபடி மதிப்பாய் விக்கிரயமாகக் கூடிய சரக்கை வரவழைத்து வைக்கிற ஒரு வியாபாரி கடங்குக்கு பிரத்தியேகமாய் சட்டப்படி லைஸன்ஸ் பெற்றும் கடையில் தனியாய் ஸ்டாக் வைத்துக்கொண்டிருக்கிறபடியால் அதற்காகவும் பிரத்தியேகமான லைஸன்ஸ் பெரவேண்டுமென செஷன் ப்ரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டின் உத்திரவுக்கு ஒத்து ஹைகோர்ட்டாரும் அபிப்பிராயப்பட்டு வர்த்தகனுடைய ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்தார்கள்.

---

S. A. 62 of 1913:—28-1-13:—ஒரு அனந்தரவார்ஸ், ஜனகனாலும் ஸ்வீகாரனாலும் தான் பிறந்த அல்லது ஸ்வீகாரம் புகுந்த ஆறு வருஷங்களுக்குள் ஒரு ஹிந்து விதவை யெடுத்துக்கொண்ட ஸ்வீகாரத்தை ரத்துசெய்யும்படி தாவா கொண்டுவரலாம்.

S. A. 1430/11:—29-1-1913:—சட்ட மில்லாத, பட்டாவில் சேர்க்கத்தகாத ஒரு கிஸ்தி மிராசுதாரனுடைய டிமாண்டின்பேரில் செலுத்தப்பட்டால் அது தெரியாத்தனமாய்ச் செலுத்தப்பட்ட கிஸ்தி யாகாது.

S. A. 2003 of 1911:—30-1-1913:—நீர்ப்பாசன வேலைகள் ரிபேரிலிருக்கும் காரணத்தால் புஞ்சையாக யிடையில் பாவிக்கப்படும் நிலங்கள் ஷை ரிபேர் வேலைகள் முடிந்து ஒழுங்காய் ஜலப்பாசனம் தடங்கிவிட்டால் மறுபடி பைசல் நஞ்சை ரேட்டுக்கு மாற்றிக்கொள்ள மிராசுதார் லாயக்குள்ளவனாகிறான்.

C. M. A. 74 of 1912:—30-1-1913:—ஸ்வீகார புத்திரன் ஸ்வீகாரத் தகப்பனுடைய சொத்துக்கு வார்சு சர்டிபிகேட் பெற லாயக்குள்ளவனேயொழிய ஸ்வீகாரத்தகப்பனுடைய பாரியாள் லாயக்காகமாட்டாள்.

ஏ-என்பவன் பீ-என்பவனுக்கு தன் சொத்தை விக்கிறயம் செய்தான். ஏ-பீ-க்குத் தெரிவித்ததாவது:—"என்னுடைய கடன்களைத்தீர்க்க என்ன தொகை வேண்டுமோ அத்தொகைக்கு ஷை சொத்தின் சில போதுமான பாகத்தை ஸி- என்பவனுக்கு விற்று ஷை கடனை தீர்த்துவிடும். மற்ற விக்கிறயத்தொகையை என் கையில் கொடுத்துவிடும் என்று கேட்டுக்கொண்டான். பிறகு தான் விக்கிறயம் செயத சொத்தைத்திரும்பியடைய தாவாசெய்து தான் முதலில் செய்த விக்கிறயம் நமோதுக்குவாக் கருதப்பட்டதல்லவென வாதம் செய்வது சரியல்ல.

A. S. 1735 of 1911:—31-1-1913:—ஒரு தஸ்தவேஜில் ஒருவன் தன்பனைவிக்கும ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளுகிற புத்திரனுக்கும் மன ஒத்துமை ஏற்பட்டால் தன் மனைவி ஜீவதசைவரையில் ரூ. 100 வருமானமுள்ள நிலங்களை அனுபவிக்க வேணுமென எழுதிவைத்திருக்க, அந்த தஸ்தவேஜு உயிலாகாதென்றும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள ஒரு அதிகாரமாகுமென்றும், ரிஜிஸ்டர் ஆகாமல் அப்பத்திரம் கோர்ட்டில் செல்லாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

S. A. 1870 of 1911:—31-1,1913:—முனிசிபல் மீட்டிங்கில் வோட் எடுக்கும் சமயத்தில் சேர்மென் அவதூரான வார்த்தைகளை ஒருவன் மேல் உபயோகப்படுத்தினால் அவன் அந்த அதிகார தோரணையில் சொன்ன வசன [illegible] க்கப்பட்டு மானநஷ்டதாவாவை அவ்விதமாய்க் கொண்டுவரவேண்டும்.

S. A. 1319 & 1320 of 1911:—9-1-1913.

ஒரு கிராமமுனிசிப் சட்டத்துக்கு விரோதமாய் வி[illegible]பட்டத் தண்ணீர்த்தீர்வையை செலுத்திவிட்டு சர்க்காரிலிருந்து ஷை தொகையை திரும்பி

யடையும்பொருட்டு செய்த தாவா காலாவதி தோஷம் ஏற்பட்டதாக கீழ் கோர்ட்டார் தள்ளுபடி செய்தார்கள். ஹைகோர்ட்டார் காலாவதியல்லவென்று கேசை விசாரணைக்கு திரும்பியனுப்பினார்கள். ரெவினியூ ரிகவரி ஆக்ட் 18-வது பிரிவுபடி, தீர்வை பாக்கிக்காக நோட்டீசு கொடுக்கப்பட்டிருந்தால் அதன்மேல் பலவந்தமாய் வசூலிக்கப்பட்ட தீர்வையைத் திரும்பியடைய ஷை ஆக்ட் 59-வது பிரிவுபடி, வியாஜ்ஜியமூலம் ஏற்பட்ட 6 மாதத் தவணைக்குள் கொண்டுவரவேண்டும். அப்படிக்கில்லாத பட்சத்தில் லிமிடேஷன் ஆக்ட்படி ஒரு வருஷ காலாவதி யுண்டு. இக்கேசில் தீர்வையை சர்க்காருக்காக வசூல் செய்யும் உத்தியோகமுடைய கி. மு. தண்ணீர்த்தீர்வையை யாதொரு நோட்டீசு சார்வு செய்யப்படாமல் செலுத்தியிருக்கிறான். ஆகையால் கி. மு. வின் தாவாவுக்குக் காலாவதி ஒரு வருஷம். அந்தக் காலத்திற்குள் தாவா கொண்டுவரப்பட்டபடியால், தாவாவை காலாவதிதோஷமாய்த் தள்ளினது பிசகு என்று ஹைகோர்ட்டார் அபிப்பிராயம்.

55. C. M. S. A 56 of 1911:—9-1-1913.

ஒரு டிக்கிரீதார் டிக்கிரீ தொகையை வசூலிக்க ஒருவனுக்கு பவர் ஆப் அட்டார்னி கொடுத்தார். ஷை பவர்பெற்ற ஏஜண்டு கொடுத்த நிறைவேற்று மனுவின் தேதிமுதல் மூன்றுவருஷத்திற்குள்ளே, ஷை டிக்கிரீதார் கொடுத்த வேறுமனுவானது காலாவதியாகிவிட்டதாக இரண்டுகோர்ட்டிலும் தள்ளுபடியாகிவிட்டது. ஏனெனில் முன் கொடுத்த மனுவில் ஏஜண்டு கையொப்பமிட்டிருக்க அந்த மனு சட்டப்படி செல்லாதென்றும் அவனுடைய பவர் ஒரு ரூபாய் ஸ்டாம்பில் எழுதப்பட்டிருப்பதால் அது ஜெனரல் பவரல்லவென்றும் ஆகையால் கையொப்பம் செய்தவன் சி. பி. கோ. 37-வது பழய பிரிவுபடி ஏஜண்டாக மாட்டானென்றும் அந்த முன் மனுவைக் கவனியாவிட்டால் நிறைவேற்று மனு காலாவதியாகிறது என்றும் அபிப்பிராயப்பட்டார்கள். ஹைகோர்ட்டில் 2-வது அப்பீலில் ஷை பவரில் ஏஜண்டை டிக்கிரீ தொகையை வசூலிக்கும் பொருட்டு எல்லா அவசியமான காரியங்களையும் நடத்தும்படி அதிகாரம் கொடுத்திருப்பதினால் ஒரே குறித்த காரியத்தைச் செய்யக்கொடுத்த ஸ்பெஷல் பவரல்லவென்றும் ஒருவனுடைய எல்லா காரியங்களையும் அல்லது ஒரு விதமான காரியங்களைச் சேர்ந்த எல்லா நடவடிக்கைகளையும் நடத்தும்படி பெற்ற பவர் ஜெனரல் பவரென்றும் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு முந்திய ஏஜண்டின் மனுவுக்கு மூன்று வருஷங்களுக்குள் கொடுக்கப்பட்ட மனு காலாவதியாகவில்லை என்று தீர்மானித்து ஷை மனுவை பயிலுக்கு எடுத்து சட்டப்படி நடத்த உத்தரவு செய்தார்கள்.

---

## பம்பாய் ஹைகோர்ட்டிலிருந்து ப்ரிவி கௌன்ஸிலுக்குச் செய்யப்பட்ட அப்பீல் தீர்மானம்.

---

பம்பாயில் விக்டோரியா மில் என்ற ஒரு மில்லானது முழுவதும் தீப்பிடித்தெரியவே தீயினால் வரும் நஷ்டங்களைக் கட்டிக்கொடுக்க ஒப்பந்தம் செய்துகொள்ளுகிற பல இன்ஸ்யூரன்ஸ் கம்பெனிகளில் ஷை மில்லை சொந்தக்காரன் ஒப்பந்தப்படுத்திக்கொண்டிருந்தபடியால் அச்சமயத்தில் அப்படிப்பட்ட 19 இன்ஸ்யூரன்ஸ் கம்பெனியார் தீப்பிடித்த மில்லை பாலிஸிகளில் கண்ட ஷரத்துகள் பிரகாரம் ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு இஞ்சியன் மூலமாய் தீயை அணைத்துவிட்டார்கள். அதனால் ஜலப்பிரயோகம் அதிகமாகி மில்லுக்குள் அமைக்கப்பட்டிருக்கிற பெரிய மெஷின்களை நனைத்து அசுத்தப்படுத்தியதுமன்றியில் ஷை கம்பெனியார் பாலிஸியில் கண்ட நிபந்தனைப்படி மில்லாருக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டங்களென்னவென சரியானபடி நிர்ணயிக்கும்பொருட்டு மில்லாபீசை தங்கள் சுவாதீனத்தில் அதிக காலம் வைத்துக்கொண்டிருந்தும் உள்ளே தண்ணீர் தேங்கியிருந்ததைக் கவனியாமல் விட்டபடியால் அநேக மெஷின்கள் டாமேஜாகிப்போய் விட்டது. மில்லார் திரும்பி சுவாதீனமடைந்தகாலத்தில் தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் யாவற்றையும் பாலிஸிகளின் ஷரத்துக்களுக் கனுஸரணையாக கணித்துத்தெரிவிக்க, அவ்வித நஷ்டங்களைச் சரியானபடி மதிப்பிடவும் ஒவ்வொரு கம்பெனியாரும் என்னவீதாசாரம் கட்டிக்கொடுக்க வேண்டுமோவெனத் தீர்மானிக்கவும் ஷை பாலிஸிகளில் கண்ட ஷரத்துக்களின்படியே மில்லாரும் கம்பெனியார்களும் சேர்ந்து அவ்விஷயத்தைப்பற்றி பஞ்சாயத்தார் தீர்மானித்துக்கு ஒப்புக்கொடுத்து அந்தப்படி பிறக்கும் பைசலை ஏற்



றுக்கொள்வதாய் எக்ரீமெண்டுகளும் பிறப்பித்துக் கொண்டார்கள். அந்தப்படி பஞ்சாயத்தார் விசாரணையில் கம்பெனியார் 19 பேர்களுக்கும் ஒரு லாயர் ஆஜரானார். மில்லார் பஞ்சாயத்தார்முன் தங்களுக்கு கம்பெனியாரின் அஜாக்கிறதையால் அதாவது நீடித்தகாலம் தண்ணீரால் மெஷீன்கள் நனைந்து கொண்டிருக்கும்படியும் அதை சுத்தப்படுத்தாமலும் விட்டபடியால் ஏற்பட்ட நஷ்டங்களைப்பற்றி ருஜு அம்சம் விடத்தொடங்கவே கம்பெனியார் அவ்வித சாட்சி யம்சம் ஏற்றுக்கொள்ளப்படாதென்று ஆக்ஷேபித்தார்கள். ஆனால் தண்ணீரினால், மெஷின்கள் அதிக டாமேஜாய்ப்போனதை கம்பெனியார் ஒப்புக்கொண்டபோதிலும் தீயணையுமட்டும் தண்ணீரினால் என்ன நஷ்டங்கள் ஏற்பட்டிருக்குமோ அவைகளுக்கு மட்டும்தான் கம்பெனியார் பாத்தியப்படக்கடவர்களென்றும், தீயணைந்தபிறகு தண்ணீரினால் ஏற்படும் நஷ்டம் ஒப்பந்தத்திலடங்கியதல்லவென்றும் வாதித்தார்கள். கம்பெனியார் மில்லை சுவாதீனம் செய்துகொண்டமையால் அங்குள்ள மெஷீன்களைப் பாதுகாத்து சுத்தப்படுத்தி கெடாமல் திரும்பி ஒப்பிவிக்க கடமைப்பட்டவர்களானதையால், பஞ்சாயத்தார் இவ்வித ருஜு அம்சம் ஏற்றுக்கொள்ளலாமென்று தீர்மானித்தார்கள். அதன்மேல் எல்லா கம்பெனியார்களும் சேர்ந்து ஹைகோர்ட் அசல் தரப்பில் ஷை பஞ்சாயத்தார் ஷை ருஜு அம்சத்தை ஏற்றுக்கொள்ளும் காரணத்தால் தங்கள் அதிகாரவரம்பை மீறிவிட்டதாகவும் ஆகையால் தங்கள் வியவகாரத்தை பஞ்சாயத்தாரிடமிருந்து நீக்கும்படியாவது அல்லது பஞ்சாயத்தார் செய்த பிசகை எடுத்துக் காண்பித்து அவர்கள் செல்லவேண்டிய மார்க்கமென்னவென தெரிவிக்கும்படியாவது உத்தரவளிக்கும்படி மனு செய்துகொண்டார்கள். அசல் தரப்பில் மிஸ்டர் ஜஸ்டிஸ் தேவார் அவர்கள் "பஞ்சாயத்தார் யாதொரு முடிவும் செய்யாதிருக்க அவர்களை நீக்க உத்தரவுசெய்ய அதிகாரமில்லையென்றும் பஞ்சாயத்தாரைப்பார்த்து இன்னவிதமாய் நடக்க வேண்டுமென உரைக்க அதிகாரமில்லையென்றும் அப்படி உரைத்தாலும் அவர்கள் அதன்படி நடக்கக் கடமைப்பட்டவர்களல்லவென்றும், நடப்பார்களென நம்பக் காரணமும் இல்லையென்றும்" அபிப்பிராயப்பட்டு மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அந்த அசல் தரப்பு உத்தரவின்மேல் கம்பெனியார் ஹைகோர்ட் அப்பீல் தரப்பில் விண்ணப்பம் செய்யவே, அவர்கள், பஞ்சாயத்தார் விசாரித்துத் தீர்மானம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட அம்சமானது தீயினால் மில்லாருக்கு என்ன நஷ்டமாச்சுதோவென நிர்ணயிக்கவேண்டியதேயொழிய இவ்வித நஷ்டங்களுக்கு பிரத்தியேகமான தீயணைந்த பிறகு கம்பெனியாரின் அஜாக்கிறதையால் மெஷின்களுக்கு ஏற்பட்ட டாமேஜ்களாகிய நஷ்டமானது அவர்களால் நிர்ணயிக்கத்தக்கதல்லவென்றும் பாலிஸியின் ஷரத்தையும் பஞ்சாயத்து உடன்படிக்கையையும் பார்த்தால் பின் சொல்லிய நஷ்ட அம்சங்கள் பஞ்சாயத்தார் நிர்ணயிக்கத்தக்கதல்லவென்றும், பஞ்சாயத்தார் பின் நஷ்டங்களுக்குறிய ருஜு அம்சத்தை ஏற்றுக்கொள்வதால் அதிகாரவரம்பு மீறுவதாயும் அபிப்பிராயப்பட்டு அந்த அபிப்பிராயப்படி பஞ்சாயத்தாருக்குத் தெரியப்படுத்தி அசல் தரப்பு உத்தரவை அப்பீல் வாதிகளின் செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

மில்லார் ஷை அப்பீல் உத்தரவின்பேரில் சீமையில் ப்ரிவி கௌன்ஸில் அப்பீல் செய்தார்கள். அவர்களின் தீர்மானச் சுருக்கமாவது:—

"தீயணைந்த காலத்தில் நஷ்டங்கள் என்னென்ன ஏற்பட்டதோ அதைமட்டும் தான் நிர்ணயிக்கவேண்டுமென ஹைகோர்ட் அப்பீல் உத்தரவின் கருத்தாகிறது. மில்லார் சீமை அப்பீல் செய்யாதிருந்தால் அவ்வித தப்பான வழியில் தான் நஷ்டம் கணிக்கப்பட்டிருக்கும். கம்பெனியார்களின் பாலிஸியில் கண்டபடி, தீப்பிடித்தவுடன் அவர்கள் கட்டடங்களையும் மற்ற கருவிகளையும் ஒப்புக்கொள்வதற்குக் காரணம் யாதெனில் நஷ்டங்கள் அதிகரிக்காமல் பாதுகாத்துக் கொள்ளும்படிக்கும் தண்ணீரினால் தீயை அணைத்து சாமான்கள் அதிக நஷ்டமாகாமலும் மற்றவிதமாய் என்னஜாக்கிறதையான காரியங்களால் நஷ்டங்களைக் குறைவுபடுத்தவேணுமோ அவைகளைச்செய்வதுதான். இப்படி செய்வதினால் கம்பெனியார்களுக்கு நன்மையாகும். மில்லாருக்குச் செய்யவேண்டிய கடமையல்ல. கம்பெனியார் மில்லை சுவாதீனப்படுத்திக்கொண்டு நஷ்டங்களைக் குறைப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்துவிட்டு சில நஷ்டங்கள் தீயினால் விளைந்ததல்லவென வாதாடுவது சரியல்ல. ஆகையால் பஞ்சாயத்தார் இருவித நஷ்டங்களைப்பற்றியும் நிர்ணயிப்பது சரியே என்னும் ஹைகோர்ட்

அசல் தாப்பு தீர்மானத்தைச் செலவுடன் காயப்படுத்தினார்கள்.”

**36. S. A. 859 to 861 of 1911:—23-17-1912.**

ஒரு விதவை தன் வசமிருந்த, கணவன் சொத்தில் சில பாகத்தை தன் தமையன் மகளுக்கு நன்கொடையளித்தாள். தன்னை அதுவரையில் ரக்ஷித்துவந்த காரணத்தினாலும் இனி தன் மரண பரியந்தம் தன்னை ஆதரித்துவரும்படி ஒப்புக்கொண்ட காரணத்தாலும் ஷை விதமாய் நன்கொடை யளித்தாள். அனந்தர வார்சுகள் அவ்வித நன்கொடை செல்லாது என்று, ஷை விதவையின் வசமிருந்த சொத்தை சுயாதீனமடையும்படி செய்த தாவாவில், ஷை தஸ்தாவேஜு நன்கொடையாகத் தோன்றியபோதிலும் முன் செய்த நன்மைக்காகவும் பின் செய்வதாய் ஒப்புக்கொண்ட நன்மைக்காகவும் அளித்த விநியோகமென்றும் பிரதி பிரயோஜனமுள்ள தஸ்தவேஜு என்றும் வாதாடப்பட்டு ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் அது சட்டப்படி பிரதி பிரயோஜனமுள்ள விநியோகமல்லவென்றும் அதில் கண்ட ஷரத்துப்படி பின் காலத்தில் ஷையாளை காப்பாற்றும் கடமை ஷை தஸ்தவேஜினால் ஏற்படாதென்றும் ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் கீழ்கோர்ட் தீர்ப்பை யனுசரித்து பைசல் செய்தார்கள்.

அத்தகைய நன்கொடை செய்ய அதிகாரமில்லாமலிருக்க, அனந்தர வார்சுகளின் தாவா அனுகூலமானதேயாம்.

**37. Crl. Revision Petition 135 of 1912:—21-8-1912.**

இந்தியன் பினல்கோட் 415-வது பிரிவுப்படி குற்றம் சாட்டப்பட்ட ஒருவனை மாஜிஸ்டிரேட்டாரவர்கள் ரூ. 2500-க்கு இரண்டு நபர் ஜாமீன் பேரில் விட்டிருக்க, ஆஜராகவேண்டிய தினத்திற்குமுன், எதிரி தற்கொலை செய்துகொள்ளவே, மாஜிஸ்டிரேட்டாரவர்கள் இரண்டு ஜாமீன்தார்களுக்கு ஷை யாள் கொலை செய்துகொள்ளக்கூடுமென்ற எண்ணம் மனதில் பட்டிருந்தும் அவனை ஜாக்கிறதையாய்ப் பாதுகாத்துக் கொள்ளாமல் தற்கொலை செய்துகொள்ளும்படி விட்டதாக ஷை ஜாமீன் தொகை பூராவையும் கட்டும்படி உத்தரவளித்தார்கள். ஹைகோர்ட்டார் புல் பெஞ்சியில் ஷை கேஸை ஈரங்கி கேட்டு, சொற்ப காலத்திற்கு முன் கல்கத்தா ஹைகோர்ட்டார் செய்த உத்தரவை யனுசரித்து, தற்கொலை செய்துகொண்ட எதிரியை ஆஜர்படுத்த சாத்தியப்படாத ஜாமீன்தார்கள் ஜாமீன் தொகையைக்கட்டக் கடமைப்பட்டவர்களல்லவென்று அபிப்பிராயப்பட்டு மாஜிஸ்டிரேட்டாரவர்களுடைய உத்தரவை ரத்துசெய்துவிட்டார்கள்.

**38. A. S 202 of 1909:—2 அக்டோபர் 1912.**

ஒரு ஹிந்து விதவை 1898 ம் வருஷம் ஜூலை 23உயில் குடும்ப சொத்தைப்பராதீனம் செய்துவிடவே அக்குடும்பத்தின் ஒரு எட்டிய அனந்தர வார்சுதார் 1908 ம் வருஷத்தில் அவ்வித பராதீனம் ஷையாளுடைய ஜீவிய காலத்திற்குப் பிறகு அனந்தர வார்சுகள் யாவரையும் கட்டுப்படுத்தாதென்று தீர்மானம் செய்யும்படி, பிராதுசெய்தார். ஜில்லா கோர்ட்டார், வியாஜ்ஜியமூலமேற்பட்ட ஆறு வருஷங்களுக்குள் தாவா செய்யப்படாத நிமித்தம் காலாவதி தோஷமென்று பிராதைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட்டார் அப்பீலில் அதே அபிப்பிராயம் கொண்டார்கள். வாதியின் வாதமாவது:—தனக்கு முன்னிற்கும் அனந்தர வார்சுகள் ஷையாளுக்கு உடந்தையாயிருந்து ஷை பராதீனம் நடந்ததாகவும் அவ்வித தகவல் தனக்குத் தெரிந்த காலம் முதல் காலாவதியை கணிக்கவேண்டும்; அப்படிப்பார்க்குமிடத்து 1903 ம் வருஷத்தில் தான் அத்தகவல் தெரிந்தமையால் தாவாவுக்கு தோஷமில்லையென்பதேயாம். ஆனால் பிராதில் வியாஜ்ஜியமூலம் பராதீனம் செய்ததேதியாகவே கண்டிருக்கிறது. பிராதைத்திருத்திக்கொடுக்கபட்டபொழுதாவது இன்னகாரணத்தால் காலாவதி தோஷம் கிடையாதென்று குறித்துக் காண்பிக்கப்படவில்லை. தவிர இத்தகைய வியாஜ்ஜியங்களுக்கு பராதீனம் செய்யப்பட்ட காலமே வியாஜ்ஜிய மூலமாய் பாவிக்கப்படவேண்டும். (ராணி அனந்த கண்வர்கோர்ட் ஆப்வார்ட்ஸ்) கேசில் பிறந்த தீர்ப்பில், ஒரு நெருங்கிய அனந்தர வார்சு உடந்தையாயிருக்கின், அடுத்த வார்சுதார் அவன் ஸ்தானத்தில் நின்று வியாஜ்ஜியம் செய்யலாமென்று மட்டும் விளங்குறது. வியாஜ்ஜிய மூலம் உடந்தைப்பட்ட காலமென்றாவது பராதீனம் செய்யப்பட்ட காலமென்றாவது தீர்மானிக்கப்படவில்லை. ஆகவே அந்தக்கேசு வாதிக்கு ப்ரயோஜனமானதல்ல. வாதியின் தாவா மேற்கூறிய அபிப்பிராயங்களின்படி காலாவதி கடந்துவிட்டது.



**39. C R.P. 316 of 1911:—20 செப்டம்பர் 1912.**

வாதிபிரதிவாதியினிடத்தில் 1896 ம் வருஷத்தில் கெம்புகளைக்கொடுத்து ஒரு கம்மாளனைக்கொண்டு காதுக்கு கம்மல்செய்து கூடிய சீக்கிரத்தில் செய்து முடித்துக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டான். கம்மல் செய்து முடிக்கப்படவில்லை. தவிர 1898-ம் வருஷத்தில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் மனஸ்தாபம் நேரிட்ட காரணத்தால் கெம்புகளும் வாபிசாகவில்லை. கம்மலும் செய்து கொடுக்கப்படவில்லை. 1911 ம் வருஷத்தில் வாதி கெம்புகளின் கிரயத்தைப்பெறும் பொருட்டு பிராதுசெய்ய, லிமிடேஷன் ஆக்டில் இவ்வளவு காலம் கெடுவென்ற வேறு சட்டம் இல்லாதிருக்கும் தாவாக்களுக்கு ஆறு வருஷ காலவாதி ஏற்பட்டிருக்கிற 120-வது பிரிவுப்படி, பிராது 15 வருஷங்களுக்குமேல் செய்யப்பட்டமையால் முனிசிப் கோர்டார் பிராதைத் தள்ளுபடி செய்தார். அதன்மேல், வாதி, ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுவில், தான் பிரதிவாதியிடம் ஒப்பிவித்திருந்த பொருளைப்பற்றி செய்யும் தாவாவுக்கு 145-வது பிரிவுப்படி 30 வருஷ காலாவதியுண்டென்று வாதிக்க, ஹைகோர்ட்டார் 120-வது பிரிவும், 145-வது பிரிவும், இக்கேசுக்கு உதவாதென்றும், கெம்பைக்கொடுத்து கம்மலாகிக் கொடுக்கச்சொன்னமையால், ஒப்பிவித்தபொருளைவாபிசு கேட்கும் தாவா என்று கருதக்கூடாதென்றும், ஒரு குறித்த ஜங்கம சொத்தையடைய அல்லது அதை அநீதியாய் வைத்திருந்த காரணத்தால் ஏற்படும் நஷ்டமடைய செய்யும் தாவாவுக்கு, 49-வது பிரிவுப்படி 3-வருஷம் கெடுவென்றும், 1898-ம் வருஷத்தில் மனஸ்தாபம் வந்தமையால் அது முதல் பொருளைப் பிரதிவாதி வைத்திருந்தது தப்பிதமாதலால் அவ்வருஷ முதல் 3-வருஷங்களுக்குள் தாவா செய்யப்படவேண்டுமென்றும், அல்லது பிரதிவாதி வாதியின் ஏஜண்டாக பாவிக்கப்பட்டிருந்தால் ஏஜண்டுபேரில் முதலாளி 89-90-வது பிரிவுப்படி 3 வருஷங்களுக்குள், தாவா செய்யவேண்டுமென்றும் (அதாவது வாதி ஒப்புக்கொள்ளுகிற மனஸ்தாப காரணத்தால் 1898 முதல் ஏஜண்டு என்ற பெயர் உசிதமாகாதென்றும் அது முதல் 3-வருஷங்களுக்குமேல் செய்த தாவா காலாவதி தோஷமாகும் என்றும்) அபிப்பிராயப்பட்டு கடைசியில் பிராதை எவ்விதத்திலும் காலாவதி தோஷத்தைச் செப்பித் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

**40. Crl. R. C. 90 of 1912:—15 நவம்பர் 1912.**

நீலகிரி மலை, எஸ்டேட் தோட்ட வேலைக்கு கூலி ஆட்களைச் சேகரம் பண்ணிக்கொடுத்து வருவதாய் ஒப்பந்தம் செய்துகொண்ட ஒரு மேஸ்திரி அவ்விதம் நடக்கத் தவறினபடியால் மதராஸ் ப்லாண்டர்ஸ் ஆக்ட்படிக்கு, மாஜிஸ்டிரேட் முன் கொண்டுவரப்பட்டு ஒப்பந்தப்படி நடக்க உத்தரவு பிறந்தும் கீழ்படியாததால் 6 வாரம் காவலில் வைக்கப்பட்டு, விடுதலையான பிறகு மறுபடியும் மாஜிஸ்டிரேட் முன் கொண்டுவரப்பட்டு அதே காரணத்தால் முன் போலவே ஷை சட்டத்தின் 24-வது பிரிவுப்படி மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டான். அதிலிருந்து விடுதலையான பிறகு எஜமான் மேஸ்திரியை மறுபடி மூன்றாவது தடவை மாஜிஸ்டிரேட் முன்கொண்டு வந்து முன்போல் கட்டளையிட்டு தண்டனை விதிக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டதன்மேல், கோர்ட்டார் அடிக்கடி அவ்விதம் உத்தரவுசெய்யும் கருத்து சட்டத்திலில்லையென மனுவைத்தள்ளுபடி செய்தார். ஜில்லா கலக்டர் அதன்மேல் ஹைகோர்ட்டுக்கு, மாஜிஸ்டிரேட்டின் தீர்மானத்தை ரத்துசெய்யும்படி ரிபர் செய்ததில், ஹைகோர்ட்டார் மாஜிஸ்டிரேட் செய்தது சரியென்றும், சட்டத்தில் ஒரு ஒப்பந்தக்காரனை கணக்கில்லாத தடவை கண்டித்து தண்டனை விதித்துவர ஆதாரம் கிடையாதென்றும், இரண்டு தடவை கொடுத்த பிறகு மறு கட்டளை கொடுக்கவும் தண்டிக்கப்படவும் அவன் சாகுமட்டும் அப்பாடுபடவும்கடமைப்பட்டவனல்லவென்றும், ஒரு ஒப்பந்தத்தில் தவறினவனை தண்டித்தமையால் தண்டனை முடிந்த பிறகு ஒப்பந்தம் நீங்கவில்லை என்ற காரணத்தால் கணக்கில்லாத தடவை அவனை சட்டப்படி தண்டிக்கலாமென்ற ஜில்லா கலக்டர் அபிப்பிராயம் தப்பென்றும், கிரிமினல் தரப்பில் தண்டிக்கப்பட்டபோதிலும் ஸிவில் தரப்பில் ஷை ஒப்பந்தக்காரன் பொறுப்பு தொடர்ந்துவருமென்றும், தண்டனையை அனுபவிக்கும் காலத்தில் ஒப்பந்தத்தை நடத்திவர சம்மதித்தால் எதிரியை விடுதலைசெய்து விடலாமென்ற 33-வது பிரிவின் அம்சத்தால், அவனை ஓயாமல் தண்டனைக்குக் கொண்டுவரும் கருத்து ஏற்படாதென்றும் பலவாரான காரணங்களை எடுத்துரைத்து, மாஜிஸ்டிரேட்டின் உத்தரவைக் காயப்படுத்தினார்கள்.

**41. C. R. P. 74 & 77 of of 1912:—7 ஜனவரி 1913.**

கணக்கர்கள் வசமுள்ள இனும் நிலங்களுக்குறிய கட்டுப்படி நிர்வையை அதாவது ஜோடியை அவர்கள் வெகு காலம் செலுத்திவராமலிருக்கையில், எஜமான் ஒரு பசலிக்குறிய கட்டுப்புடியை வசூலிக்க அது முதல் மூன்று வருஷங்களுக்குள் தாவா செய்தார். டிஸ்டிரிக்ட் முனிசிப். கட்டுப்புடு ஒரு நாளும் செலுத்தத்தக்கதல்லவென்றும் ஒருக்காலும் செலுத்தப்படவில்லையென்றும் தீர்மானித்து அக்காரணத்தால். தாவா காலாவதியாகிவிட்டதாக தள்ளுபடி செய்துவிட்டார். அதன்மேல் எஜமான் (வாதி) ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்தார். தாவாவக்கு முன். 1[illegible]-வருஷ காலமாய் எஜமானுக்கு கட்டுப்படி பாத்தியதை கிடையாதென்றாவது, அவ்வித பாத்தியம் கிடையாத காரணத்தால் கட்டுப்புடியை செலுத்த எப்பொழுதாவது ஆக்ஷேபித்திருந்தாலாவது அவ்விதமான ருஜூ அம்சங்கள் யாதொன்றும் கிடையாதென்றும், கணக்கர்களில் ஒருவர் எஜமானின் சொந்தக் கணக்கையெழுதிவர. அதில் தன்னைச் சேரவேண்டிய கட்டுப்படி தகை இவ்வளவென்க்குறித்து வந்ததும் அல்லாமல் அவைகளை ஒழுங்காய்ச் செலுத்தியும் வந்திருப்பதாக இந்த கேஸில் வாக்குமூலம் கொடுத்திருக்க, மற்ற கணக்கர்களுடைய பாக்கிகளை புஸ்தகங்களில் பதிந்திருந்தும் ஒழுங்காய் தங்கள் தங்கள் உத்தியோகங்களைப் பார்த்துவந்த கணக்கர்களிடம் ஷை பாக்கிகள் வசூலிக்கப்படவில்லையென்றும் ஒழுங்காய் வேலைபார்த்து வராதிருந்தால் எஜமான் கட்டுப்புடி தகையை டிமாண்டு செய்து வசூலித்திருப்பார் என்றும் ஷை சொந்த கணக்களின்வாக்குமூலத்தை தப்பர்த்தங்கொண்டு முனிசிப் ஒரு நாளும் வசூலிக்கப்படாததால் தாவா காலாவதி என்று தீர்ப்பு செய்தது பிசகென்றும், அபிப்பிராயப்பட்டு. ஹைகோர்ட்டார் முன்சீப் டிக்கிரியை ரத்துசெய்து வாதிக்குச் சேரவேண்டி தாவாவில் கண்ட கட்டுப்புடித்தகைக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

### 42. S. A. 249 of 1912 : —19 டிசம்பர் 1912

1910 ஜனவரி 15 இல் ஒருவன் தனுக்குச்சேர வேண்டிய அடமான கடனை வசூலிக்கும் பொருட்டு தாவாசெய்யவே தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் முனிசிப் கடன் தொகையை கொடுத்துவிடும்படியாயும் தவறினால் அடமான சொத்தை ஏலம்போட்டு வசூலிக்கும்படியாயும் பிரதம டிக்கிரி யளித்தார். அந்த பிரதம டிக்கிரியின்மேல் பிரதிவாதி சப்கோர்ட்டில் ஜூன்மீ 27[illegible] அப்பீல் செய்தான். அப்பீல் ஈரங்கிக்கு வருமுன், ஆகஸ்ட் 15ந இல் டிஸ்டிரிக்ட் முனிசிப் வாதியின் கோறிக்கையின் பேரில், பிரதிவாதி பிரதம டிக்கிரிப்படி கடன் தொகையை செலுத்தாத நிமித்தம், சொத்தை ஏலம் போடும்படி முடிவான டிக்கிரியும் கொடுத்துவிட்டார். ஷை அப்பீல் ஈரங்கிக்கு வரும்போது சப்கோர்ட்டார் பிரதிவாதி முடிவான டிக்கிரியின் பேரில் அப்பீல் செய்யாத காரணத்தால் அந்த டிக்கிரி காயமானதாகச் சொல்லி. அதற்கு விரோதமாய் தான் பிரதம டிக்கிரியின்மேல் அப்பீல் ஈரங்கியை ஒப்புக்கொள்ளக் கூடாதென்று. அப்பீலைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். ஷை சப்கோர்ட் உத்தரவுக்குமேல் பிரதிவாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்தான். 2-வது அப்பீல் தீர்மானமாவது:—

பிரதம டிக்கிரியின்மேல் பிரதிவாதிக்கு அப்பீல் உண்டென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. முடிவான டிக்கிரியின்மேல் மட்டும் அப்பீல் செய்தால் பிரதம டிக்கிரியில் கண்ட தீர்மானத்தின் நியாயத்திற்கு விரோதமான அம்சங்கள் அப்பீலில் பிரஸ்தாபிக்கக்கூடாது. ஆகையால் பிரதம டிக்கிரியைப் பற்றி பிரதிவாதிக்கு ஆக்ஷேபனையிருந்தால் அப்பீல் கட்டாயம் செய்திருக்கவேண்டும். அப்படிப்பட்ட அப்பீலை சட்டப்படி ஈரங்கி கேட்டு தீர்மானம் செய்யவேண்டுமேயொழிய முடிவான டிக்கிரியின் மேல் அப்பீல் செய்யாத காரணத்தால் அந்த அப்பீலை விஜாரிக்காமல் தள்ளிவிடக்கூடாது. முடிவான டிக்கிரீக்கு ஒத்து பிரதம டிக்கிரியை ரத்து செய்யவோ அல்லது காயப்படுத்தவோ அப்பீல் கோர்ட்டாருடைய கடமையேயொழிய, அப்பீலை விஜாரித்து தீர்மானம் செய்யக்கூடாதென்று சப்கோர்ட்டார் சொல்வது பிசகு. பிரதம டிக்கிரிப்படி தொகை செலுத்தப்படாததினால் சொத்தை ஏலம் போடும்படி முடிவான டிக்கிரி பிறந்து. ஆகையால் பிரதம டிக்கிரியன்னியில் முடிவான டிக்கிரியில் கக்ஷிக்காரர்களுக்கு பரிகாரம் ஒன்றும் ஏற்படவில்லை. அவ்வித பிரதம டிக்கிரி அப்பீலில் ரத்தாகிவிட்டால் பிரதிவாதி நடக்கவேண்டிய முறை ஒன்றும் ஏற்படாது. முடிவான டிக்கிரி அதினால் பயனற்றதாய் விடுகிறது. அதுபோலவே ரிமாண்டில் அல்லது ரிவியூ உத்தரவின் மேல் அப்பீல் செய்தால் அந்த அப்பீலில் ஷை இரண்டுவித உத்தரவுகளும் மாற்றப்பட்டால் ரிமாண்டின் பேரிலும் ரிவியூவின் பேரிலும் பிறந்த கீழ்



கோர்ட் பைசல்களும் பயனற்றதாய்ப் போகின்றன. இவ்வித தீர்மானங்கள் பலவாய் ஹைகோர்ட்டில் செய்யப்பட்டிருக்கின்றன. மேல் சொல்லிய காரணங்களால் சப்கோர்ட்டார் அப்பீலை பயிலுக்கெடுத்து சட்டப்படி முடிசெய்ய வேண்டுமென்பதேயாம்.

### S. A. 1480 of 1911 :—15 ஜனவரி 1913

சிவில் ப்ரொஸிஜர் கோட் 30-வது பிரிவுப்படி ஒரு கிராமத்தார், ஒரு ஜாதியார். ஒரு வகுப்பினர் பொதுவாய் வியாஜ்ஜியம் தொடுக்கவேண்டுமானால் அதில் சேர்ந்த ஒவ்வொருவரும் பார்டியாக இருக்கவேண்டியதில்லை. எல்லோருக்கும் சிலரை மட்டும் பிரதிநிதிகளாய் குறித்து அந்தப் பிரதிநிதிகள் மட்டும் கோர்ட்டாரிடம் அனுமதி பெற்று வியாஜ்ஜியம் நடத்தலாம். அந்த வியாஜ்ஜியத்தின் பைசலுக்கு அச்சங்கத்தார் ஒவ்வொருவரும் கட்டுப்பட்டவர்களாகிறார்கள்.

அதுபோலவே திருச்சிநாப்பள்ளி ஜில்லாவில் ஸ்ரீரங்கம் முனிசிப் கோர்ட்டுக்குள்பட்ட ஒரு கிராமத்து பிராமணர்களுடைய தர்ம விஷயமாய் ஏற்பட்டிருக்கிற சில சொத்துக்களை சில அந்நியர்கள் அனுபவித்து வருவதினால் அவர்களிடமிருந்து சொத்தை பரிகரித்துக் கொள்வதற்காக கிராமத்து பிராமணர்களில் ஐந்துபேர் பிரதிநிதிகளாய் ஏற்பட்டு கோர்ட்டார் அனுமதிபெற்று வியாஜ்ஜியம் தொடுத்து முனிசிப் கோர்ட்டில் அனுகூலமான டிக்கிரீ பெற்றார்கள். பிரதிவாதிகளில் சிலர் ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். அப்பீல் பைசலாகு முன் வாதிகளும் பிரதி வாதிகளும் சமாதானப்பட்டு பிரதிவாதிகளே ஷை தர்ம சொத்துக்களை யனுபவித்து வரலாமென்றும் அதற்காக அவர்கள் சில குறித்த ஊழியம் செய்து வரவேண்டியதாயும் ஆனால் சொத்தை எவ்வித பராதீனமும் செய்யக்கூடாதென்றும் ஒப்பந்தம் செய்துகொண்டு அந்தப்படி ராஜீநாமா செய்துகொண்டார்கள்.

முன்சிப் கோர்ட்டில் அனுகூலமான டிக்கிரீ பெற்றிருக்க, அந்த பூரண ஸாதகத்தை இழந்து, செய்துகொண்ட ராஜிநாமா கிராமத்து பிராமணர்களெல்லாரையும் கட்டுப்படுத்தாதென்று தீர்மானம் செய்யும்படி ஷை பிரதிநிதிகளும் இன்னும் 6 பேர்களுமாகச்சேர்ந்து முன்போல் 30-வது பிரிவுப்படி கோர்ட்டார் அனுமதிபெற்று பிரத்தியேகமான தாவாசெய்தார்கள். அதில், பிரதிநிதிகளுக்கு ராஜிசெய்ய அதிகாரமில்லையென்றும், 5-ம் பிரதிவாதியின் மோசவார்த்தையால் வாதி தரப்பு வக்கில் ராஜிநாமாவில் கையொப்பமிட்டார் என்றும், முக்கியமாய் வாதித்தார்கள். முன்சீப் கோட்டார், முன்செய்த அப்பீலில் வக்கிலுக்கு கொடுக்கப்பட்ட வக்காலத்து நாமவில் வக்கிலுக்கே ராஜிசெய்ய அதிகாரமிருப்பதாய்க் கண்டிருப்பதால் அந்த ராஜிநாமா சரியென்று, இந்த புதுப்பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார். சப்கோர்ட்டார் அப்பீலில் அதே அபிப்பிராயங்கொண்டு ராஜிநாமா வாதிகளுடைய சம்மத மன்னியில் பிறந்ததல்லவென்றும், தீர்மானித்து அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார் இந்த அப்பீலில் ராஜீநாமாவில் கட்டுப்பட்ட 1-5 வாதிகள் மட்டும் தான் பார்டிகளாகயிருந்தார்கள் அவர்களே ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்தார்கள். ஹைகோர்ட்டார் பிரதமத்தில் சொன்ன அபிப்பிராயமாவது:—ராஜிநாமாவில் கட்டுப்பட்டவர்கள் மட்டும் சப்கோர்ட்டிலும் இந்த கோர்ட்டிலும் அப்பீலில் வாதிகளாயிருக்கிறார்களே. அவர்களே அந்த ராஜியம்ச நடவடிக்கையை நிராகரிக்க சட்டப்படி லாயக்காக மாட்டார்கள் என்பதேயாம். அதன்மேல் 6-11 வாதிகளையும் ஹைகோர்ட்டார் அனுமதியின் பேரில் 2-வது அப்பீலில் வாதிகளாக சேர்க்கப்பட்டு அப்பீல் ஈரங்கி யாச்சுது:—ஹைகோர்ட் முடிவான பைசல் சுருக்கமாவது:—

அசல் கோர்ட்டில் வாதிகள் ராஜிசெய்ய அதிகாரமுடையவர்களென வாதி வக்கில் ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் அசல் கோர்ட்டில் ஸாதகம் பெற்றபின் அப்பீலில், தங்களுக்குக் கிடைத்த நன்மையை இழக்கலாமா என்று வாதாடுகிறார். பிரதிநிதிகளுக்கு அசலில் ஒருவித அதிகாரமும் அப்பீலில் ஒருவிதஅதிகாரமும் இருக்காது. ஆனால் ராஜிநாமா அநீதியா, மோசமானதா என்று மட்டும் கவனிக்கப்படவேண்டும். அதைப்பற்றி வாதிகளை சமாதானம் சொல்லும்படி கேட்கலாம். அசல் கோர்ட்டில் டிக்கிரீ அனுகூலமாய் பிறந்தும் அப்பீல் நடத்தப்பட்ட காரணத்தால் அசல் டிக்கிரீக்கு அபாயம் நேரிடுமோ வெனப்பயந்து வாதிகள் அப்பீல்கோர்ட்டில் யதார்த்தமாயும் நியாயமாயுமுள்ளபடி சமாதானம் அல்லது ராஜீநாமா செய்துகொள்ளக்கூடாதா? எக்காலத்திலாவது பிரதிநிதிகள் மோசமாய் நடக்கிறார்கள் என்று தெரிந்தால் அதைத்தடுக்க மற்றவர்களுக்கு சமயமும் சட்டமுமிருக்க, அப்பீல் நடக்கும்காலத்தில்,

அவ்வித ஆக்ஷேபனை செய்யப்படவில்லை. வேறு யாரும் தன்னைப் பார்டியாகச் சேர்த்துக்கொள்ளும்படி விண்ணப்பம் செய்துகொள்ளவுமில்லை. அப்படிப்பட்டவர்கள் பிரதிநிதிகளின் நடவடிக்கையால் சம்பவிக்கும் நன்மைகளுக்கு எப்படி பாத்தியப்படுவார்களோ அதுபோலவே அவர்கள் நடத்தையால் நேரும் நன்மைக் குறைவுகளையும் வகிக்க வேண்டுமென அபிப்பிராயப்பட்டு 2-வது அப்பீலைத் தள்ளுபடி செய்தார்கள்.

### Crl. 476 of 1912:—17 ஜனவரி 1913.

திருநெல்வேலி ஜில்லா சாத்தூரைச்சேர்ந்த ஸ்ரீவில்லிப்புத்தூரில் கண்ணம்மாள் என்ற ஒரு தேவதாஸி தன்னுடைய தமையன் பெண்ணாகிய குப்பம்மாள் என்ற 16-வயதுக்குக்கீழ்ப்பட்ட மைனரை ஸ்வீகாரம் செய்துகொண்டு அப்பெண்ணை தேவஸ்தானத்தில் ஆடவும் பாடவும் பிரஸாதங்கள் வாங்கி வரவும் உபயோகப்படுத்திவந்தாள். ஷை தாசி டிவிஷனல் மாஜிஸ்டிரேட் முன் இ. பி. கோ 373-வது பிரிவுப்படிக்குற்றம் சாட்டப்பட்டு தண்டனை யடைந்தாள். அதன்மேல் ராமநாதபுரம் ஜில்லா ஜட்ஜியிடத்தில் அப்பீல் செய்யவே, அங்கு குற்றவாளியல்லவென்று தீர்மானிக்கப்பட்டு விடுதலை யடைந்தாள். கவர்ன்மெண்டார் அந்த விடுதலை தீர்மானத்தின் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். (விடுதலையான கேசுகளில் ஸர்க்கார் தரப்பில் மட்டும் அப்பீல் செய்ய சட்டமிருக்கிறது. மற்ற பார்டிகளுக்குப் பொதுவாய் அத்தகைய சாதனம் கிடையாது) ஒரு தேவரடியாள் வியபசாரத்தொழிலுடையவளாக யிருந்து ஒரு மைனர் பெண்ணை ஸ்வீகாரம் செய்துகொண்டு தேவஸ்தான ஊழியத்திற்குச் சேர்த்துவிட்டால் அவள் இ. பி. கோ. 372, 373-பிரிவுகளின்படி குற்றவாளியாகிறாள் என்று கவர்ன்மெண்ட் வக்கில் வாதிக்க, எதிரிக்காக வக்கில் மிஸ்டர் டி. நரசிம்மய்யங்கார் அவர்கள் செய்த முக்கியவாதங்களாவன:—ஒரு மைனர் பெண்ணை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட காரணத்தினாலேயே ஷை பெண்ணை கெட்ட நடவடிக்கைக்கு உபயோகப்படுத்த எண்ணங்கொண்டதாக குற்றம் சாட்டக்கூடாது. மைனரா யிருக்கும்பொழுது பெண்ணை வியபாசாரத்தொழிலுக்கு உபயோகப்படுத்தும் எண்ணம் விளங்கினால் மட்டும் சட்டப்படி குற்றவாளியாவாள். ஏனெனில் மைனர் பெண்ணை ஸ்வீகாரம் எடுத்தும், மைனர் தசையிலும் அதற்குப் பின்னும் ஷை யாளை பதிவிரதையான முறையில் வாழும் விருப்பத்திற்கு விட்டுவிடலாம். இ. பி. கோ 372-373-வது பிரிவுகளில், "அந்த மைனரை" என்ற வசனமானது மைனர் தசையில் இருக்கும் காலத்தில் வேசித்தனத்திற்கு உபயோகப்படுத்தினால் என்று கருத்தாகும். அப்படிப்பட்ட போதுமான ருஜு இக்கேசில் ஏற்படவில்லை, யென்பனவாம்.

ஹைகோர்ட்டார் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டின் தீர்மானத்தைக் காயப்படுத்தி ஷை கண்ணம்மாள் குற்றவாளியென்று விளக்கி ஒரு மாதம் சொற்ப காவலும் ரூ. 200 அபராதமும் விதித்தார்கள். அத்தீர்மானத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட சில முக்கிய அபிப்பிராயங்களாவன:—

பெண்ணும் தகப்பனும் ஸ்வீகாரத்தை மறுக்கிறார்கள். ஆனால் தகப்பன் ஒரு முந்தியவர்க்கு மூலத்தில் தன்பெண்ணை கண்ணம்மாளுக்கு ஸ்வீகாரம் கொடுத்துவிட்டதாக ஒப்புக்கொண்டிருக்கிறான். ஆகையால் தகப்பனுடைய சொல் நம்பத்தக்கதல்ல.

சரியான சடங்குகளுடன் ஸ்வீகாரம் எடுக்கப்படாவிட்டாலும், 16-வயதுக்குட்பட்ட காலத்தில் வேசித்தனத்திற்குவிட எண்ணம் அல்லது அவ்விதம் நடப்பாள் என்ற அறிவுடன் தகப்பனிடமிருந்து பெண்ணை அடைந்து தன்னுடன் வசிக்கும்படி செய்ததே குற்றத்திற்குரிய போதுமான அம்சம். வயது 12-க்குக் கீழாக யிருக்கும்பொழுதே ஸ்வீகாரம்செய்துகொண்டதாக போதுமான ருஜு இருக்கிறது. தவிர கோவிலில் பிரசாதம் வாங்கவும் ஆடவும் பாடவும் உபயோகப்படுத்தினதாக சாட்சியம் இருக்கிறது. பொட்டுக் கட்டபடும் விஷயம் காலம், இதை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. சன்மார்க்கத்திற்குப் பெண்ணை உபயோகப்படுத்த எண்ணமிருந்ததாக ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு எதிரியைச் சேர்ந்தது. தேவஸ்தானத்தில் நடிக்கும் ஸ்திரீகள் வேசித் தொழிலுடையவர்கள் என்பது பொதுவாய் நம்பத்தக்க விஷயமென்று ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யரவர்கள் ஒரு கேசில் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள். ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரவர்கள் சொற்ப காலத்திற்கு முன் ஒரு தீர்ப்பில் தேவ தாசிகள் மைனர்களை ஸ்வீகாரம் செய்துகொள்வது சட்ட விரோதமென்றும் ஏனெனில் வேசித்தனத்திற்குச் செல்ல இடமுண்டாக்கும்



ஷை மைனர். ஸ்வீகாரம் குற்றமானதென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். 16-வயது மட்டும் கற்பழியாமல் காப்பாற்றப்பட்டு அதன்பின் பெண் தன் இஷ்டப்படி குடிஸ்திரீயாக அல்லது வேசியாக இருக்க ஸ்வதந்தரமுடையவளாகிவிடலாமென்ற காரணம் சரியானதல்ல. ஏனெனில் சன்மார்க்கத்தின் முறைகளில் பயின்று அசதசாவகாச மில்லாமலிருந்தால் தான குணப்படுவள். வேசியின் வீட்டில் துஷ்ட சாவகாசங்களுடன் புழக்கமாயிருக்கும் மைனர் பெண்ணின் கற்பைக் கார்த்தும் பிரயோஜனமாகாது. இவ்விதமாய் ஒரு ஜட்ஜியவர்களின் அபிப்பிராயங்கள்.

மற்றொரு ஜட்ஜியவர்கள் அதேவிதமான முடிவு செய்து கண்ணம்மாளைக் குற்றப்படுத்தி தண்டனை விதித்ததில் சொண்ட சில முக்கிய அபிப்பிராயங்களாவன :—

1911-ம் வருஷம் டிசம்பர் 2-இல் பெண் தனக்கு வயது 17 என்று வாக்கு மூலம் கொடுத்திருக்க, ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டதாய் ஒப்புக்கொள்ளப்பட்ட 1907-ம் வருஷத்தில் அவளுக்கு வயது 13 ஆக இருக்கவேண்டும். ஜனன மரண ரிஜிஸ்டரில் பெண் 1897 இல் பிறந்ததாக ஏற்படுகிறது. தகப்பன் 1909 இல் பெண்ணுக்கு வயது 12 என்று சொல்லி யிருக்கிறான். எதிரியும் 16 வயதுக்குப் பின ஸ்வீகாரம் எடுத்ததாக வாதிக்கவில்லை. அப்படியிருக்க பெண்ணின் வயது சரியாய் ரூபிக்கப்படவில்லை என்று ஜில்லா ஜட்ஜி அபிப்பிராயப்பட்டு விடுதலை செய்தது பிசகு.

கோவிலில் பெண்ணுக்கு பொட்டு கட்டாமலிருக்கலாம். வாதி தரப்பு சாட்சியத்தில் பெண் வியபசாரத்தனமா யிருந்ததாக ரூபிக்கப்பட்டதை ஜில்லா ஜட்ஜி நம்பாமலிருந்ததும் பிசகல்ல. ஆனால் பெண்ணை கோவிலுக்கு அழைத்துப்போய் ஆடல் பாடல் பிரசாதம் பெறுதல் ஆகிய காரியங்களுக்கு ஒப்புக்கொடுத்தது பரிஷ்காரமாய் ருஜு ஆகியிருக்கிறது. பெண்ணை வேசியாக்க எண்ணமிருந்தும், வேசித்தன மடைவள் என்ற அனுமான மிருந்தாலும் போதும். ஒருவனுடைய கழுத்தை அறுத்தால் அவனைக்கொல்ல யத்தனிக்கவில்லை என்றாவது அந்த எண்ணமில்லை யென்றாவது வாதிக்கலாமா? கழுத்தை வெட்டினால் மரணம் சம்பவிக்கும் என்று தெரிந்தால் போதாதா? அந்த மைனரை என்ற வசனத்தை (மைனர் தசையில், வேசித்தனத்திற் குபயோகப்படுத்த எண்ணினால் குற்றமாகும்) என்று காலத்தைக் குறிப்பதாய் வியாக்கியானிக்கக் கூடாது. அந்த மைனரை என்றால் இன்னார் என்ற ஆள் இனத்தைக் குறிப்பதாகும். அந்த மைனரை என்றால் அந்தப்பெண்ணை—(மைனரை எடுத்து வளர்த்து எக்காலத்தில் கெட்ட மார்க்கத்திற்கு விட எண்ணினபோதிலும் குற்றமாகும்.) பெண்ணை தான் சன்மார்க்கத்தில் வளர்த்ததாகவும் கற்பைக் காத்ததாகவும் ரூபிக்கலாம். ஆனால் வேசி வீட்டில் துஷ்ட சாவகாசத்தில் பத்தினியாய்ப் பெண்ணை வளர்ப்பதும் காப்பதும் அசாத்தியமாகுமல்லவோ? 16-வயதுக்கு முந்தியே இந்தப்பெண் புஷ்பவதியாகி ஸம்பர்க்கத்திற்குப் பாத்திரமாவாள் என்று எதிரிக்குத் தெரிந்திருக்க வேண்டுமாகையாலும், அக்காலத்தில் வேசித்தனத்திற் காளாவள் என்று தெரிந்திருக்கவேண்டுமென்றும், ஆகையால் மைனரை அவ்வித அறிவுடன் ஸ்வீகாரம் செய்து, வைத்திருப்பது சட்டப்படி குற்றமாகும்.

### C. C. C. A. 12 of 1911:—18 அக்டோபர் 1912.

சென்னையில் திருவரங்க வைசிய குலத்தைச் சேர்ந்த லட்சுமம்மாள் என்ற ஒரு விவாகமான ஸ்திரீ, தன் புருஷனைவிட்டுப்பிரிந்து ஜாதியிலிருந்து ப்ரஷ்டையாகி 1-ம் வாதியாகிய ஒரு கோமுட்டிசெட்டியைச்சேர்ந்து அவனுக்கு வைப்பாட்டியாக ஜீவ்யகால முழுமையும் இருந்து, தனக்கு முன் காலஞ்சென்ற கனகம்மாள் என்ற தான் ப்ரஷ்டையாகுமுன் பிறந்த குமாரத்தியின் வயிற்றிலுண்டான பேத்தியையும் கோமுட்டி செட்டியால் உண்டான இரண்டு புத்திரர்களையும் விட்டுவிட்டு மறித்தனள். கோமுட்டி செட்டியால் கொடுக்கப்பட்ட சில நகைகளைப்பற்றி கோமுட்டி 1-ம் வாதியாகவும் ஷை பேத்தி இரண்டாம் வாதியாகவும் சேர்ந்து ஷை இரண்டு புத்திரர்கள் வசமிருந்த ஷை நகைகளை வாபிசு அடைவதற்காக மதராஸ் ஸிடி ஸிவில் கோர்ட்டில் அசல் தாவா செய்தார்கள். நகைகளுக்கு 1-ம் வாதியாவது அல்லது 2-ம வாதியாவது பாத்தியப்பட்டவர்களென்று தீர்மானிக்கும்படி தாவா நடந்தது. ஸிடி ஜட்ஜியவர்கள், ப்ரஷ்டையாய்ப் போனபிறகு லட்சுமம்மாள் சம்பாதித்த சொத்துக்கு மேற்படியாளுடைய ப்ரஷ்டையானபிறகு பிறந்த இரண்டு புத்திரர்களாகிய பிரதிவாதிகள் தான் பாத்தியப்பட்டவர்களென்றும் 2-ம வாதி ப்ரஷ்டையானவளல்லவென்றும் ப்ரஷ்டையின் சொத்துக்கு குலஸ்திரீயாகிய பெண்வாரிசைவிட ப்ரஷ்டையாகவே பிறந்த புத்திர

ர்களே மேலான பாத்தியமுடையவர்களென்றபிப்பிராயப்பட்டு பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார். அதன்மேல் இரண்டு வாதிகளும் மதராஸ் ஹைகோர்ட்டில் அப்பீல்செய்தார்கள். அங்கு கீழ் கோர்ட் தீர்மானம் ரத்தாகி சொத்தானது லட்சுமம்மாளுடைய பெண்வயற்றுப் பேத்தியாகிய 2-வது வாதிக்குச் சேரவேண்டியதென்றும் 1-ம் வாதியாகிய கோமுட்டிசெட்டிக்கு பாத்திய மில்லையென்றும் உத்தரவாச்சுது. பிரதிவாதிகள் செய்த க்ராஸ் அப்பீலும் தள்ளுபடியாச்சுது.

சொத்தானது லட்சுமம்மாளுடைய தென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. அவளுடைய பிள்ளைகள் எல்லோரும் பிரஷ்டஜனன மில்லாதவர்களாயிருந்தால் லாப்படி அவள் சொத்து அவளுடைய பேத்திக்குத்தான் சேறும். புத்திரர்களுக்குச் சேராது. அப்படியிருக்க பிரஷ்டஜனனமுள்ள புத்திரர்களுக்கு மேலான பாத்தியம் கிடைக்காது. பேத்தி பிரதிவாதிகளைப்போல ப்ரஷ்டையாயிருந்தாலும் அவளுக்கு புத்திரர்களைவிட மேலான பாத்திய முண்டு. அல்லது எதிரி வக்கில் சொல்லுகிறபடி ஒரு பாகமாவது கிடைக்கும் அப்படியிருக்க ப்ரஷ்டையில்லாத பேத்திக்கு என் பாத்தியதை கம்மிப்படவேண்டும்? பிரஷ்டர்களுக்கும் மற்றவர்களுக்கும் சட்டப்படி அக்கு பிரஷ்டையான நிமிஷமே நீங்கிவிடுவதாய்ப் பல தீர்ப்புகளிருந்தும் கடைசியாக அத்தகைய அபிப்பிராயமானது வேறொரு தீர்ப்பில் மாறிப்போய்விட்டது. பேத்தி யில்லாவிட்டால் புத்திரர்கள் அடையவேண்டியது நியாயம் தான். ஆகவே தாவா சொத்துக்கு 2-ம் வாதியாகிய பேத்திதான் பாத்தியமுடையவள்.

S. A. 965 of 1911:—1 டிசம்பர் 1912.

ராமனுதபுரம் ஜமீனில் கேசவய்யர் என்ற ஒரு கவுல்தார் தன் கிராமத்திய கவுல் பாத்தியதையில் 8-இல் ஒரு பாகத்தை வாதிகளுக்கும், மற்ற பாகத்தை தன் குமாரனுகிய நரசிம்மய்யருக்கென்றெழுதிவைத்துவிட்டு இறந்தார். நரசிம்மய்யர் முழுகிராமத்தையும் கைப்பற்றி, ஜமீன்தாருக்குச் சேரவேண்டிய பொருப்புத்தகை முழுவதையும் தானே செலுத்தி குடிகளுக்கு, தானே பூரண கவுல்தாரைப்போல பாவித்துக்கொண்டு, பட்டா கொடுத்து முச்சலிக்கை பெற்றுவந்து வரும்படியில் எட்டில் ஒரு பங்கைமட்டும் வாதிகளுக்குச் செலுத்திவந்தார். அதைத்தவிற வாதிகள் வேறு யாதொரு சம்பந்தமும் ஷை கிராமத்தில் நேராய் வைத்துக்கொள்ளவில்லை. நரசிம்மய்யர் ஒரு தவணையில் பொருப்புத் தீர்வை செலுத்தத்தவறின காரணத்தால் ரெண்ட் ரிகவரி ஆக்ட்படி நிலங்கள் ஏலம்போடப்பட்டன. வாதிகள், அந்த ஏலம் தங்களைக் கட்டுப்படுத்தாதென்றும், தங்களுக்குத் தகவலன்னியில் நடந்த நடவடிக்கைகள் தங்களை பத்தப்படுத்தாதென்றும், தீர்மானிக்கும்படி பரமக்குடி முனிசிப் கோர்ட்டில் தாவாசெய்து அங்கும் சப்கோர்ட் அப்பீலிலும் தோல்வி யடைந்தபின், ஹைகோர்ட் 2-வது அப்பீல் செய்யவே, மூல கவுல்தாருடைய அக்கானது வாதிகளுக்கும் நரசிம்மய்யருக்கும்சேர்ந்துமாறிவிட்டபடியால் வாதிகளுக்கு நோடீசில்லாமல் செய்யப்பட்ட ஏலத்திற்கு வாதிகள் கட்டுப்பட்டவர்களல்லவென்றும், ஒரு குத்தகைகாரன் தன் பாத்தியதையை மற்றொருவனுக்கு மேடோவர் செய்தால் தான் மேடோவர் பெற்றதை மிராசுதாருக்குத் தெரிவிக்காமலிருந்தும்கூட மிராசுதார் அந்த மேடோவர்காரனுடைய தகவலன்னியில் முதல் குத்தகைக்காரன்பேரில் நடத்தும் நடவடிக்கை ஷை மேடோவர்காரனைக் கட்டுப்படுத்தாது என்று மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்களிலிருக்கின்றதாகவும், அப்படியிருக்க அக்குப்பிறந்திருக்கிற இந்தக் கேசில், ஒரு பாத்தியஸ்தனுக்கு நோடீசில்லாமல் நடந்த நடவடிகைகை அவனைக் கட்டுப்படுத்தாதென்றும், ஒரு கவுல்தார் இறந்தபின் அவனுடைய வார்சுகள் யார் யார் என்று விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டியது ஜமீன்தாரின் கடமையேயொழிய, ஒவ்வொரு வார்சுதாரனும் தனக்கு அக்கு இருப்பதாய் ஜமீன்தாருக்கு தெரிவித்துக்கொள்ளவேண்டிய கடமையில்லையென்றும், தனக்கு யாதொரு அக்குமில்லை என்று விளங்கும்படியான நடத்தை வாதியினிடத்திலிருந்ததாகக் காணப்படவில்லையென்றும், வாதிக்கு நோடீசில்லாமலிருக்க, தாவா காலாவதியாகிவிட்டதென்ற எதிரிகளின் வாதம் செல்லாதென்றும், ஏல நடவடிக்கையில் வாதிக்காக நரசிம்மய்யர் ஆஜரானதாகப் புலப்படாததால் காலாவதிவாதம் செல்லாதென்றும், அபிப்பிராயப்பட்டு, வாதிக்கு ஹைகோர்ட்டார் அனுகூலப்படுத்தி அவனுக்குறிய பாகத்தைப்பிரித்துக்கொடுக்கும்படி பிரதம டிக்கிரீயளித்து சட்டப்படி முடிவான பாகவிஸ்தி பரிகாரம் அளிக்கும்படி உத்தரவு செய்தார்கள்.



C. R. P. 127 of 1911:—6 ஜனவரி 1913.

ராமசாமிசெட்டி என்ற ஒருவருடைய மைனர் புத்திரன். புத்திரிகள், காலஞ்சென்ற புத்திரனுக்குப்பிறந்த மைனர் பவுத்திரன், பேத்தி ஆகிய இவர்களுக்கு கார்டியனுக ஷை ராமசாமி செட்டியும் அவருடைய சகோதரனும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஷை மைனர்களில் ஒருவனுக்கு ரூ. 14000 செலவு செய்து விவாகம் செய்ய கார்டியன்கள் ஏற்பாடுசெய்வதை மற்றொரு மைனருடைய தாயார் அவ்விதமாய் விவாகம் செய்யக்கூடாதென்றும், அதைப்பற்றி தான் கோர்டில் மனுக்கொடுக்கப் போகிறதாயும், அந்த கோர்ட் உத்தரவு பிறக்குமட்டும் விவாகம், முடிக்கக்கூடாதென்றும் ஷை கார்டியன்களுக்கு ரிஜிஸ்டர் நோடீசு கொடுத்திருந்தும் அந்த நோடீசை வெளியிடாமல் 1-வது கார்டியன், வார்ட்ஸ் ஆக்ட் 39-வது பிரிவுப்படி ஷை தாயாருக்குத் தகவலில்லாமல் கலியாணம் முடிக்க உத்தரவுபெற்று, 1911 பிப்ரவரிமீ 1உ முகூர்த்தம் ஏற்பட்டிருந்தது. மற்ற மைனரின் தாயாராகிய மனுதார் ராமனுதபுரம் ஜில்லா கோர்ட்டில் 30 ஜனவரி 1911 இல் 1-வது கார்டியன்பேரில், விவாகத்தை நடத்தாமலிருக்கும்படி இஞ்சங்ஷன் உத்தரவுபெற்று, அந்த உத்தரவு அன்றே தந்திமூலமாய மேற்படியானுக்குத் தெரிவிக்கப்பட்டும், அந்த உத்தரவைக் கவனியாமல் விவாகத்தை நடத்திவிட்டான். ஜில்லா கோர்ட்டார், மனுதாரின் விண்ணப்பம் 13-2-1911 இல் ஈரங்கிக்கு வரும்போது தாம் செய்த உத்தரவை மீறினதற்காக 2-வது கார்டியனுக்களித்த உத்தரவாவது:—"மனுவை மறு ஈரங்கியில் விஜாரிக்கப் போகிறதாயும் அன்று தான் ஆஜராவதற்காகவும் 1-வது கார்டியனையும் ஆஜர்படுத்துவதற்காகவும் ரூ. 30,000 க்கு ஜாமீன் முச்சலிக்கை யெழுதிக்கொடுக்கவேண்டும்."

இத்தகைய உத்தரவு சட்டத்திற்கு விரோதமென்று 1-வது கார்டியன் ஹைகோர்டில் ரிவிஷன் மனுகொடுத்தார். ஒரு நடவடிக்கையில் பார்டியாயிருப்பவனை ஆஜராகும்படிக்கு ஜாமீன் கேட்பதற்கும, மற்றொருவனை ஆஜர்படுத்துமபொருட்டு ஒருவனை ஜாமீன் கொடுக்கச் சொல்வதற்குமநேர்ந்துபோன யாதொருவனுடைய வேண்டுகோளில்லாமலித்தகைய உத்தரவு செய்யவும் கோர்ட்டாருக்கு அதிகாரவரம்பில்லை என்பது ஹைகோர்ட் ரிவிஷன் மனுதாரின் வாதம். எதிர் வாதமாவது:—கோர்ட்டார் உத்தரவை மீருகிறவர்களை ஸிவில் ஜெயிலில் அடைக்கவும் ஷை யாருடைய சொத்துக்களை ஜப்திசெய்யவும் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு கார்டியன் ஆக்ட் 43-வது பிரிவுப்படி ஸி. பி. கோட் நிபந்தனைகளைப்போல உத்தரவைப் பலவந்தப்படுத்தலாம். எவ்விதமும் 2-ம் கார்டியனைப் பொருத்த மட்டிலாவது ஜில்லா கோர்ட் உத்தரவு சரியே-என்பனவாம்.

ஹைகோர்ட்டார் அபிப்பிராயச் சுருக்கமாவது:—1-வது கார்டியனை ஆஜர்படுத்தலதற்காக 2-வது கார்டியனிடம் ஜாமீன் கேட்பது பிசகே. அதைப்பற்றி பலமான வாதமும் நம்முன் செய்யப்படவில்லை ஒரு பார்டியின் நன்மைக்காகப் பிறந்த இஞ்சங்ஷன் உத்தரவை மீறினவனுக்கு விரோதமான ஒரு உத்தரவை அப்பார்டியின் வேண்டுகோளில்லாமல் செய்பக்கூடாது. ஆனல் மைனருடைய நன்மையை காப்பாற்றும் பொருப்பு கோர்ட்டாருக் கிருப்பதால் யாதொரு விண்ணப்பமன்னியில் கோர்ட்டாரே யாதொரு உத்தரவும் செய்யலாம். என்றாலும் இந்த கேஸில் பிறந்த உத்தரவு சட்ட விரோதம் தான். ஆனல் கோர்ட்டார் ஒருக்கால் ஈரங்கி காலத்தில் கார்டியன் ஆஜராக மாட்டானே என்று சந்தேகித்து இத்தகைய உத்தரவு செய்திருக்கலாம். ஆகையால் ஷை கார்டியன் கோர்டில் ஆஜரான உடனே ஷை உத்தரவு ரத்தானதாக பாவிக்கப்படுமென்று தீர்மானம் செய்தார்கள்.

C. R. P. 214 of 1912:—8 அக்டோபர் 1912.

ஒரு பாக வியாஜ்ஜியத்தில் வாதி தனக்குக் கிடைக்கவேண்டிய பாகத்தின் மதிப்பை, சுமார் 150 ரூபாயாகச்செப்பி அதன்மேல் மவுண்ட் கட்டியிருந்தான். எதிரி, அம்மதிப்பு சரியானதல்லவென்றும், வாஸ்தவமாய் அவன் தேடுகிற பரிகாரத்தின் மதிப்புக்கு மட்டு மிஞ்சின வித்தியாசமாயிருப்பதாயும், அவ்விதம் கெட்ட எண்ணத்துடன் மதிப்பிட்ட தாவாவை கோர்ட்டார் அங்கீகரிக்காமல் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் வாதம் செய்ய கீழ் கோர்ட்டார் அதை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால், பிரதிவாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுகொடுத்தார். பிரதிவாதியின் வாதமானது பம்பாய், கல்கத்தா, அலகபாத் ஹைகோர்ட் தீர்மானங்களுக்கு அனுஸரணையாயிருக்கிறது. ஆனல் மதராஸ் ஹைகோர்ட் தீர்மானம் அதற்கு விரோதமாய் இருக்கிறது. ஆக

காரணத்தால் இந்த லா பாயிண்டானது ஒரு புல் பெஞ்சு அபிப்பிராயத்துக்கு அனுப்பப்பட்டு அந்த பெஞ்சுமுன் ஈரங்கியாகி பிராதை தள்ளுபடி செய்யக்கூடாதென்ற மதராஸ் ஹைகோர்ட் தீர்மானமே சரியென்றும் ஏற்பட்டது.

அதாவது:—பங்காளிகளுடன் கூட்டாய்சொத்தை சுவாதீனமடைந்திருக்க தன் பாகத்தை ஒரு பங்காளி பிரித்துக்கொடுக்கும்படி செய்கிற பாக வியாஜ்ஜியத்தில் சொத்தின் மதிப்பை நல்லெண்ணமில்லாமல் தன் இஷ்டப்படி குறித்து பிராதில் காண்பித்ததாக ஏற்பட்டால், அந்தபிராதை கோர்ட்டார் தள்ளுபடி செயயக்கூடாதென்பதேயாம். தாவாக்களின் மதிப்புக் குறிக்கப்படுவதற்காக ஏற்பட்ட ஆக்ட் 9 வது பிரிவுப்படி ஹைகோர்ட்டாருக்கு சில அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தந்த தாவாவின் மதிப்பு கணிக்கப்படுவதற்கு சந்தேகமும் கஷ்டமும் நேரிடுகிறதோ, அத்தகைய தாவாக்களின் மதிப்பு இன்னவிதம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று ஹைகோர்ட்டார் விதிகள் ஏற்படுத்தலாம். இவ்வித சட்டத்தின் 9-வது பிரிவின் அம்சங்கள் கவனிக்கப்பட்டால், மதிப்பின் விஷயமாய் ஏற்படும் தகாரர்கள் நீங்கிவிடுமென்றும அபிப்பிராயம கொடுக்கப்பட்டது.

C. R. P. 338 of 1910 :—17 டிசம்பர் 1912.

நாகப்பட்டணம் சப்கோர்ட்டில் நடராஜ அய்யர் என்ற ஒருவர் பேரில் ரூ. 30,000 க்கு ஒரு எக்ஸ் பார்டி, டிக்கிரியாச்சுது. தனக்கு சம்மன்ஸ் சரியானபடி சர்வாகவில்லை யென்றும், தான் ஈரங்கிக்கு ஆஜராகாமலிருந்ததற்கு போதுமான முகாந்தரங்களிருந்ததென்றும,சொல்லி அந்த எக்ஸ்பார்டி டிக்கிரியை மாற்றி மறு விஜாரணை செய்யும்படி ஷை நடராஜய்யர் மனுசெய்துகொள்ள, சப் ஜட்ஜ மேற்கூறிய இரண்டு அம்சங்களைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் கொடுக்காமலே,டிக்கிரியை ரத்து செய்துவிட்டார். அதனமேல் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாகல் செய்தார். ஸிவில் ப்ரொஸிஜர் கோட் ஆர்டர் 9 ரூல் 13 இல்கண்ட (சம்மன்ஸ் சரியானபடி சர்வாகாமை, ஆஜராகாமலிருப்பதற்கு போதுமான முகாந்தரம்) இரண்டு காரணங்களைத் தவிற வேறு காரணங்களாலும் கூட கோர்ட்டார் எக்ஸ்பார்டி டிக்கிரியை மாற்றி விடலாமென்று எதிரி வக்கில் ஹைகோர்ட்டில் வாதம் செய்தார். சப் ஜட்ஜ மேற்கூறிய இரண்டு பாயிண்டுகளைப்பற்றி அபிப்பிராயம் கொடுக்காததினால் (1) சம்மன்ஸ் சரியானபடி சர்வாச்சுதா? (2) பிரதிவாதி கேசானது ஈரங்கிக்கு வரும் சமயத்தில் ஆஜராவதைத் தடுத்ததற்கு போதுமான காரணம் யாதுமிருக்கிறதா?

என்றதைப்பற்றி புது சாட்சியங்களை கேட்டு அபிப்பிராயம் அனுப்பும்படி சப ஜட்ஜிக்கு உத்தரவளித்தமேல், சம்மன்ஸ் சரியானபடி சர்வாச்சுதென்றும், கோர்ட்டார் ஸ்மால் காஸ் கேசுகளை முதலில் விஜாரித்து அதன் பின் அசல் நம்பர்களை எடுகிற வழக்கத்தை மாற்றி, அன்று முதலில் அசல் நம்பர்களை எடுத்த காரணத்தால் பிரதிவாதியின் வக்கில் ஆஜராகக் கூடவில்லை யென்று ஹைகோர்ட்டாருககு தெரிவித்தார்.

அதன்மேல், நாருயணசாமி அய்யர் என்ற வேறு ஒரு வக்கில் ஷை நம்பர் கூப்பிடப்பட்ட காலத்தில் பிரதிவாதிக்காக நம்பரை நிறுத்திவைக்கும்படி மட்டும் கேட்டுக்கொண்டபடி யாதும் கேசை நடத்துவதற்கு யாதொரு தகவலும் ஷை வக்கிலுக்குத் தெரியாதென்றும் பிரதிவாதியின வகையராப் பேர்வழி யாதொருவரும் ஷை வக்கிலிடமில்லை யென்றும இக்காரணத்தால் பிரதிவாதி ஆஜராகாத பாவனையாகுமென்றும் ஆகையால் எக்ஸ் பார்டியாக டிக்கிரீ செய்தது சரியென்றும் அதை மாற்றக்கூடாதென்றும் ஹைகோர்ட்டில் எதிரிவாதிக்க இவ்வாதத்தில்கண்ட அம்சங்களைப் பற்றி சப்கோர்ட் ரிகார்டுகளில் யாதொன்றும காணுமையால் அவ்விஷயங்களைப்பற்றி புது சாட்சியம் விஜாரித்து.

(1) நாராயணசாமி அய்யர் என்ற வக்கிலுக்கு கேசுக்குறிய தகவல்கள் சொல்லப்பட்டு அதற்குறிய கேழ்விகளுக்கு உத்தரம் சொல்லத் திறமையிருந்ததா?

(2) அவ்வித கேழ்விகளுக்கு உத்தரம சொல்லத் தகுந்த யாதொரு மனுஷ்யர் அவரிடம்கூட இருந்தாரா?

என்ற இரண்டு சங்கதிகளைப்பற்றி விஜாரித்துத் தெரிவிக்கும்படி சப்கோர்ட்டுக்கு ஹைகோர்ட்டார் உத்தரவளித்தார்கள்.

கேசுக்கு வாய்தா வாங்கும்படி மட்டும் ஷை வக்கிலுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்ததாகவும் கேசின் தகவல் அவருக்கு யாதொன்றும் தெரியாதென்றும் தெரிந்த மனுஷ்யர்கள் அவரண்டை யாருமில்லை என்றும் சபகோர்ட்டார் தெரிவித்த



மேல் ஹைகோர்ட்டார் முடிவாய்ச் செய்த தீர்மானம் என்னவென்ருல் :—

கேசை சப்கோர்ட்டார் ஈரங்கிக்கு கூப்பிடும்பொழுது சட்டப்படி பிரதிவாதியாவது அவனுடைய வக்கிலாவது ஆஜராகவில்லை. அப்படிஆஜராகாமலிருப்பதற்குப்போதுமான காரணங்களில்லை.

ஆர்டர் 9-ரூல் 13 இல் கண்ட காரணங்களைத் தவிற இதர காரணங்களால் அதாவது இந்தக்கேசில் ஏற்பட்டிருந்த அசந்தர்ப்பங்களால்,வாதிக்குக் கிடைத்த 30,000 ரூபாய் எக்ஸ்பார்டி டிக்கிரீயை மாற்றலாமா என்று யோஜிக்கு மிடத்து, சட்டத்தில் சில காரணங்களை குறிப்பிட்டு அதனுல் மட்டும் ஒரு பரிகாரம் செய்யவேண்டுமென்றிருக்க கோர்ட்டாருக்கு யுக்தமாய்த் தோன்றும் வேறு காரணங்களையிட்டு அப்பரிகார மளிக்கக்கூடாது கோர்ட்டாருக்கு யுக்தமான அதிகாரம் கொடுக்க கருதப்பட்டால் அவ்விதமான வசனம் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கவேண்டும். 30,000 ரூ. டிக்கிரீயை மாற்றினுல் மறு விஜாரணையாகுமுன் பிரதிவாதி சொத்துக்களைப் பராதீனம் செய்து விடுவான். வாதிக்கு மறு விஜாரணையில்டிக்கிரீ கிடைத்த போதிலும் அதை நிறைவேற்றுவதற்கு மார்க்கமில்லாமல் போய்விடுமென்ற வாதி தறப்பு வாதமானது வெகு நீதியாகவே யிருக்கிறது. எவ்விதமும் சட்டத்தில் குறிக்கப்பட்ட காரணங்களுக்குப் புறம்பான மார்க்கத்தில் கோர்ட்டார் செல்லக்கூடாது ஆகையால் எக்ஸ்பார்டி டிக்கிரீயை மாற்றினது பிசகு. டிக்கிரீ காயமாச்சுது.

என்ற மேற்கூறிய முக்கிய காரணங்களால் வாதிக்கு ரிவிஷன் மனு அனுகூலமாச்சது.

S. A. 1221 of 1911:—21 நவம்பர் 1912.

விபக்த சகோதரர் இருவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு தன் சொத்தை முழுவதையும் ரூ. 900 கில்லரைக்கு அடமானம் செய்து வாஸ்தவமாய் வாங்கிய கடன் ரூ. 540 தான். அடமானதாரனுடைய மற்ற கடன்காரர்களை மோசம் செய்யும்பொருட்டு அதாவது மேற்படி சொத்தின் பேரில் தொடராமலிருக்கும்பொருட்டு ஷை சொத்து என்ன விலை பெறுமோ அத்தொகைக்குச் சரியான தொகையைக் காட்டி அடமானம் செய்து வைத்ததாக இரண்டு கீழ்கோர்ட்டிலும் அபிப்பிராயம் கொள்ளப்பட்டு அத்தகைய மோசமான ஓர் ஏற்பாட்டை இருவரும் சேர்ந்து செய்துகொண்டமையால் மேற்கூறிய இதர கடன்காரர்களைப்பற்றின மட்டில் அந்த அடமானம் முற்றிலும் சட்ட விரோதமென்றும் வாஸ்தவமாய் ரூ. 510 கடன் பெற்றிருந்த போதிலும் அந்த தஸ்தவேஜானது மற்ற பாக்கிதாரர்களுக்கு சொத்து பூராவின்மேல் தொடர்ந்து பாக்கியை வசூலிக்க இடையூராகாதென்று தீர்மானிக்கப்பட்டது. அதன்மேல் அடமானம் பெற்றவர் ஹைகோர்ட்டில் 2 வது அப்பீல் செய்ய அங்கும் அதே அபிப்பிராயம் கொள்ளப்பட்டு 2 வது அப்பீல் தள்ளுபடியாகிவிட்டது.

C. M. S. A. 50 of 1912 :—17 ஜனவரி 1913.

ஒரு டிக்கிரீதார் டிக்கிரீ பிறந்த 12-வருஷங்களுக்குள் எதிரியை வாரண்டில் பிடித்து தொகை வசூலிக்கும்பொருட்டு பல தடவை கோர்ட் மூலமாய் பிரயத்தனப்பட்டு வாரண்டுகள் எல்லாம் சர்வாகாமல் வாபிசாய்விட்டன. 12 வருஷ காலாவதி கடந்த பிறகு தாகல் செய்த ஒரு நிறைவேற்று மனுவில் வாதி பரிகாரம் தேடக்கூடாதபடி அந்நிய இராஜ்ஜியத்தில் எதிரி மறைந்து கொண்டிருக்கிறுன்என்ற சங்கதியை கண்டிருக்க ஸிவில் ப்ரொஸிஜர் கோட் 43-வது பிரிவு க்ளாஸ் 2 (a) இல் கண்டபடி 12 வருஷ காலமான போதிலும் பிரதிவாதியின் மோசம் அல்லது பலாத்காரமான ஒரு நடத்தை இவைகளால் வாதி சரியான காலத்தில் நிறைவேற்றுதல் தடுக்கப்பட்டால் கோர்ட்டார் 12 வருஷ காலாவதி தோஷத்தைக் கவனியாமல் மறுபடி நிறைவேற்று மனுவுக்கு உத்தரவு கொடுக்கலாமென்றிருக்க, அந்நிய இராஜ்ஜியத்தில் பிரதிவாதி மறைந்துகொண்டிருப்பதாய்ச் சொன்ன காரணம் ஷை சட்டத்தில் செப்பிய மோசமென்று கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு மனுவைத் தள்ளுபடிசெய்துவிடவே, வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்தார் அங்கு நிறைவேற்றுவதைத் தடுப்பதற்கு யாதொரு அனுசிதமான மார்க்கம் தேடினுலும் அது மோசமாகுமென்றும், முன் பல தடவை வாரண்டுகள் எடுக்கப்பட்டு சர்வாகாமல் வாபிஸாச்சுதென்று கோர்ட் ரிகார்டுகளில் துலங்குகிறதென்றும், பிரதிவாதி கோர்ட்டாரின் வாரண்டுகளுக்கு அகப்படாமல் மறைந்துகொள்வது வாஸ்தவமென்று முன்சீப்கோர்ட்டார் அபிப்பிராயப்படுவதினுலும் அந்த முன் நடவடிக்கைகளைப்பற்றியும் இன்றும் இது விஷயமாய் இதர சாக்ஷியங்களையும் விஜாரித்திருக்கவேண்டு

மென்றும் அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டார் கீழ்கோர்ட் உத்தரவுகளை ரத்துசெய்து சட்டப்படி விஜாரணைசெய்து தீர்மானம் செய்யும்படி உத்தரவளித்தார்கள்.

---

## சில முக்கிய தீர்ப்புச் சுருக்கங்கள்.

---

### S. A. 58 of 1911:—10 பிப்ரவரி 1913.

ஒரு தாவாவில் பிரதிவாதிக்கு சம்மன் சர்வான பிறகு எதிர்வாதம் செய்யப்பட்டு பிரியாது சரியான கோர்ட்டில் தாகல் செய்யப்படவேண்டுமென்று பிராதை வாபிசெய்தவிட்டால், பிரதிவாதிக்குநேர்ந்த செலவைப்பற்றி வாபிசுசெய்தகோர்ட்டாரே உத்தரவு செய்யவேண்டுமேயொழிய பின்னுல் தாவாவைப்பிடித்து விஜாரிக்கும் கோர்ட்டார் அந்தச் செலவைப்பற்றி உத்தரவளிக்கும்படி விட்டுவிடக் கூடாது. தவிர பிராதை வாபிசு செய்யும் கோர்ட்டார் செலவைப்பற்றி உத்தரவளிக்கிறதில் ஏதாவது ஆக்ஷேபனை யிருந்தால் பிரதிவாதிகூட அதைப்பற்றி அப்பீல் செய்யலாம்.

### A. S. 199 of 1910:—10 பிப்ரவரி 1913.

ஒரு மிட்டாவின் மொத்தத் தீர்வை இவ்வளவெனக்குறித்து விதிக்கப்பட்டிருக்கையில், அந்த மிட்டாவின் ஒரு பாகத்தை கவர்ன்மெண்டார் அனுபோக பாத்தியதையை முன்னிட்டுக் கைப்பற்றிக்கொண்டார்கள். அப்படியிருக்க மிட்டாவின் மீதி பாகத்திற்குறிய தீர்வை இவ்வளவெனத் தீர்மானிக்கும்படி தாவா ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. பூராவாய் செலுத்தப்பட்டுவரும் தீர்வைத்தொகையில் விலகிப்போன பாகத்திற் குறிய தீர்வையை வாபிசு அடையும்படியும் தாவாசெய்ய சட்டமில்லை. ஏனெனில் வாபிசுகொடுக்க வழக்கைக் ஏற்றுக்கொண்டால் விலகின பாகத்தின் தீர்வை இவ்வளவென நிர்ணயிக்கப்படவேண்டும். அந்த நிர்ணயம் முதல்கூறிய அபிப்பிராயத்தின்படி சட்ட விரோதமாகும்.

### S. A. 110 of 1912:—12 பிப்ரவரி 1913.

ஏ-என்பவன் பி-என்பவனுடைய பாக்கிகளை வசூலித்துக்கொடுக்க ஒப்புக்கொண்டு அப்படி வசூலிக்கும் தொகையை தானே அபகரித்துக்கொள்ளாமல் பி-என்பவனிடம் கொடுத்து விடுவதற்கு ஜாமீனாக ஏ. என்பவன் பி என்பவனுக்கு ஒரு அண்டிமாண்டு எழுதிக்கொடுத்தால் ஏ-தொகையை வசூலித்து பி-என்பவனிடம் செலுத்தத் தவறினாலொழிய ஷை அண்டிமாண்டின் பேரில் பி-என்பவனுக்குப் பரிகாரம் அல்லது வியாஜ்ஜிய மூலம் ஏற்படாது என்று ஹைகோர்ட் தீர்மானம்.

---

## நமது நண்பர்களுக்கு.

---

சட்ட சம்பந்தமான யாதொரு சந்தேகங்களை நிவர்த்திக்கும்பொருட்டு சந்தாதாரர்கள் கேட்கும் வினாக்களுக்குறிய விடைகளை பிரத்தியேகமான நிருபமாக தகுந்த லாயர்களைக் கொண்டறிந்து தேவையானுல் ஷை யார்களின் சர்டிபிகேட்டுடன் அனுப்பப்படும். அதற்குறிய சார்ஜ் முதலிய மற்ற தகவல்களைப்பற்றி எழுதிக் கேட்டுக்கொள்ளலாம். பதில் எழுதியனுப்புவதற்குறிய தபால் கூலியை ஒவ்வொரு கடிதத்துடனும் ஸ்டாம்பாக அனுப்பப்படவேண்டும்.

எனது சஞ்சிகைகளில் எவ்விதமான பிசகுகள் குறைகள் முதலியவைகளை எடுத்துக் காண்பிக்கிறவர்களுக்கு மிக்க வந்தனம் செய்கிறேன். திருத்தக்கூடிய பிழைகளைக் கவனித்து, வேண்டிய பரிகாரம் செய்யக் கார்த்துக் கொண்டிருக்கின்றனன். அப்பிழைகள் இனிசெய்யாமலிருக்கும் பொருட்டாவது நண்பர்கள், கட்டாயம், கண்ட எவ்வித பிழையையும் அடியேனுக்குத் தெரியப்படுத்தும்படி மிக்கப் பிரார்த்திக்கின்றனன்.

பொது நன்மைக்குறிய என் பிரயத்தனத்தை கடவுள் ஆதரித்துவருவாராக.

இங்ஙனம்:
தங்கள் விதேயன்,
என் சுப்பிரமண்யன்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 DEC 1913
MADRAS.

# தென் இந்திய
# வியவகார சிந்தாமணி.

Vol. I] செப்டம்பர் 1913. [2-ம் பிரதி

## சந்தா விபரம்.

—:0:—

| | |
|---|---|
| வருஷ சந்தா | ரூ. 4—8—0 |
| 6 மாதத்திற்கு | ரூ. 2—8—0 |
| 3 மாதத்திற்கு | ரூ. 1—8—0 |

சந்தாதாரர்களாய்ச் சேருகிறவர்களுக்கு முன் பிரதிகளும் சேர்த்து அனுப்பப்படும். சந்தாத் தொகையை அட்வான்ஸாக அனுப்பவேண்டும். அல்லது வி. பி. யில் அனுப்ப உத்திரவு செய்தால் காலத்தைக் குறித்து எழுதவேண்டும்.

மணியாடர் கடிதங்கள் முதலிய சகல தகவல்களும் அடியில்கண்ட விலாசத்திற்கு எழுதியனுப்பவும். பதில் அபேக்ஷிக்கிறவர்கள் அரை அணா ஸ்டாம்பு அல்லது ரீப்ளை கார்ட் அனுப்பவேண்டும்.

விலாசம்:—மானேஜர்,
தமிழ் லா ஜர்னல் ஆபீஸ்,
வேப்பேரி, சென்னை.

## L. P. A. No. 147 of 1912—22ஏப்பிரல் 1913.

——:O:——

பிரதிவாதிகள் A என்ற ஆதரவில் வாதிக்குத் தங்கள் வீட்டையும ஒரு மூன்றாவது மனிதனால் தங்களுக்கு வரவேண்டிய கடன்பாக்கியைக் குறித்துக்காட்டிய ஒரு ப்ராமிஸரிநோட்டையும் ஜாமீனாகவைத்து அதாவது ஈடுகாட்டி கடன்பத்திரம் எழுதிக்கொடுத்து வாங்கியகடன் தொகையைத்தீர்ப்பதற்காகக் கணக்குப்பார்க்கும் காலத்தில் ஷை மூன்றாவது மனிதனால் பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டிருந்த மேற்கூறிய ப்ராமிஸரி நோட் காலாவதியாகி விட்டகாரணத்தால் வாதியின் வசமிருந்த ஷை நோட்டின் தொகையை வசூலிக்க வாதி பிரயத்தனப்படாதகாரணத்தாலும், அவனுடைய அஜாக்கிறதையாலும் பிரதிவாதிகள் நஷ்டமடைவது நியாயமல்ல வென்றும், ஆகையால் வாதி அந்த நோட்பாக்கிக்கு செல்லெழுதிக் கொள்ளவேண்டுமென்று எதிர்வாதம் செய்த, வழக்கு மதுரை பிரின்ஸிபல் டி. மு. கோர்ட்டிலிருந்து ஜில்லா கோர்ட்டுக்கு வந்து அங்குவாதிக்கு விரோதமான பிறகு ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யப்பட்டதின்பேரில் **ஹானரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் ஹானரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும்** அப்பீலை ஈரங்கிகேட்டு இருவர்களும் வித்தியாசமான தீர்ப்பளித்தும் ஹைகோர்ட் ரூல்ஸ்படி (அதாவது லட்டர்ஸ் பேடெண்டுபடி) ஹானரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களின் அபிப்பிராயத்தை யனுசரித்து வாதியின் அப்பீல் தள்ளுபடியாகி விட்டபடியால் இருவர் மாறான அபிப்பிராயங்கொண்ட காரணத்தைப் பற்றி வாதி லெட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் செய்து மூன்று ஜட்ஜிமார்களடங்கிய புல்பெஞ்சில் ஷை லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் ஈரங்கியாகி மூவர்களும் ஒரே அபிப்பிராயங்கொண்டு வாதியின் அப்பீலைத்தள்ளுபடி செய்து விட்டார்கள். அதாவது வாதி அந்த மூன்றாவது மனிதனால் வரவேண்டியிருந்த கடன்பாக்கிக்குச் செல்லுவைக்க வேண்டியதாயிற்று. புல்பெஞ்சு தீர்ப்பின் சுருக்கமாவது:—

"நோட்டின் பின்னால் மேடோவருக்கத்தாக்ஷியாக எண்டார்ஸ்மெண்டு செய்யப்படவில்லை. அந்த நோட்டின்பேரிலேயே தாவா செய்திருக்காலாமென்று வாதிக்கப்படவில்லை. ஆனால மூன்றாவது மனிதனால் பிரதிவாதிகளுக்கு ஒரு முன் கடன் பாக்கியிருப்பதாக ஷை நோட் ஒரு ருஜு அம்சத்தைத் தருகிறதென்றும் அந்தக்கடன் பாக்கியானது பிரதிவாதிகளால் வாதிகளுக்கு மேடோவர் செய்யப்பட்டதாகவும் அவ்விதமாய் மேடோவர் செய்யப்பட்ட கடனை வசூலிக்கும் பொருட்டு தாவாசெய்யும் பாத்தியதை வாதியைச் சேர்ந்தமையால் ஷை கடன்பாக்கியை வசூலிக்க காலாவதி தோஷமேற்படுமுன் அவ்வித தாவா செய்யும்படி, வாதி பிரதிவாதிகளுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும் பிரதிவாதிகளுக்காக எடுத்துப் பேசப்பட்டது. நோட்டின் வசனங்களில் மூன்றும் மனிதனால் ஒரு கடன் பாக்கியிருந்ததாகத் துலங்குகிறது. ஆனால் மேற்கூறிய தஸ்தவேஜிகளைக்கொண்டும், தாவா A ஆதரவான அடமான தஸ்தவேஜில் ஷை மூன்றாவது மனிதன் சாட்சியொப்பம் வைத்திருப்பதினாலுமே, முந்தியகடன் பாக்கியிருப்பதற்குப் போதுமான ருஜு வாகுமாவெனச்சந்தேகிக்க இடமிருந்தும், முந்தியகடன் கிடையாதென்று வாதிக்கப்படவுமில்லை. தவிர முன்சீப்கோர்ட்டில் பிரதிவாதிகள் நோட் தொகைபாக்கி மூன்றாவது மனிதனால் செலுத்தப்பட்டு அக்கடன் தீர்ந்துபோய் விட்டதாயும் கூட ருஜுப்படுத்த உத்தேசித்திருந்ததாக ஏற்படுகிறது. [அதாவது வாதி நோட் தொகையை வாஸ்தவமாய்ப் பெற்றுக் கொண்டு பெற்றுகொள்ளவில்லையென்றும், நோட் காலாவதியாகி விட்டதென்றும் தப்புவாதம் செய்கிறதாக பிரதிவாதிகள் முன்சீப்கோர்ட்டில் ருஜுப்படுத்த யத்தனித்தார்கள் போலும்.] ஆகையால் முன்கடன் கிடையாதென்று அனுமானிக்க இடமில்லை. ஆகவே A ஆதரவில் ஷை கடன்பாக்கி மேடோவர் செய்யப்பட்ட நிமித்தம் ப்ராபர்டி ஆக்ட் 130-வது பிரிவுப்படி ஷை கடன்பாக்கியை வசூலிக்க பிரதிவாதிகளுக்கு எவ்விதபாத்தியமும் பரிகாரமும் உண்டோ அவைகள் வாதிக்கு மாற்றப்பட்டதாக பாவிக்கப்பட வேண்டும். ஆனால் பிரதிவாதிகள் A ஆதரவில் ஷை வீட்டையும்நோட் கடன்பாக்கியையும் ஈடாக மட்டும் வைத்திருந்தால், அவர்கள் அடமானக் கடனை வாபிஸ்செய்து விட்டால் ஷை ஜாமீன் அம்சங்களை மீட்டுக்கொள்ளும் பாத்தியதை மட்டும் அவர்களிடமேயிருப்பது நியாயமே. [அப்படி மீட்கப்படவுமில்லை]. தவிர பிரிவிகௌன்ஸிலார் 24-மதராஸ் லாஜர்னல் 60-இல் சொல்லியபடி மேற்கூறிய அபிப்பிராயமாகவே தீர்மானம் செய்திருக்கிறார்கள். "அந்தக்கேசில் ஒருவன் தன் மரணபண்டு பாலிஸியை ஜாமீனாக மற்றொருவனிடம்டிபாஸிட் செய்துவிட்டு, அதற்குப்பின் வேறொருவனுக்கு எழுத்துமூலமான தஸ்தவேஜில் ஷை மரணபண்டின் பாலிஸியில் தனக்குக் கிடைக்கும் நன்மையை மேடோவர்செய்து விட்டான். பிரிவிகௌன்ஸிலார் எழுத்துமூலமான மேடோவரை மேலானதாக அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஷை எழுத்துமூலமான மேடோவர், பார்வைக்கு அத்தாரீதியானதாக யிருந்தும், பின்னால் அதை மீட்டுக்கொள்ளும் கருத்துடன் செய்யப்பட்டதாக யூகிக்கக் கூடுமானாலும், இந்த கேசில் இருதரப்பாருடைய பாத்தியதையை பாதிக்கத்தக்கதாய் ஷை மேடோவர் எழுததை யூகிக்கக்கூடாது. ஆகையால் மரணபண்டு பாலிஸியினால் கிடைக்கும் வருமானத்தை எழுத்தால் மேடோவர் பெற்றவனே அடைகிறான்." என்று பிரிவிகௌன்ஸிலார் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரிவிகௌன்ஸில் கேஸின் தீர்மானம், ஹைகோர்ட்டில் இந்த அப்பீல் கேசானது ஹானரபில் மிஸ்டர்ஜஸ்டிஸ் சுந்தரமய்யரவர்கள் ஹானரபில் மிஸ்டர் சதாசிவ அய்யரவர்கள் முன்னிலையில் ஈரங்கியாகும் பொழுது ரிபோர்ட் ஆகவில்லை. மேற்கூறிய விஷயமாய் இங்கிலீஷ லா முறைகள் வேறு விதமாய் இருந்தும் ப்ராபர்டி ஆக்டில் குறிக்கப்பட்டிருக்கிற வசனங்களின் ஸ்பஷ்டமான அர்த்தத்தால் இங்கிலீஷ் லாமுறை இந்தியா கோர்ட்டுகளுக்கு இவ்வித பாயிண்டுகளில் அனுசரிக்கத்தக்கதல்லவென்றும், பிரிவிகௌன்ஸிலார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். 32-கல்கத்தா 27-இலும் தாவாசேசைப் போலொத்த வழ்க்கில் வாதி கடனாளியினிடமிருந்து, தான் மேடோவர் பெற்றகடனை வசூலிக்க நியாயமான சுருசுருப்புடன் பிரயத்தனப்பட்டிருக்கவேண்டுமென்றும் அப்படிக்கு யதார்த்தமாய்ப் பிரயத்தனப்பட்டதாகருஜுவாகாதபடியால் வாதி அத்தொகைக்கு ஜவாப் சொல்லவேண்டியது நியாயம், அதாவது செல்லுவைக்கவேண்டியது நியாயமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது."



THE REGISTRAR OF ... REGISTERED ... 1913 MADRAS

ஆகவே மேற்கூறிய காரணங்களால் புல்பெஞ்சார் ஒருமனமாய் வாதியின் லட்டர்ஸ் பேடெண்டு அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

—:O:—

## C. M. A. No. 158 of 1912
## 13 பிப்ரவரி 1913.

——:O:——

கோதாவரிஜில்லா பெத்தபூர் டி. மு. கோர்ட்டில் வாதி அசல்தாவா செய்து டிக்கிரிபெற்ற பிறகு, பிரதிவாதி அப்பீல் செய்ததில் டி. மு. கோர்ட்டாருக்கு மேற்படி தாவாவைப் பிடிக்க அதிகாரவரம்பில்லையென்றும் அதாவது தாவாவின் கட்டணத்தொகை ரூ. 2500-க்கு மேல்பட்டதானபடியால், அந்த பிராதை ஏற்றுக்கொண்டு பைசல்செய்தது சட்டவிரோதமென்றும் பிராதை சரியான கோர்ட்டில் தாகல் செய்யும்படி அப்பீல் கோர்ட்டார் வாதிக்கு உத்தரவளித்தார்கள் அதன்மேல் வாதி அந்தப்பிராதை அதிகாரவரம்புள்ள காகினாடா சப்கோர்ட்டில் தாகல்செய்து அங்கு வாதியும் பிரதிவாதியும் சம்மதித்த காரணத்தால் முந்தி டி. மு. கோர்ட்டில் விஜாரணையானயாக்கு மூலங்களையும் தஸ்தவேஜுகளையும் இந்தகேசுக்கு ருஜு அம்சமாக எடுத்துக்கொண்டு வேறு விஜாரணை யாதொன்றும் செய்யப்படாமல் சப்கோர்ட்டார் தீர்ப்பளித்தார்கள். அந்தத் தீர்ப்பின்பேரில் கோதாவரிஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டதில் அதிகார வரம்பில்லாத டி. மு. கோர்ட்டில் ரிகார்டு செய்யப்பட்ட வாக்குமூலங்களைக்கொண்டு சப்கோர்ட்டார் தீர்ப்பளித்தது சட்டவிரோதமென்றும், சப்கோர்ட்டில் ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு ருஜு அம்சமும் சட்டவிரோதமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டதாயும் ஆகையால் சப்கோர்ட் தீர்ப்பானது விஷயவிசாரணையின் பேரில் அளிக்கப்பட்டதாக பாவிக்கப்படாதென்றும் அபிப்பிராயப்பட்டு மறுபடியும் புதிதா

ய் விஜாரணைசெய்து தீர்ப்பளிக்கும்படி ஜில்லா கோர்ட்டார் கேசை ரிமாண்டுசெய்துவிட்டார்கள்.

வாதி அந்த ஜில்லா கோர்ட்டாரின் ரிமாண்டு ஆர்டர் பிசகென்று, ஹைகோர்ட்டுக்கு சில்லரை மனு அப்பீல் செய்தார். அங்கு ஜில்லாகோர்ட்டாரின் ரிமாண்டு உத்தரவு பிசகென்றும் சப்கோர்ட்டார் டி. மு. கோர்ட்டில் ரிகார்டு செய்யப்பட்ட வாக்குமூலங்களை இருதரப்பாரின் சம்மதத்தின் பேரில்" ருஜு பாகமாக எற்றுக்கொண்டு பைசல் செய்தது பிசகல்லவென்றும் தீர்மானித்து, ஜில்லாகோர்ட்டாரின் ரிமாண்டு உத்தரவை ரத்துசெய்து சட்டப்படி அப்பீலை ஈரங்கிகேட்டு பைசல் செய்யும்படி ஜில்லா கோர்ட்டாருக்கு உத்தரவளித்தார்கள். அவ்வித அபிப்ராயங்கொண்டதற்கு முக்கிய காரணங்களாவன:—

எற்றுக்கொள்ளயோக்கியமில்லாத ருஜு அம்சங்கள் எற்றுக்கொள்ளப்பட்டதாகக் கீழ் கோர்ட்டில் ஆக்ஷேபிக்கப்படவில்லை யென்றும், 19 அலகபாத் 76-இன் 92-ம் பக்கத்தில் பிரிவிகௌன்ஸில் கேசை ஆதாரமாகக் காண்பித்து, அப்பீல் கோர்ட்டில் எதிரியின் ஆக்ஷேபணையானது எற்றுக்கொள்ளத்தக்க ருஜு அம்சத்தை எவ்விதமாய் ரிகார்டில் கொண்டுவரவேண்டுமென்றதே தவிற (அதாவது முன் வாக்குமூலத்தை திரும்பிவாய்மொழியாய்க் கேளாமல் தாகல்செய்து கொண்ட விஷயத்தைப் பற்றியே யொழிய) வேறில்லை யென்றும், ஆனால் இருதரப்பாரும் சம்மதித்ததினால் கீழ்கோர்ட்டில் அவ்வித ஆக்ஷேபனை செய்யவாயக்கில்லை யென்றும் வாதிக்காக ஹைகோர்ட்டில் வாதிக்கப்பட்டது. ஒழுங்கீனமாய் ருஜு அம்சம் ரிகார்ட்செய்யப் பட்டாலும் இருதரப்பாரின் சம்மதம் அதற்குப் பரிகாரமாகுமென்று ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயங் கொடுத்தும், இந்தக் கேசில் அதிகார வரம்பில்லாத டி. மு. கோர்ட்டார் ரிகார்டு செய்த வாக்குமூலம் நிஷ்பிரயோஜனமான நடவடிக்கையென்றும் அந்த ரிகார்டுக்கு யாதொரு சட்டமதிப்பும் கிடையாதென்று மேல்கண்டவிதமாய் ஜில்லாகோர்ட்டார் ரிமாண்டு செய்திருக்கிறார்கள்.. ஆனால் அந்த உத்தரவு சரியானதல்ல. ஏனெனில் (1864) IWRC-சட்டவிதிகளின் 310-இலும் 24 பம்பாய் 591-இலும் முந்திய ஒரு நம்பரில் கொடுத்த சாட்சி வாக்குமூலத்தை இருதரப்பாரின் சம்மதத்தின் பேரில் எற்றுக்கொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1869) 13 WR 184-இல் சட்டத்தில் யாதொரு ஆதாரமில்லாத போதிலும் ஒருகேசை விஜாரிததுக் குறையாய் விட்டபின் அதை பூர்த்திசெய்து பைசல் அளித்த கோர்ட்டார் தன்முன் விஜாரிக்கப்படாத சாட்சியத்தை எற்றுக்கொண்டு பைசல் செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1167) 4 பம்பாய் ஹைகோர்ட் ரிபோர்ட் A, C. J 98-யும் 8 அலகபாத் 576-ம் பக்கத்தையும் பார்க்கவும். (1871) 15 WR 348-இல் ஒரு முந்திய நம்பரில் பார்டியாக இல்லாதவன் ஷை நம்பரில் சேர்க்கப்பட்ட ஒருசாட்சி வாக்குமூலத்தை குருக்கு விஜாரணை செய்ய எதுகரமில்லாதிருந்த போதிலும் வேறு ஒரு தாவாவில் அவன் பார்டியாக யிருந்து அவ்வித வாக்குமூலத்தை எற்றுக்கொள்ள சம்மதித்ததினால் அது சரியானபடி எற்றுக்கொள்ளப்பட்டதாகவே தீர்மானிக்கப்பட்டிக்கிறது. அதிகாரவரம்பில்லையென்று ஆக்ஷேபிக்கப்பட்ட ஒரு கோர்ட்டில் சட்டவிரோதமாய் அல்லது அதிகார வரம்மில்லாவல் ரிகார்டு செய்யப்பட்ட சாட்சி வாக்கு மூலத்தை பார்டிகள் சம்மதத்தின் பேரில் எற்றுக்கொள்ளலாமென்று 300 பம்பாய் 109-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் மேல்கூறிய தீர்ப்புக்களைக்கவனித்தால் சாட்சிகளின் உண்மையைப் பரிசோதிக்கும் பொருட்டும் சாட்சிகளின் யோக்கியதையை விஜாரணை செய்யும் கோர்ட்டார் தானே பரிசோதிக்கும் பொருட்டும் எற்பட்டிருக்கிற சட்டமுறைகள், பார்டிகள் அவைகளைக் கவனியாமல் எற்றுக்கொள்ளத்தக்க சாட்சியத்தை சம்மதித்து ஒப்புக்கொள்ளக்கூடாதபடி, அவ்வளவு முக்கியமானவைகளல்ல அதாவது பார்டிகள் சம்மதித்தால் எற்றுக்கொள்ளத்தக்க சாட்சியத்தை எவ்விதத்திலும், மேர்கூறிய கோர்ட்டார் பரிசீலனைசெய்ய வேண்டுமெனக் கருதி அவர்களுடைய நன்மைக்காகவே எற்பட்டிருக்கிற சட்டமுறைகளை பரித்தியாகம் பண்ணிவிடலாம் (அதாவது அனுசரிக்காமல் விட்டுவிடப்படலாம்) என்று அனுமானிக்க வேண்டியிருக்கிறது. பொதுவாய் ஜனங்களுடைய நன்மைக்காக எற்பட்டிருக்கிற சட்டவிதிகளை பார்டிகள் நிராகரிக்க அல்லது, பரித்தியாகம்செய்யக்கூடாது. (திருஷ்டாந்தரமாக—லிமிடேஷன் ஆக்ட்படி காலாவதி தோஷ மேற்பட்ட வியவகாரத்தை இருதரப்பாரும் சம்மதித்து நடத்தக்கூடாது. கோர்ட்டாரே அந்த ஆக்ட்படி அனுசரிக்கக்கடமைப்பட்டவர்களாகிறார்கள்.) 13 அமெரிகன் ஸைக்லொபீடியா என்னும் சர்வசங்கிரக நிகண்டில் 1014-ஐப் பார்க்கவும். அப்பீல் கோர்ட்டாருக்குத் தன்முன் விஜாரிக்கப்படாத சாட்சியத்தைக் கொண்டே நிதானித்து நியாயதீர்ப்பு அளிக்க சட்டம் இடம் கொடுக்கிறது. விஜாரணைசெய்யும் கோர்ட்டார் பிரத்தியக்ஷமாய் சாட்சி வாக்குமூலத்தை கேட்கவேண்டுமென்ற முறைக்கு சட்டமே பல புறநடைகளை விதித்திருக்கிறது. ஒரு கோர்ட்டிலிருந்து வேறொரு கோர்ட்டுக்கு பாதி விஜாரணையில் மாற்றப்பட்டாலும், விஜாரிக்கும் கோர்ட்டில் மரணம், மாற்றல் முதலிய பல காரணங்களால் அதிகாரி மாறினபோதிலும் அம்முறைப்படி நடப்பதவசியமில்லையென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஸிவில் ப்ரொஸீஜர் கோட் ரூல் 4-ஆர்டர் 18-ஐப்பார்க்கவும். டி. மு. கோர்ட்டார் முதலில் அதிகார வரம்பில்லாமல் நம்பரை விஜாரணை செய்ததாக முந்திய கேசில் அப்பீல் கோர்ட்டார் செய்த தீர்மானம் இந்த அப்பீலுக்கு முக்கியமாய் கவனிக்கத்தக்க விஷயமல்ல. தாவா நம்பரில் ரிகார்டாகாத சாட்சியத்தை எற்றுக்கொள்ள இருதரப்பாரும் சம்மதப்பட்டிருக்க அச்சம்மதத்தை முந்திய அப்பீல் தீர்மானம் பாதிக்காது.

3-மதராஸ் 48-இல் கண்ட தீர்மானப்படி, எவிடன்ஸ் ஆக்ட் 33-வது பிரிவில் சொல்லிய சந்தர்ப்பத்தால் (அதாவது முன் கொடுக்கப்பட்டசாட்சி வாக்குமூலம் பின் வழக்கில் அல்லது அதே வழக்கின்பின் பாகத்தில் உபயோகப் படுத்துவதற்குக் காரணமாக ஷை சாட்சியின் மரணம், தேசாந்தர நிவாஸம், வரவழைக்க அனுவசியமான செலவு என்பதான, அசந்தர்ப்பம் எற்பட்டால்) அவ்விதமாய் எற்றுக்கொள்ளப்பட்ட சாட்சியத்தை யிட்டு பிறந்த டிக்கிரியானது அப்பீலில், முதல்கோர்ட்டுக்கு அதிகார வரம்பில்லையென்றதால் தள்ளுபடியாகும் பட்சத்தில், அவ்விதமான அசல் கோர்ட்டில் எற்பட்ட சாட்சியத்தை அதே பார்டிகளுக்குள் நடக்கும் பின்வழக்கில் உபயோகப்படுத்தக்கூடாதென்று எற்பட்டிருக்கிறது. அவ்விதத் தீர்மான விஷயமாய் யாதொரு அபிப்பிராயம் கொடுக்கவேண்டிய தவசியமில்லையென்று சொல்லிவிட்டு ஹைகோர்ட்டார் ஜில்லாகோர்ட்ரிமாண்ட் உத்தரவை ரத்து செய்து சட்டப்படி அப்பீலை விஜாரிக்கும்படி உத்தரவளித்தார்கள்.

—:0:—

## S. A. No. 1372 to 1374 of 1911

### 5 மார்ச்சு 1913.

பித்ரார்ஜிதமான சொத்தை அடைந்து அனுபவித்துவந்த ஒரு ஹிந்து மதஸ்தன், தனக்கு யாதொரு வார்ஸுமில்லாத காரணத்தால் சர்வ சுதந்தர பாத்தியதை யுடையவனாகி, உயிலெழுதி ஷை சொத்துக்களைத் தனக்குப்பின் வாதி அடையவேண்டுமென்றும், தன் பெண்சாதிக்கு மரண பரியந்தம் ஷை சொத்திலிருந்து வாதி போஷிக்க வேண்டுமென்றும், அவள் மரித்தபிறகு அவளுக்கு வேண்டிய உத்தரகிறியைகளை செய்துவிட்டு தன்னுடைய சகலமான சொத்துக்களையும் வாதி பூர்ண சுவாதீனமடையவேண்டுமென்றும், அதில் விவரித்திருந்தது. அந்த உயில் எழுதப்பட்ட சில காலங்களுக்குப் பிறகு அவனுக்கு ஒரு புத்திரன் ஜனித்து ஷை புத்திரன் சில காலத்திற்குப்பின் யாதொரு சந்ததியுமில்லாமல் தகப்பனுக்குப்பின் இறந்துவிட்டான். உயில்தாரனுடைய மரணத்திற்குப்பின் அவன் பெண்சாதி வசமிருந்த சொத்துக்களைத் தன் சுவாதீனப்படுத்திக்கொள்வதற்காக அவளை 1-ம் பிரதிவாதியாகவும் மற்ற ஷை சொத்துகளின் அனுபோகத்திலிருந்தவர்களையும் பார்டிகளாகச சேர்த்து சித்தூர் டி. மு. கோர்ட்டில் வாதி அசல் தாவாசெய்தார். டி. மு. கோர்ட் தீர்மானததிலிருந்து சப்கோர்ட்டுக்கு அப்பீலாகி அங்கு பிரதிவாதிகளுக்கு விரோதமானதால் அவர்கள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்தார்கள். அப்பீல்வாதிகள் முதலில் பற்பல ஆன்ஸர் கொடுத்து வாதம்செய்து கடைசியில் ஹைகோர்ட்டில் முக்கியமான சில லாபயி

ண்டுகளை மட்டும் வற்புறுத்தி வாதம் செய்தார்கள்.

அவர்களுக்காக ஹானரபிள் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யர் அவர்கள் எடுத்துப் பேசிய முக்கிய அம்சங்களாவன:— I. உயில் எழுதிவைத்த காலத்தில் அவனுக்கு அதில் கண்டசொத்துக்களைப் பராதீனம் செய்ய அதிகாரமிருந்தபோதிலும் தாவாசொத்துகள் பூர்வீகமாதலாலும் உயிலுக்குப்பின் மகன் பிறந்த விட்டமையாலும் ஷை சொத்தை உயில் சாஸனத்தால் பராதீனம் (விநியோகம்) செய்யும் ஸ்வதந்தரபாத்தியதை அவனுக்கு நீங்கிவிட்டதென்றும் அவ்வித அதிகாரம் நீங்கினபடியால் சட்டப்படிக்கு முன்பிறந்த உயில் ரத்தானதாக பாவிக்கப்படவேண்டு மென்றும் வாதித்தார். அதற்கு ஆதாரமாக இங்கிலாந்தில் உயில்களைப்பற்றி சட்டமேற்படுமுன் அனுசரித்துவந்த நியாயத்தைப்பற்றி சில புஸ்தகங்களிலிருந்து எடுத்துக்காட்டி, ஜீவ்யகாலத்தில் உயில் எழுதிவைத்தவன்தான் மரணமடையுமட்டும் அதில் கண்ட சொத்துக்களில் இடைவிடாத சர்வ சுதந்தரபாத்திய முடையவனாக யிருந்திருக்க வேண்டுமென்றும், உயில்களைப்பற்றி சட்டம் ஏற்பட்டு அதில் மேற்கூறிய பழயசம்பிரதாயத்திற்கு விரோதமாக, அதாவது, ஒருவன் எக்காலத்தில் உயில் எழுதிவைத்த போதிலும்தான் மரணகாலத்தில் சொன்ன வார்த்தைகளைப்போல் அதில் கண்ட வசனங்களை அனுசரிகக வேண்டுமென்று ஏற்பட்ட போதிலும், இங்கிலாந்தில் முன்காலத்தில் நடைபெற்று வந்த ஆசாரம் நமது இந்தியா தேசத்திற்கு ஏற்கும்படியான பொதுவான சட்டமுறையென்றும், ஆகையால் ஸர்வஸ்வதந்தரபாத்தியதை இடையில், அதாவது மகன் பிறக்கவே, நீங்கிவிட்டபடியால் முன் பிறந்த உயில் ரத்தாகிறதென்றும் வாதித்தார், II. தவிற அமெரிக்கா தேசத்தில் ஒருவன் தன்னிச்சையல்லாமல் அதாவது இதரமான நிர்பந்தத்தால் தான் உயிலில்கண்ட சொத்துக்கள் யாதையும் வேறு விதமான பாரதீனம் செய்யும்படி நேர்ந்தால் அந்த உயில் அப்படிப் பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களைப்பற்றினமட்டில் ரத்தானதாக பாவிக்கப்படுகிற தென்று எடுத்துப்பேசினார்கள். III, அன்றியும் (1825) 3 Add 48-ல்-கண்டிருக்கிற தீர்மாணப்படி ஒரு ஸ்திரீ தன்னுடைய சொத்துக்களைப்பற்றி ஒரு உயில் எழுதிவைத்த பிறகு, விவாகம் செய்துகொண்டு சில காலத்திற்குப்பின் விதவையாகவே, விவாககாரணத்தால் சட்டப்படி ரத்தாய்ப்போன முந்திய உயிலானது அவள் விதவையாய்ப்போனபிறகு திரும்பிஉயிர்ப்பிக்கப் படக்கூடாதென்றும் எடுத்துப்பேசப்பட்டது.

மேற்கூறிய வாதங்களுக்கு ஹைகோர்ட்டார் பின்வருமாறு சமாதானம் சொல்லி அப்பீல்களைத் தள்ளுபடிசெய்து உயிலைக் காயப்படுத்தின தீர்ப்பின் சுருக்கமாவது:—

(I) இங்கிலாந்தின் முற்கால அனுசரணையைப் பற்றிப்படித்துக் காண்பிக்கப்பட்ட புஸ்தகத்தில், உயில் எழுதிவைத்தவன் பிந்தி தன்னிச்சையாக அதில் கண்ட சொத்துக்களை பிறருக்குப் பராதீனப்படுத்தின சந்தர்ப்பத்தைக் குறித்து எழுதும்பொழுது ஜார்மன் (Jarman) என்ற கிறந்த கர்த்தா அந்த உயில் ரத்தாகத்தக்கதென்று எழுதியிருக்கிறார். தன் மானோராஜி அல்லது கோர்ட்டார் எல உத்தரவின் காரணங்களில்லாத தெய்வஸங்கல்பமான சம்பவங்களால் உயிலில் கண்ட சொத்துக்களில் மாறுதல் ஏற்பட்டாலும் உயில் ரத்தாகக்கூடிய கருத்தாய் ஷை கிரந்தகர்த்தாவின் அபிப்பிராய மென்று தோன்றவில்லை. இங்கிலீஷ் உயில்களுக்குறிய புதியசட்டத்தை யனுசரித்தே நமதுதேசத்தில நடக்கவேண்டும். இங்கிலாந்தின் பழய ஆசாரத்தை பொதுவான சட்டஒழுக்கமென்ற காரணததால் நமது நாட்டில் அனுசரிக்கக்கூடாது. எப்பொழுது உயில் எழுதப்பட்டபோதிலும் அதில் கண்டவசனம் மரணகாலத்தில் சொல்லப்பட்டதுபோலவே பாவிக்கப்படவேண்டும். இன்னும் பழய இங்கிலாந்தின் ஆசாரத்திற்கு பற்பல காரணங்களையும்எடுத்துக்காட்டப்பட்டன.

(II) அமெரிகாவில் ஓர் ஆசரணையை யெடுத்துக்காட்டப்பட்டது. தன்னிச்சையில் செய்யப்பட்ட பராதீனம் என்ற பதத்திற்கு கோர்ட்டாரின் எலஉத்தரவின்படி உயிலில் கண்ட சில சொத்துக்கள் பராதீனமாகும் பக்ஷததில் அந்த



சொத்துக்களைப்பற்றின மட்டின் உயில் ரத்தாகத்தக்கதென்ற கருத்தாகுமேயொழிய மற்ற விதமாக நிதானிக்க இடமில்லை.

(III) ஒரு ஸ்திரீ விவாகமான உடன் அவளுடைய முந்திய உயில் ரத்தாகிவிடுகிறது நியாயமே. ஆனால் அவள் விதவையாய் போனபிறகு வேறு உயில் எழுதலாயக்குள்ளவ ளாகிறாள். ஆகையால் அந்தவாதம் பிரயோஜனமில்லை.

தவிற ஒருவன் தன்உயிலை வேறு ஒரு தஸ்தவேஜினால் மாற்றி விட்டபிறகு அந்த தஸ்தவேஜையும் பின்னால் ரத்துசெய்து விட்டால் உயில் திரும்பி உயிர்பிக்கப்படமாட்டாது. 30-மதராஸ் 369-இல் உயில் எழுதிவைத்தவனுடைய சந்தர்பங்களிலும் அதில் கண்ட சொத்துக்களில் ஷையானுடைய பாத்தியதையிலும் யாதொரு மாறுதல் ஏற்பட்டபோதிலும் உயில் ரத்தாகி விடவேண்டுமென்ற கொள்கையானது உயிலைப்பற்றிய சட்டங்களில் அனுசரிக்கப்படவில்லை.

உயில் எழுதிவைக்கும் காலத்தில் ஒருவனுக்கு பாததியமில்லாத சொத்தைப்பற்றி உயில் எழுதிவைக்க சட்டமிருக்கையில், உயில் எழுதும்போது சர்வபாததிய மிருந்து இடையில் அந்த பாத்தியதைக்குக் குறைவுவந்து மறுபடியும் சர்வ பாத்தியதையும் திரும்பிக் கிடைத்திருக்கிற இந்தக் கேசைப்போலொத்த உயில் ஏன் செல்லத்தகாது? மகன் பிறந்த காரணத்தால அநித்தியமான ஒரு பங்காளி இடையில் வந்த பாவனையாக ஏற்பட்டு சர்வஸ்வதந்தர பாத்தியதைக்குக் குறைஏற்பட்டு அநித்தியமான தர்மம் விளங்கி மகன் இறந்து பழயபடி சர்வ பாத்தியதையை அடைந்ததால் முந்திய உயில் சரியான அதிகாரத்துடன் யெழுதப்பட்டிருக்க, அக்காலத்திலும், அது நமோதுக்கு வருங்காலத்திலும், அதேவித உயிலைஎழுதக்கூடிய இந்தக்கேசின் சந்தர்ப்பமானது உயிலை ரத்தாக்கத்தக்கதல்ல. ஆகையால் உயில் மேற்கூறிய எதிர் வாதங்களில் சொல்லியபடி செல்லத்தக்கதே.

1-ம் பிரதிவாதியாகிய, மூலபுருஷனுடையபெண்சாதியின் மரணத்திற்குப் பின்னிட்டுதான்வாதிக்குச் சுவாதீனம் கொடுக்கலாமென்ற வாதம் சரியானதல்ல. ஷை சொத்திலிருந்து அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கப்படவேண்டியதும் உத்தரக்கிரியை நடத்தப்படப்பட வேண்டியதும் தவிற வேறு பாத்தியதை அவளுக்கு சொததில் கிடையாது. ஆகையால் அவள் ஜீவியகாலம் வரையில் வாதியின் வசம் கொடுக்கப்படவேண்டிய சொத்தானது மேற்கூறிய இரண்டு வில்லங்கங்களுக்குட்பட்டதாக யிருக்கவேண்டும்.

ஆகவே மேற்கூறிய காரணங்களால் வாதியின் இரண்டாவது அப்பீல் தள்ளுபடியாச்சுது.

—:o:—

## C. M. A. No. 259 of 1911 & 26 பிப்ரவரி 1913.

1904-ம் வருஷத்திய அசல் நெ. 4-இல் வாதி சேலம் ஜில்லா கொர்ட்டில் எதிரியின் வசமுள்ள சொத்துக்களை சுயாதீனம் செய்து கொள்வதற்காகவும் மத்தியகால வரும்படிக்காகவும் தாவா செய்து டிக்கிரீபெற்றார். அந்த டிக்கிரீயில் வாதிக்கு பிராது தேதிவரையில் மத்தியகால வரும்படி அளிக்கப்பட்டதும்தவிற, அதற்குப் பின்னும் மூன்றுவருஷ வரும்படியாவது அல்லது அதற்குள் வாதிக்கு தாவாசொத்து சுயாதீனம் செய்யப்பட்டிருந்தால் அந்த சுயாதீனத்தேதி வரையுள்ள வரும்படியாவது வாதிக்கு எதிரிகள் கொடுத்துவிட வேண்டுமென்று கண்டிருந்தது. அந்த டிக்கிரீப்படி மூன்றுவருஷ வரும்படியை எதிரிகளிடமிருந்து வசூலிக்க வாதி நிறைவேற்றுமனுக்கொடுத்துப் பரிகாரம் தேடிக்கொண்ட பிறகு, சொத்தானது தன்வசம் ஒப்புவிக்கப்படாத காரணத்தால் மூன்று வருஷங்களுக்குப் பிந்திய காலத்திற்குறிய வரும்படிக்கும் தான்பாத்தியப்பட்டவனாகையால் 1909-ம் வருஷத்தில் திருப்பத்தூர் டி. மு. கோர்ட்டில் பிந்திய மூன்று வருஷங்களுக்குறிய மத்தியகால வரும்படி கிடைக்க வேண்டுமென்று வாதி அசல்தாவா செய்யவே அந்தப்பிராது ஏற்றுக்கொள்ளப் படவில்லை. மத்தியகாலவரும்படிக்காக முந்தியே வாதி டிக்கிரீ பெற்றிருக்க மறுபடியும் அதே விதமான பரிசாரத்திற்குப் புதிய அசல் தாவா கொண்டுவரக் கூடாதென்ற சட்ட பாயிண்டை யனுசரித்து டி. மு. கோர்ட்டார் பிராதை ஏற்றுக்கொள்ளா

மல் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி ஜில்லா கோர்ட்டின் முதல் பிறந்த டிக்கிரீயை அனுசரித்து அதில் கண்ட மூன்று வருஷங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குறிய மத்தியகால வரும்படி கிடைக்கவேண்டுமென்று, ஜில்லாப்பிரிவினையால் மாரிப்போன அதிகார வரம்புடைய சித்தூர் சப்கோர்ட்டில் நிறைவேற்று மனுக்கொடுத்தார். எதிரிகள் அம்மனுவை ஆக்ஷேபித்தார்கள். (1) ஜில்லாகோர்ட் டிக்கிரீயில் மூன்று வருஷத்திற்கு பிந்திய கால வரும்படி வாதிக்கு அளிக்கப்பட்டதில் எந்தக்காலமுதல் என்று குறிக்கப்படவில்லை யென்றும், ஆகையால் தப்பான டிக்கிரீயின்படி வாதி பரிகாரம் தேடக்கூடாதென்று, சொல்லப்பட்டது. ஆனால் பிராது தேதிவரையில் வரும்படிக்கு ஜில்லாகோர்ட்டார் பிரத்தியேக வசனத்தால் டிக்கிரீ யளித்திருக்கிறபடியால் பிந்திய வரும்படி டிக்கிரீ பிறந்த தேதி முதல் மூன்றுவருஷத்திற் கென்றே அர்த்தங் கொள்ளவேண்டு மென்றும், **டிக்கிரீ தேதிமுதல்** என்ற வார்த்தை கைப்பிசகாய் விட்டுப்போயிருக்கவேண்டுமென்று சப்கோர்ட்டார் சமாதானம் சொன்னார். அந்த சமாதானத்தை ஹைகோர்ட்டாரும் ஒப்புக் கொண்டார்கள்.

(2) திருப்பத்தூர் டி. மு. கோர்ட்டில் வாதி இந்த நிறைவேற்று மனுவில் தேடும் பரிகாரத்தைப்பற்றி அசல்தாவா செய்து அது தள்ளுபடியாகிவிட்டபடியால் இந்தமனு செய்ய வாதி தடைபட்டவனாகிறா னென்று எதிரிகள் வாதித்தார்கள். தவிற முந்திய அசல் நம்பரில் எல்லாப் பரிகாரத்தையும் சேர்த்திருக்க வேண்டுமென்ற காரணத்தாலும் டி. மு. கோர்ட்டார் பிந்தியபிராதைப் பிடிக்கவில்லை. யென்றும் எடுத்துச் சொல்லப்பட்டது. ஆனால் டி. மு. கோர்ட்டார் புதியதாவா செய்யக்கூடாதென்று மட்டும் சொல்லி 2-ம்பிராதைத் தள்ளுபடி செய்திருக்கிறபடியால், அவ்வித உத்தரவினால் வாதிமுன் பெற்ற டிக்கிரீப்படி நிறைவேற்று மனுவில் அப்பரிகாரமும் தேட யாதொரு பாதகமும் எற்படாதென்று ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு எதிரிகளின் வாதத்தை நிராகரித்து விட்டார்கள்.

வாதி முதலில் கொடுத்த நிறைவேற்று மனுவில் டிக்கிரீயில்கண்ட மூன்று வருஷ வரும்படியை மட்டும் கண்டிருக்கிறதே யொழிய அதற்குப் பின்னுள்ள காலத்துவரும்படியைப் பற்றி அதில் காணாதபடியால் ஸிவில் ப்ரொஜர்கோட் ஆர்டர் (xi) ரூல் 2-இல் கண்ட நிபந்தனையின்படி பிந்திய மனுவில் அதைப்பற்றி பரிகாரம் தேடக்கூடாதென்று எதிரிகள் வாதித்தார்கள். அதாவது:-

ஒரே வியாஜ்ஜிய மூலத்தின்படி ஒருவனுக்குப் பற்பல பரிகாரங்களிருக்கின் அவைகளை ஒரே தாவாவில் சேர்த்து பிராதுசெய்யவேண்டும். சவுகரியத்தினாலாவது, மறதியாலாவது யாதொருபரிகாரத்தை ஒருவன் கைவிட்டால் பிந்திய யாதொரு நடவடிக்கையால் அப்படிவிட்டுப்போன பரிகாரத்தைத் தேடக்கூடாதென்று ஆர்டர் (xi) ரூல் 2-இல் விதிக்கப்பட்டிருக்கிறது. பிராதுகள் விஷயமாய் எற்பட்டிருக்கும் வழிமுறைகளை எற்படுத்தியிருக்கும் சட்ட முறைகள் ஸிவில் கோர்ட்டில் நடக்கும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் அனுசரிக்கப்பட வேண்மென்று ஸி. பி. ஸி. 141-வது பிரிவில் கண்டிருக்கிறது. ஆகையால் ஒரு பிராதில் சேர்க்கவேண்டிய அம்சம் விட்டுப்போனால் பின்னால் வேறு பிராதில் அப்பரிகாரத்தைத் தேடக்கூடாதுபோல், முதலில் வாதி கொடுத்த நிறைவேற்று மனுவில் மூன்று வருஷத்திற்கு மட்டும் மத்தியசால வரும்படியைக் கேட்டிருந்தபடியால் பின்னால் பிந்திய காலத்திற்குரிய வரும்படிக்காக வேறு மனுக்கொடுக்கக் கூடாதென்றும், பிராதுக்குறிய ரூல்கள் மற்ற மனுக்களுக்கும் சொல்லத் தக்கதென்றும நிறைவேற்று மனுவும் மறற மனுக்களில் ஒன்றாக பாவிக்கப்படவேண்டுமென்றும் எதிரிகளுக்காக எடுத்துப் பேசப்பட்டது. அதற்கு ஆதாரமாக 12 கல்கத்தா லாஜர்னல் 6-இல் கண்டிருக்கிற தீர்மானத்தை எடுத்துக் காண்பிக்கப்பட்டது. அதில் ஸி. பி. ஸி. ரூல் 98 அல்லது 99 இன்படி கோர்ட்டாருக்குச் செய்த சில்லரை மனுவை பார்டி ஆஜர் இல்லாத காரணத்தால் தள்ளுபடி செய்யும் பட்சத்தில், ஆர்டர் IX ரூல்-9 இன்படி ஒரு பிராது தள்ளுபடியானால் எவ்விதமாய் காரணங்களைக் காட்டி வாதி பிராதைத் திரும்பி பயிலுக்கு எடுக்கச் செய்யலாமோ அதே விதமாய் மேற்கூறிய



சில்லரை மனுக்களையும் திரும்பவும் பயிலுக்குக் கொண்டு வரலாமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் மனு நடவடிக்கைகளில் பிராதின் நடவடிக்கைகளுக் குறிய விதிகளை அனுசரிக்கவேண்டுமென்று வாதிக்கப்பட்டது. ஆனால் ஹைகோர்ட்டார் அவ்வாதத்தை எற்றுக்கொள்ளவில்லை; நிறைவேற்றும் நடவடிக்கையானது பிராது நடவடிக்கையின் தொடர்ச்சியே யொழிய அது பிரத்தியேகமான நடவடிக்கையல்லவென்றும், அதேவிதமாய் பிரிவிகௌன்ஸிலார் 22 I. A. 44 S. C, 17 அலகபாத் 196 இலும் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்க ளென்றும், 141-வது பிரிவில் மண்டிருக்கிற, மற்ற எல்லா நடவடிக்கைகள் என்றால், ப்ரொபேட் முதலிய, பிராதுகளைத் தவிர்த்த இதரமான நடவடிக்கைகளென்று கருத்தாகிறதென்றும், தவிற லிமிடேஷன் ஆக்ட் 180-வது ஆர்டிகிளைப் பார்க்குமிடத்து ஒரு டிக்கிரீயின்படி கிடைக்கவேண்டிய பரிகாரங்களை ஒன்றின்பின் ஒன்றாய் பற்பல நிறைவேற்று மனுக்களால் தேடிக்கொள்ளலாமென்றிருக்கிறபடியால் பிராதுகளுக்குறிய முறைகள்தான் நிறைவேற்று மனுக்களுக்கும் எற்குமென்ற கருத்தாகாதென்றும் ஆகையால் ஆர்டர் II ரூ-2-இல் கண்ட முறை நிறைவேற்று மனுக்களுக்குச்செல்லாதென்றும் அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டார் எதிர் வாதத்தை எற்றுக்கொள்ளாமல் சப்கோர்ட் உத்தரவை அனுசரித்து எதிரிகளின் அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

——:O:——

(மிஸ்டர்ஜஸ்டிஸ் சுந்தரய்யர். & மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)

**திருச்சிறுப்பள்ளி**

**C M. P. Nos. 2264 & 2265 of 1912.**

**25 எப்பிரல் 1913.**

ஆர். நடராஜ அய்யர் - மனுதார்.

——:O:——

திருச்சிறுப்பள்ளிஜில்லா அரியலூர் ரெவினியூடிவிஷனல் ஆபீஸர் அவர்கள் வருமானவரி வசூலிக்கும் அதிகாரத்தையுடையவராக ஷை அதிகாரம் செலுத்தின ஒரு நடவடிக்கையில் மனுதரான்வரும்படிவிஷயமாய் செய்த விசாரணை காலத்தில் ஷை மனுதார் இந்தியன் பினல் கோட் 193-வது பிரிவின்படி பொய்சாட்சியம் சொன்னதாகக்கண்டு ஷை டிவிஷனல் ஆபிஸர் (டிப்டிகலக்ட்ர்) கிரிமினல்ப் ரொஸிஜர் கோட் 476-வது பிரிவின்படி மனுதாரை ஷை குற்றத்திற்காக ப்ராஸிகியூஷன் செய்யும்படி உத்தரவளித்தார்கள். அதன்மேல் மனுதார் கிரிமினல் ப்ரொஸிஜர் கோட் 435, 439-வது பிரிவுகளின்படி ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுவும் கொடுத்து, Writ of Certiorari என்னும் கட்டளையை, அதாவது, (கீழ்கோர்ட்டாரின் நடவடிக்கைகளின் உண்மையை அறியும்பொருட்டு பிறப்பிக்கப்படுகிற உத்தரவை) பிறப்பித்து ஷை டிவிஷனல் ஆபிஸருடைய உத்தரவை ரத்துசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவே, அவ்விரண்டு விதமான மனுதாரின் விண்ணப்பங்கள் தள்ளுபடியாச்சுது.

அதன்மேல் மனுதார் லட்டர்ஸ் பேடெண்டு ஆக்ட் 39-வது பிரிவுப்படிக்கு Writ of Certiorari என்னும் சட்டளையின்படி ஹைகோர்ட்டார் செய்த பைசல் மீது பிரிவிகௌன்ஸிலுக்கு அப்பீல் செய்ய எண்ணங்கொண்டு அவ்வித உத்தரவு பிரிவிகௌன்ஸிலுக்கு அப்பீல செய்யத தக்கதென்று அனுமதிகொடுக்கும்படி ஹைகோர்ட்டாருக்கு விண்ணப்பம் கொடுத்தார். மனுதாரின் விண்ணப்பம் தள்ளுபடியானதில் ஹைகோர்ட்டார் கொடுத்த தீர்மானமாவது:—

லெட்டர்ஸ் பேடெண்டு 39-வது பிரிவின்படி பிரிவிகௌன்ஸிலுக்கு அப்பீல் செய்யவேண்டிய வியவகாரமானது கிரிமினல் தரப்பின் அதிகார வரம்பைச் சேராத ஒரு ஜட்ஜிமெண்டு அல்லது உத்தரவைப்பற்றிய விஷயமாயிருக்கவேண்டும். டிப்டிகலக்டர் மனுதாரை ப்ராஸிகியூஷன் செய்யும்படி உத்தரவளிக்கையில் கிரிமினல் தரப்பில் அதிகாரத்தைச் செலுத்தாததாக யாதொரு ஆதாரமும் எடுத்துக் காண்பிக்கப்படவில்லை. மனுதாருக்காக டாக்டர் ஸ்வாமிநாதன் சொல்லுகிறபடி டிப்டிகலக்டருக்கு வருமானவரியை வசூலிக்கவேண்டிய கடமைமட்டுமிருந்தபோதிலும் மனுதாரை ப்ராஸிகியூஷன் செய்யும்படி உத்தர

வளித்தபொழுது கிரிமினல் தரப்பான அதிகாரத்தைச் செலுத்தவில்லை யென்று ஏற்படாது. Certiorari என்றும் கட்டளையால் டிப்டிகலக்டர் நடவடிக்கைகளை வரவழைத்துப் பைசல் கொடுத்த ஹைகோர்ட்டாரும் டிப்டிகலக்டர் செலுத்தின அதிகாரத்தின் வரம்புக்குச் சமானமுள்ள அதிகாரத்தை செலுத்தினதாக பாவிக்கப்படவேண்டும். கிரிமினல்ப்ரொஸிஜர் கோட் 476-வது பிரிவின்படி ஒரு கோர்ட்டார் உத்தரவளித்தால், எதிரி எந்தக்குற்றஞ்செய்தானென்று குறித்துக் காட்டப்படுகிறதோ அந்தக் குற்றத்தைச் செய்தது மெய்யா அல்லவா அதாவது எதிரி குற்றவாளியாகிறானா அல்லவாவென்று ஷை கேசைவிஜாரணை செய்யும் கோர்ட்டார் தீர்மானிக்க வேண்டியதாகும். ஷை கோர்ட்டில் வேறு விதமான பிராதுயாராலும் தாகல்செய்ய வேண்டியதில்லை. ஆகையால் டிப்டிகலக்டர் செய்த உத்தரவே பிராதாக பாவிக்கப்படவேண்டும். ஆகையால் பின்னால் நடக்கவேண்டிய கிரிமினல் நடவடிக்கைக்கு ஷை உத்தரவானது ஆரம்பநடவடிக்கையாகிறது. ஆகவே அந்த உத்தரவும் கிரிமினல் தரப்பான நடவடிக்கையென்றே பாவிக்கப்படவேண்டும். ஒருவனை ப்ராஸிக்யூஷன் செய்யும்படி மற்றொருவனுக்கு கோர்ட்டார் சாங்க்ஷன் (அனுமதி) கொடுத்தால் அந்த உத்தரவு பின்நடக்க வேண்டிய கிரிமினல் விசாரணையைச்சேர்ந்த நடவடிக்கையாகாது. அந்த உத்தரவானது கிரிமினல் நடவடிக்கைக்கு முந்தியதாயும், அந்த நடவடிக்கையின் துவக்கத்திற்கு அவசியமான ஒரு முன்அங்கமென்றும் மதராஸ் ஹைகோட் தீர்மானங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கிரிமினல் ப்ரொஸிஜர் கோட் 476-வது பிரிவின்படி செய்யப்படும் உத்தரவே கிரிமினல் நடவடிக்கையைத்துவக்குவதாகிறது. ஆகையால் டிப்டி கலக்டருடைய உத்தரவும் அதன் மேல் ஹைகோர்ட்டார்செய்த உத்தரவும், கிரிமினல் தரப்பில் பிறந்ததென்றும், ஆகையால் லட்டர்ஸ் பேடெண்டு 39-வது பிரிவுப்படி பிரிவிகௌன்ஸில் அப்பீலுக்கு அனுமதிகொடுக்கத்தக்க உத்தரவல்லவென்று ஹைகோர்ட்டார் மனுவைத்தள்ளுபடி செய்து விட்டார்கள். டிப்டிகலக்ட்டர் உத்தரவின்பேரில் திருச்சிறாப்பள்ளி டிப்டிமாஜிஸ்டிரேட் நடத்தின கிரிமினல் விஜாரணையை நிறுத்திவைக்கவேண்டுமென்று மனுதார் கொடுத்த விண்ணப்பமும் தள்ளுபடியாச்சுது.

——:0:——

(மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் & மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)

### திருநெல்வேலி.

### S. A. No 1041—4 ஆகஸ்ட் 1913.

——:0:——

சுப்பிரமணிய நாடான் Vs ராமஸாமி நாடான்

ஒரு ஹிந்துக்கூட்டுக்குடும்பத்தலைவனாயிருந்த 1-ம் பிரதிவாதி குடும்பச் சொத்துக்களில் சிலவற்றை 17-ம் பிரதிவாதிக்கு அடமானம் வைத்து அதற்குப் பிரதிப்பிரயோஜனமாக ஏற்பட்ட மூன்று வகையான அம்சங்களில் இரண்டு ஐயிட்டங்களுக்குரிய தொகை ரூ. 677-யும் குடும்பத்திற்காக 1-ம் பிரதிவாதி கிறயத்திற்கு வாங்கின சில சொத்துக்களின் விக்கிரயத் ,கைக்காக செல்லாகும்படி அரப்பிக்கப்பட்டது. மைனர் வாதிக்கு அடுத்த சிநேகிதனாகிய தாய்மாமன் 1-ம் பிரதிவாதி எழுதிவைத்த அடமானம் மைனர்வாதியின் பாத்தியதையைக் கட்டுப்படுத்தாதென்று அம்பாசமுத்திரம் டி. மு. கோர்ட்டில் அசல் வழக்கெடுத்தார். அங்கு வாதிக்கனுகூலமாக அந்த அடமானத்தில் மேற்கூறிய நிலவிக்கிறயத்திற்காக செல்லான தொகையைப் பற்றினமட்டில் வாதியை அந்த அடமானம் கட்டுப்படுத்தாதென்று டி. மு. கோர்ட்டார் தீர்ப்பளித்தார்கள். ஜில்லா கோர்ட்டார் அப்பீலில் முன்சீப் கோர்ட் தீர்ப்பை மாற்றி 1-ம் பிரதிவாதி குடும்பத்திற்காக நடத்தின நில விக்கிறய நடவடிக்கையானது குடும்பத்திற்குப் பயனற்றதென்றாவது அல்லது அக்காலத்தில் மைனராயிருந்த வாதிக்குப் பிரதிகூலமான நடவடிக்கையென்றாவது ருஜுப்படுத்தப்படாதபடியால், வாதி மேற்கூறிய அடமானத்திற்குக் கட்டுப்படவேண்டுமென்று தீர்மானித்தார்கள். வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில், அங்கு குடும்பத்தின் அவசியத்திற்காக மட்டும் ஒரு சமபாகஸ்தனுடைய பாத்தியதையைக் கட்டுப்படுத்தி குடும்பத்தலைவன் யாதொரு வில்லங்கம் ஏற்படுத்தலாமென்றும், அல்லது அவ்வித அவசிய மிருப்பதாக ஷை யான் மனப்பூர்வமாய் நம்பி அவ்வித அடமான நடவடிக்கை ஏற்படுத்தலாமென்றும், 3 பம்பாய் 243-இல் குறிக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தையனுசரித்து அபிப்பிராயங்கொண்டு இந்தக்கேசில் 1-ம் பிரதிவாதி குடும்பத்திற்கு மேற்கூறிய விதமாய் யாதொரு அவசியமான சந்தர்ப்பத்தால் குடும்ப சொத்தை அடமானம் வைத்ததாக சொல்லப்படவுமில்லை யென்று சொல்லி வாதிக்கனுகூலமாக ஷை நில விக்கிரயத்துகைக்காக வாங்கிய கடன்தொகையில் வாதியின் பாதிப்பொறுப்பை விலக்கி டிக்கிரீயளித்தார்கள். மிகுதியான அடமானத்தொகை ரூ. 723-இல் குடும்பத்திற்காக 1-ம் பிரதிவாதி செய்த சில நடவடிக்கைகளுக்கு வாதி கட்டுபட வேண்டுமென்று ஜில்லா கோர்ட்டாருக்கு ஒத்தபிப்பிராயப்பட்டு ரூ. 723-இல் பாதித்தொகைக்கு வாதியின் பாகத்தை கட்டுப்படுத்தி டிக்கிரீயளித்தார்கள்.



——:0:——

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர்)

### மதராஸ் ஹைகோர்ட்

### S. R. No. 11,769 of 1913—8 ஆகஸ்ட் 1913

ரஹிம்துல்லாசிகப் Vs அபிஷியல் அஸ்ஸைனீ.

——:0:——

மதராஸ் ஹைகோர்ட் அசல்தர்ப்பில் அபிஷியல் அஸ்ஸைனீ செய்த அசல் நம்பரில் பெற்ற டிக்கிரீயின் மேல் 1-ம் பிரதிவாதி செய்த அப்பீல் காலாவதியாகி விட்டதாக அப்பீலில் எடுத்துக் காண்பிக்கப்பட்டு ஷை அப்பீலை பயிலுக்கெடுக்கு முன் காலாவதி பாயிண்டைப்பற்றி ஒரு ஜட்ஜியவர்கள் முன் உத்தரவுக்காக கொண்டுவரப்பட்டகாலத்தில், அப்பீல் வாதிக்காக, அசல் கோர்ட் டிக்கிரீயை ரெஜிஸ்டிரார் கையொப்பம் செய்த தேதியில் பிறந்ததாக பாவித்து அந்தத்தேதிமுதல் அப்பீல் காலத்தை கணிக்கவேண்டுமென்றும், ஜட்ஜ்மெண்டு கொடுக்கப்பட்ட தேதியை, அதிகாலம்பொருத்துத் தயாரான டிக்கிரீக்குக் கொடுக்கக் கூடாதென்றும், ஆகையால் இந்தக்கேசில் டிக்கிரீ தயாராகி ரெஜிஸ்திரார் கையொப்பம் செய்த தேதியைத் துவக்கிகணித்தால் அப்பீல் காலாவதியாகாதென்றும் வாதிக்கப்பட்டது. ஆனால் ஹைகோர்ட்டார் 10-கல்கத்தா 652-இல் தீர்மானித்திருக்கிறபடி மேற்கூறிய பாயிண்டுக்கு ஸிவில் புரொஸிஜர் கோட் ஏற்காவிட்டாலும் கோர்ட்டார் அனுசரிக்கிற வழக்கமுறையே சட்டமாகுமென்றும் இந்த அபிப்பிராயத்திற்கு விரோதமாயுள்ள தீர்மானங்களை அனுசரிக்கப் பிரியமில்லாமலும் அப்பீல் காலாவதியானதாகத் தீர்மானித்தார்கள். ஆனால் தாமதமாய் அப்பீல் தாகல் செய்யப்பட்டதற்குச் சில காரணங்களையும் அசந்தர்ப்பங்களையும் குறித்துக்காணபித்து தாமதத்தை மன்னிக்கவேண்டுமென்று பிரமாணப்பத்திரிகை மூலமாய் அப்பீல் வாதி கேட்டுக் கொண்ட விஷயத்தைப்பற்றி எதிர்தரப்புக்கு நோடீஸ் கொடுக்கும்படி உத்தரவளித்து நோடீஸின்பேரில் அவ்விண்ணப்பத்தை இரண்டு ஜட்ஜிமார்கள் முன்னிலையில் பைசல் உத்தரவுக்காக வைக்கும்படி கட்டளையிட்டார்கள்.

---

(மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் & மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யர்.)

### தென் மலையாளம்.

### S. A. No 1932 of 1911—5 மார்ச்சு 1913.

பரசுராமபட்டர் Vs வெங்கடாசலபட்டர்

——:0:——

வாதிகள் 1867-ம் வருஷத்தில் பிரதிவாதி தரப்பாருக்குத் தங்கள் சொத்துக்கள் யாவற்றையும் ஒத்திவைத்து அவைகளைப் பிரதிவாதிகள் வசம் சுவாதீனப்படுத்திக்கொடுத்திருக்க, ஷை ஒத்தி தஸ்தவேஜில் கண்டபடி ஷை நிலங்களின் மாசூலிலிருந்து வருஷாவருஷம் வாதிக்கு 200-புறை நெல் கொடுக்கப்படவேண்டுமென்றும், மிகுதியான வரும்படியை ஒத்தித்தொகையின் வட்டிக்காக வஜாசெய்து கொள்ளவேண்டுமென்று ஏற்பட்டு, 1899-ம் வருஷம் வரையில் வாதிக்கு வருஷாவருஷம் 200புறை நெல்லும் ஒழுங்காய்க் கொடுக்கப்பட்டுவந்து அதன் பின் ராமபட்டன் என்றவர் எழுதிக்கொடுத்த ஒரு கரார் நாமாப்படிக்கு அந்த 200-புறை நெல்லையும் ஷையார் அடைந்துவர அதிகாரம் பெற்றமை

யால், வாதிகளுக்கு, 1889-முதல் யாதொரு மாசூலும் செலுத்தப்படாமல் ஷை ராமபட்டார் காலஞ்சென்ற வெகுகாலத்திற்குப் பிறகு ஒத்தியை மீட்டுக்கொள்ளும் பொருட்டு வாதிகள் தங்களுக்குச் செலுத்தப்படாதிருந்த வருஷமாசூல்விகிதமாகிய 200-பறை நெல்லுக்குறிய கிறயத் தொகையையும் அதற்கு வட்டியையும் கணக்கிட்டுக்கூடும்மொத்தத்தொகையை பிரதிவாதிகள், ஒத்தி மீட்கப்படுங்காலத்தில் ஒத்தித் தொகைக்காக செல்லுவைத்துக் கொள்ளவேண்டுமென்றும், அதுபோக பாக்கித்தொகையை மட்டும் செலுத்தி ஒத்தியை மீட்டுக் கொள்வதற்காக பாலக்காட் சப்கோர்ட்டில் அசல் தாவா செய்து அங்கும், அதற்குமேல் தென்மலையாளம் ஜில்லாகோர்ட் அப்பீலிலும் ராமபட்டர் இறந்த காலமுதல் வருஷம் 200-பறை நெல்லுக்கு வாதிகள் பாத்தியப்பட்டவர்களாகிறார்களென்றும், வாதிகள் ஒத்தியை மீட்டுக்கொள்ளும் காலம்வரையில் செலுத்தப்படவேண்டிய நெல்லின் கிறயத்திற்கும் அதற்குறிய வட்டிக்காக 100-க்கு 10-விகிதமாய் வட்டிசேர்த்து வாதிகளுக்கு பரிகாரமளிக்கப்பட்டது. அதாவது ஒததித்தொகையிலிருந்து ஷை வட்டியுடன் கூடின நெல் கிறயத்தொகையைக்கழித்து, மிச்சத்தை மட்டும் வாதிகள் செலுததவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பிரதிவாதிகள் அதன் மேல் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்தார்கள். எதிரிகளின் முக்கிய வாதமாவது:— பிராதுக்கு ஆறு வருஷங்களுக்கு முந்திய வரும்படியைவாதிகள் அடைவதற்குக் காலாவதி தோஷமேற்பட்ட தென்பதேயாம். அதாவது வருஷா வருஷம் வாதிகள் 200 பறை நெல்லை அடையபாத்தியமிருந்து அதை வசூலிக்கப் பிரயத்தனப்படாமலிருந்து வெகுகாலம் பொருத்து ஒத்தியை மீட்டுக்கொள்ளும் பொழுது வசூலாகாத மாசூலின் கிறயத்தைப் பூராவும் அடையலாயக்கில்லை யென்றும், லிமிடேஷன் ஆக்ட் 120-வது பிரிவுப்படி ஆறு வருஷத்திற்கு மேற்பட்ட வரும்படியை அடைய பாத்தியம் கிடையாதென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

ஹைகோர்ட்டார் மேற்படி எதிர்வாதத்தை எற்றுக்கொள்ளாமல், "ஒத்திப் பத்திரத்தின்படி ஒத்தியை மீட்டுக்கொள்ளும் பொழுது வாதிகள் ஒத்தித்தொகையை மட்டும் செலுத்திவிட வேண்டிய தென்றும் எதிரிகள் அதுவரையில் வாதிகளுக்கு வருஷா வருஷம் 200 பறை நெல்லை சொத்தின் வரும்படியிலிருந்து கொடுத்து வரவேண்டியதென்று எற்பட்டிருக்க, குறித்தகாலமாகிய ஒவ்வொருவருஷக்கடைசியிலும் வாதிகள் நெல்லைப் பெற்றுக்கொள்ளாத காரணத்தால் எதிரிகளுக்கு மாசூலைச் செலுத்தி வரவேண்டிய பொறுப்பு நீங்கிவிடாதென்றும், திருஷ்டாந்தமாக, ஒரு எஜண்டு எஜமானுக்காவது அவனுடைய பாகஸ்தனுக்காவது குறித்த காலங்களில் தொகைகளைச் செலுத்திவருவதாய் ஒப்புக்கொண்டு அந்தப்படி ஒழுங்காய்ச் செலுத்தி வராமல் பாக்கி நிற்கும் தொகையை எஜமான் ஷை எஜண்டிடம் கணக்குத்தீர்க்கும் காலத்திலாவது, அல்லது அவனுடைய பாகஸ்தன் பங்கைத்தீர்க்கும காலத்திலாவது, எஜண்டால் செலுத்தப்படாமல் பாக்கி நின்ற தொகைகளையும் எஜண்டிடம் மொத்துமாய் வசூலிக்க பாத்தியமுண்டென்று பல கேஸ்களில் தீர்மானமாகியிருப்பதாயும், ஆகையால் ஒத்திக்காரர்களுடைய பரஸ்பர சம்பந்தம் நீடித்து நிற்கும் காலம் வரையில் ஒத்திப்பத்திரத்தில் கண்டபடி எதிரிகள் வாதிக்குச் செலுத்தவேண்டிய தொகை அல்லது மாசூல், பாக்கியாகவே நிற்குமென்றும், அதற்காகதாரமாக கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானிததிருக்கிற 5. C. 333; 32. C. 576; 9 C. L. J. 633, I. C. L. J. 531; 6 C. 377 ரிபோர்ட்டுகளையும் எடுத்துக்காண்பித்து, பிரதிவாதிகள் ஒத்திசொத்திலிருந்து விளையும் மாசூலுக்குக் கணக்குக்கொடுத்து அதில் வட்டிக்காக செல்லானது போக பாக்கியை மட்டும் வாதிகளுக்கு செலுத்தக் கடமைப்பட்டவர்களாக பாவிக்கலாமென்றாலோ ஒத்தி தஸ்தவேஜில் அவ்விதமாய்மாசூல் கணக்குக்கொடுக்கும் எற்பாடு கிடையாதென்றும், கட்டாயம் எதிரிகள் வருஷம் 200பறை நெல்லுக்கு ஜவாப்தாரியாகிறார்களென்றும், ஆகையால் மாசூல் கணக்குக் கொடுக்கும் நிபந்தனையிருந்தால் வட்டிக்குச் செல்லானது போக மிகுதியைச் செலுத்தும் பொருப்பைப்போலவே எதிரிகள் வருஷம் 200 பறை நெல்லைச் செலுத்தக்



கடமைப்பட்டவர்களாகிறார்களென்றும் ஆகையால். எதிரிகளின் வாதம் செல்லத்தக்க தல்லவென்றும், ஒத்திப்பத்திரத்தில் 200 பறை நெல்லின் கிரயத்திற்கு வட்டியைபபற்றி யாதொரு வசனம் கிடையாதபடியாலும் வாதிகள் தங்கள் வருஷ விகிததை வெகுகாலம் வற்புருத்தி வசூலிக்காமல் தாமதித்தமையால் அரைவட்டிக்குமேல் அதாவது 100-க்கு 6 விகிதத்திற்கு மேல் வாதிகளுக்குக் கொடுப்பது நியாயமில்லை. யென்றும் ஆகவே வட்டியைப்பற்றின மட்டில் கீழ்கோர்ட் டிக்கிரீயை மாற்றி மற்றப்படி 2-வது அப்பீலைத் தள்ளுபடி செய்தார்கள்.

——:O:——

(சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட்)

மதராஸ் டவுன்.

O. S. A. No 103 of 1912–12 ஆகஸ்ட் 1913.

வி. லட்சுமம்மா Vs வி. ரத்னம்மா

——:O:——

சென்னையில் தேவதாசிகுலத்தைச்சேர்ந்த சீதம்மாள் என்றவளுக்கு ராமம்மாள், லட்சுமம்மாள், ரத்னம்மாள் என்ற மூன்று குமாரத்திகளிருந்தார்கள். அவர்களில் ராமம்மாள் என்ற மகளும் அவளுக்குப்பின் சீதம்மாள் என்ற தாயாரும் காலஞ்சென்றுவிடவே ரத்னம்மாள் என்றவள் தன்னுடைய இரண்டு குமாரத்திகளையும் தன்னுடன்வாதிகளாய்ச்சேர்த்துக் கொண்டு மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் அக்குடும்பத்தைச்சேர்ந்த ஒரு வீடு, காலி நிலம், சில நகைகள் ஆகிய மூன்று அம்சங்களைப்பற்றி அவைகள் எல்லாம் குடும்பத்தின் பொதுவான சொத்தென்றும், ஆகையால் அவைகளில் தங்களுக்குச் சமபாகமுண்டென்றும், சீதம்மாள் காலஞ்சென்ற பிறகு லட்சுமம்மாள் என்ற 1-ம் பிரதிவாதி தாவா வீட்டைத்தனிமையாய் அனுபவிக்க பாத்தியமில்லையென்றும், அதில் தங்களுக்குச் சுவாதீனம் கொடுக்கப்படவேண்டுமென்றும், வழக்கெடுத்தாள். 1-ம் பிரதிவாதியாகிய லட்சுமம்மாள் தன்னுடைய ஆன்ஸரில் தாவாவீடும் காலிநிலமும் குடும்பப்பொதுவான சொத்தல்லவென்றும் காலஞ்சென்ற ராமம்மாளும் தானும்சேர்ந்து சம்பாதிக்காகவும், தாவா நகைகளில் சிலவற்றைத் தான் பிரத்தியேகமாய் சம்பாதித்ததாகவும், எதிர்மொழி கொடுத்தாள். அசல்தரப்பில் ஹானரபிள் மிஸ்டர்ஜஸ்டிஸ் வாலிஸ்துரையவர்கள், தாவா வீடானது ராமம்மாள், லட்சுமம்மாள் ஆகிய இருவருடைய பொதுசொத்தென்றும், தாவா காலிநிலமானது ராமம்மாளுடையஸ்வயார்ஜிதமென்றும், ராமம்மாளுக்குறிய தாவா வீட்டின் சமபாதி பாகமும் தாவா காலிநிலமும் ராமம்மாள் இறந்த பிறகு அவளுடைய தாயாராகிய சீதம்மாளுக்கு வார்ஸ் பாத்தியதையால் சென்றதாயும், தாவா நகைகளைப்பற்றி தாவா வீட்டிற்குறியவிதமாகவே அபிப்பிராயப்பட்டு ஷை சீதம்மாளும் காலஞ்சென்று விடவே, தாவா சொத்துக்களை பாகப்பிரிவினைக்காக எற்பட்டிருக்கும் பார்டிஷன் ஆக்ட் முறைப்படி இருதரப்பாருக்கும் பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென்று டிக்கிரீயளித்தார்கள். அதன் பேரில் லட்சுமம்மாள் ஹைகோர்ட்டில அப்பீல் தர்ப்பில் செய்தவாதமாவது:—

(1) அசல் கோர்ட்டார் வாதி சொன்னபடி மூன்று தாவாசொத்துக்களும் குடும்பப்பொதுவானவைகளென்றாவது, அல்லது 1-ம் பிரதிவாதி எதிர்வாதம் செய்தபடி, வீடும் நகைகளின் சிலவைகளும்தனக்கும் ராமம்மாளுக்கும்பொதுவாய்ச் சொந்தமானதாகவும், காலிநிலம் ராமம்மாளுடையதென்றும், இதரநகைகள் தன்னுடைய சொந்தமென்றாவது, தீர்மானிக்காமல் வீடும் நகைகள் பூராவும் ராமம்மாள் லட்சுமம்மாள் ஆகிய இருவர் சேர்ந்து சம்பாதித்ததாயும், காலிநிலம் ராமம்மாளுடைய ஸ்வயார்ஜ்ஜிதமென்றும் தீர்மானம் செய்தபடியால், அவ்விதபைசலை ஆதாரங்கொண்டே 1-ம் பிரதிவாதி பிராதின் 7-8-வது பாராக்களில் சொல்லப்பட்டிருக்கிற சீதம்மாளின் உயிலைப்பற்றி அப்பீல் தர்ப்பில் எடுத்துப்பேசி அதில் கண்டபடி, ராமம்மாளுக்குப்பின் ஷை யாளுக்கு பாத்தியமாயிருந்த வீட்டிலும் நகைகளிலும் சமபாதிபாகத்தை சீதம்மாள் அடைந்தமையால் அந்த சொத்துக்கள் சீதம்மாளுக்குப் பிறகு 1-ம் வாதியின் புத்திரிகளாகிய 2-3 வாதிகளுக்கு உயில்படி சேரவேண்டு மாகையால், சீதம்மாள் காலஞ்சென்றுவிடவே அந்த சொத்துபாகமானது

2-3 வாதிகளுடையதாகுமென்றும், அவர்களால் 1-ம் வாதிக்கு ஷை சொத்துக்கள் மாற்றப்படாதபடியால் 1-ம் வாதி லட்சுமம்மாளுக்கு தாவா சொத்துக்களில் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும், 1-ம் பிரதிவாதியை தாவா சொத்தின் அனுபோகத்திலிருந்து நீக்கும்படி பிரயத்தனப்படுவதற்கு 1-ம் வாதிக்கு யாதொரு பாத்தியமும் கிடையாதென்று வாதித்தாள். மேற்கூறிய உயிலைப்பற்றிய வாதத்தை 1-ம் பிரதிவாதி அசல் கோர்ட்டில் செய்ய எதுகரமில்லாமல்போனபடியால் (இருகக்ஷியின் வாதத்திற்கிசையாத தீர்மானம் அசல் கோர்ட்டில் செய்யப்பட்டபடியால் உயிலைப்பற்றிய வாதம் அசல் கோர்ட் தீர்ப்பை ஆதாரமாய் வைத்துக்கொண்டுதான் செய்யப்பட்டதென்று முந்தியேசொல்லப்பட்டிருக்கிறது) பிராதின் பரிகார அம்சங்களைத் தக்கப்படி உயிலைப்பற்றியமட்டில் திருத்திக்கொடுக்கும்படியும் அதற்குறிய வேறு ஆன்ஸர் எழுதிக்கொடுக்கும்படியும், மறுவிஜாரணையில் பைசல் அளிக்கும்படியும் உத்தரவளிக்கலாமென்றால் அப்படிப்பட்ட உத்தரவு செய்ய அவசியமில்லையென்பதற்குக் காரணமாக ஷை சீதம்மாளுடைய உயிலானது சென்னை நகரில் பிறந்தமையால் ஹிந்து உயில் சட்டத்தின் 2-வது பிரிவுப்படி இந்தியன் வார்ஸ்களின் சட்டம் 187-வது பிரிவுக்குட்பட்டிருக்கவேண்டுமென்றும், அதாவது உயில் ரூபகாரப்படுத்தப்பட்டு ப்ரொபேட்டாகியிருக்கவேண்டுமென்றும், ஷை உயில் ப்ரொபேட்டாகாமலிருந்தபடியால் அதைப்பற்றி ஆதாரம் கொண்டு எவ்விதவாதமும் செய்யக்கூடாதென்று அப்பீல் கோர்ட்டார் தீர்மானித்தார்கள். இந்தியன் வார்ஸ்களின் ஆக்ட் 187-வது பிரிவானது உயில்படி பாதியத்தை ஸ்தாபிக்கப் பிரயத்தனப்படுகிறவர்களுக்குத்தான் பாதிக்குமென்றும், உயில் பாத்தியதையுடைய 2-3 வாதிகள் அந்த பாத்தியதையைக்கொண்டாடாமல் 1-ம் வாதியுடன்சேர்ந்து அவளுடைய வழக்கை அனுசரித்து வந்தமையால் 1-ம் பிரதிவாதியாகிய உயிலில் கண்டிராத அந்நியஸ்திரியைப்பற்றினமட்டில் உயிலைப்பற்றிப்பேசும்பொழுது உயில் ப்ரொபேட்டாகியிருப்பதவசியமில்லையென்றும், அதாவது Suceeion Act 187-வது பிரிவு பாதிக்காதென்றும், 1-ம் பிரதிவாதிக்காக வாதிக்கப்பட்டது. ஆனால் அதற்கு ஆதாரமாக, தக்ககாரணமாவது தீர்மானங்களாவது எடுத்துக்காண்பிக்கப்படவில்லை. அந்த வாதத்தை அப்பீல்கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளவுமில்லை. உயில் பிறந்தது வாஸ்தவமென்றும் அதில் கண்ட சங்கதிகளும் யதார்த்தமென்றும் வாதி தரப்பார் ஒப்புக்கொண்டபோதிலும் உயில் சட்டத்திற்கு விரோதமான ஸ்திதியிலிருப்பதாயும் அதினால் கிடைக்கக்கூடிய பாத்தியதையையும் சட்ட விரோதமாகுமென்றும், வாதிகள் ஆக்ஷேபித்திருக்கிறார்களென்றும், அப்பீல் கோர்ட்டார் எடுத்துச்சொன்னார்கள்.

சீதம்மாளுடைய உயிலானது சட்டப்படி செல்தக்கதாய் பாவித்த போதிலும் அதில் கண்டபடி சீதம்மாளின் சொத்துபாகங்கள் 2-3 வாதிகளுக்குச்சென்றுவிட்டதாகவே தீர்மானிக்கக்கூடாதென்பதற்குக் காரணமாக அப்பீல் கோர்ட்டார் சொன்னதாவது:—

ஸக்ஸஷன் ஆக்ட் 91-வது பிரிவின்படி உயில் ஒழுதி வைத்தவன் மரணமடைந்த உடன் சொத்துக்கள் உயிலில் குறிக்கப்பட்டவனுக்கு சுவதீனமாகிறதாய் ஏற்படாது. அந்த சொத்தில் ஷையானுக்கு ஹக்குபாத்தியமேற்பட்டதாக மட்டும் சொல்லலாம். ஹக்குபாத்தியைக்கும் சுவாதீனத்திற்கும் வித்தியாசமான கருத்தாக ஷை ஆக்ட் 106-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. 292-வது பிரிவில், உயிலின்படி நன்மை அல்லது சொத்துபாத்தியதையை ஏளிக்கப்பட்டிருக்கிறவன் ஷை பாத்தியதை அடைந்து அனுபவிக்கச் சம்மதபபட்டால் தான் பரிபூரணபாத்தியம் ஏற்படும். அதற்கு ஆதாரமாக 6 உலபொத் 583ஐப் பார்க்கவம். அப்படிப்பட்ட சம்மதம் கொடுக்கப்படும்வரையில் உயில் சொத்தில் அவனுக்கு பாத்தியதை பொருந்தாமலே நிற்கும். 32 சான்ஸெரி 408-இல் உயில் பாத்தியதை அடைய ஒருவன் சம்மதிப்பதவசியமென்றும், ஒருவனுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் உயிலில் அவனுக்குபாத்யதையளிப்பது விபரீதமான நடவடிக்கையென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சம்மதமன்னி



யில் சொத்துபாத்தியதையை அடையக்கடமைப்பட்டவன் சட்டப்படி வார்ஸ் ஸ்தானத்திற்குறியவனொருவன் தவிற வேறு யாருமில்லையென்று (1818) 2 swanston 365 S C. 31 E. R. 655-இல் சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கூறிய இரண்டு இங்கிலீஷ் தீர்மானங்களுக்கொத்ததாய் இந்தியா கோர்ட்டுகளில் தீர்மானிக்கப்படாதபோதிலும், அதற்கு மாறுயாதொரு தீர்மானமுமில்லை. அது நியாயத்திற்கிசைந்துமிருக்கிறது. அந்த அபிப்பிராயப்படி அனுசரிக்கலாம். ஆகையால் 2-3-வாதிகள் உயில்படி கொடுக்கப்பட்டிருந்த நன்மையை அபேக்ஷிக்காமல் அந்த பாத்தியதையைத் தேடாமலிருந்தமையால் உயிலைப்பற்றிய 1-ம் பிரதிவாதியின் எதிர்வாதம் பிரயோஜனமில்லையென்று அப்பீல் கோர்ட்டார் தீர்மானித்தார்கள்.

மறுபடியும் 1-ம் பிரதிவாதிக்காக 25 மதராஸ் 149-இன் 155-ம் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கிற தீர்மான அபிப்பிராயத்தையனுசரித்து தேவதாஸி குலத்தைச் சேர்ந்தவர்கள ராமம்மாள், லட்சுமம்மாள் என்ற இருவரும் ஒரு பெரிய குடும்ப அங்கத்தின் கிளையங்கத்தவர்களான ஒரு பிரத்தியேக வம்சமென்று வாதிக்கப்பட்டு வாதிகளுக்கு அந்த வம்சத்தின் சொத்துக்கு பாத்தியங்கொண்டாட நியாயமில்லையென்று வாதிக்கப்பட்டது. ஆனால் 1-ம் வாதியாகிய ரத்னம்மாள் மேற்கூறிய இருவர்களுடைய சகோதரியானபடியால் அவளைப்பிறித்துப் பேசுவதற்கு நியாயமில்லையென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

கடைசியில் அசல்கோர்ட் தீர்ப்பில் பார்டிஷன் ஆக்ட்படி தாவா சொத்துக்களைப் பிறிவினை செய்து கொடுக்க வேண்டியதைப்பற்றி 1-ம் பிரதிவாதி ஆக்ஷேபிக்கவே, அதைப்பற்றி வாதி வாதாடாமல் ஒப்புக்கொண்டபடியால் சீதம்மாளுக்குச் சென்ற ராமம்மாளுடைய பாகத்தை சமபாதியாய்ப் பங்கிட்டு 1-ம் வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் பிறித்துக்கொடுக்க வேண்டியதாகத் தீர்மானிக்கப்பட்டது. மற்றப்படிக்கு அசல் கோர்ட் தீர்மானம் சரியென்று அப்பீல் தள்ளுபடியாச்சுது. 1-ம் வாதியின் செலவை 1-ம் பிரதிவாதி கொடுக்கவேண்டுமென்றும் உத்தரவாச்சுது. ஆகவே தாவா வீட்டிலும் நகைகளிலும் பாதி 1-ம் பிரதிவாதிக்குச்சென்று அதில் மறுபாதியும் தாவா காலிநிலமும் 1-ம் வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் சமபாகமென்று ஏற்பட்டது

———:O:———

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

——:O:——

(மிஸ்டர்ஜஸ்டிஸ் மில்லர்)

C. R. P. No. 663 fo 1912—

27 அக்டோபர் 1913.

——:0:——

ஒரு பொஸஷன்கேசில் ஒரு கக்ஷிக்காரனுக்காக வக்கிலொருவர் ஆஜராகி ஷை கேசானது பைசலானபிறகு அந்த தீர்மானத்தின்பேரில் ஸிவில்தரப்பில் நடக்கவேண்டிய அசல் வியாஜ்ஜியத்தில் ஷை வக்கில்தன்னை பொஸஷன்கேசில் நியமித்திருந்த கக்ஷிகாரனுக்காக ஷை ஸிவில் கேசிலும் நியமிக்கப்படும் சவுகரியத்தைத் தரவேணுமென்றும் அவ்விதமான சமயத்தை ஷை கக்ஷிக்காரனுக்குக் கொடுக்காமல் அந்த ஸிவில் வியாஜ்ஜியத்தில் வேறு பார்ட்டிக்காக ஆஜராய் கேசை நடத்தக்கூடாதென்று ஸிவில் ரூல்ஸ் ஆப் ப்ராக்டிஸ் 277-வது விதியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்று ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

——:O:——

(மிஸ்டர்ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் &

மிஸ்டர்ஜஸ்டிஸ் ஏய்லிங்)

Crl R Case 497 & Cr R, P. No 73 of 13

21 அக்டோபர் 1913.

——:O:——

பி. லட்சுமி நரசய்யா என்ற ஒருவர் மதராஸ் ஹைகோர்ட் இன்ஸால்வென்வி தரப்பில் பிறந்த உத்தரவின்படி ஒரு இன்ஸான்வெண்டாகத் தீர்மானிக்கப்பட்டார். அதாவது அவருடைய கடன்காரர்கள், பாக்கிக்காக அவர்மேல் தொடரக்கூடாது. மேற்கூறிய இன்ஸான்வென்வி

நடவடிக்கை ஈரங்கியாகும்காலத்தில் மதராஸ் டவுன் இன்ஸால்வென்ஸி ஆக்ட் 103-வது பிரிவின்படி ஷை மனுதார்குற்றம் செய்ததாக அதாவது, ... ... ... ... ...

... ... ... ... ... ...

... ... ... ... ... ...

... ... ... ... ... ...

ஏற்பட்டபடியால் எஸ். பி. நரசிம்மாச்சாரியார் என்ற ஒரு பாக்கிதார் மதராஸ் சீவ் பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டிடம் ஷை மனுதார் செய்த குற்றத்தை விஜாரித்துத்தண்டிக்கும்படி பிராது கொடுத்தார். மாஜிஸ்டிரேட்டாரவர்கள் இன்ஸால் வெண்டுகோர்ட் முன்னிலையில் விஜாரணை காலத்தில் நடந்ததாகச் சொல்லப்பட்ட மேற்படி குற்றத்தைத் தாம் விஜாரிக்க அதிகார வரம்பில்லையெனச் சந்தேகப்பட்டு ஹைகோர்ட்டுக்கு கிரிமினல் புரொஸிஜர் கோட் 448-வது பிரிவின்படி ஆலோசனை உத்தரவுக்காக லட்டர் மூலமாய் ரிபர்செய்து கொண்டார்கள். ஹைகோர்ட்டார் மாஜிஸ்டிரேட்டார்வர்களின் அபிப்பிராயம் சரிதானென்றும், மதராஸ் டவுன் இன்ஸால்வென்ஸி ஆக்ட் 103-வது பிரிவின்படி செய்யப்பட்ட குற்றத்தை மாஜிஸ்டிரேட்டார் விஜாரிக்க அதிகார வரம்பில்லை யெனத்தீர்மானம் செய்து அந்தப்படி மாஜிஸ்டிரேட்டாரவர்களுக்குத் தெரியப்படுத்தினார்கள். அதற்குக் காரணமாக:—" இன்ஸால்வென்ஸி நடவடிக்கையில் ஒருவன் 103-வது பிரிவின்படி குற்றஞ் செய்ததாய்க்கண்டால் கோர்ட்டார் ஷை யானுக்கு நோட்டீஸனுப்பி ஆக்ஷேபனை ஈரங்கிகேட்டு மேற்படி குற்றத்தைப்பற்றி விஜாரணை செய்து குற்றவாளியென்று துலங்கினால் இன்ஸால்வென்ஸி நடவடிக்கை நடத்தின கோர்ட்டார் அவனை சிக்ஷைசெய்யவேண்டுமென்று ஷை ஆக்ட் 104-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற விதமான கிரிமினல் குற்றங்களை விஜாரிக்கும் முறைகள் இந்த விதமான விஜாரணைகளுக்கு உபயோகப்படுத்த சட்டமில்லை. கோர்ட்டாருக்கு ஒருவன் குற்றம் செய்திருப்பதாய்த் திருப்தி யடைந்தால்மட்டும் 04-ம் பிரிவுப்படி நடவடிக்கை நடத்தலாம். ஆகையால் பாக்கிதாரனொருவன் தன்னிஷ்டம்போல் கிரிமினல் பிராதைத் துவக்க அதிகாரம் கிடையாது. இன்ஸால்வென்ஸி ஆக்ட் ஏற்பட்டதினால் மேற்கூறிய ஒரு குற்றம் ஏற்பட்டது. ஆகையால் அந்தக் குற்றத்தை விஜாரிக்க மேற்படி கோர்ட்டாரே ஸ்பெஷலான கிரிமினல் அதிகாரத்தைப் பெற்றவர்களாய் கிரிமினல் விஜாரணை செய்யலாயக்காகிறார்கள். அதற்குறிய புரொஸிஜரும் வேராகவே ஏற்பட்டிருக்கிறது" என்ற காரணத்தையிட்டு மேற்கூறியபடி உத்தரவளித்தார்கள்.

# தென் இந்திய வியவகார சிந்தாமணி.

Vol. I] அக்டோபர் 1913. [I, 2-ம் பிரதி

## மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள்.

—:o:—

(மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்)

### Crl. R. Case No. 444—1913.

ராமனுதபுரம்

எதிரி—மொய்தீன் பாட்சா சாகிப்

—:o:—

இராமனுதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த சாத்தூர் சப்மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் எதிரி ஒரு பணியாரக்கூடையைத் தலையில் வைத்துக்கொண்டிருந்த வாதியை தலையில் மெதுவாய்த் தட்டி பணியாரக்கூடையைப் பிடுங்கிப்போனதாகக் குற்றம் சாட்டப்பட்டு இ. பி. கோ. 352, 379, 426 ஆகிய மூன்று பிரிவுகளின்படி குற்றம் செய்ததாகத்தீர்மானிக்கப் பட்டு தண்டனை யடைந்தார். அதன்பேரில் ராமனுதபுரம் டிவிஷனல் 1-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் எதிரி செய்த குற்றம் 392—வது பிரிவின்படி வழிப்பறிக் குற்றமாகுமென்றும் அந்தக் கேசை சாத்தூர் சப்மாஜிஸ்டிரேட்டார் விஜாரிக்க அதிகாரமில்லையென்றும் அபிப்பிராயப்பட்டு கீழ்கோர்ட் தீர்மானத்தை ரத்து செய்ததும் தவிர எதிரியின் குற்றத்தைப்பற்றி சட்டப்படி மறு விஜாரணைசெய்யும்படி சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டாரவர்களுக்கு உத்தரவளித்தார்கள். சப்மாஜிஸ்டிரேட்டார் விஜாரிக்கத் தகாத கேசைத்திருப்பவும் விஜாரிக்க முடியாது. ஆனால் கி-பி-கோ 346-வது பிரிவின்படி சப் மாஜிஸ்டிரேட்டார் கேசை பயிலுக்கு எடுத்துக்கொண்டு அந்தக்கேசைத்தான் விஜாரிக்கத் தக்கதல்லவென்று மேல் கோர்ட்டாருக்கு ரிபோர்ட்டு செய்யவேண்டுமென்ற கருத்துடன் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் அவ்வித உத்தரவளித்ததாக ஹைகோர்ட்டார் அனுமானித்தார்கள். டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரவர்களுடைய உத்தரவைப்பற்றி ராமனுதபுரம் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டா ரவர்கள் ஹைகோர்ட்டுக்கு ஆலோசனை அபிப்பிராயத்திற்காக ரிபர்செய்ததில் ஹைகோர்ட்டார் கொடுத்த அபிப்பிராய மாவது:—

"சப் மாஜிஸ்டிரேட்டாரின் நடவடிக்கையை டிவிஷனல் மாஜிஸ்டிரேட் ரத்தாக்கினது பிசகு. மதராஸ் ஹைகோர்ட்டாரும் பம்பாய் ஹைகோர்ட்டாரும் பற்பல தீர்மானங்களில் ஒரே அபிப்பிராயமாக "ஒருமாஜிஸ்டிரேட் எதிரியை எந்தக் குற்றத்திற்காக தண்டனைசெய்தாரோ அந்தக் குற்றத்தை விஜாரித்துப் பைசல் செய்வதற்கு அதிகார முடையவரா யிருக்கின், விஜாரணையில் ஷை மாஜிஸ்டிரேட் விஜாரிக்க அதிகாரமில்லாத அதிக கடுமையான குற்றத்தை எதிரி செய்ததாகத் துலங்கியிருந்தபோதிலும் தண்டனையடைந்த எதிரிக்கு அவ்வித விஜாரணையால் பாதகம் ஏற்பட்டாலொழிய, அல்லது எதிரிக்கு விதிக்கப்பட்ட தண்டனை மிகவும் குறைந்ததாக ஏற்பட்டாலொழிய மாஜிஸ்டிரேட்டார் விதித்த தண்டனையை ரத்துசெய்ய வேண்டியது அனுவசியம்" என்று சொல்லி யிருக்கிறார்கள். இந்தக்கேசில் எதிரியின் வழிப்பறிக்குற்றம் அதிக சொற்பமானது, எதிரிக்கு யாதொரு பாதகமும் நேர்ந்ததாகக் காணேம்; தண்டனையும் தகுதியற்றதல்ல, மறு விஜாரணைக்கு எதிரியை ஆளாக்குவது அனுவசியம்; என்று சொல்லப்பட்டு சப் டிவிஷனல் ஆபீஸருக்கு எதிரியின் அப்பீலை பயிலுக்கெடுத்துக்கொண்டு ரிகார்டுகளைப் பார்வை

யிட்டு எதிரி குற்றவாளியா அல்லவா வென்று தீர்மானிக்கும் பொருட்டு சட்டப்படி அப்பீலை ஈரங்கிகேட்டு பைசல் செய்யும்படி உத்தரவளிக்கப்பட்டது. 13 மப்பாய் 502யும், 24 மதராஸ் 675யும் பார்க்கவும்."

——:O:——

(மிஸ்டர் ஜஸ்டஸ் மில்லர் &
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

**S. A. No. 840 of 1911:—30 எப்பிரல் 1913.**

**செங்கற்பட்டு.**

மனோன்மணிஅம்மாள் Vs. வைதிலிங்க நாயகர்

—:O:—

ஐந்து பாகஸ்தர்களடங்கிய ஒரு அவிபக்த ஹிந்துக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் இருவர்களிடமிருந்து வாதி 1904-லும் 1905-லும் தனித்தனியான விக்கிறய தஸ்தவேஜினால் ஷெ குடும்ப சொத்தில் ஷெ யார்களுடைய பாகத்தை மொத்தமாய்க்இன்னதென்று குறிக்காமல்கிறயம் பெற்று 1904-ல் பெற்ற கிறய தஸ்தவேஜில் கண்டசொத்தைத் தன் வசப்படுத்திக்கொள்வதற்காக தனக்கு விக்கிறயம் செய்த பாகஸ்தனுடைய ஸ்தானத்திலிருந்தவனாக அந்த பாகத்தைப் பிரிததுக்கொடுக்கும்படி மற்ற பங்காளிகளின் மீது பூந்தமல்லி டி. மு. கோர்ட்டில் பாக வியாஜ்ஜியமெடுத்த பிறகு பின்னால் பிரத்தியேகமாய் 2-வது பாகஸ்தனிடமிருந்து 1905-ல் கிறயம் பெற்ற பாகத்தையும் பிரித்துக்கொடுக்கும்படி 1907-ல் ஷெ டி. மு. கோர்ட்டில் வேறு அசல் வழக்கு செய்ததில் அப்பிந்திய வியாஜ்ஜியமானது செங்கல்பட்டு ஜில்லா கோர்ட்டாரால் அப்பீலில் தள்ளுபடியாகி விட்டது. வாதி ஜில்லா கோர்ட்டாரின் தீர்மானத்தின் பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்தார். அங்கு ஜில்லாகோர்ட் தீர்ப்பே காயமாகி வாதியின் 2-வது பிராது தள்ளுபடியானதில் சொல்லப்பட்ட தீர்மானத்தின் முக்கிய அம்சங்களாவன:—

(இந்த பிராதில் எதிரியின் முக்கிய வாதமாவது:-ஸி. பி. ஸி. ஆர்டர் 11ரூல்-2-ல் கண்டபடி ஒரேவியாஜ்ஜிய மூலப்படி அநேக பரிகாரங்களைத் தேடவேண்டுமானால் அவைகளை யெல்லாம் ஒரே பிராதில் சேர்த்துக் கேட்கவேண்டும். சவுகரியத்திற்காகவாகிலும் அல்லது தவறுதலாயாவது யாதொருபரிகாரம் விட்டு விடப்பட்டால் அந்தப் பரிகாரததைப் பற்றி வேறு வழக்கு பின்னால் எடுக்கக் கூடாதென்பதேயாம். ஆகையால் வாதிக்கு தான் கிறயம் பெற்ற சொத்துக்கள் இரண்டு தஸ்தவேஜ்களினால் கிடைத்தபோதிலும் அவைகளை சுவாதீனமடையும்பொருட்டு பாகவியாஜ்ஜியம் தொடுக்க ஒரே வியாஜ்ஜிய மூலமென்றும் முதல் பிராதில் ஒரு பாகஸ்தனுடைய பாகத்தைப் பற்றி மட்டும் பாகவியாஜ்ஜியம் செய்தமையால் மற்ற பாகத்தைப் பற்றி பின்னால் வழக்கு செய்வது சட்ட விரோதமென்று வாதிக்கப்பட்டது.)

எதிரியின் வாதம் எற்றுக் கொள்ளப்பட்டது. வாதி கிறயம் பெற்ற பாகங்கள் குடுமப சொத்திலிருந்து பிரிக்கப் பட்டிருந்தவைகளல்ல. ஆகையால் வாதி கிறயம் பெற்ற பாகத்தை சுவாதீனமடைய தாவாசெய்ய வேண்டுமானால் குடும்பத்தார் அனைவர் பேரிலும் வழக்கெடுக்க வேண்டும். தாவா செய்யுமுன் வாதி தனக்கு ஐந்திலிரண்டு பங்குண்டென்று சொல்லிக்கொள்ளலாமே யொழிய குறித்த ஐந்தில் ஒரு பாகமும் ஐந்தில் மற்றொரு குறித்தடாகமும் தனக்கு பாத்தியமென்று சொல்லிக்கொள்ளஇடமில்லை. குடும்பத்தாரைத் தனக்கு ஐந்தில் இரண்டு பங்கை அடையாளமிட்டுக் குறித்துச் சுவாதீனபடுத்தும்படி கேட்கும் பாத்தியம் வாதிக் குண்டே யொழிய தனக்கு விற்ற பாகஸ்தன் மீது தனித்தனியாய் சுவாதீன வியாஜ்ஜியம் எடுக்க முடியாது. எனெனில் எல்லா பாகஸ்தர்களுடைய ஒற்றுமையான சம்மத மன்னியில் அவர்கள் பிரித்து சுவாதீனம் செய்து கொடுக்கமுடியாது. ஆகையால் வாதிக்கு இரண்டு கிறயதஸ்தவேஜுகளின் ருஜுவால் பாத்தியதை எற்பட்டபோதிலும் வியாஜ்ஜிய மூலம் ஒன்றேயாகும். ஒவ்வொரு பாகத்திலும் வாதிக்கு பாத்தியதை வெவ்வேறு தேதியில் கிடைத்தபோதிலும் வியாஜ்ஜிய மூலம் ஒன்றே. வாதிக்கு இருபாகஸ்தரும் ஒரே தஸ்தவேஜினால் விக்கிறயம் செய்து கொடுத்திருந்தால் வாதிக்கு வியாஜ்ஜிய மூலம் ஒன்றுதானே. தஸ்த வேஜு



பிரத்தியேகமாயிருந்த காரணத்தினால் வியாஜ்ஜிய மூலமும் என் பிரிந்து போகவேண்டும்; [ஒரே குடும்ப சொத்திலிருந்து பிரிவினை கேட்கப்படுகிறது, பார்டிகளும் ஒரு வகைராக்களே] வாதி தன்னுடைய பாத்தியதையை வேரொரு 3-ம் மனிதனுக்கு (ஒரே தஸ்த வேஜினால்) மேடோவர் செய்து விட்டால் அந்த 3-ம் மனிதனுக்கு சுவாதீனமடைய வியாஜ்ஜிய மூலம் ஒன்றே யொழிய வெவ்வேராகாது; வாதியின் விக்கிறய பாத்தியதையை எதிரிகள் முற்றிலும் பிரதமத்திலேயே ஆக்ஷேபித்துவிடும்பக்ஷத்தில் வாதிக்கு வழக்கெடுக்க குடும்ப சொத்தில் ஐந்தில் இரண்டு பாகத்தைப்பற்றிச் சொல்லவேண்டுமே யொழிய முதலில் ஒருபாகத்தைப்பற்றிமட்டும் வழக்கெடுத்தால் மற்ற பாகத்தை அவன் தவிர விட்டதாக அதாவது தேவையில்லை யென்று விலக்கி விட்டதாக பாவிக்கவேண்டும். தவிற ஸி. பி. ஸி. ஆர்டர் 11 ரூல்-2 இல் கண்ட அம்சங்களை அனுசரித்த தீர்ப்புகள் அநேகமிருக்கின்றன. ஒவ்வொரு கேசும் அவையின் ருஜுபாகங்களுக்குத் தக்கதாய் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. வாதிக்காக 7-மதராஸ் லாஜர்னல் 73-ம், 8 மதராஸ் லாஜர்னல் 92-ம் எடுத்துக் காண்பிக்கபட்டது. ஆனால் அந்தக் கேசுகளில் முந்தியதாவாவில் சம்பந்தப்பட்ட நிலங்களும் பிந்திய தாவாவில் சம்பந்தப்பட்ட நிலங்களும் வெவ்வேறு வித்தியாசமான பாகங்களாயிருந்தன. ஆகையால் அந்தக் கேசானது வாதிக்குப் பயனில்லை. இரண்டு பிரததியேகமான பாத்தியதையுடைய வாதி ஒரே வியாஜ்ஜிய மூலத்தில் தாவாதொடுக்க வேண்டுமென்று 4 அலகபாத் 171-இல் கண்ட கேசை ஜில்லா கோர்ட்டார் அனுசரிக்கிறபடி அந்தக்கேசானது மேற் கூறிய நியாயங்களுக்கு ஆதாரமாயிருக்கிறபடியால் வாதியின் பிந்திய பிராது செல்லத்தக்கதல்லவென்று அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ அவர்கள் மேற்கூறிய மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லரவர்களுடைய அபிப் பிராயத்திற்கு ஒற்றுமையாக யிருந்ததில் பிரத்தியேகமான தீர்ப்பெழுதி அதில் முக்கியமாய் வாதி முதல் பிராதில் பிந்தியபிராதின் அம்சத்தை என் சேர்க்கவில்லை யென்றாவது தனித்தனிபிராதாய் தாகல் செய்யப்பட்ட காரணமென்னவென்றாவது வாதி சமாதானம் சொல்லவில்லையென்றும் வாதி முதல் பிராது கொடுக்கு முன்னமேயே 2-தஸ்த வேஜிகளுடைய பலன் வாதிக்குக் கிடைத்து விட்டதாயும் அதாவது அவைகளினால் 5-இல் 2-பங்கு பாத்தியம் எற்பட்டதாயும் ஆகையால் அந்த தஸ்தவேஜிகள் பிறந்த பிறகு 5-இல் 2-பாகத்தைப் பிரித்துவாங்கும் ஒரே பரிகாரம் வாதிக்கு பாக்கியிருந்ததாகவும் அதற்கு ஒரே வியாஜ்ஜியமூலமென்றும் ஷெ தஸ்தவேஜிகளினால் இரண்டு பாகஸ்தருடைய ஸ்தானத்தில் வாதி அமைந்துகொண்டு விட்டதாயும் அந்த புதிய பந்துத்வத்தால் கோர்ட்டில் பாக வியாஜ்ஜியம் தொடுக்க வாதிவந்த பாவனையாகுமென்றும் வியாஜ்ஜிய மூலததை உண்டாக்குவதற்கு 2-தஸ்தவேஜிகளும் இரண்டாம் பக்ஷமான ஆதாரங்களே யொழிய அவைகள் வியாஜ்ஜிய மூலத்திற் குறிய ஜீவாதாரமல்லவென்றும் முதல் பிராதில் ஒருபாகத்தை மட்டும் தனக்குப்பிரித்துக் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டபடியால் மற்றபாகத்தை தனக்குத்தேவையில்லையென்று விட்டுவிட்டதாக பாவிக்கப்படாததற்குக் காரணமாக யாதொரு சந்தர்ப்பமுமிருந்ததாக சொல்லப்பட வில்லையென்றும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

——:O:——

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர் அவர்கள்
& மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ அவர்கள்)

**விசாகப்பட்டணம்:—**

**S. A. 922 of 1912:—25 ஆகஸ்ட் 1913.**

லட்சுமீ நரசிம்மாள் Vs. லட்சுமம்மாள்

நரசிங்கராவ், ராமமூர்த்தி என்ற இரண்டு அவிபக்த சகோதரர்கள் இருவரும் சேர்ந்து ஒருவனுக்கு அடமான தஸ்தவேஜின்பேரில் ரூபா. 1000 கடன் கொடுததிருந்தார்கள். 1904-ம் வருஷத்தில் அசல் வட்டி ரூ. 1600 போல ஷெ தஸ்தவேஜினால் பாக்கி எற்பட்டிருக்க ராமமூர்த்தியென்ற ஒருவர் அடமானதாரனிடம் ரூ. 1000 பெற்றுக்கொண்டு ரூ. 600-யும தள்ளிக் கொடுத்துவிட்டு ஷெ அடமானத்தில் தன் பாக

மட்டுமல்லாமல் முழுது பாத்தியதையையும் விடுதலைசெய்து கொடுத்துவிட்டார். 1906-ம் வருஷத்தில் ஷை இரண்டு சகோதரர்கள் காலஞ்சென்றமையால் அவர்களுடைய வார்ஸ்கள் சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டார்கள். அக்காலத்தில் மேற்படி அடமானக்கடன்பாக்கி வசூலாகவில்லையென்று ராமமூர்த்தியின் பெண்சாதி லட்சுமம்மா தன்புருஷன் துகைபெற்றுக் கொண்ட தகவலை மறைத்துச் சொல்லவே அதை வாஸ்தவமென்று நம்பியிருந்த நரசிங்கராவின் பெண்சாதி லட்சுமீநரசிம்மா 1908-இல் அடமானதாரரிடம் துகையை வசூலிக்கப் பிரயத்தனப்படும்பொழுது ராமமூர்த்தி செய்த மோசம் வெளிப்பட்டு அடமானத்துகை பாக்கி ரூ. 1600-யும் 1904-ம் வருஷத்தில் ராமமூர்த்தி வசூலித்திருக்க வேண்டியதிருக்க அந்தத்துகையில் சமபாதிக்குத்தான் பாத்திய முடையவளென்றும் அந்தத் துகையை ராமமூர்த்தியின்பெண்சாதி செலுத்தக் கடவளென்றும் லட்சுமீ நரசிம்மா எராமஞ்சிவி டி. மு. கோர்ட்டில் ஷை துகை ரூ. 800-க்கும் அதற்கு 1904-முதல் பிராதுதிவரையில் வட்டிக்காகவும் தாவா செய்தாள். சப்கோர்ட்டில் ஷை-தாவா அப்பீல் ஈரங்கிக்குவந்து அங்கு ராமமூர்த்தி வசூலித்த ரூ. 1000-இல் ஒருபாதியாகிய ரூ. 500 மட்டும் வாதி அடைய லாயக்குண்டென்று தீர்மானித்து வட்டி யாதொன்றும் கொடுக்காமல் ரூ. 500-க்கு மட்டும் வாதிக்கு டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் வாதி தனக்கு ரூ. 1600-இல் பாதியாகிய ரூ. 800-க்கு டிக்கிரீயாக வேண்டுமென்றும் தனக்கு சப்கோர்ட்டில் கிடைத்த ரூ. 500 போக பாக்கி ரூ. 300-க்கும் பிராதுதிவரையில் ரூ. 800-க்கு 1904 முதல் வட்டிக்காகவும் ஹைகோர்ட்டில் 2-வது அப்பில் செய்தாள்.

எதிரிக்காக வாதியின் தாவா லிமிடேஷன் ஆக்ட் 62-வது ஆர்டிகில்படி காலாவதி தோஷமென்று டி. மு. கோர்ட்டில் வாதிக்கப்படாமல் சப்கோர்ட்டில் வாதிக்கப்பட்டது. அதாவது ஒருவன் மற்றொருவனுடைய பிரயோஜனத்திற்காக யாதொரு துகையைப்பெற்று அதை உறியவனிடம் செலுத்தாமல் வைத்துக்கொண்டிருந்தால் அத்துகையை வசூலிக்க ஷை யான் துகை பெற்ற காலமுதல் மூன்று வருஷத்திற்குள் தாவா செய்யவேண்டுமென்றும் இந்தக் கேசில் வாதி 1904-இல் ராமமூர்த்தி பெற்றதுகையை வசூலிக்க 1909-இல் தாவாசெய்தமையால் மேற்கூறிய 62-வது ஆர்டிகில்படி தோஷமாகிறதென்று வாதிக்கப்பட்டது. ஆனால் சப்கோர்ட்டார் இந்த தாவாவுக்குக் காலாவதி 62-வது ஆர்டிகில்படிக்கு ஏற்படாதென்றும் காலாவதி குறிக்கப்படாத வியாஜ்ஜிய மூலங்களுக்கு 120-வது ஆர்டிகில்படி ஆறுவருஷகாலாவதியென்றும் அந்தப்படிப் பார்க்குமிடத்து பிராதுக்கு காலாவதி தோஷமில்லையென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

ஆனால் ஹைகோர்ட்டார் இந்தக்கேசுக்குக் காகாலவதி 62-வது ஆர்டிகில் படிக்கு மூன்று வருஷந்தானென்று அபிப்பிராயப்பட்டதற்கு காரணமாக:— "22 மதராஸ் லாஜர்னல் 485-ல், 120-வது ஆர்டிகிலை வேறு யாதொரு சட்டமும் கிடையாமல் கடைசி பட்சமாய் அனுசரிக்க வேண்டுமென்றும் வாதியின் பிரயோஜனத்திற்காக பிரதிவாதி துகைகளைப் பெற்று அதை வாதி கேட்டு பிரதிவாதி கொடுக்க ஆக்ஷேபித்தால் 62-வது ஆர்டிகில்படி 3-வருஷத்திற்குள் வாதி அதைப்பற்றிப் பரிகாரம் தேடவேண்டுமென்று அபிப்பிராயங் கொடுக்கப்பட்டிருக்கிறதாகவும்; 22 மதராஸ் வாரக்குறிப்பு 467 இலும் 32 மதராஸ் 191 இலும் 10 மதராஸ் 69 இலும் இந்தக் கேசைப் போலொத்த பிராதுகளுக்கு 62-வது ஆர்டிகல்படிக்குக்காலாவதி மூன்று வருஷந்தானென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாயும் சொல்லி"; ஆனால் முதல் பார்வையில் இந்தப் பிராது 62-வது ஆர்டிகல்படிக்கு 1909-இல் செய்யப்பட்டதால் தோஷமாகிறபோதிலும் 1906-ம் வருஷத்தில் பிரதிவாதி வாதிக்கு மோசக்கருத்துடன் அடமானக்கடன் வசூலாகவில்லையென்று பொய்யாகத் தெரிவித்த காரணத்தால் அதை வாஸ்தவமென்று நம்பியிருந்த வாதிக்கு ராமமூர்த்தியிடம் துகை செலுத்தப்பட்ட தகவல் 1908 இல் தான் தெரிய வந்தமையால் லிமிடேஷன் ஆக்ட் 18-வது பிரிவின்படிக்கு மூன்றுவருஷ காலாவதியை மோசம் வெளியான 1908 முதல் கணிக்கவேண்டுமென்றும் தவிர 1906-இல் வாதிக்கும் பிரதிவாதிக்கும் பாகம் ஏற்பட்டதால் அதுவரையில் கூட்டாயிருந்த காரணத்தால் வாதிக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும் சொல்லி 62-வது ஆர்டிகில்படியே வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷமில்லையென்று தீர்மானித்தார்கள்.

ராமமூர்த்தி அடமானதாரனுக்கு ரூ 600யும் தள்ளிக் கொடுத்த விஷயத்தைப் பற்றி வாதி ஆக்ஷேபித்து அந்தத்துகையில் பாதி ரூ 300ம் தனக்கு பிரதிவாதியால் சேரவேண்டுமென்ற அம்சத்தைப் பற்றி சப்கோர்ட்டார் ஏற்றுக் கொள்ளவில்லை. கடனாளியால் இருவருக்கும் சேரவேண்டிய பாக்கியில் ஒருவன் மற்றொருவனுடைய பாத்தியதையைக் கட்டுப்படுத்தும்படி யாதொருபாகத்தைத் தள்ளிக்கொடுக்க லாயக்குள்ளவனென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு வாதிக்கு அந்த ரூ 300ம் கிடைக்க நியாயமில்லை யென்று தீர்ப்பளித்தார்கள். ஆனால் ஹைகோர்ட்டார் மேற்கூறிய சப்கோர்ட் நியாயத்தை ஏற்றுக்கொள்ளாமல் வாதியின் பாத்தியதையை கட்டுப்படுத்தி துகையைத் தள்ளிக்கொடுக்க பிரதிவாதிக்கு அதிகாரமில்லை யென்றும் ஆனால் வாதி அவ்விதம் தள்ளிக்கொடுக்கப்பட்ட துகையின் பாதியை அடமானதாரிட மிருந்து வசூலிக்கலாமென்ற காரணத்தால் வாதிக்கு அந்தத் துகையைப் பற்றினமட்டில் பிரதிவாதியின் மேல் வியாஜ்ஜிய மூலம் கிடையாதென்றும் ஆகையால் வாதி கேட்ட ரூ 300க்கு இந்த தாவாவில் பரிகாரம் கிடையாதென்றும் தீர்மானித்தார்கள்.

ஒருவனுடைய பணத்தை மற்றொருவன் அநீதியாய் வைத்துக்கொண்டிருக்கும்பட்சத்தில் அதைத் திரும்பிக்கொடுக்கும் பொழுது வட்டிக்கும் புணையாகிறானென்று (1904) A. C. 317 இல் பிரிவிகௌன்ஸிலார் தீர்மானம் செய்திருக்கிறார்கள். ஆகையால் வாதி அடமானத் துகைக்குறிய வட்டியில் பாதியை வாதி கேட்பது நியாயமே யென்றும் எதிரியுடைய மோச வார்த்தைகளால் வாதி 1906இல் தனக்குப் பிரத்தியேகமான பாத்தியம் ஏற்பட்ட உடனே தனக்காக ராமமூர்த்தி வசூலித்த அசல் துகையின் பாதிக்குறிய வட்டியை வசூலிக்க இடமில்லாமல் போய் விட்டபடியால் அந்த மோசவார்த்தையால் தாமதமான காலமாகிய 1906 முதல் மோசம் வெளியான 1908 வரையில் அசல் பாதி ரூ. 500க்கு வட்டி வாதிக்கு எதிரி கொடுக்கக் கடவனென்றும் அந்தப் படிக்கு அரை வட்டிக்கு டிக்கிரீ யளிக்கப்பட்டு சப்கோர்ட் டிக்கிரீ அம்மட்டில் திருத்தப்படும்படி ஹைகோர்ட்டார் தீர்மானம் செய்தார்கள்.

வட்டி விஷயமாய் எதிரிக்காக 20மதராஸ் 481ம், 27கல்கத்தா 814ம் எடுத்துக் காண்பிக்கப்பட்டது. அதில் மோசம் என்ற அம்சம் கிடையாது, ஆகையால் அது பிரயோஜனமில்லையென்றும், 31பம்பாய் 354இல் பிரதி வாதியிடம் டிபாஸிட் கட்டி யிருந்த துகைக்கு வட்டியைப் பற்றி யாதொரு ஒப்பந்த மில்லாதிருந்தும் வட்டி வசூலிக்கப் படுமென்று நோட்டீசாவது கொடுக்கப் படாமலிருந்தும் வாதிக்கு வட்டி யளிக்கப்பட்டதாகவும் மிதாக்ஷர தர்மசாஸ்திரப் படிக்குக் கடன் வாங்கினால் அதை வட்டியுடன் சேர்த்துக் கொடுக்கவேண்டுமென்று ஷை பம்பாய்த் தீர்ப்பில் சொல்லப்பட்டிருப்பதாயும்; ஷை பம்பாய் கேசுக்கு விரோதமாய் 31 மதராஸ் 250இல் ஹிந்துலா வட்டியைப் பற்றிய வியவகாரங்களுக்குப் பொருந்தாதென்று தீர்மானிக்கப் பட்டும் மேற்கூறிய எதிரிகளுக்காக எடுத்துப் பேசப்பட்ட தீர்மானங்கள் இந்த தாவாவின் அம்சங்களுக் கிசைந்தவைகளல்ல வென்றும் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப் பட்டார்கள்.

———:0:———

## ப்ரிவி கௌன்ஸில் கேஸ்

**மத்தியமாகாணம்.**

11 ஜூலை 1913.

(கெடார்நாத் *Vs.* ஜெயநாராயன்ராமராஜ் பால்)

மத்திய மாகாணத்தில் வார்டாஜில்லாவில் ராமநாத், ராம்பிலாஸ் என்ற மிதாக்ஷர் தர்மசாஸ்திரத்தை அனுசரித்துவருகிற ஹிந்துகுடும்பத்தைச்சேர்ந்த இரண்டு அவிபக்த சகோதரர்களாயிருந்து இருவருக்கும் புத்திரசந்தான பாக்கியமில்லாதபடியால் 1877-ம் வருஷத்தில் ராமனாத் என்றவர் கெடார்நாத் என்ற இந்த வழக்கில் 2-ம் பிரதிவாதியாகிய ஒருவனை ஸ்வீகாரம் எடுத்துக்

கொண்டார். 1881-ம் வருஷத்தில் ராம்பிலாஸ் என்ற சகோதரன் சந்ததியன்னியில் காலஞ்சென்றுவிடவே அவனுடைய பாரியாள், ஜயதேவி அம்மாளுடைய பெயரை ரிவினியூ ரிஜிஸ்தர்களில் ராம்பிலாஸ் என்பவருடைய ஸ்தானத்தில் பதியவைத்து ராமனுத் என்பர் 1883-இல் காலஞ்சென்றுவிட்டார். ஜயதேவி அம்மாள் தன்புருஷனுக்குப் புத்திரபாவமில்லாதபடியால் ஜெயநாராயணன் என்ற 1-ம் பிரதிவாதியை 1886, 1887-இல் புத்திரனாக ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டு தனக்குப்பதிலாக ௸ ஜெயநாராயணனுடைய பெயரை ரிவினியூ ரிஜிஸ்டரில் பதியவைத்தாள். 1897 வரையில் கெடார்நாத் என்ற 2-ம் பிரதிவாதியும் ஜெயநாராயணன் என்ற 1-ம் பிரதிவாதியும் பூர்வீக சொத்துக்களை கூட்டாய் அனுபவித்துவந்து 1898-இல் பாகப்பிரிவினையாக கெடார்நாத் என்றவர் குடும்பசொத்தில் ஒருபாகத்தை ஜெயநாராயணனுக்குப் பிரத்தியேகமாய் பாகித்துக்கொடுத்து அதுமுதல் ௸ ஜெயநாராயணன் ௸ பாகசொத்தில் பாத்தியமடைந்து அனுவித்து வந்தான்.

கெடார்நாத் என்றவருடைய நான்கு புத்திரர்களும் ஜெயநாராயணனுடைய ஸ்வீகாரத்தை செல்லாதென்று அநேக காரணங்களைச் சொல்லி ஆக்ஷேபித்து ௸ யாருக்கு கெடார்நாத் என்ற தங்கள் தகப்பன் பிறித்துக்கொடுத்த சொத்தின் பாகத்தைத் திரும்பியடைய வேண்டுமென்று வார்டாஜில்லா கோர்ட்டில் அசல் தாவாசெய்தார்கள். ௸ வழக்கில் ஜெயநாராயணனுடைய எதிர்வாதமாக:—(1) வாதிகளின் தாவா லிமிடேஷன் ஆக்ட் 126-வது ஆர்டிகில்படி காலாவதி தோஷமுடையதென்றும் (2) ஜெயநாராயணனைக் குடும்பத்தில் சேர்த்துக்கொள்வதில் கெடார்நாத் என்ற, வாதிகளின் தகப்பன் சம்மதப்பட்டிருந்தபடியால் அதற்கு வாதிகள் கட்டுப்பட்டவர்களாகிறார்களென்றும் ஆக்ஷேபிக்கப்பட்டது.

ஜில்லாகோர்ட்டில் இஷு ஈரங்கிகாலத்தில் வாதிகளின் தகப்பனுடைய அஸ்வாரஸ்யத்தாலும் (மெத்தனத்தாலும்) சம்மதத்தாலும் 1898 வரையில் ஜெயநாராயணன் குடும்ப சொத்துக்களைக்கூட்டாய் அனுபவித்து குடும்பத்தவனைப் போல் கூடி வாழ்ந்ததாகவும் 1898-இல் பாகப்பிரிவினைப்படி தாவாசொத்துக்கள் யதார்த்தமாய் ௸ யானுக்குச் சுவாதீனம் செய்து கொடுக்கப்பட்டு அதுமுதல் பிரத்தியேகமாய் அனுபவித்து வருகிறது வாஸ்தவமென்று வாதி வக்கீல் ஒற்றுக்கொண்டார். அதன்மேல் பின்வருமாறு மூன்று பிரதம இஷுகள் ஏற்பட்டன:—

(1) வாதிகள் பாகவியாஜ்ஜியம் தொடுக்காமல் இவ்விதமான சுவாதீனப் பிராதுசெய்ய லாயக்குண்டா?

(2) 1-ம்பிரதிவாதியை வாதிகளின் தகப்பன் குடும்பத்தில்சேர்த்துக்கொண்டு அவனுக்கு சொத்தில் ஒருபாகத்தைக் கொடுத்திருக்க தகப்பனுடைய சம்மதமான அந்த நடவடிக்கைக்கு வாதிகள் கட்டுப்பட்டவர்களா?

(3) 1-ம் பிரதிவாதியை ஸ்வீகாரம் எடுத்த 1887-ம் வருஷமுதல் கூட்டாகவும் 1898-முதல் பிரத்தியேகமாகவும் 1-ம் பிரதிவாதி தாவாசொத்துக்களை அனுபவித்து வந்தமையால் ௸ சொத்துக்களுக்கு அனுபோக பாத்தியதையினால் சர்வ ஸ்வதந்தர வாளியாகிறானா? அக்காரணத்தால் வாதிகளின் தகப்பனுக்கே வியாஜ்ஜியமெடுக்க காலாவதி தோஷமாகுமானால் வாதிகளுக்கும் காலாவதி தோஷம் பாதிக்குமா?

ஆகிய ௸ மூன்று இஷுக்களில் 1-2-இஷுக்களை ஜில்லாகோர்ட்டார் "ஆம்" என்று அபிப்பிராயப்பட்டு மூன்றுவது இஷுவைப்பற்றி 1-ம் பிரதிவாதி 12-வருஷங்களுக்குமேல் நிராக்ஷேபனையான அனுபோகமடைந்ததால் தாவா சொத்தில் சர்வஸ்வதந்தர பாத்தியமும் அவனுக்கு கிடைத்துவிட்டதாகவும் ஆகையால் வாதிக்குக் காலாவதி தோஷமுண்டென்றும் தீர்மானித்தார்கள். வாதி ஜில்லாகோர்ட் தீர்ப்பின்பேரில் அப்பீல்செய்ய அங்கு, 1-ம வாதி மைனர் தசையிலிருக்கும்போது அவனுக்கு வியாஜ்ஜியமூலம் ஏற்பட்டிருந்ததால் மைனர் நீங்கின மூன்று வருஷங்களுக்குள் தாவாசெய்யப்பட்ட காரணத்தால் லிமிடேஷன் ஆக்ட் 7-வது பிரிவுப்படி காலாவதி தோஷ மேற்படாதென்றும் ஆனால் 1-ம் பிரதிவாதிக்கு 12-வருஷ அனுபோக பாத்தியம் கிடைத்தபிறகு 2-3-வாதிகள் ஜனித்தமையால் அவர்



களுக்கு காலாவதி தோஷமுண்டென்றும் தீர்மானிக்கப்பட்டு 1-ம்வாதியின் தகப்பன் 1-ம்பிரதிவாதியைக் குடும்பத்தில்சேர்த்து ௸ யானுக்கு பாகமளித்த நடத்தையானது குடும்பத் தலைவனுகச் செய்தபாவனையாகுமென்றும் அதற்கு 1-ம் வாதி கட்டுப்பட்டவனுகிறானென்றும் ஆகையால் 1-ம் வாதிக்கும் யாதொரு பரிகாரமும் ஏற்படாதென்றும் மொத்தத்தில் வாதிகளின் தாவாவும் அப்பீலும் தள்ளுபடியாச்சுது.

அதன் மேல் வாதிகள் பிரிவிகௌன்ஸிலில் அப்பீல் செய்தார்கள். கீழ்கோர்ட் தீர்ப்புகளை ரத்துசெய்து கேசை மறுவிஜாரணை செய்து பைசல் கொடுக்கும்படி பிரிவிகௌன்ஸிலார் கொடுத்த தீர்மானத்தின் சுருக்கமாவது:—

ஜயநாராயணனுடைய ஸ்வீகாரத்தையே முற்றிலும் சட்டவிரோதமென்று வாதியின் தாவாவில் ஆக்ஷேபிக்கப்படுகிறது. அதாவது 1-ம் பிரதிவாதி குடும்பத்தைச் சேராத அந்நியனென்று சொல்லப்படுகிறது; ஒருவனுடைய சொத்து பாத்தியதையைக்கு இடையூரான ஸ்வீகாரத்தை ஆக்ஷேபித்து வழக்காடலாம். தவிர (1903)ம் வருஷத்திய 30 இந்தியன் அப்பீல் 139 இன் 150ம் பக்கத்தில் தீர்மானித்திருக்கிற பிரிவிகௌன்ஸில் கேசின் அபிப்பிராயப்படி ஒரு ஹிந்துத்தகப்பன், குடும்பசொத்தில் பாத்தியங்கொண்டாடி வழக்காடுகிறவனோடு நல்லெண்ணத்துடன் ௸ வழக்கை ராஜிசெய்யும்பொருட்டு ௸ யானுக்கு குடும்ப சொத்தில் யாதொரு பாகத்தைக்கொடுத்துவிட்டாலொழிய மற்றப்படி யாதொரு பிரதிபிரயோஜனமில்லாமல் ஒரு அந்நியனுக்கு ஹிந்துத்தகப்பன் குடும்ப சொத்தில் யாதொரு பாகத்தைப் பிரிவினை செய்துகொடுத்தால் அந்தப்பராதீனம் அவனுடைய மைனர் புத்திரர்களைக் கட்டுப்படுத்தாது. அவர்கள் ௸ நடவடிக்கையை ஆக்ஷேபித்து வழக்காடலாம். ஆனால் இந்தக்கேசில் ஜெயநாராயணனுக்கனுகூலமாக அப்படிப்பட்டயாதொரு சம்மதமும் ஏற்படவில்லை. (அதாவது 1-ம் பிரதிவாதியாதொரு பாத்தியத்தைக் கொண்டாடி வழக்கெடுத்த பின் மேற்கண்டவிதமாய் அவனுக்கு சொத்தில் பாகம் அளிக்கப்பட்டதாகத்துலங்கவில்லை.) ஆகையால் ஸ்வீகாரம் முற்றிலும்பிசகென்று ஏற்பட்டால் வாதியின் தாவா ஜெயிக்கத்தக்கதாகும். தவிர எதிக்காக, வாதி பாகவியாஜ்ஜியம் கொண்டுவந்தாலொழிய வேறு யாதொரு விதமாயும் பரிகாரம் தேடக்கூடாதென்று, வாதிக்கப்பட்டது. வாதிகளுக்கு குடும்பசொத்தின் ஒரு பாகமாகிய தாவாசொத்தானது 1-ம் பிரதிவாதியிடமிருக்க அதைபாகம் பிறித்துக்கொடுக்கும்படி கேட்கும் பாத்தியதையைத் தவிற அதில் தங்களுக்கும் பாத்தியமுண்டென்றும் தாங்கள் அதை 1-ம் பிரதிவாதியுடன்கூட்டாய் அனுபவிக்கப்பிரியப்பட்டிருப்பதாய்ச் சொல்வதால் பாகவியாஜ்ஜியமில்லாமலே இப்பொழுது வாதிகள் செய்த பிராதின் அமைப்பு தப்பானதல்ல. என்றாலும் கெடார்நாத் என்பவரால் 1-ம் பிரதிவாதிக்கு சொத்தில் பாத்தியம் ஏற்பட்டதால் ௸ கெடார்நாத்துக்குறிய பாத்தியமாவது 1ம் பிரதிவாதிக்குக் கிடைக்கவேண்டியபடியால் 1-ம் பிரதிவாதி கெடார்நாத்தின் ஸ்தானத்திலிருந்து பாககாலத்தில் கெடார்நாத்துக்குக் கிடைக்கக்கூடிய பாகத்தையாவது அடையப்பாத்திரனுவான். அவ்வித நிலமை 1-ம் பிரதிவாதிக்கு ஸ்தாபிக்கப்படும் பட்சத்தில் கோர்ட்டார் இந்த தாவாவில் 1-ம் பிரதிவாதியின் கோரிக்கையின் மேல் குடும்பசொத்தில் வாதிகளுக்கு ஒரு பாகமும் கெடார்நாத்துக்கு மற்றொரு பாகமுமாகப் பாகடிக்கிரீயளிக்கலாம். 1-ம் பிரதிவாதி இந்த தாவாவிலேயே மேற்கூறிய பரிகாரத்தைத் தேட நியாயமுண்டு. ஆனால் அதற்குறிய நியாயத்தைப் பற்றியும் சட்டத்தைப் பற்றியும் அபிப்பிராயங் கொடுக்காமல் இந்தக்கேசில் ரிகார்டுகளைப் பார்க்குமிடத்து இருதரத்தாருடைய பாத்தியதையைப் பற்றி மேற்கூறிய அபிப்பிராயங்களை யனுசரித்துப் பார்த்தால் யாதொரு முடிவான பைசல் செய்யக்கூடவில்லையென்று சொல்லி கீழ்கோர்ட் டிக்கிரிகளை ரத்துசெய்து, கேசை மறு விஜாரணை செய்து பைசல் தீர்மானம் கொடுக்கும்படி கீழ்கோர்ட்டுக்கு உத்தரவளித்ததில் வாதிகளுக்கு பிரிவிகௌன்ஸிலார் ஏற்படுத்தின நிபந்தனையாவது:— 1-ம்பிரதிவாதி மருவிஜாரணையில் வேறு எதிர்வாதங்களில் ஜயமடையாதிருந்து வாதிகளுக்கு பூர்ணபரிகாரம் அல்லது குறைந்தபரிகா

ரம் கொடுக்கப்பட்டால் குடும்ப சொத்தில் 2-ம் பிரதிவாதியாகிய கெடார்நாத் என்பவருடைய பாகததைப் பிரித்துக் கொடுக்கவாதிகள் சம்மதப்படவேண்டுமென்றும் அதனால் 1-ம் பிரதிவாதி ஷெ கெடார்நாத்துக்குக் கிடைக்கும் பாகத்தில் தனக்குறிய பாத்தியதையை சட்டபடிப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளலாமென்று பிரிவிகௌன்ஸிலார் கட்டளையிட்டார்கள்.

——:0:——

## பிரிவி கௌன்ஸில் கேஸ்

**அலகபாத்:— 18–ஜுலை 1913.**

நெட் ராமசிங் & மூஸ்ஸம்மத் தர்ஸ கன்வார்

அலிகார் என்னும் நகரத்தில் நாராயணஸிங் என்ற ஒருவருக்கு இரண்டு தாரங்களிருந்து ஒரு தாரத்தால் சிட்டுஸிங் என்ற புத்திரனையும், மற்றதாரத்தால் தம்பார்ஸிங் வகையரா நான்குபுத்திரர்களையும் அடைந்து காலஞ்சென்ற காலத்தில் சிட்டுசிங் என்ற ஒருபுத்திரன்மட்டும் மேஜராகியிருந்து மற்றநான்கு புத்திரர்களும் மைனர்களாயிருந்தார்கள். நால்வரில் தம்பார்ஸிங் மேஜரான பிறகு ஜானகியென்ற மனைவியையும் ஷர்ஸிங் என்ற புத்திரனையும் விட்டுமறித்தான். ஷர்சிங் என்ற புத்திரனும் இறநதுபோகவே ஜானகி என்றவள் தன் கணவனுடைய பாகத்திற் குறிய குடும்பசொத்துக்களைக் கைப்பற்றி அனுபவித்து வந்து அவளுடைய மரணத்திற்குப் பின் அவள் வசமிருந்த சொத்துக்கள் மற்ற சகோதரர்களொவ்வொருவருக்கும் பாத்தியமாகிவிட்டது. இப்படியிருக்க சித்துசிங் என்றவர் சநததியில்லாமல் காலஞ் சென்றமையால் அவனுடைய பெண்சாதியும் இந்ததாவாவில் பிரதிவாதியுமாகிய தாஸா கன்வார் என்றவள் தன்கணவனுக்குறிய பாக சொத்துக்களைப் பற்றியும் தம்பார்ஸிங் என்றவனுக்குச் சொந்தமாயிருந்து ஜானகி இறந்தபின் நால்வருக்கும் பொதுவாய்ச் சென்ற சொத்தில் சித்துசிங் வீதத்திற்குரிய பாகத்தைப் பற்றியும் சேர்த்து தாஸாகன்வார் அம்மாள் ரெவினியூ ரிஜிஸ்டரில் தன்னுடையபெயரை சொந்தக்காரியாகப்பதியச்செய்துகொண்டாள். நெட்ராமஸிங் வகையரா மற்ற சகோதரர்கள் ஷெ தர்ஸா கன்வார் அம்மாள் வசமிருந்த சொத்துக்களை சுவாதீனமடையவேண்டுமென்றும் ஷெ குடும்பமானது அவிபக்த குடும்பமென்றும் ஆகையால் தர்ஸா கன்வார் அம்மாளுக்கு ஜீவனும்ச பாத்தியத்தைத் தவிற வேறுயாதொரு ஹக்கும் குடும்பத்தில் கிடையாதென்றும் சொல்லி அலிகார் சப்கோர்ட்டில் அசல் தாவாசெய்தார்கள். குடும்ப சொத்துக்களில் சில கிராமங்கள் சித்துசிங்பேரில் தனியாய் நின்றது. மற்றும் சில கிராமங்கள் மற்ற சகோதரர்களின் பேரால் நின்றன. ஸடயோஸன் என்ற ஒரு கிராமம் 1898-இல் இருதரப்பாருக்குள் பாகப்பிரிவினையானதாகத துலங்கிற்று. (கீவ்வாட்) லெட்ஜரிலும் ஒவ்வொரு சகோதரனுடைய பாகமும் பிரத்தியேகமாய்க் குறிக்கப்பட்டிருந்ததும் தவிற வருமபடிகளும் கால்நடைகளும் தனித்தனியாய் அனுபவித்துவரப்பட்டன. ரெவினியூரிஜிஸ்டர்களில் அவரவர்களுடைய விகிதத்திற்குத் தக்கபடி அவர்களின் பெயர் பதியப்பட்டிருந்தன. ஒவ்வொரு சகோதரரும் தங்கள்தங்கள் பாகத்தைப் பற்றினமட்டில் தனித்தனியான அடமான தஸ்தவேஜுகள் எழுதிக்கொடுத்துக் கடன்வாங்கியுமிருந்தார்கள்.

சப்கோர்ட்டார் இருதரப்பாரும் ஒப்புக்கொண்டபடி பிரிவினையான ஒரு கிராமத்தையும் வாகூல் வகைக்காக ஏற்பட்டிருக்கிற ஒரு கிராமத்தையும தவிற மற்ற எல்லா குடும்ப சொத்துக்களைப்பற்றின மட்டில் குடும்பம் கூட்டுக்குடும்ப மென்றும் ஆகையால் தர்சா கன்வார் அம்மாளுக்கு வாதிகள் சொல்லியபடி ஜீவனும்ச பாத்தியந்தானென்று அபிப்பிராயப்பட்டு வாதிக்கு டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் தர்ஸா கன்வார் அம்மாள் அலகபாத் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் அங்கு சப்கோர்ட் தீர்ப்புரத்தாகி பிரிந்து போனதாகச் சொல்லப்பட்ட கிராமங்களைத்தவிற மற்ற கிராமங்களும் பிரிந்து அனுபவிக்கப்பட்டதாகவும் குடும்பம் கூட்டுக்குடும்ப மல்லவென்றும் தீர்மானித்து வாதிகளின் தாவாவைத் தள்ளிவிட்டார்கள். அதன்மேல் பிரிவிகௌன்ஸில் அப்பீல் செய்யப்பட்டு அங்கு ஹைகோர்ட் தீர்ப்பே காயமாச்சுது. அதற்குக்காரணமாக பிரிவிகௌன்ஸிலார் சொன்னதாவது:—

"ரெவினியூரிஜிஸ்டர்களில் ஒவ்வொரு சகோ



தரருடைய பெயரும் தனித்தனியாய்ப் பதிவானகாரணத்தால் ஹைகோர்ட்டார் குடும்பம் பிரிவினையானதென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்களென்றும், மதாசாரப்படி கூட்டுக்குடும்பமென்று ஊகிக்கவேண்டியதான இந்து குடும்பத்தாரைப் பிரிந்தவர்களென்று நிதானிக்க ரெவினியூ ரிஜிஸ்டர் பதிவுமட்டும்போதுமானதல்லவென்று வாதிகளுக்காக எடுத்துப்பேசப்பட்டது. ஆனால் ஹைகோர்ட்டார் ரிஜிஸ்டர் பதிவைமட்டும் நம்பி தீர்மான்முடிவுக்கு வந்ததாகத் துலங்கவில்லை. பிரிந்துபோன விஷயத்திற்கு ஆதாரமான அம்சங்களையும் ஒவ்வொரு சகோதரனுடைய நடத்தையையும் கவனித்து ஹைகோர்ட்டார் அபிப்பிராயங்கொடுத்திருப்பதாய்த் தெரிகிறது. எனெனில் ஹைகோர்ட் தீர்ப்பில், "நிமெகொவான் என்ற குடும்பகிராமத்தில் வாதிகள் மூவருக்கும் ரெவினியூ ரிஜிஸ்தரில் தனித்தனியாய் பாகம்குறிக்கப்பட்டு பதிவாயிருப்பதுமல்லாமல் மூவரும் 1900-ம் வருஷத்தில் அந்தந்த பாகங்களைத் தாங்கள் தனியாய் அடைந்து அனுபவிப்பதாயும் கண்டு தனித்தனியான அடமான தஸ்தவேஜிகளும் எழுதிக்கொடுத்துக்கடன்வாங்கியிருப்பதால் அவரவர்கள் தங்கள் அனுபோகத்திலிருக்கிற பாகத்திற்குத் தாங்களே சொந்தக்காரர்களென்றே பாவித்து நடவடிக்கைகளை நடத்திவந்திருக்கிறார்களென்று" சொல்லியிருக்கிறார்கள். கூட்டுக்குடும்பமாயிருந்தால், மேற்கூறியபடி வெவ்வேறு அடமான தஸ்தவேஜிகள் பிறந்ததற்கு சமாதானமாக யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஷெ அடமானங்களின் சந்தர்ப்பங்கள் வாதிகளுக்குப் பரிஷ்காரமாய்த்தெரிந்தும் பிரத்தியேகமான தஸ்தவேஜிகளும் கூட்டுக்குடும்பமும் இசைவில்லாதிருக்க அதற்கு வாதிகள் சமாதானம் சொல்லவேண்டியதவசியமாகும். தவிற ஹைகோர்ட்டார் எடுத்துக்காட்டிய மேற்கூறிய ஒவ்வொரு விஷயத்தையும் கவனித்தால் குடும்பம் பிரிந்து போனதாகவே பாவிக்கப்பட வேண்டுமென்று, பிரிவிகௌன்ஸிலார் வாதியின் அப்பீலைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

——:0:——

## ஹைகோர்ட் தீர்மானங்கள்.

(மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்வீல்ட்)

**Crl. R. Case-381 of 1913 & Cr. R. P. 307 of 1913—19 செப்டெம்பர் 1913.**

—:0:—

கங்குரெட்டி Vs. ஸமரபதி முதலி;

மதராஸ் டவுன் போலீஸ் கோர்ட்டில் கங்குரெட்டி என்றவாதி எதிரியின்பேரில் இ. பி. கோ. 497 & 498-வது பிரிவுகளின்படி (வியபசாரம், அல்லது கெட்ட எண்ணத்துடன் ஒருவன் மனைவியை எவியழைத்தல்) என்ற குற்றம்சாட்டிக் கொடுத்த பிராதை மாஜிஸ்டிரேட்டார் கிரி-பி-கோ. 203-வது பிரிவுப்படி சம்மனுக்கு உத்தரவு கொடுக்காமலே தள்ளுபடிசெய்து விட்டமையால் வாதி ஹைகோர்ட்டாரை 435, 439-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசித்து ஷெ உத்தரவை ரதநுசெய்து பிராதை விஜாரணை நடத்தும்படி உத்தரவளிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார்.

எதிரிக்காக ஹைகோர்ட்டில் 27 கல்கத்தா 126-லும் 33 கல்கத்தா 1282-லும் செய்யப்பட்ட தீர்மானத்தை எடுத்துக்காட்டி 203-வது பிரிவின்படி டிஸ்சார்ஜ் ஆன கேசில் ஹைகோர்ட்டாருக்கு கிரிமினல் ப்ரொஸிஜர் கோட்டின்படி ரிவிஷன்மனு தாகல்செய்ய சட்டமில்லையென்று பிரதம ஆக்ஷேபனையாக எடுத்துப் பேசப்பட்டது. ஆனால் ஹைகோர்ட்டார் பிராதில் கண்ட விஷயங்களைப் பார்வையிட்டு அதில் கண்ட சங்கதிகளை விஜாரித்துப் பைசல் செய்ய வேண்டிய தவசியமாகு மென்று அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டாருக்கு சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படி பிரவேசித்து கீழ்கோர்ட் உத்தரவை ரத்து செய்ய அதிகார மிருக்கிறதாகச் சொல்லி வாதி கொடுத்த ரிவிஷன் விண்ணப்பத்தில் சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படியும் மனுச்செய்து கொண்டதாக எழுதி மனுவைத் திருத்திக் கொடுக்கும்படி உத்தரவளித்து அதன்மேல் பின் வருமாறு தீர்மானம் செய்தார்கள்:—

"மாஜிஸ்டிரேட்டார் பிராதில் கண்டசங்கதிகளைப் பொய்யென்று சொல்லிப்பிராதைத்தள்ளினதாகத் துலங்கவில்லை. ஆனால் பிராது, குற்

றம் நடந்ததாகச் சொல்லப்பட்ட காலத்திற்கு அதிகநாள் பொருந்து அதாவது மிக்கதாமதப் பட்டு செய்யப்பட்டதாகவும் தவிர வாதி (துஷ்டனிக்கிரஹணம் செய்யவேண்டுமென்ற கருத்தில்லாமல்) அயுக்தமான நோக்கத்துடனும் பிற்காலத்திய ஒரு நன்மைலாபத்தைக் கருதியும இந்தப் பிராதைக்கொண்டுவந்ததாக அபிப்பிராயப்பட்டு அக்காரணங்களைக்காட்டி பிராதைத்தள்ளுபடி செய்திருக்கிறார். ஒரு பிராதை மேல்நடத்தி விஜாரணைசெய்வதற்குப் போதுமான ஆதாரமில்லாவிடில் மட்டும் 203-வது பிரிவின்படி பிராதைததள்ளுபடி செய்யலாம். போதுமான முகாந்தரம் இருக்கிறதாஎன்று அறியும் பொருட்டு கோர்ட்டாரவர்கள் நியாய பரிபாலனம்செய்யும் ஆலோசனைகளுக்குறிய சொந்த யூகத்தைச் செலுத்திப்பார்க்கவேண்டும். பிராதை மேல்நடத்துவதால் ஏற்படக்கூடிய பலனானது பிரியப் படத்தக்கதாயிராதென்றாவது வாதியினுடைய நோக்கமும் நடத்தையும் அபகீர்த்தியை உண்டாக்கத்தக்கவைகளென்றாவது மாஜிஸ்டிரேட்டார் யோஜித்தால் அந்த யோஜனை 203-வது பிரிவின் படியூகித்தறியவேண்டிய அம்சமாகாது. 13-பம்பாய் 590-ஐப்பார்க்கவும். ஒரு பிராதில்கிடைக்கக் கூடியாருஜூ அம்சங்களை கவனித்தால் பொய்யென்று ஏற்படுமென்றாவது அல்லது நிலைநிற்காதென்றாவது புலப்பட்டாலொழிய அந்தப்பிராதை டிஸ்மிஸ் செய்தால் அந்த உத்தரவு, ஹைகோர்ட்டார் சார்டர்ஆக்ட் 15-வது பிரிவின்படி பிரவேசித்து பைசல்செய்யத்தக்க ஒரு ஒழுங்கீனமான உத்தரவென்று ஏற்படுகிறது. ஆகையால் மேற்கூறியபடி சார்டர் ஆக்ட் 15-வது பிரிவுப்படி பிரவேசிக்க அதிகாரமிருப்பதால், கிரிமினல் ப்ரொஸீஜர் கோட்டின்படி ரிவிஷனில் பிரவேசித்து 203-வது பிரிவின்படி செய்த உத்தரவைப்பற்றி மனுவை ஹைகோர்ட்டார் ஏற்றுக் கொள்ளலாமா என்று தீர்மானிக்கத் தேவையில்லை. ஆகவே மாஜிஸ்டிரேட்டாரவர்களுடைய உத்தரவு ரத்தாகி சீவ் பிரெஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்களுக்கு ஷை பிராதைத்திரும்பி பயிலுக்கெடுத்து தாங்களேயாவது அல்லது தங்களுக்குக் கீழுள்ள மாஜிஸ்டிரேட்டாராவது விஜாரணைசெய்து பைசல்கொடுக்கவேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது.

———:O:———

(சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் டையாப்ஜி)

**கோயமுத்தூர்.**

**A. S. No. 15 of 1912—1-எப்பிரல் 1913.**

பாச்சா ஸேட் *Vs.* அப்துல் கன்னிஸேட்

———:O:———

கோயமுத்தூர் ஜில்லா கோர்ட்டில் எதிரி செய்த அசல் தாவாவில் தீர்மானிக்க வேண்டிய விஷயத்தைப்பற்றி கோர்ட்டார் மூன்று மத்தியஸ்தர்களை ஏற்படுத்தி ஆர்பிட்டிரேஷன் ஆக்ட் படி அவர்களை விஜாரணைசெய்து அவார்ட்கொடுக்கவேண்டுமென்று உத்தரவளித்தமேல் ஷை மத்தியஸ்தர்கள் 1910 ஜூன் 29வ யில் அவார்ட் எழுதி யனுப்பினார்கள். அதில் மூவரில் ஒருவர் சில அம்சங்களில் மற்றவர்களோடு ஒற்றபிப்பிராயப் படாததால் அவார்டில் கையொப்பம் செய்யவில்லை. பிரதிவாதி சட்டப்படி அவார்ட் கொடுத்த தேதியில் முதல் 10 தினங்களுக்குள் ஷை அவார்ட்டை மாற்ற வேண்டுமானால் மனுசெய்து கொள்ளவேண்டிய திருக்க 10 தினங்கள் கடந்து சிலநாட்களுக்குப் பிறகு அதாவது 1910 ஜூலை 18-இல் ஷை அவார்ட்டை ரத்துசெய்து விட வேண்டுமென்று மனுக்கொடுத்தார். கோர்ட்டார் ஷை மனுவைய தள்ளுபடி செய்து அவார்டை ரத்துசெயய மறுத்துவிட்டார்கள். ஆகவே ஸி. பி. ஸி. 2-வது ஷெடியூல் 16-வது பாராவில் கண்ட ஒழுங்குப்படி அவார்டை அனுசரித்து தீர்ப்பளிக்கப்பட்டு அதற்கிசைந்தபடி டிக்கிரீயும்பிறந்தது. அதன்மேல் எதிரி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார். வாதிக்காக அவார்ட்டின் படி பிறந்த டிக்கிரீயின் மேல் அப்பீல் கிடையாதென்றும் அவார்ட்டில் கொடுக்கப்பட்ட பரிகாரங்களைவிட அதிகமானபடி டிக்கிரீயளிக்கப்பட்டாலாவது அல்லது அவார்ட்டுக்குத் தக்கபடி டிக்கிரீயளிக்கப்படாவிட்டாலாவது மட்டும் அப்பீல் உண்டென்றும் ஆகையால இந்தக்கேசில் பிறந்த டிக்கிரீயின்மேல் அப்பீலுக்கிடமில்லை யென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது. ஹைகோர்ட்டார்



மேற்கூறிய எதிர்வாதத்தை ஒப்புக்கொண்டு அப்பீலைத் தள்ளுபடிசெய்த தீர்ப்பின் சுருக்கமாவது:—

21 மதராஸ் லாஜர்னல் கேஸ் 263-இல் ரிபோர்ட் செய்யப்பட்டிருக்கிற புல் பெஞ்சு கேசில் பழய ஸிவில் ப்ரொஸீஜர் கோட்படி அவார்ட்டின்பேரில் பிறந்த டிக்கிரீயின்மேல் அப்பீலே கிடையாதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அந்தப்படி எதிரியின் ஆக்ஷேபனை சரியானதாகும். பழயகோட்டில் 521-வது பிரிவில் குறிக்கப்பட் டிருக்கிற சட்டமுறையில் சில சந்தேகங்களேற்பட்டமையால் அந்த சந்தேகங்களை நிவர்த்திக்கும் பொருட்டு புதுகோட் 2-வது ஷெடியூல் 15-வது பாராவில், கோர்ட்டார் குறித்தகாலத்திற்குப்பிந்தி மத்தியஸ்தர்கள் அவார்ட்டை தாகல் செய்தால் அதை ரத்துசெய்து விடலாமென்பதை பல காரணங்களில் ஒன்றாகச் சொல்லப்பட் டிருக்கிறது. தவிற கடைசியாக, மற்றப்படி சட்டப்பிசகான அவார்டையும் ரத்து செய்து விடலாமென்றும் சொல்லி யிருக்கிறது. ஆகையால் பிரதிவாதி சொல்லுகிறபடி மூன்று மத்தியஸ்தர்களில் ஒருவர் கையொப்பம் செய்யாமலும் ஒறபிப்பிராயம் கொடுக்காமலு மிருந்ததால் அவார்டை ரத்துசெய்யும்படி குடுத்தவிண்ணப்ப ஈரங்கிகாலத்தில் ஷை மத்தியஸ்தரை சாட்சியாக விஜாரித்திருக்கவேண்டிய சவுகரியத்தை கோர்ட்டார் பிரதிவாதிக்குக் கொடுக்காத பிசகைப் பற்றி வாதம் செய்ததில் மேற்கூறிய குறையைப் பற்றி பிரதிவாதி அவார்ட்பிறந்த 10 தினங்களுக்குள் விண்ணப்பம் செய்திருந்தால் அவார்ட் ரத்தாகி யிருக்கலாம். ஆனால் விண்ணப்பம் 10-தினங்களுக்குப்பிறகு கொடுக்கப்பட்டது. அது தள்ளுபடியாச்சுது. அதன் பிறகு தீர்ப்பளிக்கப் பட்டிருக்கிறது. தவிற தீர்ப்பானது அவார்ட் தேதிக்கு 10-தினங்களுக்குப் பிந்தியேதான் சொல்லப்பட்டிருக்கிறது. அவார்டை ரத்துசெய்யும்படி விண்ணப்பம் கொடுக்கப்பட்டு அந்த விண்ணப்பம் தள்ளுபடியான பிறகு அவார்டின் படி தீர்ப்பளிக்கப்பட்டால் அந்த தீர்ப்பு 10 தினங்களுக்குள் பிறந்தாலும் பாதகமில்லை. ரத்து செய்ய விண்ணப்பம் கொடுக்கப்படாதபட்சத்தில் மட்டும் 10 தினங்கள் வரையில் காத்திருந்து அதன்பிறகு கோர்ட்டார் அவார்ட்படி தீர்ப்பளிக்கப்படவேண்டும். அவார்ட் தீர்மானம் முடிவான பைசலாக நிலைப்பதற்கு அந்த அவார்டை மத்தியஸ்தர்களுக்கு மறு ஆலோசனைக்காகக் கோர்ட்டார் அனுப்பாமலும், அல்லது 10 தினங்களுக்குள் அதை ரத்து செய்ய விண்ணப்பம் கொடுக்கப்படாமலும், அல்லது அப்படிப்பட்ட விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருந்தால் அந்த விண்ணப்பம் சட்டப்படி ஈரங்கியாகி தள்ளுபடியாகியும் இருக்கவேண்டும். இந்தக்கேசில் அவ்வித விண்ணப்பம் கொடுக்கப்பட்டு அது தள்ளுபடி யாச்சுது. ஆகையால் அவார்ட்டின்படி பிறந்த தீர்ப்பு முடிவான பைசல் அதற்கு அப்பீல் கிடையாது.

பிரதிவாதிக்காக அப்பீல் கிடையாதபோதிலும் ரிவிஷன் அதிகாரத்தில் பரிகாரம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. ஸி. பி. ஸி. 15-வது பிரிவில்கண்டபடி எழுதது மூலமான விண்ணப்பமில்லாதபோதிலும் வாய்மொழியாக ரிவிஷன் மனுசெய்து கொள்ளலாம். ஆனால் 29-கல்கத்தா 169-இல் பிரிவிகௌன்ஸிலார் அபிப்பிராயப்பட்டபடி அவார்ட்தீர்மானத்தின் பேரில் அப்பீலை விட ரிவிஷனில் பிரவேசிப்பது அதிக ஆக்ஷேபணைக் கிடமானதாகும். கையொப்பம் செய்யாத ஒரு மத்தியஸ்தனை கீழ்கோர்ட்டார் விண்ணப்ப ஈரங்கிகாலத்தில் விஜாரியாமலிருந்த பிசகைப்பற்றியாவது கவனித்துத்தலையிடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால் கீழ்கோர்ட்டார் சொல்லியிருக்கிறபடி ஷை மத்தியஸ்தனை விண்ணப்பத்தின் முதலாம் ஈரங்கியில் ஆஜர்படுத்த யாதொரு பிரயத்தனமும் எடுக்கவில்லை. இரண்டாவது ஈரங்கியில் அவருக்கு அனுப்பிய சம்மன் சர்வாகவில்லை. அதற்காக ஈரங்கியை மாற்றிவைக்கக்கேட்டதில் கோர்ட்டார் உத்தரவுகொடுக்காமல் அந்த மத்தியஸ்தன் சிலவிஷயங்களில் ஒத்திராதகாரணத்தைத் தவிற வேறு யாதொரு அம்சமும் அவனால் ருஜூவாகாதென்று கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அதிகார வரம்பில்லாமல் கீழ் கோர்ட்டார் அவார்ட்டின்மேல் தீர்மானம் கொடுத்திருந்தாலொழிய ரிவிஷனில் பிரவேசிக்கத்

தயாராயிருக்கக்கூடாது. என்றாலும் இவ்வித கேசுகளில் அவார்ட்டின் தீர்ப்பேமுடிவான பைசலாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்று சட்டத்தின் பொதுக்கருத்தாகும். (1911) 1-மதராஸ் வாரக்குறிப்பு 141-இல் கண்டகேசைப் பற்றிப் பிரதிவாதிக்காக எடுத்துப்பேசப்பட்டது. அவார்ட்பிறந்த இரண்டு தினங்களில் தீர்ப்பளிக்கப்பட்டதால் மேற்கூறிய கேசில் பிறந்த தீர்மானம் சட்டப்படிரத்தாச்சுது. அந்தக் கேசுக்கும் தாவாகேசுக்கும் சம்பந்தமில்லை. ஆகையால் பிரதிவாதியின் அப்பீல் பிடிக்கத்தக்கதல்ல. ரிவிஷனில் கீழ்கோர்ட் தீர்மானத்தை மாற்றுவதற்கும் நியாயமில்லை.

மேற்கூறிய காரணங்களைச் சொல்லி ஹைகோர்ட்டார் அப்பீலைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

## Crl. R. Case No. 349 & Crl. R. P. 282 of 1913 — 14 ஜூலை 1913.

கிறிமினல் ப்ரொஸிஜர் கோட் 488-வது பிரிவுப்படி தலச்சேரி ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டாரவர்கள் பெண்ஜாதியை பரித்தியாகம் செய்துவிட்ட ஒரு மாப்பிளைத் துலுஷ்கனை, ஷெயாள் சவரட்சணையிலிருக்கிற அந்த மாப்பிளைக்குப் பிறந்த இரண்டு குழந்தைகளின் போஷணைக்காக மாதம் ரூபா 6 0 0 செலுத்திவரும்படி உத்தரவளித்தார்கள். தாயும் பிள்ளைகளும் தாயின் தரவாட்டிற்குச் சேர்ந்த வீட்டில் வசித்து வந்தார்கள். தவிர அவர்கள் மதத்தில் மகம்மதியர்களானாலும் மருமக்கத்தாய சட்டா சாரத்தை அனுசரித்த குடும்பஸ்தர்களாகவு மிருந்தார்கள். மேற்படி உத்தரவின்பேரில் அந்த மாப்பிளை ஹைகோர்ட்டில் கிரிமினல் ப்ரொஸீஜர் கோட் 435, 439-வது பிரிவுகளின்படி ரிவிஷன் மனுக்கொடுத்தார். அதில் கண்ட முக்கிய வாதங்களாவன:- (1) தகுந்த அந்தஸ்துள்ள தர்வாட்டைச் சேர்ந்த ஷெ குழந்தைகளுக்கு ஜீவனாம்சத்தைக் கொடுக்கும்படி மனுதாரருக்கு உத்தரவுசெய்தது சட்டவிரோதம் (2) அக்குழந்தைகளில் ஒருபய்யன் 10 வயதுள்ளவனாகையால் மனுதார் ஷெ யானுக்கு சம்ரக்ஷகனாகிறகாரணத்தால் மனுதாரனே அவனுடைய போஷணைக்காக ஜீவனாம்சம் கொடுக்கச்சொல்வது சட்டவிரோதம் (3) மனுதார் அந்தப்பய்யனை அழைத்துப்போய் சவரக்ஷணை செய்யப் பிரியமுள்ளவனாக யிருப்பதாய்த் தெரிவித்திருக்க அந்தப்பய்யனுக்கும் ஜீவனாம்ச உத்தரவளித்தது சட்டவிரோதம்.

மேற்கூறிய மூன்று வாதங்களுக்குச் சமாதானமாக மகம்மதிய லாப்படிமட்டும் 10-வயது வந்த பய்யனை மனுதார் அடையலாமே யொழிய மருமக்கதாய சட்ட சம்பிரதாயத்தை அனுசரிக்கிறவர்களுக்கு அந்தவாதம் செல்லாதென்றும், மனுதார் பய்யனை அழைத்துப்போய்க் காப்பாற்ற சித்தமாயிருந்தபோதிலும் பய்யன் தன் இயற்கையான கார்டியனுடன் வசிப்பதால் அவனுடைய போஷணைச் செலவுக்கு மனுதார் பாத்தியப் பட்டவனாகிறான்; தவிர 488-வது பிறிவு 4-வது க்ளாஸின்படி சரியான காரணமில்லாமல் ஒரு பெண்சாதி புருஷனுடன் கூட வசிக்க மறுத்துப் பிரத்தியேகமாய் ஜீவித்தால் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியதில்லை. சட்டப்படி சரியான கார்டியன் வசமிருந்து அவளுடன் வசிக்கிற குழந்தைக்கு ஜீவனாம்ச பாத்தியதை உண்டு; ஆகையால் மனுதாரின் 2-3-வாதங்களும் பிரயோஜனமில்லையென்று ஹைகோர்ட்டார் தீர்மானித்தார்கள்.

முதல்வாதத்தைப்பற்றிச் சொன்னதாவது:— குழந்தைகள் செல்வமுள்ள தர்வாட்டைச் சேர்ந்தவர்களாயினும் அவ்விஷயம் அக்குழந்தைகளை ஆதரிக்கச்சக்தியிருந்தும் அலட்சியம் செய்துவிட்ட தகப்பனுடைய, போஷணைச்செலவுகொடுக்க வேண்டியகடமையை நிவர்த்திக்காது. 488 (1) வது பிரிவின் கருத்துப்படி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் திறமையில்லாத குழந்தைகளுக்கு மட்டும் ஜீவனாம் கிடைக்குமென்றும், செலவு செய்ய சக்தியுள்ள தர்வாட்டில்சேர்ந்த குழந்தையை, தன்னை ஆதரித்துக்கொள்ள திறமையில்லாத குழந்தையென்று பாவிக்கக்கூடாதென்பதாகவும், மனுதாரின் வக்கீல் வாதித்தார்கள். குழந்தையின் திறமைக்குறைவுக்குக் கருத்தானது "தன்னுடைய சொந்த சரீரப்பிரயாசையினால் உழைத்து தன் போஷணைச் செலவு தேடிக்கொள்ளத்தக்க சரீரபலமும் புத்தி சாதுர்யமும் அடையாத குழந்தையென்றது" போலாகுமென்றும் எழுமைத்தனம் அல்லது ஐவேஜின் மையுடைய குழந்தையென்றகருத்தாகாதென்றும், 1873-இல் 5. N. W. H. C. R. 237-இல் தீர்மானிக்கப்பட்ட கேசின்படி ஒருகுழந்தை மெஜாரிடியடைந்தபோதிலும், செவுடனாயும் ஊமையாயுமிருந்த காரணத்தால் ஜீவனாம்சத்திற்குப் பாத்திரனாவதால் அக்கருத்தும், மேற்கூறிய முதலாவது வாதத்திற்குச் சொல்லப்பட்ட சமாதானத்திற்கும் ஒற்றுமையிருப்பதாயும் தீர்மானித்து மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.



——:O:——

(மிஸ்டர்ஜஸ்டிஸ் பென்ஸன் & மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யர்)

**தஞ்சாவூர் ஜில்லா.**

## C.M.A. 231 of 1911—26 பிப்ரவரி 1913.

ஸபாபதி பிள்ளை Vs சொக்கலிங்க பிள்ளை.

கும்பகோணம் சப்கோர்ட் அசல் நம்பர் 6/1905-இல் வாதி 1-ம் பிரதிவாதியிடம் பெற்றிருந்த அடமான தஸ்தவேஜைக்கொண்டு அடமானத் தொகையை வசூலிக்கும்பொருட்டு 1-ம் பிரதிவாதியுடைய குடும்பபாகஸ்தனாகிய 2-ம் பிரதிவாதியையும் சேர்த்து தாவா செய்ததில், 1-ம் பிரதிவாதி, வாதிக்கு பிரர்து தேதிவரையில் பாக்கியேற்பட்டிருந்த அசல்வட்டிமொத்த ரூ39,291-15-0 யும், பிராதுதேதிமுதல் அதற்குரியவட்டியையும், வாதிக்கு இந்த தாவாவில் ஏற்பட்டசெலவு தொகை ரூ. 1844-6-0 யும், செலுத்தவேண்டியதாயும் குறித்தகாலத்திற்குள் ஷெ டிக்கிரித்தொகையை 1-ம் பிரதிவாதி செலுத்தத் தவறினால் அடமான தஸ்தவேஜில் கண்டிருந்த குடும்பசொத்தில் 1-ம் பிரதிவாதியுடைய பாகத்தைமட்டும் ஏலம்போட்டு வசூலாகும் தொகையை வாதியடைந்த பின்னும் டிக்கிரீ தொகைபூராவும் வஜாவாகாவிட்டால், பாக்கிநிற்கும்தொகைக்கு 1-ம் பிரதிவாதிமேல் ஆளைப் பொருத்தும் சப்கோர்ட்டார் டிக்கிரீயளித்ததும் தவிற, இந்த நம்பரில் 2-ம் பிரதிவாதியும் மேற்கூறியசெலவு தொகை ரூ. 1844-6-0யும் வாதிக்குச் செலுத்தக்கடமைப்பட்டவனென்றும் டிக்கிரீயில் உத்தரவளிக்கப்பட்டது. (2-ம் பிரதிவாதி எக்ஸ்பார்டியாக இராமல்வாதியின் வழக்கை தப்பாக எதிர்வாதம் செய்தகாரணத்தால் செலவு தொகை அவனையும் பொறுத்து உத்தரவளிக்கப்பட்டிருக்கிறதாக நிதானிக்கவேண்டும்.) வாதி டிக்கிரீத் தொகையை வசூலிக்கும்பொருட்டு 1-ம் பிரதிவாதியின் அடமான சொத்திலுள்ள பாகத்தை ஏலம்போட்டு வசூலான தொகை ரூ. 41,500யும் டிக்கிரீ தொகைக்கும் வட்டிக்கும் செலவுக்கும் சரிப்போகாதகாரணததால், வாதி டிக்கிரீ தொகைக்கும் வட்டிக்காகவும் ஷெ தொகை செல்லாய்ப்போனதாகச் சொல்லி, டிக்கிரீயின்படி 2-ம் பிரதிவாதியும் செலவு தொகைக்குக்கடமைப்பட்டவனாகிறபடியால், மாயவரம் சப்கோர்ட்டில் 2-ம் பிரதிவாதியிடமிருந்து பாக்கி ஏற்பட்டிருந்தசெலவுதொகைரூ. 1844-6-0 யும் வசூலிக்கும்பொருட்டு நிறைவேற்று மனுக் கொடுத்ததில், 2-ம் பிரதிவாதிஅந்த மனுவிற்கு இரண்டுவித ஆக்ஷேபணை செய்தார். "(1) 2-ம் பிரதிவாதியின் பேரில் கொடுக்கப்பட்ட இந்த மனு டிக்கிரீ பிறந்த 3-வருஷங்களுக்கு மேற்பட்டமையால் காலாவதி தோஷமடைந்தது. (2) வாதி முந்திய நிறைவேற்று மனுவில் சொத்துக்களை ஏலத்திற்குக்கொண்டுவந்து வசூலித்த தொகைகளில் வட்டிக்கும் செலவுதொகைக்கும், முதலில் செல்லுவைத்துக்கொண்டு, அதன் பிறகு பாக்கியிருந்த தொகையை டிக்கிரீயின் அசலுக்குச்செல்லுவைத்துக் கொள்ளவேண்டுமென்றும், அப்படிச்செய்தும் டிக்கிரீ தொகைக்கு பாக்கி ஏற்பட்டால் அதற்காக 1-ம் பிரதிவாதி பேரில் பின்னும் தொடரவேண்டுமென்றும், மேற்கூறிய விதமாய் செலவுதொகை ஏலத்தொகையிலிருந்து செல்லாயிருக்கவேண்டியதாகையால் வாதிக்கு 2-ம் பிரதிவாதியின் பேரில்செலவு தொகையைப்பற்றி பின்னும் பரிகாரம் தேடநியாயமில்லை". மாயவரம் சப்கோர்ட்டார் காலாவதி தோஷத்தைப்பற்றி 2-ம் பிரதிவாதி வற்புறுத்தி வாதாடாதபடியால் அதைப்பற்றி உத்தரவில் யாதொன்றும் பிரஸ்தாபிக்காமல், 2-ம் ஆக்ஷேபணையைப்பற்றி 2-ம் பிரதிவாதிக்கு விரோதமாய்த் தீர்மானித்து 2-ம் பிரதிவாதியின் பேரில் செலவு தொகையை நிறைவேற்றும்படி உத்தரவளித்தார்கள். அதன்மேல் 2-ம் பிரதிவாதி மதராஸ் ஹைகோர்ட்டில் சில்லரைமனு அப்பீல் செய்து அங்கு 1-ம் ஆக்ஷேபணையாகிய காலாவதி தோ

ஷத்தைப்பற்றி எதிர்வாதம் செய்தார். கும்பகோணம் சப்கோர்ட் டிக்கிரீயின்மேல் அப்பீலாகி அப்பீல்டிக்கிரீ பிறந்தமுதல் கணக்குப் பார்த்தால் இந்தமனு காலாவதி தோஷமாகாதென்றும், அந்தத்தகவலை கவனிக்காமல் 2-ம் பிரதிவாதி ஆக்ஷேபித்திருக்கிறதாகச் சொல்லி ஹைகோர்ட்டார் ஷை காலாவதி தோஷத்தைப் பற்றிய வாதத்தை நிராகரித்து, இரண்டாவது ஆக்ஷேபணையைப்பற்றி 2-ம் பிரதிவாதிக்கு அனுகூலமாய்த் தீர்மானம் கொடுத்தார்கள்.

ஆர்டர் 34-இன் 12-வது ரூலில் ' யாதொரு சொத்தை, அடமானக்கடனை வசூலிக்கும்பொருட்டு, எலம் போடும்படி உத்தரவளிக்கையில் ஷை அடமான சொத்தானது யாதொரு முன்னடமானத்தில் பந்தகமாயிருக்கின், முன் அடமானதாரனுடைய சம்மதத்தின்பேரில் ஷை சொத்தை வில்லங்கசுத்தியாக எலம்போட்டு எலத்துகையில் முன் அடமானதாரனுக்குச் சேரவேண்டிய துகைக்கு பாத்தியதையை உண்டுபண்ணும் விதமாய் எல உத்தரவளிக்கலாம்.'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே ஆர்டர் 34இன் 13-வது ரூலில் '' அப்படிப்பட்ட எலத்துகையை பின்வருமாறு வஜாசெய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது:—

அதாவது, முதலில் யாருடைய விண்ணப்பத்தின்பேரில் எலம் போடப்பிரயத்தனமெடுக்கப் பட்டதோ அதற்குறிய செலவுகளுக்காக செல்லுவைக்கவேண்டும்; இரண்டாவது:— முன் அடமானக்காரனுக்குச் சேரவேண்டிய அசல்வட்டி பாக்கித்துகை ஜாடாவும் எலத்துகையிலிருந்து செல்லுவைக்கவேண்டும்; மூன்றாவது எலத்திற்குக் கொண்டுவந்த அடமான டிக்கிரீ பாக்கிக்காரனுக்கு டிக்கிரீ தேதிமுதல்கூடுகிற வட்டித்துகையும் டிக்கிரீயில் கண்டசெலவுதுகையும் செல்லாகவேண்டும். அதற்குப்பின் மிகுதியிருக்கும் எலத்துகையிலிருந்து டிக்கிரீயின் அசல் துகைக்குச் செல்லாகவேண்டும். கடைசியாக, எலத்துகையில் பின்னும்மிகுதி யிருக்கும்பட்சத்தில் அடமான சொத்துக்குடையவனுயிருந்தவனிடமாவது அல்லது அவனுடையவார்ஸ்களிடமாவது அல்லது பலர்களிருந்தால் எல்லா பாத்தியஸ்தர்களிடமும் ஜாயிண்டான'' ரசீது பெற்று அத்துகையைச் செலுத்திவிடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

2-ம் பிரதிவாதிக்காக, 13-வது ரூலில் கண்ட வசனங்கள் இந்தக்கேசின் அம்சங்களுக்கு நேர்மையானபடி ஒப்பத்தகாதபோதிலும், அதில் கண்ட நியாயமுறையானது இந்தக்கேசில் அனுசரிக்கத்தக்கதென்று வாதிக்கப்பட்டது. அதற்கெதிராக வாதி வக்கீல் மிஸ்டர் K ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள், எலத்துகையிலிருந்து வாதி செலவுதுகைக்காக முதலில் செல்லுவைத்துக் கொள்ளக் கடமைப்பட்டவனல்லவென்றும், டிக்கிரீப்படிக்கு 2-ம் பிரதிவாதியும் செலவுதுகையை செலுத்தக்கடவனுகையால் அத்துகையை வாதி அவனிடம் வசூலிக்க பாத்திய முடையவனென்றும் வாதித்து, ஸி. பி. ஸி. ஆர்டர் 34-இன் ரூல் 13-இல் சொல்லிய ஒழுங்குப்படி எலத்துகையை வஜா செய்வதற்கு, 12-வது ரூல்படி கோர்ட்டார் முன் அடமானதார் சம்மதத்தின்பேரில் வில்லங்கசுத்தியாய் ஒரு சொத்தை எலம்போடப்பட்டிருக்க வேண்டுமென்றும், ஆகையால் தாவா எலம் அவ்வித சந்தர்ப்பத்தில் போடப்படாத நிமித்தம் 13-வது ரூல்படி டிக்கிரீயின் அசல் துகையை செல்லுவைக்கு முன் வட்டியையும் செலவுதுகையையும் எலத்துகையிலிருந்து செல்லுவைக்க வேண்டியதவசியமில்லையென்றும் எதிர்வாதமாக எடுத்துப்பேசினர்கள்.

ஹைகோர்ட்டார், 13-வது ரூலில், முன் அடமானதாருக்குச் செல்லவேண்டிய அம்சத்தை இரண்டாவதாகச் சொல்லியிருப்பதாலும் 13-வது ரூலில் '' அப்படிப்பட்ட எலத்துகை'' என்ற வசனத்திற்கு 12-வது ரூல்படி எலம்போடப்பட்ட சொத்தின் எலக்கிரயத்துகை'' என்ற அர்த்தம் உசிதமாகுமாதலாலும், 12-வது ரூல்படி முந்திய வில்லங்கத்தை விலக்கிக் கோர்ட்டார் உத்தரவுப்படி போடப்படும் எலத்திற்குத்தான் 13-வது பிரிவின் மற்றசெல்வழி ஒழுங்கு விதிக்கப்பட்டிருக்கிறதாக அர்த்தங்கொள்ளவேண்டுமென்றும், ஸிவில் புரொஸிஜர் கோடிலாவது அல்லது வேறு எந்த சட்டங்களிலாவது எலத்தில் வசூலான துகையில் வட்டிக்கும் செலவுக்கும் செல்லான பிறகுதான் அசலுக்குச் செல்லுவைக்கவேண்டுமென்று யாதொரு சட்டமுறையும் கிடையாதென்றும், ஸிவில் ப்ரொஸிஜர் கோட் 73-வது பிரிவில், அடமான டிக்கிரீயின் பேரில் அடமானசொத்து எலம்போடப்பட்டு வசூலாகும் துகையிலிருந்து முதலில் நிறைவேற்றுதலுக்காக நேர்ந்த செலவை பிரத்தியேகமாய் விநியோகம் செய்தபிறகு, டிக்கிரீயின் ஷரத்துப்படி, அதாவது அசல்வட்டி, பின்வட்டி, டிக்கிரீக்கு முந்திசெலவு ஆகிய மூன்று வகையின் மொத்தத்தை கொடுத்துவிட வேண்டுமென்றும், அதற்குப்பின் யாதொரு அடமானங்களிருந்தால் அதற்காக மிகுதித் துகையைப் பிரயோகப்படுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறதே யொழிய, டிக்ரீயின் அசல் துகைக்குமுன் பின்வட்டியையும் செலவுதுகையையும் வஜா செய்துவிட வேண்டுமென்று சொல்லப்படவில்லை யென்றும், அந்தப் பிரிவின் கருத்தானது பல அடமான டிக்கிரீகளுக்கும், வெண்ணெலை டிக்கிரீயின்பேரில் சொத்தை ஜப்திசெய்து எலத்துக்குக்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்குமுறிய முன்பின் தாரதம்மியத்தைப்பற்றியதாகு மென்றும், ஹைகோர்ட்டார் தீர்மானத்தில் எடுத்துக்காண்பித்தார்கள்.



ஆர்டர் 34-ரூல் 13-இல் செலவு துகைக்கும் வட்டிக்கும் முந்திசெல்லாகவேண்டிய நியமம் ஏற்பட்டதற்குக் காரணமென்னவென்று யோஜிக்குமிடத்து'' ஒரு அடமானதாருக்கு தஸ்தவேஜின்படி அசலுக்கும் வட்டிக்கும் ஆதரவு ஏற்பட்டிருக்க கோர்ட்டில் வாதி சென்று செலவு செய்த துகைக்கு கட்டாயம் கோர்ட்டார் ஒரு ஆதரவைக் கொடுக்கவேண்டுமென்ற சட்ட நோக்கத்துடன் ஆதரவு பெற்ற துகைக்கு முந்தியதாக செலவு துகைஎலத்துகையிலிருந்து பிரித்துக் கொடுக்கப்படவேண்டுமென்றும்,(டிக்கிரீக்குப் பிறகு குறைந்த விகிதப்படி அரைவட்டி யளித்த கோர்ட்டார் அந்த வட்டியையாவது எலத்துகையிலிருந்து டிக்கிரீ துகைக்கு முந்தியே செலுத்தப்பட வேண்டுமென்றும் ஆகிய இரண்டுவகையான சிலாக்கியமானது) டிக்கிரீதாரின் நன்மைக்காகவே ஏற்பட்டிருக்கிற தாகவும், அவ்விதிகள் மற்றவர்களுக்கும் நன்மையான தாகுமென்றும், (திருஷ்டாந்தரமாக) ஒருவன் டிக்கிரீயில்கண்ட செலவு துகைக்குமட்டும் ஜாமீன் கொடுத்திருந்தால் (புணையப்பட்டிருந்தால்) பாக்கிதாரனுடைய சொத்தை எலம்போட்டு வசூலித்த துகையிலிருந்து வாதிக்கு செலவு துகையை முதலில் செலுத்தி தன் ஜாமீனை நிவர்த்திசெய்து கொள்வதற்கு மேற்கூறிய விதிகள் பயனுள்ள தாகுமென்றும், ஒரு அடமான சொத்தில் கிஞ்சித் பாத்தியதை யுடையவனைப் பிரதிவாதியாய்ச்சேர்த்திருக்க, பொதுவாய் அவன் எதிர்வாதம் செய்யாமலிருந்தால் அவனை செலவுக்குக் கட்டுப்படுத்துவது கோர்ட்டாரின் சம்பிரதாயமில்லாவிடினும், ஷை யானுடைய நடத்தையால் அவன் பேரிலும் செலவு துகையை சுமத்தும்படி நேர்ந்துவிட்டால் ஷை யான் 13-வது பிரிவின் சிலாக்கியத்தைப்பாராட்டி நன்மை அடையக்கூடாதென்று வாதி வக்கில் மிஸ்டர் K. ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் வாதித்ததாகவும், ஆனல் இந்தக்கேசில் 12-வது பிரிவுப்படி எலம் போடப்படாத படியால் 13-வது பிரிவின் சிலாக்கியம் 1-ம் பிரதிவாதிக்கு கிடையாதென்ற மிஸ்டர். K. ஸ்ரீனிவாசய்யங்காரவர்களுடைய வாதம் சரியான தல்லவென்றும், முந்திய வில்லங்க சுத்தியாக எலம் போட்டாலும், அல்லது முந்திய வில்லங்கத்தைக் கட்டுப்படுத்தி எலம் போட்டாலும் இரண்டு சந்தர்ப்பங்களிலும் 13-வது ரூலில் குறிக்கப்பட்டிருக்கிற விதிகளை அனுசரிப்பது நியாயமென்றும், அதாவது முதலில் செலவுதுகையையும் பின் வட்டியையும் செல்லுவைத்துக் கொண்டு, பின்னல் டிக்கிரீத்துகைக்கு வரவு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், கோர்ட்டார் தப்பாக ஷை முறையைக் கவனியாமல் எலத்தில் வசூலான துகையிலிருந்து முதலில் டிக்கிரீயின் அசல் துகையை வரவுவைததுக்கொண்டால், டிக்கிரீப்படி செலவு துகைக்குக் கடமைப்பட்ட மற்றொருவன் அப்பிசகான முறையை ஆக்ஷேபிக்க அதிகாரமுண்டாவெனப் பார்க்குமிடத்து, இக்தக்கேசில் அதைப்பற்றித் தீர்மானிப்ப தவசியமில்லையென்றும், வசூலான துகையை ஒவ்வொரு அம்சத்திற்கு முறைப்படி செல்லுவைக்கவேண்டிய கடமை கோர்ட்டாரைச் சேர்ந்ததேயொழிய டிக்கிரீதாரனைச் சேர்ந்ததல்லவெ

ன்றும், டிக்கிரீதார் தன்னிஷ்டம்போல் எலத்துகையைப் பிரயோகப்படுத்திக் கொள்ளக்கூடாதென்றும், இந்தக்கேசில் கோர்ட்டார் வாதிக்கு எலத்துகை முழுவதையும் டிக்கிரீயின்அசலுக்கும் பின்வட்டிக்கும் செல்லுவைத்துக் கொள்ளும்படி உத்தரவளிக்கவில்லையென்றும் கோர்ட்டார் இரண்டு பிரதிவாதிகளுக்கும் டிக்கிரீதாரனுக்கும் சம்பந்தப்பட்ட டிக்கிரீ பாக்கிகளைக் கவனித்து உத்தரவு செய்யவேண்டியிருக்க அவ்விதமான உத்தரவு யாதொன்றும் பிறப்பிக்காமல் டிக்கிரீதாரனுக்கு எலத்துகையை ஒப்புவித்தபோதிலும், நடக்கவேண்டிய முறைப்படிக்கு வாதி நடக்கவேண்டுமென்றும் அதாவது, செலவையும் வட்டியையும் முதலில் செல்லு வைத்துக் கொள்ளும்படி எலத்துகையை வாதிவசம் கோர்ட்டார் ஒப்புவித்த பாவனையாக அனுமானிக்க வேண்டுமென்றும், ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு 2-ம் பிரதிவாதியின்மேல் வாதி செலவுதுகைக்காகத் தொடர்வது சரியல்லவென்று சப்கோர்ட் உத்தரவை ரத்துசெய்து வாதியின் நிறைவேற்று மனுவைத்தள்ளுபடிசெய்து எதிரியின்இரண்டுகோர்ட் செலவையும் வாதிகொடுக்கவேண்டுமென்று தீர்ப்பளித்தார்கள்.

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

**தஞ்சாவூர்.**

**C.R.P. 38 of 1912— 23 அக்டோபர் 1913.**

பொன்னுசாமி பிள்ளை *Vs* சொக்கலிங்கம்

சீர்காழி டி. மு. கோர்ட்டில் வாதி பெற்ற டிக்கிரீயை நிறைவேற்றின நடவடிக்கையில் பிரதிவாதிகள் இந்தியன் பினல்கோட் 186-வது பிரிவின்படி குற்றவாளியாகத்தக்கதாய் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தனைத்தன் உத்தியோகத்திற்குறிய அதிகாரத்தைச் செலுத்தவிடாமல் தடைசெய்தான் என்ற தகவல் கோர்ட்டாருக்கு 18 ஜூலை 1911இல் ரிபோர்ட் செய்யப்பட்டு, அதன்மேல் யாதொரு உத்தரவும் அப்பொழுது பிறக்காமல் நிறைவேற்று மனுவானது சட்டமுறைப்படி 27 ஜூலை 1911-இல் டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அந்த உத்தரவுக்கு அதிககாலத்திற்குப்பின் வாதி மூன்று எதிர் மனுதார்களை ப்ராஸிகியூஷன் செய்வதற்காக ஷை டி. மு. கோர்ட்டில் சாங்கிஷன் கொடுக்கும்படி சில்லரை விண்ணப்பம் கொடுக்கவே டி. மு. கோர்ட்டாரவர்கள் கிரிமினல் புரொஸிஜர் கோட் 476-வது பிரிவின்படி எதிரிகளை கிரிமினல் கோர்ட்டில் ஷை குற்றத்திற்காக விஜாரணைசெய்யும்படி அனுப்பினார்கள். டி. மு. கோர்ட்டாருடைய ஷை நடவடிக்கை சட்டவிரோதமென்று எதிரிகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாகல் செய்து, அந்த உத்தரவை ரத்துசேய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். ஹைகோர்ட்டார் கீழ்கோர்ட்டாரின் 476-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவு பிசகென்றும் தீர்மானித்து, ஆனால் தங்களுக்குறிய ரிவிஷன் அதிகாரத்தின்படி காலஞ்சென்ற 1-ம் எதிரியைத் தவிர்த்து மற்ற இரண்டு எதிரிகளையும் ப்ராஸிகியூஷன் செய்யும்படி டிக்கிரீதாரனுகிய வாதிக்கு அனுமதி (சாங்கிஷன்) கொடுத்தார்கள்.

வாதி முதலில் கொடுத்திருந்த நிறைவேற்று மனுவானது 1910 (12 C. L. J. 45) இல் தீர்மானித்திருக்கிற ஒரு நியாய பரிபாலன அதிகாரஞ்செலுத்தும் கோர்ட்டாருடைய நடவடிக்கையென்றும் 32 கல்கத்தா 367-இல் அந்த தீர்மானத்திற்கு மாறுகக்கொடுத்திருக்கிற அபிப்பிராயம் அனுசரிக்கத் தக்கதல்லவென்றும், அந்த நிறைவேற்றும் நடவடிக்கையானது பைசலாய்ப் போனபிறகு வேறு பிரத்தியேகமான வாதியின் விண்ணப்பத்தின் பேரில் 476-வது பிரிவின்படி முன்நடந்த குற்றத்திற்காக ப்ராஸிகியூஷன் உத்தரவளிப்பது பிசகென்றும் அபிப்பிராயப்பட்டு 32-மதராஸ் 49-இல் புல்பெஞ்சு தீர்மானப்படியும், டி. மு. கோர்ட்டாரின் உத்தரவு ரத்தாகத்தக்கதென்றும் மேற்கூறிய விதமாய்ச் செய்த உத்தரவுக்குக் காரணம் கொடுத்தார்கள்.

———O———



OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED DEC 1913 MADRAS

(Mr. ஜஸ்டிஸ் எய்லிங் & Mr. ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

**திருச்சிறுப்பள்ளி.**

**S. A. No. 1385 of 1912–19 செப்டெம்பர் 1913**

ஆதித்யம்மையர் *Vs* ராமகிருஷ்ணய்யர்.

வாதி பிரதிவாதியால் 1905 செப்டெம்பர் 27 உ யில் எழுதிக்கொடுக்கப்பட்ட அடமான தஸ்தவேஜின்படி சேரவேண்டிய கடன்பாக்கி ரூ. 1000-யும் வசூலிப்பதற்காக திருச்சிறுப்பள்ளி சப் கோர்ட்டில் அசல் தாவா செய்ததில் பிரதிவாதி எதிர் ஆன்ஸரில் தான் தன்னுடைய இதரமான சில சொத்துக்களை வாதிக்கு 1907 செப்டெம்பர் 4உ இல் ரூ. 36,000-க்கு விக்கிரயஞ்செய்து விட்டதாயும் ஆனால் அக்காலத்தில் ஒருவாய்க்கரார் உடன்படிக்கை ஏற்பட்டதாயும் அதன்படி கிரயதஸ்தவேஜு ரூ. 35,000க்கென்றெழுதப்படவேண்டுமென்றும், விக்கிரயசொத்துக்கள் வாதிவசம் ஒப்பிவிக்கப்பட்ட உடன் வாதி கிறயபாக்கி ரூ. 1000-யும் பிரதிவாதிக்கு ரொக்கமாய்க் கொடுப்பதற்கு பதிலாக தாவா அடமான தஸ்தவேஜை வாதி பூராவும் செல்லுவைத்துப் பிரதிவாதிக்கு வாபிஸ்செய்துவிடவேண்டுமென்றும் அவ்விதமாகவே விக்கிறய சொத்துக்கள் வாதிவசம் ஒப்புவிக்கப்பட்ட காரணததால் தாவா அடமானக்கடன்துகை செல்லானதாக பாவிக்கப்படவேண்டுமென்றும் வாதம் செய்தார். சப் கோர்ட்டாரும் ஜில்லாகோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாய் இந்தியன் எவிடென்ஸ் ஆக்டின் 92-வது பிரிவின்படி எழுத்துமூலமான ஒப்பந்தம், கிறயம், விநியோகம் ஆகிய மூன்று அம்சங்களுக்கு விபரீதமான யாதொரு வாய்க்காரார் விஷயமாய் ருஜு அம்சம் ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று தீர்மானித்து வாதிக்கு அனுகூலமாய் டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் பிரதிவாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் தீர்ப்பே காயமாகி 2-வது அப்பீல் தள்ளுபடியான தீர்மானத்தின் சுருக்க அம்சமாவது:—

பிரதிவாதிக்காக மிஸ்டர் T. R. ராமசுந்தரய்யரவர்கள் எதிர்வாதத்திமானது, எவிடென்ஸ் ஆக்டின் [illegible] பிரிவால் விலக்கப்பட்டதாகாதென்றும் [illegible] கிறயத்துகை விஷயமானது விக்கிறயஉடன்படிக்கையின் அம்சங்களைச் சேர்ந்ததல்ல வென்றும், 92-வது பிரிவில் விக்கிறயத்துகை விஷயமாய் பத்திரத்தில் செப்பியிருக்கிற துகையைவிட அதிகமாயாகிலும் குறைவாயாகிலும் விலைதீர்க்கப்பட்டு அதைப்பற்றி வாய்க்காரார் உடன்படிக்கையை ருஜூப்படுத்த இடங்கொடுக்காதபடி யாதொரு கருத்தும் துலங்கவில்லையென்றும், முக்கியமாய் வாதம் செய்தார்கள். விக்கிறய உடன்படிக்கையில் கிறயத்துகை ஒரு அம்சமல்லவென்று சொல்வது அதிசயிக்கத்தக்க விஷயமாகும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் அதிகபலமான தெளிவுள்ள அதாரிடியிருக்கவேண்டும். முதல் பார்வைக்கே கிறயத்துகைதான் விக்கிறய உடன்படிக்கையின் பிரதான அம்சமாகும். சில விக்கிறய நடவடிக்கைகளைப்பற்றிய உடன்படிக்கைகளில் கிறயத்துகை தீர்மானமாகாமலிருக்கலாம். அவ்வித விக்கிறய உடன்படிக்கைகளைப்பற்றி இந்த அப்பீலில் கவனிக்கத்தேவையில்லை.

பிரதிவாதியின் எதிர்வாதத்திற்கு ஆதாரமாக 5 மதராஸ் 6-ம், 11 மதராஸ் 213-ம், 3 பம்பாய் 159-ம், 10 கல்கத்தா லா ஜர்னல் 27-ம் முக்கியமாய் எடுத்துக் காண்பிக்கப்பட்டன. 5 மதராஸ் கேஸாவது:— வாதியின் மகளைப் பிரதிவாதி விவாகம் செய்துகொண்டு அவளால் அடைந்த ஒரு மைனர் புத்திரனுக்கு வாதி கார்டியனுகயிருந்த விஷயத்தை ஒரு பிரதி பிரயோஜனமாக பிரதிவாதி எண்ணி தன்னுடைய சொத்துக்களை வாதிக்கு விக்கிறயஞ் செய்தபிறகு, அந்த மைனர் பத்திரம் ரெஜிஸ்டர் ஆகுமுன் காலஞ்சென்றுவிடவே வாதி பிரதிவாதியின் மற்றொரு புத்திரியை விவாகம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டமையால் பிரதிவாதி கிறய தஸ்தவேஜை ரெஜிஸ்டர்செய்தான். ஆனால் வாதி ஒப்பந்தத்திற்கு மீறி வேறுபெண்ணை விவாகம்செய்துகொண்டமையால் ஷை வாதி விக்கிறய சொத்தை ரொக்கம் கொடுத்ததாய் குறித்திருக்கிற வசனத்தின் ஆதாரத்தால் சுவாதீனமடையும்பொருட்டு கொண்டுவந்த வழக்கில் பிரதிவாதி 92-வது பிரிவின் 1-வது

புறநடையின்படி கிரயத்திற்குப் பிரதி பிரயோஜனம் கிடையாதென்றும் அல்லது தவறிவிட்டதென்றும் எதிர்வாதம் செய்ததில் ஹைகோர்ட்டார், 92-வது பிரிவின் அம்சங்கள், தஸ்தவேஜில் குறிக்கப்பட்டிருக்கிற பிரதிப்பிரயோஜனத்திற்கு வித்தியாஸமான (மாறுன) வேறொருபிரதிபிரயோஜனம் வாய்க்காரரால் ஏற்பட்டதாகச் சொல்லி தஸ்தவேஜில் கண்டபிரதி பிரயோஜன விஷயத்தை அபத்தமென்பதாய் ரூபிக்கத் தடைபடுத்தக் கூடியவைகளல்லவென்று அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள்.

பிரதிப்பிரயோஜனம் தவரிப்போனதைப்பற்றியாகிலும் தஸ்தவேஜில் கண்டதற்கு மாறுன வேறுவகையான பிரதிப் பிரயோஜனம் யதார்த்தமாய் ஏற்ப்பட்டிருந்ததைப்பற்றியும் ருஜூப்படுத்தலாமென்ற ஒரு முறைவிதியானது மற்ற மூன்று கேசுகளிலும் அனுஸரணையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பம்பாய் கேசிலும் விக்கிறயத்துகையின் கம்மி ஜாஸ்தி விஷயமான வாய்க்காரரைப்பற்றி யாதொரு பிரஸ்தாபமும் செய்யப்படவில்லை பம்பாய்கேசில் விக்கிறயத்துகையின் சிலபாகம் முந்திய கடனுக்குச் செல்லானதாகவும் மற்றது மட்டும் ரொக்கமாய்ச் செலுத்தப்பட்டதாகவும் ஆகையால் தஸ்தவேஜில்கண்டபடி பூராவும் ரொக்கமாய்ச்செலுத்தப்பட்டதாய் கண்டிருப்பது பிசகென்று ரூபகாரப்படுத்தலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கல்கத்தா கேசிலோ கிறயத்துகையின் சிலபாகம் தஸ்தவேஜில் கண்டபடி கிறயஞ்செய்தவனிடம் நிறுத்திவைக்கப்பட்டதா அல்லது ஒரு பாக்கிதாரனுக்குச்செல்லானதா என்ற விஷயம் வாதமாகியபின் அதுவிஷயமாய் ரூபிக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பிரதிவாதிக்காக தஸ்தவேஜில் குறித்திருக்கிற விக்கிறயத்துகைக்கு வித்தியாசமான துகையைப்பற்றி வாய்க்காரர் விஷயமாய் ருஜூ அம்சம் விடலாமென்றதற்கு அதாரிடி யாதொன்றும் கிடையாது. 5-மதராவில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறவிதமாக, தாவா அடமானக்கடன் செல்லாகும் வகையில் விக்கிறயத்துகையுடன் ரூ. 1000 சேர்க்கப்படும்படியான ஒரு ஒப்பந்தமானது தஸ்தவேஜில் கண்ட பிரதி பிரயோஜனத்திற்கு மாறுன பிரதிப்பிரயோஜனமாக நினைக்கப்படக்கூடாது. 9-அலகபாத் 392-ம், 18 அலகபாத் 168-இன் 171ம் பக்கமும் பிரதிவாதிக்கு உதவக்கூடிய கேஸ்களல்ல. அதில் விக்கிறயத்துகையை செலுத்தும் வகையைப் பற்றி தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பிரதி பிரயோஜனத்தின் வித்தியாஸத்தைப்பற்றியதல்ல. கிறயத்துகையைப்பற்றி கிறயதஸ்தவேஜில் செப்பியிருந்தால் அது விக்கிறய உடன்படிக்கையின் ஒரு அம்சமென்று பிரதிவாதிக்காக எடுத்துக்காண்பிக்கப்பட்ட 18 அலகபாத் கேஸிலேயே சொல்லப்பட்டிருக்கிறது ஒரு ஒப்பந்தத்திற்கும் அதின் பிரதிப்பிரயோஜனத்திற்கும். வித்தியாஸமுண்டென்று 33 கல்கத்தா 607-இல் சொல்லியிருப்பதை பிரதிவாதிக்காக எடுத்துக்காட்டப்பட்டது. குத்தகைக்காரன் அதிகமான குத்தகைப்பணம் கொடுக்க ஒப்பந்தம் செய்துகொண்டால் அவ்வித உயர்ந்த குத்தகைவிகிதம் குத்தகைச்சீட்டைச்சேர்ந்த பந்தனையாகாதென்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. கிறய தஸ்தவேஜையும் விக்கிறயத்துகையையும்பற்றிய தாவா கேசுக்கும், அதற்கும் சம்பந்தமில்லை. 22 அலகபாத் 149-இல் தீர்மானிக்கப்பட்டிருக்கிற பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தில், இங்கிலீஷ் கேஸ்களின் தீர்மானங்களை இந்த வழக்குகளில் பிரயோகிக்கக் கூடாதென்று சொல்லப்பட்டிருப்பதால் அவைகளைப் பற்றி யோஜிப்பதனுவசியம். 12-பம்பாய் 335-ம், 25 மதராஸ் லா ஜர்னல் 290-ம் மேற்கூறிய பிரதிவாதியின் எதிர்வாதத்திற்குச் சமாதானமாகவும் கீழ்கோர்ட்டாரின் அபிப்பிராயங்களுக்கு ஒத்ததாயுமிருப்பதால் வாதிக்கு டிக்கிரீயளித்தது சரியே. ஆகவே செலவுடன் 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது. கிறயத்துகை ரூ. 35000 தானென்றும் அடமானந்கடன் ரூ. 1000-யும் வாதி அடையப் பாத்திரரானர்

———:O.———



(மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் & மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யர்)

**சேலம்.**

**C. M. A. No. 84 of 1912–பிப்ரவரி 1913.**

*பொன்னுசாமி செட்டி Vs நரசிம்ம செட்டி.*

பொன்னுசாமி செட்டி என்ற மனுதார் சேலம் கஸ்பா டி. மு. கோர்ட் அசல் நெ. 719 of 1911-இல்பிறந்த டிக்கிரீத்துகை ரூ 1733-9-0-யும் செலுத்தத்தவறினபடியால் ஸிவில் வாரண்டில் அரஸ்ட் செய்யப்பட்டான். அவனுக்கு இதைத்தவிர்த்து இதரமான கடன்களிருந்து அந்தக்கடன்களைத்தீர்க்க சக்தியற்றவனுகச்சொல்லி சேலம் ஜில்லாகோர்ட்டில் இன்ஸால்வென்ஸி விண்ணப்பம் தாகல்செய்து அதில் தனக்கு மொத்தக் கடன் ரூ. 5942-4-0 இருப்பதாயும் தன் கைவசமிருக்கும் அதிக சொற்பமான துகையைத்தவிர்த்து தனக்கும் தன் அவிபக்த சகோதரனுக்கும் பொதுவாய்ச் சொந்தமானகுடும்பசொத்துக்களிருப்பதாயும் அவைகளில் குடும்ப பூஸ்திதி சுமார் ரூ. 4485 மதிப்புள்ளதென்றும், நகைகள் சுமார் ரூ 4516 மதிப்புள்ளதென்றும் ரொக்கலேவாதேவி கையிருப்பு ரூ. 20,000 மென்றும் சொல்லி, தனக்குப் பிரத்தியேகமாய் வரவேண்டிய நிலுவை பாக்கி ரூ. 1475 என்றும் அதில் ரூ. 1000 வசூலிக்க கெடுதப்பிப்போய்விட்டதாயும், தன்னுடைய விண்ணப்பத்தில் சொல்லியிருக்கிறபடி தன்பாகத்துக்கு வரவேண்டிய குடும்பசொத்தானது தன்னுடைய கடன்களை விட அதிகமாய் ஏற்படுகிறபோதிலும், குடும்ப சொத்துக்களைக் கையாடி அனுபவித்து வரும் தன் தமையன் தன்னுடைய பாகத்தைப் பிறித்துக்கொடுக்க மறுக்கிறதாயும் அதுவிஷயமாய்த் தானும் தன்தமையனும் 5-6 வருஷகாலமாய் சச்சரவுசெய்துகொண்டு வருவதாயும கண்டிருக்கிறான். தன்வாக்குமூலததில், தன்தமைமன் குடும்பசொத்துக்கள் முந்தியேபாகமாகி விட்டதென்றும் தமையன் இனிததனக்குக் கொடுக்க வேண்டியது யாதொன்றும் கிடையாதென்றும் நிராகரிக்கிறதாயும் சொல்லியிருக்கிறான்.

சேலம்ஜில்லா கோர்ட்டார் அவனுடைய விண்ணப்பததில் சொல்லியிருக்கும் ஸ்டேட்மெண்டைப் பார்க்குமிடத்து அவனை இன்ஸால்வென்ட் (பாபர்) என்று தீர்மானிக்கக்கூடாதென்றபிப்பிராயப்பட்டு அவனுடைய விண்ணப்பத்தை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். அதன்மேல் மனுதார் மதராஸ் ஹைகோர்ட்டில் அப்பீல்செய்ததில் ஜில்லாகோர்ட்டாரின் தீர்மானம் தப்பல்லவென்று தீர்மானிக்கப்பட்டு அப்பீல் தள்ளுபடியாச்சுது.

மாகாண இன்ஸால்லென்ஸி ஆக்ட் 11-வது பிரிவு, உட்ப்பிரிவு (1) க்ளாஸ் (a) இல் சொல்லியபடி, ஒருவன் தன்னுடைய கடன் துகைகளைச் செலுத்த சக்தியற்றவனுக யிருப்பதாய்த் தெரிவித்தால் கோர்ட்டார் அவனை இன்ஸால்வெண்டென்று தீர்மானிக்கவேண்டுமென்றும், இன்ஸால்வென்ஸி நடவடிக்கையால் ஏற்படும் சிலாக்கியத்தை தப்பாகப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளும்படி, ஒரு கடனாளியின் விண்ணப்பத்தின்பேரில் அவனை இன்ஸால்வெண்ட்என்று தீர்மானிப்பது அயுக்தமானுலும், இந்தக்கேசில் மனுதார்தன்னை டி. மு. கோர்ட்டார் உத்தரவின்மேல் வாதி கடனைக் கொடுக்கும்படி ரொம்பவும் நிர்பந்தமாய்த் தொந்தரவு படுத்துகிறபடியால், வேறு விஷயததிற்காக இன்ஸால்வென்ஸி விண்ணப்பத்தில்கிடைக்கக்கூடிய அனுகூல உத்தரவை உபயோகப்படுத்திக்கொள்ளும் கெட்ட எண்ணமில்லாமல், தன்சரீர நன்மையையும் மானத்தையும் காப்பாற்றிக்கொள்வதற்காக இந்தவிண்ணப்பம் கொடுக்கப்பட்டதாயும், **கடனைந்தீர்க்க சந்தியற்றவனும்**, என்றவசனத்திற்கு, கடன் துகைக்குக் கம்பியாகசேகரிக்கத்தக்க ஆஸ்தியிருந்திருக்க வேண்டிய அவசியமில்லையென்றும், ஒருவன் தன் கடனைத்தீர்க்கும்பொருட்டு ஆஸ்தியை சுலபமாய் சேகரித்துக்கொள்ளக் கூடாதபட்சத்திலும் கடனைத்தீர்க்கச்சக்தியற்றவனுக பாவிக்கப்படவேண்டுமென்றும், இந்தக்கேசில் மனுதாரின் தமையன் மனுதாரின் சொத்து பாகத்தைக்கொடுக்காமல் ஆக்ஷேபிக்கிறபடியால் மனுதாரைக் கடனைதீர்க்க சக்தியற்ற நிலமையிலிருப்பவனுகவே நினைத்து அவனை இன்ஸால்வெண்டு என்று தீர்மானிக்கவேண்டியதுகோர்ட்டார் கடமையென்றும், மனுதாருக்காக வக்கில் மிஸ்டர் டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியவர்கள் எடுத்து வாதம்செய்தார்கள். தவிற

22 மதராஸ் லாஜர்னல் 22-யும் அதாவது 36 மதராஸ் 402-யும், 15 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 990-யும், 32 அலகபாத் 645-யும் ஆதாரமாகக் கண்பித்து, திருஷ்டாந்தரமாக மனுதாரின்ஸ்டேட்மெண்டில் தன்கடன்களில் சிலவைகள் பவந்தமானவையென்ற காரணத்தால் கடனைத்தீர்க்க சக்தியற்ற தன்மைபொய்யாகுமென்றாலும், கோர்ட்டார் அவனை இன்ஸால்வெண்டென்று தீர்மானிக்கமறுதளிக்கக் கூடாதென்றும் வாதிக்கப்பட்டது. அந்தவாதங்களை ஏற்றுக்கொள்ளாமல், ஹைகோர்ட்டார் தீர்மானத்தில் சொன்னதாவது:—

மனுவிலேயே கடனைவிட ஆஸ்திமிக்க அதிகமென்று விளங்கியிருக்க மனுதார் கடனைத்தீர்க்க சக்தியற்றவன் என்பது பிரத்தியக்ஷமான பிசகாகுமாவென்பது இந்தக்கேசில் கவனிக்கவேண்டிய விஷயம், வித்தியாசம் கணக்குப்பிசகல்ல. இன்ஸால்வென்ஸி ஆக்ட் 11-வது பிரிவில்கண்டபடி "கடனைத்தீர்க்கச் சக்தியற்ற" என்றவசனத்தின்கருத்தை விளக்கும்படியான தீர்மானங்கள் (அதாரிடிகள்) யாதொன்றும் எடுத்துக் காண்பிக்கப்படவில்லை. பொதுவாய் ஒருவனுடைய கடன் ஆஸ்தியைவிட அதிகப்பட்டால் அவனை இன்ஸால்வெண்டென்று சொல்லப்பட்டாலும், ஒரு பாக்கிதார் யாதொருவனை இன்ஸால்வெண்டென்று தீர்மானிக்கும்படியும் (அவனுடைய கையிருப்பு ஆஸ்தியை உடனே கடனுக்காகப்பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்றும்) விண்ணப்பம் செய்வதற்கு அவன் கடன் ஆஸ்தியைவிட அதிகமாய் இருக்க வேண்டுமென்பதவசியமில்லை; ஆனால் இன்ஸால்வென்ஸி ஆக்ட் 4-வது பிரிவில் சொல்லியபடி, இன்ஸால்வெண்டாகத் தன்னைப் பாவிக்கத்தக்க யாதொரு நடத்தையால், கடனாளி நடந்துகொண்டாலே பாக்கிதார் மேற்கூறியபடி விண்ணப்பம் செய்து பரிகாரம் தேடிக்கொள்ளலாம். கடனாளி தன்னை ஒரு இன்ஸால்வெண்டாகத தீர்மானிக்கும்படி விண்ணப்பம் கொடுத்தால் (அவனுடைய கடன் ஆஸ்தியைவிட கம்மியாயிருந்தாலும்) கடனாளியின் அந்த விண்ணப்பநடவடிக்கையே பாக்கிதாரனுக்கு ஆதாரமாகும். அதையிட்டு பாக்கிதாரன் மேற்கூறியபடி விண்ணப்பம் கொடுக்கலாம். பாக்கிதாரன் விண்ணப்பம் செய்துகொள்ள எந்தெந்த ஆதாரங்களுண்டோ அவைகளெல்லாம் கடனாளிக்காதாரமாகமாட்டாது. கடனாளி தன்னுடைய சொத்துக்களைக்கொண்டு கடனைத்தீர்க்காமலிருக்கும் பட்சத்தில் அவ்விதமானகடனை தீர்த்துக்கொள்ளும் பொருட்டு பாக்கிதாரர்களுக்கு சகாயம் செய்யவேண்டியது சட்டத்தின் ஒரு முக்கிய நோக்கமாகும். கடனாளி தன்னை இன்ஸால்வெண்டென்று வெளிப்படுத்திக்கொண்டதினாலேயே அவனைக் கோர்ட்டார் அவ்விதமாய்த் தீர்மானிக்கக் கடமைப்பட்டவர்களல்ல.

இன்ஸால்வென்ஸி ஆக்டிற்குறிய அம்சங்கள் இயற்கையாய் ஜனப்பொதுப்பழக்கத்தில் நடைபெற்றுவரும் (Common law) சட்டமாகாது. ராஜாங்கத்தார் கடன்காரர்களை பாக்கிதாரர்கள் அனாவசியமாய் நிர்பந்தப்படுத்தித் தொந்தரவு செய்யாமல்படிக்குப் பாதுகாக்க வேண்டுமென்ற கருத்தோடும், ஒருவன் தன்நாட்டுக்குறிய கடமைகளையனுசரித்து நடக்கவேண்டிய காரியங்களைக் கவனித்து நடத்தும் வண்ணம் அவனைக்கடன்பாக்கிக்காரர்களுடைய ஹிம்ஸையிலிருந்து ரக்ஷிப்பது ராஜாங்கத்தாருடைய பொறுப்பாகுமென்று உணர்ந்து மேற்கூறிய சட்டம் ஏற்படநேரிட்டிருக்கிறது. உரோமன்லாப்படிக்கு கடனாளி குற்றவாளியாக பாவிக்கப்பட்டான். அவனுக்குக்காவல் தண்டனைமட்டுமல்ல, ரோமன்லாப்படிக்கு சரீர வதையுமேற்படிருந்தது. தற்காலத்திலும் கடனாளியின் அந்தஸ்து குறைவாகவே மதிக்கப்படுகிறது. ராஜாங்கத்தாருடைய அவசியமான நோக்கத்திற்காக சட்டங்களேற்பட்டதுமன்றி ஆதிகாலங்களில் கடனாளியே விண்ணப்பங்கொடுக்க லாயக்கில்லாமலிருந்தும் 1849-வருஷத்திய ஆக்டில் கடனாளியும் விண்ணப்பங்கொடுத்து கடன் தன்ஆஸ்திகளைவிடஅதிக சம்மியாகயிருக்கும் காரணத்தைச் சொல்லி தன்னை இன்ஸால்வெண்டென்று தீர்மானிக்கும்படி கேட்டுக்கொள்ளலாமென்று ஏற்பட்டது. ஆனால் கோர்ட்டார் ஷெ விண்ணப்பத்தில் கண்டபடி **சேகரிக்கக்கூடிய** ஆஸ்தியானது கடனைவிட கம்மியானதாகுமென்று முன்னாடியே நிதானிக்கவேண்டியதவசியமில்லை. விண்ணப்பத்தில் கண்டஸ்டேட்மெண்டில் தப்பிதமிருந்தால் விண்ணப்பதார் அதற்கு ஜவாப்தாரியாகிறான். பொய்யான கணக்குச் சொன்னால்



OF THE RE… BOOKS … '33

தண்டனைக்கு ஆளாகிறான். ஆகையால் அவைகளை வாஸ்தவமென்று நம்பி கோர்ட்டார் கடனாளியின் விண்ணப்பததின்படி அவனை இன்ஸால்வெண்டென்று தீர்மானிக்க வேண்டியதவசியமாகும். ஆனால் விண்ணப்பத்தின் ஸ்டேட்மெண்டிலேயே கடன் ஆஸ்தியைவிட அதிக மில்லையெனத்துலங்காவிட்டாலும் கோர்ட்டார் அவ்வித உத்தரவு செய்யக்கடவர்களல்ல. சில ஆஸ்திகள் சேகரிக்கப்படுவது சந்தேகமென்று கோர்ட்டாருக்குத் தோன்றினால் அந்த ஆஸ்தியைக் கணக்கிலெடுக்காமல் கோர்ட்டார் தீர்மானம் செய்யலாம். தவிற சில ஆஸ்திகள் அதிககாலம் கிறமிந்து கைக்கு எட்டக்கூடியதாயிருக்கும் பக்ஷத்திலும் அதற்கிடையில் கடனாளியை பாக்கிதாரன் ஹிம்ஸிக்காதபடி காப்பாற்றும்பொருட்டு ஷெ ஆஸ்தியைக் கணக்கில் எடுக்காமல் கடனாளியின் விணணப்பத்தின்படி கடனை தீர்க்க சக்தியற்றவனென்று அவனைத் தீர்மானிக்கலாம். கையிலிருக்கும்தொகை அதிக சொற்பமாயிருக்கிற காரணத்தினாலேயே அவனைக்கடன் தீர்கசக்தியற்றவனென்று தீர்மானிக்கக்கூடாது. ஏனெனில் கைபலில்லாத சொத்துக்கள்போக இதரமான சொத்துக்களைச் சேகரிக்கும் அட்மினிஸ்டிரேட்டர் உத்தியோகத்தைக் கோர்ட்டார் வகித்து நடத்தவேண்டிய பாவனையாகிவிடும். ஒருவன் தன் கொடுக்கல் வாங்கல் காரியங்களையும் ஜவேஜிகளையும் மானேஜ்மெண்டு செய்யபிரியமில்லாமல் அல்லது திறமையில்லாமம் போனால் கோர்ட்டார் அதை நடத்திவர எதுகரமாகாது. சில சந்தர்ப்பங்களில் கோர்ட் ஆப்வார்ட்ஸ் ஆக்ட்படி கவர்ன்மெண்டார் மைனர்களின் சொத்துக்களைப் பரிப்பாலித்துவர சட்டம் பிரத்தியேகமாய் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் அவ்வித சிலாக்கியத்தைத் தேடும்படி நமதுநாட்டின் சட்டங்கள் இடம்கொடுக்கவில்லை. மனுதாரின் விண்ணப்பத்தில் சொல்லியிருக்கும் ஸ்டேட்மெண்டைப்பார்க்குமிடத்து சட்டப்படி அவன் கடனைத் தீர்க்காச்சக்தியற்றவனெனத்தீர்மானிக்கலாயக்கில்லாதவனென்றும், தன் சகோதரனிடமிருந்து தன் குடும்பசொத்தில் தன் பாகத்தையடைவதற்கு இந்த விண்ணப்பத்தை ஒரு வியாஜமாகக் கொண்டு மனுதார் நடக்கிறதாகதோன்றுகிறபடியால் அவனை இன்ஸால்வெண்டென்று தீர்மானிப்பது உசிதமன்று. தன்னுடைய பாகத்தைப் பராதீனப்படுத்தித் தொகைகள் புறிந்து கடனைத்தீர்க்கக்கூடாதபடி யாதொரு இடையூரும் மனுதாருக்கு ஏற்பட்டிருக்கிறதாக துலங்கவில்லை. (தன்சுவாதீனத்திலில்லாத போதிலும் தன்பாகத்தை யாருக்கும் அடமானம் வைத்துக் கடன்வாங்கி மற்றக்கடன் மொல்லையைத்தீர்த்துவிடலாமே.) அப்படிச்செய்யாமல் இன்ஸால்வென்ஸி கோர்ட்மூலமாய் தன் குடும்பசொத்துக்களைப் பிரித்துக்கொள்ளப் பிரயத்தனப்படுவது சரியல்ல. கோர்ட்டார் பிறப்பிக்கும் உத்தரவை தப்பானவகைக்குப்பிரயோஜனப்படுத்திக்கொள்ளாதபடி பார்க்கவேண்டியது கோர்ட்டாரின் கடமை.

தவிற ஸிவில்வாரண்டில் அரஸ்ட்செய்யப்படும் ஒவ்வொருவனையும் இன்ஸால்வெண்டாகத்தீர்மானிக்கவேண்டுமென்று வாதிக்கப்பட்டது. அதற்காதாரமாக ஸி. பி. ஸி. 54-வது பிரிவு 4-வது கிளாஸின் வசனங்கள் எடுத்துக் காண்பிக்கப்பட்டன. அதாவது அரஸ்ட்செய்து ஒருவன் கோர்ட்டார் முன் கொண்டுவரப்பட்டால் இன்ஸால்வென்ஸி ஆக்டின் விதிப்படி பரிகாரம் தேடிக்கொள்ளலாமென்று கோர்ட்டார் அவனுக்குத் தெரிவித்து அவன் அப்படிச்செய்வதாய் சம்மதித்தால் அவனை ஜாமீனில் விடுதலைசெய்து அப்படி அவன் நடக்காதபட்சத்தில் மறுபடி அரஸ்ட்செய்து சட்டப்படி கோர்ட்டார் நடத்தலாமென்று ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் கேவலம் வாரண்டில் அரஸ்ட்செய்த காரணத்தாலேயே அவனை இன்ஸால்வெண்டென்று தீர்மானிக்கக் கூடாது. ஆக்டின்படி வேண்டிய தகவல்களைக் கொடுத்து கோர்ட்டாருக்குத் திருப்திப்படுத்தினாலொழிய அவ்வித உத்தரவு பிறப்பிக்கவேண்டிய அவசியமில்லை. உடனே தொகையை சேகரித்துக் கடனைத்தீர்த்து தன்னை விடுதலைசெய்துகொள்ள சக்தியும் சவுகரியமும் ஏற்படாத பட்சத்தில் ஸிவில்புரொஸிஜர்கோட்ஆர்டர் xxi ரூல் 40-இன்படி கோர்ட்டார் ஏழமையினாலாவது அல்லது வேறு போதுமான காரணத்தாலாவது ஒருவன் கடன் தொகையைச்செலுத்த சக்தியற்றவனாயிருந்தவனை விடுதலை செய்யும்படியாவது

அவனை அரஸ்ட் செய்ய உத்தரவுகொடுக்காமல் படியாவது தகுதியான ஏற்பாட்டின்பேரில் கடனாளிக்கு உதவிசெய்யலாம். அவ்விதமாய் மனுதார் கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ள நியாயமிருக்க ஜெயிலிலிருந்து விடுதலையாவதற்கு இன்ஸால்வென்ஸி விண்ணப்பம் கொடுக்கத்தேவையில்லை.

ஆகவே மேற்கூறிய கருத்துள்ள காரணங்களைச்சொல்லி அப்பீலை ஹைகோர்ட்டார் தள்ளுபடிசெய்து விட்டார்கள்.

—:O:—

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

**கிருஷ்ணா ஜில்லா.**

## S. A. No. 1365 of 1912–31 ஜூலை 1943.

நாராயணசாமி நாயுடு Vs நம்புரிபத்திரி ராஜா.

நரஸப்பூர் ரெவினியூ கோர்ட்டில் பைசலான சம்மேரி நம்பர் தீர்ப்பின்பேரில் கிருஷ்ணாஜில்லா கோர்ட்டில் அப்பீல் தாகல் செய்யப்பட்டு அப்பீல் நோடீஸானது எதிரிக்கு அனுப்பபட்டு அது சார்வாகாதபடியால் அப்பீல் வாதி மறு நோடீஸ் அனுப்பும்படி அப்பீல்கோர்ட்டாருக்கு விண்ணப்பம்செய்து அதற்கு வேண்டியபடிகட்டி எதிரியின் சரியானவிலாசத்தைக் குறித்துக்காண்பிக்கத் தாமதப்பட்டதால் கோர்ட்டார் முறைப்படி ஷை அப்பீலைத் தள்ளுபடிசெய்வதற்காக ஈரங்கிப்பலகையில் குறிப்பிட்டு அப்படிக் குறிப்பிட்ட தேதியில் அப்பீல் தள்ளுபடியானதாக உத்தரவளித்தார்கள். அதன்பேரில் அப்பீல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல்செய்ததில் பிறந்த உத்தரவின் அம்சமாவது:— அப்பீல்வாதி அப்பீல் மிமோவில் குறிப்பிட்டிருந்த எதிரியின் விலாசம் தப்பானதென்றதாக ரிகார்ட்டில் துலங்கவில்லை. ஸிவில் புரொஸிஜர்கோட் ஆர்டர் 9-ரூல் 5-இல் பிரதிவாதிக்கு அனுப்பப்படும் சம்மன்ஸ் சர்வாகாமல் வாபிஸ் ஆகிவிட்டால் அப்படிவாபிஸ் (ரிட்டரன்) ஆனதேதி முதல் ஒருவருஷத்திற்குள் வாதி மறு சம்மன்ஸ் அனுப்பும்படி விண்ணப்பம்செய்து கொள்ளவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஷைவிதியானது அப்பீல் நடவடிக்கையிலும் அனுசரிக்கப்படவேண்டுமென்று அதாவது அப்பீல் நோடீஸ்விஷயமாயும் அப்பீல்வாதி அந்த ஒருவருஷக் கெடுவுக்குள் மறுநோடீசுக்காக விண்ணப்பம்செய்து கொள்ளவேண்டுமென்று ஆர்டர் 41-ரூல் 14-இல் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாய் கீழ்கோர்ட்டில் அலுவல்கள் சுருசுருப்பாயும்வீண் தாமதமன்னியிலும் நடைபெற்று வரும்பொருட்டு பிறப்பிக்கிற உத்தரவுகளில் ஹைகோர்ட்டார் தலையிடப் பிரியமில்லாதவர்களாயிருந்தும் ஆர்டர் 9-ரூல் 5-இன் ஒரு சிலாக்கியத்தை அப்பீல் வாதிக்குக் கொடுக்கவேண்டிய தவசியமாகும். அந்த விதியின் கொள்கையை நிராகரிக்கக்கூடவில்லை. ஆகையால் அப்பீல் கோர்ட்டார் அப்பீல் வாதிக்கு ஒருவருஷ வாய்தாகடந்து போகாத காரணத்தால் மறுநோடீஸுக்காக புதிய விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு எதிரிக்கு நோடீஸ் அனுப்பி சட்டப்படி அப்பீலை தீர்மானக்கவேண்டுமென்று உத்தரவளித்தார்கள்.

---

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவஅய்யர்)

**பல்லாரி ஜில்லா.**

## Referred Case No. 76 of 1913—10 செப்டெம்பர் 1913.

பல்லாரி ஜில்லா அடிஷனல் ஸெஷன் கோர்ட்டாரால் காமாக்ஷிம்மாள் என்ற குற்றவாளி தண்டிக்கப்படும் சமயத்தில அதாவது கோர்ட்டார் அவளுக்குத்தண்டனை தீர்ப்புவிதிக்கும் காலத்தில் எழுதப்பட்டிருந்த ஜட்ஜ்மெண்டு (தீர்ப்புரிகார்டு) காணாமல் தவறிப்போய்விட்டபடியால், அவ்விதமாய்த்தான் கொடுத்த தீர்ப்பின்மேல் எதிரி அப்பீல் செய்யாதிருக்க கோர்ட்டார் மதராஸ் ஹைகோர்டுக்கு ஷை தீர்ப்பின்படி விதித்தண்டனை நிலைக்கத்தக்கதாவெனச் சந்தேகப்பட்டு [எதிரி தீர்ப்பின்பேரில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்வதாயிருந்தால் கட்டுகளையெல்லாம் ஸெஷன் கோர்ட்டார் ஹைகோர்ட்டுக்கு அனுப்பவேண்டியிருக்க அதில் தீர்ப்புரிகார்டு காணாமல் போயிருப்பதால் கோர்ட்டார் மேல் கண்டவிதமாய் எதிரி அப்பீல்செய்து கட்டுகளை வரவழைத்துக் காணாமல்போன விஷயத்தைத் தெரிந்துகொள்ளுமுன் கோர்ட்டார் தன்னிச்சையாகவே ஷை தீர்ப்புதண்டனை விதிக்கும் காலத்திலேயே காணாமல் போய்விட்டதாயும் ஆகையால் ஷை தண்டனை நிலைக்குமாவெனச்சந்தேகித்து] ஹைகோர்ட்டாருக்கு ரிபர்செய்து உத்தரவை அபேக்ஷித்தார்கள்.



அதன்மேல் ஹைகோர்ட்டார் செய்த உத்தரவின் சுருக்கமாவது:—

ஒரு கேசில் சம்பந்தப்பட்ட சில முக்கிய ரிகார்டுகள் காணாமற்போன காரணத்தால் அக்கேசை விஜாரித்த ஸெஷன் ஜட்ஜியவர்களின் தண்டனைத் தீர்மானத்தை ரத்துசெய்து புனர்விஜாரணை நடத்தும்படி ஹைகோர்ட்டார் உத்தரவளிக்கவேண்டுமென்ற சட்டவிதியாதொன்றும் கிடையாது. தண்டனையின்பேரில் எதிரி அப்பீல் செய்யுங்கால் அவசியமானால் ஹைகோர்ட்டார் பிரவேசிக்கப்போதுமான சமயமுண்டாகும். தீர்ப்பளிக்கும் காலத்தில் கேசைச் சேர்ந்த ஒவ்வொரு ரிகார்டும் கோர்ட்டில் ஆஜரில்லாவிட்டால் ஷை தீர்ப்பு பயனற்றதென்றாவது அது ரத்தாகத்தக்கதென்றாவது, மேற்படி விஜாரணையே அதிகாரவரம்பற்றதாகவாவது, அதன் பேரில் பிறந்த தண்டனைத்தீர்ப்பும் அதிகாரவரம்பின்றியளிக்கப்பட்டதென்றாவது சொல்வதற்காதாரமாக சட்டமுறையாதொன்றும் ஏற்படுத்தப்படவில்லை. எதிரி தனக்குக்கிடைத்த தீர்மானத்தைப்பற்றி திருப்தியடைந்து அதன்மேல் அப்பீல் செய்யாவிடில் ஹைகோர்ட்டார் அந்தத் தீர்ப்பின்பேரில் பிரவேசிக்க நியாயம் கிடையாது. (எதிரி அப்பீல் செய்யாவிடில் தீர்ப்பை சரியென்று ஒப்புக்கொண்ட பாவனையாகிறது. அப்பீல் செய்ய அசந்தர்ப்பம் சக்திக்குறைவு, முதலிய காரணங்களினால் அப்பீல் செய்யப்படாமல் போனாலும் சட்டப்படி பார்க்குமிடத்து ரிகார்டானது அப்பீலில் மாறாத காரணத்தால் எதிரி தீர்ப்பை ஒப்புக்கொண்ட பாவனையாகும்.) கிரிமினல் புரொஸிஜர் கோட் 366-வது பிரிவில் கோர்ட்டார் தீர்ப்பைக்கோர்ட்டில் பைரங்கமாய் வாசிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு அதைப்பற்றி சில முறைகளும் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த முறைகளில் தீர்ப்பளிக்கும்காலத்தில் ரிகார்டெல் கைசோர்ந்து போகாமலிருக்கவேண்டுமென்றாவது தீர்ப்பில் ஒரு பாகம் அதாவது, தண்டனையை விதிக்கும் பாகம் மாத்திரம் வாசிக்கப்பட்டால் அந்தத் தீர்ப்புசட்ட விரோதமென்றாவது சொல்லப்படவில்லை. (1398) 2-வீயர்ஸ் கிரிமினல் ரூலிங்கஸ் 711-இன் 712-வது பக்கத்தில், தீர்ப்பில் ஒரு பாகத்தைப்படிக்காத பிசகானது 537-வது பிரிவின்படி சமாதானமாகத்தக்க ஒழுங்கீனமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 1-பம்பாய் 117-இன் 118-ம் பக்கத்தில் தீர்ப்பேயெழுதப்படாமல் 5-எதிரிகளைக் கோர்ட்டார் தண்டித்திருக்க அவர்களால் அப்பீல் செய்யப்படாமலிருந்தமையால், அந்த தீர்ப்பை மாற்றும்படி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டார் எழுதிக்கேட்டதற்கு, பம்பாய் ஹைகோர்ட்டார் பிரவேசிக்கமாட்டோமென்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வைந்து குற்றவாளிகளில் ஒருவன்மட்டும் பின்னால் அப்பீல் செய்ததமையால் ஹைகோர்ட்டார் ஷை தண்டனையைப்பற்றி பிரவேசித்துஉத்தரவளித்திருக்கிறார்கள். இது 1-பம்பாய் 160-இல் ரிபோர்ட் செய்யப்பட்டிருக்கிறது. 8 கல்கத்தா லா ஜர்னல் 521-இல் தீர்மானித்திருக்கிறபடி தீர்ப்புரிகார்டு காணாமல் போனால் கோர்ட்டார் ஞாபகத்தைக்கொண்டும் மற்ற ஆஜர் ரிகார்டுகளைக்கொண்டும் வேறு தீர்ப்பை எழுதி அந்த ஸ்தானத்தில் வைக்கலாம். 11 கல்கத்தா லா ஜர்னல் 243 இன் 248-ம் பக்கத்தில் ஒரு கேசின் ரிகார்டுகள் காணாமல் போனாலும் அழிந்துபோனாலும் அவைகளுக்குப் பிரதியாக ரிகார்டுகளைப் புதுப்பித்து வைக்கலாமென்ற ஒரு அதிகாரம் கோர்ட்டாருக்கேற்பட்டிருக்கிறதாக பல அதாரிடிகள் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறதும் தவிர அவ்விதமாய் ரிகார்டுகளைப் புதுப்பிக்குமுன் தீர்ப்பின் அம்சங்களை நிறைவேற்றலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஒரு அதிகாரம் சட்டமுறையால் ஏற்படுத்தப்படதேவையில்லையென்றும், அது கோர்ட்டாரின் பொதுவான அதிகாரவரம்பிலடங்கிய ஒரு அதிகாரமாகுமென்று Black என்றவர் ஜட்ஜ்மெண்டுகளைப் பற்றி எழுதிய நூலின் 1-வது வாலியூம் 125-வது பிரிவில் சொல்லியிருக்கிறார்கள். மேற்கூறியபடி கோர்ட்டார் வேறு தீர்ப்பு எழுதிவைக்கலாமென்றும் எழுதிவைத்த தீர்ப்பின் முழுவதையும் படிக்காமல் அளித்த தீர்ப்பு ரத்தாகத்தக்கதல்லவென்றும்

கொடுத்திருக்கிற அபிப்பிராயம் பிசகாயிருக்குமானாலும், இந்தக் கேசில் எதிரி அப்பீல் செய்கிறாரா என்று அதற்குக்காலாவதி யிருக்குமட்டும் காத்திருக்கவேண்டியது அவசியமாகும். ஆகவே ஸெஷன் கோர்ட்டார் அனுப்பிய மிகுதிரிகார்டுகள் வாபிஸாச்சுது. அப்பீல் வாய்தாகடக்காதபடியால் மேல்கண்ட விதமாய் உத்தரவளிக்கப்பட்டது போலாகும்.

———:0:———

## புல் பெஞ்சு கேஸ்

*(சீவ்ஜஸ்டிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட்)*

*வெங்கட்டரமணராயனிம்காரு Vs பலவய்யா*

பிரதிவாதிகள் அக்கிரமமாக அதாவது டிக்கிரீ பாக்கிக்காரனுக்குச் சொந்தமில்லாத, வாதியினுடைய நிலத்தையும் அதின் மேலிருந்த பயிர்விளைச்சலையும் சேர்த்து 1906 டிசம்பர் 15-இல் ஜப்திசெய்து டிக்கிரீ பாக்கியை வசூலிக்க யத்தனித்தார்கள். ஜப்தி நிலைத்திருந்த காலததில் மாசூலின் சிலபாகம் களவுபோய், சிலபாகம் சரியான காலத்தில் அறுவடையாகாமல் சாவியாகப் போய், தேரினமட்டில் மிகுதியான மாசூல் ஏலம் போடப்பட்டு வசூலானதுகை பிரதிவாதிகள் வசம் ஒப்பிவிக்கப்பட்டது. வாதி தன்னுடைய நிலபாத்தியதையைப் பற்றி அசல் தாவாசெய்து 1909 செப்டம்பர் 22-இல் அனுகூலடிக்கிரீ பெற்றார். அதன்மேல் பிரதிவாதிகள் அக்கிரமமாய் ஜப்திசெய்த காரணத்தால் வாதி தனக்கு நேர்ந்த மாசூல் நஷ்டத்தை பிரதிவாதிகள் கொடுக்கவேண்டுமென்று அசல் தாவா செய்தார். வாதியின் தாவாவுக்கு வியாஜ்ஜியமூலம் ஜப்தியான தேதி அல்லது நிலபாத்தியதை ஏற்பட்ட டிக்கிரீ தேதி ஆகிய இருவகையாக பிராதில் சொல்லப்பட்டிருந்தது. பிரதிவாதிகள் வாதியின் தாவாவுக்கு வியாஜ்ஜியமூலம் ஜப்தியான தேதி யென்றும் அதற்குக் காலாவதி, லிமிடேஷன் ஆக்ட் 36-வது ஆர்டிகில்படி 2-வருஷம் தானென்றும் அப்படிப்பார்த்தால் பிராதுக்கு காலாவதி தோஷமாகிறதென்றும் எதிர் வாதம் செய்து அந்த விஷயத்தைப் பற்றி கீழ்கோர்ட்டுகளிலிருந்து ஹைகோர்ட்டுக்கு சில்லரை மனு அப்பீல் செய்யப்பட்டு அங்கு ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும், ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவஅய்யரவர்களும் (**C. M. A. 54 of 1913**) ஈரங்கிகேட்டு இருவரும் வித்தியாஸமான அபிப்பிராயம் கொண்டார்கள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்கள் வாதிக்கு வியாஜ்ஜியமூலம் நிலபாத்திய டிக்கிரீ தேதியாகிய 22-செப்டம்பர் 1909 என்றும் தாவா 1909 நவம்பர் 18-இல் தாகல் செய்யப்பட்டபடியால் பிராதுக்குக் காலாவதி தோஷமே கிடையாதென்றும் தீர்மானித்தார்கள். மற்றொரு நியாயதிபதியோ வாதிக்கு வியாஜ்ஜியமூலம் ஜப்திசெய்யப்பட்ட தேதியாகிய 15-டிசம்பர் 1906 என்றும் அதற்குக் காலாவதி ஆர்டிகில் 36-இன்படி இரண்டு வருஷமென்றும் அல்லது ஆர்டிகில் 29-இன்படி காலாவதி ஒரு வருஷமென்றும், பிராது ஷை வியாஜ்ஜியமூலத்தின் தேதியிலிருந்து இரண்டு வருஷங்கள் கடந்த பின் தாகல் செய்யப்பட்டதால் அதுகாலாவதி தோஷமடைந்ததாயும் ஆகையால் பிராது தள்ளுபடியாகவேண்டியதென்றும் தீர்மானங்கொடுத்தார்கள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களுடைய தீர்மானம் ரூல்ஸ்படி நிலைத்தமையால் பிரதிவாதிகள் அந்தத் தீர்ப்பின்மேல் லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் செய்யவே ஷை அப்பீலானது மூன்று நியாயாதிபதிகள் முன்னிலையில் ஈரங்கியாகி ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் மற்ற இருவருடைய ஒத்தபிப்பிராயம் பெற்று வாதிக்கு வியாஜ்ஜியமூலம் ஜப்தியான தேதியென்றும் ஆனால் அதற்குக் காலாவதி ஆர்டிகில் 39-இன்படி மூன்று வருஷமென்றும் ஆகையால் பிராதுக்குக் காலாவதி தோஷம் கிடையாதென்றும் வாதுக்கனுகூலமாய்த் தீர்ப்பளித்தார்கள்.

(லிமிடேஷன் ஆக்ட் 29, 36, 39, 49-ஆகிய நான்கு ஆர்டிகில்களின் அம்சங்கள் இந்த அப்பீலில் கவனிக்கப்பட்டு தீர்மான மாகியிருக்கிறபடியால் அந்த ஆர்டிகில்களின் சட்டவிதியை எடுத்தெழுதுவதவசியமாகும்:—

**ஆர்டிகில் 26:**— அக்கிரமமாய் கோர்ட்டாரின் உத்தரவைப்பெற்று ஒருவனுடைய ஜங்கம சொத்தை அபகரித்துக்கொண்டால் அதற்காக காம்பன்ஸேஷன் பெறுவதற்கு அவ்விதமாய் அபகரித்த தேதிமுதல் ஒரு வருஷகாலாவதியுண்டு.



**ஆர்டிகில் 36:**—ஒருவன் யாதொரு உடன்படிக்கையை அனுசரித்திராதவண்ணம், செய்யவேண்டிய காரியத்தை செய்யாமல் அல்லது தப்பாகச் செய்து அல்லது கெடுதி சம்பவிக்கும்படி ஒரு காரியத்தைச்செய்து மற்றொருவனுக்கு நஷ்டமுண்டாக்கினால் அதற்காகக் காம்பென்ஸேஷன் அடைவதற்கு அந்நஷ்டத்தை நடந்த தேதிமுதல் 2-வருஷகாலாவதியுண்டு.

**ஆர்டிகில் 39:**— ஒரு ஸ்தாவர சொத்தின்மேல் துராகிருதமாய் பிரவேசித்து அதை அடைந்து அனுபவித்தால் அதிநிமித்தம் மற்றொருவனுக்கு நேர்ந்த நஷ்டபரிகாரத்திற்கு அப்படி துராகிருதமாய் பிரவேசித்த தேதி முதல் மூன்று வருஷகாலாவதியுண்டு.

**ஆர்டிகில் 49:**—சோரம்போகாத, களவுசெய்து அபகரித்த அல்லது கெட்டஎண்ணததுடன் ஸ்வயபிரயோஜனப் படுத்திக்கொண்ட, அசையும்பொருளில்லாத, இதரமான ஒரு குறித்த அசையும் பொருளைத் திரும்பியடையும பொருட்டு அல்லது தப்பிதமாக ஷை ஜங்கமசொத்தை எடுத்துக்கொண்டாலும், அதற்குத் தீங்குசெய்தாலும் அல்லது தப்பிதமாய் அதை சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தாலும் அதனால் நேரும் நஷ்டத்தையடையும்பொருட்டு. ஷை சொத்தானது அபகரிக்கப்பட்ட தேதி, கெடுதி உண்டாக்கின தேதி, அல்லது அதை சுவாதீனமடைந்திருப்பது சட்டவிரோதமென்று ஏற்பட்ட, தேதிமுதல் மூன்று வருஷகாலாவதியுண்டு.

புல் பெஞ்சு கோர்ட்டார் செய்த தீர்மானச் சுருக்கமாவது:—

விளைச்சலை ஜப்திசெய்த காரணத்தால் மாசூல் நஷ்டமாச்சுதென்று, அவ்வித ஜப்தியால் ஏற்பட்ட நஷ்டத்திற்காக இந்த தாவா செய்யப்பட்டிருக்கிறது. எதிரிகள் சட்டவிரோதமாய் யாதொருலாபத்தை அடைந்ததாகவும், அந்தலாபத்தைக் கைப்பற்றி வந்ததாகவும் அதைத் திரும்பியடையக்கொண்டுவரப்பட்ட தாவாவென்று பிராதில் துலங்கவில்லை. மிகுதியிருந்த சொற்ப மாசூலின் கிரயத்தை பிரதிவாதிகள் அடைந்திருக்க அதைத் திரும்பியடைய பிராதில் பரிகாரம் தேடியிருக்கலாம். (அப்படி செய்திருந்தால் ஆர்டிகில் 29-இன்படி ஒரு வருஷ காலாவதியாகும்) ஆனால் அவ்வித பரிகாரம் தேடப்படவில்லை. வாதிகள் சொல்லுகிறபடி ஆர்டிகில் 39-இந்த தாவாவுக்கு ஏற்றதாகுமென்று அபிப்பிராயப் படுவதற்கு நியாயமிருப்பதாலும், அந்தப்படி பார்க்குமிடத்து பிராது காலாவதி தோஷமடையாதபடியாலும், நிலபாத்தியம் ஏற்பட்ட டிக்கிரீ தேதி வியாஜ்ஜியமூலமா அல்லவா என்ற விஷயத்தைப்பற்றி அபிப்பிராயம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. (ஜப்தி தேதியை வியாஜ்ஜியமூலமாய் எடுத்துக் கணக்கிட்டே காலாவதி பாயிண்டானது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.)

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்கள் சொல்லுகிறபடி ஜப்தி செய்யப்பட்ட காலத்தில் நிலத்தின்பேரில் நின்ற பயிர்விளைச்சலை அசையாப் பொருளென்றே நிதானிக்கவேண்டும். அவ்விதமாகவே இந்தியாவில் பாவிக்கப்படுகிறது. ஆகையால் கோர்ட் மூலமாய் உத்தரவுபெற்று ஷை அசையாப் பொருளின்மீது பிரவேசித்திருந்தாலும் ஷை சொத்து அந்நியனுடையதானபடியால் துராகிருதமாய்ப் பிரவேசிக்கப்பட்டதாக நிதானித்து பிரதிவாதிகளின் நடத்தைக்குப் பரிகாரம்தேட காலாவதி 39-வது ஆர்டிகில்படி மூன்று வருஷமாகும்.

கோர்ட்டாரின் அதிகாரத்தைப் பெற்றதினால் 39-வது ஆர்டிகில் ஏற்காதென்று வாதம்செய்வது நியாயமாய்த் தோன்றவில்லை. 36-கல்கத்தா 141-இல் ஜஸ்டிஸ் தாஸ் அவர்களும் கோர்ட்டார் அனுமதியின்பேரில் தப்பாக ஒருவனுடை
சொத்தை ஜப்தி செய்தமையால் அதற்கு
நஷ்ட பரிகாரத்திற்கு 39-வது ஆர்டிகி
மூன்று வருஷமென்று தீர்மானித்
கள். கோர்ட்டார் அனுமதிபெற்
தால் வாதியின் பரிகாரத்தை
க்குப் புரம்பாய் வைக்கவே
கத்தா கேசில் ஒருவராகு
வில்லை.

பிரதிவாதிகளுக்கா
தீர்மானிக்கப்பட்டிரு

பிக்கப்பட்டது. அதில் வாதியின் பரிகாரத்திற்கு 36-வது ஆர்டிகில்படி 2-வருஷ காலாவதியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு முந்தி மேற்கூறிய கல்கத்தா கேசைத் தீர்மானித்த சீவ் ஜஸ்டிஸ் ஹானரபில் மிஸ்டர் மாக்லீன் துரையவர்கள் 25-கல்கத்தா 692-இல் வாதியின் பரிகாரத்திற்கு ஆர்டில் 39 அல்லது 49-இன்படி மூன்று வருஷ காலாவதியென்று தீர்மானித்திருக்கிறார்கள். அந்த முந்திய அபிப்பிராயத்திற்கு மாறாகப்பின்னால் அதே நியாயாதிபதி தீர்மானித்திருப்பதற்குச் சமாதானம் கண்டுபிடிப்பது கஷ்டமாகிறது.

ஆனால் பிந்திய தீர்மானத்தில் வாதி தன் பரிகாரத்தைவியாஜ்ஜியமூலம் ஏற்பட்ட முதல் ஒரு வருஷத்திற்குப்பின்னும், ஆனால் இரண்டு வருஷங்களுக்குள்ளாகவும்தேடினமையால் அந்தப்பிராதுக்குக் காலாவதி 29-வது ஆர்டிகில்படி ஒரு வருஷமா அல்லது 36-வது ஆர்டிகில்படி 2-வருஷமா என்று மட்டும் கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டிய அவசியம் நேரிட்டது. 2-வருஷத்திற்குள் பிராது செய்யபட்டமையால் 39வது ஆர்டிகில்படி 3-மூன்றுவருஷ காலாவதியைப் பற்றி நிதானித்து யாதொரு தீர்மானம்செய்ய ஏதுகரமில்லாமல்போய்விட்டது. அந்தக்கேசில், வாதியின் பரிகாரத்திற்குக் குறித்த ஒரு ஆர்டிகில் இடையாதென்றும் அதாவது 39-வது ஆர்டிகிலைக்கவனியாது போனாயினும் 2-வருஷங்களுக்குக் குறைந்த காலாவதி ஏற்பட்ட ஆர்டிகிலுண்டாவென்று மட்டும் நிர்ணயமாய் யோசித்துப் பார்க்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அந்தக் கேசை அனுசரித்து பிரதிவாதிகளின் வாதத்தை ஒப்புக்கொள்ள நியாயமில்லை. மிஸ்டர்ஜஸ்டிஸ் தாஸ் அவர்கள் 36-கல்கத்தா 141-இல் தீர்மானித்திருக்கிற அபிப்பிராயத்தை அனுசரித்து வாதியின் பரிகாரத்திற்கு 39-வது ஆர்டிகில்படி மூன்று வருஷ காலாவதியுண்டு. ஆகையால் மிஸ்டர்ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்கள் தீர்மானத்தின்படி வாதியின் தாவா காலாவதியல்லவென்று அபிப்பிராயப்பட்டு இந்த லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் தள்ளுபடியாச்சுது.

பிரதிவாதிகளுக்காக 31-மதராஸ் 431-ம் 23-மதராஸ் லாஜர்னல் 511-ம் எடுத்துக்காண்பிக்கப்பட்டு அவைகள் அசையும் பொருள்களைப்பற்றிய தீர்மானங்களென்றும், இந்தக் கேசில் பயிர் விளைச்சல் அசையாப் பொருளாக பாவிக்கப் படவேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டு அந்த இரண்டு கேசுகளும் பிரதிவாதிகளுக்கு உதவாதென்று ஹானரபில் மிஸ்டர் சீவ் ஜஸ்டிஸ் துரையவர்கள் தீர்ப்பில் எடுத்துக்காட்டினார்கள்.

—:O:—




# Indian Companies' Act VII, Of 1913

1914-ம் வருஷம் எப்பிரல் மாதம் 1-ம் தேதியில் அமோலுக்கு வருகிற,

## இந்தியன் கம்பெனீஸ் ஆக்ட் 7 of 1913

கவர்ன்மெண்டு தமிழ் பிரசுரம் நமது ஆபீஸில் தயாராய் வருகிறது. தேவையுள்ளவர்கள் மானேஜருக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

தபால் செலவுள்பட விலை அணா 9.

நமது சந்தாதார்களுக்கு விலை அணா 7.


(மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் & மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யர்)

மங்களூர் ஜில்லா.

C.M.S.A. 29 & 30 of 1912, 4 எப்பிரல் 1913.

கிருஷ்ண ஹெண்டீ Vs பத்மனாப ஹெண்டீ.

வாதி தன்குடும்ப சொத்துக்களைப்பற்றி ஷை சொத்துக்களை அனுபவித்துவருகிற பலர்களையும் தன்னுடைய ஐந்துபுத்திரர்களையும் இன்னும் மற்றபாகஸ்தர்களையும பிரதிவாதிகளாய்ச் சேர்த்து பாகவியாஜ்ஜியம் தொடுத்து டிக்கிரீபெற்ற பிறகு காலஞ்சென்றுவிட்டார். ஷை டிக்கிரீயில் கண்டிருக்கிறபடி தாவாசொத்துக்கள் பிரிவினையாகுமட்டும் 1-ம் பிரதிவாதி வாதிக்கு வருஷாவருஷம் ஷை குடும்பசொத்தில் விளையும் மாசூலிலிருந்து வாதிக்கு ஒருகுறித்த அளவான நெல்லைக் கொடுத்துவர வேண்டியதாயிருந்தது. அவருடைய ஐந்துபுத்திரர்களி மூத்தவன் 27-ம் பிரதிவாதியாகவும், மைனராகயிருந்த ஐந்தாவது புத்திரன் 32-வது பிரதிவாதியாகவும், மற்ற புத்திரர்களும் 28 முதல் 31-வது பிரதிவாதிகளாகவும் பிராதில் அமைக்கப்பட்டிருந்தார்கள். தகப்பன் காலஞ்சென்றுவிடவே பாகடிக்கிரியை நிறைவேற்றுவதற்கு ஐந்து புத்திரர்களுக்கும் ஒற்றுமைக்குறைவாயிருந்தார்கள். 27-வது பிரதிவாதியாகிய மூத்தகுமாரன் தனக்காகவும் தன் மைனர் சகோதரனாகிய 32-வது பிரதிவாதிக்காகவும் தனியாக ஒரு நிறைவேற்று மனு தாகல்செய்தார். மற்ற புத்திரர்களாகிய 28-31-ம் பிரதிவாதிகளும் ஒன்றுசேர்ந்து பிரத்தியேகமான ஒரு மனுக்கொடுத்தார்கள்.

சப் கோர்ட்டார் வாதியின் புத்திரர்களில் மெஜாரிடி எண்ணிக்கையுடைய 28-31 பிரதிவாதிகள் கொடுத்த மனுவை அங்கீகரித்து அதன்மேல் டிக்கிரீயை நிறைவேற்றும்படி உத்தரவளித்து 27-ம் பிரதிவாதியின் மனுவைத்தள்ளுபடிசெய்து விட்டார்கள். அதாவது ஐவரில் மூவர் சேர்ந்து கொடுத்த மனுவை ஏற்றுக்கொண்டு மற்ற இருவருக்காக ஒரு புத்திரன் கொடுத்த மனுவைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஆனால் நிறைவேற்றுவதில் அனைவரும்ஒற்றுமையாய் நடந்துகொள்ளாதபட்சத்தில்வசூலாகும்தொகையை வாதியின் புத்திரர்கள் அனைவரும் சமபாகமாய்ப் பகிர்ந்து அடையவேண்டுமென்று உத்தரவளித்தார்கள். ஷை மனு ஈரங்கியில் 1-ம் பிரதிவாதி டிக்கிரீ தேதிமுதல் வருஷாவருஷம் கொடுத்துவரவேண்டியிருந்த நெல் விஷயமாய் செய்த எதிர்வாதத்தில் 28-31 பிரதிவாதிகள் தங்கள் விண்ணப்பத்தில் ஒப்புக்கொண்டபடி செல்லான நெல்லைத்தவிர 27-ம் பிரதிவாதியிடமும் சில தடவைகளில் செலுத்திவந்ததாகவும், ஆகவேமொத்தத்தில் செல்லான நெல்போக மிகுதிக்கு மட்டும் நிறைவேற்றுமனுவில் பரிகாரம் தேடலாமென்று வாதித்தார். 27-ம் பிரதிவாதியிடம் செலுத்திய சகலமே மனுதார்கள் (28-31-ம்-பிரதிவாதிகள்) மறுத்தார்கள். 27-ம் பிரதிவாதியோ தன்னிடம் 1-ம் பிரதிவாதி யாதொரு நெல்லும் செலுத்தவில்லையென்றும் 28-31-ம் பிரதிவாதிகளிடம் செலுத்தப்பட்டதாகச்சொன்னதகவல் உண்மையாக யிருந்தபோதிலும் அது சட்டப்படி அங்கீகரிக்கத் தக்கதல்லவென்றும் தான் டிக்கிரீப்படி பூராவையும் நிறைவேற்ற லாயக்குள்ளவனென்றும் வாதித்தார். சப்கோர்ட்டார், 28-31-ம் பிரதிவாதிகள் தாங்கள் பெற்றதாய் ஒப்புக்கொண்ட

நெல் போக பாக்கி யேற்பட்ட நெல்லின் கிறயத்தை கவர்ன்மெண்ட் கெஜட்டில் பிரசுரமாகியிருக்கிற வீதாசாரப்படிக்கு 1-ம் பிரதிவாதி செலுத்தவேண்டுமென்று உத்தரவளித்தார்கள். நெல்லின் கிறயத்தைப்பற்றி வேறுயாதொரு ருஜூபாகமும் ஏற்படவில்லை சப்கோர்ட்டார் உத்தரவின்மேல் ஜில்லாகோர்ட்டுக்கு 27-ம்பிரதிவாதியும் 1-ம் பிரதிவாதியும் தனித்தனியாய் தங்களுக்கு விரோதமான உத்தரவைப்பற்றி அப்பீல் செய்ததில் 1-ம் பிரதிவாதியால் செலுத்தப்பட்டதாய்ச் சொன்ன விஷயம் வாஸ்தவமானாலும் அப்படி செலுத்திய தகவல் கோர்ட்டில் டிக்கிரீவகைக்காக பதிவாகாத காரணத்தால் அது சட்டப்படி செல்வத்தக்கதல்ல வென்று அபிப்பிராயங்கொடுத்து மற்றப்படி சப்கோர்ட்டார் உத்தரவே காயமாச்சுது.

அதன்மேல் ஹைகோர்ட்டுக்கு 2-வது சில்லரைமனு அப்பீல்கள் செய்யப்பட்டு அங்குபிறந்த உத்தரவின் சுருக்கமாவது:—

27-ம் பிரதிவாதி, காலஞ்சென்ற வாதியின் குடும்பத்திற்குத் தலைவனுகையால் நியாயப்படி மேற்படியாரே டிக்கிரியை நிறைவேற்றுவதற்கு லாயக்குள்ளவராகிறார். ஆகையால் 28-31ம்பிரதிவாதிகள் புத்திரர்களில் அதிக எண்ணிக்கையுடையவர்களென்ற காரணத்தையிட்டு நிறைவேற்ற அனுமதிபெற்றது பிசகு. ஆகையால் 27-ம் பிரதிவாதியை தனக்காகவும் மற்ற குடும்பத்தைச்சேர்ந்த யாவருக்காகவும்வேற்றும் நிறைபடி அனுமதி கொடுக்கவேண்டும். 27-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியுடன் உடந்தையாயிருந்து மற்றசகோதரர்களுக்கு விரோதமாய் நடந்துகொள்வதாய் ஆக்ஷேபிக்கப்பட்டது. ஆனால் அது விஷயமாய் யாதொரு விஜாரணையும் நடக்கவில்லை. ருஜூ அம்சம் கிடையாது. அப்படி ஏற்பட்டாலும், 27-ம் பிரதிவாதியிடத்தில் மற்றவர்களுடைய நன்மைக்கு விரோதமாய் நடக்காத வண்ணம் ஜாமீன் பத்திரம் வாங்கியிருக்கலாம். பொதுவாய்க் குடும்பத்தலைவன் தனக்காகவும் மற்ற மெம்பர்களுக்காகவும் நடந்து கொள்ளும் விஷயத்தைப்பற்றி ஜாமீன் வாங்குவதவசியமில்லை. ஆகவே 27-ம் பிரதிவாதியின் நிறைவேற்றுமனு தள்ளுபடியானது பிசகென்று தீர்மானிக்கப்பட்டு அந்த மனுவின்பேரில் நடவடிக்கை நடக்கவேண்டுமென்று உத்தரவாச்சுது.

1-ம் பிரதிவாதி, தான் 27-ம் பிரதிவாதியிடம் செலுதகிய நெல்லைப்பற்றியும் மற்றப்படி தான் செலுத்திய விஷயம் சட்டவிரோதமென்றதைப்பற்றியும் ஜில்லா கோர்ட்டார் செய்த தீர்மானத்தின்பேரில் 2-வது அப்பீலில் ஹைகோர்ட்டார் கொடுத்த அபிப்பிராயச்சுருக்கமாவது:—

27-ம் பிரதிவாதி குடும்பத்தலைவனாயிருக்கையில் 1-ம் பிரதிவாதி 28-31-ம் பிரதிவாதிகளிடம் நெல்லைச் செலுத்தினது பிசகு, 1-ம் பிரதிவாதி 27-ம் பிரதிவாதியிடம் செலுத்தின விஷயத்தை கோர்ட்மூலமாய் டிக்கிரீயில் வரவுவைக்காத போதிலும் அது சட்டப்படி செல்லத்தக்கதாகும் அந்தப்படி 21-மதராஸ் லாஜர்னல் 1088-இல தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்திற்கு விரோதமாய் அபிப்பிராயப்படுவதற்கு நியாயமில்லை. 19-மதராஸ் லாஜர்னல் 4-இல் செய்யப்பட்டிருந்த ஒரு தீர்மானம் பிரிவிகௌன்ஸிலில் மாறிப்போய் விட்டதாய் எதிரிக்காக எடுத்துச் சொல்லப்பட்டது. ஆனால் அந்தக்கேஸில் குடும்பத்தலைவன் ஒரு மைனரைக் கட்டுப்படுத்திச் செய்த ராஜீநாமா கோர்ட்டார் அனுமதிபெருமல் ஏற்பட்டதென்றும் ஆகையால் குடும்பத்தலைவன் நடத்தை சட்ட விரோதமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த தீர்மானம் நியாயமே. ஏனெனில் மைனர் விஷயமாய் ராஜிநாமாசெய்தால் கோர்ட்டார் அனுமதி பெறவேண்டியது சட்ட நியாயத்தைப் பொறுத்ததாகும். ஆகையால் அந்தத் தீர்மானத்தால் மேற்கூறிய 21-மதராஸ் லாஜர்னல் 1088-வது கேஸின் தீர்மானம் தப்பாக ஏற்படாது. டிக்கிரீப்படி ஒருதுகையை செலுத்தும் கடமை ஏற்டால் அதைப்பற்றி கோர்ட்டில் செல்லுவைக்கவேண்டுமென்றும், ஆனால் நெல் கொடுத்துவரும்படி உத்தரவளிக்கப்பட்டால் அப்படி நடந்துகொள்ளும் விஷயதை கோர்ட்டில் பதியவைத்து வரவேண்டிய தவசியமில்லையென்றும் 1-ம் பிரதிவாதிக்காக செய்த வாதம் சரியானதாகும். டிக்கிரீயின்படி ஒருவன் நடந்து கொண்டால் அப்படி



நடந்ததைப்பற்றி அவன் ருஜூப்படுத்த நியாயமாகும். ஆனால் கோர்ட்டில் ரிகார்ட் செய்யாமல் நடந்து கொண்டால் அது சட்டப்படி செல்லாதென்று அனுமானிக்கக்கூடாது. ஆகவே 1-ம் பிரதிவாதி செலுத்தியதாய்ச்சொன்ன விஷயத்தைப்பற்றி கோர்ட்டார் இந்த நிறைவேற்று மனுவில் ருஜூ அம்சமெடுத்துத் தீர்மானம் செய்யவேண்டிய தவசியமாகும். 1-ம் பிரதிவாதி வாதம் செய்தபடி நெல்லின் கிறயத்தைப்பற்றி கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற விகிதத்தை ஏற்றுக்கொள்ளாமல் அது விஷயமாயும் ருஜூ அம்சம் எடுக்கப்படவேண்டும்.

1-ம் பிரதிவாதி, குடும்ப நிலங்கள் தன்வசமிருந்தகாலத்தில் டிக்கிரீயில் குறித்திருந்த சர்க்கார் தீர்வை ரூ 200-க்கு அதிகமான தீர்வை ஷை நிலங்களுக்கு விதிக்கப்பட்டு அந்த அதிகமான துகையைத்தான் செலுத்திவந்ததாகவும் அவ்விதம் செலுத்தப்பட்ட மொத்த துகைக்கு மனுதார் வஜாசெய்யவேண்டுமென்று வாதித்தார்கள். ஆனால் அது டிக்கிரீயில் கண்டிராத அம்சமாகையால் அதைப்பற்றி 1-ம் பிரதிவாதி பிரத்தியேகமான தாவாசெய்துகொள்ளவேண்டுமென்று அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

மேற்கூறிய அபிப்பிராயங்களை யனுசரித்து 27-ம் பிரதிவாதியின் விண்ணப்பத்தின்பேரில் நிறைவேற்று நடவடிக்கை நடத்தப்படவேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது

———:0:———

(மிஸ்டர்ஜஸ்டிஸ் மில்லர் & மிஸ்டர்ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)

**கஞ்சம் ஜில்லா**

**A. S. No. 25 of 1909—12 மார்ச்சு 1913.**

ஸ்ரீ கஜபதி கிருஷ்ண சேந்திரதேயோ

*Vs*

P. ஸ்ரீனிவாஸாசாருலு.

வாதியின் தகப்பனாராகிய கஞ்சம் ஜில்லாவிலுள்ள ஒரு ஜமீன்தாரவர்கள் 1890-ம் வருஷத்தில் காலஞ்சென்ற பிரதிவாதியாகிய டிவான் பஹதூர் P. அனந்தாசாருலு அவர்களுக்கு ஒரு ஜமீன் கிராமத்தை நன்கொடையாக அளித்து அவைகளை ஷை யாருக்குச் சுவாதீனப்படுத்திக் கொடுத்தார். அந்த நன்கொடைப்பத்திரத்தில் கண்ட வசனங்களின்படி ஷை ஜமீன் கிராமத்தை ரெவினியூ ரெஜிஸ்டரில் பிரித்துப் பதிவு செய்துவைத்து கலக்டரவர்களால் தனியாக அதற்குத் தீர்வை விதிக்கப்படுமட்டும் ஜமீன் தாரவர்களே அந்த கிராமத்திற்குறிய தீர்வையையும் செலுத்தி வரவேண்டியதாயிருந்தது. ஜமீனுக்கு மொத்தமாய் தீர்வை விதிக்கப்பட்டிருப்பதால் அந்தமொத்தத் துகையை ஜமீன்தாரே செலுத்தவேண்டியதாயிருந்தது. நன்கொடையளித்த கிராமத்திற்குப் பிரித்து தீர்வை ஏற்பட்டு அது ரெஜிஸ்டரில் பிரத்தியேகமாய் பிரதிவாதியின்பேரில் பதிவான பிறகுதான் பிரதிவாதி அதற்குறிய தீர்வையைச் செலுத்தக் கடமைப்பட்டவனாகிறான். அவ்விதமாகவே தானபத்திரத்தின் ஷரத்தில் கண்டிருக்கிறது. அதாவது:— "ஜமீன்தாராகிய நாம் ஷை கிராமத்தை உம்முடையபேரில் பிரித்துப் பதியவைக்கவேண்டியது. அதன்மேல் அந்தப்பிரிவின்படி விதிக்கப்படுகிற சர்க்கார் பேஷ்கஷ் தீர்வையைத்தாமே செலுத்தவேண்டியது". ஜமீன்தாரவர்கள் 1898-இல் காலஞ்சென்றார். அது மட்டும் தான கிராமம் தனியாய் ரெஜிஸ்டரில் பதியப்படாமலிருந்தும் பிரதிவாதி அதை அனுபவித்துவந்தார். ஆனால் நிலத்தீர்வையை ஜமீன்தாரே செலுத்திவந்தார்கள். 1901-ம் வருஷத்தில் ஜமீன் மைனருக்காக கோர்ட் ஆப்வார்ட்ஸ் ஜமீனை மானேஜ்மெண்டு செய்து வருகையில் ஷை எஸ்டேட் மானேஜர் ஷை கிராமத்தைப் பிரித்துக் கொடுத்து அதற்குப் பிரத்தியேகமாய்த் தீர்வை விதிக்கவேண்டுமென்று ஜில்லா கலக்டரவர்களுக்கு மனுச்செய்தார். அதன்மேல் 1876-ம் வருஷத்திய 1-வது மதராஸ் ஆக்டின்படி ஷை விண்ணப்பத்தைப்பற்றி ஜில்லா கெஜட்டில் நோடீஸ் விளம்பரம் செய்து கலக்டரவர்கள் ஷை கிராமத்திற்கு 1903-செப்டம்பர் 19-இல் ரூ 206—5—3 தகுதியான தீர்வையென்று விதித்து பிரதிவாதிக்கு அவ்விகிதத்தை ஒப்புக்கொள்ளும்படி, அல்லது ஆக்ஷேபணையிருந்தால் தெரிவிக்கும்படி நோடீஸ் அனுப்பினார்கள். அந்த நோடீஸுக்கும் அதற்குப்பின் அனுப்பப்பட்ட பலகடிதங்களுக்

கும் பிரதிவாதி யாதொரு ஜவாபும் கொடுக்காத காரணத்தால் கலகட்ரவர்கள் 1904-இல் எஸ்டேட் மானேஜரின் விண்ணப்பத்தைப் பைசல் செய்யாமல் டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். பின் செப்டம்பர் 1904-இல் பிரதிவாதி தனியான ரெஜிஸ்டர் பதிவுக்குச் சம்மதம் கொடுத்தபடியால் கலக்டரவர்கள் அதன்பேரில் 1905-இல் ஷை கிராமத்தைத் தனியாய்ப் பிரதிவாதி பேருக்குப் பதிவுசெய்து விட்டார்கள். ஜமீன்தாரால் ஷை கிராமத்திற்குறிய தீர்வை 1905-வரையில் செலுத்தப்பட்டு வந்தமையால் இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்டின் 70-வது பிரிவுப்படி ஜமீன் எஸ்டேட்டுக்காக வாதி பிரதிவாதியின் அநுபோகத்திலிருக்கிற நிலங்களுக்குறிய தீர்வையை பிரதிவாதிக்காகசெலுத்திவந்ததாய்சொல்லி, அப்படிச் செலுத்திவந்த துகையாவற்றையும் பிரதிவாதியிடமிருந்து வாபீஸ் அடையும் பொருட்டு கஞ்சம் ஜில்லா கோர்ட்டில் அசல் தாவா செய்தார்கள். ஜில்லா கோர்ட்டார் நன்கொடைப்பத்திரத்தின் கருத்தை உத்தேசித்து தாவா கிராமம் பிரதிவாதியின்பேரில் தனியாக ரெஜிஸ்டர் செய்யப்படுமட்டும் பிரதிவாதி தீர்வை செலுத்த கடமைப்பட்டவரல்லவென்றும் ஆகவே ஜமீன்தார் செலுத்திவந்த துகையைத் திரும்பியடைய நியாயமில்லையென்றும் தீர்ப்பளித்தார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். அப்பீல் தீர்மானத்தின் சுருக்கமாவது:—

ஜமீன்தார் காலம் செல்லுமட்டும், தாமே ஷை கிராமத்திற்குறிய நிலத்தீர்வையை செலுத்திவந்த ஓர் நடத்தையானது நன்கொடைப்பத்திரத்தில் கண்ட வசனங்களுக்கு ஜில்லாகோர்ட்டார் ஏற்படுத்தின கருத்திற்கிசைந்திருக்கிறது. அதாவது கிராமம் ஜமீனிலிருந்து பிரியாதிருக்குமட்டும் நிலவரி ஜமீன்தா[illegible]வேண்டுமென்றகருத்திற் கிசைவா[illegible] ஜமீன்தார் நடந்து வந்திருக்கிறார். ஆனால் ஜமீன்தார் சித்தயானல் ஷை கிராமத்தைத் தனியாய்ப்பிரித்து ரெஜிஸ்டர் செய்விக்கலாம். இவ்விதமாய் ஜமீன்தார் பிரயத்தனப்படும்போது பிரதிவாதியும் அதற்கிசைந்து தனிப்பதிவுக்கு அனுமதி கொடுக்கக் கடமைப்பட்டவருகிறார். வாதி கலக்டருக்கு மனுப்போட்டு 1903 செப்டெம்பர் 19-இல் தாவா நிலங்களுக்குப் விரத்தியேகமான தீர்வை விதிக்கப்பட்டதால் அதற்குமுன் ஜமீன்தாரால் செலுத்தப்பட்டதை வாபீஸ் அடைய நியாயமில்லை. ஏனெனில் கலகட்டருக்கு விண்ணப்பம் செய்யத் தாமதப்பட்டதற்கு பிரதிவாதி காரணமல்ல. பிரதிவாதி அப்படி பிரித்துக்கொடுக்கும் விஷயத்தைப்பற்றி எக்காலத்திலாவது ஆக்ஷேபித்ததாகவும் ஏற்படவில்லை. ஆகையால் 1903 செப்டெம்பர் 19 முதல் தான் பிரதிவாதிக்காக வாதி தீர்வை செலுத்தியதாகச்சொல்லலாம். அதே தேதியில் தீர்வை விதிக்கப்பட்டமையால் நன்கொடை பத்திரத்தின் கருத்துப்படி தாவாகிராமம் பிரிவினையாவதற்கு பிரதிவாதியின் சம்மதத்தைப் பொறுத்து மற்றப்படி அந்த தேதியில் பிரிவினை யானதாகவேபாவிக்கப்படவேண்டும். ஆகையால் அந்த தேதிமுதல் பிரதிவாதிக்காக வாதி தீர்வை செலுத்தியதாக பாவித்து பிரதிவாதி வாதிக்கு அத்துகைகளுக்கு ஜவாப்தாரியாகிறார். காண்ட்ராக்ட் ஆக்ட் 69-வது பிரிவின்படி மற்றொருவன் சட்டப்படி செலுத்தவேண்டிய துகையை ஒருவன் தன்னுடைய நன்மையையும்கருதி செலுத்திவிட்டால் அவன் அத்துகையை மற்றொருவனிடமிருந்து வாபீஸ் அடைய நியாயமுண்டு. ஆகவே ஷை 69 வது பிரிவின்படி வாதி பிரதிவாதியிடமிருந்து 1903 செப்டெம்பருக்குப் பின் செலுத்திய தீர்வைத்துகையை திரும்பியடைய பாத்தியப்பட்டவனாகிறான். ஆனால் வாதி தன் பிராதில் காண்டராக்ட் ஆக்ட் 70-வது பிரிவின்படி துகையை வாபீஸ் அடையக்கோறியிருக்கிறபடியாலும் அந்தப்பிரிவின்படியே வாதிக்கு பரிகாரம் கொடுக்க நியாயமுண்டென்று தோன்றுகிறதாலும் 69-வது பிரிவின்படி அதாவது வாதி தன் நன்மையைக்கருதி செலுத்திய விஷயத்தைக் கவனித்து வாதிக்குப்பரிகாரம் கொடுப்பதைப்பற்றி யோஜிக்கவேண்டிய தவசியமில்லை. தன்னுடைய நன்மைக்காகச்செலுத்திய போதிலும் பிரதிவாதிக்காகச் செலுத்திய விஷயம் தப்பென்று போகாது. தவிர இந்தக்கேசில் வாதி கோர்ட் ஆப் வார்ட்ஸ் ஆகையால் நிலத்தீர்வை பாக்கியை வாதி செலுத்தாதிருந்தால் கலக்டரவர்கள் தாவா நிலத்



தின்பேரிலேயே நடவடிக்கையெடுத்து தீர்வையை வசூலிக்க யத்தனிப்பார்கள். அப்படியிருக்க வாதியின் நன்மைக்குக் குறைவு ஏற்பட நியாயமில்லை. அவ்விதமான ஒருகுறைவை விலக்கும் பொருட்டு வாதிபிரதிவாதிக்காகத் தீர்வைசெலுத்தியதாக நிதானிக்கத்தேவையில்லை.

70-வது பிரிவின்படி பார்க்குமிடத்து வாதி செலுத்தியதுகை, பிரதிவாதி சட்டப்படி செலுத்தவேண்டியதாவென்றும், வாதி பிரதிவாதிக்காக செலுத்தினபோதிலும் அதை பிரதிவாதிக்கு இனாமாகச் செலுத்திவந்தார்களாவென்றும், வாதி செலுத்தியதால் பிரதிவாதியாதொரு நன்மையை அடைந்தாராவென்றும் கவனித்துப்பார்க்கவேண்டும். செப்டெம்பர் 1913-இல் பிரதிவாதிக்குக் கலக்டர் பிரித்து விதிக்கப்பட்ட தீர்வையைப்பற்றி நோடீஸ் அனுப்பியும் பிரதிவாதி ஜவாப் கொடுக்கத்தாமதப்பட்டு 1905 வரையில் தனிரெஜிஸ்டர் பதிவாகாமல் போனபடியால், பிரதிவாதி 1913 செப்டெம்பர் முதல் வாதியால் செலுத்தப்பட்ட தாவா கிராமத்திற்குறிய தீர்வைக்குக் கடமைப்பட்டவராகிறார்.

நன்கொடை தஸ்தவேஜில், கிராமப்பிரிவினையின்பிறகு தீர்வை பிரதிவாதியால் செலுத்தப்படவேண்டுமென்று கண்டிருப்பதால் பிரதிவாதிக்காக வாதி செலுத்திய தீர்வைத்துகையை இனாமாக அளித்ததாக யூகிக்க நியாயமில்லை. தவிர ஷை தீர்வைத்துகை சட்டப்படி செலுத்தப்படவேண்டிய துகையா அல்லவாவென்று இந்தக்கேசில் வாதம்கிடையாது. பிரதிவாதி வாதியால் செலுத்தப்பட்ட நன்மை லாபத்தை அடைந்தானாவென்றாலோ; அந்த நன்மையை ஏற்றுக்கொள்ள பிரதிவாதி எப்பொழுதும் ஆக்ஷேபிக்கவில்லை. கிராமம் தனியாய் ரெஜிஸ்டராகுமட்டும் சுவாதீனத்திலிருந்து அநுபவித்துவந்திருக்கிறார். தனக்காக வாதி தீர்வை செலுத்தத்தேவையில்லையென்று வாதிக்குத் தெரிவிக்கவுமில்லை. தீர்வைப் பிரிவினையையும் கிராமப்பிரிவினைப் பதிவையும் பிரதிவாதி கடைசியாக ஒப்புக்கொண்டுமிருக்கிறார். பிரதிவாதி தன்னுடைய ஸ்டேட்மெண்டில் தன் கிராமத்திற்கு விதிக்கப்பட்டிருக்கிற தீர்வை அதிகமென்று ஆக்ஷேபித்திருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி முன் யாதொரு காலத்திலும் எவரிடத்திலும் தெரியப்படுத்தாதபடியால் அதை ஒப்புக்கொண்டதாகவே ஏற்படும். ஆகையால் பிரதிவாதி வாதியால் செலுத்தப்பட்ட நன்மையை அடைந்த பாவனையாக 70-வது பிரிவின்படி வாதிக்குப் வஜாசெய்துகொடுக்கக் கடமைப்பட்டவராகிறார். இங்கிலீஷ் சட்டமுறைப்படி வாதி தன்னிச்சையாகச செலுத்தின துகையைத் திரும்பியடையத் தேடுவது கூடாதென்று ஏற்பட்டிருக்க, இந்திய சட்டங்கள் அம்முறைகளுக்கு விரோதமாயில்லையெனப் பிரதிவாதிக்காக எடுத்துச்சொல்லப்பட்டது. ஆனால் நமது இந்தியன் ஆக்டின் வசனங்களின் அர்த்தத்தைக் கவனித்துத் தீர்மானிப்ப தவசியமாகும். முன்சொல்லியபடி 70-வது பிரிவின் அம்சங்கள் வாதியின் கோரிக்கைக்குப் பொருந்தியிருக்கின்றன.

33 மதராஸ் 15க்கிசைந்த 19 மதராஸ் லா ஜர்னல் 429இன் தீர்மானத்தில் பிரதிவாதி, வாதியால் செலுத்தப்படும் நன்மையை அங்கீகரிக்க அல்லது மறுதளிக்க இடம் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆனால் இந்தக் கேசில் வாதியின் நன்மைலாபத்தை பிரதிவாதி ஏற்றுக்கொண்டதாகவே அபிப்பிராயப்பட்டிருக்கிறது. (ஆக்ஷேபனை செய்யாமலிருந்தாலே அங்கீகரித்த பாவனையாகும்). ஆகையால் 33 மதராஸ் கேசின் தீர்மானம் அதிக நிர்பந்தமான நிபந்தனையை ஏற்படுத்தியிருக்கிறது. அதை அனுசரிக்க நியாயமில்லை.

ஆகவே மேற்கூறிய அபிப்பிராயங்களால் 1913 செப்டம்பர் முதல் வாதி தாவாகிராமத்திற்காக கலக்டர் விதிப்படி செலுத்திய தீர்வைத் துகையை பிரதிவாதி கட்டிக்கொடுக்கவேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது. அரை வட்டியும் வாதிக்கு டிக்கிரி யாச்சுது.

—:o:—

(மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி)

### கடப்பை ஜில்லா.

**C. R. P. 563 of 1911–29 அக்டோபர் 1913.**

செல்லா நரஸய்யா Vs ஸொன்டான் ஒப்பய்யா

கடப்பை டிஸ்டிரிக்ட் முன்சீப்கோர்ட் அசல் தரப்பில் டிக்கிரீபெற்ற வாதி ஷை டிக்கிரீயை நிறைவேற்றியதில் கோர்ட்டாரிடம் சேர்டபிக்கப் பட்டிருந்த துகையை அதே கோர்ட்டில் ஒரு ஸ்மால்காஸ் நம்பரில் டிக்கிரீபெற்ற வேறொருவன் தன் டிக்கிரீ பாக்கிக்காக ஜப்திசெய்து அந்தத்துகையை உபயவாதிகளுக்கும் விகிதப்படி பிறித்துக்கொடுக்க வேண்டுமென்று கொடுத்த விண்ணப்பத்தின்பேரில் டி. மு. கோர்ட்டார் அவ்விதமாகவே ஸி. பி. ஸி. 73-வது பிரிவின்படி பிறித்துக் கொடுக்கப்படவேண்டுமென்று உத்தரவளிக்கவே அசல் நம்பரில் டிக்கிரீபெற்ற வாதி அந்த உத்தரவு பிசகென்று ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்தார். ஹைகோர்ட்டார் டி. மு. கோர்ட்டாரின் உத்தரவை ரத்து செய்த தீர்மானச் சுருக்கமாவது:—

மனுதார் பெற்ற அசல் டிக்கிரீயின்படி வசூலான துகை கோர்ட்டாரிடம் 1911 ஜனவரி 9உயில்வந்து சேர்ந்திருக்கிறது. எதிரி தான்பெற்ற ஸ்மால்காஸ் டிக்கிரீப்படி கிடைக்கவேண்டிய பாக்கிக்காக ஷை துகையில் வீதாசாரப்படிப் பிறித்துக்கொடுக்கவேண்டுமென்று 1911 ஜனவரி 18 இல், விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். 73-வது பிரிவின்படி துகை கோர்ட்டுக்குவந்து சேருமுன் பங்கு விகிதத்தைக் கோருகிறவன் விண்ணப்பம் கொடுத்திருக்கவேண்டும். அதற்கு ஆதாரமாக 5-பம்பாய் 198, 29 கல்கத்தா 548& 553, 15 கல்கத்தா 771-ஆகிய கேசுகளின் தீர்மானங்களைப்பார்க்கவும். ஷை தீர்மானங்கள் புது ஸீவில் புரொஸீர்கோட் நமோதுக்கு வருமுன் பிறந்தபோதிலும் புது கோடில் அந்தபாயிண்டைப்பற்றி யாதொரு மாறுன அம்சங்களும் எற்படவில்லை. தவிர வசூலானதுகையைப் பங்குபிறிதலை அடையக்கோருகிற வாதிகள் ஷை துகை எந்தக்கோர்ட்டிலிருக்கிறதோ அதே கோர்ட்டுக்கு விண்ணப்பம்செய்து கொள்ளவேண்டும். 5 பம்பாய் 198-ஐப்பார்க்கவும். அல்லது துகை வசூலாயிருக்கும் கோர்ட்டாராலேயே பங்குபிறிதலை அபேக்ஷிக்கிறவனுக்கு டிக்கிரீயளிக்கப்பட்டிருக்கவேண்டும்; அல்லது அந்தக்கோர்ட்டுக்கு இதரமான கோர்ட்டில் பிறந்த டிக்கிரீ மாற்றப்பட்டிருக்கவேண்டும். 6 மதராஸ் 357-யும் 16 பம்பாய் 683-யும் பார்க்கவும். அப்படியிருக்க இந்தக்கேசில் மனுதாருடைய டிக்கிரீ கடப்பை முன்சீ-கோர்ட் அசல் தரப்பின் அதிகாரவரம்பில் பிறந்ததாயிருக்கிறது. எதிரியின் டிக்கிரீயோ ஷை கோர்ட்டின் ஸ்மால்காஸ் அதிகாரவரம்பில் பிறந்த டிக்கிரீயாக இருக்கிறது. ஒரே கோர்ட்டார் இரண்டு வித்தியாசமான அதிகாரத்தை செலுத்தி யளித்த டிக்கிரீகள் வெவ்வேறுகோர்ட்டாரின் டிக்கரீகளாகவே பாவிக்கப்படவேண்டும். 3 அலகபாத் 710-இன் 712-ம் பக்கத்தைப்பார்க்கவும். ஆகையால் எதிரி ஸ்மால்காஸ் டிக்கிரீயை அசல் தரப்பில் மாற்றிக்கொள்ளாமல் மனுதாரால் வசூலித்த துகையில் பங்கு விகிதம் அடையப்பரிகாரம் தேடுவது சட்டவிரோதமாகும்.

பங்குவிகிதத்தை அபேக்ஷிக்கிறவன் நிறைவேற்றுமனுவை தாகல்செய்யாமல் அப்பரிகாரம் தேடக்கூடாது. ஆனால் எதிரி இந்தக்கேசில் பங்குவிகிதம் கிடைக்கவேண்டுமென்று 1911 ஜனவரி 18-இல் கொடுத்தவிண்ணமபம் டி. மு. கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி ஸி. பி. ஸி. ஆர்டர் XXI ரூல் 11 க்ளாஸ் (1) இல் கண்ட அம்சங்களுக்கிசைந்தபடி நிறைவேற்று மனுவாகவே பாவிக்கப்படலாம். ஆனால் மற்ற இரண்டு காரணங்களையிட்டு டி. மு. கோர்ட்டாரின் உத்தரவு பிசகென்று வாதி (மனுதாரு) க்கனுகூலமாக உத்தரவளித்தார்கள்.

—:0:—

# TAMIL LAW JOURNAL.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
12 JAN 1914
MADRAS.

## தென் இந்திய
## வியவகார சிந்தாமணி.

சென்ற ஜூலைமீ 17உ முதல் பிரசுரமாய் வருகிற இந்த தமிழ் லா ஜர்னல் தென் பாகத்திலுள்ள வியவகாரஸ்தர்களும் மற்ற அறமையறிந்த கனவான்களும் கோரிக்கொண்டபடி 1914 ஜனவரிமுதல் **வாரப்பிரசுரமாக திங்கட்கிழமைதோறும்** வெளியிடப்படும்.

### சந்தா விபரம்.

—:0:—

| | |
|---|---|
| வருஷ சந்தா | ரூ. 6—0—0 |
| ஆறுமாதத்திற்கு | ரூ. 3—0—0 |
| மூன்றுமாதத்திற்கு | ரூ. 2—0—0 |
| வெளிதேசங்களுக்கு வருஷ சந்தா | ரூ. 8—0—0 |
| தனிப்பிரதி | ரூ. 0—4—0 |

முன்பணம் அல்லது வி. பி. உத்தரவன்னியில் பத்திரிகைகள் அனுப்பப் படமாட்டாது.

## *Vol. I of 1913–(July to December.)*

**Containing 225 Pages.**

**Price Rs. 2-0-0 (inclusive of postage.)**

ஜூலை முதல் டிசம்பர் முடிய பிரசுரமான 225, பக்கங்களடங்கிய "வியவகார சிந்தாமணி" அட்டவணையுடன்.

**1-வது வாலியூம்—தபால் கூலியுள்பட விலை ரூ 2-0-0**

"இந்தியன் கம்பெனீஸ் ஆக்ட் (Act. VII of 1913) கவர்ன்மெண்டு தமிழ் பிரசுரம் தயாராகிறது. விலை அணு 9.

விலாசம்:—மானேஜர்,
தமிழ் லா ஜர்னல் ஆபீஸ்,
வெப்பேரி, சென்னை.

# அபிப்ராயங்கள்.

ஹானரபில் மிஸ்டர். T. V. சேஷகிரி அய்யரவர்கள் இந்த ஜர்னலைப் பற்றி கொடுத்திருக்கிற அபிப்பிராயமாவது:——

இத்தமிழ் லா ஜர்னலின் முதலாம் பிரதியைப் பார்வையிட்டேன். மிஸ்டர் சுப்பிரமணிய அய்யர் வியவகாரஸ்தர்களுக்கு ஸ்வாரஸ்யமாயிருக்கத்தக்க கேஸ்களை மட்டும் அதிக ஜாக்கிரதையாய்த் தெரிந்தெடுத்துப் பிரசுரம் செய்திருக்கிறார், ஒவ்வொரு வழக்கின் சாராம்சங்களையும் தீர்மானிக்கப்படவேண்டிய பாயிண்டுகளையும் அதிக நேர்மையோடும், ஜாக்கிறதையோடும் எடுத்துக் காட்டியிருக்கிறார். இவ்விதப் பிரசுரம் பிரயோஜனமுள்ளதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அதில் வெளியாகிற தகவல்களைப்படித்தறிகிறவர்கள் அனாவசியமான வழக்குகளில் பிரவேசிக்காமலும் கோர்ட்டார்களுக்கு அதர்மமான (துன்மார்க்கமான) வேலைக்கிடங்கொடாமலுமிருப்பார்களென்று நம்புகிறேன்.

சென்னையில் தினசரி பிரசுரமாகும் தலைப்பத்திரிகையாகிய "மதிராஸ் மெயில்" பேபரின் ஆசிரியர், இந்த தமிழ் லா ஜர்னலில் சட்ட சமாசாரங்களைப்பற்றி அதிக உபயோகமான தகவல்கள் அடங்கியிருக்கிறதாக, எழுதுகிறார்கள்.

சுதேச ஆசிரியர்களால் வெகு காலமாய் கியாதியுடன் நடைபெற்றுவரும் சென்னை தினசரி ஆங்கிலேயப்பத்திரிகையாகிய "ஹிந்து" பேபரில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழ்ப்பேசும் ஜனங்களால் நெடுநாளாய் அபேக்ஷிக்கப்பட்ட ஒரு குறையை இந்த ஜர்னல் நிவர்த்திசெய்கிறது. அது பெறவேண்டிய மேன்மையை அடையுமென்று நம்புகிறோம். சட்ட சம்மந்தமான அறிவைப் பரவச்செய்து அவசியமான வழக்குகளைத் தடுப்பதே இந்த ஜர்னலுடைய முக்கிய நோக்கமாகும்.

———:O:———

மதராஸ் ஹைகோர்ட்டில் ஸிவில் லாவில் மிக்க கியாதிபெற்ற ம-ா-ா-ஸ்ரீ, ஹைகோர்ட் வக்கீல் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியாரவர்கள் இந்தப் பத்திரிகையைப் பற்றி கொடுத்திருக்கிற அபிப்பிராயத்தில் சொல்லுவதாவது:—

இதில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற வியவகாரங்கள் ஜாக்கிறதையோடு தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாய்த் தோன்றுகிறதும் தவிற சட்டப் பயிர்ச்சி யில்லாத ஜனங்களின் நன்மைக்காக பிரதானமாய் பிரசுரமாகி வரும் இந்தப் பத்திரிகையிலடங்கிய வியவகார சமாசாரங்கள் ஷை ஜனங்களுக்கு ஸ்வாரஸ்யமாயும் பிரயோஜனமுள்ளதாயு மிருக்கின்றன. அவைகள் தெளிவான ஸ்பஷ்டமுள்ள தமிழில் எழுதப்பட்டிருக்கிறபடியால் அதைப் படிக்கிறவர்களுக்கு அதின் கருத்துகள் அர்த்தமாவதில் யாதொரு கஷ்டமும் இராது. இந்த நாட்டுக்கு இவ்விதப் பிரயத்தனம் அபூர்வமானதாயிருக்கிறது. இவ்வித ஜர்னல் நாளடைவில் வெகுதூரம் வியாபித்து ஜனங்களின் சட்டப்பயிர்ச்சிக்குறிய சாதனமாகுமென்று நம்பவேண்டும்.

மதராஸ் ஹைகோர்ட் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, S. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் கொடுத்திருக்கிற அபிப்பிராயத்தில்:—

"வியவகார சிந்தாமணியென்ற தமிழ் லாஜர்னலைக்கவனமாய்ப் படித்துப்பார்த்தேன். அவ்வித பிரசுரம் சட்டமறியாத ஜனங்களுக்கு அவசியமானதும் உபயோகமுள்ளதுமென்று அடியேனபிப்பிராயம். அதில் சொல்லப்பட்டுவரும் சட்ட சம்மந்தமான பாயிண்டுகளை ஜனங்கள் ஆத்தரப்பட்டு வழக்கில் தலையிடுமுன் அறிந்துகொண்டால் அதிக நன்மையை அடைவார்களென்பது நிச்சயம். பரநலத்தைக் கருதி இந்த பிரயோஜனமுள்ள வேலையில் பிரவர்த்தித்திருக்கிற மிஸ்டர் என். சுப்பிரமணிய அய்யர் பொது ஜனங்களின் வந்தனத்திற்குப் பாத்திரராகிறார். ஜனங்களுக்கு சட்ட அனுபோகத்தை உண்டாக்கும் அவருடைய பிரயத்தனத்தை யாவரும் ஆதரித்து வருவார்களென்று நம்புகிறேன்." என்று எழுதியிருக்கிறார்கள்.



## சில தீர்ப்புச்சுருக்கங்கள்.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்துரையவர்கள்முன்பாக 1913 அக்டோபர் 16-இல் பைசலான 1912-ம் வருஷத்திய 2-வது அப்பீல் நெ. 567இன் தீர்மானத்தில் "வாதி குத்தகைத்தொகையை வசூலிக்கும் பொருட்டு செய்த தாவாவில் வாதியின்சொத்துபாத்தியதையை எதிரி ஆக்ஷேபித்துஅந்தவிஷயமானது பிரமாணத்தின்பேரில் தீர்மானிக்கப்பட்டிருக்க, பின்னால் ஷை எதிரிகளால்ஏற்படும் குத்தகை பாக்கிக்காக தாவா செய்யப்படுங்கால் சொத்து பாத்தியதையின் விஷயமாய் ஏற்பட்ட முந்திய தீர்மானம் கிராக்ஷேபனையானருஜூ அம்சமாகுமென்றும், மூன்று பேர்களுக்கனுகூலமாய்ப்பிறந்த டிக்கிரியின்பேரில் எதிரிஅப்பீல் செய்யுங்கால் மூவரில் ஒருவன் காலஞ்சென்றுவிடவே அவனுடைய வார்ஸ்களைப்பார்ட்டியாகச்சேர்க்காமல் மற்ற இருவர்பேரில்மட்டும் அப்பீல் நடவடிக்கை நடந்து அப்பீல் அனுகூலமாகி கேசானது மறுவிஜாரணைக்காக கீழ்கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்யப்பட்டு மருவிஜாரணைகாலத்தில் காலஞ்சென்ற ஷை யாருடைய வார்ஸ்களை ஆக்ஷேபணையில்லாமல் பார்டிகளாய்ச் சேர்க்கப்பட்ட பிறகு அப்பீல்கோர்ட்டாரின் ரிமாண்டு உத்தரவின்பேரில் 2-வது அப்பீல்செய்யப்பட்டதில் அங்கு ஷை வார்ஸ்கள் தங்களை ரிமாண்டு உத்தரவு கட்டுப்படுத்தாதென்று வாதித்ததில், ஹைகோர்ட்டார் அந்த ஆக்ஷேபணையானது அதிக காலதாமதத்தின்பேரில் செய்யப்பட்டதாகவும் வார்ஸ்களின் நடத்தையால் அவர்களை முதலில் பார்டிகளாய்ச் சேர்க்கப்படாத ஒழுங்கீனம் சமாதானமாய்ப்போனதாக அனுமானிக்கப்படவேண்டுமென்றும், அபிப்பிராய உத்தரவளிக்கப்பட்டது.

———:O:———

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயர் & ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் துரை அவர்கள் முன்பாக 14 அக்டோபர் 1913-இல் ஈரங்கியான 1913-ம் வருஷத்திய லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் கேசில் ஏற்பட்ட தீர்மானமாவது:— ஒரு மாஜிஸ்டிரேட் யாதொருவனை 195-வது பிரிவின்படி குற்றஞ்செய்ததாக கண்டு கிரிமினல் புரொஸிஜர் கோட் 476-வது பிரிவின்படி ஷை யானை ப்ராஸிகியூஷன் செய்யும்படி உத்தரவளித்ததில் அந்த உத்தரவின் பேரில் எதிரி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாகல்செய்து ஒரு ஜட்ஜியின் முன் ஷை ரிவிஷன் மனு ஈரங்கியாகி பைசலான பிறகு அந்த ஒரு ஜட்ஜியவர்களின் பைசலுக்குமேல் லட்டர்ஸ் பேடெண்டு அப்பில் இரண்டு ஜட்ஜிமார்களிடம் செய்துகொள்ளக்கூடாது. ஒரு ஜட்ஜியவர்களின் ஷை ஆர்டரானது கிரிமினல் விஜாரணையில் பிறந்த ஆர்டராக பாவிக்கப்படவேண்டும்.

———:O:———

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் துரையவர்கள் முன்னிலையில் 1913 அக்டோபர் 3வ ஈரங்கியாகி பைசலான 1911-ம் வருஷத்திய C. M. S. A. 65-இல் தீர்மானித்தபடி ஒருவாதி டிக்கிரிக்குமுன் (தீர்ப்புக்குமுன் பிரதிவாதியின்சொத்துக்களை ஜப்திசெய்து வைத்தபிறகு தன்பிராது அசல்கோர்ட்டில் தள்ளுபடியாகப் போகும்பக்ஷத்தில் ஷை ஜப்தி உததரவும் ரத்தானதாக பாவிக்கப்படவேண்டும். வாதி அப்பீல் கோர்ட்டில் அனுகூல டிக்கிரி பெற்றபிறகு ஷை டிக்கிரியை நிறைவேற்றும் பொருட்டு ஷை சொத்தை வலத்திற்குக் கொண்டுவரவேண்டுமானால் மறுபடியும் புதிதாய் ஜப்தி உத்தரவு பெறவேண்டும். அதற்கு ஆதாரமாக 10 அலகபாத் 506-ஐப் பார்க்கவும்.

———:O:———

ஹானரபில் மிஸ்டர் டையாப்ஜீ அவர்கள் முன் 1913 அக்டோபர் 16உயில் ஈரங்கியாகிப் டைசலான 1912-ம் வருஷத்திய C. R. P. 510-இல் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் கொச்சி மலையாளத்து ராஜாவைப் போலொத்த யாதொரு இராஜகுமாரனுக்கு பிரிடிஷ் இந்திய மாகாணத்தி லிருக்கும் தேவஸ்தானத்தில் தர்மகர்த்தா ஆதினமிருந்தாலும் அல்லது ஷை மாகாணங்களில் நிலங்கள் சொந்தமா யிருந்தபோதிலும் அவ்வித பாத்தியதையை அனுசரித்த யாதொரு வியாஜஜியத்தையும் ஸிவில் புரொஸிஜர்கோட் 86-வது பிரி

ரிவின்படி இந்தியா கவர்ன்மெண்டாரின் அனுமதியன்னியில் ஷெ ராஜாக்கள்மீது தொடுக்கக்கூடாது. ஆனால் 86-வது பிரிவின் அம்சங்களின்படி ஷெ ராஜாவிடத்தில் ஒரு ஸ்தாவர சொத்தை குத்கைக்கு ஒப்படைப்புபெற்ற, டெனெண்டுகள் அவ்வித அனுமதியன்னியில் தாவா கொண்டுவரலாம்.

———:O:———

ஹானரபில் மிஸ்டர் டையாப்ஜீ யவர்கள் முன் 1913 அக்டோபர் 17உயில் ஈரங்கியான 1911-ம் வருஷத்திய C. R. P. 677-இல் பிறந்த உதரவாவது:— ஸீ. பி. ஸீ. ஆர்டர் 21-ரூல் 89 (1)-வது விதியின்படி கோர்ட்டாரால் போடப்பட்ட எலத்தை ரத்துசெய்யவேண்டுமென்று பிரதிவாதியாவது அல்லது சொத்தில் எலத்திற்குமுன் பாத்தியதையைப்பெற்றிருந்த வேறு யாதொருவனாவது கோரினால் எலம் போடப்பட்ட தேதியிலிருந்து 30-தினங்களுக்குள் எலமெடுத்தவனுக்குக்கொடுக்கும்பொருட்டு எலத்தொகையில் 100-க்கு 5 விகிதம் கூடுகிற தொகையை, டிக்கிரீதாரனுக்குச் செலுத்தும்பொருட்டு எல இஸ்தியாரில் கண்ட தொகையையும், ஷெ யார்கள் கோர்ட்டில் டிபாஸிட் செய்யவேண்டியதுதான் முக்கியமான அம்சமாகும். எலத்தை ரத்துசெய்வதற்காக ஷெ விண்ணப்பம் ரூல்படி வாய்மொழியாயும் செய்யப்படலாம். ஆகவே கையொப்பம் செய்யப்படாமல் கொடுக்கப்பட்ட அவ்வித ஒரு விண்ணப்பம் சட்டவிரோதமாகாது. அந்தமாதிரி கையொப்பமில்லாமல் கொடுக்கப்பட்ட விண்ணப்பம் தள்ளுபடியானால் அந்தத் தள்ளுபடி உத்தரவானது ஆபீஸ் ஹோதாவில பிறந்த உத்தரவாக பாவிக்கப்படக்கூடாது. கோர்ட் நடவடிக்கையாக பாவிக்கப்பட்டு அதன்மேல் அப்பீல் உண்டு. அதற்குமேல் ரிவிஷன் பரிகாரமும் உண்டு.

———:O:———

மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ

**S. A. 1429 of 1912—1 அக்டோபர் 1913.**

ஒரு ஹிந்து விதவை அவசியமான காரணத்திற்காக (அதாவது குடும்ப சொத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய விதமான ரூ. 332-மதிப்புள்ள கடன் மொல்லையைத் தீர்க்கும் பொருட்டு) குடும்பசொத்தை ரூ. 600-க்கு ஒருவனுக்கு விக்கிரயஞ் செய்துவிடவே, ரூ. 332-போக பாக்கித்தொகை ரூ. 268-ம் அனாவசியமாய் ஷெ விக்கிரயத்தினால் வசூலானதால் அவ்வித அனாவசியமான விக்கிரயத்தை ரத்துசெய்யவேண்டுமென்று அனந்தர வார்ஸ்தார் வியாஜ்ஜியந்தொடுத்ததில் ஹைகோர்ட் 2-வது அப்பீல் தீர்மானத்தின்படி தாவா விக்கிரயம் ரத்தாகத் தக்கதல்லவென்று ஏற்பட்டது. ஆனால் கிரயம் பெற்ற பிரதிவாதியின் சம்மதத்தின்பேரில் வாதிக்கு தாவாசொத்தின்பேரில் ஈனக்கிரயம் என்று ஏற்படாத, அதாவது சரியான கிரயத்தொகையென்று ஏற்பட்ட ரூ. 600-இல் அவசியமில்லாதபடி ஷெ விதவையின் வசம்செலுத்தப்பட்ட தொகை ரூ. 268-க்கு ஒரு ஹக்கு பாத்தியதையை உண்டாக்கி டிக்கிரி யளிக்கப்பட்டது. அன்றியும் ஷெ தொகையை பிரதிவாதி வாதிக்கு ஒரு குறித்தகாலத்திற்குள் செலுத்தத்தவறினால் ஷெ சொத்தை மறுவிக்கிரயம் செய்துவிட வேண்டுமென்றும் உத்தரவளிக்கப்பட்டது. அவ்வித அபிப்பிராயத்திற்கு ஆதாரமாக 14-கல்கத்தா வாரக்குறிப்புகளின் 895-ம் பக்கத்தைப் பார்க்கவும்.

———:O:———

மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

**S. A. No 875 of 1912—7 அக்டோபர் 1913.**

ஸீவில் புரொஸீஜர் கோட் ஆர்டர் 41-ரூல் 27 இன்படி அப்பீல் கோர்ட்டார் கீழ்கோர்ட்டில் விடப்படாத ஒரு சாட்சியம்சத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமானால் அப்படி ஏற்றுக்கொள்வதற்குக் காரணத்தை அப்பீல் கோர்ட்டார் ரிகார்ட் செய்யவேண்டும். அப்படி காரணங்களை ரிகார்டுசெய்யாமல் ஒரு புதிய சாட்சியத்தையாவது தஸ்தவேஜையாவது ருஜுபாகத்தில் அப்பீல்கோர்ட்டார் ஏற்றுக்கொண்டால் அது சட்டவிரோதமாகும் என்றாலும் ஷெ அப்பீலில் செய்யப்பட்ட தீர்மானத்திற்கு அவ்வித அதிகமான ருஜு அம்சமில்லாமல் ஏற்கனவே அசல் கோர்ட்டில் ரிகார்டாகியிருக்கிற ருஜுபாகமே போதுமான ஆதாரமாக இருக்கும்பக்ஷத்தில் ஷெ அப்பீல் தீர்மானத்தின்பேரில் 2-வது அப்பீல் செய்யப்பட்டால் ஹைகோர்ட்டார் மேற்கூறிய சட்டவிரோதமான நடவடிக்கையின் காரணத்தையிட்டு அப்பீல்கோர்ட் தீர்ப்பின்மேல் பிரவேசிக்க நியாயமில்லை. எவிடென்ஸ் ஆக்ட் 167-வது பிரிவைப்பார்க்கவும்.

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.)

**மதராஸ் ஹைகோர்ட் அசல்தரப்பில் C. S. No. 7 of 1912—10 செப்டெம்பர் 1913.**

**K. R. V. கம்பெனி Vs சத்தியவாத சீதாராமஸ்வாமி**

வாதி கம்பெனியார் மதராஸில் வியாபாரம் நடத்திவந்ததில் மூன்று சகோதரர்களாகிய பிரதிவாதிகளும் வெளிஜில்லாவில் நடத்திவந்ததாய்ச் சொல்லப்பட்ட கூட்டுவர்த்தகத்திற்குறிய சில சரக்குகளை வாதி கம்பெனியார் சப்ளைசெய்து வந்த விஷயமாய் ஏற்பட்ட பாக்கி ரூ. 3799-0-6 யும், அந்தபாக்கி ஏற்பட்டு கணக்குத்தீர்ந்த தேதியாகிய 1909 ஜனவரி 7உ முதல் ஷெ தொகைக்கு ஒப்பந்தப்படியுள்ள வட்டியுடன் கூடும் தொகை கிடைக்கவேண்டுமென்று வாதிகம்பெனியார் மதராஸ் ஹைகோர்ட் அசல்தரப்பில் மூன்று சகோதரர்களையும் பிரதிவாதிகளாய்ச்சேர்த்து தாவா செய்தார்கள். பிராதில், பிரதிவாதிகள் அவிபக்த ஹிந்து குடும்பஸ்தர்களென்றும் தாவாவர்த்தகம் குடும்பப்பொதுவான வர்த்தகமென்றும் 1-ம் பிரதிவாதி வாதி கம்பெனியின் புஸ்தகத்தில் 1909 ஜனவரி 7உயில் அதாவது பாக்கிக்கணக்குத் தீர்ந்தகாலத்தில் ஷெ பாக்கியை ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்திருப்பதால் 1912-இல் செய்யப்பட்ட இந்தப்பிராது காலாவதி தோஷ மடைந்ததல்லவென்றும் சொல்லப்பட்டிருந்தது.

1-ம் பிரதிவாதியும் 3-ம் பிரதிவாதியும் எக்ஸ்பார்டிகளாயிருந்து விட்டார்கள். 2-ம் பிரதிவாதிமட்டும் எதிர்வாதம்செய்துகொடுத்த ஆன்ஸரில், வாதி சொல்லுகிறபடி வர்த்தகம் குடும்பக் கூட்டு வர்த்தகமல்லவென்றும் அது 1-ம் பிரதிவாதியினுடைய தனிவர்த்தகமென்றும் ஷெ வர்த்தகத்தில் தனக்கு யாதொரு பங்காவது சம்பந்தமாவது கிடையாதென்றும் குடும்பத்திற்குறிய பொதுவான சொத்துக்கள் யாதொன்றும் கிடையாதென்றும் ஆகையால் தங்கள் குடும்பத்தை அவிபக்த குடும்பமென்று சொல்வதற்கு அவசியமில்லையென்றும் (அந்தப்பதமே கருத்தில்லாததென்றும்) தவிர வாதியின் தாவா காலாவதி தோஷமடைந்ததென்றும் அதாவது 1-ம் பிரதிவாதி வாதியின் புஸ்தகத்தில் செய்த கையொப்பம் மற்ற சகோதரர்களைக் கட்டுப்படுத்தாதென்றும் ஆகையால் 2-3 பிரதிவாதிகளின்மீது வாதி பரிகாரம் தேட 3-வருஷ காலாவதி கடந்து விட்டதாகவும் ஆக்ஷேபித்தார்.

ஹைகோர்ட்டார் தீர்மானத்தில் 3 பிரதிவாதிகளும் அவிபக்த சகோதரர்களென்றும் 1-ம் பிரதிவாதியின் பாக்கியை ஒப்புக்கொண்ட கையொப்பமானது மற்றப் பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தாதென்றும் ஆகவே பிராது 2-3-பிரதிவாதிகளைப் பற்றின மட்டில் காலாவதிதோஷ முள்ளதென்றும் அபிப்பிராயப்பட்டு 1-ம் பிரதிவாதிமேல் பரிபூர்ணமான டிக்கிரீயளித்து, குடும்பத்துக்குறிய பொதுவான சொத்துக்கள் 2-3 பிரதிவாதிகள் வசமிருந்தால் அவைகளைப் பொருத்துமட்டும் 2-3 பிரதிவாதிகள்மேல் டிக்கிரீயளித்தார்கள். அரைவட்டியுடன் தாவாத்தொகைக்கு டிக்கிரீயாச்சுது.

மேற்கூறிய தீர்மானத்திற்கு வந்த முக்கிய காரணங்களாவன:—

“1-ம் பிரதிவாதியுடன் வாதிகம்பெனியார் வியாபாரம் செய்தவிஷயம் ருஜுவாகி யிருக்கிறது. வாதிக்குறிய பாக்கியை ஷெ யார் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தமையால் 1-ம் பிரதிவாதியின்பேரில் டிக்கிரீயாக வேண்டியதில் சந்தேகமில்லை. 2-ம் பிரதிவாதியும் வர்த்தகத்தில் பங்காளியா யிருந்ததாகவும் ரூபகாரப் படுத்தப்பட்டிருக்கிறது. தனக்கு வர்த்தகத்தில் யாதொரு சம்பந்தமில்லையென்று 2-ம் பிரதிவாதி ஆக்ஷேபிப்பதானது அவர்கைப்பட எழுதப்பட்டிருக்கிற கடிதங்களில் கண்ட விஷயங்களுக்கு விரோதமாயிருக்கிறது. கணக்குத்தீர்க்கப்படுவ

தைப்பற்றியும் அதுவிஷயமாய் 1-ம பிரதிவாதி மதராஸ் வந்து வேண்டிய ஏற்பாடு செய்வாரென்று 2-ம் பிரதிவாதி, கணக்குத் தீர்க்கப்பட்ட இரண்டு வருஷங்களுக்குமுன் வாதி கம்பெனிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். வாதி கம்பெனியின் பேரேட்டுபுஸ்தகங்களில் 1-ம் பிரதிவாதியின் பெயர்மட்டும் கண்டிருக்கிறபடியால், வர்த்தகம் 1-ம் பிரதிவாதிபேரால் மட்டும் நடத்தப்பட்டபோதிலும் குடும்பக்கூட்டுவர்த்தகம் அவ்விதமாய் நடைபெற்றுவருவது அசம்பிரதாயமல்ல. 2-ம் பிரதிவாதி தன் சாட்சிவாக்குமூலத்தில் அந்தஸ்திலும் ஜீவியத்திலும் தாங்கள்விபக்தர்களாய்விட்டதாகச் சொல்லியிருக்கிறபோதிலும் குடும்பசொத்துக்கள் யாவற்றும் ஸமரஸமாய்ப் பிரிவானதென்று சொல்லவில்லை. தவிற தன்னுடைய ஆன்ஸரில் தான் அவிபக்தன் என்றதை மறுத்துச்சொல்லவில்லை. குடும்பப் பொதுவான சொத்துக்கள் யாதொன்றும் இடையாதென்றுமட்டும் சொல்லியிருக்கிறார். அவருடைய வக்கீல், அவர்சாக்ஷிக்கூட்டில் ஏறுமுன், எதிரிகளின் குடும்பம் அவிபக்தமென்று ஒப்புக்கொண்டு அந்த ஆதாரத்தின்பேரிலேயேகோர்ட்டார் தீர்ப்பளிப்பதில் ஆக்ஷேபணையில்லையென்று தெரிவித்திருக்கிறார். ஆகையால் பிரதிவாதிகளின் குடும்பம் அவிபக்தமென்றும் ஷை வர்த்தகம் பொதுலாபத்திற்குறிய குடும்ப வர்த்தகமென்றும் அனுமானிக்கவேண்டும். அதாவது இந்தியன் காண்டிராக்ட ஆக்டின் 239-வது பிரிவின்படி மூவரும் தங்கள் பொருளையும் சரீரப்பிரயாசத்தையும், யுக்தி புத்தியையும் பிரயோகித்து நடத்திவந்த கூட்டுவியாபாரமென்றே நிதானிக்கவேண்டும். அவ்விதக்கூட்டுவியாபாரம் என்றதற்கு வாதிகம்பெனியின் கணக்கு புஸ்தகத்தில் 1-ம் பிரதிவாதி கையொப்பம் செய்யும்பொழுது எழுதியிருந்த வசனங்களும் அனுஸரணையாகயிருக்கிறது. அதில் "அதிகப்பத்துவழி பாக்கி ரூ. 3976-0-6, நாளது தேதிமுதல் மாதம் 1-க்கு 100-க்கு 1 வட்டியுடன்சேர்த்து ஷை பாக்கித்தொகையைவேண்டும்போது வாதியின் உத்தரவுப்படிக்கு மதராஸில் இந்த உத்தரவைப்பெற்றவர்களிடம் செலுத்தக்கடவோமாகவும்" என்று கண்டிருக்கிறது. கடவோமென்ற பன்மைச்சொல்லானது 1-ம்பிரதிவாதி தனக்காவும் மற்ற பாகஸ்தர்களுக்காகவும் கையொப்பம் செய்ததாகத்துலக்குகிறது. அவ்விதமானகருத்தாகவே கோர்ட் தமிழ் டிரான்ஸ்லேடர் (Interpreter) அர்த்தப்படுத்துகிறார்.

2-ம் பிரதிவாதியின் மற்றொரு முக்கியமான எதிர்வாதமாகிய காலாவதி தோஷத்தைப்பற்றி யோஜிக்குமிடத்து பிரதிவாதிக்காக மதராஸ் ஹைகோர்ட்டில் 1908-ம் வருஷத்திய 32 மதராஸ் 421-இலும், 1911-ம் வருஷத்திய 35 மதராஸ் 142-இலும், செய்யப்பட்டிருக்கிற தீர்மானங்களை ஆதாரமாகக்காட்டி வாதம்செய்யப்பட்டது. அதற்கு எதிர்முறையாக பம்பாய் அலகபாத் ஹைகோர்ட் தீர்மானங்களாகிய 10-பம்பாய் 358,10அலகபாத் 418,&26-பம்பாய் 42ம்,வாதிக்காக எடுத்துக்காண்பிக்கப்பட்டது. கொடுக்க வேண்டிய கடன் பாக்கிக்காக பங்காளிகளில் ஒருவர் யாதொருபாகத்தைச்செலுத்தினாலும் அல்லது ஷை பாக்கியை எழுத்து மூலமாய் அங்கீகாரம்செய்துகொடுத்தாலும், மற்றப்படி காலாவதிதோஷமாகக் கூடிய விஷயம் அந்த தோஷத்தை நிவர்த்திக்கச்செய்து அவ்விதமாய் தொகை செலுத்தப்பட்ட அல்லது அங்கீகாரம் செய்யப்பட்ட தேதிமுதல் புதிதாய் காலாவதி கணிக்கப்படவேண்டுமென்ற ஒரு சட்ட நியாயமானது மற்றபங்காளிகளையும் கட்டுப்படுத்துமாவென்ற பாயிண்டானது அதிக முக்கியமானது. இந்நாட்டில் வியாபாரமுறையில் எழுத்துமூலமான அங்கீகாரங்கள் மிகவும் வாலாயமாய் நடைபெற்று வருகிறது. அதைப்பற்றி பாதிக்கக்கூடிய சட்டமுறையானது வெகுதூரமான கிறியாம்சைகளை விளைவிக்கத்தக்கதாகும். காலாவதி ஆக்டில் இது விஷயமாய் சட்டமுறை ஆதியில் ஏற்படுவதற்கு 1781-ம் வருஷத்திய I. S.M. L. C. 10-ம் பதிவு) 561-இல் ஒருகூட்டுக்கடனாளி கடன் பாக்கியை எவ்விதமாயும் ஒப்புக்கொண்டாலும் அல்லது ஷை பாக்கியில் ஒருபாகத்தைச்செலுத்தினாலும் அந்த நடத்தையானது மற்ற கடனாளிகளையும் கட்டுப்படுத்தத்தக்க விதமாய் காலாவதி தோஷம் நிவாரணமாகவேண்டியதென்ற ஒரு தீர்மானமே காரணமாச்சுது. இங்கிலீஷ் லாவில் கடன்பாக்கியை ஒப்புக்கொண்ட விஷயத்தைப்



பற்றி ஒரு தனி ஆக்டும், கடனுக்காக தொகை பாகம் செலுத்தப்படும் விஷயத்தைப்பற்றி வேறு பிரத்தியேகமான ஆக்டும் பிறந்திருக்கிறது. 1859-ம்வருஷத்திய இந்தியன் ஆக்டில்4-வதுபிரிவில் பலர் கூட்டாய் கடனுக்கு பாத்தியப்பட்டிருந்தால் ஒருவர் எழுத்தால் கடன் பாக்கியை ஒப்புக்கொண்டாலும் விஷயமானது மற்றவர்களைக் கட்டுப்படுத்தாதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. 1871-ம் வருஷத்திய காலாவதி ஆக்டின் 20-வது பிரிவில் ஒரு வியாபாரத்தின் கூட்டுப் பங்காளிகளில் ஒருவர் கடன்பாக்கியை அங்கீகாரம் செய்து தீர்த்துவிடுவதாய் ஒப்புக்கொண்டால் அந்த விஷயம் மற்ற பங்காளிகளை பாதிக்காதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. 1877-வது ஆக்டின் 20-வது பிரிவில் கூட்டுக் கண்ட்ராக்டர்கள், எக்ஸிகியூடர்கள், & அடமானதார்கள் விஷயமாய் மேற்கூறிய விதமான சட்டமுறை விதிக்கப்பட்டிருக்கிறது. இந்திய சட்டங்களில் கூட்டு வியாபாரப்பங்காளிகளுக்காக தனியான சட்டப்பிரிவு ஏற்பட்டிருக்கிறது. இங்கிலீஷ் முறையில் ஜாயிண்டான கண்ட்ராக்டர்களுக்குள் வியாபார பாகஸ்தர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. லார்ட் ஜஸ்டிஸ் லிண்ட்லே என்றவர்கள் ஒரு இங்கிலீஷ் கேசில் தீர்மானித்திருக்கிறபடி, கடன்காரர்கள் முதலாளிகளை மோசம் செய்யக்கூடிய சவுகரியத்தைத் தருவதற்காக இந்த சட்ட மேற்பட்டதல்ல. ஆனால் கடனாளிகளை சர்க்கார் பாக்கிக்காக ஹிம்சிக்காமல் காப்பாற்றும் பொருட்டு ஏற்பட்டதாகும். ஒருவன் தன் கூட்டாளிக்காகவும் தனக்காகவும் ஷை கூட்டாளியினுடைய விருப்பத்தின்படி கடன்தொகையில் ஒருபாகத்தைச் செலுத்தினால் அதை ஷை கூட்டாளியும் செலுத்தியதுபோல பாவிக்கப்பட வேண்டுமென்றும்,மேற்கூறிய சட்டம் இத்தகைய விதமான தொகை செலுத்தலுக்குப்பொருந்தாதென்றும் லார்ட் ஹார்ஷல் துரையவர்கள அபிப்பிராயம்கொடுத்திருக்கிறார்கள். 1879-ம் வருஷத்திய 41 L. T. 91-இல் ஒரு கூட்டாளி கடன் பாக்கிக்காக தொகைசெலுத்தினால்,மாறான ருஜு அம்சமில்லாவிடில்,மற்றக் கூட்டாளியின் அதிகாரத்தைப்பெற்று அவ்விதம் செலுத்தினதாக அனுமானிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு அது அப்பீலிலும் உறுதியாக்கப்பட்டிருக்கிறது. கடனை ஒப்புக்கொள்ளும் விஷயத்தைப்பற்றியும் அவ்விதமாகவே யூகிக்க வேண்டுமென்று கூட்டுவியாபார சட்டத்தைப் பற்றிய நூலில் மிஸ்டர் லிண்ட்லே துரையவர்களும் மற்ற கிறந்தகர்த்தாக்களும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

10-பம்பாய் 358-இல் ஜஸ்டிஸ் ஸ்காட் துரையவர்கள் தீர்மானத்தில் "ஒருபங்காளி மற்றவர்களிடத்தில் அதிகாரம்பெற்று கடன்பாக்கியை ஒப்புக்கொண்டு கையொப்பம்செய்து கொடுத்ததாக ருஜுப்படுத்தலாமென்றும்,ஒருவர்த்தகம் நடந்துகொண்டிருக்கும் பக்ஷத்தில் ஒருவன் மற்றபங்காளிக்கு ஏஜண்டாக பாவித்துக்கொண்டு நடந்ததாக யூகிக்கப்படலாமென்றும்,ஆனால் ஷை வர்த்தகம் நடைபெற்று வராமல் நின்றுபோன பிறகு ஒருவன் கையொப்பம் கொடுத்துக்கடனை ஒப்புக்கொண்டால் அந்த நடத்தை மற்றவர்களைக் கட்டுப்படுத்தும்படி அதிகாரம்பெற்று நடத்தப்பட்டதாக யூகிக்கப்படக்கூடாதென்றும் அதற்கு ஆதாரமாக (1875) 20 Eq 721-இல் தீர்மானமிருப்பதாயும்" சொல்லியிருக்கிறார்கள். 10 அலகபாத் 418-ம் மேற்கூறிய பம்பாய் தீர்ப்பை அனுசரித்திருக்கிறது. 26 பம்பாய் 42-இல் அதே அபிப்பிராயம்கொடுக்கப்பட்டு ஆனால் ஒரு பங்காளி ஏஜண்ட் அதிகாரம் பெற்றவனாக யூகிக்கப்பட வேண்டியிருந்தபோதிலும், காண்ட்ராக்ட் ஆக்ட் 251-வது பிரிவின்படி ஷை வியாபாரத்திற்குறிய அவசியமான நடத்தைகளை மட்டும் ஒருவன் மற்றவனைக் கட்டுப்படுத்தும் வண்ணம் நடந்துகொள்ளலாமென்றும் ஷை கேசில் 1-பங்காளியின் நடத்தை ஷை வியாபாரத்திற்கு அவசியமாயும் வழக்கமுறைப்படியும் நடக்கப்பட்டதா என்று தீர்மானிக்கும் பொருட்டு கீழ் கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டது. 1898-ம் வருஷத்தில் 8-மதராஸ் லா ஜர்னல் 261-இல் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யரவர்களும் ஜஸ்டிஸ் போடாம் துரையவர்களும் செய்த தீர்மானத்தில் ஒரு பங்காளி காலஞ்சென்றுவிடவே ஷை யாருடைய வார்ஸுகளைக் கட்டுப்படுத்தும்படி மற்றப் பங்காளிகள் குறித்த அதிகாரமன்னியில் யாதொ

ருகடன் பாக்கியை ஒப்புக்கொள்ளக் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஷை பங்காளிகாலஞ்சென்றதற்கு முன் மற்ற பங்காளிகள் கடன்பாக்கியை ஒப்புக்கொண்டிருந்தால் அவவரையும் அந்த நடத்தை கட்டுப்படுத்துமென்று அபிப்பிராயங்கொடுத்திருக்கிறதாகத் தோன்றுகிறது. அதைப்பற்றி அவர்கள் சரியான தீர்மானம் கொடுக்க எது கரமில்லாமல்போய்விட்டது.

32 மதராஸ் 42-இல் மதராஸ் ஹைகோர்ட்டார் 10-பம்பாய் 358-க்கு விரோதமாக, ஒரு பங்காளி அவசியமான காரணத்தையிட்டு அல்லது வழக்கப்படி நடந்தால் மற்றவர்களுடைய அதிகாரம்பெற்றதாக யூகிக்கக்கூடாதென்றும்மற்றவர்களால் அதிகாரம்பெற்று நடந்ததாகத்தெளிவான ருஜு அம்சம் அவசியமாகுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி 35 மதராஸ் 142-இலும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு கிளைமண்டி வர்த்தகத்திற்கு மானேஜ்மெண்ட் அதிகாரத்தையுடைய ஒரு பங்காளியின் நடத்தையானது, மற்ற பங்காளிகளின் அதிகாரமன்னியில் அவர்களைக் கட்டுப்படுத்தாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே பம்பாய் அலகபாத் ஹைகோர்ட் தீர்மானங்களுக்கும் மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்களுக்கும் பேதமேற்பட்டிருக்கிறது. வழக்கப்படி அல்லது அவசியமான காரணத்தால் ஒரு பங்காளி கடனை ஒப்புக்கொண்டால் அது மற்றவர்களையும் கட்டுப்படுத்துமென்றும் அவன் அதிகாரம்பெற்ற ஏஜண்டாக யூகிக்கப்படலாமென்றும் மற்ற ஹைகோர்ட்டாரின் தீர்மானமாகிறது. மதராஸ் ஹைகோர்ட்டிலோ அதிகாரம்பெற்றதைப்பற்றி சரியான ருஜு அம்சம் தேவையாகும். மதராஸ் தீர்மானங்கள் புனராலோஜனைக்குறியதென்ருவது, அல்லது கடன்காரர்கள் முதலாளிகளை மோசம் செய்ய ஏதுகரமில்லாதபடி சட்டத்தைத் திருத்துவதவசியமென்ருவது தோன்றுகிறபோதிலும் மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்களை அனுசரித்தே இந்தக்கேசில் 1-ம் பிரதிவாதியின் நடத்தை மற்றவர்களைக்கட்டுப்படுத்தாதென்று தீர்மானிக்கவேண்டியதாகும். அதாவது 1-ம் பிரதிவாதி 1909 செப்டெம்பர் 7உயில் வாதியின்கணக்கு புஸ்தகத்தில் கையொப்பம் செய்தமையால் காலாவதிதோஷம் 1-ம்பிரதிவாதியின்மேல் விலகுமேயொழிய 2-3 பிரதிவாதிகளின்மேல் வாதி பரிகாரம்தேட காலாவதி தோஷம்நீங்கவில்லையென்று தீர்மானிக்கப்பட்டு மேற்கூறிய விதமாய்த் தீர்ப்பளிக்கப்பட்டது.

———:O:———

(மிஸ்டர் சீவ் ஜஸ்டிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

சேலம் ஜில்லா.

## Crl. R. Case. No. 637, Crl. R. Petition 524 of 19121–5 மார்ச்சு 1913.

சோலையக் கவுண்டன் வகையரா—மனுதார்கள்

கிரிமினல்புரொவிஜர் கோட் 106 (1)-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற (கலகம், எதிர்த்தல், அல்லது வேறு சமாதானத்திற்கு விரோதமான நடத்தையாகிய குற்றங்கள், ஷை குற்றங்களைச் செய்யும்படி ஏவுதல், ஷை குற்றங்கள் செய்யும்பொருட்டு ஆயுதங்களுடன் ஆட்களைச் சேகரித்தல்) ஆகிய குற்றங்களுக்காக, அல்லது அந்நியனுடைய சரீரத்திற்காவது, சொத்துக்களுக்காவது தீங்குண்டாக்குவதாய் மிரட்டின குற்றத்திற்காக, யாதொருவன் ஹைகோர்ட், ஸெஷன் கோர்ட், பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட், ஜில்லா மாஜிஸ்டிரேட் அல்லது வேறு 1-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் கோர்ட் முன்பாக விஜாரணை செய்யப்பட்டதின்பேரில் தண்டிக்கப்பட்டால் அந்தக்கோர்ட்டார் ஷை யானை மூன்றுவருஷத்திற்கு மேல்படாத காலத்திற்கு யாதொரு கலகம் செய்யாதிருக்கும்படி (அடங்கி சமாதானத்துடனிருக்கும்படி) ஒப்பந்தம்செய்து கொடுக்கவேண்டுமென்றும் அதற்காக அவசியமானல் ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றும் உத்தரவளிக்கலாமென்று சட்ட அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபிரிவில் யாதொரு அப்பீல் கோர்ட்டாரும் ரிவிஷன் அதிகாரம் செலுத்துகிற ஹைகோர்ட்டாரும் அதேவித ஜாமீன்பத்திரம் எழுதிக்கொடுக்கும்படி உத்தரவ செய்யலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க எதிரி மனுதார்கள் மேற்கூறிய குற்றங்களில் யாதொன்றுக்காக சேலம் ஸ்டேஷனரி 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாரால் தண்டிக்கப்பட்டதின்பேரில்



அப்பீல் கோர்ட்டார் எதிரிகளிடம் ஜாமீன்பத்திரம் எழுதி வாங்கலாமா என்ற விஷயத்தைப்பற்றி மனுதார்கள் ஹைகோர்ட்டில் சேலம் டிவிஷனல் 1-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் மேற்கண்ட விஷயமாய்ச்செய்த உத்தரவின்பேரில் ரிவிஷன் விண்ணப்பம் தாகல் செய்தார்கள். மனுதார்கள் 21 கல்கத்தா 622, 29 மதராஸ் 190, 30 மதராஸ் 43, & 35 கல்கத்தா 434 ஆகிய நான்கு கேஸ்களில் பிறந்த தீர்மானங்களை ஆதாரமாகச் சொல்லி 2-வது அல்லது 3-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாரின் தண்டனை தீர்ப்பின்மேல் அப்பீல் கோர்ட்டாருக்கு மேற்கூறியவண்ணம் எதிரிகளிடம் ஜாமீன்பத்திரம் கேட்கும்படியான அதிகாரம் கிடையவே கிடையாதென்று வாதித்தார்கள்.

1894-ம் வருஷத்திய 21 கல்கத்தா கேசானது 1872-வது கிரிமினல் புரொவிஜர் கோடின்படி பிறந்த தீர்மானமென்றும் அப்பழய கோட்டில் ஜாமீன்பத்திரம் வாங்கும்படியான சட்டமுறை 106-வது பிரிவில் எற்படவில்லையென்றும் ஆகையால் அந்தத்தீர்மானம் புது கிரிமினல் புரொவிஜர் கோட்டின் அம்சங்களுக்கு ஏற்றதாகாதென்று ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்கள் 1904-ம் வருஷத்திய கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 37-இல் அபிப்பிராயங் கொடுத்து ஷை ரிவிஷன் கேசில் 2-3-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாரால் தண்டிக்கப்பட்ட எதிரியிடம் அப்பீல் கோர்ட்டார் ஜாமீன்பத்திரம் எழுதிவாங்கலாமென்று தீர்மானித்திருக்கிருர்கள் 1905-ம் வருஷத்திய 29-மதராஸ் 190-இலும் 30 மதராஸ் 43-இலும் கல்கத்தாகேஸின் தீர்மானம் அதிக ஆக்ஷேபணையன்னியில் அனுசரிக்கப்பட்டது. 29 மதராஸ்கேஸ் ஈரங்கியாகும் பொழுது ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்களுடைய தீர்மானமும் அபிப்பிராயமும் எடுத்துக்காண்பிக்கப்படவில்லை.

ஆனால் 30 மதராஸ் 182-இல் மதராஸ் ஹைகோர்ட்டார் முந்திய மதராஸ் தீர்மானங்களின் நீதியைப்பற்றிச் சம்சயித்திருக்கிருர்கள். தவிற 33-பம்பாய் 33 இலும், 33 அலகபாத் 48-இலும் மேற்கூறிய, சம்சயிக்கப்பட்ட இரண்டு மதராஸ் கேசின் தீர்மானங்களுக்கும் விரோதமாக 2-3-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் தண்டனையின் பேரில் அப்பீல் கோர்ட்டார் எதிரியிடம் ஜாமீன் பத்திரம் வாங்கலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தீர்மானங்கள் வெவ்வேறுவிதமாக வெவ்வேறு ஹைகோர்ட்களில் மாற்றப்பட்டிருப்பதால் அது விஷயத்தைப்பற்றி அதாவது 30 மதராஸ் 182-இல் சந்தேகப்பட்டபிரகாரம் 29 மதராஸ் 190-இன் தீர்மானமும் அதை, அனுசரித்த பிந்திய தீர்மானங்களும் சரியானவைகளாவெனத் தீர்மானிக்கும்படி புல்பெஞ்சுக்கு ரிபர்செய்யப்பட்டதில் கிரிமினல் புரொவிஜர் கோர்ட் 106-வது பிரிவின் 1-வது உட்பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிற குற்றங்களுக்காக ஷை பிரிவில் சொல்லப்பட்டிருக்கிற 1-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் அல்லது அவருக்கு மேல்பட்ட அதிகாரமுடைய கோர்ட்டார் விதித்த தண்டனையானாலும் சரியே அல்லது வேறு தாழ்ந்த அந்தஸ்துள்ள 2-3-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டார் ஷை குற்றங்களுக்காக தண்டனையளித்தாலும் சரியே ஷை தண்டனையின்பேரில் அப்பீல் செய்யப்பட்டால் அப்பீல் கோர்ட்டார் ஜாமீன்பத்திரம் எழுதிவாங்க உத்தரவளிக்கலாம் என்றும் 106-வது பிரிவின் (3) வது உட்பிரிவில் அப்பீல் கோர்ட்டாரும் ஷை உத்தரவளிக்கலாமென்று சொல்லியிருக்க அந்த வசனத்திற்கு விசாலமான அர்த்தமுண்டென்றும் ஷை குற்றத்திற்காக தண்டனை செய்த கோர்ட்டாருக்கு மேல்பட்ட எந்த அப்பீல்கோர்ட்டாரும் ஷை உத்தரவளிக்கலாமென்றும் 30 மதராஸ் 182-இல் மதராஸ் ஹைகோர்ட்டார் சந்தேகித்தபடி 29 மதராஸ் 190-இன் தீர்மானம் அனுசரிக்கத்தக்கதல்லவென்று அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது.

106-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தை ஒரு அப்பீல் கோர்ட்டாரும் நடத்தலாமென்று விதிக்கப்பட்டதின் கருத்தாவது ஷை பிரிவில் குறிக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைப்பற்றியதே யொழிய ஷை, பிரிவில் சொல்லியிருக்கிற கோர்ட்டாரால் விதிக்கப்பட்டிருக்கிற தண்டனை விஷயமாய் அப்பீல்கோர்ட்டார் ஷை அதிகாரம் செலுத்தலாமென்ற குறுகின

அர்த்தமுடையதல்லவென்று அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது.

ஆகவே சேலம் டிவிஷனல் 1-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டார் 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டால் தண்டிக்கப்பட்ட எதிரிகளை ஜாமீன்பத்திரம் எழுதிக்கொடுக்கும்படி அளித்த உத்தரவு காயமாகி ஹைகோர்ட்டில் செய்யப்பட்ட ரிவிஷன் மனு தள்ளுபடியாச்சுது.

——:O:——

லக்நோ சீவ் கோர்ட் தீர்மானத்தின்மேல் செய்யப்பட்ட

## பிரிவி கௌன்ஸில அப்பீல் கேஸ்.

30 ஜூன் 1913.

1897 டிசம்பரில் ராஜா பலபாதர் சிங் என்ற மூலபுருஷன் காலஞ்சென்றுவிடவே அவனுடைய இரண்டு மைனர் குமாரர்களாகிய பர்டாப்சிங் & அபிரான்சிங் என்றவர்களுக்கு பகபூதிசிங் என்றவர் கார்டியனாக ஏற்பட்டு ஷை யார்களுடைய சொத்துக்களை மானேஜ்மெண்டு செய்துகொண்டுவந்தார். லக்னோவைச்சேர்ந்த அந்தானு என்னும் கிராமத்தின் இஸ்மால் கஞ்ச, குஷால்பூர் என்ற இரண்டுமோல்களில் ஷை மைனர்களுக்கு சில பங்குகளிருந்தன. பகபூதிசிங் என்ற கார்டியனுக்கு குஷால்பூர் என்ற மாலில் சொற்ப பங்குகள் இருந்தன. குஷால்பூரில் மைனர்களுக்குறிய பங்குக்குச்சமமாகவே பகபூதிசிங்குடைய பங்குமிருந்தன. ஷை கிராமத்தில் கூட்டுப்பங்காளிகளாயிருந்த ஸயித் ஸாடிக் வகையராக்கள் 1898 ஆகஸ்டில் இரண்டுமோலிலுள்ள தங்கள் பங்குகள் யாவற்றையும் பாபுராம் வகையராக்களுக்கு விக்கிறயம் செய்துவிட்டார்கள். வழக்கமுறையை அனுசரித்து ஷை கிராமத்தில் யாதொரு பங்காளி தன் பங்குகளை விக்கிறயம் செய்துவிட நினைத்தால் அதே கிராமத்தில் கூட்டுப் பங்காளிகளின் சம்மத மன்னியில் அந்நியர்களுக்கு விக்கிறயம்செய்து விடக்கூடாது. அக்கம்பக்கத்து பங்கு பாத்தியஸ்தர்கள் ஷை பங்குகளை கிறயத்திற்கு வாங்குகிறார்களா என்று விஜாரித்து இல்லாவிடில் மற்ற பங்காளிகளையும் கேட்டறிந்து அதன்பின்தான் அந்நியர்களிடம் பிரஸ்தாபிக்கவேண்டும். மேற்கூறிய வழக்கமுறையானது இப்பொழுது நம்முடைய நாடுகளில் மகம்மதியர்களுக்குள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆகவே ஷை மைனர்களுக்கும் பகபூதி சிங்க் என்றவருக்கும் விக்கிறயம் செய்யப்பட்ட மாலில் பங்குகளிருந்து அதைத்தாங்கள் அடையப் பாத்திரர்களானபடியால் பகபூதி சிங் என்றவர் தானே சொந்தமாய் ஷை சொத்துக்களை அடையவேண்டுமென்று கருதி தன்னைவிட அதிக பாத்தியதையை உடைய மைனர்களுக்கு விரோதமாக பகபூதிசிங் என்றவர் ஷை சொத்துக்களை கிறயம் செய்தவர்களையும் கிறயம் பெற்றவர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்த்து கிறயத்துகையைத்தான் கொடுத்து விடுவதாயும் மேற்கூறிய வழக்கமுறைப்படி ஷை சொத்துக்களைத் தான் அடைய பாத்தியமுடையவனென்றும் சொல்லி சீதாபூர் சப்கோர்ட்டில் 1899 ஜூனில் அசல் தாவாசெய்தார். அந்தப்பிராதில் தன்னை விட மேலான பாத்தியதையுடைய ஷை மைனர்களையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்து அவர்களுக்குக் கார்டியனாக ஹரிப்ரஸாத் என்ற ஒருவரைப் பிராதின் தலைப்பெயரில் குறிப்பிடப்பட்டு பிராது திருத்தலாச்சுது. ஆனால் ஸி. பி. ஸி. 456-வது பிரிவின்படி ஷை மைனர்களுக்கு கார்டியன் நியமனம் செய்யும்பொருட்டு யாதொரு விண்ணப்பமும் செய்யப்படவில்லை. ஷை ஹரிப்ரஸாத் என்றவரை கோர்ட்டார் ஸி. பி. ஸி. 443-வது பிரிவின்படி கார்டியனாக நியமிக்கவுமில்லை. பிராதில் ஷை மைனர்களின் பெயரைப்பிரதிவாதிகளாகச் சேர்த்ததில் கோர்ட்டாருடைய அனுமதிக்கடையாளமாக கோர்ட்டாருடைய கையொப்பமும் அந்த ஸ்தானத்தில் வைக்கப்படவில்லை. (ஒருபிராதில் யாதொரு அம்சம் சேர்க்கப்பட்டால் அந்த இடத்தில் கோர்ட்டார் கையொப்பம் செய்யவேண்டும். மைனர்களைப் பிரதிவாதிகளாய்ச் சேர்த்துப் பிராதைத்திருத்தியதில் கோர்ட்டாருடைய கையொப்ப அத்தாட்சியும் கிடையாது.) தவிர பகபூதிசிங் என்றவர் மைனர்கள் பிரதிவாதிகளாய்ச் சேர்க்கப்பட்ட பிராதில், பிறக்கும் டிக்கிரியில் கட்டுப்படுவது போதாதென்று உபதேசித்து ஷை மைனர்களை தன்னைப்போலவே வேறு பிராது தாகல் செய்யும்படியாகவும், அந்தப்பிராதை ஷை ஹரிப்ரஸாத் என்றவரையே அடுத்த சிநேகிதனாக வைத்து கிறயம் பெற்றவர்களையும் கிறயம் செய்தவர்களையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்ததுமன்றி தன்னையும் (பகபூதிசிங்கையும்) ஒரு பிரதிவாதியாக அதில் சேர்க்கச்செய்து தாகல் செய்யும்படியாகவும் ஏற்பாடு செய்தார். [இவ்வித பிராது கொண்டுவரும் பங்கு பாத்தியஸ்தர்களுக்கு கிறயத் தேதிமுதல் 1-வருஷ காலாவதி ஏற்பட்டிருக்க அதற்குள், ஷை கிராமத்தில் பங்கு பாத்தியதையைக் கொண்டாடக்கூடிய இதர பாத்தியஸ்தர்கள் யாவரும் வேறு பிராது தாகல் செய்யாமல் பாதுகார்க்கும்படி ஷை மைனர்கள் வேறொரு கார்டியனைக்கொண்டு ஸ்வதாவில் ஷை பிராதைத் தாகல்செய்த பாவனையாய் பகபூதிசிங் ஏற்பாடுசெய்தார் என்பதுபோலும்.]

பகபூதிசிங் தன்னுடைய பிராதை யாரும் எதிர்வழக்காட இடம்கொடாமல் தனக்கனுகூலமாக ராஜிசெய்துகொண்டு மைனர்களுக்காக ஹரிப்ரஸாத் என்றவர் தன் கைவசமிருக்க அவருடைய கையொப்பத்தை ராஜிநாமாவில் பெற்றுக்கொண்டு கிறயதாருக்குத் தான் கிறயத்துகை ரூ. 15,000 செலுத்துவிடுவதாகவும் ஷை சொத்துக்கள் தனக்கு விக்கிறயம் செய்யப்படவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஷை ராஜிநாமாவை கோர்ட்டில் தாகல்செய்து விட்டார்கள். ஆனால் ஸி. பி. ஸி. 462-வது பிரிவின்படி மைனர்களைப் பற்றினமட்டில் ஷை ராஜிநாமா செய்துகொள்ள கோர்ட்டாரின் உத்தரவு அளிக்கப்படவில்லை. ஷை ராஜிநாமாவை யனுசரித்துக்கோர்ட்டார் வாதிக்கு 1899 டிசம்பர் 15-இல் டிக்கிரியளித்தார்கள். மைனர்களுக்காகஹரிப்ரஸாத் அடுத்த சிநேகிதனாயிருந்து செய்த பிராதையும்ஷை ஹரிப்ரஸாத்தான் ஷை மைனர்களுக்காக பகபூதிசிங்குடைய பிராதில் ராஜிநாமாவுக்கு ஒப்புக்கொண்டதின் பேரில் ராஜிநாமாவை யனுசரித்து டிக்கிரி பிறந்ததாக கோர்ட்டாருக்குத் தெரியப்படுத்தி, கோர்ட்டார் அனுமதியைப்பெறாமல்மைனர்களைக்கட்டுப்படுத்தின தகவலை 2-ம் பிராதில் தீர்ப்பளித்த கோர்ட்டாருக்குத் தெரிவிக்காமல் மறைத்து, ஷை ஹரிப்ரஸாத்தன்னுடைய பிராதைஉவித்டிரா செய்து கொள்ள விண்ணப்பங் கொடுத்ததின்மேல் ஷை இரண்டாம் பிராதானது தள்ளுபடியாச்சுது. மைனர்களின் பாத்தியம் மேற்கூறிய இரண்டு பிராதுகளின் பைசலால இழக்கப்பட்டமையால் 1907 ஜூலையில் ஷை யார்கள் மேஜர்களாகவே பகபூதிசிங் டிப்டிகலக்டருடைய உத்தரவின்படி ஷை யார்களுடைய கார்டியன் ஸ்தானத்திலிருந்து விலக்கப்பட்டதின்பேரில், 1908 ஜூலை 29-இல் ஷை பர்டாப்சிங், அபிரான்சிங் என்ற இருவரும்சேர்ந்து சீதாபூர் சப்கோர்ட்டில் தங்களுக்கு விரோதமாய் பிறந்த இரண்டு டிக்கிரிகளும் ரத்தாகவேண்டுமென்றும தங்களுக்கு ஷை டிக்கிரிக்குமுன் எந்த பாத்தியஸ்திதியிருந்ததோ அதே நிலைமையில் தாங்கள் நிற்பதாக தீர்மானிக்கப்படவேண்டுமென்று ஷை பகபூதிசிங் என்றவரைப் பிரதிவாதியாகச் சேர்த்து அசல் தாவா செய்தார். சப்கோர்ட்டார் முந்திய டிக்கிரிகளின் ஒழுங்கீனத்தைக் கவனித்து அதாவது மைனர்கள், சட்டப்படி, முதல் பிராதில் சேர்க்கப்படவில்லையென்றும் ராஜிநாமாவுக்கு கோர்ட்டார் அனுமதிகொடுக்கப்படவில்லையென்றும் அவ்வித ராஜிநாமா டிக்கிரியைஅனுசரித்துச்செய்யப்பட்ட பிந்திய பிராதின் பைசல் தீர்மானமும் சட்ட விரோதமென்று அபிப்பிராயப்பட்டு வாதிகள் கோரியபடி டிக்கிரியளித்தார்கள்.

அதன்மேல் பகபூதிசிங் என்ற பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் இரண்டு ஜட்ஜிமார்கள் ஷை அப்பீலை ஈரங்கிகேட்டு முதலாவது ஜட்ஜியவர்கள் சப்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு ஒற்றுமையாய், வாதிக்கு டிக்கிரியளித்தது சரியென்று அப்பீல் தள்ளுபடிசெய்ய உத்தேசித்தும் மற்றொரு ஜட்ஜியவர்களுடைய அபிப்பிராயத்தில், வாதியின் பிராதானது (Specific Relief Act) ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் 42-வது பிரிவின்படி செய்யப்பட்டதாகவும், அதாவது ஒருவனுடைய சட்டமுறையான பாத்தியதையை மற்றொருவன் தன்னுடைய ஸ்வய லாபத்தைக்கருதி ஆக்ஷேபித்தால் அவ்வித சட்ட பாத்தியதையைத் தீர்மானிக்கும்பொருட்டு தாவா செய்யலாம் என்றிருக்க அவ்வித தாவாவில் வாதிக்குப் பரிகாரமளிப்பது கோர்ட்டாருடைய யுக்தத்தைப் பொருத்ததென்றும் அவ்வித யுக்தத்தை பிரதிவாதிக் கனுகூலமாய்ச் செலுத்த மனங்

கொண்டு வாதிகளின் தாவாவைத் தள்ளுபடிசெய்ய அபிப்பிராயப்பட்டதால், முதலாவது ஜட்ஜியவர்கள் (Specific Relief Act) 42-வதுபிரிவின்படி பிராது தாகல் செய்யப்பட்டது சந்தேகமாய்த் தோன்றியதாகவும், அவ்விதமாகவே பிராதின் அம்சத்தை யூகித்தாலும் கோர்ட்டார் யுக்தத்தை வாதிக்கனுகூலமாய் செலுத்தவேண்டுமென்று 2-வது ஜட்ஜியவர்களுக்கு மாருக யுக்த அபிப்பிராயப்பட்டு ஸி. பி. ஸி. கோட் 98-வது பிரிவின்படி (Specific Relief Act) 42-வது பிரிவில் சொல்லிய யுக்த அபிப்பிராயமாகிய லா பாயிண்டைப்பற்றி இருவருக்கும் அபிப்பிராயபேதமிருந்தபடியால் 3வதுஜட்ஜியவர்களிடம் ஷை சட்ட பாயிண்டைத் தீர்மானிக்கும்படி ரிபர் செய்யவே ஷை மூன்ருவது ஜட்ஜியவர்கள் தங்களிடம் ரிபர்செய்த விஷயத்தை மட்டும் உத்தரவில் பிரஸ்தாபிக்காமல் கேஸின் விஷயமாய்ப் பொதுவாய் அபிப்பிராயங்கொடுத்துக் கடைசியில் வாதியின் பிராது ஷை ஆக்ட் 42-வது பிரிவின்படியே கொண்டுவரப்பட்டதாகவும் ஆனல் அதில் கண்ட கோர்ட்டார் யுக்தத்தை பிரதிவாதிக் கனுகூலமாக செலுத்தவேண்டுமென்றும் 2-வது ஜட்ஜியவர்களின் அபிப்பிராயத்திற்கிசைவாய் உத்தரவளித்தார்கள். ஆகவே 1910 மார்ச்சில் வாதியின் பிராது அப்பீலில் தள்ளுபடியாச்சுது.

அதன்மேல் வாதிகள் ப்ரிவி கௌன்ஸிலில் அப்பீல் செய்யவே அங்கு வாதிகள் ராஜிநாமாவுக்குக் கட்டுப்பட்டவர்களாக மாட்டார்கள் என்றும் முந்திய இரண்டு டிக்கிரீகளும் அவர்களைக் கட்டுப்படுத்தாதென்றும் சொல்லி வாதிகளுக்கனுகூலமாக சப்கோர்ட் தீர்மானம் காயமாச்சுது.

வாதிகளுக்காக ப்ரிவி கௌன்ஸில் செய்தவாதத்தில், ஹைகோர்ட்டார் ஸி. பி. ஸி. 98-வது பிரிவின்படி அப்பீலைத் தள்ளுபடி செய்திருக்கவேண்டுமென்றும் ஸ்பெஸிபிக் ரிலீவ ஆக்ட் 42-வது பிரிவின்படி யுக்த அபிப்பிராயம் லாபாயிண்டல்லவென்றும் ஆகையால் 3-வது ஜட்ஜியவர்களிடம் ரிபர்செய்யத்தக்க லாபாயிண்டு இந்தக்கேசி கிடையாதென்றும், சப்கோர்ட்டாருடைய தீர்மானத்தை மாற்றுவதற்குச் சரியான முகாந்தரம் யாதொன்றும் கொடுக்கப்படவில்லையென்றும் அனுமதிபெருத ராஜிநாமாவும் அதை அனுசரித்த டிக்கிரீகளும் செல்லத்தக்கதல்லவென்றும் எடுத்துப் பேசப்பட்டது. 33, I. A 139, 10 I. A. 150, 9 அலகபாத் 625, 642-ம் ஆதாரமாக எடுத்துக் காண்பிக்கப்பட்டது.

பிரதிவாதிக்காக, பிந்திய பிராது தள்ளுபடியானதற்கு பிரதிவாதி காரணமல்லவென்றும் ஷை பிராதில் ஹரிப்ரஸாதென்றவர் தன்னை கார்டியனுக நியமித்து உத்தரவளிக்கவேண்டுமென்று விண்ணப்பம் கொடுக்கப்பட்டதாகவும் இரண்டு கீழ் கோர்ட்டார் தனக்கனுகூலமாய் அபிப்பிராயங் கொடுத்திருக்கிருர்களென்றும் எடுத்துச்சொல்லப்பட்டது.

ப்ரிவி கௌன்ஸிலார் பிரதிவாதியின் வாதங்கள் பயனில்லையென்றும் ஹரிப்ரஸாத் 2-ம்பிராதில் கொடுத்தவிண்ணப்பம் அனுவசியமென்றும், அதாவது பிராதில் அடுத்த சினேகிதனுகயிருப்பதற்கு கோர்ட்டார் உத்தரவு தேவையில்லையென்றும் இரண்டு கீழ் கோர்ட்டார் தீர்மானம் ஒற்றுமையாய் இந்தக்கேசில் கிடையாதென்றும், அதாவது ஹைகோர்ட்டில் இரண்டு ஜட்ஜிமார்களும் மாருக அபிப்பிராயப்பட்டு அந்த தீர்மானத்தை அனுவசியமாய் ரிகார்டு செய்தபோதிலும் அதைப்பற்றி 3வது ஜட்ஜியிடம் ரிபர்செய்தமையால் 3-வது ஜட்ஜியவர்களின் அபிப்பிராயத்தின் பேரில் பிறந்த முடிவான ஹைகோர்ட் அப்பீல் தீர்மானம் ஒன்றேயொழிய இரண்டல்லவென்று அபிப்பிராயப்பட்டு மேற்கண்டவிதமாய் வாதிகளுக்கனுகூலமாய் சப்கோர்ட் தீர்மானம் காயமாச்சுது.

———:O:———

மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் & மிஸ்டர்
ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

மதுரை ஜில்லா.

2-வது அப்பீல் நெ. 1590 of 1908-

2ஏப்ரல் 1913.

பிச்சுவய்யர் என்கிற சுப்பிரமணிய அய்யர்

Vs

யம். சுப்பாநாயுடு

மதுரை விஷ்ணு தேவஸ்தான கமிட்டியின் மானேஜ்மெண்டிலிருக்கும் கல்ளகர் கோவிலுக்கு 1893 முதல் ஆதியப்ப செட்டி என்றவர்



தர்மகர்த்தாவா யிருக்கச்சே 1901 அக்டோபரில் கமிட்டியார், பிச்சுவய்யர் என்கிற சுப்பிரமணிய அய்யரை தர்மகர்த்தாவாக நியமனம்செய்தார்கள். ஷை சுப்பிரமணிய அய்யர் தன்னுடைய நியமனத்தின்படி உத்தியோகத்தை ஸ்தாபிக்கும் பொருட்டும் ஆதியப்பசெட்டியார் சட்டப்படிக்கு நியமிக்கப்பட்ட தர்மகர்த்தா அல்லவென்று தீர்மானிக்கும்பொருட்டும், மதுரை சப்கோர்ட்டில் வியாஜ்ஜியம் நடத்துவதற்குக் கமிட்டியார் அனுமதிபெற்று தேவஸ்தானத்தில் போதுமான பண்டு இல்லாதபடியால் ஷை வியாஜ்ஜியச் செலவுக்காக தன் சொந்தப்பணமாகிய ரூ. 2000-யும் வக்கிலிடம் டிபாஸிட் கட்டி டிபாஸிட் கட்டின தேதிமுதல் குறித்தகாலத்திற்குள் ஷை பிராதை தாகல்செய்து நடத்துவதாய் ஒப்புக்கொண்டபடி, 1901-ம் வருஷத்திய அசல் நம்பர் 44 இல் ஷை வியாஜ்ஜியம் தொடுக்கப்பட்டதில், 1903-ம் வருஷத்தில் ஷை சுப்பிரமணிய அய்யருக்குப் பிரதிகூலமாக பிராது தள்ளுபடியாச்சுது. ஷை வியாஜ்ஜியம் நடந்துகொண்டிருக்கையில் 1902 மார்ச்சு முதல் மே வரையில் ஷை சுப்பிரமணிய அய்யர் கம்மிட்டியாரால் நியமிக்க அதிகாரத்தைச் செலுத்தினவராய் தேவஸ்தானக்குறிய சில வருமானங்களை வசூலித்துவந்ததாகவும் அவ்விதமாய் வசூலித்தது சட்ட விரோதமென்றும் சொல்லி ஷை ஆதியப்பசெட்டியார் ஷை சுப்பிரமணியஅய்யரால் மேற்கூறிய வண்ணம் வசூலிக்கப்பட்ட துகை ரூ. 3087-8-6-யும் திரும்பி யடையும்பொருட்டு மேலமதுரை சப்கோர்ட்டில் ஷை சுப்பிரமணிய அய்யர் மீது 1903 மார்ச்சு 28-இல் வியாஜ்ஜியம் செய்தார்.

பிரதிவாதியாகிய சுப்பிரமணிய அய்யர் எதிர் ஆன்ஸரில்:— 1893-இல் ஆதியப்பசெட்டியின் தர்மகர்த்தா நியமனம் சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்றும், ஆகையால் 1903 இல் அவர் இந்தப்பிராது தாகல்செய்ய லாயக்கில்லாதவரென்றும் 1901 ஏப்ரல் மாதத்தில் கமிட்டியார் ஷை ஆதியப்பசெட்டியாரை ஷை உத்தியோகத்திலிருந்து டிஸ்மிஸ் செய்துவிட்டு, 1901 அக்டோபரில் கமிட்டியார் தன்னை ஒழுங்குப்படி நியமனம் செய்தாரென்றும் ஆகையால் 1902 மார்ச்சுமுதல் மே வரையில் தான் வசூலித்தேவஸ்தானவரும்படியை சரியான ஹோதாவில், அதாவது சட்டப்படி சரியான தர்மகர்த்தா உத்தியோக நிலமையில் வசூல்செய்து வந்ததாகவும், இந்த ஆன்ஸர் தேதியாகிய மே-1903-இல் தான் தர்மகர்த்தா உத்தியோகத்திலிருந்து விலகிப்போன போதிலும், தான் நியமிக்கப்பட்ட காலமாகிய, 1901 அக்டோபர் 15-முதல் 1903 மார்ச்சுவரையில் தேவஸ்தான சம்பந்தமாக தன்னல் வசூலிக்கப்பட்டிருக்கிற துகைகளுக்கதிகமாகவே செலவு செய்திருப்பதாயும், கணக்குப்பார்க்குமிடத்து தேவஸ்தானத்திலிருந்து தனக்கு ரூ.1400-வரையில் பாக்கி எற்படுமென்றும் ஸ்டேட்மெண்டு கொடுத்தார்.

பிரதிவாதியால் செய்யப்பட்டிருந்த வியாஜ்ஜியத்தில் வாதி ஆதியப்பசெட்டியார் வெற்றியடைந்தபோதிலும் கமிட்டி மெம்பர்கள் நவம்பர் 1903-இல் சுப்பாநாயுடு என்ற வேறொருவரை தர்மகர்த்தாவாக நியமனம்செய்து ஷை சுப்பாநாயுடு அவ்வுத்தியோகத்தைப் பார்த்து வந்தமையால் பிரதிவாதி, இந்த தாவா ஆதியப்பசெட்டியாரால் நடத்தப்படுவது பிசகென்று அதாவது ஆதியப்பசெட்டியார் மானேஜ்மெண்டிலிருந்து நீங்கிவிட்டபடியால் பிராதில் அவருடைய பெயரிருப்பது சட்டவிரோதமென்றும், ஆக்ஷேபித்தார். சப்கோர்ட்டார் அந்த ஆக்ஷேபணைக்குச் சமாதானமாக 1905 நவம்பர் 22-இல் ஷை சுப்பாநாயுடு அவர்களை ஆதியப்பசெட்டியாருக்குப் பதிலாக பிராதில் வாதியாகமாற்றும்படி உத்தரவளித்தார்கள். அந்தப்படி மாற்றப்பட்ட உத்தரவு பிசகென்றும் அதாவது ஆதியப்பசெட்டி உத்தியோகத்திலிருந்து நீங்கிவிட்டபடியால் பிராதும் நீங்கிவிடவேண்டுமே (தள்ளுபடியாக வேண்டுமே) யொழிய சுப்பாநாயுடுபெயரை பதிலாக மாற்ற உத்தரவளித்தது பிசகென்று ஜில்லாகோர்ட்டில் பிரதிவாதி அப்பீல்செய்யவே அந்த அப்பீல் தள்ளுபடியாகி சப்கோர்ட்டார் உத்தரவும் காயமாச்சுது.

பிரதிவாதிவசூலித்திருந்ததுகையிருந்து, ஆதியப்பசெட்டியின்பேரில் கமிட்டியாருடைய அனுமதிபெற்று தொடுத்த நஷ்ட வியாஜ்ஜியத்திற்காகத் தான் செலவுசெய்ததுகையை வஜாசெய்து கொடுக்கவேண்டுமென்று வாதாடியதில் சப்கோர்ட்டார்

அந்தவாதத்திற்கு விரோதமாக பிரதிவாதி தன்னுடைய உத்தியோக பாத்தியதையை ஆதியப்பசெட்டியுடன் வியவகாரமாடி ஸ்தாபிக்க யத்தனித்து ஷை வியாஜ்ஜியம் தொடுத்ததாகவும், தேவஸ்தானத்து விஷயமாக அத்துகை செலவு செய்யப்பட்டதாக பாவிக்கக் கூடாதென்று தீர்மானித்து, வாதிக்குக்கோறியபடி டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல்பிரதிவாதி ஜில்லாகோர்ட்டில் அப்பீல் செய்ததில் அங்கு பிரதிவாதி வாஸ்தவமாய் தேவஸ்தான வரும்படி ரூ. 2798-0-4 யும் வசூலித்ததாகவும் அதில் கிரமப்படி தேவஸ்தானத்திற்காக ரூ. 676-5-8 செலவுசெய்ததாகவும் மற்றத்துகை ரூ. 2121-10-8 யும் பிரதிவாதி தேவஸ்தானத்திற்கு பிராது தேதியில் செலுத்தக்கடவனென்றும், தீர்மானிக்கப்பட்டு அந்தத்துகை ரூ. 2121-10-8-க்கும் பிராது தேதிமுதல் அசல் கோர்ட் டிக்கிரீதேதிவரை ஒருவட்டியுடன் டிக்கிரீயாச்சுது.

பிரதிவாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்து அங்கு செய்தவாதத்தின் அம்சங்களாவன:—

(1) ஆதியப்பசெட்டியாரை 1898-இல் நியமனம் செய்யப்பட்டதின் நியாயத்தைப்பற்றியும 1901 ஏப்பிரல் மாதத்தில் ஷை யாரை கமிட்டியார் டிஸ்மிஸ் செய்த விஷயத்தின் ஒழுங்கைப் பற்றியும் கீழ்கோர்ட்டார் ஒருவிதமான அபிப்பிராயத்தீர்மானமளித்திருக்கவேண்டும்.

(2) ஆதியப்பசெட்டி தன்னுடைய மானேஜ்மெண்டுக்குறிய பாத்தியதையைக் கொண்டாடும் பொருட்டு இந்த வியாஜ்ஜியம் தொடுக்கப்பட்டிருக்க, 1905 நவம்பரில் சரியான தர்மகர்த்தாவை வாதியாக ஏற்படுத்தி, ஷை பிராதை தேவஸ்தானத்தின் நன்மைக்காக பிரதிவாதி உத்தியோகம் வகித்து வந்தகாலத்தில் வசூலித்துவந்த துகையை வாபீஸ் அடையக் கொண்டுவந்ததாக, மாற்றுவது சட்டவிரோதம். ஆகையால 1905 இல் ஆதியப்பசெட்டி பிராதிலிருந்து விலகினபடியால் ஷை பிராதும் ஸ்திதியற்றுப்போனதாக பாவிக்கப்படவேண்டும்.

(3) சுப்பாநாயுடு வாதியாக 1905 நவம்பரில் பதிவானபடியால் தாவா பாக்கித்துகையை வசூலிக்க லிமிடேஷன் ஆக்ட் 22-வது பிரிவின் 2-வது கிளாவின்படி காலாவதிதோஷமாகிவிட்டது. (அதாவது பிராது தாகல் செய்யப்பட்ட பிறகு வாதியின் உத்தியோக அந்தஸ்தானது மாறினபடியால் ஆதியப்பசெட்டிக்குப் பதிலாக சுப்பாநாயுடுவின் பெயர் வாதியாக மாற்றப்பட்ட விஷயம் புதிய ஓர் பார்டியை மாற்றின பாவனையாகாது. உத்தியோக அந்தஸ்தே வாதியின் நிலமையாதலால் பேர்வழிமாற்றுதல், பிராதின் சட்ட நிலைமையை, லிமிடேஷன் ஆக்ட் 22-வது பிரிவின் 1-வது கிளாஸில் சொல்லியபடி, காலாவதிதோஷம் நிவர்த்தியாகத்தக்கபடி, மாற்றக்கூடியதல்ல.

(4 ஆதியப்பசெட்டியின் ஸ்வயபாத்தியதையை நமோதுக்குக் கொண்டுவரப்பட்ட பிராதாயிருந்தாலும் சரியே, அல்லது தேவஸ்தானத்தின் பாத்தியதையின்படி ஷை துகையைவசூலிக்கக் கொண்டுவரப்பட்ட பிராதென்றாலும்சரியே, எவ்விதத்திலும் சுப்பாநாயுடுவின் பெயரை வாதியாக மாற்றியது சட்டவிரோதம்.

(5 பிராது, தேவஸ்தானத்திற்காக செய்யப்பட்டதென்று பாவிக்கப்பட்டாலும் உத்தியோக நிலமையற்ற தர்மகர்த்தாவால் கொண்டுவரப்பட்ட பிராதில் சரியான தர்மகர்த்தாவின் பெயரை பர்த்திசெய்வதினால் பிராதின் ஷை தோஷம் நிவர்த்தியாகாது.

(6) கீழ்கோர்ட்டாரின் டிக்கிரீப்படி தேவஸ்தானச் செலவுக்காகதள்ளுபடியானரூ. 676-5-8 போக 1901-ம் வருஷத்திய அசல் கே. 44-இன் வியாஜ்ஜியத்தை நடத்தியதற்காக ஏற்பட்ட செலவு ரூ. 1608-14-0,-ம், அதில் எதிரிக்காக கொடுத்த எதிர்வாதச்செலவு ரூ. 853-0-6, தன்னுடைய மாதச்சம்பளம் ரூ 50 விகிதமாகக்கூடிய துகையுடன் ஆபீஸ் சிப்பந்திச்செலவுமாகச்செலவான ரூ. 776-10-6-ம், அச்சுக்கூலி முதலிய சில்லரைச் செலவு ரூ. 24-14-0 ஆக வகைமூன்றும் வஜா செய்யப்படவேண்டும். கீழ்கோர்ட்டார் தள்ளிக்கொடுத்த துகையுடன் வியாஜ்ஜியச் செலவும் சேர்க்கப்பட்டால் வாதியின் பரிகாரத துகை பூராவும் வஜாவாகி விடுகிறது. ஆகவே தேவஸ்தானத்திலிருந்து பிரதிவாதிக்குத் துகை



பாக்கி ஏற்படுமேயொழிய பிரதிவாதியால் யாதொரு பாக்கித்துகையும் கொடுக்கப்பட வேண்டியதில்லை.

மேற் கூறிய பிரதிவாதியின் ஆறுவிதமான அப்பீல் க்ரௌண்டுகளையும், பிராது, ஸ்டேட்மெண்டு, கீழ்கோர்ட் தீர்மானங்கள் முதலிய சகல ரிகார்டுகளையும் பார்வையிட்டு இருதரப்பு ஆர்கியுமெண்டுகளையும் கேட்டு ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் செய்த தீர்மானமுடிவின் சுருக்கமாவது:— பிராதின் அம்சங்களையும் வசூல் கணக்குகளைப்பரிசோதித்துத் தீர்மானம் செய்யவேண்டுமென்று பிராதில் கோறியிருப்பதையும் கவனித்துப் பார்க்குமிடத்து இந்தப்பிராது ஆதியப்பசெட்டியின் ஸ்வய அதிகாரத்தின்படி தேவஸ்தானத்தின் சொத்துக்களை மானேஜ்மெண்டு செய்கிற பாத்தியதையை அனுசரித்து செய்யப்பட்டதாகத் தோன்றவில்லை. ஆகையால் பிரதிவாதிக்காக எடுத்துக்காண்பிக்கப்பட்ட அதாரிடிகளாகிய 10 I.. A 90; & 7 மதராஸ் 417-ம் உதவக்கூடியவைகளல்ல. வாதி சொல்லுகிறபடி பிரதிவாதி ஒருபொழுதும் சரியான அதிகாரத்துடன் தர்மகர்த்தாவாகயில்லை. பிரதிவாதியோதான் இந்தப்பிராது தாகலான இரண்டு தினங்களுக்குப்பின் தர்மகர்த்தா உத்தியோகத்திலிருந்து விலகிக்கொண்டதாக ஒப்புகொள்ளுகிறார். எவ்விதத்திலும் இந்தப்பிராது தேவஸ்தானத்திநிமித்தம், தப்பாக ஒருவன் உத்தியோகத்தை வகித்து வசூலித்த துகையை ஷையானிடமிருந்து திரும்பி அடையும் பொருட்டு கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியமாக பாவிக்கப்படவேண்டும்

தர்மகர்த்தா உத்தியோகத்தை வகிக்கப் பாத்திரரில்லாத ஆதியப்பசெட்டியால் பிராது, பிரதமத்தில்கொண்டுவரப்பட்டிருந்தபோதிலும், 1905-இல் சுப்பாநாயுடுவாகிய சட்டமுறைப்படி நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாவின் பெயர் பிராதில் வாதியாகபர்த்திசெய்யப்பட்ட காரணத்தால் பிராதின் தோஷங்கள் யாவற்றும்நீங்கிவிட்டன. 32 கல்கத்தா 582-ஐப் பார்க்கவும. மேற்படி கல்கத்தாகேஸானது பிரிவி கௌன்ஸிலுக்குப் போய் அங்கும் அதே அபிப்பிராயம் காயமாகியிருக்கிறது. தர்ம பரிபாலனத்தின் ஆதீனம் அதாவது இந்தக்கேசைப்போல ஷை தேவஸ்தானத்தின் பெயரானது ஒரு வியாஜ்ஜிய நடவடிக்கையின் துவக்கத்திலிருந்து தொடர்ச்சியாய் நின்றுவரின் அதற்குப் பிரதிநிதியாக தப்பான மனிதனை பிரதமத்தில் ஏற்படுத்தியிருந்தும் பின்னால் சரியான லாயக்குள்ள மனிதனை பிரதிநிதியாக ஏற்படுத்திவிட்டால் அவ்வித திருத்தலானது, லிமிடேஷன் ஆக்ட் 22-வது பிரிவின் 1-வது கிளாஸில் கண்டபடி புதிய பார்டியைச் சேர்த்த பாவனையாகி காலாவதிதோஷம் கணிக்கும் பொருட்டு பிராது ஷை திருத்தல் தேதியிலேயே தாகல் செய்யப்பட்டதாக நிதானிக்கப்படக்கூடாதென்று பிரிவிகௌன்ஸிலார் 37 கல்கத்தா 229 இல் தீர்மானித்திருக்கிறார்கள். ஷை கேசில் பிரதிவாதியின்பெயர் மாற்றப்பட்டிருந்தது. இந்தக் கேசில் வாதியின்பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால் நியாய ஒழுங்கு இருவகைக்கும் ஒரேவிதம்தான். தவிற சுப்பாநாயுடுவின் பெயரை வாதியாகமாற்றிய உத்தரவு ஜில்லாகோர்ட் அப்பீலில் உறுதியாகி விட்டபடியால் அதைப்பற்றி 2-வது அப்பீலில் ஆக்ஷேபிக்க சட்டம் கிடையாது. காலாவதி தோஷத்தைப்பற்றி யோஜிக்குமிடத்து லிமிடேஷன் ஆக்ட் 10 வது பிரிவின்படி இந்தப் பிராதுக்குக் காலாவதிமய கிடையாது. தேவஸ்தானதிற்காகச் செய்யப்பட்ட இந்ததாவா, ஈரங்கிவிஜாரணைகாலத்தில் சரியான சட்டத்திற்கிசைந்த வாதியால் நடத்தப்பட்டிருக்கிறது. பிரதிவாதியோ லாயக்கான அல்லது லாயக்கில்லாத ஒரு முந்திய தர்மகர்த்தாவாக இருந்திருக்கிறான். ஆகவே 11 மதராஸ் 274 இல் தீர்மானித்திருக்கிறபடி ஒரு தர்மகர்த்தா முந்திய தர்மகர்த்தா பேரில் வியாஜ்ஜியம் தொடுக்கக் காலாவதிதோஷமே கிடையாது. ஆகவே பிரதிவாதியின் எதிர்வாதங்களில் 2, 3, 4, & 5-வது க்ரௌண்டுகள் பிரயோஜனமில்லை.

ஆருவது அப்பீல் க்ரௌண்டைப்பற்றியோஜிக்குமிடத்து, 1901 அக்டோபரில் பிரதிவாதியை கமிட்டியார் நியமித்தது சட்ட சம்மதமான நியமனமாயிருக்கும்பட்சத்தில், 1901-ம்வருஷத்திய அசல் வியாஜ்ஜியத்தில் செய்த செல்வு துகைக்கு வசூலிலிருந்து செல்லாக வேண்டியது நியாயமென்று தோன்றுகிறது. ஒரு தர்மகர்த்தா தேவஸ்தானத்தினுடைய நன்மைக்கென்ற நல்ல

எண்ணத்துடன் யாதொரு அஜாக்கிரதை அல்லது தப்பான நடத்தையில்லாமல் ஒரு வியவகாரம் நடத்திவந்தால் அதற்காக செய்த செலவு தொகையை தேவஸ்தானத்திலிருந்து அடையப் பாத்திரனாகிறான். (Trust Act) டிரஸ்ட் ஆக்ட் 32-வது பிரிவைப்பார்க்கவும். டிரஸ்ட் விஷயமாய் லீவின் துரையவர்கள் எழுதியிருக்கிற கிரந்தத்தின் 1257-வது பக்கத்தையும் பார்க்கவும். தன்னுடைய உத்தியோக நிலைமையை ஸ்தாபிக்கும்பொருட்டாகிலும் அதைக்காப்பாற்றும் பொருட்டாகிலும் ஒரு தர்மகர்த்தா எவ்விதமான செலவுசெய்ய நேரிட்டபோதிலும் அத்தொகை தேவஸ்தானத்திலிருந்து அடைய லாயக்குண்டு. கைப்பணத்தைக்கொண்டு செலவுசெய்தால் அதை தேவஸ்தானத்திலிருந்து திரும்பியடையக் கடவனாகிறான். சாதாரணமான கவலைத்தாழ்ச்சி, அல்லது யுக்திக்குறைவில்லாத, வேறுவிதமான துர்நடத்தையாலாவது அல்லது துற்றமான காரியங்களாலாவது தர்மகர்த்தா ஒருவியாஜ்ஜியத்தில் வீண் செலவு செய்துவிட்டாலொழிய, ஷை யார் செய்த செலவுகளுக்கு தேவஸ்தானத்தி லிருந்து வஜா செய்துகொள்ள நியாயமுண்டு. கோர்ட்டாரும் தர்மகர்த்தாக்களைச் செலவுதொகை கொடுக்கும்படிடிக்கிரீ யளிக்கும் சந்தர்ப்பங்களில் மேற்கூறிய பாத்தியதையை (அதாவது தேவஸ்தான பண்டிலிருந்து செலவுதொகையைப் பெற்றுக்கொள்ளும் பாத்தியதையைப்) பாராட்டி வருகிறார்கள். இல்லாவிடில் பொது தர்மகாரியங்களைப் பரிபாலித்து வருவதற்கு டிரஸ்டிகள் யாவரும் முன் நின்று நடத்தப் பிரியப்படமாட்டார்கள். தர்மகர்த்தா தன் கடமையைச் செலுத்தி அல்லது குற்றமற்றவிதமாய் யாதொரு பிசகான நடத்தையாலாவது வியவகாரங்களில் தோல்வியடைந்தால் செலவுதொகைகளை தேவஸ்தானத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று கோர்ட்டார்கள் தீர்மானம்செய்து வருகிறார்கள். ஆனால் ஸ்வய நன்மை லாபத்தைக்கருதி, அல்லது பிறருக்கு கஷ்டமும் தொந்தரவும் உண்டாகும்படி அனுவசியமாய் மாச்சரிய எண்ணங்கொண்டு ஒரு வியவகாரம் நடத்தினாலும், பிரதமத்தில் தன்னுடைய அஜாக்கிரதையும் துர்நடத்தையுமே வியவகாரத்திற்கு ஆஸ்பதமான போதிலும், அதில் நேர்ந்த செலவுகளுக்கு தேவஸ்தானத்திலிருந்து வஜா செய்துகொள்ள நியாயமாகாது. நல்ல எண்ணத்துடன் செய்த பிசகால் நேர்ந்த செலவு தர்மகர்த்தாக்களைப் பொறுக்காது.

1898-இல் ஆதியப்பசெட்டியின் நியமனம் ஒழுங்கீனமாகவும் 1901-இல் அவரை டிஸ்மிஸ் செய்தது சரியாகவுமிருந்து, பிரதிவாதி 1901-இல் ஒழுங்காய் நியமிக்கப்பட்டு ஆதியப்பசெட்டியின்மேல் பிரதிவாதி தொடுத்த வியாஜ்ஜியத்தில் பிராது தயாரிப்பதிலும் அதை நடத்துவதிலும் பெரிய பிசகு அல்லது அஜாக்கிரதையான நடத்தையினால் தோல்வியடைந்தாலொழிய மேற்படி வியாஜ்ஜியச்செலவுக்கும் எதிரிக்குக் கொடுக்கவேண்டிய செலவுதொகைக்கும் தேவஸ்தானபண்டிலிருந்து வஜாவாக வேண்டியது நியாயமாகும். மேற்படி 1901-ம் வருஷத்திய வியாஜ்ஜியம் சட்டப்பயிற்சியுள்ள கமிட்டி மெம்பர்களுடைய யுக்தியைக்கொண்டு நடத்தப்பட்டிருக்க அற்பமான ஒரு சட்டக்குறைவால் கடைசியில் அந்த வியாஜ்ஜியம் அபஜெயமானதால் பிரதிவாதி தான்செய்த செலவைத் திரும்பி அடைய லாயக்கற்றவனாகான். ஆனால் பிரதிவாதி மேற்கூறியபடி ஒழுங்காய் நியமனம் செய்யப்பட்ட தர்மகர்த்தாவாக யிருந்து மேற்படி வியாஜ்ஜியத்தைத் தொடுத்திருக்கவேண்டும். பிரதிவாதி ரூ. 2000-யும் வக்கிலிடம் செலவுக்காக டிபாஸிட் கட்டியிருந்த பொழுது ஒரு குறித்தகாலத்தில் வியவகாரம் தொடுக்கத்தவறினால் அத்தொகையை இழந்துவிடுவதாய் ஒப்புக்கொண்ட ஒரு உடன்படிக்கையைக் கவனித்து வியாஜ்ஜியச்செலவைத் தனே சொந்த ஐவேஜிலிருந்து வகிக்கிற எண்ணம் ஏற்படுகிறதென்று வாதிக்காக எடுத்துப் பேசப்பட்டது. அப்படி யூகிக்க நியாயமில்லை. வியாஜ்ஜியகாலத்தில் கமிட்டியார் வசம் பண்டில்லாதபடியால் பிரதிவாதி கைப்பணத்தை அட்வான்ஸாகக் கொடுத்து செலவு செய்ததாக பற்பல ஆதாரவுகளைப்படித்துப் பார்க்கும்பொழுது துலங்குகிறது. ரூ. 2000-ம் பிரதிவாதி தேவஸ்தானத்திற்கு இனாமாகக் கொடுத்ததாக ஏற்படாது. குறித்தகாலத்தில் வியாஜ்ஜியம் தொடுக்கப்படாவிட்டால் தான் அதை இழந்து விடக் கடவன். ஆனால் அப்படித்தவறுதல் செய்யவில்லை.



தேவஸ்தான மானேஜ்மெண்டில் ஆதியப்ப செட்டியாரை தலையிடாமல் நிறுத்தும்பொருட்டு மேற்படி வியாஜ்ஜியம் செய்யப்பட்டபடியால் சப்கோர்ட்டார் நினைத்தபடி பிரதிவாதி தன் சொந்தப் பிரயோஜனத்திற்காகத்தொடுத்த வியாஜ்ஜியமாகாது. பிராது தொடுக்கும் காலத்தில் ஆதியப்பசெட்டியார் மானேஜர் உத்தியோகத்தை சட்டவிரோதமாய் வகித்துவந்த பட்சத்தில் பிரதிவாதி அவர்மீது தொடுத்த வியாஜ்ஜியம் ஸ்வயலாபத்திற்கல்ல, தேவஸ்தான நன்மைக்காகவே. பிரதிவாதியின் நியமனம் ஜனபொது நலத்திற்குத் தீங்கானதென்றும் அந்த நியமனஉத்தரவைச்சரியென்று அங்கீகரிக்கக் கூடாதென்றும் ஜில்லாகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள் அதற்குக் காரணம் யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஒருவேளை பிரதிவாதி தனக்கு மானேஜர்வேலை கிடைக்கவேண்டியதற்குப் பிரதிப்பிரயோஜனமாக ஷை ரூ. 2000-யும் கொடுத்துவிட்டதாக எண்ணி அவ்வித அபிப்பிராயம் கொடுத்தார்கள்போலும்; அது பிசகு. ஏனெனில் கமிட்டியார் வசம் பண்டில்லாதபடியால் கைப்பணத்தைச் செலவுசெய்யப்போதுக்கட்டியதாக முந்தியே சொல்லப்பட்டிருக்கிறது. பிரதிவாதி சட்டப்படி சரியான டிரஸ்டியில்லாத போதிலும் தான் சரியான டிரஸ்டியென்று நம்பி, தப்பாய் டிரஸ்டிஉத்தியோகத்தை வகித்து வருகிறவனை நீக்கும்பொருட்டு வியாஜ்ஜியம் தொடுத்தால் அச்செலவுக்கும் தேவஸ்தானத்தார் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று பிரதிவாதிக்காக வாதிக்கப்பட்டது. ஆனால் அதற்காதாரமாக அதாரிடிகள் யாதொன்றும் காண்பிக்கப்படவில்லை. உத்தியோகத்திற்குலாயக்கில்லாதவன் தான் லாயக்குள்ளவனென்று தப்பாய் நம்பி மற்றொருவன் பேரில் தொடுத்த வியாஜ்ஜியத்தில் தோல்வியடைந்தால், கோர்ட்டார் செலவுதொகை தேவஸ்தானபண்டிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று உததரவளித்திருந்தாலொழிய, மற்றம்படி அவ்வித வியாஜ்ஜியந் தொடுத்தவனையே சகல செலவுகளும் பொறுத்ததாகும்.

ஆகவே இந்த 2-வது அப்பீல் பைசலாவதற்கு பிரதிவாதியின் 1901-ம் வருஷத்திய நியமனம் சரியானதா அல்லவாவென்று தீர்மானிக்கவேண்டியது முக்கியமான விஷயம். அது விஷயமாய் கீழ்கோர்ட்டாரை புதிய சாட்சியங்கள் கேட்டு அபிப்பிராயங்கொடுக்கும்படி உத்தரவளித்ததில் 1901-ம் வருஷத்திய வியாஜ்ஜிய காலத்தில் ஆதியப்பசெட்டி ஒழுங்காய் நியமிக்கப்பட்ட டிரஸ்டியாயிருந்ததாகவும் பிராது தாகலாகுமுந்தியே அவ்வுத்தியோகத்தை சட்டப்படி இழந்துபோனதாகவும், ஷை வியாஜ்ஜியம் தாகலானதேதியில் பிரதிவாதி சட்டப்படி நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாவாயிருந்ததாகவும் ஜில்லாகோர்ட்டார் அபிப்பிராயங்கொடுத்தார்கள்.

அதன்மேல் ஷை 2-வது அப்பீலைப் பைசல் செய்த ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் மேற்கூறிய நியாய அபிப்பிராயங்களை அனுசரித்து பிரதிவாதி தொடுத்த வியாஜ்ஜியச்செலவுகள் யாவற்றையும் தேவஸ்தானத்தார்வகிக்கக்கடவதென்று தீர்மானித்து வாதியின் பிராதை முற்றிலும் தள்ளுபடிசெய்து விட்டார்கள். ஆனால் இந்த வியாஜ்ஜியச் செலவுகள் பூராவும் தேவஸ்தானத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது.

——;o:——

மிஸ்டர் சீவ் ஜஸ்டிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ்
ஏய்லிங், & மிஸ்டர் ஜஸ்டிஸ்
(ஓல்ட் ஃவீல்ட்)

**Full Bench Case.**

**மதுரை ஜில்லா.**

**L. P. A. No. 167 of 1912-19 ஆகஸ்ட் 1913.**

**R. P. கோநேடி நாயகர் Vs கோபாலய்யர்**

ஜாது கோபாலய்யர் என்ற வாதி மதுரை பிரின்ஸிப டி. மு. கோர்ட் அசல்தாப்பில் கோநேடி நாயகர் என்ற பிரதிவாதி 1907 ஆகஸ்ட் 12-இல் எழுதிக்கொடுத்த ப்ராமிஸரி நோட்டின்பேரில் தாவாசெய்ததில், வெள்ளிக்குறிச்சி ஜமீன்தாரவர்களுடையஏஜண்டாய்த்தான் ஷைநோட்டில் கையொப்பம் செய்ததாகவும் தான் ஷை நோட்டுத் தொகையைச்செலுத்தக்கடமைப்பட்டவரல்லவென்று பிரதிவாதி எதிர்வாதம் செய்தபின்

டி. மு. கோர்ட்டிலும் ஜில்லாகோர்ட்டிலும் வாதிக்கனுகூலமாகி, ஹைகோர்ட் 2-வது அப்பீலில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜட்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஈரங்கிகேட்டு இருவர்களும் விததியாசமான அபிப்பிராயங் கொண்டும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களுடைய அபிப்பிராயமே ரூல்ஸ்படி முடிவான தீர்மானமாக பாவிக்கப்பட்டு வாதிக்கு அனுகூல டிக்கிரியாச்சுது. அதன்மேல் இரண்டு ஜட்ஜிமார்கள் சட்டபாயிண்டைப்பற்றி மாறான அபிப்பிராயங்கொண்ட காரணத்தால் பிரதிவாதி சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படி மறுபடியும், லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல்செய்யவே அந்த அப்பீல் மேற்கூறிய மூன்று நியாயாதிபதிகளின் முன் ஈரங்கியாகி லட்டர்ஸ் பேடெண்டு அப்பீலும் தள்ளுபடியாச்சுது. ஆகவே பிரதிவாதி நோட்டுத்தொகைக்கு ஸ்வதாவில் கடமைப்பட்டவனாக தீர்மானிக்கப்பட்டு வாதிக்கு அவரைப் பொறுத்து டிக்கிரீ யளிக்கப்பட்டது. புல்பெஞ்சு தீர்மானத்தில் ஹானரபில் மிஸ்டர் சீவ் ஜஸ்டிஸ் கொடுத்த அபிப்பிராயச் சுருக்கமாவது:—

தாவா ப்ராமிஸரி நோட்டில் கையொப்பம் செய்த பிரதிவாதி நோட்டுதொகையைச் செலுத்தக்கடமைப்பட்டவனா என்று தீர்மானிக்க வேண்டியது தான் இந்த அப்பீலில் முக்கியமான பாயிண்டு. நோட்டின் வசனங்களாவன:—"28 ஆடி பிலவங்காவுக்குச்சரியான 1907 ஆகஸ்ட் 12-ல் மதுரை டவுன் போலீஸ் ஸ்டேஷன் சந்தில் 1-ம் நெ. வீட்டிலிருக்கும் ஸாமி சேஷய்யரவர்களுடைய குமாரர்களாகிய கோபாலய்யர், நாகஸாமி அய்யர் ஆகிய இருவர்களுக்கும், மதுரைஜில்லா மாறு மதுரை தாலூகா வெள்ளிக்குறிச்சி கிராமம் இருக்கும் ஜமீன்தார் துரைராஜா அவர்களிடம் பவர் ஆப் அட்டார்னிபெற்ற ஏஜண்டாகி நஞ்சுண்டப்ப நாயுடுகாருவின் குமாரன் R. P. கோனேடி நாயுடுகாரு எழுதிக்கொடுக்கிற ப்ராமிஸரி நோட் என்னவென்றால்;

வெள்ளிக்குறிச்சி அரண்மனைக்காக இதற்கு முன் கிரயத்திற்கு வாங்கப்பட்ட ஜவுளிதினுஸுகளுக்காக ராணி செக்கணி அம்மாள் பேரில் பாக்கிகட்டப்பட்டிருக்கிற தொகைக்கு நாளது தேதி வரையில் கணக்குத்தீர்த்து அசல்வட்டி யுள்பட ஏற்பட்ட மொத்தபாக்கி ரூ. 694-6-0. இந்த ரூபாய் அறுநூற்றித் தொண்ணூற்றுநாலு அணா ஆறையும் வேண்டும்போது தங்களிடமாவது தங்கள உத்தரவு பெற்றவர்களிடமாவது அரையே அரைக்கால் வட்டியுடன்சேர்த்து நான் செலுத்தி இந்த நோட்டில் செல்லவைத்து வாபீஸ்பெற்றுக் கொள்வேனாகவும்."

(தெலுங்கில்—ஒப்பம்) R. P. கோனேடி நாயுடு

மேற்படி நோட்டில் பிரதிவாதி தான் பவர் பெற்ற ஏஜண்டென்று விவரம் காட்டியிருக்கிற ஒரு வசனத்தை ஆதாரமாகக்கொண்டு நோட்டுத்தொகைக்குத்தான் நேரில் ஜவாப்தாரி யல்லவென்றும் தன்னுடைய எஜமானாகிய வெள்ளிக்குறிச்சி ஜமீன்தார் கடமைப்பட்டவரென்றும் எதிர்வாதம் செய்கிறார். 188 -ம் வருஷத்திய (Negotiable Instruments Act 28-வது பிரிவில் சொல்லியபடி நோட்டில் ஒருவன் ஏஜண்டென்று கையொப்பம் செய்ததாக அல்லது தான் நேரில் நோட் தொகைக்குக் கடமைப்படாத வண்ணம் யாதொரு குறிப்பானது பிராமிஸரி நோட்டின் வசனங்களில் துலங்காவிடில் கையொப்பம் செய்தவரே நோட்டுதொகைக்குக் கடன்பட்டவராகிறார். தாவா நோட்டைக் கவனித்துப்பார்க்கும்பொழுது பிரதிவாதி பவர்பெற்றவர் என்று சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய ஷை பவரில்பிராமிஸரி நோட்டுகளில் தன் எஜமானுக்காகக்கையொப்பம் செய்யும் அதிகாரம் ஷை பவரில் அளிக்கப்பட்டிருக்கிறதாகச்சொல்லப்படவில்லை. அவ்விதமான அதிகாரத்தை அனுசரித்துக் கையொப்பம் செய்ததாகவும் சொல்லப்படவில்லை. கையொப்பத்துடனாவது தான் ஒரு ஏஜண்டாக கையொப்பம் செய்ததாக யாதொரு வசனங்களும் சேர்க்கப்படவில்லை. ஆகவே நோட்டின் வசனங்களைப் பார்க்குமிடத்து எதிரி 28-வது பிரிவில் கண்ட அம்சங்களின்படி நோட்டின் தொகைக்கு ஸ்வதாவில் கடமைப்பட்டவனல்லவென்று, தீர்மானிக்க நியாயமில்லை. 1881-ம் வருஷத்திய இந்தியன் ஆக்ட் ஏற்பட்டபிறகு, 1882-இல் இங்கிலீஷ் (Bills of Exchange Act) ஆக்ட் ஏற்பட்டது.



அந்த இங்கிலீஷ் ஆக்ட் ஏற்படுவதற்குமுன் பற்பல இங்கிலீஷ் தீர்மானங்கள் பிறந்திருக்கின்றன. அவைகள் வாதிக்கு ஆதாரமாக யிருக்க அவைகள் இங்கிலீஷ் ஆக்ட் ஏற்பட்டதற்கு முன் பிறந்த காரணத்தால் அவைகளை ஆதாரங்கொள்ளக்கூடாதென்று பிரதிவாதி ஆக்ஷேபிக்கிறார். ஆனால் அது சரியல்ல. ஆக்டுக்கு முந்திய இங்கிலீஷ் தீர்மானங்கள் ஆக்ட்களில் ஏற்பட்டிருக்கிற சட்டமுறைகளின் வியவகாரங்களுக்கிசைந்தவைகளாகயிருந்தால் அவைகளை அனுசரிப்பது நியாயமென்று இந்தியன் ஆக்டையும் இங்கிலீஷ் ஆக்டையும்பற்றி எழுதியிருக்கிற Sir. M. D. சால்மர்ஸ் துரையவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் இந்தியன் ஆக்ட் 1881-ம் வருஷத்தில் ஏற்பட்டதற்கு முன்னுள்ள இங்கிலீஷ் தீர்மானங்களை அனுசரித்து வாதிக்கனுகூலமாக அபிப்பிராயம் கொடுக்க வேண்டியது நியாயமாகும்.

பிரதிவாதிக்காக சில கேசுகள் எடுததுக் காண்பிக்கப்பட்டன. 1909) I K. B. 927-இல் கையொப்பம் செய்தவன் கடமைப்பட்டவனாகானென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கேசில் நோட்டின் அடியில் கம்பெனியின் சீலும் அதன்கீழ் J. H: ஸ்மெதர்ஸ்ட், மானேஜிங்டைரக்டர், என்று கையொப்பம் செய்யப்பட்டிருந்தது. தாவாநோட் அவ்விதமாயில்லை. தவிர அந்தக்கேசில் பிரதிவாதிக்கு கையொப்பம்செய்ய கம்பெனியார் அதிகாரம் கொடுத்திருப்பது வாஸ்தவமென்று வாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. இந்தியன் கம்பெனீஸ் ஆக்டில் கம்பெனியார் ஒருவருக்கு அவ்விதமாய் கையொப்பம் செய்துகொடுக்க அதிகாரம் கொடுக்கலாமாகையால் அதை அனுசரித்து நடந்தவிஷயம் தாவாகேசுக்குப் பிரயோஜனமில்லை. (1869) L. R. 4 Ex. 102-இல் தீர்மானித்தபடி ஒருவன் நோட்டின்கீழ் "இன்னாருக்காக "ஜான் ஸைஸர், காரியதரிசி' என்று கையொப்பம் செய்யப்பட்டிருக்க அந்த நோட்டுதொகைக்குக் கையொப்பம் செய்தவர் நேரில் ஜவாப்தாரியாகமாட்டார் என்று ஏற்படுகிறது. அது நியாயமே. பிரதிவாதிக்கு அந்தக்கேஸ் பிரயோஜனமில்லை. (1858) 27 L. T. Ex. 326 இல் சிலர் ஒருகம்பெனியின் டைரக்டர்களாகச் சொல்லி கையொப்பமிட்டதில் அந்த நோட்டுதொகை கம்பெனியைப் பொறுத்ததாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1856) 25 L. T. Ex. 348-இல் இரண்டு டைரக்டர்கள் நோட்டின் வசனங்களில் கம்பெனிக்கு டைரக்டர்களாகச் சொல்லி ஆனால் கையொப்பம் செய்யும்பொழுது பெயரைத்தவிரவேறொன்றும் குறிக்கவில்லை. அன்றியும் அந்தக்கேஸில் நோட்டுதொகைக்கு கையொப்பம் செய்தவர்கள் ஜவாப்தாரிகளல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1871) L. R. 6. Q. B. 102-இலோ, மேற்கூறிய கேசின் அம்சங்களை பொறுந்தியும தவிர நோட்டின் மூலையில் கம்பெனியின் ஸீல் குத்தப்பட்டிருந்தும் நோட்டின் தொகைக்குக் கையொப்பமிட்டவர் ஜவாப்தாரியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தாவா நோட்டில் குறிப்பிட்ட வசனங்களைவிட அதிக பலமான சில வசனங்கள் கையொப்பக்காரன் நேரில் ஜவாப்தாரியாகாத வண்ணம் ஒரு நோட்டில் குறிக்கப்பட்டிருந்தும் அந்த நோட்டின் தொகைக்குக் கையொப்பக்காரன் ஜவாப்தாரியாகிறானென்றே காலஞ்சென்ற மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரவர்கள் (1911 மதராஸ்வாரக்குறிப்புகளின் Vol. 1–143-இல் தீர்மானித்திருக்கிறார்கள். அனேக இங்கிலீஷ் தீர்மானங்கள் பிரதிவாதியின் வாதத்திற்கு விரோதமா யிருக்கின்றன. அவைகள் ஆக்டின் சட்ட முறைகளுக்கிசைந்ததாயு மிருக்கின்றன. ஆகவே தாவா நோட்டில் கையொப்பம் செய்தவன் ஜவாப்தாரியாகிறதாகவே தீர்மானிக்கவேண்டும்.

மூன்றாவது மனுஷியாளால் வாதிக்கு நோட்டுதொகை பாக்கி ஏற்பட்டிருக்க பிரதிவாதியைப்பற்றினமட்டில் நோட்டுக்குப் பிரதி பிரயோஜனம் கிடையாதென்று வாதிக்கப்பட்டது. அந்த பயிண்டானது கீழ்கோர்ட்டில் எடுத்துப் பேசப்படவுமில்லை, யோஜிக்கப்படவுமில்லை. அதைப் பற்றி புல்பெஞ்சில் அபிப்பிராயம் கேட்கப்படவுமில்லை.

மேற்கூறிய காரணங்களைச் சொல்லி ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் அப்பீலைத் தள்ளுபடி செய்தார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட் துரையவர்கள்

சட்டவிஷயமாய் ஒத்தபிப்பிராயங்கொடுத்து கோர்ட்டில் பிரதிவாதி பாக்கித்துகையைத்தான்கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்ட வசனபாகத்தில் தன் எஜமானுடைய பிரஸ்தாபமே குறிக்கப்படாத காரணத்தால் அவரே நேரில் ஜவாப்தாரியாகிறாரென்று அபிப்பிராயங் கொடுத்தார்கள்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங் துரையவர்கள் இதில் குறிக்கப்பட்ட பாயிண்டானது சந்தேகத்திற்கிடமானதாகத் தோன்றியும் நோட்டின் வசனங்கள் 2-வது பிரிவில் கண்ட அம்சங்களுக்குத் தக்கபடி பிரதிவாதியின் பொறுப்பை விலக்கத்தக்கதாக ஏற்படாதென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

பிரதிவாதி நோட்டின் துகையைச் செலுத்தக் கடமைப்பட்டார். [நோட்டில் பிரதிவாதியின் பெயருக்குமுன் விலாசத்தைக்குறித்தெழுதும் பொழுது, ஜமீன்தாரின் பவர்பெற்ற ஏஜண்டாகிய, என்றவசனத்தை உபயோகித்ததின் காரணமென்னவென்று யோஜித்துப் பார்க்கவேண்டும். அவருடைய விலாசம் சொல்லப்படும் பொழுது உத்தியோக மின்னதென்று சொல்லப்பட்டதாக பாவிக்கப்படலாமா ??]

———:O:———

*மிஸ்டர் சீவ் ஜஸ்டிஸ், மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.*

**(Full Bench Case.)**

**தஞ்சாவூர் ஜில்லா.**

**L. P. A. No. 114 of 1911-18 டிசம்பர் 1912.**

தொரசாமி சிருமாடன் V. நொண்டிசாமிசாலுவன்

தொரசாமி சிருமாடனும் அவனுடைய இளைய சகோதரன் ஆகியஇருவரும் தாங்கள மைனர்களாயிருந்தபோது, 1895-ம் வருஷத்தில் அவர்களுடைய பிதா இறந்துபோகவே ஷை மைனர்களுடைய தாயார் கார்டியனாயிருந்து அவர்களுடைய தாவாசொத்துக்களை நொண்டிசாமி சாலுவன் வகையராக்களுக்கு அதேவருஷம் நவம்பர் மாதத்தில் சுத்த விக்கிரயஞ் செய்துவிட்டாள். ஷை மைனர்கள் வயது வந்தபிறகு தங்கள் தாயார் கார்டியனாக செய்த விக்கிறயத்தை நிராகரித்து ஷை சொத்துக்களைத் திரும்பி சுவாதீனமடையும்பொருட்டு மன்னார்குடி டி. மு. கோர்ட்டில் 1909-ம் வருஷத்திய அசல் நெ. 1-ல் தாவா செய்தார்கள். பிராதுதேதியில் 1-ம் வாதிக்கு வயது 23, இரண்டாம் வாதிக்கு வயது 20. இந்தியன் லிமிடேஷன் ஆக்ட் 44-வது ஆர்டிகில்படி கொண்டுவரப்பட்ட இவ்விதமான பிராது மைனர் மேஜரான 3-வருஷங்களுக்குள் செயயப்படவேண்டியதாயிருக்க 2-ம் வாதி மேஜராகி 3-வருஷங்களுக்குள் இந்தப்பிராது தாகல் செய்யப்பட்டமையாலும், இரண்டாம் வாதி மேஜரானபிறகு அவனுடைய சம்மதம்பெறாமல் 1-ம் வாதி ஷையானுடைய பொருப்பைக் கட்டுப்படுத்தியாதொருவியவகாரம் நடத்தக்கூடாதபடியால் 2-ம் வாதி மேஜராகுமட்டும் 1-ம் வாதி நடவடிக்கையெடுக்க ஏதுகரமில்லாமல் போய்விட்டதாயும் ஆகையால் காலாவதி தோஷம் 2-ம் வாதி மேஜரான 3-வருஷங்களுக்குப்பின் தான் இந்த வியாஜ்ஜியத்திற்கு ஏற்படுமென்றும் சமாதானம்சொல்லி இந்தப்பிராது காலாவதி கடந்ததல்லவென்று வாதிகளுக்காக வழக்காடப்பட்டது 1892-ம் வருஷத்திய 16 மதராஸ் 456-இல் செய்யப்பட்டிருக்கிற தீர்மானத்தை அனுசரித்து டி. மு. கோர்ட்டாரும் மாயவரம் சப்கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக வாதிகளின் பிராது காலாவதி தோஷமுடையதென்று தீர்மானித்து பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதிகள் அதன்மேல் ஹைகோர்ட்டில் (S. A 1458 of 1910) 2-வது அப்பீல் செய்ததில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரவர்கள் 2-வது அப்பீல் பிடிக்கத் தக்கதல்லவென்று உத்தரவளித்தார்கள். ஒரு ஜட்ஜியவர்களின் உத்தரவின்பேரில் ஸிவில் தரப்பில் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல்செய்ய சட்டமிருப்பதால் வாதிகள் L. P.A. 13 of 1911இல் அவ்வித அப்பீல் செய்ததில் அதை ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துல் ரகீம் சாகிபவர்களும் & ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் வித்தியாசமான அபிப்பிராயங் கொண்டார்கள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துல் ரகீம் சாகிபவர்கள் கீழ்கோர்ட் தீர்மானங்களுக்கனுசரித்து வாதிகளின் பிராது காலாவதி தோஷமாய் விட்டதாக அபிப்பிராயப் பட்டார்கள். அதாவது 1-ம் வாதி மேஜராகி 3-வருஷத்திற்குள் இந்தப்பிராது செய்திருக்க வேண்டுமென்றும், 1ம் வாதிக்கு பிராதுதேதியில் 23 பிராயமாய் விட்டபடியால் இரண்டு வாதிகளுக்கும் பிராது செய்ய காலாவதி கடந்ததாகத் தீர்மானித்தார்கள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களோ, 1-ம் வாதிக்குப் பரிகாரம் தேட காலாவதியாய்விட்ட போதிலும் 2-ம் வாதியைப்பற்றின மட்டில் பிராது தோஷமானதல்லவென்று அபிப்பிராயப்பட்டார்கள். ரூல்படி ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துல் ரகீம் சாகிபவர்களின் அபிப்பிராயம் நிலைத்து வாதிகளின் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஆனால் இரண்டு நியாயாதிபதிகளும் மாறான அபிப்பிராயங்கொண்டகாரணத்தால் வாதிகள் மறுபடியும் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல்செய்து அந்த அப்பீல் மேற்கூறிய மூன்று நியாயாதிபதிகளடங்கிய புல்பெஞ்சில் ஈரங்கியாகி ஷை அப்பீலும் தள்ளுபடியாச்சுது.

ஹானரபில் மிஸ்டர் சீவ் ஜஸ்டிஸ் துரையவர்களுடைய ஒத்தபிப்பிராயம் பெற்ற ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்கள் புல்பெஞ்சு ஈரங்கியின் பிறகு கொடுத்த தீர்மானத்தின் முக்கிய அம்சங்களாவன:—

லிமிடேஷன் ஆக்ட் 44-வது ஆர்டிகில்படி கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தப் பிராது காலாவதி தோஷமுடையதா அல்லவாவென்று தீர்மானிக்க வேண்டியது தான் இந்தக்கேசில் முக்கியமான பாயிண்டு. அந்த ஆர்டிகிலின்படி ஒரு மைனர் தன்னுடைய கார்டியனால் செய்யப்பட்ட பாரதீனத்தை ரத்துசெய்யப் பரிகாரம்தேடுவதற்கு அந்த மைனர் மேஜரான முதல் மூன்று வருஷம் காலாவதி யுண்டு. இந்தக்கேசில் இரண்டு மைனர்களில் ஒருவர் முந்தியும் மற்றவர் பிந்தியும் மேஜர்களானபடியால் ஷை 44-வது ஆர்டிகில்படி காலாவதியை கணிப்பதற்கு "அந்த மைனர் மேஜாரிடி அடைந்த" என்றவசனத்தில் "அந்த மைனர்" என்ற பதம் பன்மை அர்த்தத்தையும் குறிக்கத்தக்கதாகுமென்றும், ஆகையால் இரண்டு மைனர்கள் சேர்ந்து தேடும் பரிகாரத்திற்குக் காலாவதியை இருவரும் மேஜர்களான முதல் தான் கணிக்கவேண்டுமென்றும், 2-ம்வாதி மேஜரான தேதியில் தான் 1-ம் வாதியும் மேஜரானபாவனையாகிறதென்றும் ஆகையால் வாதிகளின் தாவா காலாவதி கடந்ததல்லவென்றும் வாதிகளுக்காக மிஸ்டர் டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரியாரவர்கள் வாதஞ்செய்தார்கள். ஆனால் அந்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. 1-ம் வாதி 1904-இல் மேஜராகியிருக்க அவர் 1907-இல் தான் மேஜரானதாக பாவிக்கப்படவேண்டுமென்று சொல்லப்படும் வாதம் நியாயமானதல்ல. 1-ம் வாதியைப்பற்றின மட்டில் பிராது காலாவதியானபோதிலும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்கள் அபிப்பிராயப்பட்டபடி 2-ம் வாதிக்கு காலாவதி தோஷமில்லையென்ற விஷயத்தைப்பற்றி யோஜிக்கும்கால் லிமிடேஷன் ஆக்ட் 7-வது பிரிவின் அம்சங்கள் ஷை அபிப்பிராயத்திற்கு விரோதமாயிருக்கிறது. அதாவது:—

"ஒருபரிகாரம் தேடுவதற்கு கூட்டான பாத்தியஸ்தர்கள் பலர் லாயக்குள்ளவர்களாயிருந்தும் அவர்கள் எல்லோரும் ஒருவிதமான அசந்தர்பத்தால் (இந்தக்கேசில் மைனர்களாயிருந்த அசந்தர்ப்பத்தால் தாவாசெய்யக்கூடாமல் போனால் ஷை அசந்தர்ப்பம் அவர்களில் ஒருவருக்கு நீங்கிவிட்டால் அவர், அசந்தர்ப்பத்தினால் தடைபட்டிருக்கிற மற்றவர்களுக்காக ஷை யார்களுடைய அனுமதி யில்லாமலே யாதொரு வியவகாரத்தில் ஷை யார்களைக் கட்டுப்படுத்தி முடிவுசெய்துகொள்ளக்கூடிய நிலைமையுள்ளவராயிருக்கும் பக்ஷத்தில், ஷை பரிகாரத்தைத் தேடுவதற்குக் காலாவதி, அவ்வொருவருக்கு அசந்தர்ப்பம் நீங்கியமுதல் எல்லா பாத்தியஸ்தர்களுக்காகவும் ஒன்றாகவே கணிக்கப்படவேண்டும்."

திருஷ்டாந்தரமாக இரு பாத்தியஸ்தர்களில் ஒருவர் மேஜராயும் மற்றவர் மைனராயுமிருந்து மேஜர் மைனருக்காக நடவடிக்கை நடத்த லாயக்குள்ளவராயும், மைனருடைய சம்மதத்தை அபேக்ஷிக்காமலே அந்த நடவடிக்கையை முடிக்க யோக்கியதை யுள்ளவராயிருக்கின்ற மைனருக்குக் காலாவதி பிரத்தியேகமல்ல. அதாவது மேஜருக்கு எப்பொழுது துவக்குமோ அப்பொழுதே மைனருக்கும் துவக்கப்பட்டதாகும்.

ஆனால் இருவரும் மைனர்களாயிருக்கின் ஒருவர் மேஜராகி மற்றவருடைய சம்மதமன்னியில்

ஷெ யாரையும் கட்டுப்படுத்தும்படி நடந்துகொள்ள லாயக்குள்ளவராகுபட்டும் இருவர் மேலும் காலாவதி அம்சம் தொடங்காது.

மேற்சொல்லிய லிமிடேஷன் ஆக்ட் 7-வது பிரிவின்படி பார்க்குமிடத்து 1-ம் வாதி, தான் மேஜரான உடன் குடும்பத்தலைவனுகிறபடியால் 2-ம் வாதியைக் கட்டுப்படுத்திக் குடும்பச்சொத்துவிஷயமாய் யாதொரு விநியோகம் பராதீனம் முதலிய நடவடிக்கைகளை நடத்த லாயக்குள்ளவனுகிறபடியால் 2-ம் வாதி மைனராகயிருந்தபோதிலும் அவருடைய பரிகாரத்தையும் சேர்த்துத் தான் மேஜரான 3 வருஷங்களுக்குள் இந்ததாவா செய்திருக்கவேண்டும். அந்தக் காலத்திற்குள் 1-ம் வாதி 2-ம் வாதியின் பாத்தியதையையும் சேர்த்து தாவா செய்யாதபடியால் 2-ம் வாதிக்கு காலாவதி 1-ம் வாதியுடன் 1907-இலேயே கடந்துவிட்டது. ஆகையால் லிமிடேஷன் ஆக்ட் 7-வது பிரிவின் அம்சங்களுக் கிசைந்தபடி 44-வது ஆர்டிகில் பிரயோகிக்கப்படவேண்டியதாகும். 2-ம் வாதிக்குத் தனிவியாஜ்ஜியமூலம் ஏற்பட்டு காலாவதி கணிக்க நியாயமில்லை.

இந்த புல்பெஞ்சு அப்பீலை ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் பிரத்தியேகமான அபிப்பிராயத் தீர்ப்பில் மேற்கூறிய முடிவுக்கு ஒத்துச்சொன்னதில் குறித்திருக்கிற காரணச் சுருக்கமாவது:—

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்கள் அபிப்பிராயத்தைப்போல், 44-வது ஆர்டிகிலின்படி ஒவ்வொருமைனருக்கும் மேஜாரிடியான உடன் பிரத்தியேகமான வியாஜ்ஜியமூலமுண்டென்று முதல் பார்வைக்குத் தோற்றுவதில் சந்தேகமில்லை. ஒரு மைனர் தான் மேஜரானதினத்திலேயே தன் கார்டியனால் செய்யப்பட்டிருந்த பற்பல நடவடிக்கைகளை அங்கீகரிக்கவும் ஆக்ஷேபித்து நிராகரிக்கவும் பாத்தியதையுடையவனுகிறான். தவிர ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் தாங்களும் (அதாவது ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ், சதாசிவய்யரவர்களும், S. A. 892 of 1911-இல் ஒரு மைனருடைய கார்டியன் யாதொரு தப்பான நடவடிக்கையை நடத்திவிட்டால், அதை மைனர் மேஜராவதற்குமுன் வேறொரு அடுத்த கார்டியன் ஸ்தானத்திலிருக்கிறவன் ஆக்ஷேபிக்க நியாயமில்லையென்றும் ஷெ மைனர் மேஜரான பிறகு தான் ஆக்ஷேபிக்கலாமென்றும்தீர்மானித்திருக்கிறோம் ஆகவே அந்த தீர்மானத்தின்படி 2-ம் வாதிக்குக் காலாவதி பிரத்தியேகமாய் கணிக்கப்படவேண்டுமென்றும், ஆகையால் இந்தப்பிராது அவரைப்பற்றினமட்டில் காலாவதிதோஷமுடையதல்லவென்று ஏற்படவேண்டும்.

ஆனல் வேறு சில தீர்மானங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளை அனுசரிக்கக் கடமைப்பட்டவர்களாகிறோம். ஒரு மைனரின் கார்டியன் தப்பான நடவடிக்கை நடத்தினல் அதற்குப்பின் வேறொரு கார்டியன் அடுத்த சிநேகிதனுக ஏற்பட்டு அந்நடவடிக்கையை ரத்துசெய்யும்படி தாவா செய்யலாம். அவ்வித வழக்கில் ஷெ அடுத்த சிநேகிதன் மைனருக்காக நல்லெண்ணத்துடன் வாதாடியும், தோல்வியடைந்தால் மைனர் மறுபடியும் மேஜரானபிறகு 44-வது பிரிவின்படி தன் பாத்தியதையைக் கொண்டு பரிகாரம் தேடக்கூடாதென்றும், ஆனல் அடுத்த சிநேகிதன் கொண்டுவந்த முந்திய தாவாவில் கோர்ட்டார் மைனருடைய நன்மையைக் கருதி வெகு ஜாக்கிறதையோடு நியாயமான தீர்ப்பளிக்கக் கடமைப்பட்டவர்களாகிறார்களென்றும்தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. (ஏனெனில்மைனருக்குவேறு பிந்தியபரிகாரம் கிடையாதே.) அதுபோலவே இந்தக்கேசில் 1-ம வாதி 2-ம் வாதிக்கு அடுத்த சிநேகிதனுகயிருப்பதுடன்கூட மேஜரான உடன் குடும்பத்தலைவனுகிறபடியால் அவர் 2-ம் வாதிக்காக தாவாசெய்து பைசல் பெற்றால் பின்னல் 2-ம் வாதி மேஜரானபிறகு வேறு தாவா கொண்டுவர நியாயமில்லை. அப்படிக்கிடமிருந்தால் ஒரு மைனருக்கு இரண்டு வியாஜ்ஜியமூலம் ஏற்படுத்தினதுபோலாகும். அதாவது அடுத்த சிநேகிதன் செய்யக்கூடிய நடவடிக்கை ஒன்று, தான் மேஜரானபிறகு நடத்தக்கூடிய நடவடிக்கை இரண்டு, அவ்விதம் ஏற்பட்டிருப்பதாய்த் தீர்மானிக்கக்கூடியதல்ல. ஆகவே வாதிகளின் தாயார் பராதீனம் செய்தபிறகு 1-ம் வாதி தனக்குக் குறித்த காலாவதிக்குள் குடும்பத்தலைவனு



இய அந்தஸ்தை அனுசரித்து, இன்னும் மைனர் தசையிலிருக்கிற 2-ம் வாதிக்காக வேண்டிய நடவடிக்கையைக் குறித்தகாலத்தில் செய்யத்தவறினல் 25 மதராஸ் 26-இல் தீர்மானித்திருக்கிறபடி 2-ம் வாதி தான் மேஜரானபிறகு தன் பாத்தியதைக்கு வேறு வியாஜ்ஜிய மூலம் ஏற்படுத்திக்கொண்டு பிரத்தியேகமான பரிகாரம் தேடக்கூடாது. 1-ம் வாதி பூரா பாத்தியதையின் பரிகாரத்தைத் தேடுவதற்கு ஏற்பட்டிருந்த வியாஜ்ஜியமூலம் தான் 2-ம் வாதிக்கும் உண்டு. ஆகையால் ஹானரபில் மிஸ்டர்ஜஸ்டிஸ் அப்துல் ரகீம் சாகிப் அவர்களுடைய அபிப்பிராயத்திற்கு ஒற்றுமையாக இந்தலட்டர்ஸ்பேடெண்டு அப்பீலும் தள்ளுபடியாவது நியாயமே.

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் & மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யர்.)

**திருநெல்வேலி ஜில்லா.**

**S. A. No. 1[illegible] of 1911—23 மார்ச்சு 1913.**

சிவசுப்பிரமணிய முதலியார்

*Vs*

சோமசுந்தர செட்டியார்.

திருநெல்வேலியில் சாரங்கபாணி சீனி ஆலீஸ் கம்பெனியின் அக்கிராஸனுதிபதியுடன 1899 ஆகஸ்ட் 28உயில் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி திருநெல்வேலியில் வந்திருந்த நாட்டுக்கோட்டை பெரிய கருப்பன் செட்டியாரின் குமாரனுகிய A. P. R. அருணுசலஞ் செட்டியாரவர்கள் ஷெ கம்பெனியை நடத்திவந்து கொஞ்சகாலத்திற்குப்பிறகு எதோ சில முகாந்தரத்தால் ஷெ கம்பெனியின் வேலை நின்றுபோய் விட்டது. அதன்பிறகு கம்பெனியார் அம்பாசமுத்திரம் தாலூகா பாப்பான்குளத்திலுள்ள வெள்ளநாயக முதலியாருடைய குமாரனுகிய சிவ சுப்பிரமணியமுதலியாருடன் 1900 மார்ச்சு 26-இல் ஒப்பந்தம் செய்துகொண்டதின்பேரில் அதுமுதல் ஷெ சிவசுப்பிரமணிய முதலியார் கம்பெனியின் வேலையைநடத்திவந்தார். ஆனல் அருணுசலஞ்செட்டியாருக்குக் கம்பெனியிலிருந்து. சிலபாக்கி வரவேண்டியிருந்தபடியால் அவருடன் கம்பெனியார் செய்துகொண்ட முந்திய எக்ரீமெண்டும் அவருக்குக் கம்பெனியார் கொடுத்திருந்த பவர் ஆப் அட்டார்னியாகிய அதிகாரப்பத்திரமும் ரத்தாகாமலிருந்தது. ஷெ அருணுசலஞ் செட்டியாருக்குச் சேரவேண்டிய பாக்கியைக் கணக்குத்தீர்த்துப் பைசல் செய்து ஷெ தஸ்தவேஜுகளை ரத்துசெய்யும் கருத்துடன், 1900 அக்டோபர் 3உயில் கம்பெனிவேலையைப் பார்த்துவரும் ஷெ சிவசுப்பிரமணிய முதலியாரும் அருணுசலஞ்செட்டியாரும் செய்துகொண்ட உடன்படிக்கையின் பிரகாரம், அருணுசலஞ் செட்டியாருக்குச் சேரவேண்டிய பாக்கி ரூ. 5200 என்று கணக்குத் தீர்க்கப்பட்டு ஷெ கம்பெனிக்கு மெஸ்ஸர்ஸ் பாற்றி அண்டு கம்பெனியாரால் வரவேண்டிய தொகை ரூ. 2500-யும் அருணுசலஞ் செட்டியாருக்கு மேடோவர் செய்யப்பட்டதுபோக மிகுதி ரூ. 2700-யும் சிவசுப்பிரமணிய முதலியார் கம்பெனிக்காகத் தான் ரொக்கம் செலுத்திவிடுவதாய் ஒப்புக்கொண்டு அதற்காக ஒரு ப்ராமிஸரி நோட் எழுதிக்கொடுத்துவிட்டபடியால் அருணுசலஞ் செட்டியாருக்கும் கம்பெனிக்குமுள்ள சம்பந்தம் நீங்கி உடன்படிக்கையும் ரத்தாச்சுது. ஆனல் ஷெ அருணுசலஞ்செட்டியார் மெஸ்ஸர்ஸ் பாற்றி அண்டு கம்பெனியிலிருந்து வரவேண்டிய மேடோவர் தொகை ரூ. 2500-யும் வசூலிக்குமட்டும் பவர் ஆப் அட்டார்னீ ரத்தாகாமலிருக்கவேண்டுமென்றும் தவிர ஷெ ரூ. 2500-யும் அருணுசலஞ்செட்டியார் அடையுமட்டும் அத்தொகை ரூ. 2500-க்கும் சிவசுப்பிரமணிய முதலியார் ரூ. 100-க்கு 1-விகிதம் கூடுகிறவட்டியை அருணுசல செட்டியாருக்குக் கொடுக்கக் கடவரென்றும் ஒப்புக்கொள்ளப் பட்டது. மேற்படி ஏற்பாட்டைப்பற்றி மெஸ்ஸர்ஸ் பாற்றி அண்டு கம்பெனிக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அப்படியிருக்க மகாதேவய்யர் என்ற ஒருவர் கம்பெனிபேரில் பெற்றிருந்த டிக்கிரீத்தொகையை வசூலிக்கும்பொருட்டு மெஸ்ஸர்ஸ் பாற்றி அண்டு கம்பெனியார் வசமிருந்த தொகை ரூ. 2500-யும் ஜப்திசெய்தார். பாற்றி அண்டு கம்பெனியார் தொகையை கோர்ட்டில் கட்டிவிட்டார்கள். கோர்ட்டார் தொகையை ஜப்திசெய்த மகாதேவய்யர்

வசம் கொடுத்துவிட்டார்கள். பாற்றி அண்டு கம்பெனியின் தொகை அநீதியாய் மகாதேவய்யர்வசம் சென்றமையால் அருணாசலஞ்செட்டியார் மகாதேவய்யர்பேரில் ஷை தொகையை வாபீஸ் அடையும்பொருட்டு வியாஜ்ஜியம் தொடுத்து அதில் வெற்றியடைந்து ஷையார் பேரில் செலவுடன் டிக்கிரீ பெற்றார்.

அருணாசலஞ்செட்டியார் பாற்றி அண்டு கம்பெனியால் செல்லாகவேண்டிய தொகையை அதிகதாமதமாக மகாதேவய்யர்பேரில் வியாஜ்ஜியமாடிப் பெற்ற காரணத்தால் ஷை தொகைக்கு மேற்படி உடன்படிக்கைத் தேதியாகிய 1900 அக்டோபர் முதல் வட்டி ரூபாயும், மகாதேவய்யர்பேரில் தொடுத்த வியாஜ்ஜியத்திற்காக செய்த செலவுதொகைகளும் சிவசுப்பிரமணிய முதலியார் செலுத்தக் கடமைப்பட்டவரென்று சொல்லி அருணாசலஞ்செட்டியாருடைய வார்ஸ்தார்களாகிய சோமசுந்தரம்செட்டியார் வகையராக்கள் ஷை தொகைகளுக்காக 1908-ம் வருஷத்திய அசல்நெம்பர் 35-இல் திருநெல்வேலி சப்கோர்ட்டில் பிராதுசெய்தார்.

பிரதிவாதி சிவசுப்பிரமணிய முதலியார் எதிர் ஆன்ஸரில், வாதி பாற்றி அண்டு கம்பெனியாரிடமிருந்தாவது அல்லது மகாதேவய்யரிடமிருந்தாவது அசல் தொகை ரூ. 2500-யும் வசூல் செய்யுமுன் ஷை தொகையின் வட்டிக்காக இந்த தாவா கொண்டுவரக் கூடாதென்றும், மகாதேவய்யரின் மேல் தொடுத்த வியாஜ்ஜியச்செலவை வாதி பிரதிவாதியிடம் வசூலிக்கக் காரணமில்லையென்றும் எவ்விதத்திலும் வாதி கேட்கும் இருவகையான பரிகாரங்களிலும் பிராது தேதிக்குமுன் மூன்று வருஷங்களுக்கு மேல்பட்ட காலத்து வட்டிக்கும் அக்காலத்திற்குமுன் செலவுசெய்த வியாஜ்ஜியச் செலவையும் அடைவதற்கு காலாவதிதோஷமாய் விட்டதென்றும், மகாதேவய்யரிடம் வியாஜ்ஜியச் செலவுகளை அந்த வியாஜ்ஜியத்தின் டிக்கிரீப்படி வசூலித்துக்கொள்ளவேண்டியதிருக்க பிரதிவாதியிடமிருந்து அத்தொகையை வசூலிப்பது நியாயமில்லையென்றும் ஸ்டேட்மெண்டு கொடுத்தார்.

சப்கோர்ட்டாரும் ஜில்லாகோர்ட்டாரும் வாதிக்கு பிராது தேதியிலிருந்து மூன்று வருஷத்திற்குள் வாதியால் செய்யப்பட்டவியாஜ்ஜியசெலவுக்காகவும், வாதிகேட்டபடி பூராவட்டிக்கும் பிரதிவாதியின்பேரில் டிக்கிரீயளித்தார்கள். ஹைகோர்ட்டில் பிரதிவாதி 2-வது அப்பீல் செய்யவே வாதியும் தனக்கு வியாஜ்ஜியச்செலவு பூராவும் கிடைக்க வேண்டுமென்று க்ராஸ் அப்பீல் செய்தார்.

ஹைகோர்ட்டார் தீர்மானத்தில்:—மகாதேவய்யர் மீது வாதி தொடுத்த வியாஜ்ஜியச்செலவைப் பிரதிவாதி கட்டிக்கொடுக்க வேண்டியது நியாயமென்றும்காலாவதிதோஷமாகாதவட்டிக்குமட்டும்வாதிடிக்கிரீபெற லாயக்குள்ளவரென்றும், வியாஜ்ஜியச்செலவு விஷயமாய் காலாவதியாகாத மூன்றுவருஷங்களுக்குள் செய்யப்பட்ட செலவு தொகைகளுக்குமட்டும் டிக்கிரீயளிப்பது சரியல்லவென்றும், வியாஜ்ஜியம் தொடுக்கப்பட்டு அது முடிவு பெற்றபிறகு தான் மொத்தச்செலவு இவ்வளவாச்சுதென்று நிர்ணயிக்க ஏதுகரமுண்டாதலால் வியாஜ்ஜியத்தில் செய்த ஒவ்வொரு செலவின் அயிடத்திற்குப் பிரத்தியேகமான வியாஜ்ஜிய மூலமும் காலாவதி கணிப்பும் ஏற்படக்கூடாதென்றும் அபிப்பிராயப்பட்டு, வாதிக்கு மகாதேவய்யர்மீது செய்த வியாஜ்ஜியத்தொகை முழுவதையும் பிரதிவாதி கொடுக்கவேண்டுமென்றும்; அப்படியானால் மகாதேவய்யர் டிக்கிரீப்படி வாதிக்குக் கொடுக்கவேண்டிய கோர்ட் செலவை பிரதிவாதி அடையவேண்டியது நியாயமாகுமென்றும் சொல்லிமகாதேவய்யர்கொடுக்கவேண்டியகோர்ட் இச்செலவைவசூலிக்கும் பாத்தியதையை வாதி பிரதிவாதி பேருக்கு மேடோவர் செய்யவேண்டுமென்ற நிபந்தனையுடன், வாதிக்குவியாஜ்ஜியச் செலவு தொகை பூராவுக்கும் பிரதிவாதியின்மேல் டிக்கிரீயளிக்கப்பட்டது. வட்டித்தொகையோ காலாவதிதோஷமாகாதமட்டில்தான் வாதிக்கு டிக்கிரீயளிக்கப்பட்டது.

———:0:———



OFFICE OF THE ... 21 FEB 1914 MADRAS

## மதராஸ் ஹைகோர்ட் தீர்ப்புகள்.

———:0:———

(மிஸ்டர் சீவ் ஜஸ்டிஸ் & மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட்வீல்ட்)

மதராஸ் டவுன்.

**O. S. Appeal No. 95 of 1912.**

23-ஜூலை 1913.

S. ரங்கநாதசெட்டி Vs S. லக்ஷ்மியம்மாள்.

ஏ. என்பவன் மதராஸ் ஸ்மால் காஸ் கோர்ட்டில் வாதியின்பேரிலும் வாதியின் தகப்பன்பேரிலும் ஜாயிண்டாக வெண்ணலை டிக்கிரீ பெற்றிருக்க வாதிக்கும் வாதியின் தகப்பனுக்கும் பொதுவாய்ச் சொந்தமாயிருந்த ஒரு குடும்பவீட்டில் வாதியின் தகப்பன் தனக்குள்ள அரைப்பங்கை வாதிக்கும் வாதியின் சிறிய தாயாருக்கும் சேர்த்து விக்கிரயஞ் செய்துவிடவே, அவ்விக்கிரயமானது கடன்காரர்களை மோசம் செய்யும்பொருட்டு செய்யப்பட்டதாகவும் அந்த விக்கிரயம் பவந்தமென்றும் ஷை விக்கிரயத்தால் வாதியின் சிறிய தாயாருக்கு யாதொரு பாத்தியமும் ஏற்படநியாயமில்லையென்றும் அப்படி ஷை விக்கிரயம் சரியானதென்று ஏற்பட்டபோதிலும் சிறியதாயாருக்கு விக்கிரயமான பாகத்தில் ஒருபாதி போக, மறுபாதி அதாவது வீட்டின் கால்பங்கு வாதிக்கு ஷை விக்கிரயத்தின்படி சென்றதாகுமென்றும், தீர்மானிக்கும்படி ஏ. என்பவர் மதராஸ் ஸிடி, ஸீவில் கோர்ட்டில் 1902-ம் வருஷத்தில் வாதியின் தகப்பன்பேரில் வாதியையும் வாதியின் சிறுதாயாரையும் கூட 2-3-பிரதிவாதிகளாய்ச் சேர்த்து அசல் பிராதுசெய்தார். பிராதில் கேட்ட பரிகாரம் இருவகை. அதாவது (i) ஷை விக்கிரயம் பவந்தம். அது செல்லத்தக்கதல்ல. (2. அப்படி விக்கிரயம் உண்மையானதென்று தீர்மானிக்கப்பட்டால் வாதிக்கு வாதியின் தகப்பன் பாகத்தில் ஒருபாதி ஷை விக்கிரயத்தால் சென்றிருக்கவேண்டும். அந்த கால்பங்கும் டிக்கிரீபாக்கிக்காக ஜப்திசெய்யக்கூடியதாகுமென்று தீர்மானிக்கப்படவேண்டும். வாதி ஷை ஸிடி ஸீவில்கோர்ட் பிராதில் மைனராக யிருந்ததால் கோர்ட் ஆபீஸர் கார்டியனாக நியமிக்கப்பட்டிருந்தார். ஷை கார்டியன் எதிர்வா[illegible]ப்படி வாதி பிராதில் கண்ட அம்சங்களை ரூபகாரப்படுத்த வேண்டுமென்று வழக்கம்போல் ஸ்டேட்மெண்டுகொடுத்தார். 3-ம் பிரதிவாதியாகிய வாதியின் சிறியதாயார் கிரயத்தொகை பூராவும் தானே செலுத்தினதாகவும் வாதியின் தகப்பன் மிக்க சுகயீனமாயிருக்கும் காலத்தில் தான் ஷையாருடைய பாகத்தை கிரயம் பெற்றதாகவும் தனக்கு ஆண்சந்ததி கிடையாதபடியாலும் தன்னிஷ்டத்தின்பேரில் வாதியையும் அந்த தஸ்தவேஜில் சேர்த்திருப்பதாயும் ஆகையால் வாஸ்தவமாக கிரயபாகத்தில் வாதிக்கு யாதொரு பாத்தியதையும் ஏற்படாதென்றும் எதிர்வாதம் செய்தாள்.

ஸிடி ஸீவில் ஜட்ஜியவர்கள் வாதியின் தகப்பனால் பிறந்த விக்கிரயம் சரியானதென்று தீர்மானித்து ஏ. என்பவனுடைய பிராதைத் தள்ளுபடிசெய்ததில் ஷை பிராதில் 2-வது பரிகாரமாகிய (ஷை கிரயத்தை அனுசரித்துப் பார்த்தாலும் வாதிக்கு வீட்டில் கால்பங்கு ஷை விக்கிரயத்தால் ஏற்படுகிறதென்ற) விஷயத்தைப்பற்றி, கொடுத்த தீர்மானதில் மேற்படி பிராதில் 3-ம் பிரதிவாதியாகிய வாதியின் சிறியதாயார் எதிர்வாதம் செய்தபடி கிரயத்திற்குறிய பிரதிப்பிரயோஜனம் முழுவதும் ஷையாள் செலுத்தியிருப்பதாகவும் வாதிக்கு ஷை கிரயபாகத்தில் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும் மேற்படியாளுக் கிஷ்டமானால் யாதொன்றும் வாதிக்கு அவள் கொடுக்கலாமே யொழிய வேறுபாத்தியதை ஒன்றும்கிடையாதென்றும் அபிப்பிராயப்பட்டார்கள். ஸிடிகோர்ட் தீர்ப்புக்கனுசரித்து எழுதப்பட்ட டிக்கிரீயில் வாதி கேட்ட பரிகாரங்களை விளம்பியபின் 2-ம் பரிகாரத்தைப்பற்றி கொடுத்த தீர்மானத்திற்குறிய வசனங்கள் யாதொன்றும் குறிக்காமல் கிரயம் சரியானதென்று சொல்லி பிராதைத் தள்ளுபடிசெய்து விட்டதாக மட்டும் எழுதப்பட்டிருந்தது. [வாதிக்கு விக்கிரயபாகத்தில் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்று தீர்ப்பில் சொல்லியிருக்க டிக்கிரீயில் பிராது தள்ளுபடியானதாகச் சொன்னதில் பிராதினுடைய இருவகையான பரிகாரங்களும் கிடைக்கத்தக்க

தல்லவென்று ஏற்படுகிறதாய் அனுமானிக்க வேண்டும்,]

மேற்கூறிய விதமாய் வாதியின் தகப்பனார் செய்த விக்கிறயம் காயமாகி அதில் வாதிக்கு யாதொரு பாத்தியதையும் செல்லவில்லையென்றும் வாதியின் தகப்பனுடைய பாகம் முழுவதும் வாதியின் சிறியதாயாருக்குச் சென்றுவிட்டதாயும் தீர்க்கப்படவே, வாதி மைனர் தசைநீங்கி மேஜரான உடன் குடும்பவீட்டில் தனக்கு வார்ஸ்பாத்தியதையால் ஏற்பட்ட ஒரு பாதி பங்கு போக ஸிடி ஸிவில் கோர்ட்டில் வழக்காடப்பட்டிருந்த மறுபாதியும் தனக்கே பாத்தியமுண்டென்றும், தன் தகப்பனார் தன்பாகத்தை தன் சிறியதாயாருக்கும் தனக்கும் விக்கிறயஞ் செய்தது சரியல்லவென்றும், அந்த விக்கிறயம் சட்டவிரோதமல்லவென்றும் நியாயமானதென்றும் தீர்மானிக்கப்படும் பக்ஷத்தில், அந்த அரைப்பங்கில் ஒருபாதி தனக்கு பாத்தியமுண்டென்றாவது தீர்மானிக்க வேண்டுமென்று, வீட்டின் பூராவுக்குறிய விலை மதிப்பின்பேரில் மவுண்டுகட்டி தன் சிறியதாயாரைப் பிரதிவாதியாகச் சேர்த்து மேற்படியாள்பேரில் ரூ. 2500-க்கு மேல்பட்ட வழக்குகளில் அதிகார வரம்புடைய மதராஸ் ஹைகோர்ட் அசல்தரப்பில் தாவாசெய்தும், பிரதிவாதி ஸிடிகோர்ட் தீர்ப்பினால் வாதி கட்டுப்பட்டிருக்க இந்ததாவா ரீஜுடிகேடா என்னும் சட்டமுறையால் (ஒரே வழக்கைப்பற்றி முடிவான பைசல் ஏற்பட்டபிறகு திரும்பவும வியாஜ்ஜியம் தொடுப்பது சட்டவிரோதமென்ற முறையால்) ஏற்றுக்கொள்ளத் தக்கதல்லவென்று எதிர் ஆன்ஸரில் ஆக்ஷேபிக்க, அதற்குச் சமாதானமாய் வாதிக்காக ஸிடிகோர்ட் வியாஜ்ஜியத்தில் தன் தகப்பனார் செய்த விக்கிறயத்தைப்பற்றி கொடுக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயத்தீர்மானத்திற்குத் தான் கட்டுப்பட்டவனல்லவென்றும், அந்த வியாஜ்ஜியத்தில் தன்னுடைய கார்டியனாகயிருந்த கோர்ட் ஆபீஸர் சரியானபடி எதிர்வாதஞ் செய்யவில்லையென்றும், தனக்கும் தன் சிறியதாயாருக்கும் உள்ள விவாதத்தைப்பற்றி ஸிடி கோர்ட்டார் செய்த தீர்மானத்தின்பேரில் அப்பீல்செய்ய ஏதுகரமில்லாமற் போய்விட்டபடியால் அந்த அபிப்பிராயத்தீர்ப்பினால் தான் கட்டுப்பட்டவனாகானென்றும், தன்னுடைய தாவா ரூ. 2500-க்கு மேற்பட்டபடியால் ரூ. 2500-க்குட்பட்ட அதிகாரவரம்புடைய ஸிடிகோர்ட்டார் தீர்மானம் இந்தவழக்கை பாதிக்காதென்றும், ஸிடிகோர்ட்டார் தீர்ப்பின் அபிப்பிராயப்படி டிக்கிரீயில் வாதிக்கும் பிரதிவாதிக்குமுறிய விவாதவிஷயம் யாதொன்றும் குறிக்கப்படவில்லையென்றும் பற்பல வியவகாரங்கள் எடுத்துப் பேசப்பட்டன.

ஹைகோர்ட் அசல்தரப்பில் ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள் பிரதிவாதியின் எதிர்வாதத்தை அங்கீகரித்து வாதியின் பிராது ரீஜுடிகேடா வாதலால் பிடிக்கத்தக்கதல்லவென்று தீர்மானித்து ஷை பிராதை செலவுடன் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

அதன்மேல் வாதி அப்பீல் செய்ததில் அசல் தீர்மானம் காயமாகி அப்பீல் தள்ளுபடியாச்சுது. அப்பீல் தீர்மானத்தின் சுருக்கமாவது:—

"பொதுவாய் ஒருவழக்கில் வாதிக்கும் பிரதிவாதிக்கும் விவாதமான விஷயம் தீர்மானமாய் விட்டால் அதே பார்ட்டிகள் அல்லது அவர்களுடைய வார்ஸ்கள் அந்த விஷயத்தைப்பற்றி வேறு வழக்கு செய்யக்கூடாது. அப்படிச்செய்தால் அது ரீஜுடிகேடா என்னும் தோஷத்தையடைந்து ஏற்றுக்கொள்ளத்தகாத வியாஜ்ஜியமாகும். ஆனால் ஸிடிகோர்ட் தீர்ப்பில் வாதியும் அவனுடைய சிறியதாயாரும் பிரதிவாதிகளாக யிருந்து அவ்விருவர்களுடைய பாத்தியத்தைப்பற்றி தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரதிவாதிகளுக்குள் விவாத மேற்பட்ட விஷயத்தின் தீர்மானத்தால், பின்னர் ஷை யார்கள் அந்த விஷயத்தைப்பற்றி வழக்கெடுத்தால் ஷை ரீஜுடிகேடா தோஷம் ஒருகாலமும் பாதிக்காதென்று அப்பீல் வாதிக்காக சொல்லப்படவில்லை. எந்தெந்த சந்தர்ப்பங்களில் பிரதிவாதிகளுக்குறிய பரஸ்பர பாத்தியதையை கோர்ட்டார் தீர்மானிக்க வேண்டியது அவசியமோ அப்பொழுது செயயும் தீர்மான அபிப்பிராயங்கள் ஷை பிரதிவாதிகளைக்



கட்டுப்படுத்தும். (1843 67 E. R. 530, 3 Hare 627-இல் சொல்லப்பட்டிருக்கிற விதமாய் வாதி கேட்கும் பரிகாரத்தைப்பற்றி தீர்மானம் செய்ய வேண்டியதற்கு பிரதிவாதிகளுடைய பரஸ்பர பாத்தியதையைப்பற்றி விஜாரணைசெய்து அதைப்பற்றி ஒரு தீர்மானமுடிவுசெய்வது அவசியமாய் ஏற்படும்பக்ஷத்தில் கோர்ட்டார் அவ்விஷயத்தைப்பற்றியும் விஜாரணைசெய்து அபிப்பிராயங் கொடுக்கவேண்டும். அந்தப்பிரதிவாதிகளும் அவ்வித அபிப்பிராய முடிவுக்கு கட்டுப்பட்டவர்களாகிறார்கள். அவ்விதமாகவே பற்பல பம்பாய், கல்கத்தா, அலகபாத் ஹைகோர்ட் தீர்ப்புகளில் அபிப்பிராயங்கொடுக்கப்பட்டிருக்கிறது. 30-மதராஸ் 447-ஐப் பார்க்கவும். அதில் பிரதிவாதிகள் முன்வழக்கில் ஒருவருக்கொருவர் தங்கள் பாத்தியாபாத்தியதையைப்பற்றி எதிர்வாதமாடினபிறகு யாதொரு தீர்மானமுடிவு ஏற்பட்டால், அந்த தீர்மானம் பின் வழக்கில் வாதியாகவும் பிரதிவாதியாகவும் நிற்கிற ஷை பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்துமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஸிடி கோர்ட் வழக்கில் வாதி தனக்கு, விக்கிறயப்படி வீட்டில் பாதி பங்குண்டென்றும், அவனுடைய சிறியதாயாரோ தனக்கே வீடுமுழுவதும் பாத்தியமுண்டென்றும் தகரார்செய்தார்கள். அந்தக்கேசில் வாதியாய்நின்ற ஏ. என்பவன், வாதியின் சிறியதாயாருக்கு பாத்தியமே கிடையாதென்றும் வாதிக்குத் தான் பாத்தியமுண்டென்றும் அந்த வாதியின் பாகத்தை ஜப்திசெய்ய லாயக்குண்டென்றும் வியவகாரமாடி அவ்விதத் தீர்ப்புபெற ஆவலுடையவனாயிருந்ததால், அவ்விதமான பரிகாரத்தை அடைவதற்கு வாதியும் அவன் சிறியதாயாரும் வழக்காடின விஷயத்தைப்பற்றி தீர்மானமுடிவுசெய்வது அவசியமாய் ஏற்பட்டது. வாதியின் கார்டியன் ஸிடிகோர்ட் கேசில் சரியாய் எதிர்வாதம் செய்யவில்லையென்றும், அவர் பக்ஷபாதியாயிருந்தாரென்றும் வாதிக்காக இந்தக்கேசில் எடுத்துப் பேசப்பட்டது. கார்டியனோ கோர்ட் ஆபீஸர்; தீர்ப்பின் விஷயத்தில் ஸ்வயநன்மை அபேக்ஷிக்காதவர். தவிற அவர் பாரபக்ஷமாயிருந்ததாக யாதொரு ருஜூ அம்சமும் ரிகார்டுகளில் துலங்கவில்லை. அதுவுமல்லாமல் வாதிக்கு கோர்ட்டார் ஏற்படுத்தின கார்டியனைத்தவிற, ஏ. என்ற அந்தக்கேசின் வாதியே, மைனரின் வழக்குக்கு அனுசரணையாகயிருக்கக் கடமைப்பட்டவனாகிறான். ஸிடிகோர்ட் நம்பரில் மைனருடைய கக்ஷி ஜெயித்தால் தான் அந்தவாதி கோறியபடி தன் டிக்கிரீபாக்கிக்காக ஷை மைனரின் பாகத்தை ஜப்திசெய்யக் கூடும். மைனரைப்பொருத்த கடனை நிவர்த்திக்கும் பொருட்டு மேற்படி மைனருக்கு யாதொரு சொத்தின் பாகத்தில் பாத்திய முண்டாக்கிக் கொள்வது மைனரின் கோறிக்கை. ஆகவே ஸிடிகோர்ட்வாதிக்கும் மைனருக்கும் ஒரேவிதமான கருத்திருந்தபடியால் கார்டியனுடைய அஜாக்கிரதையால் மைனருக்கு விரோதம் நடந்ததாகச் சொல்லநியாயமில்லை. வாதியே மைனருக்கு அனுகூலமாகவேணுமென்று பிரயத்தனப்பட்டிருக்கவேண்டும். வாதியும் அவன் சிறியதாயாரும் டிக்கிரீதாரின் தொந்தரவை நிவர்த்திசெய்யுங்கருத்தாய் ஸிடிகோர்ட் பிராதில் இருவரும் பாத்தியாபாத்தியதையைப்பற்றி வழக்காடாமலிருந்து வாதியின் சிறியதாயாருக்கனுகூலமாய் அபிப்பிராயம் ஏற்படும்படி மைனருடைய கார்டியன் நடந்திருக்க வேண்டுமென்றும், மைனருக்கும் அவன் சிறியதாயாருக்கும் விவாதமாகிற விஷயத்தைப்பற்றிய தீர்மானம் முக்கியமானதாக நினைக்கப்பட்டதல்ல வென்றும், வாதிக்காகச் சொல்லப்பட்டது. ஆனால் அது சரியானதாகத்தோன்றவில்லை. கார்டியன்செய்த ஏற்பாடு சரியானதே. வாஸ்தவமாய் கார்டியன் அஜாக்கிறதையாலும் பாரபக்ஷத்தாலும் மைனருக்குக் கெடுதி செய்திருந்தால், 22-கல்கத்தா 8-இல் தீர்மானித்திருக்கிறபடி ரீஜுடிகேடா என்னும் தோஷம் ஷை மைனரின் பின்வழக்கை பாதிக்காதென்பது நியாயமே.

ஸிடிகோர்ட் தீர்ப்பின்படி பிராது தள்ளுபடியானதால் பிரதிவாதிகள் விஷயமாய் ஏற்பட்ட தீர்மான அபிப்பிராயத்தைப்பற்றி நஷ்டமடைந்த பிரதிவாதி அப்பீல் செய்ய ஏதுகரமில்லாமல்போனதால் அவ்விதத்தீர்மானம் அப்பிரதிவாதிகளின் பின் வழக்கில் ரீஜுடிகேடா தோஷத்தை உண்டாக்காதென்று வாதிக்கப்பட்டது. ஆனால் ஒரு

நம்பரில் வாதியாகச் சேரவேண்டியவன் அப்படிச்சேரப்பிரியமில்லாதிருந்தமையால் அவனையும் பிரதிவாதியாகச் சேர்த்து நடவடிக்கை நடத்தியதில் அந்தப்பிரதிவாதிக்கும்மற்றமுறைப்படி பிரதிவாதியாய் வந்தவனுக்கும் சம்பந்தமான ஒரு விஷயம் தீர்மானமானால், நீங்கடைந்த பிரதிவாதி அப்பீல் செய்யலாமென்று இருதரதாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். மற்றசந்தர்ப்பங்களில் அப்பீல் உண்டா இல்லையா என்று தீர்மானிக்கவேண்டியதவசியமில்லை. இந்தக்கேசில் (ஸிடிஸிவில் கோர்ட் கேசில்) பிரதிவாதிகளில் நஷ்டமடைந்த ஒருபிரதிவாதி அப்பீல் செய்ய பாத்தியமுடையவராயிருந்ததாக ஏற்படுகிறது. 30-மதராஸ் 427-ஐப் பார்க்கவும். ஸிடிகோர்ட் தீர்ப்பில் மைனருக்கு விரோதமாச்சுதா இல்லையா என்று கவனித்தால், ஒருவீட்டில் தனக்கு விகிதப்படி பங்குண்டென்று வாதிக்க, கோர்ட்டார் பங்கு கிடையாதென்று தீர்மானித்தார்கள். அப்பால் மைனருக்குவிரோதமானஷை தீர்மானத்தின் பேரில் அப்பீல் செய்திருக்கலாம். மைனருக்கனுகூலமாயிருந்தால் டிக்கிரீகடன் அந்த சொத்து பாகத்திலிருந்து தீர்ந்துவிடுமே. அப்படிக்கில்லாமல்போனதால் மைனர் தனக்குகெடுதியான தீர்மானத்தின் பேரில் அப்பீல் செய்ய இடமுண்டு. 9-கல்கத்தா வாரக்குறிப்புகளின் 5•4-ஐப்-பார்க்கவும். அதில் ஜஸ்டிஸ் வுட்டிராவ்ப் துரையவர்கள் சொல்லியிருக்கிறபடி ஒரு நம்பரில் வாதியின்தாவாதள்ளுபடியாவதால் பிரதிவாதிக்கு ஒருநன்மை கிடைத்தால்மட்டும் பிரதிவாதி, நன்மை கிடைத்ததின்மேல் அப்பீல செய்ய நியாயம் கிடையாது. ஆனால் வாதியின்பிராது தள்ளுபடியானதில் பிரதிவாதிக்கு யாதொரு வியசனிக்கத்தக்க கெடுதியான அபிப்பிராயம் ஏற்பட்டகாரணத்தாலும் அப்பீல்கிடையாதென்று சொல்லக்கூடாது. பிரதிவாதிக்கு நன்மை கிடைத்தால் அப்பீல் செய்வானேன்? ஆனால் ஆவலாதி சொல்லிக்கொள்ள நியாயம் ஏற்படின், வாதியின் தாவா டிஸ்மிஸ் ஆனபோதிலும், பிரதிவாதி அப்பீல் செய்யலாம். ஸிடிகோர்ட் டிக்கிரீயில், பிரதிவாதிகளின் பாத்தியாபாத்தியவிஷயமாய் கொடுத்த தீர்மானம் குறிக்கப்படாவிட்டாலும் பரவாயில்லை. டிக்கிரீயின் அம்சங்கள் பிரதிவாதிக்கு விரோதமில்லாமலிருந்தும் மற்ற ரிகார்டுகளினால் தீங்கு சம்பவிக்கும் பட்சத்தில் அப்பீல் செய்யலாம். பிரதிவாதிக்குக் கெடுதி சம்பவித்ததா என்பதை முக்கியமாய் கவனித்து, அப்பீல் செய்யப்படவேண்டும். ஆகையால் அப்பீல் சிலாக்கியமில்லாத தீர்மானத்திற்கு வாதி கட்டுப்பட்டவரல்லவென்ற வாதம் பிரயோஜனமில்லை.

ஸிடிகோர்ட் தீர்மானம் ரூ. 2500-க்குத்தக்க அதிகாரவரம்புள்ள கோர்ட்டாரால் ஏற்பட்டதால் அந்த மவுண்டுக்கு மேல்பட்ட அதிகாரவரம்புள்ள மதராஸ் ஹைகோர்ட்டில செய்த இந்தவழக்குக்கு ரீஜுடிகேடா தோஷம் உண்டாகாதென்று வாதிக்கப்பட்டது. ஸிடிகோர்ட் நம்பரில் வீட்டின் ஒருபாதியைப்பற்றி மட்டும் வழக்கேற்பட்டு மதிப்பு ரூ. 2500 என்று குறிக்கப்பட்டிருந்தது. இந்த நம்பரில் முழுவீட்டின் மதிப்பைக் காட்டி ரூ. 5000 என்று பிராதின் தொகை அளவை குறித்திருக்கிறது. ஷை வாதத்தைப்பற்றி பற்பல அதாரிடிகள் எடுத்துக் காண்பிக்கப்பட்டன. முடிவான தீர்மானம்பெற்ற வியாஜ்ஜிய மூலத்துடன் வேறு வியாஜ்ஜிய மூலங்களைச்சேர்த்து முன் செய்யப்பட்ட தீர்மானம் வேறுகோர்ட் தீர்மானம் என்றுசொல்லி பிராதின் தொகை அளவை அதிகரித்து ரீஜுடிகேடா தோஷத்திலிருந்து விலகிக் கொள்ளும்பொருட்டு வேறு பிராது பெரிய கோர்ட்டில் செய்வது பிசகென்று 28 கல்கத்தா 78-இல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 8 மதராஸ் 83, 9 கல்கத்தா 183, 7 அலகபாத் 247-இலும் கோர்ட்டார் ரீஜுடிகேடா தோஷத்தைப்பற்றி தீர்மானிக்கும் பொருட்டு பின்வழக்கில் குறிக்கப்பட்டிருக்கிற பற்பல வியாஜ்ஜிய மூலங்களைத் தனித்தனியாய் பிறித்து முன்செய்த தீர்மானம் எந்த வியாஜ்ஜிய மூலத்திற்கு ஒத்ததாயிருக்கிறதென்று சோதித்துப்பார்த்து அந்த வியாஜ்ஜிய மூலத்தைப்பற்றி ரீஜுடிகேடாதோஷம் ஏற்படுத்தலாம், என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் வாதியின் இந்த நம்பர் ஸிடிகோர்ட்டில் செய்யத்தக்கதல்லவென்றும், ஆகையால் ஸிடிகோர்ட்டின் முந்திய தீர்மானம் இந்த நம்பருக்கு ரீஜுடிகேடா தோஷமாகாதென்ற வாதமும் பிரயோஜனமில்லை. இந்தக்கடைசியான பாயிண்டானது அசல்கோர்ட்டில் எடுத்துப்பேசப்படாததாகச் சொல்லப்பட்டது. தீர்ப்பில் அதைப்பற்றி பிரஸ்தாபம் செய்யப்படாதபோதிலும் அதைப்பற்றி பலமாய் வாதம் செய்யப்படவில்லையென்றாவது அல்லது அது முக்கியமான பாயிண்டல்லவென்றதாக கோர்ட்டார் யோசித்தார் என்றாவது நினைக்க நியாயமுண்டு. கீழ்கோர்ட் தீர்மானம் சரியே; ஆகையால் வாதியின் அப்பீல் தள்ளுபடியாகவேண்டியது.,,

———:o:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்)

## மதராஸ் ஹைகோர்ட்.

## C. S. No. 280 fo 1911–11 பிப்ரவரி 1913.

முள்ளங்கி வெங்கடரெங்க செட்டி

*Vs*

முள்ளங்கி வெங்கட சுப்பம்மாள்

சென்னையில் ஒருதர்ம பரிபாலனத்திற்கு வம்சபரம்பரையான டிரஸ்டியாகயிருந்து ஷை தர்ம சொத்துக்களைப் பரிபாலனம் செய்துவந்த முள்ளங்கி சுப்பாராயசெட்டி யென்றவர் 189[illegible]-ம் வருஷத்தில் காலஞ்சென்றுவிடவே ஷை தர்மத்தை ஜீவதசைமட்டும் நடத்திவர லாயக்குள்ள ஷை யாருடைய பாரியாளாகிய வெங்கட சுப்பம்மாள் ஒரு வருஷகாலம் ஷை தர்மத்தை பரிபாலித்துவந்து அதன்பிறகு தன்னுடைய விருத்தாப்பியத்தாலும் பலஹீனத்தாலும் இனி அதை பரிபாலித்துவர சாத்தியப்படாததாலும், தவிர அனந்தர வார்ஸ்களாகிய தம்புசெட்டியார் என்றவரும் அதிகவயது சென்றவராயும் தன் இஷ்டம்போல் ஷை தர்மபரிபாலன விஷயமாய் எவ்விதமான ஏற்பாடும் செய்ய சம்மதித்தவராயுமிருந்தமையாலும், 1900 டிசம்பர் 12-இல் ஷை வெங்கடசுப்பம்மாள் ஷை தர்மபரிபாலனத்தின் டிரஸ்டி பாத்தியதையை காலஞ்சென்ற கணவன் சுப்பாராய செட்டியாருடைய தாய்வழி இனத்தார்களிருவர் பேருக்கு தஸ்தவேஜின் மூலமாய் மாற்றிவிட்டாள். அதுமுதல் அவ்விருவரும் ஷை தர்மத்தை நடத்திவருகையில் முள்ளங்கி வெங்கட்ரெங்கசெட்டியார் வகையராக்களாகிய வாதிகள் தாங்கள் காலஞ்சென்ற சுப்பராய செட்டியாரின் தாயாதிகளென்றும் ஷை டிரஸ்டி ஸ்தானத்திற்குத் தாங்கள் பாத்தியப்பட்டவர்களென்றும் முள்ளங்கி வெங்கடசுப்பம்மாள் செய்த பராதீனம் சட்ட விரோதமென்றும தர்மசொத்துக்கள் தங்கள்வசம் ஒப்புவிக்கப்படவேண்டுமென்றும், டிரான்ஸ்பர் தஸ்தவேஜின்படி தர்மசொத்துக்களை சுவாதீனம்பெற்ற இருவர்களும் தங்களுந்துப்பின் சமீபமான அடுத்த வார்ஸ்களாகத் தீர்மானிக்கப்படவேண்டுமென்றும், அவசியமானால் ஷை முள்ளங்கி வெங்கடசுப்பம்மாளை ஷை டிரஸ்டி உத்தியோகத்திலிருந்து நீக்கிவிடலாமென்றும் சொல்லி, ஷை முள்ளங்கி வெங்கட சுப்பம்மாளையும் தர்மசொத்தைசுவாதீனமடைந்திருக்கிற இரண்டுதாய்வழி இனத்தார்களையும் பிரதிவாதிகளாய்ச்சேர்த்து மதராஸ் ஹைகோர்ட் அசல்தரப்பில் தாவாசெய்தார்கள்.

பிரதிவாதிகளுக்காக எதிர் ஆன்ஸரில், 1-ம் பிரதிவாதியாகிய வெங்கிடசுப்பம்மாளுக்கு டிரஸ்டி உத்தியோகத்தை பிறருக்கு டிரான்ஸ்பர் செய்ய (மாற்ற) சட்டப்படி அதிகாரமில்லையென்று ஒப்புக்கொண்டபோதிலும், வாதிகள்காலஞ்சென்ற சுப்பராய செட்டியாருடைய தாயாதிகளல்லவென்றும், ஆகையால் அவர்களுக்கு தர்மசொத்து விஷயமாய் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும், ஸ்டேட்மெண்டு கொடுக்கப்பட்டது.

மேற்படி நம்பரை ஈரங்கி விஜாரணைசெய்த ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள், வாதிகளை காலஞ்சென்ற சுப்பராய செட்டியாருக்கு ஸ்வீகார பாத்தியதையால் அடுத்த அனந்தர வார்ஸுகளென்று தீர்மானித்து, 1-ம்பிரதிவாதி டிரஸ்டி பாத்தியதையை மாற்றினது பிசகென்றும், ஆகையால் அந்தத்தப்பான நடத்தையிட்டு ஷை யாளை டிரஸ்டிஸ்தானத்திலிருந்து நீக்கி, வாதிகள் கோறியபடி டிக்கிரீயளித்த தீர்மானத்தின் சுருக்கமான காரணங்களாவன:—

வாதிகள் முள்ளங்கி வெங்கண்ணா என்பவருடைய குமாரர்கள் என்று நிராக்ஷேபனையாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. முள்ளங்கி வெங்கட்ரங்கம்செட்டியார் என்றவர் காலஞ்சென்றபிறகு மேற்படியாருடைய பாரியாள் அன்னபூரணம்மாள் வாதிகளின் பிதாவாகிய வெங்கண்ண செ

ட்டியை ஸ்வீகாரமெடுத்ததாகச் சொல்லப்பட்டு ஆகவே வாதிகள் வெங்கட்ரங்க செட்டியாருடைய ஸ்வீகார பவுத்திரர்கள் (பேரப்பிள்ளைகள்) என்றும், வெங்கட்டரங்க செட்டியாரும் சுப்பராயசெட்டியாரும் தாயாதிகள் என்று வாதிகளுக்காக சொல்லப்பட்டது. 1-ம் பிரதிவாதி 2-3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த டிரஸ்ட் விடுதலைப்பத்திரத்தில் வெங்கட்ரங்கசெட்டி சுப்பாராய செட்டியின் சமீப பந்துவென்றும் சுப்பராயசெட்டி மைனர் தசையிலிருந்தபோது தாவா தர்ம பரிபாலனத்தை ஷை வெங்கட்ரங்க செட்டியார் நடத்திவந்ததாகவும் அவருடைய ஜீவதசைக்குப் பிறகு, அவருடைய கட்டளையின் பிரகாரம் அவர் பாரியாள் அன்னபூரணியம்மாள், மெஜாரிடிக்கு வந்த சுப்பராயசெட்டிக்கு ஷை தாம பரிபாலனத்தை ஒப்பிவித்துவிட்டாரென்றும் கண்டிருக்கிறது. மேற்கூறிய வசனங்களாலும் மற்ற ருஜூ அம்சங்களாலும் வெங்கட்டரங்க செட்டி சுப்பராய செட்டியுடைய தாயாதி என்று பரிஷ்காரமாய்த்துலங்குகிறது. வாதிகளின் தகப்பன் வெங்கண்ணா வெங்கட்டரங்க செட்டியின் ஸ்வீகாரபுத்திரனா அல்லவா என்று தீர்மானிக்கவேண்டியதுதான் முக்கியமான பாயிண்டு.

1-ம் பிரதிவாதி வேறொரு விஷயமாய் செய்த ஒரு பிராதில் வெங்கட்டரங்கசெட்டி 1862-ல் காலஞ்சென்றதாகச் சொல்லியிருக்கிறான். ஆகையால் வெங்கண்ணசெட்டியின் ஸ்வீகாரம் எடுக்கப்பட்டது வாஸ்தவமானால் அது வெகுகாலத்திற்கு முந்தி நடந்திருக்கவேண்டும். சுமார் 40 வருஷங்களுக்கு முந்தி நடந்திருக்கவேண்டிய இந்த ஸ்வீகாரத்தை ருஜூப்படுத்துவதற்கு போதுமான பிரத்தியக்ஷ சாக்ஷிகள் கிடையாது. ஸபிண்டர்களுடைய அனுமதியின்பேரில் அன்னபூரணியம்மாள் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டதாகவும் ஏற்படவில்லை.

ஆனால் சுப்பராயசெட்டி பல நடவடிக்கைகளில் (தன்னுடைய நன்மையைக்கருதி ஸ்வீகாரத்தை ஆக்ஷேபிக்கக்கூடிய சந்தர்ப்பங்களிலும்) வெங்கண்ணசெட்டியை ஸ்வீகார புத்திரனென்றே பாவித்து வந்திருப்பதாக ஏற்படுகிறது. அநேக தீர்மானங்களில் ஸ்வீகாரத்தைப்பற்றின சாட்சியங்கள் கிடைப்பது அசாத்தியமாயிருக்கும் பக்ஷத்தில் கக்ஷிகாரர்கள் ஒருவனை ஸ்வீகாரபுத்திரனென்று பாவித்து வந்ததாகவும் அவன் அந்தப்படியுள்ள பாத்தியா பாத்திபதைகளை அனுபவித்து வந்ததாகவும் ருஜூவானால் ஸ்வீகாரம் நிலைப்பதற்குப் போதுமான காரணமாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அன்னபூரணியம்மாளுடைய மரணத்தின்பிறகு வெங்கண்ணா மூனாங்கி வெங்கண்ணாவென்று பெயர் வகித்தவராய் வெங்கட்டரங்கசெட்டியாரின் சொத்துக்களை ஷை யாரின் புத்திரனாக பாவித்துக்கொண்டு அனுபவித்து வந்திருக்கிறார். அந்த அனுபவத்தை மற்ற தாயாதிகளாகிய சுப்பராய செட்டியாரும் தம்பு செட்டியாரும் அறிந்தும் ஆக்ஷேபிக்காமல் சம்மதித்திருந்தார்கள். பிரதிவாதிகள் சொல்லுகிறபடி சுப்பராய செட்டியார் சப் ரிஜிஸ்டிரார் உத்தியோகத்திலிருந்த தகுந்த ஜவேஜுதாரனாதலால் வெங்கண்ணசெட்டி அனுபவித்த சொத்துக்கள்மேல் ஆசைப்படப்பிரியமில்லாதிருந்துவிட்டதாக நினைத்தாலும், மற்ற தாயாதியாகிய தம்புசெட்டியாரும் ஆக்ஷேபிக்காமலிருந்ததைப் பார்க்குமிடத்து வெங்கண்ணசெட்டியின் அனுபோகமானது தாயாதிகளின் நடத்தையால் அங்கீகரிக்கப்பட்டதாகவே பாவிக்கப்படவேண்டும். ஆகவே எவிடென்ஸ் ஆக்ட் 50 வது பிரிவின்படி பார்டிகளுடைய நடத்தையால் ஸ்வீகாரத்தை வாஸ்தவமென்று நிதானிக்க வேண்டியதாகும். வெங்கண்ணசெட்டியார் தான் எழுதிக்கொடுத்திருந்த சில கிரய தஸ்தவேஜுகளிலும், அடமானப்பத்திரங்களிலும் தன்னுடைய உயில் பத்திரத்திலும் முதலாய்த் தன்னை வெங்கட்டரங்க செட்டியின் ஸ்வீகார புத்திரனென்றே விளம்பியிருக்கிறார். ஷை தஸ்தவேஜுகள் ருஜூ அம்சமாக விடப்பட்டு எவிடென்ஸ் ஆக்ட் 32-வது பிரிவின் 5-வது உட்பிரிவின்படி ஏற்றுக்கொள்ளப்பட்டதில் தன்னைப்பற்றிய பந்துத்வத்தை தஸ்தவேஜிகளில் குறித்திருந்தால் அந்த தஸ்தவேஜை ஷை பந்துத்வத்தை ருஜூப்படுத்தும் பொருட்டு உபயோகிக்கக்கூடாதென்று ஆக்ஷேபிக்கப்பட்டது. சட்டத்தில் பந்துத்வத்தின் தகவலைப்பற்றி சொல்லக்கூடிய ஒருவன் யாதொரு தஸ்தவேஜில் அதைப் பற்றி குறித்திருந்தால் அவ்வித தகவல் தன் விஷயமாயிருக்கக் கூடாதென்று சொல்லப்படவில்லை. சட்டப்பிரிவின் உபமானவியாக்கியானத்தில் "காலஞ்சென்ற A-என்பவன் B-யின் தகப்பனா என்று தீர்மானிப்பதற்கு B தன்னுடைய புத்திரனென்று A-கொடுத்திருக்கிற ஸ்டேட்மெண்டு ருஜூவில் எடுத்துக்கொள்ளப்படலாம்" என்றிருக்க, அதுபோலவே தகப்பன் பிள்ளையின் இனத்தை ஒப்புக்கொண்ட ஸ்டேட்மெண்டு எற்றுக்கொள்ளப்பட்டால் புத்திரன் தன் தகப்பன் இன்னாரென்று ஒரு ஸ்டேட்மெண்டில் சொல்லியிருந்தால் அதை என் எற்றுக்கொள்ளக்கூடாது? ஆகையால் மேற்கூறிய தஸ்தவேஜிகளை ருஜூபாகத்தில் எற்றுக்கொள்ளவேண்டும். அவைகளின்படி வெங்கண்ணா வெங்கட்டரங்க செட்டியின் சொத்துக்களை அடைந்ததுமல்லாமல் அவைகளில் சிலவற்றை விநியோகம் செய்துமிருக்கிறார். தவிர தனக்கும் சுப்பராயசெட்டிக்குமுறிய பந்துத்வத்தை ரூபிக்கத் தக்க வண்ணமாக வெங்கண்ணா தன்னுடைய உயில் பத்திரத்தில் சுப்பராயசெட்டியாரையே எக்ஸிக்கியூடராக நியமித்ததும் தவிர தன்னுடைய புத்திரர்களில் ஒருவரை சுப்பராயசெட்டியார் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்பிரியப்பட்டால் யாதொரு ஆக்ஷேபனையுமிருக்கக் கூடாதென்றும் உயிலில் குறித்தெழுதியிருக்கிறார். ஆகையால் உயில் பத்திரம் நல்லெண்ணத்துடன் பிறந்ததாகவும் அதில் கண்டபடி பரஸ்பர பந்துத்வமுறையானது வாஸ்தவமாயிருக்க வேண்டுமென்று தீர்மானிக்கவேண்டியது நியாயமாகும்.

பிரதிவாதிதரப்புசாட்சியில், 1-வது சாட்சி, வெங்கண்ணா சுப்பராயசெட்டியின் தாயாதியென்று ஒப்புக்கொள்ளுகிறார். வெங்கடசுப்பம்மாள் வாக்குமூலத்தில் ஸ்வீகாரம் தனக்குத்தெரியாதென்றும் வாதிகள் வெங்கண்ணாவின் புத்திரர்கள் என்றும் வெங்கண்ணா தன்னுடைய வீட்டுக்கு அடிக்கடிவந்து தான் தாயாதி என்று ஸதாகாலமும் வார்த்தையாடிப் போவதாயும் ஆனால் சுப்பராயசெட்டியார் அவனை ரக்த்த சம்பந்தமான பந்து வல்லவென்று நிராகரிப்பது வழக்கமென்றும் சொல்லியிருக்கிறாள். அவளுடைய சாட்சியத்தை நம்புகிறதற்கு இடமில்லை. அன்றியும் அன்னபூரணியம்மாள் தன்கணவனுடைய சிலசொத்துக்களை விக்கிறயஞ் செய்தகாலத்தில் விக்கிறயம் பெற்றவர்களில் ஒருவராகிய 3-ம் பிரதிவாதி வாதிகளுக்கு ரூபா. 1200 கொடுத்து அவர்களிடமிருந்து விடுதலைப்பத்திரம் எழுதி வாங்கியிருக்கிறார். அதில் வாதிகளின் பந்துத்வம் தெளிவாய்க்கண்டிருக்கிறது. வாதிகள் தங்கள் தகப்பனுடைய ஸ்வீகாரத்தைப் பாராட்டி பாத்தியங்கொண்டாடாதவண்ணம், மேற்கூறிய விடுதலைப்பத்திரம் பிறந்தவிஷயமானது வாதிகளின் கக்ஷிக்கு முக்கிய ஆதாரமாக ஏற்படுகிறது. 3-ம் பிரதிவாதி வாதிகளுக்கு உதவியாக இந்தக்கேசில் பிராது தயாரிக்கும் காலத்தில் வாதிகளின் வக்கிலிடம் போய் வம்சாவளியை விசாரித்திருக்கிறார். ஆனால் ஸ்வீகார சமாசாரத்தை மட்டும் வக்கிலிடம் சொல்லவில்லையென்று மறுக்கிறார். ஆனால், தான் என் வாதிகளிடம் தொகை செலுத்தி விடுதலைப்பத்திரம் எழுதி வாங்கவேண்டும்?

1873-இல் வேறொரு தாயாதி சுப்பராயசெட்டியார் பேரிலும் அன்னபூரணியம்மாள் பேரிலும் செய்த ஒரு தாவாவில் வெங்கட்டரங்கம் செட்டி தன்னுடைய சொத்துக்களை மானேஜ்மெண்டு செய்து வந்ததாகவும் அவருக்குப்பின் சுப்பராய செட்டியும் அன்னபூரணியம்மாளும் ஷை சொத்துக்களைத் தங்கள பேரில் ரிஜிஸ்டர்செய்து கொள்ள யத்தனிக்கிறார்களென்றும் அதைத்தடுக்க வேண்டுமென்று பிராது செய்திருக்கிறார். ஆனால் வெங்கண்ணசெட்டியின் ஸ்வீகாரத்தைப் பற்றி அந்தப்பிராதில் சொல்லப்படவில்லை. அந்தப்பிராது தாகல் செய்யப்பட்டதே யொழிய அதன்மேல் யாதொரு நடவடிக்கையும் நடக்கப்படாமல் 5-வருஷங்களுக்குப்பின் பிராது டிஸ்மிஸ் ஆயிருக்கிறது. அவ்விதமான பிராதில் கண்டவசனங்களையாவது விட்டுப்போனவிஷயங்களையாவது நிதானித்து ஒரு அபிப்பிராயம் கொடுக்க நியாயமில்லை.

மேற்கூறிய விஷயங்களை யோஜிக்குமிடத்து வாதிகள் சுப்பராயசெட்டியாரின் அனந்தரவார்சுகள்தான் என்று தீர்மானிக்க வேண்டியதாகும்.

3-ம்பிரதிவாதி செய்த டிரான்ஸ்பர் சட்டவிரோதமென்பதில் சந்தேகமில்லை. அதைப்பற்றி

ஆக்ஷேபனையும் கிடையாது. தாவா காலாவதிதோ ஷமுடையதென்றாவது சொல்லப்படவில்லை. 28 மதராஸ் 197-இலும் 14 மதராஸ் லா ஜர்னலிலும் தீர்மானித்திருக்கிறபடி சட்டவிரோதமாய் ஒரு டிரஸ்ட் பராதீனம் செய்யப்பட்டால் ஷை டிரஸ்டு யின் நிலைமை விலக்கப்படுவதற்காக அடுத்த வார்ஸ்தார் யாதொரு தாவாகொண்டுவரவேண்டுமென்று ஏற்படவில்லை.

ஸி. பி. ஸி. 92-வது பிரிவின்படி தர்மபரிபாலனம் செய்துவரும் டிரஸ்டியை விலக்கவேண்டுமானால் அட்வொகேட் ஜனரல் தாவாகொண்டுவரவேண்டும். அல்லது அவருடைய அனுமதி பெற்று வேறு யாரும் தாவாசெய்யலாம், ஷை சட்ட முறையானது தர்மத்திலிருந்து நன்மையை அபேக்ஷிக்கிறபோதுஜனங்களுடைய பாத்தியதையைக் காப்பாற்றும் பொருட்டு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் ஒருவருடைய ஸ்வான் பாத்தியதைக்கிடையூறாக ஒரு டிரஸ்டி நடந்தால் அதற்குரிய பரிகாரம் தேடுவதற்கு ஷை சட்ட முறைகளின் அம்சங்கள் அனுசரிக்கத்தக்கதல்ல. ஆகவே இந்தக்கேசில் 3-ம் பிரதிவாதியின் நடத்தையால் அனந்தரவார்ஸினுடைய டிரஸ்ட் பாத்தியதைக்கு பாதகமேற்பட்டபடியால் அனந்தரவார்ஸகளாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிற வாதிகள் அட்வொகேட் ஜனரலுடைய அனுமதி பெறாமலே இந்தப்பிராது கொண்டுவந்ததில் பிசகில்லை. ஆகவே 3-ம் பிரதிவாதி டிரஸ்டி ஸ்தானத்திலிருந்து விலக்கப்பட்டு, வாதிகள் கோரியபடி டிக்கிரியாகி, தர்மசொத்துக்கள் வாதிகள் வசம் ஒப்புவிக்கப்படவேண்டுமென்றும், 2-3-பிரதிவாதிகள் தங்கள்வசம் 1900 டிசம்பர் 12-இல் தர்ம சொத்துக்கள் வந்தது முதல் கணக்குகளைத் தயாரித்து இரண்டுமாதத்திற்குள் கோர்ட்டில் ஆஜர் செய்யவேண்டுமென்றும் உத்தரவளிக்கப்பட்டது.

———O:———

சில தீர்ப்புச் சுருக்கங்கள்

———:O:———

[மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

## I C. M. A. 87 of 1913-17 நவம்பர் 1913

குத்தகை பாக்கிக்காக போடப்பட்ட ரெவினியூ ஏலத்தை ஷை ஏலம் யாதொருவனுடைய மோசத்தால் நடந்தகாரணத்தைக் கொண்டு ஷை ஏலத்தை ரத்து செய்ய பிராது தொடுத்தால் அந்தப்பிராதை ரெவினியூ கோர்ட்டார் பிடிக்கக் கூடாது. அவ்விதப்பிராது ஸிவில் கோர்ட் அதிகாரவரம்பிலடங்கியதாகும். யாதொரு ஒழுங்கீன முறையால் அல்லது மோசநடத்தையால் போடப்பட்ட ஏலத்தை ரத்து செய்வதற்காக ஸிவில் புரொஜர் கோட் ஆர்டர் 21-ரூல் 90-ல் முறை ஏற்பட்டிருக்கிறது. அந்த முறைகள் மதராஸ் எஸ்டேஸ்ட் லாண்ட்ஸ் ஆக்ட் 131-வது பிறிவின் அம்சங்களில் அடங்கியவைகளல்ல

## II. C. M. A. 118 of 1913 10 நவம்பர் 1913

தன்னுடைய சொத்துப்பாடான் காரியாதிகளை மானேஜ்மெண்டு செய்யத்திறமையில்லாத மந்தமான புத்திக்கூர்மையுள்ள ஒரு மனிதனை (Lunatic) பயித்தியக்காரன் என்று தீர்மானிக்கக்கூடாது.

———:O———

## III C. M. S. A. No 84 of 1912 17 நவம்பர் 1913

ஒருவனுக்கு மத்தியகாலவரும்படியைப்பற்றி டிகிரீயில் பரிகாரமளிக்கப்பட்டு, அதில் மற்றப்படி செலவு தொகைமுதலிய இதரமான நிறைவேற்றக்கூடிய டிக்கிரீயம்சங்களில் யாதொன்றுக்காகமட்டும் முதலில் டிக்கிரீயை நிறைவேற்றும் நடவடிக்கையெடுத்து அதன்பிறகு பிரத்தியேகமாய் மத்தியகால வரும்படி இவ்வளவென்று நிர்ணயிக்கப்பட்டு அந்த விகிதப்படி மத்தியகால வரும்படியை வசூலிக்கும் பொருட்டு நிறைவேற்று மனு நடவடிக்கை நடத்தினல் டிக்கிரியின் இதர பாகத்தைப்பற்றி முன் எடுத்த நடவடிக்கை காலாவதி கழிப்புக்காக உதவக்கூடிய ஒரு நடவடிக்கையென்று பாவிக்கப்படவேண்டும். பூரா டிக்கிரீயையும் ஒரேதடவையில் நிறைவேற்றாமல் ஒவ்வொரு அம்சத்தையும் பிரத்தியேகமாய் நிறைவேற்றுவது ஒழுங்கீனமாயினும் காலாவதி விஷயத்தைப் பற்றினமட்டில் அவ்வித நடவடிக்கை சட்ட விரோதமல்ல. ஆகவே மத்தியகால வரும்படியை டிக்கிரீ தேதியிலிருந்து காலாவதி கடந்த பிறகு வசூலிக்க நடவடிக்கை யெடுத்தபோதிலும் டிக்கிரீயின் வேறு பாகத்தைப்பற்றி நிறைவேற்று மனு முந்தி கொடுத்திருந்தால் டிக்கிரீ மொத்தத்திற்கும் ஷை முந்திய மனுத் தேதிமுதல் காலாவதி தொடங்குவதாய் நிதானிக்கவேண்டும்.

———:O:———

## L. P. A. No 38 of 1913-19 நவம்பர் 1913

ஒரு பாக்கிதாரன் பாக்கித் தொகையை வாதிக்கு அனுப்பி (டெண்டர் செய்து) அதைப் பெற்றுக் கொண்டு கணக்கு பூராவும் தீர்ந்து விட்டதாக ரசீது கொடுத்தனுப்பவேண்டுமென்ற நிபந்தனையை, குறித்து லட்டர் எழுதியனுப்பின காரணத்தால் வாதி தொகையைப்பெற்றுக்கொள்ளாமல் பாக்கிதாரன்பேரில்பிராது செய்தார். பிராது தேதியில் (தீர்ப்புக்குமுன்) பிரதிவாதியை அரஸ்ட் செய்வதற்காககோர்ட்டில் உத்தரவுபெற்றும், வாதி அந்த உத்தரவை அனுசரித்து படிகட்டி வாரண்டில் பிடிக்கயத்தனிக்கவில்லை. அப்படியிருக்கவாதிக்கு ஷை பிராதின் தீர்ப்பில் கோர்ட்டார் செலவுதொகையைப்பற்றி செய்த உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன்மனு கொடுக்கப்பட்டு, மேற்படி மனுவை ஒரு ஜட்ஜியவர்கள் பைசல் செய்தார்கள். இவ்விதமான ஒரு ஜட்ஜியவர்களின் உத்தரவின்பேரில் லட்டர்ஸ் பேடெண்டு 15-வது பிரிவின்படி அப்பீல் செய்யப்படடது. மேற்படி உத்தரவுக்கு லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் கிடையாதென்றும், வாதிக்கு செலவுதொகை விஷயமாய் ஒரு ஜட்ஜியவர்கள் செய்ததீர்மானம் அப்பீல் செய்யத்தக்க ஜட்ஜ்மெண்டென்றும், இந்தக்கேசில் வாதியின் நடத்தையும் பிரதிவாதியின் நடத்தையும் சரியானதல்லவென்றும், ஆகவே இருதரப்பாரும் தங்கள் தங்கள் செலவைத் தாங்களே வகித்துக்கொள்ளும்படி உத்தரவு செய்வதுதான் நியாயமாகுமென்றும் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீலைப் பைசல்செய்த ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்களும் தீர்மானம் செய்தார்கள்.



———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்)

## Crl. R. Case No 481 of 1913. 20 நவம்பர் 1913.

ரெவினியூ பாக்கிக்காக ஒருவனுடைய சொத்தை ஜப்தி செய்யச்சென்ற ஒரு ஸர்கார் உத்தியோகஸ்தனை பாக்கிதார் முரட்டுத்தனமான சொற்களால் துரத்தி துராகிருதமாய் திட்டினதின்பேரில் மேற்படி ஸர்கார் உத்தியோகஸ்தன் ஜப்தி செய்யாமல் திரும்பிவிட்டால், பாக்கிதாரனுடைய நடத்தையானது இ. பி. கோ. 186-வது பிரிவின்படி குற்றம் சாட்டத்தக்கதாகாதென்று தீர்மானிக்கப்பட்டது

———;O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

## C. M. S. A. 12 of 1913-13 நவம்பர் 1913

ஒரு வெண்ணிலை டிக்கிரீயை மேடோவர் வாங்கினவன் டிக்கிரீயை நிறைவேற்றும் பொருட்டு கொடுத்த விண்ணப்ப நோடீஸ் கிடைத்த பிறகு, அரஸ்ட் வாரண்டுக்கு உத்தரவான தினத்திலேயே, ஆனால் வாரண்டுகட்டளை பிறக்குமுன், பிரதிவாதி டிக்கிரீ பாக்கித்தொகையைச் செலுத்திவிட்டபோதிலும் வாதியின்நிறைவேற்றுமனுவின்பேரில் தொகை வசூலானதாகவே பாவிக்கப்பட்டுவாதிக்கு நிறைவேற்று நடவடிக்கையின் வக்கில்பீஸ் பிரதிவாதியால் செலுத்தப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்)

## S. A. 1517 of 1912-12 நவம்பர் 1913.

ஒருவன் தனக்குச் சொந்தமில்லாத நிலபாகத்தைத் தன் நிலத்தோடு சேர்த்துக் கொண்டதாக

ஏற்பட்டு அவனுக்கு தண்டத்தீர்வை விதிக்கப்பட்டால் ஷை நிலக்காரன் சேர்த்துக்கொண்ட நிலபாகத்தில் தனக்கு பாத்தியதையுண்டென்று ஸ்தாபிக்கும்பொருட்டு அசல் தாவாசெய்வதற்கு (Land Encroachment Act) ஆக்டின் முறைகளில் ஏற்பட்டபடி ஆறுமாத கெடுவுண்டென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

## C. M. A. 87 of 1912-14 நவம்பர் 1913.

1908-ம் வருஷத்திய காலாவதி ஆக்ட் (Indian Limitation Act) அமோதுக்கு வந்தமுதல் அதற்குமுன் 12 வருஷ காலாவதி ஏற்பட்டிருந்த ஒத்தி அடமான வியவகாரங்களுக்கு 60-வருஷ காலாவதி விதிக்கப்பட்டிருக்கிறது. ஷை ஆக்ட் 31-வது பிரிவில்:— "இந்த ஆக்ட் மகிமைதங்கிய கவர்னர்ஜனரலவர்களால் அங்கீகாரமான தேதியாகிய 1908 ஆகஸ்டு 7-வ முதல் இரண்டு வருஷங்களுக்குள்ளாக 60-வருஷ காலாவதி கடந்த ஒத்தி அடமானத்தைப்பற்றிய வியாஜ்ஜியங்களுக்கு 1910 ஆகஸ்ட் 7வ மட்டும் காலாவதிதோஷமிகிடையாது" என்ற ஒருஸ்பெஷலான சிலாக்கியம் அளிக்கப்பட்டது. ஷை சிலாக்கியத்தை அனுசரித்து செய்யப்படவேண்டிய தாவாவுக்குக்கடைசிதினம் ஞாயிற்றுக்கிழமையாக விழுந்தமையால் அடுத்த திங்கட்கிழமையில் கொடுக்கப்பட்ட ஷை பிராதுக்கு தோஷமில்லையென்று தீர்மானிக்கப்பட்து. ஷை அபிப்பிராயத்திற்கு 39 பம்பாய் 268 விரோதமாயிருந்தும் அந்த பம்பாய் தீர்மானத்தை அனுசரிக்காமல் 34 அலகபாத் 375-க்கு ஒத்து மேற்கண்டவிதமாய் மதராஸ் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்.

———:O:———

## C. M. A. N. No 23 of 1913-11 நகம்பர் 1913.

வாதி தன்னுடைய சொத்துக்களை தன் வளர்ப்புப்பெண்ணுக்கு நன்கொடையளித்து தானபத்திரத்தில் தன்னை ஷையாள் போஷித்து வரவேண்டுமென்ற ஒரு நிபந்தனையைக் கண்டிருந்தாள். ஷை வளர்ப்புப்பெண் காலஞ்சென்ற காரணத்தால் அவ்வித நிபந்தனையுடன் அளித்த நன்கொடை தவறிப்போனதாகச்சொல்லி, ஷை சொத்துக்களை காலஞ்சென்ற வளர்ப்புப்பெண்ணுடைய புருஷன்வசமிருந்து திரும்பியடைய முதலில் தாவாசெய்து அதில் பைசல்தீர்மானம் கொடுக்கப்பட்டபிறகு, அதேவாதி அதேபிரதிவாதியின் பேரில் ஷை நன்கொடைப்பத்திரத்தில் கண்டிருந்தபிரகாரம் ஜீவனாம்சத்துகை கிடைக்கவேண்டுமென்று வேறுதாவா செய்ததில் முதல்பிராதின் தீர்மானத்தால் இரண்டாம்பிராதுக்கு ரீஜுடிகேடாதோஷம் ஏற்படாதென்றும, ஸி. பி. ஸி. ஆர்டர் 2-ரூல் 2-இன், (அதாவது இரண்டுபிராதுகளின் பரிகாரங்களை முதல் பிராதிலேயே தேடியிருக்கவேண்டுமென்ற) முறையான்து வாதியின் இரண்டாவது பிராதை பாதிக்காதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

## C. M. A. 155 of 1912-5 நவம்பர் 1913.

மற்றொருவன் பெற்ற டிக்கிரீயை மேடோவர் வாங்கிக்கொண்ட ஒருவன் அந்த டிக்கிரீயை நிறைவேற்றும் நடவடிக்கை யெடுக்காமல் தான் மேடோவர் பெற்ற விஷயத்தை மட்டும் கோர்ட்டில் அங்கீகாரம் செய்து கொள்ளவேண்டுமென்று விண்ணப்பம் கொடுக்கக்கூடாது. அவ்வித விண்ணப்பத்தை எற்றுகொண்ட உத்தரவானது அப்பீலில் தள்ளுபடியாச்சுது. ஸி. பி. ஸி. ஆர்டர் 21-ரூல் 15-ஐப் பார்க்கவும்.

———:O:———

## L. P. A. 66 of 1913-7 நவம்பர் 1913.

ஒருவனுக்கு சில தொகையைக் கடனுகக் கொடுத்தபாபத்தில் அந்த நடவடிக்கையின் அம்சமாக வெற்றுக்கடுதாசியில்பிராமிஸரிநோட் எழுதிவாங்கி, அந்த நோட்டின்பேரில் பிராதுசெய்வதற்கு ஸ்டாம்பாக்ட்டின்படி சாத்தியப்படாதகாரணத்தால் வாதி நோட்டை ஆதாரங்கொள்ளாமல் கடன்துகையை வசூலிக்க தாவாசெய்யக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. (எழுத்துமூலமாய் நோட்பிறந்திருக்க அதன்னியில் பரிகாரம் தேடக்கூடாது.)

———:O:———



(மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்.)

## S. A. 1221 of 1912-10 நவம்பர் 1913.

ஒரு வியாஜ்ஜியத்தில் வாதிக்கு அனுகூலமாகும்பக்ஷத்தில், மத்தியகால வரும்படியைச் செலுத்துவதாக தாவாசொத்தின் அனுபோகத்திலிருக்கிற பிரதிவாதி யாதொரு சொத்துஜாமீன் கொடுத்திருந்தால் அந்த ஜாமீன்பத்திரமானது டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட் 58-வது பிரிவில் கண்டவிதமான ஒரு அடமான தஸ்தவேஜின் கருத்தாக, அல்லது லிமிடேஷன்ஆக்ட் 31 வது பிரிவின்படி ஜாமீன் துகையை வசூலிக்க ஷை பத்திரத்தை ஒத்தி அடமானமாக, பாவிக்கப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. (ஜாமீன் சொத்தை அடமானக்கடன் வசூல் செய்யும் முறையால் ஏலத்திற்குக் கொண்டுவரும்படி தாவாசெய்யக்கூடாது.)

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்)

## C. R. P. No 663 of 1913-29 அக்டேபர் 1913

எம். ஆற். ஸ்ரீனிவாசருவ் Vs பிச்சைபிள்ளை

தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் கிரிமினல் புரொஸிஜர்கோட் 145-வது பிரிவின்படி (ஒரு சொத்தின் சுவாதீனவிஷயமாய் பிச்சைபிள்ளைக்கும் மற்றொருவனுக்கும் தகரார் ஏற்பட்டு) பொஸஷன்கேஸ் நடந்து பிச்சைபிள்ளைக்காக வக்கில் மிஸ்டர் எம். ஆற். ஸ்ரீனிவாசருவ் அவர்கள் ஆஜராகி பிச்சைபிள்ளைக்குஅனுகூலமான உத்தரவு கிடைத்தது. எதிரி பிச்சைபிள்ளையின் அனுபோகத்தைப்பற்றி யாதொரு தடங்கலும் செய்யக்கூடாதென்றும், தனக்குள்ள பாத்தியதையை ஸிவில் கோர்ட்டில் அசல் தாவாசெய்து ஸ்தாபித்துக்கொள்ளவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மேற்படி உத்தரவுபிறந்த மூன்று வருஷங்களுக்குப்பின் ஷை வக்கில் மிஸ்டர் ஸ்ரீனிவாசருவ் பிச்சைபிள்ளைக்கு விரோதமாக எதிரியினிடம் வகாலத்துபெற்று மன்னார்குடி டி. மு. கோர்ட்டில் சொத்து பாத்தியதையை ஸ்தாபிக்கும்பொருட்டு பிராது தாகல் செய்தார். ஷை பிராதின் ஈரங்கிகாலத்தில் ஷை வக்கில் எதிரிக்காக ஆஜரானபொழுது ஷை வக்கிலின் பழய கக்ஷிக்காரரும் பிரதிவாதியுமாகிய பிச்சைபிள்ளை தனக்கு விரோதமாக ஷை வக்கில் ஆஜராவது சட்டவிரோதமென்று ஆக்ஷேபித்து மனுச்செய்துகொண்டதின்பேரில் டி. மு. கோர்ட்டார் ஸிவில் ரூல்ஸ் ஆவ் பிராக்டிஸ் (Civil-Rules of Practice) 277-வது ரூலில், ஒரேநம்பரில், அப்பீல்நடவடிக்கையில், அல்லது ஒரே வியவகாரத்தில், அல்லது அவைகளைச்சேர்ந்த யாதொரு நடவடிக்கைகளில் தன் முந்திய கக்ஷிக்காரனுடைய கக்ஷிக்கு எதிர்வாதமாடுகிற மற்றொருவனுக்காக ஆஜராகி, கோர்ட்டாருடைய ஸ்பெஷலான உத்தரவு பெறுமல், அல்லது தன் கக்ஷிக்காரனுடைய சம்மதியிலலாமல் ஒருவக்கில் யாதொரு நடவடிக்கையும் நடத்தக்கூடாதென்றிருக்க, ஷை ரூலின்படி வக்கில் மிஸ்டர் ஸ்ரீனிவாசருவ் இந்தபிராதை நடத்தக்கூடாதென்று உத்தரவளித்தார்கள். அதன்மேல் வக்கில் மிஸ்டர் ஸ்ரீனிவாசருவ் ஹைகோர்டடில் டி. மு. கோர்ட்டாருடைய உத்தரவு பிசகென்று தீர்மானிக்கவேண்டுமென்று ரிவிஷன் மனு செய்துக்கொண்டார்கள்.

வக்கிலுக்காக மிஸ்டர் டி. ஆர். ராமசந்திரய்யரவர்கள் செய்த வாதத்தில்:— "சொத்துவிஷயமான பொஸஷன் கேசில் பிரதிவாதிக்காக ஆஜரான வக்கில் ஒரு ஸிவில் கேசில் யாதொரு தரப்பில் வக்காலத்து வாங்கக்கூடாதென்று 277-வது ரூலில் விதிக்கப்படவில்லையென்றும், ஒரேசிவில் வியவகாரத்தின் வெவ்வேறுசந்தர்பங்களில்மட்டும் ஒரு வக்கில் தன் கட்சிக்காரனுக்கு விரோதமான நடவடிக்கை நடத்தககூடாதென்றும் ஒரு கிரிமினல்தரப்பின் நடவடிக்கையில் வக்கில் தயிலேட்டநிமித்தம் அவருக்கு ஸிவில் ரூல்ஸ் ஆவ ப்ராக்டிஸ் முறைவிதிகள் பாதிக்காதென்றும்" சொல்லி அதற்காதாரமாக 12பம்பாய் 91 யும், 26 பம்பாய் 423 யும் எடுத்துக்காண்பித்தார்.

எதிரிக்காக மிஸ்டர் டி. ஆர். வெங்கடராமசாஸ்திரிகள் எதிர்வாதத்தில்:— கிரிமினல் நடவடிக்கைக்குக் சம்பந்தபட்ட ஸிவில் நடவடிக்கையில் எதிர்தரப்புக்காக வக்கில் ஆஜராகக்கூடாதென்ற விதியை ஸிவில் ரூல்ஸ் ஆவ் பிராக்டிஸில் ஏற்படுத்தக்கூடாதென்பதற்கு யாதொருகார

ணமும் கிடையாதென்றும், 277-வது ரூலினால் வக்கில்களுக்கு அதிக கடினமான நிர்பந்தங்கள் ஏற்படவில்லையென்றும், தன் பழய கக்ஷிக்காரனுக்குத் தன்னைப் பின்வழக்கில் நியமிக்கும் சவுகரியத்தைக் கொடுப்பதாகத் தெரிவிக்கவேண்டுமென்றும் அப்படித் தெரிவிக்காவிடில் அந்தக்கட்சிக்காரனுடைய அந்தரங்கமான தகவல் யாதொன்றும் தன்வசம் கிடையாதென்பதற்குப் போதுமானரூபகாரமாகிறதென்றும், ஒரு வக்கில் இரண்டுகட்சிக்காரர்களுக்கும் தன் கடமையைச் சரியாய்ச்செலுத்துவதில் யாதொரு மனச்சாட்சிக்குக் குறைவான அசந்தர்ப்பம் நேரிடக்கூடாதென்பதே 277 வதுரூல் ஏற்பட்டதற்குக் காரணமென்றும், ஒரு கட்சிக்காரனுடைய அந்தரங்கத்தை எதிரியுடன் சேர்ந்து எதிரி தரப்பில் வெளியிட்டபிறகு ஷை வக்கிலின் பேரில் நஷ்டத்திற்காக நடவடிக்கை யெடுத்தால் அந்தரங்கமான ரகசியங்கள் வெளியானதால் ஏற்பட்டநஷ்டம் நஷ்டமேயென்றும், அதைத்திருத்த சாத்தியமானதல்லவென்றும், அவ்வித ரகசியமாயிருந்ததகவலை எதிரிக்கு அனுகூலமாக உபயோகிக்கக்கூடாதென்று பழய கட்சிக்காரன் கோர்ட்டாரைக் கேட்டுக்கொள்ளலாமென்றும், அந்த சமாதானமும் மனதிற்குச்சரியான ஆறுதலாகாதென்றும். தங்கள்முன் வியவகாரங்களை நடத்துகிற வக்கில்மார்களின் நடத்தைகளைப்பற்றிஒழுங்குப்படுத்தும் அதிகாரம் கோர்ட்டாருக்கு இருக்கவேண்டியதவசிமாகுமென்றும், இல்லாவிடில் 277-வது ரூல் பயனற்றதாகுமென்றும் வாதாடினார்கள்.

ஹைகோர்ட்டார் வக்கிலுடைய ரிவிஷன் மனுவைத்தள்ளுபடியெய்து டி. மு. கோர்ட்டார் செய்த உத்தரவு சரியானதென்று கொடுத்த அபிப்பிராயத்திற்கு முக்கிய காரணங்களாவன:—

277-வது ரூலில் "நடவடிக்கை" என்ற பதத்திற்கு ஒரு ஸிவில் கோர்ட் நடவடிக்கை என்ற குறுகின கருத்தைக்கொடுக்கும்படி அவ்வசனமாவீதுஆக்டின் பிரதமபீடிகையின் கோட்பாடாவது இடங்கொடுக்கவில்லை. ஸிவில் தரப்பில் செய்யப்பட்ட அசல் பிராதானது முந்திய கிரிமினல் நடவடிக்கையினால் உற்பத்தியனதாகச் சொல்லவேண்டும்; கிரிமினல் நடவடிக்கை சுவாதீனத்தைப்பற்றிய வியவகாரமாயும், ஸிவில் நம்பர் சொத்து பாத்தியதையைப் பற்றியதாயும் இருந்தபோதிலும், இரண்டு வியவகாரங்களும் ஒரேசொத்தைப் பற்றியதாயும் இரண்டிலும் ஒரே பார்ட்டிகளாயும் இருப்பதால் இரண்டு நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்டவைகளேயொழிய வித்தியாசமானவைகளாய்பாவிக்கப்படகூடாது. ஸிவில் நம்பரை கிரிமினல் நடவடிக்கையின் தொடர்ச்சி யென்றும் சொல்லலாம்.

வக்கில்களுடைய நடத்தைகளைப்பற்றியும் மற்றமுறைபாடுகளைப் பற்றியும் ஏற்பட்டிருக்கிற ஆக்டில் (Legal Practitioners' Act) கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தை யனுசரித்து 277-வது ரூலை ஹைகோர்ட்டார் ஏற்படுத்தினதாகச் சொல்லக்கூடாதென்றும் ஆகையால் ஷை ரூல் சட்டமுறையல்லவென்றும் வக்கிலுக்காக மிஸ்டர் டி. ஆர். ராமசந்திரய்யரவர்கள் ஆக்ஷேபிக்கிறார். ஹைகோர்ட்டாருக்கு இவ்வித ரூல்ஸ் ஏற்படுத்த அதிகாரம் யாதொரு சட்டத்தை அனுசரித்திருக்கிறதா வென்று கவனிக்கவேண்டிய தவசியமில்லை. ஒருவக்கில் தன் கக்ஷிக்காரனுக்கு விரோதமாக எதிர்தரப்பில் வக்காலத்து வாங்கும்படி சந்தர்ப்பம் நேரிட்டால் பொதுவாய்த் தன்னிடம் கக்ஷிக்காரர்களுக்கு நம்பிக்கையும் விசுவாஸமும் உண்டாகும் வண்ணம் அவ்விதம் நடந்துகொள்ளத் தகாதாயினும் தனக்கு யாதொரு கண்டனமும் தண்டனையும் கிடைக்காதபடிக்கு தன் பழயகக்ஷிக்காரனுடைய சம்மதித்தின்பேரில் அல்லது அவனுக்குப் பின்வழக்கில் தன்னை நியமிக்கக்கூடிய சவுகரியத்தைத் தந்தும் அவன் அதை பிரயோஜனப்படுத்திக் கொள்ளாத பட்சத்தில் ரூலின் அம்சத்தை நிராகரித்தவராகார். ஆகவே மேற்கூறிய ரூல் ஹைகோர்ட்டாரின் அபிப்பிரயத்தை விளக்குவதாய் நிதானிக்கப்படவேண்டும். ஒரு கக்ஷிக்காரனுடைய அந்தரங்கத்தை வெளியிடும் வக்கிலின் நடத்தையைப் பற்றி யோஜிப்பதற்கு 277-வது ரூலின் அம்சம் தேவையில்லை. ஷை அந்தரங்கத்தை தன் கக்ஷிக்காரனுக்கு எதிர்தரப்பில் வழக்காடுகிறவனிடம் வெளியிட்டாலும்சரி, அல்லது அந்நியனிடத்தில் வெளியிட்டாலும் சரி, அது முற்றிலும் தகாத நடத்தையாகும்.



டிஸ்டிரிக்ட் முன்ஸீப் அவர்களுக்கு தங்கள்முன் ஆஜராகும் ஒருவக்கிலைத் தடைசெய்வதற்கு அதிகாரம் கொடுக்கும்படி யாதொரு ரூலும் அவசியமில்லை. ஒரு வக்கில் ஆஜராகும் விஷயத்தால் தன்னைக் குற்றப்படுத்திக் கொள்வதாய்த் தோற்றுமிடத்து கோர்ட்டார் அவரைத் தடுக்கலாம். இந்தக்கேசில் டி. மு. கோர்ட்டார் அவ்விதமான கருத்துடன் உத்தரவளித்ததாகவே துலங்குகிறது.

கீழ்கோர்ட் உத்தரவு சட்டவிரோத மல்லவென்று ஏற்பட்டதால் வக்கிலைத்தடைசெய்த உத்தரவுக்கு நியாயமுண்டாவென்று யோஜிக்குமிடத்து, கிரிமினல் நடவடிக்கை நடந்தபோது பிச்சைபிள்ளை வக்கிலிடம் அநேக தஸ்தவேஜுகளை ஒப்பிவித்திருக்கிறார். அந்த நடவடிக்கையில் தன் புது கக்ஷிக்காரனுக்கு அனுகூலமாய் உபயோகப் படுத்தக்கூடிய தகவல் யாதொன்றும் தான் தெரிந்துகொள்ள வில்லையென்றாவது, அல்லது யாதொரு தஸ்தவேஜின் அந்தரங்கங்கள் தனக்குத் தெரிந்திருந்தும் அவைகள் கோர்ட்டில் தாகலான விஷயத்தாலாவது அல்லது வேறு முகாந்தரத்தாலாவது எவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய பப்ளிக் ரிகார்டுகள் தானென்றாவது, வக்கில் முன்சீப்தாரவர்களுக்குத் திருப்திகரமாய்ச் சமாதானம்சொன்னதாகத் துலங்கவில்லை. இந்தக்கோர்ட்டில் வக்கிலுக்காக மிஸ்டர் ராமசந்திரய்யரவர்களாவது அவ்விதமான சமாதானங்கள் சொல்லவில்லை. ஆகையால் வக்கில் 277-வது ரூல்படிக்கு ஆஜராகாமல் விலக்கப்படுவதற்குப் பாத்திரராக நடந்துகொண்டதாகவே தீர்மானிக்கவேண்டும். முன்சீப் கோர்ட்டார் யுக்தத்தைத் தப்பாய்ச் செலுத்தியதாகச் சொல்லக்கூடாது.

ஆனால் வக்கில் குற்றம் சாட்டப்படத் தக்கதாய்த் தனக்குத்தெரிந்த அந்தரங்கத்தை தன் பழய கக்ஷிக்காரனுக்கு துரோகம்செய்யும் கருத்துடன் உபயோகிக்க எண்ணினவரல்லவென்று முன்ஸீப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது சரியாயிருந்தாலும் வக்கில் தன் பழய கட்சிக்காரனைக்கேட்டு, தான் பிராதை எதிர்வாதம் செய்யத் தயாராயிருப்பதாய்ச் சொல்லிவிட்டு அதை அவன் மறுத்தபிறகு இந்த பிராதை வாதிக்காக தாகல்செய்திருக்கவேண்டும். சில வேளைகளில் துஷ்ட சிந்தனையுள்ள கட்சிகாரர்கள் வேறொரு வக்கிலைக் கொண்டு நடத்தப்பிரியப்பட்டு அந்தக்கருத்தை வெளியிடாமல் தன் ரகசியத்தை யரிந்த பழய வக்கிலை எதிரி பக்ஷம் செல்லாமல் நிறுத்தும் பொருட்டு பிரதமத்தில் தான் பழய வக்கிலையே நியமிக்கப்பிரியமா யிருப்பதாக ஒப்புக்கொண்டு எதிரி வேறொருவரைக் கொண்டு வியவகாரம் தொடுத்தபிறகு தன் வக்கிலைக் கைவிடுவதுமுண்டு. என்றாலும் பொதுவாய் கட்சிக்காரர்களுக்கு விசுவாசததையும் நம்பிக்கையையும் அபிவிர்த்திசெய்யும் கருத்துடைய வக்கில்கள் தங்களுக்கு வரும்படி குறைவாய்ப்போவதானாலும் தன்னுடைய பழய கட்சிக்காரனுக்கு விரோதமாய்எதிர் தரப்பில் வக்காலத்து வாங்கி வியவகாரம் நடதத மறுப்பதே அதிக மேன்மையான மார்க்கமாகும். முன்சீப்கோர்ட்டார் விண்ணப்பச் செலவை வக்கில் கொடுக்கவேண்டுமென்று உத்தரவளித்தது சரியே. இங்கும் 277-வது ரூல் இந்தக்கேசில் செல்லத்தக்கதல்லவென்று பிடிவாதமாய் வாதம் செய்தமையால், அங்கீகரிக்கப்படாத அந்தவாதத்தை எதிர்தத செலவுக்கும் வக்கில் புணைப்படவேண்டும். ஆகவே ரிவிஷன் மனு செலவுடன் தள்ளுபடியாச்சுது.

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் & மிஸ்டா ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

திருநேல்வேலி ஜில்லா.

S. A. 1288 to 1284 of 1912

19 அக்டோபர் 1913.

சிவகிரி ஜமீன்தார் Vs சங்கரலிங்கம் என்கிற மிக்கேல் வகையரா

திருநெல்வேலி ஜில்லா சிவகிரி ஜமீனுக்குள்ளடங்கிய சில பட்டாதார்கள் தீர்வைத்துகையை பட்டாவில் கண்டபடி செலுத்தத்தவறினபடியால் ஜமீன்தாரவர்கள் பட்டாதார்கள்வசமுள்ள நிலங்களை ஜப்திசெய்து ஏலத்திற்குக்கொண்டுவர

ப்பிரயத்தனப்பட்டார்கள். பட்டாதார்கள் அந்த ஜப்தியை விடுதலைசெய்யும்பொருட்டு கோவில்பட்டி ரெவினியூ டிவிஷனல் ஆபீஸரிடம் அசல்தாவா செய்ததில் பட்டாதார்கள் தங்களுக்கு ஜமீன்தார் சட்டமுறைப்படி பட்டா சார்வ்செய்யவில்லையென்று முக்கிய ஆதாரமாகவாதித்தார்கள். ஜமீன்தாரவர்களோ தங்களுடைய சிப்பந்திகள் பட்டாதார்களுடைய வீட்டிற்குச்சென்று பட்டாதார்களிடம் நேரில் பட்டாக்களைக் கொடுக்கப்போனதாகவும் ஆனால் அவர்கள் அதைப்பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகவும் ஆகையால் மேற்படி பட்டா நோடீஸ்கள் மேற்படி பட்டாதார்களுடைய குடியிருப்பு வீட்டுக்கதவுகளின்மேல் ஒட்டப்பட்டமையாலும், மேற்படி பட்டா டெண்டர்செய்தவிஷயம் அவர்களுக்கு நேரில் தெரிந்தமையாலும், சட்டமுறைப்படி, மேற்கூறிய சந்தர்ப்பத்தில், பட்டாக்களில் குறிக்கப்பட்டிருக்கிற நிலங்களின் ஒரு பைரங்கமானயிடத்தில் ஷை நோடீஸ் ஒட்டப்படவேண்டியதவசியமில்லையென்றும் எதிர்வாதம் செய்தார்கள்.

ரெவினியூகோர்ட்டார் ஜமீன்தாரவர்களுடைய எதிர்வாததிற்கனுஸரணையாக பட்டாதார் தன்னுடைய வீட்டில் ஆஜரில்லாமல், அல்லது பட்டாவை ஸார்வ்செய்யப்போகும் ஜமீன் உத்தியோகஸ்தர் கண்ணுக்குப் புலப்படாதபட்சத்தில், மட்டும் பட்டா நோட்டீசை நிலத்தின் ஜாகாவிலேயே ஒட்டவேண்டியதவசியமாகுமென்றும் இந்தக்கேசுகளில் பட்டாதார்களே நேரில் பட்டாக்களைப் பெற்றுக்கொள்ள மறுத்தமையால் சட்டமுறை தவறினதாகத் தீர்மானிக்கக்கூடாதென்றும், பட்டாதார்களுக்கு பட்டாநோட்டீஸின் தகவல் பரிஷ்காரமாய்த் தெரிந்திருப்பதாயும் சொல்லி வாதிகளின் தாவாக்களைச் செலவுடன் டிஸ்மிஸ் செய்தார்கள்.

வாதிகள் ஜில்லா கோர்ட்டில் அப்பீல்செய்ததில், வாதிகளுக்கு பட்டா கொடுக்கப்போனதும் அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளமறுத்தும் அவ்வித பட்டா டெண்டரின் தகவல் வாதிகளுக்குப் பரிஷ்காரமாய் தெரிந்தவிஷயமென்பதும் போதுமானபடி ருஜுவாகியிருக்கிறபோதிலும், மதராஸ் எஸ்டேட்ஸ்லாண்டு ஆக்ட் 78 (2)-ம் பிரிவில் கண்டிருக்கிறபடி பட்டாநோட்டீசை குடியானவனுக்கு நேரில் கொடுக்கப்போனால் மட்டும் போதாதென்றும், பட்டாதார் அதைப்பெற்றுக்கொண்டால்தான் டெண்டர் என்னும் முறை பூர்த்தியாகுமென்றும், எவ்வித முகாந்தரத்தாலாவது பட்டாவைப் பெற்றுக்கொள்ளாத பட்சத்தில் ஷை 78 (2) ம் பிரிவில் கண்டிருக்கிற விதிப்படி பட்டா நோட்டீஸை நிலத்திலேயே ஒரு பயிரங்கமான ஜாகாவில் ஒட்டவேண்டுமேயொழிய அவர்களுடைய வீட்டுக்கதவில் ஒட்டக்கூடாதென்று, அபிப்பிராயப்பட்டு வாதிகளுக்கனுகூலமாக பட்டாடெண்டர் சரியானதல்லவென்று சொல்லி ஜமீன்தார்செய்த ஜப்தியை ரத்துசெய்து விட்டார்கள். அதன்மேல் ஜமீன்தாரவர்கள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கு ஜில்லாகோர்ட் தீர்மானமே காயமாகி அப்பீல்கள் செலவுடன் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:—,

1802-ம் வருஷத்திய 30-வது ரெகுலேஷன்படிக்கு ரயட்டுகளின்மீது பட்டாவை ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தும்பொருட்டு தாவா செய்யவேண்டுமானால் ஜமீன்தார் முதலில் பட்டாவை சாட்சிகளின் முன்பாக பிரத்தியக்ஷமாய் ரயட்டிடம் பெற்றுக்கொள்ளும்படி கொடுக்க வேண்டும்.

1865-வது வருஷத்திய 7-வது ஆக்டில், ஒரு பட்டா சரியானபடி டெண்டர் செய்யப்பட்டதா என்று தீர்மானிப்பதற்குப் போதுமான ருஜு அம்சமாக ஷை பட்டாவானது பாக்கிதாரனிடமாவது அவருடைய பவர்பெற்ற எஜண்டிடமாவது அல்லது அவனுடைய வழக்கமான குடியிருப்பு வீட்டிலுள்ள அவருடைய குடும்பத்தைச்சேர்ந்த தகுந்த பிராயமுடைய பூமானிடமாவது நேரில் கொடுத்திருக்கப்படவேண்டும், அவ்விதமாய் பட்டாநோட்டீசை நேரில் சார்வ்செய்ய சாத்தியப்படாதபட்சத்தில் பட்டாதார் கடைசியாய் வசித்திருந்தவீட்டின் பிரதானமான இடத்திலாவது, ஷை பட்டாவில் குறித்திருக்கிற நிலத்தின் பயிரங்கமான பாகத்திலாவது ஷை நோட்டீஸின் நகலை ஒட்டியிருக்கவேண்டும், என்று விதிக்கப்பட்டிருந்தது.



1908-ம் வருஷத்திய மதராஸ் எஸ்டேட்ஸ்லாண்டு ஆக்டில் மேற்கூறிய சார்வ்செய்யும் முறைகளே சிலமட்டும் அனுசரிக்கப்பட்டிருக்கின்றன.

52-வது பிரிவின்படி பாக்கிக்காக நிலத்தையாவது ஜங்கம சொத்துக்களையாவது, ஜப்திசெய்து ஏலம்போட்டு பாக்கியை வசூலிக்க யத்தனிக்குமுன் பட்டாமுச்சலிக்கை மாற்றப்பட்டிருக்கவேண்டும், அல்லது ரயட்டானவன் ஒப்புக்கொள்ளத்தக்க பட்டாவை ஜமீன்தார் டெண்டர் செய்திருக்கவேண்டும், அல்லது ஒரு சரியானபட்டாவும் முச்சலிக்கையும் முந்தியே பரஸ்பரமாய்மாற்றப்பட்டிருந்து அது நமோதிலிருக்கவேண்டும்.

54-வது பிரிவில் பட்டாடெண்டர் செய்யும் விதம் சொல்லப்பட்டிருக்கிறது. 78-(2) இல் கண்டிருக்கிற முறைப்படியும் சார்வ் செய்யலாம். அல்லது ஜில்லா கலக்டரிடம் ஜமீன்தார் விண்ணப்பம்கொடுத்து அவர்கள் மூலமாய் பட்டாக்களை சார்வ்[illegible] ஏற்பாடுசெய்யலாம். அது கலக்டரவர்களுடைய யுக்தம். அதற்குறிய செலவுகளை ஜமீன்தார் கலக்டரிடம் டிபாஸிட் கட்டவேண்டும்.

78 (2)-வது பிரிவின்படி பட்டாநோட்டீஸில் பாக்கித்தொகையின் கணக்கு விபரமும் ஜமீன்தாரின் கையொப்பமும் தேதியும்கண்டு பாக்கி யேர்ப்பட்ட ஒரு வருஷகாலத்திற்குள் மேற்படி நோட்டீஸை பாக்கிதாரிடம் நேரில், ஒரு காபியைக்கொடுத்து சார்வ் செய்யவேண்டும். அல்லது அவருடைய பவர்பெற்ற எஜண்டிடமாவது மேல்கண்டவிதமாய் சார்வ்செய்யவேண்டும்; அல்லது பட்டாதாருக்கு, நிலத்தின் அருகாமையில் இருப்பிடமிருக்கின் அதிலுள்ள ஆண் இனத்தாரிடம் சார்வ்செய்யவேண்டும்; மேற்கூறிய மூன்று வகையிலும் சார்ழ்செய்ய சாத்தியப்படாத பட்சத்தில் பட்டாநோட்டீஸின் நகலை அதில் குறிப்பிட்டிருக்கிற நிலத்தின் பயிரங்கமான பாகத்தில் ஒட்டிவிடவேண்டும் மேற்கூறிய முறையானது பட்டா டெண்டர் செய்யப்படுவதற்காக ஏற்பட்டிருக்கிறது.

பட்டா டெண்டர் செய்யப் பட்டபிறகு பட்டாதாரின் நிலபாத்தியதையை ஜப்திசெய்து ஏலம் போடவேண்டுமென்று உத்தேசித்து அது விஷயமாய் பட்டாதாருக்கு பின் வருமாறு நோட்டீஸ் சார்வ் செய்யலாம். அதாவது பட்டாதாரிடமாவது, ஏஜண்டிடமாவது, வழக்கமாய் குடியிருக்கும் வீட்டிலுள்ள ஆண் இனத்தாரிடமாவது நேரில் சார்வ்செய்யலாம்; அவ்விதமாய் சார்வ்செய்ய சாத்தியப்படாவிடில் பட்டாதார் கடைசியாய் வசித்துவந்த வீடானது நிலத்திற்கு பத்துமைல் தூரத்திற்குள்ளிருக்கும் பட்சத்தில் அதின் கதவிலாவது, இல்லாவிடில் ஷை நிலத்தின் பிரதானமான பாகத்தில் ஷை ஏலநோட்டீஸின் நகலை ஒட்டலாம்.

பாக்கிக்காக நிலத்தை ஜப்திசெய்து ஏலம்போடுவதற்காகக்கொடுக்கும் நோட்டீசை சார்வ்செய்யும் முறையில் வீட்டின்கதவில் ஒட்ட சந்தரப்பம்எற்பட்டிருக்கிறது. **ஆனால் பிரதமத்தில் பட்டர் டென்டர் செய்யப்பட்டதா என்று இந்தக்கேசில் தீர்மானிக்கவேண்டிய விஷயந்திற்கு** முறையானது 78 (2) இல் விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் வீட்டின் கதவில் ஒட்ட இடம் கொடுக்கப்படவில்லை. ஆகவே பட்டா நேரில் டெலிவரி செயயப்பட்டதா, அல்லது அப்படி செய்யப்பட சாத்தியமில்லையா என்று தீர்மானிப்பதற்கு டெலிவரி என்ற 78-வது பிரிவிலுள்ள பதத்தின் அர்த்தத்தைக்கவனிக்கவேண்டும்.

ஸி. பி. ஸி. ஆர்டர் 5-ரூல் 17இல் பிரதிவாதிக்கு சம்மன்ஸ் நேரில் சார்வ் செய்யக்கூடாமைக்கு இரண்டு அசந்தர்ப்பங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. பிரதிவாதி சம்மன் நகலைப் பெற்று கையொப்பம்செய்ய மறுக்கவேண்டும், அல்லது பிரதிவாதி கண்ணுக்குப்புலப்படாமலிருக்கவேண்டும். அவ்வித அசந்தர்ப்பங்களேற்பட்டால் சம்மனை ஒட்டவேண்டிய விவரம் விதிக்கப்பட்டிருக்கிறது.

எஸ்டேட்லாண்ட்ஸ் ஆக்டில் பட்டா டெண்டர் செய்யும்பொழுது பெற்றுக்கொள்ள மறுப்பவனுடைய கையொப்பம் வாங்கும்படி ஏற்படவில்லை; கையொப்பம்செய்ய மறுப்பதினால் பட்டா

ஏற்றுக்கொள்ளவில்லையென்று நிதானித்து அதற்குப்பின் வேறொரு முறையையும் நடத்தக்கடமையாகும். அதாவது டெண்டர் சரியானதாவதற்கு, மறுத்தபின் வேறுமுறையும் செய்துமுடிக்கப்படவேண்டும். பட்டா நோட்டீஸ் நகலை சட்டம் விதித்தபிரகாரம் நிலத்தின் பாகத்தில் ஒட்டவேண்டும். டெலிவர்செய்தும் எதிரி அதைப் பெற்றுக்கொள்ளாவிட்டால், அதாவது டெலிவர் செய்யும் பொருளை எதிரி சுவாதீனமடையாவிட்டால் பாக்கிதாரனுக்கு சட்டப்படி பட்டா டெண்டர் செய்தபாவனையாகாது. 54-வது பிரிவையும் கவனித்தால் பாக்கிதாரனுக்கு பட்டாவை நேரில் சார்வ்செய்யலாமென்றிருக்கிறது. அப்படி முடியாதபட்சத்தில் நிலத்திலே ஒட்டவேண்டும். ஆகவே பட்டா டெண்டர் இந்தக்கேசில் சட்ட விரோதம்.

பட்டாதார்களுக்கு பிரத்தியக்ஷமாய் பட்டாவின் தகவல்தெரிந்திருக்க தங்களுக்கு பட்டா நோட்டீஸ் சட்டப்படி கிடைக்கவில்லையென்றதை வாதிப்பது நியாயமல்லவென்று ஜமீன்தாரவர்களுக்காக சொல்லப்பட்டது. அது அதிக கடுமையான முறையாயினும் குடிகள் ஆக்டின் சட்டமுறைகளை நன்றாய் அறிந்து அந்தப்படி ஒழுங்காய் நடக்க வழியேற்பட்டபோது அந்தக்கடினமானது ஸஹஜமாய்ப் போய்விப்ப நிலத்திலேயே பட்டா நோட்டீசுகளை ஒட்டுவதற்காக கொஞ்சதூர வழிப்பயணம் அவசியமாகும். என்றாலும் சட்டமுறையின் வசனங்களின் கருத்துக்கிசைந்து நடக்க அப்பியாசப்பட்டால் அந்த கஷ்டங்கள் தோன்றாது.

நேரிலாவது சார்வ்செய்யலாம். அல்லது நிலத்தின் பாகத்தில் ஒட்டலாமென்றும் ஆக்டில் விதித்திருக்க இவ்விருவகையில் எதாவது ஒன்றை அனுசரிக்கவேண்டுமேயொழிய இரண்டுமுறைகளையும் விட்டு குறிக்கப்படாத வேறு முறையில் சார்வ் செய்யலாமென்ற கருத்தாகாது.

மேற்கூறிய அபிப்பிராயங்களால் ஜமீன்தாரின் அப்பீல் தள்ளுபடியாச்சுது.

——:0:——

(மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் & மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)

ராமனுதபுரம் ஜில்லா.

**S. A. 163 of 1612—25 செப்டம்பர் 1913.**

சிவகெங்கை ஜமீன் இஜாராதார்கள்

*Vs*

சிதம்பரம் செட்டியார் வகையரா

சிவகங்கை ஜமீன் இஜாராதார்களாகிய வாதிகள் ஜமீன் நிலங்களுக்கு மேல்வார பாத்தியதையை அடைந்தவர்களாக 1899-ம் வருஷத்தில் பிரதிவாதிகளிடத்தில் குத்தகைப்பத்திரம் எழுதிவாங்கிக்கொண்டு நான்கு கிராமங்களின் அனுபோகத்தை பிரதிவாதிகள்வசம ஒப்பிவித்தார்கள். ஷை கிராமங்களிலுள்ள நிலங்களை அளந்து கொடுக்காமல் சுமாராய் விஸ்தீரணத்தை மதியிட்டு தஸ்தாவேஜில் குறித்துக்காண்பித்து மூன்றுகிராமங்களிலுள்ள அயன் நிலங்களுக்கு செய் 1-க்கு ரூ 11-விகிதம் தீர்வைசெலுத்தவேண்டுமென்றும் நான்காவது கிராமத்திலுள்ள அயன் நிலத்திற்கு ரூ. 8-விகிதம் செலுத்தவேண்டுமென்றும் ஒப்புக்கொளப்பட்டதும் தவிர, எக்காலத்திலாவது ஷை நிலங்களை அளந்துபார்க்குமிடத்து விஸ்தீரணம் தஸ்தாவேஜில் குறிப்பிட்டிருந்த மதிப்புக்கு அதிகமாயிருப்பதாய் காணப்பட்டால் அவ்விதமான அதிக விஸ்தீரணமுள்ள நிலத்திற்கு வித்தியாஸத்தைக் கண்டுபித்த காலமுதல் பிந்தியமூன்று வருஷங்களுக்குரிய தீர்வையை செய் 1-க்கு ரூ. 27-8-0 விகிதம் பிரதிவாதிகள் செலுத்தவேண்டுமென்று ஷை குத்தகைப்பத்திரத்தில ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. வாதிகளின் காரியஸ்தர்களாகிய ஜமீன் இன்ஸ்பெக்டர் 1900 ஜூனில் ஷை நிலங்களை அளந்துபார்க்கநேரிட்டபோது ஷை நான்கு கிராமங்களிலும் 2-செய்க்குமேலான வித்தியாஸம் கண்டுபிடிக்கப்பட்டு அந்த அதிக விஸ்தீரணமுள்ள நிலங்களுக்கு குத்தகைப்பத்திரத்தில் கண்ட ஒப்பந்தப்படி பிந்திய மூன்று பசலிக்குறிய தீர்வையையும் நடப்புப்பசலிக்குறிய தீர்வையையும் ரூ. 27-8-0 விகிதம் பிரதிவாதிகள் செலுத்தக்கட்வர்களென்று வாதிகளாகிய ஜமீன் இஜாராதார்கள் ராமனுதபுரம் ஸ்பெஷல் டிப்டிகலக்ட்ரிட்ம் 1910 மே 27-இல் பிராதுசெய்தார்கள். பிரதிவாதிகள் ஆன்ஸரில் பற்பல எதிர்வாதங்கள்செய்ததில் முக்கியமான ஆக்ஷேபணையாக, மதராஸ் எஸ்டேட்ஸ்லாண்டு ஆக்ட் 42-வது பிரிவின் 2-வது உட்பிரிவில் கண்டிருக்கிற விதிப்படி மேல்வாரம்தார் தீர்வையை அதிகரிக்கவேண்டுமானுல் ஜில்லா கலக்டரிடம் மனுக்கொடுத்து அவர்கள் அளவிட்டு அதிக விஸ்தீரணம் இவ்வளவென்று தீர்மானித்த பிறகு அந்த அதிகமான நிலங்களுக்குத்தீர்வை வசூலிக்க அதிகாரமுண்டென்றும், இந்ததாவா ஜில்லாகலக்டரவர்களுடைய தீர்மானமன்னியில் கொண்டுவரப்பட்டதால் அதை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும் வாதம்செய்தார்கள். ரெவினியூ கோர்ட்டாரும் ராமனுதபுரம் ஜில்லாகோர்ட்டாரும் மேற்கூறிய பிரதிவாதிகளின் முக்கிய ஆக்ஷேபணையை ஏற்றுக்கொண்டு, மற்ற பாயிண்டுகளைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் கொடுக்காமல் வாதிகளின் பிராதைத்தள்ளுபடிசெய்தார்கள். அதன்மேல் வாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்தார்கள். அங்கு கீழ்கோர்ட்டாருடைய அபிப்பிராயம் பிசகென்று தீர்மானிக்கப்பட்டு, அதாவது வாதிகள் கலக்டரிடம் உத்தரவு பெற்ற பிறகு பிராதுசெய்திருக்கவேண்டிய தவசியமில்லையென்றும், மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்ட் 42-வது பிரிவின்படி விஸ்தீரணம் அதிகமான பாபத்துக்காக தீர்வை வசூலிக்கக் கொண்டுவந்த பிராதல்லவென்றும், குத்தகைப்பத்திரத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை அனுசரித்துக்கொண்டுவரப்பட்ட பிராதாகையால் இந்தக்கேசுக்கு மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின் அம்சங்கள் அனுசரிக்கத்தக்க தல்லவென்றும் தீர்மானித்து வாதிகளின் பிராதை மறுபடியும் பயிலுக்கு எடுத்து மற்ற இஷ்யூக்களைப்பற்றி விஜாரணை செய்து பைசல் கொடுக்கும்படி கேசை ஹைகோர்ட்டார் கீழ்கோர்ட்டுக்கு ரிமாண்டுசெய்தார்கள்.

ஹைகோர்ட்டார் அவ்வித தீர்மானத்திற்கு வந்த காரணங்களின் சுருக்கமாவது:—

எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 42-வது பிரிவின் 1-வது கிளாஸ் (A, & B,) யில் குறிக்கப்பட்டிருக்கிற இருவகையான சந்தர்ப்பங்களினுல் ஒரு ரயட்டுக்கு விதித்திருக்கிற தீர்வையை அதிகரிக்கவாவது அல்லது கம்மிப்படுத்தவாவது நியாயம் ஏற்பட்டால் ஷை பிரிவின் 2-வது கிளாஸில் சொல்லியிருக்கிறபடி ஜில்லா கலக்டருடைய உத்தரவு பெற்றுத்தான், தீர்வையை அதிகரிக்க அபேக்ஷிக்கும் மேல்வாரம் தாராவது" அதைக் குறைக்கவேண்டுமென்று கோருகிற ரயட்டாவது கோர்ட்டில் பரிகாரம் தேடவேண்டும்.

42-(1) A-இலும் B-இலும் ஏற்பட்ட சந்தர்ப்பங்களாவன:—வெள்ளப்பிரவாகத்தாலாவது அல்லது வேறு காரணங்களாலாவது சாகுபடிசெய்யப்படும் நிலத்தின் ஒரு பாகமானது சாகுபடிக்கு லாயக்கில்லாமல் அழிந்துபோய் நிலவிஸ்தீரணம் குறைவுபட்டபோதிலும் ஷை நிலத்திற்கு தீர்வை முன்போலவே விதிக்கப்பட்டுவரின் அழிந்துபோனபாகம் மறுபடியும் சாகுபடிக்கு லாயக்கானதாகி ஷை நிலவிஸ்தீரணம் ஒப்படைப்பின் போதிருந்ததைவிட அதிகப்பட்டால், முன்னிருந்து அழிந்துபோனது திரும்பிவந்த காரணத்தாலும் முன்போலவே தீர்வை வசூலித்து வரப்பட்டிருந்ததாலும் அந்த நிலபாகமானது புதிதாய் சேர்க்கப்பட்டதாக பாவித்து அதற்குறிய தீர்வையை வசூலிக்க பாத்தியமில்லை. மற்றவிதமான சந்தர்ப்பங்களில் ஒப்படைக்கப்பட்ட நிலவிஸ்தீரணம் அளவில் அதிகமாக் காணப்பட்டால் அந்தபாகத்திற்குப் பிரத்தியேகமான தீர்வை வசூலிக்க பாத்தியமுண்டு. அவ்விதமாய் வசூலிக்கிற விஷயத்தில் ரயட்டுகள் தகரார்செய்தால் ஜில்லா கலக்டருடைய உத்தரவுபெறுமல் வழக்கெடுக்கக்கூடாது.

அதுபோலவே வெள்ளப்பிரவாகத்தால் சாகுபடியாகும் நிலத்தோடு வேறு சில நிலபாகமும் சேர்க்கப்பட்டு விஸ்தீரணம் அதிகரித்தபோதிலும் தீர்வை உயர்த்தப்படாமலிருந்தால் பின் அளவு காலத்தில் அப்படிச் சேர்க்கப்பட்டிருந்த பாகம் குறைவுபட்டால் குடியானவன் தான் அனுபவித்த நிலவிஸ்தீரணம் குறைந்துபோய் விட்டதாகச்சொல்லி தீர்வையைக் குறைக்கும்படிகேட்க பாத்தியமுடையவனல்ல. மற்ற விதமான சந்தர்ப்பங்களில் விஸ்தீரணம் அளவில் குறைவுபட்

டால் கலக்டரிடம் விண்ணப்பம்செய்து அனுமதி பெற்று தீர்வையைக் குறைக்கும்படி வழக்காடலாம்.

(ஆகவே வெள்ளப்பிரவாகத்தினால் சாகுபடி நிலவிஸ்தீரணம் கூடினாலும் குறைந்தாலும் தீர்வை முன்போலவே வசூலிக்கப்படவேண்டும். அவ்விதமான கம்மி ஜாஸ்தி விஸ்தீரணம் பிற்காலத்தில் அளக்கும்பொழுது புலப்படாவிட்டால் (இடையில் கம்மியாகி) பின் சேர்ந்த விஸ்தீரணத்திற்கு அதிக தீர்வை செலுத்தவேண்டியதில்லை; (இடையில் ஜாஸ்தியாகி) பின் குறைந்த விஸ்தீரணத்திற்காகத் தீர்வையைக் குறைக்கவும் நியாயமில்லை. மற்ற சந்தர்ப்பங்களால், விஸ்தீரணம் கம்மி ஜாஸ்தியானால் கலக்டர் உத்தரவு பெற்று வழக்காடவேண்டும்.)

அப்படியிருக்க தாவாகேகில் எழுத்துமூலமான ஒப்பந்தத்தின்பேரில் வாதிகள் அளவுகாலத்தில் ஜாஸ்தியாக காணப்பட்ட நிலவிஸ்தீரணத்திற்குத்தீர்வை வசூலிப்பதற்கு கலக்டர் உத்தரவு அவசியமில்லை.

பங்காளத்து டெனென்ஸி ஆக்டில் 52-வது பிரிவில் மதராஸ் ஆக்ட் 42-வது பிரிவுக்குச்சரியான விதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் அதில் கலக்டர் உத்தரவுவேண்டுமென்று சொல்லப்படவில்லை. ஷை ஆக்ட் 192-வது பிரிவிலோ மதராஸ் ஆக்டிவில்லாத ஒரு கண்டிஷன் ஏற்பட்டிருக்கிறது. அதாவது ஒரு நிலபாத்தியமுடைய மேல்வாரம்தார்கள் பலர்களாயிருக்கின் தீர்வையை அதிகரிக்க யத்தனிக்கும்பொழுது எல்லோரும்சேர்ந்து தாவாகொண்டுவரவேண்டும். தவிர 3 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 225-இலும் 19 கல்கத்தா 755-இலும் ஒப்பந்தத்தின்படி அதிகமான விஸ்தீரணத்திற்கு தீர்வை செலுத்தக் கடமைப்பட்டவன்பேரில் செய்யப்படும் தாவா டெனென்ஸி ஆக்டின்படி கொண்டுவரப்பட்டதல்லவென்றும், ஷை ஆக்டிலுள்ள நிபந்தனைகளை வாதி யனுசரிக்கத்தேவையில்லையென்றும், தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் வாதிகளின் தாவா குத்தகைப்பத்திரத்தில் கண்ட ஷரத்துப்படியுள்ள்தாகுமெனத் தீர்மானித்து மேற்கூறிய விதமாய் பைசல்செய்தார்கள்.

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

## தென்மலையாளம் ஜில்லா.

## C. M. S. A. 47 of 1912-13 அக்டோபர் 1913

## கேலுநாயர் வகையரா Vs மீனாட்சி என்கிற அம்மு அம்மாள்

1-முதல் 5 வாதிகள் பாலக்காட் தர்வாடில் ஒரு கிளை வம்சத்தாராகப் பிரத்தியேகமான சில தர்வாட் சொத்துக்களை அனுபவித்துவந்தும் பொதுவான தர்வாட்டிலிருந்து அவிபக்தர்களாகாமல் பாலக்காடு சப்கோர்ட் 1906-ம் வருஷத்திய அசல் நெ. 25-ல் தர்வாட்டின் கார்ணவனாகிய 1-ம் பிரதிவாதியையும் மற்ற தர்வாட்டின் மெம்பர்கள் 10 பேர்களையும் எதிரிகளாய்ச்சேர்த்து சில தர்வாட்டிலிருந்து நிலங்களின் சுவாதீனத்திற்காகவும் மத்தியகால வரும்படிக்காகவும் அசல்தாவாசெய்து டிக்கிரீபெற்றார்கள். 4-5 வாதிகள் பிராதுகாலத்தில் மைனர்களாயிருந்தார்கள். அதன்மேல் பிரதிவாதிகள் ஜில்லாகோர்ட்டில்அப்பீல்செய்தார்கள். அப்பீல் பைசலாகுமுன் இருதரப்பாரும் ராஜிசெய்துகொண்டு ராஜினாமாவை அப்பீல்கோர்ட்டில் தாகல்செய்தபின் ஜில்லாகோர்ட்டார் அப்பீலை தள்ளுபடிசெய்துவிட்டார்கள். 4-5-ம் வாதிகளில் ஒரு பெண் மேஜரானபிறகு அவ்விருவரும் மேற்படி ராஜினாமாவை நிராகரித்துத்தாங்கள் அதற்குக் கட்டுப்பட்டவர்களல்லவென்று சொல்லி சப்கோர்ட்டார் டிக்கிரீயை காயமாகக்கொண்டு மேற்படி டிக்கிரீயைத்தங்களுக்காகவும் மற்ற மூன்று வாதிகளுக்காகவும் நிறைவேற்றும்பொருட்டு சப்கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்தார்கள்.

அந்த விண்ணப்பத்தில் பிரதிவாதிகள்செய்த ஆக்ஷேபனைகளாவன:—

(1) அப்பீல்கோர்ட்டில் தாகல்செய்த ராஜினாமாவினால் சப்கோர்ட் டிக்கிரீரத்தாய்ப்போய்விட்டது. (2) அப்பீல்கோர்ட்டார் அசல் டிக்கிரீயை ரத்துசெய்யாதிருந்தபோதிலும் ஸி. பி. ஸி. 462-வது பிரிவின்படி ஜில்லாகோர்ட்டார் மைனர்களுக்காக ஷை ராஜினாமா விண்ணப்பத்தை தாகல்செய்ய அனுமதி கொடுத்திருப்பதால் ஷை ராஜினாமாவின் ஷரத்துக்களால் அசல்கோர்ட் டிக்கிரீயின் பரிகாரம் பூர்த்தியாகிவிட்ட பாவனையாகும். (3) 1908 மே 8 உ இல் தர்வாட்டிலுள்ள யாவரும் சேர்ந்துசெய்துகொண்ட இரண்டு கரார்நாமா தஸ்தாவேஜுகளினால் மைனர்களுக்குறிய சர்வஹக்கும் தீர்ந்துவிட்டபடியால் அந்த கரார்நாமாவுக்கு மைனர்கள்உள்பட எல்லாவாதிகளும் கட்டுப்பட்டிருக்கிற அசல் டிக்கிரீயின் அம்சங்களும் ஷை கராரில் தீர்ந்தவிட்டன.

மேற்கூறிய ஆக்ஷேபனைகளை சப்கோர்ட்டார் அங்கீகரித்து 4-5 வாதிகளின் நிறைவேற்றமனுவை செலவுடன் தள்ளுபடிசெய்துவிட்டார்கள் அதன்மேல் ஜில்லாகோர்ட்டில் ஷை வாதிகள் அப்பீல்செய்து அந்த அப்பீல் பெண்டிங்காயிருக்கும்போது (பைசலாகுமுன்) 1911 செப்டம்பர் 27-இல் 4-5 வாதிகள் ரெஜிஸ்டர்செய்துகொடுத்த ஒரு சம்மதிப்பத்திரத்தை பிரதிவாதிகள் அப்பீல் கோர்ட்டில் தாகல்செய்து அந்தப்படிக்கு; வாதிகளின்பரிகாரம் ராஜியாகத் தீர்ந்துவிட்டதென்று சொல்லி வாதிகளின் நிறைவேற்றுமனு அப்பீலைத் தள்ளுபடிசெய்யவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தார்கள். வாதிகளோ அந்த சம்மதிப்பத்திரம் 2-ம் பிரதிவாதியினுடைய பலவந்தத்தின்பேரில் எழுதிக்கொடுக்கப்பட்டதாகவும் 2-ம்வாதி இன்னும் மைனராகவேயிருக்க அவளை ஷை சம்மதப்பத்திரத்தில் மேஜரென்று பிறட்டாகக்கண்டிருப்பதாயும் ஆகையால் அந்த சம்மதிப்பத்திரம் சட்டவிரோதமென்றும் செல்லத்தக்கதல்லவென்றும் ஆக்ஷேபித்தார்கள். ஜில்லா கோர்ட்டார் வாதிகள் சொல்லுகிறபடி சம்மதிப்பத்திரம் செல்லத்தக்கதல்லவென்றும் அதை அவர்கள் மனப்பூர்வமாக எழுதிக்கொடுக்கவில்லையென்றும் 5-ம்வாதி மைனராகவேயிருக்கிறதாகவும்சொல்லி 4-5 வாதிகளுக்கனுகூலமாய் அசல்கோர்ட் டிக்கிரீயை நிறைவேற்றுவதற்கு உத்தரவுகொடுத்ததில் (1) சப்கோர்ட் டிக்கிரீயின் பேரில் செய்யப்பட்டது அப்பீல் நெ. 82 இல் ராஜினாமா தாகல்செய்யப்படாமல் மேற்படி அப்பீலுக்குச்சம்பந்தப்பட வேறொரு அப்பீல் 83 இல் தாகல் செய்யப்பட்டதாகவும் ஜில்லா கோர்ட்டார் மைனர்களுக்காக ஷை ராஜினாமாவை தாகல்செய்ய அனுமதிகொடுக்கவில்லையென்றும், ஆகவே அசல் டிக்கிரீ ரத்தாகவில்லையென்றும் (2 ஜில்லாகோர்ட்டார் நெ. 82 அப்பீலைத்தள்ளுபடிசெய்தமையால் அசல் டிக்கிரீ உறுதியாகப்பட்டதென்றும் ஆகவே ராஜினாமா விண்ணப்பத்திற்குப்பின்னும், ஷை அசல் டிக்கிரீ உயிரோடிருப்பதாயும் (3) அசல் டிக்கிரீயை செல்லுவைத்த உத்தரவு யாதொன்றும் ரிகார்டாகவில்லையென்றும், மேற்கூறிய குடும்பக்காரர்ராஜினாமாவால் டிக்கிரீ செல்லானதாக ஏற்பட்டபோதிலும் ஸிவில் புரோஸிஜர்கோட் ஆர்டர் 21-ரூல் 2-இல் கண்டபடியும், லிமிடேஷன் ஆக்ட் 172-வது பிரிவின்படியும் அவ்விதமாய் டிக்கிரீயின் பரிகாரம்தீர்ந்துபோன தகவல் மூன்றுமாதங்களுக்குள் கோர்ட்டில் செல்லு ரிகார்ட் செய்யப்படவில்லையென்றும், தீர்மானித்து கராகர்நாமா மைனர்களுக்கு அனுகூலமானதா அல்லது அது மோசக்கருத்துடன் பிறந்ததாவென்ற விஷயத்தைப் பற்றியாதொரு அபிப்பிராயமும் கொடுக்காமல், சப்கோர்ட் உத்தரவை ரத்துசெய்து 4-5 வாதிகளுக்கனுகூலமாய் அப்பீலைப்பைசல்செய்தார்கள். அதன்மேல் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2 வது அப்பீல்செய்ததில் ஜில்லாகோர்ட் தீர்மானம் காயமாகி அப்பீல் தள்ளுபடியாச்சுது.

ஹைகோர்ட் அப்பீலில் பிரதிவாதிகளின் அப்பீல் க்ரௌண்டுகள் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றுக்கும் சமாதானம் சொல்லப்பட்டதின் விவரமாவது:—

(1) பிரதிவாதிகள் ஜில்லாகோர்ட்டில் சப்கோர்ட் டிக்கிரீயின்மேல் செய்த அப்பீல் நெ. 82-க்குச் சம்பந்தப்பட்ட 83 நெ. அப்பீலில் தாகல் செய்யப்பட்ட ராஜினாமாவே அசல் டிக்கிரீயின் செல்லுக்கு அத்தாட்சியான ஸர்டிபிகேட்டாக பாவிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் பழய ஸி. பி. ஸி. 258-வது பிரிவுக்குச்சரியான ஆர்டர் 21 ரூல் 2-இன்படி செல்லுவைக்க வேண்டிய விண்ணப்பம் டிக்கிரீயை நிறைவேற்றும் கடமையுள்ள கோர்ட்டில் தாகல் செய்யப்படவேண்டும். அப்பீல் கோர்ட்டார் அசல் கோர்ட் டிக்கிரீயை நிறைவேற்றுவதற்கு அதிகாரமுடையவர்களாயிருக்கலாமென்றாலும்

நிறைவேற்றும் கடமை (பொறுப்பு) அசல்கோர்ட்டைச்சேர்ந்ததாகும். ஆகையால் அப்பீல் கோர்ட்டில் தாகல் செய்யப்பட்ட ராஜிநாமா, அசல் கோர்ட் டிக்கிரிக்குச் செல்லுவைக்ககோறிய விண்ணப்பமாகாது. தவிர 55-ம் நெ. அப்பீலில் தாகல் செய்யப்பட்ட ராஜிநாமாவை 82-நெ. அப்பீலில் தாகல்செய்த பாவனையாக வைத்தாலும் அதை செல்லுக்குறிய சர்டிபிகேட்டென்று நிதானிக்கக்கூடாது. ராஜிநாமாவின்பேரில் Recorded" பயில் "செய்யப்பட்டது" என்ற வார்த்தைகளால் கோர்ட்டார் இண்டார்ஸ் செய்திருக்கிறாகளேயொழிய அசல்கோர்ட் டிக்கிரீ ஷை ராஜிநாமாவினுல் செல்லானதாக உத்தரவும் யாதொரு ரிகார்டுசெய்யப்படவில்லை. அப்பீல் வாதிகளுக்காக (பிரதிவாதிகளுக்காக) எடுத்துக்காண்பிக்கப்பட்ட 16 கல்கத்தா லா ஜர்னல் 174-இல் அசல் கோர்ட் டிக்கிரீக்குச் செல்லாகும்படி அப்பீல் கோர்ட்டில் யாதொரு ராஜிநாமா தாகல் செய்யப்பட்டால் அதை செல்லுக்கு அத்தாட்சியான ஸர்டிபிகேட்டாக பாவிக்கலாமென்று தீர்மானிக்கப்பட்ட போதிலும் அந்த தீர்மான அபிப்பிராயத்தை அநுசரிக்கக்கூடாது. ஆகவே இந்தவாதம் பிரதிவாதிகளுக்குப் பிரயோஜனமில்லை.

(2 ஜில்லா கோர்ட்டார் அப்பீலில் கொடுத்த ராஜிநாமாவை ரிகார்டு செய்த உத்தரவாலேயே அசல்கோர்ட் டிக்கிரி ரத்தாகி, ராஜிநாமாவின்படி வேறு டிக்கிரீ பிறந்ததாக பாவிக்கவேண்டுமென்ற பிரதிவாதிகளின் இரண்டாவதுக்ரௌண்டைக் கவனிக்குமிடத்து, ராஜிநாமாவின் கோறிக்கையே அசல்கோர்ட் டிக்கிரீயை மாற்றி ராஜியின் அம்சங்களுக்குத் தகுந்தபடி வேறு டிக்கிரீ பிறப்பிக்க வேண்டுமென்பதல்ல. தாங்கள் வாதிகளுடன் ஷை ராஜிநாமாவில் கண்டவிதமாய்ச் சமாதானம்செய்துகொண்டபடியால் அப்பீலை வித்டிரா செய்துகொண்ட பாவனையாக அப்பீலை பயிலிலிருந்து அடித்துவிட வேண்டுமென்று ஷை ராஜிநாமா விண்ணப்பத்தில் கோறிக்கொள்ளப்பட்டபடியால் ஷை ராஜிநாமா பயிலானகாரணத்தால் அசல்கோர்ட் டிக்கிரீக்குப் பதிலாக புது டிக்கிரீ பிறந்ததாகத் தீர்மானிக்க நியாயமில்லை.

(3) 1909-ம் வருஷத்திய கரார் நாமாக்கள் கோர்ட்டார் அநுமதியில்லாமல் பிறந்தபோதிலும் 4-5 வாதிகள் அந்த ஏற்பாட்டுக்குக் கட்டுப்பட்டவர்களாகிறார்களென்று வாதிக்கப்பட்டது. டிக்கிரீயிலளிக்கப்பட்ட பரிகாரங்களுக்குத் தக்கபடி வாதிகளுக்கு ஷை நாமாவில் சமாதானமாய் விட்டதா என்ற விஷயத்தைக் கவனிக்குமுன் ஷை கரார்நாமா நல்லெண்ணத்துடன் ஏற்பட்டதா என்று விஜாரிக்கவேண்டும். ஆனால் அதைப்பற்றி கீழ்கோர்ட்டார் யாதொரு அபிப்பிராயமும் கொடுக்கவில்லை. ருஜூபாகத்தினுல் கரார்நாமாக்கள் 4-5 வாதிகளைக் கட்டுப்படுத்தும்படியாக நல்லெண்ணத்துடன் பிறந்ததாக ஏற்பட்டபோதிலும், டிக்கிரீயின் எல்லாப்பரிகாரங்களும் ஷை கரார்களால் தீர்ந்துபோய்விட்டதா அல்லது சில பரிகாரங்கள் மட்டும் ஒழுங்காச்சுதா என்று யோஜித்துப் பார்க்கவேணடும். டிக்கிரீயில் பிரதிவாதிகளால் சில தொகைகளும் செலுத்தப்பட வேண்டுமென்று, உத்தரவளிக்கப்பட்டிருப்பதாலும் அவ்விதமாய் துகைசெலுத்தின விஷயம் கோர்ட்டில் செல்லுவைக்கப்படாத காரணத்தாலும் ஷை குடும்பக்காரர் நாமாக்களால் நிறைவேற்று நடவடிக்கை நடத்தக்கூடாதபடி டிக்கிரீ பூராவும் தீர்ந்தபாவனையாகாது.

(4) அசையாப்பொருளின் சுவாதீனத்தைப் பற்றி பரிகாரமளிக்கப்பட்டால் டிக்கிரீபெற்ற கக்ஷிக்காரர் அவ்வித சுவாதீனத்தை அடைந்த தகவலை கோர்ட்டில் தெரிவித்து ஸி. பி. ஸி. ஆர்டர் 21-ரூல் 2-இன் படி டிக்கிரீ தீர்ந்துபோனதாக ரிகார்டு செய்விக்கவேண்டியதவசியமில்லையென்றும், துகைசெலுத்தும்படியாக டிக்கிரீயில் ஏற்பட்டிருந்தால் மட்டும் ஷை ரூல்படிக்கு கோர்ட்டில் செல்லுவைக்கவேண்டுமென்றும் சொல்லி அதற்கு ஆதாரமாக 22-மதராஸ் 182-ஐ எடுத்துக் காண்பிக்கப்பட்டது. அடமான டிக்கிரீத்துகைகளைச் செலுத்தும் விஷயங்களை கோர்ட்டில் ரூல்படிக்குச் செல்லுவைக்கவேண்டுமோ என்றதைப்பற்றி தீர்மானங்கள் பற்பல வித்தியாஸமாக ஏர்பட்டிருக்கிறபோதிலும் 28 மதராஸ் 479-இல் சென்னை இராஜதானிக்கு அவ்வித முறையைப்பற்றி முடிவான தீர்மானம் ஏற்பட்டிருக்கிறது. தவிர ஸி. பி. ஸி. ரூல்



2-இன் வசனங்களால் இந்தியா முழுவதுக்கும் அந்த முறையைப்பற்றிய விஷயம் குறிக்கப்பட்டிருக்கிறது. அதாவது துகையைப்பற்றிய டிக்கிரீயில் மட்டும் கோர்ட் மூலமாக செல்லாகாமல் கக்ஷிக்காரர்களுடைய ஏற்பாட்டைப்பற்றி கோர்ட்டார் அங்கீகரிக்க நியாயமில்லையென்று ஏற்படுகிறது. மேற்கூறிய அபிப்பிராயத்தைக் கொடுத்த 22 மதராஸ் 182-க்கு விரோதமாக அந்திய தீர்மானங்கள் யாதொன்றும் கிடையாது. ஆகவே இந்தக்கேசில் பிரதிவாதிகள் கரார் படிக்கு வாதிகள் வசம் சொத்துக்களை (டிக்கிரீப்படி அல்லது காரரின் ஒப்பந்தப்படி) ஒப்பிவித்து விட்டதாய்ச் சொல்லுகிறபடியால் 4-5 வாதிகள் மறுபடியும் டிக்கிரீயை நிறைவேற்ற வரும்பொழுது ஸி. பி. ஸி. 244-வது பிரிவின்படி ஷை டிக்கிரீ கக்ஷிக்காரர்களுக்குள் தீர்ந்துபோய் விட்டதா என்ற விஷயத்தைப்பற்றி விஜாரணைசெய்து பைசல்செய்ய வேண்டியது நியாயமாகும். அப்படிக்கு 4-5 வாதிகள் சொத்துக்களை சுவாதீனமடைந்திருந்தால் அந்தத்தேதிக்குப் பிறகு மத்தியகாலவரும்படிக்கு லாயக்குள்ளவர்களாகார். ஆனால் அசல்கோர்ட் டிக்கிரீயைப் பார்க்குமிடத்து மைனர்வாதிகளுக்காக மேஜர்வாதிகள் டிக்கிரீயின்படி தாவாசொத்துக்களைச் சுவாதீனமடைய நிறைவேற்றும் காலத்தில் மைனர்களுடைய பாத்தியதைக்குக் குந்தகமேற்படாதபடிக்கு போதுமான ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று டிக்கிரீயில் உத்தரவளிக்கப்பட்டிருக்கிறது அப்படியிருக்க ஷை கரார் நாமாப்படி மற்ற வாதிகளிடம் மைனர்வாதிகளுக்குச் சம்மந்தமான சொத்துக்களையும் சுவாதீனம் செய்து கொடுத்த டிக்கிரியின் கட்டளைக்கு விரோதமாகும். ஆகையால் காரர்படிக்கு பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை மற்றவாதிகளிடம் 4-5 வாதிகளுக்காகவும் சுவாதீனம்செய்து கொடுத்தார்களாவென்று தீர்மானிப்பதவசியமில்லை. அப்பீல் கோர்ட்டார் அப்பீலைத் தள்ளுபடிசெய்து விட்டமையால் அசல் டிக்கிரியில் கண்டிருக்கும் ஜாமீன் விஷயமான கட்டளை நமோதிலிருந்திருக்கவேண்டும். அந்தத்தகவல் பிரதிவாதிகளுக்குப் பரிஷ்காரமாய்த் தெரிந்திருக்க 4-5 வாதிகளுக்காக மற்ற வாதிகளிடம் யாதொரு ஜாமீனில்லாமல் சொத்துக்களை ஒப்பிவித்திருக்க கூடாது ஆகையால் மேற்கூறிய கரார் நாமாக்கள் செல்லத்தக்கதல்ல. மைனர் வாதிகளைமோசம் செய்வதற்காக ஷை கரார் ஏற்பட்டதென்று நிதானிக்கவேண்டும். ஆகையால் பிரதிவாதிகள் 4-5 வாதிகளின் நிறைவேற்று மனுவை ஆக்ஷேபிக்க நியாயமில்லையென்று ஹைகோர்ட்டார் அப்பீலைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். இருதப்ரபின்கக்ஷிக்காரர்களும் அவர்களுடைய வக்கில்மார்களும் இந்த நிறைவேற்றுமனு விஷயமாய் மிகவும தவறுதலாக பற்பலசந்தர்ப்பங்களில் நடந்திருப்பதால் அவரவர்கள் செலவை அவரவர்கள் வகிக்கவேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR [illegible] BOOKS
REGIST[illegible]
24 FEB 1914
MADRAS.

# தென் இந்திய வியவகார சிந்தாமணி.

Vol. 2.] ஜனவரி நெ. 1 [1914.

## மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள்.

———:o:———

(Messrs சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஒல்ட்வீல்ட்)

தஞ்சாவூர் ஜில்லா.

C. R. P. 558 of 1913–23 செப்டம்பர் 1913.

வாஸுதேவய்யர் Vs நாகப்பட்டணம் தேவஸ்தான கமிட்டீ.

நாகப்பட்டணம் தேவஸ்தான கமிட்டீ மெம்பர்களில் ஒரு மெம்பருடைய ஸ்தானம் யாதொரு சந்தர்ப்பத்தினால் காலியாகி அவருக்குப்பதிலாக சட்டப்படி காலிவிழுந்த மூன்று மாதங்களுக்குள் மற்ற மெம்பர்கள்சேர்ந்து வேறொருவரைத் தெரிந்தெடுக்காத காரணத்தால் தஞ்சாவூர் ஜில்லா கோர்ட்டாருக்கு மேற்படி காலியான மெம்பர்உத்தியோகவிஷயமாய் ஒருவர் கொடுத்த விண்ணப்பத்தின்பேரில் கோர்ட்டார் 1913 ஜனவரி 6-உயில் "காலிமெம்பரின் ஸ்தானத்திற்கு வேறொருவரைத் தெரிந்தெடுக்கவேண்டிய கடமை மற்ற மெம்பர்களைச்சேர்ந்திருக்க அவ்விதமாய் நடத்துவதற்கு யாதொரு இடையூறும் அவர்களுக்கு ஏற்பட்டதாகயில்லை. ஆகையால் மற்ற கமிட்டியார்கள தத்க்ஷணமே (உடனே) காலியை பர்த்திசெய்யவேண்டும்" என்று உத்தரவளித்ததின்பேரில், மற்ற கமிட்டிமெம்பர்கள் ஜனவரி 25 உ-இல் ஒரு மெம்பரைத் தெரிந்தெடுக்கும் முறையைத்துவக்கி பாலகிருஷ்ண உடையார் என்ற ஒருவரை தெரிந்தெடுத்து அவரைத்தவிர்த்து வேருயாரும் ஷை உத்தியோகத்திற்கு அபேக்ஷிக்கவில்லையென்றுசொல்லி ஜில்லாகோர்ட்டாருக்குத்தெரிவித்தார்கள். ஷை பாலகிருஷ்ண உடையரைத் தெரிந்தெடுத்தவிஷயத்தைப்பற்றிகோர்ட்டாருக்கு ஆக்ஷேபனைகள் செய்யப்பட்டு எப்பிரல்17உ-இல் கோர்ட்டார் மேற்படி கமிட்டி மெம்பர்களுக்கு பாலகிருஷ்ண உடையாரைத் தெரிந்தெடுத்ததை ஏன்ரத்துசெய்யக்கூடாதென்று சமாதானம் சொல்லும்படி நோடீஸ் அனுப்பி பைசல் உத்தரவாகுமட்டும் பாலகிருஷண உடையாரவர்களை கமிட்டி நடவடிக்கைகளில் தலையிடாமலிருக்கும்படி மறியல் உத்தரவளித்தார்கள். ஜுலை 19ல் பாலகிருஷண உடையார் தன்னைத் தெரிந்தெடுத்த நடவடிக்கை சட்டவிரோதமல்லவென்றும் அது செல்லத்தக்கதென்றும் தீர்மானிக்கவேண்டுமென்று ஜில்லா கோர்ட்டாருக்கு மனுச்செய்துக்கொண்டார்.

அதே தேதியில் தேவஸ்தானத்தின் நன்மையைக் கோறிய வேறொருவர், கமிட்டி மெம்பர்களில் காலியான ஸ்தானத்திற்குக் கோர்ட்டாரே பர்த்தியாக ஒருமெம்பரை நியமனம்செய்யவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தார். கோர்ட்டார் ஷை இரண்டு மனுக்களின்பேரில், பாலகிருஷ்ண உடையாரவர்களை கமிட்டியார் தெரிந்தெடுத்த நடவடிக்கையானது சரியானதென்றும் (ஒழுங்கானதென்றும்) அவரை காலியான ஸ்தானத்திற்கு பதிலானகமிட்டிமெம்பரென்று ஏற்றுக்கொண்டதாக உத்தரவளித்தார்கள்.

கோர்ட்டாருடைய மேற்கூறிய உத்தரவின்பேரில் மதராஸ் ஹைகோர்ட்டுக்கு வாஸுதேவய்யர் என்ற மனுதார் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்து அந்த உத்தரவை ரத்துசெய்யவேண்

டுமெனக் கோரினார்கள். ஹானரபில் அட்வொகேட் ஜெனரலவர்கள் பிரதம ஆக்ஷேபனையாக ஜில்லாகோர்ட்டார் 1863-ம் வருஷத்திய தேவஸ்தான ஆக்டின் 10-வது பிரிவின்படி செய்த உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுக்கொடுக்க சட்டமில்லையென்று வாதித்து அதற்கு ஆதாரமாக 11 மதராஸ் 26-இல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற பிரிவி கௌன்ஸிலாருடைய அபிப்பிராயத்தையெடுத்துக் காட்டினார்கள். ஹைகோர்ட்டார் மேற்படி பிரதம ஆக்ஷேபனையைப்பற்றி முதலில் ஈரங்கிகேட்டு மேற்படி உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசிக்கலாமென்று தீர்மானித்தார்கள்.

மேற்கூறிய அபிப்பிராயங்களுக்கு வந்தகாரணங்களின் சுருக்கமாவது:—

பாலகிருஷ்ண உடையாரைத் தெரிந்தெடுத்த கமிட்டியாரின் நடவடிக்கை (எலக்ஷன்) செல்லுமா அல்லது செல்லாதா என்ற சட்ட பாயிண்டைப்பற்றி ஜில்லா கோர்ட்டார் தீர்மானித்து கோர்ட் அதிகாரவரம்பில் செய்யப்பட்டதாகவே யூகிக்கவேண்டும். எலக்ஷன் சரியென்று தீர்மானித்தமையால் கோர்ட்டார் பாலகிருஷ்ண உடையாரவர்களை கமிட்டிமெம்பராக அங்கீகரித்தாரே யொழிய கோர்ட்டாரே அவரை நியமிக்கஎண்ணங்கொண்டதாக ஏற்படவில்லை. எலக்ஷன் நடவடிக்கை பிசகென்றும் ஆகையால் கோர்ட்டார் அதை ஒப்புக்கொள்வதற்கும் அல்லது அவரை நியமிப்பதற்கும் அதிகாரமில்லையென்று இந்த ரிவிஷனில் வாதாடப்படுகிறது. ஹானரபில் அட்வொகேட் ஜெனரலவர்கள் எடுத்துக் காட்டிய பிரிவி கௌன்ஸில் கேசின் அம்சமாவது:— ஜில்லாகோர்ட்டார் ஒரு தேவஸ்தானத்திற்கு கமிட்டிமெம்பர் ஒருவரை நியமனம் செய்தார்கள். அவர் அந்த உத்தியோகத்திற்குத் தகுதியானவரல்லவென்று ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டது. பிரிவி கௌன்ஸிலார் ஹைகோர்ட்டுக்குமேல்கண்ட உத்தரவின்பேரில் அப்பீல் கிடையாதென்றும், தேவஸ்தானஆக்டில் கோர்ட்டார் நடவடிக்கையின்மேல் அப்பீலுக்கு முறை விதிக்கப்படவில்லையென்றும் சட்டத்தில் கமிட்டி மெம்பர் நியமனம் முதலிய விஷயங்களைப்பற்றி ஜில்லா கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறதின் கருத்தாவது ஸ்தலத்தின் பொதுஜனங்களுடைய நோக்கமும் தேசகாலசந்தர்ப்பங்களும் ஜில்லாஜட்ஜியவர்களுக்கு அதிகமான அனுபோகத்தால் தெரிந்திருக்கவேண்டுமென்றும் தவிற ஜில்லா ஜட்ஜியவர்களுடைய செல்வாக்கும் மிக்க உறுதியாகவும் நிலைக்கத்தக்கதாயுமிருப்பதாலும் தேவஸ்தான விஷயமாக அவர்களுக்கு யுக்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அவ்வித அதிகாரம் செலுத்துவதில் கோர்ட் நடவடிக்கையை நடத்தும்பாவனையாகாதென்றும் அதாவது நியாய பரிபாலன ஹோதாவில் அதிகாரம் செலுத்தினதாக நிதானிக்கக் கூடாதென்றும் சொல்லி, அப்பீலுக்கிடமில்லாத யாதொரு உத்தரவினால் அதிக தீங்குகள் சம்பவிக்காதா என்ற பாயிண்டைப்பற்றி யோஜித்து அபிப்பிராயம் கொடுக்க மனமில்லாமல், நியமிக்கப்பட்ட மெம்பர் தகுதியற்றவனா என்ற விஷயத்தைப்பற்றித் தங்களைத் தீர்மானிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படாததால் அதைப்பற்றி யாதொரு பைசலும் கொடுக்காமல் (ஹைகோர்ட்டுக்கு அப்பீலுண்டா இல்லையா என்றவா பாயிண்டு மட்டும் பிரிவிகௌன்ஸிலுக்கு ரிபர்செய்யப்பட்டதால்) பிரிவி கௌன்ஸிலில் மிஸ்டர் டாயின் துரையவர்கள் ரிவிஷன் அதிகாரத்தைப்பற்றி ஆர்கியுமெண்டில் பிரஸ்தாபித்தும் அதைப்பற்றி யாதொரு அபிப்பிராயமும் கொடுக்காமல் மேற்கண்ட விதமாய் ஹைகோர்ட்டுக்கு ஜில்லாகோர்ட் நியமன உத்தரவின்பேரில் அப்பீல் கிடையாதென்று தீர்மானித்தார்கள். ஷை கேசில் அதிகார வரம்பைப்பற்றியாதாவது, ஆக்டின் முறைகளில் விதிக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைப்பற்றி யாவது யாதொரு பிரிவின் அர்த்தத்தைப்பற்றி யாவது யாதொரு வியவகாரமும் ஏற்படவில்லை. ஆகவே தாவாகேசின் அம்சங்களுக்கும் அந்தப் பிரிவிகௌன்ஸில் கேசுக்கும் சம்பந்தமில்லை.

26 மதராஸ் 35-இல் ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் தனிமையாக ஈரங்கிகேட்ட ஒரு கேசில் 1863-வது ஆக்டின் 5-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டுக்கு



ரிவிஷன் உண்டாவென்று யோஜித்ததில் ஷை பிரிவி கௌன்ஸில் அபிப்பிராயம் எடுத்துக் காண்பிக்கப்பட்டது. பிரிவிகௌன்ஸில் கேஸ் 10-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவைப் பற்றினதாயிருந்தது. எந்தப்பிரிவின்படி உத்தரவானாலும் சரியே ரிவிஷன் உண்டாவென்று தீர்மானிக்க வேண்டியதற்குக் காரணம் ஒன்றேயாகும். பிரிவி கௌன்ஸிலார் ஜில்லா கோர்ட்டாருக்கு சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தைப்பற்றிக் கொண்ட அபிப்பிராயம் (அதாவது ஷை அதிகாரம் ஸிவில் கோர்ட் அதிகாரவரம்பிலடங்கிய நியாய பரிபாலன ஹோதாவல்லவென்ற அபிப்பிராயம்) ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவுமில்லை. தவிற அந்த அபிப்பிராயம் அப்பீலுண்டா இல்லையா வென்ற பாயிண்டைப்பற்றிச் செய்த தீர்மானத்தில் கொடுக்கப்பட்ட தாச்சுதென்று சொல்லி ஷை 26 மதராஸ் 35-இல் 5-வது பிரிவின்படி செய்த உத்தரவின்மேல் ரிவிஷன் உண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

21 பம்பாய் 279-இல் டிஸ்டிரிக்ட் முனிசிபாலிடி ஆக்ட் 23-வது பிரிவின்படி ஒரு முனிசிபல் கமிஷனர் எலக்ஷன் விஷயமாக ஜில்லாகோர்ட்டாருக்கு அளிக்கப்பட்டிருக்கிற அதிகாரம் ஸிவில்கோர்ட் ஹோதாவல்லவென்றும் அந்த அதிகாரத்தின்படி செய்யப்படும் உத்தரவின்மேல் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அது சரியே. ஷை முனிசிபாலிடி ஆக்டில் ஒருகுறித்த காரியத்திற்காக ஒரு ஜில்லா அதிகாரிக்கு சில அதிகார நிலைமையை அளித்த பாவனையாகும். ஆனால் தேவஸ்தான ஆக்டில் ஜில்லா கோர்ட்டாருக்குக் கொடுத்திருக்கிற அதிகாரம் ஸிவில் கோர்ட் நடவடிக்கையைப்போலொத்ததென்றே நிதானிக்கவேண்டும். திருஷ்டாந்தரமாக ஷை ஆக்டின் 9-வது பிரிவில் ஒரு கமிட்டி மெம்பரை ஸிவில்கோர்ட் உத்தரவின்றி உத்தியோகத்திலிருந்து நீக்கக் கூடாதென்று சொல்லியிருக்கிறது. 14; 16, வது பிரிவிலும் ஸிவில்கோர்ட் அதிகாரத்தை ஜில்லா ஜட்ஜியவர்கள் செலுத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 18-வது பிரிவிலோ தேவஸ்தான விஷயமாய் யாதொரு தாவாசெய்யுமுன் கோர்ட்டாரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. மேற்படி அனுமதி கேட்கப்படும் பொழுது கோர்ட்டார் ஸிவில் அதிகார தோரணையைச் செலுத்துவதாக நிதானிக்கவேண்டும். யுக்தானுசாரத்தைப் பிரயோகப்படுத்து வாதாய் ஏற்படாது. 18-வது பிரிவின்படி செய்யப்பட்ட உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசித்திருக்கிற வழக்கமுண்டென்று ஜில்லா ஜட்ஜியாகயிருந்தகாலத்தில் இந்தக்கேசை ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்பீல்ட் துரையவர்கள் தங்கள் அனுபோகத்தால் தெரிவிக்கிறார்கள். ஆகவே ஜில்லா கோர்ட் உத்தரவின்பேரில் ரிவிஷனில் பிரவேசிக்க நியாயமுண்டு. பிரதம ஆக்ஷேபனை செல்லத்தக்க தல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

10-வது பிரிவின்படி ஜில்லாகோர்ட்டார் செய்த உத்தரவு சரியானதாவென்று யோஜித்துப்பார்த்ததில் ஹைகோர்ட்டார் மேற்படி உத்தரவு சரியானதல்லவென்று தீர்மானித்து பாலகிருஷ்ண உடையாரவர்களுடைய நியமனத்தை ரத்துசெய்து ஜில்லா கோர்ட்டார் உத்தரவு பிசகென்று தீர்மானித்தார்கள். அதற்குக் காரணங்களாகச் சொன்னதாவது:—

10-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி கமிட்டி மெம்பர் வேலை காலியானால் காலியான மூன்றுமாதத்திற்குள் மற்ற மெம்பர்கள் ஒரு தேதியைக் குறிப்பிட்டு தேவஸ்தானத்தில் சிரத்தையுடையவர்களைக் கொண்டு வேறொரு மெம்பரைத்தெரிந்தெடுத்து அவரை மேற்படி காலியான ஸ்தானத்திற்கு மெம்பராக நியமிக்கவேண்டும். அந்தத்தவணைக்குள் கமிட்டியார் எலக்ஷின்செய்து நியமிக்காவிட்டால் ஜில்லாகோர்ட்டார் யாதொருவரையும் மேற்படி ஸ்தானத்துக்கு மெம்பராக நியமித்துவிடலாம். அப்படிக்கி நியமிக்கத் தகுதியாய் தோற்றுதபட்சதில் கோர்ட்டார் கமிட்டியாருக்கு (உடனே) தத்க்ஷணமே யாதொருவரை நியமிக்கும்படி உத்தரவளிக்கவேண்டும். அந்த உத்தரவின்படி நடவாத பட்சத்தில் கோர்ட்டாரே தன் இஷ்டம்போல் யாவரை

யும் நியமித்துவிடலாம். மேற்கடி விதியின் கருத்தாவது, காலியான ஸ்தானத்திற்கு காலதாமதமன்னியில் கமிட்டியார் தங்கள் கடமையைச்செலுத்தி எலக்ஷன் செய்து பர்த்திசெய்ய வேண்டுமென்றும் குறித்தகாலத்திற்குள் அபபடிசெய்யாவிட்டடால் கோர்ட்டார் தலையிட்டு நியமனம் செய்யஏற்பாடு செய்யவேண்டும். அந்தப்பிரிவில், கோர்ட்டார் உத்தரவின்பேரில் மூன்றுமாதம் கடந்தபிறகு கமிட்டியார் நியமனம் செய்யவேண்டுமென்றதில் எலக்ஷன் மூலமாய்த்தெரிந்தெடுக்க வேண்டுமென்று துலங்கவில்லை. அவ்வித வசனமுமில்லை. யூகிக்க நியாயமுமில்லை. தவிர தத்க்ஷணமே நியமிக்க வேண்டுமென்று சொன்னதாலும் யாதொரு காலத்தவணையும் ஏற்படுத்தாதபடியாலும் எலக்ஷன்செய்வதற்குறிய காலதாமஸத்தை உத்தேசிக்கப்படவேயில்லை. கோர்ட்டாருக்கே முதலில் மெம்பரை நியமிக்க அதிகாரமிருக்க அவர்களுக்கு அந்த அதிகாரத்தைச்செலுத்த மனமில்லாமல் கமிட்டியாருக்கு அந்த அதிகாரத்தை ஒப்புவித்த பாவனையாகுமேயொழிய கமிட்டியாருக்கு ஸ்வயமான அதிகாரம் (எலக்ஷன் அதிகாரம்) காலியான மூன்று மாதத்தோடு கழிந்து விடுகிறது. மூன்றுமாதங்களுக்குப் பிறகு எலக்ஷன் செய்யும் முறைகளை மதராஸ் கவர்ன்மெண்டார் தேஸ்தான கமிட்டி மெம்பர்களின் விஷயமாய் ஏற்படுத்தவில்லை. கமிட்டியார் எலக்ஷன் நியமனத்தை அனுசரிக்கப்பிரியமில்லாமல் தங்களுக்கு இஷ்டமான யாதொருவரை நியமிக்கும் கருத்தோடு மூன்றுமாதங்கள் வரையில் காலியான ஸ்தானத்திற்கு எலக்ஷன் நடவடிக்கை யெடுக்காமல் அதன்பிறகு கோர்ட்டார் உத்தரவுசெய்தால் தங்கள் இஷ்டமானவரை நியமிக்க சவுகரியமுண்டாகக் கூடிய முறையை, யுக்தமென்று நினைக்கக் கூடாதென்று சொல்லப்பட்டது. சட்டப்படி கமிட்டியாருடைய தவ்றுதலின்பேரில் கோர்ட்டார் கொடுதத அதிகாரமேயொழிய வேரல்ல.

1895-ம் வருஷத்திய மதராஸ் லாஜர்னல் 6 M. L. J. 1-இல் கோர்ட்டார் உத்தரவின்பேரில் கமிட்டி மெம்பர்களுடைய மெஜாரிடியார் எலக்ஷன் மூலமாய் நியமனம்செய்தது பிசகென்று கொடுத்த தீர்மானத்தால் கமிட்டியாருக்கு 3 மாதத்திற்குபின்னும் எலக்ஷன் அதிகாரம் உண்டென்று ஏற்படுகிறது. அந்த அபிப்பிராயத்தை அனுசரிக்கநியாயமில்லை. 34 மதராஸ் 1-இல் மூன்று மாதத்திற்குள் கமிட்டியார் எலக்ஷன் நியமனம் செய்யாவிடில் அதன்பிறகு எலக்ஷன் அதிகாரம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பாலகிருஷ்ண உடையாரவர்களைக் கமிட்டியார் எலக்ஷன் நியமனமாக ஏற்படுத்தினது பிசகு. அதைக் கோர்ட்டார் ஒப்புக்கொண்டதும் சட்டவிரோதம்.

ஆனால் பாலகிருஷ்ண உடையாரை நியமனம் செய்வதில் கமிட்டியாருக்குப் பிரியமோ இல்லையோ என்ற விஷயத்தைத்தெரிந்து அவர்கள் பிரியமாயிருக்கிறபட்சத்தில் ஜில்லா கோர்ட்டார் உத்தரவின்மீது பிரவேசிக்ாமலிருப்பதாக உத்தேசித்து கமிட்டியாரின் கருத்தை அறியும்பொருட்டு இந்தக்கேசில் பைசல் உத்தரவ்ளிக்க வாய்தாவாவைத் தள்ளிவைத்ததில் கமிட்டியார் யாதொரு அபிப்பிராயமும் குறித்தகாலத்திற்குள் தெரிவிக்காதபடியால் ஜில்லா கோர்ட்டார் ஷை எலக்ஷன் நியமனத்தை ஒப்புக்கொண்ட உத்தரவு பிசகென்று தீர்மானிக்கப்பட்டது.

——:0:——



Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர்
& ஜஸ்டிஸ் பென்ஸர்
(தென் மலையாளம் ஜில்லா.)

## S. A. 2096 of 1912–24 அக்டோபர் 1913.

இம்பிச்சி நாயர் Vs ராமர் நாயர் வகையரா,

வாதி பிரதிவாதியின் தர்வாட்டுக்குச் செலுத்திவரவேண்டிய சீட்டுத்துகை கட்டணங்கள் பாக்கி ஏற்பட்ட நிமித்தம் அந்த பாக்கித்துகையையும் மற்றும் பின்னால் கட்டிவரவேண்டிய துகையையும் ஷை தர்வாட்டைச்சேர்ந்த மெம்பரில் ஒருவராகிய பிரதிவாதியிடம் மொத்தமாய்ச் செலுத்தி ஏ - அடையாளமிட்ட ஆதரவில் கண்ட்பிரகாரம் ரசீது பெற்றுக்கொண்டார். பிரதிவாதியிடம் செலுத்தின துகையை ஒப்புக்கொள்ளாமல் தர்வாட்டின் கார்னவன் வாதியின் பேரில் ஏற்பட்டிருந்த பாக்கித்துகையை வசூலிக்கும்பொருட்டு தாவாசெய்து டிக்கிரீத்துகையை வாதியிடம் வசூலித்துவிட்டார். வாதி இரண்டு தடவை ஒரே பாக்கியைச்செலுத்த நேரிட்டதால் முதல்தடவை பிரதிவாதியிடம் செலுத்தி ரசீது பெற்றிருக்க அந்தத்துகையை வாதிக்குப் பிரதிவாதி வாபிஸ் செய்யக் கடமைப்பட்டவரென்று சொல்லி வாதி பிரதிவாதியின்மீது கள்ளிக்கோட்டை டி-மு. கோர்ட்டில் தாவாசெய்து, வாதிக்கு டி-மு. கோர்ட்டிலும் சப்கோர்ட் அப்பீலிலும் அனுகூலமாக டிக்கிரீயாச்சுது. அதன்மேல் பிரதிவாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யவே அங்கு வாதிக்கு முற்றிலும் விரோதமாய் பிராது தள்ளுபடியாச்சுது.

ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:— பிரதிவாதியிடம் வாதி A ஆதரவின்படி செலுத்தியிருக்கிற துகைக்கு தர்வாட் கட்டுப்பட்டிருக்க, கார்னவன் அதை அங்கீகரிக்காதது பிசகென்றும், பிரதிவாதியுடைய நடத்தையால் வாதிக்குப் பிரதிவாதிபெற்ற துகையைத் திரும்பிக்கொடுக்கவேண்டியது நியாயமாகுமென்றும் வாதி பிராதில் சொல்லியிருக்கிறார். ஷை கார்ணவன் செய்த முந்திய பிராதில் வாதிக்கு விரோதமானதைப் பற்றி அப்பீல் அல்லது ரிவிஷன் முதலிய நடவடிக்கையை யெடுத்திருக்க வேண்டும். அப்படிச்செய்யாமல் இந்தப் பிராதைக் கொண்டுவர நியாயமில்லை. பிரதிவாதியிடம் சீட்டு வகைக்காகச் செலுத்தியிருந்ததைத் திரும்பிக்கேட்க நியாயமில்லை. ஏ - ஆதரவில் பிரதிவாதி தர்வாட்டுக்காகத் தான் வாதியிடம் துகை பெற்றுக்கொண்ட விஷயத்தைப்பற்றி பின்னால் வாதிக்கு நஷ்டம்வரின், அதற்காகத் தான் ஜவாப்தாரி என்ற உறுதிமொழியை எழுதித்தால் ஷை ஆதரவில் கண்டிருக்கிறபடியால் வாதி தன்னுடையபிராதை நஷ்டபரிகாரப் பிராதாக ஸ்தானித்துத்தனக்கு டிக்கிரீயளிப்பது நியாயமென்று வாதிக்கிறார். பிராதைநஷ்டபரிகாரப்பிராதாகத் திருத்தும்படி உத்தரவுகொடுக்கநியாயமில்லை. பிரதிவாதி சர்வாட்டுக்காகத் துகை பெற்றுக்கொள்ள லாயக்குள்ளவராயிருக்கிறார். ஏ ஆதரவில் பிரதிவாதி ஒரு அந்நியனுக்காகத் துகையைப் பெற்று அத்துகையை அந்நியனுக்குக் கொடுத்துவிடுவதாக ஒப்புக்கொண்டு அப்படிச் செய்யாத விஷயத்தில் அல்லது அது விஷயமாய் வாதிக்கு நேரிடும் நஷ்டத்திற்காக பிரதிவாதி ஜாமீன் கொடுத்திருந்தால் பிரதிவாதியின்மீது நஷ்டத்திற்காக வாதி தொடரலாம். ஏ ஆதரவில் அவ்விதமாய் பிரதிவாதி ஒப்புக்கொள்ளவில்லை. தானே தர்வாட்டில் ஒரு மெம்பராயிருக்கிறதால், தர்வாட்டின் கார்னவன் ஒரு அந்நியனாக பாவிக்கப்படக்கூடாது. (31 அலகபாத் 583-ஐப் பார்க்கவும்.) ஆகவே வாதியின் பிராதுக்கு வியாஜ்ஜியமூலம் சரியானதாக ஏற்படவில்லை.

ஏ-ஆதரவு 1902-ம் வருஷம் பிறந்திருக்க அதற்குமுந்தி ஏற்பட்ட பாக்கியுடன், அதற்குப் பின்னால் ஏற்படும் பாக்கிக்காக ரூ. 150 வாதியால் செலுத்தப்பட்டிருக்க அந்த ரூ. 150-க்குப் பிரதிப்பிரயோஜனமில்லையென்று பிரதிவாதி ஒப்புக்கொண்டபோதிலும் பிராது ஷை ரூ. 150-யும் வட்டியுடன் வசூலிக்கக் கொண்டுவந்ததாக ஏற்படவில்லை. தவிர வாதி தர்வாடிற்கு 1902-க்குப்பின்னுள்ளவாய்தாப்பாக்கிகளை நேரில்செலுத்திவிட்டு அவ்விதமாய்த் தான் செலுத்தின துகை மேற்கூறிய ரூ. 150-இல் சேர்ந்திருப்பதாகச் சொல்லி அந்தபாகத்தை பிரதிவாதியிடம் கோர்ட மூலமாய் தாவாசெய்து வாபிஸ் பெற்றிருக்க, மேற்படி ரூ. 150-இல் வாபிஸ்பெ

த்றுக்கொண்டது போகபாக்கியைப்பெறுவதற்கு பாத்திய முண்டென்று இந்தக்கேசில் வாதிக்காகச் சொல்லப்பட்டு அவ்வித பரிகாரம் சப்கோர்ட்டில் அளிக்கப்படாத காரணத்தால் வாதி அந்த பாகத்தைப்பற்றி ஹைகோர்ட்டில் க்ராஸ் அப்பீல்செய்தார்? பிரதிப் பிரயோஜனமில்லாமல் செலுத்தப்பட்டதாய் ஒப்புக்கொள்ளப்பட்ட ரூ. 150 இல் ஒருபாகத்திற்கு முதலில் தாவாசெய்து டிக்கிரீபெற்று பாக்கிக்கு வேறு தாவாசெய்வது அல்லது இந்த தாவாவில் பரிகாரம் தேடுவது சட்ட விரோதமாகும். தவிர 1902-இல் ஷை துகை ரூ. 150-ம் செலுத்தப்பட்டிருக்க 1911-இல் செய்யப்பட்ட இந்தப்பிராதில் அவ்வித பரிகாரம் தேடுவதற்குக் காலாவதிதோஷமும் ஏற்படக்கூடியதாகும். அவ்வித காலாவதிதோஷத்தைப்பற்றி அபிப்பிராயங்கொடுக்க அவசியமான விஷயங்களும் இந்தக்கேசின் விஜாரணையில் துலங்கவில்லை. பிராதின் அம்சங்களைப் பார்க்குமிடத்து அந்த விஷயங்களைப்பற்றி (அதாவது ரூ. 150-இல் செல்லாகாத பாகத்தை வசூலிக்கும் பாத்தியதையைப்பற்றி) இஷ்யூ ஏற்பட நியாயமும் இல்லை. ஆகவே பிராதின் வியாஜ்ஜிய மூலத்தை வேறுவிதமாக பாவித்து பிரதிப் பிரயோஜனமில்லாத பாகத்தைப்பற்றி வாதிக்குப் பரிகாரம் அளிக்கக்கூடாது. பிரதிவாதி ஏ ஆதரவு செல்லத்தக்கதல்லவென்று அதிக பிடிவாதமாய் பிசகான எதிர்வாதம் செய்தமையால் அவரவர் செலவை அவரவரே வகித்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டு வாதியின் பிராது தள்ளுபடியாச்சுது. வாதியின் க்ராஸ் அப்பீலும் தள்ளுபடியாக வேண்டியதாயிற்று, அதில் மட்டும் பிரதிவாதியின் செலவை வாதி கொடுக்கவேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது.

—:O:—

(Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஒல்ட்வீல்ட்)

திருநெல்வேலி ஜில்லா.

A. S. No 18 of 1915-3 நவம்பர் 1913.

*ராமய்யர் Vs ராஜகோபாலய்யர்.*

ராஜகோபாலய்யர் என்ற வாதி தகப்பன்பேரில் திருநெல்வேலி சப்கோர்ட்டில் குடும்ப சொத்துவிஷயமாய் பாகவியாஜ்ஜியம் கொடுத்ததில் பிரதிவாதி ராமய்யர் தன்னுடைய ஆன்ஸரில் குடும்பத்திற்கு நெல் வாங்குவதற்காகவும் வியாபாரம் நடத்தி வருவதற்காகவும் பற்பல கடன்கள் ஏற்பட்டதாயும் அந்தக்கடன்களைத் தீர்ப்பதற்காக குடும்பப்பொதுவான சொத்துக்களை உபயோகப்படுத்தியிருப்பதாயும்; பிராதின் B ஷெடியூலில் கண்டிருக்கிற 4 முதல் 8 அயிடங்களாகிய குடும்பத்திற்குச் சேரவேண்டியதாய்ச், சொல்லப்பட்ட நிலுவை பாக்கிகளை பிராது தேதிக்குமுந்தியே வசூலித்து அந்தத்துகையாவற்றையும் கூட்டுச்சீட்டுவிஷயமாய் குடும்பத்தால் செல்லாகவேண்டிய புள்ளிகளுக்குக்கொடுத்துவிட்டதாயும் ஆகவே பிராதில் கண்டபடி வாதிக்கு டிக்கிரீயளிக்க நியாயமில்லையென்றும் எதிர்வாதம்செய்தார். சப்கோர்ட்டார் குடும்பக்கடன்களைப்பற்றியும் குடும்பத்திற்குறிய நிலுவைகளைப்பற்றியும் பிரதிவாதிசெய்த வாதத்திற்குத்தகுந்த ருஜூ அம்சம் திருப்திகரமாயில்லையென்று சொல்லி அதை நம்பாமல் வாதிக்கு அனுகூலமாய்த் தீர்ப்புசெய்ததில் விஜாரணையில் பிரதிவாதி குடும்ப சொத்துக்கள் அநேகத்தை மறைத்துவிட்டதாகவும் தகப்பன் தன்மகனையே மோசம் செய்யும்கருத்தாய் பற்பல குடும்ப சொத்துக்களையும் புலப்படாமல் செய்துவிட்டதாகவும் ஏற்பட்டு பாக வியாஜ்ஜியத்தில் பொதுவாய் டிக்கிரீயளிக்கிறபடி இந்த தாவாவில் உத்தரவு செய்யாமல் பிரதிவாதியின்பேரில் ஆளைப்பொறுத்து குடும்பச்சொத்தின் சமபாதிக்கு வாதிகேட்ட அளவுக்கு சப்கோர்ட்டார் டிக்கிரீயளித்தார்கள். பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல்செய்யவே அங்கு சப்கோர்ட் தீர்ப்பே காயமாகி அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட்டார் தீர்மானத்தின் முக்கிய காரணங்களாவன:—

பிரதிவாதிக்காக இரண்டு ப்ராமிஸரிநோட்டுகள் தாகல்செய்யப்பட்டு அவைகள் குடும்பத்திற்காகத்தன்னால் எழுதிக்கொடுக்கப்பட்டதாகவும் அந்த நோட்டுகளை பாக்கிதார்கள் வேறொருவருக்கு மேடோவர் செய்துவிட்டதாகவும் தான் குடும்ப வரும்படியிலிருந்து ஷை கடன்களை மேடோவர்காரனுக்குச் செலுத்திவிட்டதாகவும் சொல்லி அதற்கு சாட்சியமாக ஷை மேடோவர்தாரன்மட்டும் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். நோட்பாக்கிதார்கள் ஒருவரும் சாட்சியாகக் கோரப்படவில்லை. தவிர மேடோவர்தார் தான்மேடோவர் பெற்றஉடன் நோட்டுக்கடன்பாக்கி யதார்த்தமா இல்லையா என்ற விஷயத்தைப்பற்றி வாதியையாகிலும் பிரதிவாதியையாகிலும் கேட்டு அறிய விரும்பவில்லை. தவிர ஷை மேடோவரானது தாவா பிராதுக்குப்பின் நடந்ததாயுமிருக்கிறது. குடும்ப வியாபாரத்திற்காகவும் நெல் வாங்கினதற்காகவும் மேற்படி கடன்கள் ஏற்பட்டதாகச் சொல்லியும் அதுவிஷயமாய் யாதொரு கணக்கும் ஆஜர்படுத்தவில்லை. இன்னும் அநேக சந்தேகத்திற்கிடமான சந்தர்ப்பங்கள் சப்கோர்ட்டாரால் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆகையால் சப்கோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு மாறான அபிப்பிராயம் அடைய நியாயமில்லை. ஆகவே குடும்பக் கடன்களைப்பற்றிய எதிர்வாதம் பிரயோஜனமில்லை.

B-ஷெடியூலில் வாதிகுறித்திருக்கிற குடும்பத்திற்குச்சேரவேண்டிய நிலுவை பாக்கிவிஷயமாய் பிரதிவாதியின் வாக்குமூலத்தைத் தவிர அதற்கு ஒத்து அனுசரணையான சாட்சியம் கிடையாது. அந்த நிலுவைகளை பிராதுக்குமுந்தியே வசூலித்து, சீட்டுப்புள்ளிகளுக்குக்கொடுக்க வேண்டியபாக்கித்துகையைச் செலுத்திவிட்டதாகச்சொல்வதில் அந்த சீட்டுப்புள்ளிகளில் யாரும் சாட்சிகளாகவரவில்லை. அவர்களுடைய பெயரும் பிரதிவாதிக்குத்தெரியாதாம். தவிர சீட்டு 1902-ம் வருஷத்திலேயே க்ளோஸ் ஆகியிருக்க சீட்டுப்புள்ளிகளுக்கு 1908-இல் துகை செலுத்தப்பட்டிருக்கிறது. அப்படியானால் ஷை பாக்கி விஷயமாய் கணக்குகளிருந்திருக்கவேண்டும். ஆனால் கணக்குகள் யாதொன்றும் ஆஜர்படுத்தப்படவில்லை. ஆகவே மேற்படி நிலுவை பாக்கி விஷயமாய் பிரதிவாதியின் ஆக்ஷேபனை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. சப்கோர்ட்டார் அபிப்பிராயம் சரியே.

மூன்றாவதாக. பிரதிவாதியின் பேரில் ஆளைப்பொறுத்து டிக்கிரீயளித்தது பிசகென்று வாதிக்கப்பட்டது. வழக்கப்படி கோர்ட்டார் இவ்வித வியவகாரங்களில் நிலுவைகளை வசூலிக்கவும் கடன்களைத்தீர்க்கவும் ஒரு. ரிஸீவரை நியமிப்பார்கள். ஹிந்துக் குடும்பத்தலைவன் குடும்பக்கடனை வசூலித்து பாகஸ்தனுக்குறிய விகிதத்தைச் செலுத்தக்கடமைப்பட்டவனல்லன். அந்த விகிதத்திற்கு அவன் ஜவாப்தாரியாகமாட்டான் ஆனால் இந்தக்கேசில் பிரதிவாதி சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி தன் புத்திரனுக்கே துரோகம்செய்யும் பொருட்டு குடும்ப சொத்துக்களை மறைத்துவிட்டதாக ஏற்படுவதால் கோர்ட்டார் ரிஸீவரை நியமித்தபோதிலும் பிரதிவாதி நிலுவைகளை வசூலிக்கும் பொருட்டு செய்யவேண்டிய சகாயத்தையும் கொடுக்கமாட்டாரென்று தோன்றுகிறபடியால் அவரே நிர்ணயிக்கப்பட்டபடி, குடும்பசொத்துக்களின் சகல மதிப்புக்குறிய விகிதத்தை வாதிக்கு சமபாதியாகக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு அவர்மேல் ஆளைப்பொறுத்து டிக்கிரீயளித்தது சரியே.

மேற்கூறிய காரணங்களைச் சொல்லி ஹைகோர்ட்டார் பிரதிவாதியின் அப்பீலை செலவுடன்தள்ளுபடிசெய்தார்கள்.

—:O:—

(Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.)

கோதாவரி ஜில்லா.

S. A. Nos. 323, 433 & 434 of 1912

9—அக்டோபர் 1913.

*பித்தபுரம் ராஜா Vs கனி வெங்கடசுப்பராவ்*

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்ட் 189-வது பிரிவின்படி ஷை ஆக்ட் நமோதுக்கு வருவதற்கு முந்திய பசலிக்காக பாக்கி ஏற்பட்டதீர்வையை வசூலிக்கும் பொருட்டு பித்தபுரம்ராஜா அவர்கள் பாக்கி ஏற்பட்ட முதல், மூன்று வருஷங்களுக்குள் ஷை ஆக்டின் 210-வது பிரிவின்படி தாவா செய்யாததற்கு தாம் மைனராயிருந்தஅசந்தர்ப்பத்தைக்காரணமாகச்சொல்லி காலாவதி ஆக்டின் (Indian Limitation Act) 7-8-வது பிரிவுகளின்படி மேஜரான மூன்று வருஷங்களுக்குள் தாவா செய்யலாமென்ற சட்டமுறையை ஆதாரமாய்க்கொண்டு, ரெவினியூ கோர்ட்டில் ரயட்டுகளின்பேரில் தாவாசெய்தார். ரெவினியூ கோர்ட்டாரும் அதன்மேல் அப்பீலில் ஜில்லா கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக தீர்வைபாக்கி ஏற்ப

ட்ட மூன்று வருஷத்திற்குப்பின் பிராது தாகல் செய்யப்பட்டதால் ஷை ஆக்டின் 210-வது பிரிவின்படி காலாவதிதோஷமென்று தீர்மானித்து பிராதை டிஸ்மிஸ் செய்தார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் தாசிவய்யரவர்கள் பிராது காலாவதி தோஷமல்லவென்று அபிப்பிராயப்பட்டும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்கள் கீழ்கோர்ட் அபிப்பிராயம் சரியென்று தீர்மானித்து 2-வது அப்பீலைத்தள்ளுபடி செய்தார்கள்.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயரவர்களின் தீர்ப்புச்சுருக்கமாவது:—

பிராது எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டில் ஏற்பட்டிருக்கிற காலாவதிக்குப்பின் தாகல் செய்யப்பட்டதால் தள்ளுபடியாக வேண்டியது நியாயமே. ஷை ஆக்டின் 211-வது பிரிவில் தெளிவாக இந்தியன் லிமிடேஷன் ஆக்ட் 7, 8-வது பிரிவுகளில் மைனர்களால் செய்யப்படவேண்டிய வியாஜ்ஜியங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிற சிலாக்கியம் தீர்வை விஷயமாய்க் கொண்டுவரப்படும் பிராதுகளுக்குக் கிடையாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஷை எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்ட் நமோதுக்கு வருமுன் வாதிக்கு வியாஜ்ஜியம் செய்யும்படியான பாத்தியதை உற்பத்தியாய் விட்டபடியால் அவ்வித பாத்தியதையை நீக்கும்படியான வசனங்களாவது அல்லது கருத்தாவது ஷை ஆக்டில் காணப்படாதபடியால் அவ்வித பாத்தியத்தைக்கொண்டாடுவதற்கு அந்தபாத்தியதை உண்டானகாலத்தில் கிடைத்திருந்த காலாவதியை அனுசரித்து பிராது செய்யலாமென்று, அதாவது பழய முறைப்படி மைனர் நீங்கின மூன்று வருஷத்திற்குள் "பிராது செய்யலாமென்று வாதிக்காக எடுத்துப் பேசப்பட்டது, அதற்கு ஆதாரமாக (1912) M. W. N. 652, (1913 M. W, N. 303 & (1913) C. L. J. 316-ம் எடுத்துக்காண்பிக்கப்பட்டது. உற்பத்தியாகிற பாத்தியதைக்குக்குந்தகமில்லாமல் சட்ட முறையின் கருத்தானது அனுசரிக்கத்தக்கதாயின் அவ்வித பரத்தியதைக்குறிய பரிகாரத்தை இழந்துவிட நியாயமில்லை. ஆனால் தாவாகேசானது எஸ்டேட்ஸ்லாண்ட்ஸ் ஆக்டை அனுசரித்துக்கொண்டுவரப்பட்ட தீர்வை பாக்கிவியாஜ்ஜியம். அந்த ஆக்டில் ஸ்பஷ்டமாக காலாவதி குறிக்கப்பட்டிருக்கிறது; ஒரு ஸ்பெஷல் ஆக்டில் ஸ்பெஷலான காலாவதி ஏற்பட்டிருந்தால் பொதுவான காலாவதி ஆக்டின் அம்சங்கள் அந்த ஸ்பெஷலான பாத்தியதைத்தேடும்பரிகாரங்களுக்காக அனுசரிக்கத்தேவையில்லை. தீர்வை பாக்கி வியாஜ்ஜியத்திற்கு லிமிடேஷன் ஆக்ட் 7-வது பிரிவின் அம்சங்கள் ஏற்காதென்று 20 மதராஸ் 476-இல் தீர்மானிக்கப்பட்டு அதே அபிப்பிராயம் கல்கத்தா ஹைகோர்ட்டிலும் அனுசரிக்கப்பட்டிருகிறது. 17 கல்கத்தா 263-ஐப் பார்க்கவும்.

ஜமீன்தார்களுக்கும் ரயட்டுகளுக்கும் உள்ள தீர்வையைப்பற்றிய வியவகாரங்கள் நீடித்தகாலம் பைசலாகாதிருக்கும்வண்ணம் ஜமீன்தார்கள் தீர்வை பாக்கியை எவ்வித அசந்தர்ப்பம் நேரிட்டபோதிலும் பாக்கி ஏற்பட்ட மூன்று வருஷங்களுக்குள் வசூலித்துக்கொள்ளவேண்டுமென்று சட்டகர்த்தாக்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மைனர்கள் மேஜராக 21-வருஷக்களிருப்பதால் அவ்வளவு காலம் ரயட்டுகளின் தலைமேல் தீர்வைபாக்கி சுமத்தப்பட்டு மைனர் மேஜரானபிறகு ரயட்டின் மேல் மொத்தமாய் பிராதுசெய்ய இடங்கொடுக்கப்பட்டால் அது அதிக ஹிம்சையான நடத்தையாகும். குடிகள் சாகுபடிசெய்யும் செல்வுக்காகத் துகை தயாரித்துவைத்துக்கொள்ளும் சவுகரியத்தை வருஷாவருஷம் தேடிக்கொண்டால் போனதாகும். அப்படியிருக்க 20 வருஷங்கள கழித்து பழய தீர்வைகளை மொத்தமாய் வசூலிக்கப்பிரயத்தனப்படும் மேஜர் ஜமீன்தாருக்குக்கொடுக்கும் துகைசேகரிக்கும் கஷ்டத்தை நீக்குவதற்காகவே சட்டகர்த்தாக்கள் மேற்கண்டவிதமாய் மூன்றுவருஷகாலாவதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். பொதுவாய் மைனர் ஜமீன்தார்களுடைய சொத்துக்கள் கோர்ட் ஆப் வார்ட்ஸ்களுடைய மானேஜ்மென்டிலிருப்பதாகும். அப்படியிருக்க கோர்ட் ஆப் வார்ட்ஸ் பாக்கி தீர்வையை வசூலிக்க முடியாமல் விட்டபிறகு வார்ட் மேஜரானதும் ரயட்டுகளை ஹிம்ஸித்து மைனர்காலத்தில் பாக்கி விழுந்த துகையையும் வசூலிக்கும்படி இடங்கொடுப்பது அதிக கொடுமையாகும்.



ஆகவே வாதியின் பிராது காலாவதிதோஷம் என்ற கீழ்கோர்ட்டார் அபிப்பிராயம் சரியானதென்று ஏற்பட்டது.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் எஸ்டேட்ஸ்லாண்டு ஆக்டின் 210-வது பிரிவின்படி, முன்னோக்கத்தில் வாதியின் பிராது காலாவதி தோஷமாக தீர்மானிக்கப்படலாமென்று சொல்லியும் அந்த அபிப்பிராயத்திற்கு விரோதமாக 1912-ம் வருஷத்திய வாரக்குறிப்பின் 659-இலும் 1913-ம்வருஷத்திய வாரக்குறிப்பின் 303-இலும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் செய்திருக்கிற பைசல் தீர்மானம் ஊர்ஜிதமானபடியால் அந்த ஊர்ஜித அபிப்பிராயத்தை அனுசரிக்க மனமுடையவர்களாகவும் (1905) A. C. 369-இலும் (1913) M. W. N. 131, 470-இலும் பிரிவிகௌன்ஸிலார் குறித்துக் காண்பித்திருக்கிற முறைப்படிக்கு, ஹைகோர்ட்டில் இரண்டு நியாயாதிபதிகள் செய்த தீர்மானத்தில் எவருடைய அபிப்பிராயம் காயமாகிறதோ அதைப்பின்னால் அனுசரிக்கக்கடமையாகுமென்றும் சொல்லி வாதியின் பிராது காலாவதியல்லவென்று (அதாவது ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்களுடைய அபிப்பிராயப்படி ஆக்ட் நமோதுக்கு வருவதற்குமுந்திய பசலிகளுக்குறிய பாக்கியை வசூலிக்க பழய காலாவதி ஆக்டின் முறைகள் அனுசரிக்கத்தக்கனவென்று) அபிப்பிராயப்பட்டார்கள்.

கடைசியில் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்களுடைய அபிப்பிராயம் காயமாகி வாதியின் அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

———:C:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்)

ராமனாதபுரம் ஜில்லா.

C. R. P. No 953 of 1912-4 நவம்பர் 1913.

ராமனாதஞ் செட்டியார் என்கிற

ராமசாமி செட்டியார்,

*Vs.*

கதிரேசன் செட்டியார் வகையரா.

வாதிக்கு 1-ம் பிரதிவாதியின்பேரில் ஏற்பட்டிருக்கிற வியாஜ்ஜிய மூலத்தின்படி மற்றும் சிலர்கள்பேரிலும் பரிகாரம் தேடலாமென்றும் பிராதைப் படித்துப்பார்த்த ராமனாதபுரம் சப்கோர்ட்டாருக்குத் தோன்றினபடியால் அவர்களையும் பிரதிவாதிகளாய்ச்சேர்த்து பிராதைத் திருத்திக் கொடுக்கும்படி வாதிக்கு உத்தரவளிக்கப்பட்டதின்பேரில் வாதி 12-பேர் வழிகளைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுப் பிராதைத்திருத்திக்கொடுத்தார்கள். திருத்தல் உத்தரவுசெய்த ஜட்ஜியவர்கள் மாற்றப்பட்டு அவருக்குப் பதிலாய்வந்த ஜட்ஜியவர்களின்முன் சம்மன்ஸ்பெற்ற பிரதிவாதிகளிலநேகர் தங்களைப் பார்ட்டிகளாய்ச்சேர்த்தது பிசகென்றும் சட்ட விரோதமென்றும் ஆக்ஷேபிக்கவே, கோர்ட்டார் ஆக்ஷேபனை விஜாரணையின்பேரில்:—

"1-ம் பிரதிவாதியின்பேரில் வாதிக்கு ஏற்பட்ட வியாஜ்ஜியமூலத்தில் ஒருபாகத்தைப் பற்றினமட்டில் 2, 3, 4-ம் பிரதிவாதிகளும் சேர்ந்து உத்தரவாதம் சொல்லக் கடமைப்பட்டவர்களாவார்கள்; ஷை வியாஜ்ஜியமூலத்தின் மற்றொரு பாகத்தைப்பற்றினமட்டில் பிரதிவாதியுடன் 8 முதல் 12 பிரதிவாதிகளும் சேர்ந்து சமாதானம் சொல்லக்கடமைபட்டவர்களாகிறார்கள். ஆனால் 2; 3, 4-ம் பிரதிவாதிகளுக்கும் 8, 9, 10, 11, 12-ம் பிரதிவாதிகளுக்கும் பொதுவான வியாஜ்ஜியமூலத்தைப்பற்றிய எதிர்வாதம் கிடையாதபடியாலும் ஸி. பி. ஸி. ஆர்டர் 1-ரூல் 3 இன்படி ஒரே நடவடிக்கையில் அவர்கள் எல்லோரும் சம்பந்தப்படாத காரணத்தால் அவர்கள்பேரில் ஒரே பரிகாரம்தேட பாத்தியதை ஏற்படாதபடியாலும், அவ்விருதரத்தாரையும் ஒட்டாக 1-ம் பிரதிவாதியுடன் பார்ட்டிகளாய்ச்சேர்த்து வியாஜ்ஜியம் நடத்தக்கூடாது. ஆகையால் வாதி இருதரத்தாரில் தனக்கு இஷ்டமான ஒருகக்ஷிப் பிரதிவாதிகளை மட்டும் 1-ம் பிரதிவாதியுடன்சேர்த்து வியாஜ்ஜியம் நடத்தி மற்றொரு கக்ஷிப் பிரதிவாதிகளைப் பிராதிலிருந்து விலக்கிவிடவேண்டும்" என்று உத்தரவளித்தார்கள். அதாவது 2, 3, 4-ம் பிரதிவாதிகளையாவது. 8 முதல் 12 பிரதிவாதிகளையாவது விலக்கி பிராதைத் திருத்திக்கொடுக்க வேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது. வாதி தனக்கு சவுகரியம்போல் எந்த கக்ஷியின்பேரிலும் பரிகாரம் தேடக்கூடிய விதமாய் எல்லாப்

பிரதிவாதிகளும் ரிகார்டிலிருக்கவேண்டுமென்று உத்தேசித்து சப்கோர்ட்டார் செய்த உத்தரவின் பேரில் ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுக்கொடுத்ததில் ஷை மனு தள்ளுபடியாகி சப்கோர்ட்டாருடைய உத்தரவு காயமாச்சுது.

ஹைகோர்ட் உத்தரவின் முக்கியமான கருத்தாவது:—

சப்கோர்ட்டார் முதலில் சில பிரதிவாதிகளைச் சேர்த்துப் பிராதைத் திருத்தும்படி உத்தரவளித்தபிறகு மாற்றுதலின்பேரில் வந்த வேறொரு ஜட்ஜியவர்கள் அப்படிச்சேர்க்கப்பட்ட பிரதிவாதிகளில் சிலர்களை விலக்கும்படி உத்தரவளிக்க அதிகாரவரம்பில்லையென்று வாதிக்கப்பட்டது. ஆனால் முதல உத்தரவில் ஒரு கக்ஷிப் பிரதிவாதிகளை ஷை யார்களுடைய தகவலன்னியில்சேர்க்கும்படி சொன்னதின் கருத்தாவது ஷை யார்கள் ஆஜராகி ஆக்ஷேபனைசெய்தால் அதை விஜாரித்துப்பைசல் செய்யலாமென்ற முறையை நடத்த உத்தேசிக்கப்பட்டதாகவே தீர்மானிக்கவேண்டும். அப்படியிருக்க பிந்திய உத்திரவில் அவ்வித ஆக்ஷேபனையை எடுத்துக்கேட்டு உத்தரவளிக்க கோர்ட்டாருக்கு அதிகார வரம்பில்லையென்று சொல்லக்கூடாது. ஆனால் கோர்ட்டார் ஆக்ஷேபனை விஜாரணையின்பேரில் செய்த தீர்மானம் ஒழுங்கீனமா என்று பார்க்குமிடத்து அவ்வித ஒழுங்கீனமும் வாதிக்கு அனுகூலமாகவே ஏற்படுகிறது. ஸி. பி. ஸி. ரூல் 1-ஆர்டர் 10-இல் சொல்லியிருக்கிறபடி பிசகாய் யாதொருவரைப்பார்ட்டியாகச்சேர்த்திருந்தால் அவர்கள் பெயரை பிராதிலிருந்து எடுத்துவிட கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. அப்படியிருக்க வாதிக்கு கோர்ட்டார் தன் இஷ்டம்போல் பிரதிவாதிகளில் எந்த கக்ஷியையாகிலும் எடுத்துவிடலாமென்ற ஒரு சவுகரியத்தைக் கொடுத்திருக்க அந்த உத்தரவை வாதி ஆக்ஷேபிக்கலாமா? ஷை உத்தரவின்படி வாதி நடக்காவிட்டால் கோர்ட்டரே ரூல்படிக்கு 2, 3, 4-ம் பிரதிவாதிகளையாவது, 8, 9, 10, 11, 12-ம் பிரதிவாதிகளையாவது தங்கள் யுக்தம்போல் நீக்கிவிடலாமே. ஆகவே வாதிக்குக்கொடுத்த சவுகரியம் ரூலில் ஏற்படாத ஒழுங்கீனமாயினும் அது வாதிக்கு அனுகூலமானதால் ஷை உத்தரவைரத்து செய்யத்தக்க அவ்வளவு பெரிய பிசகென்று தீர்மானிக்கக்கூடாது. தவிர பிரதிவாதிகளில் இருகக்ஷிக்கும் ஒரேவித வியாஜ்ஜியமூல சமாதானமில்லையென்றதால் ஆர்டர் 1-ரூல் 3-இன் அம்சம் பொருந்தாதென்ற கோர்ட்டார் அபிப்பிராயம் சரியாயிருந்தால் மேற்படி உத்தரவு ஒழுங்கீனமாகாது. அந்த அபிப்பிராயம் பிசகா அல்லவா என்று இந்த ரிவிஷன் மனுவில் தீர்மானிக்க நியாயமில்லை.

ஆகவே சப்கோர்ட்டார் உத்தரவை மாற்றும்படி கொடுத்த ரிவிஷன் மனுசெலவுடன் தள்ளுபடியாச்சுது.

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

**தஞ்சாவூர்.**

**C. R. P. 1032 of 1912–15 அக்டோபர் 1913**

ரங்கசாமி அய்யங்கார்—வாதி, மனுதார்.

கும்பகோணம் சப் கோர்ட்டில் வாதிசெய்த ஸ்மால்காஸ் தாவாவில் வாதிக்கு பிரதிகூலமாய்த் தீர்மானிக்கப் பட்டதின்பேரில் ஹைகோர்ட்டில் வாதி ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்து நான்கு விதமான க்ரௌண்டுகளை எடுத்து வாதாடியதில் பிரயோஜனமில்லாமல் ரிவிஷன் விண்ணப்பம் தள்ளுபடியாச்சுது. தீர்ப்பின் சுருக்கமாவது:—

பிரதிவாதி வாதியைத் தனக்கு சாட்சியாய்க் கோறி விஜாரணைசெய்தது 31 அலகபாத் 122-இல் பிரிவி கௌன்ஸிலார் கொடுத்த அபிப்பிராயத்திற்கு விரோதமாயிருப்பதாகச் சொல்லப்பட்டது. பிரிவி கௌன்ஸிலார் எதிரியை சாட்சியாகக் கோறுவது மிகவும் அயுக்தமானதாக அபிப்பிராயங் கொடுத்தபோதிலும் அது சட்டவிரோதமான முறை என்று தீர்மானிக்கவில்லை. வாதியை பிரதிவாதி சாட்சியாகக் கோறினபடியால் வாதி அந்த ஸ்தானத்திலிருந்து கொடுத்தவாக்குமூலங்களுக்கு பிரதிவாதி கட்டுப்பட்டவராகவேண்டும், அதாவது ஒரு பார்டி தன் தரப்பு சாட்சியத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று ஏற்படுவதாகச் சொல்லப்பட்டது. ஆனால் கோர்ட்டார் வாதியை பிரதிவாதியின் அனுகூல சாட்சியாக எடுத்துக்கொள்ளாமல் பிரதிகூல சாட்சியாகபாவித்து, (Hostile witness) அப்படிபாவித்து பிரதிவாதி வாதியை குறுக்கு விஜாரணைசெய்ய லாயக்குண்டென்று தீர்மானித்து ஷை யாரின் வாக்குமூலத்தைக் கோர்ட்டார் தீர்மானம்அடைவதற்காக உபயோகப்படுத்தி யிருக்கிறார். கோர்ட்டார் அப்படி தீர்மானித்து நடந்தது மிகவும் நியாயமானவழி யென்று சொல்லவேண்டும். பிரதிவாதியின் தாயாரைக் கலந்துகொண்டு வாதி பிரதிவாதிக்குக் கடன் கொடுத்தாரா என்ற விஷயத்தைப்பற்றி கோர்ட்டார் தீர்ப்பில் ரிகார்டுக்கு விரோதமாய்ச் சொல்லியிருப்பதாயும் ஆகையால் ஷை தீர்ப்பின் முடிவு பிசகென்று தீர்மானிக்கப் படவேண்டுமென்று வாதிக்கப்பட்டது. அது ஒரு அற்பமான தவறுதலாகும். அதினால் கோர்ட்டார் ரிகார்டுகளையும் வாக்குமூலங்களையும் கவினியாமல் தீர்மானம் செய்திருப்பதாக சொல்லக்கூடாது. பிரதிவாதியின் ஆக்ஷேபணைகள் ஒன்றுக்கொன்று இசைவில்லாமல் விபரீதமாயிருப்பதாய்ச் சொல்லப்பட்டது. இவ்விதமான தாவாக்களில் கோர்ட்டார் அதிகஜாக்கிரதையாக பிரதிவாதியின் எதிர் ஆன்ஸர்களை ரிகார்டு செய்யாதவழக்கம் விசாரிக்கத்தக்கதாயினும் இந்தக் கேசில் கோர்ட்டார் வாதிக்குப் பிரதிகூலமாய் செய்த தீர்ப்பின் அம்சங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாயில்லை. தெளிவான காரணங்களால் முடிவு சொல்லியிருக்கிறார். ஆகையால் மேற்கூறிய க்ரௌண்டுகளை கவனித்து மறுவிஜாரணைக்கு உத்தரவளிப்பது வியர்த்தமாகும்.



———;O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

& ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

**திருச்சிறப்பள்ளி ஜில்லா.**

**S. A. No. 721 of 1912 - 4 நவம்பர் 1913**

கந்தசாமி கவுண்டன் *Vs* கருப்பகவுண்டன்.

குளித்தலைத்தாலூகாவில் ஒரு கிராமத்தில் நத்தம்புரம்போக்கிலிருந்து கால்வாய்ப்புரம்போக்குமட்டும் ஓடுகிற ஒரு நடபாதைவழியாய் வாதி தன் நிலத்திற்கு தானும் தன் முன்னோர்களும் வாலாயமாய்ச் சென்றமையால் அந்த நடபாதையானது வாதியினுடைய சொந்த உபயோகத்திற்காக ஏற்பட்ட நடபாதை என்று சொல்லி வாதியின் நிலத்தண்டையில் வாதிக்குத் தடங்கல் செய்யும் வண்ணம் பிரதிவாதிகள் கட்டிக்கொண்டதால் வாதி அவ்விதத்தடையை எடுத்துவிடச்செய்து அந்தப்பாதை தன் சொந்தப்பாதையென்று தீர்மானிக்கப்பட வேண்டுமென்று முன்சிப்கோர்ட்டில் அசல்தாவா செய்ததில் அங்கும் அப்பீல் கோர்ட்டிலும் வாதிக்கு பிரதிகூலமாகப் பிராது தள்ளுபடியாச்சுது. அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யமேல அங்கும் அதேவிதமாய் தீர்ப்பாகி 2-வது அப்பீலும் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:::

ஷை பாதைவழியாய் கிராம ஜனங்கள் வெகு காலமாய்த் தங்கள் பிரேதங்களை ஸ்மசானத்திற்கு (சுடுகாட்டுக்கு)க்கொண்டுபோவது வழக்கமென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. அப்படியிருக்க அந்தப்பாதையை வாதியின் குடும்பத்திற்குப் பிரத்தியேகமான பாத்தியதையுடைய சொந்தவழியெனச்சொல்லக்கூடாது. பாதை பொதுவானதாக யிருந்தபோதிலும வாதி தன்னுடைய நிலத்திற்குப் போகும் பாத்தியதையை தன் சொந்த பாத்தியதையாய் கொண்டாடி அதற் இடையூராக நட்டப்பவர்கள் மீது பரிகாரம் தேடவேண்டுமானால் தனக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தைப்பற்றி தெளிவாய்ப் பிராதில் சொல்லியிருக்கவேண்டும். (1913) M. W. N; (1901) C. W. N. 285, 5 பம்பாய் 116, 31-அலகபாத் 444-இன் தீர்மானங்களைப்பார்க்கவும். இந்தப்பிராதில் வாதி தனக்கு யாதொரு நஷ்டம் உண்டானதாகச் சொல்லவில்லை. பின்னால் தனக்கு நஷ்டம் ஏற்படுமென்றுமட்டும் பிராதின் 9-வது பாராவில் சொல்லியிருக்கிறது. அவ்விதமான பிராது செல்லத்தக்கதல்ல. ஆகவே வாதியின் பிராது தள்ளுபடியானது சரியே."

———:O:———

Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்)

சேலம் ஜில்லா.

## Crl. R. Case. 636 & R. Petition 517 of 1913 --21 அக்டோபர் 1913.

கோவிந்த செட்டி வகையரா-மனுதார்கள்

சேலம் டவுன் சப்மாஜிஸ்டிரேட்டாரவர்கள் கிரிமினல் புரொஸிஜர்கோட் 144-வது பிரிவின்படி 1913 மே 2உ-ல் பட்டகர் மெரவணையை (ஊர்கோலத்தை) நடத்தக்கூடாதென்று தடை செய்துவிட்டார்கள். ஷை உத்தரவானது பிறந்த இரண்டுமாதங்களுக்குத்தான் செல்லும். அதன்பின் அந்த உத்தரவு ரத்தானதாக பாவிக்கப்படவேண்டும். ஷை உத்தரவு பிறந்த இரண்டுமாதகாலம் கடந்த உடன் சப்மாஜிஸ்டிரேட்டாரவர்கள் பழய உத்தரவை 1913 ஜுலை 3உ முதல் பின்னும் இரண்டு மாதங்களுக்குச் செல்லும்படி புதிப்பித்த பாவனையாக உத்தரவளித்தார்கள். அவ்வித உத்தரவு சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்று ஷை உததரவால் தடைபட்ட மனுதார்கள் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு செய்துகொண்டதில் அங்கு மாஜிஸ்டிரேட்டாருடைய பிந்திய உத்தரவு பிசகென்றும் அதிகாரவரம்பில்லாமல் அளிக்கப்பட்டதென்றும் 144-வது பிரிவில் சொல்லியிருக்கிற முறைகளின்படி அந்த உத்தரவு ஏற்பட வில்லையென்றும் முதல் பிறந்த உத்தரவு இரண்டுமாதத்திற்குப்பின் நமோதிலிருக்கவேண்டியது அவசியமாய்த்தோன்றுமிடத்து டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் கவர்ன்மெண்டுக்கெழுதி அனுமதிபெற்று ஜில்லா கெஜட்டில் விளம்பரமூலமாய் அந்தத்தகவலை பயிரங்கப்படுத்தியிருக்கவேண்டுமென்றும், ரிவினியூ செய்யவேண்டுமெனக் கோறப்படும் உத்தரவில் சட்டப்படி சொல்லவேண்டிய விபரங்கள் ஒன்றும் காணப்படவில்லையென்றும், ஷை உத்தரவு தொடர்ந்து நமோதிலிருப்பதற்கு அவசரமான முகாந்தரங்கள் யாதொன்றும் குறிக்கப்படவில்லையென்றும், அந்த உத்தரவுக்காதாரமான மற்ற ரிகார்டுகளிலாவது அந்த விவரங்கள் சொல்லப்படவில்லையென்றும் சொல்லி ஹைகோர்ட்டார் ஷை உத்தரவை சட்டவிரோதமென்று ரத்து செய்துவிட்டார்கள்.

---:O:---

(Messrs ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிக் டையாப்ஜி

தஞ்சாவூர் ஜில்லா.

## S. A. 533 of 1911-18 செப்டம்பர் 1913.

கோனேரி சௌகன் *Vs* குமரப்புடையான்.

வாதி தாவா சொத்துக்களை பிரதிவாதிகளின் முன்னோர்களிடத்தில் சுமார் 50 வருஷங்களுக்குமுன் ரூ. 200-க்கு ஒத்தியடமானமாகவைத்து 7-வருஷ கெடுவுக்குள் மீட்டுக்கொள்ளவேண்டியதாய் ஒப்பந்தமானதாகச்சொல்லி திருவாடி டி. மு. கோர்ட்டில் 1-2 பிரதிவாதிகளின் மீது ஷை ஒத்தியை மீட்டுக்கொள்ளும்பொருட்டு ஷை சொத்துக்களைச்சுவாதீனமடையும்பொருட்டு 1909-ம் வருஷத்தில் அசல்தாவாசெய்தார். பிரதிவாதிகள் தாவா சொத்துக்கள் தங்கள் பூர்வீக சொத்துக்களென்றும் தாங்களே அதைநெடுங்காலமாய் அனுபவித்துவருகிறதாயும் வாதியின் குடும்பத்தாருக்கு அதில் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும் தாவா ஒத்தி உண்மையானதல்லவென்றும் வாதிக்கு யாதொரு பரிகாரமும் அளிக்க நியாயமில்லையென்றும் எதிரி ஆன்ஸர்கொடுத்தார். முனிசீப்கோர்ட்டாரும் அப்பீல்ஜில்லாகோர்ட்டாரும்ஒரே அபிப்பிராயமாக தாவா ஒத்தியைப்பற்றி வாதி சரியானபடி ருஜுப்படுத்தவில்லையென்றுசொல்லி வாதியின் பிராதை செலவுடன் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல்செய்ததில் அங்கும் வாதிக்குப்பிரதிகூலமாக அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:—

தாவா சொத்துக்கள் வாதிகளுடையதா அல்லது பிரதிவாதிகளுடையதாவென்றும் வாதிக்கு பாத்தியப்பட்டதானால் தாவா ஒத்தி நிஜமா அல்லவா, ஒத்தி நிஜமானால் வாதி அதை மீட்டுக்கொள்ள லாயக்குள்ளவரா என்று தீர்மானிக்கவேண்டியதுதான் இந்தக்கேசின் முக்கியமான அம்சம். ஆகையால் பிராதில் கண்டிருக்கிற அடமான விவரங்களுக்கு இசைவானபடி தாவா



சொத்துக்களின் ஒத்தி அனுபோகத்தை ருஜுப்படுத்தாவிட்டால் வாதிக்கு இந்த தாவாவில் யாதொரு பரிகாரமும் கிடையாதென்று சொல்லக்கூடாது.

பிராதில் சொல்லியிருக்கிற விவரத்திற்கு ஒத்தபடி வாதி ஒரு அடமானத்தைப்பற்றி வாய்மொழி ருஜு அம்சமளித்தார். ஆனால் அவருடைய வாக்குமூலத்தை கீழ்கோர்ட்டார்கள் நம்பத்தக்கதல்லவென்று சொல்லுகிறார்கள். வாதிக்காக ஒரு தஸ்தவேஜு தாகல்செய்யப்பட்டது. அந்த A-ஆதரவில் பிரதிவாதிகளின் தகப்பனார் தாவா சொத்துக்களில் சிலவற்றை வேறொருவருக்கு அடமானம்செய்து பிராதில் கண்டிருக்கிற 5 அயிட்டங்களில் 2-வது அயிட்டம் சொத்தையும் ஷை அடமானத்தில் குறித்துக்காண்பித்து அந்த அயிட்டம் ஒருமுன் அடமான வில்லங்கத்திலிருப்பதாக சொல்லியிருக்கிறார். அந்த வசனங்களால் பிரதிவாதிகள் தாவா அடமானத்தை ஒப்புக்கொண்டபாவனையாகிறதென்று வாதிக்காக சொல்லப்பட்டு அந்த வசனத்தின் கருத்தை கீழ்கோர்ட்டார் சரியானபடி அர்த்தங்கொண்டு தீர்மானத்திற்கு வராதபடியால் அதைப்பற்றி அபிப்பிராயங்கொடுத்து பைசல் செய்யும்படிக்கு கேசை கீழ்கோர்ட்டாருக்கு ரிமாண்டு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஏ-ஆதரவில் பிரதிவாதியின் தகப்பனார் ஒத்தியை ஒப்புக்கொண்டபாவனையாக வாதிக்கனுகூலம் செய்யவேண்டியதற்கு 27 பம்பாய் 271-ஐ ஆதாரமாக எடுத்துக்காண்பிக்கப்பட்டது. ஏ-ஆதரவில் 2-வது அயிட்டம் வாதியிடம் ஒத்திக்கு வாங்கப்பட்டதாகச் சொல்லப்படவுமில்லை. அல்லது ஷை ஆதரவு பிறந்த தேதியில் அந்த ஒத்தி தீராமலிருந்ததாகத்தெளிவான வசனங்களும் அந்த ஆதரவில் காணப்படவில்லை. 18 மதராஸ் 462-இலும் 8 பம்பாய் 543-இலும் ஒரு குறித்த அடமான வில்லங்கத்தைப்பற்றி யாதொருவன் ஒப்புக்கொண்டிருந்தால் அதை ஆதாரமாக எடுத்துக்கொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஏ-ஆதரவில் பிரதிவாதிகளின் தகப்பன் ஒப்புக்கொண்டவிஷயம் பிராதில்கண்ட சொத்துக்களைப்பற்றிய குறித்த ஒத்தி வில்லங்கமென்று நிதானிக்கக்கூடாது. ஆகவே வாதியின் ஒத்தி பாத்தியதை ருஜுவானதாக ஏற்படவில்லை. வாதியின் தாவா தள்ளுபடியானது சரியே.

---:O:---

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

கோதாவரி ஜில்லா.

## S. A. No. 1376 of 1912--1 ஆகஸ்ட் 1913.

ஸ்ரீபுச்சி ஸூரவகாருடு *Vs* வெங்கடராஜு

1908-ம் வருஷம் ஜுலையீ நமோதுக்குவந்த மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டில் விவரித்திருக்கிறபடி எஸ்டேட் நிலங்கள் பற்பல தினுஸுகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றன:— (1) மிராசுதாருடைய சொந்த அனுபோகத்திலிருக்கும் நிலங்கள் கம்பட்டம், காஸ், சீர், பண்ணை என்ற பெயர்களால் வழங்கும் ப்ரைவேட்நிலங்கள் (Private lands); (2) குளத்தங்கரை, களம், கிராமநத்தம் முதலிய கிராமத்தாருக்குப் பொதுவான உபயோகத்திற்காகப் பிரத்தியேகமாய் வைக்கப்பட்டிருக்கிற நிலங்கள் (3) ஊழிய இனாம் நிலங்கள், அதாவது மிராசுதாருக்கு சில குறித்தவேலைகளைச்செய்துவருவதற்கு பதிலாக தீர்வையில்லாமலாவது அல்லதுகுறைந்ததீர்வை விகிதத்திற்கு அனுபவிக்கும்படி விடப்படும் எஸ்டேட் நிலங்கள்; (எஸ்டேட்ஸ் ஆக்ட் நமோதுக்கு வந்தபிறகு தீர்வையில்லாமலே மேற்கூறிய ஊழிய இனாம் நிலங்கள் அளிக்கப்பட வேண்டும். ஊழியம் செய்துவருமட்டும் ஷை இனாம் அனுபோகம் நிலைத்திருக்கவேண்டுமே). (4) மேற்கூறிய மூன்றுவகையான நிலங்களல்லாத சாகுபடிக்கு லாயக்கான எஸ்டேட் நிலங்கள், ரயிடி நிலங்களென்று சொல்லப்படுகிறது. அதாவது குடிவார அந்தஸ்துள்ள நிலங்கள்; (5) முதலாம்வகையான ப்ரைவேட் நிலங்களல்லாத பழய தரிசென்று அழைக்கப்படும் எஸ்டேட் நிலங்கள்; இவைகளில் மிராசுதார்களுக்கு சுவாதீன பாத்தியதையுண்டு. ஆக்ட் நமோதுக்கு வருமுன் தொடர்ச்சியாய் 20 வருஷ காலம், அல்லது அதற்கு பிந்தியாகிலும் பின்

னும் முன்னுமாகிலும் தொடர்ச்சியாய் 10 வருஷகாலம் மிராசுதாருடைய ஆதீனத்திலும் சுவாதீனத்திலுமிருந்து அந்தக்காலங்களில் சாகுபடி செய்யப்படாமல் தரிசாய்க்கிடக்கும் எஸ்டேட் நிலங்களும்மிராசுதாரரால்ஒப்படைக்கப்பட்டால் அவைகளைப் பழயதரிசு நிலங்களாகவே பாவிக்க வேண்டும்.

ஒப்படைப்புக்காலத்தில் அதற்குமுன் தொடர்ச்சியாய் குடிவார பாத்தியதையன்னியில் 10 வருஷகாலமிருக்கிற நிலங்களையும் பழய தரிசென்று சொல்லவேண்டும். அல்லது ஆக்ட் நமோதுக்குவருமுன் சரியான அதிகார வரம்புள்ள கோர்ட்டில் குடிவாரபாத்தியதை யாருக்கும் கிடையாதென்று பைசல் டிக்கிரீபெற்றிருந்தாலும், அவ்வித டிக்கிரீதேதிக்குப் பிறகாவது யாரும் குடிவார பாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்ளாமலிருந்தபோதிலும் அத்தகைய நிலங்களை பழயதரிசென்று அனுமானிக்க வேண்டும்.

மேல்கண்ட விதமாய் எஸ்டேட் நிலங்கள் பிரிக்கப்பட்டிருக்க, வாதி, தாவா நிலம் பழய தரிசென்று சொல்லி 1904-ம் வருஷத்தில் ஐந்து வருஷத் தீர்வைக்குத்தகைக்குப் பிரதிவாதியிடம்ஒப்படைத்திருந்த ஷை நிலத்தைச்சுவாதீன மடையும்பொருட்டு கோதாவரி ரெவினியூ கோர்ட்டில் பிரதிவாதியின்பேரில் இஜெக்ட்மெண்டு பிராது செய்தார். பிரதிவாதியோ தான் தாவா நிலத்தில் மேற்கூறிய ஒப்படைப்பு பத்திரத்தின்படி சுவாதீனமடைந்து மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட்ஆக்ட் 1908 ஜூலை 1உ யில் நமோதுக்குவரும் காலத்திலும் அந்த சுவாதீனத்தை நிர்வகித்து வந்தமையால் ஷை ஆக்டின் 6-வது பிரிவின்படி தனக்கு ஷை நிலத்தில் குடிவாரபாத்தியம் 1908 ஜூலை 1உ யில் உண்டாய் விட்டதென்றும் ஆகையால் வாதி இனிதன்னை அப்புரப்படுத்த சட்டமில்லையென்றும் எதிர்வாதம் செய்தார். ரெவினியூகோர்ட்டாரும், அப்பீல்ஜில்லாகோர்ட்டாரும், ஒரே அபிப்பிராயமாக தாவா நிலத்திற்கு பிரதிவாதி குடிவார பாத்தியதை அடைந்துவிட்டதாகத் தீர்மானித்து வாதியின் தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் மிராசுதார் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யவே அங்கும் அதே தீர்மானமாகி 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது.

ஹைகோர்ட் தீர்மானத்தின் சுருக்கமாவது:—

"ஆக்டின் 23-வது பிரிவின்படி ஒரு எஸ்டேட்நிலம் பழயதரிசென்று ரூபகாரப்படுத்துமட்டும் பழயதரிசல்லாத குடிவார அந்தஸ்துள்ள நிலமென்றே அநுயூகிக்கப்படவேண்டும். ஆகையால்தாவா நிலம் பழயதரிசாய்நிதானிக்கப்படவேண்டிய சாகுபடிக்கு லாயக்கான நிலமா, அல்லது பழயதரிசல்லாத குடிவார அந்தஸ்துள்ள நிலமாவென்று தீர்மானிக்கப்படவேண்டியது இந்தக்கேசில் முக்கியமான இஷ்யூ பாயிண்டாகிறது. தாவாநிலம் பழய தரிசல்லாவிடில் 6-வது பிரிவின்படி பிரதிவாதி, ஆக்ட் நமோதுக்கு வரும் தேதியில் சுவாதீனமுடையவனாகயிருந்தமையால் பிரதிவாதிக்குக் குடிவார பாத்தியதை உண்டாய் விட்டதாகும். அப்படியானால் வாதிக்கு அவனை விலக்க சட்டமில்லை.

தாவாநிலம் 10 வருஷகாலம் தொடர்ச்சியாகத் தரிசாய் சாகுபடிசெய்யப்படாமல் கிடந்ததாக சொல்லப்படவில்லை. வாதியாகிலும் அவருடைய முன்னோராகிலும் தொடர்ச்சியாக ஒப்படைப்புக்குமுன் 10 வருஷகாலம் சுவாதீனமடைந்திருந்தவர்களாயும் ஏற்படவில்லை. அல்லது வாதி கோர்ட்மூலமான டிக்கிரீபெற்று எவருக்கும் குடிவார பாத்தியதை கிடையாதென்று ஷை ஆக்ட் நமோதுக்கு வருமுன்னாகிலும் ஸ்தாபித்துக்கொள்ளவில்லை. ஆகவே தாவா நிலம் பழயதரிசென்று ஸ்தாபிக்கிறதற்குறிய அம்சங்கள் யாதொன்றும் வாதியால் ருஜூப்படுத்தப்படவில்லை.

ஆக்டின் 153-வது பிரிவுக்கு 1909-ம் வருஷத்தில் ஒரு அங்கம் சேர்க்கப்பட்டது. அதில் ஒரு குறித்தகாலத்திற்கு ஒப்படைப்பின்பேரில் சுவாதீன மடைந்தவனை ஷை கெடுவு தீர்ந்தவுடன் அப்புறப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது. ஷை கெடுவுக்குள் 6-வது பிரிவின்படி குடிவார பாத்தியம் ஏற்பட்டுப்போகும் விஷயத்தில் மேற்படி புதிய அங்கம் பயனற்றதாகுமென்று வாதிக்காகச் சொல்லப்பட்டது. ஆனால் ஷை அங்கமானது 6-வது பிரிவின் 3, 4, 5, வது உட்பிரிவின்படி நிலத்தை அனுபவிக்கிறவர்கள் விஷயமாய் உபயோகப்படுத்தும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக நிதானிக்கவேண்டும். பழய தரிசை சிற்சில நிபந்தனைகளின்படி மிராசுதார் ஒப்படைத்தாலும், கால்நடை மேய்ச்சலுக்காக ஒப்பந்தத்தின்பேரில் பழய தரிசுகள் ஒப்படைக்கப்பட்டாலும் பாரஸ்ட் இலாகாவாகப் பிரித்துவைக்க வேண்டுமென்ற நிலத்தை சொற்ப காலத்திற்கு சாகுபடிக்காக ஒப்படைத்தாலும் மிராசுதார் வேலைக்காரர்களுக்கு 30-வருஷத்திற்குள்ளான காலத்திற்கு நிலங்களை எழுத்துமூலமாய் யாருக்கும் குடிவார பாத்தியதை நிலைக்காதவண்ணம் ஒப்பந்தத்தின்பேரில் சுவாதீனப்படுத்தியிருந்தாலும் அவ்விதமான நிலங்களைத் திரும்பியடைய மிராசுதாருக்கு பாத்தியதையானது வேறுசட்டமுறைகளால் கெடாதென்ற கருத்தாய் மேற்கூறிய புதுஅங்கம் 153-வது பிரிவுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே வாதிக்கு ஷை புது அங்கத்தின் விதிபிரயோஜனமில்லை.

ஆகவே தாவாநிலம் பழய தரிசென்று வாதி ருஜூப்படுத்தாதபடியாலும் 6-வது பிரிவின்படி பிரதிவாதி குடிவார பாத்தியதையை எஸ்டேட்ஸ் லாண்டுஆக்ட் நமோதுக்குவந்ததினமே அடைந்தமையாலும் வாதி பிரதிவாதியை அப்புறப்படுத்த நியாயமில்லை; வாதியின் தாவா தள்ளுபடியானது சரியே."



———:o:———

## Full Bench Case

(Messrs சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஒல்ட் பீல்ட்.)

மதராஸ்.

Reference case No. 5 of 1913-

24 அக்டோபர் 1913.

மதராஸ் ரெவினியூகோர்ட்

Vs

Mrs. ஓ. டபிலியூ ஆ

மதராஸில் பொன் வெள்ளிநகை வர்த்தகம் நடத்திவருகிற மெஸ்ஸர்ஸ் P. ஆர் அண்டு ஸன்ஸ் ஷாப்புக்குடையவரான ஓ. டபிலியூ ஆர் துரையவர்கள் காலஞ்சென்றுவிடவே ஷை யாருடைய மரணசாஸனத்தில் அவருடைய பெண்சாதி மிஸ்ஸஸ் ஓ. டபிலியூ ஆர் துரைசாணியவர்கள் தனிமையான எக்ஸிகியூடராக நியமிக்கப்பட்டு ஷை ஷாப்பை நடத்திவருகையில் ஷை வர்த்தகத்தில் பலகடன்பாக்கிகள் செல்லவேண்டியிருந்ததால்அதற்காக மதராஸ்பாங்கியாரிடமிருந்து 4½ லட்ச ரூபாய் கடன்வாங்கி பாக்கிக்காரருடைய மொல்லையைத் தீர்ப்பதாய்த் தீர்மானித்து மிஸ்ஸஸ் ஆர் துரைசாணியவர்கள் பாங்கியாருக்குத்தாமே அண்டிமாண்டு எழுதிக்கொடுக்காமல் மிஸ்டர் T. W. பார்டன் என்ற ஒரு துரையவர்களிடமிருந்து ஆர் ஷாப்பின்பேருக்கு ஒரு ப்ராமிஸரிநோட் எழுதிவாங்கி அந்த ப்ராமிஸரிநோட்டில் துரைசாணி அவர்கள் எண்டார்ஸ்செய்து (மேடோவர்செய்து) அந்த ப்ராமிஸரிநோட்டை பாங்கியாருக்கு வெளசராகக்கொடுத்தார்கள். மேற்கண்டவிதமான பிராமிஸரிநோட்டைத்தவிற வேறு ஒரு பத்திரம் 15 ரூ. ஸ்டாம்பில் பாங்கியாருக்கு மிஸ்ஸஸ் ஆர் துரைசாணியவர்களால் எழுதிக்கொடுக்கப்பட்டது. அதில் ஷை கடன் துகைக்குறிய வட்டியைச்செலுத்தும் விவரத்தைக்கண்டிருப்பதுந் தவிற ஷாப்பிலுள்ள சகலமான சாமான்கள் கருவிகள் முதலிய யாவற்றையும் பாங்கியாருக்கு ஜாமீனாகவைத்த பாவனையாக ஷை சாமான்களையும் கருவிகளையும் தாம் பாங்கியாருக்கு டிரஸ்டியாக பாதுகார்த்துவருவதாயும் அந்தக்கருவிகளைக்கொண்டு வர்த்தகம் நடத்துவதில் செலவாகிற துகையை வரும்படியிலிருந்து வகித்து மிகுதியில் அசல் கடன்துகைக்குச் செல்லாகும்பொருட்டு வருஷம் ரூ. 20, 000 ஷை துரைசாணிவசத்தில் நிறுத்திவைக்கப்படவேண்டுமென்றும், மற்றப்படி வரும்படியின் பூராவும் துரைசாணியவர்களே அடையவேண்டியதென்றும் ஷாப்பிலுள்ள சாமான்களை இஷ்டப்படி உபயோகப் படுத்திக்கொள்ளலாமென்றும், ஷெடியூலில் குறித்திருக்கிற எந்த சாமான்களையாகிலும் விற்பனைசெய்துவிட்டால் அந்த சாமான்களுக்குப்பதிலாக வேறு சாமான்களை பர்த்திசெய்துவிடவேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டு மேல்கண்டவி

தமாய் டிரஸ்ட் பத்திரமென்று பெயரிட்ட அந்த தஸ்தவேஜை அடமான தஸ்தாவேஜாக பாவிக்கவேண்டுமோ அல்லது அதில் கண்ட வசனங்களின்படி டிரஸ்ட் பத்திரமாக பாவிக்கலாமாவென்ற விஷயத்தைத் தீர்மானிக்கும்பொருட்டு ரெவினியூ போர்ட்டார் ஷை தஸ்தவேஜை மதராஸ் ஹைகோர்ட்டுக்கு அபிப்பிராயத்திற்காக அனுப்பினார்கள். கவர்ன்மெண்டு வக்கீல் அந்த தஸ்தவேஜை 1899 வருஷத்திய ஸ்டாம்பு ஆக்ட் 2-வது பிரிவின் 17-வது கிளாஸில் குறித்திருக்கிறபடி அடமான தஸ்தவேஜாகுமென்றும் அதற்கு 64-வது ஆர்டிகில் படியுள்ள ஸ்டாம்பு டியூடி செலுத்தப்படவேண்டுமென்றும், அடமான சொத்துக்கள் இன்னதென்று பத்திரத்தில் குறித்துக் காண்பித்திருக்கிறதாயும், டிரஸ்ட் பத்திரமாகவும் அதை பாவித்தபோதிலும் ஸ்டாம்பு ஆக்ட் 6-வது பிரிவின்படி ஒரு தஸ்தவேஜில் பலவிதமான அம்சங்கள் குறிக்கப்பட்டால் ஒவ்வொரு அம்சத்திற்கும் வித்தியாசமான ஸ்டாம்பு டியூடி கட்டவேண்டியதாயிருந்தால் அதிகமான ஸ்டாம்பு டியூடியை கட்டவேண்டிய அம்சத்தையே ஷை பத்திரத்திற்கு பெயரிட்டு அதன்பிரகாரம் ஸ்டாம்பு டியூடி செலுத்தவேண்டுமென்றும் வாதித்தார்கள்.

கம்பெனிக்காக பாரிஸ்டர் டபிலியூ பார்ட்ன் துரையவர்கள் துகை செலுத்துவதற்காக ப்ராமிஸரி நோட்டின்படி ஒப்பந்தமேயொழிய ஷை பத்திரத்தால் மேற்படி துகையை செலுத்தும் விதம் ஏற்பட்டதாகவும் வர்த்தகச்சாமான்களைக் கடனுக்கு ஈடாகவைத்த கருத்தானது ஷை பத்திரத்தால் நிலக்காதென்றும் துரைசாணி சாமான்களை உபயோகிக்கவும் விற்பனைசெய்யவும் அதிகாரமுள்ளவர்களாயிருக்க பாங்கியார் அந்த சாமான்களை அடமான சொத்துக்களாக பாவித்து ஏலத்திற்குக்கொண்டுவர பாத்தியமில்லையென்றும் ஷாப்பின் வரும்படியையும் துரைசாணியவர்கள் டிரஸ்டியாக வைத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்க அந்தவரும்படி நிலயற்றதாகையாலும் இவ்வளவென்று குறிக்கப்படாதபடியாலும் அந்த வரும்படியை ஈடாகவைத்த பாவனையாகாதென்றும் ஆகவே பத்திரம் அடமானமல்லவென்று எதிர்வாதம்செய்தார்.

ஹைகோர்ட்டார் ஷை பத்திரத்தை அடமான தஸ்தவேஜாக அபிப்பிராயப்பட்டதில் சொன்ன காரணங்களாவன:—பத்திரத்தில் வரும்படியைப் பற்றிகுறிப்பாய்ச் சொல்ல சாத்தியமில்லாதபடியாலும்அடமானசொத்துகுறிக்கப்படாதபத்திரம் அடமானமாகாதென்றுவாதிக்கப்பட்டது. அது ஒப்புக்கொள்ளத்தக்கதானாலும் ஷாப்பிலுள்ள சகல சாமான்களும் விவரமாய் ஷெடியூலில் விவரிக்கப்பட்டிருக்கிறது. தவிர பாங்கியார் ப்ராமிஸரி நோட்டின் ஆதாரம் போதாதென்று நினைத்ததால் ஷை பத்திரத்தையிட்டுவேறு ஒரு ஜாமீன் கொடுக்கப்பட்டதாக நினைக்கவேண்டும். ஸ்டாம்பாக்டைப்பற்றினமட்டில் கடன் துகைக்கு ஈடாக, ஜாமீனாக ஒரு சொத்து குறிக்கப்பட்டால் அந்த பத்திரம் அடமானப்பத்திரமென்றே பாவிக்கப்படவேண்டும். ஷை பத்திரத்தை கொலாட்டரல் செகியூரிடியான வர்த்தமானமென்று யூகிக்கும்படி சொல்லப்பட்டது. டிரஸ்டியாக சொத்துக்களை வைத்திருப்பதாய் ஒப்புக்கொண்ட தஸ்தவேஜை ஸ்டாம்பு டியூடி செலுத்தத்தேவையில்லாத வர்த்தமானமென்று மாற்றக்கூடாது. (ஆகவே பத்திரம் அடமான தஸ்தவேஜாகவே பாவிக்கப்பட்டு சரியான ஸ்டாம்பு கட்டவேண்டியதாயிற்று.)

———::———



(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஸ்)

நெல்லூர் ஜில்லா.

S. A. 1437 of 1911-12 ஆகஸ்ட் 1913.

வெங்கடகிரி மகாராஜா அவர்கள் Vs அய்யப்ப ரெட்டி வகையரா.

வெங்கடகிரி மகாராஜா அவர்களுடைய எஸ்டேட்டைச்சேர்ந்த சிலதரிசு நிலங்களை சுமார் 40-வருஷகாலமாக 1317-ம் பசலிவரையில் பிரதிவாதிகள் கால்நடை மேய்ச்சலுக்காக உபயோகப்படுத்திவந்து எகரா 1-க்கு அணா 5 பை 1 விகிதம் தீர்வை செலுத்திவந்ததாயும் 1317, 1318-ம் பசலிக்காக பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த முச்சலிக்கைகளில் ஷை நிலங்களை அந்நியர்கள் யாராகிலும் சாகுபடி செய்வதற்காக தர்காஸ்து விண்ணப்பம் கொடுக்கும் விஷயத்தில் பிரதிவாதிகள் ஜாஸ்தியான தீர்வை விகிதம் கொடுக்கிறதாகவும் அவ்வித சந்தர்ப்பங்கள் நேரிட்டுத் தாங்கள் அதிக தீர்வையைச் செலுத்த பிரியமில்லாதபட்சத்தில் ஷை நிலங்களின் சுவாதீனத்தை ஒப்புக்கொடுத்து விடுவதாகவும் உடன்பட்டிருந்த காரணத்தால் மகாராஜா அவர்கள் நெல்லூர் டி. மு. கோர்ட்டில் ஷை முச்சலிக்கையில் கண்ட ஷரத்துக்களின்பேரில் 1909-ம் வருஷத்திய அசல் நெ. 285-இல் இஜக்ட்மெண்டு தாவா கொண்டுவந்து மூன்றுவித பரிகாரங்களைக் கோரினார்கள்.

(1) 1907-ம் வருஷம் ஆகஸ்ட் மீ 3 உ-இல் பிரதிவாதிகளை ஜாஸ்தியான தீர்வைகளுக்கு ஒப்புக்கொண்டு ஷை நிலங்களை அனுபவிக்கும்படி கொடுத்த நோடீஸ்களுக்கு இசைந்து நடக்கத்தவறினபடியால் பிரதிவாதிகளை ஷை நிலங்களின் சுவாதீனத்திலிருந்து விலக்கவேண்டுமென்றும் (இஜக்ட் செய்யவேண்டுமென்றும்)

(2) கடந்துபோன 1317, 1318-வது பசலிகளுக்கு தர்காஸ்து விண்ணப்பம்கொடுத்து அதிகத்தீர்வை செலுத்துவதாய் எப்பிரல் 1907-இல் அந்நியர்கள் ஒப்புக்கொண்ட ஷை உயர்ந்த விகிதப்படி பிரதிவாதிகள் தீர்வை செலுத்தவேண்டுமென்றும் (3) தாவா தேதிமுதல் சுவாதீனம் செய்யப்படுகிற தேதிவரையில் அதாவது 1319-ம் பசலிமுதல் பிந்திய பசலிகளுக்கும் அதேவிகிதப்படி மத்தியகால வரும்படி கிடைக்கவேண்டுமென்றும் ஆக மூன்றுவித பரிகாரம் பிராதில் கேட்கப்பட்டிருக்கிறது.

டி. மு. கோர்ட்டார் ஷை பிராதை விஜாரிக்க ஸிவில் கோர்ட்டாருக்கு அதிகார வரம்பில்லையென்றும் மதராஸ் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்டின்படி இந்தப்பிராது ரெவினியூ கோர்ட்டில் தாகல்செய்யப்பட்டு பைசலாகவேண்டுமென்று சொல்லி பிராதை வாபீஸ்செய்துவிடவே வாதி ஷை பிராதை நெல்லூர் ஸ்பெஷல் டிப்டிகலக்டரவர்களிடம் தாகல்செய்ததில் அங்கு ஷை பிராது ரெவினியூ கோர்ட்டில் பிடிக்கத்தக்கதல்லவென்றும் ஸிவில் கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டிய விஷயமென்றும் உத்தரவளிக்கவே அதன்மேல் ஜில்லா கோர்ட்டார் அப்பீலில் ரெவினியூ கோர்ட்டாருடைய அபிப்பிராயம் தப்பென்றுசொல்லி மேற்படி பிராதை ரெவினியூ கோர்ட்டாரே விஜாரிதுப் பைல்செய்யவேண்டுமென்று உத்தரவளித்தார்கள். வாதி அதன்மேல் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயம் தப்பென்று தீர்மானிக்கப்பட்டு பிராதை டி. மு. கோர்ட்டார் விஜாரிக்கவேண்டியதென்று உத்தரவளிக்கப்பட்டது.

ஹைகோர்ட்டார் தீர்ப்பின் சுருக்கமாவது:—

பிராதின் அம்சங்களையும் வாதியின் தாவாவையும் வாதி தரப்பு தஸ்தவேஜுகளையும் பிரதிவாதிகள் ஆக்ஷேபனையாக யதார்த்தமென்று ஒப்புக்கொள்ளும்பட்சத்தில் தாவா நிலங்கள் எஸ்டேட்ஸ்லாண்டு ஆக்ட் 3-வது பிரிவின் 7-வது கிளாஸில் விவரித்திருக்கிறபடி "பழயதரிசு நிலங்கள் (Old waste)" என்று தீர்மானிக்கவேண்டும். ஜமீன்தாருடைய சொந்த அனுபோகத்திலில்லாத (Paivate Land அல்லாத) மற்றப்படி சாகுபடியன்னியில் 20-வருஷகாலமாய் ஜமீன்தாருடைய தொடர்ச்சியான சுவாதீனத்திலிருக்கும் நிலங்களும் எஸ்டேட்ஸ் ஆக்ட் ஊர்ஜிதத்திற்குப்பிந்தி ஒப்படைக்கப்பட்டு அதற்குமுன் தொடர்ச்சியாக10வருஷலம்காகுடி வாரபாத்திய

தையிலடங்காத நிலங்களும் பழயதரிசென்று Old waste என்று) ஆக்டில் வரையப்பட்டிருக்கிறது. ஆகையால் தாவா நிலங்கள் பழயதரிசென்று ஏற்படுகிறது. ஸ்ரவிஸ் இனும் நிலங்கள் கிராமநத்தப்புரம்போக்குகள் நீங்கலான மற்ற சாகுபடிக்கு யோக்கியமான நிலங்கள் ரயடிலாண்டு என்று (Ryoti land) என்று 3-வது பிரிவின் 16-வது களாசில் சொல்லப்பட்டிருக்கிறது. பழயதரிசுகளில் ரயடிலாண்டுகளும் அடங்கியிருக்கலாம். சாகுபடிக்கு லாயக்கான நிலங்களும் பழயதரிசாக வழங்கும். ஆனால் பழயதரிசு நிலங்களெல்லாம் சாகுபடிக்கு லாயக்கான ரயடிலாண்டுகளாகமாட்டாது. ஒரு ரயடிலாண்டு பழயதரிசென்று ஏற்படுவதற்கு ஆக்ட் நமோதுக்குவருமுன் ஜமீன்தார் கோர்ட் டிக்கிரியால் குடிவாரப்பாத்தியதை கிடையாதென்று தீர்மானம அடைந்திருக்கவேண்டும். தாவா நிலம் அப்படிப்பட்டதுமல்ல. சாகுபடிக்கு லாயக்கான நிலமென்ற வசனத்திற்கு சாச்வதமான சாகுபடிக்குறிய நிலமென்ற கருத்தாகுமேயொழிய யாதொரு அபூர்வமான சந்தர்ப்பங்களால் சாகுபடிக்கிடங்கொடுக்கிற நிலங்கள் அக்கருத்திலடங்காது. ஏனெனில் 6-வது பிரிவில் 4-வது கிளாஸில் கால்நடை மேய்ச்சலுக்காகவும், பாரஸ் இலாகாவாய் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிற நிலங்களை சொற்பகாலத்திற்கு சாகுபடி செய்யும் பொருட்டும், விடப்பட்ட நிலங்களை சாகுபடிக்கு லாயக்குள்ள ரயடிலாண்டென்று பாவிக்கக்கூடாதென்று விளம்பியிருக்கிறது. ஆகவே உழவுசெய்து பயிர்த்தொழிலுக்கு லாயக்கில்லாமல் கேவலம் மேய்ச்சலுக்குமட்டும் யோக்கியமான நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கான கருத்துடைய ரயடிலாண்டாக பாவிக்கக்கூடாது. முச்சலிகையின் வசனங்களில் தாவா நிலங்கள் சாகுபடிக்கு லாயக்கில்லாத மேய்ச்சல் நிலங்களென்று துலங்குகிறது.

பழயதரிசென்று அழைக்கப்படவேண்டிய தாவா நிலத்தை அனுபவிக்கிற குடியானவனை ஒரு ரயட்டு (Ryot) என்று சொல்லலாமா? 3-வது பிரிவின் 15-வது கிளாசில் பயிர்த்தொழிலுக்காக நிலத்தை அனுபவிக்கிறவனும் ரயடிலாண்டை அனுபவிக்கிறவனும் ரயட்டென்று சொல்லப்படுகிறான். தாவா நிலங்களை மேய்ச்சலுக்காக அனுபவிக்கிற பிரதிவாதிகள் ரயட்டுகளாகமாட்டார்கள்.

பயிர்த்தொழில் என்ற வசனத்திற்குத் தோட்டப் பயிர்த்தொழிலும் அடங்கலாக ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிறது. உழவினாலும் நடவு வேலையாலும் வருஷாந்த தானிய அருவடைக்குறிய தொழிலை வேளாண்மைத்தொழில் என்று (பயிர்த்தொழில்) சொல்லப்படுகிறது. ஆனால் மேய்ச்சல் தொழிலை பயிர்த்தொழிலோடு சேர்க்கப்படவில்லை. பயிர்த்தொழிலுக்கு ரயட்டினுடைய நடவுமுதலிய கைவேலை அவசியமாகும். மேய்ச்சல் இயற்கையாக உண்டாகும் புல்செடிகளால் ஏற்படுகிறது. ஆனால் சாகுபடிக்கு லாயக்கான நிலங்களையும் மேச்சலுக்காக உபயோகப்படுத்தலாம். சாகுபடிக்கு யோக்கியமில்லாமல் செய்யாதவண்ணம் வேறு எவ்விதமான காரியங்களுக்கும் உபயோகப்படுத்தலாம். சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை மற்ற மேய்ச்சல் முதலிய காரியங்களுக்காக உபயோகப்படுத்துகிறவர்களுக்கு ரயட்டென்னும் பெயரைக் கொடுக்கத்தக்க பாத்தியதை உண்டாக இடங்கொடுக்கூடாது.

ஆகவே தாவா நிலங்களை அனுபவிக்கிற பிரதிவாதிகளை ரயட்டுகள் என்று ஆக்டின் கருத்துப்படி அழைக்கத்தகாது. ரயட்டுகளல்லாத பழயதரிசு நிலத்தில் அனுபவிக்கிறவர்களை அப்புறப்படுத்துவதற்கு இஜக்மெண்டு தாவா செய்தால் அந்தப்பிராதை ரெவினியூ கோர்ட்டார் விஜாரிக்க வேண்டியதா அல்லது ஸிவில் கோர்ட்டார் பைசல் செய்யலாமாவென்று யோசிக்குமிடத்து, ஸிவில் கோர்ட்டாருடைய அதிகாரவரம்பிலுள்ள சிலவழக்குகளை மட்டும் ரெவினியூ கோர்ட்டுக்கு ஆக்டினால் மற்றப்பட்டிருக்கிறது. மற்றவிதமான வழக்குகளை ஸிவில் கோர்ட்டாரே நடத்த வேண்டுமென்று ஏற்படுகிறது. எஸ்டேட்லலாண்டு ஆக்டின், 123-வது பிரிவிலும், 48(ii)-வது பிரிவிலும், 158-வது பிரிவிலும் இஜக்மெண்டு பிராது விஷயமாய் ரெவினியூ கோர்ட்டாருக்கு அதிகாரவரம்பு ஏற்பட்டிருக்கிறது. 158-வது பிரிவானது ஜமீந்தாருடைய



(Private land) சொந்த நிலங்களிலிருந்து சாகுபடி செய்யும் குடிகளை அப்புறப்படுத்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 48(ii)இல் சில உருதிமொழி செய்யத்தவறுகிற ரயட்டுகளை வெளிப்படுத்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 153வது பிரிவிலோ குடிவாரபாத்தியதையுடைய ரயட்டுகளை அப்புரப்படுத்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பிரதிவாதிகள் மேற்கூறிய மூன்றுவிதமான முறைகளால் அப்புறப்படுத்தப்படும்படியானவர்களல்லவென்று விளங்கும். ஏனெனில் அவர்கள் ரயட்டுகளுமல்ல ரயடிலாண்டை அனுபவித்தவர்களுமல்ல. பயிர்த்தொழிலுக்காக தாவாநிலங்களை அனுபவித்தவர்களல்ல. ஆகவே மேய்ச்சலனுபோகத்தையுடைய பிரதிவாதிகளை அப்புறப்படுத்த ரெவினியூகோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. ஸிவில் கோர்ட்டாருக்குத்தான் அதிகாரமுண்டு. ரெவினியூகோர்ட்டாருக்கு மாற்றப்படாத அதிகாரங்களை ஸிவில் கோர்ட்டாரே வகித்திருக்கிறார்கள். ஆகையால் டி. மு. கோர்ட்டார் முதலில் கொடுக்கப்பட்ட பிராதை வாபிஸ் செய்ததும் பிசகு, ஜில்லா கோர்ட்டார் ரெவினியூ கோர்ட்டாருடைய உத்தரவை மாற்றினதும் பிசகு. பிராதில்கண்ட 1-வது பரிகாரமும், பிராது தேதிமுதல் கோறப்பட்ட மத்திய கால வரும்படியைப் பற்றிய 3-வது பரிகாரமும் ஸிவில் கோர்ட்டாரால் அளிக்கப்படவேண்டும்.

1317, 1318-வது பசலிகளுக்கு வாதி 2-ம் பரிகாரத்தில் தர்காஸ்த்துக் கேட்டவர்களுடைய விகிதப்படி அதிக தீர்வையை அடையக் கோறியதில் அந்தப்பரிகாரத்தை ரெவினியூகோர்ட்டார் அளிக்கத்தக்க, தீர்வைபாக்கிக்காகச்செய்த பிராதாக மதிக்க நியாயமில்லை.

ஆக்டின் 77-வது பிரிவில் தீர்வை பாக்கிக்காக ரெவினியூ கோர்ட்டாருக்கு உத்தரவளிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீர்வை என்ற பதத்திற்கு பயிர்த்தொழிலுக்காக உபயோகிக்கும் நிலங்களுக்குறிய ரயட்டுகளால் செலுத்தப்படவேண்டிய தீர்வை என்று அர்த்தமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ரயட்டுகள் மேய்ச்சல் தீர்வையைச் செலுத்துவதனால் பயிர்த்தொழில் அனுபோகத்திலிருக்கிற குடிகள் கிராமப்பொது நிலங்களில் மேச்சலனுபோகத்தையும் உடைத்தாயிருப்பதால் அதற்காகச்செலுத்தும் மேய்ச்சல் தீர்வையென்று விளங்கும். ஆகையால் மேய்ச்சலுக்காகத் தீர்வை செலுத்திவரும் ரயட்டுகளல்லாத குடிகளிடம் தீர்வை பாக்கியை வசூலிப்பதற்கு ஸிவில் கோர்ட்டில் தாவாசெய்யவேண்டும். அந்தவிதமான அதிகாரம் ரெவினியூகோர்ட்டாருக்கு ஆக்டினால் மாற்றப்படவில்லை.

கடைசியில் மூன்று பரிகாரங்களும் ஸிவில் கோர்ட்டில் தேடிக்கொள்ளவேண்டியதாக ஏற்பட்டதால் பிராதை டி. மு. கோர்ட்டார் பயிலுக்கெடுத்து விஜாரணைசெய்து சட்டப்படி தீர்ப்பளிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. செலவுதுகை பைசல் முடிவைப் பொறுத்தாகும்.

———:O:———

(Messrs சீப் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட்).

மதராஸ்.

O. S. A, No. 52 of 1912—27 ஆகஸ்ட் 1913.

லட்சுமம்மாள் V நரசிம்மராகவய்யங்கார்வகையரா

மைசூர் சமஸ்தானத்தில் வாசிகளாயிருந்த லட்சுமம்மாள் என்ற வாதிக்கு பிரதிவாதிகளின் தகப்பனார் எழுதிக்கொடுத்த இரண்டுகடன்பத்திரங்களைக் கொண்டு தாவாசெய்து துகை வசூல்செய்ய உத்தேசிக்கும் காலத்தில் வாதியும் பிரதிவாதிகளும் தங்கள் பையன்களுடைய படிப்பு விஷயத்திற்காக சென்னை நகரில் வாசம் செய்துவர நேரிட்டமையாலும் பாக்கித்துகை ரூ. 2500-க்கு மேல்பட்டபடியாலும் வாதி ஷை தாவாவை மதராஸ் ஹைகோர்ட்டில் அசல்தரப்பில் நடத்தும்படியாயிற்று. ஈரங்கிகாலத்தில் இரண்டு தஸ்தவேஜுகளையும் ஆஜர்படுத்தினதில் அவைகள் சில எழுத்துக்கள் மறைந்து புலப்படாமலிருக்கும் வண்ணம் கிழித்தும் அடித்தும் சின்னமாயுமிருந்தது. வாதி அவ்விதமாய்க் கிழிந்துபோனதற்கு பற்பல காரணங்களைச் சொல்லியும், கோர்ட்டார் அதை நம்பவில்லை. தங்களுக்காவது தங்கள் உத்தரவுக்காவது என்ற வசனங்கள் ஆதியில் எழுதப்பட்டிருந்ததாகவும் அவ்வசனங்கள் மறைக்கப்பட வேண்டுமென்ற கருத்துடன் வாதி அவ்விதமாய் தஸ்தவேஜுகளைச் சின்னப்படு

த்திவிட்டதாகவும் அசல் தரப்பில் ஈரங்கி கேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்துரையவாகள் அபிப்பிராயப்பட்டார்கள்.

பிரதிவாதிகள் அவ்வித மாற்றல் பத்திரங்களுடைய யோக்கியதைக்குக்குறைவென்றும் ஆகையால் அந்த தஸ்தவேஜுகள் பயனற்றதாகுமென்றும் வாதாடினுர்கள்.

அசல் கோர்ட்டார் "தங்கள் உத்தரவுக்காக" என்ற வசங்களை மறைத்த விஷயத்தால் தஸ்தவேஜுகளின் நிலமையும் அந்தஸ்தும் விசேஷமாக மாறிவிட்டதென்று அபிப்பிராயப்பட்டு அதாவது ஷை பத்திரங்கள் கம்மியான ஸ்டாம்புகளில் எழுதப்பட்டிருந்தமையால் மைசூர் இலாகாவில் "தங்கள் உத்தரவுக்காவது" என்ற வசனங்களிருந்தால் மைசூர் சட்டமுறைகளின்படி மைசூர் கோர்ட்டுகளில் தாவா செய்யக்கூடாதென்ற காரணத்தையிட்டு அவ்வசனங்களை மறைத்து மைசூரில் நிராக்ஷேபணையாக தாவாசெய்யும் யோக்கியதையை உண்டாக்கும்பொருட்டு வாதி தஸ்தவேஜுகளைத் திருத்திவிட்டதாகத் தீர்மானித்து அவ்விதமான திருத்தல் பத்திரங்களின் நிலமையை மாற்றினபடியால் தஸ்தவேஜுகள் 1881-வது வருஷத்திய 26-வது ஆக்ட் (Negotiable Instruments Act) 87-வது பிரிவின்படி செல்லத் தகுந்தவைகளல்லவென்றும் அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி அப்பீல் தரப்பில் அப்பீல் செய்யவே அங்கும் அசல் கோர்ட் தீர்மானம் காயமாகி அப்பீல் தள்ளுபடியாச்சுது.

அப்பீல் தீர்ப்பின் சுருக்கமான அம்சங்களாவது:—

தஸ்தவேஜுகளில் ப்ராமிசரிநோட்டென்று செப்பியிருக்கிறது. பிராதில் அவைகளை பாண்டுகளென்று சொல்லியிருக்கிறது. மைசூரில் Negotiable Instruments Act நமோதிலில்லை. அதாவது உத்தரவின்பேரில் என்ற வசனங்களை ஆதாரமாகக் கொடுத்தால் அதை உடையவர் வேண்டும்போது துகை வசூலித்துக் கொள்ளும் நமது பிரிடிஷ் இலாகா சட்டமுறை மைசூர் இலாகாவில் கிடையாது. ஆகையால் ஸ்டாம்பு கம்மியான காரணத்தால் ஷை தஸ்தவேஜுகளை பாண்டுகளாகபாவித்து மைசூர் இலாகாவில் தாவா செய்யக்கூடாது. மதராஸ் ஹைகோர்ட்டில் தஸ்த்வேஜுகளை மாற்ருதிருந்தாலும் தாவாசெய்யலாம். ஆகையால் ஷை திருத்தல் மதராஸ் ஹைகோர்ட்டில் உபயோகப்படுத்த யோக்கியதைஉண்டாக்கும்பொருட்டுசெய்யப்பட்டதாகச்சொல்லக்கூடாதென்று வாதிக்காக சொல்லப்படுகிறது. என்ருலும் திருத்தல்செய்யும்கருத்தாவது மைசூர் இலாகாவில் தாவா செய்யும் யோக்கியதையை உண்டாக்குவதேயொழிய வேறல்ல. தாவாசெய்யும் காலத்தில் வாதியும் பிரதிவாதிகளும் மதராஸ்வாசிகளாயிருக்கநேரிட்டதால் தாவா இங்கு செய்யவேண்டியதாயிருந்ததேயொழிய மற்றப்படி மைசூர் இலாகாவில்தான் செய்திருக்கவேண்டும். அங்கு யோக்கியதை உண்டாக்கும்பொருட்டு பத்திரங்களைத் திருத்தினது விசேஷமாறுதல். 33கல்கத்தா 812-இல் தீர்மானமாயிருக்கிற கேசில் ஒரு பத்திரத்தின் வசனங்கள் மாற்றப்பட்டதினுல் திருத்தப்பட்டதினுல் அல்லது அடிக்கப்பட்டதினுல் இருதாரத்தாருடைய ஒப்பந்தமும் நிலமையும் சம்பந்தமும் மாறிப்போகிறவிஷயத்தில் அந்தப்பத்திரம் செல்லத்தகாதென்று அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உத்தரவுக்காவது என்ற வசனமிருந்தால் எழுதிக்கொடுக்கிறவர் எழுதி வாங்கிக்கொள்ளுகிறவரைத்தவிற அவர் உத்தரவு செய்கிற வேறொருவருக்கும் கட்டுப்படவேண்டியதாகும். அவ்வசனமில்லாவிடில் எழுதிவாங்கும் நபருக்கும் அவருடைய வார்ஸ்களுக்கும் மற்ற சட்டமுறையுடைய பாத்தியஸ்தருக்கும் மாத்திரம் கடமைப்பட்டவர்களாகவேண்டும்.

ஆகவே பத்திரத்தில் இருதாரத்தாருடைய நிலமையும் சம்பந்தமும் ஷை வசனங்களை மறைத்ததால் மாறிவிடுகிறது. அவ்வித மாறுதல் ஷை தஸ்தவேஜுகளுக்கு ஹானியாகும். ஆகையால் அவைகள் செல்லத்தக்கதல்ல. பிரதிவாதிகளின் தகப்பனர் அந்த மாற்றலுக்குச் சம்மதப்பட்டதாகயில்லை. துகை விஷயமாய் கம்மி ஜாஸ்தி ஏற்பட்டால் மட்டும் மாற்றல் பிசகாகுமென்பது நியாயமல்ல. பத்திரதின் நிலமையே மாறிப்போய்விட்டாலும் அந்த மாறுதல் பிசகே



யாகும். வேறொருவருக்கு இண்டார்ஸ்செய்து மாற்றினது அதிக விசேஷமான மாறுதல். அந்த மாறுதல் பத்திரத்தைக்கெடுத்துவிட்டது. ஆகையால் திருத்தாமலிருந்தபோதிலும் மதராஸ் கோர்ட்டில் சட்டப்படி தாவா செய்யக்கூடுமாயினும் பத்திரம் ஷை மாற்றலால் கெட்டுப்போய்விட்டதென்பதில் சந்தேகமில்லை. ஆகையால் பிரதிவாதிகள் ஷை தஸ்தவேஜுகளின்படி கடமைப் பட்டவர்களாகமாட்டார்கள். ஆகவே அப்பீலும் தள்ளுபடியாச்சுது.

:O:

(மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்தர்ரஹீம்.)

**தஞ்சாவூர் ஜில்லா**

**C. R. P. 334 of 1910—20அக்டோபர் 1911.**

சிவகுருநாத செட்டியார் Vs ராமஸாமி அய்யங்கார்

கும்பகோணம் தேவஸ்தானத்தில் 7-ம் பிரதிவாதியை ஒரு கமிட்டி மெம்பராக எலக்ஷன் நியமனம்செய்ததை செல்லத்தக்கதல்லவென்று எலக்ஷனில் வோட் கொடுக்க லாயக்குள்ள பலர்கள் ஆக்ஷேபித்ததின்பேரில் அந்த நியமனத்தைத் தப்பென்று கோர்ட் மூலமாய்த் தீர்மானிக்கும் பொருட்டு ஸ்ரீனிவாசாச்சாரியார் என்ற ஒரு வோட்டர் ஸிவில் புரோஸிஜர்கோட் ஆர்டர் (1) ரூல் 8-இன்படி கோர்ட்டாருடைய அனுமதிபெற்று ஆக்ஷேபிக்கிற எல்லா வோட்டர்களுக்காகத் தான் பிரதிநிதியாக ஏற்பட்டு வாதியாக நின்று கும்பகோணம் சப்கோர்ட்டில் அசல் தாவாசெய்து 7-ம் பிரதிவாதியை தேவஸ்தான கமிட்டி நடவடிக்கைகளில் தலையிடக்கூடாதென்று இஞ்சங்க்ஷன் கட்டளை பிறப்பிக்கவேண்டுமென்றும் ஷை பிராதில் கோரிக்கொண்டார். இஷுக்கள் ஏற்பட்டு சாட்சி விஜாரணைக்கு வாய்தா குறிப்பிடப்பட்டு ஆனுல் ஈரங்கி தேதிக்கு முந்தி வாதி ஸ்ரீனிவாசாச்சாரி காலஞ்சென்றுவிடவே ராமஸாமி அய்யங்கார் என்ற மற்ருெரு வோட்டர் ஷை தாவாவை மேல்நடத்தப் பிரியப்பட்டு கோர்ட்டாருக்கு விண்ணப்பம் கொடுத்து அனுமதிபெற்று காலஞ்சென்ற வாதிக்கு வார்ஸாக ரிகார்டு செய்யப்பட்டதின்பேரில் ஷை பிராதை ராமஸாமிஅய்யங்கார் தொடர்ந்து நடத்த அதிகாரமளிக்கப்பட்டது. 7-ம் பிரதிவாதி, ராமஸாமிஅய்யங்காரை காலஞ்சென்ற வாதிக்கு வார்ஸாக ரிகார்டுசெய்தது பிசகென்றும் வாதியோடு ஷை தாவாவும் செத்துப்போனதாகவும் பிராதை யாரும் மேல்நடத்த நியாயமில்லையென்றும் சொல்லி மதராஸ் ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு தாகல்செய்து சப்கோர்ட்டார் உத்தரவை ரத்துசெய்யும்படி அபேக்ஷித்தார். ரிவிஷன் மனுவைத்தள்ளுபடிசெய்ததில்சப்கோர்ட்டார் உத்தரவுசரியென்றும் ராமஸாமி அய்யங்கார் காலஞ்சென்ற வாதியின் வார்ஸ் அல்லாதபோதிலும் அவ்விதமாய் கீழ்கோர்ட்டார் ரிகார்டுசெய்தது பிசகாயினும் அவரும் ஒரு வோட்டராயிருப்பதாலும் எல்லா வோட்டர்களுக்கும் பிரதிநிதியாகயிருந்த வாதி காலஞ்சென்றபோதிலும் மற்ருெரு வோட்டர் பிராதை மேல் நடத்தலாமென்றும் அபிப்பிராயப்பட்டு சப்கோர்ட் உத்தரவை காயப்படுத்தின ஹைகோர்ட்டார் தீர்மானச்சுருக்கமாவது:—

ஸி. பி. ஸி. 2-வது பிரிவின் 11-வது கிளாஸில் குறிக்கப்பட்டவிதமாக எதிரி காலஞ்சென்ற வாதியின் வார்ஸ் அல்ல. அவருடைய சொத்துக்கு பாத்தியதையுடையவரல்ல. ஆனுல் இந்தப்பிராதை மேல்நடத்த அவருக்கு அதிகாரமுண்டென்று ஏற்படும் விஷயத்தில் அவரை காலஞ்சென்ற வாதியின் வார்ஸ் என்று தப்பாய் ரிகார்டுசெய்ததால் சப்கோர்ட் உத்தரவை ரத்து செய்யவேண்டியதாகாது. அந்த தப்பிதத்தை அவசியமானுல் இப்பவும் திருத்திவிடலாம். ஆகையால் எதிரி பிராதை தொடர்ந்து மேல்நடத்த அதிகாரமுண்டா என்பதுதான் முக்கியமான பாயிண்டு. இந்தப்பிராதை நடத்த காலஞ்சென்ற வாதியின் பாத்தியதை ஸ்வயபாத்தியதையேயொழிய (அவருடைய குடும்பத்தைச்சேர்ந்த பாத்தியதையல்ல). ஆகையால் அந்த ஸ்வயபாத்தியதையானது அவரோடு, அவருடைய மரணத்தோடு மடிந்துவிட்டதென்பதில் சந்தேகமில்லை. ஷை வாதியின் பாத்தியதை மடியவே இந்தப்பிராதும் மடிந்துவிட்டதாக மனுதார் வாதிக்கிருர். எதிரியோ இந்த நடவடிக்கை பலர்களுடைய பொதுவான விஷயமாகயிருந்து பலருக்கும் வாதி பிரதிநிதியாக ஏற்பட்டமையால் மற்ற வோட்டர்கள் பிராதில் குறிக்கப்படாதபோதிலும் அவர்களும் வாதிகளுடன் கூடச்சேர்ந்த ஒரேவிதமான பாத்தியதையுடைய பார்ட்டிகளாகவே பாவிக்கப்படவேண்டுமென்றும் ஆகையால்

காலஞ்சென்ற வாதிக்குப்பின் மற்ற (வாதிகளாக பாவிக்கப்படவேண்டிய) வோடர்களில் யாதொருவர் பிராதை நடத்தலாமென்று வாதிக்கிறார். தவிர மனுதாருக்காக வக்கில் ம-ா-ா-ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் வாதத்தில் சப்கோர்ட்டார் வி. பி. வி. ஆர்டர் 1-ரூல் 8-ன்படி வாதிக்குப் பிரதிநிதிஸ்தானத்தை உத்தரவளித்ததே பிசகென்று சொல்லுகிறார். அதாவது ஒவ்வொரு வோடருக்கும் ஷெ இலக்ஷன் நியமனத்தை ஆக்ஷேபித்து தாவாசெய்யும் பாத்தியதைப் பிரத்தியேகமாய் ஏற்பட்டிருப்பதால் காலஞ்சென்ற வாதியின் ஸ்வயபாத்தியதையைக்கொண்டே தாவா செய்யவேண்டியதிருக்க மற்றவர்களுடைய பாத்தியதையை அவரிடம் ஒடங்கள் செய்வது சட்டவிரோதமென்று வாதம் செய்தார்கள். ஆனால் இங்கிலீஷ் சாமன் ஸெரி கோர்ட் ரூல்களை அனுசரித்து ஏற்படுத்தப்பட்ட பழய லாவில் புரோவிஜர்கோட் 30-வது பிரிவுக்குச்சரியான புது வி. பி. வி. ஆர்டர். 1-ரூல் 8-இல் விதிக்கப்பட்டிருக்கிற அம்சங்கள் ஒரே பாத்தியதையைக் கொண்டாடவேண்டிய பலர்களுக்காகமட்டும் ஏற்பட்டதல்ல. சமமான பாத்தியதை பலர்களுக்கும் தனித்தனியாய் உண்டாயிருந்தாலும் அந்த அம்சங்கள் அனுஷ்டிக்கத்தக்கதாகுமென்று ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஷப்பர்ட் துரையவர்கள் 23 மதராஸ் 28-இன் 31-வது பக்கத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு வோடரும் தனியாய் தாவாசெய்ய பாத்தியதை உடைத்தாயிருந்தாலும் பரிகாரம் எல்லோருக்கும்ஒன்றாக யிருப்பதால் 8-வது ரூல்படி ஒருவர் மற்றவர்களுக்காக பிரதிநிதியாக தாவாநடத்த அனுமதி பெற்றுக்கொள்ளலாமென்று ஏற்படுகிறது. தவிர சப்கோர்ட்டில் வாதி அனுமதிபெற்ற காலத்தில் மனுதார் யாதொரு ஆக்ஷேபணையும் செய்யவில்லை. ஆகையால் காலஞ்சென்ற வாதி எல்லா வோடர்களுக்காகவும் அனுமதிபெற்றது சட்டவிரோதமல்ல.

வி. பி. வி. ஆர்டர் 22-இன் 2-வது ரூலில் சொல்லியிருக்கிறபடி ரிகார்டில் ஒருவருக்குமேல்பட்ட வாதிகளாகிலும் பிரதிவாதிகளாகிலும் குறிக்கப்பட்டிருந்து ஒரு வாதி அல்லது பிரதிவாதி பிராது பைசலாகுமுன் காலஞ்சென்றபிறகு அந்த தாவாவின் பாத்தியதை மற்ற பார்ட்டிகளுக்குச்சென்றுவிடும்பக்ஷத்தில் மற்றவர்கள் பிராதை மேல்நடத்தலாம். ஒரே வாதியாக ஏற்பட்ட இந்தப்பிராதுக்கு அந்த ரூல் எட்டாது. ஷெ ஆர்டரின் 3-வது ரூல் 1-ம் பாகத்தில் ஒருவருக்குமேல்பட்ட வாதிகளில் ஒருவர் காலஞ்சென்றுவிட்டபிறகு பரிகார பாத்தியதை மற்ற வாதிகளுக்குச் சொல்லாதபட்சத்தில் காலஞ்சென்ற வாதியினுடைய வார்ஸ்களை அந்த ஸ்தானத்தில் ரிகார்டுக்குக் கொண்டுவரப்பட்டு தாவா மேல்நடத்தலாமென்று” சொல்லியிருக்கிறது. அந்த ரூலும் இந்த தாவாவுக்குப்பொருந்தாது. ஏனெனில் வாதி ஒருவரே ஷெ ரூலின் 2-ம் பாகத்தில் சொல்லியபடி தனிமையாக நடத்தும் தாவா பைசலாகுமுன் ஷெ வாதி காலஞ்சென்றால் கோர்ட்டார் யாதொரு விண்ணப்பத்தின்பேரில் காலஞ்சென்றவாதியின் வார்ஸ்களை ரிகார்டில் கொண்டுவரும்படி உத்தரவுகொடுத்து அந்த வார்ஸ்களை வியாஜ்ஜியம்மேல்நடத்தச்செய்யலாம். சட்டப்படி 6-மாதகாலத்திற்குள் ஷெ வார்ஸ்விண்ணப்பம்செய்யப்படாத பட்சத்தில் காலஞ்சென்ற வாதியைப்பற்றினமட்டில் பிராது தீர்ந்துபோய்விட்டதாக பாவிக்கப்படவேண்டுமென்றும், பிரதிவாதியின் கோரிக்கைப்படி செலவு தொகைக்கு காலஞ்சென்ற வாதியுடைய சொத்தைப்பொருத்து டிக்கிரீயளிக்கலாமென்றும், விதிக்கப்பட்டிருக்கிறது. ஷெ ரூலின் அம்சமானது தாவாசெய்யும்பாத்தியதை காலஞ்சென்ற வாதியின் வார்ஸ்களுக்குச் செல்லும் சந்தர்ப்பத்தைப் பற்றியதாயிருக்கிறது. இந்தப் பிராதில் வாதிக்கு தான் ஒருவோடராகயிருந்த சந்தர்ப்பத்தால் தாவாசெய்யும் பாத்தியதை ஏற்பட்டதால் அந்த பாத்தியதை ஸ்வயபாத்தியதையேயொழிய காலஞ்சென்ற வோடருடைய வார்ஸ்களும் வோடர்களாகமாட்டார்களாதலால் வார்ஸ்களுக்கு ஷெ தாவா பாத்தியதை செல்லாது. ஷெ ரூல்கள் யாதொன்றும் அந்தப் பிராதுக்குறியதாகச்சொல்ல நியாயமில்லை.

வி. பி. வி. ஆர்டர் 1-ரூல் 8-இன் அம்சங்களைக் கவனித்துப்பார்க்குமிடத்து கோர்ட்டார் வாதிக்கு பிரதிநிதியாக தாவாவை நடத்தும்படி



அனுமதிகொடுத்ததில் ஷெ வாதி பிராதை தனக்காகவும் எதிரியுள்பட மற்றவோடர்களுக்காகவும் நடத்தவேண்டிய கடமையாகும். ஷெ பிராது தாகலானதைப்பற்றி எல்லா வோடர்களுக்கும் நோட்டீஸ் கொடுத்து பிரியமுள்ள எந்த வோடரும் கோர்ட்டாருடையயுக்தத்திற்குட்பட்டுபார்ட்டிகளாகச்சேரவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்து அப்படிச்சேர்ந்துகொள்ள பாத்தியமுண்டு. மற்ற வோடர்கள் பார்ட்டிகளாய்ச் சேர்ந்துகொள்ள காலத்தவணை குறிக்கப்படவில்லை. எப்பவும் சேரலாம். மற்றவர்கள் யாவரும்சேராதிருக்க வாதி மற்றவர்களுக்காகப் பிராதை நடத்த அனுமதி பெற்றிருந்தபோதிலும் அவர்களுடைய நன்மையைக்கருதி பிராதை ஒழுங்காய் நடத்தக் கடமைப்பட்டவனாகான். வாதி தன்னிஷ்டம்போல் நடந்துக்கொள்ளலாம். பிராதை வாப்பீஸ் வாங்கிக்கொள்ளலாம், பிரதிவாதியோடு ராஜிசெய்துகொள்ளலாம். அவன் இஷ்டம்போல் நடந்துகொள்ளலாம். மற்றவர்கள் வாதியைத் தடுக்கவாவது, வாதியின் பொருளையும் பொழுதையும் செலவிட்டு நடத்தக் கட்டாயப்படுத்துவதற்கும் அதிகாரமில்லை. மேற்கண்டவிதமாய் (1825) 57 இங்கிலீஷ் ரிபோர்டுகளின் 320-இலும், (1903) 1-சான்ஸரி 203-இலும் (1906) 94 L. T 502-இலும் அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்வாதி தன்னுடைய நன்மை லாபத்தைக்கருதி பிராதை வாபிஸ் வாங்குவதாலும் அல்லது சமாதானமாய்ப்போனாலும் மற்றவர்களுக்குபிராதில் பாத்தியதை கிடையவேகிடையாதென்று சொல்லக்கூடாது. வாதிக்குத் தீர்மானமாகிற பைசலுக்கு மற்றவர்களும் கட்டுப்படவேண்டிய சட்டமிருப்பதால் மற்றவர்களுக்கு முக்கியமான பாத்தியதை உண்டென்றே சொல்லவேண்டும். அப்படியிருக்க வாதி பைசலுக்குமுன்தியே காலஞ்சென்றுவிட்டால் மற்றவர்களின் பாத்தியதையைக்கொண்டு ஏன் பிராதைத் தொடரக்கூடாது? டிக்கிரீக்கு மற்றவர்கள் கட்டுப்படவேண்டியதால் டிக்கிரீக்குப்பிறகு வாதி காலஞ்சென்றால் மேல்நடவடிக்கையை மற்றவர்கள் நடத்தலாமென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. அப்படியிருக்க டிக்கிரீக்குமுன் வாதி காலஞ்சென்றால் மற்றவர்கள் ஏன் மேல்நடத்தக்கூடாது? ஒரே விஷயத்தைப்பற்றி பற்பல தாவாக்கள்செய்ய இடங்கொடுக்காதபடி ஒரு வகுப்பினருக்காக யாதொருவர் பிரதிநிதியாக பிராதை நடத்தலாமென்றுஅனுமதி கொடுக்க சட்டம்ஏற்பட்டிருக்கிறது. தவிர மற்றவர்களும் வாதியினுடைய நடத்தையை நம்பாமல் அல்லது வேறு காரணத்தால் பிராதில் சேர்ந்துகொள்ள மனமிருந்தால் கோர்ட்டார் அதற்கு இடங்கொடுக்லாமென்ற சவுகரியத்தைப் பின்வழக்குகள் அதேவிஷயமாய் எடுக்கவொட்டாமல் நிறுத்துவதற்காகவே அளிக்கப்பட்டிருக்கிறது. தவிர மற்றவர்கள் எக்காலத்திலும் பார்ட்டிகளாகச்சேரவிண்ணப்பம் கொடுக்கலாமென்று ஏற்படுகிறது. வாதியுடன் சேர்ந்து நடத்த அனுமதி கொடுக்கப்படலாமென்றிருக்கிற வாதி மறித்தபின் வாதியின் வார்ஸ்கள் லாயக்கில்லாத பட்சத்தில் மற்றவர்கள் பிராதை மேல்நடத்த ஏன் அனுமதி கொடுக்கப்படக்கூடாது? வாதி மற்றவர்களைச் சேர்த்துக்கொள்வதற்குக் கோர்ட்டாருடைய யுக்தமுண்டு. முந்திய நடவடிக்கைகள் வியர்த்தமாய் போகாவண்ணம் பலபேர்களுடைய ஒரே அம்சமான பிராதை ஒருவர் பிரதிநிதியாக நடத்தும்படி சவுகரியம் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே டிக்கிரீயாகுமட்டும் வாதி தாவாவில் சர்வ ஸ்வதந்தரத்தை யுடைத்தாயிருப்பதாயும் தான் மற்றவர்களுக்கு டிரஸ்டிபோலொத்த நிலைமையிலுள்ளவனல்லவென்றும் டிக்கிரீக்குமுன் வாதி இறந்துபோனால் பிராதும் இறந்துபோனதாக பாவிக்கவேண்டுமென்றும் இத்தகைய பிராதில் வாதியின் மரணத்திற்குப் பிறகு தாவாசெய்யும் பாத்தியதை வேறு யாருக்கும் செல்லத்தக்கதல்லவென்றும் மனுதாருக்காக வக்கில் மிஸ்டர் எஸ். ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் செய்த வாதம் ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. ராமஸ்வாமி அய்யங்கார் என்ற எதிரியை வாதியின் ஸ்தானத்தில்வைத்துப் பிராதை மேல்நடத்த உத்தரவளித்தது சட்டவிரோதமல்ல. ரிவிஷன் மனுசெலவுடன் தள்ளுபடியாச்சுது.

———:o:———

## Full Bench Case.

Messrs. சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் சங்கரன் நாயர்)

மதராஸ்.

L.P.A. No. 59 of 1911—28 ஏப்ரல் 1913.

அங்கம்மாள் Vs மேலக்முகம்மது சயித் அஸ்லாம் சாகிப்.

நிலச்சுவாந்தாரிடம் 20 வருஷகாலத்திற்கு வாதி ஒரு காலி நிலத்தை குத்தகைத் தீர்வைக்கு சீட்டுப்பண்ணிக்கொண்டு அந்தக்காலத்திற்குள் ஷை நிலத்தில் தன் சொந்தத்துகையைக் கொண்டு கட்டடம் கட்டி அனுபவித்து வருகையில் நிலபாத்தியதை கைமாறிவிடவே வாதி புதிய சுவான்தாரிடம் புதிய சீட்டுச்செய்துகொண்டு அதில் தான் ஒரு மாத நோட்டீஸில் நிலத்தை விட்டுப்போய்விடுவதாய் ஒப்புக்கொள்ளப்பட்டதுந் தவிர கட்டடத்திற்கு வாதியுடையபாத்தியதையை சுவான்தார் அங்கீகாரம் செய்து கொடுத்திருக்கிறார். சுவான்தார் மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டில் குத்தகைச்சீட்டின் ஒப்பந்தப்படி வாதியின்பேரில் இஜக்ட்மெண்டு பிராது செய்து டிக்ரீபெற்று வாதியிடமிருந்து கட்டடத்துடன் கூடிய நிலத்தை சுவாதீனம் அடைந்தார். அதன்மேல் வாதி தன்னுடையகட்டடபாத்தியதையை அங்கீகாரம் செய்த சுவான்தாரிடம் ஷை கட்டடக்கிறயத்துகையை காம்பென்ஸேஷனாக அடையவேண்டுமென்று மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் கிரயமதிப்பை ரூபா 2500க்கு மேலாகக் குறித்து சுவான்தார் பேரில் அசல் தாவா செய்தார். ஷை கேசைவிஜாரணை செய்த ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் பிராதை தள்ளுபடிசெய்து விட்டார்கள். அதன்மேல் வாதி அப்பீல் செய்ததில் அப்பீலை ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் அசல் கோர்ட் தீர்ப்பைக்காயம் செய்தார். ஷை அப்பீலை ஈரங்கி கேட்ட மற்றொரு நியாயாதிபதியாகிய ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்கள் மாறான அபிப்பிராயங்கொடுத்து வாதிக்குப் பரிசாரம் அளிக்கவேண்டுமென்று தீர்மானித்தமையால் வாதி தனக்கு விரோதமான அப்பீல் பைசலின் மேல் லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் செய்தார். ஷை கேசானது அப்பீல் ஈரங்கி கேட்ட ஹானரபில் மிஸ்டர்சீவ் ஜஸ்டிஸ் & ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்களுடன் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்களும் புல்பெஞ்சாகக்கூடி மறுபடியும் ஈரங்கிகேட்கப்பட்டு ஹானரபில் மிஸ்டர் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் பழய அபிப்பிராயத்தையே உறுதிப்படுத்தி அபிப்பிராயம் கொடுத்து வாதியின் பிராது தள்ளுபடியானது சரியென்று சொன்னார்கள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் அதே அபிப்பிராயமாய் வாதியின் பிராது செல்லாதென்று தீர்ப்பளித்தார்கள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயாரவர்கள் பிரத்தியேகமான தீர்ப்பில் தாவ கட்டடத்தை வாதியின் சொந்த ஐவேஜிலிருந்து கட்டிமுடித்தது யதார்த்தமென்றும் அதற்குறிய கிறயத்தை நிலச்சுவான்தார் கொடுக்கபிரியப்படாவிட்டால் வாதி ஷை கட்டத்தை இடித்து அப்புறப்படுத்த பாத்தியமுடையவரென்றும் வாதி நிலசுவாதீனத்தை ஒப்புக்கொடுக்குமுன் அல்லது நியாயமானபடி கூடிய சீக்கிரத்தில் கட்டடத்தைப்பிரித்துக்கொண்டு போகக்கடவனென்றும் அவ்விதமாய்ப் பிரித்துக்கொண்டு போகத்தவறினால் மேற்படி கட்டடத்தின் பாத்தியதை வாதியிடமிருந்து நிலச்சுவாந்தாருக்கு மாறிப்போய் விட்டதாகச்சொல்லக்கூடாதென்றும் வாதி பிரித்தெடுக்காவிட்டால் நிலச்சுவாந்தார் தாமே அந்த வேலையைச்செய்து அப்படி இடித்துத் தள்ளுவதால் நேரும் செலவை வாதியிடம் வசூலித்துக்கொள்ள பாத்திய முண்டென்றும் அபிப்பிராயப்பட்டு, மற்ற இரண்டு நியாயாதிபதிகளும் 27 மதராஸ் 211 இன் 216-வது பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற மதராஸ் ஹைகோர்ட் அபிப்பிராயத்தை அனுசரித்திருக்கிறார்களென்றும், அந்தக்கேசின் அபிப்பிராயம் இங்கிலீஷ் காமன் லா முறையை ஒத்ததாயிருப்பதாயும் காம்பென்ஸேஷன் விஷயமான அந்த இங்கிலீஷ் முறையானது தர்ம நியாயத்திற்கும் உள்மனச்சாக்ஷிக்கும் உகந்ததல்லவென்றும் அவை குடிகளுக்கு அதிக நிர்பந்தமானதும் கடுமையானதுமாயிருப்பதும் தவிர சம்பிரதாயத்தைப்போறுத்து ஏற்பட்டிருக்கும் இந்தியர்களுக்கு இங்கிலீஷ் முறையால் விளையும் தீங்குகளை நிவர்த்திக்கும் வண்ணமாய் இந்தியன் ஆக்டுகள் நாளடைவில் சீர்திருத்தப்படுகின்றனவென்றும், மதராஸில் 1859 வது வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சதர் கோர்ட்டில் கியாதி பெற்ற ஜஸ்டிஸ் ஹால்லோவே& ஜஸ்டிஸ் இன்னிஸ் துரையவர்களும் (1871) 6 மதராஸ் ஹைகோர்ட் ரிபோர்ட்டுகள் 245-இல் கொடுத்திருக்கிற அபிப்பிராயம் அனுசரிக்கத்தக்கதாகுமென்றுசொல்லி, மற்ற இரண்டு நியாயாதிபதிகளுக்கு மாறாக தீர்ப்பளித்தார்கள்.



ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களுக்கு ஒத்த அபிப்பிராயங்கொடுத்த ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் கொடுத்த தீர்மானத்தின் சுருக்க அம்சங்களாவன:—

டிரான்ஸ்பர் ஆப் ப்ராபர்டி ஆக்ட் 108-வது பிரிவில் மற்றொருவனுடைய நிலத்தில் கட்டியிருக்கிற கட்டடத்தை குத்தகை பாத்தியதை முடியுமுன்னமேயே பிரித்துக்கொண்டுபோகவேண்டுமென்றும் எந்த ஸ்திதியில் துவக்கத்திலிருந்ததோ அதே ஸ்திதியில் ஷை நிலத்தைசுவான்தாருக்கு ஒப்பிவிக்கவேண்டுமென்றும் ஏற்பட்டிருக்கிறது. தாவா கட்டடமானது புதிய சுவான்தாரிடமிருந்து வாதி ஒப்புக்கொள்ளுமுன்னமேயே ஏற்பட்டிருந்ததால் 11-வது ஆதாரவாக பயில் செய்யப்பட்டிருக்கிற புதிய குத்தகைச் சீட்டின்படி அனுபோகத்தில் புகுந்த பின் கட்டிய கட்டடங்கள் போல ஷை ஆக்டின் முறைப்படி பிரித்துக்கொண்டுபோக வேண்டிய கடமை இல்லையென்று வாதிக்காகச் சொல்லப்பட்டது.

ஆனால் அந்த பாயிண்டைப்பற்றி கீழ்கோர்ட்டுகளில் பிரஸ்தாபிக்கப்படவில்லை. என்றாலும் ஆக்டின் முறை தாவாகேசுக்கு செல்லாதென்று தீர்மானிக்கத் தேவையில்லை. 11-வது ஆதாரவில் வாதிக்குக் கட்டடபாத்தியதை உண்டென்று அங்கீகார வசனம் ஏற்பட்டதின் கருத்தாவது, முந்திய குத்தகை பாத்தியதை தீர்ந்தவுடன் நிலத்தைக் கட்டடத்துடன் புது சுவான்தாருக்கு ஒப்பிவித்து விட்ட பாவனையாகக் கூடாதென்றும், புதிய குத்தகைக்காலத்தில் கட்டடம் நிலத்தில் முன்போலவே நிற்க அனுமதி கொடுத்ததற்கு ஆதாரமாக அந்த வசனம் ஏற்பட்டிருக்கிறதாகவும் கட்டடத்தில் வாதிக்கு பாத்தியம் உறுதியாக்கப்பட்டதால் முன் குத்தகையின்படி என்ன பாத்தியதைகள் ஏற்பட்டிருந்ததோ அவைகள் தொடர்ந்து வருமென்று ஒப்புக்கொள்ளப்பட்டதாகவும் பாவிக்கவேண்டியே. ஆகையால் ஷை வசனங்கள் ஏற்பட்டதால் வாதிக்கு அனுகூலமாக யாதொரு புதிய பாத்தியதை உண்டாக்கப்பட்டதாக நிதானிக்கக் கூடாது. தவிற ஷை பாயிண்டானது கீழ்கோர்ட்டுகளில் வாதாடப்பட வில்லை.

சுவான்தாருடைய சம்மதத்துடன் கட்டினாலும் அனுமதியன்னியில் கட்டினாலும் நிலத்தைக்காலிசெய்து கொடுக்கவேண்டிய காலத்தில் ஷை நிலத்தில் தன்னால் கட்டி விடப்பட்டிருக்கிற கட்டடங்களுக்காக பிரதிப்பிரயோஜனம் (காம்பென்ஸேஷன்) கேட்க பாத்திய முண்டென்று சட்டத்தில் விதிக்கப்படவில்லை. சுவான்தார் சம்மதத்தின்பேரில் கட்டடம் கட்டப்பட்டிருந்தால் அந்த விஷயமானது பின்னால் சுவான்தார் ஆக்ஷேபிக்கத் தகாதபடிக்கும் சம்மதமென்ற ஒப்பந்தத்திற்காதாரமும் ருஜூ அம்சத்தில் வாதிக்கு பிரயோஜனமுமாகும். மேற்கூறிய அபிப்பிராயம் 21 மதராஸ் 211-இன் 216-இல் சொல்லப்பட்டிருக்கிறது. அது தப்பான அபிப்பிராயமல்ல.

தாவா கட்டடத்தைக் கட்ட பழய சுவான்தார் அனுமதி கொடுத்ததாக ருஜூ அம்சம் சம்பத்தக்கதாய் யாதொன்றும் கிடையாதென்றும் ஆனால் பழய ஸ்வான்தாருடைய வார்ஸ்தாராகிய, தாவா கேசில் 1-ம் பிரதிவாதிக்கு, ஷை கட்டடத்தில் வாதி விருத்தியம்சமான சில பாகங்களைச்சேர்த்து கட்டின தகவல் தெரியுமென்று ஏற்படுவதாயும் அசல் கோர்ட்டார் நம்பியிருக்கிறார்கள். அவ்வித ருஜூ அம்சத்தால், வாதி கட்டடத்தைப்பிரித்துப் போகாவிடில் அதின் கிறயத்தைக் கொடுத்துவிடுவதாய் ஒப்புக்கொண்டதாக யூகிக்க இடமில்லை. முந்திய ஸ்வான்தாருடைய அனுமதியின்பேரில் கட்டியிருந்தாலும் வாதி கேட்கும் பரிகாரத்திற்குப் போதுமான ஆதாரமாகாது. கட்டடபாத்தியதையை ஒப்புக்கொண்

டால் குத்தகைக்காலத்தவணைக்குள் சொந்த பாத்தியதையைக் கொண்டாடலாமேயொழிய பின்ஞல் ஸ்வான்தார் ஆக்ஷேபிக்கத்தகாத யாதொரு உடன்படிக்கையை ரூபிக்காது.

27-மதராஸ் கேசில் சொல்லியிருக்கிறபடி ப்ராபர்டி ஆக்ட் 108-வது பிரிவில் குத்தகை வாய்தாவுக்குப் பிந்தி கட்டடங்களைப் பிரித்துக்கொண்டு போகவேண்டிய பாத்தியதை விஷயமாய் யாதொரு விதிமுறையும் சொல்லபடாத போதிலும், அநுவிஷயமாய் நாட்டு வழக்கத்தை அனுசரித்து அல்லது ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி நடக்கலாம். நாட்டு வழக்கத்தை இன்ன விதமென்று (1860) பங்காளம் L. R. அனுபந்தத்தில் விளம்பியிருக்கிறது. அதாவது ஸ்வான்தாருடைய யுக்தப்படி கட்டடத்திற்குக் கிறயம் கொடுத்துவிடலாம். அவ்விதமாய்க் கொடுக்க மனமில்லாவிடில் கட்டடத்தைப் பிரித்துக்கொண்டுபோகும்படி அனுமதி கொடுக்கலாம். இந்தியாவில் இவ்விதமாய்த்தான் வழக்கமாக நடந்துவருகிறது. ஆகவே குத்தகை வாய்தா கடந்த பிறகு ஸ்வான்தாருடைய இஷ்டத்தைப் பொருத்து நடக்கவேண்டுமேயொழிய யாதொரு கடமையும் சட்டத்தில் அவருக்கு விதிக்கப்படவில்லை. வாய்தாவுக்குள் ஸ்வான்தாருக்கு யுக்தாதிகாரம் கிடையாது. வாய்தாவுக்குப்பின் ஸ்வான்தார்களுக்கு யுக்தமேற்பட்டிருப்பதற்கு இசைவாக கோர்ட்டார் இஜக்ட்மெண்டு பிராதுகளில் டிக்கிரீயளிக்கும்பொழுது பிரதிவாதிகளைத் தங்களால் கட்டப்பட்டிருக்கும் கட்டடம் முதலியவைகளைப் பிரித்துக்கொண்டுபோவதற்கு சவுகரியமாய் டிக்கிரீயை நிறைவேற்றும் அதிகாரத்தை சொற்ப காலத்திற்கு நிறுத்தி வைக்கிறார்கள். ஸ்வான்தார் ஆகவே வாதிக்கு வாய்தா கடந்தபின் சொற்பகாலத்தவணை கொடுத்து அதற்குள் பிரித்துக்கொண்டுபோக அனுமதி கொடுத்திருக்கவேண்டும். 21 அலகபாத் 496-இல் பிரிவிகௌன்ஸிலார் அதே அபிப்பிராயமாய்த் தீர்மானித்திருக்கிறார்கள். ஸ்வான்தாருக்கு அவ்வித அனுமதி யுக்தாதிகாரம் வாய்தா கடந்துபோகுமுன் ஏற்படுவது நியாயமல்ல. நிலத்தைக் காலிசெய்து கொடுக்கவேண்டுமென்று கேட்க அதிகாரம் வருமுன் மேல்கண்ட அனுமதி அதிகாரத்தைச்செலுத்தி பிரயோகப்படுத்த யத்தனிக்கக்கூடாது. ஆகையால் வாதியைப்போலொத்தவர்களுக்கு டிக்கிரீ தேதிமுதல் தான் காலத்தவணை கணிக்கப்படவேண்டும்.

ஆனல் நிலச்சுவாதீனத்தை ஒப்புக்கொடுத்துவிட்டபிறகு அதிலுள்ள கட்டடத்தை பிரித்துக்கொள்ளும் பாத்தியதையையாகிலும் அல்லது காம்பன்ஸேஷன் கேட்கும் பாத்தியதையையாகிலும் வகித்திருக்கலாமென்ற சட்டமுறை ஹிந்து லாவில் அல்லது மகம்மதிய லாவில் கிடையாது. குத்தகை வாய்தாவுக்குப் பிறகு பிரித்துக்கொண்டுபோகப்போதுமான காலமிருந்தும் சுவாதீனம் செய்யுமுன் அப்படிச் செய்யத்தவறினல் அதற்குப்பின் யாதொரு பாத்தியதையும் ஏற்பட நியாயமில்லை. தாவா கேசில் மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டார் டிக்கிரீ யளித்த பிறகு வாதி சுவாதீனத்தை ஒப்புக்கொடுக்க நேரிட்டது. கோர்ட்டார் மற்ற கேசுகளில் நிறைவேற்றும் அதிகாரத்தை டிக்கிரீயிலேயே சொற்பகாலத்திற்கு நிறுத்தி வைப்பது வழக்கமாயிருக்க மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டார் இஜக்ட்மெண்டு டிக்கிரீகளில் அவ்வித உத்தரவு செய்வது வழக்கமில்லையென்று தெரியவருகிறது. அப்படி ஷை டிக்கிரீயில் தவணை வாதிக்குக் கொடுக்கப்படாத போதிலும் இந்த கோர்ட்டார் வாதிக்கு அந்த சவுகரியத்தைத் தரலாம். ஆனல் அவ்வித சவுகரியத்தைக் கொடுக்க நியாயமில்லை. ஏனெனில் 1907 பிப்ரவரியில் வாதி நிலத்தை சுவாதீனம்செய்து கொடுத்துவிட்டு 1908-ம் வருஷத்தில் இந்தப் பிராதைக் கொண்டுவந்திருக்கிறார். இடையில் பிரித்துக்கொள்ள போதுமான காலமிருந்தும் அப்படிச்செய்யாமல் சட்ட விரோதமாக காம்பன்ஸேஷனுக்காக இந்த தாவா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தக்கோர்ட்டார் தவணை கொடுக்கவும் நியாயமில்லை.

வாதியின் தாவா தள்ளுபடியானது சரியென்று இரண்டு ஜட்ஜ்மார்களுடைய அபிப்பிராயம்மேலாகி ல்ட்டர்ஸ் பேடெண்டு அப்பீலும் தள்ளுபடியாச்சுது.

———:O:———



(மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் & மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யர்)

**மங்களூர் ஜில்லா.**

**A. 7107to13 of 1910-2 ஏப்ரல் 1913.**

நரசம்ம ஹெகாட்தி Vs பில்லகேஸ பூஜாரி

1864-ம் வருஷத்தில் மூலபுருஷன் தாவா சொத்துக்களைத்தன்னுடைய மனைவிக்கு A-ஆதரவால் சுத்தவிக்கிறயம் செய்துவிட்டார். ஷை-யன் 1903-இல் தன்னுடைய குமாரத்தியாகிய வாதிக்கு ஷை சொத்துக்களை B-ஆதரவால் நன்கொடையளித்துவிட்டு காலஞ்சென்றுவிடவே வாதி B-ஆதரவைக்கொண்டு தன் தாயாரிடம் குத்தகைக்கு ஷை நிலங்களை அனுபவித்துவந்த 1-2, பிரதிவாதிகளிடமிருந்து ஷை நிலங்களை சுவாதீனமடையும்பொருட்டும் நன்கொடைக்குப்பிந்தியகாலத்து மாசூல் பாக்கிக்காகவும் உடிப்பி டி-மு. கோர்ட்டில் தாவாசெய்து அதில் மூலபுருஷனுடைய மற்ற பிள்ளைகளையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்திருந்தாள். 1-2பிரதிவாதிகள் தாவாசொத்தை 3-ம் பிரதிவாதியாகிய மூலபுருஷனுடைய மகனிடத்தில் ஒப்புவித்துவிட்டதாயும் மாசூல் பாக்கியையும் ஷை-யாரிடமே செலுத்திவிட்டதாகவும் ஸ்டேட்மெண்டுகொடுத்தார்கள். வாதியின் சகோதரர்களும் சகோதரிகளுமாகிய மற்ற பிரதிவாதிகள் கொடுத்த ஆன்ஸரில் வாதியுடைய பலவந்தத்தின்பேரில் தங்கள் தாயார் B-ஆதரவு நன்கொடைப்பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும் ஆகையால் அது செல்லத்தக்கதல்லவென்றும், தவிற தங்கள் தகப்பனர் A-ஆதரவால் செய்த விக்கிறயதஸ்தவேஜில் தன் மனைவி "புத்திர பவுத்திர பரம்பரியமாய் அனுபவிக்கவேண்டியது" என்று கண்டிருப்பதால் தாவா சொத்துக்களைத் தங்கள் தாயருக்கும் புத்திரர்களுக்கும் பொதுவாய் விக்கிறயம் செய்துவிட்டதாக பாவிக்கவேண்டுமென்றும் ஆகையால் B-ஆதரவு மனோராஜியில் எழுதிக்கொடுக்கப்பட்டபோதிலும் தங்கள் பாத்தியதையை நிரகாரித்து தானம்செய்தது சட்டவிரோதமென்றும் எதிர்வாதம் செய்தார்கள்.

டி. மு. கோர்ட்டார் B ஆதரவை பலவந்தத்தின்பேரில் எழுதிக்கொடுக்கப்பட்டதாக பிரதிவாதிகள் ருஜுப்படுத்தவில்லையென்றும் ஆனல் A ஆதரவின்படி தாவா சொத்துக்கு வாதியின் உடன் பிறந்தார்களும் பாத்தியஸ்தர்களாயிருக்கிறதாக அதாவது மூலபுருஷன் புத்திர பவுத்திர பாரம்பரியமாய் அனுபவிக்கும்படி தன் மனைவிக்குச் செய்த விக்கிறயத்தால் பிள்ளைகளுக்கும் தாவா சொத்தில் பாத்தியதை உண்டாயிற்றென்றும் அபிப்பிராயப்பட்டு B ஆதரவால் வாதிக்கு பாத்தியதைஏற்பட நியாயமில்லையென்றும் சொல்லி பிராதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

சப்கோர்ட்டார் அப்பீலில் A ஆதரவில் கண்ட வசனத்தின் கருத்தைப்பற்றி டி. மு. கோர்ட்டாருக்கு ஒத்து அபிப்பிராயப்பட்டதுமல்லாமல் வாதியுடைய பலவந்தத்தின்பேரில் B ஆதரவு பிறந்ததாகத் தீர்மானித்து மொத்தத்தில் வாதியின் தாவா தள்ளுபடியானது சரியென்று அப்பீலை டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். அதன் மேல் வாதி மதராஸ் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யவே அங்கு வாதிக்கனுகூலமாக B ஆதரவு டி. மு. கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி பலவந்தத்தின்பேரில் எழுதிக்கொடுக்கப்பட்டதல்லவென்றும், அதாவது வாதியின் தாயார் தன் மனோராஜியில் ஷை நன்கொடையளித்ததாகவும், தவிற A ஆதரவால் வாதியின் தாயாருக்கு சர்வ ஸ்வதந்தர பாத்தியதையும் ஏற்பட்டதாகவும் மற்ற பிள்ளைகளுக்கு அதில் பாத்தியதை ஏற்பட்டதாக நிதானிக்கக் கூடாதென்றும் சொல்லி ஹைகோர்ட்டார் வாதிக்கு தாவா சொத்தை சுவாதீனம் செய்துகொடுக்கவேண்டுமென்று டிக்கிரீயளித்தார்கள்.

ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:— A-ஆதரவு கிறயபத்திரமாகத் தோன்றிய போதிலும் அதையும் நன்கொடைப்பத்திரமென்பதாகவே பாவிக்கவேண்டும். அவ்விதமாகவே கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். அதைப்பற்றி இந்தக்கோர்ட்டில் மாறுன வாதம் செய்யப்படவுமில்லை. B ஆதரவு பலவந்தத்தின்பேரில் எழுதிக் கொடுக்கப்பட்டதா வென்று முதலில் யோஜித்துப் பார்க்கவேண்டும். ஏனெனில் பலவந்தமாகப் பிறந்ததானல் அது செல்லாது.

அப்படியானால் A ஆதரவின் கருத்தைப்பற்றிய இரண்டாவது பாயிண்டைப்பற்றித் தீர்மானிக்க அவசியமிராது.

B ஆதரவு பலவந்தமாய்ப்பிறந்ததைப் பற்றி ஏற்பட்ட ருஜு அம்சம் போதுமானதல்ல. சப் கோர்ட்டார் அபிப்பிராயத்திற்கு வாதியின் 2-வது சாட்சியின் வாக்குமூலமும் 3-ம் பிரதிவாதியின்சாட்சி வாக்குமூலமும் ஆதாரமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. B ஆதரவு பிறந்த வெகுகாலத்திற்குப்பின் வாதியின் தாயார் வாதியின் வீட்டுக்கு (மருமகன் வீட்டுக்கு)ப்போய் இரண்டுமாதம் தங்கியிருந்து வந்தபிறகு ஷை ஆதரவைப்பற்றிக் கேட்கப்பட்டதில் ஷை தஸ்தவேஜில் கையொப்பம் போடச்சொன்னதால் தான் கையொப்பம் செய்ததாகவும் அதில் கண்ட விவரம் இன்னதென்று தனக்குத் தெரியாதென்றும் ஷை சாட்சிகளிடம் சொன்னதாக ருஜுவாகமேற்பட்டது.

அவ்வித சட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாயிருந்தாலும் அதினால் வாதி பலவந்தம் செய்ததாகத் தீர்மானிக்கப் போதுமான காரணம் ஏற்படாது. மகள் தாயாரைத் தனக்கு சொத்துக்களை தனிமையாய் தானம் செய்துவிடவேணுமாய்க்கேட்டுக்கொள்வதாலும் தாயார் பிரியப்பட்டு அவ்வித நன்கொடையளித்தாலும் தப்பிதம் ஒன்றும் கிடையாது. பலவந்தம் என்று ஷை நடத்தைகளை யூகிக்கக்கூடாது. அன்றியும் வாதியின் தாயாருடைய ஷை வார்த்தைகள் தஸ்தவேஜு பிறந்த வெகு காலத்திற்குப்பின் சொல்லப்பட்டிருக்கிறது. தஸ்தவேஜு பிறந்த காலத்தில் சொல்லப்பட்டாலும் அவளுடைய மனோபாவம் விளங்கியிருக்கும். மனமில்லாமல் எழுதிக்கொடுத்திருந்தால் அதை நிராகரித்தவிதமாய் யாதொரு நடத்தையாலும் வாதியின் தாயார் நடந்துகொள்ளவில்லை. ஆகையால் எவிடென்ஸ் ஆக்ட் (Evidence Act) 8, 21-வது பிரிவுகளிலடங்கிய அம்சங்களுக்குத் தக்கபடி ஷை ஸ்டேட்மெண்டை சாட்சியத்தில் ஏற்றுக்கொள்ளச் சட்டமாகாது. அந்த ஸ்டேட்மெண்டைப் பற்றிய சாட்சியங்களைத் தவிர்த்து பலவந்தத்தைப்பற்றி ரூபிக்க வேறு ருஜு அம்சமே இந்தக்கேசில் விடப்படவில்லை. ஆகவே B-ஆதரவு மனோராஜியில் சம்மதித்து வாதியின் தாயாரால் எழுதிக்கொடுக்கப்பட்டதாக பாவிக்கப்படவேண்டும்.

A-ஆதரவில் செப்பியிருக்கும் வசனங்களின் கருத்தைப்பற்றி யோஜிக்குமிடத்து **புத்திர பவுத்திர பாரம்பரியமாய்** அனுபவிக்கவேண்டுமென்ற பதத்தால் சர்வ ஸ்வதந்திர பாத்தியதை அளிக்கப்பட்டதாகவே அனுமானிக்கவேண்டும். அவ்வசனங்கள் ஸ்வதந்தர பாத்தியதைக்கு யாதொரு நிர்பந்தமும் ஏற்படுத்தினதாகச் சொல்லக்கூடாது. மூலபுருஷன் கிரயம் செய்யும்பொழுது தன் மனைவியுடன் தன் பிள்ளைகளும் ஷை சொத்தை அடையவேண்டுமென்று எண்ணியிருக்கலாம். ஆனால் **புத்திர பவுத்திர பாரம்பரியமாய்** என்ற வசனங்களால் அந்த எண்ணம் ருஜுப்படுத்தப்போகாது. ஷை வசனங்கள் சர்வ ஸ்வதந்தர பாத்தியதையை அளிப்பதற்குறிய வசனங்களென்பதில் சந்தேகமேயில்லை. தன் மனைவி தன் அந்திய காலத்தில் பிள்ளைகள் எல்லோருக்கும் ஷை சொத்துக்களை மாற்றிவிடுவாளென்று நம்பியிருக்கலாம். அப்படிச் செய்வதற்காக யாதொரு நிபந்தனையும் A-ஆதரவில் குறிக்கப்படவில்லை. மனைவியின்பேரில் நம்பிக்கையுடனிருந்தமையால் அவ்விதமான நிபந்தனைகள் குறிக்கப்படவில்லை. 16 மதராஸ் 203-இல் கிரயம் மனைவிக்கும் மகனுக்கும சேர்ந்து செய்யப்பட்டதால் அந்தக்கேசின் அம்சங்கள் பிரதிவாதிகளுக்கு உதவக்கூடியவையல்ல. ஏ-ஆதரவு பிறந்ததற்குமுன் வேறு இரண்டு தஸ்தவேஜுகள் எதிரிகளுக்காக எடுத்துக் காண்பிக்கப்பட்டன. கிரயப்பத்திரத்திற்கு மசோதா முதலில் எழுதப்பட்டதாகவும் அதில் மூலபுருஷன் தாவா சொத்துக்களைத் தன்பிள்ளைகளுக்கும் சேர்த்து விக்கிரயம்செய்ய உத்தேசித்ததாக ஏற்படுகிறதென்று வாதிக்கப்பட்டது. A-ஆதரவின் வசனங்கள் சந்தேகத்திற்கிடங்கொடாதவண்ணம் ஸ்பஷ்டமாய் மனைவிக்கென்று எழுதிக்கொடுக்கப்பட்டிருப்பதால் முன் தயாரிக்கப்பட்ட மசோதாவைக்கொண்டு ஏ-ஆதரவின் கருத்தை மாற்றவாவது யூகிக்கவாவது கூடாது. மூலபுருஷன் தன் முந்திய எண்ணத்தையே



மாற்றி A ஆதரவில் கண்டவிதமாய் மனைவிக்கு மட்டும் விக்கிரயம் செய்திருக்கலாம். வசனங்கள் தெளிவாய் மாற்றி எழுதியிருப்பதால் எண்ணமும் மாறினதாக யூகிக்கப்படலாம். A ஆதரவு பிறந்தபின் வாதியின் தாயார் ஒரு தீர்வை பாக்கிக்காக செய்த வியாஜ்ஜியததில் தன் மகளையும் வாதியாகச் சேர்த்ததை எதிரி எடுத்துக் காண்பித்தார்கள். ஆனால் வேறொரு வியாஜ்ஜியத்தில் தானே தனிமையாய் நடவடிக்கை யெடுத்திருக்கிறாள். இவைகள் ஏ ஆதரவுக்கு 18 வருஷங்களுக்குப்பின் நடந்தவைகள். தாவா நிலங்களைச் சேர்ந்த ஒரு நிலத்திற்காக வாதியின் சகோதரன் தன்பேருக்குப் பட்டாசெய்து கொள்ள ரெவினியூ தரப்பில் விண்ணப்பம் கொடுத்ததில் ரெவினியூ கோர்ட்டார் வாதியின் தாயாருடைய சம்மதத்தைக்கேட்டுத் தான் மேற்படியாருக்கு சாச்வத கவுல் உத்தரவளித்திருக்கிறார்கள். தவிர தாவா சொத்துக்களைப் பரிபாலனம் செய்த விஷயத்தில் வாதியின் தாயார் எப்போதும் தன் புத்திரர்களைக் கலந்து நடத்தினதாகத் துலங்கவேயில்லை. ஆகையால் A ஆதரவின்படி தாவா சொத்துக்களை வாதியின் தாயார் தனிமையாய் அடைந்து அனுபவித்துவந்ததாக ஏற்படுகிறது.

எதிரிகளுக்காக வக்கில் மிஸ்டர் K. நாராயண ராவ் அவர்கள் இரண்டு வேறு முக்கியமான ஆக்ஷேபணைகள் எடுத்து வாதாடினார்கள். டி. மு. கோர்ட்டார் தீர்ப்பில் A ஆதரவு பார்வைக்கு எவ்விதமாய் புலப்பட்ட போதிலும் முந்திய மசோதாவை ஒத்துப்பார்க்குமிடத்து மூல புருஷனால் தன் மனைவியிடத்தில் தன் 'புத்திரர்களுடைய பாத்தியதையைப் பற்றி ஒரு இரகசியமான டிரஸ்ட் (Secret trust) வைக்கப்பட்டதாய்த் துலங்குமென்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வித அந்தரங்கமான டிரஸ்ட் (பொருப்பை வாதியின் தாயார் ஏற்றுக்கொண்டதாகச் சொல்லப்படவில்லை. வேறு விதமானமசோதா ஒன்று முன் தயாரிக்கப்பட்டதாக வாதியின் தாயாருக்குத் தெரியுமென்பதாகவும் ரூபிக்கப்படவில்லை. ஆகையால் இரகசிய டிரஸ்ட் விஷயமான வாதம் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

வாதியின் தாயார் தாவா சொத்துக்களையும் மற்ற குடும்ப சொத்துக்களோடு சேர்த்து மொத்தமாய் ஆண்டு வந்தமையால் தாவா சொத்துக்கள் புத்திரர்களுக்கும் பாத்திய முண்டென்ற கருத்தை விளக்குமெனச் சொல்லப்பட்டது. ஆனால் அதைப்பற்றி இஷ்யூ ஏற்படவுமில்லை. அது சட்ட பாயிண்டுமல்ல. இந்தக்கோர்ட்டில் அதைப்பற்றி பிரஸ்தாபிக்க விடக்கூடாது. அன்றியும் தொடர்ச்சியாய் தாயாரும் மக்களும் சகல சொத்துக்களையும் பொதுவாய் அனுபவித்து வந்ததாக ருஜுப்படுத்தியிருக்கவேண்டும். அவ்வித ருஜுபாகம் எதிரிகளுக்காக பயிலான தஸ்தவேஜுகளால் துலங்கவில்லை. ஆகையால் வாதிக்கு B ஆதரவால் தாவாசொத்தில் நன்கொடை பாத்தியதை ஏற்பட்டது சரியே. கீழ்கோர்ட் தீர்ப்புகள் ரத்தாகி வாதிக்கு சுவாதீனடிக்கிரீயளிக்கப்பட்டது.

——:O:——

(Messrs ஜஸ்டிஸ் சுந்தரய்யர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)

திருச்சிறுப்பள்ளி ஜில்லா.

S. A. No. 355 of 1911—30 ஆகஸ்ட் 1913.

ஸ்ரீனிவாசய்யங்கார் Vs திருவேங்கடத்தையங்கார்

திருச்சிறுப்பள்ளி ஜில்லா குளித்தலையில் துரைசாமி அய்யங்கார் என்றவருக்கு மூத்த சம்ஸாரத்தால் இரண்டு புத்திரர்களுண்டானார்கள். துரைசாமி அய்யங்கார் மரணபண்டில் பணம் கட்டிவந்து அந்த பாலிஸியினால் வரக்கூடிய தொகையை தன் மூத்த சம்ஸாரமும் இரண்டு புத்திரர்களும் அடையவேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார். மூத்தாளும் ஒரு புத்திரனும் காலஞ்சென்றுவிடவே புனர் விவாகம் புரிந்து இளையாளால் ஒரு புத்திரனும் புத்திரியும் உண்டான பிறகு துரைசாமி அய்யங்கார் காலஞ்சென்றுவிட்டார். இளையாளுடைய மைனர் குமாரனுக்காக கிருஷ்ணசாமி அய்யங்கார் என்ற ஒரு இனத்தார் அடுத்த சிநேகிதராக நின்று மூத்த சம்சாரத்தின் மற்றொரு புத்திரன்மீது பாக வியாஜ்ஜியம் தொடுத்து ஷை மைனருடைய தாயாருக்கு ஜீவ

னாம்சம் கிடைக்கவேண்டுமென்ற காரணத்தாலும் மைனர் வாதியினுடைய சகோதரியின் சவரக்ஷணைக்காகவும் விவாகம் முதலிய செலவுக்காகவும் பிரத்தியேகமான ஐவேஜு குடும்ப சொத்திலிருந்து ஏற்படுத்தப்படவேண்டுமென்ற கருத்தோடும் வாதியின் தாயாரை 5-ம் பிரதிவாதியாகவும் வாதியின் மைனர் சகோதரியை 6-ம்பிரதிவாதியாகவும் சேர்த்து குளித்தலை டி. மு. கோர்ட்டில் பிராது தாகல்செய்தார்.

ஷை பாக வியாஜ்ஜியத்தில் 1-ம் பிரதிவாதியாகிய மூத்ததாரத்தின் புத்திரன் மரண பண்டிலிருந்து தகப்பனாருடைய பாலிஸியின்படி வசூலான துகையில் வாதிக்கு பாகம் கிடைக்க நியாயமில்லையென்றும், ஏனெனில் பாலிஸியின் ப்ரீமியம் தன்னுடைய தகப்பனார் சொந்த சம்பாத்தியத்துகையிலிருந்து செலுத்திவரப்பட்டதாகவும் அவருடைய ஏற்பாட்டின்படி பாலிஸிதுகை காலஞ்சென்ற மூத்த தாரத்திற்கும் அவளுடைய புத்திரர்களுக்கும் சேரவேண்டியதாகவும் ஆகவே வாதிக்கு அதில் பாத்தியதை கிடைக்க நியாயமில்லையென்றும், வாதியும் வாதியின் தாயாரும் தங்கள் இஷ்டப்படிக்கு குடும்பத்தை விட்டு பிரிந்து தனிமையாய் வசித்து வந்தமையால் அவ்விதம் வசித்துவந்த காலத்திற்குறிய குடும்ப சொத்தின் மத்தியகால வரும்படியில் மைனர் வாதிக்கு பாகம் கேட்க நியாயமில்லையென்றும்; வாதியின் உபநயனம் விவாகம், 6-ம் பிரதிவாதியின் விவாகம் இவைகளுக்குறிய செலவுகளை தகப்பனாருடைய ஸ்வயார்ஜிதமான சொத்திலிருந்து உபயோகப்படுத்த வேண்டுமேயொழிய பூர்வீகமான குடும்ப சொத்திலிருந்து விநியோகம் ஏற்படுத்தக் கூடாதென்றும்; வாதிக்கு உபநயச் செலவை மட்டும் குடும்ப சொத்திலிருந்து வகிக்கலாமேயொழிய விவாகச் செலவுக்கு யாதொரு ஏற்பாடும் செய்யத தேவையில்லையென்றும் ஏனெனில், உபநயனம் முக்கியமாய் செய்து முடிக்கவேண்டிய சடங்காசாரமேயொழிய விவாகம் ஹிந்து லாப்படிக்கு அவசியமான ஸம்ஸ்காரமல்லவென்றும்; வாதியின் தாயாராகிய 5-ம்பிரதிவாதிக்கு ஜீவனாம்சம், வாதிக்கு ஏற்படும் பாக விகிதத்திலிருந்து செலவாக வேண்டுமேயொழிய, குடும்ப சொத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டியதில்லையென்றும் எதிர் ஆன்ஸரில் ஸ்டேட்மெண்டு கொடுத்தார். ஷை வியாஜ்ஜியம் டி. மு. கோர்ட்டில் ஈரங்கியாகி அங்கிருந்து சப்கோர்ட்டுக்கு செய்யப்பட்ட அப்பீல் தீர்மானத்தில்:—

மரணபண்டுக்குறிய கட்டணத்தை துரைசாமி அய்யங்கார் குடும்ப சொத்தின் வரும்படியிலிருந்து செலுத்தி வந்தமையால் ஷை யாருடைய வார்ஸ்கள் அனைவருக்கும் ஷை பாலிஸியிலிருந்து வசூலிக்கப்படும் துகையில் பாகமுண்டென்றும்; வாதியையும் அவருடைய தாயாரையும், 1-ம் பிரதிவாதி குடும்பத்தைவிட்டு விலக்கின காரணத்தால் ஷை யார்கள் பிரத்தியேகமாய் வசித்துவராமல் அவர்களுடைய இஷ்டத்தின் பேரிலேயே மேற்கண்ட விதமாய் (புறம்பாக) வசித்து வருகிறார்களென்று ஏற்பட்டபோதிலும், 7 மதராஸ் 564-இல் தீர்மானித்தபடி மைனர் வாதிக்கு பிரிந்துபோன முதல் பிராது தேதி வரையில் மத்தியகால வரும்படியில் பாகமுண்டென்றும்; 5-ம் பிரதிவாதியாகிய வாதியின் தாயாருக்கு வாதியின் பாகத்திலிருந்து ஜீவனாம்சம் கொடுக்கப்பட வேண்டுமேயொழிய குடும்ப பாகத்தில் அந்த விஷயத்திற்காக ஏற்பாடுசெய்ய நியாயமில்லையென்றும்; ஆனால் வாதிக்கும் 6-ம் பிரதிவாதிக்கும் உபனயனம், விவாகம் முதலிய சடங்குச்செலவுகளுக்கு குடும்பசொத்தில் ஐவேஜு ஏற்படுத்த வேண்டியது நியாயமாகுமென்றும் உத்தரவளிக்கப்பட்டது.

1-ம் பிரதிவாதி சப்கோர்ட் தீர்ப்பின்மேல் ஹைகோர்ட்டுக்கு 2-வது அப்பீல் செய்தார். வாதியும் 5-ம் பிரதிவாதியினுடைய ஜீவனாம்ச விஷயமாகத் தனக்கு விரோதமானமட்டில் சப்கோர்ட்தீர்ப்பின்பேரில் ஹைகோர்ட்டில் க்ராஸ்-அப்பீல்செய்தார்.

2-வது அப்பீலை ஈரங்கி கேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்கள் கொடுத்த தீர்மான அபிப்பிராயச் சுருக்கமாவது:—

துரைசாமி அய்யங்கார் குடும்பத்தலைவராயிருந்து மரணபண்டின் ப்ரீமியத் துகைகளைச் செலுத்திவந்ததால் அத்துகை குடும்ப வருமானத்திலிருந்து செலுத்தப்பட்டதாக சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருப்பதாகவும், ஆனால் துரைசாமி அய்யங்கார் குடும்பத்தலைவராக நடந்துகொள்ளவில்லையென்றும் பிரதிவாதிக்காக வாதிக்கப்பட்டது. 2-வது அப்பீல் க்ரௌண்டில் மேற்கூறிய ஆக்ஷேபணை காணப்படவில்லை. கீழ்கோர்ட்டிலாவது துரைசாமி அய்யங்கார் குடும்பத்தலைவரல்ல என்று பிரதிவாதி மறுத்ததாகக் காணப்படவில்லை. ஆகையால் வாதிக்கு ஷை மரணபண்டின் துகையில் பாகமுண்டென்று சப்கோர்ட்டார் தீர்மானம் செய்தது சரியே.

வாதியும் வாதியின் தாயாரும் பிரதிவாதியால் விலக்கப்பட்டதின் பேரில் தனிமையாய் வசித்து வந்ததாக வாதி ருஜுப்படுத்தவில்லை. வாதியின் தாயார் தன்னிஷ்டப்படிக்கு தனியாய்ப்பிரிந்து வசித்ததாகவே நிதானிக்கவேண்டும். அப்படியிருக்க சப்கோர்ட்டார் 7 மதராஸ் 564-இல் குறிக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தை ஆதாரமாகக்கொண்டு மைனர் வாதிக்கு பிறிந்தகாலத்தில் ஏற்பட்ட மத்தியகால வரும்படியில் பாக முண்டென்று டிக்கிரீயளித்திருக்கிறார்கள். 7 மதராஸ் கேசானது வாதிக்கு உதவத்தக்கதல்ல.

அதில் ஒரு குடும்பஸ்தன் ஸ்வய இச்சையாய்ப் பிரிந்து தனியாக வசிக்கப் பிரியப்பட்டு குடும்ப சொத்தைப் பாகப் பிரிவினைசெய்துகொள்ள நடவடிக்கையெடுக்காமல், அப்படிப்பிரிந்தகாலத்தில் குடும்பத்தலைவன் குடும்பசொத்துக்கள் விஷயமாய் யாதொரு மோசம் பித்தலாட்டம்செய்த சந்தர்ப்பங்களன்னியில், மற்றப்படி ஷை பிரிந்துபோன குடும்பஸ்தனுக்கு குடும்ப வருமானத்தைப்பற்றியாகிலும் மற்ற வரவு செலவு விவரங்களைப்பற்றியாகிலும் கணக்குக்கொடுக்கத்தேவையில்லையென்றும் ஆனால் குடும்பத்தலைவனால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு மைனர் விஷயமாய் மேற்கூறிய நியாயம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்றும் குடும்பக் கணக்குகளை ஆஜர்படுத்தும்பொருட்டும் குடும்ப வரும்படியைப்பற்றிக் கணக்குக் கொடுக்கும்பொருட்டும் கொண்டுவரப்பட்ட தாவாவில் மேல்கண்டவிதமாய் அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் குடும்பத்திலிருந்து விலக்கப்பட்ட மைனருக்கு விலகியிருந்த காலத்திற்குறிய மத்தியகால வரும்படியைப்பற்றிக் கணக்குக்கேட்க நியாயமுண்டென்று ஏற்படுமேயொழிய குடும்ப மானேஜருடைய குற்றத்தால் அல்லாமல் தனிமையாய் வசித்த மைனருக்கு மத்தியகால வரும்படியில் பாகமுண்டென்று தீர்மானிக்க இடமாகாது. ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடைய நன்மைக்காக மானேஜர் குடும்ப வருமானங்களையெல்லாம் செலவிடலாம். ஆனால் புறம்பாயிருக்கும் ஒரு குடும்பஸ்தனுக்கும் போஷணைச் செலவளிக்கக் கடமைபட்டவனா என்று தீர்மானிக்கத் தேவையில்லை. இந்த தாவாவில் மைனர்வாதி போஷணைச் செலவுக்காகப் பரிகாரம் தேடவில்லை. குடும்பத் தலைவன் குடும்ப வரும்படியிலிருந்து நியாயமான செலவுகளெல்லாம் செய்துமுடித்து மிகுதியிருந்தால் அதைக் குடும்பப்பொதுவான பண்டில் சேர்ப்பிக்கலாம். தனிமையாய் வசித்துவரும் ஒரு குடும்பஸ்தனுக்கு முந்திய வருமான லாபத்தில் பாகம் கேட்க பாத்தியம்கிடையாது. (ஒருமிக்க வசித்துவரும் குடும்பஸ்தர்களுக்கும் மற்ற குடும்ப வகைக்கும் மானேஜர் செலவுசெய்து மிச்சமிருந்தால் அதில் புறம்பாயிருந்தவர்களுக்கு பாகம் கிடையாது. வரும்படி பூராவையும் ஒன்றாயிருந்த குடும்பஸ்தர்களுக்குச் செலவுசெய்தால் மற்றவர்கள் ஆக்ஷேபிக்க இடமில்லாததுபோலவே அவ்வித செலவுசெய்யாமல் மிச்சம் பிடித்தால் அதில் மற்றவர்கள் பாகம் தேடக்கூடாது. அவர்கள் ஸ்வய இச்சையால் புறம்பாய் போனபடியால் இவ்வித அசந்தர்ப்பம் நேரிடுகிறது). ஆனால் மானேஜருடைய நடத்தையால் யாதொருவர் தனியாய் பிரிந்துபோக நேரிட்டால் அப்பொழுது வரும்படி லாபத்தில் பாகம் கேட்க நியாயமுண்டு. ஸ்வய இச்சையாகத் தனிமையாய் வசிக்க நேரிட்ட ஒரு மைனர் வாதிக்கும் மேற்கூறிய முறை என் செல்லத்தக்காது. மைனர்கள் விஷயமாய் வேறு விதமான ரூல் ஏற்பட்டதற்கு அதாரிடி யாதொன்றும் காண்பிக்கப்படவில்லை. குடும்ப நடவடிக்கை விஷயமாய் குடும்ப மானேஜர் பாககாலத்தில் கூடவசித்துவந்த மேஜரான பாகஸ்தனுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டியதவசியமில்லை.

எனெனில் கூடவே ஒவ்வொரு காரியங்களையும் கவனித்து வந்திருக்கவேண்டுமாகையால் குடும்ப கர்த்தாவுடைய நடவடிக்கைகளைப்பற்றி பின்னால் பாககாலத்தில் கணக்குக்கேட்பது நியாயமன்று. ஆனால் மைனராக யிருக்கப்பட்டவனுக்கு குடும்பத்தலைவன் பாககாலத்தில் கணக்குக் கொடுக்கவேண்டியதவசியமாகும். 5 பங்கால் லா ரிபோர்ட்டென் 347-இன் 354-ம் பக்கத்தைப் பார்க்கவும். இந்தாவா கணக்குக்கொடுக்கவேண்டுமென்று மைனரால் கொண்டுவரப்பட்டதல்ல. ஆகையால் மத்தியகால வரும்படியைப்பற்றி மைனர் பாகம் கேட்கும் பாரிகாத்திற்கு மேற்கூறிய தீர்ப்பின் அம்சம் உதவாது. ஆகவே மைனர் வாதிக்கு மத்தியகால வரும்படியில் சப்கோர்ட்டார் பாகமளித்தது பிசகாகும்.

மைனர் வாதியின் உபநயனச் செலவுக்காகவும் விவாகச் செலவுக்காகவும் 6-ம் பிரதிவாதியாகிய வாதியின் சகோதரிக்குறிய விவாகச் செலவுக்காகவும் குடும்பப்பொதுசொத்திலிருந்து தொகைகொடுக்கப்படவேண்டுமென்று பாக டிக்கிரீயில் சப்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறது சரியா இல்லையா என்று பார்க்குமிடத்து 31 பம்பாய் 54-இலும், 13 மதராஸ் லா ஜர்னல் 75-இலும், வாதியின் கக்ஷிக்கனுகூலமாக குடும்பச் சொத்திலிருந்து மேற்படி சடங்குகளுக்குறிய செலவுகள் நடத்தப்படவேண்டுமென்றே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

1-ம் பிரதிவாதி இந்தக்கோர்ட்டில் முக்கியமாய் இரண்டுவித ஆக்ஷேபனைசெய்து வாதித்தார். அதாவது மேற்கூறிய சடங்குகளுக்குறிய செலவுகளைக் குடும்பப்பொது சொத்திலிருந்து வகிக்காமல் வாதியின் தகப்பனுடைய ஸ்வயார்ஜிதமான வரும்படியிலிருந்து நடத்திவைக்கப்படவேண்டுமென்றும், வாதிக்கு உபநயனச் செலவுமட்டும் அவ்விதமாய் செய்யலாமேயொழிய ஹிந்து லாப்படி விவாகம் அவசியமில்லாத ஸம்ஸ்காரம் என்றும் ஆகையால் அதற்குறிய செலவைப்பற்றி பாக டிக்கிரீயில் பிரத்தியேகமாய் விதிக்கப்படகூடாதென்றும் சொல்லப்பட்டது.

பிதாவினுடைய ஸ்வயார்ஜித சொத்தைக்கொண்டு மக்களுக்கு உபநயனம் விவாகம் முதலிய சடங்காசாரங்களை நடப்பிவிக்கவேண்டுமென்ற வாதத்திற்கு ஆதாரமேகிடையாது. நாரதருடைய 2-வது அத்தியாயம் 121-வது ஸ்லோகத்தில் விவாகமுகூர்த்தம் நடத்தப்படாத சகோதிரிகளுக்கு உபநயனமான சகோதரர்கள் தங்கள் பாகத்தில் ஒரு பாகத்தை அதாவது சால்பங்கை உபயோகித்து விவாகம் நடத்தவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உபநயனம் ஆகாத சகோதரர்களுக்குச் செய்யவேண்டியசெலவையும்கடமையையும்பற்றிஸ்பஷ்டமாய் சொல்லப்படவில்லை. என்றாலும் யாக்ஞவல்கருடைய மேற்கூறிய கிறந்தத்தை வியாக்கியானப்படுத்தினவர்கள் சகோதரர்களுடைய உபநயனம் முதலிய சடங்காசாரச் செலவுகளையும்ஷை வாக்கியம் உட்படுத்தும்அர்த்தங்கொள்வதாய் விளம்பியிருக்கிறார்கள். மிதாக்ஷர தர்ம சாஸ்திரம் 1-ம் அத்தியாயம் 7-வது அங்கம் 3-வது ஸ்லோகத்தில் உபநயனம் ஆகாத!சகோதரர்களுக்கு உபநயனம் ஆன சகோதரர்கள் ஷை சடங்குகளைச் செய்துமுடிக்கக் கடமைபட்டவர்களென்றும் 4-வது ஸ்லோகத்தில் பிதாவுக்குப்பிறகு விவாகம் செய்துகொடுக்கிற சகோதரன் உபநயனம் ஆகாத சகோதரனுக்கு ஷை சடங்குகளை குடும்பச் சொத்திலிருந்து செலவுசெய்தே நடத்தவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. மேற்கூறிய வாக்கியங்கள் வாதிக்கு அனுகூலமாய் ஏற்பட்டிருக்க பிரதிவாதிக்காக மிதாக்ஷர தர்ம சாஸ்திரத்தின் 1-ம அத்தியாயம் 6-ம் அங்கம் 14, 15, 16-வது ஸ்லோகங்களும் 3-வது அங்கம் 1-வது ஸ்லோகமும் படித்துக் காட்டப்பட்டது- அவைகளின்படி தகப்பன் புத்திரர்களுக்கு நன்கொடையளிக்க அதிகாரமுண்டென்றும் அவ்வித நன்கொடை தன்னுடைய ஸ்வயார்ஜித சொத்திலிருந்து மட்டும் அளிக்கப்படவேண்டுமென்றும், பெற்றோருக்குப் பிற்காலத்தில் புத்திரர்கள் சொத்துக்களையும் கடன்களையும் சமபாகமாய் பகிர்ந்து கொள்ளவேண்டுமென்றும் அவ்வித சொத்துக்கள் பிதாவுடைய ஸ்வயார்ஜிதத்தைமட்டும் குறிப்பதாயும் பிரதிவாதிக்காகச் சொல்லப்பட்டது.

பிதாவினுடைய ஸ்வயார்ஜிதத்தைப்பற்றின பாகமுறை ஏற்பட்டிருக்க பூர்வீக சொத்துக்களைப்



பற்றி, 5-ம் அங்கம் 1-வது ஸ்லோகத்தில் பவுத்திரர்களுக்கு அதாவது பேரப்பிள்ளைகளுக்குத் தங்கள் தகப்பனுக்குக் கிடைக்கும் பாகம்தான்வந்து சேருமென்று சொல்லியிருக்கிறது. பல சகோதரர்களுக்கு புத்திரர்கள் கம்மி ஜாஸ்தியாய் ஏற்பட்டிருந்தால் குடும்பபாகத்தில் ஒவ்வொரு பவுத்திரனுக்கும் (பேரப்பிள்ளைக்கும்) தலைக்கணக்காய் பங்குவிகிதம் ஏற்படாது. சகோதரர்களுக்குக் கிடைக்கும் பாகம் தான் அவரவர்களுடைய புத்திரர்களுக்குச்செல்லுமென்று மேற்படி வாக்கியத்தினால் விளங்குகிறதே யொழிய, 7-வது அங்கம் 3-வது, 4-வது ஸ்லோகங்களில் சொல்லியிருக்கிற உபநயனச்சடங்குகளைத் தகப்பனுடைய ஸ்வயார்ஜிதத்திலிருந்து செலவுசெய்து நடத்தவேண்டுமென்ற எதிரியின் வாதத்திற்குப் பிரயோஜனமாகமாட்டாது.

பின்னையும் எதிரிக்காக ஸ்மிருதி சந்திரிகா 4-ம் அத்தியாயம் 37-வது ஸ்லோகத்தில் உபநயன கிரமாதி சடங்குகள் முடிந்த சகோதரர்கள் ஷை சடங்குகள் முடியாத சகோதரர்களுக்கு தங்கள் பிதாவின் சொத்தைக்கொண்டு செலவிட்டுசெய்துமுடிக்கவேண்டுமென்று சொல்லியிருக்க பிதாவின் சொத்துக்கள் என்ற பதத்திற்கு பிதாவின் ஸ்வயார்ஜித சொத்தென்ற குறுகின அர்த்தம் கொடுக்கக்கூடாது. தகப்பன் சொத்தென்றால் தகப்பன் அடைந்திருக்கிற பூர்வீக சொத்துக்கள் உள்படவென்றே அர்த்தங் கொள்ளவேண்டும்.

பர்னல் துரையவர்கள் இயற்றிய மாதவியத்தின் 17, 18-வது பக்கங்களில் சொல்லியிருக்கிற வசனங்களும், சீதாராம சாஸ்திரிகளியற்றிய வீரமித்ரோதயத்தின் 81-வது பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிற கிறந்தமும், ஷை-யாருடைய விவாத சிந்தாமணியின் 49-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிற வசனங்களும் எதிரியின் கக்ஷிக்கு உதவக்கூடியவைகளல்ல. ஆகவே சப்கோர்ட்டார் டிக்கிரீயில் கண்டிருக்கிறபடி காலஞ்சென்ற துரைசாமி அய்யங்காருக்குப்பின் வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் கூடிவந்த பூர்வீக சொத்திலிருந்தே வாதியின் உபநயனம் முதலிய சடங்காச்சாரங்களுக்கு பிரத்தியேகமான பண்டு எடுத்துவைக்கவேண்டுமென்பது சரியே.

வாதியினுடைய உபநயனச் செலவுக்குமட்டும் தொகை ஏற்படுத்திவைக்கலாமென்றும் 57 மதராஸ் 209-இல் சொல்லியிருக்கிறபடி பிராமணனுக்கு விவாகம் அவசியமான ஸம்ஸ்காரமில்லையென்றும் வாதிக்கப்பட்டது. அந்த மதராஸ் கேசில் ஒரு தாயாதியுடைய விவாகச்செலவுக்காக வாங்கிய கடனுக்கு மற்ற தாயாதிகள் கட்டுப்பட நியாயமில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வித தீர்மானம் கொடுத்த ஜட்ஜிமார்களில் ஒருவராகிய ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் பிந்திய ஒரு கேசில் ஹானரபில் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரவர்களுடன்கூடி ஈரங்கி கேட்டு இருவரும் முந்திய அபிப்பிராயத்திற்கு மாறாகத் தீர்மானித்தார்கள் மேற்படி 34-மதராஸ் 422-இலும் 32 பம்பாய் 81-இலும் ஒரேவிதமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிற காரணங்களால் பிராமணர்களுக்கு விவாகம் ஒரு யுக்தமான ஆசாரமென்றும் அதிக சொற்பமான புறநடைச் சந்தர்ப்பங்களைத் தவிர்த்து மற்றப்படி விவாகம் அவசியமாய் செய்து முடிக்கவேண்டிய சடங்காச்சாரம் என்பதில் சந்தேகமில்லை. வெஸ்ட் & பூலர் (West & Buhler) ஐயும் ஸ்ட்ரேஞ்சஸ் ஹிந்துலா 2-வது வாலியூம் 286, 288-வது பக்கங்களையும் ஸர்கார்'S ஹிந்துலா 3-ம் பதிப்பின் 245-ம் பக்கத்தில் 292-ம் பிரிவையும் பார்க்கவும். விவாகம் அத்தியாவசியமானதென்ற காரணத்தாலேயே இந்தக்கேசில் வாதிக்கனுகூலமாய்த் தீர்மானம் செய்யவேண்டியதவசியமில்லை. பிரம்ம, க்ஷத்திரிய, வைசியர்களாகிய த்விஜர்களுக்கு உபநயனத்தோடு குல ஜன்மச் சடங்குகள் முடிந்ததாக அநேக கிறந்தங்களிருக்கின்றன. ஸ்மிருதிசந்திரிகா 4-ம் அத்தியாயத்தையும் சீதாராம சாஸ்திரிகளுடைய பதிவின் 40-ம் பக்கத்தையும் பார்க்கவும். ஆனால் மேற்கூறிய 31 பம்பாய் 81-இல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சந்திரவர்க்காரவர்கள் ஸ்மிருதி சந்திரிகாவில் சொல்லியிருக்கிற கிறந்த நியாயத்திற்கு சமாதானம் சொல்லியிருக்கிறார்கள். இந்த அப்பீல் ஈரங்கியாகி பைசல் கொடுக்கப்படுமுன் இதே (மதராஸ் ஹைகோர்ட்டார்) 23 மதராஸ் லா ஜர்னல் 288-இல் குறிக்கப்பட்டிருக்கிற புல்பெஞ்சு கேசில் சாஸ்வத பிரும்மச்சாரியாகவாவது, ஸந்நியாஸியா

கவாவது, ஒரு ஹிந்துவானவன் தன்ஜீவிய காலத்தைக்கழிக்கத் தீர்மானம் செய்துகொண்டு அவ்விதமாய் நடந்தாலொழிய மற்றப்படிக்கு ஹிந்து புமானுக்கு விவாகம் இன்றியமையாத அத்தியாவசியமான சடங்காச்சாரமென்றும் அப்படிப்பட்ட விவாகத்திற்காக வாங்கப்பட்ட கடனுக்கு மற்ற தாயாதிகள் கட்டுப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி புல்பெஞ்சு தீர்மானம் இந்தக்கேசில் எதிரியுடைய 2-வது வாதத்திற்கு நேர் விரோதமான அபிப்பிராயமாயிருப்பதால் அதை அனுசரித்து தீர்மானம் செய்யக்கடமையாகும். வாதி கிரகஸ்தாசிரமத்தை அடைந்து அனுபவிக்கும்பொருட்டு விவாகம் செய்துகொள்ள பாத்தியப்பட்டவனாகிறான். 1-ம் பிரதிவாதி வாதியை விவாகத்தை மறுத்து நைஷ்டிகப் பிரம்மச்சாரியாக அல்லது ஸந்நியாஸியாக ஜீவிக்கும்படி கட்டாயப்படுத்தக்கூடாது. வாதி பிராமணர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கிறஹஸ்தாசிரமத்தை அனுஷ்டித்துவரப் பாத்தியமுடையவனாகிறான். முற்றிலும் விரக்தனாய்ப் போனாலொழிய அதாவது சரீர நன்மையைக் கருதாமல முற்றிலும் ஆத்ம விசாரணையில் காலத்தைக் கழிக்கிறவர்கள் தவிர மற்றவர்களுக்கு விவாக (அவசியம் கர்த்தவ்யம்) கட்டாயம் முடிக்கத்தக்கது. குடும்பச் சொத்திலிருந்து அதற்குரிய செலவுக்காக பண்டு ஏற்படுத்தப்படவேண்டும். தவிர 1-ம் பிரதிவாதிக்குக் குடும்ப சொத்தைக்கொண்டு செலவுசெய்து விவாகம் முடிக்கப்பட்டிருக்க வாதிக்கு ஏன் வித்தியாஸம் செய்ய வேண்டும். விவாகச் செலவுக்கு ஜீவேஜு தனிமையாய் எடுத்துவைக்கப்படவேண்டுமென்பது தற்கால ஜாதி வழக்க முறையாகவு மிருக்கிறது. இறந்த கர்த்தாக்கள் யாதொரு சடங்காச்சாரத்தைப் பற்றி ஒருவருக்கொருவர் மாறான அபிப்பிராயம் கொடுத்திருக்கும் பட்சத்தில் அவ்விஷயமாய் ஜாதியாருடைய பொதுவான அபிப்பிராய நோக்கங்களையே கவனித்து அனுசரிக்கவேண்டும். எதிரி தனக்கு குடும்பச்செலவில் விவாகம் முடித்துக் கொண்டிருக்க தன் சகோதரனாகிய வாதிக்கு குடும்ப சொத்திலிருந்து விவாகச்செலவைக் கொடுக்க ஆக்ஷேபிக்க நியாயமில்லை. ஆகையால் வாதியுடைய உபநயனம் விவாகம் இரண்டுக்கும் குடும்ப சொத்தில் ஜீவேஜ் பிரத்தியேகமாய் ஏற்படுத்தி மிகுதியை பாகித்துக்கொள்ளவேண்டுமென்று சப்கோர்ட்டார் தீர்மானித்தது சரியே.

ஆகவே மத்தியகால வரும்படி விஷயமாய் மேற்கூறிய காரணங்களால் வாதிக்கு விரோதமாகத் தீர்மானிக்கப்பட்டு மற்றபடி 2-வது அப்பீல் தள்ளுபடியாகவேண்டும்.

வாதி தன் தாயாருடைய ஜீவனாம்சத்திற்காக குடும்ப சொத்திலிருந்து பிரத்தியேகமாய் ஜீவேஜ் ஏற்படுத்த நியாயமில்லையென்று சப்கோர்ட்டார் கொடுத்த அபிப்பிரயத்தின்பேரில் க்ராஸ் அப்பீல் செய்ததில் வாதியின் தாயாராகிய 5-ம் பிரதிவாதி டி-மு. கோர்ட்டில் தனக்குப் பிரதிகூலமாய் டிக்கிரீயான பிறகு சப்கோர்ட்டில் அப்பீல் செய்தும் சப்கோர்ட்டில் விரோதமான பிறகு ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யாமல் நின்றுவிட்டபடியால் வாதி அவளுடைய ஸ்தானத்திலிருக்கும் பாவனையாக அதே விஷயமாய் க்ராஸ் அப்பீல்செய்ய லாயக்குள்ளவரல்லவென்று பிரதம ஆக்ஷேபனை செய்யப்பட்டது.

சப்கோர்ட்டார் வாதியின் தாயாருக்கு ஜீவனாம்சம் வாதியின் பாகத்திலிருந்து செலுத்தப்படவேண்டுமென்று தீர்மானித்து, 5-ம் பிரதிவாதிக்கு விரோதம் செய்தமையால் வாதி ஷெ சப்கோர்ட் அபிப்பிராயத்தால் நஷ்டமடைந்தவனாக க்ராஸ் அப்பீல் செய்ய லாயக்குள்ளவராகிறாரென்றே சொல்லவேண்டும். 2-வது அப்பீலில் 5-ம் பிரதிவாதியும் பார்ட்டியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறாள். ஸி. பி. ஸி. ஆர்டர் 41-ரூல் 33-இன்படி கோர்ட்டாருக்கு தங்கள் முன் ரிகார்ட்டில் கொண்டுவரப்பட்டிருக்கிற பார்டிகளுக்குரிய பாத்தியாபாத்தியதைகளைப்பற்றி நியாயமாய்த் தோன்றும்படியான உத்தரவளிக்க அதிகாரமுண்டு. ஆகவே க்ராஸ் அப்பீலுக்குப் பிரதம ஆக்ஷேபனை பிரயோஜனமில்லை.

நியாயப்படி 5-ம் பிரதிவாதிக்கு குடும்ப சொத்திலிருந்தே ஜீவனாம்சம் அளிக்கப்படவேண்டும். (1870) 5 ஹைகோர்ட் ரிபோர்ட்டுகளின் 377-இல் ஷெ விஷயம் தீர்மானமாயிருக்கிறது. ஸ்மி



ருதி சந்திரிகாவின் 4-ம் அத்தியாயம் 4-வது ஸ்லோகத்திலும் அவ்விதமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. தாயார் என்ற பதத்திற்கு (இளையதாயார், மூத்ததாயார்) என்றும் கருத்துண்டு. வியாஸருடைய கிறந்தத்தில் 7-வது ஸ்லோகத்திமலடியாக யிருக்கும் தகப்பனுடையதாரத்திற்கும் தகப்பனைப்பெற்ற பாட்டியாருக்கும் தாயாரைப்போலொத்த பாகமுண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களைத் தாயாருக்குச் சமானமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 5 மதராஸ் 29-30, 31-வது பக்கங்களைபபார்க்கவும். தாயாருக்குயாதொரு பாத்தியதை தகப்பனையிட்டு ஏற்படுவதால் தகப்பனுடைய மறுதாரத்திற்கும் அதேவித பாத்தியதை உண்டென்று சொல்லவேண்டும். 35 மதராஸ் 147-இலும் 5-ம் பிரதிவாதிக்கு அனுகூலமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. சப்கோர்ட்டார் 16 கல்கத்தா 758-இல் கொடுக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தை அனுசரித்து வாதியின் பாகத்திலிருந்து 6-ம் பிரதிவாதிக்கு ஜீவனாம்சம் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் ஷெ கல்கத்தா கேசில் இளைய தாயாருக்கு அவளுடைய புத்திரன் பாகத்திலிருந்து ஜீவனாம்சம் அளிக்கப்படவேண்டுமென்று ஸ்பஷ்டமான தாயபாக தர்மசாஸ்திரத்தை அனுசரித்து அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தாயபாக சாஸ்திரமானது வங்காளத்துக்கு மட்டும் அனுஷ்டிக்கத் தக்கதாகும். தென் இந்தியாவில் மிதாக்ஷர சாஸ்திரமுறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. கல்கத்தா கேசை அனுசரித்து சப்கோர்ட்டார் தீர்மானித்தது பிசகு.

5-ம் பிரதிவாதிக்கு ஜீவனாம்ச விஷயமாய் ஏற்பட்டிருக்கிற 7-வது இஷ்யூவைப்பற்றி புனர்விஜாரணைசெய்து அபிப்பிராயம் கொடுக்கும்படியும் 5-ம் பிரதிவாதிக்கு ஸ்ரீதனமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆபரணங்களைத் தவிர மற்ற ஆபரணங்கள் ஷெ யார்கள் வசம் எவைகளிருக்கின்றவென்றும் அவைகளுடைய விலை மதிப்பைத் தீர்மானித்துத் தெரிவிக்கும் பொருட்டும் சப்கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப் பட்டது.

ஷெ அப்பீலை ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் மற்றவிஷயங்களில் மேற்கூறிய அபிப்பிராயங்களுக்கு ஒத்திருந்தும் பாககாலத்தில் விவாகமாகாதிருக்கும் புத்திரனுக்குப் பிரத்தியேகமாய் விவாகச் செலவுக்காக ஜீவேஜ் ஏற்படுத்திவிட்டு மிகுதியைப் பிரித்துக்கொள்ளவேண்டுமென்று ஹிந்துலாவில் குறிக்கப்படாததாகவும் உபநயனத்திற்கு மட்டும் அவ்வித ஏற்பாடு செய்யலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறதாயும் தவிர இந்தக்கேசில் மைனர்வாதி 5-வதுள்ள அதிபால்யனாயிருக்க 24-வயதுக்கு முன் சாஸ்திரப்படி விவாகம் செய்யலாயக்கில்லாதபடியால் இப்பொழுதே விவாகச் செலவைத் தனியாய்ப் பிரித்துக்கொடுப்பதவசியமில்லையென்றும் விவாகம் முடிக்கிற காலத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் யாதொரு செலவும் நேரிடாதால் (வரதக்ஷிணையைப் போலொத்த) லாபமும் கிடைக்க ஏதுகரமுண்டென்றும் சொல்லி வாதியின் விவாகத்திற்கு குடும்ப சொத்திலிருந்து தொகையெடுத்துப் பிரத்தியேகமாய்க் கொடுக்க நியாயமில்லையென்று அநேக முக்கியமான சாஸ்திரங்களையும் தர்ம நியாயங்களையும் எடுத்துக்காட்டி ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களுக்கு மாறான அபிப்பிராயம் கொடுத்தார்கள்.

ஸி. பி. ஸி. 98-வது பிரிவின்படி இருவரும் வித்தியாசமான அபிப்பிராயங் கொண்டிருக்கிறபின் சொல்லிய பாயிண்டைப்பற்றி மூன்றாவது ஜட்ஜியவர்களிடம் தீர்மான அபிப்பிராயம் கொடுக்கும்படி ரிபர் செய்யப்பட்டிருக்கிறது.

அதாவது குடும்பத்தைச் சேர்ந்த இருவரில் ஒருவருக்கு குடும்பசொத்திலிருந்து விவாகச்செலவு செய்யப்பட்டபிறகு பாகமாகும் காலத்தில் விவாகம் முடியாத மற்றவனுடைய விவாகச் செலவுக்காக குடும்ப சொத்திலிருந்து பிரத்தியேகமாய் தொகை எடுத்துக் கொடுக்கப்பட்டபின் மிகுதியை மட்டும் பகிர்ந்து கொள்ள வேண்டுமா என்ற பாயிண்டு மூன்றாவது ஜட்ஜியிடம் ரிபர் செய்யப்பட்டது.

[ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய அபிப்பிராயத்திற் குறிய காரணங்களை இங்கு விளக்கி எழுத அதிக ஆவலுடையவ

கை யிருந்தும் அவை மிகவும் அதிகமான இடத்தைக் கொள்ளுமென்று பயந்து 3-வது ஜட்ஜியவர்களுடைய தீர்மான முடிவு பிரசுரிக்கப்படும் சமயத்தில் சேர்த்து எழுதலாமென்று தற்சமயம் நிறுத்திவைத்திருக்கிறேன்.]

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

குண்டூர் ஜில்லா.

S A. 808 of 1912—9 அக்டோபர் 1913.

ஒரு குடும்பத்தலைவனாகிய 1-ம் வாதிக்கு 1-ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை விக்கிரயம் செய்துகொடுப்பதாக ஒப்பந்தம செய்துகொண்டு விக்கிரயத்தொகை பூராவையும் அட்வான்ஸாகப் பெற்று ரசீதில் மேற்கண்ட ஒப்பந்தவிஷயத்தையும் குறித்தெழுதிக்கொடுத்திருந்தும் அந்த ஒப்பந்தப்படி விக்கிரயம் செய்துகொடுக்கத் தவறினபடியால் 1-ம்வாதியும் குடும்பத்தைச்சேர்ந்த மற்றும் சிலரும் வாதிகளாய் ஏற்பட்டு 1-ம் பிரதிவாதியுடைய அவிபக்தமைனர் புத்திரனை 2-ம் பிரதிவாதியாகவும் தாவா சொத்துக்களை அநுபவிக்கிறவனையும் வாதியின் குடும்பத்தைச்சேர்ந்தவனுகிய பிராதில் வாதியாகச் சேராத மற்றொருவனையும் 3, 4 பிரதிவாதிகளாகச்சேர்த்து குண்டூர் டி-மு. கோர்ட்டில் ஷை ஒப்பந்தத்தின்படி 1-2 பிரதிவாதிகள் வாதியின் குடும்பத்தைச்சேர்ந்தவர்களனைவர் பேருக்கும் பொதுவாய் கிரய தஸ்தவேஜு எழுதிக்கொடுக்கக்கடவர்களென்று உத்தரவளிக்கவேணுமாய்ப் பிராது தாகல் செய்தார்கள்.

1-ம் பிரதிவாதியின் ஆன்ஸரில் A-ஆதாரவாய் தாகல் செய்யப்பட்ட ஷை ரசீது விக்கிரய தஸ்தவேஜாய் பாவிக்கப்படவேண்டுமென்றும் அந்த ஆதாரவு ரிஜிஸ்தர் செய்யப்படாத படியால் ருஜுவாகத்தில் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்லவென்றும் ஆகையால் A-ஆதாரவைக்கொண்டு வாதிகளுக்கு பரிகாரமளிக்க நியாயமில்லையென்றும் எதிர்வாதம் செய்தார். ஆனல் டி-மு. கோர்ட்டாரும் அப்பீலில்சப்கோர்ட்டாரும்ஒரே அபிப்பிராயமாய் ஏ-ஆதாரவை விக்கிரய உடன்படிக்கையென்றும் அதற்குச் சம்பந்தப்பட்ட ரசீதென்றும் அர்த்தங்கொண்டு வாதிகள் கோறியபடி 1.2 பிரதிவாதிகளிருவரும் சட்டப்படிக்கு வாதிகளனைவருக்கும் பொதுவாய் விக்கிரய தஸ்தவேஜை எழுதி ரிஜிஸ்தர்செய்து கொடுக்கவேண்டுமென்று டிக்ரியளித்தார்கள். அதன்மேல் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கு 1-ம் பிரதிவாதிமட்டும் 1-ம் வாதிக்கு விக்கிரயம் எழுதிக்கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

ஹைகோர்ட் தீர்மானத்தின் காரணச்சுருக்கமாவது:—

A ஆதாரவைப்பற்றி சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது சரியே. வாதியின் குடும்பத்தைச் சேர்ந்த 4-ம் பிரதிவாதியின் நன்மைக்காகவும் 1-ம் வாதி ஷை விக்கிரய உடன்படிக்கை செய்துகொண்டமையால் 24 கல்கத்தா 332-இலும் (1912) மதராஸ் வாரக்குறிப்புகள் 415-இலும் தீர்மானித்திருக்கிறபடி 4-ம் பிரதிவாதியும் வாதியாகச் சேராத காரணத்தால் பிராது செல்லத்தக்கதல்லவென்றும் எதிரிகளுக்காக வாதம்செய்யப்பட்டது. ஒரு உடன்படிக்கையை நிறைவேற்றும்படி வற்புறுத்தச் செய்யும் இத்தகைய பிராதுகளில் டிக்ரீயளிப்பது கோர்ட்டாருடைய யுக்தானுசாரத்தைப் பொருத்ததாகுமென்று (Specific Relief Act) 22-வது பிரிவில் சொல்லியிருக்கிறது. அவ்வித யுக்தியைப் பிரயோகிப்பதில் ஒரு ஒப்பந்தத்தில் நன்மையடைய வேண்டியவர்களில் யாதொருவர் பிராதில் சேர்ந்து பரிகாரம் தேடாத பட்சத்தில் அந்த சந்தர்ப்பத்தின் கருத்தை கோர்ட்டார் கவனித்துப் பார்க்கவேண்டியது முக்கியமான அம்சமாகும். சப்கோர்ட்டார் ஆதாரங்கொண்டிருக்கிற மதராஸ் ஹைகோர்ட்கேசில் மூவர்கள் ஒப்பந்த நன்மையை அடையவேண்டியதாயிருக்க பிராது ஒருவரால் மட்டும் செய்யப்பட்டிருந்தது. கல்கத்தா கேசிலோ மொத்தமாய்க் கட்டப்பட்ட தொகைக்குப் பற்பல விக்கிரயங்கள் செய்து கொடுக்கப்படவேண்டிய ஒப்பந்தத்தில் ஒரு விக்கிரயத்தைப்பற்றி மட்டும் தாவா செய்யப்பட்டு அதில் ஒப்பந்த நன்மையை அபேக்ஷிக்க வேண்டியவர்களில் வாதிகளாய்ச் சேர்ந்தவர்கள் எத்தனையென்றும் பிரதிவாதிகளாய்ச் சேர்ந்தவர்கள் எத்தனையென்றும் ரிபோர்ட்டில் காணப்படவில்லை. ஆகவே மேற்கூறிய இரண்டு கேசுகளின் சந்தர்ப்பங்களும் இந்த தாவாவின் சந்தர்ப்பங்களும் ஒற்றுமையானவைகளல்ல.

பலர்களுக்காகச் செய்த ஒப்பந்தத்தைப்பற்றிய தாவாவில் ஒருவன்மட்டும் சேராத நிமித்தம் பிராதுக்கு ஹானியேற்படுமென்ற கடுமையான ரூலை ஷை இரண்டு கேசுகளைத் தீர்மானித்த ஜட்ஜிமார்கள் பிரயோகப்படுத்தினதாகச் சொல்லக்கூடாது. அவ்வித எண்ணத்துடன் தீர்மானம் செய்திருப்பார்களானல் அதை அனுசரிக்கத்தக்கதல்லவென்று மிகவும் மரியாதையுடன் சொல்ல வேண்டியதாகும் ஆகவே ஷை கேசுகள எதிரிகளுக்குப் பிரயோஜனமில்லை.

ஏ-ஆதாரவின்படி ஒப்பந்தம் 1-ம் வாதியோடுமட்டும் செய்யப்பட்டதால் பிராதில் குடும்பப்பொதுவான ஏற்பாடென்று சொல்லப்பட்டு குடும்பத்தார் அனைவருக்கும் பொதுவாய் விக்கிரயம் செய்து கொடுக்கவேண்டுமென்று கோறியிருப்பது பிசகென்று வாதிக்கப்பட்டது. வாதி தரப்புக்காக பாரிஸ்டர் மிஸ்டர். டி. பிரகாசம் அந்தப் பிசகை ஒப்புக்கொண்டு பிராதில் 1-ம் வாதியின் பேரில்மட்டும் கிரயம் பெற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதாய்த் தெரிவித்தபடியாலும் எதிரி இவ்வித ஆக்ஷேபனையை கீழ்கோர்ட்டுகளில் செய்யாமல் முதல் முதல் இந்தக்கோர்ட்டில் செய்தமையாலும் மிஸ்டர் டி. பிரகாசம் கோறிக்கொண்டபடி கீழ்கோர்ட் டிக்கிரீயை அவ்விதமாய் மாற்றப்படவேண்டும்.

தவிர 1-ம் பிரதிவாதியின் மைனர் குமாரனும் சேர்ந்து விக்கிரயம் செய்துகொடுக்கவேண்டுமோவென்ற விஷயத்தைப்பற்றி யோசிக்குங்கால் ஏ-ஆதாரவில் 2-ம் பிரதிவாதியின் பிரஸ்தாபமே கிடையாது.

1-ம் பிரதிவாதி தன் மகனுக்காகவும் ஒப்பந்தம் செய்து கொடுத்ததாக எண்ணியிருந்தபோதிலும் அவ்விதமான கருத்து ஏ-ஆதாரவில் துலங்கவில்லை. டி மு. கோர்ட்டார் டிக்கிரீயை உறுதிபண்ணின சப்கோர்ட்டார் பிராதில் கோறியபடி 1-2 பிரதிவாதிகள் விக்கிரயம் எழுதிக்கொடுக்கக் கடவர்களென்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். எதிரிக்காக 26 மதராஸ் 74-யும் 32 மதராஸ் 320-யும் எடுத்துக்காட்டி 1-ம் பிரதிவாதியை மட்டும் விக்கிரயம் செய்து கொடுக்கும்படி உத்தரவளித்து அந்த விக்கிரயத்திற்கு 2-ம் பிரதிவாதியும் கட்டுப்படவேண்டுமோ அல்லவா என்ற விஷயத்தை வேறுதாவாவில் தீர்மானம் செய்யப்படலாமென்று தீர்மானிக்கும்படி கேட்கப்பட்டது. அதற்கு எதிராக வாதிதரப்புபாரிஸ்டர்மிஸ்டர். பிரகாசம் சொன்னதாவது: - கீழ்கோர்ட் தீர்ப்பில் இரண்டு பிரதிவாதிகளின் பேரிலும் பரிகாரம் அளிக்கப்பட்டிருக்க 2-ம் பிரதிவாதியின்பேரில் வாதிகள் பிரத்தியேகமான தாவாசெய்து தீர்மானமடையும்படி உத்தரவளிப்பது அநீதமென்றும் அனவசியமென்றும 2-ம் பிரதிவாதி கட்டுப்படவேண்டுமோ என்ற பாயிண்டை இந்தக்கோர்ட்டாரே அப்பீலில் தீர்மானம் செய்யலாமென்றும் வாதாடினர்கள். 1-ம் பிரதிவாதியினுடைய முந்திய (அதாவது 2-ம் பிரதிவாதி ஜனிக்குமுன் ஏற்பட்ட) கடனைத் தீர்க்கும் பொருட்டு தாவா விக்கிரயம் செய்ய நேரிட்டதால் 2-ம் பிரதிவாதியும் அதற்குக் கட்டுப்படவேண்டுமென்றும் தீர்மானித்து சப்கோர்ட்டார், இருவரையும் பொறுத்து டிக்கிரீயளித்திருக்கிறார்கள். ஆனல் டி-மு-கோர்ட்டார் ஏற்படுத்தின இஷுக்களில் 1-ம் பிரதிவாதியின் பொறுப்பையும் 2-ம் பிரதிவாதியின் பாத்தியதையையும் பிரத்தியேகமாய் நிதானிக்கவில்லை. 2-ம் பிரதிவாதியைப்பற்றி அம்மட்டில் போதுமான ருஜு அம்சங்கள் விடப்பட்டதாகவும் துலங்கவில்லை. டி. மு. கோர்ட்டார் ஏ-ஆதாரவின்படி விக்கிரயத்தொகை செலுத்தப்பட்டதா என்றும் ஷை தஸ்தவேஜானது 1-ம் வாதியும் 1-ம் பிரதிவாதியும் கலந்துகொண்டு கள்ளயோஜனையுடன் உண்டாக்கப்பட்டதாவென்பதை மட்டும் நிதானித்துப்பார்த்து தீர்ப்பளித்திருக்கிறார். பிராதில் தெளிவான வசனங்களால் 2-ம் பிரதிவாதியின்பேரில் பரிகாரம் தேடுவதற்குக் காரணம் சொல்லி அவ்வித தீர்மானமடையக் கோறியிருந்தால் இதே தாவாவில் அந்தவிஷயம் தீர்மானிக்கப் படலாம். ஆனல் பிராதில் அவ்விதமான அம்சம் கிடையாது. ஆகையால் 1-ம் பிரதிவாதி மட்டும் 1-ம் வாதிக்கு கிரயதஸ்தவேஜு எழுதிக்கொடுக்க வேண்டியதாகத் தீர்மானிக்கவேண்டும்.

ஆகவே சப்கோர்ட்டிக்கிரீ மேற்கண்டவிதமாய் மாற்றப்பட்டது.

———:O:———

## மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள்

:o:

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

தஞ்சாவூர் ஜில்லா.

**L. P. A. No. 66 of 1913 - 7 நவம்பர் 1913.**

*முத்துசாஸ்திரிகள் Vs விசுவனாதபண்டார ஸந்நிதி*

பிரதிவாதியாகிய வேதாரண்யம் விசுவனாதபண்டாரஸந்நிதியவர்களின்பேரில் வாதி முத்து சாஸ்திரிகள் ஒரு வர்த்தமானக் கடிதத்தை ஆதாரமாகக்கொண்டு நாகப்பட்டணம் சப்கோர்ட் ஸ்மால் காஸ் தரப்பில் ஷை வர்த்தமானத்தில் கண்டபடி தனக்குச்சேரவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும்பொருட்டு தாவாசெய்தார். சப்கோர்ட்டார் ஷை வர்த்தமானம் ஒரு ப்ராமிஸரி நோட்டாக பாவிக்கப்படவேண்டுமென்றும் அது ஸ்டாம்பாக்டின்படி ருஜுவில் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்றும் தீர்மானித்து வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். ஹைகோர்ட்டார் ரிவிஷனிலும் அதே அபிப்பிராயப்பட்டதினால் ரிவிஷனில் தீர்மானம்செய்த ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் உத்தரவின்பேரில் வாதி லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்தார். ஷை அப்பீலை ஈரங்கி கேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களின் அபிப்பிராயச் சுருக்கமாவது:—

வாதிக்காக எடுத்துக்காண்பிக்கப்பட்ட 23 மதராஸ் 155-இன் 156, 157-வது பக்கங்களையும் 27 மதராஸ் 1-யும் கவனித்துப் பார்க்குமிடத்து அந்தக்கேசுகளில் ஆதாரங்கொள்ளப்பட்ட தஸ்தவேஜின் வசனங்களில்" அதில் கண்டதொகையைக் கடனாகக்கொடுக்காத பட்சத்தில் ஷை லட்டரை ஒருவௌசராக அல்லது ஆதாரமாக உபயோகப்படுத்தக்கூடாதென்று" ஸ்பஷ்டமாய்க் கண்டிருக்கிறதால் அந்த தஸ்தவேஜில் எழுதிக்கொடுத்தவன் தொகையைத் திரும்பிக் கொடுப்பதாய் ஒப்புக்கொள்ளும் விஷயமானது கேட்டபிரகாரம் தொகை கடன் கொடுக்கப்பட்டால் என்ற கண்டிஷனைப் பொறுத்ததாய் நன்கு விளங்குகிறது. ஆகையால் அந்தக்கேசுகளில் ஷை தஸ்தவேஜை ஒரு ப்ராமிஸரி நோட்டாக கோர்ட்டார் பாவிக்காமலிருந்தது சரியே. ஆனால் இந்தக்கேசில் பிரதிவாதி எழுதிக்கொடுத்த லட்டரில் "இன்னார் இன்னாருக்கு எழுதிய வர்த்தமானமாவது, என்னால் தம்மிடம் கடனாக வாங்கின ரூ. 350, இந்தரூபாய் முந்நூற்றைம்பதையும் 2-வாரத்திற்குள் 100-க்கு மாதம் 1-க்கு வட்டி ரூபாய் ஒன்று வீதம் சேர்த்து வாபிஸ்செய்து இந்தக்கடிதத்தைத்திரும்பிப் பெற்றுக்கொள்ளுகிறேன்", என்று எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்படி வசனங்களைக் கவனித்தால் தொகையை பிரதிவாதி திரும்பிக்கொடுக்கவேண்டிய கடமைக்கு யாதொரு கண்டிஷனும் ஏற்படவில்லை. ஆகையால் அது ப்ராமிஸரி நோட்டென்றே பாவிக்கப்படவேண்டும். அதில் கடன்வேண்டுமென்று கேட்டதாக அல்லது ஒருகடன் பாக்கியை அங்கீகாரம்செய்து கொண்டதாக மட்டும் நிதானிக்க இடமில்லை. 21 மதராஸ் 49-இல் தஸ்தவேஜின்வசனமானது மிகவும் வித்தியாசமானதாகும். அதின் கருத்தும் ஸ்பஷ்டமாய் விளங்கத்தகாததாயிருக்கிறது. அந்த தஸ்தவேஜின் கருத்தை யூகித்துச் சொல்லும்படி இப்பொழுது கோரப்பட்டாலும் ஷை கேசைத்தீர்மானம் செய்தவர்களுடைய அபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாறான தீர்மானம் கொடுக்க வேண்டியதாகும். ஆகவே தாவா வர்த்தமானம் கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி ப்ராமிஸரி நோட்டாகும். ஸ்டாம்பன்னியில் எழுதப்பட்டதால் ருஜுபாகத்தில் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

வாதிக்காக ஷை லட்டரில் கண்ட வசனங்களால் வாதியின் தொகையை பிரதிவாதி கடனாகப் பெற்றுக்கொண்ட விஷயம் யூகிக்கப்படலாமென்றும் அவ்விதக் கடனைத் தீர்க்கும் கடமையை ஓர் வியாஜ்ஜியமூலமாய் எடுத்துக்கொண்டு கடன்வாங்கின விஷயத்தை ருஜுப்படுத்தி வாதி பரிகாமடையலாமென்று எடுத்துப்பேசப்பட்டது. அதாவது ஷை ப்ராமிஸரி நோட்டின்படி டிக்கிரீயளிக்காமல் மற்றப்படி கடன்வாங்கியிருக்கும் விஷயத்தை ருஜுப்படுத்தி வாதி டிக்கிரீயடையலாமென்று வாதிக்கப்பட்டது. ஆனால் எழுத்துமூலமாய் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டபிறகு அந்த

எழுத்தை ஆதாரம் கொள்ளாமல் வேறுவிதமாய்ப்பரிகாரம் தேடுவது சட்டவிரோதமாகும். 10 மதராஸ் 94-இலும் 17 மதராஸ் லா ஜர்னல் 126-இலும் கொடுக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயத்தை அனுசரிக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். 10 மதராஸ் கேசில், 7 கல்கத்தா 256 அனுசரிக்கப்பட் டிருக்கிறது. கல்கத்தாகேசில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களுடைய கருத்தைச் சரியாய் மதராஸ் கோர்ட்டார் நிதானிக்க வில்லையென்று வாதிக்காகச் சொல்லப்பட்டது. ஆனால் 10 மதராஸில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களுடைய அபிப்பிராயத்தை சரியாய்க் கருதி அனுசரித்ததும் தவிர பிரத்தியேகமான காரணங்களையும் சொல்லித் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது:— ஒரு ப்ராமிஸரி நோட்டில் காலத்தைக்குறித்தும் கடன் தொகையை வாபீஸ் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டிருக்கஷை பிராமிஸரிநோட்டுக்குஸ்டாம்பில்லாத குறைவை அனுகூலமாய் எடுத்துக்கொண்டு ஷை பிராமிஸரி நோட்டை ருஜுவில் விடாமல் வாதி தனக்கு வேண்டும்போது கடன் தொகையை வாபீஸ் அடைய தாவாசெய்வது சரியல்லவென்றும் அது எவிடென்ஸ் ஆக்ட் 92-வது பிரிவின் அம்சங்களுக்கு விரோதமாகுமென்றும் (எழுத்தால் குறிக்கப்பட்டிருக்கிற ஒப்பந்தத்திற்கு விரோதமான ருஜு அம்சம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவென்றும்) ஒவ்வொரு ஒப்பந்தமும் முதலில் வாய்க்கரார் செய்யப்பட்டபின் தான் எழுத்தில் குறிக்கப்படவேண்டுமென்றும் அப்படிக்குறிக்கப்பட்ட எழுத்தை நிராகரித்து வேறுவிதமான ருஜு அம்சங்களால் பரிகாரம் தேடுவது சரியல்லவென்றும், காரணங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எழுத்தில் கண்டிருக்கிற ஒப்பந்தத்திற்கு ஒற்றுமையான அம்சமானாலும் விபரீதமான அம்சமானாலும் ஷை எழுத்து மூலமான ஆதரவை பிரயோகிக்க இடமில்லாத அசந்தர்ப்பத்தால் ஷை எழுத்திலிருந்து யூகிக்கப்பட்ட ஒப்பந்தத்தைக்கொண்டு பரிகாரம் தேட விடக்கூடாது. ஏனெனில் தாவாக்கேசில் ஏற்பட்ட ஒப்பந்தமும் அதை அனுசரித்த எழுத்தும் ஒரே காலத்தில் உண்டாயிருக்கிறது. மேற்கூறிய 10 மதராஸ் கேசின் தீர்மானத்தை மாற்றின தீர்மானங்களும் ஏற்படவில்லை. தவிர அதில்கண்ட அபிப்பிராயங்களை ஆக்ஷேபிக்காமல் 9 மதராஸ் லா டைம்ஸ் 281 இலும் 21 மதராஸ் லா ஜர்னல் 462-இலும் அனுசரிக்கப்பட்டிருக்கிறது; 23 மதராஸ் 527-இலும் 29-மதராஸ் 111-இலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. கொடுத்த கடனைத்திரும்பிக்கொடுக்கவேண்டிய தர்மநியாயத்தை அனுசரித்த இங்கிலீஷ் கேஸ்களின் தீர்மானங்களில் குறிக்கப்பட்டிருக்கிற கடமைகளைப்பற்றிப் பிரயோகப்படுத்தினாலும் அல்லது எழுத்துமூலமாய் ஒருகடன்பாபத்து விஷயமான ஒப்பந்தம் செய்யப்பட்டு அதை யாதொரு அசந்தர்ப்பத்தால் மறைக்க நேரிட்டதின்பேரில் சாதுர்யமாக பிராதில் கணக்கின்படி ஷை கடன் பாக்கி ஏற்பட்டதாகச் சொல்லும் வாதிக்குப் பரிகாரம் அளிக்க இடங்கொடுப்பதும் எவிடென்ஸ் ஆக்ட் 91-வது பிரிவின் கருத்தை முற்றிலும் பயனற்றதாக்குவதாகும்.

ஆனால் எழுத்துமூலமாய் யாதொரு ஆதரவு ஏற்படும் தேதிக்கு முந்திய கடன் பாக்கி விஷயமான கடமைகளைச் செலுத்துவதற்கு பிந்திய செல்லத்தகாதபிராமிஸரிநோட் அவசியமென்று சொல்லத்தேவையில்லை. கடன் தொகை செலுத்தப்படும் சமயத்திலேயே எழுத்தும் ஏற்பட்டால் அந்த எழுத்தை உபயோகப்படுத்தாமல் பரிகாரம் தேடக்கூடாது. ஆகவே லெட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் தள்ளுபடியாக வேண்டியது.

ஷை அப்பீலை ஈரங்கிகேட்ட மற்றொரு நியாயாதிபதியாகிய ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் மேற்கூறிய அபிப்பிராயத்திற்கு ஒத்துச்சொன்ன தீர்மானத்தில்:—

பிரதிவாதி எழுத்தில் "வேண்டும்போது அல்லது உத்தரவுக்காவது" என்ற வசனங்களைப் பிரயோகிக்காத போதிலும் கடனைத் திரும்பிக்கொடுப்பதற்கு யாதொரு கண்டிஷனும் ஏற்படுத்தவில்லை. ஷை வர்த்தமானத்தில் யாதொரு சாட்சி யொப்பம் செய்யப்பட்டிருந்தாலும் அதை வெண்ணளைக் கடன்பத்திரமாக பாவித்து (அபராதம் கட்டி ருஜுவில் எடுக்கச்சொல்லலாம். அவ்வித சாட்சியொப்பமும் கிடையாது. வர்த்தமானம் என்ற வார்த்தையைப் பிரயோகித்த காரணத்தால் ப்ராமிஸரி நோட்டின் கருத்தைக்கொடுக்கும் தஸ்தவேஜின் யோக்கியதையை (பிராமிஸரிநோட் என்ற நிலைமையை) விலக்க முடியாது. பிரதிவாதி வாதியிடம் தொகைபெற்றுக் கொள்ள வேண்டிய உறுதியான ஏற்பாடு செய்துகொண்டபிறகு ஷை லட்டரை வாதியிடம் ஒப்பிவித்தபடியால் நோட்டும் தொகை செலுத்தினதும் ஒரே சமயத்திலென்று நிதானிக்கவேண்டும். மதராஸ் ஹைகோர்ட்டார் பற்பல தீர்மானங்களில் கொண்டிருக்கிற அபிப்பிராயங்களை அனுசரிக்கவேண்டியதவசியமாகும். ஆகவே லெட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் தள்ளுபடியாகவேண்டியது நியாயமே. ஸ்டாம்பில்லாமல் எழுதப்பட்ட ஷை வர்த்தமானம பிராமிஸரிநோட்டாக பாவிக்கப்பட ருஜு அமசத்தில் விட யோக்கியமில்லாமல் போய் வாதியின் தாவா மூன்றுகோர்ட்டுகளிலும் தள்ளுபடியாச்சுது.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் பேக்வெல்.)

கோதாவரி ஜில்லா.

## S. A. No. 1517 of 1912–12-நவம்பர் 1913.

பாஸ்கருடு Vs சுப்பராயடு & கவர்ன்மெண்டு.

ராஜமகேந்தரபுரம் டி-மு கோர்ட்டில் வாதிகளிருவரும் அனுபவித்துவந்த சில நிலங்களை கவர்ன்மெண்டார் தங்களுடையதென்று பாத்தியங்கொண்டாடி (Land Encroachment Act) 3-வது பிரிவின்படி வாதிகளிடம் நிலத்தீர்வையை வசூலித்ததுடன் அக்கிரமமாக வாதிகள் கவர்ன்மெண்டு நிலத்தை அனுபவித்த காரணத்தால் ஷை ஆக்டின் 5-வது பிரிவின்படி தண்டத்தீர்வையும் விதித்து வசூலித்துவிட்டதும் தவிர வாதிகளை ஷை நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தும்பொருட்டு நோடீஸ் கொடுத்தமையால் வாதிகள் ஷை நிலங்களில் தங்களுக்கு பாத்தியமுண்டென்று ஸ்தாபிக்கும்பொருட்டு டிக்லேரேஷன் தாவாசெய்து அதில் அநீதமாய்த தங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தண்டத்தீர்வையை வாபீசு கொடுக்கவேண்டுமென்று கோறிக்கொண்டார்கள். ஷை ஆக்டின் 14-வது பிரிவின்படி கொண்டுவரப்பட்ட வாதியின் தாவாவுக்குக்குறிக்கப்பட்டிருக்கிற 6-மாத காலாவதி கடந்து விட்டதாகச்சொல்லி டி-மு-கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லாகோர்ட்டாரும் பிராதை காலாவதி தோஷமென்று தள்ளுபடிசெய்து விட்டார்கள். அதன்மேல் 2-ம் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கும் அதே அபிப்பிராயமாக் வாதிகளின்பிராது காலாவதி தோஷமென்று தீர்மானிக்கப்பட்டு 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது.

ஹைகோர்ட் தீர்மானத்தின் சுருக்கமாவது:— கவர்ன்மெண்டாருடைய நிலத்தில் ஒருவன் அக்கிரமமாய் பிரவேசித்து அனுபவித்தால் அவனிடம் நியாயமான தீர்வையை 3-வது பிரிவின்படி வசூல்செய்வதும் தவிர 5-வது பிரிவின்படி தண்டத்தீர்வையும் வசூலித்து 6-வது பிரிவின்படி வெளிப்படுத்த கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமுண்டு. மேற்கூறிய 3-5-வது பிரிவுகளின்படி தண்டத் தீர்வை வசூலிக்கப்பட்டது அக்கிரமம் என்றும் (நிலம் கவர்ன்மெண்டு நிலமல்லவென்றும்) தாவா செய்வதற்கு 14-வது பிரிவில் பாத்தியதையளிக்கப்பட்டிருக்கிறது. அந்ததாவா ஆறுமாதத்தவணைக்குள் கொண்டுவரப்படவேண்டும். 6-வது பிரிவின்படி வெளிப்படுத்தப்படும் ரயட்டுக்கும் தாவா செய்ய பாத்தியமுண்டு. அவ்வித தாவாவும் வெளிப்படுத்தப்படும் தேதிமுதல் 6-மாத தவணைக்குள் செய்யப்படவேண்டும். இந்தப்பிராதின் அம்சத்தில் வாதிகள் வெளிப்படுத்தப்பட வில்லை.

14-வது பிரிவில் ரெவினியூ தரப்பாருடைய நடவடிக்கைகளால் நீங்கடைகிற யாதொருவர் வியாஜ்ஜியமூலம் ஏற்பட்டமுதல் 6-மாதத்திற்குள் தாவாசெய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆக்டின்படி நடத்தப்படும் நடவடிக்கைகளே வியாஜ்ஜியமூலத்தைத்தருமென்றால் அப்படிப்பட்ட நடவடிக்கை நடத்தப்படும் தேதியிலிருந்து 6-மாதகாலத்திற்குள் தாவா செய்யப்படவேண்டும். பிராதில் ரெவினியூ தரப்பார் கொடுத்த நோடீஸையும் வசூலித்த தண்டத்தீர்வையையும் வியாஜ்ஜியமூலமாய்க் குறிக்கப்பட்டிருக்கிறது. தவிர ஷை வியாஜ்ஜியமூலங்கள் ஏற்பட்ட தேதியிலிருந்து 6- மாதங்கள் கடந்த பிறகே தாவா செய்யப்பட்டிருக்கிறது. 23 மதராஸ்

லா ஜர்னல் 162-இல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடி பாத்தியதையை ஸ்தாபிக்கக் கொண்டுவரவேண்டிய பிராதுக்கு சாதாரணமான காலாவதி ஆக்டைப் பொருத்து தோஷம் நிதானிக்கவேண்டுமென்றும் தாவாகேசில் வாதியின் பாத்தியதை வெளிப்படுத்தப்படும் காலம் முதல் ஆறுமாதமட்டும் நிலைத்திருப்பதால் இந்ததாவா பிடிக்கத்தக்கதென்றும் வாதிக்காக எடுத்துச்சொல்லப்பட்டது. தப்பிதமாய் வசூலிக்கப்பட்ட தண்டத்தீர்வையைத் திரும்பி அடையும்பொருட்டு அவ்விதம் வசூலிக்கப்படும் ஒவ்வொரு தடவையிலும் 6-மாத தவணைக்குள் தாவா செய்யலாம். வாதி பிராதில் கேட்ட 2-ம் பரிகாரத்தை வேண்டாமென்று சொல்லிவிட்டபடியால் அந்த விஷயமாய் யாதொரு அபிப்பிராயங் கொடுக்க அவசியமில்லை. தவிர வாதிகளை கவர்ன்மெண்டார் பிற்காலத்தில் வெளிப்படுத்திவிட்டாலும் ஷை நிலங்களைத்திரும்பவும் சுவாதீனமடைய வெளிப்படுத்தினகாலமுதல் 6-மாதத்திற்குள் தாவா செய்யலாம். இந்தக்கேசில் தீர்மானிக்கவேண்டியவிஷயமாவது இந்ததாவா 14-வது பிரிவின்படி காலாவதி தோஷமுடையதா, அல்லவா என்பதே. இந்தப்பிராதுக்கு கவர்ன்மெண்டார் வாதிகளின் பாத்தியத்தை மறுத்து நோட்டீஸ் கொடுத்த விஷயமே பாத்தியஸ்தாபனதிற்குறிய வியாஜ்ஜியமூலம் என்பதில் சந்தேகமில்லை. அவ்வித நோட்டீஸினால் அல்லது தண்டத்தீர்வை வசூலிக்கப்பட்டதினால் யாதொரு தீங்கும் அடையாத பட்சத்தில் வாதிகள் பாத்தியஸ்தாபன தாவா செய்ய அவசியமில்லை. கவர்ன்மெண்டார் பின்னால் எடுக்கும் நடவடிக்கைகளைக் கவனித்து அதன் பின் வியாஜ்ஜியமூலம் ஏற்படின் குறிக்கப்பட்ட காலாவதிக்குள் பிராது செய்திருக்கலாம். வாதிகளுக்கு தாவாசொத்தில் சட்டப்படி பாத்தியதை இழந்துபோனதாகாவிட்டாலும் பிராதில் கவர்ன்மெண்டாருடைய நோட்டீஸ் அனுப்பினதும் தண்டத்தீர்வை வசூலித்ததுமான இரண்டு நடவடிக்கைகளையும் வியாஜ்ஜியமூலமாக எடுத்துக் காட்டியிருப்பதால் அந்த வியாஜ்ஜியமூலத் தேதியாகிய 1908 மார்ச்சு 23-முதல் 6-மாதத்திற்குள் செய்யப்படாத இந்தப்பிராது காலாவதி தோஷமானதென்பதில் சந்தேகமில்லை. ஆகவே வாதியின் 2-வது அப்பீலும் தள்ளுபடியாச்சுது.

[வாதிகள் நிலச் சுவாதீனத்திலிருந்து வெளிப்படுத்துமட்டும் பிராதுசெய்யாமல் இருந்தால் நலமாயிருந்திருக்கும். இந்த தாவாவினால் வா பாத்தியதைக்கு ஹானி ஏற்பட்ட சொல்லமுடியாது. வாதி சுவாதீனத்திலிரு ருன். பிந்திய வழக்குகள் கொண்டுவரப்பட்டால் ரிஜுடிகேடா தோஷம் தீர்மானிக்கப்படவேண்டும். தண்டத்தீர்வை வசூலிக்கப்படும் ஒவ்வொரு தடவையிலும் புதிய வியாஜ்ஜியமூலமும் ஏற்படக்கூடியதானால் ஒரு தடவை அதைப்பற்றி காலாவதிக்குள் செய்யும் பிராதில் கவர்ன்மெண்டாருடைய பாத்தியதையும் நிர்ணயிக்கத்தக்கதாகும். அந்த தீர்மானமும் பின்னால் வாதிக்கு ரிஜுடிகேடா தோஷத்தைப் பற்றின வியவகாரத்திற்கு இடங்கொடுக்கும்.]

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

**சித்தூர் ஜில்லா**

**C. M. A. 257 of 1909–11 நவம்பர் 1913**

வரதய்யா *Vs* ராஜகுமார வெங்கடப்பெருமாள், வாரு

வாதி சித்தூர் ஜில்லாகோர்ட்டில் 1896-ம் வருஷத்திய அசல் நம்பர் 24-இல் பெற்ற டிக்கிரீயின்படி அடமான சொத்துக்களை முதலில் நிறைவேற்றுமல் 1898-ம் வருஷத்தில் பிரதிவாதிக்குச் சொந்தமான சில இதரமான சொத்துக்களை ஜப்திசெய்ய கோர்ட்டாரால் அனுமதிபெற்றும் மேல் நடவடிக்கை நடத்தாமல் பின்னிட்டு மூன்று வருஷங்களுக்கொருதடவையாகவோ அல்லது வேறுவிதமாகவோ டிக்கிரீயை நமோதிலிருக்கச்செய்து கடைசியாய் 1906-ம் வருஷத்திய நிறைவேற்று மனு நம்பர் 11-இல் அடமானம் செய்யாப்படாத இதரமான பிரதிவாதியின் சொத்துக்களை ஜப்தி செய்யும்பொருட்டு விண்ணப்பம் கொடுத்து அப்பொழுதும் மேல் நடவடிக்கை நடத்தாமல் நின்றுவிட்டு 1909-ம் வருஷத்திய நிறைவேற்றும் நம்பர் 3-இல் மறுபடியும் முன்போலவே விண்ணப்பம் கொடுத்தார். மேற்கூறிய 1909-ம் வருஷத்திய நிறைவேற்று மனுவை ஜில்லா கோர்ட்டார் இரண்டு காரணங்களினால் சட்ட விரோதமென்று தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

(1) 1906-ம் வருஷத்தில் வாதி கொடுத்த நிறைவேற்றுமனுவில் டிக்கிரீயில் கட்டளையிட்டிருக்கிற பிரகாரம் அடமான சொத்துக்களை முதலில் ஏலம்போட்டு தொகையை வசூலித்துக்கொள்ளாமல் இதர சொத்துக்களின்பேரில் தொடருவதற்காக விண்ணப்பம் செய்துகொண்டமையால் ஷை விண்ணப்பம் சட்ட விரோதமானதென்றும் ஆகையால் 1909-இல் கொடுத்திருக்கிற தாவா விண்ணப்பத்திற்கு முன் மூன்று வருஷங்களுக்குள் சட்ட விரோதமான மேற்கூறிய 1906-ம் வருஷத்திய மனுவைத் தவிர்த்து வேறு யாதொன்றும் கிடையாதபடியால் ஷை விண்ணபபத்தைக் காலாவதிக்காகக் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாதென்ற காரணத்தையிட்டு, தாவா விண்ணப்பத்திற்குக் காலாவதி தோஷம் ஏற்பட்டிருக்கிறதென்றும் (2) தாவா விண்ணப்பத்திலும் வாதி அடமான சொத்தின்மேல் பிரவேசித்து அதில் வசூலித்தும் டிக்கிரீத்தொகை செல்லாகாத பட்சத்தில் பிரதிவாதியின் பேரிலும் பிரதிவாதியின் இதர சொத்துக்களின்பேரிலும் தொடரவேண்டியிருக்க அப்படிச் செய்யாமல் முன்போலவே பிரதமத்தில் இதர சொத்துக்கள் மீது தொடரும்படி விண்ணப்பம் செய்துகொண்டிருப்பதால் அவ்வித விண்ணப்பத்திற்கு சட்டப்படி அனுமதி கொடுக்கத்தக்க தல்லவென்றும் ஆகிய இரண்டு காரணங்களைச்சொல்லி வாதியின் 1909-ம் வருஷத்திய தாவாநிறைவேற்று மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஹைகோர்ட்டார் கொடுத்த தீர்மானச் சுருக்கமாவது:— வாதிக்காக 29 அலகபாத் 369 ஆதாரமாக எடுத்துக்காட்டப்பட்டது. அதில் அடமான டிக்கிரீபெற்றவர் அடமான சொத்துக்களின்பேரில் தொடரும் பாத்தியதை தேவையில்லையென்று இழந்துவிட்டால் பிரமத்திலேயே இதரமான சொத்துக்களின்மேல் தொடரலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. [அடமான சொத்து டிக்கிரீத்தொகைக்குப் போதுமானதல்லவென்ற காரணத்தாலோ அல்லது அப்படித் தொடர்ந்தும் மிகுதிக்கு இதர சொத்துக்களின்பேரில் தொடரவேண்டிய இரண்டாவது நடவடிக்கையின் சிரமத்தை நிவர்த்தி செய்துக்கொள்ளவோ அல்லது இதரமான சொத்துக்களின்மீது தொடராவண்ணம் எதிரி ஷை இதர சொத்துக்களைப் பராதீனம் செய்துவிடுவாரென்று பயந்தோ முதலில் இதர சொத்துக்கள்மீது தொடர உத்தேசித்திருக்கவேண்டும். அலகபாத் கேசில் வாதி அடமான சொத்தின்பேரில் இனிப் பிரவேசிப்பதில்லையென்று விண்ணப்பத்தில் குறித்துக்காட்டி இதர சொத்தின்மேல் தொடர அனுமதி கேட்டிருக்கவேண்டும்.] அலகபாத் தீர்மானம் ப்ராபர்டி ஆக்ட் 90-வது பிரிவின் அம்சங்களுக்கு வித்தியாஸமாயிருக்கிறது. அந்தப் பிரிவில் "அடமான சொத்திலிருந்து வசூலிக்கப்பட்ட தொகை டிக்கிரீ கடனுக்குச் சரிப்போகாத பட்சத்தில் சட்டப்படி பாக்கித்தொகையை அடமான சொத்தல்லாமல் இதரமான மார்க்கத்தில் ஆளைப் பொருத்தாவது இதரமான சொத்துக்களிலிருந்தாவது வசூலித்துக்கொள்ள லாயக்குண்டாக்க கோர்ட்டார் டிக்கிரீயிலேயே அவ்வண்ணம் கட்டளையளிக்கலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. தவிர (1907) 3 மதராஸ் லா டைம்ஸ் 395-இல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்களும் மிஸ்டர் ஜஸ்டிஸ் மன்றோ துரையவர்களும் நிறைவேற்று நடவடிக்கைகளில் டிக்கிரீயில் கட்டளையிட்ட பிரகாரம் வாதி பரிகாரம் தேடிமுடித்த பிறகு இதரமான மார்க்கத்தில் சட்டமிருந்தால் ஆளைப்பொருத்தும் இதரமான சொத்துக்களைப் பொருத்தும் பாக்கித் தொகையை வசூலிக்கவேண்டுமென்று அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். 31 பம்பாய் 244-இலும் அடமான சொத்தை டிக்கிரீயில் கட்டளையிட்ட பிரகாரம் ஏலம்போட்டு தொகை வசூலிக்கப்பட்டு முன் இதர சொத்துக்களை ஜப்தி செய்யவும் உத்தரவு கொடுக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே வாதி முதலில் அடமான சொத்தில் பிரவேசித்திருக்கவேண்டியதவசியமாகும். வாதியின் மனுவை இப்பொழுது பிசகென்று தள்ளுபடி செய்துவிட்டால் டிக்கிரீ 12-வருஷ காலாவதி தோஷத்தால் பயனற்றதாகப்போய்விடும். வாதி இதர சொத்துக்களின்பேரில் முதலில் தொடரலாம் என்ற நல்லெண்ணத்துடன் நடந்தமையால் வாதியின் விண்ணப்பத்தைத் திருத்தி அடமான சொத்தின்பேரில் நிறைவேற்று நடவடிக்கைக்கு உத்தரவளிக்கவேண்டுமென்று மாற்றிக்கொடுக்கும்படி அனுமதி கொடுப்பது மிகவும்உசிதமான காரியமாகும். வாதிக்கு 1898-இல் கோர்ட்டார் இதர சொத்தின்பேரில முதலில் தொடர அனுமதி கொடுத்திருக்கிற உத்தரவானது ரிஜுடிகேடாவாகுமென்று வாதிக்காகச் சொல்லப்பட்டது. ஆனால் அந்த உத்தரவானது எதிரிக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு எதிரி ஆக்ஷேபிக்க இடங் கொடுக்கப்பட்ட பிறகு பிறந்த உத்தரவல்ல: ஆகையால் ரிஜுடிகேடா என்னும் பாயிண்டு செல்லத்தகாது. 30 மதராஸ் 255-இன் 263-ம் பக்கத்தைப் பார்க்கவும்.

ஜில்லா கோர்ட்டார் 1906-ம் வருஷத்தில் கொடுக்கப்பட்ட நறைவேற்று மனுவில் கேட்கப்பட்ட பரிகாரம் சட்டவிரோதமென்று அபிப்பிராயப்பட்டு அந்த விண்ணப்பத்தைக் காலாவதி கணிப்புக்காக எடுத்துக்கொள்ளக் கூடாதென்று தீர்மானித்திருப்பதும் பிசகு. ஷை 1906-ம் வருஷத்திய விண்ணப்பத்தில் பிரதிவாதியின் வார்ஸகளை ரிகார்டில் கொண்டுவர அனுமதி கேட்டிருக்கிறார்கள். மனுதார் கேட்டிருக்கிற பரிகாரங்களில் பிசகிருந்தாலும் ஷை விண்ணப்பமாகிலும் காலாவதி தோஷமுடையதாக இல்லாவிடில் அந்த விண்ணப்ப நடவடிக்கையை நிறைவேற்றுவதற்குறிய (காலாவதி கணிப்புக்குதவக்கூடிய) நடவடிக்கையென்று யூகிக்கவேண்டும். எதிரி வக்கில் எடுத்துக்காட்டிய 27 அலகபாத் 619-இல் குறிக்கப்பட்டிருக்கிற தீர்மானம் மேற்கூறிய அபிப்பிராயத்திற்கு விரோதமாயினும், 30 மதராஸ் 541, 18 மதராஸ் லா ஜர்னல் 14, 35 மதராஸ் 68, 17 மதராஸ் லா ஜர்னல் 475 இவைகளில் குறிக்கப்பட்டிருக்கிற தீர்மானங்களின் நியாயத்தை அனுசரிக்கவேண்டியதவசியமாகும்.

ஆகவே வாதிமனுவை.மேற்கண்ட அனுமதி உத்தரவின்படி இதுமுதல் இரண்டு வாரத்திற்குள் திருத்திக்கொடுத்த பிறகு ஜில்லா கோர்ட்டாரின் உத்தரவு ரத்தானதாக பாவிக்கப்பட்டு 1906-ம் வருஷத்திய விண்ணப்பம் சரியான காலத்தில் தாகல் செய்யப்பட்டதா என்ற விஷயத்தைத் தீர்மானித்து மேற்கூறிய மற்ற அபிப்பிராயங்களைக் கவனித்து சட்டப்படி தாவா விண்ணப்பத்தை ஜில்லா கோர்ட்டார் பைசல் செய்யவேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டதும் தவிற வாதி குறித்த காலத்தில் விண்ணப்பத்தைத் திருத்திக்கொடுக்காத பட்சத்தில் இந்த அப்பீல் தள்ளுபடியானதாக பாவிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. எவ்விதத்திலும் இந்த அப்பீல் செலவை வாதி பிரதிவாதிக்குக் கொடுக்கவேண்டியதென்று உத்தரவாச்சுது.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

தஞ்சாவூர் ஜில்லா.

S. A. No 678 of 1911-14 அக்டோபர் 1913.

கருப்பன் அம்பலகாரன் Vs முகம்மது சகுத்லப்பை.

தாவா சொத்துக்குடையவனாயிருந்த ராமன் அம்பலகாரன் சில கடன்காரர்களை மோசம் செய்யவேண்டுமென்ற கருத்துடன் சகோதரனாகிய வாதிக்கு 1900 செப்டம்பர் 19 உ-யில் ஏ-ஆதரவின்படி ரூ. 400 க்கு பவந்தமாக ஷை சொத்துக்களை விக்கிரயம்செய்துகொடுத்து அதில் தன்னால்கொடுக்கப்படவேண்டிய ஒரு வெள்ளிலைக் கடனையும் இரண்டு அடமான கடன்களையும் வாதியே தீர்த்துவிடவேண்டுமென்ற வகையில் குறித்துக் காண்பிக்கப்பட்ட தொகைபோக பாக்கித்தொகையாகிய ரூ. 41-8-0 யும் வாதிக்குக் கிரயத்தேதியில் ரொக்கமாய்ச் செலுத்தப்பட்டதாகக் கண்டிருந்தது. ஆனால் அவ்வித ரொக்கம் யதார்த்தமாய்ச் செலுத்தப்படவுமில்லை, கிரய சொத்தை வாதிக்கு சுவாதீனம் செய்து கொடுக்கப்படவுமில்லை. அப்படியிருக்க ராமன் அம்பலக்காரன்பேரில் ஒரு டிக்கிரீபெற்ற பாக்கிதாரனாகிய பிரதிவாதி ஷை டிக்கிரீயை நிறைவேற்றியதில் தாவா சொத்துக்களை மேற்கூறிய பவந்தமான விக்கிரயத்தேதிக்குப் பிந்தி அதாவது 1900 டிசம்பர் 16 உயில் ஜப்திசெய்து வெகுகாலம் மேல் நடவடிக்கை நடத்தாமலிருந்து 1903 பிப்ரவரி 28 உ-யில் ஷை சொத்தை ஏலத்திற்குக் கொண்டுவந்து பிரதிவாதி தானே ஏலத்தில் எடுத்து ஷை ஏலமும் மார்ச்சு 30-இல் உறுதியாச்சுது. தாவா சொத்தில் மேற்கூறிய ஏல விக்கிரயத்தால்பிரதிவாதிக்கு பாத்தியதை ஏற்பட்டிருக்க

ஏ-ஆதரவில் கண்டிருக்கிற அடமான பாக்கிக்காரர் இருவரில் ஒருவர் அடமானத்தொகையை வசூலிக்கும்பொருட்டு 1906-ம் வருஷத்திய அசல் நம்பர் 56-இல் தாவா செய்து அதில் பாக்கிதாராகிய ராமன் அம்பலகாரனுடன் ஷை யாருடைய சகோதரனாகிய வாதியையும் அடமானத்திற்குப்பிந்திய கிரய (பவந்தகிரய) பாத்தியதையை உடைத்தானவராகச் சொல்லி 2-ம் பிரதிவாதியாகச் சேர்த்திருந்தார். ஷை நம்பரில் கோர்ட்டார் வழக்கம்போல் வாதிக்குப் பிரதிவாதிகள் அடமானத்தொகை அசல் வட்டியுடனும் கோர்ட் செலவுடனும் செலுத்தக்கடவரென்றும் தவறினால் அடமான சொத்தை ஏலம்போட்டு வசூலிக்க வேண்டியதென்றும் டிக்கிரீயளித்தார்கள். அடமானதார் மேற்படி டிக்கிரீயை நிறைவேற்றுவதற்காக தாவா சொத்துக்களை ஏலம்போட யத்தனிக்கும்பொழுது வாதி தான் பெற்ற கிரயம் பவந்தமானபோதிலும் டிக்கிரீயில் தானும் கடமைப்பட்டிருப்பதாக பாவித்து ஏலத்தை நிறுத்தி சமாதானம் செய்துகொண்டு தபாவாரியாய் டிக்கிரீ பாக்கித்தொகையைச் செலுத்திக் கடைசியாக பாக்கிநின்ற மொத்தத்தொகை ரூ. 205-யும் 1903 மார்ச்சு 13-இல் (அதாவது பிரதிவாதிக்கு மேற்கூறிய கோர்ட் ஏலக்கிரயத் தேதிக்குப்பிந்தியும் ஏலம் உறுதியான தேதிக்கு முந்தியும்)செலுத்தி மேற்படி அடமான கடனைத் தீர்த்துவிட்டார்.

வாதி மேற்கண்டவிதமாய்த் தான் சொந்தப்பணத்தை A ஆதரவில் கண்ட இரண்டு அடமானங்களில் ஒன்றைத்தீர்த்துவிட்ட காரணத்தால் ஏ ஆதரவின்படி தன்னுடைய விக்கிரயத்தை நிலைக்கப் பண்ணும்பொருட்டு தாகப்பட்டணம் டி. மு. கோர்ட் 1908-ம் வருஷத்திய அசல் நம்பர் 380-இல் தனக்கு விக்கிரயம் யதார்த்தமென்று தீர்மானிக்கப்பட வேண்டுமென்றும் பிரதிவாதியின் கோர்ட் ஏலவிக்கிரயம பிந்தினதால் அது செல்லத்தக்கதல்லவென்றும் அப்படி வாதியின் கிரயம் பவந்தமென்று ஏற்பட்டபோதிலும் தான் செலுத்தியிருக்கிற அடமான டிக்கிரீத்தொகைக் குறிய மட்டில் தாவாசொத்தில் ஹக்கு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அதாவது ஷை (தீர்ந்துபோன) அடமானதாரின் ஸ்தானத்தில் தான் வைக்கப்பட வேண்டுமென்றும் ஆகவே பிரதிவாதியின் ஏல விக்கிரயம் ஷை அடமான டிக்கிரீத்தொகைக்கு உட்படுத்தப் பட்டதாக தீர்மானம் செய்யவேண்டுமென்றும் தாவாசெய்தார். அந்ததாவா டி. மு. கோர்ட்டின் பைசலுக்குமேல், நாகப்பட்டணம் சப்கோர்ட்டில் அப்பீல் செய்யபபட்டு அங்கு (1) வாதியின் பிராதில் இருவகையான பரிகாரங்கள் தேடப்பட்டிருக்க, அவைகளுக்கு வியாஜ்ஜிய மூலங்கள் வெவ்வேறு. A ஆதரவின்படி கிரயத்தை உறுதிப்படுத்தக் கொண்டுவரும் தாவாவில் தான் செலுத்திய தொகைக்குமட்டும் கிரயசொத்தில் ஹக்கு ஏற்படுத்த வேண்டுமென்ற பரிகாரத்தைச் சேர்க்கக்கூடாதென்றும் ஆகையால் வாதியின் பிராது பிடிக்கத்தக்கதல்லவென்றும் (2) வாதி ஷை அடமான டிக்கிரீகடனைத்தீர்க்க எவ்விதத்திலும் பிணைப்படாதிருக்கத் தானாய் வலுவில் தொகையைச் செலுத்தி ஏலத்தை நிறுத்தினதால் அப்படிச்செலுத்தின தொகைக்கு தாவாசொத்தில் ஹக்கு ஏற்படுத்தப்படும்படி கேட்க நியாயமில்லையென்றும், ஆகிய இரண்டு காரணங்களால் வாதியின் பிராது தள்ளுபடி செய்யப்பட்டதின் பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல்செய்து அங்கு சப்கோர்ட்டார் கொடுத்த இரண்டு காரணங்களில் முதல் காரணம் ஒப்பத்தக்கதல்லவென்றும் ஆனால் 2-வது காரணத்தின் நியாயத்தைச் சரியென்று

அங்கீகரித்து வாதியின் பிராது தள்ளுபடியாக வேண்டியதென்றே தீர்மானிக்கப்பட்டது.

ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:— 32 மதராஸ் 485-இல் சொல்லியிருக்கிற அபிப்பிராயத்தை அனுசரித்து சப்கோர்ட்டார் முதல் காரணத்தைக்காட்டி வாதி இருவகை வியாஜ்ஜியமூலத்தைப் பற்றின பரிகாரங்கள் ஒரே தாவாவில் தேடக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறார். அந்தத் தீர்மானம் தாவாகேசுக்கு ஒத்ததல்ல. ஏனெனில், தாவாகேசில் வாதி இருவகையான பரிகாரம் கேட்டும் இரண்டாவது பரிகாரத்தைப் பற்றி அசல் கோர்ட்டிலேயே இஷ்யூ ஏற்படுத்தியிருக்கிறார். தவிரவும் எதிரி வியாஜ்ஜிய மூலங்கள் ஒன்றோடொன்று சேர்க்கத்தகாத சந்தர்ப்பத்தைப்பற்றி அசல் கோர்ட்டில் ஆக்ஷேபிக்கவுமில்லை. ஆகவே சப்கோர்ட்டாரின் முதல்காரணம் சரியானதல்ல.

2-வது பாயிண்டைப்பற்றி யோஜிக்கும்பொழுது ஒருவனுக்காக மற்றொருவன் துகையைச் செலுத்தி மேற்படியானுடைய ஸ்தானத்திலும் பாத்தியதையிலும் அமைக்கப்படவேண்டுமெனக்கோரும் விஷயத்தைப்பற்றி 36 கல்கத்தா 193-இல் அதினுடைய நியாயரீதியானது விளம்பியிருக்கிறது. மேற்படி கல்கத்தா கேசில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் முக்கர்ஜீ யவர்கள் அபிப்பிராயத்தில் "ஒரு அந்நியன் வலுவில் மற்றொருவனுக்காகத் துகை செலுத்துகிற பட்சத்தில் அவ்வித அந்நியனுக்கு மற்றொருவன் பேரிலாவது மற்றொருவனுடைய சொத்தின்பேரிலாவது மேற்படி துகை பெற்றுக்கொள்ளுகிறவனுக்கேர்ப்பட்டிருந்த பாத்தியதை உண்டாகாது. ஒருமேடோவர் அல்லது உடன்படிக்கையின் பேரில் அவ்விதமாய்த் தொகை செலுத்தப்பட்டிருக்கவேண்டும், அல்லது யாதொருவன் துகையை மற்றொருவனுக்காகச் செலுத்தும்படி சட்டமுறைபால் கடமைபபட்டிருக்கவேண்டும். அல்லது ஒருவனுடைய சொந்த பாத்தியங்களுக்கு யாதொரு தீங்கு நேரிடாமல் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு மேற்கண்ட விதமாய் மற்றொருவனுக்காக யாதொரு துகை செலுத்தப்பட்டிருக்கவேண்டும். [திருஷ்டாந்தரமாக கூட்டுப்பட்டாவில் தீர்வை பாக்கிக்காக ஒருவன் மற்றொருவனுடைய பாகத்திற்காகச் செலுத்தவேண்டிய தீர்வையைச் செலுத்தாவிட்டால்ரெவினியூதரப்பில் தன்னுடைய நிலமும் ஏலம் போடப்படுமென்ற காரணத்தையிட்டு மேற்படியான் பாக்கிதீர்வையைச் செலுத்த நேரிடும்]" மேற்கண்ட சந்தர்ப்பங்களால் வாதி அடமான டிக்கிரீத்துகையைச் செலுத்தியதாக காணப்படவில்லை. 1906-ம் வருஷத்திய அசல் நம்பரில் பிறந்த டிக்கிரீத்துகையை அடமான சொத்தின்பேரில் நிறைவேற்றும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறதேயொழிய மேற்படி நம்பரில் 2-ம் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்ட வாதியைப் பொருத்து யாதொரு கட்டளையும் பிறக்கவில்லை. வி. பி. வி-யின் ஷெடியூலில் குறித்த விதமாய் மேற்படி டிக்கிரீ எழுதப்படாத போதிலும் மேற்படி டிக்கிரீயிலேயே வாதியிந்திய கிறயதாரனாகத் தெரியவந்ததால் அவனையும் பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று தெளிவாய்ச் சொல்லியிருப்பதால் வாதியும் மேற்படி அடமானக்கடனைச் செலுத்தக் கடமைப்பட்டவனென்று சொல்லி அதற்காக இரண்டு பிரதிவாதிகள் பேரிலும் டிக்கிரீ யளிக்கப்பட்டதாகச் சொல்லப்படவில்லை. அடமானசொத்தை ஏலம்போட்டுத் துகையை வசூலிக்கவேண்டும் என்ற கருத்துடன் டிக்கிரீ யெழுதப்பட்டிருப்பதில் சந்தேகமில்லை. [டிக்கிரீத்துகை செல்லாவதற்கு பாக்கி ஏற்பட்டால் 1-ம் பிரதிவாதியாகிய அடமானதார் பேரிலும் அவருடைய இதரமான சொத்துக்களிலும் தொடரலாமேயொழிய வாதியின்பேரில் தொடர நியாயமில்லை. வாதி மேற்படி துகையை ஸ்வய இச்சையாகச்செலுத்தினதாகவே நிதானிக்கவேண்டும். A ஆதாவின்படி தாவாசொத்தில் வாதிக்கு யாதொரு பாத்தியதையும் ஏற்படவில்லை. சுவாதீனமும் இடையாது. பிரதிப் பிரயோஜனம் யாதொன்றும் செல்லாகவில்லை. கிறயம் எவ்விதமாயும் நமோதுக்கு வரவில்லை. அப்படியிருக்க வாதி தனக்குள்ள பாத்தியதை யாதொன்றும் குறைந்துபோகாவண்ணம் டிக்கிரீக்கடனைத் தீர்த்ததாகஏற்படாது.



வாதிக்காக 21 மதராஸ் 143-இலும் 33, மதராஸ் 334-இலும் சொல்லியிருக்கிற அபிப்பிராயத்தை எடுத்துக் காண்பிக்கப்பட்டது. ஆனால் அந்தக்கேசில் ஒருவன் துகை செலுத்தும் சமயத்தில் தாவா சொத்துக்களில் பிரதிப் பிரயோஜனத்துடன் பெற்ற பாத்தியதையை அடைந்தவனாயிருந்தான். வேறு சில பக்கிக்காரர்களுக்கு மோசம் செய்யும்பொருட்டு கள்ள யோஜனையுடன் கலந்து தாவா சொத்தைக்கிறயம் பெற்றபோதிலும் கிறயத்திற்குப் பிரதிப் பிரயோஜனம் செலுத்தினவனாக ஏற்பட்டு கிறயம் செய்தவனுடைய பாக்கிக்காரன் ஒருவனுக்குத்தொகையைச்செலுத்தி அந்தத்துகையைப் பற்றினமட்டிலாவது தாவா சொத்தில் ஹக்கு ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டதற்கு அனுகூலத் தீர்ப்புகிடைத்தது. தவிர தன்னுடைய கிறயத்தை நிலைக்கப்பண்ணும்பொருட்டு துகை செலுத்தினவனாக ஏற்படுகிறது. அந்தக்கேசின் அம்சம் வாதிக்கு உதவக்கூடியதல்ல.

ஆகவே சப்கோர்ட்டார் வாதியின்பிராதைத் தள்ளுபடிசெய்தது பிசகல்லவென்று 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் பேக்வல்)

கிருஷ்ணா ஜில்லா.

S. A. 2278 of 1912–14 நவம்பர் 1913.

வெங்கடராமய்யா Vs லட்சுமுநரசிம்மாசார்லு

பந்தர் என்று வழங்கும் மசுலிப்பட்டணத்தில் வெணுர் அக்கிரகாரத்தைச்சேர்ந்த சில அக்கிரகாரம்தார்கள் தங்கள் நிலத்தை சாகுபடிசெய்யும் ரயட்டுகள்மீது வழக்கெடுக்கப்போவதாய் மேற்படிரயட்டுகளில் 1-7 வாதிகளாகிய சிலர் ஸ்தலத்திலுள்ள வக்கில் ஒருவராகிய பிரதிவாதியைத்தங்கள்பேரில் அக்கிரகாரம்தார் கொண்டுவரப்போகிற வழக்குகளில் தங்களுக்காக ஆஜராகவேண்டுமென்றும் ஷை அக்கிரகாரம்தார்களுக்காக ஷை வழக்குகளில் வக்காலத்து வாங்கக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டு அதற்காக மொத்த பீஸ் ரூ. 2000 பேசி அட்வான்ஸாக ரூ. 500 கொடுத்து அது விஷயமாய் எழுத்துமூலமான உடன்படிக்கையும் ஏற்பட்டது. அந்த எக்கிரிமெண்டில் பிரதிவாதி அக்கிரகாரம்தாரால் இதர ரயட்டுகள்பேரில் மேற்கூறிய வழக்குகளுடன் சேர்த்து அல்லது வெவேராக ஏககாலத்தில் கொண்டுவரப்படும் வழக்குகளுக்கும் அதேவிதமான பிஸ்துகை பெற்றுக்கொள்வதாயும் ஒப்புக்கொண்டார். தவிர ஷை வழக்குகளின் அம்சங்களைப்பற்றி மதராஸிலுள்ள வக்கில்மாரிடம் அபிப்பிராயம் வாங்குவதாய் 1-7 வாதிகளிடமிருந்து ரூ. 260 அபிப்பிராய பிஸ் வாங்கிக்கொண்டார். அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு அதை ஷை ரயட்டுகளிடம் தெரிவிக்காமல் அக்கிரகாரம்தார்களிடம் வக்காலத்து பெற்று 8-9-ம வாதிகளாகிய இதரமான இரண்டு ரயட்டுகள் மீது வழக்கெடுத்துப் பிராது தாகல் செய்யவே பிரதிவாதியாகிய ஷை வக்கில் எழுதிக்கொடுத்த ஒப்பந்தத்திற்கு மீறி நடந்தமையால் வாதிகளுக்கு நேர்ந்த நஷ்டத்தை வசூலிக்கும் பொருட்டு பந்தர் டி. மு. கோர்ட்டில் வாதிகள் தாவாசெய்தார்கள். டி. மு. கோர்ட்டாரும், அப்பீலில் சப்கோர்ட்டாரும் வாதிகளுக்கு, வக்கில்பெற்றுக்கொண்ட பீஸ் அட்வான்ஸ் ரூ. 500-யும் திரும்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று டிக்ரீயளித்தார்கள். அதன்மேல் வாதிகள் ஹைகோர்ட்டில் தங்களுக்கு அபிப்பிராய பீஸ் ரூ. 260-ம் வாபிஸ் கிடைக்கவேண்டுமென்று 2-வது அப்பீல் செய்து வாதாடினார்கள். பிரதிவாதியும், 8-9-ம் வாதிகளுக்கு வியாஜ்ஜியமூலம் கிடையாதென்றும் அவர்களைப் பற்றினமட்டில் பிராது தள்ளுபடியாகியிருக்கவேண்டுமென்றும் க்ராஸ் அப்பீல் செய்தார். ஹைகோர்ட்டார் பிரதிவாதியின் க்ராஸ் அப்பீலைத் தள்ளுபடிசெய்து வாதிகள் கோறியபடி அபிப்பிராயபீஸையும் திரும்பியடைய லாயக்குள்ளவர்களென்றே தீர்மானம் செய்து அந்தப்படிக்கு வட்டி செலவுதுகையுடன் டிக்கிரீயளித்தார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானத்தில்:—பிரதிவாதி ஒப்புக்கொண்ட எழுத்துமூலமான உடன்படிக்கையில் மற்ற ரயட்டுகள் மீதும் சேர்த்து ஒரே காலத்தில் கொண்டுவரப்பட்ட வழக்குகளில் அதே பீஸ் வாங்கிக்கொள்ள சம்மதித்திருப்பதால் 1-7 வாதிகள்மீது செய்யப்பட்ட பிராதுக்கு

முன்னுவது பின்னுவது அக்கிரகாரம் தார் மற்ற ரயட்டுகள் மீது கொண்டுவரும் வழக்குகளிலும் ஷை ஒப்பந்தத்தின் அம்சங்களால் கட்டுப்படக் கடவரல்லவென்று துலங்கினுலும் உடன்படிக்கையின் நிபந்தனைகளை யூகித்துப் பார்க்குமிடத்து வக்கில் அக்கிரகாரம் தாரால் கொண்டுவரப்படும் ஒரே விதமான (ஒரேவித பைசலை அபேக்ஷிக்கிற) வழக்குகள் யாவற்றிலும் ரயட்டுகளுக்காக ஆஜராகி அசல்கோர்ட்டிலும் அப்பீல் கோர்ட்டிலும் கூடியஉதவி செய்யவேண்டுமென்றும், அக்கிரகாரம் தாருடைய தரப்பில் சேர்ந்து ரயட்டுகளுக்கு எதிராக ஆஜராகக் கூடாதென்றும் ஒப்புக்கொள்ளப் பட்டதாகவும் அந்தக்கருத்துடன் தான் எழுத்துமூலமான உடன்படிக்கை பிறந்ததாகவும் யூகிக்கவேண்டும். அப்படியிருக்க 8-9-ம் வாதிகளாகிய இதரமான சில ரயட்டுகள்மீது அக்கிரகாரம்தாரிடம் வாக்காலத்துவாங்கிப் பிராது நடத்தின காரணத்தால் மற்ற வாதிகளுக்கு ஒப்பந்தம் செய்துகொண்ட விதமாய் பட்சபாதமன்னியில் நடந்துகொள்ள சக்தியற்றவராகப் போய்விட்டதில் சந்தேகமில்லை. ஆகவே வக்கில் ஒப்பந்தத்தை மீறினுரென்றும் ஆகையால் ஒப்பந்தத்தின்படி பெற்றுக்கொண்ட தொகை யாவற்றையும் வாபீஸ்செய்யவேண்டியது நியாயமே. மதராஸ்வக்கில்மாரிடமிருந்து அபிப்பிராயத்தைச் செலவுசெய்து பெற்றுக்கொண்டும் அந்த அபிப்பிராயத்தை வாதிகளிடம் (கொடுக்காமல்) தெரிவிக்காமல் தன் வசம் வைத்துக்கொண்டு எதிர் தரப்பில் வக்காலத்து வாங்கினது மன்னிக்கத்தக்க நடத்தை யல்ல. அபிப்பிராய பீஸ் செலுத்தியவர்களுக்கு நன்மை யாதொன்றும் கிடைக்கவில்லை. ஒருக்கால் அந்த அபிப்பிராயத்தால் எதிரிநன்மை லாபத்தை அடைந்திருக்கக்கூடும். ஆகையால் இவ்வித சந்தர்ப்பத்தில் பிரதிவாதி அபிப்பிராய பீஸ் தொகை ரூ. 260-யும் வாபிஸ்செய்து விடுவது நியாயமே. 8-9-ம் வாதிகளுக்கு வியாஜ்ஜியமூலம் கிடையாதென்று க்ராஸ் அப்பீலில் வாதிக்கப்பட்டது. ஒப்பந்தம் கிராமத்துக் குடிகள் யாவற்று பேர்களுக்காகவும் செய்துகொள்ளப்பட்டதா என்ற பாயிண்டைப்பற்றி கீழ் கோர்ட்டார் தீர்மானம் செய்யவில்லை. என்றுலும் பிரதிவாதிக்கு அதனுல் யாதொரு அந்நியாயமும் ஏற்படாதபடியால் திரும்பவும் அந்தவிஷயத்தைப்பற்றித் தீர்மானிக்கும்படி உத்தரவளிப்பதவசியமில்லை.

மேற்கூறிய காரணங்களால் வாதிகளுக்கனுகூலமாக 2-வது அப்பீல் பைசலாச்சுது. வாதிகள் கேட்ட மற்றவிதமான நஷ்ட பரிகாரங்கள் அளிக்கப்படவில்லை. வாதிகளுக்குக் கிடைத்த பரிகாரத்திற்குத் தக்க செலவுதொகையும் டிக்கிரியாச்சுது.

—————:O:—————

(மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்)

சித்தூர் ஜில்லா.

C. R. P. No. 900 of 1912–26 நவம்பர் 1913.

போடிநாயுடு Vs செங்கமநாயுடு

திருப்பதி டி-மு. கோர்ட்டில் ஒரு குறித்த கால்வாய் வழியாக ஜலம் போவதைப்பற்றி பிரதிவாதி ஆக்ஷேபணை செய்தமையால் வாதி அந்த விஷயத்தை ஸ்தாபிக்கும்பொருட்டு அசல் தாவா செய்தார். பிராதில் குறிக்கப்பட்ட ஜாகாவில் கால்வாய் கிடையவே கிடையாதென்று பிரதிவாதி எதிர் ஆன்ஸர் கொடுத்ததின்பேரில் வாதி கோர்ட்டாரை நேரில்வந்து ஷை ஜாகாவைப் பார்வையிட்டுப் பரிசீலனைசெய்து தீர்மானம் கொடுக்கும்படி மனுவில் விண்ணப்பம்செய்து அதற்குறிய செலவுக்காகவும் ரூபாய் 20 கோர்ட்டில் டிபாஸிட்கட்டினுர். அதன்பேரில் டி-மு. கோர்ட்டார் ஜில்லா ஜட்ஜியவர்களிடம் அவ்விதமாய் ஸ்தலத்தைப்போய்ப்பரிசோதனைசெய்வதற்காக அனுமதி கேட்டதில் பழய ஸி. பி. ஸி. 392-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிற பிரகாரம் இருதரத்தாரும் சேர்ந்து விண்ணப்பம்செய்துகொள்ளாத காரணத்தால் ஜில்லா ஜட்ஜியவர்கள் அனுமதிகொடுக்காதபடியால் டி-மு. கோர்ட்டார் வாதியின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்து டிபாஸிட் கட்டியிருந்த ரூ. 20-யும் வாபீஸ்செய்யும்படி உத்தரவளித்தார்கள். வாதி டி-மு. கோர்ட்டாரின் விண்ணப்ப உத்தரவின் பேரில் ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு தாகல் செய்ததில் ஹைகோர்ட்டார் பின்வருமாறு உத்தரவளித்தார்கள்:—



பழய ஸி. பி. ஸி. 392-வது பிரிவின்படி ஜில்லா ஜட்ஜியவர்களிடம் அனுமதி பெறவேண்டிய சட்டமுறையானது புதுகோடின் ஆர்டர் 18-ரூல் 18-இல் விதிக்கப்பட்டிருக்கிற அம்சங்களுக்கு முற்றிலும் விரோதமாயிருக்கிறது. புதுகோடின்படி ஸ்தலத்தைப் பார்வையிடவேண்டியதாய்த் தோற்றுமிடத்து முன்ஸீப் தன் யுக்தத்தை அனுசரித்து நடக்கலாம். பழய ரூல் இரதரப்பாரும் சேர்ந்து செய்துகொள்ளும் விண்ணப்ப விஷயமாய் அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறதுபோல் தோன்றுகிறது. மற்ற சந்தர்ப்பங்களில் அதாவது, இருதரப்பாரும் சேர்ந்து கோருத ஒருதரப்பின் விண்ணப்பத்திற்கு செலவு தொகையை டிபாஸிட் செய்யவேண்டுமென்ருவது செலவு தொகையை வாங்கக்கூடாதென்ருவது அந்த ரூலில் சொல்லப்படவில்லை. கோர்ட்டார் பிரியப்பட்டால் யாதொரு சார்ஜுமம் வாங்காமலே ஸ்தலப்பரிசோதனை செய்யலாம். அதற்கு ஜில்லா ஜட்ஜியவர்களின் அனுமதி அவசியமில்லை. ஆகையால் மேற்கூறிய அபிப்பிராயத்தின்படி கோர்ட்டார் மறு விண்ணப்பம் செய்யப்பட்டால் ஸ்தலத்தைப்போய் பார்க்கலமாகையால் முன்செய்த பிசகான உத்தரவை ரத்துசெய்யவேண்டிய தவசியமில்லை. ஏனெனில் கோர்ட்டார் முதலில் விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்தபோதிலும் அந்த உத்தரவு பிந்திய மனுவின்பேரில் ஸ்தலத்தைப்போய்ப் பார்க்கத் தடையாகாது. ஆகவே புதிய கோடின்படி டி-மு- கோர்ட்டார் ஸ்தலப் பரிசோதனைசெய்வதற்கு ஜில்லா ஜட்ஜியவர்களின் அனுமதி தேவையில்லை. ஜில்லா கோர்ட்டார் அனுமதியை மறுத்தபோதிலும் முன்ஸீப் கோர்ட்டாருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டதின்பேரில் யுக்தமென்று தோன்றினுல் அந்தப்படி யாதொரு செலவு தொகையையும் ஏற்றுக்கொள்ளாமல் ஸ்தலத்தைப்போய்ப்பார்க்கலாம். டி-மு கோர்ட்டார்செய்த உத்தரவால் வாதிக்கு யாதொரு பாதகமும் ஏற்படவில்லை. ஆகையால் ஷை உத்தரவை மாற்றத்தேவையில்லையென்று தீர்மானித்தார்கள். ஆனுல் ஸ்தலத்தைப்பார்வையிடுவதற்காக யாதொரு செலவு தொகையை வசூலிக்கவேண்டுமானுல் அதற்கு ஜில்லா ஜட்ஜியவர்களின் அனுமதி வேண்டுமென்றுரூலிருக்கிறது.

—————:O:—————

(Messrs ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)

திருநெல்வேலி ஜில்லா.

C. M. A. No. 51 of 1912—

19 செப்டெம்பர் 1913.

முத்துராக்கு மணியகாரன் Vs ராக்கப்பா வகையரா.

1-வது ஷெடியூல், 2-வது ஷெடியூல் இரண்டிலும் விவரித்திருகிற சொத்துக்களுக்குடையவனுயிருந்த 1-ம் பிரதிவாதி ஷை சொத்துக்கள் இரண்டையும் ஒன்ருகச் சேர்த்து 1889-ம் வருஷத்தில் ஒரு ஜமீன்தாரிடம் குதவை (அடமானம்) வைத்திருந்து 31 ஜூலை 1895-இல் 1-வது ஷெடியூல் சொத்தைத் தனிமையாக வாதியின் தகப்பனுக்கு விக்கிரயம்செய்து அதில் ஜமீன் அடமான வில்லங்கத்தைத் தான் வேறுவிதமாய்த் தீர்த்து விடுவதாக ஒப்புக்கொண்டு ஆகவே வில்லங்க சுத்தியாய் விக்கிரயம் செய்யப்பட்டதாகக் கண்டிருந்தது. மறுதினமே அதாவது 1895 ஆகஸ்ட் 1-இல் 2-வது ஷெடியூல் சொத்துக்களை 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு விக்கிரயம் செய்து ஜமீன் அடமானத்தொகை பூராவையும் (அதாவது இரண்டு சொத்துக்களின்பேரில் ஏற்பட்டிருந்த அடமானக்கடன் தொகை மூழுவதையும்) 2-ம் பிரதிவாதியே செலுத்தி ஷை வில்லங்கத்தைத் தீர்த்துவிடவேண்டுமென்று ஏற்பாடுசெய்து மிகுதியான விக்கிரயத்தொகையை மட்டும் ரொக்கம் பெற்றுக்கொண்டார். 2-ம் பிரதிவாதி ஜமீன் கடனை தன் விக்கிரயத்தில் கண்ட பிரகாரம் தீர்த்துக்கொள்ளத் தவறினபடியால் ஜமீன்தார் அடமானதாராகிய 1-ம் பிரதிவதியையும் வாதியின் தகப்பனையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்து டி-மு-கோர்ட்டில் இரண்டு சொத்துக்களை ஏலம்போட்டு தொகை வசூலிக்கப்பட வேண்டுமென்றும் இரண்டு பிரதிவாதிகளின் பேரில் ஆளைப்பொறுத்தும் டிக்கிரீயளிக்கப்பட வேண்டுமென்றும் சொல்லி அடமான தாவா செய்தார்.

(2-ம் பிரதிவாதிகடனைத் தீர்க்க ஒப்புக்கொண்டிருந்தும் அவரைப் பார்டியாகச் சேர்க்கவில்லைபோலும்) ஜமீன்தார் பிராது தாகல் செய்தபிறகு வாதியின் தகப்பன் இறந்து போகவே கோர்ட்டார் தாவாசொத்துக்களில் வாதியின் தகப்பனுக்குள்ள பாத்தியதைக்கு யாதொரு பங்கமும் வரக்கூடாதென்று விலக்கி ஆனால் இரண்டு சொத்துக்களைப் பொறுத்தும் 1-ம் பிரதிவாதியின்பேரிலும் டிக்கிரீயளித்தார்கள். ஆகவே வாதியின் தகப்பனுக்கும் அவன் இறந்த பிறகு வாதிக்கும் 1-வது ஷெடியூல் சொத்தில் விக்கிறயத்தின்படி ஏற்பட்ட பாத்தியதைக்கு யாதொரு கெடுதியும் ஷை டிக்கிரீயினால் ஏற்படுத்தப்படாதபோதிலும், ஜமீன்தார் வாதிவசமிருக்கும் 1-வது ஷெடியூல் சொத்தின்பேரில் பிரதமத்தில் தொடர்ந்து அந்தசொத்தை டிக்கிரீயில் உததரவளிக்கப்பட்ட பிரகாரம் ஏலம்போட நிறைவேற்று மனுக்கொடுத்தார். [2-ம் பிரதிவாதி பிராதில் சேர்க்கப்படாத காரணத்தால் ஷை யாருக்கு விக்கிறயமான சொத்தின்பேரில் மூதலில் தொடரவில்லைபோலும்.] வாதி தன்னுடைய விக்கிறய சொத்துக்கு யாதொரு நிர்பந்தமும் நேரிடாதபடிக்கு 2-ம் பிரதிவாதியால் ஜமீன் அடமானம் தீர்க்கப்பட வேண்டியதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தும் தானே ஷை ஜமீன் அடமானத்தொகையை டிக்கிரீப்படிக்கு ஜமீன்தாருக்குச் செலுத்தி ஏலத்தை நிறுத்திவிட்டுத் தான் மேல்கண்ட விதமாய்ச் செலுத்தின தொகையைத் திரும்பி அடைவதற்காக 1-ம் பிரதிவாதியையும் 2-ம் பிரதிவாதியையும் சேர்த்து தூத்துக்குடி டி. மு. கோர்ட்டில் தாவாசெய்து 2-வது ஷெடியூலில் கண்ட சொத்தின்பேரில் ஷை தொகைக்கு ஹக்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் 1-ம் பிரதிவாதி தனக்கு வில்லங்கசுத்தியாக கிறயம் செய்தும் தன்னுடைய பாகக் கிறய சொத்துக்கு நிர்ப்பந்தம் உண்டாக்கினகாரணத்தால் ஷை யாரின் பேரில் ஆளைப்பொறுத்தும் வாதி பரிகாரம் தேடினர். டி-மு-கோர்ட்டார் 1-ம் பிரதிவாதியின் பேரில் யாதொரு தப்பிதமும் கிடையாதென்றும் ஜமீன்கடனைத் தீர்க்கவேண்டிய கடமை பூராவும் 2 ம் பிரதிவாதியின் மேலிருக்க அவர் வசமுள்ள 2 வது ஷெடியூல் சொத்தின்பேரில் ஹக்கு ஏற்படுத்தி, 2ம் பிரதிவாதியின்மேல் ஆளைப்பொறுத்தும் வாதிக்கு டிக்கிரீயளித்து 1 ம் பிரதிவாதியைப் பற்றினமட்டில் பிராதைத் தள்ளுபடி செய்தார்கள். அதாவது 1 ம் பிரதிவாதியின் பேரில் யாதொரு பரிகாரமும் அளிக்கப்படவில்லை.

2-ம் பிரதிவாதி டி.மு. கோர்ட்டின் டிக்கிரீயின்பேரில் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட்டார் அசல் கோர்ட் பைசலை ரத்துசெய்து வாதியின் தகப்பனுக்கும் 2-ம் பிரதிவாதிக்கும் ஜமீன் கடனைத்தீர்க்கும் விஷயத்தில் யாதொரு விதமான பரஸ்பர உடன்படிக்கை யிருந்ததாக ருஜுவாகயில்லையென்றும் அதாவது 2-ம் பிரதிவாதி ஷை கடனைத் தீர்ப்பதாக ஒப்புக்கொண்ட விஷயம் வாதியின் தகப்பனுக்குத தெரியப்படுத்தப்பட்டு அவ்விதமாய நடந்துகொள்வதாய் 2-ம் பிரதிவாதி வாதியின் தகப்பனுக்கு உடன்பட்டதாக ருஜுவாகவில்லையென்றும் வாதி ஜமீன் கடனை சுதாவில் தீர்த்துவிட்டமையால் வாதியும 2-ம் பிரதிவாதியும் அடமான சொத்துக்களை அடைந்ததில் அவைகளுடைய விலைமதிப்பின் வீதாசாரப்படிக்கு ஜமீன் கடனைப்பகிர்ந்து 2-ம் பிரதிவாதியின் வீதத்தை வாதி அடைய பாத்தியமுண்டேயொழியஜமீன் கடன் பூராவையும் 2-ம பிரதிவாதி வாதிக்குச் செலுத்த நியாயமில்லையென்றும் ஆகவே இரண்டு சொத்துக்களையும் மதிப்பிட்டு அந்த விகிதப்படி ஜமீன் கடனைப்பகிர்ந்து 2.ம் பிரதிவாதிக்குரிய கடன் பாகமிவ்வளவென்று தீர்மானித்து அந்த தொகைக்குமட்டும் வாதிக்குப் பரிகாரம் அளிக்கவேண்டுமென்று கேசை டி-மு. கோர்ட்டுக்கு ரிமான்டு செய்துவிட்டார்கள். அதாவது புனர்விஜாரணைசெய்து பைசல் செய்யும்படி உத்தரவளித்தாகள். [வாதியின் கிறயசொத்து ரூ. 400-ம் 2-ம் பிரதிவாதியின் கிறய சொத்து ரூ. 200-ம் விலைமதிப்பாக ஏற்பட்டால் ஜமீன் கடனும் அதேவிதமாகப் பங்கிடப்படவேண்டும். அலாவது வாதி இரண்டு பங்கையும் 2-ம் பிரதிவாதி ஒரு பங்கையும் செலுத்த வேண்டும். வாதி பூராவும் செலுத்திவிட்டதால் ஜமீன் கடனில் மூன்றில் ஒரு பங்கை வாதி 2-ம் பிரதிவாதியிடம் பெற்றுக்கொள்ளவேண்டும் ஆகவே சொத்துக்களின் விலை மதிப்புக்குத்தக்க கடன் பங்கிடப்படவேண்டுமென்று ஜில்லா கோர்ட்டார் தீர்மானித்து மேற்கண்ட ரிமான்டு உத்தரவளித்தார்.]



ஜில்லா கோர்ட்டார் தீர்மானத்தின்பேரில் (ரிமாண்டு ஆர்டரின்பேரில்) வாதி ஹைகோர்ட்டில் சில்லரை மனு அப்பீல் செய்தார். ஹைகோர்ட் பைசல் சுருக்கமாவது:—

வாதி ஐந்து முக்கியமான பாயிண்டுகளை அப்பீல் க்ரௌண்டில் சொல்லி வாதாடினர்.

(1) 1-ம் பிரதிவாதியும் 2 ம் பிரதிவாதியும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி ஜமீன்கடன் பூராவையும் 2 ம் பிரதிவாதி தீர்த்துக்கொள்ள வேண்டிய ஏற்பாட்டில் வாதியின் தகப்பனும் சம்மந்தப்பட்டிருக்கிறதாகவும் அந்த ஏற்பாட்டினால் வாதியின் தகப்பனுக்கு 2 ம் பிரதிவாதி அடமான வில்லங்கத்தைத் தீர்த்து விடுவதாய் ஒப்புக்கொண்ட பாவனையாகுமென்பதாய்ஜில்லாகோர்ட்டார் தீர்மானம் செய்திருக்க வேண்டுமென்று வாதிக்காகச் சொல்லப்பட்டது. இது லா பாயின்டல்ல ருஜுபாயிண்டாகும். அது விஷயமாய் ஜில்லாகோர்ட்டார் கொடுத்திருக்கிற அபிப்பிராயத்திற்கு மாறுகத் தீர்மானிக்க நியாயமில்லை. அதாவது 1-ம் பிரதிவாதியும் 2 ம் பிரதிவாதியும் செய்துகொண்ட விக்கிறய ஏற்பாட்டில் வாதியின் தகப்பன் பார்டியாக யிருந்தவனல்ல. அந்த ஏற்பாட்டின் அம்சங்களைப்பற்றி வாதி வற்புருத்திப் பரிகாரம்தேட நியாயமில்லை.

(2) வாதிக்கு ஜமீன் கடனில் 2-ம் பிரதிவாதியின் சொத்து பாகத்திற்குத்தக்க பங்குவிகிதமின்னவென்று தீர்மானிக்கும் பொருட்டு டி-மு. கோர்ட்டாரிடம் அபிப்பிராயம் அறிந்து ஜில்லா கோர்ட்டார் தாங்களே பைசல்செய்திருக்கலாமென்றும் மறுவிஜாரணைக்கு அனுப்பவேண்டிய தவசியமில்லையென்றும் ரிகார்டில் அடங்கியிருக்கும் தகவல்களும் ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்பட்ட சட்ட பாயிண்டுக்குறிய அம்சங்களும் டி. மு. கோர்ட்டாருடைய விலை மதிப்பின் அபிப்பிராயத்துடன் கூடினால் ஜில்லா கோர்ட்டார் கருத்துக்குத்தக்க பைசல் அளிக்கக்கூடுமென்றும் வாதிக்காகச் சொல்லப்பட்டு அதற்காதாரமாக (1913) 18 கல்கத்தா லா ஜர்னல் 612 எடுத்துக்காட்டப்பட்டது. இந்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்ககாகும். ஜில்லா கோர்ட் ரிமாண்டு உத்தரவு அனுவசியம்.

(3) டி-மு கோர்ட்டார் 1-ம் பிரதிவாதியின் பேரில் பரிகாரம் அளிக்காததைப்பற்றி வாதி ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்யாதபோதிலும் ஜில்லாகோர்ட்டார் 1-ம் பிரதிவாதியின்பேரிலும் டிக்கிரீ யளித்திருக்கவேண்டுமென்று வாதிக்கப்பட்டது. ஸி. பி. ஸி. ஆர்டர் 41-ரூல் 33-இன்படி அப்பில் செய்யப்படாதபோதிலும் அப்பீல் கோர்ட்டார் அவ்வித பரிகாரம் அளிக்க அதிகாரம் உண்டு. ஆனால் ஜில்லா கோர்ட்டார் இந்தக்கேசில் 1-ம் பிரதிவாதியின்பேரில் டிக்கிரீயளிக்க நியாயமில்லை. 1-ம் பிரதிவாதியிடம் 2-ம பிரதிவாதி ஒப்புக்கொண்ட விதமாய் ஜமீன்தாருக்குக் கடனைக் கொடுக்கத் தவறினதால்இவ்வித உபத்திரவம் ஏற்பட்டது. 1-ம் பிரதிவாதிக்கு வாதியை மோசம் பண்ணும் கருத்தில்லை.

(4) இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 69, 70 .வது பிரிவின்படி வாதி 2-ம் பிரதிவாதியிடம் பூராத்தொகையையும் அடைவதற்கு பாத்தியமுண்டென்று சொல்லப்பட்டது. ஜமீன்தார் கடனை செலுத்தப்படும் விஷயத்தில் வாதிக்கு சிறத்தை உண்டாயிருக்கவேண்டியதவசியம். பொதுவான சட்டமுறையிலும் 69-வது ஆக்ட் படிக்கும் வாதி 2-ம் பிரதிவாதியிடமிருந்து தான் செலுத்தின தொகை பூராவையும் திரும்பி அடையக் கோருவது நியாயமே. (1913) 11 அலகபாத் லா ஜர்னல் 478-இல் செய்யப்படிருக்கிற தீர்மானத்தைப்பார்க்கவும். அதில் ஒரு வாதி சொத்துக்காரனிடம் சொத்தை கிறயத்திற்கு வாங்கியிருக்க ஷை சொத்தின்மேல் ஏற்பட்டிருந்த அடமானத்தைத் தீர்த்துவிடுவதாக ஒரு பிரதிப்பிரயோஜனத்தை அடைந்த பிரதிவாதி ஒப்புக்கொண்டும் அந்தப்படி செய்யத்தவறினதால் வாதி டிக்கிரீபெற்ற அடமானதாருக்கு அத்தொகையைச்செலுத்திவிட்டு பிரதிவாதியிடம் ஷை தொகையை வசூலிக்க யத்தனித்ததில் அலகபாபாத் ஹைகோர்ட்டார் வாதிக்கு அனுகூலமாய்த் தீர்ப்பளித்திருக்கிறார்கள். சொ டையவன் எவ்

விதமாய் பிரதிவாதியின்மீது தொடருவதற்கு பாத்தியதையுண்டோ அதேபாத்தியதை வாதிக்கு மாறிவிட்டதாக அபிப்பிராயப்பட்டு ஒப்பந்தத்திற்கு மீறி நடந்த பிரதிவாதியின்மீது நஷ்டத்திற்காக வாதி தாவாசெய்து டிக்கிரீ யடையலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள்: அந்த நியாயம் அதிக யுக்தமானதாக இருக்கிறது. 1913 17 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 1143-இல் பிரதிவாதி A-என்பவனிடம் பிரதிப்பிரயோஜனம் பெற்று B-என்பவனுக்கு யாதொரு துகை கொடுப்பதாய் ஒப்பந்தம் செய்துகொடுத்தால் B-என்பவன் வாதியாக பிரதிவாதியின்மீது ஒப்பந்தப்படி நடத்தக் கட்டாயப்படுத்த சட்டமுண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1871) 6 சான்ஸ்ரி அப்பீல் 671-இலும் மேற்கூறிய நியாயம் அனுசரிக்கப்பட்டிருக்கிறது. ஜமீன்தார் 2-ம் பிரதிவாதியின்மீது வழக்கெடுத்தால் கடன் துகை பூராவையும் வசூலிக்க நியாயம் ஏற்படுமென்று மேற்கூறிய தீர்மானங்களால் சொல்லப்படவேண்டும். ஏனெனில் 2-வது ஷெடியூலில் சொத்துக்களைக் கிரயம் பெறுங்காலத்தில் ஜமீன்கடன் பூராவையும் தீர்த்துவிடுவதாய் 1-ம் பிரதிவாதியிடம் ஒப்புக்கொண்டிருக்கிறார். அந்தப்படி ஜமீன்தார் வசூலிக்க நியாயமுண்டு. ஜமீன்தாருக்கு 2-ம் பிரதிவாதி பிணைப்பட நியாயமிருப்பதால் வாதிக்கு அந்த பாத்தியதை 69-வது பிரிவின்படி உண்டென்பதில் சந்தேகமில்லை.

தவிர 26 மதராஸ் 497 - இல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்யரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டேவிஸ் துரையவர்களும் ஒரு விதந்துவானவள் தன் குமாரத்திக்கு விவாகம் முடித்துவைப்பதில் சிரத்தையுடையவளாயிருக்க அந்தப்படி விவாகத்தை முடித்த பிறகு அதற்காக நேர்ந்த செலவைத் தன் மைத்துனன்மார்களிடமிருந்து வசூலிக்க பாத்தியமுண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஏனெனில் சட்டப்படி ஷை யாள் புருஷனுடைய சகோதரர்கள் அந்தச் செலவைக் கொடுக்கக் கடமைப்பட்டவர்களாகிறார்கள். 32 மதராஸ் 232-இல் ஒருவனுக்கு மூன்றாவது மனுஷியன் கொடுக்கவேண்டிய துகையைச் செலுத்தும் விஷயத்தில் அக்கரையுள்ள[illegible]க்கு யாதொரு நஷ்டம் அல்லது அசவுகரியம் நேரிடுமென்ற பயம் ஏற்பட்டபோதிலும் வாதி தானே அத்துகையைச் செலுத்தி 3-ம் மனுஷ்யனிடம் ஷை துகையைத் திரும்பி அடைய நியாயமுண்டென்று ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரவர்களும் தீர்மானித்திருக்கிறார்கள். 26 மதராஸ் கேசில் வாதிக்கு அதாவது விதந்துவான ஸ்திரீக்கு பொருள்நஷ்டம் ஏற்படக்கூடிய பயத்தால் செய்த செலவல்ல. தன் குமாரத்திக்கு விவாகம் முடிக்காத பட்சத்தில் ஜாதியார் முன் குறைவு ஏற்படுமென்ற பயம் காரணமாச்சுது. 32 மதராஸ் கேசிலோ வாதிக்கு யாதொரு அசவுகரியம் அல்லது தடங்கள் நேரிடக்கூடிய சந்தர்ப்பமும் 69-வது பிரிவின்படி பரிகாரம் தேடக்கூடியதாகும். 28 அலகபாத் 563-யும், 20 மதராஸ் லா ஜர்னல் 690-யும் (1911) 11 I. C. 156-யும் பார்க்கவும். ஒருவன் வலுவில் அனாவசியமாய்த்துகையை மற்றொருவனுக்காகச் செலுத்தின விஷயத்தைப்பற்றி 11 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 541-ஐப் பார்க்கவும். (1911) 22 மதராஸ் லா ஜர்னல் 364-இல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ்ஸ்பென்ஸர் துரையவர்களும் ஒருஎட்டிய அனந்தர வார்சானவன் குடும்ப சொத்தை அடமானதார் அபகரித்துப் போகாதபடிக்குக் கடனைத் தீர்த்துவிட்டு அந்தத் துகைக்கு ஷை சொத்தில் ஹக்கு ஏற்படுத்திக்கொள்ள நியாயமுண்டென்று காண்ட்ராக்ட் ஆக்ட் 69-வது பிரிவின் அம்சங்களை அனுசரித்து அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகவே ஜில்லா கோர்ட்டாருடைய ரிமாண்டு உத்தரவு பிசகென்றுமட்டுமல்ல, அவர்களுடைய சட்ட அபிப்பிராயமும் பிசகென்று தீர்மானிக்கப்பட்டு டி-மு கோர்ட்டாருடைய டிக்கிரீ காயமானதில் 2-ம் பிரதிவாதியின்பேரில் ஆளைப்பொறுத்து டிக்கிரீயளிக்கக் கூடாதென்று சொல்லி அந்த பாகத்தைமட்டும் மாற்றப்படும்படி உத்தரவாச்சுது.

———:O:———



(மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட்)

வெல்லூர் ஜில்லா.

**C. R. P. No 486 of 2913-13 நவம்பர் 1913.**

நகிரிராசப்ப செட்டி Vs நம்புரி வெங்கட்ரத்னம்

வெல்லூர் டி-மு கோர்ட்டாரால் அளிக்கப்பட்ட ஒரு ஸ்மால்காஸ் எக்ஸ்பார்டி டிக்கிரீயை மாற்றி மறு விஜாரணை செய்யவேண்டுமென்று, நேரில் சம்மன்ஸ் பெற்றுக்கொள்ளாத பிரதிவாதி கொடுத்த விண்ணப்பத்தை டி-மு கோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டதின்பேரில் பிரதிவாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு கொடுத்தார். முன்சீப் கோர்ட்டாருடைய உத்தரவை ரத்து செய்து ஹைகோர்ட்டார் கொடுத்த தீர்மானச்சுருக்கமாவது:—

ஸி. பி. ஸி. ஆர்டர் 9-ரூல் 13-இன் பிரகாரம் எக்ஸ்பார்டி டிக்கிரீயை மாற்றக்கோருகிற பிரதிவாதி தனக்கு சட்டப்படி சம்மன்ஸ் ஸர்வாகவில்லையென்று கோர்ட்டாருக்குத் திருப்திகரமாய் ருஜுப்படுத்தவேண்டும். அல்லது சரியானபடி ஸர்வாகியிருந்தும் தகுந்த காரணங்களால் ஈரங்கி சமயத்தில் ஆஜராகத் தடைப்பட்டதென்று கோர்ட்டாருக்குத திருப்திகரமாய் ரூபிக்கவேண்டும். தாவா கேசில் பிரதிவாதியின் குமஸ்தாவிடம் சம்மன்ஸ் ஸர்வ் செய்யப்பட்டதாக அமீனா ரிட்டர்னில் இண்டார்ஸ் செய்திருக்கிறார். அவ்விதமாய் குமஸ்தா மூலமாக ஸம்மன்ஸ் ஸர்வ் செய்தது சட்டப்படி செல்லத்தக்கதென்று சமாதானம் சொல்லவேண்டிய பொறுப்பு வாதியைச் சேர்ந்ததாகும். ஏனெனில் அமீனாவின்ரிட்டர்னைக்கவனித்து ஆர்டர் 5-ரூல் 1?, 13-இல் விதிக்கப்பட்டிருக்கிற அம்சங்கள் அனுசரிக்கப்பட்டதாகத் தோன்றவில்லை. [ஆர்டர் 5-ரூல் 12-இல் சொல்லியிருக்கிறபடி சம்மன்ஸ் பிரதிவாதியினிடம் நேரில் சர்வசெய்ய சாத்தியப்படாத பட்சத்தில் ஷை சம்மன்ஸை ஏற்றுக்கொள்வதற்காக அதிகாரம் பெற்றிருக்கிற ஏஜண்டிடம் கொடுத்து ஸர்வ் செய்யலாம். அவ்வித ஸர்விஸ் சட்ட விரோதமல்ல. 13-வது ரூல்படி ஒரு வர்த்தக சம்பந்தமான அல்லது ஒரு தொழில் விஷயமான தாவா செய்யப்படுவதில் சம்மன்ஸ் பிறப்பிக்கும் கோர்ட்டாருடைய அதிகாரத்திற்குட்படாத வெளி இலாகாவில் பிரதிவாதி வசிக்கும்பட்சத்தில் கோர்ட்டாருக்குட்பட்ட இலாகாவில் பிரதிவாதிக்காக வர்த்தகத்தை அல்லது தொழிலை நடத்திவரும் ஏஜண்டு அல்லது மானேஜர்பேரில் பிரதிவாதிக்கு பதிலாக சம்மன்ஸ் சர்வ் செய்யலாம். அதுவும் சட்ட விரோதமல்ல] பிரதிவாதியின் குமஸ்தாபேரில் ஸர்வானது சரியானதென்று அபிப்பிராயப்பட்டு அது மேற்கூறிய சட்டமுறைகளுக்கு ஒத்திருக்கிறதாவென்று [அதாவது ஷை குமஸ்தாவுக்கு, எஜமானுக்காக சம்மன்ஸ்பெற்றுக்கொள்ளும் அதிகாரம் இருக்கிறதா அல்லது ஷை குமஸ்தா 13-வது ரூல்படி பிரதிவாதிக்காக ஏஜண்டாயிருந்து அல்லது மானேஜராயிருந்து தாவாவுக்குச் சம்பந்தப்பட்ட வர்த்தகம் அல்லது வேலையை நடத்திவருகிறாரா என்று] விஜாரணை யாதொன்றும் செய்யாமல் டி-மு கோர்ட்டார் வாதிக்கு எக்ஸ்பார்டி டிக்கிரீ யளித்திருக்கிறார்கள். அப்படிச்செய்தது பிசகு. ஆகையால் மனுதாரின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தது தப்பென்று சொல்லி ஷை விண்ணப்பத்தை மறுபடியும் பயிலுக் கெடுத்துக்கொண்டு மேற்கூறிய முறைகளைக் கவனித்துப் பரிபூரணமான விஜாரணை செய்து பைசல்செய்யும்படி டி-மு கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது. செலவு துகை முடிவான பைசலைப்பொறுத்ததாகும்.

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட்)

வடமலையாளம் ஜில்லா

**C. R. P. No. 284 of 1912-12 நவம்பர் 1913**

வாதிநிலத்தீர்வையை 1-ம் பிரதிவாதியிடமாவது அல்லது 2-ம் பிரதிவாதியிடமாவது செலுத்தக்கடமைப்பட்டிருக்க இருவருக்கும் வெவ்வேறாக ஒரே தீர்வைபாக்கியை இரண்டுதடவை செலுத்தநேரிட்டதால் அவ்விதமாய்ச் செலுத்தின பிறகுமுதலில் செலுத்திய 1-ம் பிரதிவாதியின் பேரில்செலுத்தின துகையைத் திரும்பி அடையும் பொருட்டு (Quilandy) டி-மு-கோர்ட்டில் அசல் தாவாசெய்தார். இருவருக்கும் தீர்வையை வசூலிக்கபாத்தியம் ஏற்பட்டிருந்தமையால் கோர்ட்டார், 2-ம் பிரதிவாதியையும் பார்ட்டியாகச் சேர்த்து இருவரில் எவர்பேரிலாவது பரிகாரம் கேட்கும்ப

டிபிராதைத் திருத்திக்கொடுக்க உத்தரவளித்த மேல் அந்தப்படி பயிலான பிராதை விஜாரணை செய்து 2-ம் பிரதிவாதியின்பேரில் மட்டும் வாதிக்கு டி-மு-கோர்ட்டார் டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் 2-ம் பிரதிவாதிதன்மேல் டிக்கிரீயானது பிசகென்று ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் 2-ம் பிரதிவாதியின் மேல் வாதிக்குப்பரிகாரம் கிடைக்கத்தக்கதல்லவென்று தீர்மானித்து 1-ம் பிரதிவாதியின்பேரிலாவது வாதிகோறிக் கொண்டபடி டிக்கிரீயளிக்கமறுத்து விட்டார்கள். அதன்மேல் வாதி இருவர்பேரிலும் பரிகாரம் கிடைக்காதபடியால் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாகல் செய்து ஸி. பி. ஸி. ஆர்டர் 41-இன் 33-வது ரூல்படி அப்பீல் கோர்ட்டார் 1-ம் பிரதிவாதியின்பேரில் டிக்கிரீயளிக்காததால் செலுத்தவேண்டிய அதிகாரத்தை செலுத்தத் தவறினதாகச் சொல்லி ஜில்லாகோர்ட் தீர்ப்பை மாற்றும்படி கேட்டுக்கொண்டார்கள்.

ஹைகோர்ட்டார் தீர்மானச்சுருக்கமாவது:— அப்பீல் கோர்ட்டாருக்கு, தீர்மானிக்கும்படி அப்பீலில் கேட்டுக் கொள்ளப்பட்ட விஷயங்களைப் பற்றி டிக்கிரீயளிப்பதுந்தவிற கேசின் சுபாவத்தால் வேறுவிதமான டிக்கிரீயளிக்க வேண்டிய தவசியமென்று தோன்றினால் அவ்வித டிக்கிரீயளிக்க அதிகாரம் ஆர்டர் 41-ரூல் 33-இல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமான அதிகாரத்தைச் செலுத்தி அப்பீலில் கேட்கப்படாத அம்சத்தைப்பற்றி டிக்கிரீயளிக்கலாம். அல்லது அவ்வித அதிகாரம் செலுத்தி டிக்கிரீயளிக்க நீதி நியாயங்களுக் குறிய காரணங்களையிட்டு மறுத்துவிடலாம். இந்தக்கேசில் அப்பீல் கோர்ட்டார் 2-ம் பிரதிவாதி செய்த அப்பீலின் பேரில் அவரை வாதியின் பரிகாரத்திலிருந்து விலக்கி விட்டார்கள். அப்படியிருக்க வாதிக்கு 1-ம் பிரதிவாதியின்பேரில் பரிகாரம் தேடுவதற்கு இந்த ரிவிஷன் மனுவில் அனுமதி கொடுக்கப்படாவிட்டால் வேறு மார்க்கம் கிடையாது. வாதி ஜில்லா கோர்ட்டில் 1-ம் பிரதிவாதியைப் பற்றினமட்டில் க்ராஸ் அப்பீல் செய்யாததால் 1-ம் பிரதிவாதியின்பேரில் பரிகாரம் கொடுக்க மறுத்ததாக ஜில்லா ஜட்ஜியவர்கள் சமாதானம்சொல்லுகிறார்கள். ஆர்டர் 41-ரூல் 33-இன்படி க்ராஸ் அப்பீல் செய்யப்பட வேண்டியதவசியமில்லை.

தவிற ஜில்லா ஜட்ஜியவர்கள் தீர்ப்பில் "ரிகார் செய்யப்பட்டிருக்கிற ருஜா அம்சங்களைக் கவனித்தால் 1-ம் பிரதிவாதியின் பேரில் டிக்கிரீயளிக்கத்தக்கதென்றும், 1-ம் பிரதிவாதியும் தீர்வையை அடைய பாத்தியப்பட்டவனாகிறான் என்றும்" சொல்லியிருக்கிறார். மேற்கூறிய அபிப்பிராயங்களை ருஜாபாயிண்டாக பாவித்து அதன்மேல் ஹைகோர்ட்டார் ரிவிஷனில் லா பாயிண்டாகக் கருதிப் பிரவேசிக்கக் கூடாதென்று எதிரிக்காக அதாவது 1-ம் பிரதிவாதிக்காக வாதிக்கப்பட்டது. ஆனால் அந்தக்காரணங்கள் சொல்லப்பட்டிருக்கிற விதத்தையும், ருஜாபாகத்தைப்பற்றிய நியாயங்களை விவரமாய் தர்க்கித்துச் சொல்லாமல் வாதி க்ராஸ் அப்பீல் செய்யவில்லை என்ற காரணத்தைக் குறித்துக் காண்பித்ததையும் கவனித்துப்பார்க்குமிடத்து, ஹைகோர்ட்டார் பிரவேசிக்கத் தகாத ருஜா பாயிண்டென்று நினைக்கக்கூடாது. ருஜா அம்சத்தில் கீழ்கோர்ட்டார் கவனம் வைக்காமல் அப்பீலைப் பைசல் செய்திருப்பதாய்த் தெரியவருகிறது. ஆகவே சட்டப்படி செலுத்தவேண்டிய அதிகாரத்தைச் செலுத்தத் தவறினதாகத் தீர்மானிக்கவேண்டும். 1-ம் பிரதிவாதியைப் பற்றினமட்டில் அப்பீலை மறுபடியும் ஏரங்கி கேட்டு சட்டப்படி தீர்மானம் செய்ய வேண்டுமென்று ஜில்லாகோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது. [2-ம் பிரதிவாதியின்பேரில் அசல்கோர்ட்டில் டிக்கிரீயாகவே அதுபோதுமென்றிருந்த வாதிக்கு அப்பீல் செய்ய அவசியமென்று தோன்றவில்லை. ஆதாரமிருந்தால் விரோமானமட்டில் அப்பீல் அல்லது க்ராஸ் அப்பீல் செய்யப்படுவது எப்போதும் சகாயமாயிருக்கும்.]

---



(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

வெல்லூர் ஜில்லா.

C. R .P. No. 596 of 1909–29 அக்டோபர் 1913.

வேலூர் தாலூகா போர்ட் பிரஸிடெண்டு

*Vs*

கோபாலஸாமி நாயுடு.

வேலூர் தாலூகா கரடிகுடி கிராமத்தில் கூடும் வாரச்சந்தையில் மார்கட் வரி வசூல்செய்யும் பாத்தியதையை எலம்போட்டதில் எலமெடுத்த கண்டிராக்டர் தாலூகா போர்ட்டாருக்கு எழுதிக்கொடுத்த கண்ட்ராக்ட் உடன்படிக்கையில் பிரதிமாதமும் தவறாமல் எலத்துகை வாய்தாவைச் செலுத்தி வரத்தவறினால்தான் அட்வான்ஸாக டிபாஸிட் கட்டியிருக்கிற ரூ. 36-2-3, ஆகிய இரண்டுமாதக் கட்டணத்தை இழந்து விடுவதாகவும். தவிற ஷை பாத்தியதையை மறு எலம்போட்டு அதினால் குறைவுபடும் நஷ்டத்தையும் தன்னுடைய சொத்தின்மேல் தொடர்ந்து வசூலிக்க லாயக்குண்டென்று சம்மதித்து எழிதிக்கொடுத்தார் குறித்ததேதியில் வாய்தாவை ஒழுங்காய்க் கட்டி வராத காரணத்தால் தாலூகா போர்ட்டார் ஷை கண்ட்ராக்டரை நீக்கிவிட்டு மறு எலம் போட்டு அதினால் முந்திய எலத்தைவிட குறைவுபட்டுப்போன துகையை உடன்படிக்கையின் ஷரத்துப்படி வசூலிக்கவும் கண்ட்ராக்டர் அட்வான்ஸாகக் கட்டியிருந்த டிபாஸிட் ரூ. 36-2-8 யும் இழந்துவிட வேண்டுமென்றும் ஆக இருவித ப்பிரத்தியேகமான பரிகாரங்களை தாலூகா போர்ட்டார் கண்ட்ராக்டர் பேரில் அடையும்பொருட்டு வேலூர் டி-மு-கோர்ட்டில் ஸ்மால் காஸ் தரப்பில் வியாஜ்ஜியம் செய்தார். டி-மு கோர்ட்டார் மறு எலததையிட்டு எற்பட்ட நஷ்டத்திற்காக பிரதிவாதி கட்டிக்கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பளித்து இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்ட் 74-வது பிரிவின் அம்சங்களை ஆதாரமாகக் கொண்டு டிபாஸிட் கட்டின அட்வான்ஸ் துகையை வாபிஸ்செய்யவேண்டியது நியாயமாகுமென்று சொல்லி வாதியின் இரண்டாவது பரிகாரத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாகல்செய்து அங்கு ஷை மனுவை ஏரங்கி கேட்ட நியாயாதிபதிகளிருவரில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் உடன்படிக்கையில் கண்ட ஷரத்துகளின்படி இரு விதமான பரிகாரமும் வாதி அடைய லாயக்குள்ளவரென்று அதாவது மறு எலத்தில் நேரும் நஷ்டத்தைத் தவிற டிபாஸிட் துகையையும் பிரதிவாதி ஒப்பந்த வசனத்தின்படி இழந்துவிட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். மற்றொரு நியாயாதிபதியாகிய ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் வித்தியாசமான அபிப்பிராயம் கொடுத்தார்கள். அதாவது அட்வான்ஸை இழந்து விடுவதாயும், மறு எலத்தில் எர்படும் நஷ்டத்தைக் கட்டிக்கொடுப்பதாயும் ஆக இரண்டு விதமான நிபந்தனைகளும் எற்பட்டிருந்தாலும மறு எலம் போட்டதால் நேர்ந்த நஷ்டத்தில் டிபாஸிட் துகையைக் கழித்து மிகுதியான நஷ்டத்தை மட்டும் பிரதிவாதி செலுத்தக் கடமைப்பட்டவராக வேண்டுமென்று சொல்லி வாதியின் ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். ஸி. பி. ஸி. 98-வது பிரிவின்படி ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய அபிப்பிராயம் மேலிட்டதாகும். தாலூகா போர்ட்டார் பிரதிவாதியின் செலவுதுகையைக் கட்டுவதற்கு 3-மாத வாய்தா கொடுக்கப்பட்டது.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் கொடுத்த அபிப்பிராயத்திற்குறிய காரணங்களாவன.—இந்தியன் காண்ட்ராக்ட் ஆக்டின 74-வது பிரிவும் அதன் புறநடை அம்சமும் இந்தக்கேசுக்கு எற்றதல்ல. [74-வது பிரிவில், ஒரு ஒப்பந்தத்தின் நிபந்தனைகளில் கண்ட்ராக்ட் படிக்கு நடக்கத்தவறினால் நஷ்டமாக செலுத்தப்பட வேண்டியதுகையை இவ்வளவென்று குறித்துச் செப்பியிருந்தால் அவ்வித தவறுதலையிட்டு பின்னால் நஷ்டம் நேர்ந்தாலும் சரியே நேராவிட்டாலும் சரியே மேற்கண்டபடி குறித்துச் சொல்லப்பட்டிருக்கும் துகைக்கு மேல்படாதபடிநஷ்டத்துகையை வாதி வசூலிக்க பாத்தியமு

ண்டென்றும், புற நடையின்பாகத்தில், யாதொருவன் பொது நன்மைக்குறிய காரியத்தை நடத்தும் பொருட்டு கவர்ன்மெண்டாருடைய உத்தரவின்படி ஒப்புக்கொண்ட கண்ட்ராக்டை பூர்த்தி செய்யத்தவறினால் அது விஷயமாய் எழுதிக்கொடுத்திருக்கிற ஜாமீன் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கிற நஷ்டத்தொகை முழுவதையும் செலுத்தக்கடவனென்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிற கவர்ன்மெண்டாருடன் ஒப்புக்கொள்ளும் ஒவ்வொரு கண்டிராக்டும் ஜனப்பொது நன்மைக்குறியவைகளென்று அவசியமாய் நிதானிக்கத்தக்கதல்லவென்றும் வியாக்கியானிக்கப்பட்டிருக்கிறது.] (1910) 20 மதராஸ் லா ஜர்னல் 230-இல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் (1882) 21 ch. D. 243 இல் ஸிர்ஜியார்ஸ் ஜஸ்ஸல் துரையவர்களின் அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அதாவது:— கண்ட்ராக்டர்கள் டிபாஸிட்டை இழந்துவிடுவதாக ஒப்புக்கொள்ளும் நிபந்தனையானது அற்பமான குற்றங்கள் அல்லது குறித்தகாலத்தில் யாதொரு வாய்தாவைச் செலுத்தத்தவறுதல் ஆகிய சந்தர்ப்பங்களில் வற்புறுத்தப்படுவதில்லையென்றும் அதாவது அவ்வித பிசகுகள் நேர்ந்தாலும் கண்ட்ராக்ட் ரத்தாகாமல் நடந்தேரிவரப்படுகிறதாக கோர்ட்டார்கள் விளம்பியிருக்கிறார்களென்று ஸிர்ஜியார்ஜ்ஜெஸ்ஸல் துரையவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தப்படி பார்க்குமிடத்து குறித்த தேதிகளில் பிரதிவாதி வாய்தாதொகையைக் கட்டாதகாரணம் கண்டராக்டை ரத்துசெய்து நஷ்டத்தை வசூலிக்கத்தக்க பிசகென்று நிதானிக்கக்கூடாதென்று ஏற்படும். ஆனால் டிஷி வாலிஸ் துரையவர்கள் தீர்ப்பின்பேரில் புல்பெஞ்சுக்கு ரிபர் செய்யப்பட்டு (1913) மதராஸ் வாரக்குறிப்புகள் 341-இல் ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் (1884) 27 ch-D. 89-இல் லார்ட் ஜஸ்டிஸ் Fry துரையவர்களுடைய அபிப்பிராயத்தை எடுத்துக்காட்டி டிபாஸிட் தொகையானது யாதொரு வாய்தாவுக்குச் சேர்ந்த ஒரு பாகமென்றுமட்டும் எண்ணப்படக் கூடாதென்றும், கண்ட்ராக்டர் தன்னைப்பொருத்த ஒப்பந்தத்தைத் தவறாமல் நடத்துவதற்கு அதை இழந்துவிடக்கூடிய பயத்தை உண்டாக்கும்பொருட்டு கட்டப்படும் அட்வான்ஸ் தொகையென்றும் சொல்லி உடன்படிக்கையில் எக்கருத்தாக டிபாஸிட் கட்டியிருப்பதாய்ச் சொல்லியிருக்கிறதோ அதே கருத்தைவிட வித்தியாஸமாக என் அனுமானிக்கவேண்டுமென்றும், கண்ட்ராக்டை சரிவர நடத்துவதற்கு ஜாமீனாக அட்வான்ஸ் டிபாஸிட் செய்யப்பட்டிருக்க அதை என் 74-வது பிரிவின்படி ஒப்பந்ததில் குறித்துக் காண்பித்திருக்கிற தொகையென்று எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். சொத்தைக் கிரயம் வாங்க ஒப்பந்தம் செய்கிறவனும் விற்க ஒப்புக்கொள்ளுகிறவனும் தவறுதல் செய்தால் இருவருக்கும் நஷ்ட பரிகாரத்தைத்தேடும் நியாயம் ஒரே விதமாகுமேயொழிய வெவ்வேறாகாது.

அன்றியும் 29-மதராஸ் 118-இலும் 36 கல்கத்தா 960-இலும் கொடுக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தை அனுசரிக்க கடமைபட்டவர்களாகிறோம். டிபாஸிட் தொகையைப் பெற்றுக்கொண்டவர் ஒழுங்கீனமாய்த் தீர்வை செலுத்திவந்த பிரதிவாதியிடம் தீர்வை பாக்கியை வசூலிக்கக் கொண்டுவந்த பிராதில் டிஷி டிபாஸிட் தொகையையும் (அட்வான்ஸ் தொகையையும்) பிரதிவாதி இழந்து விடக்கடவன் என்று தீர்மானிக்கவேண்டுமென்ற உடன்படிக்கையின் நிபந்தனையை உறுதிப்படுத்தும்படி கோரிக்கொண்டு, வாதி அனுகூல டிக்கிரீ பெற்றிருக்கிறார்.

பிரதிவாதிக்காக நஷ்டத்தைப்பற்றி மேயின் துரையவர்கள் எழுதியிருக்கிற கிறந்தத்தில் 249-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிற வசனங்கள் எடுத்துக்காட்டப்பட்டது. அதில் மறு எலம் போட்டதில் நேரிடும் நஷ்டத்திலிருந்து டிபாஸிட் தொகையைக்கழித்து நஷ்ட மதிப்பைக் கவனிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. (1858) குவீன் பெஞ்சு டிவிஷன் 27 L. J. 361-இல் கொடுக்கப்பட்ட தீர்மானத்தை அனுசரித்து எழுதப்பட்டிருக்கிற டிஷி கிறந்த நியாயமானது தாவா கேசின் அம்சங்களுக்கு ஒத்ததல்ல. அந்த குவீன் பெஞ்சு டிவிஷன் கேசில் சொத்தைக்கிறயம் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொண்ட பிரதிவாதி தவறுதல் செய்ததால் விளையும் சந்தர்ப்பத்தை ஒரே நிபந்தனையாகச் சொல்லப்பட்டிருந்தது. அதாவது டிபாஸிட்டை இழந்து வாதி மறு எலம் போடப் பிரியப்பட்டால் மறு எலத்தில் நேரிடும் நஷ்டதையும் எலச்செலவுகளையும் டிபாஸிட் தொகைக்கு மேல்பட்டால் அதை பிரதிவாதி கட்டிக் கொடுக்வேண்டியதென்றும் அப்படி கட்டி கொடுக்காத பட்சத்தில் குறைவுபட்ட நஷ்டப் பரிகாரமாக வசூலிக்கலாமென்று ஆகிய பலவித சந்தர்ப்பங்களையும் ஒரே நிபந்தனையாகக் கண்டிருக்கிறது. தாவா கேசில் ஒவ்வொரு நஷ்டத்தையும் தனித்தனியாய்க் குறிப்பிட்டிருக்கிறது. பிரதிவாதி ஒப்பந்தப்படி வாய்தாவை ஒழுங்காய்க் கட்டிவரத்தவறினால் மீதி மாதங்களுக்குறிய மார்கட் குத்தகை பாத்தியத்தை இழந்துவிடுவதும் தவிற மறு எலம் போடுவதில் நேறும் நஷ்டங்களுக்குந்தான் தன் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களிலிருந்து கட்டிக்கொடுப்பதாயும் அதுடன்கூட தன்னால் அட்வாஸாகச் செலுத்தியிருக்கிற ரூ. 36-2-8-யும் இழந்துவிடுவதாகவும் தனித்தனியாய் ஒவ்வொரு நிபந்தனையும் கண்டிருக்கிறது. மேற்கூறிய இரண்டு கேசுகளின் வத்தியாசம் யுக்தியாகச் சொல்லபபட்டதாகத் தோன்றினாலும் 36 கல்கத்தா 960-இல் அளிக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தை அனுசரித்து வாதிக்கு இரண்டு பரிகாரங்களும் அளிக்கப்படவேண்டியது நியாயமாகுமென்று அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய அபிப்பிராயத்திற்குறிய காரணச் சுருக்கமாவது:—

வாதி பிரதிவாதியின்மீது இரண்டு பரிகாரங்கள் இந்த தாவாவில் தேடியதாக நினைக்கத்தேவையில்லை. டிபாஸிட் தொகை ரூ. 36-2-8-யும் பிரவாதி இழந்துவிட்டதாகவே பாவித்துக்கொண்டு மறு எலத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை வசூலிக்கும் ஒரே பரிகாரத்திற்காகமட்டும் இந்தப்பிராது செய்ததாக யூகிக்கவேண்டும். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் அபிப்பிராயப்பட்டபடி (1913) மதராஸ் வாரக்குறிப்பின் 341-இல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற மதராஸ் ஹைகோர்ட் புல்பெஞ்சு அபிப்பிராயத்தை அனுசரித்துநடக்கக் கட்டுப்பட்டிருக்கிறோமென்பது சரியே. அந்த தீர்மானத்தின்படி, டிபாஸிட் அட்வான்ஸ் செய்த ஒருவன் ஒப்பந்தத்தில் தவறினபோதிலும் மறு எலம் அல்லது மறு விக்கிறயத்தால் வாதிக்கு யாதொரு நஷ்டமும் நேராததால் அல்லது டிபாஸிட் தொகையை விடகம்மியான நஷடம் நேர்ந்ததால், தான் கட்டிய டிபாஸிட் தொகை பூராவையும் அல்லது மிகுதியான பாகத்தைத் திரும்பி அடையக்கோறிய பிராதில் டிஷி டிபாஸிட்டை இழந்துவிடவேண்டுமென்ற நிபந்தனையை ஒரு அபராதக்ளாஸாக பாவிக்கப்கூடாதென்று யூகித்து அதிலிருந்து விடிவிக்கப்படவேணடியதாகக் கோறக்கூடாதென்று ஏற்படுகிறது.

ஆனால் தாவாகேசில் வாதி டிபாஸிட் தொகையமட்டும் நஷ்டத்துக்குபர்த்தியாக அடைந்ததோடு நிற்காமல் மறு எலத்தால் நேர்ந்தநஷ்டத்திற்கு டிபாஸிட் தொகைபோதுமானதல்லவென்ற காரணத்காலாவது அல்லது உடன்படிக்கையில் டிபாஸிட்டை இழப்பதும் மறு எலத்தால் விளையும் நஷடத்தைக்கட்டிக்கொடுப்பதுமாகிய இரண்டு அம்சங்களும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தாலாவது வாதிக்கு மறு எலத்தால் நேர்ந்தயதார்த்தமான நஷ்டததொகையையும் வசூலிக்கக்கொண்டு வந்திருக்கிற வாதி டிபாஸிட் தொகைக்கழித்துக்கொண்டு பாக்கி நஷ்டத்தைமட்டும் அடையக்கூடுமோ என்ற விஷயம் தீர்மானிக்கப்படவேண்டியதாகும். வாதிக்கு டிபாஸிட் தொகைக்கு மேலான பாக்கி நஷடம் எவ்வளவோ அதுமட்டுமே தான் கிடைக்கத்தக்கதென்று நியாயமாய்ச் சொல்லவேண்டும். மேயின் துரையவர்களுடைய கிறந்தத்தின் 248, 249 வது பக்கத்தில் டிபாஸிட் தொகைக்கு மேலான நஷடத்தொகையை வசூலிக்கப்பிரயத்தனப்படும் வாதி டிபாஸிட் தொகையை நஷடத்திற்காகச் செல்லுவைத்துக் கொள்ளக்கடவரென்று சொல்லியிருக்கிறார். பிரதிவாதிக்காக எடுத்துக்காண்பிக்கப்பட்ட 27 குவீன் பெஞ்சு டிவிஷன் 361 இல் கண்டிருக்கிறபடி இருவிதமான நியந்தனைகளும் உடன்படிக்

கையில் கண்டிருந்தபோதிலும் வாதி டிபாஸிட்டையும் வைத்துக்கொண்டு, மறு எலத்தில் உண்டான நஷ்டம் பூராவையும் வ்சூலிக்கக்கூடாதென்று எற்படுகிறது. மேற்கூறிய குவீன் பெஞ்சு கேசில் தீர்ப்பளித்தவர்களுடைய தர்க்கநியாயத்தைப் பார்க்குமிடத்து அவைகள் தாவா கேசின் அம்சங்களுக்கு அதிகப்பொருத்தமாகவேயிருக்கிறது. அதாவது:—

“எச்கிரீ மெண்டின் 7-வது நிபந்தனையில் டிபாஸிட்டை பிரதிவாதி இழந்துவிட வேண்டியதென்று தெளிவாய்க் கண்டிருக்கிறது. ஆகவே அவ்வித டிபாஸிட்டைச் செலுத்தின பிரதிவாதி அதை எவ்விதத்திலும் திரும்பி அடையக்கூடியதல்ல; தவிற வாதி தாவா சொத்துக்களை மறுஎலம்போடுவதில் அதிக லாபம் கிடைத்தால் அதற்கு வாதியே பாத்தியமுடையவனாகிறான் அப்படியிருக்க டிபாஸிட்டில் வாதி ஒரு நிலையானபாத்தியதையை அடைந்தபிறகு மறு எலத்தில் நஷ்டம் எற்பட்டால் அந்த நஷ்டத்தையும் கேட்கும் விஷயத்தில் டிபாஸிட்டின் நேச்சர் (யோக்கியதை) என்னவென்று நிர்ணயிப்பது அவசியமாகும், ஸீவில் லா முறைபை அனுசத்து எற்பட்டிருக்கிற சட்டமுறையில, விக்கிறய எற்பாட்டில் அட்வான்ஸாகத் துகை செலுத்தப்பட்டால் அதை விக்கிறயத்துகையின் ஒருடாகமாக எடுத்துக் கொள்ளவேண்டுமேயொழிய விக்கிறயத்தைப் பூர்த்திசெய்துகொள்வதற்கு ஒரு ஈடாக அதை யூகிக்கக் கூடாதென்று தெளிவாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது ஆகையால் இந்தக்கேசில் கிறயம் பூர்த்தியானல் அட்வான்ஸ் டிபாஸிட் போக மிகுதிமட்டும் தான் செலுத்தக்கடவதாகும். அப்படியிருக்க 7-வது நிபந்தனையின்படி மறு எலத்தில் குறைவுபடும் நஷ்டத்தை எவ்விதமாய்க் கணிக்க வேண்டுமென்றால் முதலில் செலுத்தப்பட்ட அட்வான்ஸ் போக பாக்கிநிற்கும் விக்கிறயத்துகைக்கும் மறு எலத்தில் வ'சூலிக்கப்பட்ட துகைக்குமுறிய வித்தியாஸம் தான் குறைவுபட்ட நஷ்டமாக எற்படவேண்டும். [1000 ரூ விக்கிறயத்துகையாக எற்பட்டு ரூ 100 அட்வான்ஸ் கட்டப்பட்டும் பாக்கித்துகை செலுத்தப்படாமல் விக்கிறயம தவறி வேறு விக்கிறய எற்பாட்டில் வாதிக்கு ரூ 950 வசூலானல், முதல் எற்பாட்டின்படி ரூ 900 வசூலாக வேண்டியதற்கு பதிலாக 950 வசூலானது வாதிக்கு லாபமாகும். 900-க்கு கீழாக மறு விக்கிறயம் எறபட்டால் மட்டும்அப்படிக் குறைவுபடும்துகைக்கு வாதிபிரதிவாதியின்பேரில் பரிகாரம்தேட நியாயமுண்டு.

ஆகவே மேற்கூறிய அபிப்பிராயத்தால் டிபாஸிட்துகையையும் பிரதிவாதியாம செலுத்தப்படவேண்டிய நஷ்டத்திற்கு வஜாசெய்துகொள்ளவேண்டிய தவசியமாகுமென்று எற்படுகிறது. அவ்விதமாய்க் கணக்கிட்டு டி-மு கோர்ட்டார வாதிக்கு டிக்கிரீயளித்ததாக பாவித்தால் டிபாஸிட் துகையை வாதி அடைய பாத்தியமூண்டென்ற 2-வது பரிகாரம் அளிக்கப்படாததீர்மானம் சரியே. இந்த ரிவிஷன் மனு தள்ளுபடியாகவேண்டியதாகும்.

---



OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 4 MAR 1914

(Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் &
ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட்)

மங்களூர் ஜில்லா

S. A. 1001 of 1912—6 நவம்பர் 1913.

கே. வெங்கடய்யா ஹெக்காடி Vs குப்பண்ண
என்ற ராகவேந்திரராவ்.

1-ம் பிரதிவாதி 1906-ம் வருஷத்திய அசல் நெ. 562-இல் வாதியாக 2-ம் பிரதிவாதியின் பேரில் பாக்கிக்காக தாவா செய்து தீர்ப்புக்குமுன், 2-ம் பிரதிவாதி 1899-ம் வருஷத்திய அசல் நெ. 135-இல் ஒரு மூன்றுவது மனிதன்பேரில் பெற்றிருந்த டிக்கிரீயை, உடன் ஜப்திசெய்தார். வாதியும் தனக்கு 2-ம் பிரதிவாதியால் சேரவேண்டிய டிககிரீ பாக்கிக்காக ஷை 1899-ம் வருஷத்திய அசல் நம்பர் 135-இல் ஷை யார் பெற்றிருந்த அதேடிக்கிரீயை ஜப்திசெய்திருந்தார். ஆகவே நெ. 135/1899-இன் டிக்கிரீபாத்தியதையை வாதியும் 1-ம் பிரதிவாதியும் ஜப்தி செய்தவர்களாயிருக்க 1-ம் பிரதிவாதி 1906-ம் வருஷத்திய 562-ம் நெ. பிராதில் டிக்கிரீ பெற்றபின் ஜப்தியான டிக்கிரீயை 2-ம் பிரதிவாதியின் ஸ்தானத்திலிருந்தவராக நிறைவேற்றினதில் வசூலான துகை வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் அவரவர்கள்டிக்கிரீ பாக்கிக்குத் தக்கபடிபங்குவிகிதமாய்ப்பிரித்துக் கொடுக்கும்படி உத்தரவளிக்கப்பட்டது. அதன்மேல், 1-ம் பிரதிவாதி தான் 1906-ம் வருஷத்திய நெ. 562-இல் பெற்றிருந்த டிக்கிரீயை நிறைவேற்றுமல் டிக்கிரீக்குமுன், ஜப்தியான ஒரு டிக்கிரீ பாக்கியை வசூலிக்க நிறைவேற்றுமனுக்கொடுத்தது பிசகென்றும் ஆகையால் அவ்வித பிசகான நடவடிக்கையால் வசூலான துகையில் 1-ம் பிரதிவாதிக்குப் பங்குவிகிதம் அளிக்கக்கூடாதென்றும் தீர்மானிக்கும்படி, 1-ம் பிரதிவாதியுடன் ஷை ஜப்தியான டிக்கிரீதாரனுகிய 2-ம் பிரதிவாதியையும் பார்டியாகச் சேர்த்து வாதி 1909-ம் வருஷத்திய அசல்நம்பர் 391-இல் ஜெடிபி டி-மு-கோர்ட்டில், டிக்லேரேஷன் தாவா செய்தார். அசல் கோர்ட்டிலும் அப்பீல் கோர்ட்டிலும் வாதிக்கு விரோதமாகி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யப்பட்டு அங்கும் அதே அபிப்பிராயமாய் வாதி தனக்குபூராத்துகையும் சேரவேண்டுமென்றும் 1-ம் பிரதிவாதிக்குப்பங்குவிகித மளிக்கக்கூடாதென்றும், கேட்டுக்கொண்ட பரிகாரம் செல்லத்தக்கதல்லவென்று வாதியின் 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

ஒரு டிக்கிரீதார் தான்பெற்ற டிக்கிரீயை நிறைவேற்ற விண்ணப்பம் கொடுத்திருந்தால்மட்டும் ஜப்தியான சொத்திலிருந்து வசூலிக்கப்பட்ட துகையில் பங்குவித மடையலாமென்று எற்பட்டிருக்கிறது. டிக்கிரீபெறுமுன் ஒருசொத்தை ஜப்தி செய்திருந்த காரணத்தால் ஷை சொத்திலிருந்து வசூலான துகையில் பங்குவிகிதமடையப் போதுமான நியாயம் எற்படாதென்று மதராஸ் ஹைகோர்ட்டில் தீர்மானங்கள் எற்பட்டிருக்கின்றன. ஆனல் 1-ம் பிரதிவாதியே இந்தக்கேசில் ஷை 1899-ம் வருஷத்திய டிக்கிரீ பாக்கியை வசூலிக்க நிறைவேற்றுமனுக் கொடுத்திருக்கிறனே யொழிய (வேறொருவனல் வசூலிக்கப்பட்ட துகையில் பங்கு வேண்டுமென்று கேட்டவரல்ல.) ஜப்திசெய்த 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியின் ஸ்தானத்தை வகித்து ஷை 1899-ம் வருஷத்திய டிக்கிரீபாக்கியை வசூலிக்க பாத்தியமுண்டென்பதில் தடையில்லை. ஜப்திசெய்தடிக்கிரீயை நிறைவேற்றுவதினல் தான்பெற்ற டிக்கிரீயையும் நிறைவேற்றிக் கொண்டுபோகிறதாகச் சொல்லவேணடும். ஜப்தியான டிக்கிரீயை நிறைவேற்றுவதற்குக் கொடுத்த விண்ணப்பத்தில் (பாக்கித் துகையை ஷை ஜப்தியான டிக்கிரீயில் கண்டபடி விவரிக்காமல்) தனக்கு எற்பட்ட டிக்கிரீ பாக்கியான துகையை மட்டும் கண்டிருந்தார். ஆனல் தான் ஷை ஜப்தி பாத்தியதையால் நிறைவேற்றும் அதிகாரத்தை யுடையவரென்று விண்ணப்பத்தில் தன் நிலமையை விவரித்துத் தனக்கு எற்பட்டிருக்கிற டிக்கிரீ பாக்கித்துகையை மட்டும் வசூலிக்கும்பொருட்டு அவ்விதமாய்க் குறித்திருக்குறர். [ஜப்தியான டிக்கிரீத்துகை தான்பெற்ற டிக்கிரீத் துகையைவிட கம்மியாக இருக்கும் பட்சத்தில் 1-ம் பிரதிவாதி நிறைவேற்றுமனுவில் தன்னுடைய டிக்கிரீபாக்கித்துகைக் குறிக்கக்கூடுமோ? ஜப்தியானசொத்தானதுடிக்கிரீபாக்கியல்லாமல் யாதொரு இதரமான

சொத்தாயிருக்கும் பட்சத்தில் தன் டிக்கிரியை நிறைவேற்றி ஷை சொத்தை எலம்போட்டு டிக்கிரீபாக்கியை மட்டும் குறித்துக்காட்டி வசூலாகும் தொகை கம்மியானாலும் ஜாஸ்தியானாலும் நியயப்படி எடுத்துக்கொள்ளலாம் ] வேறொரு டிக்கிரீயைநிறைவேற்றுவதில், தன் டிக்கிரீ பாக்கியைக ண்டிருக்கிற இந்தவிண்ணப்பத்தில் 1-ம்பிரதிவாதி ஸி. பி. ஸி. 235-வது பிரிவுகளின்படி குறிக்கப்படவேண்டிய விஷயங்களைக் குறிக்காதது சட்ட விரோதமென்று வாதிக்காகச் சொல்லப்பட்டது. அதாவது ஜப்தியான டிக்கிரி பாக்கி இவ்வளவென்றும் தன்னுடைய டிக்கிரிப்படிக்கு இவ்வளவு பாக்கி என்றும் விவரித்திருந்தால் யாதொரு ஆக்ஷேபனைக் கிடமிராது. என்றாலும் வாதியின மேற்கூறிய ஆக்ஷேபனையானது அதிக அற்பமான முறைப் பிசகாகும். 1-ம் பிரதிவாதி தன் டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக தாவா சொத்தின்மேல் அதாவது ஜப்தியான டிக்கிரியாகிய சொத்தின்மேல் தொடர்ந்தால் தன் டிக்கிரி பாக்கியைக் குறிக்காமல வேறு விதமாய்த் தொகையைக் குறிக்க நியாயமிராது. ஆகையால் 1-ம் பிரதிவாதியின் நிறைவேற்று நடவடிக்கை சட்ட விரோதமல்ல. அதினால் வசூலான தொகையில் அவருக்கும் பங்குவிகிதம் ஏற்படவேண்டியதவசியமாகும். மேற்கூறிய காரணங்களால் வாதியின் 2-வது அப்பீலும் தள்ளுபடியாசகது.

———:0:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்.)

வடமலையாளம் ஜில்லா.

## C. R. P. 772 of 1912—13 அக்டோபர் 1913.

தாயத சுப்பி Vs மஸாகுர் கோயா

படகாரா டி-மு கோர்ட்டார் 1909-ம் வருஷத்திய அசல் நெ. 95-இல் பிறப்பித்த ஒரு இஞ்சங்ஷன் உத்தரவுக்கு எதிரி கீழ்படியாதபடியால் ஸி. பி. ஸி. ஆர்டர் 39-ரூல் 2-இன்படி எதிரியின் சொத்துக்களை ஜப்திசெய்யவும் எதிரியை ஸிவில் ஜெயிலுக்கு அனுப்பவும் உத்தரவளிக்க வேண்டுமென்று வாதி டி-மு கோர்ட்டாரிடம் கொடுத்த விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்து அவ்விதமாய் உத்தரவளிக்க மறுத்துவிட்டார்கள். அதன்மேல் வாதி ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட்டார் ஷை ஆர்டர் 39-இன் ரூல் 2-இல் கண்டிருக்கிற இரண்டு அம்சங்களில் ஒன்றைமட்டும் பிரயோகித்து எதிரியை இஞ்சங்ஷன் கட்டளைக்குக் கீழ்படியாமல் மீறி நடந்த காரணத்தால் ஸிவில் ஜெயிலுக்கு அனுப்பும்படி உத்தரவளித்தார்கள். அதன்மேல் எதிரி ஹைகோர்ட்டில் ஸி. பி. ஸி. 115-வது பிரிவின்படியும் 151-வது பிரிவின்படியும் ரிவிஷனில் பிரவேசித்து ஜில்லாகோர்ட் உத்தரவை ரத்து செய்யும்படி கோறிக்கொண்டதில் ஆர்டர் 39-இன் ரூல் 2-இன்படி நடவடிக்கை நடத்த டி-மு கோர்ட்டார் மறுத்த உத்தரவின்பேரில் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீலே கிடையாதென்றும் ஜில்லா கோர்ட்டார் உத்தரவு அநீதியானதென்றும் முக்கியமாய் வாதித்தார்கள். ஹைகோர்ட்டார் எதிரியின் ரிவிஷன் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்த தீர்மானத்தின் சுருக்கமாவது:—

இந்தக்கேசில் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் உண்டென்பதில் சந்தேகமில்லை. 1887-ம் வருஷத்திய 10 மதராஸ் 179-இன் அபிப்பிராயத்தைப் பார்க்கவும். பழய கோடின் 503-வது பிரிவின்படி ஒரு நம்பரில் ரிஸீவரை நியமிக்க கோர்ட்டார் மறுத்ததின்பேரில் அப்பீல் செய்யப்பட்டு அவ்வித உத்தரவுக்கு அப்பீல் கிடையாதென்ற வாதத்தை ஏற்றுக் கொள்ளாமல் அப்பீல் உண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஒரு ரூல்படி கோர்ட்டார் உத்தரவுசெய்தால் அதன்மேல் அப்பீல் உண்டென்பது போலவே ஷை உத்தரவை மறுத்த போதிலும் அந்த உத்தரவின்பேரிலும் அப்பீல் உண்டென்று சொல்லவேண்டும். புதுகோட்டின் ஆர்டர் 18-ரூல் (1, இல், ஆர்டர் 89-இன் ரூ-2-ன்படி செய்யப்படும் உத்தரவின்மேல் அப்பீல் உண்டென்று விதிக்கப்பட்டிருக்க, அவ்விதமான உத்தரவவளிக்காத அதாவது இஞ்சங்ஷன் கட்டளையை மீறினவன் சொத்தை ஜப்திசெய்ய வாவது அல்லது அவனை ஜெயிலுக்கு அனுப்பவாவதுமறுத்த, உத்தரவின் பேரில் அப்பீல் உண்டென்றே தீர்மானிக்கவேண்டும். அந்தப்படிக்கு புல்பெஞ்சு தீர்மானமும் ஏற்பட்டிருக்கிறது.

கோர்ட்டார், உத்தரவை நிராகரித்ததற்காக ஒருவனை ஆர்டர் 39-ரூல், 2-இன்படி தண்டிக்க



மறுத்துவிட்டால் அவனை அக்குற்றத்திலிருந்து விடுதலைசெய்த பாவனையாகுமென்றும், விடுதலை உத்தரவின்பேரில் ஒரு பார்ட்டி அப்பீல் செய்ய சட்டமில்லையென்றும், தாவாகேசில் கோர்ட்டார் கட்டளையை மீறி நடந்ததால் அதை யிட்டு யாதொரு பார்ட்டிக்கும் பாதகம் ஏற்பட்டதாக பாவிக்கப்படக் கூடாதென்றும், கோர்ட்டார் உத்தரவை மீறி நடந்தமையால் அது கோர்ட்டாருக்குக் குறைவே யொழிய பார்ட்டிகள் எவருக்கும் தீங்கு விளைவிக்கத் தக்க நடத்தையல்லவென்றும், ஆகையால் யாதொரு பார்ட்டிக்கும், கோர்ட்டார் மறுதளித்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்ய பாத்தியதை ஏற்படாதென்றும், வாதிக்காகச் சொல்லப்பட்டது. அந்த வாதம் நிராக்ஷேபனையாக ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அனேக சந்தர்ப்பங்களில் கோர்ட்டார் அளித்த இஞ்சங்ஷன் கட்டளைகளை மீறுவதால் பார்ட்டிகளுக்கு நஷ்டங்களும் தீங்கும் விளைந்திருக்கின்றன. ஆர்டர் 39-ரூல்-4-இல் எதிரியின் சொத்துக்களை ஜப்திசெய்து வசூலாகும் தொகையிலிருந்து வாதிக்கு அதாவது இஞ்சங்ஷன் உத்தரவை அபேக்ஷித்துப் பெற்ற பார்ட்டிக்கு ஏற்படும் நஷ்டத்தையும் கோர்ட்டார் யுக்தம்போல் கொடுக்க வேண்டுமென்று விதிக்கப்பட் டிருக்கிறது. ஆகையால் இஞ்சங்ஷன் கட்டளையை மீறுவதால் பார்ட்டிகள் யாருக்கும் பாதகம் ஏற்பட நியாயமில்லையென்று கோர்ட்டார் உத்தேசித்து அவ்வித கட்டளையைப்பிறப்பித்ததாக நினைக்கக்கூடாது. ஷை கட்டளையை அபேக்ஷிக்கும் பார்ட்டியே அதை எதிரி கீழ்படிந்து நடக்கிறானா என்று சிரத்தையாய் கவனிக்கத் தக்கவனாகிறான். அப்படிச் செய்யாதவர்களுக்கு சிக்ஷைசெய்து வைக்க வேண்டியதும் அவனைச் சேர்ந்த கடமையாகும். அவ்வித சிக்ஷைசெய்ய கோர்ட்டார் மறுத்துவிட்டால் அதைப்பற்றி அப்பீல்செய்து நியாயம் அடைவதும் யுக்தமான தாகும்.

ஸி. பி. ஸி. 104 (h) இல், நிறைவேற்றுமனுவில் ஒருவனை வாரண்டில் பிடித்து ஜெயிலுக்கனுப்புகிறசந்தர்ப்பந்தவிற, மற்றப்படி கோர்ட்டார் யாதொருவனை கோட்டின் முறைகளையனுசரித்து ஸிவில் ஜெயிலுக்கு அனுப்பினாலும் அல்லது யாதொருவனுக்கு அபராதம் விதித்தாலும் அவ்விதமான உத்தரவின்மேல் அப்பீல் உண்டென்று சொல்லியிருக்க ஜெயிலுக்கு அனுப்பும்படி உத்தரவளிக்க மறுத்த சந்தர்ப்பந்தத்தைப் பற்றி அந்த 104 (h) பிரிவில் யாதொன்றும் சொல்லப்பட வில்லை; அதனால் ஜெயிலுக்கு அனுப்ப மறுக்கும் உத்தரவுகளுக்கு அப்பீலுக்கிடம் ஏற்படுத்தக் கூடாதென்று விளங்கவில்லை. ஆகவே தாவாகேசில் அப்பீல் உண்டென்றே சொல்லவேண்டும். ஜில்லா ஜட்ஜியவர்கள் அப்பீலை சரியாய் ஈரங்கிகேட்டு நியாயப்படி பைசல் செய்தால் அதன்மேல் 115-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்க நியாயமில்லை.

ஸி. பி. ஸி. ஆர்டர் 39-இன் ரூல் 2-ன்படி கோர்ட்டார் மீறி நடக்கிறவனுடைய சொத்துக்களை ஜப்திசெய்ய வேண்டுமென்றும், அவனை ஸிவில் ஜெயிலுக்கும் அனுப்பலாமென்றும் விதித்திருக்கிறபடியால் எதிரியின் சொத்துக்களை ஜப்திசெய்யாமல் ஸிவில் ஜெயிலுக்கு அனுப்பினது சட்ட விரோதமென்றும் ஆகையால் அந்த சட்டபாயிண்டைப் பற்றி 115-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசித்து ஜில்லாகோர்ட் உத்தரவை ரத்துசெய்யவேண்டுமென்று எதிரிக்காக வாதிக்கப்பட்டது. ஆனல் ஸிவில் ஜெயிலுக்கு அனுப்புமுன் ஜப்திசெய்திருக்க வேண்டுமென்ற கட்டாயம் ஷை வசனங்களால் துலங்கவில்லை. ஸிவில் ஜெயிலுக்கு அனுப்பலாமென்றால் ஸிவில் ஜெயிலுக்கு அனுப்ப அதிகாரமுண்டென்று பாவிக்க வேண்டும. கோர்ட்டாருக்கு இருவகையான அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. சொத்தை ஜப்திசெய்யும் அதிகாரம், ஸிவில் ஜெயிலுக்கு அனுப்பும் அதிகாரம். இரண்டு அதிகாரமும் ஏககாலத்தில் செலுத்தப்பட வேண்டுமென்று விதிக்கப்படவில்லை. சட்டமுறை அவ்விதமாய் ஏற்பட்டதாகத் தீர்மானிக்கத் தேவையில்லை. பழய கோட்டில் ஏற்பட்ட பிரகாரம் இரண்டு வகையில் ஏதாவது ஒருவித அதிகாரத்தைச் செலுத்தலாமென்று அவசியமாய்யூகிக்கவேண்டும். ஆகவே ஜப்திசெய்யாமல் ஜெயிலுக்கு அனுப்பின ஜில்லாகோர்ட் உத்தரவுசட்டவிரோதமல்ல. 115-வது பிரிவின்படி பிரவேசிக்கத்தக்கதல்ல. 151-வது பிரிவின்படி பிரவேசிக்க வேண்டுமென்ற ரிவிஷன் மனு

வில் கண்டிருக்கிறது. கட்டளையை மீறி நடப்பவனை ஜெயிலுக்கு அனுப்பின விஷயத்தில் 151-வது பிரிவின்படி பிரவேசித்து யாதொரு உத்தரவளிக்க நியாயமில்லை. ஜில்லாகோர்ட்டாருடைய உத்தரவானது நியாயக்குறைவானதென்று சொல்லத்தகாது. ஆகவே எதிரியின் ரிவிஷன் மனுவை செலவுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

கோயமுத்தூர் ஜில்லா.

S, A. No, 756 of 1911-16 அக்டோபர் 1913.

சிங்க அய்யர் வகையரா Vs வெங்கட்ரமணய்யர், வகையரா

1-ம் பிரதிவாதி தன் மூத்த தாரத்தால்பிறந்த இரண்டு புத்திரர்களுக்கும்தனக்குமுரிய குடும்பசொத்துக்களை பாகம் செய்துகொள்ளுங்காலத்தில் இளைய தாரத்தால் பிறந்த 4-வயதுள்ள மைனர் புத்திரனுக்கும் ஒருபாகம் எற்படவேண்டியிருந்ததால் குடும்பப்பொதுவான சொத்துக்கள் யாவற்றையும், நிலுவை பாக்கி முதலியவைகளையும் விவரித்து 1891-ம் வருஷத்தில் பாகபத்திரம் எழுதி ரெஜிஸ்டர் செய்துகொடுத்து மூத்ததாரத்தின் குமாரர்களுக்கு விகிதப்படிக்கு சொத்துக்களைப் பிரத்தியேகமாய்ப் பிறித்துக் கொடுத்துவிட்டார். மைனர் குமாரனுகயிருந்த வாதிக்குத்தன்னையே கார்டியனுக பாகப்பத்திரத்தில காணப்பட்டிருந்தது. பத்திரத்தில் கண்ட 5-அயிடங்களாக ஸ்தாவர சொத்துக்களில் இரண்டுஅயிடங்களையும் வசூலாகவேண்டிய கிலவருமானங்களையும் டிக்கிரீ பாக்கிகளையும் குடும்பப் பொதுவான கடன்களைத் தீர்ப்பதற்காக 1-ம் பிரதிவாதிதன்னிடம வசப்படுத்திக் கொண்டவகையால்கடன்களும் நிலுவைகளும் பைசலானபிறகு இதரமான ரூ-4000-மதிப்புள்ள மூன்று அயிடங்களில் ரூ 2000 மதிப்புள்ள 2-வது, 3-வது அயிடங்களாகிய ஸ்தாவர சொத்துக்களைத்தானும் தன்னுடைய மைனர் குமாரனுகிய வாதியும் பங்கு 1-க்கு ரூ. 1000 விழுக்காடு இரண்டு பங்குகளை அடைந்து அனுபவிக்கவேண்டியதென்றும் ரூ. 2000 பெருமான 4-வது அயிடம் சொத்தில் ரூ. 1000 மதிப்புள்ள ஒரு பாதியை ஒரு மேஜர் குமாரன் அடைந்து அனுபவிக்கிறதென்றும், ரூ 1000 பெறுமான மறுபாதியை மற்றொரு மேஜர் புத்திரன் அடைந்து அனுபவிக்கிறதென்றும் காணப்பட்டிருந்தது. ஜங்கம சொத்துக்களைப் பற்றி பாககாலத்தில் அவ்ரவர்கள் வசமிருக்கும் சொத்துக்கள் அவரவர்களே அனுபவிக்கிறதென்று எழுதப்பட்டிருந்தது.

மேற்கண்டவிதமாய் குடும்ப சொத்துக்கள் பாகமானபிறகு 1-ம் பிரதிவாதி தனக்கும் தன் குமாரனுக்குமாக எற்பட்ட சொத்துக்களில் ஒன்றை விக்கிறயம் செய்துவிடவே மைனர் மேஜாரிடியடைந்தபிறகு ஷை விக்கிறயம் தன்னைக் கட்டுப்படுத்தாதென்று தீர்மானம் அடையும்பொருட்டு அதாவது ஷை விக்கிறயத்தில் தன்னுடைய சமபாதி பாகத்தைப் பற்றினமட்டில் விக்கிறயம் செல்லாதென்று தீர்மானிக்கும்பொருட்டு கோயமுத்தூர் டி-மு கோர்ட்டில் அசல் தாவாசெய்தார். டி-மு கோர்ட்டார் பாகபத்திரத்தில் கண்ட 2-3-வது அயிடமான சொத்துக்களை வாதியும் 1 ம் பிரதிவாதியும் பொதுவாக அடைந்ததாகவும் வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் பிரிவினையாகவேண்டிய கருத்தாய் பாகப்பத்திரம் எற்படவில்லையென்றும் மற்ற இரண்டு புத்திரர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்காக சொத்துக்களை மொத்த மதிப்பிட்டு நால்வருக்கும் ரூ. 1000-மாக பிரித்துக் கொடுக்கவேண்டியதாய்க் கணக்கிட்டு அவ்விருவருக்கும் ரூ. 1000 மாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டதேயொழிய மற்றப்படி வாதியும் 1-ம் பிரதிவாதியும் பாகமாகாத கூட்டுக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக பாவிக்கப்படவேண்டுமென்றும், ஆகையால் 1-ம் பிரதிவாதி தாவா விக்கிறயம் செய்தது வாதியையும் கட்டுப்படுத்தக்கதென்றுசொல்லி தாவா விக்கிறயம் பூராவையும் உறுதிப்படுத்தி வாதியின் பிராதை தள்ளுபடி செய்தார்கள். அதன்மேல் வாதி சப்கோர்ட்டில் அப்பீல் செய்ததில் அங்கு வாதிக்கனுகூலமாகடிக்கிரியாச்சுது. கிறயம்பெற்ற எதிரிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்குசப்கோர்ட்டார் தீர்மானம் ரத்தாகி டி-மு கோர்ட்டிக்கிரி காயமாகிய, வாதியின் தாவா தள்ளுபடியாச்சுது.

பாக பத்திரத்தைப்பற்றி சப்கோர்ட்டார் கொண்ட அபிப்பிராயம் பிசகென்று தெளிவாய்த் தோன்றாதபோதிலும் வாதியின் பிராது தள்ளுபடியாகவேண்டியது நியாயமென்று அதாவது தாவா கிறயம் உறுதியாகவேண்டியது நியாமென்று இந்த அப்பீலை ஈரங்கி கேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜியவர்கள் அபிப்பிராயத்திற்கு விரோதப்படாமல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் தீர்ப்பளித்தார்கள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாஜீ அவர்களுடைய தீர்மானத்தின் முக்கிய காரணங்களாவன:—



பாகபத்திரம் எழுதிக்கொடுக்கும் காலத்தில் 1-ம் பிரதிவாதி பிரியப்பட்டால் தனக்கும தன் மைனர் குமாரனுகிய வாதிக்கும் முற்றிலும் பிரிவினையாக எற்பாடு செய்துகொள்ள லாயக்குண்டு; அல்லது தன்னுடைய மூத்த தாரத்தால் பிறந்த இரண்டு மேஜர்களுக்குத் தனியாய்ப் பிரித்துக்கொடுத்து இளைய தாரத்து புத்திரனுகிய மைனரும் தானும் கூட்டாக சொத்துக்களை அடைந்து அனுபவிக்கத்தக்க எற்பாடு செய்யவும் லாயக்குண்டு. தாவா பாககாலத்தில் 1-ம் பிரதிவாதி மைனரைவிட்டு முற்றிலும் பிரிந்து பாகித்துக்கொள்ளும் கருத்துடையவராயிருந்ததாகத் தோன்றவில்லை. ஷ-ஆதாரவாகிய பாகப்பத்திரத்தைக் கவனித்துப் பார்க்குமிடத்து தானும் மைனரும் சொத்துக்களைக் கூட்டாய் அனுபவிக்க உத்தேசித்ததாகத் தோன்றுகிறது.

ஒவ்வொரு பாகத்திற்கும் மதிப்பைப்போடும் பொருட்டு தனக்கும் மைனருக்கும் இரண்டு பங்காகவும் ஒவ்வொரு பங்குக்கும் ரூ 1000-மாக அடையவேண்டியதென்றும்பத்திரத்தில்கண்டிருக்கிறதேயொழிய மற்றபுத்திரர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் ஒரு பாதியும் மறு பாதியுமென்று பிரித்துக் காட்டியதுபோல் தங்களுக்கும் பிறித்து அனுபவிக்கும்படி எழுதப்படவில்லை. தகப்பனுக்கும் மகனுக்கும் சமபாகம் உண்டென்று 2 மதராஸ் 307-இலும் 23 மதராஸ் 16-இலும் தீர்மானிக்கப்பட்டு பூர்வீக சம்பிரதாயமாகிய கம்மி ஜாஸ்தி பாகவிகிதமானது மாற்றப்பட்டிருக்கிறது. பாக பத்திரம் பிறந்தபிறகு வாதியும் 1-ம் பிரதிவாதியும் பிரிந்திருக்கவேண்டுமென்ற கருத்தும் ஷை தஸ்தவேஜினல் துலங்கவில்லை. எனெனில் இரண்டு அசையாப்பொருள்கள் இருவருக்கும் பொதுவாய் அனுபவிக்க விடப்பட்டிருக்க மற்ற இருவருக்கோ ஒவ்வொருவருக்கும் ஒருபாதி என்று குறிப்பிட்டு அதற்குவிலை மதிப்பும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தகப்பனுடைய பாகத்திற்குச் சமமாக ஒவ்வொரு புத்திரனும் அடையவேண்டுமென்ற கருத்தைக் காண்பிக்கும் பொருட்டு தகப்பன் தனக்கும் தன் மைனர் குமாரனுக்கும் ரூ. 1000 விகிதம் எற்படுத்திக் காண்பித்த கருத்தாகச் சொல்லக்கூடாது. தவிற தாவா விக்கிறய சொத்தானது ரூ. 1000-க்குக் கம்மியான விலை மதிப்புடையதாயிருக்கிறது இருவரும் பிறிந்திருக்க உத்தேசமிருந்தால் கம்மிவிலை மதிப்புள்ள தாவா சொத்தை இருவரில் ஒருவர் அடையவேண்டுமென்று குறிப்பாய்க்கண்டிருக்கலாம். கம்மி ஜாஸ்திக்கு ஒருவர் மற்றவருக்கு யாதொரு அதிகக்கிறயத்தைக் கொடுத்து விடும்படி எற்பாடு செய்திருக்கலாம். அவ்விதம் பாகிக்கப்படாததால் தாவாநிலமும் மற்றொரு அயிடமும் இருவருடைய கூட்டனுபோகமென்று எண்ணப்பட்டிருந்திருக்கவேண்டும். அசையும் பொருள் விஷயமாய் அவரவர் வசமுள்ளதை அவரவர் அடையவேண்டியதென்று கண்டிருக்க மைனர் யாதொரு அசையும் பொருளை வைத்திருக்க லாயக்குள்ளவனல்ல, [அப்படிக்குப் பிறிவினைக் கருத்துண்டானல் அவனுக்காக பற்பல அசையும் பொருள்களைக் குறித்துக்காட்டி அவைகள் தகப்பனுகிய கார்டியன் வசமிருப்பதாயும் மேஜரானபிறகு ஒப்புவிக்கப்படவேண்டுமென்ற வசனங்கள் கண்டிருக்கும் அவ்வித வசனங்கள் காணோம்.] தவிற மைனர்வாதி பாககாலத்தில் 4-வயதுள்ள அதி பால்யனுகயிருந்தமையால் தகப்பனைவிட்டுப் பிறிந்திருக்க உத்தேசிக்கப்பட நியாயமில்லை. தாவா விக்கிறயத்தால் 1-ம் பிரதிவாதி வாதிக்கு யாதொரு மோசம் செய்யவேண்டுமென்ற கருத்தாக யூகிக்க நியாயமில்லை. பாக தஸ்தவேஜில் குறித்தபடி பாகமான இரண்டு அயிடம் சொத்துக்களில் தாவாசொத்தைத் தன்விகிதத்திற்கு வைத்துக் கொண்டு விக்கிறயம் செய்துவிட்டதாக நிதானி

க்கவேண்டும். ஆகையால் பாகபத்திரத்தையும் அதன்பின் பார்ட்டிகளுடைய நடவடிக்கைகளையும் சந்தர்ப்பங்களையும் தாவாவிக்கிறய நடவடிக்கையையும் கவனித்துப் பார்க்குமிடத்து பாககாலத்தில் வாதியும் 1-ம் பிரதிவாதியும் பிரிந்துகொண்ட கருத்தைக் கொடுக்கவில்லை. இரண்டுசொத்துக்களில் ஒவவொன்றிலும் ஒருபாதி பாத்தியதை ஒவ்வொருவருக்காக பாகித்து அனுபவிக்கும்படி அசவுகரியமான ஏற்பாட்டைச் செய்துகொண்டு இருவரும் பாகப்பிறிவினை செய்துகொண்டதாகச் சொல்லக்கூடாது. (வாதி இளையதாரத்தின் மகனாயிருக்க) வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்கு முறிய சம்பந்தத்தைப் பற்றியும மற்ற சந்தர்ப்பங்களைப் பற்றியும் யோஜித்துப் பார்க்குமிடத்து தெளிவான வசனங்களால் இருவருக்கும் தனித்தனி பாகம் அளிக்கப்படாததால் வாதி 1-ம் பிரதிவாதியிடமிருந்து பிறித்துக்கொண்ட பாவனையாக தாவா சொத்தில் ஒரு பாகத்திற்கு பாத்தியமுடையவனென்றும் அந்த பாகத்தை 1-ம் பிரதிவாதி விக்கிறயம் செய்தது செல்லாதென்றும் தீர்மானிக்கக்கூடாது. ஆகவே டி-மு-கோர்ட்டார் வாதியின் பிராதைத தள்ளுபடி செய்தது சரியே.

———:0:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

மதுரை ஜில்லா.

C. M. A. No. 87 of 1913-13 நவம்பர் 1913.

கௌஸ் மொய்தீன் சாகிப் *Vs* முத்தியாலு செட்டியார்

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின் 131-வது பிரிவின்படி, நிலதீர்வையை ஒழுங்காய்க் கட்டத் தவறினல் நிலச்சுவான்தார் ஷை நிலத்தை எலம்போட்டு தீர்வையை வசூலிக்க சட்டமேர்ப்படடிருக்க அவ்வித எலத்தை ரத்துசெய்யவேண்டுமானல் எலம்போட்ட 30 தினங்களுக்குள்தீர்வைபாக்கியை ஜில்லா கலக்டரிடம் டிபாஸிட் கட்டிவிட்டு எலம் எடுத்தவனுக்குஎலத்துகையில் 100-க்கு 5-விகிதமான லாபத்தைச் செலுத்தும் பொருட்டு அந்த விகிதத்தையும் டிபாஸிட் செய்தால் கலக்டரவர்கள் ஷை எலத்தை ரத்து செய்யக் கடவரென்று விதிக்கப்பட்டிருக்கிறது. வாதிதன்நிலத்தை நிலச்சுவான்தார் தீர்வை பாக்கிக்காகப் போட்ட எலத்தை ரத்துசெய்வதற்குக் காரணமாக எல நடவடிக்கையில் யாதொரு மோசம்அல்லது பிறட்டு நடந்ததாகச் சொல்லி ஸிவில்கோர்ட்டில்அதாவதுமதுரைமேலூர்டி-மு கோர்ட்டில் பிராது செய்யவே டி-மு கோர்ட்டார் இத்தகைய வியாஜ்ஜியம் ஸிவில் கோர்ட்டார் பிடிக்கதக்கதல்லவென்றும் ரெவினியூகோர்ட்டில் பிராது தாகல் செய்யப்பட வேண்டுமென்றும் சொல்லி பிராதைத் தள்ளுபடிசெய்தவிட்டார், அதன்மேல் வாதி ஜில்லாகோர்டடில் அப்பீல் செய்ததில் அங்கு டி-மு கோர்ட்டார் அபிப்பிராயம் தப்பென்று சொல்லி பிராதை பயிலுக்கெடுத்து விஜாரணைசெய்து தீர்மானிக்கும்படி டி-மு கோர்ட்டாருக்கு ரிமாண்டு செய்தார்கள். எதிரி அந்த ரிமாண்டு உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டுக்குச் சில்லரை மனு அப்பீல் செய்ததில் ஜில்லாகோர்ட் ரிமாண்டு உத்தரவுகாயமாச்சுது. ஹைகோர்ட்டார் உத்தரவில் சொன்னதாவது:—

ஸி. பி ஸி. 9-வது பிரிவின்படி ஸிவில் நேசரான அல்லது உத்தியோக சொத்து பாத்தியதையைப் பற்றியபிராதுகள் வேறுசட்டமுறைகளால் பிடிக்கத்தக்கதல்லவென்று விதிக்கப்பட்டிருந்தாலொழிய ஷை பிராதுகளை ஸிவில் கோர்ட்டார் பிடித்துத் தீர்மானம் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. எஸ்டேட்ஸ் லாண்ட்ஸ் ஆக்ட் 213-வது பிரிவில் ஸிவில் கோர்ட்டாரின் அதிகாரவரம்பிலிருந்து விலக்கப்படாத வியாஜ்ஜியமூலங்களைப் பற்றிய பிராதுகளை ஸிவில் கோர்ட்டில் நடத்தத் தடையாதொன்றும் கிடையாதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஷை ஆக்ட் 189 வது பரிவில் A ஷெடியூலிலும், B ஷெடியூலிலும் விவரிக்கப்பட்டிருக்கிற விதமான பிராதுகளை ரெவினியூ கோர்ட்டாரே பிடித்து விஜாரணைசெய்ய வேண்டுமேயொழிய ஸிவில் கோர்ட்டார் அத்தகைய பிராதுகளை விஜாரிக்க அதிகாரமில்லையென்று விதிக்கப்பட்டிருக்கிறது. B ஷெடியூல் 19-வது லக்கத்தில் ஷை ஆக்டின் 131-வது பிரிவில் கண்டமுறைப்படி எலத்தை ரத்து செய்யவேண்டிய பிராதுநடவடிக்கையைமேல் சொல்லிய விதமாய் டிபாஸிட் கட்டி 30 தினங்களுக்குள் ரெவினியூகோர்ட்டில் நடத்தவேண்டுமென்று கண்டிருக்கிறது. ஆனல் யாதொரு எல நடவடிக்கையில் மோசம் நடந்திருந்தால் அவ்விதகாரணத்தால் எலதததை ரத்துசெய்யக்கோரும் பிராதை ஸிவில் கோர்ட்டாருடைய அதிகாரவரம்பிலிருந்து விலக்கப்பட்டதாக நிதானிக்க இடமில்லை. எஸ்டேட்ஸ் ஆக்டின் 131-வது பிரிவின்படி அதிக கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. 30 தினங்களுக்குள் பிராது செய்யப்படவேண்டும். தவிர எலமெடுத்தவனுக்கு இனாமாக எலத்தகையுடன் ரூ. 100-க்கு 5 லாபம் வேறு வாதிகட்டிவிடவேண்டும். இது அதிக கடினமானநிபந்தனையாகும். எலத்தில் மோசம் நடந்திருக்கிறவிஷயம்வாதிக்குகாலதாமதத்தில் தெரியவந்தால் அதற்கு இந்தியன் லிமிடேஷன் ஆக்டின்படி காலாவதியை அனுசரித்து பரிகாரம் தேட ஸிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியம்நடத்தக்கூடியசவுகரியம் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின்விதிகளினல்எடுக்கப்படவில்லை. ஷை ஆக்டின் 181-வது பிரிவின்படி கொண்டுவரப்பட்ட பிராதல்ல. மோசமாக பிறட்டான நடத்தைகளால் வாதியின் நிலம்எலம் போடப்பட்டிருந்தால் அதைப்பற்றி ஸிவில்கோர்டடில் தாவா செய்யலாம். ஆகவேஜில்லா கோர்ட்டாருடைய ரிமாண்டுஉத்தரவுசரியானதே. சில்லரை மனு அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.



———:0:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

கோயமுத்தூர் ஜில்லா.

C. M. A. 167 of 19 2-20 நவம்பர் 1913.

ஸரஸ்வதி அமமாள் *Vs* ஆர் ஸுப்பய்யர் விரோதி

ஸ்ரஸ்வதி அம்மாளுடைய புருஷன் ஒவர்ஸியராக உத்தியோகம் செய்து சம்பாதித்த துகையில் தபாலாபீஸில் கொஞ்சமும் பண்டாபீஸில் கொஞ்சமும தகை கட்டியிருந்து காலஞ்சென்றுவிடவே ஷை யாருடைய சகோதரர்கள் கோயமுத்தூர் ஜில்லா கோர்ட்டில் வாரிஸ்ஸர்டிபிகேட் அடையும்பொருட்டு அசல் மனுக்கொடுத்தார். அதில் ஸரஸ்வதியம்மாளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு தன் புருஷனும் அவருடைய சகோதரர்களும கூட்டாய்ப்பட்டிருந்ததாகச் சொல்லப்பட்ட கடன்களை மறுதததும் தவிற தன் புருஷன் தன்பேருக்கு ஒரு உயில் எழுதிவைத்திருப்பதாகவும் அந்தப்படிக்குத்தன்பாத்தியதையைப் பாராட்ட அதிகாரமுண்டென்று சொல்லி மனுதார்களுக்கு ஷை இரண்டு அயிடங்களாகிய பண்டாபீஸ் துகையைப்பற்றியும் ஸேவிங்ஸ் பாங்கித் துகையைப்பற்றியும் வாரிஸ்ஸர்டிபிகேட் கொடுக்கக்கூடாதென்று ஆக்ஷேபித்தாள். ஜில்லா கோர்ட்டார் எதிரியின் ஆக்ஷேபனையைப்பற்றி யாதொரு விஜாரணையும் செய்யாமல் மனுதார்கள் காலஞ்சென்றவருடைய சரியான வார்ஸகளென்று அபிப்பிராயப்பட்டு ஸர்டிபிகேட் அளிததுவிட்டார்கள். ஸரஸ்வதி அம்மாள் ஹைகோர்ட்டில் சில்லரை மனு அப்பீல் செய்ததில் அந்த ஜில்லா கோர்ட்டார் விஜாரணை செய்யாமல் ஸர்டிபிகேட் கொடுத்தது பிசகென்று தீர்மானித்து எதிரி ஆஜர்படுத்தின உயில் உண்மையானதாவென்றும் மனுதாரின் விண்ணப்பத்தில் குறிக்கப்பட்டிருக்கிற இரண்டு அயிடம் துகைளும் எதிரியின் புருஷனுடைய பிரத்தியேகமான ஸ்வயார்ஜிதமாவென்ற விஷயங்களைப்பற்றியும் ருஜூ அம்சம் எடுத்து அதன்பின் விண்ணபபதைப் பைசல் செய்யும்படிக்கு ஜில்லா கோர்ட்டாருக்கு உத்தரவளித்தார்கள். அந்த உத்தரவில் ஹைகோர்ட்டார் சொன்ன காரணங்களாவன:—

17 மதராஸ் 477-இன் 478-ம் பக்கத்தில் மதராஸ் ஹைகோர்ட்டார்:— வாரிஸ் ஸர்டிபிகேட் விண்ணப்பத்தை சம்மேரி விஜாரணைசெய்து தீர்மானிக்கவேணடியது கோர்ட்டாரின் கடமையாருமென்றும், அவ்விதமாய் அளிக்கப்படும் பைசலால் விளையும் கஷ்டங்கள் சம்மேரி விஜாரணை முறையால் ஏற்பட்டதாகச் சொல்லவேண்டுமேயொழிய, சம்மேரி விஜாரணையில் ஸர்டிபிகேட் பாத்தியதையைப்பற்றிய ஒவ்வொரு ஆதாரத்தையும் விஜாரித்துத் தீர்மானம் செய்யவேண்டிய சிரமத்தால் ஏற்பட்டதல்லவென்று அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். [அதாவது சம்மேரி

விஜாரணையில் சொல்லப்படும் ஒவ்வொரு பாயிண்டைப் பற்றியும் விஜாரித்துத் தீர்மானம் செய்யவேண்டியது கஷ்டமாயினும் அப்படிச் செய்ய வேண்டியதவசியமாகும்]. இருதரப்பாரும் அதாவது மனுதாரும் எதிரிகளும் விண்ணப்பத்தில் கண்டவிஷயங்களில் சிலவற்றை நிராக்ஷேபனையாக ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில் அந்த விஷயங்களைக் கவனித்து இருதரப்பாரில் யாதொருவருக்கு ஸர்டிபிகேட் அளிக்க நியாயமுண்டென்று தெளிவாய்த் தோன்றினால் அந்த சந்தர்ப்பங்களில் ஒப்புக்கொள்ளப்படாத விஷயத்தைப்பற்றி யாதொரு விஜாரணை செய்யாமலே ஸர்டிபிகேட் கொடுத்துவிடலாம். (1913) மதராஸ் வாரக்குறிப்புகளில் 175-ஐப் பார்க்கவும். ஆனால் அவ்விதமாய் எப்போதும் நடக்கத்தகாது. சாதாரணமாய் இருதரப்பாரும் அநேக விஷயங்களை சரியென்று ஒப்புக்கொண்டபோதிலும் சொர்ப விஜாரணை செய்தபின் தான் கோர்ட்டார் யாதொருவருக்கும் ஸர்டிபிகேட்அளிக்கத்தீர்மானம் செய்யவேண்டும்.

ஆகவே மேற்கூறிய நியாயங்களைச் சொல்லி மறு விஜாரணைக்கு உத்தரவளித்தார்கள்.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

செங்கல்பட்டு ஜில்லா.

C. R. P. No. 619 of 1911–20 நவம்பர் 1913

சொர்னலிங்கமுதலி *Vs* பேச்சிநாயகன் வகையரா.

வாதி பூனமலி டி-மு கோர்ட்டில் 1-முதல் 5 பிரதிவாதிகளால் தனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிஸரி நோட்டின்பேரில் ஸ்மால்காஸ் நம்பர் தாகல் செய்ததில் 5-ம் பிரதிவாதி கொடுத்த ஆன்ஸரில் தான் நோட்டின் துகையை அடைந்தவனல்லவென்றும் தான் கையொப்பம் செய்தால் மற்ற பிரதிவாதிகள் பயந்து நோட்டுத் துகையைத் திருப்பிக்கொடுக்க அக்கரைப்படுவார்களென்றும் வாதி தன்பேரில் தொடருவதில்லையென்றும் சொன்ன வார்த்தையை உண்மையாக நம்பித் தான் நோட்டில் கையொப்பம் செய்ததாக வாதித்தார். டி-மு கோர்ட்டார் ஷை வாதத்தை ஒப்புக்கொண்டு 1 முதல் 4-பிரதிவாதிகளின் மீது வாதிக்கு டிக்கிரீயளித்து 5 ம் பிரதிவாதியை விலக்கிவிட்டார். தவிர பிராதுதேதிமுதல் டிக்கிரி தேதிவரையுள்ள வட்டிக்கும் செலவு துகைக்கும் டிக்கிரியளிக்க மறுத்துவிட்டார். வாதி 5-ம் பிரதிவாதியின்பேரிலும் டிக்கிரியளிக்கப்படவேண்டுமென்று அபேக்ஷித்து ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு தாகல்செய்ததில் அங்கு வாதிக்கு அனுகூலமாய் 5-பிரதிவாதிகள்பேரிலும் டிக்கிரியளிக்கப்பட்டு பின் வட்டியும் செலவு துகையும்கூட வாதிக்குக்கிடைத்ததுஇந்தரிவிஷன் மனுவின் செலவை வாதிக்கு 5-ம் பிரதிவாதி மட்டுமே தரவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்ப்பின் காரணங்களாவன:—

ஒரு நோட்டை பலர்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்திருக்க அதினுடைய பிரதிப்பிரயோஜனத்தை சிலர்கள்மட்டும் அடைந்த காரணத்தால் மற்றவர்கள் அந்தத் துகையில் யாதொரு பாகமும் தங்களுக்குச் சேரவில்லையென்றும் ஆகையால் ஜாயிண்டான தங்கள் கடமைக்குச் சட்டப்படி பிரதிபிரயோஜனம் கிடையாதென்று வாதம் செய்யக்கூடாது. கூட்டுக்கையொப்பக்காரர்கள் பலரில் யாராவது ஒருவனுக்குத் துகை செலுத்தப்பட்டாலும் சட்டப்படி எல்லாரையும் நோட்டின் நிபந்தனையானது கட்டுப்படுத்தும். (1910) 20 மதராஸ் லா ஜர்னல் 144-இல், ஒரு நோட்டில் கையொப்பம் செய்தவன் ஒருவனாயிருக்க அவன் நோட் துகையைத் தான் அடையவில்லையென்றும் கடன்வாங்கினவன் வேரொன்றும் தான் அவனுக்கு பர்த்தியாகக் கையொப்பம் செய்ததாகவும் எதிர்வாதம் செய்யப்பட்டதில் தாவா நோட்டுக்குப் பிரதிப்பிரயோஜனம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது. ஒரு நோட்டில் தான் கையொப்பம் செய்து கடன் துகையைக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருக்க அதே காலத்தில் அந்த ஒப்பந்தத்திற்கு மாறாக வாதி தன்னைக் கட்டுப்படுத்துகிறதில்லையென்ற வாய்க்காரரை ஆதாரமாகக்கொண்டு எதிர்வாதம் செய்யவிடுவது எவிடென்ஸ் ஆக்ட் 92-வது பிரிவின் அம்சங்களுக்கு விரோதமாகிறது. சட்டத்தை



அனுசரித்துவரும் வர்த்தகர்களுககும் அது விபரீதமான முறையாக ஏற்படும்.

(1913) மதராஸ் வாரக்குறிப்புகளின் 336-இல் ஜாயிண்டு கையொப்பம் செய்தவன் தான் கேவலம் ஜாமீன் தாரராக புணைப்பட்ட விஷயத்தைக் கூட ருஜுப்படுத்த இடங்கொடுக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தியன் காண்ட்ராகட் ஆகட் 127-வது பிரிவில் ஒருவன் வாங்கினகடனுக்கு மற்றவன் ஜாமீன் கொடுத்திருந்தால் அது ஜாமீன்தாரையும் கட்டுப்படுத்தப் போதுமான பிரதிப்பிரயோஜனமாகுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. 128-வது பிரிவில் கடன் வாங்கினவன் பேரில் எம்மட்டில் பரிகாரம் தேடலாமோ அந்தமட்டில் ஜாமீன்தார் பேரிலும் பரிகாரம் தேடலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. பிரதிப் பிரயோஜனமில்லாத நோட் செல்லத்தகாதென்று சட்டமிருக்கிறது. ஆனால் தாவாகேசில் 4-பிரதிவாதிகள்போல் டிக்கிரீயளிக்கப் பட்டிருக்கிற படியால் இந்த நோட் பிரதிப் பிரயோஜனமில்லாதநோட்என்ற வருத்தாகாது. ஆகையால் 5-ம் பிரதிவாதியின் எதிர்வாதம் செல்லத்தக்கதல்லவென்று மேற்கூறிய விதமாய் டி-மு-கோர்ட் டிக்கிரீ மாற்றப்பட்டது.

———O———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.)

தேன் ஆர்காட் ஜில்லா.

C. R. P. 373 of 1912-9 டிசம்பர் 1913.

*ராகவய்யங்கார் Vs ஸாமாச்சாரியார்*

ஸாமாச்சாரியார் என்ற பிரதிவாதி, தனக்கு பாத்தியப்பட்ட ஒரு ஸ்தாவர சொத்தை வாதிக்கு விக்கிரயம் செய்து கொடுத்து விக்கிரய தஸ்தவேஜில் வழக்கம்போல் "இந்த நிலத்தைப்பற்றி என் மூலமாய் யாதொரு வழக்கு அல்லது தகரார் ஏற்படும் பக்ஷத்தில் அதை நானே முன்னின்று தீர்த்துக் கொடுப்பேனாகவும்", என்ற ஷரத்தும் கண்டிருந்தார். ஷை சொத்தை சுவாதீனமடைந்து அனுபவிக்கிற மூன்றாவது மனிதன் ஷை சொத்தில் மேலான பாத்தியதையைக் கொண்டாடி மேற்படி விக்கிரயத்தை கிராகரித்தமையால் வாதி தான் செலுத்தின விக்கிரயத்துகையைத் திரும்பி அடையும்பொருட்டு பிரதிவாதியின் மீது சிதம்பரம் டி-மு-கோர்ட்டில் ஸ்மால்காஸ் தரப்பில் வியாஜ்ஜியம் செய்தார். டி-மு-கோர்ட்டார் பிரதிவாதி தனக்கு சொத்தில் பாத்தியதை யிருப்பதாக நம்பி விக்கிறயம் செய்து கொடுத்ததாகவும் ப்ராபர்டி ஆக்ட் 55-வது பிரிவின்படி கிறயதார் செய்து கொடுக்கவேண்டிய கடமைகளை செய்யத்தவறினதாக பிரதிவாதியின் பேரில் குற்றஞ்சாட்ட நியாயமில்லையென்றும் சொல்லி வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனுதாகல்செய்து அங்கு டி-மு-கோர்ட்டாருடைய தீர்மானம் ரத்தாகி வாதிக்கு விக்கிறயத் துகையை பிரதிவாதி வாபிஸ் செய்யவேண்டியதென்று டிக்கிரீயளிக்கப் பட்டது.

ஹைகோர்ட் உத்தரவின் முக்கிய அம்சங்களாவன:—

ப்ராபர்டி ஆக்ட் 55-வது பிரிவின் 1-வது உட்பிரிவில்விக்கிறயம்செய்கிறவனுடைய கடமைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. (*a*) தனக்குத்தெரிந்தமட்டில் கிறய சொத்திலுள்ள முக்கியமான குறைகளை எதிரி அரியாமலும் அல்லது அரியக்கூடாமலிருக்கும் பக்ஷத்தில் எதிரிக்கு விக்கிறயம் செய்து கொடுக்கும்பொழுது வெளியிட்டுச் சொல்லிவிட வேண்டும். (*b*) தன் வசம் இருக்கிற சகலவிதமான மூல ஆதரவு தஸ்தவேஜுகளையும் பரிசீலனை செய்யும்பொருட்டு எதிரி கேட்டுக்கொண்டால் அவைகளை ஆஜர்படுத்திக்கொடுக்க வேண்டியது. (*c*) சொத்துவிஷயமாக அல்லது அதின் பாத்தியதையைப் பற்றியாவது எதிரிகேட்கிற சம்மந்தப்பட்ட பிரஸ்னைகளுக்கு (கேழ்விகளுக்கு)த்தனக்குத் தெரிந்தமட்டில் விடை கொடுக்கவேண்டும். (*d*) எதிரி விக்கிறயத்துகையைச் செலுத்தின உடன் ஷை சொத்தைப் பற்றி எதிரி கொடுக்கிற கிறயதஸ்தவேஜில் சரியான இடத்திலும் சமயத்திலும் கையொப்பம் செய்து சரியானபடி கிறய தஸ்தவேஜை முடித்துக் கொடுக்க வேண்டியது. (*e*) விக்கிறய உடன்படிக்கை செய்துகொண்டது முதல் விக்கிறய சொத்தையும் தன்வசமுள்ள அதைச் சேர்ந்த

மூலாதாரவு தஸ்தவேஜுகளையும் அதிக ஜாக்கிரதையாய் சாதாரணமான ஊக்கத்துடன் சொந்தக்காரன் பாதுகாக்கும் வண்ணமாய் வைத்திருக்கவேண்டும். (f) சொத்தின் யோக்கியதைக்கு (ஸ்பாவத்திற்கு)த்தக்கபடி எதிரி கேட்ட பிரகாரம் எதிரிவசமாவது அவன் குறிப்பிடுகிற ஆள்வசமாவது சொத்தை சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டியது.

மேற்கூறிய 6-அம்சங்களில் யாதொன்றில்பிரதிவாதி தவறிநடந்ததாக ஏற்படவில்லையென்று டி-மு-கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார். தன்னைவிடமேலான பாத்தியதையுடையவன்சொத்தின் சுவாதீனத்திலிருப்பதால்வாதிக்குசொத்தைஒப்புவிக்கத் திறமையில்லாதிருக்கிறதாய் பிரதிவாதியே தன்வாக்கு மூலத்தில் ஒப்புக்கொண்டிருக்க, டி-மு-கோர்ட்டார் அபிப்பிராயம் சரியென்று சொல்லத்தகாது. 55-வது பிரிவின் 2-வது உட்பிரிவின் அம்சங்களால் கிரயதார் தன்னுடைய பாத்தியதையைப்பற்றி வேறு விதமான நிபந்தனைகளையாவது தகவல்களையாவது தஸ்தவேஜில் குறித்தெழுதாத பட்சத்தில் தனக்குச் சரியான (நிராக்ஷேபனையான) பாத்தியதை இருப்பதாகவும் அதைப்பற்றித் தான் ஜவாப்தாரியென்றும் ஒப்பந்தம் செய்துகொண்டதாக நிதானிக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. தாவா கிரய தஸ்தவேஜில் பிரதிவாதி வேறுவிதமான ஷரத்துக்களைக் குறித்தெழுதவில்லை. வாதி ஒருவன் மட்டும் இந்தக்கேசில் சாட்சி வாக்குமூலம் கொடுத்திருக்க வேறு யாதொரு சாட்சியத்தாலாவது பிரதிவாதி தன்னுடைய பாத்தியதையின் குறைவை அல்லது தகராரைப்பற்றி வாதிக்குத் தெரிவித்திருப்பதாயும் அது விஷயமாய் வாதியுடன் யாதொரு கராரும் செய்துகொண்டு கிரயம்செய்து முடித்ததாயும் துலங்கவில்லை. தாவாசொத்தில் தன் மூலமாய் யாதொரு தகரார் நேரிடும் பட்சத்தில் தானே அதைத் தீர்த்துக் கொடுப்பதாய்ப் பத்திரத்தில் கண்டிருக்க அந்த ஷரத்தானது தன்னுடைய சொத்து பாத்தியதையை அடங்கிய தல்லவென்று பிரதிவாதிக்காகச் சொல்லப்படுகிறது. அவ்விதமாய் நினைக்கக்கூடாது. அவ்வசனங்களின் கருத்தாவது விக்கிரயசொத்தின்ஸர்வ ஸ்வதந்தரத்தையும், பாத்தியதையையும் நிராக்ஷேபனையான சுவாதீனத்தையும் வாதியின் பாத்தியக் குறைவாலாவது அல்லது ஷை யானுடைய நடத்தைக்குறைவாலாவது அடையக்கூடாமல்போகும்பட்சத்தில்வாதிதானே அவ்வித பாத்தியக் குறைவையும் தன் நடத்தையால் நேர்ந்தகுறைவையும் விலக்கிக் கொடுக்கக் கடவனென்று விளங்கும். 55-(2)-வது பிரிவில் கண்டிருக்கிறபடி பிரதிவாதி தனக்கு ஸர்வ சுத்தமான பாத்தியதை யிருப்பதாக மேற்கூறிய ஷரத்துகளால் ஒப்புக்கொண்டதாகஏற்படக்கூடாதபோதிலும்தன்பாத்தியதைக்குக்குறைவு யாதொன்றும்ஏற்படக்கூடிய தகவலைவாதிக்குத் தெரிவித்து அதன்மேல் அவ்விதத்தகராரைத் தான் தீர்த்துவிடுவதாய் ஒப்பக்கொண்டு அந்த ஷரத்தைக் கண்டிருப்பதாக நிதானிக்கக்கூடாது. 25 கல்கத்தா 228-ஐப் பார்க்கவும். ஆகவே பிரதிவாதியின் பாத்தியதை குறைவாக ஏற்பட்டபடியால் தான் பெற்ற கிரயத்துகையை வாபிஸ் செய்துவிடவேண்டியது உசிதமாகும். வாதிக்கு இரண்டு கோர்ட் செலவுடன் டிக்கிரியளிக்கப்பட்டது.

———:0:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

ராமனாதபுரம் ஜில்லா.

C. M. A. Nos. 210 & 211 of 1911.

26, நவம்பர் 1913.

ராமனாதஞ் செட்டியார் வகையரா Vs அருணாசலம் செட்டியார்.

அப்பீல் வாதி ராமனாதஞ் செட்டியார்பேரில் பர்மா சீஃப் கோர்ட் அசல் நெ. 125/1908-இல் பிறந்த டிக்கிரி பாக்கியை வசூலிக்கும் பொருட்டு வாதி ராமனாதபுரம் சப்கோர்ட்டில் 1911-ம் வருஷத்திய 34-ம் நம்பரில் நிறைவேற்று மனுக் கொடுத்து ஷை யாரின் குடும்பசொத்துக்களை (வீடுகளை) ஜப்திசெய்து ஏலத்திற்குக் கொண்டுவரவே ராமனாதஞ் செட்டியாரின் குமாரர்களுக்குகார்டியனாக ஷை யாரின் மாமியார் பாத்தியமனுக்கொடுத்து அந்த பாத்திய மனு தள்ளுபடியானதும், 1911-ஜுலை 17-இல் ஏல நடவடிக்கை துவக்கப்பட்டு ஜுலை 21-இல் ஏலமாகி வாதிக்காக வாதியின் வக்கீல் ஒருவர் மட்டும் ஏலகாலத்தில் ஆஜராகி வேறு யாரும் ஏலம் கோருவதற்கு வராமல் போய் வாதிக்கே ஏலவிக்கிரயம் ஏற்பட்டது. தாவா சொத்தின் அமீனா மதிப்பு ரூ. 56,000 மாக ஏற்பட்டிருக்க ரூ. 68,000-க்கு ஏல விக்கிரயமாச்சுது. இதற்கிடையில் மைனர்களின் பாத்திய மனு தள்ளுபடியான உடன் மதராஸ் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு கொடுக்கப்பட்டு அந்த மனு ஈரங்கியாகி பைசல் செய்யப்படுமட்டும் ஏலத்தை நிறுத்தி வைக்கும்படி மறியல் மனுக் கொடுக்கப்பட்டதின்பேரில் வாதிக்கு ஷை மறியல் மனுவின் நோட்டீஸ் அனுப்பும்படி உத்தரவானகையோடு சப்கோர்ட் ஏலத்தை மறியல் மனு பைசலாகுமட்டும் நிறுத்திவைக்கப்பட வேண்டுமென்ற உத்தரவு ஜுலை 20-இல் பிறந்து உடனே ஷை தகவல் மதராஸ் வக்கீல் மதுரையிலுள்ள எதிரியின் வக்கீலுக்குத் தந்திமூலமாய்த் தெரியப் படுத்தப்பட்டு எதிரி வக்கீல் ஷை தந்தியை சப்கோர்ட்டாரிடம் காட்டி ஏலத்தைநிறுத்திவைக்கும்படி ஹைகோர்ட்டார் உத்தரவு செய்திருப்பதாய்ச் சொல்லி அந்தப்படி ஏலத்தை நிறுத்தவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார். சப்கோர்ட்டார் ஹைகோர்ட் உத்தரவு தமக்கு நேரில் தெரியப்படுத்தப்படாத காரணத்தால் ஏலத்தை நிறுத்த மறுத்துவிட்டார். மேற்கூறிய விதமாய் மறுநாள் அதாவது ஜுலை 21-இல் ஏலம் முடிந்தது. ஹைகோர்ட் உத்தரவு சப்கோர்ட்டாருக்கு வழக்கம்போல் தெரியப்படுத்தப்பட்டபின் செப்டெம்பர் 2-இல் ஏலம் காயப்படுத்தப் பட்டது. ஹைகோர்ட்டாருடைய உத்தரவு பயனற்றதாய்ப் போனபடியால் ஆகஸ்ட் 3-இல் ஹைகோர்ட்டாருடைய உத்தரவானது ரத்தாகிவிட்டது. எதிரி ராமனாதஞ்செட்டியும் அவருடைய மைனர்குமாரர்களும் பிரத்தியேகமாய் ஏலத்தை ரத்து செய்ய வேண்டுமென்று சப்கோர்ட்டில் விண்ணப்பங்கள் கொடுத்து அதில் ஹைகோர்ட்டார் உத்தரவுக்கு மீறி ஏலம்போட்டது ஒழுங்கீனமென்றும் அந்த ஏலம் அதிகாரவரம்பில்லாமல் போடப்பட்டதால் செல்லத்தக்கதல்லவென்றும் ஒழுங்கீனமான ஏலத்தால் தங்களுக்கு அதிகமான நஷ்டமாச்சுதென்று தெரிவித்துக் கொண்டார்கள். சப்கோர்ட்டார் அந்த விண்ணப்பங்களையும் ஆகஸ்ட் 29-இல் தள்ளுபடிசெய்துவிட்டு செப்டெம்பர் 2-இல் ஏலத்தைக் காயப்படுத்தி விட்டார்கள். அதன்மேல் எதிரியும் மைனர்களும் சப்கோர்ட்டார் உத்தரவின் பேரில் ஹைகோர்ட்டில் சில்லரை மனு அப்பீல் செய்து கொண்டார்கள்: ஷை அப்பீல்களை ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் கொடுத்த அபிப்பிராயச் சுருக்கமாவது:—

எதிரியின் பிள்ளைகள் தாங்கள் டிக்கிரியில் பார்ட்டிகளாயிருந்த பாவனையால் ஏலத்தை ரத்துசெய்யும்படி விண்ணப்பம் கொடுத்ததாகத் தோன்றவில்லை. ஏல சொத்தில் அவர்கள் பாகஸ்தர்களாகிற ஸ்தானத்தை வகித்து தாவா ஏலம் ஒழுங்கீனமென்றும் அதினால் தங்களுக்கு அதிக நஷ்டம் நேர்ந்ததாகவும் ஸி. பி. ஸி. ஆர்டர் 21-ரூல் 90-இன்படி விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஹைகோர்ட்டார் ஏலத்தை நிறுத்திவைக்கும்படி உத்தரவளித்தபிறகு ஏலம் போடப்பட்ட ஒழுங்கீனத்தைத் தவிர வேறு விதமாக ஏல விளம்பரத்திலாவது ஏலத்தை நடத்தினதிலாவது ஒழுங்கீனம் யாதொன்றும் கிடையாதென்று சப்கோர்ட்டார் சொல்வது சரியே. ஆனால் ஹைகோர்ட்டார் உத்தரவுக்குப்பின் ஏலம் போடப்பட்டது விசேஷமான ஒழுங்கீனமாகச் சொல்லப்படவேண்டும். ஆனால் ஷை ஒழுங்கீனத்தால் மைனர் மனுதார்களுக்கு யாதொரு நஷ்டமும் கெடுதியும் சம்பவித்ததாக ருஜுப்படுத்தப்படவில்லை. அமீனா போட்ட மதிப்புக்கு ரூ. 12,000—அதிகமாகவே கிரயமாயிருக்கிறது. தவிர எதிரியின் இயற்கைக் குணங்களாலும் நடத்தையாலும் ஷை யாருடைய சொத்துக்களை ஏலம் கோருவதற்குப் பலரும் துணிந்து முன்வருவது கஷ்டமாகும். எதிரி தன் மாமியாரைக்கொண்டு மைனர்களுக்காக பாத்திய மனு போடுவதும், அவர்களுக்காக அசல் தாவா செய்வதும் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கள் நடத்

நிவைப்பதும் ஆகிய பற்பல தந்திரமான நடத்தைகளால் பலர் எலங்கோறினால் சொத்தின் கிரயத்தைக் கொடுப்பதுமன்றி வியவகாரத்தையும் விலைக்கு வாங்கவேண்டியதாகுமென்று பயந்து நின்றிருக்கவேண்டும். ஆகையால் சரியானபடி எலம் போகாதகாரணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மைனர்களுக்காகச் செய்த மனு அப்பீல் தள்ளுபடியாகவேண்டியது. அவரவர் செலவை அவரவர் வகித்துக்கொள்ளவேண்டும்.

எதிரி கொடுத்த விண்ணப்பத்தையும் அதன் மேல் செய்யப்பட்ட மனு அப்பீலையும் கவனிக்குமிடத்து எதிரி, ஆர்டர் 21-ரூல் 90-இன்படி, எலம் ஒழுங்கீனமென்றும் அதினால் தனக்கு நீங்கும் நஷ்டமும் நேரிட்டதென்று வாதித்ததும் தவிர ஸி. பி. ஸி, 47-வது பிரிவின்படி மேல் கோர்ட்டாருடைய மறியல் உத்தரவை நிராகரித்து நடத்தின எலம் முற்றிலும் சட்ட விரோதமென்றும் ஆகையால் அதை ரத்துசெய்யவேண்டியது நியாயமாகுமென்று வாதிக்கப்பட்டது. மைனர்களுடைய அப்பீல் பைசலில் சொல்லிய காரணங்களால் எதிரியின் அப்பீல் க்ரௌண்டில் முதலாவது பாயிண்டும் பிரயோஜனமில்லையென்று தீர்மானிக்கவேண்டும். இரண்டாவது பாயிண்டை எதிரிக்கனுகூலமாய்த் தீர்மானிக்கவேண்டியதவசியமாகும். (1896) 1-கல்கத்தா வாரக்குறிப்புகளின் 226-இல் குறிக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயத்தை அனுசரித்து மதராஸ் ஹைகோர்ட்டார் (1910) 33 மதராஸ் 74-இல் மேல்கோர்ட்டாருடைய மறியல் உத்தரவானது கீழ்கோர்ட்டுக்கு வந்து சேறுமுன் ஷை உத்தரவு பிரயோஜனப்பட தக்கதல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்த அபிப்பிராயம் சரியல்லவென்று சொல்லவேண்டும். மேல்கோர்ட்டார் உத்தரவில் தங்கள் உத்தரவு கீழ்கோர்ட்டுக்காவது சம்பந்தப்பட்ட எதிர்தரப்பு பார்ட்டிக்காவது தெரியப்படுத்தப்பட்ட பிறகுதான் நமோதுக்கு வரத்தக்கதாகுமென்று குறித்தெழுதியிருந்தாலொழிய மேல்கோர்ட்டாருடைய யாதொரு மறியல் உத்தரவானது பிறந்த நிமிஷமே நமோதில் வ பாவிக்கப்பட்டு அதுமுதல் கீழ்கோர்ட் நடவடிக்கைகள் யாவற்றும் தடைப்பட்டுப் போவதாகவும் கீழ்கோர்ட்டாருக்கு அந்த வியவகாரத்தைப் பற்றிய அதிகாரமும் அதிகாரவரம்பும் நிறுத்தப்பட்டதாகவும் யூகிக்கக்கப்படவேண்டும். 15 கல்கத்தா லாஜர்னல் 335-இலும் (1911) 16 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 1031-இலும் மேற்கூறிய அபிப்பிராயத்திற்குக் காரணங்கள் மிகவும் தெளிவாயும் திருப்திகரமாயும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே சப்கோர்ட்டார் ஹைகோர்ட் உத்தரவு பிறந்தபின் போட்ட எலம் அதிகாரவரம்பின்றி நடத்தப்பட்டதாகத் தீர்மானிக்கப்படவேண்டும். ஆகவே மறுபடியும் எல இஸ்தியார் போட்டு சொத்தை மறு எலம் போடவேண்டும். அதிகார வரம்பில்லாதபடி போடப்பட்ட எலம் ஒழுங்கீனமான நடவடிக்கை என்று ஆர்டர் 21-ரூல் 90-இன்படி மதிக்கப்பட்டு அந்த ஒழுங்கீன நடவடிக்கையினால் எதிரிக்கு நஷ்டம் ஏற்பட்டதாக ருஜுப்படுத்தப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் (1881) 5 பம்பாய் 337-இன் 338-வது பக்கத்தில் பிரிவி கௌன்ஸிலார் அபிப்பிராயப்பட்டிருக்கிபடி இத்தகைய ஒழுங்கீனமானது மிகவும குருத்துவமாயிருப்பதால் அவ்வித ஒழுங்கீனம் தன்மட்டிலேயே நடவடிக்கையை ரத்தாக்கத்தக்கதாயிருக்கிறது. ஆகவே ஆர்டர் 21-ரூல் 90-இன் அம்சங்களைக் கவனிக்கத் தேவையில்லை. அவரவர் செலவை அவரவரே வகித்துக்கொள்ளவேண்டும். மறு எலம் போடும்படி உத்தரவாச்சுது.

இனி அப்பீல் கோர்ட்டார் எலத்தை நிறுத்தும்படியாக அல்லது கீழ்கோர்ட் நடவடிக்கைகளைத் தடை செய்வதாக யாதொரு உத்தரவளிக்கும் போதெல்லாம் பின்னால் வீண் வழக்குகளுக் கிடங்கொடுக்காதபடி ஷை உத்தரவு கீழ்கோர்ட்டுக்குத் தெரியப்படுத்தப்பட்டால்தான் அந்த உத்தரவை அனுசரித்துக் கீழ்கோர்ட்டார் நடந்து கொள்ளவேண்டுமென்று ரூலை ஏற்படுத்துவது உசிதமாகுமென்று அபிப்பிராயங் கொடுத்தார்கள்.

ஷை சில்லறை அப்பீல்களை ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் தீர்மானத்தின் சுருக்கமாவது:—



(1880) 2 அலகபாத் 686-இல் எலத்தை நிறுத்தும்படி அளிக்கப்பட்ட உத்தரவைக் கவனியாமல் போடப்பட்ட எலம் சட்ட விரோதமானதென்றும் செல்லத்தக்கதல்லவென்றும் முற்றிலும் சட்ட விரோதமான அப்படிப்பட்ட எலத்தைக் காயப்படுத்தக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (1872) 4-வது மேற்கு மாகாணத்திய ஹைகோர்ட் ரிபோர்ட்டுகளின் 135-இல் மேற்கூறிய உத்தரவுககு விரோதமாய்ப் போடப்பட்ட எலம் சட்டப்படி செல்லத்தகாதென்று பாவிக்கப்படாதபோதிலும், எலத்தை நிறுத்தவேண்டுமென்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பிறகு எல இஸ்தியார் பிரசுரமானதில் அவ்வித பிரசுரமானது ஒழுங்கீனமானதென்று தீர்மானிக்கப்பட்டு அந்த எலம் மேல்கோர்ட்டாரால் ரத்தாக்கப்பட்டது. இந்தக் கேசிலும் அவ்விதமாகவே பைசல் செய்யப்படவேண்டியதாகும். ஆனால் ஹைகோர்ட்டார் எலத்தைத் தடைசெய்துவிட்டார்களென்ற ஒரு வதந்தி அதிக பயிரங்கமாய்ப் பிறந்தால் அநேகர் எலம் கோறவேண்டுமென்று எண்ணியிருந்தாலும் அவ்வித வதந்தியைக் கேட்டமாத்திரத்தில் வீணான சிரமம் எடுத்து எலத்தைக்கோற அவசியமில்லையென்று எலத்திற்குச் செல்லாமலே இருந்துவிட நேரிடும். அவ்விதமாகவே இந்தக் கேசில் நடந்திருக்கிறது. வாதியின் வக்கில் மட்டும் ஆஜராகி எலம் கோரியிருக்கிறார். அதையிட்டு எதிரிக்கும் மைனர் மனுதார்களுக்கும் அதிக நஷ்டம் உண்டாயிருக்கக்கூடும். எலத்தை நிறுத்தும்படி உத்தரவளித்ததைக் கவனியாமல் சப்கோர்ட்டார் நடந்தது அதிகார வரம்பில்லாமல் செய்த நடவடிக்கையாகும். ஆகவே இரண்டு அப்பீல்களும் அனுகூலமாகவேண்டிய தவசியமாகும். எலம் ஒழுங்கீனமாகவும் அதினால் அப்பீல் மனுதார்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதும் நம்பத்தக்கது. எலம் சட்ட விரோதமென்றும் சொல்லப்படவேண்டும். சப்கோர்ட்டார் வக்கில் அனுப்பிய தந்தியின் உண்மையை அறியும்பொருட்டு எலத்தை நிறுத்திவைக்காதது யுக்திக்குறைவாய் நடந்ததாகவே சொல்லவேண்டும். (1911) கல்கத்தா வாரக் குறிப்புகளின் 1031-ஐப் பார்க்கவும். 15 கல்கத்தா லா ஜர்னல் 335-இல் டி-மு கோர்ட்டார், மத்தியகால வரும்படியை நிர்ணயிக்கும்பொருட்டு நடத்தின நடவடிக்கையை ஹைகோர்ட்டார் நிறுத்திவைக்கும்படி உத்தரவளித்த மேல் அவ்விஷயத்தைப்பற்றி கக்ஷிக்காரன் தன் ஹைகோர்ட் வக்கிலிடமிருந்து வந்த கடிதத்தை ஆதாரமாய்க் கொண்டு கொடுத்த பிரமாணப் பத்திரிகையின் மேல் நடவடிக்கையை நிறுத்தாதகாரணத்தால் ஹைகோர்ட்டார் டி-மு கோர்ட்டாரின் நடத்தையைப்பற்றி அதிக வெறுப்பாய் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஹைகோர்ட்டார் அதிகாரத்தை நிந்தனைசெய்த பாவனையாகிறதென்றும் அவ்வித நடத்தையுள்ள முனிசீப்பைக் கண்டிக்கத்தக்கபடி ஹைகோர்ட்டாருடைய அதிகாரக்கையானது போதுமான நீளமுடையதென்று விளம்பியிருக்கிறார்கள். ஷை டி-மு கோர்ட்டாருடைய நடவடிக்கை முற்றிலும் அதிகார வரம்பில்லாமல் செய்யப்பட்டதாக ரத்து செய்யப்பட்டது. (1896) 1-வாரக்குறிப்பின் 229-இல் சொல்லியிருக்கிறபடி மேல்கோர்ட்டார் எலத்தை மறியல்செய்த தகவல் டிக்கிரீதாருக்காவது எலத்தை நடத்தும் கோர்ட்டாருக்காவது தெரியவராத பட்சத்தில் எலம் சட்ட விரோதமென்று சொல்ல நியாயமாகாது. எலத்தை நடத்தும்படி ஒரு உத்தரவு கோர்ட் ரிகார்ட்டில் ஏற்பட்டிருக்க அதை அனுசரித்து நடந்த எலம்சட்ட விரோதமென்று சொல்லத்தகாது. ஆனால் டிக்கிரீதாருக்காவது எலத்தை நடத்தும் கோர்ட் ஆபீஸருக்காவது மறியல் உத்தரவு பிறந்ததாக தகவல் தெரியப்படுத்தப்பட்டாலும அல்லது சட்டத்திற்கு ஒப்பத்தக்க நடத்தைகளால் எலம் நிறுத்தப்பட வேண்டுமென்று தகவல் தெரிவிக்கப்பட்டாலும் சரி [அதாவது எதிரி தொகையைக் கட்டிவிட்டால் எலம் நிற்கவேண்டியதல்லவா? அது போலொத்த சந்தர்ப்பங்களாலும்] எலம் நிறுத்தப்படவேண்டிய தவசியமாகும். 33 மதராஸ் 74-இன் கேசானது வாதிக்காகச் சொல்லப்பட்டது. அது ஏற்றதல்ல. அந்தக்கேசில் ஹைகோர்ட் மறியல் உத்தரவு கீழ்கோர்ட்டுக்கு எவ்விதத்திலும் தெரியப்படுத்தப் படவில்லை. இந்தக்கேசிலோ வக்கில் வக்கிலுக்குத் தந்தியடித்துக் கோர்ட்டாருக்குத் தகவல் எட்டியிருக்கிறது. ஆகவே

அந்த 33 மதராஸ் கேஸை வாதிக்கு ஆதாரமாகச் சொல்லக்கூடாது. 33 கல்கத்தா 927-இல் மறியல் உத்தரவு பிறந்த க்ஷணமே அந்த உத்தரவு நமோதுக்கு வந்ததாக பாவிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. உத்தரவு பிறந்தபின் தபாலாபீஸாருடைய தயவை எதிர்பார்த்து உத்தரவுக்கு உயிர் உண்டாக்குவது உசிதமல்லவென்று ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வுட்ராவ் துரையவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். உத்தரவு பிறந்த உடன் நமோதுக்கு வரும்படி சட்டமிருந்தால் சவுகரியக் குறைவில்லாமலிருக்கும். இல்லாவிடில் கீழ்கோர்ட்டுக்குத் தெரியப்படுத்தும் விஷயத்தில் அநேகவிதமான அசந்தர்ப்பங்கள் நேரிடக் கூடியதால் நிச்சயமாய் எக்காலத்தில் தெரிவிக்கப்படுமென்று சொல்ல முடியாது. நிச்சியமான முறை ஒன்றே, அதாவது ஹைகோர்ட்டார், அதாவது மேல்கோர்ட்டார் மறியல் உத்தரவு பிறப்பித்தால் அந்த க்ஷணமே அதற்குப்பின்னுள்ள நடவடிக்கைககள் யாவற்றும் நின்றதாக (பயனற்றதாக) பாவிக்கப்படவேண்டும். ஆகவே மேற்கூறிய காரணங்களைச் சொல்லி இரண்டு அப்பீல்களையும அனுகூலப்படுத்தி ஜூலை 20-இலும் 21-இலும் போடப்பட்ட ஏலம் ரத்தாக வேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஹானரபில் மிஸ்டர். ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய தீர்மானம் ஸகாயமாச்சுது. ஏலத்தை ரத்துசெய்ததில் இருவரும் ஒரே அபிப்பிராயப்பட்டார்கள்.

———:O:———

## பிரிவி கௌன்ஸில் கேஸ்.

### கல்கத்தா ஹைகோர்ட்டிலிருந்து செய்யப்பட்ட அப்பீல் தீர்மானம்

பார்வதி தாஸி Vs ராஜா வைகுந்தநாத் டியோதி
3 டிசம்பர் 1913.

தாயபாக தர்மசாஸ்திரத்தை அனுசரித்துவருகிற ஹிந்துக் குடும்பத் தலைவனாகிய ரகுநாத்தே என்றவருக்கு ரூப்சரன், ஸோனடான், ப்ரியமானந்தா என்ற மூன்று புத்திரர்களிருந்து மூத்த குமாரனாகிய ரூப்சரன் காலஞ்சென்றபிறகு ஷெ யவருடைய புத்திரியாகிய பார்வதிதாஸி என்ற வாதி கட்டாக் சப்கோர்ட்டில் தன் பிதாவினுடைய ஸ்வயார்ஜிதத்தைக் கொண்டு பிராதின் (a) ஷெடியூலில் கண்ட சொத்துக்கள் வாங்கப்பட்டதாகவும் அவைகளில் தன் தாயாரும் காலஞ்சென்றமையால் தனக்கு ஸ்வதந்தர பாத்தியதை உண்டென்றும் தீர்மானிக்கும்படியாகவும் தன் தகப்பனாகிய ரூப்சரன் என்பவர் தன் பாட்டனுக்குப் பிறகு இறந்தமையால் பாட்டனுடைய சொத்துக்களில் மூன்றில் ஒரு பங்கு தன் தகப்பனுக்கு பாத்தியப்பட்டு அந்த பாகமும் தனக்கு ஏற்பட வேண்டுமென்றும் தீர்மானமடையவேண்டுமென்று டிக்லேரேஷன் தாவா செய்தாள். சப்கோர்ட்டாரும் அப்பீலில் கல்கத்தா ஹைகோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாய் தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனுடைய ஸ்வயார்ஜித சம்பாத்தியத்தைக் கொண்டு வாங்கப்பட்டதல்லவென்றும் வாதியின் பாட்டனுக்கு முந்தியே வாதியின் தகப்பன் காலஞ்சென்றதாகவும் ருஜுவாகிறதாகச் சொல்லி வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்தார்கள். அதன்மேல் வாதி பிரிவி கௌன்ஸிலில் அப்பீல் செய்து அங்கும் தோல்வி அடைந்தாள். பிரிவி கௌன்ஸில் தீர்ப்பின் சுருக்கமாவது:—

சப்கோர்ட்டாரும் கல்கத்தா ஹைகோர்ட்டாரும் ஒற்றுமையாக வாதி தன்னுடைய பாத்தியதை ஸ்தாபிக்கத்தக்க ருஜு அம்சம் விடவில்லையென்று அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். தன் தகப்பனுடைய சொந்த சம்பாத்தியத்திலிருந்து தாவா சொத்துக்கள் வாங்கப்பட்டதாக வாதி ருஜுப்படுத்தவில்லையென்றும் பாட்டனுக்கு முந்தியே வாதியின் தகப்பன் காலஞ்சென்றுவிட்டதாக ஏற்படுகிறதென்றும் சொல்லுகிறார்கள். ருஜுபாயிண்டு விஷயமாய் இரண்டு கீழ்கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயப்படும் விஷயத்தில் பிரிவிகௌன்ஸிலார் அவ்வித கேஸில் பிரவேசித்து அந்த அம்சத்திற்கு மாறுன அபிப்பிராயம் கொடுக்கத் தலையிடுவது வழக்கமில்லை. வாதிக்காக கீழ்கோர்ட்டார் தஸ்தவேஜுகளின் கருத்தைச்சரியானபடி கவனித்து பைசல் செய்யவில்லையென்று வாதம் செய்கிறார். அதாவது வாதியின் தகப்பன் பேருக்கு தாவா விக்கிற



ய தஸ்தவேஜு எழுதப்பட்டிருக்கிறபடியால் எதிரிகள் ஆக்ஷேபனையை திருப்திகரமாய் ருஜுப்படுத்தினுலொழிய அந்த விக்கிரயம் வாதியின் தகப்பனுடைய ஸ்வயார்ஜிதத்தைக் கொண்டே ஏற்பட்டதாக அனுமானிக்கவேண்டும் என்று வாதிக்கப்பட்டது. (1843) 3-மூர் இந்தியன் அப்பீல் 229-இன் 240-இலும், (1854) 6 மூர் இந்தியன் அப்பீல் 53-இலும் சொல்லியிருக்கிறபடி ஒரு ஹிந்துக் குடும்பத்தைச்சேர்ந்த தலைவனல்லாத ஒருவருடைய பெயருக்கு யாதொரு சொத்து விக்கிரயம் ஏற்பட்டிருந்தால் அதைஸ்வயார்ஜ்ஜித சொத்தா அல்லவா என்று தீர்மானிப்பதற்கு முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயமாவது விக்கிரயத் தொகையை எந்த பண்டிலிருந்து செலுத்தப்பட்டதென்பதுதான். குடும்பப்பொதுப்பணத்தைக் கொண்டு வாங்கப்பட்டதா அல்லது ஷெ யாருடைய சொந்தமான சம்பாத்தியத்திலிருந்து வாங்கப்பட்டதா என்று தீர்மானித்து அபிப்பிராயங் கொடுக்கவேண்டும். இந்தக்கேஸில் இரண்டு கீழ்கோர்ட்டாரும் வாதியின் தகப்பனுக்குப் பிரத்தியேகமான பண்டு கிடையாதென்றும் தாவா சொத்துக்கள் அவருடைய சொந்த தனத்தைக்கொண்டு வாங்கப்படவில்லையென்றும் ருஜுபாகத்தைக் கவனித்து அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். வாதி சொல்லும்விதமான ருஜு அம்சமில்லாதிருக்க வாதியின் தகப்பனுடைய ஸ்வயார்ஜித சொத்தென்று கிறய தஸ்தவேஜைப் பார்த்தமாத்திரத்தில் அனுமானிக்கத் தக்கதாகாது. தகப்பன் தன் மகன் பேருக்கு சொத்தை விக்கிறயம் செய்து கொண்டதாகவே தீர்மானிக்கவேண்டும். வாதியின் அப்பீல் தள்ளுபடியாகவேண்டியதவசியமாகும். ஆகவே சீமை அப்பீல் செலவுடன் டிஸ்மிஸ் ஆச்சுது.

———:O:———

(ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)

### C. R. P. 1062 of 1912–11 செப்டெம்பர் 1913

எம். ஏ. வாயுராவுத்தர்—மனுதார்.

மாயவரம் டி-மு-கோர்ட்டில் நடந்த அசல் நம்பர் ஒன்றில் இருதரப்பாரும் தங்கள் வழக்கின் அம்சத்தைப்பற்றி பஞ்சாய்த்தாருடைய (மத்தியஸ்தருடைய) தீர்மானத்தை ஒப்புக் கொள்வதாய் முச்சலிக்கை எழுதிக் கொடுத்தபிறகு ஒருவர் தனக்கு மத்தியஸ்தம் தேவையில்லையென்று சொல்லிப் பின் வாங்கினதில் அவ்விதமாய் அனுமதி கொடுக்காத டி-மு-கோர்ட்டாரின் உத்தரவின்பேரில் கும்பகோணம் சப்கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்பட்டு அங்கும் அனுமதி கிடைக்காமல் ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்ததில் ஸி. பி. ஸி. 115-வது பிரிவின்படி ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசிக்கத்தக்கவிதமாய் கீழ்கோர்டடார் அதிகாரவரம்பில்லாமல் நடந்ததாக ஏற்படவில்லையென்றும் மனுதார் மத்தியஸ்த விஜாரணையின் பைசலுக்கு ஒப்புக்கொண்டு அதைவிட்டுப் பின் வாங்குவதற்குத் தகுந்த காரணம் சொல்லவில்லையென்று கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப் படுகிறார்களென்றும் (186)12 மோர் இந்தியன் அப்பீல் 112-இன் 130-ம் பக்கத்தில் குறித்திருக்கிறபடி மத்தியஸ்தத்திற்கு உடன்படுவதாய் ஒப்புக்கொள்ளும்முச்சலிக்கைக்கும் மற்றசட்டப்படி ஏற்படும் காண்ட்ராக்ட்களுக்கும் வித்தியாஸமில்லையென்றும் தகுதியான காரணங்களில்லாமல் பின்வாங்கவிடக்கூடாதென்று தீர்மானிக்கவேண்டுமென்றும், (1907) 29 அலகபாத் 13-இலும் அதேவித அபிப்பிராயங் கொடுக்கப்பட்டிருக்கிறதாகவும் சொல்லி ரிவிஷன் மனுவை செலவுடன் தள்ளுபடி செய்தார்கள்.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

திருச்சிறுப்பள்ளி

### C. M. S. A. 38 & C. R. P. 142 of 1912

17 அக்டோபர் 1913.

மகம்மது மீரா ராவுத்தர் Vs காதர்மீரா ராவுத்தர்

கரூர் டி-மு கோர்ட்டில் நிறைவேற்று விண்ணப்பத்தின்பேரில் சொத்தானது ஜப்தியாகி ஏலம் போடப்பட்ட பிறகு ஜப்திநோடீஸ் எதிரிக்கு சரியானபடி ஸர்வாகாத காரணத்தைச்சொல்லி ஷெ ஏலத்தை ரத்து செய்யவேண்டுமென்று எ

திரி டி-மு கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்ததில், ஜப்தி நோட்டீஸ் எதிரிக்கு நேரில் சர்வாகாத போதிலும் ஜப்தியான தகவல் எதிரிக்கு நன்றாய்த்தெரியுமென்றும் நோட்டீஸைப் பெற்றுக்கொள்ளாமல் எதிரி மறைந்துகொண்டதாகவும் அமீனா ஷை நோட்டீஸை எதிரியின் வீட்டுக் கதவில் ஒட்டினது சட்டப்படி போதுமான ஸர்விஸ் என்று அபிப்பிராயப்பட்டு அதன்மேல் நடந்த ஏலம் சட்ட விரோதமல்லவென்று மனுவை தள்ளுபடிசெய்துவிட்டார். எதிரி திருச்சினாப்பள்ளி ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஸி. பி. ஸி. 248-வது பிரிவின்படி ஜப்தி நோட்டீஸ் எதிரியின்பேரில் சரியானபடி சார்வாகாதபடியால் ஏலம் ரத்தாகவேண்டியது நியாயமென்று எதிரிக்கனுகூலமாய் உத்தரவளித்து ஆனால் அப்பீல் செலவை எதிரியே வகித்துக்கொள்ளவேண்டுமென்று உத்தரவளித்தார்கள். ஏலதார் அதன்மேல் ஹைகோர்ட்டில் சில்லரை மனு 2-வது அப்பீல் செய்து ஒருவேளை இத்தகைய உத்தரவுக்கு 2-வது அப்பீல் கிடையாதென்று ஏற்பட்டால் ரிவிஷனில் பிரவேசிக்கும்படியாக ஒரு ரிவிஷன் மனுவையும் தாகல் செய்தார். ஹைகோர்ட்டார் ஜில்லா கோர்ட் அபிப்பிராயம் தப்பென்று சொல்லி டி-மு கோர்ட்டார் உத்தரவைக் காயப்படுத்தினார்கள். ஜப்தி நோட்டீஸ் சரியானபடி ஸர்வாகி டி-மு கோர்ட்டார் ஏலத்தை நடத்தினதாக அபிப்பிராயப்பட்டு ஏலத்தை உறுதிப்படுத்தினார்கள். ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:- ஆர்டர்21-ரூல் 22-இன்படி நோட்டீஸ் ஸர்வாகாதபடி போடப்படும் ஏலம் முக்கியமான ஒழுங்கீனமென்பதில் சந்தேகமில்லை. 25 பம்பாய் 337-ஐப் பார்க்கவும். பழைய கோடின்படி அந்த விஷயம் முக்கிய ஒழுங்கீனமானபோதிலும் புதுகோடில் 22-வது ரூலில் (2)-வது உட்பிரிவில் புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிற அம்சத்தில் கோர்ட்டாருக்கு யுக்தமாகத் தோற்றுமிடத்து, நோட்டீஸ் கொடுக்கவேண்டிய சந்தர்ப்பங்களில் நிறைவேற்றுவதற்கு உத்தரவு கொடுக்குமுன் நோட்டீஸ் கொடுப்பதில் அதிகமான கால தாமதம் அல்லது நீதிக்குறைவு ஏற்படும் பட்சத்தில் நோட்டீஸ் அனுப்பாமலே ஜப்தி, ஏலம், வாரண்டு முதலிய கட்டளைகளைப் பிறப்பிக்கலாமென்று கண்டிருக்கிறது. ஆகவே புதுகோடில் நோட்டீஸ் சர்வாகாத விஷயம் முக்கிய ஒழுங்கீனமா என்ற வாதம் யோஜிக்கத் தகுந்ததுதான்.

தவிர நோட்டீஸ் நேரில் ஸார்வ் செய்யக்கூடாதபட்சத்தில் கோர்ட்டார் கதவிலொட்டப்பட்ட விஷயத்தைப்பற்றி, எதிரி நோட்டீஸை வாங்க மறுத்த விஷயத்தைப்பற்றி, எதிரி நோட்டீஸை வாங்காமல் மறைந்துகொண்டிருப்பதைப்பற்றி, அல்லது எதிரி காணாமலிருப்பதைப்பற்றிக் கண்டிருக்கும் அமீனாவின் ரிட்டர்னைப் பார்வையிட்டு அமீனாவை பிரமாணத்தின்பேரில் விஜாரணைசெய்து ஸர்விஸ் சரியானதாவென்று ரிகார்டுசெய்து அதற்குறிய காரணங்களையும் எழுதலாம். அவ்விதமான ரிகார்டு செய்யப்படாத பட்சத்தில் நேரில் சார்வாகாத நோட்டீஸ்களெல்லாம் சரியானவைகளல்லவென்று ஆக்ஷேபிக்கத்தகாது. 10 பம்பாய் 203-இல் கோர்ட்டார் யாதொரு நடவடிக்கையை நடத்தினால் அதற்குரிய முறைகள் சரியாய் அனுசரிக்கப்பட்டிருப்பதாகவே யூகிக்கவேண்டுமென்று அபிப்பிராயங் கொடுக்கப்பட்டிருக்கிறது. கதவில் நோட்டீஸ் ஒட்டப்பட்ட விஷயம் போதுமான சர்விஸ் என்று எழுத்து மூலமாய் கோர்டார் ரிகார்டு செய்யாதபோதிலும் கோர்ட்டார் மேல்நடவடிக்கை நடத்தி ஏலத்துக்கு உத்தரவளித்தபடியால் கதவிலொட்டின ஸர்விஸ் சரியானதென்று எண்ணினார்களென்றே தீர்மானிக்கவேண்டும். எதிரி மறைந்துகொண்டிருப்பதால் நோட்டீஸ் கதவிலொட்டப்பட்டதென்று அமீனா ரிட்டர்ன் செய்திருக்கிறார். அப்படியிருக்க டி-மு கோர்ட்டார் ஸர்விஸ் போதுமானதென்று அதாவது ஜப்தியின் தகவல் எதிரிக்கு நன்றாய் தெரியுமென்று தீர்மானித்து ஏல நடவடிக்கை நடத்தியிருக்கிறார்களென்று நினைக்கவேண்டும். ஆகவே எதிரியின் அப்பீல் தள்ளுபடியாச்சுது. கீழ்கோர்ட்டில் எதிரிக்குச் செலவு தொகையை அளிக்காததைப்பற்றி எதிரி செய்த க்ராஸ்அப்பீலும் தள்ளுபடியாச்சுது.

2-வது அப்பீல் முறை எதிரிக்கு ஏற்பட்டிருக்க ரிவிஷன் மனுவை ஏற்றுக்கொள்ளத் தக்கதல்லவென்று தீர்மானிக்கப்பட்ட ரிவிஷன் மனுவும் தள்ளுபடியாச்சுது.



# ஹைகோர்ட் தீர்ப்புகள்.

:o:

(ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

**C. R. P. 677 to 679 of 1911**

**21 அக்டோபர் 1913.**

*மனியப்ப அண்ணாவி Vs ஹரி ஹரய்யர்.*

திருமங்கலம் டி-மு கோர்ட்டார் அளித்த டிக்கிரியின்பேரில் தாவா சொத்து நிறைவேற்றும மனுவில் ஏலத்துக்குக் கொண்டுவரப்பட்டு ஏலம் முடிந்தவுடன் ஷை சொத்தில் பாத்தியதையுடைய மனுதார் ஸி. பி. ஸி. ஆர்டர் ,21-ரூல் 89-இல் விதிக்கப்பட்டிருக்கிற பிரகாரம் கிரயதாருக்குச் செலுத்தவேண்டிய 100-க்கு 5-விகித அபராதத்தையும் டிக்கிரி பாக்கிக்காரனுக்குச் சேரவேண்டிய தொகை பூராவையும் கோர்ட்டில் டிபாஸிட் கட்டிவிட்டு ஏலத்தை ரத்து செய்யவேண்டுமென்று டி-மு கோர்ட்டில் வாய்மொழியாய் விண்ணப்பம் செய்துகொண்டு அதற்கு ஆதாரமாகத் தான் தொகை கட்டிய விஷயத்தைப்பற்றி ஒரு பிரமாணப் பத்திரிகையும் தாகல் செய்தார். ஏலத்தை ரத்து செய்யவேண்டுமென்ற எழுத்து மூலமான மனு யாதொன்றும் தாகல் செய்யப்படாத காரணத்தால் டி-மு கோர்ட்டார் ஏலத்தை ரத்து செய்யமறுத்துவிட்டார்கள். அதன்பேரில் மனுதார் மதுரை ஜில்லாகோர்ட்டில் அப்பீல்செய்ததில் அங்கும் ஜயமடையாமல் ஹைகோர்ட்டில் ஜில்லா கோர்ட் உத்தரவின்பேரிலும் டி-மு கோர்ட்டாருடைய உத்தரவின்பேரிலும் ரிவிஷன் விண்ணப்பம் தாகல்செய்து அங்கு (1998) 25 கல்கத்தா 216-யும், (1884) 7 பம்பாய் 263-யும் எடுத்துக்காட்டி வாதம் செய்தார். ஹைகோர்ட்டார் மேற்கூறிய அதாரிடிகள் மனுதாரின் வாதத்திற்குத் தகுந்தவைகளென்று சொல்லி 90-வது ரூல்படி செய்யும் விண்ணப்பம் எழுத்து மூலமாயும் அதில் மனுதார் அல்லது அவருடைய வக்கில் கையொப்பம் செய்துமிருக்கவேண்டுமென்று யாதொரு அதாரிடியும் எதிரிக்காகக் காண்பிக்கப்படவில்லையென்றும்எழுத்து மூலமாய் யாதொரு அவசியமாக ஏற்பட்டாலும் மனுதாருடைய பிரமாணப் பத்திரிகையே போதுமான ஆதாரமாகிறதென்றும்அப்படியிருக்கடி-மு கோர்ட்டார் நீதிக்கு விரோதமாக, யாதொரு முகாந்தரமும் முறையுமில்லாதபடி, ஏலத்தை ரத்துசெய்ய மறுத்தது முற்றிலும் விசனிக்கத்தக்க நடத்தையாக யிருக்கிறதென்றும்சொல்லிடி-மு கோர்ட்டாருடைய உத்தரவையும் ஜில்லா கோர்ட் அப்பீல் பைசலை ரத்தாக்கி மனுதாருடைய விண்ணப்பத்தை சட்டப்படி பைசல் செய்யவேண்டுமென்று டி-மு கோர்ட்டாருக்கு உத்தரவளித்தார்கள்.

:o:

(மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட்வீல்ட்)

தஞ்சாவூர் ஜில்லா.

**C.R. P. Nos. 50 & 51 of 1912—**

18 நவம்பர் 1913

*தஞ்சை டிஸ்டிரிக்ட் போர்ட் Vs மு. மா. ராமலிங்கதேவர்*

தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்ட்டாரைச்சேர்ந்த நிலங்களை அனுபவிக்கிற பிரதிவாதிகள் மீது தஞ்சாவூர் சப்கோர்ட் ஸ்மால்காஸ்தரப்பில்டிஸ்டிரிக்ட்போர்ட்டார் வாதியாகத்தாங்கள் கவர்மெண்டாருக்கு ஷை நிலங்கள் விஷயமாக புராதனமாய் விதிக்கப்பட்டுசெலுத்திய தண்ணீர்த்தீர்வையைத் திரும்பியடையும் பொருட்டு தாவாசெய்தார். சப்கோர்டார் 33மதராஸ் 15இல் தீர்மானிக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயத்தைஅனுசரித்துபிரதிவாதிகள் அநேகவருஷங்களாய்யாதொருதீர்வையும்செலுத்தாமல் ஸர்கார் தண்ணீரை உபயோகப்படுத்தி வருவதாயும் புராதனமாககவர்ன்மெண்டாருக்கு டிஸ்டிரிக்ட் போர்ட்டார் தண்ணீர்த்தீர்வைசெலுத்துவதற்குபிரதிவாதிகள்சம்மதிகொடுக்கவில்லையென்றும்பிரதிவாதிகளுடைய வேண்டுகோளின்படி வாதிஷை தீர்வையை செலுத்தியதாக ஏற்படவில்லையென்றும் ஆகையால் வாதி ஷை தீர்வையை செலுத்தியதால் பிரதிவாதிகள் யாதொரு நன்மையை அடைந்ததாகஇந்தியன்காண்டிராக்ட் ஆக்ட் 70-வது பிரிவின் அம்சங்களுக்குத்தக்கபடி வாதிகளின் பேரில்பரிகாரம்தேட நியாயமில்லையென்றும் தீர்மானித்து வாதியின் பிராதைத்தள்ளுபடி செய்து விட்டார்கள். அதன் மேல் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனுதாகல் செய்ததில் சப்கோர்ட்டார் தீர்மானம் காயமாகி ரிவிஷன் மனுவானது செலவுடன் தள்ளுபடியாச்சுது.

ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:— சப்கோர்ட்டார் 33 மதராஸ் 15 இன்

தீர்மானத்தை அனுசரித்து பிராதை தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதற்கு வாதி 24 மதராஸ் லாஜர்னல் 433 இல் குறிதிருக்கிற பிந்திய ஓர் மதராஸ்தீர்மானத்தை எடுத்துக் காட்டி ஷை பிந்திய தீர்மானம் வாதிக்கு அனுகூலமாயிருப்பதாய் வாதம செய்தார். மேற்கூறிய இரண்டு கேசுகளில் எது நியாயமான அபிப்பிராய மென்று தீர்மானிக்கத்தேவையில்லை. அவ்விரண்டு கேசுகளிலும் வாதி துகையை செலுத்தியதால் பிரதிவாதி யாதொரு சொத்தைக்கைவிடாமல் அனுபவிக்க ஏதுகாரமாச்சுது. வாதிதுகை செலுத்தியிராதபட்சத்தில் பிரதிவாதிகள் சொத்தை இழந்துநஷ்டமடைந்திருக்கவேண்டும். ஆகவேபிந்தியஒருநன்மையைக்கருதி, பிரதிவாதிகள்வாதியால் தொகை செலுத்தப்பட்ட விஷயத்தை அங்கீகரித்தாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அது விஷயமாய் வாதிபிரதிவாதியின்பேரில் பரிகாரம் தேடலாமென்றவிஷயம் மேற்கூறிய கேசுகளில் ஒன்றுக்கொன்றுமாறாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கேசிலோ வாதி கவர்மெண்டாருக்குத்தீர்வை செலுத்திவிட்டார்கள். அப்படி செலுத்தாதபட்சத்தில் வாதிகளுக்கு தாவாநிலங்களிலுள்ள ஆதீன பாத்தியதைமட்டும் ஏலம் போடப்படுமேயொழிய பிரதிவாதிகளுக்கு யாதொரு தீமையும் நேரிடத்தகாது. 34 மதராஸ் 520 க்குச் சரியான (1911) 1 மதராஸ் வாரக்குறிப்புகளின் 257-ஐப் பார்க்கவும். தண்ணீரை உபயோகித்ததால் பிரதிவாதிகள் நன்மையடைகிறார்கள் என்பது வாஸ்தவம தான். வாதிகள் அடையவேண்டிய நன்மையை பிரதிவாதிகள் அடைகிறார்களென்று ஏற்படுகிறது. அவ்விதமன வியவகாரம் பேசப்படலாம். 30மதராஸ் 277இல் ஷை தண்ணீரைபிரதிவாதிகளாகிய ரயட்டுகள் உபயோகப்படுத்தினபோதிலும் சட்டமுறையில் நிலச்சுவான்தாராகியவாதி உபயோகிக்கிறதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேசின் பிராதில் பிரதிவாதிகள் யாதொரு அதிகாரமும் இல்லாதபடி சர்க்கார்த் தண்ணீரை உபயோகப்படுத்தினதாகவும் அதற்காக கவர்ன்மெண்டார் தங்களிடம் தீர்வையை வசூலித்து விட்டதாகவும் வாதி கண்டிருக்கிறார். ஆகவேஇந்தக்கேசில்வாதிக்கு ஏஜண்டாக பிரதிவாதி தண்ணீரை உபயோகப்படுத்தினதாகவும் சம்மதத்தின் பேரில் உபயோகப்படுத்தினதாகவும் மதிக்கநியாயமில்லை. ஆவிறபிரதிவாதிகள் தாவாநிலங்களுக்குத்தீர்வை செலுத்துகிறவர்களில்லை. மாகுலுக்குத்தக்கபடி விகிதம் வாதி அடையலாக்குண்டு. ஆகவேபிரதிவாதி அதிகமான தண்ணீரை உபயோகப்படுத்தினுல் அதிகமானமாகுல் விளையக்கூடும். அதில்வாதியும் பங்கடையநியாயமுண்டு. இந்தவிஷயத்தையோஜித்துப் பார்க்குமிடத்து பிரதிவாதியின்நன்மைக்காக(காண்ட்ராக்ட் ஆக்ட் 70-வது பிரிவின்படி) வாதி தீர்வையைசெலுத்தியதாகச் சொல்லநியாயமில்லை. ஆகவே சப் கோர்ட் தீர்மானத்தைமாற்றக் காரணமில்லையென்று ரிவிஷன் மனுவை செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

———:o:———

(Messrs ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட்)

தஞ்சாவூர் ஜில்லா.

## A. S. No. 161 of 1910–17 நவம்பர் 1913.

புங்கசீதை அம்மாள் Vs புங்க நாச்சியாரம்மாள்.

மிதாக்ஷர தர்ம சாஸ்திரத்தை அனுசரித்து வரும்ஸௌராஷ்டிர வம்சத்தைச்சேர்ந்தமூலபுருஷன் ஒருவனுக்கு மூன்று தாரங்களிருந்து ஒரு தாரத்தால் ஒரு புத்திரன் பிறந்து அந்த புத்திரனும் அவனுடைய தாயாரும் காலஞ்சென்றுவிடவே மூலபுருஷனுடைய மற்ற இரண்டு தாரங்களில் புங்க நாச்சியாரம்மாள் என்ற ஒருவளுக்கு ஷை மூலபுருஷனுடைய சகோதரரின் புத்திரர்கள், மூலபுருஷனுடைய புத்திரன் இறந்த பிறகு வாரஸ் பாத்தியதையைக் கொண்டாடி ஷையாளுடைய சொத்துக்களை பிரதிப்பிரயோஜனத்திற்காக விக்கிறயம் செய்துவிட்டார்கள். மூலபுருஷனுடையமற்றொருதாரமாகியசீதையம்மாள் ஷை சொத்தில் தனக்கு வார்ஸ் பாத்தியதையுண்டென்று செல்லிஷை விக்கிறயத்தை ஆக்ஷேபித்து ஷை நாச்சியாரம்மாளை பிரதிவாதியாகச் சேர்த்து சொத்தில் பங்கு விகிதத்தை அடையும் பொருட்டு கும்பகோணம் சப்கோர்ட்டில் 1909-ம் வருஷத்திய 50-ம் நம்பரில் அசல் வியாஜ்ஜியம் தொடுத்தாள். சப்கோர்ட்டார் வாதிக்கு வார்ஸ் பாத்தியதை கிடையாதென்று தீர்மானித்து பிராதை தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதன் மேல் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் அளித்த தீர்ப்பின் அம்சங்களாவன:—



வாதி ஒரே கோத்திரத்தைச் சேர்ந்த ஸபிண்டியாக யிருக்கிறதாகவும் அந்த நிலமையால் வார்ஸ் பாத்தியதையுடையவளாகவேண்டுமென்றும் அவள் ஸகோத்திரமான ஸபிண்டியல்லவென்று ஏற்பட்டால் மிதாக்ஷரத்தில் உபயோகப்படுத்தியிருக்கிற கருத்தின்படி வாதி ஸபிண்டியாக பாவிக்கப்பட்டு அந்த நிலமையாலாவது பந்துவாக சர்க்காருக்குமுன் வார்ஸ்பாத்தியதையை அடைய லாயக்குள்ளவளென்றும ஆனரபில் மிஸ்டர் டி. வி. சேஷகிரி அய்யரவர்கள் வாதம் செய்தார்கள். தகப்பன்மறுதாரமாகிய வாதியைத் தாய்க்குச்சமானமாக பாவித்து வாதிக்குத்தாயின் பாத்தியதை உண்டென்று வாதம் செய்யப்படவில்லை. ஏனெனில் பல ஹைகோர்ட் தீர்மானங்கள் அந்தவாதத்திற்கு விரோதமாகவே ஏற்பட்டிருக்கின்றன.

முக்கியமாய் வாதி ஸகோத்திர ஸபிண்டியென்று சொல்லப்பட்டு அந்த ஸ்தானத்தையிட்டு வார்ஸ் பாத்தியதை அடையவேண்டுமென்று வாதிக்கப்பட்டது. வாதி அதாவது தகப்பனுடைய மறுதாரம் கோததிரஜமான ஸபிண்டியாகமாட்டாளென்று மதராஸ் ஹைகோர்ட் புல்பெஞ்சு தீர்மானத்தில் அதாவது 8 மதராஸ் 107-இல் சொல்லப்பட்டிருக்கிறது. [ஸபிண்டர்களென்றால் மிதாக்ஷரத்தில் ரத்த சம்மந்தமுடைய பந்துக்களென்று சொல்லப்படுகிறது. கோத்தரஜாளென்றால் ஒருவனுடைய கோத்திரத்தில் பிறந்தவர்களென்பதாகும். வாதி காலஞ்சென்ற கடைசி ஆண்வார்ஸின்ஸகோத்திரியாகயிருக்க நியாயமில்லை. வாதி பிறந்த கோத்திரம்வேறுமூலபுருஷனுடைய கோத்திரம் வேறு. தாயார் தகப்பனுடையகோத்திரத்தில் பிறக்கக்கூடாவிட்டாலும் அவள் வார்ஸ் பாத்தியதையுடையவளாகிறாள். அதுபோலவே ஒருவனுடைய தாரமும் புத்திரியும் லாயக்குள்ளவர்களாகிறார்கள். கடைசி ஆண் வார்ஸுக்குத் தாயாரில்லை. தகப்பனுமில்லை புத்திரனுமில்லை, புத்திரியுமில்லை; தகப்பனுடைய மறுதாரங்களும் பாட்டனுருடைய பேரப்பிள்ளைகளும் தான் இனத்தார்களாகிறார்கள். அவர்களில் முன் சொல்லிய ஆண்வார்ஸுகள் தாவா சொத்துக்களை பிரதிவாதிக்கு விக்கிறயம் செய்திருக்கிறார்கள். ] மேற்கூறிய புல்பெஞ்சு தீர்மானத்தைப்பற்றி வாதிக்காக சமாதானம் சொல்லப்பட்டது. அதாவது அந்த தீர்மானத்தில் தகப்பனுடைய மறுதாரத்திற்கு வார்ஸ் பாத்தியதை, தகப்பனுடைய சகோதர்களுக்குப்பிறகு தான் ஏற்படுமென்று பாவிக்கப்பட்டதாக வாதி வாதில் சொல்லுகிறார். அவ்வித அபிப்பிராயம் அந்தத் தீர்ப்பில் கொடுக்கப்பட்டதாய்த் தோன்றவில்லை. தகப்பனுடைய மறுதாரத்திற்கு வார்ஸ் பாத்தியதையே கிடையாதென்று ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யரவர்கள் பரிஷ்காரமாய் விளம்பியிருக்கிறார்கள். அவளுக்கு வார்ஸ் பாத்தியதை உண்டானால் அவள் தகப்பனுடைய சகோதரர்களுக்குப்பின் தான் வரவேண்டுமென்று அபிப்பிராயங் கொடுத்திருக்கிறது வாஸ்தவமே. ஆண் வார்ஸுக்குப் பிறகு பெண் வார்ஸ் வரவேண்டுமென்ற கருத்துடன் ஷை அபிப்பிராயங்கொடுத்ததாகவும் ஏற்படவில்லை. மிதாக்ஷரத்தில் பெண்ணினங்களுக்கு வார்ஸ் ஸ்தானம் ஏற்பட்டிருந்தாலொழிய மற்ற பெண்ணினங்களுக்கு வார்ஸ பாத்தியதை கிடையவே கிடையாதென்ற கருத்துடன் மேற்கூறிய அபிப்பிராயங்கொடுத்திருக்கிறார்களென்று சொல்லவேண்டும். வாதி கோத்திரஜமான ஸபிண்டியென்று ஸ்தாபிக்கவில்லையென்று தீர்மானித்து அவளை வார்ஸ்பாத்தியதையிலிருந்து முற்றிலும் விலக்கி யிருக்கிறார்களேயொழிய அவளை ஸபிண்டியென்று சொல்லி, அப்படியானாலும் தகப்பனுடைய சகோதரர்களுக்குப்பின்தான் வார்ஸ் பாத்தியதையடையவேண்டுமென்று தீர்மானிக்கப்படவில்லை. ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யரவர்கள் வாதியை கோத்திரஜமான ஸபிண்டி என்று அழைப்பதில் சந்தேகப்படாதபோதிலும் நமது இராஜதானியில் மிதாக்ஷரத்தின்படி ஸபிண்டியான ஸ்திரீகளுக்கு வார்ஸ் பாத்தியதை அமைக்கப்படவேயில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஜாதியாருடைய ஸம்பிரதாயத்தில் வாதியைப்போலொத்தவர்களுக்கு வார்ஸ் பாத்தியதை உண்டானல்

மிதாக்ஷரத்தில் அந்த பாத்தியதை ஏற்பட்டிராதபோதிலும் வாதிக்கு அனுகூலமாகத் தீர்மானிக்கலாமென்றும் ஆனால்முன் தீர்மானங்கள் எவ்விதமாய் ஏற்பட்டிருக்கிறதோ அதைவிட்டு வேறு அபிப்பிராயங் கொள்ளாதவர்களாய் மிஸ்டர் ஜஸ்டிஸ் முத்துசாமி அய்யரவர்கள் தீர்ப்பில் எழுதியிருக்கிறார்கள். ஆகையால் மேற்கூறிய புல்பெஞ்சு தீர்மானத்தை அனுசரிக்கக் கடமைபட்டவர்களாய் வாதி கோத்திரஜமான ஸபிண்டியான நிலமையால் வார்ஸ் பாத்தியதை அடைய லாயக்கில்லை என்று தீர்மானிக்கவேண்டும்.

வாதியை ஒரு பந்துவாய் நிதானித்து வார்ஸ் பாத்தியதைக்கு லாயக்குள்ளவளாய்த் தீர்மானிக்க வேண்டுமென்று இரண்டாவதாக வாதிக்கப்பட்டது. அதற்கு ஆதாரமாக (1875) 8 மதராஸ் ஹைகோர்ட் ரிபோர்ட்களின் 93-ம் பக்கத்தையும் (1889) 16 கல்கத்தா 367-யும் எடுத்துக் காண்பிக்கப்பட்டது. அந்த 8 மதராஸ் கேஸில் ஒரு சொத்து சர்க்காருக்குச் சேருமுன் எட்டிய ஸர்வ பந்துக்களும், ஸபிண்டர்களானாலும் இல்லாவிட்டாலும், பந்து ஸ்தானத்திலிருந்தாலும் இல்லாவிட்டாலும் சகலமான பந்துக்கள் வரிசையும் தீர்ந்தபின் தான் சர்க்காருக்கு சொத்து சேர்ப்பிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தத்தீர்மானத்தின் நியாயமானது 5 மதராஸ் 241 இல் வியாக்கியானிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய 8 மதராஸ் கேஸில் சகோதரியை பந்துவாகபாவித்து அவளுக்கு வார்ஸ்பாத்தியதை அளிக்கப்பட்டிருக்கிறது. அதனால் மிதாக்ஷரத்தில் குறிக்கப்படாத பலவகுப்பினர்கள் வார்ஸ் பாத்தியதை உடையவர்களாயிருப்பதாய்த் தீர்மானித்ததாகச் சொல்லக்கூடாது. வாதிக்காக (1868) 12 மோர்'ஸ இந்தியன் அப்பீல்448 இன்467எடுத்துகாட்டப்பட்டு அதில் தீர்மானித்திருக்கிறபடி பந்துவல்லாத இனத்தாருக்கும் வார்ஸ் பாத்தியதை உண்டென்று வாதிக்கப்பட்டது. அந்தக்கேசைத் தீர்மானித்த ஜட்ஜிமார்கள் வீரமித்ரோதயத்தில் குறித்திருக்கிற ஒரு இறந்தத்தைப்படித்து பார்த்ததில் தாய்மாமனும் மற்றவர்களும் பந்துக்களாய்ச் சொல்லப்படவேண்டுமென்று அர்த்தமேற்படுவதாயும், ஏனெனில் அவர்களைபந்துவென்று சொல்லாவிட்டால் சாஸ்த்திரப்படி தாய்மாமனுடைய புத்திரர்களுக்கு வார்ஸ் பாத்தியதை ஏற்பட அந்த வார்ஸ்களுக்குப்பின் அவர்களுடைய தகப்பன் வர வேண்டியிருப்பதால் அவ்விதமாக தாய்மாமனும் வார்ஸ் பாத்தியதைக்குவந்து சேறுகிறபடியால் அவனையும் பந்துவாகச் சொல்லவேண்டுமென்று ஏற்படுகிறதாக அர்த்தங்கொள்ளவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு மிதாக்ஷரத்தில் பந்து ஸ்தானத்தில் விலக்கப்பட்ட தாய்மாமனுக்கு வீரமித்திரோதயத்தின்படி பந்துக்களுக்குப்பின் வார்ஸ் பாத்தியதை உண்டாகிறதென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்தக்கேசின் தீர்மானத்தில் பந்துக்களல்லாத இனத்தார்களும் வாஸ் பாத்தியதையை அடையத்தகுமென்ற சட்டமுறைகளை அங்கீகரிக்கப்படவேண்டுமென்று சொல்லவில்லை. மிதாக்ஷரத்தில் குறிக்கப்படாத எட்டிய பந்துக்கள் அல்லது மற்ற வகுப்பினர்கள் அல்லாத இனத்தார்களுக்கு சர்க்கார் பாத்தியதையைவிட மேலான பாத்தியதை உண்டாவெனத் தீர்மானிப்பதவசியமில்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். தவிற தகப்பனுடைய தாய்மான் தகப்பனுக்கு பந்துவாயிருப்பதால் அந்தஸ்தானத்தில் பந்துவென்றழைக்கப்பட்டு வார்ஸ் பாத்தியயையடைய லாயக்குண்டென்று தீர்மானித்திருக்கிறார்கள். மேற்கூறிய அபிப்பிராயத்தால் வீரமித்ரோதயத்தை அனுசரித்து பந்துக்களல்லாத இனத்தாரின் வார்ஸ் பாத்தியதையைப்பற்றி யோஜிக்க சித்தமாயிந்தும் அவ்விதமான இனத்தார்களின் வகுப்பினர் புலப்படுவதாய்த் தீர்மானிக்கவில்லை. அதாவது பந்துவென்ற பதத்திற்கு அர்த்தமில்லாத இனத்தார் வார்ஸ்பாத்தியதைக்குறியபடி அகப்படக்கூடியதல்லவென்று ஏற்படுகிறது. தகப்பனின் மறுதாரம் பந்துவாகமாட்டாள். அவளை கோத்திரஜமான ஸபிண்டியாகச் சொல்லலாமேயொழிய வேறுவிதமாய் அழைக்க நியாயமில்லை. அப்படி கோத்திரஜமான ஸபிண்டியாக பாவிக்கப்பட்டும் எந்த இடத்தில் வந்து சேறுகிறாளென்று சொல்லக்கூடயில்லை. எல்லா ஸபிண்டர்களுக்குப்பின்னு, ஸமானோதகர்களுக்குப் பின்னு, அல்லது மற்ற பூமான்களாகிய கோத்திரஜாளுக்கும் பந்துக்களுக்கும் பிந்தியாவென்று



தீர்மானிப்பது கஷ்டமாயிருக்கிறது. (1888) 12 மதராஸ் 193-இன்-199-ம்-பக்கத்தில் பந்துக்களல்லாத இனத்தார்களிருப்பதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தைப்பற்றி விளக்கிக்காட்டிய (1898) 21 மதராஸ் 263-இல் சொல்லப்பட்டிருக்கிறபடி 12 மதராஸ் கேசைத் தீர்மானித்த ஜட்ஜிமார்கள் சகோதிரியின் மகளை பின்னகோத்திர ஸபிண்டியல்லவென்று சொல்லியிருக்க அதே ஜட்ஜியவர்கள், 18 மதராஸ் 168-இல் சகோதரியை பின்ன கோத்திரஸபிண்டியாகச்சொல்லி அவளுக்கு வார்ஸ் பாத்தியதை உண்டென்று தீர்மானித்திருக்கிர்கள். ஆகையால் பிந்திய தீர்மானங்களில் விவரித்திருக்கிறபடி 12 மதராஸ் கேசின் அம்சங்களால் பந்துக்கள் அல்லது கோத்திரஜமான ஸபிண்டாளைத்தவிற வேறு இனத்தார்களிருப்பதாக ஏற்படவில்லை. ஆகவே மேற்கூறிய 12 மோர்ஸ் இந்தியன் அப்பீல் 448-ம் மற்ற மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்களும் மிதாக்ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிற பந்து வரிசையைத் தவிற வேறு சிலவகுப்பினரும் பின்ன கோத்திர ஸபிண்டர்களாக மதிக்கப்பட்டு பந்து என்ற ஸ்தானத்தில் வார்ஸ் பாத்தியதை அடையலாமென்று ஏற்படுகிறதேயொழிய பந்துக்கள் இல்லாதபட்சத்தில் யாதொரு அந்நியன் வார்ஸ் பாத்தியதையை அடையலாமென்று ஏற்படவில்லை. ஆபஸ்தபத்தில் ஆண் வார்ஸ் இல்லாத பட்சத்தில் அடுத்த இனத்தான் அடையவேண்டுமென்றும் அப்படியுமில்லாத பட்சத்தில் அந்நியர்கள் அடையலாமென்றும்சொல்லியிருக்கிறது. அந்த நியாயமானது சமீபமான ஸபிண்டரைப் பற்றிச் சொன்னதாக ஏற்படுகிறது. ஸபிண்டரைப்பற்றி அந்த அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிடினும் சரியே மிதாக்ஷரத்தில் வார்ஸ் வரிசையில் குறிக்கப்படாதவர்களை பற்றி யோஜனை செய்து ஆபஸ்தபத்தின் வாக்கியத்தை என் யூகிக்கவேண்டும். பந்துக்களல்லாதவர்களை இனத்தாராகக் கொண்டுவந்து வார்ஸ் பாத்தியதைக்கு லாயக்குள்ளவர்களாக ஏற்படுத்துவதற்கு அதாரிடிகள் வேறு யாதொன்றும் காட்டப்படவில்லை. மற்ற ஹைகோர்ட்டுகளிலும் யாதொரு தீர்மானங்களும் கிடையாது. 16 கல்கத்தா 367-இல சோட் கோதர ஆயைபாரியாளும் ஸகோத்திர ஸபிண்டியாக இருக்க அவளுக்கு வார்ஸ் பாத்தியதை கிடையாதென்றும் சர்க்காருக்கு அவளைவிட மேலான பாத்தியதை உண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது ஆகவே மிதாக்ஷர சட்ட முறையைக் கவனிக்கும்பொழுது வாதி (தகப்பனின் மறுதாரம்) வார்ஸ் பாத்தியதைக்கு லாயக்குள்ளவனல்லவென்று தீர்மானிக்கவேண்ம். ஆனால் ஜாதியார் வழக்கம் ஏற்பட்டிருந்தால் அதைப்பற்றி அபிப்பிராயம் அறிந்து தீர்மானிப்பதவசியமாகும். ஹிந்துலாவை அனுசரித்த இரண்டு வாதங்களும் வாதிக்குப் பிரதிகூலமாச்சுது.

1-ம் பிரதிவாதி நாச்சியாரம்மாளுக்காக ரிஜூடி கேடா என்னும் ஒரு பாயிண்டு வாதிக்கு விரோதமாய் எதிர்வாதம் செய்யப்பட்டது. அதாவது 1-ம் பிரதிவாதிக்கு விக்கிறயம் செய்த வார்ஸ்களைத்தவிர்த்த வேறு ஒருவர் தான் மேலான பாத்தியதையுடைய வார்ஸ் என்று சொல்லி வாதியையும் 1-ம் பிரதிவாதியையும் பார்ட்டிகளாகச் சேர்த்து சொத்துக்களைச் சுவாதீனமடையும்பொருட்டுக் கொண்டுவந்த பிராதின் தீர்மானத்தால் வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்குமுறிய வியவகாரம் பைசலாய்விட்டதாகவும் ஆகவே இந்த தாவா ரிஜூடி கேடா என்றும் தோஷத்தையுடையதாகுமென்றும் வாதிக்கப்பட்டது. அந்தப் பிராதில் வாதி தனக்கு முந்திய பாத்தியதையுடைய தாயாதிகள் யாதொருவரும் கிடையாதென்று ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறாள், அந்தக்கேசின் தீர்மானத்தில் 1-ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை விக்கிறயம் செய்தவார்ஸ்களைப்போல அவ்வளவு சமீபமான வார்ஸாக ஷை பிராதின் வாதியை மதிக்கக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டதேயொழியவாதிக்கும் 1-ம்பிரதிவாதிக்குமுறியபாத்தியாபாத்தியதையைப்பற்றி யாதொன்றும் தீர்மானிக்கப்படவிவலை. 1-ம் பிரதிவாதிநாச்சியாரம்மாளுக்கு தாவா சொத்துக்களை விக்கிறயஞ் செய்தவர்கள் சமீமமான ஆண்வார்ஸ்கள் என்று தீர்மானிக்கப்பட்ட போதிலும் அந்த விஷயம் வாதிக்கும் 1-ம் பிரதிவாதிக்குமுறிய பாத்தியா பாத்தியதையைப்பற்றிய வியவகாரத்திற்

குரிஜுமடி சேடா தோஷத்தை உண்டாக்கத் தக்கதல்ல.

கடைசியாக ஸௌராஷ்ட குலாசாரத்தின்படி தகப்பனின் மறுதாரத்திற்கு வார்ஸ் பாத்தியதை உண்டென்ற ஸம்பிரதாயத்தைப் பற்றி சப்கோர்ட்டாரிடம் ஈரங்கிகாலத்திற்கு முன் இஷ்யூ ஏற்படுத்தச்சொல்லிக் கேட்டதாகவும் ஆனால் இஷ்யூக்கள் ஏற்பட்டு கேஸ் விஜாரணையாகும் காலத்தில் ஷை புதிய இஷ்யூவை ஏற்படுத்தசப்கோர்ட்டார் மறுத்ததாகவும் அது நியாய விரோதமென்றும், வாதிக்காகச் சொல்லப்பட்டது. நமது இராஜதானியில் அனுசரிக்கப்பட்டுவரும் வழக்கத்தை ரூபிக்கும்பொருட்டு இஷ்யூ ஏற்படுத்தும்படி கோறப்பட்டது. வாதியின் விண்ணபத்தில் நமது இராஜதானியில் வழங்கும் ஸம்பிரமதாயப்படி தகப்பனுடைய மறுதாரத்திற்கு ஹிந்துலாப்படி வார்ஸ் பாத்தியதை உண்டென்று" சொல்லப்பட்டிருக்கிறது. அதினால் வாதி ஒரு குறித்த ஜாதி வழக்கத்தை ருஜுப்படுத்த விரும்பியதாக ஏற்படவில்லை. என்றாலும் அந்தக்காரணத்தால் ஷை இஷ்யூவை ஏற்படுத்த மறுக்கக்கூடாது. கேசை சாட்சி விஜாரணைக்கு ஆரம்பம் செய்யுமுன் வீண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இஷ்யூகள் ஏற்படுத்தி பிரதமமான சட்டபாயிண்டைக் குறித்து ஆர்கியுமெண்டுக்காக முதல் முதல் வாய்தா குறிப்பிடப்பட்டிருந்ததேயொழிய வேறு யாதொரு நடவடிக்கை நடக்குமுன் வாதி ஷை விண்ணப்பம் கொடுத்து புதிய இஷ்யூ ஏற்படுத்தும்படி கேட்டுக்கொண்டதில் உத்தரவு கொடுக்கவேண்டியது நியாயமே. ஆகையால் ஷை இஷ்யூவைப்பற்றி புதிய சாட்சியங்கள் கேட்டு அபிப்பிராயங் கொடுக்கும்படி சப்கோர்ட்டாருக்கு உத்தரவளித்ததில் ஸௌராஷ்ட்ராளென்று சொல்லப்படுகிற பட்டுநூல்கார ஜாதியாருக்குள் ஒருவனுடைய சொத்துக்குத் தகப்பனுடைய மறுதாரம் வார்ஸ் பாத்தியதை அடையலாமென்ற சம்பிரதாய முண்டாவென்றும் அப்படிப்பட்ட வழக்கமிருப்பதாய் ருஜுவாகி அபிப்பிராயங் கொடுக்கப்படும் விஷயத்தில் 1-ம் பிரதிவாதிக்கு விக்கிரயம்செய்த ரெங்கஸாமி செட்டி, வாஸுதேவன் செட்டி என்ற இருவரும் காலஞ்சென்ற ராமஸாமிசெட்டிக்குச் சரியான வார்ஸ்களா என்றும் அப்படியானால், வாதியின் பாத்தியதை மேலானதா அல்லது ஷை யார்களுடைய பாத்தியதை மேலானதா என்று அபிப்பிராயங் கொடுக்கும்படியும் அதற்காக வாதியால் விடப்படும் சாட்சியம்சம் யாவற்றையும் விஜாரிக்கும்படியும். இரண்டுமாதத் தவணைக்குள் அபிப்பிராயம் எழுதி அனுப்பும்படி சப்கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது.

கும்பகோணம் சப்கோர்ட்டார் வாதிக்கு விரோதமாக ஜாதி வழக்கத்தைப்பற்றி சரியான ருஜு அம்சம் ஏற்படவில்லையென்று சொல்லித் தீர்மானிக்கவே ஹைகோர்ட்டார் அந்த அபிப்பிராயத்தை அங்கீகரித்து கடைசியாக வாதியின் அப்பீலைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள்.

---:O:---

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ,

கிருஷ்ணு ஜில்லா

S. A. 1470 & 1471 of 1911

2 செப்டம்பர் 1913.

பாத்துமாபீ *Vs* ஹாஜீ அப்துல்லா மூஸாஸேட்

1908-ம் வருஷத்திய எல்லூர் டி-மு கோர்ட் அசல் நம்பர் 348-இல் வாதி பாத்துமாபீயம்மாள் ஒரு தர்ம சொத்துக்குறிய மூன்று வருஷத்திய மத்தியகால வரும்படியை எதிரியிடமிருந்து வசூலிக்கும்பொருட்டு தாவாசெய்து அதில் ஷை தர்மத்திற்குத் தான் பரம்பரை பாத்தியதையால் முத்தவல்லி ஸ்தானத்திற்கு வந்தவளாகச் சொல்லி தன்னுடைய வம்சத்தைச் சேர்ந்த மூன்று தலைமுறையார் 1874-க்கு முன் ஷை தர்மத்திற்குறிய முத்தவல்லி உத்தியோகத்தை வகித்துவந்ததாகவும் ஆதாரமாகக் காண்டிருந்தாள். எதிரியோ தான் காஜி என்று சொல்லப்பட்ட ஒருவராலும் தன்னுடைய ஜாதியார்களாலும் முத்தவல்லியாக நியமிக்கப்பட்டு அந்த உத்தியோகத்தை வகித்து வந்ததாகவும் ஆகையால் அந்த உத்தியோகத்திற்குத்தானே பாத்திரனென்று எதிர்வாதம் செய்தார். டி-மு கோர்ட்டிலும் சப்கோர்ட்டிலும் வாதிக்குப் பிரதிகூலமாகி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யப்பட்டு அங்கும் விரோத





மாச்சுது. ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீயவர்கள் கொடுத்த தீர்மானத்தின் முக்கிய அம்சங்களாவன:—

இந்த வழக்கில் வாதி முதவல்லியாக நியமிக்கப்படுவதற்கு லாயக்குள்ளவளா அல்லது பிரதிவாதி அதற்குயோக்கியமானவரா என்று தீர்மானிக்கத்தேவையில்லை. வாதிதான் ஷை உத்தியோகத்திற்கு நியாயப்படி வந்து தர்ம சொத்துக்களின் பாத்தியதையை அடையத்தக்கவளா என்று தீர்மானிக்கவேண்டியதவசியமாகும். பிரதிவாதி லாயக்கில்லாதபோதிலும் வாதி உததியோகத்திற்கு நியமிக்கத்தக்கவளாகத் தீர்மானிக்கப்படவேண்டுமென்று சொல்லக்கூடாது.

வட்வா அலம்கிரி என்னும் மகம்மதிய சட்ட நூலின் தர்ஜிமாவாகிய பேய்லிதுரையவர்களின் (1865)-ம் வருஷத்திய லா புஸ்தகத்தின் 693-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிறபடி ஒரு தர்மசொத்தின் பரிபாலனத்திற்காக முத்தவல்லி நியமனம் மூன்றுவகையாய் செய்யப்படலாம். தர்மத்தை ஏற்படுத்தினவர்கள் ல் யாதொரு நியமன முறை ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்; அல்லது அவர் தன்னுடைய மரணசாஸனத்தில் ஏற்படுத்தும் எக்ஸிகியூடர்களுக்கு நியமன அதிகாரத்தைக்கொடுத்துவிடலாம்; அவ்விதவான நியமனங்கள் ஏற்படாத பட்சத்தில் கோர்ட்டார் யுக்தம்போல் யாரையும் அப்போதைக்கப்போது நியமனம் செய்யலாம். தர்மத்தை ஸ்தாபித்தவர் அக்காலத்திலேயே யாதொரு முறையை ஏற்படுத்தலாம். அல்லது பிந்தியகாலத்தில் நியமனம்செய்யும் அதிகாரம் யாருக்கு உண்டென்று தீர்மானம் செயது வீடலாம். அந்த நியமனத்தை எவ்விதமாய் செய்து முடிக்கவேண்டு மென்றும்ஏற்படுத்தலாம். தர்மார்ப்பணப்பிரதிஷ்டையானது எழுத்து மூலமாய் குறிக்கப்படவேண்டியதவசியமில்லை. தர்மப்பிரதிஷ்டையின் கருத்தும் அதற்குறிய முத்தவல்லி நியமனவிஷயமும் கண்டெழுதப்பட வேண்டிய வாகுவ் நாமா தஸ்தவேஜு ஏற்படவேண்டியதவசியமில்லை. ஆனால் தர்மப்பிரதிஷ்டையானது எழுத்துமூலமாய் அர்பிக்கப்படும் பட்சத்தில் முத்தவல்லி நியமனவிஷயமாய் முறைகளும் குறிக்கப்படுவது வழக்கமுண்டு. ஆகவே பிரதமத்தில் தர்மம் ஏற்படுத்தப்படும்பொழுது எழுத்துமூலமான தஸ்தவேஜுகள் பிறக்காதபட்சத்திலும் அவ்வித தஸ்தவேஜுகள் ஆஜர்படுத்தப்படாத சந்தர்ப்பங்களிலும் முத்தவல்லி நியமன விஷயமாய் யாதொருமுறை ஏற்பட்டிருக்கவேண்டுமென்று அனுமானிக்கத் தக்க நியாயமாகும். மேற்கூறிய அனுமானங்களை உத்தேசிக்குமிடத்து ஒருவர்பின் ஒருவர் முத்தவல்லியாக நியமிக்கப்பட்டு வந்தால் அவ்வித நியமனம் பிரதமத்தில் செய்யப்பட்டிருக்கிற ஒருவிதமான முறையை அனுசரித்துச் செய்யப்பட்டதாகவும் அவவித நியமனங்கள் சட்டப்படி செல்லத்தக்கவைகளென்றும் தீர்மானிக்கப்பட வேண்டியதாகும். முந்திய நியமன சரித்திரத்தைக் கவனித்தால் நியமனமுறை எவ்விதமானதென்று துலங்கும். அநேககேசுகளில் வாய்மொழியான தர்ம ஏற்பாடுகள் செய்யப்படும் சமயத்தில் முத்தவல்லி நியமனத்திற்காக முறைகள் குறித்திருக்கிற விஷயமும், அந்தப்படியே நியமனங்கள் நடந்து வருவதான நம்பிக்கையும் யதார்த்தமல்லாத மூலாதாரமற்ற பவந்தமான நடவடிக்கையாக விளங்கும்: தர்மப்பிரதிஷ்டையின் சமயத்தில் முத்தவல்லி நியமனத்திற்குறிய ஏற்பாடுசெய்யப்படாமலிருப்பதுமுண்டு. முத்தவல்லி உத்தியோகத்தை வகித்து வருகிறவன் காலஞ் சென்றுவிட்டால் அவனுடைய வார்ஸ்கள் அல்லது பந்துக்களில் ஒருவர் நிராக்ஷேபனையாகவும் ஆதி ஏற்பாட்டை அனுசரித்து வரும் பாவனை யில்லாதபோதிலும் காலியான உத்தியோகத்தைப் பார்த்துவருவதும் ஸகஜமாயிருக்கிறது. ஒருவர் பின் ஒருவர் யாதொரு அதிகாரமில்லாமல் மேற்கூறிய விதமாய் உத்தியோகத்தைப் பார்த்துவருவதால் மூலகர்த்தாவின் கருத்துக்கு விரோதமாயினும் கோர்ட்டார் நிராகரிக்கத் தகாதபடி பரம்பரை பாத்தியதையை ஸ்தாபிக்க இடமுண்டாகும்.

முந்திய முதவல்லியால் ஒருவன் நியமனம் செய்யப்பட்டால் அதை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் ஆதியில் ஒவ்வொரு முத்தவல்லியும் தனக்குப்பின் வரவேண்டியவர்களை நியமனம் செய்துவிடவேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த

தாக அனுமானிக்க வேண்டியதாகும். வித்தியாஸமான ஏற்பாடுகள் ருஜுப்படுத்தப்பட்டாலொழிய ஒரு முத்தவல்லி தனக்குப்பிந்தி உத்தியோகஸ்தரை நியமனம் செய்து வருவதை கோர்ட்டார் அங்கீகரித்து வருவதில் ஆதி ஏற்பாடு அவ்விதமிருப்பதாகவே யூகிக்கிறார்கள். ஆகவே முத்தவல்லி உத்தியோகம் பரம்பரையென்றாவது அல்லது முந்தியவர் அடுத்தவரை நியமித்து வரும் விஷயத்தையாவது ஸ்தாபிக்க வேண்டியதானால் ஆதியில் பிரதிஷ்டை செய்யும்பொழுது கொடுக்கப்பட்ட சட்டத்தை அனுசரித்து அவ்வித பரிகாரம் தேடுவதாய்ச் சொல்லவேண்டும்

இந்தக்கேசில் வாதி மேற்கூறிய அம்சங்கள் ஏதாவதொன்றை அனுசரித்துத் தன் உத்தியோக பாத்தியதையை ஸ்தாபிக்கவேண்டியதாகும்.

பிரதிவாதிக்காக எடுத்துக்காட்டிய 13 பம்பாய் 555-இன் 562-ம் பக்கத்தில் சட்டத்திற்கு விரோதமாக மூத்த குமாரன் வாரிஸ் பாத்தியதையைத் தீர்மானிக்கும் வழக்கத்தைச் சரியானபடி ருஜுப்படுத்தவேண்டிய அவசியமாகுமென்று சொல்லியிருக்கிறது. ஒரு தர்மத்தால் யாதொரு குடும்பம் சவரக்ஷணை செய்யவேண்டுமென்று கருதப்பட்டிருந்தால் யாதொரு குடும்பத்தார் பரம்பரையாக அனுபவிக்கிற விஷயத்தைப்பற்றி அதிக திருப்திகரமாக ருஜுப்படுத்தவேண்டியதில்லையென்றும் சொல்லலாம். சட்டத்தில் முத்தவல்லியாருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குப் புறம்பான அந்நியர்களை நியமனம் செய்வது யுக்தமல்லவென்று ஏற்பட்டிருக்கிறது. அந்த குடும்பத்தில் தகுதியானவர்களில்லாவிடில் மட்டும் கோர்ட்டார் இதரரை நியமனம் செய்யவேண்டுமென்றும் தகுதியான நபர்கள் அந்தக் குடும்பத்தில் ஏற்பட்ட உடன் அந்நியருடைய நியமனத்தை ரத்து செய்து உத்தியோகத்தை ஷை யாருக்கு மாற்ற வேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது.

தாவா கேசில் பிரதமத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களே முத்தவல்லி உத்தியோகத்தை வகித்து வரவேண்டுமென்ற கருத்துடன் தர்மம் ஏற்படுத்தப்பட்டதாக ருஜுவாகவில்லை. அவ்விதமான வாதமும் கிடையாது. கடைசியாய் வேலைபார்த்து வந்தவரால் வாதி நியமிக்கப்பட்டதாகவும் சொல்லப்படவில்லை. 1874-க்கு முன் வாதியைச் சேர்ந்த மூன்று வம்சத்தார் தொடர்ச்சியாக வேலைபார்த்து வந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விஷயத்தால் தர்மம் பிரதமத்தில் பரம்பரையான முதவல்லிகளால் பரிபாலித்துவரப்பட வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டதாக ஏற்படாது. மேற்படி மூன்று தலைமுறையான முத்தவல்லிகள் சரியானபடி நியமிக்கப்படவில்லையென்று எதிர்கக்ஷியின் ஆக்ஷேபணையை மதியாமல் அவர்கள் சட்டப்படி நியமிக்கப் பட்டவர்களாகவே பாவிக்கப்பட்டாலும் யாதொரு பரம்பரை பாத்தியதையால் உத்தியோகம் வகித்தவர்களாகச் சொல்லப்படத்தக்கதல்ல. அப்படி பரம்பரை பாத்தியதையால் அனுபவித்து வந்ததாகச் சொன்னாலும் அந்த மூவருடைய அனுபோகத்தால் யாதொரு பரம்பரையான நியாயம் நிரந்தரமாய் ஏற்பட்டிருப்பதாகச் சொல்ல நியாயமில்லை. தவிர மேற்கூறிய அம்சங்கள் முற்றிலும் சட்ட பாயின்டுகளல்ல. 2-வது அப்பீல் என்னும் விஷயத்தைக் கவனித்து பார்க்குமிடத்து வாதிக்கு விரோதமான அம்சங்கள் அதிக பலமாக யூகிக்கப்படவேண்டும். ஆகவே வாதியின் 2-வது அப்பீல் தள்ளுபடியாக வேண்டியதாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் மேற்கூறிய பைசலுக்கு ஒத்துச்சொன்னதில், தர்மகர்த்தாக்களின் நியமனம் பரம்பரை பாத்தியதையை அனுசரிப்பதற்குக் கோர்ட்டார் அதிகமாய் இடங்கொடுக்கக் கூடாதென்றும் ஷை உத்தியோகம் எம்மதஸ்தர்களின் தர்மபரிபாலனத்தைப்பற்றிய தானாலும் அதேவிதமாக பாவிக்கப்பட்டு நியமனமாக வேண்டுமென்றும் அபிப்பிராயங்கொடுத்தார்கள்.

—:O:—

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

### C. M. A. 206 & 207 fo 1912-ஜனவரி 1914.

ஒரு கூட்டுவியாபாரத்தை க்ளோஸ் செய்து கணக்குத்தீர்த்து லாபநஷ்டம் நிர்ணயிக்கும் டி



செய்யப்படுகிற ஒரு பிராதில் பல பிரதிவாதிகளில் ஒருவர்மட்டும் தனக்கு வாதியாலும் மற்ற பிரதிவாதிகளாலும் சில பாக்கித்தொகை சேரவேண்டுமென்ற வாதம்செய்தால் வாதிஷை பிராதை ஸி. பி. ஸி. ஆர்டர் 23-ரூல்-1-இன்படி உவித்டிராசெய்து கொண்டாலும் மேற்கூறிய எதிர்வாதத்தின் பரிகாரத்தை அந்தப்பிரதிவாதி அதே பிராதில் தேடும்பொருட்டு பிராதை மேல்நடத்துவதில் பிராதை வாபிஸ் வாங்கும் விஷயமானது பாதிக்காதென்று ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங்துரையவர்களும் தீர்மானித்தார்கள்.

——

### C. M. A. No. 7 of 1913-28 ஜனவரி 1914.

ஒரு மகம்மதிய தகப்பன் சில ஸ்தாவரசொத்துக்களைத் தன் மைனர் குமாரனுக்கு நன்கொடையளித்ததாக தஸ்தவேஜை எழுதி ரெஜிஸ்தர் செய்து, அந்தப்பத்திரத்தில் தான் ஜீவனோடிருக்குமட்டும் ஷை சொத்தின் வருமானங்களை வசூலித்து அனுபவிப்பதாயும் தனக்குப்பின் ஷை மைனர் குமாரன் ஸர்வ ஸ்வதந்தர பாத்தியத்துடன் அனுபவிக்க வேண்டியதென்றும் கண்டிருந்தபடியால் அந்தப்பத்திரம் பார்வைக்கு அந்த ரீதியான நன்கொடை விநியோகமாகக் காணப்பட்டபோதிலும் சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. ஏனெனில் நன்கொடைக்கு அத்தாட்சியாக மைனருடைய பாத்தியதையை ஒப்புக்கொண்ட பாவனையாக சுவாதீனப்படுத்திக் கொடுத்த நடவடிக்கை ஏதாகிலும் ருஜுவாகி யிருக்கவேண்டும். (அதாவது சொத்தை எவனுக்காவது குத்தகைக்கு ஒப்படைத்தால் அந்த ஒப்படைப்பு தஸ்தவேஜில் மைனருடைய பாத்தியதையைச் செப்பி அவனுடைய சுவாதீனத்தையும் திருஷ்டாந்தரப் படுத்தலாம்.) தாவா நன்கொடையில் சுவாதீனத்தையும் அனுபோகத்தையும் தகப்பனே வைத்திருப்பதால் நன்கொடையின் அம்சம் பூரணமாகவில்லை. மேற்கூறிய அபிப்பிராயம் ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ அவர்களால் கொடுக்கப்பட்டது.

—:O:—



### S. A. 1355 of 1909—27 ஜனவரி 1914.

தீர்வை செலுத்தத்தவறினதால் போடப்பட்ட ரெவினியூ ஸேலை ரத்துசெய்யும் பொருட்டு செய்யும் தாவாவில் மேல்வாரம்தார்களையாவது அல்லது மேல்வாரம்தார்களுக்குள் நடந்துவரும் வேறொரு வியாஜ்ஜியத்தில் நியமிக்கப்பட்டிருக்கிற ரிஸீவரையாகிலும் பார்ட்டிகளாய்ச் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. ஏலம் எடுத்த இறையதாரனை மட்டும் பிரதிவாதியாகச் சேர்த்தால் போதுமானதாகுமென்று ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்களும் அபிப்பிராயப்பட்டார்கள்.

—:O:—

### S. A. 1532 to 1537 of 1911-27 ஜனவரி 1914

பட்டாவை ஒப்புக்கொள்ளும்படி மேல்வாரம்தார் கொண்டுவந்த தாவாவில் ஹைகோர்ட்டார் தீர்மானத்தின்பேரில் பிரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்யப்பட்டு அந்த அப்பீல் பைசலாகுமுன் மேல்வாரம்தார் ஹைகோர்ட் தீர்மானத்தின்படி தீர்வை பாக்கியை வசூலிக்கும் பொருட்டு தாவா செய்யக்கூடாதென்றும், ரெண்ட்ரிகவரி ஆக்டின்படி ஒருதடவையில் பட்டாவை ஒப்புக்கொள்ளும்படி தாவாசெய்து தீர்ப்புபெற்றபிறகு தீர்வை வசூலிக்க செய்யும் தாவாவுக்குமுன் வேறுபட்டா புதிதாய் கொடுக்கத் தேவையில்லையென்றும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்களும் தீர்மானித்தார்கள்.

—:O:—

### S. A. 1643 of 1912—26 ஜனவரி 1914.

இரண்டு அசையாயப் பொருள்களுக்குரிய பாத்தியதையும் ஒன்றாயிருந்து அவைகளில் அநதிகிருதமாய்ப் பிரவேசித்தவனுடைய நடத்தைகளும் ஒரே வியவகாரத்தைப்பற்றியதாயிருக்கின் பாத்தியஸ்தன் ஷை சொத்துக்களில் ஒன்றைமட்டும் சுவாதீனமடைய முதலில் தாவாசெய்து தீர்மானம் பெற்றானாகில் பின் மற்ற நிலத்தைப்பற்றி சுவாதீனப்பிராது செய்யத்தடையாகும். இரண்டு சொத்துக்களையும் சுவாதீனமடைய ஒரே

வியாஜ்ஜியம் போடவேண்டும். அவ்விதமாய் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்களும் தீர்மானம் செய்தார்கள்.

———:O:———

## A. S. 76 of 1911 ஜனவரி 1914.

தேவஸ்தானத்தின் தர்மகர்த்தா கோவில்சொத்துக்களை 10 வருஷத்துக்கு மொத்தமாய் குத்தகைக்கு ஒப்படைத்து வசூலாகும் வரும்படியில் தன் சொந்தச் செலவுக்காக சிலபாகத்தையும் கோவில் செலவுக்காக சிலபாகத்தையுமாக உபயோகப்படுத்திவந்தால் குத்தகைதார் தேவஸ்தானத்திற்காக தர்மகர்த்தாவிடமிருந்து சுவாதீனமடைந்து அனுபவித்து வருகிறதாக ஏற்படுமேயொழிய டிரஸ்டியுடைய ஸ்வான் பாத்தியதையினின்று சுவாதீனமடைந்ததாகவும் குத்தகைதார்களுடைய சுவாதீனம் தேவஸ்தானத்திற்குட்படதல்லவென்றும் தேவஸ்தானத்தின் பாத்தியதையை நிராகரிக்கத்தக்க விதமாய் சுவாதீனத்திலிருந்ததாகவும் சொல்லக்கூடாது.

ஆனால் 10 வருஷ குத்தகைவாய்தா முடியுமுன் டிரஸ்டியானவர் கோவில் சொத்தைத் தன் சொந்தமாக எண்ணி அடமானம் வைத்து வாங்கியகடன் தீராமலிருந்து அடமானதார் சொத்தை ஏலத்திற்குக் கொண்டுவந்ததில் ஏலமெடுத்தவனிடம் குத்தகைதார் தீர்வையை செலுத்திவரவே தர்மகர்த்தாவுக்கு தீர்வை செலுத்தப்படாதநிமித்தம் தேவஸ்தானத்தினுடைய சுவாதீன பாத்தியதை இழந்ததாக பாவிக்கப் படவேண்டும். தீர்வை செலுத்தாமல் நிறுத்தப்பட்ட காலமுதல் 12-வருஷங்களுக்கு மேல் தர்மகர்த்தா தேவஸ்தானத்திற்காக இழந்துபோன சுவாதீனத்தைத் திரும்பி யடையும்பொருட்டு தாவாசெய்தால் ஏலதாருக்கு அனுபோக பாத்தியம் ஏற்பட்டு, தாவா காலாவதி தோஷத்தால் செல்லத்தக்கதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. [Messrs ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் டையாப்ஜி ]

———:O:———

## C. M. A. 61 of 1913–22 ஜனவரி 1914.

ஒரு நம்பரில் டிக்கிரியானபிறகு நிறைவேற்றும் நடவடிக்கைகள் நடந்து வருகையில் ஜில்லாப் பிரிவினையினிமித்தம் அந்தக் கோர்ட்டாருடைய அதிகாரவரம்பு மாறிப்போகும்பட்சத்தில் மேற்கூறியடிக்கிரீயளிக்க எந்த கோர்ட்டாருக்கு அதிகாரமேற்படுமோ அதே கோர்ட்டார் நிறைவேற்றும் நடவடிக்கையை யாதொரு டிரான்ஸர் உத்தரவை அபேக்ஷிக்காமல் தொடர்ந்து மேல்நடத்தலாமென்றும், நிறைவேற்றுமனு நோட்டீஸ் எதிரிக்கு நேரில் ஸர்வாகாமல் கதவில் ஒட்டப்பட்டபின் அது சட்டப்படி சரியான ஸர்வீஸ் என்று கோர்ட்டார் தீர்மானித்து யாதொரு உத்தரவு செய்தால் ஷை உத்தரவை சட்டப்படியுள்ள நடவடிக்கைகளெடுத்து ரத்து செய்தாலொழிய அது விஷயமாப் பின்வேறு வியவகாரம் நடத்துவதற்கு ரிஜுடிகேடா தோஷம் உண்டாகுமென்றும், மேற்கூறிய நிறைவேற்றுமனுவில் செய்யப்பட்ட உத்தரவை மாற்றவேண்டுமானால் எக்ஸ்பார்டி டிக்கிரீயை மாற்றும் முறையைப்போலவே உத்தரவான 30 தினங்களுக்குள்ளாவது அல்லது உத்தரவாச்சுதென்ற தகவல் தெரிந்த தினமுதல் 30 தினங்களுக்குள்ளாவது நடவடிக்கை நடத்தவேண்டும். காலாவதி ஆக்ட் 164-வது ஆர்டிகிலும் ஸி. பி. ஸி. ஆர்டர் 9-ரூல் 13-ம் பிரயோகிக்கத் தகுந்தவைகளாகும். [Messrs ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.]

———:O:———

## S. A. 2073 to 2076 of 1912 21 ஜனவரி 1914.

ஒரு மிராஸ்தார் தன்னுடைய நிலங்களுக்கு ஒரே மதகு வழியாய் வரக்கூடிய சர்க்கார்த் தண்ணீரை பாசனத்திற்காக உபயோகித்துக்கொள்ளப் பாத்தியமுடையவராக யிருக்க இரண்டு மதகுகளின் துவாராவில் ஜலத்தை உபயோகித்த காரணத்தால் இரண்டாவது மதகை மிராஸ்தார் தன் நன்மைக்காகத் திறந்துவிட்டதாக ருஜு அம்சம் ஏற்படாதபோதிலும் இரட்டிப்பான தண்ணீர்தீர்வையைச் செலுத்தக்கடவரென்று தீர்மானிக்கப்பட்டது. [Messrs ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ.]

———:O:———

## L. P. A. 228 of 1912–7 ஜனவரி 1914.

ஸ்தாவர சொத்தை கிரயம்செய்து தஸ்தவே



ஜை ரெஜிஸ்டர் செய்துகொடுத்து சொத்தையும் சுவாதீனப்படுத்தினபின் கிரயதாரிடமிருந்து விக்கிரய சமயத்திலேயே எழுதிவாங்கிய வர்த்தமானத்தை ஆதாரமாகக்கொண்டு கிரய நடவடிக்கையை அடமானமாக பாவிக்கவேண்டுமென்று சொல்லி கிரயத்தொகையைச் செலுத்திவிட்டு சொத்தைத் திரும்பி அடைய நியாயமில்லை. ரெஜிஸ்டராகாத ஷை வர்த்தமானத்தில் கண்டிருக்கிற விஷயங்களை ருஜுவில் ஏற்றுக்கொள்ளக்கூடாது. [இது சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் சங்கரன்நாயர், ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்ட் ஆகிய மூன்று நியாயாதிபதிகளுடைய புல்பெஞ்சு தீர்மானம்.] ரெஜிஸ்டரேஷன் ஆக்ட் 17, 49-வது பிரிவுகளை பார்க்கவும்.

———:O:———

## C. R. P. 952 of 1912–5 ஜனவரி 1914

மதராஸ் டவுன் ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட் 9-வது பிரிவின்படி ஷை கோர்ட்டில் வியவகாரங்கள் நடத்தப்படவேண்டிய முறைகளையும் சம்பிரதாயங்களையும் குறித்து ரூல் ஏற்படுத்த ஹைகோர்ட்டாருக்கு அதிகாரமேற்பட்டிருக்கிறது. 38-வது பிரிவில் ஸ்மால் காஸ் ஜட்ஜியவர்களின் தீர்ப்பின்பேரில் ஷை கோர்ட்டில் புல்பெஞ்சுக்கு அப்பீல் செய்ய முறை ஏற்பட்டிருக்கிறது. அவ்விதமாய் அப்பீல் செய்யுமுன் டிக்கிரீத்தொகையையும் செலவு தொகையையும் எதிரி கோர்ட்டில் டிபாஸிட் செய்யவேண்டுமென்று விதி ஏற்படுத்த நியாயமில்லை. அவ்விதியானது 38-வது பிரிவின்படி பார்டிகளுக்கு ஏற்பட்டிருக்கிற அப்பீல் சிலாக்கியத்திற்குறிய பாத்தியதை குறுகிப்போய்விடும். சட்டத்தின் கருத்துக்கும் விரோதமாகிறது. [இந்த தீர்மானமும் மேற்கூறிய புல்பெஞ்சில் ஏகங்கியாகி ஏற்பட்டது.]

———:O:———

## C. M. P. 924 of 1913 in S. A. 1333 of 1912 28 ஜனவரி 1914.

ஒரு தேவஸ்தானத்தில் அர்ச்சகனுக்கு (குருக்களமாருக்)குறிப்பான யோக்கியதையிருக்கவேண்டிய அவசியமாகும். [மந்திர தந்திரங்களைப் பிரயோகிப்பதற்குறிய சாஸ்திரப் பயிர்ச்சியில்லாதவர்கள் கோவில் அர்ச்சகராக உத்தியோகம் பார்த்துவர லாயக்கில்லை.] ஆகவே சட்டப்படிக்கு அவ்வுத்தியோக பாத்தியதையை மற்றவர்களுக்கு இஷ்டம்போல் மாற்றத்தகாது. ஸ்திரீகள அந்த உத்தியோகத்திற்கு வார்ஸ் பாத்தியதையால் வரக்கூடாது. அப்படி வார்ஸ் பாத்தியதையால் உத்தியோகத்தை அடையக்கருதும் ஸ்திரீகள் உத்தியோகத்தைத் தங்களுக்கு ப்ரதிநிதியாக யாரைக்கொண்டும்வேலை நடத்திவரவும்கூடாது. [கிராமக்கணக்கர்களும் மணியங்களும் குமஸ்தாக்களைக்கொண்டு நடத்திவருவதுபோல் அர்ச்சகரின் உத்தியோகத்தை நடத்திவரக்கூடாது.] (Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ,)

———:O:———

## C. M. A. 189 of 1912–29 ஜனவரி 1914.

12 வருஷ காலாவதி 60 வருஷமாக மாற்றப்பட்டு ஏற்பட்டிருக்கும் 1908-ம் வருஷத்திய லிமிடேஷன் ஆக்ட் 31-வது பிரிவில் கண்ட இரண்டு வருஷ ஸ்பெஷல் வாய்தாவின் சிலாக்கியம் அடமான தஸ்தவேஜிகளுக்குறிய தாகுமென்றிருக்க அடமானம் என்ற பதத்திற்கு சுவாதீன அடமானமல்லாத ப்ராபாடி ஆக்டுக்கு முன்பிறந்த ஈட்டுக்கடன் தஸ்தவேஜிகளுக்கும் ஏற்றதாகுமென்று தீர்மானிக்கப்பட்டது. (Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்.)

———:O:———

## C. M. A. 108 of 1913-4 பிப்ரவரி 1914.

நிறைவேற்று மனுவின்பேரில் வசூலிக்கப்பட்டிருக்கிற தொகையில் வேறொரு டிக்கிரீ பாக்கிதார் பங்குவிகிதமடைய வேண்டுமென்று கோரியவிண்ணப்பம் பிரதிவாதியின் ஆக்ஷேபனையின்பேரில் பங்குவிகிதபாத்தியதை கிடையாதென்று கோர்ட்டார் செய்த உத்தரவின்பேரில் அப்பீல் பரிகாரம் கிடையாது. அவ்வித உத்தரவானது மனுதாருக்கும் எதிரிக்கும் நிறைவேற்று நடவடிக்கையில் பிறந்ததாக பாவிக்கப்பட நியாயமில்லை. நிறைவேற்று மனு கொடுக்கப்பட்டிருந்து அந்த நடவடிக்கையில் பிறந்த யாதொரு உத்தரவுக்கு அப்பீலுண்டு. (Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்.)

———:O:———

## C. M. S. A. 37 of 1913-5 பிப்ரவரி 1914.

ஒரு நம்பரில் பிறந்த டிக்கிரீயின்படிக்குப் பிராதை வாபிஸ்பெற்றுத் திரும்பிக்கொடுக்க அனுமதி ஏற்பட்ட பாத்தியம் மூன்று வருஷங்களுக்குப்பின்னும் ஆனால் அதே டிக்கிரீயின்பேரில் அப்பீலும் 2-வது அப்பீலும் செய்யப்பட்டு அந்த 2-வது அப்பீல் பைசல் தேதியிலிருந்து மூன்று வருஷங்களுக் குள்ளாகவும் பிராதைத் திரும்பியெடுத்துக் கொள்ளும்படி விண்ணப்பம் செய்யப்படலாம். காலாவதி 2-வது அப்பீல் டிக்கிரீமுதல் தான் கணிக்கப்படவேண்டும். காலாவதி ஆக்ட் 181-வது ஆர்டிகிலின்படி இத்தகைய விண்ணப்பங்களுக்கு காலாவதி அனுஷ்டிக்கப் படவேண்டும். (Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்.)

———o———

## C. M. A. No. 230 of 1912
### 23 அக்டோபர் 1913.

விசாகப்பட்டணம் டி-மு கோர்டடில் வாதி நடத்தின பிராதில் பல பிரதிவாதிகளில் ஒருவர் காலஞ்சென்றுவிடவே அவருடைய வார்ஸுகளை க்குறித்தகாலத்திற்குள் அதாவது மதித்த போத காலத்திற்குள் பிரதிவாதிகளாக ஷை யாருடைய ஸ்தானத்தில் ரிகார்டு செய்யத்தவறினபடியால் பிராது அந்தப் பிரதிவாதியைப் பத்றினமட்டில் அடங்கிப்போனதாக பாவிக்கப்பட்டதின்பேரில் வாதி பின்னுல் வேறு த்ாவா செய்துகொள்வதாக கோர்ட்டாருடைய அனுமதிபெற்று அந்தப் பிராதை உவித்டிரா செய்துகொண்டு அதன்பிறகு செய்த மறு வியாஜ்ஜியத்தில் முன் காலஞ்சென்ற பிரதிவாதியின் வார்ஸ்களையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்துக்கொடுத்த பிராதை டி-மு கோர்ட்டார் ஏற்றுக்கொள்ள மறுத்ததால் அந்த உத்தரவின்பேரில் வாதி ஜில்லா கோர்ட்டாருக்கு அப்பீல் செய்ததில் அங்கு வாதிக்கனுகூலமாய் பிந்திய பிராதில், காலஞ்சென்ற முந்திய பிராதில் சேர்த்திருந்த் பிரதிவாதியின் வார்ஸ்களையும் சேர்க்கலாமென்று தீர்மானமாச்சுது.

ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில், ஜில்லா கோர்ட்டார் தீர்மானம் பிசகென்றும் முந்திய பிராதை உவித்டிராசெய்து கொண்ட சமயத்தில் காலஞ்சென்ற பிரதிவாதியின் பெயரானது நீங்கிப்போய் அவருடைய வார்ஸுகளின் பெயரும் பர்த்திசெய்யப்படாத காரணத்தால் அவர்களுடைய பெயரை திரும்பி சேர்க்கக்கூடாதென்றும் அப்படி வார்ஸ்களை ரிகார்ட்டில் பர்த்தியாகச் சேர்கக்ப்பட்டு அந்த உத்தரவானது அப்பீல் கோர்ட்டில் மாறிப்போன சந்தர்ப்பங்களிலும் அதே வார்ஸுகளைத் திரும்பவும் பிராதில் பிரதிவாதிகளாயச் சேர்க்கக்கூடாதென்றும் ஸி. பி. ஸி, ஆர்டர் 23 ரூல் (1)-இலும் ஆர்டர் 22 ரூல் 4-இன் (2)-ம் கிளாஸிலும் விதிக்கப்பட்டிருக்கிற முறையை எடுத்துக்காட்டி டி-மு கோர்ட்டாருடைய உத்தரவைக் காயப்படுத்தினார்கள். [Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.]

———o———

(Messrs சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட்)

### மதராஸ்.

## C. C. C. A. 19 of 1911—9 டிசம்பர் 1913.

மகம்மது காஸிம் ஆலிசாகிப் Vs மீர்குலாம் ஆலி சாகிப் வகையரா.

1896-ம் வருஷம் மார்ச்சு 28-இல் ரெஜிஸ்டராகாத தஸ்தவேஜால் ஒரு சொத்தை மீர்ஸா பேக் என்றவரிடத்தில் ரூ 50-க்குக் கிறயத்திற்கு வாங்கி அதே தேதியில் சொத்தையும் சுவாதீனப்படுத்திக்கொண்ட 3-ம் பிரதிவாதியினிடமிருந்து சொத்தைத் திரும்பியடையும்பொருட்டு ஷை சொத்தை அதே மீர்ஸாபேக் என்றவரிடம் 1896-மே-18-இல் ரிஜிஸ்டர் தஸ்தவேஜாகிய A-ஆதரவால் கிறயம்பெற்ற வாதி கிறயம் செய்த மீர்ஸாபேக் சாயபுவினுடைய மைனர் குமாரனோடு மற்ற பாத்தியஸ்தர்களையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்து மதராஸ் ஸிடிஸிவில் கோர்ட்டில் அசல்தாவாசெய்தார். 3-ம் பிரதிவாதிதான் மீர்ஸா பேக் என்றவரிடம் சுவாதீனம் பெற்றதற்கு அத்தாட்சியாக அவரிடத்திலிருந்து வாங்கியிருந்த குடிக்கூலி எக்ரீமெண்டையும் அதை அனுசரித்துப்பெற்ற வாடகை பாக்கிக்காக ஏற்பட்ட இரண்டு டிக்கிரீகளையும் i, ii, iii ஆதாரவுகளாக ஆஜர் செய்தார். ஸிடி ஜட்ஜியவர்கள் டிரான்ஸ்பர் ஆப்



ப்ராபர்டி ஆக்ட் 54-வது பிரிவின்படி 100 ரூபாய்க்குட்பட்ட கிறயநடவடிக்கைகள் ரெஜிஸ்டரான தஸ்தவேஜால் முடிக்கப்பட வேண்டுமென்றும் அல்லது சொத்தின் சுவாதீனத்தை ஒப்புக்கொடுத்தமாத்திரத்தாலே கிறயம் செல்லத்தக்கதாகுமென்றும் ஏற்பட்டிருக்க (1893) 16 மதராஸ் 148-இல் தீர்மானிக்கப்பட்டிருக்கிற முறைப்படி அவ்வித கிறயத்திற்கு எழுத்துமூலமான தஸ்தவேஜு ஏற்பட்டால் அது கட்டாயம் ரெஜிஸ்டர் ஆகவேண்டுமென்ற நியாயத்தை அனுசரித்து முந்திய விக்கிறயத்தை நிஷ்பிரயோஜனமாக்கி வாதியின் கிறயத்தை உறுதிசெய்து கோரியபடி வாதிக்கு டிக்கிரீயளித்து, 3-ம் பிரதிவாதி, ஆஜர்படுத்தின மூன்று ஆதரவுகளைப்பற்றியும் தான் கிறயத்தேதியில் சுவாதீனமடைந்த விஷயத்தையும், வற்புறுத்தி வாதம் செய்ததின் மேல், ஸிடிகோர்ட் ஜட்ஜியவர்கள் கிறயதாரிடமிருந்து குடிக்கூலி எக்ரீமெண்டு பெற்றுக்கொண்டதால் அதுவே சுவாதீனத்திற்குப் போதுமான அத்தாட்சியாகாதென்றும் அந்த எக்கிரீமெண்டிலும் இரண்டு டிக்கிரீகளிலும் குறிக்கப்பட்டிருக்கிற சொத்தானது வாதி பிராதில் குறிப்பிட்டிருக்கிற அதே சொத்துதானென்று 3-ம்பிரதிவாதி ருஜுப்படுத்தப் பிரயத்தனப்படவில்லையென்றும், வாதியின் வசம் வீட்டிற்குறிய மூலதஸ்தவேஜிகளிருப்பதைப்பற்றி 3-ம் பிரதிவாதிபோதுமானச மாதானம் சொல்லவில்லையென்றும், 3-ம் பிரதிவாதியின் எதிர்வாதத்திற்குத் தன்னைத்தவிற வேறு சாட்சிகள் யாரும் ஒத்துச் சொல்லவில்லையென்றும், தன்வாக்கு மூலத்திற்கும் ஸ்டேட்மெண்டுக்கும் அனுபோக விஷயத்தைப்பற்றி வித்தியாஸமிருப்பதாயும் சொல்லி 3-ம் பிரதிவாதியின் எதிர்வாதத்தை நிராகரித்து வாதிக்கு டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் 3-ம் பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் அங்கு 3-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட I-வது ஆதரவாகிய எக்கிரீமெண்டில் கண்ட சொத்தும் A-ஆதரவில் கண்டிருக்கிற விக்கிறய சொத்தும் ஒன்றுதானுவென்று மறு விஜாரணை செய்து அபிப்பிராயம் கொடுக்கச்சொல்லி இரண்டு தஸ்தவேஜிகளிலும் குறிக்கப்பட்ட சொத்து ஒன்றேதானென்று தீர்மானிக்கப்பட்ட ஸிடிஸிவில் கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு ஒத்து மற்றப்படி 3-ம் பிரதிவாதியின் எதிர்வாதம் பிரயோஜனமில்லையென்று சொல்லி 3-ம் பிரதிவாதி டிக்கிரீகள் பெற்றும் அவைகளின்படி தொகை பாக்கியை வசூலிக்காத விஷயத்தையும் கவனித்து, ப்ராபர்டி ஆக்ட் 54-ம் பிரிவின் அம்சங்களையும் ரெஜிஸ்டரேஷன் ஆக்ட் 50-வது பிரிவையும் ஒத்துப் படிக்கவேண்டியதாகச் சொல்லி அந்தப்படி கவனித்தால் ரெஜிஸ்டராகாத தஸ்தவேஜினுல் சுவாதீன மடைந்தபோதிலும் அதற்குப்பிந்திய ரெஜிஸ்தரான விக்கிறய தஸ்தவேஜானது மேலிட்டுச் செல்லத்தக்கதாகுமென்று தீர்மானித்து ஹைகோர்ட்டார் அப்பீலைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். ப்ராபர்டி ஆக்ட் நமோதுக்குவருமுன் ஏற்பட்ட 5 கல்கத்தா 336ம், 3-மதராஸ் 46-ம் 3-ம் பிரதிவாதியின் கக்ஷிக்கு விரோதமாக யிருக்கிறதென்று கவனிக்கவேண்டும்.

———:o:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

### தஞ்சாவூர் ஜில்லா.

## S. A. No. 602 of 1912—5 நவம்பர் 1913.

சுப்பராய முதலியார் Vs துளசி முதலியார் வகையரா.

வாதி சுப்பராய முதலியின் தகப்பனாகிய துளசி முதலியாருக்கு பிரஞ்சு இலாக்கா காரைக்கால் பட்டணத்தில் ரூ. 4000 மதிப்புள்ள ஸ்தாவர சொத்துக்களும் நாகப்பட்டணத்தில் பிரிட்டிஷ் இலாகாவில் ரூ. 800 பெருமான ஸ்தாவர சொத்துக்களுமிருந்து 1881-ம் வருஷத்தில் வாதி பிறந்த வெகு காலத்திற்குமுன் பிரிட்டிஷ் இலாகாவிலுள்ள சொத்துக்களை அடமானம் வைத்துக் குடும்ப நன்மைக்காக ரூ. 350 போல கடன்வாங்கியிருந்தார். 1888-ம் வருஷம் ஆகஸ்ட் 25-இல் வாதி ஜனித்தபின் ஷை இரண்டு சொத்துக்களும் இருவருடைய பொதுவான பாத்தியதைக் குட்பட்டதாச்சுது. 1-ம் பிரதிவாதி 1891 மேமாதத்தில் பிரிட்டிஷ் இலாகாவிலுள்ள சொத்துக்களை அதன் மதிப்புக்குத் தகுந்த விலையாகிய ரூ. 800-க்கு 4-ம் பிரதிவாதியின் தகப்ப

னுக்கு விக்கிறயம் செய்து முந்திய அடமானக்கடன் ரூ. 350-க்குச் செல்லானதுபோக பாக்கித்தொகை ரூ. 450யும் கையில் ரொக்கம் பெற்றிக்கொண்டான். அப்பொழுது வாதி மூன்று வயதுள்ள மைனராகயிருந்தான்.

வாதி 9-வயது சென்றவுடன் வாதியின் தகப்பன் பிரஞ்சு இலாகாவிலுள்ள இதரமான சொத்துக்கள் யாவற்றையும் 1897-ம் வருஷத்தில் வாதிக்கு நன்கொடையாக அளித்து தானப்பத்திரம் எழுதி ரெஜிஸ்டர் செய்துவிட்டார். 1-ம் பிரதிவாதி அக்டோபர் 1891-இல் விக்கிறயஞ் செய்த விஷயத்தில் ஷை மைனரால் பிந்தியகாலத்தில் யாதொரு ஆக்ஷேபணையும் செய்யப்பட்டு அதனால் 4-ம் பிரதிவாதிக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதற்குத்தான் உத்தரவாதம் செய்வதாக ஒரு ஜாமீன் பத்திரம் எழுதி 4-ம் பிரதிவாதியின் தகப்பனுக்குக்கொடுத்ததில் அந்தப்பத்திரம் அன்றுமுதல் 18 வருஷங்கள் மட்டும் நமோதிலிருக்கக் கடவதென்றும் அதற்குப்பின் அந்தப்பத்திரம் ரத்தானதாக பாவிக்கப்பட்டு அதின்படி வாதியின் தகப்பன் (1-ம் பிரதிவாதி) நடக்கக் கடவனல்லவென்று கண்டிருந்தது. மேற்கூறிய 18-வருஷ வாய்தா கடந்தபிறகு வாதி மேஜரான உடன் தன் தகப்பனார் 4-ம் பிரதிவாதியின் தகப்பனுக்கு எழுதிக்கொடுத்த விக்கிறயம் தன்னுடைய பாகத்தைக் கட்டுப்படுத்தாதென்று சொல்லி தன் தகப்பன்பேரில் கிறயதாரின் மகனாகிய 4-ம் பிரதிவாதியையும் மற்ற சம்மந்தப்பட்ட வாகளையும் பாாடிகளாய்ச் சேர்த்து பிரிட்டிஷ் இலாகா சொத்துக்களில் பாகம் கிடைக்க வேண்டுமென்று நாகை டி-மு-கோர்ட்டில் 1909-ம் வருஷத்திய அசல் நம்பர் 363-இல் வியாஜ்ஜியம் தொடுத்தார். ஷை வியாஜ்ஜியமானது டி-மு-கோர்ட் பைசலுக்குமேல் சப்கோர்ட்டில் அப்பீலாகி அங்கு வாதியின் தாவா செலவுடன் தள்ளுபடியாச்சுது. அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஷை அப்பீலை சரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள், வாதி முந்திய கடன்தொகை ரூ 350-இல் பாதித்தொகை ரூ 175-யும் 4-ம் பிரதிவாதிக்குச் செலுத்தும் பொருட்டு 3-மாத தவணைக்குள் டி-மு-கோர்ட்டில் கட்டிவிடும் பக்ஷத்தில் விக்கிறயமான சொத்தில் ஒருபாதியை வாதிக்குச் சுவாதீனம்செய்து கொடுக்கவேண்டுமென்று புதிய டிக்கிரியளிக்கும்படி டி-மு-கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கவேண்டுமென்றும், அவ்விதமாய் அளிக்கப்படும் டிக்கிரீயில் வாதிக்குச்செலவுதொகை யாதொன்றும் கொடுக்கப்படக் கூடாதென்றும், ஆனால் அந்த இரண்டுமாத காலத்திற்குள் வாதி டி-மு கோர்ட்டில் ஷை ரூ. 175-யும் கட்டத்தவறினால் 2-வது அப்பீல் செலவுடன் தள்ளுபடியானதாக பாவிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானித்து சப்கோர்ட் தீர்மானத்தை மாற்றி மேற்கண்டவிதமாய் வாதிக்குப் பிரதம டிக்கிரீயளித்தார்கள். ஷை அப்பீலை சரங்கிகேட்ட மற்றொரு ஜட்ஜியவர்களாகிய ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் வாதியின் நடத்தை மோசமென்றும் தானும் தகப்பனும் உடந்தையாகயிருந்து கிறயதாரனை மோசம் செய்யும்பொருட்டு இதர சொத்துக்களை நன்கொடையால் பெற்று தாவாசொத்துக்களில் பாகங்கேட்கவந்ததாகவும் அபிப்பிராயப்பட்டு அந்நிய இராஜ்ஜியத்திலுள்ள சொத்துக்களையும் பங்குபிரிக்கும்படி உத்தரவளிக்க பிரிட்டிஷ் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லாத போதிலும் பிரிட்டிஷ் இலாகாவுக்குப்புறம்பிலுள்ளசொத்துக்களைத்தனிமையாய் அநுபவிக்கும்பொழுது அந்த விஷயத்தையும் கவனித்துக் கக்ஷிக்காரர்களுக்குள்ள நியாயங்களைக் கணக்குப்படுத்த வேண்டியது உசிதமாகுமென்றும் அபிப்பிராயப்பட்டு சப்கோர்ட்டார்தீர்ப்பைக் காயப்படுத்தி வாதியின் பிராதையும் 2-வது அப்பீலையும் தள்ளுபடி செய்து விட்டார்கள். ஸி. பி. ஸி. 98-வது பிரிவின்படி 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய தீர்மானத்தின் சுருக்கமாவது:—

சப்கோர்ட்டார் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்ததற்கு மூன்று காரணங்களெடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதாவது:— (a) 1-ம் பிரதிவாதி பிரஞ்சு இலாகாவிலுள்ள தன்னுடையசொத்துக்கள் யாவற்றையும் பராதீனம் செய்துவிட்டு தன்மகனை 4-ம் பிரதிவாதியின் பேரிலும் அவனுடன் சொத்து பாத்தியதையடைந்த



5-ம் பிரதிவாதியின் பேரிலும் மோசக்கருத்துடன் இந்தப்பிராது செய்யும்படி ஏவினதாகச் சொல்லவேண்டும்; (b) வாதி தாவா நன்கொடையைப் பெற்றுக் கொண்டதும் மோச நடவடிக்கைதான். அவ்வித நன்கொடைப்பத்திரமில்லாவிடில் தாவாநிலங்களை 1-ம் பிரதிவாதியின் பாகத்திற்குக்கொடுக்கப்படலாம். அவரிடம் கிறயம்பெற்ற 4-5 பிரதிவாதிகளுடைய பாத்தியதைக்கு யாதொரு தொந்தரவும் கெடுதியும் சம்பவிக்க நியாயமிராது. வாதி தன்பேருக்கே தானப்பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு 1-ம் பிரதிவாதியிடம் கிறயம் பெற்றவர்களை மோசம் செய்யும்பொருட்டு இந்தப்பிராது கொண்டுவந்திருக்கிறார்; (c) 1-ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஜாமீன் பத்திரமும் 18-வருஷ காலாவதி கடந்தமையால் அது பயனற்றுப் போய்விட்டது. அதுவும் 4-5-பிரதிவாதிக்கு சேர்ந்த மோச சம்பவம் தான்.

அந்த மூன்று காரணங்களும் பிரயோஜனமற்றவைகளென்றே சொல்லவேண்டும். ஜாமீன் பத்திரத்தில் 4-ம் பிரதிவாதி அஜாக்கிறதையாக 18-வருஷ காலத்தை ஏன் குறிக்கச் சம்மதிப்படவேண்டும்? [மைனர் விக்கிறய காலத்தில் 8 வயதுள்ளவனாகயிருக்கமேஜராகி குறித்தகாலாவதியில் தகப்பனுடைய விநியோகத்தைநிராகரிக்கதாவா செய்யலாமென்றிருக்க 18 வருஷங்களைக் குறிப்பிடச்செய்தது யூகக்குறையாகும். அதற்கு வாதி ஜவாப்தாரியல்ல.] தகப்பன் மகனை வியாஜ்ஜியம் தொடுக்கும்படி ஏவினது தர்ம நியாயத்திற்கு விரோதமாகுமென்றாலும் வாதிக்கு சட்டப்படி ஏற்படுகிற பரிகாரத்தைத் தேடுவதில் அந்த சந்தர்ப்பம் ஏன் தடையாகவேண்டும்? வாதி மோசக்கருத்துடன் தன்பேருக்கு தானப்பத்திரம் ஏற்படுத்திக்கொள்வதற்கு வாதி அப்பொழுது 9 வயதுள்ள மைனரல்லவா? மைனர் மோசக்குற்றம் சாட்டப்படக்கூடுமோ? பிராதுக்கு 12 வருஷங்களுக்குமுன் பிறந்த நன்கொடைப் பத்திரம் மோசக்கருத்துடன் உண்டானதாகச் சொல்ல போதுமான ருஜு அம்சமே கிடையாது.

தவிர எதிர் தரப்பு வக்கீலவர்கள் இன்னும் மூன்று புதிய பாயிண்டுகளைச் சொல்லி வாதம் செய்கிறார்; அதாவது:— (1) தாவா விக்கிறயத்தொகை ரூ. 800-இல் முந்தியகடன் பாக்கிக்காகச் செல்லான ரூ. 350 போக பாக்கி 450-ம் 1-ம் பிரதிவாதி ரொக்கம் பெற்றுக்கொண்டபடியால் வாதியுடைய தாவா சொத்தின் பாகத்திற்குப் பிரதிப்பிரயோஜனமில்லாத காரணத்தால் விக்கிறயம் அம்மட்டில் ரத்தாகவேண்டுமானால் 1-ம் பிரதிவாதி பாதி சொத்தின் விக்கிறயத்தொகை ரூ. 400-ம் 4-ம் பிரதிவாதிக்கு வாபீஸ் செய்யவேண்டியதாகுமென்றும் அப்படிச் செலுத்தவேண்டிய ரூ. 400-யும் தகப்பன்பட்ட கடனாக பாவிக்கப்பட்டு அந்தக் கடன் தீர்பதற்குப் பதிலாக வாதியின் பாதி பாகம் விக்கிறயமானதை ரத்து செய்யாமல் உறுதிப்படுத்த லாயக்காகுமென்று சொல்லப்பட்டது. விக்கிறய காலத்தில் ஏற்பட்டிராமல் பிற்காலத்தில் வாதி ஆக்ஷேபித்தால் பிரதிப்பிரயோஜனக் குறைவு ஏற்பட்டு அதனால் உண்டாகக்கூடிய யாதொரு கடன் பாக்கியை ஷை கிறயத்தை உறுதிப்படுத்துவதற்காக தகப்பனுடைய முந்திய கடன் என்று மதிக்க நியாயமில்லையென்று தோன்றுகிறது. (2) முன்பட்ட கடனை (தகப்பன்கடனை) மகனுடைய சொத்தை விற்றுத் தீர்ப்பதற்கு சட்டமிருப்பதால் அந்தப்படி வாதியின் பாகத்தை ரூ. 400-க்கு விற்று ரூ. 350-யும் கடனுக்குச் செலுத்தி கையில் பாக்கி ரூ. 50-யும் ரொக்கம் பற்றிக்கொண்டதாலும் அதன்பின் தன்னுடைய பாகத்தையும் ரூ. 400-க்கு ரொக்கம் பெற்று விக்கிறயம் செய்தமையாலும், வாதியின் பாகம் விக்கிறயமானது வாதியால் ஆக்ஷேபிக்கத் தகாதென்று வாதிக்கப்பட்டது. ஆனால் 1-ம் பிரதிவாதி விக்கிறயத்தை அவ்விதமாய்த் தனித்தனி பாகமாய் மேற்கூறிய கருத்தின்படி விக்கிறயஞ் செய்ததாகச் சொல்ல நியாயமில்லை. தவிர 1912 (மதராஸ் வாரக்குறிப்புகளின் 851-இல் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறபடி) (Messrs ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் & ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும்) கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த இருவர்களில் ஒருவர் பொதுவான பாகத்தை விக்கிறயஞ் செய்துவிட்டால் மற்றவன் விக்கிறய சொத்தில் தன்னுடைய பாகத்தை அடையவேண்டுமென்று கிரயதார்மேல் வியாஜ்ஜியம் செய்தால் இருவருக்கும் பொதுவாய் ஏற்பட்ட கடனுக்காக வஜாவ

ன கிறயத்துகையில் ஒரு பாதியை கிறயதாரனுக்குச் செலுத்தாவிட்டால் அவன் அந்த சொத்து பாகத்தை அடைய நியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதுபோலவே வாதி முந்தியகடன் ரூ. 350-இல் ஒருபாதி 175-யும் கட்டித்தான் பரிகாரம் அடைய நியாயமுண்டென்று சொல்லவேண்டும். அந்த தீர்மானம் 23 மதராஸ் 89-க்கு விரோதமாக ஏற்பட்டதாகும். குடும்பப்பொது நன்மைக்காக (அவசியமான குடும்பச்செலவுக்காக) பட்ட கடனாயிருந்தால் மட்டும் அந்தக்கடனில் வாதி விகிதம் கொடுக்கக் கடமையாகுமென்றும் ஆனால் தகப்பன் தான் பிறந்ததற்குமுன் பட்டகடனிலும் அவ்விதமாய் பங்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லக்கூடாதென்பதாய் எதிரி வக்கில் வாதிக்கிறார், ஆனால் (1) மதராஸ் வாரக்குறிப்பில் 851-இல் தீர்மானித்திருக்கிற சட்ட அம்சங்களைப் பிரயோகிப்பதில் தகப்பன் பட்ட முந்தியகடனுக்கும் குடும்ப நன்மைக்காகப்பட்டகடனுக்கும் வித்தியாஸம் ஏற்படுத்த நியாயமில்லையென்று சொல்லவேண்டும். ஹிந்துலாவில் ஏற்பட்டிருக்கிற சில குறிப்பான முறைகளின்படி தகப்பன் பட்ட கடனை மகன் தீர்க்கக் கடவன் என்ற அம்சத்தைத் தவிர்த்து மற்றப்படி சகோதரர்களுக்குள் கடன் விஷயமாய் எந்த நியாயமுண்டோ அதே நியாயம் தகப்பனுக்கும மகனுக்கு முறியதாகும். ஆகவே பூர்வகடன் துகை ரூ 350-இல் இருவரும் பாகிக்கிறதாக இருந்தால் சமபாதியாக ஏற்படுத்தி 1-ம் பிரதிவாதியின் சொத்து பாகம் முன்கடன் ரூ. 175-க்கும் ரொக்கம் ரூ 225-க்கும் விக்கிறயம் செய்யப்பட்டதாகும் நிதானிக்கவேண்டும்.

மூன்றாவதாக எதிரிக்காக 1912-ம் வருஷத்திய 2-வது அப்பீல் 1429-இல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ அவர்களும் கொடுத்ததீர்மானம்எடுத்துக்காட்டப்பட்டு ரூ 350 கடன் துகையைச் செலுத்துவதற்காக ரூ 800 பெரும்படியான சொத்து முழுவதையும் விக்கிறயம்செய்வதனவசியமல்லவென்று வாதியின் ஆர்கியுமெண்டுக்கு எதிராகச் சொல்லப்பட்டது. அந்தக்கேசில் கடனுக்கு மேல்பட்ட சொத்தை ஒரு விதந்துவானவள் விக்கிறயஞ் செய்ததில் கிறயதாரன் அனந்தரவ்ரர்ஸ் பாத்தியதையுடையவனுக்குக் கடன்துகைக்கு மேல்பட்ட விக்கிறயத்துகையை செலுத்திவிடும் பட்சத்தில் அந்த கிறயம் ரத்தாகத் தேவையில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. குடும்ப அவசரத்திற்காக விக்கிறயத்துகையில் ஒருபாகம் சென்றால் பாத்தியஸ்தர்களில் இருவரும்பொதுவாய் கட்டுப்படவேண்டிய கடனில் ஒருபாகத்தைச் செலுத்தும்பட்சத்தில் கிறயத்தில் சேராத பாத்தியஸ்தனுக்கு கிறயதாரன் சொத்து பாகத்தை ஒப்பிவிக்கக்கடவனென்று மேற்கூறிய (1912) 1 மதராஸ் வாரக்குறிப்புகளின் 851-இல் அபிப்பிராயங்கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய நியாயங்களையும் 18 பம்பாய் 389-யும் 25 பம்பாய் 597-யும் அனுசரித்து தானபத்திரம் சட்டப்படி செல்லத்தகாதபோதிலும் பிரிட்டிஷ் இலாகாவிலுள்ள சொத்துக்கள் பாகப்பிரிவினையாகும்பொழுது அந்நிய ராஜ்ஜியத்தில் சொத்துக்களிருக்கும் சந்தர்ப்பத்தைக் கவனிக்காமல் பாகப்பிரிவினை செய்யவேண்டிய தவசியமாகும். (1913) மதராஸ் வாரக்குறிப்புகளின் 661-இல் குறித்திருக்கிற பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தில் கண்டபடி இங்கிலீஷ் சட்டமுறைகள் இந்தியாவில் இது விஷயமாய் அனுசரிக்கத் தக்கதாகாது. ஸி. பி. ஸி. 16-வது பிரிவின்படி நடக்கவேண்டியபடி சொத்து எந்தகோர்ட்டின் அதிகாரவரம்பிலிருக்கிறதோ அந்தக்கோர்ட்டார் அந்த சொத்தைப்பற்றி மட்டுமுள்ள வியவகாரத்தை சட்டப்படி பைசல்செய்யவேண்டிய தவசியமாகும். திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சொத்தை சுவாதீனமடைவதற்கு எதிரி தஞ்சாவூரிலிருக்கும் காரணத்தால் தஞ்சாவூர் கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்யக்கூடாது. திருநெல்வேலி சொத்தை சுவாதீனப் படுத்திக்கொடுக்காத எதிரியை தஞ்சாவூர் கோர்ட்டார் வாரண்டில் அரஸ்ட் செய்யக்கூடாது. (1904) மதராஸ் வாரக்குறிப்பு .........பக்கத்தில் சொல்லியிருக்கிறபடி 16 வருஷகாலமாய் நன்கொடையால் அனுபவித்து வருகிற பிரஞ்சு இலாகா சொத்தையும் பாக வியாஜ்ஜியத்தில் காட்டி பாகப்பிரிவினை வியாஜ்ஜியம் தொடுக்கும்படி கட்டாயப்படுத்தக்கூடாது. ஆகவே வாதிக்கு தாவாசொத்தில் ஒருபாதி சுவாதீனம் கிடைக்கவேண்டியது நியாயம்தான். ஆனால் கடன்துகையில் பாதியை வாதி கொடுக்கவேண்டியதும் நியாயமாகுமென்று மேல்கண்டவிதமாய் பிரதம டிக்கிரீயளித்தார்கள்.



கல்கத்தா ஹைகோர்ட் தீர்ப்பின்மேல் செய்யப்பட்ட

## பிரிவி கௌன்ஸில் கேஸ்.

—o—

1—டிசம்பர் 1913.

பரஹாம்தியோப்ரஸாத் Vs தாரா சந்தர்

காலுபாபு என்றவர் தன்னுடைய சொத்துக்களில் சிலவற்றை 1887 மேயில் அப்பீல் வாதிகளாகிய பரஹாம்தியோப்ரஸாத் வகையராவுக்கு அடமானம்வைத்து வாங்கியகடனைத் தீர்க்காமல் அதே சொத்துக்களை வாதி வகையராக்களுக்கு 1887 செப்டெம்பரில் இரண்டாவது அடமானம் வைத்து வாங்கினகடனை அடுத்த கார்த்திகைக்குச் சரியான நவம்பர் 1888-இல் தீர்த்துவிடுவதாய் ஒப்புக்கொண்டும் அந்தப்படி நடவாமல் முதல் அடமானதாரிடமேமறுபடியும் 1889 ஜுலையில் அதே சொத்துக்களை மூன்றாவது அடமானமாகக் காட்டி வேறுகடனும் வாங்கியிருந்தார். அப்பீல் வாதிகள் தங்களுடைய முதல் அடமானத்துகையை வசூலிக்கும் பொருட்டு வியாஜ்ஜியம்செய்து அடமானச் சொத்தை 1890 அக்டோபரில் ஏலத்திற்குக் கொண்டுவந்து வசூலிக்கப்பட்ட ஏலத்துகையிலிருந்து டிக்கிரீபாக்கிக்காகச் செல்லானதுபோக மிகுதியான ஏல விக்கிறயத்துகை ரூ 12,000-த்துச் சொச்சம் கோர்ட்டிலேயே டிபாஸிட்டாகக் கட்டப்பட்டிருந்தது. அந்தப்பிராதில் 2-வது அடமானதார்களாகிய வாதி வகையராக்கள் பார்டிகளாய்ச்சேர்க்கப்பட்டிருந்தும் அவர்கள் எக்ஸ்பார்டியாக யிருந்துயாதொரு நடவடிக்கையும் நடத்தாமல் நின்றுவிட்டார்கள். அப்பீல் வாதிகள் தாங்கள் 1889-இல் பெற்ற மூன்றாவது அடமானக்கடன் துகையை வசூலிக்கும்பொருட்டு வியாஜ்ஜியம் செய்து டிக்கிரிபெற்று அந்த வியாஜ்ஜியத்தில் வாதி வகையராக்களாகிய 2-வது அடமானதார்களை முன்போல பார்டிகளாய்ச் சேர்க்காமல் அவர்களுக்கு யாதொரு நோட்டீஸும் கொடுக்காமல் 1892-எப்பிரல் மாதத்தில் டிக்கிரியின் பாக்கிக்காக கோர்ட்டில் டிபாஸிட் கட்டப்பட்டிருந்த துகை பூராவையும் பெற்றுக்கொண்டார்கள்.

2-வது அடமானதார்களாகிய வாதி வகையராக்கள் நவம்பர் 1900-இல் மாங்கீர் சப்கோர்ட்டில் அப்பீல் வாதிகள்பேரில் அடமான பாக்கியும் அதற்குறிய வட்டியும் அவர்கள் கோர்ட்டில் டிபாஸிட் கட்டியிருந்த துகையிலிருந்து கொடுக்கக் கடமைபட்டவர்களென்று சொல்லி மூன்றாவது அடமானத்துகை செல்லாகுமுன், தங்கள் பாக்கி தீரவேண்டிய நியாயத்தைப் பொறுத்து மாங்கீர் சப்கோர்ட்டில் அசல் தாவா செய்தார்கள். பிரதிவாதிகள் இத்தகைய தாவாவுக்கு லிமிடேஷன் ஆக்டில் பிரத்தியேகமான காலாவதி ஏற்படாதபடியால் 120-வது ஆர்டிகில்படி வியாஜ்ஜியமூலம் ஏற்பட்டமுதல் அதாவது 1892 எப்பிரல் மாதத்தில் அப்பீல் வாதிகள் கோர்ட்டிலிருந்து துகையைப் பெற்றுக்கொண்ட தேதிமுதல் 6-வருஷங்களுக்குள் இந்த தாவா செய்யப்படாதபடியால் பிராது காலாவதி தோஷமென்று ஆக்ஷேபணை செய்தார்கள். அசையாப் பொருளின் ஈட்டின்பேரில் செலுத்திய கடன் பாக்கியை வசூலிக்க காலாவதி 132-வது ஆர்டிகில்படி 12 வருஷமென்று வாதி சொல்லுகிற சமாதானத்தை ஒப்புக்கொண்டு சப்கோர்ட்டார் வாதிக்கனுகூலமாய் டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் எதிரிகள் கல்கத்தா ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யவே அப்பீலை ஈரங்கிகேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் ஹெண்டர்ஸன் துரையவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் கேயிட் துரையவர்களும் காலாவதி பாயின்டைப்பற்றி வித்தியாஸமான அபிப்பிராயப்பட்டபடியால் அந்த விஷயம் மூன்றாவது ஜட்ஜியவர்களாகிய ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸேல் துரையவர்களால் ஈரங்கி கேட்கப்பட்டு அவர்கள் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹெண்டர்ஸன் துரையவர்களுடன் ஒத்தபிப்பிராயமாய் 132-வது ஆர்டிகில்படி வாதியின் பிராதுக்கு காலாவதி தோஷம் கிடையாதென்று தீர்மானித்தார்கள். எதிரிகளுக்கு ஹைகோர்ட் தீர்மானம் விரோதமாகப் போனபடியால் பிரிவிகௌன்ஸில் அப்பீல் செய்ததில் அங்கும் அப்பீல் தள்ளுபடியாச்சுது. பிரிவிகௌன்ஸிலாருடைய தீர்ப்பின் சுருக்கமாவது:—

எதிரிகளுக்குதங்கள்-மூன்றாவது அடமானத்திற்கு முந்திய வாதியின் அடமானம் தீரவில்லை

வென்பது நன்றாய்த்தெரிந்தும், முந்தியபிராதில் அவர்களைப் பார்டியாகச் சேர்த்திருந்தும் இந்தப் பிராதில் அவர்களை மோசக்கருத்துடன் சேர்க்காமல் அவர்களுடைய தகவலில்லாமல் அவர்களுடைய அடமானத்திற்கு ஈடாக வைக்கப்பட்ட சொத்தின் விக்கிரய பாக்கித் தொகையை தாங்களே ஜயமைனின் பாக்கிக்காக கைப்பற்றிக் கொண்டுவிட்டார்கள். அவ்விதமான சந்தர்ப்பத்தில் எதிரிகள் தொகையைப்பெற்றுக்கொண்டதில் வாதிக்கு டிரஸ்டியாக அதைத் தங்கள் வசத்தில் வைத்திருந்ததாகச் சொல்லலாம். [அவ்விதமாய் வைத்துக்கொண்டிருந்தமையால் வாதிக்கு வட்டி கொடுக்க சப்கோர்ட்டார் மறுத்துவிட்டார்போலும். அல்லது முதல் பிராதில் ஏலமானபொழுது வாதி அஜாக்கிரதையாகயிருந்தமையால் சப்கோர்ட்டார் வட்டித் தொகைக்கு டிக்கிரீயளிக்கவில்லை யென்றும் யூகிக்கலாம்.] வாதிக்கு ஈடாக வைக்கப்பட்ட சொத்தை விற்று முதல் செய்ததில் மிகுதியான தொகை எதிரிகையில் சென்றதால் அந்தத்தொகையே ஈட்டுச் சொத்தாக பாவிக்கப்பட்டு அதன்பேரில் தொடர்ந்து கடனைத் தீர்த்துக்கொள்ள லாயக்குண்டென்று சொல்லவேண்டும். அதாவது ஈட்டு சொத்தின்பேரில் தொகிர்ந்த பாவனையாக 132-வது ஆர்டிகில்படி 12 வருஷ காலாவதியை அனுஷ்டிக்க நியாயமுண்டு.

எதிரிகள் தப்பாக மிகுதியான ஏல விக்கிரயத்தொகையை அடைந்தால் அந்த தப்பிதத்திற்காக அவர்கள்மேல் பழைய ஸி. பி. ஸி. 295-வது பிரிவின்படி விண்ணப்பம் கொடுத்துத் திரும்பி அடையப் பிரயத்தனப் படவேண்டும். அவ்வித நடவடிக்கை நடத்த காலாவதி கடந்துவிட்டதாகும். ஆகையால் இந்தப்பிராதின் அம்சம 295-வது பிரிவின்படி ஏற்பட்டதாகச் சொல்லக்கூடாது. அடமான சொத்தானது முதல் பிராதில் ஏலம் போடப்படாதிருந்தால் வாதிக்குப்பரிகாரம் கிடைத்திருக்கவேண்டுமல்லவா. அதுபோலவே எதிரி மோசக்கருத்துடன் அடமான சொத்தின் விக்ரயத்தொகையை அபகரித்துக் கொண்டால் அந்தத்தொகை அடமான சொத்தாகவே சொல்லப்படவேண்டும். அந்தத் தொகையின்பேரில் அடமான வில்லங்கம் சுமத்தப்பட்டிருக்கிறதாகத தீர்மானிக்கத் தேவையில்லை. இந்ததாவா அசையாப்பொருளின் ஜாமீன்பேரில் பாத்தியப்பட்ட தொகையை வசூலிக்கக் கொண்டுவரப் பட்டதாகச் சொல்லவேண்டும். அதற்கு 132-வது ஆர்டிகில்படி 12-வருஷ காலாவதியாகும். வாதியின் பிராது காலாவதி தோஷமல்ல. ஆகவே மேற்கூறிய காரணத்தால் பிரிவிகௌன்ஸில் அப்பீல் தள்ளுபடி ஆச்சுது.

——o——

### அயோத்தி பட்டணத்தின் ஜூடிஷியல் கமிஷனர் தீர்மானத்தின்பேரில் செய்யப்பட்ட

## பிரிவிகௌன்ஸில் அப்பீல்

——:O:——

பிஷுனாத்ஸிங் என்றவருடைய மருமகள் பால்ராஜ் கௌவார் என்றவள் தன் கணவன் பிருஜன் மோஹன் ஸிங் இறந்த பின் தன் மாமனார் நன்கொடையளித்த சொத்துக்களை ஸர்வஸ்வதந்தரபாத்தியத்துடன் வெகு காலம் அனுபவித்து வந்து அந்த சொத்துக்களை மானேஜ்மெண்டு செய்வதற்காக காளி பக்ஷ ஸிங் என்றவரை பவர் ஆப் அட்டார்னி பத்திரத்தின் பேரில் தனக்கு முக்தியாராக நியமித்து அந்த முக்தியாரியத்தில் அதிக சினேகமுண்டாகி அவரால் இரண்டு பெண்பிள்ளைகளையும் பெற்றாள். இருவரில் ஒரு பெண் இறந்துபோக காளிபக்ஷ என்றவருடைய குமாரனாகிய கங்காபக்ஷ் ஸிங் என்ற பையன் பேரில் அதிக சிறுபிள்ளை முதல் வாஞ்சையாகி தன்னுடைய சொத்துக்களில் ஒரு பாகத்தை அந்த பையனுக்கு 1903-இல் நன்கொடையாக அளித்து தஸ்தவேஜெழுதிக்கொடுத்து சில காலத்திற்குப்பின் இறந்துபோனாள். பிஷுனாத்ஸிங் என்றவருடைய தூரபந்துத்வத்தைப்பாராட்டி ராம்கோபால்ஸிங் என்றவர் மேற்கூறிய நன்கொடைப் பத்திரம் மனப்பூர்வமாய் எழுதிக்கொடுக்கப்பட்டதல்லவென்றதாகச் சொல்லி சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்று ஷை சொத்துக்களை ஸர்வபாத்தியத்துடன் சுவாதீனமடையும் பொருட்டும் மத்தியகால வரும்படிக்காகவும் ஷை கங்காபக்ஷ்ஸிங் என்றவனுக்குப்பிறகு ஷை சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்த காளிபக்ஷ்ஸிங் வகையறாக்களைப்பிரதிவாதிகளாய்ச்சேர்த்து ராப்பிபாரிலி சப்கோர்ட்டில் 1907-ம் வருஷத்தில் அசல் தாவா செய்தார்.



சப்கோர்ட்டார் நன்கொடைப்பத்திரம் யதார்த்தமாய்ப்பிறந்ததாகவும் மனப்பூர்வமாய்எழுதிக்கொடுத்ததாகவும் தீர்மானித்து வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார். அதன்மேல் வாதி அயோத்தியில் ஜூடிஷியல் கமிஷனரிடம் அப்பீல் செய்ததில் அங்கு சப்கோர்ட் தீர்மானம் மாற்றப்பட்டு வாதிக்கனுகூலமாக டிக்கிரீயாச்சுது. எதிரிகள் அதன்மேல் பிரிவிகௌன்ஸிலுக்கு அப்பீல் செய்ததில் அங்கு சப்கோர்ட்டார் தீர்மானம் சரியானதென்று அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராது செலவுடன் தள்ளுபடியாச்சுது. பிரிவிகௌன்ஸில் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:--

நன்கொடைப் பத்திர விஷயமாய் சப்கோர்ட்டார் ஏற்படுத்தின இஷ்யூக்களாவது (1) பால்ராஜ்கௌவாரம்மாள் பத்திரத்தில் கையொப்பம் செய்தது வாஸ்தவமா! (2) அந்தம்மாளுடைய தகவலின்றியில் அது எழுதிமுடிக்கப்பட்டதா! அந்த ஏற்பாட்டின் விவரம் இன்னதென்று அந்தம்மாளுக்குத் தெரியுமா! (3) அந்தப்பத்திரம் எழுதப்படுங்காலத்தில் அந்தம்மாள் சித்தசுவாதீனமில்லாமலிருந்தாளா! இந்த மூன்று பாயின்டுகளைப் பற்றி சாட்சியம் விசாரித்து வாதிக்குப் பிரதிகூலமாய் தானபத்திரத்தைக்காயப்படுத்தியிருக்கிறார்கள். வாதி தரப்பில தானபத்திரத்தை ரத்து செய்வதற்காக விடப்பட்ட சாட்சியங்கள் முற்றிலும் நம்பத்தக்கதல்லவென்றும் சாட்சிகள் கட்டுமானமாக பொய் வாக்குமூலம் கொடுக்க வந்ததாகவும் சப்கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். அதற்காகக்கொடுக்கப்பட்ட காரணங்களைப்பற்றி அப்பீல் கோர்ட்டார் தீர்மானத்தில் யாதொரு ஆக்ஷேபனையும் சொல்லவில்லை. ஆகவே பத்திரத்தைப் பொய் யென்றடிக்க வாதி பிரயத்தனப்பட்டது பிரயோஜனப்படவில்லை. பத்திரத்தில் அந்தம்மாள் கையொப்பம் செய்த விஷயமும அதில் நியாயப்படி சாட்சி யொப்பம் செய்யவேண்டிய மனுஷியாளுடைய மையெழுத்தும் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்த சப்ரிஜிஸ்டாருடைய சாட்சிவாக்குமூலத்தினுடைய உண்மையும் இரண்டு கோர்ட்டிலும் நிராக்ஷேபனையாக நம்பப்படுகிறது. அப்பீல் கோர்ட்டார் பத்திரத்தை ரத்து செய்வதற்குக்காரணமாக பால்ராஜ் கௌவார் அம்மாள் தன் ஆசைநாயகனுடைய மகனுக்கு நன்கொடை அளித்தமையால் யதார்த்தமாய் அந்த நன்கொடை தன்னுடைய நாயகனுக்கே அளித்ததாக மதிக்கப்படவேண்டுமென்றும் தவிர அவனே தனக்கு பதிலாய் சகல காரியங்களையும் நடத்தி வருகிற முக்தியாராகயிருக்க அவனுடைய தூண்டுகோலின் பேரில், (எவுதலின் பேரில்,) ஷை பத்திரம் எழுதிக்கொடுத்ததாகப் போதுமான பிரத்தியட்ச சாட்சியமில்லாவிட்டாலும் சட்டத்தில்இவ்வித நிலைமையிலுள்ள ஸ்திரீயின் நன்கொடைவிநியோகமான துபட்சபாதமில்லாவதர்களுடைய யுக்தியோஜனையின் பேரில் செய்யப்பட்டதாக ஏற்படவேண்டியதவசியமென்று முறை ஏற்பட்டிருப்பதால் அவ்விதமான யோஜனையின்பேரில் பத்திரம் பிறந்ததாக ருஜூபாகம் இல்லாதபடியால் கோர்ட்டார் அவ்வித பத்திரத்தை ரத்து செய்வது அவசியமாகுமென்ற நியாய முறையை அனுசரித்து மேற்கண்ட விதமாய் சப்கோர்ட் தீர்மானத்தை மாற்றியிருக்கிறார்கள். அவ்வித அபிப்பிராயத்திற்கு பலசந்தர்ப்பங்களும் ஒற்றுமையாகயிருக்கிறது. அதாவது பத்திரம் எழுதிக்கொடுத்தவள் கோஷாஸ்திரீயாகயிருக்கிறாள். அவ்விதநிலைமையால் பத்திரத்தை தப்பென்று ஆக்ஷேபிக்கிறவர்கள் மீது ருஜூப்படுத்தும் பொறுப்பு ஏற்படாமல் பத்திரத்தால் நன்மை அடைகிறவர்கள் சகல விஷயத்தையும் ருஜூப்படுத்த வேண்டியதாகிறது. அதாவது பத்திரத்தின் சங்கதிகள் யாவற்றும் அந்தம்மாளுக்குத் தெரியுமென்றும் அதை நன்றாய்ப்படித்துக்காட்டி அதை சரியென்று அங்கீகரித்துக்கையொப்பம்செய்ததாகவும் ருஜூப்படுத்தவேண்டிய பொறுப்பானது நன்கொடைபெற்ற அல்லது அதினால் நன்மையை அடைந்தவர்கள் மீது ஏற்படுகிறது. தவிர [illegible] எவுதலின் பேரிலல்லாமல் [illegible] இச்சை [illegible] மனஞ்சார்ஜியல் [illegible] பாரபக்ஷமில்லாத யோஜனை [illegible] ருஜூப்படுத்தப்படவேண்டும். சட்டமுறையானது அவ்விதமாய் ஏற்பட்டிருப்பதில் சந்தேகமில்லை. அந்த முறையானது (1912) 34 அலகபாத் 455 இல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற பிரிவிகௌன்ஸில் கேஸில் அதிக உறுதியாய் விளம்பியிருக்கிறது. [கோஷாஸ்திரீயாகயிருக்கும் சந்தர்ப்பமும்

நன்கொடையைத்தன்முக்தியாருடைய மகனுக்கே அளிக்கிற விஷயமும் அந்த முக்தியார் தன்னுடைய ஆசை நாயகனாயிருக்கிற சந்தர்ப்பமும் சேர்ந்து பத்திரத்தின் அம்சத்தை உறுதிப்படுத்தும் பொறுப்பை எதிரியின்பேரில் தள்ளிவிடுகிறதாச்சுது.] அன்றியும் இந்தப்பிராதில் கானிபக்ஷ சாட்சியாகக்கோறப்படவில்லை. அந்த விஷயமும் எதிரிக்குவிரோதமாக நிர்ணயிக்கத்தக்க கஷ்டமான பாயிண்டாகயிருக்கிறது. வாதிக்கு அனுகூலமாய் மேற்கூறிய விஷயங்கள் யோஜிக்கப்படலாமென்றால் எதிர் தரப்புக்காக அடியில்கண்ட விஷயங்கள் அதிக திருப்திகரமாயிருக்கிறபடியால் வாதியின் பிராது தள்ளுபடியாகவேண்டியது நியாயமென்று சொல்லவேண்டும்.

மேற்கூறிய அலகபாத் பிரிவி கௌன்ஸில் கேஸில் நன்கொடையளித்தவருடைய சகல சொத்துக்களும் அதனால் விநியோகமானபடியால் அவர் சுத்த பாபராய்ப்போய்விட்டார். அப்படிப்பட்ட நன்கொடை மனப்பூர்வமாய்ச் செய்யப்பட்டதாவென்று ருஜுப்படுத்தப்படவேண்டிய பொறுப்பு எதிரியின் மேல் வைக்கப்பட்டது நியாயமே. இந்தக்கேஸில் பால்ராஜ் கௌவார் சொத்தின் ஒரு பாதியைத் தனக்கு வைத்துக்கொண்டு மறுபாதியைமட்டும் நன்கொடையளித்திருக்கிறாள். பத்திரம் கையொப்பமிட்டவிஷயமும் ரெஜிஸ்டரானவிஷயமும் இரண்டுகோர்ட்டாராலும் நம்பப்பட்டு அது நிராக்ஷேபணையாக நிற்கிறது. அவளுக்கு நன்கொடை அளிக்கத்தக்க ஸ்வதந்தர பாத்தியதை உண்டென்பதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. பத்திரத்தைப் படித்துக்காட்டி விவரித்த விஷயமும் இரண்டு கோர்ட்டாராலும் நம்பப்படுகிறது. ஆனால் அசல் கோர்ட்டார் பரிஷ்காரமாய் அர்த்தபாவம் விவரிக்கப்பட்டதாக நம்பியிருக்க அப்பீல் கோர்ட்டார் சிரத்தையில்லாமல் அஜாக்கிரதையாய் படித்துக்காட்டப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அப்பீல் கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தின் நியாயமானது பால்ராஜ் கௌவார் அம்மாளுடைய வேலைத்திறமையையும் மானேஜ்மெண்டு செய்து வரக்கூடிய சக்தியையும் நிதானித்துச்சொல்லப்பட வேண்டியதாயிருக்கிறது. இது விஷயமாய் சப்கோர்ட்டாருடைய அபிப்பிராயம் சரியென்று சொல்லத்தக்கதாகிறது.

அநேக வருஷகாலம் அந்த அம்மாளே கணக்கு புஸ்தகங்களைப்படித்து வந்ததாகவும் கிராமகாரியங்களைத்தானே நேரில் மானேஜ்மெண்டு செய்து வந்ததாகவும் சப்கோர்ட்டார் சொல்லுவதும் தவிற அப்பீல் கோர்ட்டாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பால்ராஜ் கௌவார் அம்மாள் அதிக திருடமனதுடையவளென்றும் மறுமகள் மாமனுருக்கு கீழ்ப்படிவதை விட மாமனார் பிஷ்ணாத் மறுமகளுக்கு பயந்து அடங்கி நடந்ததாக ருஜுவாகிறதென்றும், வாதி தரப்பு சாட்சிகளே அந்தம்மாள் கணக்குகளில் கையொப்பம் செய்வதாயும் காரியாதிகளைத்தானே நடத்திவந்ததாகவும் ஒப்புக்கொள்ளுகிறதாகவும் அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பில் விளம்பியிருக்கிறார்கள். ஆகையால் இந்த கோஷாஸ்திரீயானவள் தன்னுடைய லாப நஷ்டத்தை நன்றாய் அறியக்கூடிய நிலைமையிலுள்ள வளென்பதிலும் தான் செய்யுங்காரியங்களின் பலாபலன்களின்னதென்று நன்றாய்த் தெரிந்தவளென்பதிலும் யாதொரு சந்தேகமில்லை.

கானிபக்ஷசிங்குடைய ஏவுதலாலும் பலவந்தத்தாலும் நன்கொடைப்பத்திரம் எழுதிக்கொடுத்ததாக ருஜு அம்சம் கிடையாது. அவர் முக்தியாராகயிருப்பதாலும் சொத்துக்கள் யாவற்றையும் மானேஜ்மெண்டு செய்து வருவதாலும் தன் மகனுக்கு நன்கொடையளிக்கும் ஏவுதல் செய்திருக்கலாமென்று அனுமானிக்கவேண்டியதாகும். இவ்வித அனுமானத்தில் இந்த முக்கியமான பாயிண்டுவிடப்பட்டது மிகவும் விசனிக்கத்தக்கது. முக்தியார் காரியாதிகளை ஒழுங்கீனமாக நடத்திவந்ததாகவும் அந்த அம்மாளுக்கு எப்பொழுதாகிலும் விரோதமாக மீறி நடந்து தடுத்துப்பேசியிருப்பதாயும் யாதொரு ருஜு அம்சமும் கிடையாது. இவ்வித சந்தர்ப்பத்தில் அளிக்கப்பட்ட நன்கொடையானது பட்சபாதமில்லாத யோஜனையின்பேரில் நடந்ததாக ஏற்படாத பட்சத்தில் அது சட்டப்படி செல்லத்தக்கதல்லவென்று அதாரிடியாதொன்றும் தேவையில்லையென்று அப்பீல் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்க அந்த அபிப்பிராயப்படாத பட்சத்தில் அப்பீல் கோர்ட்டார் சப்கோர்ட் தீர்மானத்தை மாற்றியிருக்கமாட்டார்களென்று சொல்லலாம். சட்டத்தில் அவ்விதமான பாரபட்சமில்லாதவர்களுடைய புத்திமதியின் பேரில் நன்கொடையளிக்கவேண்டுமென்று ஏற்படவில்லை தன்ஸ்வயஇச்சையால் நடந்தாளா என்றுயோஜித்துப்பார்த்து அப்படியே மனப்பூர்வமாயும் ஸர்வசம்மதத்துடனும் நடந்ததாக ஏற்பட்டால் புத்திமதி கொடுக்கப்பட்ட விஷயத்தை கவனிக்கத்தேவையில்லை. ஸ்வய இச்சையாகவே அவள் நடந்ததாகச்சொல்லவேண்டும். இதராளுடைய புத்திமதியைக் கோறியிருந்தாலும் இவ்விதமான நன்கொடையை அளித்திருப்பாளென்றே நிதானிக்கவேண்டும். கோஷாஸ்திரீயென்றதாக பலவிதமான பாதுகார்ப்பும் ஏற்பட்டிருந்தும் அவளுடைய பாத்தியதைக்கு நிர்பந்தம் உண்டாகும்படி அந்த நிலைமையை உபயோகப்படுத்தக்கூடாது. ஒருவரும் மோசம் செய்யாதபடிக்கு ருஜு அம்சத்தின் பொறுப்பைஎதிரிக்கு மாற்றிவிட சட்டமிருந்தபோதிலும் சட்டப்படி நன்கொடை அளிக்க அதிகாரமிருக்க அதை ஸ்வய இச்சையால் மனம்போல் நடத்துவதற்குத் தடையாக அந்த கோஷாத் தனத்தை உபயோகப்படுத்தக்கூடாது. ஒருவக்கீலிடம் யோஜனை கேட்டிருந்தால் தானப்பத்திரமல்லாது வேறு விதமாய் தன் கருத்தை முடிக்கும் வண்ணம் சட்டத்திற்கிசைந்த தஸ்தவேஜை ஏற்படுத்தியிருக்கக்கூடும். 15 கல்கத்தா 634ஐபார்க்கவும்.

ஆகவே மேற்கூறிய காரணங்களால் சப்கோர்ட் தீர்மானம் காயமாகி நன்கொடைப்பத்திரம் நிலைத்து வாதியின் தாவா தள்ளுபடியாச்சுது.

---

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)

சேங்கல்பட்டு ஜில்லா.

Crl R. P. 49 & Crl Rr Case 57 of 1914

23 ஜனவரி 1914

திருவேங்கடமுதலி—5-வது எதிரி, மனுதார் சைதாப்பேட்டை தாலூக்கா டிப்டி மாஜிஸ்டிரேட் முன்பாக குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள் ப்ராஸிக்யூஷன் தரப்பில் சாட்சிகளாக வந்த சிலர்பேரில் கௌண்டர்கேஸ் எடுத்ததில் இரண்டு கேஸுகளிலும் எதிரிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டன. ஒரு கேசில் 5-வது எதிரி திருவேங்கட முதலி டிப்டி மாஜிஸ்டிரேட்டின் தீர்ப்பின்பேரில் செங்கல்பட்டு ஸெஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் அங்கும் தண்டனை காயமாகி ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு தாகல் செய்தார். ரிவிஷன்மனு எற்றுக்கொள்ளப்படாமல் தள்ளுபடியாச்சுது. அந்த உத்தரவில் கொடுத்த அபிப்பிராயச் சுருக்கமாவது:—

குற்றம் நடந்ததைப் பற்றிய வாதிதரப்பாருடைய வரலாறு முற்றிலும் மெய்யாகயிருந்தாலும் அல்லது எதிரி தரப்பின் வரலாறு முற்றிலும் மெய்யாக இருந்தாலும் நடந்த குற்றம் ஒன்றாகத்தானிருக்கவேண்டும், அதில் மனுதார் வகையறாக்கள் செய்ததாகச் சொல்லப்பட்ட குற்றம் பொய்யாக இருக்கவேண்டும் அல்லது வாதி தரப்பு சாட்சிகளில் சிலர் தண்டனையடைந்த கௌண்டர்கேஸில் எற்பட்ட குற்றம் பொய்யாக இருக்கவேண்டும். ஆகவே இரண்டு குற்றங்களிலும் எதாவது ஒன்று பொய்யாக இருக்கக்கூடியதானாலும், ஸெஷன்ஸ் ஜிட்ஜியவர்கள் இரண்டு பிராதுகளிலும் சொல்லியிருக்கிற குற்றசம்பவங்கள் மெய்யானவைகளென்று அபிப்பிராயப்பட்டால் அந்தத்தீர்மானம் சட்ட விரோதமானதல்லாது. எனெனில் வழக்காடுகிற இருதரப்பாரும் தங்கள் தங்கள் கக்ஷியாருக்குத் துன்பம் உண்டான விஷயத்தைக்கண்டு செய்த பிராதே நிஜமானதென்று ருஜுப்படுத்தப் பிரயத்தனப்பட்டிருப்பது இயற்கையாகும்.

போலீஸாரிடம் கொடுத்த ஸ்டேட்மெண்டுகளுக்கு நகல் மனுதாருக்குக் கொடுக்க மறுத்துவிட்டதால் அந்த ரிகார்டைக்கொண்டு வாதி தரப்பு சாட்சிகளைக் குறுக்கு விஜாரணை செய்வதற்கு சவுகரியப்படாமல்போனதாகவும் அவ்விதமாய் மாஜிஸ்டிரேட்டார் நகல் கொடுக்க மறுத்தது சட்டவிரோதமென்றும் மனுதாருக்காக வாதிக்கப்பட்டது. கிரிமினல் புரொசீஜிஸர் கோட் 162-வது பிரிவின் 1-வது கிளாஸில் போலீஸாரிடம் கொடுத்த ஸ்டேட்மெண்டுகளுக்கு நகல் எதிரிக்குக் கொடுப்பதினால் நியாயத் தீர்மானமடைவதற்கு ஸாதகமுண்டென்று யுக்தமாய்த் தோற்றுமிடத்து மாஜிஸ்டிரேட்டார் நகல்கொடுக்க உத்தரவளிக்கலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேசின் ரிகார்டுகளைப் பார்க்குமிடத்து எதிரிக்கு நகல் கொடுக்க மறுத்ததாகமட்டும் கண்டிருக்கிறது. மாஜிஸ்டிரேட்டாருக்கு யுக்தமென்று தோன்றாதபடியால் அவ்வித உத்தரவளிக்கப்பட்டதாகச் சொல்லவேண்டும். எதிரி நகல் பெற்றுக்கொள்ளும் பாத்தியதையுடையவனல்ல. மாஜிஸ்டிரேட்டாருக்கு யுக்தமென்று தோன்றினால் தான் நகல் பெற்று அதைக் கேசில் உப

யோகப்படுத்தலாம். 33 கல்கத்தா 1023-இலும் 36 கல்கத்தா 560-இலும் கொடுத்திருக்கிற அபிப்பிராயம் மேற்கூறிய கருத்துக்கு விரோதமாகயில்லை. மாஜிஸ்டிரேட்டார் உத்தரவில் நகல் எதிரிக்குக் கொடுப்பதினால் நியாய பரிபாலனத்திற்கு யுக்தமானதல்லவென்று காணவேண்டியதனவசியம்.

———:O:———

(Messis ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

## தென்ஆர்காடு ஜில்லா

## Crl R. P. 95 & R. C 673,of 1813

## 22 ஜனவரி 1914.

[illegible] 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுமுன் இ. பி. கோ, 426-440-வது பிரிவுகளின்படி எதிரியின்பேரில் வாதி கொடுத்த பிராதை விஜாரணைக்குக் குறிப்பிட்டிருந்த தேதி வாதிக்கு வாய்மொழியாய்க் கோர்ட்டாரால் தெரியப்படுத்தப்பட்டும் அந்தத்தேதியில் வாதிகோர்ட்டுக்கு ஆஜராகாதிருக்கும்பொருட்டு வாதி ஜிஞ்ஜிக்கு வந்த சமயத்தில் எதிரி ஷெ வாதியை போலீஸாரைக்கொண்டு ஒரு நியூஸென்ஸ் கேஸில் பிடித்து அரஸ்ட் செய்து ஷெ பிராதின் விஜாரணைக்கு வராதபடி தடைசெய்து விட்டபடியால் மாஜிஸ்டிரேட்டார் மேற்சொல்லிய சந்தர்ப்பம் தெரியாதவராக பிராதைவிஜாரிக்கும்பொழுது எதிரி ஆஜராகி டிபென்ஸ்செய்யவே வாதி ஆஜராகாத காரணத்தால் கிரிமினல் புரோஜிஸர் கோட் 247-வது பிரிவின்படி (கேஸை நிறுத்திவைக்க யுக்தமான காரணங்கள் யாதொன்றும் புலப்படாதபடியால்) எதிரியை விடுதலை செய்துவிட்டார்கள். ஷெ நியூஸென்ஸ் கேஸின் விஜாரணையில் எதிரியின் ஏவுதலின்பேரில் வாதி அரஸ்ட் செய்யப்பட்டதாகவும், ஷெ பிராதின் ஈரங்கிக்கு ஆஜராகாமல் தடுக்கும் பொருட்டே செய்த ஏற்பாடென்றும், நியூஸென்ஸ் கேஸானது பொய்யென்றும், தீர்மானிக்கப்பட்டு தள்ளுபடியாச்சுது. அதன்பிறகு வாதி தன்னுடைய நிஜமான பிராதில் நியாயம் அடையாமல் எதிரி விடுதலை அடைந்ததைக்கேட்டு நியூஸென்ஸ் கேஸின் தீர்ப்பைக்காட்டி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டிடம் விண்ணப்பம்கொடுத்து பிராதை மறு விஜாரணைக்கு எடுத்துக்கொள்ளும்படி உத்தரவு பிறக்கவேண்டுமென்று கோறிக்கொண்டதில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் கிரிமினல் புரோஸிஜர் கோட் 438-வது பிரிவின்படி ஹைகோர்ட்டாருக்கு ரிபோர்ட் செய்து ரிவிஷன் அதிகாரத்தில் விடுதலை உத்தரவை மாற்றி பிராதை மறு விஜாரணைக்கு உத்தரவு கொடுக்கும்படி அபேக்ஷித்தார்கள்.

கவர்ன்மெண்ட்டுக்காக பப்ளிக் பிராஸிக்யூடரவர்களுடைய ஆர்கியூமெண்டைக்கேட்டு ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்துரையவர்கள் கொடுத்த தீர்மானச் சுருக்கமாவது:— மாஜிஸ்டிரேட்டார் ஒரு கேஸில் வாதி ஆஜராகாத காரணத்தால் 257-வது பிரிவின்படி எதிரியை விடுதலை செய்தபிறகு, வாதி ஆஜராகாததற்கு சரியான முகாந்தரங்கள் சொல்லப்பட்டபோதிலும் அந்தக் கேசை மறுபடியும் பயிலுக்கெடுத்துக்கொள்ளச் சட்டமில்லை. அதுபோலவே தீர்ப்பளித்த பிறகு வேறு புதிய சாட்சியங்கள் ஏற்பட்ட காரணத்தால் முன் செய்த தீர்ப்பைத் திருப்பி யோஜித்து மாற்றுவதற்கும் சட்டம் கிடையாது. ஹைகோர்ட்டார் ரிவிஷன் அதிகாரத்திலாவது அப்பீல் முறையிலாவது, விஜாரணைகாலத்தில் கிடைக்கக்கூடாத சாட்சியம் அகப்பட்ட காரணத்தாலாவது, வாதி ஆஜராகி கேஸை நடத்துவதற்குத் தடையான காரணம் மன்னிக்கத்தக்க போதுமானதென்ற நிமித்தத்தாலாவது விடுதலை உத்தரவை ரத்து செய்வதற்கு சட்டத்தில் அதிகாரம் கொடுக்க உத்தேசித்திருப்பதாக அபிப்பிராயம் கொள்ள யோஜனையாகயிருக்கிறது. அதாவது அவ்வித அபிப்பிராயம் கொடுக்க மனமில்லை. ஆனால் இந்தக்கேஸில் எதிரியினுடைய தந்திரத்தால் வாதி ஆஜராகாமல், விடுதலை உத்தரவு பிறக்க நேரிட்டிருக்கிறது. அது கோர்ட்டாரைச் செய்த மோசமென்றும் சொல்லலாம்: இந்த சந்தர்ப்பத்தில் உத்தரவளித்த கோர்ட்டார் அதை ரத்து செய்யக்கூடாதபோதிலும் நீதிநெறி தவறிப்போகாதபடிக்கு ஹைகோர்ட்டார் ரிவிஷன் அதிகாரத்தில் பிரவேசிப்பது சரியான யுக்தமென்று சொல்லவேண்டும். கிரிமினல் புரோஸிஜர் கோட் 445-வது பிரிவின்படி கிரமமில்லாத உத்தரவை மாற்ற ஹைகோர்ட்டாருக்கு ரிவிஷன் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதிரியின் தந்திரத்தால் பிறந்த விடுதலை உத்தரவானது அவ்விததந்தரம் பிரயோகிக்கப்படாவிட்டால் பிறந்திருக்காதாகையால் இந்தக் கேஸில் விடுதலை உத்தரவானது அக்கிரமமான உத்தரவென்று சொல்லப்படலாம். சட்டப்படிக்கு



வாதி ஆஜராகாதபடியால் எதிரியை விடுதலை செய்த மாஜிஸ்டிரேட்டாரின் உத்தரவு கண்டிப்பாய்ப் பார்க்குமிடத்து சரியானதாகிலும் அதை அக்கிரமமானதென்றே சொல்லலாம். (மேற்கூறிய காரணங்களால் ரிவிஷனில் பிரவேசிக்கத்தக்கதாகும். ஆனால் அப்பீல் முறைகளைக் கவனித்துப்பார்க்கையில்):— ஜூரிகளால் தீர்மானிக்கப்பட்டிருக்கிற தீர்ப்புகளைத்தவிற மற்றப்படி கீழ்கோர்ட் தீர்ப்பின்பேரில் ஹைகோர்ட்டார் சட்ட பாயிண்டுகளைப்பற்றியும் ருஜுப் பாயிண்டுகளைப்பற்றியும் அப்பீலில் பிரவேசித்து அபிப்பிராயங்கொடுக்கலாமென்று 413-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ருஜுப்பாயிண்டுகள் ரிகார்டில் ஏற்பட்டிருக்கவேண்டுமென்றுவது அல்லது ஈரங்கி காலத்தில் தெரியாத விஷயங்கள் தீர்ப்பின் பிறகு வெளியானால் அந்த ருஜு பாயிண்டுகளை அப்பீலில் ஏற்றுக்கொள்ள லாயக்குண்டென்றுவது சட்டத்தில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்படவில்லை. அது விஷயமாக ஹைகோர்ட் தீர்மானங்களும் காணப்படவில்லை. 20 அலகபாத் 459-இன் 464-ம் பக்கத்தில் அப்பீல் கோர்ட்டார் பிரவேசிக்கிறதற்குறிய காரணங்கள் ரிகார்டுகளில் துலங்கவேண்டுமென்று தீர்மானிக்கபபட்டிருக்கிறதேயொழிய இந்தக் கேஸின் அம்சத்தைப்போலொத்த ரிகார்டில் ஏற்படாத ருஜு அம்சம் (அதாவது வாதி எதிரியின் தந்திரமான நடத்தையால் ஆஜராகாமல் போகும்படி நேரிட்ட விஷயமானது) அப்பீல் க்ரௌண்டுக்குப் போதுமானதாகுமா வென்று தீர்மானிக்கப்படவில்லை. விடுதலையின் பேரில் செயயப்படும் அப்பீலுக்கும் தண்டனையின் பேரில் செய்யப்படும் அப்பீலுக்கும் வித்தியாஸம் ஏற்படவில்லை. தண்டனையான கேஸில் யாதொரு விஷயமானது விஜாரணை காலத்தில் கீழ்கோர்ட்டாரிடம் வெளியிடப்படாமல் மறைக்கப்பட்டிருந்ததாக ஏற்பட்டால் அதை ஆதாரமாகக்கொண்டு செய்யப்படும் அப்பீலை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று சொல்லக்கூடாது. அதுபோலவே விடுதலையின்பேரிலும் அப்பீல் நடவடிக்கை நடத்த, மேற்கூறிய விஷயம் கீழ்கோர்ட்டாருக்குத் தெரியாமற்போனதாகச் சொல்லி சட்டப்படிக்கு கவர்ன்மெண்டார் இந்தக்கேஸில் அப்பீல் தாகல் செய்யப் பிரயத்தனப்பட்டிருக்கலாம். அப்படியிருக்க டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் ரிவிஷனில் பிரவேசிக்கும்படி ரிபோர்டில் கண்டிருப்பதை அங்கீகரிக்கக்கூடாது. 439-வது பிரிவின் 5-வது உட்பிரிவின் கருத்துப்படி அப்பீலுக்கிடமிருக்கிற சந்தர்ப்பத்தில் ரிவிஷனில் பிரவேசிக்கக் கூடாதாகையால் இந்த ரிவிஷன் மனு தள்ளுபடியாக வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்களின் தீர்ப்பில் சொல்லப்பட்ட முக்கிய அம்சங்களாவன:—

247-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவு கிரமமானதும் சட்டத்துக்கிசைந்துமிருக்கிறது. கேஸை நிறுத்திவைக்க யுக்தமாய்த் தோன்றாதபட்சத்தில் எதிரியை விடுதலை செய்வது மாஜிஸ்டிரேட்டாருடைய கடமையென்று கண்டிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. (1886) Weir Vol II 457 இல் எதிரி ஆஜராகி டிபன்ஸ்தரப்பில் குற்றத்திற்கு ஜவாப் கொடுத்தும் வாதி ஆஜராகாமல் விடுதலை அடைந்தால் அவன் 403-வது பிரிவில் குறித்திருக்கிறபடி விஜாரணையின்பேரில் விடுதலையானவனாக பாவிக்கப்பட்டு மறுபடியும் அதே குற்றத்திற்காக விஜாரிக்கப்படும் பட்சத்தில் முன்னைசல் தடையாகும். ஸிவில் கோடில் விதிக்கப்பட்டிருக்கிற அதிகாரம் கிரிமினல்கோடில் ஏற்படவில்லை. டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்கும் மறுவிஜாரணைக்கு உத்தரவளிக்க அதிகாரம் கிடையாது. (1881) Weir Vol II 308-யும் 7 மதராஸ் 213-யும் 11 அலகபாத் வாரக் குறிப்புகளின் 120-யும் பார்க்கவும்.

அது விஷயமாய் ஹைகோர்ட்டாருக்குறிய அதிகாரத்தை கவனிக்குமிடத்து இங்கிலீஷ் கோர்ட்டுகளில் இவ்வித கேசுகளில் மேல்கோர்ட்டார் பிரவேசிக்க சட்டம் கிடையாது. தண்டனையாகத்தக்க நிலைமையில் ஒருவனை நிறுத்தியபின் விடுதலையானால் மறுபடியும் அதேகுற்றத்திற்காக அதே நிலைமையில் நிறுத்த இங்கிலீஷ் சட்டங்களும் தீர்மானங்களும் இடங்கொடுக்க வில்லை. இந்தியன் லாவில் 417-வது பிரிவின்படி விடுதலையின்பேரிலும் அப்பீல் முறை ஏற்பட்டிருக்கிறது. அப்பீலில் விடுதலை ரத்தானால் மறு விசாரணையில் முந்திய தீர்மானம் தடையாகாது. ஜனங்களுக்குப் பாதுகாப்புக்காக விடுதலையின் பேரில் அப்பீல் செய்யும் அதிகாரம் கவர்ன்மெண்டுக்குமட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நியா

யம் முற்றிலும் தவறின சந்தர்ப்பங்களில்மட்டும் கவர்ன்மெண்ட்டார் அந்த அதிகாரம் செலுத்தி வருகிறார்கள். இந்தக் கேசில் எதிரியின் மோச நடவடிக்கையால் நீதி தவறியிருக்கிறதாகச் சொல்லவேண்டும். வாதிக்கு எதிரி செய்த மோசநடவடிக்கையினால் அரஸ்ட் செய்த கான்ஸ்டெபில்பேரிலும் எதிரியின்பேரிலும் ஸிவில், கிரிமினல் நடவடிக்கைகள் எடுத்து மனதாரலாமென்றாலும் தான் கொடுத்த பிராதில் நீதி தவறினதைப்பற்றி விசனிக்க இடமுண்டாகுமே. சட்டப்பிசகாலும் ருஜுபாகத்தைச் சரியாய் கவனிக்காதபடியாலுமட்டும் விடுதலைத் தீர்ப்பின்பேரில் அப்பீலில் பிரவேசிக்க வேண்டுமென்று குறிக்கப்படவில்லை. விடுதலையின்பேரில் கவர்ன்மெண்டார் அப்பீல் செய்யலாமென்று விசாலமான கருத்துடன் விதிக்கப்பட்டிருக்கிறது. தண்டனையின்பேரில் செய்யப்படும் அப்பீலைப்போலவே விடுதலை அப்பீலிலும் 241-வது பிரிவின்படி அப்பீல் கோர்ட்டார் புதிய சாட்சியம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவ்வித சந்தர்ப்பங்கள் அதிக சொற்பந்தான். ஆகவே இந்தக் கேசானது கவர்ன்மெண்டாரால் அப்பீல் நடவடிக்கையின்பேரில் வந்திருக்கும்பட்சத்தில் விடுதலை உத்தரவை மாற்றத்தயாராயிருக்கவேண்டும்.

ஆனால் ரிவிஷனில் பிரவேசிப்பதானால் சட்டப்பிசகிருந்திருக்கவேண்டும். அல்லது ரிகார்டான அம்சங்களில் பிசகேற்பட்டிருக்கவேண்டும். கவர்ன்மெண்டார் அப்பீல் செய்திருக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் அப்படிச் செய்யாவிட்டால் ரிவிஷனில் தலையிடக்கூடாது. 4 பக்காள லாரிபோர்ட்-686, 22 கல்கத்தா 998, (1913) கிரிமினல் லாரிவியூ Vol I-15-யும் பார்க்கவும். 439-வது பிரிவில் 5-வது கிளாஸில் அப்பீலிருக்க ரிவிஷனில் பிரவேசிக்கக் கூடாதென்று பரிஷ்காரமாய் விதிக்கப்பட்டிருக்கிறது. (1891) 11 அலகபாத் வாரக் குறிப்புகளின் 120-இல் வாதி ஜுரத்தால் சுகயீனமாகி கேசுக்குஆஜராகாதசந்தர்ப்பத்தில் விடுதலையான எதிரியை ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசித்து விடுதலையாகும்காலத்தில் வாதியின் சுகயீனத்தகவல் கோர்ட்டாருக்குத் தெரியவராத காரணத்தால் மறுவிஜாரணைக்கு உத்தரவளித்திருக்கிற ஒரு கேஸ்தான் ரிபோர்ட்டாகியிருக்கிறது. அது மேற்கூறிய 439-வது பிரிவின் 5-வது கிளாஸ் ஏற்படுவதற்குமுன் நடந்த தீர்மானமாதலால் அந்தத் தீர்மானத்தை அனுசரிக்கத்தேவையில்லை. ஆகவே ரிவிஷனில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாருடைய ரிபோர்ட்டில் கண்டபடி பிரவேசித்து உத்தரவளிக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது.

———:0:———

அயோத்தி ஜுடிஷியல் கமிஷனரவர்களுடைய தீர்ப்பின்மேல் செய்யப்பட்ட

## ப்ரிவி கௌன்ஸில் அப்பீல்.

23 டிசம்பர் 1913.

கௌவர் நரீந்தர பஹதூர் என்றவருக்கு சந்ததியில்லாமல் 1904 அக்டோபர் 21-இல் தன்னுடைய சொத்துக்கள் யாவற்றையும் ஒரு உயில்சாஸனமெழுதி விநியோகப்படுத்திவிட்டு சொற்பகாலத்திற்குள் காலஞ்சென்றார். அதில் தன்னுடைய பாரியாள் சிலசொத்துக்களின் ஆதீனகர்த்தாவாயிருக்கவேண்டுமென்றும் வேறு சிலசொத்துக்களில் அவள் ஸர்வஸ்வதந்தர பாத்தியதையுடையவர்களாயிருக்கவேண்டுமென்றும் தன் சொத்துக்கள் யாவற்றிலும் ஷை யாளே சுவாதீன பாத்தியதையுடையவர்களாகவுமிருக்கவேண்டுமென்றும் அவளுடைய ஜீவதசைக்குப் பிறகு தன்னுடைய சகோதரியின் மகனுக்கு தன் ஸ்தாவரஜங்கமசொத்துக்கள் பூராவும் பாத்தியமாக வேண்டியதென்றும் கண்டிருந்தது. ஷை நரீந்தர பஹதூரவர்களுடைய எட்டின பந்துவாகவும் சட்டப்படி வார்ஸ் பாத்தியதையைக் கொண்டாடலாயக்குள்ளவனுமாகிய தூர்கப்ரஸாத் என்றவர் ஷை உயில் சாஸனத்தை ஆக்ஷேபித்து அது வாஸ்தவமாய்ப் பிறந்ததல்லவென்று சொல்லி நரீந்தர பஹதூரவர்களுடைய சொத்துக்களுக்குத்தானே பாத்தியஸ்தனென்று ஸ்தாபிக்கும்பொருட்டு ஹார்டாய் சப்கோர்ட்டில் அசல் தாவாசெய்தார். சப்கோர்ட்டார் உயில் வாஸ்தவமென்று தீர்மானித்து வாதியின்பிராதைத் தள்ளுபடிசெய்தார்கள். அதன்பேரில் வாதி ஜுடிஷியல் கமிஷனரவர்களிடம் அப்பீல் செய்து அங்கு உயிலைப்பற்றி அவநம்பிக்கை ஏற்பட்டு வாதிக்கு அனுகூல டிக்கிரிபிறந்தது. எதிரிகள் பிரிவிகௌன்ஸில் அப்பீல் செய்யவேண்டுமென்று ஜுடிஷியல் கமிஷனரிடம் அனுமதிபெற்றும் குறித்த காலத்தில் ரூல்படி அக்சுக்கூலி வகையராச்செல



வுகளைக் கட்டத்தவறினபடியால் அப்பீல் அனுமதி உத்தரவு ரத்தாகி பேரில் எதிரிகள் பிரிவிகௌன்ஸிலாரிடம் ஸ்பெஷலாக விண்ணப்பம் கொடுத்து அச்சுக்கூலித்தொகைகளைக் கட்டத்தவறினகாரணங்களை எடுத்துக் காட்டினதின்பேரில் அப்பீல் செய்ய உத்தரவு கொடுக்கப்பட்டது. அப்பீல் ஈரங்கியாகி வாதியின் பிராது தள்ளுபடியாச்சுது. உயில் ஆக்ஷேபிக்கத் தக்கதல்லவென்று ஏற்பட்டு சப்கோர்ட்டார் அபிப்பிராயமும் பைசலும் காயமாச்சுது.

பிரிவி கௌன்ஸிலார் தீர்மானச் சுருக்கமாவது:— உயில் சாஸனத்தில் சாட்சி யொப்பம் வைத்திருக்கிறவர்கள் நரீந்தர பஹதூரவர்களுடைய தீவான், கஜான்ச்சீ, காரியஸ்தாள்; உயிலை எழுதிய தன்னுடைய முக்தியார் ஆகியநால்வரே. நரீந்திராவுடைய அந்தஸ்துள்ள இந்திய பிரபுக்கள் வீட்டிலிருக்கப்பட்டவர்கள் யார்யாரோ அவர்களே தாவா உயிலில் சாட்சியொப்பம் செய்தவர்களாயிருக்கிறார்கள். நரீந்தராவினிடம் சம்பளத்திற்கு உத்தியோகம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள்.

நரீந்தராவுடைய குடும்பசந்தர்ப்பங்களைப் பார்க்குமிடத்து வாதி தூர்கப்ரசாந் என்பவரிடத்தில் அநேக வருஷங்களாய் மனஸ்தாபமடைந்து ஒருவருக்கொருவர் பேச்சுவார்த்தையும் போக்குவரத்தும் கிடையாது. பரஸ்பர போஜன அழைப்பும் கல்லியாணகாலங்களில் மரியாதைசெய்வதும் நின்றுவிட்டன. இரண்டு கீழ்கோர்ட்டாரும் சந்தேகமில்லாமல் நம்புகிறபடி இருவருக்குமேற்பட்ட மனத்தாங்கலும் விரோத பாவமும் நரீந்தரா தன்னுடைய சொத்துக்கள் வாதி அல்லது வாதியுடைய வம்சத்தாருக்குச் சொல்லக்கூடாதென்று நிச்சயமாய் நிர்ணயித்ததற்குப் போதுமான முகாந்தரங்களாக யிருக்கின்றன.

நரீந்தராவுடைய மருமகனே (சகோதரியின் மகனே) - குழந்தைகளில்லாத தாய்மாமனுடைய மனோபாவத்திற்குத் தக்கபடி தன்னுடையசொந்தப்பிள்ளையாகவே பாவிக்கப்பட்டு வந்தமையால் நரீந்தரா தன்சொத்துக்கள்யாவற்றையும்தன் ஸம்ஸாரத்திற்குப்பின் தன் மருமகன் அடையவேண்டுமென்று உயில்எழுதிவைத்தது அதிசயமாகவும் ஆச்சரியப்படத்தக்கதாயும் ஏற்பட நியாயமில்லை. இப்பொழுது ஆக்ஷேபிக்கப்படுகிற உயிலானது நரீந்தராவினுடைய மனோபாவத்திற்கிசைந்ததாகவே யிருக்கிறது. அந்த உயில் எழுதிவைக்கப்பட்டது வாஸ்தவமென்று ருஜுப்படுத்தப்பட்டால் சட்டப்படிக்கு அது வேறு விதத்தால் ஆக்ஷேபிக்கத் தகாதென்றே யூகிக்கப்படவேண்டும். சப்கோர்ட்டார் ருஜு அம்சம் யாவற்றையும் தீர ஆலோஜித்துப்பார்த்து கடைசியாக உயில் யதார்த்தமென்றும் அது செல்லத்தக்கதென்றும் தீர்மானமடைந்திருக்கிறார். வாதியோ அதைஎழுதினவிஷயத்தைப்பற்றியும்சாட்சிக்காரர்களுடைய அந்தஸ்தைப்பற்றியும், நரீந்தராவினுடைய சரீர பலக்குறைவை (ஆகையால் மனோ பலக்குறைவை) ப்பற்றியும் கூடியவிதமாக குறைப்படுத்திப் பேசியும் வாதி தரப்பின் பாரிஸ்டரவர்கள் நரீந்தரா கையொப்பம்செய்தது வாஸ்தவமென்றும், அவருக்கு மருமகன்பேரில் தன் சொந்தப்பிள்ளைக்கொத்த வாஞ்சையும்வாதியின்பேரில் அதிகமான பகையும் வைராக்கியமும், ஏற்பட்டது வாஸ்தவமென்று இரண்டு கீழ்கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமடைந்ததைப்பற்றியும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. அப்பீல் கோர்ட்டார் மேற்கண்ட விதமாய் உயில் சரியானபடி எழுதப்பட்டதாகவும் இயற்கைச் சந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி ஏற்பட்டிருப்பதாகவும் அபிப்பிராயப் பட்டும் அதைப்பற்றி சந்தேகமடைவதற்கு மூன்று வகையான காரணங்களை எடுத்துக்காட்டி யிருக்கிறார்கள்.

(1) உயில் சாட்சிகள் மேலான வகையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாமென்றும் நரீந்தராவினுடைய சம்பள ஆசாமிகள் தானே சாட்சிகளாய் ஒப்பம செய்யவேண்டும்? அந்நியர்கள் யாரும் ஒப்பம் செய்திருக்கக்கூடாதா என்று சொல்லப்படுகிறது. உயர்ந்த நிலைமையிலுள்ளவர்கள் ஒப்பம் செய்திருக்கலாம். ஆனால் உயிலெழுதும் சமயத்தில் அருகிலிருந்தவர்கள் அவர்கள்தான். அப்படியிருக்க கேவலம் சந்தேகமான நோக்கத்தைக்கொண்டு சாட்சியொப்பம் நம்பத்தக்கதல்லவென்று அனுமானித்து சாட்சியொப்பம் செய்து வாக்குமூலம் கொடுத்தவர்களை போர்ஜரி, பர்ஜரி (கையொப்ப ஸ்ருஷ்டனை, பொய் சாட்சியம்) என்ற குற்றங்கள் செய்ததாக மதிக்கக்கூடாது. உயிலுடைய தன்மையிலும் நோக்கத்திலும் முறையிலும் இயற்கையான பாவ மேற்பட்டிருக்க அவைகள் முற்றிலும் இயற்கைச் சந்தர்ப்பங்களுக்கும் நியாயத்திற்கும் விரோதமாயிருப்பதாக

ஸ்தாபிக்க எந்த விதமான எதிர்மறை ஆராய்ச்சி செய்யவேண்டுமோ அவ்வகையான பரிட்சையம் சங்களைப் பிரயோகிக்கத்தகாது. [தன்னுடைய மனதுக்கு இஷ்டமாக பிள்ளைக்குச் சமானமாக ஒருவனை பாவித்து அவனுக்கு சொத்துக்களை உயில்படி எழுதிவைத்தும், தன் மனைவி ஜீவதசை மட்டும் அனுபவிக்கிறதாக ஏற்படுத்துவதும் சகலவிதமான பந்து முறைக்குறிய அன்னியோன்னிய பாவங்கள் விட்டுப்போன பகைஞனுடைய வாதியை நிராகரித்ததும் உண்மையானபடி நம்பத்தக்கவிஷயங்களாக யிருக்க இதுவிஷயமாக விபரீதமான நடவடிக்கைகளின் அந்தரங்க சோதனையைப்பிரயோகிக்க நியாயமில்லை. (1894)-ம் வருஷத்திய 22 I. A. 12; S. C. 22 கல்கத்தா 519-இலும் பிரிவி கௌன்ஸிலார் ஒரு தஸ்தவேஜில் வேலைகாரர்களும் தவினை அண்டினவர்களும் கையொப்பம் செய்த விஷயமானது தஸ்தவேஜின் யதார்த்தபாவத்திற்கு குறையுண்டாக்கத்தக்க தல்லவென்று அபிப்பிராயங் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த உயிலானது அசம்பாவிதமென்று சொல்லக்கூடாது.. சம்பாவிதமென்றே சொல்லவேண்டும். லார்ட் உவாட்ஸன் துரையவர்கள் ஒருகேசில் அஸம்பாவித விஷயமாய் கொடுத்த அபிப்பிராயத்தில் ஒரு ஹிந்து பிரபுவானவர் உயிலெழுதும் சமயத்தில் உயர்ந்த நிலமையிலுள்ள சாட்சிகளை அழைக்க சவுகரியக்குறைவாய் ஏற்பட்டாலொழிய ஷை யாருடைய வேலைகாரர்களும் அண்டின மனுஷியாளும் செய்த கையொப்பத்தை மட்டும் நம்பி உயிலை நிலைக்கச்செய்யக் கூடாதென்றும், சில சந்தர்ப்பங்களில் உயில் ஸ்வய இச்சையால் எழுதப்பட்டதா அல்லது மற்றவர்களுடைய பலவந்தத்தின்பேரில் யெழுதிவைக்கப்பட்டதா என்ற விஷயத்தை நிர்ணயிப்பதற்கு சொந்த வேலைக்காரர்கள் சாட்சியொப்பம் செய்திருக்கிற விஷயமானது முக்கியமாய் யோஜிக்கத்தக்கதாக ஏற்படுமென்றும் சொல்லி யிருக்கிறார்கள். இந்தக் கேசில் நரீந்தரா கையொப்பம் செய்ததும் சாட்சிகள் ஒப்பம்வைத்ததும் பரிஷகாரமாய் ருஜுவாகியிருக்கிறபடியால் மேற்கூறிய அப்பீல் கோர்ட்டாருடைய ஸந்தேகமானது அனுவசியமாகும்.

(2) இரண்டாவதாக வெற்றுக்காகிதத்தில் நரீந்தரா கையொப்பம் செய்திருக்கக்கூடிய சந்தர்ப்பங்களுண்டென்றும் அவ்விதமான காகிதமொன்றில் உயில் விருஷ்டனையாக எழுதியிருக்கக்கூடுமென்றும் சொல்லி நரீந்தராவின் அந்தஸ்திற்கொப்பானவர்கள் கோர்ட்டுக்கு தாகலாகவேண்டிய வக்காலத்து நாமாக்கள் முதலிய கோர்ட்பாரங்களில் யாதொன்றும் எழுதப்படுமுன் கையொப்பம் செய்துவிடும் வழக்கத்தை ரூபிக்க அவ்விதபாரம்சிலவற்றை ஆஜர்படுத்தி திருஷடாந்தரம் கொடுக்கப்பட்டதில் அவ்விதமாகவும் தாவா உயில் பிறந்திருக்கக்கூடுமென்று அப்பீல் கோர்ட்டார் சந்தேகப்பட்டிருக்கிறார்கள். இந்தக்கேஸுக்கு சம்பந்தப்படாத மேற்கூறிய ருஜு அம்சங்களைக் கொண்டு கோர்ட்டாருடைய மனதை மாற்றச் செய்யும்படி ஷை ருஜு அம்சங்களை ஏற்றுக்கொள்வதே முற்றிலும் பிசகாகுமென்று சொல்லவேண்டும்.

(3) மூன்றாவதாக உயில் எழுதப்பட்ட ஆறு மாதகாலங்களுக்குப்பின் அதில் கண்டிருக்கிற பிரகாரம் ஸாண்டிலா என்னுமிடத்திலுள்ள ரெஜிஸ்டராபீஸில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற தேதியாகிய 1905 எப்பிரல் 20-இல் நஸரத் ஆலி என்ற லக்னோவில் முனிசிபல் கௌன்ஸில் மெம்பராகிய ஒருவர் அந்த உயிலில் மேல் சாட்சியாக ஒப்பமிட்டிருக்கிற விஷயத்தில் அந்த சாட்சி அந்தத்தேதியில் லக்னோமுனிஸிபல் மீட்டிங்கில் இண்டுரிடையைகளில் முற்பகல் நேரத்தில் ஆஜராகிப் பேசியிருக்க அதேசமயத்தில் 30 மைல் தூரத்திலுள்ள ஸாண்டிலியாவுக்குச்சென்று கையொப்பம் செய்தது அசாத்தியமானதென்று சொல்லி அந்தக்காரணத்தால் உயிலின் உண்மை ஆக்ஷேபிக்கப்பட்டு அதைப்பற்றி அப்பீல்கோர்ட்டாரும் சந்தேகமடைந்திருக்கிறார்கள். இந்தக்கேஸில் நஸரத் ஆலியவர்கள் சாட்சியாக விஜாரிக்கப்பட்டிருக்கிறார். அவர்பல அந்தஸ்துள்ள உத்தியோகத்தை வகித்தவராயுமிருக்கிறார். சாட்சி வாக்குமூலம் கொடுக்கையில் மேற்கூறிய விஷயமாய் சமாதானம் சொல்லும்படி அவரை யாதொரு கேழ்வியும் கேட்கவில்லை. ஸி பி ஸி 558-வது பிரிவின்படி அப்பீல் கோர்ட்டாரும் தீர்மானம் சொல்லுமுன் சரியான காரணங்களையிட்டு கீழ்கோர்ட்டில் தாகல் செய்யப்படாத தஸ்தவேஜிகளையும் வரவழைத்துப் பார்க்கலாம். கீழ்கோர்ட்டில் சொல்லப்படாத சாட்சி வாக்குமூலங்கள் கேட்கப்படலாம். அப்படியிருக்க அப்பீல் கோர்ட்டாராகிலும் ஷை சாட்சியை வரவழைத்து அந்த விஷயத்தைப் பற்றிச் சமாதானம் சொல்லும்படி கேட்கவில்லை- கீழ்கோர்ட்டார் அவ்விதமாய் நடத்தாதபடிக்கு ஒரு சாட்சியின் வாக்கு மூலத்தை நம்பாமல் தீர்மானமடைவது மிகவும் அங்கீகரிக்கத்தகாத நடவடிக்கையாகும். ஒரு சாட்சி தன்னுடைய வாக்குமூலத்தில் ஏற்படும் சந்தேகத்தை நிவர்த்தி பண்ணுவதற்குறிய சவுகரியமும் சந்தர்ப்பமும் கொடுக்கப்படாமல் அந்த சாட்சியைப் பொய்யாகத் தீர்மானிக்க இடங் கொடுத்தால் எவ்வித உயர்ந்த அந்தஸ்திலுள்ள சாட்சியும் அவநம்பிக்கைக்குப் பாத்திரனாக வேண்டியதாகும். நஸரத் ஆலியைக் கேட்டிருந்தால் திருப்தியான சமாதானம் சொல்லியிருப்பார். அந்த பாயிண்டைப்பற்றி நஸரத் ஆலியினுடைய சாட்சியம் இல்லாதிருக்க அதைப்பற்றி யாதொரு அபிப்பிராயம் கொள்ள நியாயமில்லை. தவிற இந்தக்கேசில் உயில் கையொப்பமிட்டதும் அதில் சாட்சியொப்பங்கள் செய்யப்பட்டதும் மெய்யா பொய்யா என்று தீர்மானிக்கப்படவேண்டியதாயிருக்க உயில் எழுதிக் கொடுக்கப்பட்டது வாஸ்தவமென்று இரண்டு கோர்ட்டாரும் நம்புவதால் நஸரத் ஆலி சாகிபவர்களுடைய சமாதானத்தைக் கேட்டறியும்படி மறு விஜாரணைக்கு அனுப்பும் சிரமமும் செலவும் அனுவசியமாகிறது.

இந்தக் காரணங்களால் சப்கோர்ட்டார் தீர்மானம் காயமாகி உயில் நிலைத்து வாதியின் தாவா தள்ளுபடியாச்சுது.



———:o:———

## புல்பெஞ்சு கேஸ்

(Messrs சீவ் ஜஸ்டிஸ், ஜஷ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்ட்)

திருநெல்வேலி ஜில்லா.

L. P. A. 166 of 1912—19 ஜனவரி 1914.

எல்லம்மாள் Vs அய்யப்ப நாயக்கர்

எல்லம்மாளென்ற 4-ம் பிரதிவாதி பெருமாள் நாயகன்பேரில் 1905 ஜுலை 14-இல் பெற்றிருந்த டிக்கிரித்தொகையை வசூலிப்பதற்காக 1-ம் பிரதிவாதியால் ஷை பெருமாள் நாயகருக்குச் சேரவேண்டிய ஒரு கடன்பாக்கியை ஜப்திசெய்தார். பெருமாள் நாயகனுக்கு அந்தக் கடன்பாக்கி செல்லாகவேண்டிய கெடு 1905 ஜுலை 29 ஆகயிருக்க 1-ம் பிரதிவாதி ஜப்திக்கட்டளையைப் பெற்றபின் 1905 நவம்பரில் தன்னிச்சையாகவேதான் பெருமாள் நாயகருக்குத் செலுத்தவேண்டியிருந்த கடன்தொகையை கோர்ட்டில் கட்ட உத்தரவு பெற்று அந்தப்படி 1906 ஜுன் 15-இல் தொகையை கோர்ட்டில் கட்டிவிட்டார் 4-ம் பிரதிவாதியும் அந்தத்தொகையை 19 6 அக்டோபர் 3-இல் தன் டிக்கிரிபாக்கிக்காக செல்லுவைத்துக்கொள்ளும்பொருட்டு பெற்றுக்கொண்டார். ஷை கடன்தொகைஜப்தியான உடன் பெருமாள் நாயகர் அந்தக்கடன் பாக்கியை வசூலித்துக்கொள்ளும்படி ஜப்திக்கு முந்தியேவாதி தன்னிடம்சாட்டிவிட்டதாகவும் (மேடோவர் செய்து விட்டதாகவும்) ஆகவே தனக்குச்சேரவேண்டிய தொகையை 4-ம் பிரதிவாதி ஜப்தி செய்தது பிசகென்று சொல்லி ஜப்தியை ரத்துசெய்யும்பொருட்டு பாத்தியமனு தாகல் செய்தார். அந்தபாத்திய மனு தள்ளுபடியாகவே ஸி. பி. ஸி. 283-வது பிரிவின்படி தன்னுடைய பாத்தியதையை ஸதாபிக்கும்பொருட்டு தூத்துக்குடி டி.மு. கோர்ட்டில் 1908 செப்டம்பர் 5-இல் அசல் தாவாசெய்தார்: இந்தப்பிராது காலாவதி தோஷமென்று சொல்லப்பட்டு தள்ளுபடியானதின்பேரில் சப்கோர்ட்டுக்கு அப்பீலாகி அதன் பிறகு ஹைகோர்ட்டுக்கு 2-வது அப்பீல் செய்யப்பட்டு ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்கள் மற்றொரு நியாயாதிபதியவர்களுக்கு மாறாக அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராது காலாவதி தோஷமல்லவெனத் தீர்மானித்ததில் அந்தத் தீர்மானம் ரூல்படி காயமாகவே 4-ம் பிரதிவாதி லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்தான். லட்டர்ஸ் பேடெண்டு அப்பீலை ஈரங்கிகேட்ட மேற்கூறிய புல்பெஞ்சாரவர்கள் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரமய்யரவர்களுடைய அபிப்பிராயமே சரியானதென்று சொல்லி அப்பீலைத் தள்ளுபடி செய்தார்கள்.

ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களுடைய தீர்ப்பின் சுருக்கமாவது:—

4-ம் பிரதிவாதி கோர்ட்டிலிருந்து பெற்றுக்கொண்டதொகையைத் தான்திரும்பி அடையவேண்டுமென்று வாதி 1908 செப்டம்பர் 15-இல் இந்தப்பிராது தாகல் செய்திருக்கிறார். இந்தப் பிராதுக்குக் காலாவதி 3-வருஷமானால் ஜப்தியானதேதியை வியாஜ்ஜியமூலமாய் எடுக்கும்பட்சத்தில் காலாவதிதோஷ மேற்படுகிறது; 4-ம் பிர

JL
Z21mn12 . 013
161989
600 003.

திவாதி கோர்ட்டிலிருந்து தொகையைப் பெற்றுக் கொண்ட தேதியாகிய 1906 அக்டோபர் 3 முதல்கணக்கிடும் பட்சத்தில் பிராதுகாலாவதிதோஷமாகாது. எதிரி லிமிடேஷன் ஆக்ட் 29 வது ஆர்டிகில்படி இந்தப் பிராதுக்கு ஜப்தியான முதல் ஒரு வருஷ காலாவதி யுண்டென்றும் அல்லது 36-வது ஆர்டிகில்படி 2 வருஷ காலாவதி யுண்டென்றும் ஆகையால் ஜப்தியானமுதல் மூன்று வருஷங்களுக்கு மேல்பட்டு செய்த இந்த பிராதுக்கு காலாவதி தோஷமுண்டென்று வாதம் செய்கிறார். 29-வது ஆர்டிகில்படி கோர்ட்டாருடைய கட்டளையை அனுசரித்து ஒருவன் தப்பாக அக்கிரமமாக யாதொரு ஜங்கம சொத்தை ஜப்தி செய்து வசப்படுத்திக்கொண்டால் அதனால் ஏற்படும் நஷ்டத்தைக் கட்டிக் கொடுக்கும்படி தேடுகிற பரிகாரத்திற்கு ஒரு வருஷ காலாவதி ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிராது அவ்வித நஷ்டத்திற்காகக் கொண்டு வந்ததாகச் சொல்லக்கூடாது. அவ்விதமாகவே வைத்துக் கொண்டபோதிலும் ஜப்தியான தேதியில் யாதொரு ஜங்கம சொத்தானது வசப்படுத்திக் கொள்ளபபட்டதாவென்று யோஜித்துப் பார்க்கவேண்டும். கோர்ட்டாருடைய கட்டளையின் பேரில் ஜப்தி நடவடிக்கை நடந்தது வாஸ்தவம்தான். ஆனால் யாதொரு பொருளானது அந்தக் கட்டளையின்பேரில் வசப்படுத்திக்கொள்ளப்பட்டதா? இல்லையென்றே சொல்லவேண்டும். ஜப்தியான கடன் பாக்கியானது யாதொரு அண்டிமாண்டு தஸ்தவேஜால் ஏற்பட்டதல்ல. ஒரு அசையும் பொருளல்லாத இத்தகைய கடன் பாக்கியானது ஜப்தி செய்யப்பட்டால் ஜப்திக் கட்டளையால் கடனைக் கொடுக்கக் கடமைப்பட்டவன் மறு உத்தரவு பிறக்குமட்டும் யாரிடமும் கொடுக்கக் கூடாதென்றும் கடன் தொகையை வாங்குவதற்கு பாத்தியதையுள்ள டிக்கிரீ பாக்கிதார் அந்த ஜப்தியான கடன் தொகையை கோர்ட்டார் மறு உத்தரவு செய்யுமட்டும் வாங்கக்கூடாதென்றும் தடைப்பட்டுப் போகிறார்கள். அதனால் கடன் பாக்கித் தொகையின் சுவாதீனமானது ஷே கட்டளையால் மாறிப்போகிறதில்லை. 1-ம் பிரதிவாதி வசமே அது நிற்கவேண்டுமென்ற கருத்து ஜப்திக் கட்டளையினாலேயே விளங்குகிறது. ஸி. பி. ஸி. ஆர்டர் 21 ரூல் 46-இல் இத்தகைய கடன் பாக்கியை ஜப்தி செய்யும் முறை விதிக்கப்பட்டிருக்கிறது. 1-ம் பிரதிவாதி தொகையைக் கோர்ட்டில் கட்டினது அவனுடைய ஸ்வய இச்சையாலே ஏற்பட்டதேயொழிய கோர்ட்டார் கட்டளையை முன்னிட்டுச் செய்ததல்ல. ஆகையால் கோர்ட்டில் கட்டப்பட்ட நிமித்தத்தினால் ஜப்தியான பொருளில் சுவாதீனம் மாறிப்போய்விட்டதாக நிதானிக்கப்படக்கூடாது. கோர்ட்டாருடைய அனுமதியைப்பெற்று 1-ம் பிரதிவாதி தொகையைக் கோர்ட்டில் கட்டினாலும் அவ்விதமாய்க் கட்டித் தன் பொருப்பைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று 1-ம் பிரதிவாதி கேட்டுக் கொண்டதால் உத்தரவளிக்கப்பட்டதே யொழிய வேறல்ல. அவ்விதமாய்க் கேட்டுக்கொள்ளாவிட்டால் தொகையைக் கட்டிவிட வேண்டுமென்று கோர்ட்டார் கட்டாயப்படுத்தி உத்தரவளித்திருக்கமாட்டார்கள். ஜப்தி சொத்தானது அசையும் பொருளாகயிருக்கும் பட்சத்தில் அது வேளாண்மைத் தொழிலுக்குறிய சாமான்களில்லாவிடில் எதிரியின் வசம் அவைகளிருந்தால் ஜப்திக் கட்டளையின்படி அந்த சொத்துக்கள் கோர்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டு சுவாதீனம் மாறிவிடுவதாகும். அவ்விதசொத்துக்கள் எதிரியின் வசமில்லாவிடில் மறியல் கட்டளைமட்டும் பிறக்கும். ஒரு அண்டிமாண்ட்பத்திரம் ஜப்தியானால் அந்த தஸ்வேஜும் யார்வசமிருந்தபோதிலும் அதைப்பிடுங்கி கோர்ட்டார் வசம் மறு உத்தரவு பிறக்குமட்டும் வைத்திருக்கப்பட வேண்டும். அப்பொழுதும் சுவாதீனம் மாறுகிறது. ரூல் 43-44, 51-யும் பார்க்கவும். ரூல் 46-இன்படி ஜப்தியான தாவா கடன் பாக்கியானது 36-வது ஆர்டிகில்படி கோர்ட்டார் கட்டளையின்மேல் சுவாதீனம் மாறினதாக பாவிக்கப்படக்கூடாது. ஒருவருஷ காலாவதியென்னும் வாதம் செல்லத்தகாது. 36-வது ஆர்டிகில்படி 2 வருஷ காலாவதியுமல்ல. ஒருவன் யாதொரு ஒப்பந்தத்தை அனுசரியாத நடத்தையால் செய்யவேண்டிய காரியத்தைத் தப்பாய்ச் செய்தாலும் கெடுதலாகச் செய்தாலும் அல்லது செய்யத் தவறினாலும் அதனால் ஏற்படும் நஷ்டத்திற்குக் காம்பன்ஸேஷன் பரிகாரம்தேட 2 வருஷ காலாவதி என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிராதின் கோறிக்கை அப்படிப்பட்டதல்ல. ஆகவே 36-வது ஆர்டிகில்படி காலாவதி கணிக்கக்கூடாது. வாதிக்குச் சேரவேண்டிய தொகையை பிரதிவாதி அடைந்ததால் பிரதிவாதி அத்தொகையை வாதியின் பிரயோஜனத்திற்காக வாங்கிய



தாய் பாவித்து 62-வது ஆர்டிகில்படி பிரதிவாதி தொகையைப் பெற்ற முதல் மூன்று வருஷங்களுக்குள் வாதி அத்தொகையைத் திரும்பியடையப் பரிகாரம் தேடவேண்டும். ஆகவே 62-வது ஆர்டிகில், அல்லது யாதொரு காலாவதியும் ஏற்படாத பரிகாரத்திற்குறிய 120-வது ஆர்டிகில்படி இந்தப் பிராதுக்கு 4-ம் பிரதிவாதி கோர்ட்டிலிருந்து தொகையை அடைந்தமுதல் மூன்று அல்லது 6 வருஷ காலாவதி யுண்டென்று சொல்லவேண்டும். அப்படிப் பார்க்குமிடத்து பிராது காலாவதி தோஷமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. மற்ற இரண்டு நியாயாதிபதிகளும் ஒத்தபிப்பிராயப் பட்டார்கள்.

———:o:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

செங்கல்பட்டு ஜில்லா.

S. A. Nos. 1716 to 1756 of 1912—

24 அக்டோபர் 1913.

சின்னன் வகையரா Vs கொண்டமநாயுடு

செங்கல்பட்டு தாலூகா தாழம்பூர் என்னும் சுரோத்திரியம் கிராமத்திலுள்ள தாவாநிலங்களில் குடிவாரபாத்தியதையைக் கொண்டாடின வாதி வகையராக்கள் இரண்டு சுரோத்திரியந்தார்கள்பேரில் தாவாநிலங்களில் சுரோத்திரயந்தார்களுக்கு குடிவாரபாத்தியதை கிடையாதென்றும் மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 2-வது பிரிவின் கிளாஸ் (டி)யில் குறிக்கப்பட்டவிதமாக கவர்ன்மெண்டாரால் ஷே நிலங்களின் நிலவருமானம் மட்டும் கிராண்டாக ஷே யார்களுக்கு அளிக்கப்பட்டதால் அந்தநிலங்கள் ஷே ஆக்டின் கருத்துக்கிசைந்தபடி "எஸ்டேட் நிலங்கள்" என்று ஏற்படுவதாகவும் அந்த ஆக்டின்படி எதிரிகள் தங்களுக்கு B ஷெடியூலில் விவரித்திருக்கிறவண்ணம் பட்டாகொடுக்கக் கடமைப்பட்டவர்களென்று சொல்லி அவ்வித பட்டாகொடுக்கும்படி டிக்கிரீயளிக்க வேண்டுமென்று சப் கலக்டரவர்களிடம் ரெவினியூதாப்பில் அசல் தாவாசெய்தார்கள்.

சுரோத்திரியம்தார்கள் எதிர் ஆன்ஸரில் வாதிகளுக்குக் குடிவார பாத்தியதை கிடையாதென்றும் தங்களுக்கே தாவா கிராமத்தில் மேல்வார பாத்தியதையும் குடிவாரபாத்தியதையும் இரண்டுமிருப்பதாயும் தாவாநிலங்கள் எஸ்டேட் நிலங்களாகாதென்றும் எஸ்டேட்ஸ் ஆக்டின் முறைகள் தாவாநிலங்களுக்குச் செல்லாதென்றும் ஆகவே வாதிகளுக்கு பட்டா கொடுக்கவேண்டியஅவசியமில்லையென்றும், தவிற வாதிகள் B ஷெடியூலில் கண்டிருக்கிற அம்சங்களில் தங்களுக்கு நிலத்தீர்வை, மாசூலில் 100-க்கு 40 விகிதம் மாசூலாகவே கொடுக்கப்பட வேண்டுமேயொழிய தீர்வைத்தொகை ரொக்கமாக ஏற்படக் கூடாதென்றும் எதிர்வாதம்செய்தார்கள்.



சப்கலக்டரவர்கள் வாதிகள் கோறியபடி டிக்கிரீ யளித்ததில் தீர்வையை மட்டும் மாசூல்விகிதமாய்க் கொடுக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அப்பீலில் ஜில்லா கோர்ட்டார், எதிரிகள் சுரோத்திரியந்தார்களாக மேல்வார பாத்தியையும், மிராஸ்தார்களாக குடிவார பாத்தியதையையும் உடையவர்களென்றும் வாதிகளுக்கு குடிவார பாத்தியதை கிடையாதென்றும் தாவா நிலங்கள் எஸ்டேட் நிலங்களல்லவென்றும் 1802-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டார் மேல்வார பாத்தியதையை எதிரிகளுக்கு கிராண்டு செய்யும்பொழுது அவர்களுக்கு குடிவார பாத்தியதையுமிருந்ததாகவும் ஆகவே வாதிகளுக்கு எதிரிகள் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின் முறைப்படி பட்டா கொடுக்க அவசியமில்லையென்றும் தீர்மானித்து வாதிகளின் தாவாவை செலவுடன் தள்ளுபடி செய்தார்கள். அதன் மேல் வாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கு ஜில்லா கோர்ட் தீர்மானம் காயமாகி 2-வது அப்பீல் தள்ளுபடி யாச்சுது.

ஹைகோர்ட்டில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் கொடுத்த தீர்ப்பின் சுருக்கமாவது:—

தாவா நிலங்களை பிரதிவாதிகள் சுரோத்திரிய இனாமாக கிராண்டு பெற்ற காலத்தில் ஷேயார்களுக்கு அந்த நிலங்களில் குடிவார பாத்தியதை முந்தியே இருந்ததாவென்று தான் இந்தக்கேசில் தீர்மானிக்கவேண்டிய பாயிண்டாகும். தாவா கிராமத்தில் மேல்வார பாத்தியதையானது 17-ம் நூற்றாண்டில் ஆர்காட் நவாப் துரைத்தனத்தாரால் போத்திரெட்டி வம்சத்தாரைச்சேர்ந்த ஒருவருக்கு ஊழிய இனாமாக அளிக்கப்பட்டதெ

ன்று ருஜுபாகத்தில் ஏற்பட்டிருக்கிறதும் தவிற போர்கிரெட்டி நாயகன் என்றவர் பாளையகாரராக வந்த காலத்தில் அவர் ஷை கிராமத்திற்கு ஏகபோக மிராசுதாரராக வழங்கினதாகவும், ஆகவே அவர் ஒரு காலத்தில் கிராம நிலங்கள் யாவற்றிலும் முடிவார பாத்தியதையை உடைத்தாயிருக்க வேண்டுமென்றும் ருஜுபாகத்தில் துலங்குகிறது.

செங்கல்பட்டு ஜில்லாவின் பூர்வீகசரித்திரத்தைப்பற்றிய புஸ்தகங்களில் எழுதப்பட்டிருக்கிற பிரகாரம் அந்த ஜில்லாவுக்கு மிராசுபாத்தியதையானது முதல் முதல் துலோதங்கர் என்ற சோள அரசனால் ஏற்பட்டதாகும். 8-வது நூற்றாண்டுக்கும் 12-வது நூற்றாண்டுக்கு மிடையில் மேற்கூறிய சோள அரசனுடைய புத்திரனாகிய அதண்டா என்றவர் காஞ்சீபுரத்திற்குச் சுற்றிலுமுள்ள நாடுகளைப் பிடித்துக்கொண்டார். ஷை மிராசுபாத்தியதையைப் பெற்றவர்கள் வேளாள ஜாதியாராம். மிகவும் மட்டமான நிலங்களை மேற்படி மிராசுதார்கள் தங்களுடைய சொந்த முயற்சியாலும் அவர்களால் குடியேற்றப்பட்ட பாயகாரிகள் என்ற வகுப்பினருடைய பிரயத்தனங்களாலும் விருத்தி செய்யப்படவேண்டுமென்றும் கருதப்பட்டு அவ்வித மிராசு பாத்தியதை அளிக்கப்பட்டதாம். அந்த மிராசு பாத்தியதையை அடைந்தவர்களுக்கு காணியாட்சிக்காரர் என்ற பெயர் வழங்கிற்று. சாகுபடி செய்வதற்காகக் குடியேற்றப்பட்ட பாயக்காரிகளும் அவர்களுடைய சந்ததியாரும் 100-வருஷங்களுக்கு மேலாக நிலங்களை அனுபவித்துவந்து மாமூல்படிக்கும் ஒந்துலா முறைப்படிக்கும் உள்குடி பாயகாரிகளென்று பாவிக்கப்பட்டு சாசுவதமான அனுபோக பாத்தியதையை அடைந்தவர்களானார்கள். அதாவது ஒருவகையில் குடிவார பாத்தியதையை அடைந்தவர்களானார்கள். அவ்வித அனுபோக பாத்தியதையை அடைந்தவர்களானாலும் பிரதமத்தில் அரசனிடமிருந்து மிராசு பாத்தியதை என்று சொல்லப்படும் குடிவார பாத்தியதையுடைய மிராசுதார்கள் உள்குடிவாரம்தார்களாகிய பாயகாரிகளிடமிருந்து துண்டுவாரமென்ற மாசூல் பகுதியுடன் வேறு சில சுதந்தர அளவைப்பகுதிகளையும் வசூலித்து வந்தார்கள். உள்குடி ரயட்டுகளால் அருவடையான மாசூலில்ஒரு குறித்த விகிதமானது சுதந்தரப் பகுதியாக ஏற்பட்டிருந்தது. ஆகவே இந்த ஸ்வதந்தரப் பகுதியானது குடிவாரத்தைச் சேர்ந்ததாகிறது. மேல்வாரப் பகுதியாகிய 100-க்கு 40 பங்குபோக குடிவாரப்பகுதி 60 பங்கில் பூராவையும் உள்குடி குடிவாரம் தார்கள் தாங்களே அடையாமல் சாசுவதபாத்தியதை அடைந்தபின்னும் அதில் ஒரு பாகத்தை சுதந்தரமாக மிராசுதார்களுக்குக் கொடுத்து வந்திருக்கிறார்கள். அந்த குடிவார விகிதத்தை ஒருககாலும் மிராசுதார்கள் இழந்தவர்களல்ல. (Huddlestone) துரையவர்கள் எழுதிய மிராசு ரிகார்டுகளாலும் க்ரோல் துரையவர்கள் இயற்றிய செங்கல்பட்டு ஜில்லா மானியூல் புஸ்தகத்திலும் மேற்கூறிய தகவல்கள் தெரியவந்தன. உள்குடி பாயக்காரிகள் தொடர்ச்சியாக தாவா கிராமத்தில் வசித்துவந்து அதே நிலங்களை மூன்று தலைமுறையாக அனுபவித்து வந்து சாசுவத அனுபோக பாத்தியதையை அடைந்தவர்களானாலும் இப்பொழுது குடிவார பாத்தியதை என்று சொல்லப்படுகிற அனுபோக பாத்தியதையின் கருத்துப்படி அக்காலத்தில் யாதொரு பாத்தியதையும் உண்டானதாகச் சொல்லக்கூடாது. (Huddlestone) துரையின் மிராசு ரிகார்டுகளில், உள்குடி குடிவாரந்தார் பூரணபாத்தியதையன்னியில் குறிக்கப்படாத நிலைவரத்தை உடைத்தானவர்களென்றும் அதாவது தங்கள் பாத்தியதையை தானாதிவிநிமய விக்கிரயங்களால் மாற்ற அதிகாரமில்லாதபோதிலும் காணியாக்ஷிக்காரர் அவர்களை அப்புறப்படுத்த அதிகாரமில்லாதபடியால் அவர்கள் பரம்பரையாக காணியாக்ஷிமிராசுதார்களைப்போலவே அனுபவித்துவந்து சர்க்கார் ரெவினியூவையும் துண்டுவாரத்தையும் மிராசுதார்களாலும் புரக்குடிகளாலும் விதிக்கப்படுகிற கணக்காசாரப்படி சர்வபாக்கிகளையும் செலுத்திவந்தார்களேயொழிய தாங்கள் யாதொரு விகிதத்தையும் இதராளிடமிருந்து அடைந்தவர்களாக ஏற்படவில்லை. அநேக இடங்களில் இந்த உள்குடி பாயக்காரிகள் நாளடைவில் கிராமத்தின் முழுவார பாத்தியத்தையும் சுவாதீனமடைந்தவர்களாய் அடிக்கடி மிராசுதார்களுடைய பாத்தியதையையும் தரித்து வந்தார்களென்று துலங்குகிறது. சென்னையில் தண்டையார்பேட்டை கிராமத்திலுள்ள கிராமணி பாயக்காரிகள் அவ்விதமாக மிராசு பாத்தியதையும் அடைந்திருக்கிறார்கள். 50 வருஷகாலமாய்த் தங்கள் முழு மிராசு பாத்தியதையைப்பற்றி வழக்காடி கடைசியாக அந்த பாத்தியதையை நிலை நாட்டிக்கொண்டார்கள். ஆனால் முடிவான தீர்மானத்தில் அந்த பாத்தியதை கிடையாதென்று ஏற்பட்டு பின்னால் நடவடிக்கையெடுத்து விலக்கப்படலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. க்ரோல் துரையவர்கள் செங்கல்பட்டு மானியூல் 214-வது பக்கத்தில் சொல்லியிருக்கிறபடி "மிராசு பாத்தியதை" என்பது மிகவும் தகராருக்கிடமான விஷயமாயிருக்கிறது. அநேக திறமையுள்ள அதிகாரிகள் அந்த விஷயத்தைப்பற்றி ஒன்றுக்கொன்று நேர் விரோதமான அபிப்பிராயங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.



மதராஸ் கவர்ண்மெண்டாரும் ஒன்றுக்கொன்று ஒற்றுமையில்லாத ஆர்டர்களைப் பிறப்பித்திருக்கிறார்கள். ரெவினியூ போர்டாரும் காணியாட்சிக் காரர்களுக்குச் சார்வாக மொத்தத்தில் நடந்தும் ஒருதடவையிலாவது கவர்ன்மெண்டாருடைய ஆர்டர்களுக்கு அனுஸரணையாக மிராசு பாத்தியதை விஷயமாய் யாதொரு உத்தரவும் பிறப்பித்ததேயில்லை. அந்த ஜில்லா கம்பெனியாருக்கு (ஈஸ்ட் இந்தியா கம்பெனியாருக்கு) ஒப்பிவிக்கப்பட்ட முதற்கொண்டு மிராசு பாத்தியதையின் கருத்தானது அநேக மாறுதலடைந்துமிருக்கிறது. காலப்போக்கினால் அநேகவித பாத்தியதைகள் மறைந்துபோயுமிருக்கிறது. சில வகை பாத்தியங்கள் கவர்ன்மெண்டாரால் விலக்கப்பட்டுமிருக்கிறது. 1911-ம்வருஷத்திய 2-வது அப்பீல் நம்பர் 210-இல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்களும் தானும் (ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும்) ரயட்வாரி கிராமங்களில் மிராசுதார்களுக்கு தற்கால மேற்பட்டிருக்கும் பாத்திய நிலைமையைப் பற்றித் தெளிவாய் விவரிக்கப்பட்டிருப்பதும் தவிற அதைப்பற்பற்றி புல்பெஞ்சு தீர்மானத்திலும் பரிஷ்காரமாய்ச் சொல்லப்பட்டிருப்பதால் அதுவிஷயமாய் அதிகமாக இங்குசொல்லப்பட வேண்டியதில்லை.

1802-ம் வருஷத்தில் தாவா கிராமத்தில் ஏகபோக மிராசுதாருக்கு மேல்வார பாத்தியதை இராண்டாக அளிக்கப்பட்டபொழுது அவாளுக்குக் குடிவார பாத்தியதை இருந்ததாவென்றும் அல்லது அக்காலத்தில் முன்சொல்லிய உள்குடிப்பாயக்காரிகள் இருந்து அவர்கள் அக்காலத்திய குடிவார பாத்தியதையை முழுமையும் அடைந்தார்களாவென்று இந்தக கேசில் தீர்மானிக்கவேண்டியது முக்கியமான பாயிண்டாகும். முதல் பார்வையில் 1772-ம் வருஷத்திய வார சட்டத்தில் கண்டிருக்கிற உள்குடி சுகவாசிகளாகிய குடிவாரம்தார்கள் 1772-லேயே குடிவார பாத்தியம் முழுவதையும் அடைந்திருப்பதாகவும் எவ்விதத்திலும் 1802-இல் சுரோத்திரியம் கிராண்டு அளிக்கப்பட்ட காலத்திலாவது அவர்கள் அவ்வித பாத்தியதையை அடைந்ததாக அனுமானிக்க வேண்டுமென்றும் தோன்றினபோதிலும் இந்த அப்பீலை ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸடர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் எழுதிய தீர்ப்பைப் படித்துப் பார்த்தபிறகு தானாதி விநிமய விக்கிரயங்களுக்கு யோக்கியமில்லாமல் யாதொருவரும் குடிவார பாத்தியதையை பரிபூரணமாய் அடைந்ததாகச் சொல்லக்கூடாதென்று துலங்குகிறது. குடிவார பாத்தியதையுடைய ஒருவரிடத்தில் உள்பட்ட ஒருடெனெண்டாகமட்டும்இருப்பதாய் ஒப்புக்கொள்ளாமல் தானாதிவிநிமயங்கள் செய்ய அதிகாரம் உண்டாயிருந்தால்தான் குடிவார பாத்தியம் பரிபூரணமாகுமென்று சொல்லவேண்டும். 1802-ம் வருஷத்திற்குப் பின்னும் அநேக வருஷங்களாக தாவா கிராமத்தில் அனுபோகமுடைய ரயட்டுகள் தங்களுக்கு விசியோக பாத்தியதை உண்டென்று சொன்னதாகக் காணப்படவில்லை. சுரோத்திரியம்தார்களையே ஏகபோக மிராசுதார்களாக ஒப்புக்கொண்டுமிருக்கிறார்கள். குடிவாரம்தாரிடம் உட்குத்தகைக்கு அனுபவிக்கும் ரயட்டுகளும் தங்கள் உள்குடி பாத்தியதையில் சாசுவத அனுபோக பாத்தியதையைப் பாராட்டலாமென்று (1913) 24 மதராஸ் லா ஜர்னல் 571-இல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரமய்யரவர்களும் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். இந்தக் கேசில் வாதிகள் தாவா நிலங்களில் அவ்வித சாசுவத அனுபோக பாத்தியதை அடைந்திருக்கிறார்களா என்று யோஜிக்குமிடத்து 24 மதராஸ் லா ஜர்னல் 571-இல் சொல்லிய கருத்தின்படி அபிப்பிராயப்பட்டு வாதிகளுக்கு ஜில்லா கோர்ட்டார் சொல்லுகிறபடி அனுபோக பாத்தியதை இடையவே கிடையாதென்று சொல்வது கஷ்டமாகும். 1802-இல் சுரோத்திரிய இனாம்தார்கள் உள்குடி குடிவா

ரம் தார்களுடைய அனுபோக பாத்தியதை ஸ்தாபனத்தால், தங்கள் மிராசு பாத்தியதையை இழந்துவிட்டார்களா வென்று மட்டும்தான் தீர்மானிக்கவேண்டியதாகும். [1910] மதராஸ் வாரக்குறிப்புகளின் 639-இலும், 30 மதராஸ் 502-இலும் கொடுக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயத்திற்கு விரோதமாக (1913) 26 மதராஸ் லா ஜர்னல் 99-இல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடி இந்தக் கோர்ட்டில் இனும் கிராண்டில அளிக்கப்படும் காலத்தில் இனும்தார் குடிவார பாத்தியதையை உடைத்தானவரல்லவென்றே அனுமானிக்கப்பட வேண்டியதாகும். ஆனால் செங்கல்பட்டு ஜில்லாவில் மிராசுபாத்தியதையைப் பற்றிய சரித்திரத்தைப்பார்க்குமிடத்து வெகுகாலங்களுக்கு முன் இனும் கிராண்டு அளிக்கப்பட்ட மிராசுதார்களுக்குக் குடிவார பாத்தியதை இருந்திருக்காதென்று அனுமானிக்கக்கூடாது. 1878-க்குப் பின் கிராமத்தரிசிகளிலும சமுதாயங்களிலும் மிராசுதார்களுக்குக் குடிவாரபாத்தியதை உண்டா என்பது ஒரு பாயிண்டு. 1802-இல் சாகுபடி நிலங்களில் அவர்களுக்கு குடிவார பாத்தியதை இருந்ததா என்பது வேறு பாயிண்டாகும். 1802-இல் சாகுபடி நிலத்திலுள்ள குடிவார பாத்தியதையை (உள்குடிபாயக்காரிகளி னிமித்தம்) இழந்துவிட்டார்களென்று சொல்வது முற்றிலும் வேறு விஷயமாகும். நீரயோஜித்துப் பார்த்ததில் 1802-ம் வருஷத்தில் சுரோத்திரிய இனும் அளிக்கப்படும் பொழுது ஏகபோக மிராசுதார்களாகிய எதிரிகளுக்குக் குடிவார பாத்தியதை இழந்துபோகப்பட்டதாகச் சொல்லக்கூடாது. ஜில்லா ஜட்ஜியவர்களின் அபிப்பிராயம் சரியானதாகும். அதை 2-வது அப்பீலில் மாற்றக்கூடாது. ஆகையால் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்டின்படி தாவா கிராமம் எஸ்டேட் நிலமாகாது. வாதிகளுக்குப் பட்டா அளிக்கத் தேவையில்லை. பட்டாவைக் கொடுக்கும்படி கேட்கும் பிராதுகளை எஸ்டேட் ஆக்டின்படி ரெவின்யூ கோர்ட்டார் தீர்மானிக்க வேண்டியதேயொழிய ஸிவில் கோர்ட்டார் அந்தப் பிராதைப் பிடிக்க சட்டமில்லை வாதி கேட்கிறபடி ஸிவில் கோர்ட்டுக்குப் பிராதை அனுப்பி விஜாரித்துப் பைசல் செய்யும்படி உத்தரவளிக்க நியாயமில்லை.

ஆகவே 2-வது அப்பீல்களெல்லாம் தள்ளுபடியாக வேண்டியதாகும். ஆனால் வாதிகளுக்கு சாசுவத அனுபோக பாத்தியதை விஷயமாக இந்த அப்பீலில் யாதொரு தீர்மானமும் கொடுக்கப்படவில்லை.

———o:———

## புல்பெஞ்சு கேஸ்.

—:o:—

(Messrs சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஒல்ட்வீல்ட்)

ராமனாதபுரம் ஜில்லா.

S. A. No. 1973 of 1911—10 டிசம்பர் 1913.

பெரிய அப்பா அம்பலன் Vs ஷண்முகசுந்தரம் வகையரா.

1897-ம் வருஷத்தில் தாவா சொத்துக்களை வாதியிடமிருந்து 20-வருஷத்திற்கு ஒத்திக்கு வாங்கி அனுபவித்து வந்த ஒத்திக்காரரை அப்புறப்படுத்தி 2, 3, பிரதிவாதிகள் 1898-இல் சொத்தில் பிரவேசித்து வசப்படுத்திக் கொண்டதின்மேல் 1908-இல் 2-3 பிரதிவாதிகள் தாவாசொத்தின்மேல் புதிய கட்டடங்கள் கட்ட ஆரம்பிக்கவே வாதி ஆக்ஷேபித்துத் தடுத்ததில் பிரதிவாதிகள் வாதியின் பாத்தியதை முற்றிலும் நிராகரித்தார்கள். அவ்விதமாய் நிராகரித்ததை வியாஜ்ஜியமூலமாக எடுத்துக்கொண்டு 1909-ம் வருஷத்தில் வாதி ராமனாதபுரம்சப்கோர்ட்டில் தன்னுடைய பாத்தியதை ஸ்தாபிக்கும் பொருட்டு அசல் தாவாசெய்தார். எதிரிகளின் ஆன்ஸரில் தாங்கள் 1898-இல் தாவா சொத்தை வசப்படுத்திக்கொண்ட தகவல் வாதிக்குத் தெரிந்தவிஷயமென்றும் அதுமுதலே வாதியின் பாத்தியதையை நிராகரித்து தங்கள் பாத்தியதையைப் பாராட்டி வருவதாயும் வாதிக்கு வியாஜ்ஜியமூலம் 1898 ஆக ஏற்பட்டு அது முதல் 6-வருஷங்களுக்குள் இந்த பிராது செய்யப்படாத காரணத்தால் காலாவதி தோஷமாகிய எதிர்வாதம் செய்தார்கள். சப்கோர்ட்டிலும் ஜில்லா கோர்ட்டிலும் வியாஜ்ஜியம் அசல் அப்பீல் ஈரங்கியாகி வாதிக்கு அனுகூலமாக பிராதுக்கு காலாவதி தோஷமில்லையென்று தீர்மானிக்கப் பட்டதின்பேரில் 2-3 பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்தார்கள். ரூ. 500-க் குட்பட்ட சப்கோர்ட் தீர்ப்பின்பேரில் அப்பீல் ஹைகோர்ட்டுக்குக் கிடையாதபடியால் முதலில் ராமனாதபுரம் ஜில்லாகோர்ட்டில் அப்பீலாகி அதன்மேல் ஹை



கோர்ட்டுக்கு 2-வது அப்பீல் செய்யப்பட்டது போலும்.)

2-வது அப்பீலை ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ அவர்களும் இத்தகைய கேசுகளில் அதாவது பாத்திய ஸ்தாபன வியாஜ்ஜியங்களில் வியாஜ்ஜியமூலத்தைக் குறித்துக் காட்டுவதில் அபிப்பிராயத் தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று மாறுக ஏற்பட்டிருப்பதாலும் சொற்ப காலத்திற்குமுன் ஏற்பட்டிருக்கிற 36 மதராஸ் 97-க்குச்சரியான 21 மதராஸ் லா ஜர்னல் கேசின் தீர்ப்பும் அதே விஷயத்தைப் பற்றிய 21 மதராஸ் லா ஜர்னல் 467-இல் குறிக்கப்பட்டிருக்கிற தீர்ப்பும் வித்தியாஸமாகயிருப்பதாலும் அடியில் குறிக்கப்பட்டிருக்கிற பாயிண்டைப்பற்றி அபிப்பிராயங் கொடுக்கும்படி புல்பெஞ்சுக்கு ரிபர் செய்தார்கள். அதாவது:—

(1) ஒருவன் பந்தக சொத்தை சொந்தக்காரனிடமிருந்து துராக்கிருதமாய் அபகரித்து வசப்படுத்திக்கொண்டு பாத்தியங்கொண்டாடினால் அந்தப்படிச் சுவாதீனம் செய்துகொண்டது பந்தகக்காரனுடைய பாத்தியதைக்குக் கெடுதியாக பாவிக்கப்படலாமா? (2) அல்லது சுவாதீன அடமானத்தால் சொத்தை அனுபவிக்கிறவனிடமிருந்து வசப்படுத்திக் கொண்டவனுடைய சுவாதீனமானது அடமானதாருடைய சொத்து பாத்தியதைக்கு நிராகரிப்பாக ஏற்படுமா? (3) ஒருவன் மற்றொருவனுடைய சொத்து பாத்தியத்தைஒருதடவையில் நிராகரித்ததல்லாமல் பின்னால் பல தடவைகளிலும் அந்த பாத்தியதையை ஆக்ஷேபித்திருந்தால் சொத்து பாத்தியதையானது வேறு காரணங்களால் இழந்துபோகப்படாத மட்டில் அதாவது பாத்தியதை (ரிகார்டுகளால்) கெட்டுப்போகாத பட்சத்தில் பாத்திய ஸ்தாபக வியாஜ்ஜியத்திற்கு வியாஜ்ஜியமூலமானது எதிரியின் ஒவ்வொரு நிராகரிப்பு நடத்தையாலும் புதிதாய் ஏற்படக்கூடியதாக (20 கல்கத்தா 906-இல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடி) சொல்லலாமா?

மேற்கூறிய மூன்று விஷயங்களைப் பற்றி புல்பெஞ்சு அபிப்பிராயத்திற்காக ரிபர்செய்த ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய உத்தரவில் சொல்லப்பட்ட முக்கிய அம்சங்களாவன:—

காலாவதி ஆக்டின் 92; 93, 119, 125, & 129-வது ஆர்டிகில் படிக்கு செய்யப்படுகிற ஸ்வீகார வழக்குகள், விருஷ்டனைப் பத்திரத்தைப்பற்றிய வழக்குகள், ஜீவனும்ச வழக்குகள், ஹிந்து விதவைகள் செய்த விநியோகத்தைப் பற்றிய வழக்குகள், இன்னும் இதுபோலொத்த பாத்திய ஸ்தாபன வழக்குகளைத் தவிர்த்த மற்ற பாத்திய ஸ்தாபன வழக்குகளுக்கு, ஆர்டிகில் 120-இன்படி 6-வருஷ காலாவதி யுண்டென்றும் அதற்குவியாஜ்ஜியம் நடத்த பாத்தியதை உண்டான முதல் காலாவதி கணிக்கப்படவேண்டுமென்றும் இப்பொழுது ஸ்திரமாய் ஏற்பட்டிருக்கிறது. பாத்திய ஸ்தாபன வழக்குகள் பலதினுசாக இருக்கின்றன. வியாஜ்ஜியம் தொடுக்க பாத்தியதை எப்பொழுது உண்டாகிறதென்று அநேக விதமான வழக்குகளில் நிர்ணயிப்பதற்கு அதிக கஷ்டமாகிறது. (Spceific Releif Act) ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட் 42-வது பிரிவில் சட்ட சம்பந்தமான யாதொரு நிலைமையை அல்லது யாதொரு சொத்திலுள்ள பாத்தியதையை ஸ்தாபிக்கும் பொருட்டு அவ்வித பாத்தியதை அல்லது நிலைமை கிடையாதென்று மறுக்கிறவன் பேரிலாவது அப்படி மறுக்கிறதற்குரிய யோக்கியதையை அடைந்தவன் பேரிலாவது வியாஜ்ஜியம் நடத்தலாமென்று சொல்லப்பட்டிருக்கிறதும்தவிற அவ்வித வியாஜ்ஜியத்தில் கோர்ட்டாருக்கு யுக்தமானால் வாதிகோருகிறபடி பாத்திய ஸ்தாபன டிக்கிரீ யளிக்கலாம். (ஷை டிக்கிரீயால் யாதொரு பாத்தியதை தகராரின்றி நிலைக்குமேயொழிய அந்த தீர்மானத்தால் உடனே யாதொரு சுவாதீனம் முதலிய கூடுதல் நன்மை கிடைக்கக்கூடியதல்ல. பிற்காலத்தில் நமோதுக்கு வரவேண்டிய யாதொரு பாத்தியதையை முந்தியே தகராரின்றி தீர்மானித்துக்கொள்ள யத்தனித்தால் அவ்விததீர்மானமளிப்பதுகோர்ட்டாருடையயுக்தத்தைச் சேர்ந்ததாகும். ஏனெனில் சிலசமயங்களில் வாதிக்குரிய பாத்தியதை ஏற்பட்டால் சொத்துக்களை அனுபவித்து வருகிறவர்கள் வீணை அவகாசப்பிக்கையாலும் அல்லது மோசக் கருத்தாலும் வழக்குகளுக்காஸ்பதமான நடவடிக்கைகளை நடத்தமலிருக்கக்கூடும். கேசின் சந்தர்ப்

பங்களுக்குத் தக்கபடி அவ்வித தீர்மானங் கொடுக்க கோர்ட்டாருக்கு யுக்தாதிகாரம் ஏற்பட்டிருக்கிறது.) பாத்தியதையை நிராகரிக்கிறவன் பேரில் தாவா செய்ய வியாஜ்ஜியமூலம் எப்பொழுது ஏற்பட்டதாகச் சொல்லவேண்டும்? பாத்தியதையை நிராகரிக்கத்தக்க நிலைமையை அடைந்தவன்பேரில் தாவாசெய்ய வியாஜ்ஜியமூலம் எப்பொழுது ஏற்படும்? நிராகரிக்கும் நிலைமையை (யோக்கியதையை) அடைந்தவன் பேரில் வியாஜ்ஜியமூலம் அவ்வித நிலைமை உண்டான நிமிஷத்திலேயே துவக்குமா அல்லது அவன் நிராகரிப்பான் என்று வாதிக்கு அச்சமுண்டான சமயத்தில் துவக்குமா? பாத்தியதை நிராகரிக்கிற (மறுக்கிற) வன்பேரில் தாவா செய்வதற்கு வியாஜ்ஜியமூலத்திற்கு நிராகரிப்பவனுடைய யாதொரு நடத்தையாவது வசனமாவது ஆதாரமாகி அதுமுதல் 6 வருஷ காலாவதி கணிக்கப்பட வேண்டுமோ? நிராகரிக்கும் நடத்தைத் அல்லது வசனமாவது வாதிக்குத்தகவலன்னியிலிருந்தாலும், அவ்வித நடத்தை அல்லது வசனங்கள் ஏற்பட்டமுதல் 6-வருஷ காலாவதி கணிக்கலாமா? திருஷ்டாந்தரமாக, எதிரி வாதிக்கு பாத்தியமில்லையென்று ஒரு மூன்றாவது மனிதனிடம்சொல்லிக்கொண்டாலும்அல்லது ஒரு கடிதத்தில் குறித்தெழுதி அதை யாருக்கும் அனுப்பாமல் தன் கைப்பெட்டியில் வைத்துக்கொண்டிருந்தால் அவ்வித வசனங்களும் எழுத்தும் உண்டான முதல் 6-வருஷ காலாவதி கணிக்கப்படவேண்டுமோ? தவிர நிராகரிக்கப்படும் எதிரியின் நடத்தை பலதடவைகளில் பலவாறாக ஏற்பட்டிருந்தால் வியாஜ்ஜியமூலம் ஒவ்வொரு தடவையிலும் புதிதாய் உண்டானதாகச் சொல்லலாமா? மேற்கூறிய விஷயங்களைப் பற்றி கோர்ட் தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று விரோதமாகவே ஏற்பட்டிருக்கின்றன.

20 கல்கத்தா 936-இன் 925-ம் பக்கத்தில் புல்பெஞ்சுக்கு ரிபர் செய்யப்பட்டிருக்கிற மூன்றாவது பாயிண்டானது தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சொத்தில் பாத்தியதை கெடாமலிருக்குமட்டும் நிராகரிப்பவன் பேரில் பாத்தியஸ்தாபன வியாஜ்ஜியம் செய்வதற்கு தொடர்ந்த பாத்தியமுண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் 26 மதராஸ் 410-இன் 416-இல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்தக் கேசிலும் வியாஜ்ஜியமூலம் எப்பொழுதென்று குறிப்பாய்த் தீர்மானிக்கப்படவில்லை. சொத்து பாத்தியதையைப் பற்றித் தகரார் ஏற்பட்டதின் பேரில் மாஜிஸ்டிரேட்டார் கிரிமினல் புரொஸிஜர்கோட் 146-வது பிரிவின்படி சொத்தை ஜப்தி செய்ததில் வாதி தன் பாத்தியத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு வியாஜ்ஜியம் செய்வதற்கு ஜப்தியான தேதிவியாஜ்ஜியமூலமாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் மாஜிஸ்டிரேட்டார் ஜப்திசெய்யுமுந்தியே எதிரியின் தகரார் வாதிக்குத் தெரிந்திருக்கக்கூடியதாகையால் ஜப்திக்குமுன் எதிரி நிராகரித்த தேதியை வியாஜ்ஜியமூலமாய் எடுக்காமல் ஜப்தி தேதிமுதல் காலாவதி கணிப்பது நியாயமாகுமா?

23 மதராஸ் 31-இல் காரணவன் செய்த சொத்து விக்கிரயம் தர்வாட்டைச் சேர்ந்த மற்ற மெம்பர்களைக் கட்டுப்படுத்தாதென்று கொண்டுவந்த வழக்கின் வியாஜ்ஜியமூலம் காரணவனால் தஸ்தவேஜு எழுதி முடிக்கப்பட்ட தேதியில் ஏற்பட்டதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது தஸ்தவேஜுபிறந்த தகவல் வாதிகளுக்குத்தெரியவந்த தேதியில் வியாஜ்ஜியமூலம் ஏற்பட்டதாகச் சொல்லப்படவில்லை. ஆகையால் பாத்தியஸ்தாபன வியாஜ்ஜியத்திற்கு விநியோகமான தகவல் வாதிகளுக்குத் தெரிந்திருக்கவேண்டிய விஷயமும் தெரியவராத விஷயமும் வியாஜ்ஜியமூலத்திற்குறிய அம்சங்களாக பாவிக்கப்படவில்லை. 24 மதராஸ் 533-இல் எதிரி எக்ஸ்பார்டியாக ஸர்வே ஆபீஸர் மூன் 1888-இல் வாதியின் பாத்தியத்தை மறுத்து உத்தரவுபெற்றபின் வாதி ஷை உத்தரவை ரிவியூ செய்யும்படி 1892-இல் ஸர்வே ஆபீஸரிடம் விண்ணப்பம் கொடுத்தும் பலிக்காமல் 1906-இல் பாத்திய ஸ்தாபன வியாஜ்ஜியம் செய்ததில் வியாஜ்ஜிய மூலம் 1888-இல் ஏற்பட்டதல்லவென்றும் வாதியின் விண்ணப்பம் தள்ளுபடியான தேதியாகிய 1892-இல் தான் ஏற்பட்டதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதனால் ஸர்வே ஆபீஸர் 1888-இல் வாதிக்கு விரோதமாய் செய்த ரிகார்டின் தகவல் வாதிக்குத் தெரிந்து எதிரியின ஆக்ஷேபனை நடத்தையானது வாதியின் பாத்தியதைக்குக் குறையுண்டாக்குவதனால்தான் வியாஜ்ஜியமூலம் ஏற்படுமென்று துலங்குகிறது. 31 அலகபாத் 9 இலோ வாதியின் பாத்தியதைக்கு விரோத



மாக 1895-இல் பிரதிவாதி தன்னுடைய சொத்தப்பெயரை ரெவினியூகோர்ட்டில் பதியச்செய்துகொண்டதின்பேரில் 1903-இல் வாதி அதை மாற்றும்படி பிரயத்தனப்பட்டதில் எதிரி ஆக்ஷேபித்தமையால் வாதி செய்த பாத்தியஸ்தமான வியாஜ்ஜியத்திற்கு வியாஜ்ஜியமூலம் 1895 என்றும் அதாவது ரெவினியூரிகார்டில் எதிரியின் பெயர் குறிக்கப்பட்ட தேதியாகிய ஒரே வியாஜ்ஜியமூலந்தானுண்டென்றும் 1903-முதல் இரண்டு வருஷங்களுக்குள் கொண்டுவரப்பட்ட பிராதுக்கு 6 வருஷ காலாவதி கடந்துபோனதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தில் முந்திய ஒரு (ரிபோர்ட்டாகாத) அலகபாத் ஹைகோர்ட் தீர்மானத்தைப்பற்றி சொல்லி அதின்கருத்து வித்தியாஸமானதென்று சொல்லப்பட்டது. ஆனால் அந்த ரிபோர்ட்டாகாத அலகபாத் கேசின் அபிப்பிராயம் மேற்கூறிய 31-அலகபாத் கேஸுக்கு ஒற்றுமையில்லையென்று சொல்லக்கூடாது. அதில் "ஸெட்டில்மெண்டாபீஸருடைய உத்தரவான தேதியை கீழ்கோர்ட்டார் வியாஜ்ஜிய மூலமாய் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் அவ்வித உத்தரவுபிறந்தும் அதனால் ஏற்பட்ட பாத்தியதையை எதிரி உபயோகப்படுத்தினால்தான் வாதி வியாஜ்ஜியம் தொடுக்க பாத்தியமுண்டாகுமென்றும் வாதி இஷ்டப்பட்டால் உத்தரவுபிறந்த உடனே பிராது செய்திருக்கலாமென்றும் அப்பொழுதே பிராதுசெய்ய வேண்டுமென்று கட்டாயமில்லையென்றும்" சொல்லியிருக்கிறார்கள். அந்த அபிப்பிராயத்தால் வாதிக்கு இரண்டு வியாஜ்ஜியமூலம் உண்டென்று ஏற்படுகிறது. எதிரி பாத்தியதையை நிராகரித்து ஸெட்டில்மெண்டாபீஸரிடம் உத்தரவுபெற்றுக் கொள்ளுதல், ஷை உத்தரவை நமோதுக்குக் கொண்டுவந்து யாதொரு நடத்தையை பிரயோகித்தல். ஆகிய இரண்டு சமயங்களும் வியாஜ்ஜியமூலத்தைத் தருவதாகும். 23 மதராஸ் லா ஜர்னல் 607-இல் மலையாளம் ஜில்லா வழக்கமுறைப்படி ஒத்திதாரனுடைய தகவலன்னியில் அந்நியனுக்கு ஒத்தி சொத்தானது விக்கிரயமாகவே அந்த விக்கிரயத்தை ரத்துசெய்வதற்கு ஷை விக்கிரயமான தகவல் வாதிக்கு (ஒத்திதாரனுக்கு)த்தெரியவந்தகாலம்தான் வியாஜ்ஜியமூலமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மேற்கூறிய தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாஸமாக ஏற்பட்டபோதிலும் வாதியின் தகவலன்னியில் எதிரியாதொருவன் வாதியின் பாத்தியதையை வாக்கினாலாவது எழுத்தாலாவது அல்லது ஸர்கார் உத்தியோகஸ்தர் மூலமாயாவது நிராகரித்தால் வாதி தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்க வியாஜ்ஜியம் செய்ய அவ்வித தகவல் தெரிந்த முதல் நான் காலாவதி கணிக்கவேண்டும். எதிரி நிராகரித்ததகவல் தெரியவில்லையென்ற சவுகரியத்தைப் பற்றி அநேகவருஷங்கள் வாதியாதொரு பிரயத்தனமும் எடுக்காமல் தன் இஷ்டப்படி வழக்கெடுத்து அந்த வழக்குக்கு 6 வருஷத்திற்கு முன்தான் தகவல் தெரியுமென்று வாதி சொல்லக்கூடுமானால் அது பொய்யான நடவடிக்கைக்குமிடங்கொடுக்குமென்பது வாஸ்தவம்தான். ஆனால் இவ்வித வழக்குகளின் சகலவிதமான சந்தர்ப்பங்களையும் கவனித்து கோர்ட்டார் யுக்தானுசாரத்தை உபயோகப்படுத்தி வாதிக்கு பரிகாரம் அளிக்கவும் அல்லது மோசமாக காலதாமதத்தின்பேரில் வழக்கெடுத்திருந்தால் பிராதைத் தள்ளுபடிசெய்யவும் சட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதால் அவ்விதமான அசந்தர்ப்பத்தைப்பற்றி யோஜிப்ப தனாவசியமாகும்.

இந்தக்கேசின் சந்தர்ப்பங்களைப் பார்க்குமிடத்து கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி 1908 இல் எதிரிகள் கட்டடத்தை விருத்திசெய்ய யத்தனித்தபோது தான் வாதியின் ஆக்ஷேபனையும் எதிரியின் பாத்திய நிராகரிப்பும் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. எதிரிகளோ தாங்கள் 1898-இலேயே வாதியின் பாத்தியதைக்கு விரோதமாக சுவாதீனமடைந்தார்களென்று அனுமானிக்கப்படவேண்டுமென்று வாதம் செய்கிறார்கள். ஒருவன் யாதொரு சொத்தை சுவாதீனமடைந்தால் உலகத்தாருக்கெல்லாம் அவ்விஷயம் நோடீஸ் கொடுக்கப்பட்டதாக நிதானிக்கவேண்டியதுதான். ஆனால் சுவாதீன அடமானத்திலிருக்கிற ஒரு வீட்டை ஒருவன் வசப்படுத்திக் கொண்டால் அது ஒத்திதாரனுடைய பாத்தியதைக்கு மட்டும் நிராகரிப்பாகுமா அடமானம் வைத்த சொத்து பாத்தியஸ்தனுக்கும் நிராகரிப்பாகுமா? அதனால் அடமானம் வைத்தவனும் தான் அடமானத்தைத் தீர்த்துக்கொள்ளும் பாத்தியதையை இழந்தவனாக வேண்டுமோ? (B-யின் சொத்தில் ஒத்திபாத்தி..

னதயால் A சுவாதீனமடைந்திருக்க C-என்பவன் சொத்தை சுவாதீனப்படுத்திக் கொண்டால் B ஒத்தியை மீட்கும் பாத்தியதையும் விலகிப்போகும் வண்ணமாய் A-யினுடைய நடத்தையானது B-யின் பாத்தியதையையும் கெடுக்குமா?) இதே விஷயத்தைப்பற்றி மேற்கூறிய (1911)-ம் வருஷத்திய 36 மதராஸ் 97-இல் குறிக்கப்பட்டிருக்கிற தீர்மான அபிப்பிராயமும் 21 மதராஸ் லா ஜர்னல் 467-இல் குறிக்கப்பட்டிருக்கிற தீர்மானமும் ஒன்றுக்கொன்று மாறாகயிருக்கிறது. 36-மதராஸ் கேசில் வாதி பந்தக சொத்தின் சுவாதீனத்திலிருந்து எதிரியால் வெளிப்படுத்தப்பட்டதின்பேரில் எதிரி பந்தகதாருடைய பாத்தியதைக்கு யாதொரு இடையூறுண்டாக்காமல் தான்சுவாதீனமடைந்ததாக (அதாவது தன்னுடைய சுவாதீன பாத்தியமானது பந்தகக்கடனுக்குட்பட்டதென்று சொல்லி, வாதியை பாதிக்காமல் சுவாதீனமடைந்தாலொழிய மற்றப்படிக்கு எதிரியின் சுவாதீனம் வாதியையும் அடமானதாரையும் சேர்த்து பாதிக்குமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 21 மதராஸ் லா ஜர்னல் 467-இலோ எதிரி சுவாதீனமடையும் சமயத்தில் முந்தியசுவாதீனபாத்தியதை எவனுக்கிருந்ததோ அவனுக்கு மட்டும் எதிரியின் நடத்தை பாதிக்குமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது- அதாவது ஒத்திதார் சுவாதீனத்திலிருந்தால் அவனை விலக்கி சுவாதீனமடைந்த எதிரியின் நடத்தையானது அடமானதாராகிய வாதியின் பாத்தியதையை நிராகரித்ததாகச் சொல்லக்கூடாது. அந்தத்தீர்மானத்தை அனுசரித்தால் எதிரி 1898-இல் சொத்தில் பிரவேசித்தது வாதிக்கு வியாஜ்ஜியமூலமாகாது. வாதி 1908-இல் மேல் கட்டடங்களை கட்டுவதை ஆக்ஷேபித்தபோது வாதியின் பாத்தியதையை எதிரிகள் நிராகரித்த பொழுதுதான் வியாஜ்ஜியமூலம் ஏற்பட்டதாகச் சொல்லவேண்டியதாகும். 36 மதராஸ் கேசின் தீர்மானத்தை அனுசரித்தால் வாதியின் பிராது காலாவதியாகிறது. மேற்கூறிய இரண்டு கேசுகளும் பந்தக சொத்தைப் பற்றியதானாலும் நியாயம் ஒன்றுதான். தாவா கேசில் சுவாதீனமுடையவன் ஒத்திதார். அந்தக்கேசுகளில் சுவாதீனமுடையவன் அடமானதார். எதிரிகள் சுவாதீனமுடையவனை விலக்கி தான் சுவாதீனமடைந்தில் ஒரு தீர்மானப்படிக்குமுன் சுவாதீனமடைந்தவனுக்கு வியாஜ்ஜியமூல மேற்பட்டது. மற்றொரு கேசில் இருவருக்கும் வியாஜ்ஜியமூலம் அதே காலத்தில் ஏற்பட்டது. ஆகவே வாதிக்குப் பிந்திய தீர்மானம் விரோதம், முந்திய தீர்மானம் அனுகூலம்.

தவிர வாதி 20 வருஷத்திற்கு சொத்தை சுவாதீன அடமானத்திற்கு ஒப்படைத்து அந்தகாலத்திற்குள் சொத்தில் துராகிருதமாய்ப் பிரவேசித்தவன்பேரில் சொத்தை தன்வசப்படுத்திக் கொள்ளலாமா? 20 வருஷங்களுக்குள் சொத்தைத் திரும்பி அடைய பாத்தியமில்லாதிருக்க எதிரியின்மேல் அதற்குள் வியாஜ்ஜியம் நடத்துவதற்கு எதிரி சொத்தில் முதல் முதல் பிரவேசித்ததைத்தன்னுடைய பாத்தியதைக்குக் குறைவாக எண்ணி அதையே வியாஜ்ஜியமூலமாகக் கொண்டு ஏன் வியாஜ்ஜியம் தொடுக்கவேண்டும்? என்றாலும் மேற்கூறிய இரண்டு தீர்மானங்களும் மாறாக ஏற்பட்டிருப்பதால் முன் கூறிய மூன்று பாயிண்டுகளும் புல் பெஞ்சுக்கு ரிபர் செய்யப்பட்டது.

புல்பெஞ்சு அபிப்பிராயச் சுருக்கமாவது:—

(a) சுவாதீன அடமானத்தால் அனுபவித்து வருகிறவனை அப்புறப்படுத்தி சொத்தைக் கைவசப்படுத்திக்கொண்டவன் நடத்தையானது ஒத்தியின் கெடு வாய்தாதீருமுன் அதை சுவாதீனப்படுத்திக்கொள்ள லாயக்கில்லாத அடமானதாருடையசொத்துபாத்தியதைக்கு பாதகமான நிராகரிப்பாகுமாவென்ற முதல் பாயிண்டைப்பற்றி வாதிக்காக தான் சுவாதீனமடைய லாயக்கில்லாமலிருக்கதனக்கு விரோதமாக எதிரியின் நடத்தையை ஏன் நிதானித்து வியாஜ்ஜியமூலம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வாதம் செய்யப்படுகிறது. 1917 வரையில்வாதி ஒத்தி சொத்தை மீட்டு சுவாதீனப்படுத்திக்கொள்ள பாத்தியமில்லை. அதற்கிடையில் எதிரியின்பேரில் சுவாதீனத்திற்காகவும் தாவாசெய்ய நியாயமில்லையே. அப்படியிருக்க விசாஜ்ஜியமூலத்திற்குக் காலாவதி எதிரி 1898-ல் சொத்தை அடைந்த தேதிமுதல் ஏற்படுமா? எதிரிக்காக வக்கில் மிஸ்டர் அனந்தகிருஷ்ணய்யரவர்கள் வாதத்தில் வாதி ஒத்திதாரனுக்கு சுவாதீனத்தை ஒப்புக்கொடுக்கவேண்டுமென்றபிராதில் கோறிக்கொள்ளலாமென்விரோதரிவாதியின் பாத்தியதை நிராகரித்து சொத்து தன்னுடையதென்று பாத்தியங்கொண்டாடுவதால் வாதி அதைப்பற்றி உடனே தாவாசெய்ய வியாஜ்ஜியமூலமாக எடுத்துக்கொண்டு சொத்தைத் தான் சுவாதீனமடைய லாயக்கில்லாதபோதிலும் சுவாதீனத்திற்கு லாயக்குள்ள ஒத்திதாரனிடம் சுவாதீனத்தை வாங்கிக்கொடுக்கும் கருத்துடன் தாவா செய்திருக்கலாமென்று சொல்லுகிறார்கள். ஆகவே வாதியின் பிராதுக்குக் காலாவதி 1898-இலேயே தொடங்குமென்று வாதிக்கப்படுகிறது. இந்த விஷயமாக இதே ஹைகோர்ட்டில் பலதடவைகளில் தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

(1879) 2 மதராஸ் 226-இல் சொத்தானது ஒத்திதாரனிடத்திலிருக்கையில் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர் செய்த ஒரு விஜாரணையில் அடமானதார் கோடிவின்பேரில் ஆஜராகியும் அந்த சொத்தானது கவர்ன்மெண்டுக்குச் சொந்தமானதென்று தீர்மானிக்கப்பட்டு அந்த நிலங்கள் தனிப்பட்டாவால் ஒத்திதார்களுக்கே கிரண்டாக அளிக்கப்பட்டதில் அடமானதார் வாதியாக ஒத்திதாரையும் கவர்ன்மெண்டாரையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்துதன்பாத்தியத்தை ஸ்தாபிக்கும்பொருட்டு தாவாசெய்ததில் ஜில்லா கோர்ட்டார் 12 பம்பாய் ஹைகோர்ட் ரிபோர்ட்டுகளின் 180-இல் குறிக்கப்பட்டிருக்கிற தீர்மானத்தை அனுசரித்து வாதிக்கனுகூலமாக கவர்ன்மெண்டார் ஒத்திதாருக்கு கிராண்டு அளித்தது வாதியின் பாத்தியதைக்கு (அதாவது ஒத்திக் கடனைகொடுத்து சொத்தை மீட்டுக்கொள்ளும் பாத்தியதைக்கு) யாதொரு கெடுதியும் ஏற்படாததாகத்தீர்மானித்தும் அப்பீலில் ஹைகோர்ட்டார் அந்தத் தீர்மானத்தை மாற்றி ஒத்திதாருடைய பாத்தியதைக்குமட்டும் குறைவுண்டாக்கத் தக்கபடியும் அடமானதாருடைய பாத்தியதைக்கு யாதொரு குந்தகமில்லாமல்ஒருவன் சொத்தைக் கைவசப்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பங்களிலிருந்தபோதிலும், அடமானதாருடைய பாத்தியதைக்கும் ஒத்திதாருடைய பாத்தியதைக்கும் சேர்த்து பாதகம் ஏற்படும்படியாக எதிரி சொத்தைச் சுவாதீனமடைகிற சந்தர்ப்பங்களும்முண்டென்றும் இந்தக் கேசில் கவர்ன்மெண்டாருடைய விஜாரணையில் வாதியும் பார்டியாக இருந்ததால் வாதிக்கு வியாஜ்ஜியமூலம் கிராண்டுபிறந்த காலத்திலேயே ஏற்பட்டிருப்பதாயும் ஒத்தித்தவணை தீராததால் சுவாதீனப்பிராது செய்ய லாயக்கில்லாதபோதிலும் தன்னுடையபாத்தியம் எம்மட்டில் குறைவுபட்டிருக்கிறதோ அதைக்குறித்தாகிலும் தாவாசெய்திருக்கவேண்டுமென்றும் (அதாவது ஒத்தியை மீட்டுக்கொள்ளும் பாத்தியதை இழந்து போகக்கூடியதால் அதைப்பற்றி பரிகாரந்தேட தாவாசெய்திருக்கலாமென்றும் அதற்கு வியாஜ்ஜியமூலம் கிராண்டு தேதியாகுமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தில் ஒத்திதாருடைய பாத்தியஸ்தனுக்கு அனுபோகபாத்தியம் கொண்டாடத்தக்க சிலாக்கியம் அளிக்கப்பட்டிருக்கின்றது. அப்படியிருக்க வாதியாகியஒரு அந்நியன் (சுவாதீனத்தில் இல்லாதவன்) ஒத்தியை மீட்டுக்கொள்ளும் பாத்தியதையை நிராக்ஷேபனையாக அடைந்திருக்க அந்த பாத்தியதையைக் கொண்டாடி அந்த பாத்தியதை பாதிக்கப்படாமலிருக்குமட்டும் ஏன் அதை ஸ்தாபிக்க தாவா செய்யக்கூடாது?

7 மதராஸ் 26-இல் அடமானதார் வாதியாக ஒத்தியை மீட்கும் பாத்தியதையைக் கொண்டாடி ஒத்திதாரனிடமிருந்து வட்டிக்குச் செல்லானதுபோக மிகுதியான மாகுல் வரும்படியைப் பெற்றுவந்த காரணத்தால் சொத்தைக் கைவசப்படுத்திக்கொண்ட பாத்தியஸ்தனுடைய ஹக்கு எவ்விதமும் தடைபடாதென்றும், எதிர்வழக்காடுகிறவன் 12-வருஷ அனுபோக பாத்தியதையைக் கொண்டாடினாலொழிய எதிரியாகிய, சொத்தைக் கைவசப்படுத்திக்கொண்டவடி பாத்தியஸ்தன்பேரில், வியாஜ்ஜியம் செய்ய நியாயமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

10 மதராஸ் 189-இல் ஒத்தி பாத்தியஸ்தனுக்கு ஒத்தி சொத்தை கவர்ன்மெண்ட் நிலமென்று தீர்மானித்தபிறகு கிராண்டாக அளித்த காரணத்தால் அடமானதாருக்கு அவ்விதத்தீர்மானமடையப்பட்ட நடவடிக்கையின் தகவல் தெரிந்தாலொழிய அடமானதாருடைய பாத்தியதைக்கு யாதொரு கெடுதியும் ஏற்பட்டதாகச் சொல்லக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டு 2-மதராஸ் 226-இல் அடமானதார் கவர்ன்மெண்டு விஜாரணையில் பார்டியாக இருந்த சந்தர்ப்பத்தைக் காட்டி அதற்கு வித்தியாஸமாகத் தீர்மானம் கொடு

த்திருக்கிறார்கள். 21-மதராஸ் 153-இன் 165-ம்
பக்கத்தில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுப்பிரமணிய அய்ய
ரவர்கள் "அடமானதார் சுவாதீனத்தை ஒத்தி
தாரிடம் ஒப்பிவித்தபின் அந்த ஒத்திக் கடனைச்
செலுத்துமட்டும் தாவா சொத்தைத் தன்வசம்
வைத்துக்கொள்ள பாத்தியம் கிடையாதபடியால்
சொத்தை வசப்படுத்திக்கொள்ளும் மூன்றாவது
மனிதனுடைய நிராகரிப்பு நடத்தையானது பா
திக்க செய்றும் ஒத்திக்கடன் தீருமட்டும் வியா
ஜ்ஜியமூலம் ஏற்படவும் காலாவதி கணிக்கப்பட
வும் கூடாதென்றும், தவிர அந்தக் கேசில் 2-மத
ராஸ் கேசின் தீர்மானம் சரியாக ஒப்புக்கொண்
டாலும், அதில் ஏற்பட்டபிரகாரம் அடமானதா
ருக்கு எதிரியின் நிராகரிப்பைப்பற்றிய தகவல்
(நோடீஸ்) கொடுக்கப்படுமட்டும் வியாஜ்ஜிய
மூலம் ஏற்பட நியாயமில்லையென்றும்" அபிப்
பிராயப்பட்டிருக்கிறார்கள். ஜஸ்டிஸ் ஷப்பர்ட்
துரையவர்களும் அதே அபிப்பிராயப்பட்டிருக்கி
றார்கள்.

ஆகவே மேற்கூறிய மதராஸ் ஹைகோர்ட்
தீர்மானங்களில் ஒத்திதாரை அப்புறப்படுத்தின
3-ம் மனிதனுடைய சுவாதீனமும் நிராகரிப்பு
நடத்தையும் அடமானதாருக்குத் தகவல் ஏற்பட்
டால் தான் அவரை பாதிக்குமென்றும் அதை
யிட்டு பாத்தியஸ்தாபன வியாஜ்ஜியமூலம் ஏற்
படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதே
கருத்தாக மற்ற ஹைகோர்ட் தீர்மானங்களும்
ஏற்பட்டிருக்கின்றன. 14-பம்பாய் 176-ம், 12-
பம்பாய் ஹைகோர்ட் ரிபோர்ட் 180-ம், 14-பம்
பாய் 176-ம், 18-பம்பாய் 51-இன் 54-ம், 27-பம்
பாய் 43-இன் 68-ம்,10-பம்பாய் 49-ம், 30-அலக
பாத் 119-ம், பலதினுதசுளாக மேற்கூறிய அபிப்
பிராயத்தை அனுசரித்த தீர்மானங்களாயிருக்கி
ன்றன. அந்தத் தீர்மானங்களால் ஒத்தியை
மீட்கும் பாத்தியதையானது எதிரியினுடைய நி
ராகரிப்பான அனுபோகபாத்தியதையால் இழந்
துபோகக்கூடிய தாகுமென்று ஏற்படுகிறது.
ஆனால் அவ்விதமாய் பாத்தியதையை இழந்து
போவதற்கு ஒத்திதாரனை வெளிப்படுத்தி எதிரி
சுவாதீனமடைந்தால்மட்டும் போதாது. எதிரி
மேலான பாத்தியதையைத் தான் பாராட்டி
வாதியின் பாத்தியதையை நிராகரிக்கும் தகவல்
வாதிக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கவேண்டுமென்
றும் ஏற்படுகிறது. மேற்கூறிய மதராஸ் பம்
பாய் அலகபாத் தீர்மானங்கள் முந்திய ஈரங்கி
காலத்தில் எடுத்து காட்டப்பட்டிருக்காதென்று
தோன்றுகிறது. அவைகள் இங்கிலீஷ் சட்ட
முறையை அனுசரித்ததாயு மிருக்கிறது. அட
மானத்தை மீட்கும் பாத்தியதை எதிரியின் ஆ
க்ஷேபனையால் தடைபட்டுப் போகக்கூடியதாகு
மென்று இங்கிலீஷ் கோர்ட்டுகளில் தீர்மானமா
யிருக்கிறது. சொத்தானது சொந்தக்காரனுடை
ய சுவாதீனத்திலிருக்கையில் எதிரியின் நடத்தை
யால் வெளிப்பட்டால் எதிரியின் நிராகரிப்பு பரி
ஷ்காரமாய் வாதிக்குத் தெரிந்தமையால் வாதி
அதுமுதல் 12-வருஷங்களுக்குள் தாவா செய்ய
வேண்டியதாகும். இல்லாவிடில் எதிரிக்கு 12-
வருஷ அனுபோக பாத்தியதை ஏற்பட்டுவிடும்.
சொந்தக்காரன் தன் சுவாதீனத்தை வேறொருவ
னுக்கு அதாவது ஒத்திக்காரனுக்கு ஒப்புக்கொடு
த்தபிறகு வேறொருவன் ஒத்திதாரிடமிருந்து
சொத்தை வசப்படுத்திக்கொண்டால் எதாகிலும்
ஒரு பாத்தியதையிருந்து அப்படி செய்திருப்பா
னென்று யூகிக்க சட்ட நியாயமுண்டு. ஒத்திதா
ரனிடம் மேடோவர் பெற்றிருக்கலாம். ஒத்தி
பாத்தியதைக்கு அதிகாரமுடையவனாக யிருக்க
லாம். அப்படியிருக்க வாதியின் பாத்தியதைக்கு
நிராகரிப்பாக அப்படிச் சுவாதீனம் அடைந்ததாக
ஏன் அனுமானிக்கவேண்டும்? எதிரி கேவலம்
ஒத்தி பாத்தியதைமட்டுமல்லாமல் வாதிக்கெதி
ரான ஸர்வஸ்வதந்தர பாத்தியதையையும் அடை
ந்து கைப்பற்றிக்கொண்டதாக ருஜூப்படுத்த
வேண்டும். எனெனில் வாதியின் சொந்தபாத்
தியதையானது எதிரியின் ஒத்தியை அனுசரித்த
அனுபோக பாத்தியத்திற்கு விபரீதமாகாது. ஆக
வே வாதியின் பாத்தியத்தை நிராகரித்து எதிரி
சொத்தின் ஸர்வஸ்வதந்தரத்தையும் அடைந்ததாக
வாதிக்கு நோடீஸ் கொடுக்கப்பட்டிருக்கவேண்
டும். ஆகையால் வாதி அஜாக்கிறதையாய் தன்
சொத்தில் ஒத்திதாரை விலக்கி அந்நியன்
சுவாதீனமடைந்ததைக் கவனியாம லிருந்ததாகக்
குற்றம்சாற்றப்பட்டு அதனால் வாதியின் பாத்தி
யதை இழக்கக்கூடியதாகச் சொல்லக்கூடாது.
வாதிக்கு சுவாதீனதாவா செய்ய அதிகாரமில்
லாதபடியால் எதிரியின் நடத்தை பாதிக்க நியா



யமில்லாதபோதிலும் ஒத்திதாரனுடைய சுவா
தீனத்தைத் திரும்பிக்கொடுப்பதற்காக தாவா
செய்யலாம். அல்லது தன்னுடைய பாத்தியம்
எம்மட்டிலிருக்கிறதோ அது எதிரியின் அனு
போக பாத்தியதையால் கெட்டுப்போகாதபடிக்
குக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு தாவா
செய்ய இடமுண்டு. வாதிசெய்யும் தாவாவில்
எதிரியை ஒத்திதாரனிடம் சொத்தைத் திரும்பி
ஒப்புக்கொடுக்கும்படி கோருகிறதாக நிதானிக்க
வேண்டும்.

ஆகவே முதலாவது பிரசினையில் எதிரியின்
நிராகரிப்பு வாதியையும் பாதிக்குமாவென்று கே
ட்டதற்கு பாதிக்கக் கூடுமென்று சொல்லத்த
கும். ஆனால் இந்தக்கேசின் சந்தர்ப்பங்களைக்
கவனித்தால் வாதிக்கு எதிரி கட்டடங்கள் புதி
தாய்க்கட்டப் பிரயத்தனப்படுமட்டும் யாதொரு
நிராகரிப்பின் தகவலும் தெரியாததாகத் தோன்
றுகிறபடியால் எதிரி 1898-இல் தாவாசொத்தை
வசப்படுத்திக்கொண்ட நடத்தையானது வாதியை
பாதித்ததாகச் சொல்லக்கூடாது. வாதிக்கு வியா
ஜ்ஜியமூலம் 1908-இல்தான் ஏற்பட்டதாகும்.
மற்ற இரண்டு பிரசினைகளும் இந்தக்கேசின் பை
சலுக்கு அவசியமில்லாதபடியால் அதைப்பற்றி
அபிப்பிராயங் கொடுக்கத் தேவை யில்லையென்று
புல்பெஞ்சுத் தீர்மானமளித்த ஹானரபில் மிஸ்
டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயரவர்களுடைய அபிப்
பிராயத்திற்கு மற்ற இரண்டு நியாயாதிபதிகளும்
ஒத்துச்சொன்னார்கள்.

———:O:———

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்:

(Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் &
ஜஸ்டிஸ் எய்லிங்)

லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல்.

17—2—1914

ஒரு மைனர்மீது கொண்டுவந்த பிராதில் மை
னரின் தாயாரை கார்ட்டியனாக ஏற்படுத்தவேண்
டுமென்றுவாதி கோறிய விண்ணப்பத்தின்பேரில்
மைனரின்தாயாருக்குநோடீஸ் அனுப்பப்பட்டுகார்
டியனாக இருக்க இஷ்டமா இல்லையா என்பதை
குறித்ததேதியில் கோர்ட்டுக்கு ஆஜராகித்தெரிய
ப்படுத்தவேண்டுமென்று அறிக்கையிட்டும் மைன
ரின்தாயார் ஆஜராகவுமில்லை. யாதொருதகவலும்
தெரியப்படுத்தவில்லை. அதன்பேரில் (மௌன
த்தைச் சம்மதமெனக்கருதி) கோர்ட்டார் அந்தம்
மாளையே மைனர் பிரதிவாதிக்கு கார்டியனாக பா
வித்து வாதிக்கு எக்ஸ்பார்டி டிக்கிரீயளித்தார்.
அதன்பேரில் மைனரின் தாயார் தனக்குயாதொ
ரு நோடீஸும் கிடைக்கவில்லையென்ற காரணத்
தைச் சொல்லி எக்ஸ்பார்ட்டி டிக்கிரீயை மாற்ற
வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்ததில்
அது தள்ளுபடியாகி ஹைகோர்ட்டில் ரிவிஷன்
மனு தாகல் செய்தாள். ஹானரபில் மிஸ்டர்
ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ரிவிஷன் மனு
வை தள்ளுபடி செய்தமையால் மனுதார் லட்ட
ர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்ததில்அங்கு மைன
ரின் தாயார் கார்டியனாக யிருப்பதாய் வெளியிட்
டுச்சொல்லி ஒப்புக்கொள்ளாதபடியால் அவளை
கார்டியனாக நியமிக்கக் கோர்ட்டாருக்கு அதிகார
மில்லையென்றுதீர்மானித்து எக்ஸ்பார்ட்டிடிக்கிரீ
யைரத்துசெய்து சட்டப்படிகேசைநடத்திபைசல்
கொடுக்கும்படி டி-மு கோர்ட்டாருக்கு உத்தரவ
ளித்தார்கள்.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ்
ஸ்பென்ஸர்.)

சித்தூர் ஜில்லா.

C. M. S. A. No. 43 of 1912

16 டிசம்பர் 1913.

பானுதீன் சாகிப் Vs அருணாசல முதலி

திருப்பத்தூர் டி-மு கோர்ட்டில் வாதி செய்த
அசல் தாவாவில் டிக்கிரீயாவதற்கு முந்தியே எதி
ரியின் சொத்துக்களை ஸி. பி. ஸி. ஆர்டர் 38-
ரூல் 5-இன்படி ஜப்திசெய்து டிக்கிரீபெற்றபின்
ஜப்தியான சொத்தை ஏலத்திற்குக் கொண்டுவரா
மல் பிரத்தியேகமாய் பற்பல நிறைவேற்று நடவ
டிக்கைகள் எடுத்து ஒரு தடவை எதிரியை வார
ணடில் பிடிக்கும்பொருட்டு நிறைவேற்று மனுக்
கொடுத்தும் அந்த விண்ணப்பத்திற்குறிய மேல்
நடவடிக்கைநடத்த தவறினபடியால் டி-மு கோர்
ட்டார் அந்த விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்து
விட்டார்கள். அதன்பிறகு டிக்கிரீக்கு முன் ஜப்
தியாகியிருந்த சொத்தை வாதி ஏலத்திற்குக் கொ

ண்டுவரும்படி நடவடிக்கை யெடுத்ததில் எதிரி அவ்விதமாய் டிக்கிரீக்குமுன் செய்யப்பட்ட ஜப்தியானது மேற்கூறிய நிறைவேற்று மனு தள்ளுபடியான காரணத்தால் ரத்தாகிவிட்டதாக பாவிக்கப்படவேண்டுமென்றும், டிக்கிரியானபிறகு வாதி முன் ஜப்திசெய்திருந்த சொத்துக்களை வேறொரு டிக்கிரீபாக்கிதார் ஜப்திசெய்ததில் வாதி தனக்கும் ஷை யாறுடைய ஜப்தி ஏலநடவடிக்கையால் வசூலாகிற தொகையில் தனக்கும் பங்குவிகிதம் கிடைக்க வேண்டுமென்று கேட்டபடியால் வாதி டிக்கிரீக்கு முன்செய்த ஜப்தி நடவடிக்கையை டிக்கிரீக்குப்பின் செய்த ஜப்திநடவடிக்கையாய் மாற்றிக்கொண்ட பாவனையாகுமென்றும் ஆகையால் டிக்கிரீக்கு முன் செய்யப்பட்டிருந்த ஜப்தியானது நிலையற்றுப்போய் விட்டதாக பாவிக்கப்பட வேண்டுமென்றும் அவ்வித ஜப்தியை ஆதாரமாகக் கொண்டு வேறுஜப்தி நடவடிக்கை யெடுக்காமல் சொத்தை ஏலத்திற்குக் கொண்டுவரக்கூடாதென்றும், வாதி டிக்கிரீக்குப்பின் முந்தியஜப்தியைக் கவனியாமல்வேறுவிதமான நிறைவேற்று நடவடிக்கைகளைப் பலவாராய் நடத்திவந்தமையால் முந்திய ஜப்தியின்பலத்தை அசட்டைசெய்து அதிலேற்பட்ட பாத்தியதையை இழந்துவிட்டதாக பாவிக்கப்பட வேண்டுமென்றும் ஆகவே வாதி இப்பொழுது புதியஜப்திக் கட்டளையைப் பிறப்பித்துக் கொள்ளாமல் சொத்துக்களை ஏலத்திற்குக் கொண்டுவருகிற நடவடிக்கை செல்லாதென்றும் ஆக்ஷேபனைசெய்தார். டி-மு கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லாகோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக டிக்கிரீக்குமுன் செய்த ஜப்தி ரத்தானதாக பாவிக்கப்படக் கூடாதென்று தீர்மானித்து வாதிக்கு ஏல உத்தரவளித்தார்கள். (வேறொருவனுடைய டிக்கிரீபாக்கிக்காக ஜப்தியானதில் ஏல நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் பங்குவிகித விண்ணப்பம் பயனற்றதாகப் போய் வாதிதானே முன் ஜப்தியைக் கொண்டு ஏலத்திற்கு வந்ததாகத் தோன்றுகிறது.) எதிரி அதன்மேல் ஹைகோர்ட்டில் இரண்டாவது மனு அப்பீல்செய்ததில் கீழ்கோர்ட் தீர்மானம் காயமாகி 2-வது அப்பீல்தள்ளுபடியாச்சுது. அதற்குக்காரணமாக (1) ஸி. பி. ஸி. ஆர்டர் 21-ரூல் 57-இன்படி ஒரு நிறைவேற்றுமனு டிஸ்மிஸ்செய்யப்பட்டால் முந்தியஜப்தி ரத்தாகுமென்பது டிக்கிரீக்குமுன் செய்யப்பட்டஜப்தியல்ல; ஆனால் டிக்கிரீக்குப்பின் யாதொரு நிறைவேற்று நடவடிக்கையால் சொத்து ஜப்தியாகியிருந்தால் அந்த ஜப்திதான் ஷை டிஸ்மிஸல் உத்தரவால் ரத்தாகிவிடுமென்றும் (2) வாதிதன்னுடைய டிக்கிரீயை நிறைவேற்றி சொத்தை ஏலத்திற்குக் கொண்டுவரப்பிரயத்தனப் பட்டாலொழிய மற்றப்படி வேறு பாக்கிதாரனுடைய நடவடிக்கையில் பங்குவிகிதம் கேட்டதால் டிக்கிரீக்கு முந்திசெய்த ஜப்தியை மாற்றிக்கொண்டதாகச் சொல்லக்கூடாதென்றும் (3) வாதி முந்திய ஜப்தியின் பாத்தியதையைத் தன்னுடைய இதரமான நடவடிக்கைகளால் இழந்துவிட்டதாகச் சொல்வதற்கு ரிகார்டுகளில் யாதொரு ஆதாரமும் கிடையாதென்றும் சமாதானம் சொன்னார்கள். ஆகவே டிக்கிரீக்குமுன் செய்யப்பட்ட ஜப்தியானது பயனற்றுப்போகாமல் பிந்திய ஏலத்திற்கு ஆதாரமாச்சுது.

---

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)

தென் ஆர்க்காடு ஜில்லா.

Crl. R.C. 667 & R.P. 548 of 1913.

30 ஜனவரி 1914.

பழனிசெட்டி வகையரா Vs ரத்தனசெட்டி வகையரா.

கூடலூர் கஸ்பாவில் ஒரு பஜனைகூடத்தினுடைய சுவாதீன பாத்தியதையைப்பற்றித் தகரார் ஏற்பட்டதின்பேரில் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் கிரிமினல் புரொஸிஜர் கோட் 145-வது பிரிவின்படி கலகம் ஏற்படக்கூடிய தாக்கீதவல் கிடைத்ததின்பேரில் 1913 செப்டம்பர் 25-ம் தேதியில் பழனிசெட்டியார்வகையராக்களுடைய விண்ணப்பத்தின்பேரிலும் விஜாரணை செய்து 1-ம் எதிரி அக்காலத்தில் ஷை மடத்தின் சுவாதீனத்திலிருந்ததாகத் தீர்மானித்து அவரே சட்டப்படிக்கு அப்புறப்படுத்தப்படும் வரையில் சுவாதீனத்திலிருக்கவேண்டியதென்று உத்தரவளித்தார். மனுதார் அதன்பேரில் அவ்வித உத்திரவு நியாய விரோதமென்றும் சொல்லி அதை மாற்றும்பொருட்டு ஹைகோர்ட்டில் புரொஸிஜர் கோட் 435, 439-வது பிரிவின்படிக்கும் சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படிக்கும் ஹைகோர்ட்டார் பிரவேசித்து உத்தரவளிக்கும்படி ரிவிஷன் விண்ணப்பம் தாகல் செய்தார்கள். ஹைகோர்ட் உத்தரவுச் சுருக்கமாவது:— புரொஸிஜர் கோட் 145-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டார் நடவடிக்கை யெடுத்து செய்கிற உத்தரவுகளுக்குமேல் ஹைகோர்ட்டார் 435, 439 வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்க சட்டமில்லையென்று பரிஷ்காரமாய் விதிக்கப்பட்டிருக்கிறது.

சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படி ஹைகோர்ட்டாருக்கு எவ்வித நடவடிக்கைகளிலும் பிரவேசித்து உத்தரவளிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிற போதிலும் மாஜிஸ்டிரேட்டார் யாதொரு அதிகார வரம்பில்லாமல் உத்தரவு அளித்திருந்தாலொழிய ஹைகோர்ட்டார் சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படி பிரவேசிப்பது வழக்கமேயில்லையென்று (1912) மதராஸ் வாரக்குறிப்புகளின் 1159-இலும் 23 மதராஸ் லா ஜர்னல் 490இலும் சொல்லப்பட்டிருக்கிறது வாஸ்தவம்தான். ஆனால் அவ்விதமாய்ப் பிரவேசிக்காமலிருப்பது அதிக உத்தமமான வழக்கமென்றே சொல்லவேண்டும். (ஒரு ஸ்தலத்தில் கலகத்திற்கு ஆஸ்பதமான சந்தர்ப்பத்தை நிவர்த்திக்கும் வண்ணமாக மாஜிஸ்டிரேட்டார் செய்கிற நடவடிக்கைகளில் பிரவேசிக்காமலிருப்பது அதிக யுக்தமான காரியமாகும்.) அதனால்தான் கிரிமினல் புரொஸிஜர் கோடிலும் 435, 439-வது பிரிவின்படி ரிவிஷன் விண்ணப்பங்கள் மேற்கூறிய 145-வது பிரிவைப்பற்றிய உத்தரவுகளுக்குமேல் கிடையாதென்ற சட்டம் ஏற்பட்டிருக்கிறது. மேற்கூறிய 23 மதராஸ் லா ஜர்னல் கேசில், மாஜிஸ்டிரேட்டார் அதிகாரவரம்பன்னியில் உத்தரவளித்திருந்தாலொழிய ஹைகோர்ட்டாருக்கு சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படி பிரவேசிக்க அதிகாரமே கிடையாதென்று தீர்மானிக்கப்படவில்லை. 31 மதராஸ் 318-இல் 145-வது பிரிவின்படி உத்தரவளிக்க மாஜிஸ்டிரேட்டாருக்கு அதிகாரமுண்டென்றும் ஆனால் அதன்மேல் பிரவேசிக்க ஹைகோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தத்தீர்மானம் 435, 439-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருந்த ரிவிஷன் விண்ணப்பத்தில் ஏற்பட்டதேயொழிய சார்டர் ஆக்டின்படி கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தில் பிறந்த உத்தரவல்ல. ஆகவே 435, 439-வது பிரிவுகளின்படி மனுதாரின் ரிவிஷன் விண்ணப்பத்தில் பிரவேசிக்க நியாயமில்லையென்று தீர்மானிக்கவேண்டும்.





சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படி பிரவேசிப்பதற்கு மாஜிஸ்டிரேட்டார் அதிகாரவரம்பில்லாமல் உத்தரவளித்தார் என்றாவது அல்லது அதிக அக்கிரமமான நியாயக்குறைவு ஏற்பட்டிருக்கிறதாகத் துலங்காதபடியால் அந்த ஆக்டின்படியும் பிரவேசிக்க மறுக்கவேண்டியதாகும்.

தாவாமடத்தைச்சேர்ந்த விவாதம் செய்கிற இருதரத்தாருடைய சம்மதத்தின்பேரில் 1913-மார்ச்சுமாதத்தில் சப் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் மடத்தை ஒரு பூஜாரியின் வசம் சுவாதீனம் செய்து கொடுத்திருக்கிறார்கள். பூஜாரியினிடம் சுவாதீனப்படுத்திக் கொடுத்த போலீஸ் சப் இன்ஸ்பெக்டரிடத்தில் அக்காலத்தில் வன்னியகுலத்தைச் சேர்ந்த ஜாதித்தலைவரால் தகுந்த அந்தஸ்துள்ள சிலர் எக்காலத்தில் வேண்டும்போதும் மடத்து சொத்துக்களையும் மடத்தையும் போலீஸார்வசம் ஒப்பிவித்து விடுவதாக சம்மதித்திருக்கிறார்கள் என்று சப் இன்ஸ்பெக்டர் வாக்குமூலத்தில் சொல்லுகிறார். அப்படியிருக்க பூஜாரி கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ரிஸீவர் ஸ்தானத்தில் மடத்தைச் சுவாதீனப்படுத்திக் கொண்டதாக மனுதார் சொல்லுகிறார். அது பிசகான அபிப்பிராயமாகும். கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ரிஸீவர் போலீஸார் வசம் ஒப்புவிக்க நியாயமில்லை. பூஜாரியும் ஜாதித்தலைவருக்குள் அடங்கி சுவாதீனப்படுத்திக் கொண்டிருப்பதாகச் சொல்லவேண்டியதாகும். ஆகவே பூஜாரியை ரிஸீவர் ஸ்தானத்தில் அமைப்பதே பிசகு. தவிர மனுதார் 27 கல்கத்தா 785-யும் 22 மதராஸ் லா ஜர்னல் 154-யும் (1911) மதராஸ் வாரக்குறிப்புகளின் 44-யும் எடுத்துக்காட்டி அதில் கண்டபடி தாங்கள் ரிஸீவராகிய பூஜாரியை நியமனம் செய்யுமுன் இரண்டு மாதங்களுக்குள் மடத்தின் சுவாதீனத்திலிருந்ததாகவும் ஆகையால் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டார் உத்தரவுசெய்த இரண்டு மாதங்களுக்கு முன்னமேயே ரிஸீவர் நியமிக்கப்பட்டு தங்களிடமிருந்து சுவாதீனம் விலகிப்போனபோதிலும் ரிஸீவர் நியமனத்திற்கு முன் தாங்கள் இரண்டுமாதமாக சுவாதீனத்திலிருந்தமையால் 145-வது பிரிவின்படி சப்டிவிஷனல் மாஜிஸ்டி

ரேட்டார் தங்கள்வசம் சுவாதீனத்தை ஒப்புவிக்க வேண்டியதாயிருக்க செப்டெம்பர் மாதத்தில் 1-ம் எதிரியின் சுவாதீனத்திலேயே விடப்பட்டது சியாயவிரோதமென்று வாதம் செய்தார். மேற்கூறிய தீர்மானங்களின் நியாயம் சரியானவையல்லவென்று சொல்ல இடமிருக்கிறபோதிலும் இந்தக் கேசுக்கு அந்த தீர்மானங்கள் ஏற்றதாகாது ஏனெனில் பூஜாரி நியமனம் ரிஸீவர் நியமனமாகவே பாவிக்கத் தக்கதல்ல. ஆகவே மாஜிஸ்ட்ரேட்டாருடைய உத்தரவால் நீதிதவறியிருப்பதாக நிதானித்து !சார்டர் ஆக்ட் 15-வது பிரிவின்படி பிரவேசிக்க அவசியமில்லையென்று தீர்மானம் செய்தார்கள்.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

விசாகப்பட்டணம் ஜில்லா.

C. M. A. 145 of 1913—7 ஜனவரி 1914

லிங்கம் கிருஷ்ணபூபதி நியோகாரு

*Vs*

விஜயநகரம் மாகாராஜாவர்கள் &
கொவுரு பஸவி ரெட்டிகாரு

விஜயநகரம் மகாராஜா அவர்களுடைய எஸ்டேட் மானேஜரும் பவர் ஆவ் அட்டார்னிபெற்ற ஏஜண்டுமாகிய மிஸ்டர் (Fowler) பவுலர் துரையவர்கள், 1899-ம் வருஷத்திய ஜில்லா கோர்ட் அசல் நம்பர் தீர்ப்பின்பேரில் ஹைகோர்ட்டில் அப்பீலாகி அதற்குமேல் பிரிவி கௌன்ஸில் அப்பீல் தீர்மானத்தால் முடிவான டிக்கிரீ பெற்று அந்த டிக்கிரீயை பஸவி ரெட்டிகாரு என்ற 2 வது எதிரிக்கு மேடோவர் செய்துவிட்டபடியால் 2-வது எதிரி பிரிவி கௌன்ஸில் டிக்கிரீயை நிறைவேற்றுவதற்காக முதலில் ஜில்லா கோர்ட்டில் மேடோவர் தஸ்தவேஜைக்கொண்டு தன்னை டிக்கிரீதாராக ஏற்றுக்கொண்டு ரிகார்டில் பதிவு செய்யவேண்டுமெனக் கோறி விண்ணப்பங் கொடுத்ததில் டிக்கிரீ பாக்கிதாராகிய பிரதிவாதி ஆக்ஷேபனைகள் செய்தும் அதற்குச் சமாதானம் சொல்லி ஜில்லா கோர்ட்டார் 2-வது எதிரி கேட்கொண்டபடி உத்தரவளிக்கவே பிரதிவாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார் அப்பீல் க்ரௌண்டில் (1) பிரிவி கௌன்ஸில் டிக்கிரீயை நிறைவேற்றும்படி டிக்கிரீ மேடோவர் தாருக்கு அனுமதி கொடுக்க ஜில்லா கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்றும் பிரிவி கௌன்ஸிலாருடைய கட்டளைகளையும் அதிகாரத்தையும் செலுத்திவருகிற ஹைகோர்ட்டாருக்குத்தான் அவ்வித அனுமதி கொடுக்க அதிகாரமுண்டென்றும் (2) மிஸ்டர் (Fowler) துரையவர்களுக்கு பவரில் டிக்கிரீயை மற்றவர்களுக்கு (மேடோவர் செய்ய) அதிகாரம் கிடையாதென்றும் சொல்லப்பட்டது. ஹைகோர்ட்டார் இரண்டு அப்பீல் க்ரௌண்டுகளும் ஏற்றுக்கொள்ளத்தக்கவைகளல்லவென்று தீர்மானித்து ஜில்லா கோர்ட் உத்தரவை உறுதிப்படுத்தி அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

அப்பீல் வாதத்திற்குத் தகுந்த ஆதாரிடிகள் யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஸி. பி. ஸி. ஆர்டர் 21-ரூல் 15-இல் டிக்கிரீயின் மேடோவர் தார் டிக்கிரீ பிறந்த கோர்ட்டில் நிறைவேற்று நடவடிக்கையெடுக்க அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. 38-வது பிரிவில் ஒரு டிக்கிரீயை பிறப்பித்த கோர்ட்டாரும் நிறைவேற்றலாமென்றும் அல்லது நிறைவேற்றுதலுக்காக மாற்றப்படும் கோர்ட்டாரும் நிறைவேற்றலாமென்றும் சொல்லியிருக்கிறது. 37-வது பிரிவிலோ டிக்கியளித்த கோர்ட்டார் என்ற பதத்திற்கு விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. யாதொரு கேசில் அப்பீல் நடந்திருந்தால் அப்பீல் டிக்கிரீயை நிறைவேற்றுகிற அசல் கோர்ட்டும் அந்தக்கேசில் டிக்கிரீயளித்த கோர்ட்டாகவே பாவிக்கப்படுகிறதேயொழிய அப்பீல் கோர்ட்டிலிருந்து டிக்கிரீ நிறைவேற்றுவதற்காக மாற்றப்பட்டதாக பாவிக்கப்படுகிறதில்லை. ஆர்டர் 45-ரூல் 15-இலும் பிரிவி கௌன்ஸில் டிக்கிரீயை ஹைகோர்ட்டார் அசல் கோர்ட்டுக்கு நிறைவேற்றும் பொருட்டு அனுப்பவேண்டுமென்று சொல்லியிருக்கிறதேயொழிய ஹைகோர்ட்டாருக்கு அந்த டிக்கிரீ விஷயமாய் வேறு யாதொரு நடவடிக்கை நடத்தவாவது உத்தரவளிக்கவாவது அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஹைகோர்ட்டார் மத்தியஸ்தானத்திலிருந்து பிரிவி கௌன்ஸில் டிக்கிரீயைப் பெற்று அதை ரிகார்டு செய்தபின் அந்த வழக்கு முதல்முதல் எந்தக்கோர்ட்டில் தீர்மானமாச்சுதோ அந்த அசல் கோர்ட்டுக்கு அந்த டிக்கிரீயை நிறைவேற்றும் பொருட்டு அவசியமான யுக்தி யோஜனைகளையும் கொடுத்து அனுப்பக் கடமைப்பட்டிருக்கிறார்கள். 22 கல்கத்தா 971-இல் சொல்லியிருக்கிறபடி இந்த விஷயத்தில் ஹைகோர்ட்டார் கோர்ட் நடவடிக்கை நடத்துவதாக ஏற்படாமல் ஆபீஸ் ஹோதாவில் நடந்துகொள்வதாய் யூகிக்கப்படவேண்டும். பிரிவி கௌன்ஸிலார் கீழ்கோர்ட்டுகளுக்கு நேரில் தகவல் வைத்துக்கொள்ளுகிற வழக்கமில்லாதபடியால் ஹைகோர்ட் துவாராவாய் உத்தரவைத் தெரிவிக்கிறார்கள். ஆகவே 37-வது பிரிவின்படி பிரிவி கௌன்ஸில் அப்பீல் டிக்கிரீயை நிறைவேற்றும் ஜில்லா கோர்ட்டுக்குத் தாங்கள் பிறப்பித்த டிக்கிரீயாக பாவிக்கும் கருத்து ஏற்பட்டிருக்கிறது. 28 மதராஸ் 466-இல் ஒரு டிக்கிரீ பாக்கிதார் காலஞ்சென்றால் அவனுடைய வாரிஸ்கள்பேரில் டிக்கிரீயை நிறைவேற்றுவதற்கு டிக்கிரீ பிறப்பித்த கோர்ட்டில் அனுமதி பெறவேண்டுமேயொழிய நிறைவேற்றுவதற்காக மாற்றப்படும் கோர்ட்டார் அந்த அனுமதி கொடுக்கக்கூடாதென்று ஸி. பி. ஸி. 50-வது பிரிவின் அம்சத்தை அனுசரித்துத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. டிக்கிரீ பிறந்த கோர்ட்டுக்கும் டிக்கிரீயை மாற்றப்பட்ட கோர்ட்டுக்கும் வித்தியாஸம் இவ்வகையில் ஏற்பட்டபோதிலும் ஒரு நம்பர் அசல், அப்பீலுக்குப்பின் பிரிவி கௌன்ஸிலுக்குப் போய் அங்கு பிறந்த டிக்கிரீயை ஹைகோர்ட் மூலமாய்ப் பெற்று அதை நிறைவேற்றும் அசல் கோர்ட் நிலைமைக்கும் ஒரு கோர்ட்டிலிருந்து நிறைவேற்றுவதற்காக மற்றொரு கோர்ட்டுக்கு மாற்றப்பட்டால் அதனால் ஏற்படும் நிலைமைக்கும் வித்தியாஸமுண்டு. 9 கல்கத்தா 482-இல் பிரிவி கௌன்ஸில் டிக்கிரீ விஷயமாக ஹைகோர்ட்டார் ஒருவித உத்தரவளித் திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. டிக்கிரிபெற்ற இரண்டு வாதிகளில் ஒருவர் மட்டும் டிக்கிரீயில் கண்ட பூரண பரிகாரத்தைப் பற்றி நிறைவேற்றாமல் ஒரு பாகத்தைமட்டும் நிறைவேற்றப்பிரயத்தனப்பட்டதில் ஹைகோர்ட்டார் டிக்கிரிமுழுவதையும் நிறைவேற்ற வேண்டுமென்றும் ஒரு வாதி மட்டும் ஒருபாகத்தை நிறைவேற்றக் கூடாதென்றும் தீர்மானித்ததில் பிரிவி கௌன்ஸிலார் அந்த அபிப்பிராயம் பிசகென்று மாற்றிவிட்டார்கள். ஆனால் ஹைகோர்ட்டார் அதிகார வரம்பில்லாமல் அவ்வித பிசகான உத்தரவளித்ததாகத் தீர்மானிக்கவில்லை. ஆகவே கல்கத்தா தீர்மானம் அப்பீல் வாதத்திற்குதவத்தகாது. ஜில்லா கோர்ட்டார் டிக்கிரி மேடோவர்தாரை நிறைவேற்றும்படி அனுமதிகொடுத்தது சட்ட விரோதமல்லவென்றும்; ஒழுங்கீனமல்லவென்றும் சொல்லவேண்டும். தவிற டிக்கிரி வாதி அதைப்பற்றி ஆக்ஷேபித்ததாகவும் ஏற்படவில்லை.

வாதியால் ஏஜண்டுபவரில் டிக்கிரியைமேடோவர்செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லையென்று வாதிக்கப்படுகிறது. அதற்காதாரமாக 23 மதராஸ் லா ஜர்னல் 595 எடுத்துக் காட்டப்பட்டது. அதில் வாதியே ஏஜண்டின் நடவடிக்கையை நிராகரித்து பவரில் கண்டிராத நடவடிக்கையை நடத்தினதாக ஆக்ஷேபித்திருக்கிறார். இந்தக் கேசிலோ வாதி ஏஜண்டினுடைய நடத்தையை அங்கீகரித்ததுமல்லாமல் மேடோவர்தாரனிடமிருந்து டிக்கிரித் தொகையை மேடோவர் தஸ்தவேஜில் ஏற்பட்டபிரகாரம் பெற்றுக்கொண்டு கணக்கில் வரவு வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்தக் கேசின் தீர்மானம் பிரயோஜனமில்லை. பெரிய ஸமஸ்தானத்திற்கு எஸ்டேட் மானேஜர் பவர் பெற்றிருந்தால் எஸ்டேட்டுக்குறிய டிக்கிரியை சரியான பிரதிப்பிரயோஜனத்திற்கு மேடோவர்செய்யும் அதிகாரம்ஏற்பட்டிருக்க வேண்டியதும் உசிதமாகும். பவரின் 24-வது பிரிவில் ஏஜண்டுக்கு, எஸ்டேட்மானேஜ்மெண்டுக்குச் சேர்ந்த காரியாதிகளில் பத்திரங்கள் எழுதிமுடிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்குறது. சட்டமுறைப்படி பவரில் ஏற்பட்ட வசனங்களை கண்டிப்பாய் அர்த்தங்கொள்ள வேண்டியதானாலும் ஜெனரல் பவரைப்பெற்ற ஏஜண்டுக்கு எதுவிஷயமாய் அதிகார மளிக்கப்பட்டிருக்கிறதோ அதற்குச் சம்பந்தப்பட்ட சகஜமான நடவடிக்கைகளை நடத்த அதிகாரமுண்டென்று சொல்லவேண்டும். இந்தக் கேசில் பவரின் வசனங்களைக் கவனித்துப் பார்த்தால் மகாராஜா அவர்கள்பேருக்குப் பிறந்த டிக்கிரியைப் பைசல் செய்யவும் மாற்றவும் அதிகாரம் கொடுக்கப்பட்டதாகவே அனுமானிக்கவேண்டும்.

ஆகவே இரண்டு அப்பீல் க்ரௌண்டுகளும் பயனில்லாமல் அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

—:o:—.

(Messrs ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

திருச்சினப்பள்ளி

A. S. Nos. 223 & 289 of 1911

20 ஜனவரி 1914.

ரங்கப்பகளக்கா தோல உடையார்

*Vs.*

குழந்தை ஆயாள்.

பாகப் பிரிவினைக்கு லாயக்கில்லாத ஒரு ஜமீன்தாரியின் வம்சத்தைச் சேர்ந்த ஜமீன்தாரல்லாத அடுத்தஸ்தானத்திலுள்ள ஒரு மெம்பர் காலஞ்சென்றுவிடவே அவனுடைய பாரியாளாகிய வாதி ஜமீன்தார்பேரில் திருச்சினப்பள்ளி சப்கோர்ட்டில் காலாவதி கடந்துபோகாத முந்திய காலத்திற்குறிய ஜீவனாம்சத்திற்கு மொத்தமாகவும் பிந்தியகாலத்து ஜீவனாம்ச விகிதத்திற்காகவும் 1910-இல் அசல் தாவா செய்தாள். பிரதிவாதி எதிர்வாதத்தில் (1) வாதிக்கு ஜீவனாம்ச பாத்தியதை கிடையாதென்று தாவாவேதிக்கு 12 வருஷங்களுக்கு முந்தியே மறுதளித்துவிட்டதாயும் ஆகையால் வாதியின் பிராது காலாவதி தோஷத்தால் செல்லத்தக்கதல்லவென்றும் (2) பாகத்திற்கு லாயக்கில்லாத ஜமீன் சொத்திலிருந்து ஜமீன் வம்சத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இளைஞனுடைய பாரியாளுக்கு ஜீவனாம்ச பாத்தியதை கிடையவே கிடையாதென்றும் (3) வாதியின் புருஷன் ஜமீனில் ஒரு பாகம் கிடைக்கவேண்டுமென்று பிரை செய்த ஒரு வியாஜ்ஜியம் ராஜியாகப் பைசலாகி அந்த ராஜீநாமாவின்படி வாதியின் புருஷன் தனக்காகவும் தன்னுடைய இரண்டு சகோதரர்களுக்காகவும் மாதாந்தரப்படிச் செலவுக்காக ரூ. 750 விகிதம் பெற்றுக்கொள்வதாயும் ஜமீனில் தனக்குயாதொரு பாத்தியதையும் அது முதல் கிடையாதென்றும் ஒப்புக்கொண்டு அந்தப்படி ரூ 750-ம் மாதாமாதம் பெற்றுவந்ததனால் காலஞ்சென்ற புருஷருடைய மனைவியாகிய வாதிக்கு ஜமீன்தார் பிரத்தியேகமாய் ஜீவனாம்சம் அளிக்கக்கடமைப்பட்டவரல்லவென்றும் ஸ்டேட்மெண்டு கொடுத்தார். சப்கோர்ட்டார் வாதிக்கு ஜீவனாம்ச பாத்தியதை உண்டென்றும் பிராதுக்கு காலாவதிதோஷமில்லையென்றும் தீர்மானித்து முந்திய காலத்திற்குறியதை வாதி கோறிய விகிதப்படிக்கும் பிற்காலத்திற்குறிய விகிதத்தை வாதி கோறியதற்குக் குறைவாகவும் டிக்கிரியளித்தார். அதன்மேல் ஜமீன்தாரவர்கள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் மேற்கூறிய மூன்று எதிர்வாதங்களுடன் வாதி முந்திய காலத்திற்குறிய சவரக்ஷணைச் செலவுக்காகக் கடன் வாங்கியிருந்ததாக ருஜூப்படுத்தாதபடியால் அதற்காக சப்கோர்ட்டார் வாதிக்கு டிக்கிரியளித்தது பிசகென்றும் வாதாடினார். வாதியும் தனக்கு பிந்திய காலத்து ஜீவனாம்ச விகிதமானது ஏற்படுகிற செலவுகளுக்கும் சவுகரியங்களுக்கும் குறைவாக சப்கோர்ட்டார் டிக்கிரியளித்தது சரியல்லவென்று (அதிக விகிதம் கிடைக்கவேண்டுமென்று) க்ராஸ் அப்பீல் செய்தாள்.

ஹைகோர்ட்டார் வாதிக்கு ஜீவனாம்ச பாத்தியமுண்டென்றும் பிராதுக்கு காலாவதி தோஷமில்லையென்றும் முந்திய ராஜீநாமா வாதியை பாதிக்காதென்றும் சப்கோர்ட்டாருக்கு ஒத்தபிப்பிராயப்பட்டு ஆனால் வாதிக்கு முந்திய காலத்திற்குறிய ஜீவனாம்சத்தொகையை மாதம் ரூ. 40 ஆக கணித்து, அதிகாலம் பொறுத்து தாவா கொண்டு வந்தபடியாலும் தான் சவரக்ஷணைச்செலவுக்காகக் கடன் வாங்கியிருந்ததாக ரூபிக்காத காரணத்தாலும் தனக்குறிய சவுகரியங்கள் மிகவும் கஷ்டமாயிருந்ததாகவும் ருஜூப்படுத்தாதபடியாலும் பாக்கி நின்ற தொகையை மொத்தமாய் அடையப்போகிற சவுகரியத்தைக் கவனித்தும் மொத்தமாய் ரூ. 6,000-க்கு டிக்கிரியளித்து பிந்திய காலத்திற்குறிய ஜீவனாம்சத்திற்கு மாதம் ரூ. 80 விகிதம் உத்தரவளித்தார்கள்.

லா பாயிண்டுகள் விஷயமாய் ஹைகோர்ட் தீர்ப்பில் ஏற்பட்ட அம்சங்களாவன:—

வாதிக்கு ஜீவனாம்ச பாத்தியதை கிடையாதென்று 12-வருஷங்களுக்கு முந்தியே எதிரி மறுத்துவிட்ட தகவலை ருஜூப்படுத்த வேண்டிய பொறுப்பு எதிரியைச் சேர்ந்தாகும். எதிரியின் நான்கு சாட்சிகளும் அது விஷயமாய்ச் சொன்ன வாக்குமூலம் முற்றிலும் நம்பத்தக்கதல்ல. அது நீங்கலாக, வாதி புருஷன் இறந்தமுதல் ஜீவனாம்சம் யாதொன்றும் கொடுக்கப்படாத சந்தர்ப்பம் ஒன்று தான் எதிரிக்காகச் சொல்லக்கூடும். பிராதின் 12-வது பாராவில் எதிரியை ஒரு காலத்தில் ஜீவனாம்சம் வேண்டுமென்று கேட்டதற்கு அதற்காக ஏற்பாடு செய்வதாய் ஜமீன்தார் (எதிரி) வாக்குத்தத்தம் செய்ததாகச் சொல்லியிருக்கிறது. அந்த வசனங்களால் வாதிக்கு எதிரி ஜீவனாம்சம் அளிக்க மறுத்திருந்ததாக யூகிக்கவேண்டுமென்று வாதிக்கப்படுகிறது. ஆனால் அந்த வசனங்களால் எதிரி வாதிக்கு ஜீவனாம்சயபாத்தியதை கிடையாதென்று சொன்னதை வாதி ஒப்புக்கொண்டதாக நிதானிக்கக்கூடாது. எதிரி மறுத்தவிஷயத்திற்கு சாட்சியம்சம் போதாது. காலாவதி ஆக்டின் 129-வது ஆர்டிகில்படி எதிரி ஆக்ஷேபித்தமுதல் 12-வருஷ காலாவதியுண்டானாலும் எதிரி ஆக்ஷேபித்ததாக ருஜூ அம்சம் கிடையாதபடியால் பிராது காலாவதி தோஷம் என்ற பாயிண்டு எதிர்வாதத்திற்கு பிரயோஜனமில்லை.

23 மதராஸ் லா ஜர்னல் 79-இல் ஜமீனைச் சேர்ந்த இளைஞர்களை கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த மெம்பர்களாகவும் ஜ்யேஷ்டரையும் அதில் ஒரு மெம்பராகவும் பாவிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதும்தவிற பாகப் பிரிவினைக்கு லாயக்கில்லாத ஜமீன் வம்சத்தைச் சேர்ந்த இளைய மெம்பர்களுக்கு ஜமீன் சொத்திலிருந்து ஜீவனாம்சம் உண்டென்றும் மதராஸ் ஹைகோர்ட்டில் தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்படியிருக்க அவர்களுடைய மனைவிகளுடைய ஜீவனாம்சத்திற்கு ஏன் பாத்தியம் கிடையாது. கூட்டுக்குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் சம்சாரத்திற்கு ஜீவனாம்ச பாத்தியதை ஏற்பட்டிருப்பதுபோலவே வாதிக்கும் ஜீவனாம்ச பாத்தியம் உண்டென்று சொல்லவேண்டும். முந்திய தாவாவில் ராஜீநாமாப்படிக்கு வாதியின் புருஷன் தனக்காகவும் தன் இரண்டு சகோதரர்களுக்காகவும் மாதம் ரூ 751 ஜீவனாம்சம் அடைந்ததில் அந்தத் தொகைக்குத் தக்க ஜமீன் சொத்துக்கள் ஈடாகவும் அமைக்கப்பட்டிருந்தது. அதனால் வாதியின் புருஷனுக்கு ஜமீனில் பிரத்தியேக சொத்து பாத்தியதை ஏற்பட்டதாகச் சொல்லக்கூடாது. ஜமீன் வம்சத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் தனக்கு சவரக்ஷணைக்காக மாதப்படி (ஜீவனாம்சம்) பெற்றதால் தன் சந்ததியார்களுக்கும் அந்த ஏற்பாடு கட்டுப்படுமா என்பது சந்தேகமாயிருக்கிறது. என்றாலும் ராஜிநாமா வாதியின் ஜீவனாம்ச பாத்தியதையை பாதிக்க நியாயமில்லை.

வாதிக்கு மாதம் ரூ. 40 அதிக சொற்பமான தொகையாகும். 1845-இல் ஒரு ஜமீன் ஸ்திரீயானவள் ரூ. 40 வாங்கியிருக்க ஜமீன் வருமானம் அதிகப்படுவதற்கு மேலான அளவில் செலவுகள் அதிகரித்திருப்பதால் மாதம் ரூ. 80 வாதியின் நிலைமைக்கும் அந்தஸ்துக்கும் சரியான தொகையாகும். முன் பாக்கித் தொகைக்கோ வாதி, ஜமீன் சொத்தில் பாத்தியதையுடையவளல்ல. ஆண் மெம்பருக்கு அளிக்கப்படும் ஜீவனாம்சம் சொத்து பாத்தியதையில் ஒரு பாகம் என்று ஒருவகையாய்ச் சொல்லலாம். ஸ்திரீயினுடைய ஜீவனாம்சம் அவ்விதமானதல்ல. கூடியமட்டும் சுகமாய் வசித்து வருவதற்குறிய சவுகரியம் அளிக்கப்படுவது நியாயமாகும். ஆகையால் முன் சொல்லிய காரணங்களையிட்டு ரூ. 40 விகிதமாய்க் கணக்கிட்டபழய பாக்கி வகைக்காக ரூ. 6,000-க்கு மொத்தமாய் டிக்கிரீ யளிக்கப்படுவது நியாயமாகும்.

——— o:———

(Messrs ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

கிருஷ்ணாஜில்லா.

S A. Nos. 2073 to 2076 of 1912

21 ஜனவரி 1914.

கோபல்லி கிருஷ்ணராவ்காரு *Vs* கிருஷ்ணா ஜில்லா கலக்டர்.

வாதி கோபல்லி கிருஷ்ணராவ் காருவின் நிலங்களுக்குத் தண்ணீர் பாசனத்திற்காக "மானேஜர் கோடு" வாய்க்கால் ஜலமானது மராமத்து இலாகாவால் அமைக்கப்பட்டிருக்கிற மதகுகளில ஒரு மதகின் வழியாக உபயோகப்படுத்தப்பட்டு வந்ததில் 1317-ம் பசலிக்குறிய தண்ணீர் தீர்வையை ரெவினியூபோர்ட் ஸ்டாண்டிங் ஆர்டர்களின் 2-வது பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்

கிற 5-வது ரூல்படி இரட்டிப்பாக வசூல் செய்யப்பட்டபடியால் அவ்விதமாய் வசூலித்தது சட்டவிரோதமென்றுசொல்லி செலுத்தின தண்டத்தீர்வைத்தொகையைத் திரும்பியடையும்பொருட்டு வாதி பந்தர் டி. மு. கோர்ட்டில் அசல் தாவா செய்தார். வாதியைப்போலொத்த இன்னும் மூவரும் அதேபிரகாரம் தாவா செய்தார்கள். கவர்ன்மெண்டார் எதிர் ஆன்ஸரில் வாதியினுடைய நிலகளுக்குப் பாசனம் கொடுக்கிற கால்வாய் "மானேஜர் கோடுவாய்க்கால்" என்றும் அந்த ஜலத்தை உபயோகப்படுத்திக்கொள்வதற்காக ஒரே மதகு திறந்துவிடப்பட்டிருப்பதாயும் அப்படியிருக்க வாதியின் நிலங்களுக்கு இரண்டு மதகுகளும் திறந்துவைக்கப்பட்டு ஜலம் அதிகமாய் பாய்ந்தபடியால் வாதி ஷை போர்ட்ஸ்டாண்டிங் ஆர்டரில் கண்ட ரூல்படி இரட்டிப்பான தண்ணீர்தீர்வை செலுத்தவேண்டியது நியாயந்தானென்றும் அப்படிச் செலுத்தின தொகையைத் திரும்பி அடையப் பரிகாரம் தேடக்கூடாதென்றும் ஸ்டேட்மெண்டு கொடுத்தார்கள். டி. மு. கோர்ட்டார் 3 கேஸ்களில் வாதி கோரியபடி டிக்கிரீயளித்து ஒரு கேஸில்மட்டும் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார். கவர்ன்மெண்டார் அப்பீலின்பேரில் ஜில்லா ஜட்ஜியவர்கள் தண்டத்தீர்வையைச் செலுத்த வாதி கடமைப்பட்டவர்களென்று தீர்மானித்து வாதிகளின் பிராதுகளை எல்லாம் டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள் அதன்மேல் வாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் காயமாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட காரணங்களாவன :—

வாதிபிராதில் தாவாவாய்க்காலிலிருந்து தங்கள் நிலங்களுக்கு ஜலப்பாச்னம் கிடையாதென்றும் வேறொரு வாய்க்கால் ஜலத்தை உபயோகப்படுத்திவருவதாயும் சொல்லியிருக்கிறார். அந்த விஷயம் பொய்யென்று கீழ் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். வாதி உபயோகிப்பது சர்க்கார் தண்ணீரென்றும் அது தாவாவாய்க்கால் ஜலந்தானென்றும் சர்க்கார் அனுமதி ஒரே மதகுக்குத்தான் ஏற்பட்டிருப்பதாயும் ருஜுவாகியிருக்கிறது. தவிர வாதியின் நிலங்களுக்கு 1317-ம் பசலியில் சர்க்கார் அனுமதியன்னியில் இரண்டு மதகுகளின் வழியாய் ஜலம் பாய்ந்து சாகுபடியாகியிருக்கிறதாயும் ருஜுவாகியிருக்கிறது. ஸ்டாண்டிங் ஆர்டரின் 5-வது ரூலில் "மராமத்து இலாகாவால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற மார்க்கம், மதகு, அல்லது மூலமல்லாதவேறுவிதமாய் நிலத்திற்கு சர்க்கார் தண்ணீர் எடுத்துக்கொள்ளப்பட்டால் அந்த நிலத்திற்குறிய தண்ணீர் தீர்வைஇரட்டிப்பாய்வசூலிக்கத்தகும்" என்று ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வாதியின் நிலமானது மதகிருக்குமிடத்திலிருந்து ஒரு மைல் தூரமுள்ளதால் அந்த 2-வது மதகைத் திறந்துவிட்டது தானல்லவென்றும் ஆனால் இரண்டு மதகுகளும் திறக்கப்பட்டு அவைகளின் வழியாய் தன்னுடைய நிலங்களுக்கு ஜலம் பாய்ந்தது வாஸ்தவமென்றும், அதற்குத்தான் காரணபுருஷனல்லவென்றும், ரூலில் "ஒருவன் அதிகாரமில்லாமல் தண்ணீரை எடுத்துக் கொண்டால்" என்றுசொல்லப்படடிருக்க வாதி அவ்விதமாய் இரண்டாவது மதகின் வழியாகவும் ஜலத்தை எடுத்துக் கொண்டதாக எதிரி ருஜுப்படுத்தவில்லையென்றும், ஆகையால் அந்த ரூல்படி தண்டத் தீர்வை விதிக்க நியாயமில்லை யென்றும் வாதி வக்கில வாதம் செய்கிறார். ஒருவன் தன்னுடைய பிரயத்தனத்தால் கவர்ன்மெண்டு தண்ணீரை உபயோகப்படுத்திக்கொள்வதற்கும் அவனுடைய பிரயத்தனமன்னியில் ஜலம் உபயோகப்படுவதற்கும் சட்டத்தில் வித்தியாசம் ஏற்படவில்லை. 34 மதராஸ் 21-ஐப்பார்க்கவும். ஸ்டாண்டிங் ஆர்டரின் 5-வது ரூலில் ஜலம் பாசனத்திற்காக குறிக்கப்பட்ட மார்க்கமல்லாதபடி எடுத்துக்கொள்ளப்பட்டால் என்ற வசனங்களையிட்டு ஒருவன் தன்னுடைய முயற்சியால் ஜலத்தை அடைந்ததாக ருஜுவாகவேண்டுமென்று சொல்லப்படுகிறது அவ்விதமான குறுகின கருத்தாக நிதானிக்க நியாயமில்லை. 2-ம் மதகைத் திறந்துவிடப்பட்டிருந்தால் ஜலம் தானே பாயுமேயொழிய ஜலத்தை எடுத்துக்கொள்ளவேண்டிய சிரமமும் முயற்சியும் அனாவசியமாகிறது. ரூலின் கருத்தானது வாதி சொல்லுகிறபடியானால் வசனங்களைத் தெளிவாய் "அக்கிரமமாய் ஜலத்தை உபயோகப்படுத்திக்கொள்ளுகிறவனிடமிருந்து தண்டத்தீர்வை வசூலிக்கப்படு" மென்று சொல்லப்பட்டிருக்கலாமே. ஆனால் ஒருவனுக்குத் தகவலன்னியில் தன்னுடைய நிலங்களுக்கு அதிகமான ஜலம் பாசனமாகும் விஷயத்திலும் அதுவிஷயமாய் யாதொரு பிரயத்தனமும் அபேக்ஷயுமில்லாதவனிடத்திலும் தண்டத்தீர்வை விதிக்கத்தக்கபடி சட்டம் (ரூல்) ஏற்படுத்தலாமாவென்று கேட்கப்படுகிறது. கவர்ன்மெண்டார் ரூலை அநீதமாய் பலவந்தத்திற்குக் கொண்டுவரமாட்டார்களென்றே யூகிக்கவேண்டும். பரிஷ்காரமாய்த் தெரிந்தமட்டில் ஒருவன் நிரபராதியென்று (குற்றத்திற்காளானவன் அல்ல) வென்று ஏற்படும் சந்தர்ப்பங்களில் கவர்ன்மெண்டார் ரூலை வற்புறுத்தமாட்டார்கள். தவிர மதகைத் திறந்துவிட்டது யார் என்று ருஜுப்படுத்துவதும் அதிக கஷ்டமாகும். ருஜுபாகம் ஏற்படாதபட்சத்தில் கவர்ன்மெண்டார் தங்கள் வரும்படியையும் ஜனங்களுடைய பரஸ்பர சமாதானத்தையும் கருதி ஜலத்தை உபயோகப்படுத்தப்படுகிற ஒவ்வொரு நில பாத்தியஸ்தனிடமும் தண்டத்தீர்வை வசூலிப்பதே யுக்தமானமுறையாகும். குழாவை, (மதகுகளை) அக்கிரமமாய்த் திறந்துவிட்டது இன்னாரென்று கண்டுபிடித்து அவன்பேரில்மட்டும் தண்டத்தீர்வை வசூலிப்பது அசாத்தியமானதாகும் அவ்வித குற்றம் நடக்காமல் தடுப்பதற்குத் தகுந்த யோஜனையானது, குற்றநடவடிக்கையால் நன்மையடைகிறவர்கள் எல்லோரும் தண்டத்தீர்வை கொடுப்பதேயாகும். சில சந்தர்ப்பங்களில் மதகுக்குச் சமீபத்திலுள்ள நிலங்களுக்குமட்டும் ஜலம்பாய்ந்து எட்டிய நிலக்காரர்களுக்குப் பொறாமையும் மாச்சரியமும் ஏற்பட்டு அதிக வைராக்கியமான சண்டைகளும் கலகங்களும் அடிதடி மண்டையுடைப்பும் ஏற்படுவதுண்டு அவ்வித அசந்தர்ப்பங்களைத் தடுப்பதற்கும் கவர்ன்மெண்டார்யுக்தி சரியானதாகும். அவ்விதமான கருத்தைக்கொண்டு ரூல் ஏற்பட்டதாகச் சொல்லாவிட்டாலும் ரூலின் கருத்திற்கிசைந்தபடி ஜனங்களின் பொது நலத்திற்குறிய சந்தர்ப்பமும் ஏற்படுகிறபடியால் அந்த ரூலின் வசனத்திற்குக் குறுகின கருத்து கொடுக்கக்கூடாது. தண்ணீரை "எடுத்துக்கொண்டால்" என்றதற்குத் தன் கையால் அல்லது முயற்சியால் உபயோகப்படுத்திக்கொண்டால் என்றுமட்டும் யூகிக்கக் கூடாது. மேற்கூறிய சந்தர்ப்பங்களையும் கவனித்து எவ்விதமாயும் சர்க்கார் ஜலமானது அனுமதியில்லாத மார்க்கமாய்ப் பாய்ந்து உபயோகப்படுத்தப்பட்டால் என்றபொழுது ஒருவனுடைய ஸ்வய இச்சையும் முயற்சியும் ருஜுவாகத் தேவையில்லை.



ஆகவே வாதிக்கு தண்டத்தீர்வை விதிக்கப்பட்டது நியாயமாகும். 2-வது அப்பீல்கள் யாவற்றும் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

:o:

(Messrs ஜஸ்டிஸ் எய்லிங் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.)

திருநெல்வேலி ஜில்லா.

C. M. S. A. 61 of 1913—22 ஜனவரி 1914.

சுப்பைய்ய நாயகர் Vs ராமனுதன் செட்டியார்

1910 மே-முதல் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட ராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த ஸ்ரீ வில்லிப்புத்தூர் டி-மு-கோர்ட்டில் 1898 மார்ச்சில் அருணாசல செட்டியார் மூன்று பிரதிவாதிகளின்பேரில் பெற்ற டிக்கிரீயை நிறைவேற்றுவதற்காக பற்பல விண்ணப்பங்கள் கொடுத்தும் டிக்கிரீ பைசலாகாமல் அருணாசல செட்டியாருடைய குடும்பச்சொத்துக்களையும் குடும்ப வர்த்தகத்தையும் பாகவிப்பிரிவினை செய்துகொண்டதில் தாவா டிக்கிரீபாக்கியானது அருணாசல செட்டியாரிடத்திலிருந்து பவர் ஆப் அட்டார்னிபெற்று குடும்ப வியாபாரத்தை நடத்திவந்த மற்றொரு பாகஸ்தனுடைய விகிதத்திற்குச் சென்றது. அந்த பாகஸ்தனும் 1905, 1907-இலும் ஷை டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக விண்ணப்பங்கள் கொடுத்தும் மேல் நடத்தாமலே காலஞ்சென்றார். அவருடைய மைனர் குமாரனுக்காக அடுத்த சிநேகிதர் ஒருவர் 1909 எப்ரல் மாதத்தில் நிறைவேற்றுமனுக்கொடுத்து இதற்குமுன்செய்த நிறைவேற்று நடவடிக்கையில் ஜப்தியான ஸ்தாவர சொத்துக்களை ஏலம்போடுவதற்காக விண்ணப்பத்தில் கோரிக்கொண்டார். பிரதிவாதிகளுக்கு அந்த விண்ணப்ப நோடீஸ் அனுப்பப்பட்டதில் 2-ம் பிரதிவாதிக்கு நோடீஸ் நேரில் ஸர்வ் செய்யக்கூடாமல் அவர் வீட்டிலுள்ள பெண்டுகளும் அக்கம்பக்கத்தாரும் சொன்னபடி 2-ம் பிரதிவாதி சங்கரநாயினார்கோவிலுக்குப்போய் சொற்பதினங்களானதாகவும் தக்க ஆண்பிள்ளைகள் வீட்டிலில்லையென்றும் அவர் திரும்பிவரும் தினம் குறிப்பாய்ச்சொல்ல முடியாதென்றும் விளங்கியதால் அமீனா ஜுலை 31உயில் நோடீஸை கதவில் ஒட்டிவிட்டு அந்தப்படி தகவலைக்குறித்து கி. மு.

அத்தாக்ஷியுடன் நோடீஸை ரிட்டர்ன் செய்துவிட்டார். டி-மு கோர்ட்டார் நோடீஸ் வாய்தவாகிய ஆகஸ்ட் 10-வ-இல் கதவில் ஒட்டப்பட்ட நோடீஸ் சரியான ஸர்விஸ் என்று தீர்மானித்து 2-ம் பிரதிவாதி ஆஜராகவில்லையென்று ரிகார்டு செய்து சொத்தை ஏலத்திற்குக் கொண்டுவரும்படி டிசம்பர் 10-வ-இல் ஏல வாய்தாவை ஏற்படுத்தி உத்தரவளித்தார்கள். வேறு சில நடவடிக்கைகளின் காரணத்தால் ஏலம் டிசம்பர் 10-வ-இல் நடக்காமல் 1910-ம் வருஷத்தில் ஒரு தேதிக்கு வாய்தா குறிப்பிடப்பட்டிருந்தது. 1910 மே மாதத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூர் டி-மு கோர்ட் ராமனாதபுரம் ஜில்லாவுக்குள் அமைக்கப்பட்டதும் தவிர ஜப்திபாகி ஏலத்திற்கு உத்தரவான சொத்தானது திருநெல்வேலி ஜில்லாவில் சேர்ந்ததாகவே நின்று திருநெல்வேலி அடிஷனல் டி-மு கோர்ட்டாருடைய அதிகார வரம்பிற்குட்பட்டதாக ஏற்பட்டது. ஆகையால் மனுதார் 1911-ம் வருஷத்திய சில்லரைமனு நம்பர் 338-இல் திருநெல்வேலி அடிஷனல் டி-மு கோர்ட்டாரிடம் ஸ்ரீவில்லிபுத்தூர் டி-மு கோர்ட்டாரால் உத்தரவான ஏலநடவடிக்கையை தங்கள் கோர்ட்டுக்கு மாற்றிக்கொண்டு ஏலத்தை நடத்தி முடிக்கவேணுமென்று விண்ணப்பம் செய்து கொண்டார். அந்த விண்ணப்பத்திற்காதாரமான பிரமாணப் பத்திரிகையில்:— "ஏலம்போடவேண்டிய சொத்தானது இப்பொழுது திருநெல்வேலிஜில்லாவிலிருப்பதாலும் ஏலநடவடிக்கை நடத்திவந்த ஸ்ரீவில்லிப்புத்தூர் கோர்ட் இந்த ஜில்லாவிலிருந்து எடுபட்டுப்போனதாலும் இந்த ஜில்லாவில் பிறந்திருக்கிற டிக்கிரியை நிறைவேற்றும் அதிகாரம் அந்தக்கோர்ட்டுக்கு இனிக்கிடையாதபடியாலும் ஆகவே இதுவரையில் நடத்திவந்த ஏல நடவடிக்கையை இந்தக்கோர்ட்டிலேயே தொடர்ந்து நடத்த நியாயமாகுமென்றும், தவிர ஸ்ரீவில்லிபுத்தூர் டி-மு கோர்ட்டில் ஜில்லா மாற்றலுக்குப்பின் கொடுத்த விண்ணப்பத்தில் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த ரிகார்டுகள் யாவற்றும் ஷை கோர்ட்டுக்கு அனுப்பிவிடப் பட்டதாய் அந்தவிண்ணப்பத்தில் எண்டார்ஸ் செய்து விண்ணப்பத்தை வாபிஸ்செய்து விட்டதாகவும்" குறித்துக் காட்டியிருந்தது.

திருநெல்வேலி டி-மு கோர்ட்டார் மனுதாரின் விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்ததில்— "ஜில்லாப் பிரிவினையானதின்பேரில் ஸ்ரீவில்லிப்புத்தூர் டி.மு.கோர்ட்டார் கோர்ட் ரிகார்டுகளில் சிலவற்றைத் தாமே ஸ்வதாவில் தங்கள் கோர்ட்டுக்கு அனுப்பியிருக்கிறாரேயொழிய தாவா டிக்கிரியையும் நிறைவேற்றுவதற்காக சட்டப்படி டிரான்ஸ்பர்செய்ய வில்லையென்றும், ஸ்ரீவில்லிப்புத்தூர் கோர்ட் முற்றிலும் எடுபட்டுப்போக வில்லையென்றும், அந்தக் கோர்ட்டார் அளித்த டிக்கிரியை நிறைவேற்றுவதற்குறிய அதிகாரவரம்பு நீக்கப்படாதபடியால் டிக்கிரியை நிறைவேற்றுவதற்குறிய விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு ஸி. பி. ஸி. 223-வது பிரிவின்படி வேறு கோர்ட்டுக்கு அதை டிரான்ஸ்பர் செய்து உத்தரவளிக்க நியாயமுண்டென்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் கோர்ட் முற்றிலும் எடுபட்டுப் போனாலொழிய அல்லது தன்னுடைய டிக்கிரியை நிறைவேற்றும் அதிகாரம் எடுபட்டுப் போனாலொழிய திருநெல்வேலி கோர்ட்டார் நிறைவேற்றுவதற்காக ஸி. பி ஸி. 150-வது பிரிவின்படி அதிகார வரம்பை தரித்து நடவடிக்கை நடத்த லாயக்கில்லையென்றும், மைனர் மனுதார் 1909 எப்ரில் மாதத்தில் கொடுத்த நிறைவேற்றுமனு காலாவதி கடந்து விட்டதாகவும், அந்த மைனர் நிறைவேற்றும் பாத்தியமுடையவரென்ற ருஜூபாகம் சரியில்லையென்றும் ஆகிய காரணங்களைக்கொண்டு 2-ம் பிரதிவாதி 1909 ஆகஸ்ட் மாதத்தில் (நோடீஸ் கதவில் ஒட்டப்பட்டது சரியான சர்விஸ் என்று ஏற்பட்டு) பிறந்த எக்ஸ்பார்டி உத்தரவை ஆக்ஷேபிக்கத்தக்கதவரென்று சொல்லக்கூடாதென்றும், ஏனெனில் நோடீஸ் நேரில் சர்வ் செய்யப்படாதபடியாலும் வேறு விதமாகத் தகவல் தெரியவாராதபடியாலும் தகவல் தெரிவதற்கிடையில் பிறந்த உத்தரவை மேற்கண்ட விதமாய் ஆக்ஷேபிக்கலாமென்றும், ஆனால் 1905-இலும் 1907-இலும் மைனரின் தகப்பன் எடுத்த நிறைவேற்று நடவடிக்கைகள் சட்டப்படி செல்லத்தக்கவைகளானபடியால் 1909 எப்ரல் மாதத்தில் மைனர் கொடுத்த விண்ணப்பம் காலாவதி தோஷமானதென்றும்" அபிப்பிராயங்களைக் குறித்துக்காட்டி கடைசியில் 1909-ம் வருஷத்திய நிறைவேற்று நடவடிக்கையைத் தங்கள் கோர்ட்டில் தொடர்ந்து நடத்த நியாயமில்லை



யென்று தீர்மானித்து மைனர் மனுதாரின் மனுவை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் மனுதார் திருநெல்வேலி ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்தார். ஜில்லா கோர்ட்டார் திருநெல்வேலி டி-மு கோர்ட்டார் அபிப்பிராயம் பிசகென்று தீர்மானித்து நிறைவேற்று நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்தும்படி உத்தரவளித்த தீர்மானத்தில் சொன்ன காரணங்களாவன:— ஸி. பி. ஸி. 150-வது பிரிவின்படி ஒரு கோர்ட்டிலுள்ள வேலைகள் மற்றொரு கோர்ட்டுக்கு மாற்றப்படும் பட்சத்தில் அந்த வேலைகள் விஷயமாய் மாற்றின கோர்ட்டாருக்குறிய அதிகாரங்களை மாற்றப்படும் கோர்ட்டார் அடைந்து நடத்த லாயக்குண்டு. ஆனால் 1909-ம் வருஷத்திய நிறைவேற்று மனுவானது ஸ்ரீ வில்லிப்புத்தூர் கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கையில் ஜப்தியான சொத்தின்பேரில் ஷை கோர்ட்டாருக்கு அதிகார வரம்பு நீங்கிவிட்டபடியால் பெண்டிங்காக யிருக்கிற நிறைவேற்று நடவடிக்கையானது சட்டப்படி மாற்றப்பட்டாலொழிய 150-வது பிரிவின் அம்சங்களை அனுசரித்து மைனர் மனுதார் திருநெல்வேலி டி-மு கோர்ட்டில் ஷை பெண்டிங் நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்தலாமென்று வாதம் செய்யக்கூடாதென்றும் ஆனால் (1), திருநெல்வேலி ஜில்லாவுக்கு ஸ்ரீ வில்லிப்புத்தூர் டி-மு கோர்ட் எடுபட்டுப்போனதால் தாவா கேஸில் ஆதியில் டிக்கிரியளித்த கோர்ட்டும் எடுபட்டுப் போனதாக பாவிக்கப்பட்டு ஸி. பி. ஸி 37 b) யின் கருத்துப்படி திருநெல்வேலி டி-மு-கோர்ட் அந்த டிக்கிரியளித்த கோர்ட்டாக ஏற்படவேண்டுமென்றும், ஆகவே அந்த டிக்கிரியின் நிறைவேற்றுமனுவைத் தொடர்ந்து நடத்த திருநெல்வேலி டி-மு கோர்ட்டார் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும் (2), (1905 இலும் 1907-இலும் மைனரின் தகப்பனார் பாகத்தில் கிடைத்ததாவா டிக்கிரியை அருணாசலம் செட்டியார் ஆகிய டிக்கிரீ வாதிநடத்தாமல் தானே நடத்தியது சட்டவிரோதமென்ற) விதமான பல ஆக்ஷேபணையைச் சொல்லி 2-ம் பிரதிவாதி இப்பொழுது 1909-ம் வருஷத்திய நிறைவேற்று மனுவைக் காலாவதி தோஷமென்று வாதம் செய்ய இடங்கொடுக்க நியாயமில்லை யென்றும், ஏனெனில் 1909-ம் வருஷத்திய எக்ஸ்பார்டி உத்தரவை சட்டப்படிக்கு அப்பீல் நடவடிக்கையாலாவது அல்லது வேறு முறையாலாவது மாற்றப் பிரயத்தனப்படவில்லை. யென்றும் ஆகையால் காலாவதி பாயிண்டும் எதிர்வாதத்துக்குப் பிரயோஜனமில்லையென்று சொல்லி மேல்கண்ட விதமாய் திருநெல்வேலி டி. மு. கோர்ட்டாருக்கு உத்தரவளித்தார்கள்.

..-ம் பிரதிவாதி ஜில்லாகோர்ட் பைசலின் பேரில் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல்செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் காயமாகி 2-வது அப்பீல் தள்ளுபடியாக்சுது. ஹைகோர்ட் தீர்மானத்தின் சுருக்கமாவது:—

ஒரு டிக்கிரீயிலேயே சொத்தை ஏலம் போட உத்தரவளிக்கப்பட்டிருக்க அந்தப்படி சொத்தை ஏலத்துக்குக் கொண்டுவரும்படி டிக்கிரீதார் நடவடிக்கை எடுக்குமுன் அந்த சொத்து நிற்கும் ஸ்தலமானது டிக்கிரி யளிக்கப்பட்ட கோர்ட்டை விட்டு கவர்ன்மெண்டாருடைய விளம்பரத்தால் (ஜில்லா மாறுதல் முதலிய சந்தர்ப்பத்தால்) வேறொரு கோர்ட்டினுடைய அதிகார வரம்புக்குள் வந்துவிடும் பட்சத்தில் அவ்வித ஏலத்தை டிக்கிரியளித்த கோர்ட்டாரே நடத்த அதிகாரமுண்டா என்ற விஷயத்தைப்பற்றி மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்களும் கல்கத்தா ஹைகோர்ட் தீர்மானங்களும் புதிய ஸிவில் புரோஸிஜர் கோட் நமோதக்குவருமுன் ஒன்றுக்கொன்று வித்தியாஸமாக ஏற்பட்டிருந்தன. அந்தப் பாயிண்டைப்பற்றிய கல்கத்தா ஹைகோர்ட் தீர்மானங்கள் 6. C. 513. 15. C. 667; 17. C. 699; 25. C. 315; 23. C. 238; & 35. C. 974-இல் ரிபோர்ட் ஆகியிருக்கின்றன. 15 கல்கத்தா கேஸ் வித்தியாஸமாக ஏற்பட்டபோதிலும் அந்தத் தீர்மானம் பிந்திய 17; கல்கத்தா புல்பெஞ்சு கேஸில் மாற்றப்பட்டிருக்கிறது ஆகவே மொத்தத்தில் கல்கத்தா தீர்மானங்களின்படி பார்க்குமிடத்து பழய ஸி. பி. ஸி— 230-வது பிரிவுக்குச்சரியான புது ஸி. பி. ஸி. ஆர்டர் 21-ரூல் 10-இன்படி டிக்கிரியளித்த கோர்ட்டின் அதிகார வரம்பிலிருந்து ஏல சொத்தானது மாறிப்போன போதிலும் டிக்கிரியளித்த கோர்ட்டாரிடமே ஏலத்திற்காக விண்ணப்பம் கொடுக்கலாமென்றிருக்க ஷை கல்கத்தா தீர்மானங்களின்படி ஏல சொத்தானது எந்தக் கோர்ட்டின் அதிகார வரம்புக்குள் மாற்றப்பட்டிருக்கிற

தோ அந்தக் கோர்ட்டிலும் ஏல நடவடிக்கை நடத்த விண்ணப்பம் கொடுக்கலாமென்று ஏற்படுகிறது. அந்தத் தீர்மானம் ரூல் 37 (b) யில் "டிக்கிரியளித்த கோர்ட்" என்ற வசனத்திற்கு அர்த்தம் ஏற்பட்டிருப்பதற்கு அனுஸரணையாகயிருக்கிறது. 37 (b)-யில் டிக்கிரியளித்த கோர்ட்டாருக்கு டிக்கிரிக்குப்பின் அதிகார வரம்பு மாற்றப்படும் பட்சத்தில் அதை நிறைவேற்றுவதற்கு அதிகார வரம்புள்ள கோர்ட்டையே டிக்கிரியளித்த கோர்ட்டாக பாவித்து அந்தக்கோர்ட்டில் நிறைவேற்று நடவடிக்கை நடத்தலாமென்று சொல்லப்பட்டிருப்பதால் ஏல சொத்தின் ஸ்தலத்தில் அதிகார வரம்புடைய கோர்ட்டை டிக்கிரியளித்த கோர்ட்டாக பாவிக்கக்கூடியதாகும். கல்கத்தா தீர்மானங்களின்படி இரண்டு கோர்ட்டாரும் ஏல விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளலாமென்று ஏற்படுகிறபோதிலும் டிக்கிரியளித்த கோர்ட்டாருக்கு ஏல சொத்தின்பேரில் அதிகாரவரம்பு நீங்கிவிடுகிற சந்தர்ப்பத்தில் சொத்தை ஏலம் போடும்படி உத்தரவளிக்க அதிகாரம் கிடையாதபடியால் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு அதை சரியான கோர்ட்டுக்கு (சொத்திருக்கும் கோர்ட்டுக்கு) டிரான்ஸ்பர் செய்யவேண்டியதாகும். அதாவது டிக்கிரியளித்த கோர்ட்டுக்கு அதிகாரவரம்பு நீங்கியும் டிக்கிரியை நிறைவேற்றும் விண்ணப்பத்தை வாங்கி அதை சரியான கோர்ட்டுக்கு மாற்றவேண்டியதாகும். விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் அதிகாரம் வேறு, விண்ணப்பத்தில் கோரிய சொத்தை ஏலம் போடுவதற்குரிய அதிகாரம் வேறு. ஆகவே அதிகாரம் இருவகையாய் வித்தியாஸப்படுத்தியிருக்கிறது. டிக்கிரியளித்த கோர்ட்டுக்கு விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் அதிகாரம் ஒன்றுமட்டும் உண்டென்றும் அதிகாரவரம்பு மாற்றப்பட்ட கோர்ட்டுக்கு இரண்டு வகையான அதிகாரமும் உண்டென்றும் கல்கத்தா தீர்மானங்களின் ஸாராம்சமாகும்.

மேற்கூறிய பாயிண்டு விஷயமாய் மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள் வேறு விதமாக ஏற்பட்டிருக்கின்றன அவைகள் 27 M 118; 30 M 537; 32 M 140; (1910) M W N 477-இல் ரிபோர்ட்டாயிருக்கின்றன. 27 மதராஸ் கேஸில் அதிகார வரம்பில்லாத ஒரு கோர்ட்டாரால் வெளியிலுள்ள சொத்தை ஏலத்திற்குக் கொண்டுவரும்படி டிக்கிரி யளிக்கப்படும் பட்சத்தில் அவ்வித டிக்கிரியளிக்க எதிரி ஆக்ஷேபனை செய்யாதிருந்தால் அந்த டிக்கிரியானது சட்ட விரோதமானதல்ல; நிறைவேற்று நடவடிக்கையில் எதிரி அந்த டிக்கிரியை சட்ட விரோதமானதென்று ஆக்ஷேபிக்க நியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 30 மதராஸ் கேஸில் ஏல டிக்கிரியளித்த கோர்ட்டார் ஏல சொத்தானது வேறு கோர்ட்டின் அதிகாரத்திற்குள் சென்றபோதிலும் ஏல விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கேஸில் மனுதார் விண்ணப்பத்தை ஏல நடவடிக்கை நடத்துவதற்காக சரியான அதிகாரமுள்ள கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்று கோரிக்கொண்டபடியால் டிக்கிரியளித்த கோர்ட்டாரே ஏலத்தை நடத்தலாமா கூடாதா என்ற விஷயம் மேற்படி கேஸில் தீர்மானிக்க அவசியம் ஏற்படவில்லை. இந்த 30 மதராஸ் தீர்மானம் கல்கத்தா தீர்ப்புகளின் அம்சங்களுக்கு விரோதமாகயில்லை. 32 மதராஸ் கேஸில் எஸ்டேட்ஸ்லாண்டு ஆக்ட் 189-வது பிரிவின்படி சில வகுப்பான பிராதுகள் ரெவினியூ கோர்ட்டுக்கு மாற்றப்படும் விஷயத்தில் கோர்ட்டில் பெண்டிங்கிலிருந்த கேஸ்களில் அதிகாரம் நீங்கவில்லையென்று வியாக்கியானப்படுத்தியிருக்கிறார்கள். (1910) மதராஸ் வாரக்குறிப்பின் 447-இல் கல்கத்தா தீர்மானத்திற்கு ஒற்றுமையாக ஏற்பட்ட 30 மதராஸ் தீர்மானத்தின் நியாயத்தைப்பற்றிச் சந்தேகப்பட்டு ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்களும் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரவர்களும் அந்தத் தீர்மானத்தில் "ஒரு கோர்ட் அதிகாரமெல்லாம் மற்றொரு கோர்ட்டுக்கு மாற்றப்படும் பட்சத்தில் முதல் கோர்ட்டில் பெண்டிங்காய் (விஜாரணை பாக்கியாய்) இருந்த கேஸ்களும் மாற்றப்படவேண்டியதல்லவா என்ற விஷயமானது நிர்ணயிப்பதற்கு அதிக கஷ்டமானதென்று சொல்லி சுலபமாய் அந்தக் கஷ்டத்தை நிவர்த்திசெய்து விட்டார்கள். அதாவது தூத்துக்குடி சப்கோர்ட்டார் ஒரு கேஸை விஜாரிக்க அதிகார வரம்பு நீங்கிவிட்டபடியால் கவர்ன்மெண்டு விளம்பர நியாபத்தால் ராமனாதபுரம் கோர்ட்டின் பையிலில் அங்[illegible]க்கப்பட்ட அந்தக் கேஸை தூத்துக்குடி சப்கோர்ட்டுக்கு ஹைகோர்ட்டார் யுக்தத்தைப் பொருத்து டிரான்ஸ்பர் செய்த பாவனையாக உத்தரவளித்தார்கள். அதனால் விஜாரணை பாக்கியாகயிருந்த கேஸானது தூத்துக்குடி சப்கோர்ட்டாரே முடித்து பைசல் செய்ய ஏதுகரமாயிற்று. டிக்கிரியளித்த கோர்ட்டார் ஏல விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளலாமென்றும் ஆனால் ஏல நடவடிக்கை நடத்தும் அதிகாரம் வேறாகுமென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் இருவகை அதிகாரத்தையும் வித்தியாஸப்படுத்தினது நியாயத்திற்கிசைந்ததாகத் தோன்றவில்லை. ஏல டிக்கிரியளித்த கோர்ட்டார் அதிகார வரம்பில்லாதபின் ஏல விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளவும் கூடாதென்று சொல்வது நியாயமாகும். ஆனால் இப்பொழுது கல்கத்தா கோர்ட்டில், ஏலத்திற்கு வரவேண்டிய சொத்தில் அதிகாரவரம்புடைய கோர்ட்டாரே ஏல விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டு ஏலத்தை நடத்தலாமென்ற தீர்மானம் ஏற்பட்டிருக்கிறது.



நியாய முறையைக் கவனித்தாலும் அதிகார வரம்பை மாற்றும் கவர்ன்மெண்டாருடைய விளம்பரத்தில் அல்லது சட்டக் கோட்பாடுகளில் அதிகாரத்தை இழந்த கோர்ட்டாருக்கு விஜாரணை பாக்கியான கேசுகளில் பைசல் பாத்தியம் ஏற்படாதிருந்தாலொழிய மற்றப்படி எல்லா நடவடிக்கைகளும் மாற்றப்பட்டதாகவே அனுமானிக்கவேண்டும். அதைச்சேர்ந்த ரிகார்டுகள் புதிய கோர்ட் ரிகார்டுகளாக பாவிக்கப்படவேண்டும். இந்தக்கேசில் ஸ்ரீவில்லிப்புத்தூர் டி-மு கோர்ட்டார் 1909-ம் வருஷத்திய நிறைவேற்று மனுவுக்குச் சம்பந்தப்பட்ட ரிகார்டுகள் யாவற்றையும் திருநெல்வேலி டி-மு கோர்ட்டுக்கு அனுப்பி தங்கள் கையைக் கழுவிக்கொண்டார்கள். அப்படிச் செய்தது சரியான காரியமாகும். ஒரு டிக்கிரியை நிறைவேற்றும் கோர்ட்டாருக்கு ஏலசொத்தின்பேரில் அதிகார வரம்பிருக்கவேண்டியது அவசியமாகுமென்று ஸி. பி. ஸி. 223-வது பிரிவையும், 649-வது பிரிவையும் ஒத்துப்படித்து கல்கத்தா ஹைகோர்ட்டார் 17-கல்கத்தா 6[illegible]9-இல் புல்பெஞ்சு தீர்மானத்தில் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஒரு கோர்ட் வேலைகளெல்லாம் மற்றொரு கோர்ட்டுக்கு மாற்றப்பட்டால் அவ்விதமாற்றுதல் ஸி. பி. ஸி. 24-வது பிரிவின்படி மேல் கோர்ட்டாருடைய உத்தரவை அனுசரித்திருக்கவேண்டுமென்றாவது அல்லது வேறு சட்டப்பிரிவின் அம்சத்தை அனுசரித்து ஏற்படவேண்டுமென்றாவது கட்டாயமில்லை. புது ஸி. பி. ஸி. 150-வது பிரிவின்படி ஒரு குறித்தகேஸோ மாற்றப்படலாம். அல்லது பாக்கியிலிருக்கும் சகலமான கேஸ்களும் மாற்றப்படலாம். ஜில்லாகோர்ட்டார் 150-வது பிரிவின்படி ஒரு கோர்ட் டிக்கிரியை மாற்றுவதற்கு கோடின் ஸ்பெஷலான அம்சங்களை அனுசரித்திருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டது பிசகாகும். ஜில்லாகோர்ட்டார் பங்காளத்து ஸிவில்கோர்ட் ஆக்ட் 8, 13, 17-வது பிரிவுகளின் அம்சங்களையனுசரித்து மேற்கூறிய அபிப்பிராயமடைந்திருக்கிறார்கள். இந்தக்கேஸில் தீர்மானிக்கவேண்டிய விஷயத்திற்கு அந்த ஆக்டின் அம்சங்கள் ஏற்றதல்ல. மொத்தத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூர் டி-மு கோர்ட்டாரால் துவக்கப்பட்ட நிறைவேற்று நடவடிக்கையை திருநெல்வேலி கோர்ட்டார் தொடர்ந்து முடிக்க அதிகாரமுண்டென்று ஜில்லாகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டதுசரியே. ஜில்லாகோர்ட்டார் அதற்குக் காரணமாக (பழய) ஸ்ரீவில்லிப்புத்தூர் டி-மு-கோர்ட் எடுபட்டுப் போய் விட்டதாகச் சொன்னார்கள். அது சரியான காரணமல்ல. ஸ்ரீவில்லிப்புத்தூர் கோர்ட்டாருக்கு நிறைவேற்றும் நடவடிக்கையை மேல்நடத்த அதிகாரம் நீங்கிப்போனதே சரியான காரணமாகும். மேற்கூறிய அபிப்பிராயம் தப்பாகத் தோன்றினபோதிலும் (1910) மதராஸ் வாரக்குறிப்புகளின் 477-இல் செய்யப்பட்ட உத்தரவை அனுசரித்து விண்ணப்பக்கேஸை திருநெல்வேலி கோர்ட்டுக்கு (24-வது பிரிவின்படி) மாற்றசித்தமாயிருப்பதாகச் சொல்லவேண்டும்.

இரண்டாவதாக 1909-ம் வருஷத்திய நிறைவேற்று மனுவே காலாவதி தோஷமென்று வாதிக்கப்பட்டது. அதற்காதாரமாக சில நடவடிக்கைகளை 2-ம் பிரதிவாதி எடுத்துக்காட்டினார். ஆனால் அந்த விஷயங்களைப்பற்றி ருஜு அம்சம் விடக்கூடாதென்று மனுதார் ஆக்ஷேபித்ததின்பேரில் ஜில்லாகோர்ட்டார் அதன் உண்மையைப்பற்றி தீர்மானம் செய்யப் பிரயத்தனப்படவேயில்லை. எதிரி 1909 ஆகஸ்டில் பிறந்த எக்ஸ்பார்டி ஆர்டரால் கட்டுப்பட்டவனாகையால் அதை 108-வது பிரிவின்படியாவது அப்பீல்முறையாலாவது மாற்றினாலொழிய அந்தவிண்ணப்பம் காலாவதி தோஷமுடையதென்று அதேவி

ண்ணப்பத்தைச்சேர்ந்த பிந்திய நடவடிக்கையில் ஆக்ஷேபிக்க நியாயமில்லை. எதிரிக்கு அந்த விண்ணப்பத்தின் நோடீஸ் நேரில் சர்வாகவில்லையென்றும் நோடீஸ் வாய்தா எப்பொழுதென்று தெரியாதென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் கோர்ட்டார் அமீனா ரிட்டர்னையும் அத்துடன் கொடுக்கப்பட்ட பிரமாணப் பத்திரிகையையும் பார்வையிட்டு சர்விஸ் சரியானதென்று தீர்மானித்து எக்ஸ்பார்டி ஆர்டர் செய்திருப்பதால் அந்த உத்தரவானது எதிர்வாதம் செய்ததின் மேல்பிறந்த உத்தரவையும் டிக்கிரீயையும் போல பாவிக்கப்பட்டு ரிஜூடிகேடாவுக்கிடமாகவேண்டும். எக்ஸ்பார்டி டிக்கிரியானது ரிஜூடிகேடா என்று 13 கல்கத்தா லா ஜர்னல் (1910):இல் தீர்மானமாகியிருக்கிறது. 35 மதராஸ் 84, 85-ஐப் பார்க்கவும். 17 அலகபாத் 106-இல் ஈரங்கி விஜாரணையின்பேரில் தீர்மானமாகாத சில வழக்குகளில் டிக்கிரீயளிக்கப்பட்ட பின் பழய வி. பி. வி. 43, 73, 103-வது பிரிவுகளினால் அந்த வழக்கில் சம்மந்தப்பட்ட பார்ட்டிகள் பின்னால் புது வியாஜ்ஜியம் சொண்டுவரக் கூடாதென்று சொன்னதில் அவ்வித ரூலானது நிறைவேற்று நடவடிக்கைகளுக்கு எற்காதென்று பிரிவிகௌன்ஸிலார் அபிப்பிராயப் பட்டபோதிலும் தர்ம நியாயத்தின்படி ரிஜூடிகேடா பாயிண்டைத் தீர்மானிப்பதற்கு நிறைவேற்று நடவடிக்கைகளில் பிறந்த உத்தரவுகளும் எற்றவைகளாகும். அவ்விதமாக 8-கல்கத்தா 51-இல் எற்பட்ட தீர்மானங்கள் இந்தியாவிலுள்ள கோர்ட்டுகளிலெல்லாம் அனுசரிக்கப்படுகின்றன. நோடீஸ் நேரில் சர்வாகாமல் அந்த தகவல் தெரியாதிருந்தது வாஸ்தவமானால் ஆர்டர் 9-ரூல் 13-இன்படி தெரிந்தது முதல் ஒருமாதத்திற்குள் உத்தரவை மாற்ற விண்ணப்பம் கொடுத்திருக்கலாமே. காலாவதி ஆக்ட் 164-வது ஆர்டிகிலைப் பார்க்கவும். ஆகவே எக்ஸ்பார்டி உத்தரவாலும் ஒரு பார்ட்டி கட்டுப்பட வேண்டியது கடினமான ரூலாகச் சொல்லக்கூடாது. எதிரிக்காக வக்கில் மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யரவர்கள் ஆர்டர் 9-ரூல் 13 எக்ஸ் பார்டி டிக்கிரீகளுக்கு உபயோகப் படுத்தப்படலாமேயொழிய நிறைவேற்று நடவடிக்கைகளில் பிறந்த எக்ஸ் பார்டி உத்தரவுகளுக்குச் செல்லாதென்று வாதித்தார்கள். அந்தவாதம் ஒப்பத்தக்கதல்ல. 47-வது பிரிவின்படி நிறைவேற்று மனுவில் பிறந்த உத்தரவும் 2-வது பிரிவில் டிக்கிரீ என்ற வசனத்தின் கருத்தில் அடங்கியிருக்கிறது. ஆர்டர் 9-ரூல் 13-மேற்கூறிய 47-வது பிரிவின்படி பிறந்த உத்தரவுகளல்லாத எக்ஸ் பார்டி டிக்கிரீகளுக்குமட்டும் எற்குமென்று சொல்லப்படவில்லை. (1906) 3-கல்கத்தா லா ஜர்னல் 276-ஐப் பார்க்கவும். (1912 15 கல்கத்தா லா ஜர்னல் 532-இல் ஜஸ்டிஸ் முக்கர்ஜீயவர்கள் எக்ஸ்பார்டி உத்தரவை மாற்றும் முறைகளைப்பற்றிச் சொல்லுகிற ஆர்டர் 9-முழுவதும் நிறைவேற்று நடவடிக்கைகளுக்கு உபயோகப்படக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 9, 12-வது ரூல்களில் எற்பட்டிருக்கிற தாவாக்களில் புதிய நடவடிக்கை எடுக்கக்கூடாதென்ற அம்சமானது நிறைவேற்று மனுக்களுக்கும் செல்லுமாவென்று யோஜிக்கும் சமயத்தில் சொன்ன அபிப்பிராயமாகிறது. தவிர (1906) 3-கல்கத்தா லா ஜர்னல் கேஸின் தீர்மானத்தைப்பற்றி அதில் பிரஸ்தாபிக்கப்படவே யில்லை. அந்தத் தீர்மானத்தில் பரிஷ்காரமாய் நிறைவேற்று மனு உத்தரவுகளுக்கும் ஆர்டர் IX (108-வது பிரிவு) செல்லத்தகுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

காலாவதி ஆக்டில் சம்மன்ஸ் பிறந்ததகவல் தெரிந்தமுதல் ஒருமாதத்தவணைக்குள் விண்ணப்பம் செய்யவேண்டுமென்று எற்பட்டதில் 'சம்மன்ஸ் அல்லது நோடீஸ்" என்றுகாணுதபடியால் உத்தரவுகளின நோடீஸ் அந்த ஆர்டிகிலின் அம்சத்தில் சேரவில்லையென்றும் அவ்வித உத்தரவுகளுக்கு அந்த ஆர்டிகில்படி பரிகாரம் கிடையாதென்றும் வாதிக்கப்படுகிறது. சம்மன்ஸ் என்ற வசனத்தால் எக்ஸ்பார்டி டிக்கிரீகளைமட்டும் குறிக்கத்தக்கதாகச் சொல்லக்கூடாது. தவிர மனு உத்தரவுகளும் கோடில் டிக்கிரீயாக பாவிக்கப்பட்டிருக்கின்றன. 108-வது பிரிவைத்தவிர அப்பீல் முறையில் எக்ஸ்பார்டி உத்தரவை எதிரி மாற்றியிருக்கலாமே. ஆகவே 1909 ஆகஸ்டில் பிறந்த உத்தரவைக் காலாவதி தோஷமென்று பிந்திய நடவடிக்கையில் ஆக்ஷேபிக்க இடங்கொடுக்கக்கூடாது. காலாவதி பாயிண்டைப்பற்றியாவது வேறு காரணங்களாலா மனுதார் நிறைவேற்று மனுவைத் தொடர்ந்து நடத்தத் தடையாகுமாவென்ற ஆக்ஷேபணையைப்பற்றி ஜில்லாகோர்ட்டார் தீர்மானிக்க மறுதளித்தது நியாயமாகும்.



எதிரி 1911-ஜூலையில் ஸ்டாம்பில்லாதபடிக்கு ஒரு ஆக்ஷேபனை ஸ்டேட்மெண்டு தாகல் செய்ததாகவும் அதையே 108-வது பிரிவின்படி எக்ஸ்பார்டி உததரவை மாற்றுவதற்காகக் கொடுத்த விண்ணப்பமாக பாவித்து, எதிரிக்கு நோடீஸ் தகவல், 1911-ஜூலையில் தாகல் செய்த ஸ்டேட்மேண்டு தேதிக்கு ஒரு மாதத்திற்குள்தான் தெரியுமென்ற பாயிண்டை ருஜூப்படுத்த இடங்கொடுக்கப்பட்டிருக்கவேண்டுமென்று சொல்லி அதற்கு ஆதாரமாக (1910) 13 கல்கத்தா லா ஜர்னல் 26-ஐ எடுத்துக்காட்டப்பட்டது. ஆனால் அந்தக் கேசில் ஒரு ஆக்ஷேபனை ஸ்டேட்மெண்டானது விண்ணப்பமாக பாவிக்கப்பட்டும் எதிரிக்கு நோடீஸ் சார்வாகாத விஷயத்தையும் உத்தரவுபிறந்ததகவல் 8 தினங்களுக்குமுன்தான் தெரியுமென்ற விஷயத்தையும் வாதிஒப்புக்கொண்டபடியால் எக்ஸ்பார்டி உத்தரவு எதிரியைக் கட்டுப்படுத்தாதென்று தீர்மானமாச்சுது. ஆனால் இந்தக் கேசில் எதிரியின் ஸ்டேட்மெண்டுக்கு ஸ்டாம்புமில்லை, அதில் எக்ஸ்பார்டி உத்தரவை மாற்றும்படி கோறிக்கையுமில்லை, ஸ்டேட்மெண்டுக்கு முன் எப்பொழுது நோடீஸ் தகவல் எதிரிக்குத் தெரியவந்ததென்று குறிக்கப்படவுமில்லை; தவிர ஷை ஸ்டேட்மெண்டை விண்ணப்பமாக பாவிக்கப்படும் விஷயத்தில் அந்த விண்ணப்பமானது 1-மாதத் தவணைக்குள் செய்யப்பட்டதாகவும் காலாவதி தோஷம் கிடையாதென்றும் சொல்லபடவுமில்லை. ஜூலை 1911இல் ஸ்டேட்மெண்டு கொடுத்த தேதிக்கு ஒரு மாதத்திற்கு முந்தியே எதிரிக்குத் தகவல் தெரிந்திருக்கவேண்டுமென்று மற்ற நடவடிக்கைகளினால் அனுமானிக்கத் தக்கதாகும். அப்படியானால் 1909-ம் வருஷத்தில் எக்ஸ்பார்டி உததரவை ரத்துசெய்ய விண்ணப்பம் கொடுத்ததாக எற்றுக்கொள்ளக்கூடாது.

ஆகவே 2-வது மனு அப்பீல் தள்ளுபடியாச்சுது.

———:0:———



(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

கிருஷ்ணா ஜில்லா.

S. A. 1205, 1207 & 1208 of 1912.

REGISTRAR OF ... 3 APR 1914 MADRAS.

9 அக்டோபர் 1913.

ஸூர்யநாராயண Vs பொட்டண்ணு

1762-ம் வருஷத்தில் ரெட்டி ராஜாக்களால் இவதூரி வம்சத்தாரைச் சேர்ந்த சில பிராமணர்களுக்கு (அக்கிரகாரம்தார்களுக்கு) தாவா நிலங்கள் கிராண்டாகக் கொடுக்கப்பட்டன. அந்த அக்கிரகாரம்தார்கள் ஸர்க்காருக்கு யாதொரு தீர்வையும் செலுத்தாமல் ஸர்வ மானியமாக நிலங்களை அடைந்து அனுபவித்தார்கள். 7-அயிடங்களடங்கிய தாவா நிலங்களில் 4-அயிடங்களை வாதிகள் பூர்வீகமான அக்கிரகாரம்தார்களிடமிருந்து கிறயத்திற்கு வாங்கி, மற்ற 3-அயிடங்களையும அக்கிரகாரம்தார்களிடமிருந்து இனாமாகப் பெற்ற இனாம்தார்களிடம் கிறயத்திற்கு வாங்கி, எல்லா அயிடங்களையும் டெனெண்டுகளிடம் குத்தகைக்கு ஒப்படைத்துத் தீர்வையை வசூலித்து வந்தார்கள். அந்தப்படிக்கு பிரதிவாதிகளாகிய டெனண்டுகள் வாதிகளுக்கு முச்சலிக்கை எழுதிக்கொடுத்து அதில் குத்தகைவாய்தா கடந்த உடன் சுவாதீனத்தை ஒப்புக்கொடுக்கிறதாகக் கண்டிருந்தது. சட்டப்படிக்கு பிரதிவாதிகளுக்கு நோடீஸ்கொடுத்தும் அவர்கள் நிலத்தைக் காலிப்படுத்தி சுவாதீனம் செய்து கொடுக்காதபடியால் வாதிகள் தங்களுக்கு மேல்வாரம் குடிவாரம் ஆகிய இருவகை பாத்தியதையும் உண்டென்ற கருத்துடன் தாவா நிலங்கள் எஸ்டேஸ்லாண்டு ஆக்ட் 33 (2) e பிரிவில் கண்டபடி எஸ்டேட் நிலமாகாதென்று சொல்லி பிரதிவாதிகளிடமிருந்து நிலங்களைச் சுவாதீனமடையும் பொருட்டு 1909-ம் வருஷத்தில் பந்தர் டி-மு-கோர்ட்டில் மூன்று பிரதிவாதிகள்பேரில் வெவ்வேறாக இஜக்ட்மெண்டு பிராது கொடுத்தார்கள். பிரதிவாதிகள் தங்களுக்குக் குடிவாரபாத்தியதையுண்டென்றும் அதாவது வாதிகளுக்கு மேல்வார பாத்தியதைமட்டும் தான் உண்டென்றும் ஆகவே தாவா சொத்தானது எஸ்டேட் நிலமாக பாவிக்கப்பட்டு இந்த தாவா ரெவினியூ கோர்ட்டில் செய்யவேண்டுமெ

ன்றும் எதிர்வாதம் செய்தார்கள். டி-மு கோர்ட்டார் ருஜுப்படுத்தவேண்டிய பொறுப்பைப் பிரதிவாதிகள்மீது சாட்டி வாதிகளுக்கு மேல்வார பாத்தியதைமட்டு முண்டென்று; பிரதிவாதிகள் சரியானபடி ருஜு படுத்தவில்லையென்றும் சொல்லி வாதிகளுக்கனுகூலமாய் டிக்கிரீ யளித்தார்கள். ஜில்லா கோர்ட்டார் அப்பீலில் வாதிகளுக்கு இருவித பாத்தியமும் இருந்ததாக ருஜுபாகம் சரியாய் ஏற்படவில்லையென்றும் முதல் கிராண்டில் இருவகையான பாத்தியதையும் கிராண்டாக அளிக்கப்பட்டதாக ஏற்படவில்லையென்றும் ஆகவே சட்டப்படிக்கு மேல்வார பாத்தியதைமட்டும் வாதிகளுக்குண்டென்று யூகிக்க நியாயமாகுமென்று சொல்லி பிரதிவாதிகளுக்கனுகூலமாக ஸிவில் கோர்ட்டாருக்கு பிராதை விஜாரிக்க நியாயமில்லையென்று எல்லாப் பிராதுகளையும் டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கு ஜில்லா கோர்ட் அபிப்பிராயமே சரியென்று தீர்மாக்கப்பட்டு பிராதை வாபிஸ் செய்து சரியான கோர்ட்டில் தாகல் செய்யும்படி உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்மானத்தின் முக்கிய அம்சங்களாவன:—

அக்கிரகாரம்தார்களுக்கு முதல் முதல் கிராண்டு அளிக்கப்படும் பொழுது குடிவார பாத்தியதை இருந்ததா? அல்லது தாவா நிலங்கள் தரிசாய்க்கிடந்து அவர்கள் கிராண்டு பெற்றார்களா? அல்லது அக்காலத்தில் நிலத்தை பயிரிட்டு வந்த குடிகள் யாருமுண்டாவென்று தீர்மானிக்கவேண்டியது முக்கியமான பாயிண்டாகும். கிராண்டு பெற்றவர்கள் பிராமணர்கள். அவர்கள் தாங்களே சாகுபடிசெய்ய லாயக்குள்ளவர்களல்ல. தவிர 1846 மட்டும் அக்கிரகாரம்தார்கள் தாவா கிராமங்களில் வசிக்காமல் தீர்வையை வசூலிக்கும் சவுகரியக்குறைவு நிவர்த்திக்கும் பொருட்டு 1846-இல் அக்கிரகாரம்தார்களில் ஒருவர் மட்டும் அந்த கிராமத்தில் வந்து குடியேறினதாக ருஜுபாகத்தில் ஏற்படுகிறது. கிராண்டில்ஏற்பட்ட நிபந்தனைகளை ருஜுப் படுத்தும்படியான தஸ்தவேஜிகள் யாதொன்றும் தாகல் செய்யப்படவில்லை. ஜமீன்தார்களுக்கு மேல்வார பாத்தியதை மட்டும் உண்டென்று அனுமானிக்க நியாயமாவதுபோல் இனாம்தார்களுக்கும் அவ்வித அனுமானம் ஏற்படுமென்று (1909) 21 M. L. J. 803, 24 M L J 288, 23 M L J 655, 24 M L J 656, & 24 M L J 659-இலும் 1908-ம் வருஷத்திய 437-வது அப்பீல் தீர்மானத்திலும் 1912-ம் வருஷத்திய 168 நெ. 2-வது அப்பீல் தீர்மானத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஜமீன்தார்களுக்கும் இனாம்தார்களுக்கும் குடிவார பாத்தியதை கிடையாதென்று யூகிக்கவேண்டியதாகும். (1910) மதராஸ் வாரக்குறிப்புகளின் 639-இலும், (1907) 30 மதராஸ் 502-இலும் வாதிக் கனுகூலமான தீர்மானங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், அதற்குப்பிந்திய தீர்மானங்கள் யாவற்றும் ஒற்றுமையாக முதற்கூறிய அபிப்பிராயத்திற்கிசைவாகவே ஏற்பட்டிருக்கின்றன. ஜில்லா கோர்ட்டார் ருஜுபாகத்தை நன்றாய் ஆராய்ந்துபார்த்து வாதிகளுக்கு ஆதியில் (கிராண்டு அளிக்கப்படும் காலத்தில்) இருவகை பாத்தியதையும் இருந்ததாக ஏற்படவில்லையென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அந்த அபிப்பிராயத்தை மாற்றக் காரணம் யாதொன்றும் காணப்படவில்லை. முந்திய கிராண்டை உறுதிப்படுத்தின கருத்துடன் கூடிய ஒரு தானப் பத்திரமானது வாதிக்காக தாகல் செய்யப்பட்டு அதில் அக்கிரகாரம்தார்கள் நிலங்களையெல்லாம் விஸ்தாரமாய்ப் பயிரிட்டு வம்ச பாரம்பரையாய் அனுபவிக்கக்கடவது என்ற வசனங்கள் கண்டிருப்பதை வாதிகளுக் கனுகூலமாக சாகுபடி பாத்தியதையும் அக்கிரகாரம்தார்களுக்கிருந்ததாகச் சொல்லப்பட்டது. அவ்வித வசனங்களால் நிலத்தைச் சாகுபடி செய்துவந்த குடியானவர்களுடைய பாத்தியதைக்குக் குறைவு ஏற்பட்டதா என்று கவனிக்கவேண்டியதாகும். ஜில்லா ஜட்ஜியவர்கள் அவ்வசனங்களால் யாதொரு அனுமானமும் அடையப் பிரியப்படவில்லை. கிராண்டு அளிக்கப்பட்ட பூர்வீக காலத்தில் கிராமத்தில் நிலங்கள் சாகுபடியாய் வந்ததாகவும் முக்கியமாய் அக்கிரகாரம்தார்களுக்கு அதிகப் பிரியமாயிருந்த சீயக்காய்ச் செடிகள் உண்டாக்கப்பட்டு வந்ததாகவும் தெளிவாய் ருஜுபாகத்தில துலங்குவதாய்ச் சொல்லுகிறார்கள். ஆகவே கிராண்டளித்த ராஜாக்கள் நிலத்தைச் சாகுபடி செய்துவருகிற குடிகளுடைய பாத்தியதைக்கு யாதொரு கெடுதி யுண்டாக்க உத்தேசித்ததாகச் சொல்ல நியாயமில்லை. மேற்கூறிய தானப் பத்திரத்தில் ''மாருலை அனுபவிக்கவேண்டியது" என்ற வசனங்கள் இனாம் கிராண்டுகளில் சாதாரணமாய் உபயோகப் படுத்தப்படுகின்றன. 1 பம்பாய் 523-இல் அவ்வசனங்களுக்கு நிலத்தீர்வை வருமானமென்ற கருத்தாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. S A 705/1909-இல் நிலத்தைச் சாகுபடிக்குவிட்டு அனுபவிக்கிறதென்ற வசனங்களால் கிராண்டில் மேல்வாரம் குடிவாரம் இரண்டும் அளிக்கப்பட்டதாக ஜில்லா கோர்ட்டார் அர்த்தங்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தக் கேஸில் நிலங்கள் கிராண்டுக்குமுன் சாகுபடியன்னியில் தரிசாய் கிடந்தன. இந்தக்கேஸில் தாவா நிலங்களில் அதிகமான பாகமாவது ஒரு காலத்தில் பாழாகவும் தரிசாகவும் கிடந்ததாக ஏற்பட்டபோதிலும் தாவா நிலங்கள் கிராண்டுக்குமுன் சாகுபடியன்னியில் கிடந்ததாக ருஜு அம்சம் யாதொன்றும் கிடையாது. 29 பம்பாய் 415-இல் கிராண்டளித்த சன்னதை ஆஜர்படுத்தக்கூடாத சந்தர்ப்பத்தில் நிலவருமானம் மட்டும் கிராண்டாக அளிக்கப்பட்டதென்று அனுமானிக்கப்பட்டது. பூர்வகாலத்து சமாசாரமாயிருப்பதால் குடிவார பாத்தியதை எப்பொழுது துவக்கமாச்சுதென்று ருஜுபாகம் கிடைக்க முடியாதபட்சத்தில் மேல்வார பாத்தியதை எப்பொழுது ஏற்பட்டதோ அப்பொழுதே டெனெண்டுகளுக்குக் குடிவார பாத்தியதையும் ஏற்பட்டதாகச் சொல்லவேண்டுமென்று அந்தக் கேசில் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள்.



ஒரு ஜமீன்தாரியில் மோகாஸாதாருடைய நிலத்தைச் சாகுபடிசெய்துவந்த டெனெண்டுகளின்பாத்தியதைக்கு யாதொருகெடுதியும் உண்டாக்குவதாய் கவர்ன்மெண்ட் கிராண்டில் கருத்தில்லையென்று 24 மதராஸ் லா ஜர்னல் 288-இல் சொல்லப்பட்டிருக்கிறது. ஜமீன்தார் கிராண்டுக்கும் கவர்ன்மெண்டாருடைய இனாம் கிராண்டுக்கும் வித்தியாஸமான கருத்திராது. ரெட்டி ராஜாக்களால் அளிக்கப்பட்ட அக்கிரகாரம் தார்களின் கிராண்டுகளால் சாகுபடி பாத்தியதையுடைய ரயட்டுகளுக்கு யாதொரு கெடுதலும் ஏற்பட்டிருக்க நியாயமில்லையென்று சொல்லவேண்டும். இங்கிலீஷ் சட்டமுறையை அனுசரித்து தீர்மானமளித்த 6-பம்பாய் ஹைகோர்ட் ரிபோர்ட்களின் 191-இல் இனாம்தார்கள் இனாம் நிலங்களை வம்சபரம்பரையாய் அனுபவிக்க வேண்டியது என்று கிராண்டில் கண்டால் நிலத்தின் சுவாதீன பாத்தியதையைப் பராதீனம் செய்யத்தக்க அதிகாரம் கிராண்டினால் ஏற்பட்டதாகச் சொல்லக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 23 மதராஸ் லா ஜர்னல் 728-இல் கோவில் அர்ச்சகனுக்கு அளிக்கப்பட்ட இனாம் கிராண்டைப்பற்றிச் சொல்லும்பொழுது கிராண்டில் மேல்வாரம் வேராகவும் குடிவாரம் வேராகவும் தனித்தனிவசனங்களால் குறிக்கப்படத்தேவையில்லையென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது 1871 -ய்வருஷத்திய பென்ஷன் ஆக்ட் 4-வது பிரிவின் அம்சங்களை அனுசரித்துக் கொடுத்த அபிப்பிராயமாகிறது. இந்தக்கேசில் தாகலாயிருக்கும் தஸ்தவேஜுகளின் கருத்தை விளக்குவதற்கு அந்தத் தீர்மானத்தை ஆதாரமாக எடுத்துக்கொள்ள நியாயமில்லை.

தாவாநிலங்களில் சாகுபடிசெய்த ரயட்டுகள் அடிக்கடி இடையில் மாறிப்போனதாகவும் தீர்வைத்தொகைகளும் பலதடவைகளில் மாறி மாறி வித்தியாஸமாக ஏற்பட்டிருந்ததாகவும் ருஜுவாயிருக்கிறது. சில காலங்களில் தரிசாகவும் கிடந்து வாதிகள் வசம் சென்று பிறகு சில டெனெண்டுகள் வசப்படுத்திக் கொண்டு அனுபவித்ததாகவும் ஏற்படுகிறது. சில அயிடங்கள் வாதிகளின் சொந்த சாகுபடியிலிருந்ததாகவும் ஏற்படுகிறது. குத்தகைச்சீட்டை அனுசரித்து அநேக தடவைகளில் டெனெண்டுகள் அப்புறப்படுத்தப்பட்டதாகவும் ருஜுபாகமிருக்கிறது. தொடர்ச்சியாக குடிவார பாத்தியதை ஏற்பட்டு அனுபவிக்கப்பட்டு வந்ததாக ஏற்படவில்லையென்பது வாஸ்தவம்தான். ஆனால் டி-மு-கோர்ட்டார் சொல்லுகிறபடி பழயகவுல் தஸ்தவேஜுகளில் டெனெண்டுகள் காலிசெய்யவேண்டுமென்ற ஷரத்துகிடையவே கிடையாது. ஆனால் இரண்டு கீழ்கோர்ட்டாரும் தாவாநிலங்களில் பிரதிவாதிகள் சொற்பகாலங்களுக்கு முன்னேதான் சுவாதீனமடைந்ததாகவும் சிலநிலங்கள் பிரதிவாதிகளல்லாத இதரமான டெனெண்டுகளுடைய சுவாதீனத்திலிருந்ததாகவும் சில அயிடங்கள் தரிசாய் விடப்பட்டிருந்ததாகவும் ஒற்றுமையாய் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். 21 மதராஸ் லா ஜர்னல் 803-இல் ரயட்டுகள் தங்கள் முன்னோர்க

ளுடைய சாச்வத அனுபோகத்தை ருஜுப்படுத்தக் கூடாத விஷயமும், இடைக்கிடையில் சாகுபடிசெய்து வந்த பிரதிவாதிகளுக்கும்மற்ற ஒழுங்காய் அனுபவித்த ரயட்டுகளுக்கும்சரியானசம்பந்தம் ருஜுவாகாதவிஷயமும், மற்றசில இனாம்தார்களுக்குக்குடிவாரபாத்தியதைஉண்டென்று அந்தக்கேசில்பிரதிவாதிகளாயிருந்தரயட்டுகள்ஒப்புக்கொள்ளுகிறவிஷயமும், தீர்வைகளின்விகிதம்வித்தியாஸப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களும்பிரதிவாதிகளை குடிவார பாத்தியதையற்றவர்களென்று அப்புறப்படுத்துவதற்குப் போதுமான காரணங்களல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. தரிசாகக்கிடந்த அல்லது காலிசெய்யப்பட்ட நிலங்களைபுதிய ரயட்டுகள் சுவாதீனமடைந்து சாகுபடிசெய்துவந்தால் அதற்குமுன் அனுபவித்தவர்களுக்குஎவ்வித பாத்தியதை யிருந்ததோ அதே பாத்தியதையுடன் புதிய ரயட்டுகள் அனுபவிப்பதாய் அனுமானிக்கவேண்டுமென்றுகுடிபாத்தியச்சுவாதீன மாறுதலைப்பற்றிச் சொல்லும் 23 மதராஸ் 318 - இல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது ஆகையால் இடையில் வந்தவர்கள் பழய ரயட்டுகளுடைய பாத்தியதையைத் தொடர்ந்து அனுபவித்தவர்களாய் மதிக்கப்படவேண்டியதாகும். குடிபாத்தியஸ்தர்கள் எப்பொழுது வந்தார்கள் என்பது முக்கியமான பாயிண்டல்ல. குடிபாத்தியதை எப்பொழுது துவக்கிற்றென்று கவனிக்கவேண்டியதுதான் முக்கியமான விஷயமாகும். இந்தக்கேசில் குடிவாரபாத்தியதை எப்பொழுது துவக்கிற்றென்று இரண்டு கோர்ட்டாரும் சொல்லவில்லை. ஆதியில் குத்தகைச்சீட்டின்பேரில் டெனண்டுகள் நிலத்தை சுவாதீனப்படுத்திக்கொண்டுகுறித்தகாலத்திற்கு அனுபவித்து வந்ததாக ஏற்பட்டால் அது வேறு விஷயமாகும். அவ்வித ருஜு அம்சமும் கிடையாது. பிரதிவாதிகள் நீடித்த காலமாய் அனுபவித்துவராமல் சொற்பகாலத்திற்கு முன் தான் சுவாதீன மடைந்தார்களென்று ஏற்படுகிறபோதிலும் தாவாநிலங்கள் மாறி மாறி டெனெண்டுகளுடைய அனுபோகத்திலேயே இருந்ததாக ஏற்படுகிறதேயொழிய வாதியினுடைய சொந்த சாகுபடியில் வந்த சேரி நிலங்களாக ஏற்படவேயில்லை என்று துலங்குகிறது. ஆகவே அக்கிரகாரம்தார்களுக்குக் குடிவார பாத்தியதை கிடையாதென்று சட்டப்படி ஜில்லா கோர்ட்டார் யூகித்துத் தீர்மானம் செய்தது நியாயமாகும். ஜமீன்தாரி நிலங்களில் ரயட்டுகளுக்குக்குடிவாரபாத்தியதை உண்டென்று எஸ்டேட்ஸ் ஆக்ட் நமோதுக்கு வருமுந்தியே ஏற்பட்டிருக்கிறது. 20 மதராஸ் 299-இல் அது தெளிவாய்த் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எஸ்டேட்ஸ் ஆக்டில் அந்த விஷயம் ரயட்டுக்களுக்கனுகூலமாய் ஏற்பட்டிருப்பதால் மற்ற முன் தீர்மானங்களை எடுத்துச் சொல்வதனாவசியமாகும். அக்கிரகாரம்தார்களுக்கும் இனாம்தார்களுக்கும் குடிவாரபாத்தியம் இல்லாத பட்சத்தில் அந்த நிலங்கள் எஸ்டேட் நிலங்களென்று மதிக்கப்படவேண்டியதாகுமென்று கிருஷ்ணஜில்லாக் கேஸ்கள் சொற்பகாலத்திற்கு முன்தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் 23 மதராஸ் லா ஜர்னல் 655, 24 மதராஸ் லா ஜர்னல் 656, 24 மதராஸ் லா ஜர்னல் 659-இல் ரிபோர்ட்டாகியிருக்கின்றன. வாதிக்காக 30 மதராஸ் 502 எடுத்துக் காட்டப்பட்டு ஜமீன்தாரிரயட்டுகளுக்குறிய அனுமானம் இனாம்தாருடைய ரயட்டுகளுக்கு ஏற்காதென்று சொல்லப்பட்டது. அந்தத் தீர்மானம் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டுக்கு முன் பிறந்ததாகும். அந்த தீர்மானத்தின்படி இனாம்தார்களுடைய ரயட்டுகளுக்குக் குடிவார பாத்தியதையே கிடையாதென்று ஏற்படுகிறது. எஸ்டேஸ் ஆக்டினால் முழு இனாம் நிலங்களில் உள்ள ரயட்டுகளின் நிலமை முற்றிலும் மாற்றப்பட்டிருக்க அந்தத் தீர்மானத்தை இனி அதாரிடியாக எடுத்துக்கொள்ள நியாயமில்லை. இனாம் தாருக்கு இருவகை பாத்தியதையும் உண்டாயிருக்குமென்று யூகிக்கக் கூடாதென்று A. S. 137/1918-இல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க இருவகை பாத்தியதையும் உண்டென்று ருஜுப்படுத்த வேண்டிய பொருப்பு இனாம்தாரைச் சேர்ந்ததாகும். அப்படியிருக்க இந்தக்கேசில் ருஜுபாரத்தை டி-மு-கோர்ட்டார் பிரதிவாதியின் மீது வைத்துவிட்டார்கள். அது பிசகு. 4 மதராஸ் 174 ஐப்பார்க்கவும். அதில் ஒரு மிட்டாதார் ரயட்டுக்கு வருஷாவருஷம் குத்தகை பாத்தியம் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று ருஜுப்படுத்துமுன் தனக்கு மேல்வார பாத்தியதையும் குடிவார பாத்தியதையும் சேர்ந்திருப்பதாய் ருஜுப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 15 மதராஸ் 95-இலும் ருஜுபாகம் இனாம்தாரைச்



சேர்ந்ததாகச் சொல்லப்பட்டது. 116 MLJ 333 இல் இனாம்தாருக்கு மேல்வார பாத்தியதை மட்டும்தான் உண்டென்று முதற்பார்வையில் யூகிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 24 MLJ 656-இல் நஸ்விட் ஜமீன்தாரிடம் இனாம்பெற்ற அக்கிரகாரம்தாருக்கு மேல்வார பாத்தியதைமட்டும் தான் உண்டென்று யூகிக்கப்பட்டிருக்கிறது. 24 MLJ 655-இல் அக்கிரகாரம்தாருக்கு கிராண்டில் குடிவாரமும் சேர்ந்திருந்ததாக அல்லது கிராண்டாகும் காலத்தில் அவருக்குக்குடிபாத்தியதையும் இருந்ததாக ஏற்பட்டாலொழிய அந்த நிலமானது எஸ்டேட் நிலமென்றுபாவிக்கப் படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. குடிவாரபாத்தியதை ஏற்படாத சந்தர்ப்பத்தில் குடிவார பாத்தியதை உண்டென்று ருஜுப்படுத்த வேண்டிய பொறுப்பானது இனாம்தாரைச் சேர்ந்ததாகிறது. ஆனால் இனாம்தார் டி-மு-கோர்ட்டில் தாவா செய்திருக்க அந்தக் கோர்ட்டுக்கு பிராதை ஏற்றுக்கொள்ள அதிகாரமில்லையென்று பிரதிவாதி ஆக்ஷேபித்தால் அந்த ஆக்ஷேபனைக்காதாரமான பாயிண்டை (அதாவது வாதிக்குக் குடிவார பாத்தியதை இல்லையென்ற பாயிண்டை) ருஜுப்படுத்தவேண்டியது பிரதிவாதியைச் சேர்ந்ததாகிறது. ஆகவே, இரண்டுசந்தர்ப்பங்களில் ருஜுபாகம் மாறுகிறது ஆனால்எந்தக்கோர்ட்டுக்கு அதிகார வரம்புண்டென்று தீர்மானிப்பதற்குத் தக்க ருஜு அம்சம் ஏற்படாத பட்சத்தில் சட்டப்படிக்கு இனாம்தாருடைய கிராண்டின்படி மேல்வார பாத்தியதை மட்டும் உண்டென்று யூகித்து அதனால் யாருக்குக் கெடுதி ஏற்படுமோ அவர் பேரில் ருஜுபாரத்தைப் போடவேண்டியதாகும். 20 M L J 526-இலும் இஜெக்ட்மெண்டு தாவாவில் குடிவார பாத்தியதையை இனாம்தார் ருஜுப்படுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 13 மதராஸ் 60-இல் ஒரு பட்டாதார் (ரயட்) தீர்வையை ஒழுங்காய்ச் செலுத்திவருமட்டும் சுவாதீனத்திலிருக்கவும் கிரய பாத்தியதைக்கும் உரியவனென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அக்கிரகாரம் நிலங்களாகிய தாவா 4-அயிட்டங்களைப்பற்றினமட்டில் வாதிக்கு மேல்வார பாத்தியதைமட்டும் தான் உண்டென்றும் அவை எஸ்டேட் நிலங்களாகுமென்றும் பிரதிவாதியை வெளிப்படுத்த லீவில் கோர்ட்டில் தாவா செய்ய நியாயமில்லையென்றும் சொல்லவேண்டும். மற்ற மூன்று அயிட்டங்களைப்பற்றி யோஜிக்குமிடத்து அக்கிரகாரம் தாரிடம் இனாம் பெற்றவர்களுக்கு அக்கிரகாரம் தார்களுடைய பாத்தியதை மட்டும் தான் உண்டாகும். அதாவது மேல்வார பாத்தியதை மட்டும்தான் உண்டாகும். 20 MLJ 764 ஐப்பார்க்கவும். 34 மதராஸ் 246-இலும் SA 705 of 1909-இலும் 21 MLJ 803-இலும் அதே அபிப்பிராயம் சொடுக்கப்பட்டிருக்கிறது.

கடைசியாக தாவாநிலங்கள் பிரதிவாதிகளுக்கு ஒப்படைக்கப் படுமுன் தரிசாய்க் கிடந்து அல்லது ரயட்டுகளால் காலிசெய்து விடப்பட்டு வாதி அதை அடைந்திருந்தமையால் வாதிக்கு அந்த நிலத்தில் குடிவார பாத்தியதை ஏற்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. எஸ்டேட்ஸ் ஆக்ட் 8-வது பிரிவின் புறநடையில் கண்ட ஷரத்துக்களின்படி யாதொரு நிலத்தில் மேல்வாரம் தாருக்குக் குடிவார பாத்தியதை ஏற்பட்டால் அந்த நிலமானது எஸ்டேட் நிலமென்ற அந்தஸ்திலிருந்து நீக்கப்படவேணடுமென்று சொல்லவேண்டியதாகும். 8-வது பிரிவின் முன்பின் அம்சங்களைக் கவனித்தால் குடிவாரபாத்தியதையைமேல்வாரம்தார் விக்கிரயத்தாலாவது, வார்ஸ் பாத்தியதையாலாவது அடையலாமென்று சொல்லவேண்டும். ஒரு ரயட்டானவன் நிலத்தைக்காலிசெய்து மேல்வாரம்தாரிடம் ஒப்புக்கொடுத்தாலும் அல்லது நிலத்தைவிட்டு ஓடிப்போனபோதிலும் மேல்வாரம்தார் நிலத்தை வசப்படுத்திக் கொண்டால் குடிவார பாத்தியதையை அடைந்ததாக அர்த்தப்படுத்தக்கூடாது. எஸ்டேட்ஸ் ஆக்ட் 3-வது பிரிவின் 7-வது கிளாஸின்படி 10-வருஷ காலமாய் நிலமானது சாகுபடியில்லாமல் குடிவார பாத்தியதையின்றி கிடந்தால்மட்டும் மேல்வாரம் தாருக்கு அதில் சுவாதீன பாத்தியதை ஏற்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வாதிகளுக்கு மேற்கூறிய கருத்துகளின்படி குடிவார பாத்யதை ஏற்பட்டதாக ருஜுவாகவில்லை. தரிசாய் கிடந்த நிலத்திலும் காலியாய் விடப்பட்ட நிலங்களிலும் பிரவேசித்து அனுபவிக்கிற ரயட்டுகளுக்கு முந்திய குடிபாதியஸ்தர்களுக்கு என்ன சிலாக்கியமுண்டோ அவைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கிறதாக 23 மதராஸ் 318-இல் தீர்மானித்

இருக்கிறபடியால் பிரதிவாதிகளுக்கு விரோதமாய் வாதிகள் குடிவார பாத்தியதையை அடைந்ததாகச் சொல்லக்கூடாது.

மேற்கூறிய காரணங்களால் வாதி ஸிவில்கோர்ட்டில் பரிகாரம்தேட நியாயமில்லையென்று மேல்கண்டவிதமாய் பிராது வாபிஸ் செய்யப்பட்டு சரியான கோர்ட்டில் தாகல் செய்யும்படி உத்தரவளிக்கப்பட்டது.

———:O:———

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

———:O:———

Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் &
ஜஸ்டிஸ் எய்லிங்

C. M. S. A. 48 of 1912-10 பிப்ரவரி 1914

கோர்ட்டில் தொகையைக் கட்டும்படி ஒரு ராஜிநாமா டிக்கிரீயில் குறிக்கப்பட்டிருந்த வாய்தா கடந்து விட்டாலும் ஸி. பி. ஸி. 148-வது பிரிவின்படி கோர்ட்டாருக்குத் தொகைகட்டும் காலத்தவணையை அதிகப்படுத்த அதிகாரமுண்டு.

———:O:———

Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

Crl Mis Petition 546 of 1912
10 பிப்ரவரி 1914.

பிரிட்டிஷ் இலாகாவில் சில நகைகளை அடமானத்தின்பேரில் பெற்றுக்கொண்டவன் ஷை நகைகள் விஷயமாய் ஒரு சுதேச ராஜாங்கத்தில் நம்பிக்கை மோசமென்ற குற்றத்தைச் செய்ததாக ஏற்பட்டு அந்தக் குற்றத்திற்காக பிரிட்டிஷ் இலாகாவில் அவன்பேரில் கேஸ் விஜாரணையாகி ஸெஷன்ஸுக்குக் கமிட் செய்யப்பட்டபின் கிரிமினல் புரொஸீஜர் கோட் 188-வது பிரிவின்படி சுதேச இராஜ்ஜியத்தில் செய்த குற்றத்தை விஜாரிக்க நியாயமாகுமென்று அந்த இராஜ்ஜியத்தினுடைய பிரிட்டிஷ் பொலிடிகல் ஏஜண்டவர்களுடைய ஸர்டிபிகேட் பெறாமல் பிராஸிகியூஷன் செய்தது பிசகென்று சொல்லி ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் எதிரியைக் கமிட் செய்த உத்தரவை ரத்துசெய்ய வேண்டுமென்று ஹைகோர்ட்டுக்கு ரிபர் செய்தகொண்டதில் ஸர்டிபிகேட் இல்லாத காரணமானது கமிட்செய்த உத்தரவை பாதிக்காதென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

Messrs ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

A. S. No. 123 of 1903-10 பிப்ரவரி 1914.

சப் ரெஜிஸ்டிரார் முன்பாக ஆஜராகி பத்திரத்தை ரெஜிஸ்டர் செய்து கொடுக்கும்படி இரண்டு தடவை சம்மன் அனுப்பப்பட்டும் எதிரி ஆஜராகாத நிமித்தம் வாதி சப் ரெஜிஸ்டிராரிடம் தஸ்தவேஜை ரூல்படிக்கு ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமென்றும் இல்லாவிடில் பத்திரத்தை வாபீஸ் செய்யும்படியும் விண்ணப்பம் செய்துகொண்டதில் வாதியின் இரண்டாவது கோறிக்கையின்படி பத்திரம் ரெஜிஸ்டராகாமல் வாதியினிடம் திரும்பிக் கொடுக்கப்பட்டது. அதன்மேல் வாதி டிஸ்டிரிக்ட் ரெஜிஸ்டிராரிடம் பத்திரத்தை ரெஜிஸ்டர் செய்து கொடுக்கும்படி விண்ணப்பம் செய்துகொண்டதில் பத்திரத்தை சப் ரெஜிஸ்டிரார் வாதி கோறியபடி திரும்பிக் கொடுத்துவிட்டபடியாலும் அதை ரூல்படி ரெஜிஸ்டர் செய்து கொடுக்க மறுத்ததாகச் சொல்லாதபடியாலும் அப்பீலில் டிஸ்டிரிக்ட் ரெஜிஸ்டிரார் வாதியின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஷை தஸ்தவேஜை ரெஜிஸ்டர் செய்து கொடுக்கவேண்டிய நியாயமாகுமெனத் தீர்மானிக்கும் பொருட்டு சப்கோர்ட்டில் டிக்லேரேஷன் தாவா செய்தார். டிஸ்டிரிக்ட் ரெஜிஸ்டிரார் உத்தரவளித்த 30 தினங்களுக்குள் சட்டப்படி தாவா செய்யப்படவேண்டிய திருக்க 31-வது தினத்தில் கொடுத்த பிராது காலாவதி தோஷமென்று எதிரி ஆக்ஷேபிக்க 29, 30-வது நாட்களில் கோர்ட் ரஜாவினால் மூடப்பட்டிருந்ததாக வாதி சமாதானம் சொல்லியும் சப்கோர்ட்டார் அந்த சமாதானத்தை ஒப்புக்கொள்ளாமல் பிராது காலாவதி தோஷமென்றும் தவிர பத்திரத்தை ரெஜிஸ்டர் செய்ய மறுத்ததாகக் காணப்படவில்லையென்றும் சொல்லி பிராதைத் தள்ளுபடிசெய்துவிட்டார். வாதி அதன்மேல் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் 30-ம் நாள் ரஜாவானதால் அடுத்த நாளில் தாவா செய்யலாமென்று பொதுவான சட்ட நியாயத்தை அனுசரித்துத் தீர்மானித்து தவிர, ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்காகக் கொடுத்த பத்திரத்தை வாபிஸ் செய்தமையால் ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட் 117-வது பிரிவின் கருத்துப்படி ரெஜிஸ்டர் செய்ய மறுத்ததாகவே நிதானிக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப்பட்டார்கள்.



———:O:———

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

S. A. 355 of 1912-10 பிப்ரவரி 1914

சிந்தாமணியின் ஜனவரி 2-ம் பிரதியில் 29-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற ஸ்ரீனிவாசய்யங்கார், திருவேங்கடத்தய்யங்கார் என்ற இருவர்களுடைய வியாஜ்ஜியத்தில் ஹைகோர்ட் 2-வது அப்பீலை ஈரங்கிகேட்ட மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும இந்துக் குடும்பஸ்தர்களின் பாகப் பிரிவினையாகும் பொழுது விவாகம் நடந்திராதவர்களுக்குறிய விவாகச் செலவைக் குடும்ப சொத்திலிருந்து வகிக்கவேண்டியதென்ற விஷயத்தில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் மாறுன அபிப்பிராயங் கொண்டபடியால் மற்ற குடும்பஸ்தர்களுக்குக் குடும்ப சொத்திலிருந்து விவாகச் செலவு செய்யப்பட்டிருக்க பாககாலத்தில் விவாகம் நடக்காதவர்களுக்கு குடும்பப் பொது சொத்திலிருந்து ஜவேஜை ஏற்படுத்திவிட்டு மிகுதியைமட்டும் பங்கு பிரிக்கவேண்டியதாகுமென்று மூன்றாவது நியாயாதிபதியாகிய ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்கள் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களுடைய அபிப்பிராயத்திற்கு ஒத்துச் சொன்னார்கள். ஆகவே விவாகம் அத்தியாவசியமான ஓர் சடங்காச்சாரமென்றும் அதற்காக நேரும் செலவைக் குடும்ப சொத்திலிருந்து வகிப்பதவசியமாகுமென்று தீர்மானிக்கப்பட்டதாகும்.

———:O:———

Messrs சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஒல்ட்வீல்ட்

O. S. No......... of 1913-10 பிப்ரவரி 1914

வாதி பிரதிவாதியிடம் சில நல் முத்துக்களை கமிஷன் லாபத்திற்காக விற்று முதல் செய்யும்படி கொடுத்ததில் ஷை முத்துக்கள் பிரதிவாதியிடமிருந்து திருட்டுப்போய் கண்டு பிடிக்கப்பட்டுத் திருடர்கள் தண்டனையாகி அவர்களிடமிருந்து களவுபோன சொற்ப முத்துக்களும் அகப்பட்டன. வாதி பிரதிவாதியின்பேரில் முத்துக்களின் கிறயம் பூராவையும் அடைவதற்காக தாவா செய்ததில் திருட்டுக்கேசை நடத்தினதில் நேர்ந்த செலவுகளுக்கு வாதிகட்டுப்படவேண்டுமென்றும் களவில் அகப்படாத முத்துக்கள் விஷயமாய் வாதிக்குப் பரிகாரம் கிடையாதென்றும் பிரதிவாதி எதிர் ஆன்ஸர் கொடுத்தார். திருட்டுக்கேஸின் செலவுகளை வாதி கொடுக்க நியாயமில்லையென்றும் ஆனால் திருட்டுப்போன விஷயம் வாஸ்தவமாயிருப்பதால் திருடர்களிடமிருந்து வசூலான முத்துக்களை மட்டும் வாதி அடைய பாத்தியமுண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

S. A. 2138 of 1910-10 பிப்ரவரி 1914.

சுதந்தர பாத்தியதையுடைய இனும் நிலத்திலிருந்து இனும்தார் விலை மதிப்புள்ள கல் தோண்டியெடுத்தால் அவைகளில் கவர்ன்மெண்டாருக்குச் சட்டப்படி பங்குஸ்கிதம் கிடையாதென்று ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களின் தீர்மானம். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்களுடைய அபிப்பிராயம் வித்தியாஸமாக ஏற்பட்டிருக்கிறது.

———:O:———

Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் &
ஜஸ்டிஸ் எய்லிங்

C. M. S. A. 38 of 1913-11 பிப்ரவரி 1914.

வாதிக்கு மத்தியகால வரும்படியளிக்கும்பொழுது பிரதிவாதி அனுபவித்த காலத்தில் செலுத்தியிருந்த சர்க்கார் கிஸ்தியை வாதி வஜா செய்ய வேண்டியது நியாயமாகும்.

———:O:———

Messrs சீவ்ஜஸ்டிஸ் &
ஜஸ்டிஸ் ஒல்ட்வீல்ட்

O. S. A. 5 of 1913-11 பிப்ரவரி 1914.

பிரதிவாதி வாதியினுடைய கிட்டங்கியிலும் வீட்டிற்குள்ளும் துராகிருதயாய்ப் பிரவேசித்ததற்காக வாதி பிரதிவாதியின்பேரில் ரூ. 25,000க்கு நஷ்டப்பிராது கொடுத்ததில் மதராஸ் ஹை

கோர்ட் அசல்தரப்பில் கிட்டங்கியில் பிரவேசித்ததுமட்டும் ருஜுவானதாக நம்பப்பட்டு வாதிக்கு ரூ. 30 நஷ்டமளிக்கப்பட்டும் முக்கியமான அம்சத்தில் வாதி தோல்வி அடைந்த காரணத்தால் பிரதிவாதியின் கோர்ட்செலவை வாதி வகிக்க வேண்டுமென்றும் டிக்கிரீயளிக்கப்பட்டது. அப்பீலில் வீட்டிற்குள் பிரதிவாதி தப்பாக பிரவேசித்ததாகவும் ஏற்பட்டு ரூ. 150 நஷ்டம் வாதிக்கு டிக்கிரீயானதுமன்றி வாதிக்குச் செலவு தொகையும் டிக்கிரீயாச்சுது.

——:O:——

(Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயகர் & ஜஸ்டிஸ் (எய்லிங்

C. M. A. 239 of 1911-
12 பிப்ரவரி 1914.

ஒரு அடமானதார் 4 பிரதிவாதிகள்மீது டிக்கிரீ பெற்றபின் 1-2 பிரதிவாதிகள் தங்கள் சொத்துபாகத்தை A-என்பவனுக்கும், 3-4 பிரதிவாதிகள் தங்கள் பாகத்தை B-என்பவனுக்குமாக விக்கிரயஞ் செய்துவிட்டதின்பேரில் A-என்பவன் B-யினிடம் சென்ற பாகத்தை முதலில் டிக்கிரீ பாக்கிக்காக ஏலம்போடவேண்டுமென்று கோர்ட்டாரிடம் விண்ணப்பம் கொடுத்ததிற்கு டிக்கிரீ பாக்கிதாருடைய சம்மதியின்பேரில் சப்கோர்ட்டார் உத்தரவளித்தார்கள். B-என்பவர் அந்த உத்தரவை மாற்றவேண்டுமென்று சப்கோர்ட்டாரிடமே ரிவியூமனுக்கொடுக்கவே அது தள்ளுபடியாச்சுது. அந்த உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

A-கொடுத்த விண்ணப்பத்தில் B-பார்டியாகயிராதபோதிலும் B-என்பவனுக்கு அப்பீல் செய்ய நியாயமேற்படுகிறது.

——:O:——

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

C. R. P. No. 29 of 1913-12 பிப்ரவரி 1914.

வாதி பிரதிவாதிக்கு ஒரு தினுஸு (மாதிரி) ப்பிரகாரம் தானியம் சப்ளை செய்வதாய் ஒப்புக்கொண்டு சப்ளை செய்ததானியத்தின் கிரயத்திற்காக தாவாசெய்ததில் அந்த தானியமானது மாதிரிப்பிரகாரம் இல்லையென்று தீர்மானித்து பிராதை முற்றிலும் தள்ளுப்படிசெய்த கீழ்கோர்ட் உத்தரவின்பேரில் வாதி ஸி. பி. ஸி. 115-வது பிரிவின்படி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுதாகல் செய்தார். தானியத்தினுடைய மாதிரியைப்பற்றி விடப்பட்ட ருஜுபாகத்தைப்பற்றி தீர்ப்பில் வெகுவாய் ஆராய்ந்து சொல்லியும் சப்ளைசெய்த தானியத்தின் விலை மதிப்பு என்னவென்று தீர்மானித்து அம்மட்டிலாவது வாதிக்கு டிக்கிரீ யளிக்காதவிஷயமானது 115-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்கத்தக்க முக்கியமான ஒழுங்கீனமென்று சொல்லி வாதிக்கு உரிய மதிப்பின்படி டிக்கிரீ யளிக்கும்படி கீழ்கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது.

——:O:——

Messrs ஜஸ்டிஸ் சங்கரன்நாயர்
& ஜஸ்டிஸ் எய்லிங்

L. P. A. 3 of 1913-3
பிப்ரவரி 1914.

ஸி. பி. ஸி. ஆர்டர் 32, ரூல் 4-(3) இன்படி ஒருமைனருக்கு கார்டியன் நியமனம் செய்வதற்கு உத்தேசிக்கப்படுகிற கார்டியனுடைய சம்மதி அவசியமாகும். சம்மதியன்னியில் நியமனம்செய்யப்பட்டால் அது சட்டவிரோதமாகும். முதல் முதல் அவ்விதமான ஆக்ஷேபனையை மைனருக்காக ரிவிஷன் விண்ணப்பத்தில் க்ரௌண்டாக எடுக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

——:O:——

Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் &
ஜஸ்டிஸ் எய்லிங்

Crl Appeal No. 679 of
1913-2 பிப்ரவரி 1914.

ஜுரிகேஸில் லாபாயிண்டில்லாத பட்சத்தில் அப்பீலில் ஹைகோர்ட்டார் பிரவேசிக்கக்கூடாதென்ற பொது சட்டமிருக்க ஒரு கேஸில் எதிரியின்பேரில் ஏற்பட்ட ருஜுபாகமானது ஒரே சாட்சியின் வாக்குமூலமும் எதிரியால் அந்த சாட்சிக்கு எழுதியனுப்பப்பட்டதாகச் சொல்லப்பட்ட ஒரு கடிதமும் தவிர வேறொன்றும் கிடையாது. அந்தக் கடிதத்தை சாட்சி தான் பெற்றதாகப் சொன்னனேயொழிய அதில் எதிரி கையொப்பம் செய்ததையும் எதிரி அதை சாட்சிக்கு அனுப்பினதையும் ருஜுப்படுத்த யாதொரு அம்சமும் கிடையாதபடியால் எதிரி அந்தக் கடிதம் போலீஸ்ஸிருஷ்டனை என்று எதிர் வாதம் செய்த விஷயத்தில் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் அந்தக் கடிதத்தைப்பற்றி ஏற்பட்ட ருஜுபாகத்தைக் கொண்டு ஜுரிகளுக்கு வியாக்கியானித்தது பிசகென்றும் அதன்மேல் ஏற்பட்ட தண்டனையும் சட்ட விரோதமென்றும் தீர்மானிக்கப்பட்டது.



——:O:——

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்) Crl. R. Case No. 846 of 1913-5 பிப்ரவரி 1914.

ஒருவனைத் துன்பப்படுத்தவேண்டுமென்ற கருத்துடன் 6-எதிரிகள் அவனை அடித்ததில் ஒரு எதிரியால் கொடுந்துன்பம் ஏற்பட்டு 6-எதிரிகளும் சார்ஜ் கசய்யப்பட்டதில் அனைவரும் 325-வது பிரிவின்படி கொடுந்துன்பத்திற்காகவே குற்றஞ்சாட்டப்பட்டு அபராத தண்டனைமட்டும் விதிக்கப்பட்டார்கள். 325-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு காவல் தண்டனையும் அபராதமும் ஆகிய இருவகையான தண்டனை விதிக்கப்படவேண்டியதிருக்க அபராதம்மட்டும் விதிக்கப்பட்டது சட்டவிரோதமென்ற ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் ஹைகோர்ட்டாருடைய உத்திரவுக்காக ரிபர்செய்ததில் ஒரு எதிரியைமட்டும் கொடுந்துன்பத்திற்காக சார்ஜ்செய்து காவல்தண்டனை விதித்திருக்கவேண்டுமென்றும் மற்ற 5 எதிரிகளையும் 323-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டி காவல் அல்லது அபராதம் விதிக்கலாயக்குண்டென்று அபிப்பிராயப்பட்டார்கள். 19 மதராஸ் 283-ஐப்பார்க்கவும்-

——:O:——

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)
Crl. M. P. 36 of 1914-6 பிப்ரவரி 1914.

பிராமிஸரி நோட்டை சிருஷ்டனைசெய்ததாக ஒருவன் குற்றஞ்சாட்டப்பட்டு விஜாரணை நடக்கையில் அந்த நோட்டின்பேரில் எதிரி ஸிவில் கோர்ட்டில் தாவாசெய்தபொழுது அதில் கையொப்பம்வைத்த சாட்சிகள் அனுஸரணையாக சாட்சியம் சொன்னார்கள். அந்த சாட்சிகளையும் கிரிமினல் விஜாரணையில் எதிரிகளாய்ச் சேர்க்கப்பட்டு முதல் எதிரிக்கு உடந்தையாயிருந்ததாகக் கமிட்செய்யப்பட்டார்கள். கிரிமினல் புரொஸிஜர்கோட் 195-வது பிரிவின்படி அந்த சாட்சிகளையும் பிராஸிகியூஷன் செய்வதற்கு சாங்கிஷன் கொடுக்கப்படாதபடியால் அவர்களை கமிட் செய்தது சட்டவிரோதமென்று சொல்லி அதை ரத்துசெய்யவேண்டுமென்று ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் ஹைகோர்ட்டாருரிபர்செய்ததில் 25 மதராஸ் 671-யும், 15 கல்கத்தா வாரக்குறிப்புகள் 565-யும் அனுசரித்து ஒரு தாவாவில் பார்ட்டிகளல்லாதவர்களை ப்ராஸிகியூஷன் செய்வதற்கு சாங்கிஷன் அனுமதி அவசியமில்லையென்று ஹைகோர்ட்டார் அபிப்பிராயங் கொடுத்தார்கள்.

——:O:——

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.)

C. R. P. 622 of 1912-16 பிப்ரவரி 1914.:

B-என்பவன் ஒரு கேஸில் வாக்குமூலம் கொடுக்கவேண்டிய பிரதிபிரயோஜனத்திற்காக ஒரு பார்டி B-என்பவனுக்காக A-என்பவன் பேருக்கு B-என்பவனை சாட்சியாய்க் கோறிக்கொண்ட கக்ஷிக்காரன் பிராமிஸரிநோட் எழுதிக்கொடுத்ததில் அந்த நோட்டுக்கு பிரதிபிரயோஜனம் கிடையாதென்றும் B-என்பவன் சாட்சியாகக் கோறப்பட்டால் வாக்குமூலம் கொடுக்கவேண்டியது பொதுவான கடமையாகுமாதலால் அவ்விதமாய் சாட்சியம் சொல்வதற்காக பிரதிபிரயோஜனம் அடைவது சட்டவிரோதமென்றும் ஜனப்பொதுநலத்தின் கருத்துக்கு விருத்தமானமார்க்கமென்றும் தீர்மானித்து நோட்டையனுசரித்துக்கொண்டுவந்த பிராது தள்ளுபடி செய்யப்பட்டது.

——o——

C. R. P. 635 to 644 of 1912-16 பிப்ரவரி 1914

தஞ்சாவூர் ஜில்லாவைச்சேர்ந்த ஓர் அயன் கிராமத்தில் மூன்று வேலி நிலங்கள் மட்டும் இனும் நிலமாக ஏற்பட்டிருக்கிறவிஷயத்தில் அந்த இனும் நிலமானது எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்டின் கருத்துக்கிசைந்தபடி எஸ்டேட் நிலமாகச் சொல்லப்படக்கூடாது. அந்த நிலங்களின் தீர்வைபாக்கி விஷயமாய் ஸிவில் கோர்ட்டாருக்குரிய அதிகாரவரம்பு எடுபட்டுப் போகவில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. எஸ்டேட் கிராமத்தின் ஒரு பிர

த்தியேகமான பாகம் எஸ்டேட்டிலென்று சொல்லப்படலாமேயொழிய ரயட்வாரி கிராமத்தின் ஒரு பிறிந்த பாகத்தை எஸ்டேட்டாகச் சொல்லக்கூடாது.

---

(Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்)

### C. M. S. A. 29 of 1913–17 பிப்ரவரி 1913.

டிக்கிரீபாக்கிக்காக எழுத்துமூலமாய்க் கொடுத்த நிறைவேற்று விண்ணப்பத்தில் சொத்தை ஜப்திசெய்ய வேண்டுமென்றும் எதிரியை அரஸ்ட்செய்யவேணடுமென்றும் இருவகையான உத்தரவுகளைக் கோறினதில் விண்ணப்ப ஈரங்கிதேதியில் கோர்ட்டார் வாரண்டுக்குமட்டும் உத்தரவளித்தார்கள். அந்தத்தடவையில் டிக்கிரீதுகை வசூலாகாதபடியால் வாதி மேற்கூறிய விண்ணப்பத்தேதியிலிருந்து மூன்றுவருஷங்களுக்குப்பின்னும் ஆனல் வாரண்டுக்கு உத்தரவானதேதியிலிருந்து 3-வருஷங்களுக்குள்ளாகவும் வேறு நிறைவேற்று மனு கொடுத்ததில் அந்த மனு காலாவதி தோஷமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. முந்திய விண்ணப்ப ஈரங்கிகாலத்தில் வாரண்டுக்கு உத்தரவானபொழுது வாதி அச்சமயத்தில் வாய்மொழியாய் வாரண்டுக்காக விண்ணப்பம்செய்து கொண்டதின்பேரில் அந்த உத்தரவு பிறந்ததாக யூகிக்க நியாயமுண்டென்றும் ஆகவே அந்தவாய்மொழி விண்ணப்பத்தேதியிலிருந்து கணித்தால் பிந்திய தாவா விண்ணப்பம் சாலாவதியாகாதென்று தீமானிக்கப் பட்டது. [இருவகையான உத்தரவையும் ஒரே தடவையில் கோர்ட்டார் அளிக்கப்பிரியப்படாமல் எதாகிலும் ஒன்றுக்குமட்டும் உத்தரவுகொடுக்க இஷ்டப்பட்டு வாதியை கேட்டு அவர் வாரண்டுக்கு உத்தரவளித்தால் போதுமென்று சொல்லிக்கொண்டால் அவ்விதமாய்க் கேட்டுக்கொண்டதை வாய்மொழியான விண்ணப்பமாக யூகிக்கத் தக்கதாகுமென்று. இந்தகேசின் சந்தர்ப்பங்களை அனுமானிக்கவேண்டும்.]

---

மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

### C. R. P. 819 of 1912-17 பிப்ரவரி 1914.

சட்டப்படி பிராமிஸரி நோட்டின் பாக்கித்தொகை யாருக்குச் செலுத்தப்படவேண்டுமென்று நோட்டில் குறிப்பிட்டிருக்கிறதோ அவராகிலும் அல்லது நோட்டை உடையவரும் ஷை நோட்டின் பாக்கிக்காக தாவா செய்யலாமென்று ஏற்பட்டிருக்கிறது. தாவா நோட்டானது ஒருகூட்டுவர்த்தகத்தில் பங்காளியாகிய ஒருவன் பெயருக்கு எழுதிக்கொடுத்ததில் ஷை யானுடைய பெயருக்குமுன் வர்த்தகக்கம்பெனியின் விலாஸமாகியதலைமையெழுத்துக்களையும் குறிப்பிட்டிருந்தன. [அ-ள-ரூ அருணுசலஞ்செட்டியாருக்கென்று எழுதியிருந்தது. அ-ள-ரூ-அ-என்பது கம்பெனியின் விலாஸமாகிறது.] அவ்வித நோட் கம்பெனிக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதாக பாவிக்கப்படவேண்டுமோ அல்லது அந்தப்பங்காளியின் தனிமையான சொந்த லேவாதேவியைப் பற்றிய நடவடிக்கையாவென்று தீர்மானிக்க வர்த்தகத்தின் முறைகளையும் சம்பிரதாயங்களையும் கவனிக்கவேண்டும். [முன்பின் பிறந்த கம்பெனியிலுள்ள நோட்டுகளையும் மற்ற வர்த்தகாகளுடைய வழக்கத்தையும் கண்டறிந்து தீமானமடைய வேண்டியது போலாகும்.]

———:O:———

Messrs சீல் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஓல்ட்வீல்ட்

### C. C. A. 30 of 1912-17 பிப்ரவரி 1914

பணங்கள் இறக்குவதற்காக ஒப்பந்தம் செய்துகொள்ளுகிற குத்தகைச்சீட்டை அசையாப்பொருளைப் பற்றிய நடவடிக்கையாக நிதானித்து ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட் 2, 17-வது பிரிவுகளின்படி ரெஜிஸ்டர் செய்யவேண்டியதில்லையென்றும் அந்த நடவடிக்கை ஜங்கம சொத்தைப்பற்றியதாக பாவிக்கப்படவேண்டுமென்றும் ஆகையால் குத்தகைச் சீட்டானது ரெஜிஸ்டராகத் தேவையில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

### C. R. P. 915 of 1912-20 பிப்ரவரி 1914.

ஒருவன் எழுதிக்கொடுத்த பிராமிஸரி நோட்டின்பேரில் அவன் காலஞ்சென்றபிறகு அவனுடைய அவிபக்த சகோதரன்பேரிலும் பெண்சாதியின்பேரிலும் நோட்டின் பாக்கிக்காக தாவா செய்தால் இறந்துபோனவனுடைய பிரத்தியேகமான சொத்துக்கள் எதாகிலும் ஷை-யானுடைய வாரிஸ்களின் கையிலிருப்பதாய் ருஜூப்படுத்தினாலொழிய அந்த வாரிஸ்களின்பேரில் டிக்கிரீயளிக்க நியாயமில்லை. நோட் பிறந்தது வாஸ்தவமாக யிருந்தபோதிலும் அவ்வித ருஜூபாகமில்லாவிடில் தாவா டிஸ்மிஸ் செய்யப்படவேண்டியதாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.



———:O:———

Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாட்ஜீ

### S. A. 1570 of 1911-20 பிப்ரவரி 1914.

வாதி தனக்கு 1-ம் பிரதிவதியால் எழுதிக்கொடுக்கப்பட்டிருந்த அடமானத்தை துரைசாமி அய்யங்கார் என்ற ஒருவருக்கு மேடோவர் செய்துவிட்டு அதைப்பற்றி 1-ம் பிரதிவாதிக்கும் நோடீஸ் கொடுத்த பிறகு தன்னை மோசம் செய்தும் பலவந்தமாயும் துரைசாமி அய்யங்கார் மேடோவர் எழுதி வாங்கிக்கொண்டதாக வாதி பிரதிவாதிக்கு 2-வது நோட்டிஸகொடுத்து அந்த மேடோவர் பத்திரம் தன்னைக் கட்டுப்படுத்தாதென்று சொல்லித் தெரிவித்தார். இதற்கிடையில் பிரதிவாதி 1-வது நோடீஸை அனுசரித்து அடமான சொத்தை வேறொரு மூன்றுவது மனிதனுக்கு சுவாதீன அடமானம் வைத்து அந்தத் துகையில் மேடோவர் பிரகாரம் துரைசாமி அய்யங்காருக்குச் சேரவேண்டிய பாக்கித் துகையைக் செலுத்திவிடும்படி ஏற்பாடு செய்ததில் அதேவிதமாக துரைசாமி அய்யங்கார் துகை பெற்றுக்கொண்டுவிட்டார். அதற்குப்பின் கொடுத்த 2-வது நோடீஸை அனுசரித்து வாதி துரைசாமி அய்யங்கார் பேரில் ஷை மேடோவர் பத்திரம் தன்னைக் கட்டுப்படுத்தாதென்று தீர்மானிக்கும்பொருட்டு டிக்லேரேஷன் தாவா செய்து டிக்கிரீ பெற்றபின் வாதி பிரதிவாதியின்பேரில் அடமானக்கடனை வசூலிக்கும் பொருட்டு அசல் தாவாசெய்ததில் ஜில்லா கோர்ட்டார் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் அதே அபிப்பிராயப்பட்டு மேடோவர் ரத்தாகுமுன் அடமான பாத்தியதை துரைஸாமி அய்யங்காருக்கு மாறிவிட்டபடியாலும் அந்த டிக்கிரிக்கு முன் துரைசாமி அய்யங்கார் துகையைப் பெற்றுக்கொண்ட படியாலும் அந்த நடவடிக்கைகளுக்கு வாதி கட்டுப்படவேண்டியதாகுமென்று தீர்மானித்தார்கள்.

———:O:———

Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்

### S. A. 1618 of 1912-19 பிப்ரவரி 1914.

சட்டப்படிக்கு ஒரு ஜாதிவகுப்பினர் நீடிய அனுபோகத்தால் ஜாதிப்பொதுவான சொத்து பாத்தியதையை அடைய லாயக்குண்டு. அனுபோகமானது ஜாதியார் எல்லோருடையதுமாயிருக்கவேண்டியதவசியமில்லை. ஜாதியார் எல்லோருக்குமாக ஒருவன் அனுபவித்து வந்தபோதிலும் போதுமானதாகும்.

———:O:———

### S. A. 262 of 1912-19 பிப்ரவரி 1914.

ஒரு மிராசுதார் வாரக் குத்தகைக்கு நிலச் சாகுபடியை ஒப்படைத்திருந்த விஷயத்தில் அறுவடையான தேதியிலிருந்து மூன்று வருஷங்கள் கடந்தபின் மாகுல் விகிதத்திற்காக தாவா செய்ததில் எதிரி 1-ம் பசலியின் கடைசியில் அறுவடை செய்யாமல் மிராசுதாருடைய சம்மதமன்னியில் முன்னடியே அறுவடை செய்து மாகுல் முழுவதையும் எடுத்துக்கொண்டுபோனது பிசகானலும் ஒப்பந்தத்தின்படி வாதி அறுப்புக்களத்திலேயே அறுவடையான உடன் வார விகிதத்தை அடையவேண்டியதாயிருக்க அப்படிச் செய்யத்தவறினால் அதற்காக தாவா அறுவடையான தேதிமுதல் மூன்று வருஷங்களுக்குள் கொண்டுவரப்படவேண்டுமென்று சொல்லி இந்த தாவா காலாவதி தோஷமென்று தீர்மானிக்கப்பட்டது. காலாவதி அறுவடையான தேதியிருந்து கணிக்கப்படவேண்டுமேயொழிய அறுவடையாகவேண்டிய தேதியிலிருந்ததல்லவென்று இதனால் ஏற்படுகிறது.

———:O:———

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

### C. R. P. of 1911-19 பிப்ரவரி 1914.

ஒரு இனும்தார் தனக்கு மேல்வார பாத்தியதையும் குடிவார பாத்தியதையும் உண்டென்ற காரணத்தையிட்டு டெனெண்டுகளை வெளிப்படுத்தும் பொருட்டு ஸிவில் கோர்ட்டில் இஜக்ட்மெண்டு தாவா செய்தார். இனும்தாருடைய பாத்தியதையை ...... ருஜூப்படுத்த கிராண்டின் ஷரத்துக்கள் இன்னவிதமென்று ஏற்படாதபடி

யால் கீழ்கோர்ட்டார் இனும்தாருக்கு மேல்வார பாத்தியதைமட்டும் உண்டென்று சட்டப்படி ரூபிக்கவேண்டியதாகுமென்று சொல்லி ஆகையால் டெனெண்டனுடைய குடிவார பாத்தியதையை நிராகரித்து அப்புறப்படுத்துவதற்கு ரெவினியூ கோர்ட்டில் தாவா செய்யவேண்டுமென்று கீழ்கோர்ட்டார்பிராதைத் தள்ளுபடிசெய்துவிட்டார், அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் தாகல்செய்ததில் (1910) வாரக் குறிப்புகளின் 639-யும் 9 மதராஸ் லா டைம்ஸ் 360-யும் அனுசரித்து குடிவாரபாத்தியதையுடையவருக்கே இனும் கிராண்ட் அளிக்கப்படவில்லையென்று ருஜுப்படுத்தவேண்டிய பொறுப்புடெனெண்டைச்சேர்ந்ததாகுமென்றும்பிரதிவாதியாகிய டெனெண்டானவர்எதிர் ஆன்ஸரில்கிராண்டுக்குமுன் தாவா நிலங்கள்நிரந்தரமாகசாகுபடியில்லாமல் தரிசாகக்கிடந்ததாய் ஒப்புக்கொண்டபடியால் கிராண்டின்படிக்கு இனும்தாருக்கு இருவகை வாரபாத்தியமும் அமைந்ததாக நிதானிக்கப்படவேண்டுமென்றும் ஆகையால் இந்த வாதியின் தாவா ஸிவில்கோர்ட்டில் நடத்தலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———o———

*மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்*

### C. R. P. 333 of 1913—18 பிப்ரவரி 1914.

பவர்பெற்ற ஒரு எஜண்டு எஜமானுக்காகக் கோர்ட்டில் நடவடிக்கை நடத்த வேண்டுமானால் ஸிவில் ரூல்ஸ் ஆப் பிராக்டிஸில் ஏற்பட்டிருக்கிற முறைகளின்படி பவரை கோர்ட்டில் ஆஜர் செய்து எஜமானுக்காகத்தான் நடத்துவதாய் கோர்ட்டாருடைய அனுமதியடைய வேண்டுமென்றும் இன்னும் வெவ்வேறு வகையிலும் முறை ஏற்பட்டிருக்க அவ்விதமுறைகளை அனுசரியாமல் ஒரு எஜண்டானவன் எஜமானுக்காக நிறைவேற்று விண்ணப்பம் தாகல் செய்ததில் அவ்வித விண்ணப்பத்தை மேல்நடத்தக் கூடாதபோதிலும் பின்னால் நடத்தப்படும் நிறைவேற்று நடவடிக்கைகளுக்கு அந்த எஜண்டின் விண்ணப்பமானது காலாவதி பலத்தைக் கொடுக்கிறதாகுமென்று தீர்மானிக்கப்பட்டது. பிந்திய விண்ணப்பத்தின் காலாவதியை கணிப்பதற்கு அது உதவக்கூடியதாகும்.

———o———

### C. R. P. 668 of 1913—18 பிப்ரவரி 1914.

ஸி. பி. ஸி. ஆர்டர் 9-ரூல் 4-இன்படி பிரதிவாதிக்கு சம்மன்ஸ்படி கட்டாத காரணத்தாலாவது அல்லது கேஸை விஜாரிக்கிறபொழுது வாதி ஆஜராகாமற் போனாலும் கோர்ட்டார் ரூல் 2-3-ஐ அனுசரித்து பிராதை டிஸ்மிஸ் செய்தால் வாதி சரியான காரணங்களையும் சந்தர்ப்பங்களையும் தவறிப்போனதற்காக எடுத்துக்காட்டும்பட்சத்தில் அதே வியவகாரத்தைப்பற்றி புனர்வியாஜ்ஜியம் தொடக்கலாம் அல்லது பழய பிராதைத் திரும்பவும் பயிலுக்கெடுத்து விஜாரணைசெய்யலாமென்றிருக்கிறது. ரூல் 8-இன்படி வாதி ஈரங்கிகாலத்தில் ஆஜராகாமல் பிரதிவாதி மட்டும் ஆஜராகி பிராதின் அம்சத்தை ஒப்புக்கொண்டால் வாதிக்கு டிக்கிரீயளிக்க வேண்டியதாகும். அல்லது பிராதின் ஒரு பாகத்தைமட்டும் ஒப்புக்கொண்டால் அம்மட்டில் டிக்கிரீயளித்து மற்றப்படி ஒப்புக்கொள்ளாத அம்சங்களைப்பற்றி பிராதை செலவுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும். அப்படித்தள்ளுபடியாகி ஏற்பட்ட டிக்கிரீக்குப்பின் அதேவழக்கை வாதி வேறு பிராதில் நடத்தக்கூடாது. ஆனால் தகுந்த காரணங்களிலிருந்தால் கோர்ட்டார் பழய பிராதை மறுபடி பைலுக்கு எடுத்து மறுவிஜாரணை செய்யலாம். அதைப்பற்றி எதிரிக்குத்தகவலன்னியில் யாதொரு உத்தரவும் செய்யக்கூடாது. அப்படியிருக்க கோர்ட்டார் ஒரு கேஸை விஜாரணைக்கு எடுக்கும்பொழுது வாதி ஆஜராகாமல் வாதி வக்கீல்மட்டும் ஆஜராகி வாய்தா வேண்டுமென்று கேட்டதற்கு கோர்ட்டார் ஈரங்கியை மாற்றிவைக்காமல் வாதி ஆஜராகவில்லையென்று ரிகார்டு செய்து வக்கீலும் கேஸை நடத்தத்தயாராயிராதபடியால் பிராதை டிஸ்மிஸ்செய்ததில் கோர்ட்டார் பிரதிவாதிக்கனுகூலமாக டிக்கிரீயளித்த போதிலும் கோர்ட்டார் ஷை பிராதை மறுபடியும் பைலுக்கெடுத்து விஜாரணை செய்ய அதிகாரவரம்புண்டென்றும் தீர்மானிக்கப்பட்டது. பிராதை டிஸ்மிஸ் செய்த உத்தரவானாலும், ஜட்ஜமெண்டின்படி பிறந்த டிக்கிரீயளிக்கப்பட்டிருந்தாலும் கோர்ட்டார் பிராதைத்திரும்பவும் விஜாரணைசெய்யலாமென்று ஏற்படுகிறது.

——— :O: ———



*மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்*

### S. A. 924 of 1913-17 பிப்ரவரி 1914.

1-ம் பிரதிவாதி, வாதியின்பேரில் பெற்றிருந்த டிக்கிரீயை 3-ம் பிரதிவாதிக்கு மேடோவர் செய்யவே 3-ம் பிரதிவாதி வாதியிடம் ரூ. 170 பெற்றுக்கொண்டு டிக்கிரீ பூராவும் தீர்ந்ததாக ரசீது எழுதிக்கொடுத்தார். ஆனால் டிக்கிரீ செல்லனதாக கோர்ட்டில் ரிகார்ட்டாகாத காரணத்தால் 1-ம் பிரதிவாதி டிக்கிரீயை நிறைவேற்றி வாதியிடம் ரூ. 400 போல வசூலித்துவிட்டார். வாதி அதன்பேரில் தன்னிடத்திலிருந்து அக்கிரமாக வசூலிக்கப்பட்ட தொகையைத் திரும்பியடையும் பொருட்டு நஷ்டப் பிராதுசெய்தார். நிறைவேற்று நடவடிக்கைகளில் ஏற்படும் தகராரை ஸி.பி.ஸி, 47-வது பிரிவின்படி அந்த நடவடிக்கையிலேயே தீர்மானிக்கவேண்டியதென்றும் அவ்வித ஆக்ஷேபனையை வேறு பிராதில் சொல்லிக்கொண்டு பரிகாரம் தேடக்கூடாதென்றும் விதிக்கப்பட்டிருந்த போதிலும் இந்தப் பிராதுக்கு ஸி. பி ஸி 47-வது பிரிவு பாதிக்க நியாயமில்லை. மோசமான நிறைவேற்று நடவடிக்கையால் நேர்ந்த நஷ்டத்தை வசூலிப்பதற்காகக் கொண்டுவந்த இந்தப்பிராதுக்கு 47-வது பிரிவின் அம்சங்கள் செல்லத்தக்கதல்ல.

———:O:———

*மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர்*

கோதாவரி ஜில்லா

### Crl R Case 103, Crl R P 95 of 1913

### 24 அக்டோபர் 1913.

*மஞ்சி பைதிகாடு Vs காதிம்ஸட்டி தம்மப்பா.*

பித்தபுரம் 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட் முன்பாக வாதிக்குச் சொந்தமான ஓர் குளத்தில் மீன் பிடித்த எதிரிகளைத் திருட்டுக் குற்றஞ்சாட்டி வாதி தன்னுடைய குளத்திலுள்ள தனக்குச் சொந்தமான மீன்களை எதிரிகள் திருடிப்போனதாகப் பிராது கொடுத்தார். சப் மாஜிஸ்டிரேட்டாரவர்களும் அதன்மேல் ரிவிஷனில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரவர்களும் மீன்கள் வாதிக்குச் சொந்தமானதாகச் சொல்ல நியாயமில்லையென்றுசொல்லி வாதியின் திருட்டுப் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாகல் செய்ததில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரைவர்கள் கொடுத்த அபிப்பிராயமாவது:— எதிரிகள் மீன்பிடிக்கும் காலத்தில் குளத்திற்குளிருந்த மீன்கள் மதகுப் பலகை வழியாய் வெளியிற்செல்ல மார்க்கமில்லை. ஏனெனில் அக்காலத்தில் மதகுபலகைகள் அடைப்பட்டிருந்தன. ஆகையால் அச்சமயத்தில் குளத்திலுள்ள மீன்கள் வாதியின் சுவாதீனத்திலிருந்தபடியால் வாதியின் சொத்துக்களென்று சொல்வது நியாயமாகும். காட்டுப்பறவை கூட்டிலடைப்பட்டிருக்கின் கூட்டுவாசல் அடைப்பட்டிருக்குமட்டும் பறவைகள் வெளியில் செல்லக்கூடாதபடியால கூட்டிலிருக்குமட்டும் பறவைகள் வேடன் சொத்தாகவே பாவிக்கப்படவேண்டியதாகுமல்லவா? கூட்டுவாசலைத்திறந்துவிட்டால் வெளியில் போய்விடக்கூடிய விஷயம் கூட்டிலிருக்குமட்டும் சொந்த பாத்தியதைக்கு விரோதமாக ஏற்பட நியாயமில்லை. ஆகவே வாதியின் திருட்டுப் பிராதைத் தள்ளுபடி செய்தது பிசகென்று தீர்மானித்து கேஸை பயிலுக்கெடுத்து சட்டப்படி விஜாரித்துப் பைசலளிக்கும்படி சப் மாஜிஸ்டிரேட்டாரவர்களுக்கு உத்தரவளிக்கப்பட்டது.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

திருச்சிறுப்பள்ளி ஜில்லா.

### C. M. A. No. 229 of 1912

### 21 நவம்பர் 1913

*பழனியாண்டி பிள்ளை Vs பாப்பாத்தியம்மாள்*

1-ம் வாதி பழனியாண்டிபிள்ளையின்பேரிலும் அவருடைய மைனர் சகோதரர்கள்பேரிலும் ஜாயிண்டாகப் பிறந்த 1905-ம் வருஷத்திய டிக்கிரீயை 1912-இல் நிறைவேற்றுவதற்காகக் கொடுத்த விண்ணப்பத்தைத் திருச்சிறுப்பள்ளி ஜில்லா கோர்ட்டார் எதிரிகளின் ஆக்ஷேபனையின்பேரில் காலாவதி தோஷமானதென்று தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யவே ஜில்லா கோர்ட் அபிப்பிராயம் மாற்றப்பட்ட தீர்மானத்தின் முக்கிய அம்சங்களாவன:— வாதி இதற்குமுன் ஒரு நிறைவேற்றுமனு தாகல்செய்து அதில் எதிரி

காலாவதி தோஷமென்றும் ஆக்ஷேபித்த உடன் வேறு மனு செய்துகொள்ள அனுமதி யாதொன்றும் பெற்றுக்கொள்ளாமல் அந்த விண்ணப்பத்தை வாதி உவித்டிரா செய்துகொண்டபடியால் திரும்பவும் நிறைவேற்று விண்ணப்பம் கொடுக்கக் கூடாதென்று வி. பி. வி. ஆர்டர் 23-ரூல் 3-ஐ அனுசரித்து ஜில்லா கோர்ட்டார் தீர்மானமடைந்திருக்கிறார்கள். ஆனால் ஒருவன் ஒரு தாவாவை உவித்டிரா செய்யும்பொழுது பின்னால் அதைப்பற்றி வேறு தாவா கொண்டுவர அனுமதி பெற்றிருக்கவேண்டிய நிபந்தனையானது நிறைதுவற்று நடவடிக்கைகளுக்கு ஏற்றதல்லவென்று ஆர்டர் 23-ரூல் 4-இல் பரிஸ்காரமாய் விதிக்கப்பட்டிருக்கிறபடியால் ஜில்லா ஜட்ஜியவர்களுடைய அபிப்பிராயம் பிசகென்று சொல்லவேண்டும். ஆகவே தாவா விண்ணப்பம் சட்டவிரோதமல்ல. காலாவதி பாயிண்டைப்பற்றி கவனிக்குமிடத்து ஜில்லா ஜட்ஜியவர்கள் 1877-ம் வருஷத்திய காலாவதி ஆக்ட் 8-வது பிரிவின் அம்சங்களை அனுசரித்து ஏற்பட்ட (1902)-ம் வருஷத்திய 25 மதராஸ் 431-இல் பிரசுரமாகியிருக்கிற தீர்மானத்தை ஆதாரமாகக்கொண்டு மைனர் வாதிகளுக்காக மேஜர் வாதி டிக்கிரீ பூராவுக்கும் செல்லுவைக்க அதிகாரமிருக்கும் சந்தர்ப்பத்தில் மேஜர் வாதியின் நடவடிக்கையானது மற்ற மைனர் வாதிகளையும் காலாவதி பாயிண்டுக்காகக் கட்டுப்படுத்துமென்று அபிப்பிராயப்பட்டு தாவா விண்ணப்பம காலாவதியென்று தீர்மானித்தார்கள். ஆனால் பழைய காலாவதி ஆக்ட் 8-வது பிரிவின் அம்சம் நிறைவேற்று மனுக்களுக்கு அமைக்கப்படவில்லை. ஆகவே 25 மதராஸ் தீர்மானத்தை அனுசரிக்க நியாயமில்லை. 1908-ம் வருஷத்திய காலாவதி ஆக்ட் 7-வது பிரிவின் அம்சங்கள் பழைய ஆக்ட் 8-வது பிரிவுக்குச்சரியாக ஏற்பட்டு அவைகள் நிறைவேற்று மனுவுக்கும் செல்லத்தக்கதாகுமென்றாலும் மேஜர் வாதி அவிபக்த குடும்பத் தலைவனாகயிருந்தால் மைனர் வாதிகளுக்காக டிக்கிரீயைச் செல்லுவைக்க அதிகாரமுடையவனாகலாம். தாவா விண்ணப்பத்தில் வாதி தானும தன்னுடைய சகோதரர்களும் தகப்பனும் விபக்தர்களாய்விட்டதாகவும் மைனர் வாதிகளுக்கு டிக்கிரீயில் மூன்றில் இரண்டு பங்குவிகிதமுண்டென்றும் கண்டிருப்பதால் ஜில்லா ஜட்ஜியவர்கள் பாகமான விஷயத்தைப்பற்றி விஜாரணைசெய்து மைனர்களுக்காக மேஜர் வாதி செல்லுவைக்க அதிகாரமுண்டாவெனத் தீர்மானித்துக் காலாவதி பாயிண்டைப்பற்றி அபிப்பிராயம் கொடுக்கவேண்டியதாகுமென்று சொல்லி மேற்கூறிய அபிம்பிராயத்தைக் கவனித்து சட்டப்படி மனுவை விஜாரித்து மைனர்களுக்கு மூன்றில் இரண்டு பங்கு எப்படியாகுமென்றும் பாகமானது வாஸ்தவமாவென்றும் இரண்டு மைனர்களுஞ்சேர்ந்து பாகமடைவதா, அல்லது சமபாதியாக அடைபவதா வென்றும், சகல சொத்துக்களைப்பற்றியும் பாகப் பிரிவினை தாரதம்மியப்படி ஏற்பட்டிருக்கிறதா வென்றும் விஜாரணை செய்து தீர்மானித்து காலாவதி பாயிண்டைப் பைசல்செய்து உத்தரவளிக்க வேண்டுமென்று ஜில்லா கோர்ட்டாருக்குக் கட்டளையிடப்பட்டது.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ)

ராமனுதபுரம் ஜில்லா

C. M. A. 152 of 1912-9 டிசம்பர் 1913.

வெள்ளையப்ப செட்டி Vs வீரப்பசெட்டி

வாதி ராமனுதபுரம சப்கோர்ட்டில் செய்த பாகவியாஜ்ஜியத்தில் 1-ம் பிரதிவாதிக்கு அனுப்பின சம்மன்ஸ் கதவிலொட்டப்பட்டு அவர்கள் ஊரிலில்லையென்ற தகவல் அமீனு ரிட்டர்னில் கண்டிருந்தது. கோர்ட்டார் 1-ம் பிரதிவாதியை எக்ஸ்டார்டியாகத தீர்மானித்து வாதி கோறியபடி பிரதம டிக்கிரீயளித்தார்கள். பிரதிவாதி தனக்கு சம்மன்ஸ் நேரில் சர்வாக யில்லையென்றும் ஆகையால் எக்ஸ்பார்டி டிக்கிரீயை மாற்றவேண்டுமென்றும் சப்கோர்ட்டாரிடம் கொடுத்த விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்யவே எதிரிகள் ஹைகோர்ட்டில் மனு அப்பீல் செய்தார்கள். ஹைகோர்ட் உத்தரவின் சுருக்கமாவது:— அமீனுரிட்டர்னில் பிரதிவாதி ஊரிலில்லாமலிருக்கையில் எங்கேபோயிருக்கிறாரோ அதை விஜாரித்து நேரில் சர்வ்செய்யப் பிரயத்தனப்படவேண்டியதிருக்க அவரை எக்ஸ்பார்டியாக கோர்ட்டார் தீர்மானித்தது பிசகென்றுசொல்லி 24 அலகபாத் 302-யும், 29 மதராஸ் 324-யும் எடுத்துக்காட்டி சப்கோர்ட்டார் உத்தரவை மாற்றவேண்டுமென்று வாதிக்கபபட்டது. வாதியோ தாவா செய்த உடனே சொத்துக்களை உடன் ஜப்திசெய்த விண்ணப்ப நோடீஸ் எதிரிகளுக்கு நேரில் ஸர்வாகியிருக்க அவர்களுக்கு பாகவியாஜ்ஜியம் செய்யப்பட்ட தகவல் பரிஷ்காரமாய்த் தெரியுமென்றும் ஆகையால் எக்ஸ்பார்டி உத்தரவு சரியானதென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது. சப்கோர்ட்டார் ஈரங்கிகாலத்தில "1, 2, 5, 6, பிரதிவாதிகள் ஆஜரில்லை. அவர்கள் எக்ஸ்பார்டி" என்று கண்டிருந்தபடியால் அவர்களுக்கு சம்மன்ஸ் சரியானபடி (சட்டப்படி) சர்வாச்சுதென்று தீர்மானித்து அவ்விதமான வசனங்களை ரிகார்டுசெய்ததாக அனுமானிக்க வேண்டியதாகும். ஆர்டர் 9-ரூல் 13-இன்படி சம்மன்ஸ் சரியானபடி சர்வாகவில்லையென்று எதிரி ருஜுப்படுத்தினால் எக்ஸ்பார்டி டிக்கிரீயை ரத்தாக்கத் தக்கதாகுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அமீனு ரிட்டர்னில் கண்ட விஷயம் வாஸ்தவமென்று எடுத்துக்கொண்டபோதிலும் 21 - மதராஸ் 419-யும், 29 மதராஸ் 324-யும் அனுசரித்து எதிரிகளுக்கு சம்மன்ஸ் சரியானபடி சர்வாகயில்லையென்றே அபிப்பிராயப்படவேண்டும். ஆகையால் 1-ம் பிரதிவாதி எக்ஸ்பார்டி உத்தரவை மாற்றும்படி கேட்டது நியாயமாகும். ஆகவே 1-வது பிரதிவாதியின் பேரில் சப் கோர்ட்டார் அளித்த எக்ஸ்பார்ட்டி டிக்கிரீமட்டும் மாற்றப்பட்டது. ஆர்டர் 9-ரூல் 13-இன்படி எதிரி இந்த மனு அப்பீலில் ஜெயமடைந்த போதிலும் ஜப்திநோடீஸ் நேரில் சர்வாகியிருக்க கேசின் ஈரங்கிதேதியில் எதிரி ஆஜராகி எதிர் வழக்காடக்கூடாதபடி யாதொரு திருப்திகரமான காரணமில்லையென்று சொல்லி எதிரிக்குச்செலவுதுகையைப்பற்றி உத்தரவில் யாதொரு பரிகாரமும் கொடுக்கப்படவில்லை.

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்ட்)

தஞ்சாவூர் ஜில்லா.

Crl R. Case 419 & Crl R. P 337 of 1913-
5 டிசம்பர் 1913.

அண்ணாமலை உடையார் வகையரா-மனுதார்

மனுதார் வகையராக்கள் வலங்கிமான் சப் மாஜிஸ்டிரேட்டாரவர்களால் C. C. No. 83 of 1913-இல் வாதிக்கு பாத்தியப்பட்ட நெல்லைத் திருடிக்கொண்டுபோய் விட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு தண்டனையடைந்தார்கள். கும்பகோணம் 1-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் அப்பீலில் அந்தத்தீர்ப்பைக் காயப்படுத்தினதின் பேரில் எதிரிகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு தாகல் செய்தார்கள். கீழ்கோர்ட் தீர்ப்புகள் ரத்தாகி எதிரிகள் விடுதலை செய்யப்பட்டதில் ஹைகோர்ட்டார் சொன்ன காரணங்களாவன:— திருட்டுப்போகுமுன் நெல் வாதிக்கும் வாதியினுடைய குத்தகைதாரனாகிய 1-வது எதிரிக்கும் பொதுவான சுவாதீனத்திலிருந்ததாக இரண்டு கீழ்கோர்ட்டாராலும் நம்பப்படுகிறது. அவைகள் அறுவடையாகி 1-வது எதிரியின் வீட்டுப் பிழக்கடையில் குவியலாகக் கொட்டி வாதியினுடைய சீல் அடையாளம் அந்தக்குவியலின் மேல் குறிக்கப்பட்டிருந்ததால் அந்த நெல் வாதியின் சுவாதீனத்திற்கு அத்தாட்சியாகிறது. A ஆதரவில் 1-வது எதிரி ஷை நெல் தன்வசம் தன் பிழக்கடையிலிருப்பதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறதாக ஏற்படுகிறது. அந்த A-ஆதரவின் அம்சங்களைக் கவனிக்காமல் கீழ்கோர்ட்டார் வாதியின் அடையாளத்தைமட்டுமே முக்கியமாய்யோஜித்து வாதியுடைய நெல் 1-வது எதிரியாலும் அவருக்குதவியான மற்ற எதிரிகளாலும் திருடிக்கொண்டு போகப்பட்டதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். 26 மதராஸ் 48-1இல் தீர்மானித்திருக்கிறபடி குத்தகைக்காரன் எஜமானுக்கு குத்தகைநெல் விகிதத்தை அறுவடையான நெல்லிருந்து பிறித்து அளந்து கொடுக்குமட்டும் அந்த நெல் குத்தகைக்காரன் வசமிருப்பதாகவே பாவிக்கப்படவேண்டியதாகும். அதேவிதமாக 1-வது எதிரியின் வசத்தில் இந்தக்கேசில் சொல்லப்பட்ட நெல் இருந்ததாக என் நிதானிக்கக்கூடாது. அப்படி யோஜித்தால் திருட்டுக்குற்றம் சாட்ட நியாயமில்லை. சர்க்கார் வக்கில் 1-வது எதிரியின்பேரில் வேறுவிதமான குற்றஞ்சாட்ட சாத்தியமுண்டென்று சொல்லவுமில்லை. ஆகையால் எதிரிகளின் தண்டனை ரத்தாகவேண்டியதென்று தீர்மானமாச்சுது.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

கோதாவரி ஜில்லா

## L. P. A. No. 37 of 1913

25 நவம்பர் 1913

பெனுமர்தி வெங்கடராயுடு *Vs* ரெட்டி சுப்பம்மா

ராஜமகேந்திரபுரம் சப் கோர்ட்டில் வாதி கொடுத்த 1911-ம் வருஷத்திய அசல் நம்பர் 46-இல் பிரதிவாதியின் ஸ்டேட்மெண்டு தாகலான பிறகு பிராதில் சில அம்சங்களை சீர்திருத்த வேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டதற்கு சப் கோர்ட்டார் அனுமதி கொடுக்காதபடியால் ஹைகோர்ட்டுக்கு வாதி ரிவிஷன் மனு தாகல் செய்ததில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்கள் C. R. P. 68 of 1912-10 பிப்ரவரி 1913-இல் வாதி கோறியபடி சப் கோர்ட்டார் பிராதைத் திருத்திக்கொடுக்க அனுமதி கொடுத்திருக்கவேண்டிய தவசியமாயினும் அவ்வித அனுமதி கொடுக்காத விஷயத்தைப்பற்றி வாதிக்கு சப் கோர்ட்டார் தீர்மானத்தினால் அநீதி ஏற்படும் பட்சத்தில் அப்பீலில் அதை ஒரு க்ரௌண்டாக எடுத்துச் சொல்லி நியாயமடைய முடியுமாயிருப்பதால் 115-வது பிரிவின்படி ஹைகோர்ட்டார் இடையில் பிரவேசிக்க அதிகாரமில்லையென்று தீர்மானித்து ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்ததில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்களுடைய அபிப்பிராயம் சரியென்று லட்டர்ஸ்பேடெண்டு அப்பீலும் தள்ளுபடியாச்சுது.

ஸி. பி. ஸி ஆர்டர் 6-ரூல் 17-இன் பின்பாகத்தில் குறித்திருக்கிற வசனங்களால் கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டிய இருகக்ஷியினுடைய தகராறுகளை விளக்கிக் காட்டுவதற்கு அவசியமானபடி எல்லாவிதமான சீர்திருத்தங்களும் செய்யப்படுவதற்கு கோர்ட்டார் அனுமதி கொடுக்கவேண்டிய கடமையாகுமென்று 33 பம்பாய் 644-இன் 649-இலும் 15 கல்கத்தா லா ஜர்னல் 439-இன் 432-இலும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கேஸில் வாதி கோறிய திருத்தலுக்கு அனுமதி கொடுக்கவேண்டியது அவசியமானதுதான். ஆனால் 10 மதராஸ் லா டைம்ஸ் 188-இல் பிராதைத் திருத்த அனுமதி கொடுக்காத விஷயத்தில் ஹைகோர்ட்டார் 115-வது பிரிவுப்படி ரிவிஷனில் பிரவேசிக்க அதிகாரமில்லையென்று பரிஷ்காரமாய் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்கள் தீர்மானித்திருக்கிறதுமல்லாமல் 22 மதராஸ் லா ஜர்னல் 136-இலும் அதே அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சப் கோர்ட்டார் தீர்மானத்தில் வாதிக்கு விரோதமானால் அப்பீலில் பிராதைத் திருத்த அனுமதி கொடுக்காத பிசகை ஆதாரமாகச் சொல்லிக்கொள்ளலாம். தப்பான உத்தரவுக்குமேல் வேறொரு பரிகாரம் ஏற்பட்டிருந்தால் ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசிக்கக்கூடாதென்று சமீபத்தில் மதராஸ் ஹைகோர்ட்டார் பலதடவைகளில் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகவே லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் தள்ளுபடியாச்சுது.

———:O:———

Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

செங்கல்பட்டு ஜில்லா

## C. M. S. A. 130 of 1912-26 நவம்பர் 1813

அப்துல்லா சாகிப் *Vs* அஹமத் ஹுஸேன் சாகிப்

மதராஸ் ஹைகோர்ட் அசல் நெ 289-1909-இல் பிறந்த டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக காஞ்சிபுரம் டி-மு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமென்று வாதி ஸி. பி. ஸி. 39 (1)-வது பிரிவின்படி ஹைகோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்துகொண்டதின்பேரில் அந்தப்படிக்கு மாற்றப்பட்டு டி-மு கோர்ட்டில் நிறைவேற்று நடவடிக்கை நடந்தமேல் எதிரி, ஜில்லாகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஹைகோர்ட்டார் தாங்கள் அசல் தரப்பில் அளித்த டிக்கிரியைத் தங்கள் அதிகாரவரம்புக்குச் சமானகோர்ட்டுக்கு மாற்றலாமேயொழிய தாழ்ந்த அந்தஸ்துள்ள (தொகை விஷயத்தில் சமமான அதிகாரவரம்பில்லாத) கோர்ட்டுக்கு அனுப்பினது சட்டவிரோதமென்று டி-மு கோர்ட்டாருடைய நிறைவேற்று நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டன. ஜில்லா கோர்ட் அபிப்பிராயம் தப்பென்று வாதி ஹைகோர்ட்டில் சில்லரைமனு 2-வது அப்பீல் செய்ததில், ஒரு கோர்ட்டார் ஸ்வய இச்சையாகவே தாங்கள் அளித்த டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக வேறு கோர்ட்டுக்கு மாற்றவேண்டுமானால் 39 (2)-வது பிரிவின்படி சமமான அதிகாரவரம்புள்ள கோர்ட்டுக்கு அனுப்பவேண்டுமேயொழிய வாதியினுடைய விண்ணப்பத்தின்பேரில் 39 (1)-வது பிரிவின்படி டிக்கிரியை மாற்றினால் அனுப்பப்படும் கோர்ட்டாருடைய அதிகாரவரம்பைப்பற்றிய வியவகாரம் ஏற்படத்தக்கதல்லவென்றும் அதற்காதாரமாக 7 மதராஸ் 397, 17 மதராஸ் 30[illegible], & 7 மதராஸ் லா ஜர்னல் 132-இல் தீர்மானங்களிருக்கின்றன. ஆகையால் ஹைகோர்ட் டிக்கிரியை நிறைவேற்ற டி-மு கோர்ட்டுக்கு அதிகாரமில்லையென்ற ஜில்லாகோர்ட்டாருடைய அபிப்பிராயம் பிசகென்று தீர்மானித்து அப்பீலை சட்டப்படி பைசல் செய்யவேண்டுமென்று ஜில்லா கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது.



———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர்
& ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்)

கோதாவரிஜில்லா.

## L. P. A. 45 of 1912-2 டிசம்பர் 1913.

தேவதா ஸ்ரீராமமூர்த்தி

*Vs*

ஸ்ரீ சீதாராமசந்திரராவ்காரு.

வாதி வகையராக்கள் தாவா வீட்டை பஜனைமடமாக உபயோகித்துவந்த பக்தர்களாகயிருக்க தாவாவுக்கு 6-மாதத்திற்குள்ளாக எதிரி அவர்களைத் தடுத்து ஷெடி சொத்தை சுவாதீனப்படுத்திக் கொண்டமையால் (Specific Relief Act) ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் 9-வது பிரிவின்படி எதிரியின் சுவாதீனத்தேதியிலிருந்து 6-மாதத்திற்குள் டி-மு கோர்ட்டில் தாவா வீட்டைத்திரும்பவும் சுவாதீனமடையும்பொருட்டு அசல் தாவா செய்தார்கள். டி-மு-கோர்ட்டார், இந்தக்கேஸில் வாதி வகையராக்கள் தாவா வீட்டை நிராக்ஷேபனையான சுவாதீனத்திலிருந்துவரும்பொழுது 6-மாதத்திற்குள் எதிரிகள் பலவந்தமாய் அவர்களை விலக்கி வசப்படுத்திக்கொண்டது வாஸ்தவமா என்றபாயிண்டைப்பற்றி விஜாரணைசெய்து தீர்மானிக்கவேண்டியதிருக்க வாதி வகையராக்களுக்கு தாவா சொத்தின் சுவாதீனத்திற்குறிய பாத்தியதை உண்டா இல்லையா என்ற தப்பான (அனாவசியமான) இஷ்யூவை ஏற்படுத்தி விஜாரணை செய்து வாதிகளுக்கு பாத்தியதை இல்லை யென்று தீர்மானித்தார்கள். ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் 9-வது பிரிவின்படி கொண்டுவரப்பட்ட பிராதின் தீர்மானத்திற்கு அப்பீல் கிடையாது. அதில் தோல்வி அடைந்தவர்கள் தங்கள் பாத்தியத்தை ஸ்தாபிக்க அசல் தாவா செய்யலாமேயொழிய வேறு முறை ஏற்படவில்லை. அப்படியிருக்க வாதிகள் டி-மு கோர்ட்டார் தப்பான இஷ்யூ ஏற்படுத்திப் பைசலளித்தது பிசகென்று ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்தார்கள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயரவர்கள் 1912-ம் வருஷத்திய ரிவிஷன் மனு நெ. 402-இல், டி-மு கோர்ட்டார் தப்பான இஷ்யூவின்படி தீர்மானம் கொடுத்தது மாற்றத்தக்க ஒழுங்கீனமென்று 29 பம்பாய் 213-ஐ அனுசரித்துச் சொல்லி அந்த ஒழுங்கீனத்தையிட்டு ஹைகோர்ட்டார் 115-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்கலாமென்று தீர்மானித்து டி-மு கோர்ட் பைசலை மாற்றிவிட்டார்கள். அதன்மேல் எதிரி லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல்செய்ததில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயரவர்களுடைய அபிப்பிராயம் பிசகென்று ஏற்பட்டு டி-மு கோர்ட்பைசல் காயமாச்சுது. வாதிகளுக்கு பாத்தியஸ்தாபன வியாஜ்ஜியம் செய்யப் பரிகாரமிருப்பதால் டி-மு கோர்ட்டாருடைய தப்பான பைசலால் யாதொரு கெடுதலும் ஏற்பட நியாயமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்மானத்தில் சொன்னதாவது:—

29 பம்பாய் 213-இல் ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் 9-வது பிரிவின்படி கொண்டுவந்த கேஸில் தப்பான இஷ்யூவின்பேரில் தீர்மானம் செய்யப்பட்டால் அது அதிகாரவரம்பில்லாமல் செய்யப்பட்டதாக ஹைகோர்ட்டார் 115-வது பிரிவின்படி பிரவேசிக்கத்தக்க ஒழுங்கீனமாகுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேஸில் தப்பான இஷ்யூ ஏற்பட்டதும் ஒப்புக்கொள்ளத்தக்கதாகும். அது அதிகார வரம்பில்லாமல்செய்த ஒழுங்கீனமான பைசலாவென்பதைப்பற்றி அபிப்பிராயங்கள் பற்பலவிதமாய் ஏற்பட்டிருக்கின்றன. யாதொரு ஒழுங்கீனமானது ஸி. பி. ஸி. 115-வது பிரிவின் a, b, c, ஆகிய மூன்று வகையான முறைகளால் பிசகென்று தீர்மானிக்கத்தக்கதா அல்லது 115-வது பிரிவின்படி ஹைகோர்ட்டார் பிரவேசிக்கத் தகாத, ஒரு சட்ட பாயின்டைப்பற்றிய தப்பான நோக்கத்தால், தப்பான தீர்மானமுடிவுக்கு வரத்

தக்கதாவென்றதைப்பற்றி வித்தியாஸமான அபிப்பிராயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 24 மதராஸ் லாஜர்னல் 112-இல் அது விஷயமான பல தீர்மானங்கள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயர் அவர்களே C.R.P. 68 of 1912, C.R.P. 37 of 1913 ஆகிய இரண்டு கேசுகளில் கீழ்கோர்ட்டார் பிராதை திருத்திக்கொடுக்க அனுமதிகொடுக்காதவிஷயத்தில் அப்படி அனுமதி கொடுக்கவேண்டியது நியாயமாயினும் அப்பீல் முறையில் வாதி பரிகாரம் தேடிக்கொள்ளலாமாகையால் 115-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்க மறுத்துவிட்டார்கள். மதராஸ் ஹைகோர்ட்டார் அதிக சொற்பமான சந்தர்ப்பங்களில்தான் 115-வது பிரிவின்படி பிரவேசிக்கிற வழக்கத்தைப் பாராட்டி வருகிறார்கள். அப்பீலில்லாத கேசுகளிலும் வேறு பரிகார முறையிருக்க 115-வது பிரிவின்படி ஹைகோர்ட்டார் பிரவேசிக்க நியாயமில்லை. 24 மதராஸ் லா ஜர்னல் 73-ஐப் பார்க்கவும். 33 அலகாபாத் 647, 30 அலகாபாத் 331-இலும் ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் 9-வது பிரிவின்படி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில் தோல்வியடைந்த வாதிக்கு பாத்தியஸ் தாபனத்திற்காக அசல்தாவா ஏற்பட்டிருக்க ரிவிஷனில் ஹைகோர்ட்டார் பிரவேசிக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன்நாயரவர்களுடைய உத்தரவானது மாற்றப்பட்டு டி-மு கோர்ட்டாருடைய பைசல் காயமாச்சுது.

——:o:——

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.)

திருநெல்வேலி ஜில்லா.

C.M.S.A. No 119 of 1912-27 நவம்பர் 1913

அ. ஷேக்மொய்தீன்தரகன் Vs வடிவழகிய நம்பியாபிள்ளை.

வாதியின் தாயார் 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தாவா சொத்து விக்கிரயம் பலவந்தமானதென்று சொல்லி அந்த விக்கிரயத்தை ரத்து செய்து சொத்தை சுவாதீன மடையும்பொருட்டு கொண்டுவந்த வாதியின் தாவாவில் இருதரப்பாரும் சம்மதித்து 1911 பிப்ரவரியில் செய்துகொண்ட ராஜிநாமாப்படிக்கு டி-மு-கோர்ட்டார் டிக்கிரியளித்தார்கள். சொத்து விக்கிரயத்திற்குப் பின் 1-ம் பிரதிவாதி தாவாநிலத்தை அதிகமான தொகை செலவுசெய்து விருத்திசெய்திருப்பதால் அந்த நிலத்தை 1-ம் பிரதிவாதியே அடைந்து அனுபவிக்க வேண்டுமென்ற உத்தேசத்துடன் 1-ம் பிரதிவாதி வாதிக்கு நிலக்கிரயமாக ரூ. 500 இரண்டு வாய்தாவில் கொடுத்துவிட வேண்டியதாகவும் அதாவது 15-நவம்பர் 1911-இல் ரூ. 200-ம், 1912-டிசம்பர் 5உ-இல் பாக்கி ரூ 300-ம் அதற்கும் முன் கட்டவேண்டிய ரூ. 200-க்கு முறிய முக்கால் வட்டியுடன் சேர்த்துக்கொடுத்து விடவேண்டுமென்றும் அந்த வாய்தாக்களின்படி 1-ம் பிரதிவாதி வாதிக்குத்தொகை செலுத்திவிட்டால் 1-ம் பிரதிவாதி தாவாநிலத்திற்கு ஸர்வசுதந்தர பாத்தியஸ்தனாகக்கடவதென்றும் முதல் வாய்தா தவறினாலும் அல்லது 2-வது வாய்தா தவறினாலும் வாதி கோர்ட்முலமாய் ராஜிநாமா டிக்கிரீயை நிறைவேற்றி தாவா சொத்தை சுவாதீனமடையக் கடவதென்றும் ஷை ராஜிநாமாவில் ஒப்புக்கொள்ளப்பட்டு அந்தப்படிக்கு டிக்கிரீயும் பிறந்தது. 1-ம் பிரதிவாதியின் தாயார் முதல்வாய்தாவாகிய 1911 நவம்பர் 15-க்கு முந்திய தினத்தில் இறந்துபோன அசந்தர்ப்பத்தால் முதல்வாய்தாவைத தவற விட்டு 2-வது வாய்தா தேதியாகிய 1912 டிசம்பர் 5-இல் முதல் வாய்தாத்தொகை ரூ. 200-யும் பாக்கி ரூ. 300-யும் வட்டிவிகிதத் தொகையுடன்சேர்த்து 1-ம்பிரதிவாதி கோர்ட்டில் கட்டிவிட்டார். ஆதனால் 1-வது வாய்தாத்தொகை கட்ட 20 நாள் தாமதப்பட்டது.

வாதி குறித்த வாய்தாக்களில் தொகை கட்டாத காரணத்தால் டிக்கிரீயில் கண்ட ஷரத்தின்படி சொத்தை சுவாதீனமடையும்பொருட்டு திருநெல்வேலி அடிஷனல் டி-மு-கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்ததில் டி-மு கோர்ட்டார் ராஜிநாமாவின் ஷரத்துக்களையும் மற்ற சுற்றுச் சந்தர்ப்பங்களையும் நிதானித்துப்பார்த்து 1-ம் பிரதிவாதி குறித்ததேதியில் தொகைகளைக்கட்டாத பட்சத்தில் அடைய வேண்டிய நஷ்டமானது அதாவது நிலசுவாதீனத்தையும் பாத்தியதையையும் இழப்பதான அம்சமானது ஒரு அபராத ஷரத்தாக ஏற்பட்டிருக்கிறதாகவும் 1-ம் பிரதிவாதிவேண்டுமென்று தவறுதல் செய்யாதபடியாலும் தவறிப்போன ஒப்பந்தத்தை தவறினதேதிமுதல் கூடியசீக்கிரமானகாலத்திற்குள் செய்துமுடித்தபடியால்அந்த அபராத ஷரத்தை வற்புறுத்தாமல் மன்னிக்கத்தகுமென்று அபிப்பிராயப்பட்டு வாதியின் விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அப்பீலில் ஜில்லாகோர்ட்டார் ராஜிநாமாவின் ஷரத்துக்கள் அபராதஷரத்துக்களாயினும் டிக்கிரீயின் ஷரத்துக்களாக அவைகள் ஏற்பட்டிருந்தால் அதை மன்னிக்க கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாதென்று அபிப்பிராயப்பட்டு, டி-மு கோர்ட்டார் உத்திரவை மாற்றி வாதிக்கனுகூலமாய்த் தீர்மானித்தார்கள். அதன்மேல் 1-ம் பிரதிவாதி ஹைகோர்ட்டில் 2-வது மனு அப்பீல்செய்யவே அங்கு டி-மு கோர்ட்டாருடைய அபிப்பிராயம் சரியென்றுசொல்லி வாதிக்குப் பிரதிகூலமாய் உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட் உத்திரவின் முக்கிய அம்சங்களாவன:—

24 மதராஸ் 265-இல் ஒரு ராஜிநாமா டிக்கிரியின் அம்சங்களில் அபராத ஷரத்துக்களேற்பட்டால், பார்ட்டிகளுக்குள் ஏற்படும் மற்ற கண்டிராக்ட் ஒப்பந்தங்களின் அபராத ஷரத்துக்களுக்கொப்பாகவே தர்மநியாயத்தை அனுசரித்து கோர்ட்டார் மன்னிக்க அதிகாரமுண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஷை 24 மதராஸ் கேசில் மிராசுதாருக்கும் ரயட்டுக்கு மேற்பட்ட வழக்கில் ராஜிநாமா ஏற்பட்டு அதில் அபராத ஷரத்துக்கள் ; யாதொரு ஆக்டின் முறைகளில் சொல்லியிருக்கிற விதமாய்க் குறிக்கப்பட்டிருந்தமையால் அந்தக் கேசின் அம்சங்கள் தாவா கேஸுக்குதவாதென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் 8 மோர் இந்தியன் அப்பீல் 239-இல் பிரிவி கௌன்ஸிலார் கொடுத்திருக்கிற அபிப்பிராயத்தில் குறித்த வாய்தாவில் தொகையை செலுத்தத் தவறினால் ராஜிநாமா டிக்கிரீயில் ஏற்பட்டிருக்கும் அபராத ஷரத்துக்களுக்கு மன்னிப்புப் பரிகாரமளிக்கலாமென்று தீர்மானித்திருக்கிறார்கள். சட்டமுறைகளை அனுசரித்த அபராத ஷரத்துக்களானாலும் மற்றஇங்கிலீஷ் கோர்ட்டாரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தர்ம நியாயவிதிகளின்படி ஏற்படுத்தின அபராத ஷரத்துக்களானாலும் 24 மதராஸ் 265-இல் கொடுக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயப்படி ஷை ஷரத்துக்கள் ராஜிநாமா உடன்படிக்கையின்படி டிக்கிரீயிலும் அமைக்கப்பட்டிருந்தால்கோர்ட்டார் அவைகளை மன்னிக்க அதிகாரமுண்டென்றே சொல்லவேண்டும். ஆகவே ஜில்லா ஜட்ஜியவர்களுடைய அபிப்பிராயம் ஒப்பத்தக்கதல்ல.

ஆகவே மேற்படி ராஜிநாமா ஷரத்துக்களை மன்னிக்கத் தகுமாவென்று யோஜிக்குமிடத்து 1-ம் பிரதிவாதிக்கு சொத்து பாத்தியதையை ஒப்புகொடுப்பதற்கு வாய்தாப்படித் தொகை செலுத்தவேண்டியது முக்கியமான நிபந்தனையாவென்று யோஜித்துப் பார்க்கவேண்டும். சொத்து விக்கிரய ஒப்பந்தங்களில் விக்கிரயத்தொகை செலுத்துவது முக்கியமான நிபந்தனையாக தர்மநியாயத்தில் ஏற்படவில்லை- [அதாவது விக்கிரயம் செய்ய ஒப்புக்கொண்டால் விக்கிரயம் செய்துதான் ஆகவேண்டும். தொகை செலுத்தத் தவறினால் தொகையை வசூலிக்க வழி தேடவேண்டியதாகுமேயொழிய தொகை செலுத்தாமை முக்கியமாய் விக்கிரய நடவடிக்கையை பாதிக்கத்தக்கதல்லவென்று ஏற்பட்டிருக்கிறது.] இந்தக் கேசில் வாதி ரூ. 500-இல் அதிகமான பாகத்தையும் வட்டி பூராவையும் இரண்டு வருஷகாலம் கழித்துப் பெற்றுக்கொள்வதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். முதல் வாய்தாவாக, 15 நவம்பர் 1911-ஐ நிலச் சாகுபடிக்குத் துடங்கும் காலமென்ற கருத்தால் அந்தத் தேதியைக் குறிப்பிட்டிருக்கிறதாக ஜில்லா ஜட்ஜியவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் டிசம்பரிலும் சாகுபடிக்கு ஆரம்பிக்காலமே. டிசம்பர் சாகுபடிக்குப்பிந்திய காலமென்று நினைக்க ருஜுவாகமில்லை. முதல் வாய்தா ரூ. 200-யும் செலுத்தியும் 2-ம் வாய்தா தவறினால் 1-ம்பிரதிவாதி சொத்தை இழந்துவிடவேண்டுமென்ற ஷரத்தால் முதல் கட்டிய ரூ. 200-யும் கூட திரும்பியடைய மார்க்கமில்லாத ஏற்பாடாகிறபடியால் அந்த ஷரத்தானது அபராத ஷரத்தாக பாவிக்கப்படவேண்டுமேயொழிய உடன்படிக்கைக்கு முக்கிய ஆதாரமான அம்சமாக நிதானிக்கக்கூடாது. இந்தக் கேசில் 1-ம் பிரதிவாதி முதலாவது கெடுவுக்கு 20 நாளுக்குப்பிந்தி தாயார் இறந்த காரணத்தையிட்டு முதல் வாய்

தார்த்துகையையும் 2-ம்வாய்தாத் துகையையு வட்டி பூராவையும் ஷரத்துப்படிக்கு கோர்ட்டில் கட்டிவிட்டிருக்கிறார். 20 நாள் தாமதமானது மன்னிக்கக்கூடிய நியாயமான காலதாமதமென்று சொல்லப்படவேண்டும். 1-ம் பிரதிவாதி வேணுமென்று தாமதித்தவரல்ல. தாயாருடைய கர்மக்கிறியை காரணமாச்சுதென்று ஏற்படுகிறது. ஆகவே டி-மு . கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி வாதிக்குப் பரிகாரமளிக்க நியாயமில்லையென்று சொல்லவேண்டியதாகும்.

———:O:———

Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் &
ஜஸ்டிஸ் எய்லிங்

C. M. S. A. 105 of 1912-9 பிப்ரவரி 1914

ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவன்மீது பிறந்த டிக்கிரீக்குமுன் குடும்ப சொத்தில் அவனுடைய பாகம் ஜப்தியாகியிருந்தது. டிக்கிரீக்குப்பின் அவர் காலஞ் சென்றுவிடவே டிக்கிரீ பாக்கிதார் ஜப்தியான அவருடைய பாகத்தை வசத்திற்குக் கொண்டுவர லாயக்குண்டென்றும் டிக்கிரீ பாக்கிதாருடைய பாத்தியதையானது காலஞ்சென்றவருடைய பங்காளிகளின் பாத்தியதைக்கு மேலானதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———▭———

C. M. P. Nos. 185 & 186 of 1913
18 பிப்ரவரி 1914.

ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட் 9-வது பிரிவின்படி ஒருவன் சுவாதீனமிழந்த சொத்தைத் திரும்பி அடைவதற்கு டிக்கிரீபெற்றபின் எதிரி ஸிவில் கோர்ட்டில் பாத்தியஸ்தாபன வியாஜ்ஜியம் நடத்துவதில் ஸிவில் கோர்ட்டாருக்கு பிரதிவாதி முன்பெற்ற டிக்கிரீயை நிறைவேற்றுமலிருக்கும்படி இஞ்சங்ஷன் கட்டளையிட அதிகாரம் கிடையாது. ஸி. பி. ஸி. ஆர்டர் 39-ரூல் 1, 151-வது பிரிவு ஸ்பெஸிவிக ரிலீவ் ஆக்ட் 56-வது பிரிவுகளின்படி இஞ்சங்ஷன் கட்டளையளிக்க இத்தகைய கேசில் அதிகாரமில்லை.

———:O:———

மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

C. R. P. 920 of 1913-13 பிப்ரவரி 1913.

ஸி. பி. ஸி. ஆர்டர் 5-ரூல் 17, 20 களின்படி பிரதிவாதியின்பேரில் சம்மன்ஸ் நேரில் சர்வ்செய்ய சாத்தியப்படாமல் கோர்ட் நோடிஸ்போர்ட்டிலும் அவருடைய கடைசி இருப்பிடத்தின் கதவிலும் ஒட்டி சம்மன்ஸ் சட்டப்படி ஸர்வ் செய்வதாக உத்தரவு பெறவேண்டுமானால் பிரதிவாதி சென்றவிடமெல்லாம் வாதி பின்தொடர்ந்து போயிருக்கவேண்டுமென்றும அப்படிப் போய்ப் பார்த்ததில் இடம் விட்டு இடம் மாறுவதால் சம்மன்ஸ் நேரில் ஸர்வ்செய்ய சாத்தியமில்லையென்றும் ருஜுப்படுத்தத்தேவையில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

———O———

Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் டையாப்ஜீ

C. M. P. No. 1056 of 1900
5 ஜனவரி 1914

திருநெல்வேலி சப்கோர்ட் டிக்கிரீயின்பேரில் மதராஸ் ஹைகோர்ட்டில் அப்பீலாகி அப்பீல் டிக்கிரீயில் தாவா சொத்துவிவரமானது பிராதில கண்டிருக்கிற பிரகாரம் விவரிக்கப்பட்டது பிசகென்று கண்டுபிடிக்கப்பட்டு அந்தப் பிசகைத் திருத்தும்படி விண்ணப்பம் கொடுக்கப்பட்டதில் 16 மதராஸ் 424-இன் 426-ம் பக்கத்தில் தீர்மானித்திருக்கிறபடி டிக்கிரீயில் எழுத்துப் பிழைகள் கண்டு பிடிக்கப்பட்டால் பழய ஸி. பி. ஸி. 206-வது பிரிவுக்குச்சரியான புது ஸி. பி. ஸி. 150-வது பிரிவின்படி விண்ணப்பம் கொடுத்து அவ்வித பிழைகளைத் திருத்தலாமென்றும் அவ்வித பிழையானது பிராதிலேயே ஏற்பட்டிருக்க பிராதை சரியான காலத்தில் திருத்தினபிறகுதான் டிக்கிரீயும் திருத்தப்படவேண்டியதென்ற அவசியமில்லையென்றும் ஒரு பிழையானது எப்பொழுது செய்யப்பட்டதென்பது முக்கியமானபாயிண்டல்லவென்றும் பிராதில் கண்டிருக்க பிழையைத் திருத்தாமலே டிக்கிரீயைத் திருத்த கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டென்றும் தீர்மானிக்கப்பட்டு வாதி கோறியபடி டிக்கிரீயைத் திருத்த அநுமதி கொடுக்கப்பட்டது. எதிரிகள் அனுவசியமாய் இந்த மனுவை எதிர்த்தபடியால் அவர்கள் மனுதாருடைய செலவைக் கொடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்தக்கேசில் ஏற்பட்ட பிழையாவது சொத்து எல்லையைக் காட்டியதில் "வடக்கில் A-என்றும் கிழக்கில் B-என்றும், தெற்கில் C-என்றும், மேற்கில் D-என்றும் காணவேண்டியதாயிருக்க A-க்கு வடக்கிலும் B-க்குக் கிழக்கிலும் C-க்குத்தெற்கிலும், D க்கு மேற்கிலும் "என்ற விதமாய் கண்டிருந்தது. மற்ற விஷயங்களில் சொத்தானது சரியாய் விவரிக்கப்பட்டிருக்க எல்லைமட்டும் பிராதை அனுசரித்து மாறானமுறையில் எழுதியதில் தெற்கெல்லை வடக்காகவும் வடக்கெல்லை தெற்காகவும் கிழ் எல்லை மேலாகவும் மேற்கெல்லை கிழக்கிலுமாக அமைக்கப்பட்டிருந்தது.

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்)
மதராஸ்.

C. S. No. 225 of 1912-13 அக்டோபர் 1913.

தங்கவேலு செட்டி Vs முருந்த நாயுடு

சென்னை துறைமுகத்தில் வந்திறங்கும் கப்பல்களிலிருந்து சாமான்களைக் கறையேற்றுவதற்காக கண்டிராக்ட் எடுத்திருந்த சொக்கலிங்க நாயகருக்கு வாதி கூலி ஆட்களை சப்ளைசெய்து வந்திருக்க சொக்கலிங்கநாயக்கருக்குப் போட்டியாக ஷை கண்டிராக்ட் வேலையை நடத்திவந்த பிரதிவாதிகள 1907 ஜூலையில் வாதியை ஷை சொக்கலிங்கநாயகருக்கு கூலி ஆட்கள் சப்ளைசெய்யக்கூடாதென்று வேண்டிக்கொண்டு அப்படி சப்ளைசெய்யாதபட்சத்தில் பிரதிவாதிகள் தாங்கள் வந்திறங்கும் கப்பல் சாமான்களை இறக்கும் கண்டிராக்ட் வேலை நடத்திவரும்காலமெல்லாம் வாதிக்கு பிரதிபிரயோஜனமாக கண்டிராக்டெடுக்கிறவொவ்வொரு கப்பலுக்கும் ரூ. 50 விகிதம் பங்குகொடுப்பதாய ஒப்பந்தம்செய்துகொண்டும் அந்தப்படி பிரதிவாதிகள் துகை கொடுககாதபடியால் வாதி 1907 ஜூலையில் ஏற்பட்ட உடன்படிக்கையை அனுசரித்து மதராஸ் ஸிடிஸிவில் கோர்ட்டில் தாவா செய்தார். அந்த தாவா ராஜியாகி அக்டோபர் 1909 - இல் இரண்டு வித உடன்படிக்கைகள் ஏற்பட்டன. ரூ. 400-க்கு ஒரு பிராமிஸரி நோட் வாதிக்கு எழுதிக்கொடுத்து ரூ 1600-க்கு ஒரு தர்மசத்திரம் கட்டிவைப்பதாக பிரதிவாதிகள் ஒப்புக்கொண்ட உடன்படிக்கை ஒன்று, முந்திய உடன்படிக்கையைப் புதிப்பித்த விதமாய் ராஜீநாமா தேதிமுதல் முன்போலவே பிரதிவாதிகள் கப்பல் 1-க்கு ரூ. 50 விகிதம் வாதிக்குக் கொடுக்கவேண்டியதென்றும் வாதி சொக்கலிங்க நாயகருக்கு கூலி சப்ளைசெய்யாமலிருக்க வேண்டியதென்றும் ஏற்பட்ட இரண்டாவது உடன்படிக்கை, ஆகிய மேல்கண்டவிதமாய் ஸிடிகோர்ட் வியாஜ்ஜியம் சமாதானமாகத் தீர்ந்தது. பிராமிஸரி நோட் துகை மட்டும் வாதிக்குச் செல்லானதேயொழிய ரூ. 1600-க்குறிய சத்திரம் கட்டப்படவுமில்லை. அத்துகையை வாதியிடம் கொடுத்து சத்திரம் கட்டிவைக்கவுமில்லை. தவிற கப்பல் விகித ரூ. 50-ம் செலுத்திவரவுமில்லை. ஆகவே மறுபடியும் வாதி ஷை ஒப்பந்தங்களின்படி பரிகாரம் அடையும் பொருட்டு மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் வியாஜ்ஜியம் தொடுத்தார். எதிரிகள் காண்டிராக்ட் ஆக்ட் 27-வது பிரிவின்படி இவ்விதமான ஒப்பந்தம் வியாபார சுலாக்கியங்களின் முறைக்கு விரோதமாயிருப்பதால் செல்லத்தக்க தல்லவென்று வாதமசெய்தார்கள். வாதிக்காக மிஸ்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யரவர்கள் ஸிடிகோர்ட் ராஜீநாமா ஏற்பாட்டைப் பற்றினமட்டில் எதிரியின் சட்டவாதம் பிரயோஜனமில்லை யென்றும், அந்த ராஜீநாமா ஏற்பாட்டிற்கு நல்ல பிரதிபிரயோஜனம் எதிரிகளுக்கிருந்ததாகவும் அதாவது ஸிடிகோர்ட்டில் நல்லெண்ணத்துடன் பரிகாரம் கிடைக்குமென்று நம்பிச்செய்த தாவாவை கைவிட்டதால் அதுவே எதிரிகளுக்குச்சரியான பிரதிபிரயோஜனமென்றும் சொல்லி அதற்காதாரமாக (1869) 5-குவீன் பெஞ்சு கேஸுகளின் 449-யும் (1886) 32 சான்ஸெரிடிவிஷன் கேஸ் 266-யும் எடுததுக்காட்டினார்கள். ராஜீநாமா யுக்தமான தாவாவின் பைசலுக்காக ஏற்பட்ட தல்லவென்று ருஜுப்படுத்த வேண்டிய பொருப்பு எதிரிகளைச் சேர்ந்திருக்க அவர்கள் அந்தப்படி ரூபிக்கவில்லை. ஸிடிகோர்ட்டில் வாதி பாராட்டின உடன்படிக்கையின் அம்சத்தை ஊர்ஜிதப்படுத்தக்கூடிய தென்றே எதிரி மதித்ததாகச் சொல்லவேண்டும் ஏனெனில் அந்த ஒப்பந்தத்தையே மறுபடியும் பிந்தியகாலத்திலும் அனுசரித்துவருவதாய் 2-வது உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஸி. டி-கோர்ட் பிராதில் ஏற்பட்ட ராஜீநாமாவின்படி வாதிக்கு எதிரி கட்டுப்படவேண்டியதாகும்.

அண்டிமாண்டு தொகை ரூ. 400-ம் செலுத்தப்பட்டதால் ரூ. 1600-மட்டும் வாதிக்கு பிரதிவாதி சத்திரம் கட்டிவைப்பதற்காகக் கொடுக்கவேண்டியது நியாயமாகும்.

1909 அக்டோபரில் பிறந்த 2-வது எக்ரீமெண்டின்படி வாதிக்குப் பிந்திய கப்பல்விகிதம் செலுத்தப்படவேண்டிய தாகுமாவென்று யோஜிக்குமிடத்து அவ்வித ஒப்பந்தமானது காண்டிராக்ட் ஆக்ட் 27-வது பிரிவின்படி சட்டவிரோதமாயிருக்கிறது. ஒருவன் சட்டரீதியான ஒரு தொழிலை, வர்த்தகத்தை அல்லது வேலையைநடத்தக்கூடாதென்று உடன்படிக்கைசெய்து கொள்வது சட்டவிரோதமென்று ஏற்பட்டிருக்கிறது. அந்த அம்சத்திற்கு மூன்று புறநடைகளுண்டு:—(I) ஒரு வர்த்தகத்தின் (Good will) பெயரையும் அதைப்பற்றிய சிலாக்கியத்தையும் மற்றொருவருக்கு விக்கிரயம் செயதுவிட்டால் அதே வர்த்தகத்தை கிரயம்செய்தவன் குறிப்பிட்ட நியாயமான எல்லைக்குள் நடத்தக்கூடாது. அது விஷயமாய் ஒப்பந்தம் செய்துகொண்டால் அது சட்டவிரோதமல்ல. (2) வர்த்தகக்கூட்டாளிகள் கூட்டுவியாபாரம் நின்றுபோகும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஒரு பங்காளி அதே வர்த்தகத்தை போட்டியாக குறித்த எல்லைக்குள் நடத்துவதில்லையென்று ஒப்பந்தம்செய்து கொள்ளலாம். அது சட்டவிரோத மானதல்ல. (3) ஒரு கூட்டுவியாபாரம் நடக்குமட்டும் அதிலுள்ள பங்காளிகள் வேறுவிதமான வியாபாரம் நடத்தக்கூடாதென்று உடன்படிக்கை செய்துகொள்ளலாம் அதுவும் சட்டவிரோதமலல. ஆனால் தாவா உடன்படிக்கையானது அவ்விதமான புறநடைகளில் அடங்கியதாயில்லை. மேற்கூறிய மூன்று புறநடையில் குறிப்பிட்டிருக்கிற உடன்படிக்கைகள் வர்த்தக நிர்ப்பந்த மல்லவென்று இங்கிலீஷ் தீர்மானங்களால் ஏற்பட்டிருந்தபோதிலும் இந்தியன் காண்டிராக்ட் ஆக்டில் அவைகளைப் புறநடைகளாய் ஏற்படுத்தியதில் அவ்வித உடன்படிக்கைகள் வர்த்தக நியாயத்திற்கு நிர்ப்பந்தமானபோதிலும் அவைகளுக்கு சட்ட அனுமதி கொடுப்பது யுக்தமாகுமென்று சட்ட கர்த்தாக்களின் கருத்தாக அபிப்பிராயப்படவேண்டும். தாவா கேஸுக்கு ஒத்தவிதமான சந்தர்ப்பங்கள் 13 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 388-இல் ஏற்பட்டு தீர்மானமாகியிருக்கிறது. சொக்கலிங்கநாயகருடைய போட்டி கண்டிராக்டை நிவர்த்திக்கும் கருத்துடன் எதிரிகள் இந்த ஏற்பாட்டைசெய்து முடித்துக்கொண்டதாகச் சொல்வதில் அது சட்டரீதியான ஒரு வர்த்தகத்தை (வாதியின் நியாயமான தொழிலை) தடுப்பதாக ஏற்படுகிறது. அது சட்டவிரோத மென்றே சொல்லவேண்டும். வாதிக்கு கிடைக்கக்கூடிய கூலியாட்கள் யாவற்றையும் எதிரிகளுக்கே சப்ளைசெய்வதாய் ஒப்புக்கொண்டிருந்தால் அது சட்டப்ரோதமாகுமா அல்லவாவென்று யோஜித்துப் பார்க்கலாம். தாவா கேசில் அந்தபாயிண்டைத் தீர்மானிப்ப தவசியமில்லை. ஆகவே தாவா உடன்படிக்கை 27-வது பிரிவின்படி செல்லத்தகாது. வாதிக்குப் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. முந்தியகேசின் ராஜீநாமா உடன்படிக்கையில் பாக்கி ஏற்பட்ட ரூ. 1600-க்கு மட்டும் டிக்கிரீயளிக்கப்பட்டது. [ஷிடி கோர்ட் கேஸில் அதே விதமான உடன்படிக்கையின் பேரில் பிராதுசெய்திருந்தபோதிலும வாதி தனக்கு பரிகாரமுண்டென்ற நம்பிக்கையோடிருந்ததால் அவ்விதபிராதை மேல் நடத்தாதபடிக்கு எதிரியின் ராஜீநாமாவை ஒப்புக்கொண்டபடியால் அந்த ராஜீநாமாவின் ஷரத்துப்படிக்கு எதிரி கட்டுப்படவேண்டியதவசியமாகும்.]

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவயயர்)

நீலகிரி ஜில்லா

C. R. P. 129 of 1913-5 பிப்ரவரி 1914.

அமிருதம் பிள்ளை Vs நஞ்சே கவுண்டன்

வாதி நஞ்சே கவுண்டன் 1-2-பிரதிவாதிகளால் தன்பேருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டதாகச் சொன்ன பிராமிஸரி நோட்டின்பேரில் உதகமண்டலம் சப்கோர்ட்டில் ஸ்மால்காஸ் தரப்பில் தாவா செய்ததில் பாண்டின் வசனஙகள இருவரும் சேர்ந்து எழுதிக்கொடுக்கப்பட்டதாக காணப்பட்டபோதிலும் அதில் 1-ம் பிரதிவாதி தான் கையெப்பம் செய்யவில்லையென்று ஆக்ஷேபித்ததில் அந்தக் கையொப்பம் சிருஷ்டனை என்பதாக ஏற்பட்டது. சப்கோர்ட்டார் கையொப்பம் செய்ததாக ஒப்புக்கொண்ட 2-ம் பிரதிவாதியின்பேரில் மட்டும் வாதிக்கு டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் 2-ம் பிரதிவாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாகல் செய்ததில் வாதியின் பிராது முற்றிலும் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்மானத்தில் சொன்ன காரணங்களாவன:— பிராதில் துலங்குகிற பிரகாரம் இரண்டு பிரதிவாதிகளும் சேர்ந்து தாவா கடனுக்கு உத்தரவாதிகளென்று கருதப்பட்டு இருவரும் சேர்ந்து கையொப்பம் செய்யவேண்டியதென்று ஏற்பாடிருந்தபோதிலும் சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி நோட்டில் 2-ம் பிரதிவாதிமட்டும் வாஸ்தவமாய்க் கையொப்பம் செய்திருப்பதாலும் 1-ம் பிரதிவாதி கையொப்பம் செய்யவேயில்லையென்று சப்கோர்ட்டார் தீர்மானித்தபடியாலும் 1-ம் பிரதிவாதியும் தாவா கடனுக்கு உத்தரவாதம் செய்யும்பட்சத்தில் மட்டும் 2-ம் பிரதிவாதி தானும் கட்டுப்படுவதாய் ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்ததாகச் சொல்வதால் அவ்வித சந்தர்ப்பங்களில் 2-ம் பிரதிவாதியின்பேரிலும் டிக்கிரீயளிக்க நியாயமில்லையென்று 25 மதராஸ் 339-ஐ அனுசரித்துத் தீர்மானிக்கவேண்டியதாகும்.

தவிர தாவா நோட்டின் பிரதான அம்சத்தில் சிருஷ்டனையாக ஏற்பட்டபடியால் பிரதானமாகிய அம்சங்களில் ஒரு நோட்டானது மாற்றப்பட்டிருந்தால் நோட் முற்றிலும் செல்லத்தகாமல் போய்விடுமென்று பல தீர்மானங்களிருப்பதால், அந்தத் தீர்மான நியாயத்தை, நோட் பிறக்கும்போதே முக்கியமான பாகத்தில் சிருஷ்டனை செய்யப்பட்ட விஷயத்திலும் உபயோகப்படுத்தப்படுகிறது; அதாவது நோட் பிறந்தபின் முக்கியமான பாகத்தில் மாறுதல் செய்யப்பட்டால் அது நோட்டை முற்றிலும் கெடுத்துவிடுவதாகத் தீர்மானங்களிருக்க நோட் பிறக்கும்பொழுதே முக்கிய அம்சங்களில் சிருஷ்டனை செய்யப்பட்டாலும் அதே நியாயத்தை அனுசரித்து நோட் செல்லத்தகாதென்று தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. ஹானாபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் C. R. P. 601 of 1912-இல் கொடுத்த அபிப்பிராயத்தைப் பார்க்கவும்.

ஆகவே மேற்கூறிய இரண்டு காரணங்களால் தாவா நோட்டின்பேரில் வாதிக்கு டிக்கிரீயளிக்கத் தகாதென்று பிராது தள்ளுபடியாச்சுது. 2-ம் பிரதிவாதியின் செலவை இரண்டு கோர்ட்டிலும் அவரே வகிக்கவேண்டுமென்றும் உத்தரவாச்சுது. [1-ம் பிரதிவாதியின் கையொப்பம் செய்ததைக் கண்ணால் பார்த்துத் தானும் கையொப்பம் செய்யாத அஜாக்கிறதைக்காக தன் செல்லைத் தானே வகிக்கலாச்சுதுபோலும்.]

———:O:———

Messrs ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் &

ஜஸ்டிஸ் ஏய்லிங்

நெல்லூர் ஜில்லா.

C. M. A. 148 of 1913-3 பிப்ரவரி 1914

ராமஸாமி ரெட்டி Vs ரங்கமன்னார் அய்யங்கார்

1908-ம் வருஷத்திய அசல் நெ. 37-இல் பிறந்த அடமான டிக்கிரியை வாதி ரங்கமன்னார் அய்யங்கார் 1911-ம் வருஷத்தில் நிறைவேற்றி அடமான சொத்துக்களை ஏலத்திற்குக் கொண்டுவர யத்தனிக்கையில் எதிரி ஆக்ஷேபனை விண்ணப்பம் கொடுத்து அதில் வாதி 1911 டிசம்பரில் தன்னுடைய கிராமத்திற்கு வந்து பார்வையிட்டு ஜனவரி 1912-இல் அடமான சொத்துக்களைத் தானே நஞ்சை நிலங்களை ஏக்ர் ரூ. 250 விகிதமாகவும் புஞ்சை நிலங்களை ரூ. 80 விகிதமாகவும் கிரயத்திற்கு வாங்கிக்கொள்ள சம்மதித்ததினால்தான் பிரதம டிக்கிரியில் கண்டபடி டிக்கிரித்துகையைக் கட்டவில்லையென்றும் அப்படியிருக்க வாதி டிக்ரியை நிறைவேற்ற நியாயமில்லையென்று வாதித்தார்கள், ஜில்லா கோர்ட்டார் வாதியின் ஒப்பந்தத்தைப் பற்றிய சாட்சியங்களையும் ஆதாரவுகளையும் நம்பாமல் ஏலத்திற்கு உத்தரவுசெய்து விட்டார்கள். அதன்மேல் எதிரி ஹைகோர்ட்டில் மனு அப்பீல்செய்து அங்கு மேற்கூறிய எதிர்வாதத்துடன் 33 அலகபாத் 264-இல் பிரிவிகௌன்விலார் கொடுத்திருக்கிற தீர்மானத்தை அனுசரித்து மதராஸ் ஹைகோர்ட்டில் Messrs ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் C.M.S.A 86 of 1910-இலும், Messrs ஜஸ்டிஸ் பென்ஸன் & ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் C.M.A 269 of 1911-இலும் தீர்மானித்திருக்கிறபடி ஒரு அடமான வியாஜ்ஜியத்தில் துகையைக்குறித்தகாலத்தில் கோர்ட்டில் கட்டவேண்டுமென்றும் தவறினால் அடமான சொத்துக்கள் ஏலத்தில் விற்கப்படுமென்றும் கோர்ட்டார் அளி

க்கிற பிரதம டிக்கிரீயை வாதி நிறைவேற்ற சட்டமில்லையென்றும் ஸி. பி. ஸி. ஆர்டர் 34-ரூல் 5-இன்படி குறித்தகாலத்தில் பிரதிவாதி துகை கட்டாத காரணத்தால் வாதியின் கோறிக்கையின்பேரில் பைசல் டிக்கிரீபிறந்து அதை அனுசரித்து மட்டும் அடமானசொத்தை எலம்போட சட்டமுண்டென்றும் அத்தகைய பைசல் டிக்கிரீ இந்தக்கேசில் பிறக்காதபடியால் வாதியின் நிறைவேற்றுமனு சட்ட விரோதமென்றும் இரண்டாவது க்ரௌண்டாக வாதித்தார். ஹைகோர்ட்டார் மனு அப்பீலைச் செலவுடன் தள்ளுபடிசெய்த தீர்மானத்தில் சொன்னதாவது:— வாதி தன்னுடைய நிலங்களைக் கிறயத்திற்கு வாங்கி அவைகளை சுப்பாரெட்டி ரெங்கா ரெட்டி என்ற இருவருக்கு விக்கிறயம் செய்ய உத்தேசித்திருப்பதாய்த் தன்னிடம் வாதி சொல்லிக்கொண்டதாகச் சொல்லி அந்த சம்பாஷணையை ருஜுப்படுத்த ஒரு கடிதமும் ஆஜர் படுததப்பட்டது. அந்தக் கடிதம் எதிரியின் வாதத்திற்காதாரமாக எற்பட நியாயமில்லை. தவிற அதில் வாதி முதலில் கிறயத்திற்கு . வாங்கப் பிரியப்படவில்லையென்பதாகத் துலங்குகிறது. வாதி தாவா நிலங்களை வாங்கப் பிரியமுள்ளவராயிருந்தால் குறிதத வாய்தாவில் துகை கட்டத்தவறின உடனேயே டிக்கிரீயை நிறைவேற்றவேண்டிய நடவடிக்கைகள் எடுத்திருப்பாரென்று சொல்லவேண்டும். எதிரியின் வாதத்திற்குறிய சாட்சிகளை ஜில்லா கோர்ட்டார் நம்பாதிருக்க அவர்களை நம்பவேண்டியதற்குக் காரணம் யாதொன்றும் எற்படவில்லை.

தவிற இரண்டாவது ஆக்ஷேபனையைப்பற்றி அபிப்பிராயங்கொடுக்க அவசியமே இல்லை. எனெனில் இந்தக்கேசில் வாதியின் நிறைவேற்றுமனு நோடீஸ் எதிரிக்கு ஸர்வாகி எதிரி ஆக்ஷேபனையில் இந்த வாதம் காணப்படாமல் எலத்திற்கு உத்தரவளிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்த எல உத்தரவை இப்பொழுது ஆக்ஷேபிக்க நியாயமில்லை.

ஒரு டிக்கிரீயில் யாதொரு பரிகாரம் அளிக்கப் படாதிருந்தபோதிலும் நிறைவேற்று நடவடிக்கைகளில் கோர்ட்டார் டிககிரியின்படி அந்த பரிகாரமும் அளிக்கப்படவேண்டியதாகுமென்று அபிப்பிராயப்பட்டால் டிக்கிரியில் அவ்வித பரிகாரம் கிடையாதென்றும் அந்த பரிகாரத்திற்கு ரிஜூடிகேடா தோஷமுண்டென்றும் எதிரி பின்னால் ஆக்ஷேபிக்கக் கூடாதென்று பற்பல தீர்மானங்களிருக்கின்றன. ஆகவே இந்தக்கேசின் பிரதம டிக்கிரியில் அடமான சொத்தை எலம் போட உத்தரவளிக்கப்படவில்லையென்று எதிரி ஆக்ஷேபிக்கக்கூடாது 'குறித்தகாதத்தில் அடமானத்துகை கட்டப்படாவிட்டால் பைசல் டிக்கிரி பிறப்பிக்கவேண்டிய கடமை வாதியைச்சேர்ந்ததாகும். அப்படிச் செய்யாவிடில் முந்திய டிக்கிரியில் அளிக்கப்படாத பரிகாரம் ரிஜூடிகேடாவாக நியாயமுண்டு. ஆனால் நிறைவேற்றும் கோர்ட்டார் வாதிக்கு அவ்வித பரிகாரமுண்டென்று தீர்மானித்து எலத்திற்கு உத்தரவளித்திருக்க ரிஜூடிகேடா தோஷம் சொல்லகூடாது. ஆகவே எதிரியின் மனு அப்பீல் க்ரௌண்டுகள் ஒப்புக்கொள்ளத்தக்கதல்லவென்று அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.)

———:O:———

(மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்)

விசாகப்பட்டணம.

C. R. P. 662 of 1912–6 பிப்ரவரி 1914.

ஸந்நியாஸி நாயுடு *Vs* வெங்கடாசார்யுலு.

சில இனாம்தார்களாகிய வாதிகள் ஸௌம்மிய வருஷத்திய நிலத்தீர்வையின் 1-2, வது வாய்தாக்கள் செலுத்தப்படாத காரணத்தால் ரயட்டுகள்மீது சோடவரம் டி-மு-கோர்ட்டில் தாவாசெய்ததில் அங்கும் அப்பீலில் ஜில்லாகோர்ட்டிலும் தீர்வை பாக்கிவிஷயமாக சில ருஜூபாயிண்டுகளும் சட்டப்பாயிண்டுகளும் வாதிகளுக்கனுகூலமாய்த் தீர்மானிக்கப்பட்டு டிக்கிரீ எற்பட்டது. அதன்மேல் ரயட்டுகளுக்காக ஹைகோர்ட்டில் ஸி. பி. ஸி. 115-வது ' பிரிவின்படி ரிவிஷன் மனுதாகல் செய்யப்பட்டதில் ரிவிஷன் விண்ணப்பம் செலவுடன் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் உத்தரவில் சொல்லப்பட்ட காரணங்களாவன:— ஸி. பி. ஸி. 115-வது பிரிவின்படி கீழ்கோர்ட்டார் சட்டப்படி எற்படாதயாதொரு அதிகாரத்தைச் செலுத்தினாலும், சட்டப்படி எற்பட்டிருக்கிற அதிகாரத்தைச் செலுத்தத் தவறினாலும் அல்லது தன்னுடைய அதிகாரத்தைச்



செலுத்தித் தீர்மான முடிவுசெய்ததில் சட்டவிரோதமாய் நடந்துகொண்டாலும் அல்லது பிரதானமான ஒழுங்கீனநடவடிக்கையை நடத்தினாலும் ஹைகோர்ட்டார் ரிவிஷன் அதிகாரத்தில் பிரவேசித்து கீழ்கோர்ட்டார் தீர்மானத்தை மாற்றிவிடலாம். இந்தரிவிஷன் மனுவில் ஒன்பது பாயிண்டுகள் க்ரௌண்டுகளாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அவைகளநேகத்தில் "கீழ்கோர்ட்டார் சட்டவிரோதமாயும் முக்கியமான ஒழுங்கீனமாயும் "நடந்திருக்கிறதாகச்சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரவரம்பைப்பற்றி ஒரே க்ரௌண்டில்தான் பிரஸ்தாபித்திருக்கிறது. அதாவது இந்ததாவா ரெவினியூகோர்ட்டில் செய்யப்படவேண்டுமென்றும் ஸிவில் கோர்ட்டுக்கு இதை விஜாரிக்க அதிகாரமில்லையென்றும் சொல்லப்படுகிறது. இந்த பாயிண்டைத் தவிர்த்து மற்றப்படிக்கு ரிவிஷனில் பிரவேசிக்க நியாயமில்லை.

தாவா நிலங்கள் எஸ்டேட் நிலங்களல்ல. அவைகளுக்கு எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் பிரயோகிக்கத் தக்கதல்ல. எனெனில் விஜயநகரம் மகாராஜா அவர்களுக்கு கவர்ன்மெண்டார் சாசுவத சன்னது கொடுக்கு முன்னுள்ள மகாராஜாக்களால் தாவா நிலங்கள் இனாமளிக்கப்பட்டபடியால் அவைகள் எஸ்டேட் நிலங்களில் சேர்ந்ததாகாது. 24 மதராஸ் லா ஜர்னல் 649-ஐப் பார்க்கவும். ஆகவே அதிகாரவரம்பின் பாயிண்டைப்பற்றிய க்ரௌண்டும் பிரயோஜனமில்லை. மேற்கூறிய காரணங்களால் ரிவிஷன் மனு தள்ளுபடியாச்சுது.

———:O:———

(Messrs ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் ஸ்பேன்ஸர்)

தென் ஆர்காடு ஜில்லா

S. A. 752 of 1911-12 நவம்பர் 1913.

புடன்ஸா ராவுத்தர் *Vs* பாத்துமாபீ

பிரஞ்சு இலாகாவில் புதுச்சேரியைச் சேர்ந்த கரியம்புத்தூரில் பள்ளிஜாதியில் பிறந்த உண்ணாமலை என்றவள் மணியகவுண்டன் என்பவனை விவாகம் செய்துகொண்டு அந்தக்கணவனுடைய விவாகசம்பந்தம் நீங்காமலிருக்கையில் அவள் மகம்மதிய மதத்தைத் தழுவி சுமார் 34 வருஷங்களுக்குமுன் பாத்துமாபீ என்ற பெயரைதரித்து பிரிட்டிஷ் இலாகாவில் தென் ஆர்காட் ஜில்லாவைச்சேர்ந்த சோழவல்லி என்னும் கிராமத்திலுள்ள அஹம்ஸா ராவுத்தருடைய மகனாகிய ஜைலாராவுத்தரைக் கலியாணம் செய்துகொண்டு அவரால் வாதியாய்வந்த பெண்ணையும் மற்ற சில பிள்ளைகளையும்அடைந்தாள்ஜைலாராவுத்தருடையபிந்திய வேறு மகம்மதியப் பெண்சாதியாலும் மக்களுண்டாயிருக்கின்றன. ஜைலா ராவுத்தர் காலஞ்சென்றபிறகு வாதி தன் தகப்பன் வசம் வந்த அஹம்ஸா ராவுத்தருடைய சொத்துக்களில் மகம்மதிய லா முறைப்படிக்குத் தனக்கு பாகம் கிடைக்கவேண்டுமென்று பண்ருட்டி டி-மு-கோர்ட்டில் 1909-ம் வருஷத்திய அசல் நெ. 82-இல் பாகவியாஜ்ஜியம் செய்தாள். ஜைலா ராவுத்தருடைய இளையதாரத்தின் புத்திரியாகிய 7-ம் பிரதிவாதி எதிர்வாதம் செய்தவர்களில் ஒர்த்தியாச,வாதியின்தாயாராகிய 1-ம் பிரதிவாதியின் ஹிந்து விவாகம்நமோதிலிருக்கதன்தகப்பனை மறு விவாகம்செய்து கொண்டது செல்லத்தக்கதல்லவென்றும் ஆகையால் வாதியும் மற்ற உடன்பிறந்த பிள்ளைகளும் சரியான மக்களல்லவென்றும் (சோரப்பிள்ளைகளென்றும்) அவர்களுக்கு மகம்மதிய லாப்படிக்கு சொத்தில் பங்குவிகிதம் கிடையாதென்றும் ஆக்ஷேபித்தாள். டி-மு-கோர்ட்டாரும்,அப்பீலில் ஜில்லாகோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாய் வாதிக்கு பாகம் கிடையாதென்று தீர்மானித்துப் பிராதைத் தள்ளுபடிசெய்தார்கள். அதன்மேல் வாதி காலஞ்சென்றமையால் அவளுடைய புத்திரர்கள் வார்சுகளாகத் தங்கள் அடுத்த சிநேகிதனைக்கொண்டு ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல்நடத்தினார்கள். ஹைகோர்ட்டாரும் 2-வது அப்பீலைத் தள்ளுபடி செய்தார்கள். ஹைகோர்ட் தீர்மானத்தின் சுருக்கமாவது:—

எதிரியின் ஆக்ஷேபனைகளுக்கு வாதியால் 5-விதமான சமாதானங்கள் எடுத்துச் சொல்லப்பட்டன, அதாவது:— (1) 1-ம் பிரதிவாதி மகம்மதிய மதத்தைத்தழுவினஉடனே அவள்சரியான மகம்மதிய ஸ்திரீயாக மாறிவிடுகிறாளென்றும் அதற்குமுன் எற்பட்டிருந்த ஹிந்துவிவாகம் ரத்தாகி அதன்பின் மகம்மதியரைக் கலியாணம் செ

ய்துகொண்டால் அந்த விவாகம் செல்லத்தகுமென்றும்; (2) இவ்விதவிவாகம் ஒழுங்கீனமாகயிருந்தாலும் மகம்மதியர்கள் அதை செல்லத்தகாத விவாகமென்று அவமதிக்கிறதில்லையென்றும், [illegible] ரும் புருஷன் பெண்சாதியாகிய ஸ்திரீயுடன் கூடிவசித்து வந்தாலே அவ்விதமுறையின் ஒழுங்கீனம் நிவர்த்தியாகிறதென்றும்; (3) இந்ததாவாவில் விவாக ஒழுங்கின் நேர்மையை இந்தியாவிலுள்ள பிரஞ்சு இலாக்காவில் வழங்கிவருகிற ஹிந்து லா, மகம்மதியலாவை அனுசரித்துக் கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டியதானதால் பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற சட்டமுறைகளைப் போலவே பிரஞ்சிலாகாவிலும் அனுசரிக்கப்பட்டு வருகிறதென்று எதிரி ருஜுப்படுத்தவேண்டியதாகுமென்றும்; (4) பள்ளிஜாதியின் வழக்கங்களாலும் ஆசாரங்களாலும் முதல் புருஷன் உயிரோடிருக்கையில் 2-வது கலியாணம் செய்துகொள்ளலா மென்றும் அவ்வித வழக்கத்தைப் பிரயோகித்து ஒரு வியவகாரத்தைத் தீர்மானிக்கக்கூடாதென்று ஆக்ஷேபிக்கிறவர்கள் அந்தப்படி ருஜுப்படுத்தவேண்டியதாகுமென்றும்; (5) ஜைலாராவுத்தர்வாதியைத் தன் உறிமையான புத்திரியென்று ஒப்புக்கொண்டிருப்பதாக ருஜு அம்சம் ஏற்பட்டு அதைக் கீழ்கோர்ட்டார் நம்பியுமிருக்க, இத்தகைய விவாகம் சட்டவிரோதமென்று தெரிந்தும் ஒருவன் தான்பெற்றபிள்ளையை உறிமையானவனென்று அங்கீகரித்தால் அதுசெல்லாதபோதிலும், வாதியின் தகப்பன் வாதியைத் தன் சரியானபுத்திரியென்று ஏற்றுக்கொண்ட காலத்தில் விவாகம் சட்டவிரோதமென்ற தகவல்தெரியுமென்பதாக ரூபகாரப்படுத்தப்படவில்லையென்றும் ஆகவே ஜைலாராவுத்தருடைய அங்கீகாரத்தை வாதிக்கனுகூலமாய் உபயோகப்படுத்தவேண்டியதாகுமென்றும், ஆக ஐந்துவிதமான பாயிண்டுகள் எடுத்துப்பேசப்பட்டன. 3, 4, 5-வது பாயிண்டுகளைப்பற்றிக் கவனிக்குமிடத்து தாவா விவாகமானது பிரிட்டிஷ் இலாக்காவில் நடைபெற்றமையாலும் அவ்வித விவாகத்தைப்பற்றிய வழக்கானது பிரிட்டிஷ் கோர்ட்டார் முன் வந்தமையாலும் முந்திய ஹிந்து விவாகம் பிரஞ்சிலாகாவில் முடிந்தபோதிலும் பிரிட்டிஷ் கோர்ட்டார் பிரிட்டிஷ் இந்தியாவில் வழங்கிவரும் ஹிந்துலாவையும் மகம்மதிய லாவையும் பிரயோகிப்பதவசியமாகும்; பள்ளிஜாதியிலும் வன்னியகுலத்திலும் புருஷன் இருக்கையில் மறு விவாகம் செய்துகொள்ளும்வழக்கமிருப்பதாக ஒப்புக்கொண்டபோதிலும் அத்தகைய வழக்கமானது ஜனப்பொதுநலத்திறகும் நல்லொழுக்கத்திற்கும் விடர்தமாயிருப்பதால் அந்த ஜாதியாரே அவ்வித நடவடிக்கையை இகழ்ச்சிசெய்கிறார்கள்; (தென்னார்காட் ஜில்லா கெஜட்டியார் எழுதிய புஸ்தகதின் 103-ம் பக்கத்தைப்பார்க்கவும்,) கோர்ட்டார் அவ்வழக்கத்தை ஏற்றுக்கொள்ளவும் கூடாது பெற்றவன் பிள்ளையை தன்னுடைய உறிமையானபிள்ளையென்று ஒப்புக்கொண்ட மாத்திரத்தினால் சோரபுத்திரனை சரியான புத்திரனென்று தீர்மானிக்க நியாயமில்லை. 21 கல்கத்தா 666 யும், 34 பம்பாய் 111-யும் பார்க்கவும்.

மற்ற இரண்டு லா பாயிண்டுகள் விஷயமாய்த் தீர்மானமளிப்பது கஷ்டமாயினும் வாதியின் க்ரௌண்டுகளுக்கு எதிர் உத்தரம் சொல்வதில் சந்தேகமேற்படவில்லை. தன் மதத்தைவிட்டு மாறி வேறு மதத்தைத்தழுவி, விவாகம் செய்துகொண்டால் பிந்திய விவாகம் ரத்தானதாக பாவிக்கப்படவேண்டுமென்றும் அவ்வித வழக்கமானது ஒழுங்குக்கு விரோதமாயினும் பிந்தியவிவாகத்தால் சேர்ந்தவர்கள் கூடிவசித்தால் அந்த ஒழுங்கீனம் மறைந்து போவதாயும் ஒழுங்கீனமானது சட்டவிரோதமாகபாவிக்கப்படுகிறதில்லையென்றும் சொல்லப்படுகிறது.

வாதியும் மற்ற உடன்பிறந்தார்களும் தாயின் வயற்றில் உற்பத்தியாகு, முன்னமேயே வாதியின் தாயார் மகம்மதிய மார்க்கத்தில்வந்து தாவா விவாகம் செய்துகொண்டதாக பாவித்தபோதிலும் அந்தப்பிள்ளைகள் சட்டப்படி செல்லத்தக்க உறிமையான பிள்ளைகளாவென்று தீர்மானிக்கவேண்டியதாகும். மகம்மதிய ராஜ்ஜியத்தில் ஒரு அந்நியமதஸ்திரீ இஸ்லாமாகும்விஷயத்தில் காஜி அல்லது மாஜிஸ்டிரேட்டாரிடம் விண்ணப்பம்கொடுத்து தன் புருஷனும் இஸ்லாமாகப்பிரியப்படாத பட்சத்தில் அந்த விவாகம் காஜியால் ரத்துசெய்யப்பட்டு அவள்வேறு விவாகம் செய்துகொள்ள சட்டமுறைஏற்பட்டிருக்கிறது. அந்நிய ராஜ்ஜியங்களிலோ ஸ்திரீமட்டும் இஸ்லாமாகி புருஷன் பழய மதத்திலேயே நிற்கும்பட்சத்தில் ஸ்திரீயானவள் மதம்மாறி மூன்றுமாதவிலக்கமான உடன் அப்புருஷனைவிட்டுப் பிரிந்தவளாக பாவிக்கப்பட்டு அந்த விவாகமும் ரத்தானதாக பாவிக்கப்படுகிறது. ஆமீர் ஆலி- மகம்மதிய லா II-வது வாலியூம் 426, 427-ம் பக்கங்களைப் பார்க்கவும். 8 மதராஸ் 169-இல் ஜஸ்டிஸ் கர்ணன் துரையவர்களும் நார்டன்ஸ் லீடிங்கேசுகள் 1-வது வாலியூம் 12-வது பக்கத்திலும் எடுத்துக்காட்டியிருக்கிறபடி ஒரு ஹிந்து ஸ்திரீயானவள் விவாகமானபிறகு தன் கணவனைவிட்டு விலகி மகம்மதிய மார்க்கத்தைச்சேர்ந்து மகம்மதியர்களுடைய நடையுடை பாவனைகளை அனுசரித்து ஒரு மகம்மதியனுடைய பெண்சாதியைப் போலவே அவனுடன்கூடி வசித்தால் அந்த ஸ்திரீயானவள் ஹிந்து லாவின் வரம்புக்கு வெளிப்பட்டவளாகவும் அந்த லாப்படிக்கு சட்ட நிலமையிலிருந்து நீங்கி விடுகிறதாகவும் ஸிவில் லாவில் அவளுக்கு ஸ்திதியே கிடையாதென்றும் முந்திய விவாகமும் ஸ்திரீபுருஷ சம்பந்தமும் முற்றிலும் ரத்தாகிவிடுவதாயும் சொல்லப்படுகிறது. மேற்கூறிய ஜஸ்டிஸ் கர்ணன் துரையவர்களுடைய அபிப்பிராயமானது முற்றிலும் ஒற்றுமையாக ஜஸ்டிஸ் பார்க்கர் துரையவர்கள் பைசல்செய்த (சின்னம்மாள் Vs கிருஷ்ணு) என்ற கேசில் அனுசரிக்கப்படவில்லை. அந்தக் கேசில், கிருஷ்ணு என்றவன் கிறிஸ்து மதத்தைத் தழுவினதால் ஜாதிபிரஷ்டனாகப்போனாலும் ஹிந்துலாப்படிக்கு ஜாதிக்குறிய பிராயச்சித்தங்களை நடத்தித்திரும்பவும் பிராமணனுடைய நிலமையில் சேர்க்கப்படலாமென்றும் பிரஷ்டமான நிலமையானது கிறிஸ்து மதத்தை விட்டு விலகி பரிகாரச்சடங்குகளைச் செய்தால் நீங்கி விடுமென்று ஜஸ்டிஸ் பார்க்கர் துரையவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக்கேசில் மதமாறுதலால் விவாக பந்தனமானது பிரிந்து போகாதென்று தீர்மானிக்கப்பட்டது. 9-மதராஸ் 460-ஐப் பார்க்கவும்.

தாவாகேசில் தீர்மானிக்கவேண்டிய பாயிண்டைப்போல் பற்பல கேசுகளின் தீர்மானங்கள் நிஸ்ஸந்தேகமாய் ஏற்பட்டிருக்கின்றன. 18 கல்கத்தா 264; 30 மதராஸ் 550, 4-பம்பாய் 330, 32 கல்கத்தா 871, 42 P. R. ஜூடிஷியல் 1-வது பாகம் 193-இலும் அவ்வித தீர்மானங்கள் ரிபோர்ட்டாகியிருக்கின்றன. தவிற 23 மதராஸ் 171-இல் தீர்மானித்திருக்கிறபடி மதவித்தியாஸமான நிலமையிலுள்ளவர்களுக்குள் யாதொரு வியவகாரங்கள் நேரிட்டால் கோர்ட்டார் தர்மநியாயத்தையும் நல்மனச்சாட்சியையும் நீதியையும் பாராட்டித் தீர்மானமடையவேண்டுமென்று சொல்லவேண்டியதாகும். 1-ம் பிரதிவாதி ஜைலா ராவுத்தரை விவாகம் சொய்துகொள்ளும்சமயத்தில் முந்திய ஹிந்து விவாக சமபந்தம் இருந்ததா இல்லையா என்பதை ஹிந்து லாவை அனுசரித்துத் தீர்மானிக்கவேண்டியதாகும். ஜைலா ராவுத்தரை விவாகம் செய்துகொண்டது சட்டவிரோதமாஅல்லவா என்று மகம்மதிய லாவை அனுசரித்துத் தீர்மானிக்கவேண்டும். ஹிந்து லாப்படிக்கு ஜஸ்டிஸ் பார்க்கர் துரைவர்கள் தீர்மானித்திருக்கிறபடி மத மாறுதல் முந்தியவிவாக நிலமையை ரத்துசெய்யாதென்று சொல்லவேண்டியதாகும். முந்திய விவாகம் ரத்தாகாமலிருக்க மற்றொருவனுடைய பெண்சாதியை ஒரு மகம்மதியன் விவகம் செய்துகொள்ள மகம்மதிய லாவில் அநுமதி கிடையாது. ஆகவே அப்பேர்பட்ட விவாகமானது (1-ம் பிரதிவாதியின் விவாகமானது) செல்லத்தக்கதல்லவென்றுமட்டுமல்ல, முற்றிலும்சட்டவிரோதமானதென்றே சொல்லவேண்டியதாகும். 15 அலகபாத் 396 & 322-யும், அமீராலி மகம்மதிய லா 2-வது வாலியூம் 332 (e)-யும் பார்க்கவும். மேற்கூறிய ஜஸ்டிஸ் கர்ணன் துரையவர்களுடைய அபிப்பிராயமானது பிந்திய தீர்மானங்களால் மாறிப்போயிருக்கிறது. ஆகவே 1-ம் பிரதிவாதியின் விவாகம் சட்ட விரோதம். 1-ம் பிரதிவாதி மகம்மதிய மதத்திற்கு வந்து மூன்று மாதம் கடந்தபிறகு ஜைலா ராவுத்தர் விவாகம் சொய்துகொண்டாலும் சரியே அல்லது அந்த மூன்று மாதத்திற்குள்ளாகவே ஒரு மகம்மதியன் விவாகம் செய்துகொண்டாலும் சரியே அவ்வித விவாகமானது ஒழுங்கீனமாகுமேயொழிய சட்ட விரோதமல்லவென்று மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ அவர்கள் இயற்றிய மகம்மதிய லாமுறை புஸ்தகத்தின் 102, 103-வது பக்கங்களில் சொல்லியிருக்கிறபடி வாதிக்கப்படுகிறது. ஆனால் மேற்கூறிய பற்பல தீர்மானங்களால் தாவா விவாகமானது சட்டவிரோதமென்று ஏற்

பட்டிருப்பதால் அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள நியாயமில்லை.

ஆகவே 1-ம் பிரதிவாதியின் விவாகம் சட்டவிரோதமென்று ஏற்பட்டுவாதி ஒருசோரபுத்திரியா கபாவிக்கப்படவேண்டுமென்றும் ஆகையால்பாட்டன் சொத்தில் பாகம் கேட்க நியாயமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டு 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது.

———:O:———

## Messrs. ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஏய்லிங்.

### வடமலையாளம் ஜில்லா.

### C. M. S. A. 7 of 1913-29 ஜனவரி 1914.

*ராயரப்பன் நம்பியார் Vs மலிகண்டி அகேத்மாயன்.*

தாவா சொத்தின் அடமானதாராகிய வாதி அடமானக்கடனை வசூலிக்கும்பொருட்டு கடனாளியுடன்கூட அதே சொத்தில் அடமான பாத்தியதையுடைய A-என்பவனையும் பார்ட்டியாகச் சேர்த்துசெய்து பிராதுஇருவர் பேரிலும்டிக்கிரீ பெற்றார். A-என்பவனே தன்னுடையஅடமான பாக்கிக்காக செய்தவியாஜ்ஜியத்தில் வாதியையும் பார்ட்டியாகச் சேர்த்து டிக்கிரீபெற்றபின் நிறைவேற்றியதில் சொத்து பாத்தியதையைத்தானே டிக்கிரீபாக்கிக்காகக் கிரயம்பெற்றார். ஆகவே வாதியின் அடமானக்கடனைத் தீர்க்கவேண்டிய கடமை A-என்பவனைச் சேர்ந்ததாச்சுது. வாதி தான்பெற்ற டிக்கிரீயை நிறைவேற்றுமுன் A என்பவன் காலஞ்சென்றமையால் அவனுடைய வார்ஸ்களை ரிகார்டில் கொண்டுவாராமல் அவர்களுக்கு நோடீஸும் தகவலுமில்லாமல் வாதி டிக்கிரீயை நிறைவேற்றி சொத்தை ஏலம்போட்டு தொகையை வசூலித்துக்கொண்டார். A-என்பவனுடைய வார்ஸ்தார் வாதியின் டிக்கிரீபாக்கியைத்தான் கட்டிவிடுவதாய்ச் சொல்லி தன்னை ரிகார்டில் கொண்டுவாராமல் ஏல நடவடிக்கை நடத்தினது சட்டவிரோதமென்று ஆக்ஷேபித்து ஷை ஏலத்தை ரத்துசெய்யும்பொருட்டு தாலிப்பரம்பா டி-மு கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்தார். ஏலநடவடிக்கை மோசமாய் நடந்ததாகவும் விண்ணப்பத்தில் சொல்லப்பட்டிருந்தது. வாதியின்தாவா காலாவதி தோஷமென்று எதிர்வாதம் செய்யப்பட்டது. டி-மு-கோர்ட்டாரும ஜில்லாகோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக வாதியின்தாவா காலாவதி தோஷமென்றே தீர்மானித்தார்கள். வாதி ஹைகோர்ட்டில் 2-வது மனு அப்பீல் செய்ததில் வாதிக்கனுகூலமாக ஏலம் ரத்தாச்சுது. ஹைகோர்ட் உத்தரவில் சொன்னதாவது:—

தாவா ஏலம் மனுதாரைக் கட்டுப்படுத்தாதென்றும் ஆகையால் செல்லத்தக்கதல்லவென்றும் ஏற்பட்டால் விண்ணப்பம் காலாவதி தோஷமாகாது. எதிரியின் வார்ஸ்களை ரிகார்டில் கொண்டுவராமல் நிறைவேற்று நடவடிக்கை நடத்தியது ஒழுங்கீனமென்றுமட்டுமல்ல, முற்றிலும் சட்டவிரோதமென்றே மதராஸ் ஹைகோர்ட்டில் தீர்மானங்களிருக்கின்றன. 6 மதராஸ் 180, 15 மதராஸ் 399, & 22 மதராஸ் 119-யும் பார்க்கவும். வாரிஸ்களைப்பற்றின மட்டில் அந்த ஏலம் செல்லத்தகாத நடவடிக்கையென்றே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எதிதாருக்காக மேற்கூறிய மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள் 25 பம்பாய் 337-இல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற பிரிவிகௌன்ஸில் கேஸில் மாற்றப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பிரிவிகௌன்ஸில் கேஸின் சந்தர்ப்பங்கள் வித்தியாஸமானவைகளாகும். கோர்ட்டார் நிறைவேற்று நடவடிக்கையில் ஒருவனைக் காலஞ்சென்ற எதிரிக்கு வார்ஸாக நியமிக்கும்படி உத்தரவளித்து, சொத்து ஏலமான பிறகு ஷை வார்ஸ் உத்தரவு பிசகென்று ஏற்பட்டதில் (அதாவது ஷை யான் சரியான வார்ஸ் அல்லவென்றும் வார்ஸ் ஸ்தானத்திற்கு லாயக்குள்ளவன் வேறொருவனென்றும் தீர்மானிக்கப்பட்டதில்) சரியான வாரிஸ் ரிகார்டில் ஏற்படாமல் போடப்பட்ட ஏலத்தை ரத்துசெய்யக் கொண்டுவந்த விண்ணப்பத்தில் பிரிவிகௌன்ஸிலார் வாரிஸ்தாரை ரிகார்டில் கொண்டுவராமல் போடப்பட்ட ஏலம் சட்டவிரோதமாகாதென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். தாவாகேஸில் அவ்வித சந்தர்ப்பம் கிடையாதபடியால் பிரிவிகௌன்ஸில் கேஸ் தீர்மானம் எதிரிக்கு (எதிதாருக்கு)ப் பிரயோஜனமில்லை. ஆகவே மதராஸ் கோர்ட் தீர்மானங்கள் மாற்றப்பட்டதாகச் சொல்ல நியாயமில்லை. அவைகளை அனுசரிக்க-



கூடாதென்று சொல்லக்கூடாது. மனுதார் ரிகார்டில் கொண்டுவரப்பட்டு வாதிக்குச் சேரவேண்டிய டிக்கிரி தொகையைக் கட்டினால் தாவா ஏலம் ரத்தாக வேண்டியதென்று உத்தரவளிக்கப்பட்டது.

———:O:———

## Messrs சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

### ராமனாதபுரம் ஜில்லா

### S. A. Nos. 505 &511 to 522 of 1912

### 16 ஜனவரி 1914

*சேகுராவத்தன் Vs அளகப்பசெட்டி.*

வாதி அளகப்ப செட்டியார் மதராஸ் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்ட் 77-வது பிரிவின்படி ஆக்ட் நமோதுக்கு வருமுன் பாக்கியாகியிருந்த 1316, 1317-வது பசலிக்குறிய தீர்வையையும் ஆக்ட் நமோதுக்கு வந்தபின் ஏற்பட்ட 1317-வது பசலியின் தீர்வை பாக்கியையும் மொத்தமாக வசூலிக்கும்பொருட்டு ரயட்டுகள் மீது ரெவினியூ கோர்ட்டில் தாவா செய்தார். எதிரி தான் ஷை பசலியில் சாகுபடிசெய்த நிலங்களுக்குறிய தீர்வைமட்டும் வசூலிக்க நியாயமுண்டென்றும் தங்கள் வசமிருக்கிற சாகுபடி செய்யாமல் தரிசாய்கிடந்த நிலங்களுக்கும் தீர்வை செலுத்தக் கடவரல்லவென்றும் ஆக்ஷேபித்ததில் ரெவினியூ கோர்ட்டில் ரயட்டுகளுடைய வாதத்தை ஏற்றுக்கொண்டு சாகுபடி செய்யப்பட்டிருந்த நிலங்களுக்குமட்டும் தீர்வை விகிதம் ஏற்படுத்தி வாதிக்கு டிக்கிரீயளித்தார்கள். ஜில்லா கோர்ட்டார் அப்பீலில் எதிரியின் ஆக்ஷேபனையானது நியாயமாகத் தோன்றினாலும் எஸ்டேட்ஸ் ஆக்ட் 4-வது பிரிவின்படி ரயட்டுகளுடைய சுவாதீனத்திலிருக்கிற நிலங்கள் முழுவதற்கும் தீர்வை விதிக்கவேண்டிய தவசியமாகுமென்று தீர்மானித்து வாதி கோரியபடி டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் எதிரி ஹைகோர்ட்டில் 2-வதுஅப்பீல் செய்ததில் ரெவினியூ கோர்ட் தீர்மானம் காயமாகி ஜில்லா கோர்ட் அபிப்பிராயம் பிசகென்று ஏற்பட்டது. ஹைகோர்ட் தீர்ப்பின் சுருக்கமாவது:—

எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்ட் நமோதுக்குவருமுன் அதாவது 1907 ஜூன் 32-இல் ஏற்பட்ட ஒரு பட்டா வாதிக்காக தாகல் செய்யப்பட்டு அதில் கண்ட ஷரத்துக்களின்படி ரயட்டுகள் தீர்வை செலுத்துவதவசியமாகுமென்று சொல்லப்பட்டது. பிராதில் பட்டாவைக் கொடுத்ததாக சொல்லப்பட்டிருக்கிறதே யொழிய ரயட்டுகள் அதை ஏற்றுக்கொண்டதாக யாதொரு ருஜுபாகமும் கிடையாது. கீழ்கோர்ட்டார் அவ்விதமான அபிப்பிராயப்பட்டதாகவும் சொல்லப்படவில்லை. பட்டாவை வற்புறுத்தவேண்டுமானால் பிரதிவாதி அதை ஒப்புக்கொண்டிருக்கவேண்டும் இல்லாவிடில் பட்டா ஏற்படுமுன் எவ்விதமான பாத்தியதை அனுபவிக்கப்பட்டு வருகிறதோ அவைகளே தொடர்ந்துவர வேண்டியதாகும். பட்டாவில் கண்ட ஷரத்துக்களைப் பார்த்தாலும் எதிரியின் வாதத்திற்கு விபரீதமாயில்லை. பட்டாவின் 2-வது ஷரத்தில் ரயட்டினுடைய அஜாக்கிறதையால் நிலம் சாகுபடியில்லாமல் விடப்பட்டால் அதற்கும் தீர்வை செலுத்தக்கடவதென்று கண்டிருக்கிறது. அவ்வித அஜாக்கிறதையின் காரணத்தால் அல்லது மற்ற சந்தர்ப்பங்களால் தரிசாய்க்கிடக்கிற நிலங்களுக்குத் தீர்வை செலுத்தவேண்டியதில்லையென்று யூகிக்கலாம். 6-வது ஷரத்தில் சாகுபடிசெய்ய சாத்தியமில்லாத காரணத்தாலாவது ரயட்டுக்கு யாதொரு நிலம் தேவையில்லையென்றால் சுவான்தாருக்கு விண்ணப்பம் கொடுத்து விடுதலை செய்துகொள்ளலாமென்று கண்டிருக்கிறது. ஆகையால் யாதொரு நிலத்தை அஜாக்கிறதையால் சாகுபடி செய்யப்படவில்லையென்று அனுமானிக்க இடங்கொடாமல் தடுப்பதற்கு 6-வது ஷரத்தின்படி முன்னாடியே நிலச்சுவான்தாருக்குத் தெரியப்படுத்திக்கொள்ளலாம். இரண்டு ஷரத்துக்களும் ஒன்றுக்கொன்று உதவியாக ஏற்பட்டிருக்கிறதாகவே சொல்லலாம். 6-வது ஷரத்தின் அம்சங்கள் இந்தக்கேஸில் வாதிக்கனுகூலம்தான். ஏனெனில் ரயட்டுகள் சாகுபடிசெய்ய முடியாதென்றாவது நிலம் தேவையில்லையென்றாவது தெரிவித்துக் கொள்ளவில்லை. 4 மதராஸ் 322-இல் இவ்விதமான ஷரத்தனது நியாயமானதல்லவென்றும் அவ்வித ஷரத்தில்லாமல் போனபோதிலும் நிலம் சாகுபடியில்லாமல் கிடந்தபோதிலும் நிலச்சுவான்தாருக்குத் தீர்வை வசூலிக்கும் பாத்தியம் கெடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதாவது ரயட்டானவன் நிலத்தை அடைந்து

அவைகளை சாகுபடிசெய்ய முடியவில்லையென்று தெரியப்படுத்திக்கொண்டால் அந்த நிலங்களுக்குத் தீர்வை செலுத்தத் தேவையில்லையென்ற ஷரத்தான நிலச் சுவான்தாருக்கு அநீதியான ஏற்பாடாகுமென்று அபிப்பிராயமாச்சுது. அந்த கேசில் பட்டாவின் மற்ற ஷரத்துக்கள் என்னவிசமென்று ரிபோர்டில் விளங்கவில்லை. தாவா கேசில் பட்டா முழுவதையும் படித்துப்பார்த்தால் இருதரத்தாருடைய நோக்கம் இன்னதென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. 2-வது ஷரத்தை ஏற்படுத்தின காரணத்தை யூகித்தால் சாகுபடிக்கு லாயக்கான நிலங்களுக்கு மட்டும் தீர்வை வசூலிக்கவேண்டுமென்ற ஏற்பாடிருந்ததாகச் சொல்லவேண்டும். பட்டாவில் கண்ட நிலங்கள் யாவற்றும் சாகுபடிக்கு லாயக்கானவைகளாவென்றும தரிசாய்க்கிடந்தது ரயட்டுகளின் அஜாக்கிறதையினுலாவென்றும் ஏற்பட்டிருக்கிற இஷ்டாவைக் கவனித்தாலும் அதே கருத்துடன் பட்டா ஏற்பட்டதாகச் சொல்லவேண்டியதாகும். ரயட்டுகளின் அஜாக்கிறதையால் தரிசாய்க்கிடந்த நிலங்களுக்கும் தீர்வைவேண்டுமென்று வாதிஅபேக்ஷிக்கிறூர். ஆனுல் ரயட்டுகளுடைய அஜாக்கிறதையைப்பற்றிகீழ்கோர்ட்டார்பிரஸ்தாபிக்கவேயில்லை. தாவா நிலங்கள் நல்ல பயனை கொடுக்கத்தக்கவைகளல்லவென்றும் சில நிலங்கள் ஒவ்வொரு வருஷமும் பயிரிட யோக்கியமானவைகளல்லவென்றும் ரெவினியூ கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறூர்கள், ஆகவே ரயட்டுகளுடைய அஜாக்கிறதையால் தரிசாய்க்கிடந்ததாக ருஜூபாகமும் தீர்மானமும் ஏற்படவில்லை. 1316-ம் பசலிக்குமுன் வருஷாவருஷம் சாகுபடியாகும் நிலத்திற்குமட்டும் தீர்வைவசூலித்து வந்ததாகவும் ஏற்படுகிறது. பட்டாவின் 2-வது ஷரத்தில் அவவித வழக்கத்தையே தொடர்ந்துவரவேண்டுமென்ற கருத்தானது துலங்குகிறது. ரெவினியூ கோர்ட்டில் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்டின் அம்சங்களை அனுசரித்து வாதம் செய்யாமல், வாதி ஜில்லாகோர்ட்டில் 4-வது பிரிவை எடுத்துக்காட்டி ரயட்டுகளின் வசமுள்ள நிலங்களுக்கெல்லாம் தீர்வை வசூலிக்க பாத்தியமுண்டென்று வாதிக்கப்பட்டது. முதல் பார்வைக்கு அந்தப் பிரிவின்படி வசூலிக்க நியாயமிருந்தபோதிலும் பார்ட்டிகளுடைய கருத்தைப்பற்றிய ருஜூபாகத்தால் அந்த சட்ட முறையானது நிராகரிக்கப்படலாம். இந்த கேசில் பட்டாவின் ஷரதுக்களையும் மற்ற ருஜூபாகத்தையும் கவனித்தால் சாகுபடியாகிற நிலங்களுக்கு மட்டும் தீர்வை வசூலிக்கும் கருத்து ஏற்பட்டதாகச் சொல்லவேண்டும்.

வசூலிக்கவேண்டிய தீர்வை நிர்ணயிப்பதற்கு 4-வது பிரிவின் அம்சம்மட்டும் போதாது: அதாவது ரயட்டின் சுவாதீனத்தில் நிலங்களிருக்கிற தகவல் மட்டுமல்ல. அவைகளின் விஸ்தீரணமும் தீர்வைவிகிதமும் ஏற்படவேண்டியதாகும். தீர்வை விகிதத்தைப்பற்றி III-வது அத்தியாயத்தில் சொல்லி யிருக்கிறது. 24-வது பிரிவில் ஒரு ரயட்டுக்குசட்ட அனுமதியன்னியில் தீர்வையை உயர்த்தக்கூடாதென்று சொல்லியிருக்கிறது. ஆக்டுக்கு முன்மட்டும் சாகுபடியான நிலங்களுக்குமட்டும் தீர்வைவசூலித்து வந்தமையால் அந்த நிலங்களுக்காக அதிகதீர்வை வசூலிக்க நியாயமில்லை. ரயட்டுகளின் சுவாதீனத்திலிருக்கிற காரணத்தையிட்டு மற்ற நிலங்களுக்கும் தீர்வைவசூலிக்கயத்தனப்பட்டால் அதற்காக வேறு உடன்படிக்கை ஏற்பட்டு பட்டா முச்சலிக்கை மாறப்பட்டு ருஜூபாகமிருக்கவேண்டும். இல்லாவிடில் முன்போலவே சாகுபடியான நிலங்களுக்குமட்டும் ஏற்பட்ட விகிதப்படி தீர்வை வசூலிக்கும் முறையை அனுசரிக்கவேண்டியதாகும். முந்திய பசலிகளில் நிலங்கள் முழுவதுக்குமாகத் தீர்வை ஏற்பட்டதில் அதை விதிக்கும் முறையானது சாகுபடியான நிலங்களின் விஸ்தீரணத்தைப்பற்றியதாக ஏற்பட்டிருந்தது. அதனுல் ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி சாகுபடியான நிலங்களுக்கு மட்டும் தீர்வை வசூலிக்கப்பட்டதாகவும் மற்ற நிலங்களுக்கு தீர்வை செலுத்தப்படவில்லையெனறும் நிதானிக்கக்கூடாது. சாகுபடியான நிலங்களைக் கவனித்துத் தீர்வையை கணித்து அந்தத்தொகையை நிலங்கள் முழுவதுக்கும் ஏற்பட்ட தீர்வையென்று சொல்லவேண்டும். அவ்விதமாய் விதிக்கப்பட்ட தீர்வையை உயர்த்த நியாயமில்லை. தீர்வையில்லாத நிலங்களுக்குத் தீர்வை வசூலிப்பது உயர்த்தும் கருத்தாகாது. ஆனுல் தீர்வை வசூலிக்கும் நிலங்களில் சேர்ந்துள்ள நிலங்களுக்குப் பிரத்தியேகமாய் தீர்வை வசூலித்தால் அது அதிகத் தீர்வையென்றும் சட்டவிரோதமென்றும் பாவிக்கப்படவேண்டும். ஆகவே ரெவினியூகோர்ட்டார் தீர்மானித்தபடி வாதி முன்போலவே தீர்வை வசூலிக்க நியாயமேயொழிய சாகுபடியில்லாத நிலங்களுக்கும் தீர்வை பிரத்தியேகமாய் ஏற்படுத்தி வசூலிக்க நியாயமாகாதென்று அபிப்பிராயப்பட்டு ரயட்டுகளுக்கனுகூலமாய் டிக்கிரீயளித்தார்கள்.

———:O:———



## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

———o———

### C. M. S. A. 62 of 1913—4 மார்ச்சு 1914.

ஒரு டிக்கிரீ மேடோவர்தார் நிறைவேற்றுவதற்காக அனுமதி கொடுக்கப்படாமல் அப்பீல் செய்து அங்கு நிறைவேற்ற உத்தரவடைந்தும் மேல் நடத்தாமல் நின்றுவிட்டு பின்னுல் வேறு நிறைவேற்று மனுக்கொடுத்தால் முந்திய விண்ணப்பத்தேதியிலிருந்து காலாவதி கணிக்கப்படவேண்டுமேயொழிய அப்பீல் உத்தரவால் அனுமதிபெற்ற தேதிமுதல் காலாவதி துவக்காதென்று தீர்மானிக்கப்பட்டது. தவிற டிக்கிரீ பாக்கிதார்பேரில் நிறைவேற்று நடவடிக்கை நடத்தினுல் அது ஜாமீன்தார்பேரில் எடுக்கும் நடவடிக்கைக்கு காலாவதியில் உதவக்கூடியதல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———□———

### C. R. P. 951 of 1912—5 மார்ச்சு 1914.

சாசுவதமான கவுலுக்கு விடப்பட்டிருக்கிற பள்ளிவாசல் நிலங்களில் சில பாகத்தை கவர்ன்மெண்டார் விறயத்திற்கு வாங்கிக்கொண்டு காம்பென்ஸேஷன் தொகையை கோர்ட்டில் டிபாஸிட் கட்டியிருக்கும் பட்சத்தில் அத்தொகையைக் கொண்டு வேறு நிலங்கள் வாங்குமட்டும் குத்தகைதார் செலுத்திவரவேண்டிய தீர்வையில் விலகிப்போன நில விஸ்தீரணத்திற்குத் தக்கபடி தீர்வை கம்மிப்படுத்தப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

———o———

### S. A. 1898 of 1912-5 மார்ச்சு 1914.

யாதொரு சொத்தில் ஒருவனுக்கு சரியான பாத்தியதை இருக்கிறதாக மனப்பூர்வமாய் நம்பி அந்த சொத்தை ஷை யானிடம் கிறயத்திற்கு வாங்கி அதில் தொகை செலவுசெய்து விருத்திபண்ணின பிறகு அந்த சொத்துக்கு மேலபனபாத்தியமுடையவன் அடையும் பட்சத்தில் முதலில் சொத்து பாத்தியதையைத் பற்றி தீர விஜாரிக்காத அஜாக்கிரதை ஏற்பட்டாலும் விருத்தி யம்சத்திற்காகச் செலவுசெய்த தொகையைத் திரும்பியடைய நியாயமுண்டென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

### C. M. S. A. 107 of 1912—4 மார்ச்சு 1914.

ஒரு டிக்கிரீயின்படி நிறைவேற்று மனுவில் சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளும் சமயத்தில் யாதொரு ஆக்ஷேபனைஏற்பட்டால் அவ்விதத்தடை ஏற்பட்ட ஒருமாதத் தவணைக்குள் அந்த ஆக்ஷேபனையை விலக்கும்பொருட்டு விண்ணப்பம் கொடுக்காமலே டிக்கிரீதார் பின்னுல் வேறு நிறைவேற்று மனுக்கொடுக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

### C. M. A. 181 of 1913-4 மார்ச்சு 1914.

ஒருதாவா ஈரங்கி பாக்கியிலிருக்கும் காலத்தில் தாவா சொத்துவிஷயமாய் ரிஸீவரை நியமிக்க வேண்டுமென்று தாவாவில் பார்ட்டியாக இராத அந்நியன் விண்ணப்பம் செய்துகொள்ள நியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

### C. M. S. A. 236 of 1913-4 மார்ச்சு 1914.

ஒரு தாவாவில் தப்பாக, ஒருவனுக்குபதிலாய் வேறொருவனைப் பிரதிவாதியாகச் சேர்த்துப் பிராது தாகல் செய்யப்பட்டபின் பிசகு கண்டுபிடிக்கப்பட்டபொழுது சரியான பெயரை பிராதில் திருத்திக்கொடுக்கும் சமயத்தில் பிராதுக்கு காலாவதி தோஷம் ஏற்பட்டதில் (அதாவது பிராதைத் திருத்திய தேதியில் பிராது தாகல் செய்ததாக பாவிக்கப்பட்டால் பிராது சரியான பிரதிவாதியைப் பற்றினமட்டில் காலாவதி தோஷமாகிற விஷயத்தில்) முதல் குறித்த பெயர்மட்டும் தப்பாகவும் மற்றப்படி சகல விவரங்களும் பிசகில்லாமலிருந்தால் பிராதைத் திருத்திக்கொடுக்க அனுமதிக் கொடுக்கலாம். வேறு

பிராதுகொண்டுவரும்படி உத்தரவளிக்கத்தேவையில்லை; அல்லது திருத்திய தேதியில் அந்தப்பிராது தாகல் செய்யப்பட்டதாக பாவிக்கப்பட வேண்டியதில்லை. பிராதின் அம்சங்களையும் விவரங்களையும் கவனித்துப் பார்த்தால் எதிரியைப் பற்றிய நபர் விவரம் பிசகில்லையென்றும் பெயர் மட்டும் வித்தியாஸமாகயிருந்தால் அதைத் திருத்தலாமென்றும் காலாவதி பாயிண்டு உண்டாகாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

——:O:——


## அத்யாத்ம ராமாயணம்.

——:O:——

[ஸம்ஸ்கிருதத்திலிருந்து எளிய தமிழ் நடையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திவான் பகதூர் A. கிருஷ்ணசாமி அய்யங்கார் B. A; I. S. O Retired Dcy Comr:-Salt & Abkar Dept, அவர்கள் எழுதிய ஆங்கில முகவுரை, தமிழ்முகவுரை, பிரும்மாண்ட புராணத்திலுள்ள அத்யாத்ம ராமாயண ப்ரபாவம், விஷய அட்டவணை முதலியவைகளுடன் கூடியது.]

ஸ்ரீய: பதியாகிய நாராயணன் ஸ்ரீராமனாக அவதரித்து துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்த சரித்திரத்தைக்கூறும் இந்த அத்யாத்ம ராமாயணம் பார்வதி தேவியாருக்கு பரமசிவனால் உபதேசிக்கப்பட்டது. இதில் ஸ்ரீ ராமர்களின் சரித்திரத்தை வியாஜீகரித்து ஆத்மஸ்வரூபம் கூறப்பட்டிருக்கிறது. அத்யாத்ம ராமாயணம் என்னும் பெயரே இதனுடைய அளவற்ற மகிமையை வெளியிடுகிறது. உலகில் பதிப்பேறிய ஒவ்வொரு க்ரந்தமும் புண்ணியபுருஷர்களின் சரித்திரத்தை கூறும் வியாஜமாய் படன சிரவணஞ் செய்கிறவர்களுக்கு சித்த சுத்தியையும், ஞானத்தையும், மோக்ஷத்தையு மளிக்கிறது. அவ்வித கிரந்தங்களில் இந்த அத்யாத்ம ராமாயணத்தை முதன்மையாகச் சொல்லலாம்.

கலியுகத்தில் கொடும்பாவஞ்செய்தவர்களுக்கு பரகதி கிடைக்கும்மார்க்கம் எந்த நூலில் கூறப்பட்டிருக்கிறதென்று வினவிய நாரதருக்கு பிரம்மதேவர், இந்த அத்யாத்ம ராமாயணமொன்றே அப்பரகதி செல்லும் மார்க்கத்தை கூறுகிறதென்று சொல்லியிருக்கிறார் இவ்வித மகிமை வாய்ந்த இந்த அத்யாத்ம ராமாயணம் ஏழுகாண்டங்களுள்ளது. சரியாய் ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. டிம்மி அளவில் 536-பக்கங்கள்கொண்டது.

முதற்பாகம்:—பாலகாண்டம், அயோத்தியா காண்டம் ஆரண்யகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம் ஆகிய 4-காண்டங்கள் சேர்ந்தது. ... ரூ. 1 0 0

2-வது பாகம்:—சுந்தரகாண்டம் யுத்த காண்டம், உத்தரகாண்டம் சேர்ந்தது. ... ரூ 1 4 0

ண்டு பாகஇரண்டும் சேர்ந்து உயர் உதாலிகோ பயிண்டு கிலிட்டு அக்ஷரத்துடன் கூடியது ரூ 2 8 0
N. B. பாகங்கள் தனித்தனியாகவும் விற்கப்படும்.

——O——

## விஜயகாருண்யம்.

### A Romance in Tamil

**By Mr. Balakrishnan. B. A.**

இஃதோர் தமிழ் நாவல்-இதன்கண் அழகின் ஆர்வமும் உண்மைக்காதலின் வலியும், உயா நட்பின் சிறப்பும், உலக அனுபவத்தின்பயனும், தீமையின் எழ்மையும், வஞ்சகத்தின் இழிவும், வீரச்செய்கைகளின் அருமையும், இடம்பொருள் ஏவலால் மனிதனுக்கு அவனறியாது உண்டாகிற பெருமையுஞ்சிறுமையும், பெரிது மழகமைந்த நடையில் வரையப்பட்டிருக்கின்றன. கதாநாயகனை விஜயத்தின நன்னெறி நிற்றலும் அவன தன்பிற்குரிய காருண்யத்தின் மெய்க்காதலும் எவரும் வியகத்தக்கவை. மகா தேவரின் பெருங்குணமும், விரிந்த மனமும் குறுகிய உள்ளத்தினரைத தம் இழிவை உணரச்செய்யும் காணமற்போன குழந்தை மீண்டும் அநேகவருஷங் கழிந்து வெளிவருவது படிப்பவர்க்காச்சரியத்தையும் உள்ளக்கிளர்ச்சியையும் உண்டாக்கும். மற்றுங் கன்வர்வாழுங்குறிஞ்சி நிலச்சிறப்பும், மலைக் குகைகளின் நிலைமையும் படித்துணர்தற்பாலன. நமது ஜனசமூகத்தில் நாகரிகமுதிர்ச்சியினாலாய பல நீதிகளும் கொள்கைகளும் ஒருங்கே இப்புஸ்தகத்தில் விளங்கும். தமிழ்நாட்டாருக்கு மிகவும் படுமென்றே பிரசுரஞ்செய்யப்பட்டது. கிரவுன் அளவில் 288-பக்கங்கள்கொண்டது.

விலை அணா 12

எஸ். ஜி. ஐயர் அண்டு கம்பெனி.

திருவல்லிக்கேணி சென்னை.


——:O:——



## ஹைகோர்ட் தீர்மானங்கள்

——:O:——

ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

தஞ்சாவூர் ஜில்லா

C. R. P 902 of 1912–12 பிப்ரவரி 1914.

கனகம்மாள் Vs பஞ்சாபகேச உடையார்

வாதி கனகம்மாள் பஞ்சாபகேச உடையாருடைய வைப்பாட்டியாக யிருந்து 2-ம் வாதியாகிய ஒரு மகனையும் இரண்டு பெண்களையும் அவனால் அடைந்து ஷை வைப்புருஷன் காலஞ்சென்றபிறகு மாயவரம் சப்கோர்ட்டில் 1911-ம் வருஷத்திய அசல் நம்பர் 339-இல் கனகம்மாள் தனக்கும் தன் மைனர் குமாரனுக்கும் ஜீவனாம்சம் கிடைக்கவேண்டியதற்காக மகனுக்குத்தான் கார்டியனாகயிருந்து பின் பாக்கியுள்பட மொத்தமாக இருவருக்குமுள்ள பரிகாரத்தை ரூ. 11, 700 ஆக மதிப்பிட்டு அதற்குறிய மஷுண்டு ரூ. 535 கட்டத் தன்னிடம் ஐவேஜில்லாமல் தனக்குள்ள சொத்து முழுவதும் ரூ. 327 விலை மதிப்புள்ளதென்றும் தன் மைனருக்குக் யாதொரு சொத்துமில்லையாதென்றும் சொல்லி தன் பிராதை பாபரில் எற்றுக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டாள்- வாதிகள் பாபர்தானா அல்லவா என்ற விஷயத்தைப்பற்றித் தீர்மானிக்காமல் ஸி. பி. ஸி. ஆர்டர் 33-இன் 5-வது ரூல் படி பாபர் விண்ணப்பம் எழுதப்படாத காரணத்தைச் சொல்லி சப்கோர்ட்டார் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் மனுதார்கள் ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு தாகல் செய்ததில் கீழ்கோர்ட் உத்தரவு ரத்தாகி மனுவைத் திரும்பவும் பயிலுக்கெடுத்துப் பின்வரும் நியாயங்களைக் கவனித்துப் பைசல் கொடுக்கும்படி சப்கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட்டார் உத்தரவில் சொன்ன காரணங்களாவன:—

ஸி. பி. ஸி. ஆர்டர் 33-ரூல் 5-இன்படி பாபர் விண்ணப்பத்தைத தள்ளுபடியெய்வதற்கு ஐந்து வித நியாயங்களுண்டு. (a) 2, 3-வது ரூலில் கண்ட விதமாய் விண்ணப்பம் தயாரிக்கப்பட்டு தாகல் செய்யப்படவேண்டியதில் ஒழுங்கீனம் எற்பட்டிருக்கவேண்டும். (b) மனுதார் வாஸ்தவமாய் பாபரல்லவென்று எற்படவேண்டும்; (c) விண்ணப்பம் கொடுக்குமுன் இரண்டு மாதங்களுக்குள் மோசக்கருத்துடன் அல்லது பாபரில் எற்றுக்கொள்ளப்படும் கருத்துடன் யாதொரு சொத்துக்களைப் பராதீனம் செய்துவிட்டிருக்கவேண்டும்; (d) விண்ணப்பத்தில் பிராது செய்வதற்குத் தகுந்த வியாஜ்ஜியமூலம் எற்படாமலிருக்கவேண்டும்; (e) பிராதின் அம்சங்களைப் பற்றி வேறொருவனுடன் யாதொரு ஒப்பந்தம் செய்துகொண்டு அதனால் மற்றொருவனுக்கு பிராதின் பைசலில் யாதொரு நன்மை லாபம் எற்படத்தக்கதா யிருக்கவேண்டும். சப்கோர்ட்டாருடைய உத்தரவைப் பார்க்குமிடத்து இவ்வைந்தில் எந்த குறையையிட்டு விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தார்களென்று கண்டு பிடிப்பது கஷ்டமாயிருக்கிறது. எதிரி ஒப்புக்கொள்ளுகிறபடி (b), (c), (e) ஆகிய 2, 3, 5,-வது குறைகளைப்பற்றி சப்கோர்ட்டார் யோஜனை செய்யவுமில்லை அதை ஆதாரமாகக் கொண்டு உத்தரவளிக்கப்படவுமில்லையென்று சொல்ல வேண்டியதாகும். இந்த ரிவிஷனில் (a) (d) ஆகிய 1, 4-வது அம்சங்களைப்பற்றித்தான் யோஜிக்கவேண்டியதாகும். 4-வது அம்சத்தின்படி மனுதார்களுக்கு சரியான வியாஜ்ஜியமூலமுண்டா என்று கவனிக்குமிடத்து விண்ணப்பத்தில் வியாஜ்ஜியமூலம் யாதொன்றும் துலங்கவில்லை. யென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்படவில்லை ஆனால் 2-வது மைனர்வாதிக்கு சொத்தில் பாகம்கிடைக்க நியாயமிருக்க அவனுக்காக பாக வியாஜ்ஜியம் தொடுக்கப்படலாமே அப்படியிருக்க அவனுக்கும் ஜீவனாம்ச பாத்தியம் உண்டாவென சப்கோர்ட்டார் சந்தேகப்படுகிறதாகத் தெரிகிறது (மைனரின் தகப்பனும் எதிரியும் அவிபக்தர்களா யிருந்தபடியால் இந்த யோஜனை தோன்றிருக்கும்.) ஆனால் பிரதிவாதிகளே தங்கள் எதிர்வாதத்தில் மைனர் வாதிக்கு பாகம் கிடைக்க நியாயமில்லையென்று சொல்லுகிறார்கள். ஆகவே விண்ணப்பத்தில் சொல்லியவிஷயங்கள் வாஸ்தவமானால் 2-ம் வாதிக்கும் ஜீவனாம்ச பாத்தியதைக்குப் பரிகாரம்தேட நியாயமுண்டென்று சொல்லவேண்டும். 1-ம் வாதியும் ஸ்திரமான வைப்பாட்டியாகயிருந்தால் அவளுடைய ஜீவனாம்ச பாத்தியதையும் வீண்வழக்கென்று சொல்லத்தகாது. 19 மதராஸ் 198-இல் சொல்

லியிருக்கிறபடி பரிகாரத்திற்கு இடமுண்டென்று சொற்ப சந்தேகிக்கப்பட்டாலும் பாபர் மனுவைத் தள்ளக்கூடாது. 4 மதராஸ் 323-ஐ அனுசரித்துச் செய்த 13 மதராஸ் லா ஜர்னல் தீர்மானத்தில் புல்பெஞ்சார் சொல்லியிருக்கிறபடி பாபர் அனுமதியைப்பற்றி பிரதம விஜாரணை செய்யும்பொழுது பரிகார நியாயத்தைப்பற்றி ருஜுபாகம் ஏற்றுக்கொண்டு விஜாரணை செய்யக்கூடாது. மனுவில் இரண்டு பெண்களுக்கும் ஜீவனாம்சம கிடைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறபடியால் கிடைக்கக்கூடாத பரிகாரத்துடன் கூடிய பிராதுக்கு பாபர் அனுமதி கொடுக்கக்கூடாதென்று எதிர்வாதம் செய்யப்படுகிறது. விண்ணப்பத்தில் வியாஜ்ஜியமூலம் யாதொன்றும் கிடையாவிட்டால் தான் தள்ளுபடி செய்யலாமேயொழிய யுக்தமாய் ஏற்பட்டிருக்கிற வியாஜ்ஜியமூலத்துடன் தப்பாக வியாஜ்ஜியமூலமில்லாத (கிடைக்கக்கூடாத) பரிகாரங்கள் சேர்க்கப்பட்டால் விண்ணப்பம் தள்ளுபடியாகவேண்டியதல்ல. கோர்ட்டார் யுக்தமாகத்தோன்றினால் தப்பான பரிகாரத்தை எடுத்துவிட்டு விண்ணப்பத்தை சீர்திருத்திக் கொடுக்கும்படி அனுமதி கொடுக்கலாம். அவ்வித அனுமதிகொடுக்க கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்றும் மனுதாரின் கைவசமுள்ள சொத்தானது நியாயமான பரிகாரத்திற்குறிய மதிப்புக்கு மவுண்டாகுமா அல்லது குறைவாகிறதாவென்று கவனிப்பதற்கு மொத்தபரிகாரமதிப்பிலிருந்து கிடைக்கக்கூடிய பரிகாரத்தின் மதிப்பைப்பிறித்துக் காட்டுவதற்கு விண்ணப்பத்தைத் திருத்திக்கொடாமல் சாத்தியப்படாதென்றும் ஆகவே இவ்வித சந்தர்ப்பத்தில் சப்கோர்ட்டார் விண்ணப்பம் பூராவையும் தள்ளுபடிசெய்ததே சரியான பைசலென்றும், ஏனெனில் பெண்களுக்காக பரிகார மதிப்பு இத்தனையென்றும், மற்றவர்களுக்கு இத்தனையென்றும் பிறித்துச் சொல்லப்படாத படியாலும் பெண்களுடைய பரிகாரத்தை நீக்கிவிட அனுமதிகொடுத்து விண்ணப்பத்தைத் திருத்தச்சொல்ல அதிகாரம் கிடையாதென்றும் எதிர்க்காக வாதிக்கப்படுகிறது. அந்தவாதம் செல்லாது. ஏனெனில் தப்பான வியாஜ்ஜியமூலங்கள் அல்லது பரிகாரங்கள் ஒன்றோடொன்று கலக்கப்படும் பிராதுகளைத் திருத்தும்படி அனுமதிக்கொடுக்க கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டு. ஆர்டர் 6-ரூல் 17-ஐப் பார்க்கவும். பிராதைமட்டும்தான் அவசியமாய்த் திருத்தலாம். பாபர் விண்ணப்பம் அனுமதி கிடைத்தபிறகு தான் பிராதாக ஏற்படுகிறது. ஆர்டர் 33-ரூல் 8 ஐப் பார்க்கவும். ஆனால் ஒரு பாபர் மனுவைத் திருத்திக் கொடுக்கும்படி அனுமதிகொடுக்கக் கோர்ட்டாருக்கு சட்டமுறையிற் ஏற்படத் தேவையில்லாத இயற்கையான அதிகாரமுண்டென்று சொல்லவேண்டும். தவிர பிராதுகள் விஷயமாய் ஏற்பட்டிருக்கிற வழிபாடுகள் மற்ற நடவடிக்கைகளுக்கும் ஏற்குமென்று 141-வது பிரிவில் சொல்லியிருக்க பாபர் விண்ணப்பத்தையும் மற்ற நடவடிக்கைகளில் ஏன் சேர்க்கக்கூடாது. ஆகவே விண்ணப்பத்தைத் திருத்தக்கூடாத அசந்தர்ப்பத்தைப்பற்றிய எதிர்வாதம் பிரயோஜனப்படாது.

விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்வதற்குறிய (a)-1-வது நியாயத்தைக் கவனித்தால் 2-3-வது ரூல்படி விண்ணப்பம் வரையப்படாத காரணம் ஆதாரமாக ஏற்படவேண்டும். 2-வது ரூலின்படி பிராதில் காணப்படவேண்டிய அம்சங்களும் ஷெடியூல் விபரமும் உறுதிமொழிக் கையொப்பமும் சரியாயிருக்கவேண்டும். இந்த விண்ணப்பத்தில் அவ்வித குறைகளிருப்பதாய்த் தோன்றவில்லை. 3-வது ரூலைக் கவனித்தால் மனுதார் அல்லது அவருடைய பவர்பெற்ற ஏஜண்டு மனுவை தாகல்செய்யவேண்டும். அதிலும் குறைவேர்ப்பட்டதாகக் காணப்படவில்லை. ஒருக்கால் சப்கோர்ட்டார் 1-ம் வாதிக்குறிய ஜீவனாம்சபாத்தியமும் 2-ம் வாதிக்குறிய ஜீவனாம்ச பாத்தியமும் வெவ்வேறு காரணங்களைப் பற்றியதாக யோஜித்து அவைகள் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டிருப்பது பிசகென்று விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்திருக்கலாமென்று தோன்றுகிறது. பிராதில் காணவேண்டிய 9 அம்சங்களும் ஆர்டர் 7-ரூல் 1-இல் கண்டிருக்கிறது. அந்தப்படியுள்ள அம்சங்கள் விண்ணப்பத்திலிருக்க வேண்டுமென்று ஆர்டர் 33-ரூல் 2-இல் சொல்லியிருக்கிறது. பிராதில் சட்டப்பிசகான அம்சங்கள், ருஜுபாகத்தைப்பற்றிய விவரங்கள், தப்பாய் பரிகாரங்கள் சேர்ப்பது, சேர்க்கவேண்டியதைத் தவறவிடுதல் ஆகிய விஷயங்களைப்பற்றி குறைவு ஏற்பட்டால் அவைகள் ஆர்டர் 7-ரூல் 1-இன்படி பிராதில்



காணப்படவேண்டிய 9-அம்சங்களில் சேர்ந்ததாகச் சொல்ல நியாயமில்லை. இரண்டு வாதிகளுக்கும் ஜீவனாம்ச பாத்தியதையைப்பற்றி வியாஜ்ஜியமூலம் தப்பாக சேர்க்கப்பட்டதென்று சொல்லவும் நியாயமில்லை. ஆர்டர் 1-ரூல் 1-இன்படி பலவாதிகள் வெவ்வேறு வியாஜ்ஜியமூலங்களையுடையவர்களாயினும் ஒவ்வொருவருடைய பாத்தியதைக்கும் ஒரே நடவடிக்கை காரணமாக ஏற்பட்டு தீர்மானிக்கப்பட வேண்டிய சட்டபாயிண்டு அல்லது ருஜுபாயிண்டு ஒன்றாக ஏற்பட்டால் எல்லோரும் ஒரே பிராதில் பரிகாரம் தேடலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஷை விதியை அனுசரித்தே 17-கல்கத்தா வாரக்குறிப்புகளின் 341-இல் புருஷன் பெண்சாதி பிள்ளை ஆகிய மூவரும் ஒரே பிராதில் ஜீவனாம்ச பரிகாரம் தேடலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விண்ணப்பத்தில் மனுதார்களுக்கு பரிகாரம்தேட நியாயமேற்பட்டிருப்பதால் சப்கோர்ட்டார் பாபர்விண்ணப்பத்தை தள்ளுபடிசெய்தது பிசகென்று மேற்கண்டவிதமாய் ரிமாண்டு உத்தரவளிக்கப்பட்டது.

———:O:———

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

———o———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் எய்லிங்

C. M. P. 442 of 1914-10 மார்ச்சு 1914:—

ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாகல் செய்யப்பட்டு பெண்டிங்காக யிருக்கிற பொழுது எதிரி கீழ்கோர்ட் டிக்கிரீயை நிறைவேற்ற யத்தனிக்கையில் 2-வது அப்பீல் பைசலாகுமட்டும் நிறைவேற்று நடவடிக்கையை நிறுத்திவைக்கவேண்டுமென்று அப்பீல் வாதி ஹைகோர்ட்டில் சில்லரைமனுக் கொடுத்ததில் எதிரிக்கு அந்த மறியல் விண்ணப்ப நோடீஸ் ஸர்வாகி இருதரத்தாருடைய சம்மதத்தின் பேரில் டிக்கிரீபாக்கிக்குத் தக்கபடியான ஒரு ஸ்தாவரசொத்தை ஒரு குறித்தவாய்தாவுக்குள் ஜாமீனாக எழுதிவைப்பதாய் அப்பீல் வாதி ஒப்புக்கொண்டதின் பேரில் நிறைவேற்று நடவடிக்கை நிறுத்தப்பட்டது. அப்பீல் வாதி குறித்த வாய்தாவுக்குள் சொத்து ஜாமீன் கொடுக்கத் தவறினபடியால் மறுபடியும் ஹைகோர்ட்டில் தவணைக்காக விண்ணப்பஞ்செய்துகொண்டதில் எதிரி ஷை விண்ணப்பத்தை ஆக்ஷேபிக்கவே ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் 1891-வாரக்குறிப்புகள் 170, (1837) 6 L. J. Ch. 201-யும் அனுசரித்து இருதரத்தாருடைய சம்மதியின்படி யாதொரு வாய்தா குறிக்கப்பட்டிருந்தால் மறுபடியும் சம்மதமன்னியில் அந்த உத்தரவைமாற்றி வேறு வாய்தா கொடுக்கக்கூடாதென்று தீர்மானித்தார்கள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் துரையவர்கள் கோர்ட்டாருக்கு அதிகாரமுண்டாவென்பதைப்பற்றி நிச்சயமான அபிப்பிராயங்கொள்ளாமல் கேஸின் தன்மையையும் சந்தர்ப்பங்களையும் கவனித்து வேறு வாய்தா கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

———o———

ஜஸ்டிஸ் டையாப்ஜீ & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

A. S. 213 of 1911-11 மார்ச்சு 1914.

டிக்கிரீதார் எதிரியின் சொத்துக்களை ஜப்தி செய்த உடன் ஒருவன் பாத்திய மனு கொடுத்ததில் அது தள்ளுபடியாச்சுது. அதன்பிறகு எதிரியோ ஜப்தியான சொத்து ஏலம்போட லாயக்குள்ளதல்லவென்று ஆக்ஷேபணை செய்ததில் கோர்ட்டார் ஜப்தியை ரத்துசெய்து விட்டார்கள், அதன்பேரில் டிக்கிரீதார் ஹைகோர்ட்டுக்கு எதிரியை மட்டும் பார்ட்டியாகச்சேர்த்து அப்பீல் செய்ததில் ஹைகோர்ட்டார் எதிரியைப் பற்றினமட்டில் ஜப்தியைக் காயப்படுத்தினார்கள். அதாவது ஜப்திசொத்தானது எதிரியினுடையதென்றும் அவை ஏலத்திற்கு யோக்கியமானதென்றும் ஏற்பட்டு ஜப்தி நிலைத்தது. அதன்பேரில் பாத்திய மனுதார் தன்னுடைய பாத்தியத்தை ஸ்தாபிக்கும்பொருட்டு அசல் தாவா கொண்டுவந்ததில் அந்த தாவா காலாவதி தோஷமென்று ஆக்ஷேபிக்கப்பட்டது. அதாவது பாத்தியமனு தள்ளுபடியானதுமுதல் ஆர்டிகில் 11-இன்படி ஒருவருஷத்திற்குள் பிராது தாகல்செய்யப்பட வில்லையென்று ஆக்ஷேபிக்கப்பட்டது. ஜப்தியானது முதலில் ரத்தாகி அதன்பின் ஹைகோர்ட் அப்பீல் நடவடிக்கையில் பாத்தியமனுதார் பார்டியாக சேர்க்கப்படாதகாரணத்தால் அப்பீல் தீர்மானம் அவரைக் கட்டுப்படுத்தாதென்றும் ஜப்தி முந்தி

யே ரத்தாகிவிட்டபடியால் அதன்பின் பாத்திய மனுதார் தாவாசெய்யவேண்டிய அவசியம் நீங்கிற்றென்றும் அப்பீலில் ஜப்தி திரும்பவும் நிலைத்தமையால் அசல் வியாஜ்ஜியம் செய்ய எதுகரமாச்சுதென்றும் சொல்லி பிராதுக்குக் காலாவதி தோஷமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் ஏயிலிங்

**L. P. A. 4 of 1914—10 மார்ச்சு 1914**

வாதியின் பேரிலும் பிரதிவாதியின் பேரிலும் ஜாயிண்டாக ஏற்பட்ட டிக்கிரீத் தொகையில் பிரதிவாதியால் செலுத்தப்படவேண்டிய மூன்றிலொருபாகத்தையும் சேர்த்து வாதி டிக்கிரிதாரனுக்குச் செலுத்திவிட்டு பிரதிவாதியின்பேரில் அந்த மூன்றில் ஒரு பாகத்தையும் வட்டியையும் வசூலிக்க தாவா செய்ததில் பிரதிவாதி 4-இல் ஒரு பங்குமட்டும் தான் செலுத்தக்கடவனென்று சொல்லியும் அந்த பாகத்தையாவது செலுத்தவுமில்லை. தாவா சமயத்தில் கோர்ட்டில் அத்தொகையை ஆஜர் படுத்தவுமில்லை. அப்படியிருக்கும் சந்தர்ப்பத்தில் பிரதிவாதி ஒப்புக்கொண்ட 4-இல் ஒரு பாகத் தொகைக்குறிய வட்டியையும் கூட செலுத்தக்கடவரென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் ஏயிலிங்

**L. P. A. 170 of 1912—9 மார்ச்சு 1914.**

தகப்பனால் ஏற்பட்ட பாக்கிக்காக வாதி அவனுடைய மகன்பேரில் புது ஸி. பி. ஸி. நமோதுக்கு வருமுன் தாவா செய்து ஹைகோர்ட் அப்பீலில் புது ஸி. பி. ஸி. நமோதுக்கு வந்தபின் தகப்பன்பட்ட கடன் துர் விஷயத்திற்காகவும் சட்ட விரோதமான காரணத்திற்காகவும் வாங்கப்பட்டதாகவும் ருஜுபாகமில்லாதபடியால் மகன்பேரில், தகப்பனிடமிருந்து வாரிஸ் பாத்தியதையால் சென்ற சொத்துக்களைப் பொருத்தமட்டில் டிக்கிரிபெற்றார். நிறைவேற்றுங்காலத்தில் மகன் இறந்துபோகவே அந்த சொத்துக்கள் அவனுடைய பற்பல வாரிஸ்களுக்கும் பிறிந்துபோன போதிலும் அவைகள் டிக்கிரி கடனுக்குக் கட்டுப்பட்டவைகளென்றே தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

ஜஸ்டிஸ் ஒல்ட் ஃவீல்ட்

**C. R. P. 855 of 1912—24 பிப்ரவரி 1914.**

ஒரு ரிஸீவர் பேரில் தாவா செய்யவேண்டுமானால் கோர்ட்டாருடைய அனுமதி பெற்றிருக்கவேண்டும். அவ்வித அனுமதி அடையாமல் செய்யப்பட்ட பிராதைத் தள்ளுபடிசெய்யவேண்டியது நியாயமாகுமேயொழிய அவ்வித அனுமதியில்லாமல் வழக்கெடுத்ததற்காகக் கோர்ட்டார் அதிகாரத்தை மீறி நடந்த குற்றத்திற்குமட்டும் ஆளாகிறதாகவும் பிராது சட்டவிரோதமல்லவென்றும் சொல்லக்கூடாது.

——— O ———

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

**C. R. P 390 of 1912—24 பிப்ரவரி 1914.**

இந்தியாவில் ஏற்படும் கிறய தஸ்தவேஜிகளில் பொதுவாய் கலன் ஏற்பட்டால் நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்க வேண்டிய நிபந்தனை குறிக்கப்படாதபோதிலும் அந்த நிபந்தனை உண்டென்றே அனுமானிக்கிற வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. கிரயமாகி சுவாதீனம் பெற்றபின் மேலான பாத்தியதை யுடையவன் சொத்தை வசப்படுத்திக்கொண்டால் கிறய நடவடிக்கைக்குப் பிரதிப்பிரயோஜனம் தவறிப்போகிற படியால் கிறயதார் செலுத்திய தொகையைத் திரும்பி அடையபாத்தியமுண்டு. அதற்குப் பரிகாரம் தேட காலாவதி சுவாதீனம் நீங்கின தேதிமுதல் தொடங்குகிறது.

———□———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர்

**C. M. P- 1898 of 1913—27 பிப்ரவரி 1914.**

அப்பீல் பெண்டிங்காக இருக்கையில் அப்பீல் வாதி இறந்ததகவல் தெரியாமல் கோர்ட்டார் அப்பீலை மேல் நடத்தத் தவறின காரணத்தால் டிஸ்மிஸ் செய்தபோதிலும் அப்பீல் வாதி இறந்த தேதி முதல் 6-மாதத்திற்குள் அவனுடைய வாரிஸ்தார் தன்னை ரிகார்டில் சேர்க்கும்படியும் அப்பீலை மேல் நடத்தும்படியும் விண்ணப்பம் கொடுக்க முந்தி டிஸ்மிஸ் ஆன உத்தரவு தடையாகாது. அந்த உத்தரவே நிஷ் பிரயோஜனமாகிறது. 17 கல்கத்தா வாரக்குறிப்புகள் 829 இல் பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தைப் பார்க்கவும்.

———:O:———



**Crl R .Case 681 of 1913-2 மார்ச்சு 1914.**

வாணியம்பாடியில் இங்கிலீஷ் தெரிந்தவர்கள் யாருமில்லையென்றும் அந்த ஸ்தலத்தில் முனிசிபல் சேர்மென் வேலைக்காகத் தெரிந்தெடுப்பதற்கு லாயக்கானவர்கள் யாருமில்லையென்றும் ஒருவன் எழுதியதில் அவ்வசனங்கள் மானநஷ்டத்திற் குறியவைகளல்லவென்று தீர்மானிக்கப்பட்டன.

———:O:———

**S. A. 599 of 1911-2 மார்ச்சு 1914.**

ஒருவன் கிறயம் செய்துகொடுப்பதாயும் மற்றொருவன் கிறயத்தொகையைச் செலுத்திவிடுவதாயும் ஒப்புக்கொண்ட விஷயத்தில் கிறயத் தொகையைக் கேட்குமுன் விக்கிறயம் எழுதிக் கொடுத்துவிடவேண்டியதவசியமாகும். கிறயத் தொகையைச் செலுத்த அசட்டையாயிருந்த சந்தர்ப்பத்தால் விக்கிறய ஏற்பாட்டிலிருந்து பின்வாங்கிக்கொண்டதாக அனுமானிக்கப்படாது.

———:O:———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் டையர்ப்ஜீ

தஞ்சாவூர் ஜில்லா

**S. A. 1125 of 1912-23 டிசம்பர் 1913**

கிருஷ்ணம்மாள் Vs ஸௌந்தரராஜய்யர்

பிரதிவாதி கிருஷ்ணம்மாள் தாவா சொத்துக்களை வாதிக்கு விக்கிறயம் செய்வதாக ஒப்புக்கொண்டும் அந்தப்படி செய்யத் தவரினபடியால் வாதி நாகப்பட்டணம் டி-மு கோர்ட்டில் முதலில் பிரதிவாதியின்பேரில் விக்கிறய உடன்படிக்கையின்படி கிறய தஸ்தவேஜை எழுதிக்கொடுக்கவேண்டுமென்று வியாஜ்ஜியம் செய்து டிக்கிரீபெற்றபிறகு 1910-ம் வருஷத்திய அசல் நெ. 299-இல் தாவா சொத்தில் ஷை விக்கிறய பாத்தியதையை அனுசரித்து சொத்தை சுவாதீனமடையும்பொருட்டு வேறு பிராது செய்தார். பிரதிவாதி ஆன்ஸரில், முதல் பிராதில் வாதி இருவித பரிகாரம் தேடவேண்டியதிருக்க சுவாதீன பரிகாரத்தை முந்திய பிராதில் சேர்க்காமல் பிந்தி வேறு பிராது செய்வது ஸி. பி. ஸி. ஆர்டர் 2-இன், ரூல் 2-க்கு விரோதமாயிருப்பதாயும் இரண்டுபரிகாரங்களுக்கும் ஒரே வியாஜ்ஜியமூலமாகயிருப்பதால் அதாவது கிறயம் பெறுவதற்குறிய வியாஜ்ஜியமூலமும் சுவாதீன மடைவதற்குறிய வியாஜ்ஜியமூலமும் பொதுவான விக்கிறய உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தைப்பற்றியதால் இரண்டு பரிகாரங்களையும் ஒரே தாவாவில் தேடியிருக்கவேண்டுமென்றும் ஆகவே இந்த தாவா பிடிக்கத்தக்கதல்லவென்றும் எதிர்வாதம் செய்து அதற்காதாரமாக 21 மதராஸ் 24-இல் ஜஸ்டிஸ் ஷப்பர்ட் துரையவர்களும் ஜஸ்டிஸ் போடாம் துரையவர்களும் கொடுத்திருக்கிற தீர்மான அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டினார்கள். டி-மு கோர்ட்டாரும் அப்பீலில் சப்கோர்ட்டாரும் விக்கிறய உடன்படிக்கையில் விக்கிறய சொத்தை சுவாதீனம் செய்து கொடுக்க வேண்டுமென்ற அம்சம் இடையாதென்றும், ஆகையால் அந்த உடன்படிக்கையின்பேரில் கொண்டுவந்த முன் வியாஜ்ஜியத்தில் சுவாதீனத்திற்கும் சேர்த்துப் பரிகாரம் தேட நியாயமில்லையென்றும், அபிப்பிராயப்பட்டு எதிர்வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் வாதி கோறியபடி சுவாதீன டிக்கிரீயளித்தார்கள். அதன்பேரில் எதிரி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அப்பீலை ஈரங்கிகேட்டஉானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்களின் அபிப்பிராயமாவது:— வாதி முந்திய பிராதில் சுவாதீனத்திற்காகவும் சேர்த்துப் பரிகாரம் தேடியிருக்கலாமென்றும் ஆனால் முன் தாவா காலத்தில் வாதிக்கு சுவாதீன பாத்தியதை ஏற்படாத காரணத்தால் அந்தப் பரிகாரமும் தேடவேண்டிய கடமையில்லையென்றும், கிறய தஸ்தவேஜினால் சொத்து பாத்தியதை ஏற்பட்ட பிறகுதான் சுவாதீன பாத்தியதை ஏற்பட நியாயமாகுமென்றும் சுவாதீன பாத்தியதையானது கேவலம் விக்கிறயத்தைச் சேர்ந்த அம்சமாகவும் அதற்குள்ளடங்கிய அம்சமாகவும் சொல்லக்கூடாதென்றும், விக்கிறய பாத்தியதையைப்பற்றி பரிகாரம் தேடுவதற்கு வாதி எதிரியை அதாவது உடன்படிக்கை செய்துகொண்ட சொத்து பாத்தியஸ்தனைமட்டும் பார்ட்டியாகச் சேர்த்தால் போதுமென்றும் சுவாதீனப் பிராதிலோ சொத்தில் அனுபோக பாத்தியதையுடைய குடித்தனக்காரர்கள் முதலியவர்களை யெல்லாம் பார்ட்டிகளாகச் சேர்க்கவேண்டியதாகுமென்றும், ஆகையால் இரண்டு பிராதையும் ஒன்றாகக் கொடுக்க

சாத்தியப்படாதென்றும் சொல்லி இந்த சுவாதினப் பிராதுக்கு தோஷமில்லையென்று தீர்மானித்து 2-வது அப்பீலை தள்ளுபடி செய்தார்கள்.

மேற்கூறிய அபிப்பிராயத்திற்கு ஒற்றுமையாகத் தீர்மானம் கொடுத்த ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீயவர்கள் சொன்ன காரணச் சுருக்கமாவது:— 22 மதராஸ் கேஸில் விக்கிரயம் பெறவேண்டிய பாத்தியதையுடன் சுவாதீனமடையவேண்டிய பாத்தியதையும் கூடவே உண்டாகிறதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நியாயத்தின் கருத்து நன்கு விளங்கவில்லை. இரண்டு பாத்தியதையும் ஒட்டாக ஏற்பட்டபோதிலும் ஒன்றுக்கு மற்றொன்று மூலாதாரமாகயிருக்க நியாயமில்லை. இரண்டுக்கும் பிரத்தியேகமான வேறொரு மூலாதாரமிருக்கவேண்டும். அதாவது இந்தக் கேசைப்போலொத்த ஒரு விக்கிரய உடன்படிக்கை இரண்டுக்கும் ஒரே வியாஜ்ஜியமூலமாக யிருக்கவேண்டும். அல்லது பொது நியாயமுறையால் இரண்டு பரிகாரங்களுக்கும் ஒரே காரணம் ஏற்பட்டிருக்கவேண்டும். விக்கிரயஉடன்படிக்கையிலேயே இரண்டு பரிகாரங்களுக்கும் தனித்தனியான மார்க்கம் ஏற்பட்டிருந்தால் ஒரே சமயத்தில் இருவித பரிகாரமும் ஏற்பட்டிருக்க இரண்டும் ஒட்டாகவே செல்லுமென்று சொல்லலாம் 22 மதராஸ் கேசில் அவ்வித உடன்படிக்கையிருந்ததாகச் சொல்லி அபிப்பிராயங் கொடுத்ததாகக் காணப்படவில்லை. அதில் ப்ராபர்டி ஆக்ட் 55-வது பிரிவின் அம்சங்களின்படி ஒவ்வொரு விக்கிரய உடன்படிக்கையிலும் சுவாதீனப்படுத்தும கடமையும் கூடச் செல்வதாக கருதப்பட்டு அவ்வித அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிர 18-பம்பாய் 537-இல் சீவ் ஜஸ்டிஸ் ஸார்ஜெண்டு துரையவர்கள் கொடுத்திருக்கிற அபிப்பிராயத்திற்கு விரோதமாக விக்கிரய உடன்படிக்கையின்பேரில் ஏற்படும் சுவாதீன வியாஜ்ஜியமூலமும் கிரய தஸ்தவேஜின்படி ஏற்படுகிற சுவாதீன வியாஜ்ஜியமூலமும் ஒன்றேயென்பதாகவும் 22 மதராஸ் கேசின் தீர்மானத்தில் சொல்லப்படுகிறது. அந்த அபிப்பிராயத்தை அனுசரிக்க நியாயமில்லை. ஏனெனில் கிரய தஸ்தவேஜானது ரெஜிஸ்டர்செய்து முடிக்கப்படுமுன் சுவாதீன பாத்தியதை ஏற்பட நியாயமாகாது. கிரயதார் சொத்தைசுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று சட்ட மிருக்கிறது. ஆனால் கிரயதஸ்தவேஜி ரெஜிஸ்டராகி முடியுமட்டும் கிரயமேஸ்தியில்லாதிருக்க கிரயதாரின்கடமை எப்படி ஏற்படும்? ப்ராபர்டி ஆக்டில் 55-வதுபிரிவில் கிரயம் முடியு முன்னமேயே கிரயதார் சிலவித கடமைகளைச் செலுத்தவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அதாவதுகிரயமாகுமுன் சொத்தைப்பற்றிய தகவல்களைத் தெரிந்தமட்டில் சொல்லவேண்டும். அதுபோலவே கிரயமாகுமுன் சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று சொல்லக்கூடாது. 55-வது பிரிவின் சில உட்பிரிவுகளின்படி கிரய தஸ்தவேஜு முடியுமுன் சில கடமைகளும் பிந்திய உட்பிரிவுகளின்படி கிரய தஸ்தவேஜு ரெஜிஸ்டர்செய்து கொடுக்கப்பட்ட பிறகு செய்யவேண்டிய சில கடமைகளும் விதிக்கப்பட்டிருக்கின்றதாகச் சொல்லலாம். அதாவது சுவாதீனம் செய்யவேண்டிய கடமையானது கிரயதஸ்தவேஜினால் சொத்து பாத்தியதை மாற்றப்பட்டபிறகு ஏற்படவேண்டிய கடமையாகிறது. ஆகவே ஒரு விக்கிரய உடன்படிக்கையினாலேயே கிரயதஸ்தவேஜினால் சொத்து பாத்தியதை மாற்றப்படும் நடவடிக்கைக்குச் சம்பந்தமில்லாமல் சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டிய கடமையானது சட்ட கர்த்தாக்களால் உத்தேசிக்கப்பட்டதாகச் சொல்லக்கூடாது. உடன்படிக்கையிலேயே கிரயம்செய்து கொடுக்க ஒப்புக்கொண்டு அந்த ஒப்பந்தத்தை அனுசரித்தே வாதி சொத்தை சுவாதீனப்படுத்திக் கொள்ளலாமென்று பிரத்தியேகமான வசனங்களால் அனுமதிபெற்று கிரயத்ஸ்தவேஜு முடியுமுன் சுவாதீனமடையும் சந்தர்ப்பங்களுண்டு. ரயத்துகையில் ஒருபாகம் உடன்படிக்கைத் தேதியில் கொடுக்கப்படலாம். அதற்காக கிரயமாகுமுன் சுவாதீனமடைய ஒப்பந்த மேற்படக்கூடும். அவ்விதமான ஷரத்துக்களைபபற்றிய கேஸானது 24 மதராஸ்491-இல் தீாமானிக்கப்பட்டிருக்கிறது. அவ்வத்தீர்மானத்தை எதிரிக்கனுகூலமாய் எடுத்துச் சொல்லப்படுகிறது. ஆனால் அந்தகேசின் சந்தர்ப்பங்கள் வித்தியாஸமானதாகும். விக்கிரய உடன்படிக்கையில் சுவாதீன ஷரத்தும் கண்டிருக்க முதலில் கோர்ட்டுக்கு சுவாதீன மடையவேண்டுமென்று கொண்டுவந்த பிராதில் உடன்படிக்கை பிறந்த விஷயத்தையும் மற்ற தகவல்களையும் ருஜுப்படுத்தவேண்டியதாயிற்று. உடன்படிக்கையில் கண்ட அம்சங்களெல்லாம் ருஜுபாகத்தில் ஏற்பட்டது. பிராதில் வாதி கிரயம்பெறவேண்டிய பரிகாரத்தைக் குறிக்காமல் சுவாதீனத்திற்கு மட்டும் டிக்கிரியை அபேக்ஷித்ததில் அந்தப்படிக்கு டிக்கிரிபெற்றபின் கிரயம் பெறுவதற்காக வேறு பிராது கொண்டுவந்தால் முன் விடப்பட்ட ருஜுபாகத்தையே திரும்பவும் விட்டு அதே வியாஜ்ஜியமூலத்தைக் கொண்டு பரிகாரம் தேடக்கூடாதென்று பிந்திய பிராது தள்ளுபடியாச்சுது. அது நியாயமே.



இந்தக்கேசின் சந்தர்ப்பங்கள் வேறுவிதமாகயிருக்கின்றன. விக்கிரய உடன்படிக்கையில் சுவாதீனத்தைப்பற்றிய ஷரததே கிடையாது. உடன்படிக்கையால் சுவாதீன பாத்தியதையும் உண்டானதாக ஒப்புக்கொண்டாலும் அந்த சுவாதீன பாத்தியதை கிரய தஸதவேஜுக்கு மூந்தியே கிடைக்கவேண்டியதாகவும் அப்படிக்கி சுவாதீனம் கொடுக்கப்படாத காரணத்தால் உடன்படிக்கைத்தேதியிலிருந்து கிரயமாகுமட்டுமுள்ள காலத்திற்குறிய மாசூல் நஷ்டத்திற்காக பிந்திய சுவாதீனப் பிராதில் நஷ்ட பரிகாரம் தேடவேண்டுமானால் உடன்படிக்கையின்பேரில் நடத்துகிற முந்திய பிராதில் கிரயமாகுமுன்னமேயே சுவாதீனமடைய பாத்திய முண்டென்றும் பரிகாரம் கேட்டிருக்கவேண்டும். இல்லாவிடில் மாசூல் நஷ்டத்திற்காகப் பிந்திய பிராதில் (கிரயத்தை அனுசரித்துக்கொண்டுவரும்பிந்திய பிராதில், பரிகாரம்தேடத் தடையாகும். அந்தப்படி 11-மதராஸ் 15-இல் தீர்மானமிருக்கிறது. இந்தப்பிராதில் வாதி அவ்விதமான நஷ்டத்திற்காக தாவா செய்யவுமில்லை. கிரயமானபிறகு கிரய பாத்தியதையைக் கொண்டு வியாஜ்ஜியமூலம் ஏற்பட்டதாகச் சொல்லி சுவாதீனப் பரிகாரம் கேட்கிறார். அந்த பாத்தியமானது முதல் தாவா காலத்தில் ஏற்படவேயில்லை. 18-பம்பாய் 537-இல் அந்தக்கருத்தாகவே சீவ் ஜஸ்டிஸ் ஸார்ஜெண்டு துரையவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தக்கேசில் விக்கிரய உடன்படிக்கையின்படி கிரயமாகுமுன் சுவாதீனமடைய லாயக்குடையவராகி முதல் பிராதில் தனக்கு சுவாதீனம் கிடைத்துவிட்டதாகவே ஒப்புக்கொண்டு கிரய தஸ்தவேஜை அடையும்பொருட்டு பரிகாரம்தேடி டிக்கிரிபெற்று அதன்பின் சுவாதீனத்திற்காக வேறு பிராது செய்ததில் முந்திய பிராதிலேயே சுவாதீனப்பரிகாரம் சேர்த்திருக்கப்பட வேண்டியதாகவும் சுவாதீனத்தை ஒப்புக்கொண்ட அசந்தர்ப்பத்தால் அதையும் சேர்க்காம லிருந்தபோதிலும் பிந்திய வேறு பிராது சுவாதீனத்திற்காகக் கொண்டுவரக் கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (முதல் பிராதில் விக்கிரயத்தை அடைவதற்கு ருஜுபாகத்தை பலப்படுத்தும்பொருட்டு சுவாதீனம் கிடைக்குமுன் சுவாதீனம் அடைந்ததாக ஒப்புக்கொண்டிருக்க அந்த யுக்தியானது பிந்திய சுவாதீனப் பிராதுக்கு இடையூராய் விளைந்தது.) ஆனால் அதே வழக்கில் வாதியினுடைய மற்றொரு வியவகாரத்தை ஏற்றுக்கொண்டு கிரய தஸ்தவேஜு பிறந்தபின் கிரய பாத்தியதையை அனுசரித்து அந்த வியாஜ்ஜியமூலத்தைக் கொண்டு சுவாதீனப்பிராது தாகல் செய்யலாமென்று வாதிக்கனுகூலமாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே உடன்படிக்கையின் பேரில் ஏற்படும் வியாஜ்ஜியமூலமும் கிரய தஸ்தவேஜினால் ஏற்படும் வியாஜ்ஜியமூலமும் ஒன்றேயல்லவெனக் கூறவேண்டியதாகும். தவிர கோர்ட்டார் 8-கல்கத்தா 483-இன் 574-இல் சொல்லப்பட்டிருக்கிறபடி ஒருவனுக்கு விக்கிரய தஸ்தவேஜி எழுதிக்கொடுக்கப்பட வேண்டுமென்று டிக்கிரியளித்து அதனால் வாதிக்கு சொத்து பாத்தியதை ஏற்பட்ட பிறகு அந்த பாத்தியதையை அனுசரித்து முடிவான பரிகாரம் (சுவாதீன பரிகாரம்) கேட்டால் முந்திய பிராதில் கேட்காததையிட்டு பரிகாரம் கொடுக்கக் கூடாதென்று சொல்வது வியக்கத்தக்கதாகும். பாத்தியஸ்தாபன டிக்கிரிக்குப் பின் அதைப்பற்றிய முடிவான பரிகாரத்திற்காக வேறு தாவாசெய்ய லாயக்குண்டென்று சொல்லத்தகும். ஆகவே இந்தக்கேசில் வாதி சுவாதீனப்பரிகாரம் கேட்டது முந்திய பிராதின் குறைவால் தடைபட நியாயமில்லையென்று 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது.

———:O:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பேன்ஸர்.

கோயமுத்தூர் ஜில்லா.

### S. A. 722 of 1912-7 நவம்பர் 1913

*பழனியப்பன் Vs சுப்பராய கவுண்டன்*

பழனியப்பன் என்கிற மைனர் வாதியின் தகப்பன் தாவா சொத்துக்களை 1902 ஜூன் 23 இல் பிரதிவாதியின் பேருக்கு ரூ. 300-க்கு சுத்தவிக்கிரயம் செய்து அவரிடத்தில் எதிரிடையாக ஜூன் 25-இல் ஒரு உடன்படிக்கைப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டதில் தான் விக்கிறயத் தேதிமுதல் 6-வருஷங்களுக்குள் விக்கிறயத்துகை ரூ 300-யும் பிரதிவாதிக்குச் செலுத்திவிடும்பட்சத்தில் பிரதிவாதி தாவாசொத்தைத் தனக்குத் திரும்பிக் கொடுத்து மறுவிக்கிறய தஸ்தவேஜு எழுதிக்கொடுக்க வேண்டியதாகவும் ஒப்பந்தம்செய்து கொள்ளப்பட்டதும் தவிற வாதியின் தகப்பன் திரும்பிக்கொடுக்க வேண்டியதுகை ரூ. 300-யும் வேறு யாரிடமும் ஷை சொத்தை ஈடாகவைத்து அல்லது வேறு விதமாய் பராதீனம் செய்து கடன் வாங்காமல் வாதியின் தகப்பன் தன்னுடைய சொந்த சம்பாத்தியத்திலிருந்து கொடுக்கவேண்டுமென்றும், அந்த 6-வருஷத் தவணைக்குள் மேல்கண்டவிதமாய் துகைசெலுத்தப்படாத பட்சத்தில் தாவாசொத்தில் அதன்பிறகு வாதியின் தகப்பனுக்குயாதொருபாத்தியதையும் கிடையாதென்றும் ஆகிய ஷரத்துக்கள் ஷை எதிரிடை உடன்படிக்கையில் கண்டிருந்தது. இரண்டு தஸ்தவேஜுகளும் ஒரேதேதியில் எழுதப்படாதபோதிலும் அவைகள் ஒரே காலத்தில் ரெஜிஸ்டர்செய்து கொடுக்கப்பட்டன. வாதியின் தகப்பன் காலஞ்சென்றபிறகு எதிரிடையில் கண்ட 6-வருஷ கெடுகடந்த 18-மாதங்களுக்குப்பின் மைனர் வாதி தன் தாயாரைக்கொண்டு ஈரோடு டி-மு-கோர்ட்டில் விக்கிறயத்துகை ரூ. 300-யும் செலுத்திவிடுவதாய்ச்சொல்லி பிரதிவாதி தாவாசொத்தை மறுவிக்கிறயம்செய்து கொடுக்கக்கடவனென்று தீர்மானிக்கும் பொருட்டு அசல் தாவாசெய்ததில் ப்ராபர்டி ஆக்ட் 58-வது பிரிவின் கிளாஸ் (c)-யில் விவரித்திருக்கிறபடி இரண்டு தஸ்தவேஜுகளும்சேர்ந்து கவனிக்கப்படும்பட்சத்தில் தன் தகப்பனுருடைய ஏற்பாடு விக்கிறய நடவடிக்கையல்லவென்றும் மீட்டுக்கொள்ளும் பாத்தியதையையுடைய விக்கிறய ரூபமான அடமான நடவடிக்கையென்றும் ஆகவே 6-வருஷ கெடுவுக்குப்பின் மீட்டுக்கொள்வதற்காகப் பரிகாரம் தேடலாயக்குண்டென்றும் சட்டவாதம் செய்தார். பிரதிவாதி ஆன்ஸரில், கிறயம் கிறயமாகவே பாவிக்கப்பட வேண்டுமென்றும் எதிரிடையானது மறு விக்கிறய உடன்படிக்கையாக பாவிக்கப்படவேண்டுமென்றும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லையென்றும் எதிரிடையில் கண்டபடி 6-வருஷகெடு தீர்ந்தமையால் அந்த உடன்படிக்கை செல்லத்தகாதென்றும் தவிற வாதியின் தகப்பனுடைய சொந்த சம்பாத்தியத்தைக்கொண்டு கிறயத்துகையைத் திரும்பிக்கொடுக்க வேண்டியதாய்க் கண்ட எதிரிடையின் ஷரத்தினால் அந்த ஏற்பாடு வாதியின் தகப்பனால் மட்டும் வற்புறுத்தப் படலாமேயொழிய மற்றவர்கள் அதாவது வாதி அந்த உடன்படிக்கையை நிறைவேற்றும் பரிகாரம் தேட நியாயமில்லையென்றும் எதிர்வாதம்செய்தார். ஈரோட் டி-மு-கோர்ட்டாரும் அப்பீலில் கோயமுத்தூர் சப்கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக இரண்டு தஸ்தவேஜிகளையும் ஒரே நடவடிக்கையாக யூகிக்கக்கூடாதென்றும் எதிரிடையின்படி மறு விக்கிறயமடைய 6-வருஷகெடு கடந்துவிட்டதாகவும் சொல்லி தகப்பனுடைய உடன்படிக்கை ஏற்பாட்டை மகன் நிறைவேற்றக் கூடாதென்ற எதிர்வாதத்தைப்பற்றி யாதொரு அபிப்பிராயம் கொடுக்காமல் வாதியின் தாவாவைச் செலவுடன் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதன் மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் தீர்மானங்கள் மாற்றப்பட்டு வாதிக் கனுகூலமாய் டிக்கிரீயளிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்மானத்தின் மூக்கிய அம்சங்களாவன:—

கிறயமாகி 8-வருஷங்களாகியும் தாவாசொத்தின் பட்டாவானது பிரதிவாதியின் பேரில் மாற்றப்படவேயில்லை. கிறயத்திற்கு முன் தாவாசொத்தானது 2-முதல் 5-பிரதிவாதிகளிடம் ரூ. 200-க்கு ஒத்தி அனுபோகமாகயிருக்க அந்த ஒத்திக்கடன் தீர்க்கப்படவுமில்லை. ஆகையால் I-ம் பிரதிவாதி தாவாசொத்தை சுவாதீனமடையவுமில்லை. தாவா சொத்துக்குறிய சர்க்கார்



தீர்வை முதலானவைகளை வாதி தரப்பாரே செலுத்திக்கொண்டு வருகிறார்கள். சட்டபாயின்டைக் கவனிக்குமிடத்து வாதி சொல்லுகிறபடி இரண்டு தஸ்தவேஜுகளையும் ஒன்றாய்ப் படித்துப்பார்த்து அவைகளை ப்ராபர்டி ஆக்ட் 58-வது பிரிவில் விவரித்த வண்ணமாய் விக்கிறய நிபந்தனையின் கருத்துடைய அடமான நடவடிக்கையாக அனுமானிக்கவேண்டியது நியாயமாகும். 58-வது பிரிவில் "ஒரு அடமானதார் அடமான சொத்துக்களை விக்கிறயஞ்செய்வதாகவே எழுதிக்கொடுத்து அதில் குறித்தகாலத்தில் அடமானத்துகையைச் செலுத்தாவிட்டால் கிறயம் பூரணமாக நிலைக்கவேண்டியதென்றும் கெடுவுக்குள் கடன் துகையைச் செலுத்திவிட்டால் கிறயம் ரத்தானதாக பாவிக்கப்படவேண்டுமென்றாவது அல்லது மறு விக்கிறயம் செய்து கொடுக்கப்பட வேண்டியதென்றாவது குறிக்கப்பட்டால் அது விக்கிறய நிபந்தனையுடன் கூடிய அடமான தஸ்தவேஜென்று சொல்லப்படுகிறது." 58-வது பிரிவின்வசனங்களைக்கவனித்தால் மேற்கூறிய நிபந்தனைகள் யாவற்றும் ஒரே தஸ்தவேஜில் எழுதப்பட்டிருக்க வேண்டியதாகும். ஆனால் 22 அலகபாத் 149-இல் பிரிவி கௌன்ஸிலாரும், 23 மதராஸ் 114, 33 அலகபாத் 122-இலும் தீர்மானித்திருக்கிறபடி இரண்டு தஸ்தவேஜுகளையும் கவனிக்கும்பொழுது அவைகளை ஒரே நடவடிக்கையாக இருதரத்தாரும் கருதினதாக யூகிக்கக்கூடியதானால் இரண்டையும் ஒரே தஸ்தவேஜில் எழுதக்கூடுமாயினும் வெவ்வேறு தஸ்தவேஜில் எழுதின விஷயமானது அந்த நடவடிக்கையை ஒரே நடவடிக்கையாக அனுமானிக்க இடையூறாகாது. 27 மதராஸ் 348-இல் ஆக்டிங் சீவ் ஜஸ்டிஸ் ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யரவர்களும் ஜஸ்டிஸ் ஸர். வி. பாஷியமய்யங்காரவர்களும் ஒரு அடமான நடவடிக்கை முழுவதையும் எழுத்துமூலமாக பற்பல தாள்களில் எழுதலாமென்றும் ஒன்றோடொன்று சேர்த்துவைக்கப் படலாமென்றும் தனித்தனியாய்ப் பிரித்துவைக்கப் படலாமென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். 58-வது பிரிவின்படி செய்கிற ஏற்பாட்டை ஒரே தஸ்தவேஜிலும் எழுதலாம். தனித்தனியாக வெவ்வேறு தஸ்தவேஜுகளிலும் எழுதப்படலாம். கிறயமாக ஒன்றிலும் மற்ற மறு விக்கிறயம் முதலிய ஷரத்துக்களடங்கிய உடன்படிக்கை வேறொன்றிலுமாக எழுதப்படலாம். கோர்ட்டார் இரண்டு தஸ்தவேஜுகளையும் படித்துப் பார்த்து வசனங்கள் ஒன்றுக்கொன்று விபரீதமாக யிருந்தால் அதாவது ஒன்றில் அத்தரீதியான சுத்த விக்கிறயமென்றும் மற்றொன்றில் கிறயத் துகையைக் கொடுத்தால் கிறயம் ரத்தாகிறதென்றும் ஆகிய ஒன்றுக்கொன்று வித்தியாஸமான ஏற்பாடாக தஸ்தவேஜுகளினால் துலங்கினால் கோர்ட்டார் இரண்டு தஸ்தவேஜிகளின் கருத்தை நிதானித்து அச்சமயத்தில் ஏற்பட்டிருக்கிற மற்ற சந்தர்ப்பங்களையும் கவனித்து இரண்டும் ஒரே நடவடிக்கையாக பாவிக்கலாமா அல்லவாவென்று தீர்மானமடையவேண்டும். ஆனால் அவ்வித தீர்மானமடைவதற்கு வாய்மொழியான ருஜுபாகம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. எவிடென்ஸ் ஆக்ட் 92-வது பிரிவின்படி எழுத்தில் ஏற்பட்ட தஸ்தவேஜுகளின் கருத்தை மாற்றும்படி, கூட்டும்படி, குறைக்கும்படி அல்லது எதிர்க்கும்படி வாய்மொழி ருஜுபாகம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. 22 அலகபாத 149-இல் பிரிவி கௌன்ஸிலார் அதேவிதமாய் அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். தஸ்தவேஜின் வசனங்களைக் கொண்டும் சுற்றுப்பக்கமான சந்தர்ப்பங்களைக் கொண்டும் தீர்மானமடையலாமேயொழிய வாய்மொழியான ருஜுபாகத்தை ஏற்றுக்கொண்டு தஸ்தவேஜிகளின் நிலைமையை தீர்மானிக்கக்கூடாது. வாதிக்கனுகூலமாக மேற்கூறிய 4-அதாரட்டிகளைத்தவிற 3 அலகபாத் 369-ம், 2 பம்பாய் லா ரிபோர்ட் 1058-ம் பக்கமும் எடுத்துக் காண்பிக்கப்பட்டன. பிரதிவாதிக்காக 12 அலகபாத் 387, 33 அலகபாத் 585, 15 இந்தியன் கேசுகள் 424, 11 கல்கத்தா வாரக்குறிப்புகள் 400-ம் எடுத்துக் காட்டப்பட்டன. அவைகளின்படி இரண்டு தஸ்தவேஜுகள் ஏககாலத்தில் எழுதப்பட்டிருந்தாலும் அல்லது சொற்ப தினங்கள் விட்டு எழுதப்பட்டிருந்தாலும் அவைகளை ஒரே நடவடிக்கையாக நிதானிக்கக்கூடாதென்றும ஒன்று விக்கிறயமாகவும் மற்றொன்று மறு விக்கிறய உடன்படிக்கையென்றும் சொல்லப்பட வேண்டுமென்றும் ஏற்படுகிறது. 8 கல்கத்தா வாரக்குறிப்புகளின் தீர்மானம் 22 அலக

யாத் 149-இல் சொல்லிய பிரிவி கௌன்ஸில் அபிப்பிராயத்திற்கு முற்றிலும் விபரீதமாகயிருக்கிறது. 33 அலகபாத் கேசிலோ இரண்டு தஸ்தவேஜுகளும் ஒரே தினத்தில் ஏற்பட்டிருந்தால் அந்த நடவடிக்கையை அடமானமென்றே சொல்லத்தகுமென்றும் ஆனால் அந்தக் கேசில் ஒன்றுக்கொன்று 7 தினங்கள் வித்தியாஸமிருந்த காரணத்தாலும் வேறு பல சந்தர்ப்பங்களாலும் அந்தக் கேசின் நடவடிக்கை விக்கிரய நிபந்தனையுடன் கூடிய அடமானமல்லவெனத்தீர்மானித்திருக்கிறார்கள். தாவா கேசில் இரண்டாவது தஸ்தவேஜை முதல் தஸ்தவேஜுக்குள திரிடையென்று குறித்துக்காட்டியிருப்பதாலும் இரண்டு தஸ்தவேஜிகளும் ஒரே பார்ட்டிகளுக்குள் ஏற்பட்டபடியாலும் இரண்டும் ஒரே தினத்தில் எழுதப்படாத விஷயம் முக்கியமல்ல. அவைகளை ஒரே நடவடிக்கையாக நிதானிக்க நியாயமாகும். 12 அலகபாத் 387-இல் பிரிவி கௌன்ஸிலார் தஸ்தவேஜிகளின் வசனங்களுடைய அதிசயமான கருத்தையனுசரித்து விரோத அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தாவா கேசிலுள்ள தஸ்தவேஜுகளின் அம்சங்கள் 22 அலகபாத் 149-இலிருக்கும் பிரிவி கௌன்ஸில் கேசுக்குச் சமானமாகயிருக்கிறது.

விக்கிரய தஸ்தவேஜில் விக்கிரயத் தொகையைப் பற்றி அது ஒரு கடன் பாக்கியாக நிதானிக்கப்படும் விஷயமாய் யாதொரு வசனம் காணப்பட்டிருந்தாலொழிய அந்த விக்கிரயத்தை விக்கிரய நிபந்தனையுடன் கூடிய அடமானமென்று பாவிக்கக் கூடாதென்பதாய் சில இங்கிலீஷ் கோர்ட் தீர்மானங்களை அனுசரித்து எதிரிக்காக வாதிக்கப்பட்டது. ஆனால் 22 அலகபாத் கேசில் பிரிவி கௌன்ஸிலார் சொல்லியப்படி இங்கிலீஷ் நியாய முறைகளை இந்தியாவில் பிரயோகிக்கக்கூடாது. ப்ராபர்டி ஆக்ட் 58-வது பிரிவில் விவரிக்கப்பட்டிருக்கிற அம்சங்களைக்கொண்டு தஸ்தவேஜின் கருத்தை நிதானிக்கவேண்டும். இந்தியாவில் பிறக்கும் தஸ்தவேஜுகள் இங்கிலீஷ் முறையறிந்தவர்களால் எழுதப்படுவது வழக்கமில்லாதபடியால் இங்கிலீஷ் அபிப்பிராயத் தீர்மானங்களை அந்த தஸ்தவேஜிகளுக்காக உபயோகிக்கக்கூடாது. தவிர சந்தேகமான சந்தர்ப்பங்களில் அடமானக்கடனை மீட்டுக்கொள்ளுகிறவனுக் கனுகூலமாகவே தஸ்தவேஜின் கருத்தை யூகிக்கவேண்டுமென்று டாக்டர் கோஸ்பெருமான் அடமான வியவகார புஸ்தகத்தில் சொல்லியிருக்கிறார்.

மறு விக்கிரய உடன்படிக்கையில் வாதியின் தகப்பன் சொத்தை மீட்கும் பாத்தியதையை யாருக்கும் மேடோவர் செய்யக்கூடாதென்றும் சொந்த சம்பாத்தியத்திலிருந்து மீட்கவேண்டுமென்றும் கண்டிருக்க அவருக்குப்பின் அவர் மகன் (வாதி) உடன்படிக்கையை நிறைவேற்றக் கூடாதென்று எதிரிக்காக வாதிக்கப்பட்டது அவ்விதமான ஷரத்தானது சட்ட விரோதமாகையால் அதைப்பற்றிய வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மீட்கும் பாத்தியதையை வார்ஸ்கள் கொண்டாடலாமென்று 3 அலகபாத் 369 (புல் பெஞ்சு) இல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேற்கூறிய காரணங்களால் வாதிக்கனுகூலமாய் டிக்கிரீயளிக்கப்பட்டது

———:0:———

## பிரிவி கௌன்ஸில் கேஸ்.

(கல்கத்தா ஹைகோர்ட்)

23 நவம்பர் 1913.

ராஜா தகூர் பிரம்ஹா Vs ஜீபன்ராம் மார்வாரீ

டிக்கிரீதார்கள் சந்தல்பர்காணத்திலுள்ள கோட்டா சப்கோர்ட்டில் பிரதிவாதியினுடைய ஜமீன் கிராமங்களில் 10 அணா வருமான விகித பாத்தியதையில் ஆறணா வருமான விகித பாத்தியதையை மட்டும் ஜப்திசெய்து ஏலத்திற்குக் கொண்டுவந்து டிக்கிரீ பாக்கியை வசூலித்துக் கொண்ட பிறகு ஏலதார்கள் ஏலம் உறுதியான உடன் ஏல ஸர்டிபிகேட்டுக்காக விண்ணப்பம் கொடுக்கும்பொழுது தாங்கள் ஏலம் எடுத்த சொத்தானது ஏல இஸ்தியாரில் தப்பாய்க் குறிக்கப்பட்டிருக்கிறதாகச் சொல்லி அதாவது பாபு அனந்தராம் மார்வாரீ என்றவருடைய அடமான தஸ்தவேஜில் பந்தகப்படாத 6 அணா வருமான விகித பாத்தியதையை என்று விவரித்திருக்க வேண்டியிருக்க ஏல சொத்தானது மேற்கூறிய அடமான வில்லங்கத்திலடங்கியதாகச் சொல்லியிருப்பதால் ஏல ஸர்டிபிகேட்டில் மேற்கூறிய பிசகைத் திருத்தி தாங்கள் ஏலம் எடுத்த சொத்தானது அடமான வில்லங்கத்திலடங்காத (வில்லங்க சுத்தியான) 6 அணா வருமான விகித பாத்தியதை என்று குறித்துக் காட்டப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்ட பிரகாரம் சப்கோர்ட்டாரும் அப்பீலில் கல்கத்தா ஹைகோர்ட்டாரும் ஷை பிசகைத் திருத்தக்கூடிய பிழையென்று நிதானித்து ஏலதார்கள் கோறியபடி வில்லங்க சுத்தியான பாத்தியதையைக் குறித்து ஏல ஸர்டிபிகேட் கொடுக்கும்படி உத்தரவளித்தார்கள். அதன்மேல் எதிரிகள் (பிரதிவாதிகள்) பிரிவி கௌன்ஸிலில் அப்பீல் செய்யவே அந்த கீழ்கோர்ட் பைசல் ரத்தானதில் பிரிவி கௌன்ஸிலார் கொடுத்த அபிப்பிராயச் சுருக்கமாவது:—

கோர்ட்டார் ஜப்தியான சொத்தைமட்டும் ஏலம்போட நியாயமுண்டு. ஜப்திக்கட்டளையில் சொத்து விவரமானது ஒழுங்காய்க் கண்டிருக்கிறது. அது ஒரு அடமான வில்லங்கத்திற்குட்பட்டிருப்பதாயும் குறித்திருக்கிறது. அப்படியிருக்க சப்கோர்ட்டார் கொடுத்திருக்கிற ஏல ஸர்டிபிகேட்டைப் பார்த்தால் வில்லங்கமில்லாத 6-அணா வருமான விகிதபாத்தியதை ஏலவிக்கிரயமானதாகக் கண்டிருக்கிறது. ஆகையால் ஜப்தியாகாத பாகமானது ஏல ஸர்டிபிகேட்டில் குறித்திருக்கிறது. அப்படி ஸர்டிபிகேட் கொடுக்க நியாயமில்லை. ஜப்திக் கட்டளையிலும் ஏல இஸ்தியாரிலும் சொத்து விவரத்தில் பிசகு செய்துவிட்டதாகவும் அப்பிசகு திருத்தக்கூடிய ஒழுங்கீனமென்றும் சமாதானம் சொல்லப்படுகிறது. ஆனால் இந்தக்கேசில் சொத்துவிவரத்தில் பிசகேற்பட்டதாகச் சொல்லக்கூடாது. இனப்பிசகாகச் சொல்லவேண்டும். ஒரு சொத்தானது ஷெடியூலில் சரியாக இனம் காட்டப்பட்டிருந்தபோதிலும் அதை விவரிப்பதில் பிசகுசெய்து விடுவதுண்டு. அவ்வித பிசகு இந்தக்கேசில் ஏற்படவில்லை. (ஜமீன் கிராமத்தில் 10 அணா வருமானவிகிதமானது பாபு அனந்தராம் அவர்களுக்கு அடமானமாயிருக்க 6-அணா வருமான விகிதம் ஜப்தியானதில், ஜப்திசொத்தானது அடமான வில்லங்கத்தில் அடங்கியதாகச் சொன்னால் 10 அணாவில் அடங்கிய 6-அணா விகிதமா அல்லது 10-அணாபோக மிகுதியான வில்லங்கசுத்தியான 6-அணாவா என்று நிதானித்துப் பார்ப்பதற்கு சந்தேகம் ஏற்படுகிறது வாஸ்தவம்தான்.) பிசகாய் ஒன்றுக்குப் பதிலாய் மற்றொன்று குறிக்கப்பட்டவிஷயம் சொத்து விவரப்பிசகல்ல. இனப்பிசகாகும். இனம்பிசகாக ஜப்திக்கட்டளையிலும் ஏல இஸ்தியாரிலும் காணப்பட்டு அந்தப்படி ஏலம் எடுக்கப்பட்டால் அதைத்திருத்துவதற்கு மார்க்கமில்லை. அந்த ஏல நடவடிக்கையை நிவர்த்திசெய்வித்து; வேறு ஏல நடவடிக்கை புதிதாய் எடுத்து பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டியது டிக்கிரீதார்களுடைய கடமையாகும். 10 அணா வருமான விகித பாத்தியதையைப்பற்றி வேறு சில நடவடிக்கைகள் அடமானதார்களால் ஏற்பட்டு அந்த நடவடிக்கைகளில் குறிக்கப்பட்டிருக்கிற சொத்து விவரத்தைக்காட்டி தாவா ஏல இஸ்தியாரில் கண்டபாகம் அதில் அடங்கியிருப்பதாகச் சொல்லி அதனால் அதே பாத்தியதையானது தாவா ஏலத்திலும் சம்பந்தப்பட்டதாக நிதானிக்கக் கூடாதென்று ஏலதாருக்காகச் சொல்லப்படுகிறது. இதரமான நடவடிக்கையில் குறிக்கப்பட்ட விவரத்தை இந்தக்கேசின் ருஜுபாகத்தில், ஏற்றுக்கொள்ளத்தகாதென்று சொல்லவேண்டும். ஏலமெடுக்க வருகிறவர்கள் ஏலசொத்தானது வேறு வியவகாரங்களில் சம்மந்தப்பட்டிருக்கிறதகவலை அறிந்து விவரப்பிசகை யூகித்து ஏலம் எடுக்கவேண்டுமெனச் சொல்ல நியாயமில்லை.

ஏலதாருக்காக மற்றொரு ரிகார்டு எடுத்துக் காட்டப்பட்டது. அதாவது தாவா சொத்தைப் பற்றி ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்ததில் ஏலம் போடப்படும் தாவா சொத்தானது யாதொரு வில்லங்கத்திலு மடங்கியதல்லவென்று வரையப்பட்டிருக்கிறது. ஏல இஸ்தியாரின் வசனங்களுக்கும் கெஜட்டு விளம்பரத்திற்கும் உள்ள மேற்கண்ட வித்தியாஸமானது மற்றொரு ஒழுங்கீனமாகச் சொல்லவேண்டுமேயொழிய அந்த கெஜட் பிரசுரத்தின்படி ஏல ஸர்டிபிகேட் எழுதிக்கொடுக்க நியாயமில்லை. மற்ற விஷயங்களில் யாதொரு பிசகில்லாத பட்சத்தில் கெஜட் பிரசுரத்தின் ஒற்றுமையீனத்தை நிவர்த்திக்க கோர்ட்டாருக்கு யுக்தமுண்டு. ஆனால் இந்தக் கேசில் ஏற்பட்டிருக்கிற பிசகானது ஏற்கனவே திருத்தக்கூடாதபடியால் கீழ்கோர்ட்டார் ஏல ஸர்டிபிகேட்டுக்காக உத்தரவளித்தது பிசகாகும்

என்று சொல்லி பிரதிவாதியின் பிரிவிகௌன்ஸில் அப்பீலை அனுகூலப்படுத்தினார்கள்.[காலாவதி தோஷமில்லாவிடில் டிக்கிரீதார்கள் புதிய நிறைவேற்று நடவடிக்கை நடத்தவேண்டியதாகும்.]

———:O:———

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

மங்களூர் ஜில்லா

C. M. S. A. 38 & 146 of 1913

15 ஜனவரி 1914.

திருமலராவ் *Vs* துர்கி ஷெட்டித்தி

**வாதியினுடைய சொத்து பாத்தியதையை மறுதளிக்கிற பிரதிவாதியின்பேரில் ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்ட் 42 வது பிரிவின்படி செய்யவேண்டிய பிராதுக்கு வியாஜ்ஜியமூலம் ஒன்றுதான். அதாவது வாதியின் பாத்தியதையைப் பிரதிவாதி நிராகரித்த தகவல் வாதிக்குத் தெரிந்த உடன் வியாஜ்ஜியமூலம் ஏற்படுகிறது. பிரதிவாதியினுடைய ஆக்ஷேபனையை ஏற்றுக்கொண்டு ரெவினியூ அதிகாரிகள் ரிகார்டுகளில் பிரதிவாதிக்கனுகூலமாய் யாதொரு பதிவு செய்திருந்தாலும் அல்லது எதிரியின் ஆக்ஷேபனையை முன்னிட்டு தாவா சொத்தானது வாதிக்கு பத்தியப்பட்டதல்லாத பாவனையாக (மற்றொருவனுடைய சொத்தாக பாவிக்கப்பட்டு) நிறைவேற்று நடவடிக்கையில் ஏலம் போடப்பட்டாலும் மேற்கூறிய ரெவினியூ நடவடிக்கை அல்லதுகோர்ட்டாருடையஏல நடவடிக்கை முதலான பிந்திய சம்பவங்கள் வாதிக்கு வேறு புதிய வியாஜ்ஜிய மூலத்தைத்தராது. பிந்திய மேற்கூறிய விதமான சம்பவங்களை வியாஜ்ஜியமூலமாகக் கொண்டு காலாவதி கணித்து செய்த பிராதை உடுப்பி டி-மு கோர்ட்டார் காலாவதி தோஷமென்று தள்ளுபடி செய்துவிட்டார்கள். பிரதிவாதி வாதியின் பாத்தியதையை நிராகரித்த விஷயம் வாதிக்குத் தெரிந்தமுதல் குறித்த காலத்திற்குள் வியாஜஜியம் செய்திருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. சப் கோர்ட்டார் அப்பீலில் டி-மு கோர்ட் பைசலை மாற்றினதின்பேரில் ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் 31 அலகபாத் 9-யும் 26 மதராஸ் 410 யு-ம் அனுசரித்து டி-மு கோர்ட்டாருடைய அபிபிராயப்படி வாதிதாவா காலாவதி தோஷமென்றே தீர்மானித்தார்கள். 22 மதராஸ் லா ஜர்னல் 103-இலும் 10 அலகபாத் லா ஜர்னல் 413-இலும் சொல்லியிருக்கிற அபிப்பிராயங்கள் அனுசரிக்கத் தக்கவையல்லவென்றும் சொல்லப்பட்டது.**

———:O:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

செங்கல்பட்டு ஜில்லா

C. M. A. 281 of 1912—26 நவம்பர் 1913

சங்கரராஜா என்ற ராமலிங்க நாயகன்

*Vs*

ஸ்ரீராம தேசிகாச்சாரியார்

வக்கில் தேசிக்காசாரியாரவர்கள் தன் கக்ஷிக்காரன்பேரில் கொண்டுவந்த வியாஜ்ஜியம் சமாதானமாகி கக்ஷிதகாரனும் அவனுடைய வக்கிலுமாக ராஜீநாமா விண்ணப்பம் தாகல்செய்தார்கள். அந்த ராஜிநாமாவின்படி பிரதிவாதிக்கு வாதி சிலதுகை கொடுக்கவேண்டியதாக டிக்கிரீயும்பிறந்து கக்ஷிக்காரனுடைய வக்கில் வசத்தில் வாதி டிக்ரீ பாபத்துக்காக ரூ. 45 செலுத்தியிருக்க அந்தத்துகையைக் கணக்குவைக்காமல் பிரதிவாதி பூரா துகைக்கும் நிறைவேற்று நடவடிக்கை நடத்தியதில் கோர்ட்டார் வக்கிலிடம் கொடுக்கப்பட்டதாகச் சொன்ன ரூ 45-க்கு டிக்கிரீயில் செல்லுவைத்து ரிகார்டுசெய்து மிகுதிக்குமட்டும் நிறைவேற்றும் அனுமதி கொடுத்தார். அதன்மேல் எதிரி (மனுதார்) ஹைகோர்ட்டில் சில்லரை மனு அப்பீல் செய்ததில் மனு அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்மானத்தில் சொன்னதாவது:—எதிரி தன் வக்கிலுக்குக்கொடுத்த வக்காலத்தில் டிக்கிரீபெறவும் டிக்கிரீயை நிறைவேற்றவும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிறைவேற்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதால் கோர்ட்டுக்கு வெளியிலும் (கோர்ட் மூலமாயல்லாமலும் வக்கில் தன் கக்ஷிக்காரனுக்காக டிக்கிரீத்துகையைப் பெற்றுக்கொள்ளலாம். (1912) மதராஸ் வாரக்குறிப்புகளின் 1204-இல் டிக்கிரீயை நிறைவேற்றும் அதிகாசம் பெற்ற வக்கில் கக்ஷிக்காரனுக்காக டிக்கிரீயை வேறொருவனுக்கு மேடோவர் செய்தும் டிக்கிரீ துகையை வசூலிக்கலாயக்குள்ளவராகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. கோர்ட்டிலிருந்து துகையை வாங்குவதற்காக வக்காலத்தில் பிரத்தியேகமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கவேண்டுமென்று ஸிவில் ரூல்ஸ் ஆப் ப்ராக்டிஸ் 138-வது ரூலில் சொல்லியிருக்கிறது. அந்த ரூல் கோர்ட்டில் டிபாஸிட்கட்டியிருக்கும் துகையை வாங்குவதற்காக ஏற்பட்டதேயொழிய அந்த விதியினால் வக்கில் கக்ஷிக்காரனுக்காக டிக்கிரீ பாக்கிக்காக கோர்ட்டுக்கு வெளியில் துகையை வாங்கக்கூடாதென்ற ஆக்ஷேபனை ஏற்பட நியாயமில்லை. 138-வது ரூலில் (Payment out of Court) கோர்ட்டுக்கு வெளியே என்ற வசனத்திற்கு வியாக்கியானப்படுத்தினதில் "கோர்ட்டிலிருந்து வெளியே துகையை எடுக்க" என்று கருத்தாகவேண்டுமே யொழிய "கோர்ட்டில் கட்டபபடாத வெளியே செலுத்தப்படும் துகையை வாங்க"வும் அந்த ரூல்படி ஸ்பெஷலான அதிகாரம் வக்காலத்தில் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லக்கூடாது. அவ்வித ஸ்பெஷலான அதிகாரமில்லாமல் மனுதாருடைய வக்கில் ரூ. 45-யும் வாதியிடம் டிக்கிரீவகைக்காகப்பெற்றுக்கொண்டதைக் கீழ் கோர்ட்டார் டிக்கிரீக்குச் செல்லுவைத்த உத்தரவு சரியானதாகுமென்று சொல்லி மனு அப்பீல் தள்ளுபடியாச்சுது.

———:O:———

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்ட்

மதராஸ்

O. S. A. 20 of 1913–30 அக்டோபர் 19:3.

ருக்மனியம்மாள் *Vs* சீதம்மாள்.

ருக்மணியம்மாள் என்ற வாதி தன் கணவன் இறந்தபின் எதிரி சீதம்மாளுடைய புருஷனிடத்திலுள்ள குடும்ப எஸ்டேட்டிலிருந்து ஜீவனும்சம் கிடைக்கவேண்டுமென்று எதிரியின் புருஷன்மீது 1894-ம் வருஷத்தில் மதராஸ் ஹைகோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்து டிக்கிரீபெற்று அந்த டிக்கிரீயை நிறைவேற்றுமுன் எதிரியின் புருஷன் காலஞ்சென்றமையால் குடும்ப சொத்துக்களை அடைந்து அனுபவிக்கிற எதிரியின் பேரில் 1909-ம் வருஷத்தில் வேறு ஜீவனும்சப் பிராது செய்து அதில் எதிரியை அவளுடைய புருஷனுக்கு வாரிஸ் நிலமையில் வைத்து பரிகாரம்தேட யத்தனித்தாள். மேற்கூறிய 2-வது பிராது செலவுடன் தள்ளுபடியாச்சுது. அதன்மேல் வாதி தான் 1894-ம் வருஷத்திய வியாஜ்ஜியத்தில் பெற்ற டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக டிக்கிரி பாக்கிதாருடைய வாரிஸாக எதிரியைக் குறிப்பிட்டு அவள்பேரில் நிறைவேற்ற 1912 அக்டோபர் 8-இல் மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் அனுமதி கேட்டதில் கோர்ட்டார் அந்தப்படி நிறைவேற்ற அனுமதி கொடுத்ததில் எதிரிக்குப் பிந்திய டிக்கிரியின்படி வாதி செலுத்தவேண்டிய செலவு துகையை வாதி செலுத்தாதபடியால் அந்தத்துகை வாதியால் வஜா செய்து கொடுக்கப்படவேண்டிய நியாயத்தை உத்தேசித்து எதிரி செலவு துகைக்காக நிறைவேற்று விண்ணப்பம் கொடுக்கவேண்டியதற்காக வாதியின் விண்ணப்பத்தின்பேரில் கட்டளை பிறப்பதை மூன்று தினங்கள் நிறுத்திவைக்க வேண்டுமென்று உத்தரவளித்தார்கள். மூன்றுவது தினத்தில் அதாவது 1912 அக்டோபர் 11-இல் எதிரி 1909-ம் வருஷத்திய டிக்கிரிப்படிக்கு செலவு துகைக்காக விண்ணப்பம் தாகல் செய்தாள். கோர்ட்டார் அந்த விண்ணப்பத்தை 1912 டிசம்பரில் ஈரங்கிகேட்டு எதிரிக்குச் சேரவேண்டிய செலவுதுகை மட்டில் வாதி தன் ஜீவனும்ச டிக்கிரியில் செல்லு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அதுபோக மிகுதித்துகைக்கு மட்டும் எதிரியின்பேரில் நிறைவேற்றும் கட்டளை பிறப்பிக்கவேண்டுமென்று உத்தரவளித்தார்கள். அந்த உத்தரவின்பேரில் வாதி ருக்மணியம்மாள் அப்பீல் தரப்பில் அப்பீல்செய்து அங்கு (1) மேற்கூறிய உத்தரவளிக்கக் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்றும், ஸி. பி. ஸி. ஆர்டர் 21-ரூல்—18 (1) இன்படி க்ராஸ் டிக்கிரிகளை நிறைவேற்றுவதற்காகச் செய்யப்பட்ட விண்ணப்பங்களாக இந்தக்கேஸின் சந்தர்ப்பங்களை நிதானிக்கக் கூடாதென்றும் (2) தவிற அந்த ரூல் 18-ன் 3(a)—வது உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடி இரண்டு டிக்கிரிகளிலும் பார்ட்டிகள் ஒரே நிலமையிலிருந்ததாகச் சொல்லக்கூடாதென்றும், ஆக்ஷேபித்தாள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள் செய்த மேற்கூறிய உத்தரவு சட்டவிரோத மல்லவென்று ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனால் ஹானரபில் ஜஸ்டிஸ் ஓல்ட்வீல்ட்

துரையவர்கள் மாறான அபிப்பிராயங் கொண்டார்கள். ரூல்படி அப்பீல் தள்ளுபடியாகி வாதிக்குப் பிரதிகூலமாச்சுது. அதாவது செலவு துகை போக மிகுதிக்கு மட்டும் நிறைவேற்ற உத்தரவு கொடுக்கப்பட்டது.

ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் தீர்மானத்தில் சொன்னதாவது:— பிந்திய நிறைவேற்று மனு கொடுக்கப்படு முன்னமேயே 1894-ம் வருஷத்திய டிக்கிரியின் நிறைவேற்று விண்ணப்பத்தின்பேரில் உத்தரவு பிறந்தது வாஸ்தவம்தான். ரூல்படிக்கு இரண்டு கிராஸ் டிக்கிரிகளைப்பற்றிய நிறைவேற்று விண்ணப்பங்கள் கோர்ட்டார் முன் உத்தரவுக்காக வந்திருக்கும் பட்சத்தில் மேற்கண்டவிதமான உத்தரவு செய்யலாம். ஆனால் முதல் பிறந்த உத்தரவை நிறைவேற்றுவதற்கு, பிந்திய விண்ணப்பம் கொடுக்க வேண்டியதற்காகவே, மூன்று தினங்கள் மறியல் உத்தரவு பிறந்திருக்கிறது. ஆகையால் இந்தக் கேசின் சந்தர்ப்பத்தைப் பார்க்குமிடத்து இரண்டு க்ராஸ் டிக்கிரிகளைப்பற்றிய இரண்டு விண்ணப்பங்களும் செய்யப்பட்டதாகவே பாவிக்கப்படவேண்டும். [8 அக்டோபரில் எதிரி வாய்மொழியாய் தனக்கு செலவுதுகை சேரவேண்டுமெனத் தெரிவித்துக் கொண்டால் அதையும் ஒரு விண்ணப்பமாய் பாவிக்கலாம்.] ஸி. பி. ஸி. ஆர்டர் 18-ரூல் 3-இன்படி இரு கக்ஷிக்காரரும் ஒரே நிலைமையை அடைந்தவர்களாயிருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ரூலின் கருத்தைக் கவனித்தால் ஒரு பிராதில் வாதியும் பிரதிவாதியுமானவர்கள் மற்றொரு பிராதிலும் வாதியும் பிரதிவாதியுமாகவிருந்திருக்கவேண்டியதாகச் சொல்லவேண்டும். அல்லது, A ஒன்றில் B-யின்பேரில் டிக்கிரீ பெற்றிருக்கவேண்டும். மற்றொரு பிராதில் B A-யின்பேரில் டிக்கிரீ பெற்றிருக்கவேண்டும். தாவா கேசில் இரண்டு பிராதிலும் வாதி ஒர்த்தியே. ஒன்றில் பிரதிவாதி எதிரியின் புருஷன், மற்றொன்றில் முன் பிரதிவாதியினுடைய வாரிஸாகிய, எதிரி பிரதிவாதியாக யிருக்கிறாள். (ஒருவர் பேரில் மற்றொருவர் டிக்கிரி பெற்றிருக்கிற விஷயம் முக்கியமானதாகும் ஒன்றில் வாதியும் மற்றொன்றில் பிரதிவாதியும் டிக்ரி பெற்றிருந்தால் அவைகளை க்ராஸ் டிக்கிரிகளென்று சொல்லத்தகும்.) இந்தக்கேசில் பிரதிவாதிகள் வெவ்வேறு ஆஸாமிகளாயினும் ஒருவருக்கு மற்றொருவர் வாரிஸ்தானத்திலிருக்கிறார். அன்றியும் ஒன்றில் எதிரி வாரிஸ் நிலைமையில் வாதிக்குத் துகை செலுத்தக் கடமைப்பட்டவளாகிறாள். மற்றொன்றில் அவளே வாரிஸ்ஸ்தானத்தில் டிக்கிரிபெற்று செலவுதுகையை அடைய லாயக்குள்ளவளாகிறாள். ஆகவே இரண்டு விண்ணப்பங்களிலும் துகை கொடுக்கவும் வாங்கவும் எதிரிக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இரண்டு விண்ணப்பங்களைப் பற்றினமட்டில் இருதாரத்தாரும் ரூல் 18 (3) இன் விதிப்படி ஒரே நிலைமையை வகித்தவர்களாகிறபடியால் அதைப்பற்றிய ஆக்ஷேபனை செல்லத்தக்கதல்ல. இந்த பாயிண்டு விஷயமாய் அதாரிடிகள் யாதொன்றும் வாதிக்காக எடுத்துக் காட்டப்படவில்லை எதிரியும் ஆஜராகவில்லை. ஆகவே கீழ்கோர்ட் உத்தரவு அதிகார வரம்பின்றிச் செய்யப்பட்டதாகச்சொல்லக்கூடாது."

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட் துரையவர்கள் கொடுத்த மாறான அபிப்பிராயத்திற்குக் காரணமாவது.— இரண்டு டிக்கிரீகளும் க்ராஸ் டிக்கிரீகள் என்பதிலும் இரண்டு பிராதிலும் பார்ட்டிகள் ஒரே நிலைமையை வகித்தவர்களென்பதிலும் சந்தேகமில்லை. இரண்டு தாவாக்களிலும் ஜீவனாம்சமென்ற ஒரேவிதமான பரிகாரம்தான் கோறப்பட்டிருக்கிறது. குடும்ப சொத்துக்கள் யார்வசமிருக்கிறதோ அவர்பேரில் தான் பரிகாரம் தேடப்பட்டது. குடும்ப சொத்துக்கு எதிரியின் புருஷனுடைய வாரிஸ் ஸ்தானத்தில் பாத்தியமடைந்து அனுபவிக்கிறபடியால் எதிரியின்பேரில் பரிகாரம் தேடப்பட்டிருக்கிறது. ஆனால் ஆர்டர் 21-ரூல் 18-இன் அம்சங்கள் இந்தக்கேசின் சந்தர்ப்பங்களுக்கு ஏற்குமா வென்று யோஜித்துப்பார்க்குமிடத்து 13 இந்தியன் அப்பீல 106-இன் 11[illegible]-இலும் 24 அலகபாத் 481-இலும் சொல்லியிருக்கிறபடி ஷை ரூல் பிரயோகிக்கப்படுவதற்கு இரண்டு டிக்கிரீகளும் நிறைவேற்றுதலுக்காக கோர்ட்டார் முன் வைக்கப்பப்பட்டு உத்தரவளிக்கப்படவேண்டும். மேற்கூறிய தீர்மானங்கள் பழய ஸி. பி. ஸி. கோடு நமோதிலிருக்கும்பொழுது ஏற்பட்டது. புது கோடின்படி இரண்டு டிக்கிரிகளையும் நிறைவேற்றத்தக்க விதமாய் இரண்டு



விண்ணப்பங்களும் செய்யப்பட்டு (பெண்டிங்கிலிருக்கவேண்டும்.) இந்தக்கேசில் உத்தரவு பிறக்குமுன்னமேயே முந்திய விண்ணப்பத்தின் பேரில் நிறைவேற்ற அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் முந்திய விண்ணப்பம் பைசலானதாகவே சொல்லவேண்டும். ஆகையால் பிந்தியவிண்ணப்பத்தின்பேரில் கோர்ட்டார் மேல்கண்ட விதமான உத்தரவளிக்க அதிகாரம் கிடையாது. முதல் மனுவின் பைசல் உத்தரவை மூன்று தினங்களுக்கு பிரயோகிக்காதபடி ஸஸ்பெண்டுசெய்து (நிறுத்தி)வைத்த போதிலும் அந்த 3-தின கெடுவு கடந்தபின் அந்த பைசல் உத்தரவானது முடிவான நிறைவேற்றும் அனுமதி உத்தரவாக பாவிக்கப்படவேண்டியதாகும். (8உயில் பிறந்த உத்தரவை 11உ க்குப்பின், பைசலான உத்தரவாக பாவிக்கவேண்டும்.) அப்படியிருக்க முந்திய விண்ணப்பம் 11உயில் பைசலாகாமல் பெண்டிங்கிலிருந்ததாக நிதானிக்கக்கூடாது. பைசலான உத்தரவை பைசலாகாத உத்தரவாக அவமதிக்கிறது போலாகும். அப்படி அவமதித்து கீழ்கோர்ட் உத்தரவு சரியென்று ஏற்றுக்கொண்டால் யாதொரு ஒழுங்கீனத்தை சரிப்படுத்தினதாக மட்டும் பாவிக்கக்கூடாது. ஒரு பைசல் உத்தரவை கோர்ட்டார் திரும்பவும் யோஜனைசெய்து மாறக்கூடுமோவென்பதைப்பற்றி ஒரு சட்டத்தீர்மானம் கொடுக்கவேண்டியதாகும். ஒரு உத்தரவை திரும்பவும் யோஜிக்க வேண்டுமானால் ரிவியூ விண்ணப்பம் கொடுக்க சட்டமிருக்கிறது. அவ்வித ரிவியூ அதிகாரத்தை எதிரி பேணினதாகவும் அதன் மேல் கோர்ட்டார் வேறு உத்தரவளித்ததாகவும் ஏற்படவில்லை.

கீழ்கோர்ட் உத்தரவில் தலையிட்டு மாற்ற உத்தேசிப்பதில் வாதிக்கு அனுதாபிக்கத்தக்க நிலைமை ஏற்படும். அதாவது இரண்டு வெவ்வேறு நிறைவேற்று நடவடிக்கைகள் நடைபெற்று வரவேண்டியதாகும். வாதி வசூலிக்கிற துகையெல்லாம் திரும்பிக்கொடுத்துவிட நேரிடும். இவ்வித தொந்தரவு நிவர்த்திக்கப்படுவதற்குக் கோர்ட்டார் முதல் மனுவைப்பைசல்செய்யாமல் யாதொரு உத்தரவளிக்காமல் ஈரங்கி வாய்தா போட்டு எதிரி வேறு விண்ணப்பங்கொடுக்க சாவகாசம் கொடுத்திருக்கலாம். அல்லது எதிரி முதல் உத்தரவின்பேரில் ரிவியூ விண்ணப்பம் கொடுத்து அல்லது அப்பீல் செய்து கேஸை பெண்டிங்கான நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கலாம். அல்லது எதிரி இந்த அப்பீல் ஈரங்கியில் ஆஜராகி யிருந்தாலும் அவ்வித அப்பீல், ரிவியூ முறைகளை அனுஷ்டிப்பதற்குரிய கால சவுகரியத்தைக் கொடுத்து எதிரிக்கு உதவிசெய்யலாம். அப்படியும் ஆஜராகவில்லை. ஆகவே கீழ்கோர்ட்டார் வாதிக்கு விரோதமாக முதல் சம்மத உத்தரவுக்கு மாறாக எதிரியின் விண்ணப்பத்தின்பேரில் ஜீவனாம்ச டிக்கிரியின் பூரணபரிகாரத்தை நிறைவேற்றாமல் எதிரிக்குப் பிந்திய பிராதில் ஏற்பட்ட செலவுதுகையை செல்லுவைக்கச் சொன்னது சரியான உத்தரவல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானம் நிலைக்கக்கூடாமல் ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களுடைய அபிப்பிராயம் மேலிட்டு அப்பீல் தள்ளுபடியாச்சுது.

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

திருச்சினாப்பள்ளி ஜில்லா.

C. M. A. No. 282 of 1912-12 நவம்பர் 1913

S. ஸ்ரீனிவாசய்யங்கார் Vs ராதா கிருஷ்ண பிள்ளை

1884-ம் வருஷத்தில் வாதி ராதாகிருஷ்ண பிள்ளை பிரதிவாதிக்கு தாவா சொத்தை அடமானம் வைத்து எழுதிக்கொடுத்த தஸ்தவேஜானது சுவாதீன அடமானமென்று பெயரிடப்பட்டதும் தவிர இடைக்கிடையில் அப்பெயரே குறித்துக் காட்டப்பட்டிருந்தது. அதுவுமல்லாமல் அதுமுதல் 9-வருஷ காலத்திற்குள் வாதி அடமானத் துகையைத் திரும்பிக் கொடுக்காத பட்சத்தில் அந்த அடமானக்கடன் துகை விக்கிறயத்துகையாக மாறி அந்த சொத்தானது பிரதிவாதிக்கு விக்கிறயமானதாக பாவிக்கப்படவேண்டுமென்ற ஷரத்தும் கண்டிருந்தது. சுவாதீன அடமானம், என்ற வசனத்திற்கும் பத்திரத்தின் கருத்துக்கும் தக்கபடி சொத்தானது பிரதிவாதிக்கு சுவாதீனம் செய்து கொடுக்கப்பட்டது. வாதியாகிய அடமானதார் சொத்தை மீட்டுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் பிரதிவாதி தாவா

சொத்தில் செய்திருக்கிற மண்வேலைக்காக நேர்ந்த செலவு தொகையையும் அடமானத்தொகையுடன் சேர்த்து பிரதிவாதிக்குச் செலுத்தக் கடவதென்ற நிபந்தனையும் பத்திரத்தின் முடிவில் கண்டிருந்தது. வாதி 1911-ம் வருஷத்திய அசல் நம்பர் 8-இல் அடமானத்தொகையைக் கட்டி சொத்தை மீட்டுக்கொள்வதற்காக திருச்சினாப்பள்ளி சப்கோர்ட்டில் தாவா செய்யவே சப்கோர்ட்டார் ப்ராபர்டி ஆக்ட் 98-வது பிரிவை யனுசரித்து பத்திரத்தில் கண்ட ஷரத்துக்களின்படி 9-வருஷ கால தவணைக்குள் வாதி அடமானத் தொகையைக் கட்டாதபடியால் தாவா சொத்தில் எதிரிக்கு கிறய பாத்தியதை ஏற்பட்டதாகச் சொல்லி வாதியின் தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்ததில் சப்கோர்ட் அபிபிராயம் தப்பென்றும தாவா தஸ்தவேஜானது ப்ராபர்டி ஆக்ட் 60-வது பிரிவின்படி மீட்கப்படத்தக்க அடமானமென்றும் தீர்மானித்து வாதியின பிராதை ஏற்றுக்கொண்டு சட்டப்படிக்கு டிக்கிரீயளிக்கும்படி கேஸை ரிமாண்டு செய்தார்கள். பிரதிவாதி ரிமாண்டு உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டுக்கு மனு அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட் தீர்மானம் சரியென்று ஏற்பட்டு மனு அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் பைசலின் சாராம்சமாவது:— ப்ராபர்டி ஆக்ட் 98-வது பிரிவின்படி ஒழுங்கான வசனங்களால் குறித்த பெயருடன் வழங்கும் 6-விதமான அடமானங்களல்லாத அதாவது (1) ஈட்டுக்கடன் பத்திரம் (2) சுவாதீன அடமானம் (3) விக்கிரய நிபந்தனையுடன் கூடிய அடமானம் (4) இங்கிலீஷ் முறையால் ஏற்படும் அடமானம (5) ஈட்டுக்கடன் ஒத்தி யிரண்டும் கலந்த விதமான ஷரத்துக்களுடன் கூடிய அடமானம் (6) விக்கிரய நிபந்தனையுடன் கூடிய அடமானத்துடன் ஒத்தியின் ஷரத்துக்களும் சேர்ந்த பத்திரம் ஆகிய 6-வித தஸ்தவேஜுகளாய்ச்சொல்லக்கூடாத விபரீதமான ஒழுங்கீனமான ஷரத்துக்களுடன் யாதொரு தஸ்தவேஜு ஏற்பட்டிருந்தால் அதில் கண்ட வசனங்களை யனுசரித்து அதைப்பற்றிய வியவகாரம் தீர்மானிக்கவேண்டியதாகும். இல்லாவிடில் 60-வது பிரிவின்படி அடமானத்தை மீட்பதற்கு அடமானதார் லாயக்குள்ளவராகிறார். தாவா அடமான தஸ்தவேஜானது விபரீதமான தஸ்தவேஜென்று எதிரிக்காகச் சொல்லப்படுகிறது. அதை பந்தகம், ஒத்தி, விக்கிரய நிபந்தனையுடன் கூடிய அடமானம் ஆகிய மூன்றுவித அம்சங்களும் கலந்த தஸ்தவேஜென்றும், 98-வது பிரிவில் முதல் நான்குவித அடமானங்கள் மட்டும் விலக்கப்பட்டிருக்கிறதே யொழிய முதல் மூன்று வகையான அடமானங்களின் அம்சங்கள் கலந்து ஏற்படும் தஸ்தவேஜுகள் விலக்கப்பட்டவைகளல்லவென்றும் அதாவது அப்படிக்கலந்த அடமானங்கள் ஒழுங்கீனமானவைகளென்றும் அதில் கண்ட வசனங்களின்படி வியவகாரம் தீர்க்கப்படவேண்டுமென்றும் எதிரிக்காக வாதிக்கப்படுகிறது. 98-வது பிரிவில் அல்லாத என்ற கருத்துக்குள் கலந்த ஷரத்துக்களுள்ள தஸதவேஜுகளும் சேர்ந்திருப்பதாக இங்கிலீஷ் நடையையும் இலக்கண பாவத்தையும் நிதானிக்க வேண்டியதாகும்.

தாவா தஸ்தவேஜை ஈட்டுக்கடன் தஸ்தவேஜாகச் சொல்ல நியாயமுண்டு. ஏனெனில் தஸ்தவேஜின் கடைசியில் அடமானத்தொகையுடன் கூட எதிரி செலவுசெய்த வேறு சில தொகையையும் வாதி கொடுப்பதாக ஒப்புக்கொள்ளுகிறார். அடமான சொத்தை சுவாதீனத்தில் விட்டு குறித்தகாலத்தில் தொகையைசெலுத்தி மீட்டுக்கொள்வதாய்ச் சொல்வதால் ஒத்திதஸ்தவேஜாகவும் சொல்லவேண்டும். தவிற அதை ஒத்திப்பதிரமாகவே செப்பி யெழுதப்பட்டிருக்கிறது. ப்ராபர்டி ஆக்ட் 58-(c) யில் விவரித்திருக்கிறபடி தஸ்தவேஜினால் சொத்தை விக்கிரயம் செய்துவிட்டதாகவே காணப்பட்டு அதை ரத்துசெய்ய வேண்டியதற்குரிய ஷரத்துக்கள் பின்னால் ஏற்பட்டிருந்தால் மட்டும் விக்கிரய நிபந்தனையுடன் கூடிய அடமான தஸ்தவேஜாக ஏற்படும். தாவா தஸ்தவேஜு விக்கிரயமாக எழுதப்படவில்லை. கெடு தவறினால் மட்டும்பிந்திய காலத்தில் விக்கிரயம் ஏற்படுமாதலால் அந்த ஷரத்தானது தஸ்தவேஜுக்கு 58 (c யில் கண்டபடிவிக்கிரயநிபந்தனையுடன் கூடிய அடமானமென்ற பெயர் ஏற்பட நியாயமில்லை. ஆகவே தாவா தஸ்தவேஜானது பந்தகமும் ஒத்தியும் கலந்த அடமான தஸ்தவேஜென்று சொல்லப்படவேண்டும். அவ்வித தஸ்தவேஜானது 98-வது பிரிவினால் விலக்கப்பட்ட ஒழுங்கீன தஸ்தவேஜென்று 27 பம்பாய் 600-இல் கொடுத்திருக்கிற தீர்மானம் அனுசரிக்கத்தகாது. அதாவது மேற்கூறிய இரண்டுவித அடமான ஷரத்துக்களும் சேர்ந்து எழுதப்பட்ட தஸ்தவேஜுக்கு தஸ்தவேஜில் கண்ட நிபந்தனைகள் அனுசரிக்கப்பட வேண்டுமென்ற, அதாவது 9-வருஷ கெடுவுக்குள் தொகை செலுத்தப்படாவிட்டால் மீட்கும் பாத்தியதை கிடையாதென்ற அபிப்பிராயம் அனுசரிக்கத் தக்கதல்ல. ஆகவே 60-வது பிரிவின்படி தாவா அடமானம் மீட்பதற்கு யோக்கியமானதாகும். அடமானத் தொகையைத் தவிற வேறு தொகையையும் வாதி செலுத்தக் கடவதாய் ஒப்புக்கொண்ட கடைசி ஷரத்தினால் அவ்வித பாத்தியதையானது கெடுவதற்கு நியாயமில்லை. 11 மதராஸ் 403-யும் 35 மதராஸ் 744-யும் பார்க்கவும். ஆகவே வாதிக்கு அடமானத்தை மீட்கும் பாத்தியதை உண்டென்று தீர்மானிக்கப்பட்டு ஜில்லாகோர்ட் ரிமாண்ட் உத்தரவு காயமாச்சுது.

———:O:———



ஜஸ்டிஸ் ஏயிலிங் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

திருநெல்வேலி

S. A. 998 of 1912—13 நவம்பர் 1913

ஈசுவரம்பிள்ளை Vs தரகன்.

ஷேக் உமென் தரகன் என்றவர் 1907 ஆகஸ்ட் 27உ-இல் பிரதிவாதிகளுக்குத் தன்னுடைய சொத்துக்களை ரூ. 2000-க்கு அடமானம் வைத்து எழுதிக்கொடுத்த தஸ்தவேஜில் ஷை ஷேக் உமென் தரகன் ஈசுவரம்பிள்ளை என்ற வாதியிடம் சரக்குவாங்கினவகையில் ஏற்பட்ட பாக்கி ரூ. 450-யும் பிரதிவாதிகள் வாதிக்குச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவேண்டிய வகையில் பிரதிவாதிகளிடம நிறுத்திவைக்கப்பட்ட ரூ. 450 போகபாக்கி அடமானத் தொகையை மட்டும் ரொக்கம் பற்றிக்கொண்டதாகக் கண்டிருந்தது. பிரதிவாதிகள் அந்த தஸ்தவேஜில் கண்ட பிரகாரம வாதியின் பாக்கியைச் செலுத்தாத காரணத்தால் வாதி அம்பாசமுத்திரம் டி-மு. கோர்ட்டில் பிரதிவாதிகள்பேரில் ஷை தஸ்தவேஜில் கண்ட ஒப்பந்தப்படித்தனக்கு ரூ. 450-யும் அதற்குறிய வட்டியும் ஆக கூடிய ரூ. 615-ம் பிரதிவாதிகள்செலுத்தக் கடமையாகுமென்றுசொல்லி அசல்தாவா செய்தார்.டி-மு.கோர்ட்டாரும்அப்பீலில்ஜில்லாகோர்ட்டாரும்ஒரே அபிப்பிராயமாக,ஷேக் உமென் தரகனும் பிரதிவாதிகளும் செய்துகொண்ட அடமான தஸ்தவேஜிலுள்ள யாதொரு உடன்படிக்கைக்கு, அதாவது வாதிக்குரிய பாக்கி செலுத்தப்படவேண்டிய விஷயத்தைப்பற்றிய ஏற்பாட்டுக்கு, வாதி சம்பந்தப்பட்ட பார்டியல்லவென்றும் ஒரு உடன்படிக்கையில் பார்டியல்லாதவன் அதில் கண்ட ஷரத்துக்களைப்பற்றி வியவகாரம் நடத்த லாயக்கில்லையென்ற இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட் 37-வது பிரிவின் நியாயத்தை அனுசரித்து வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கும் அதே அபிப்பிராயமாக தஸ்தவேஜில்கண்டஏற்பாட்டினால்வாதிநன்மையடையவேண்டியவனாகிறபோதிலும் வாதி அந்தகாண்டிராக்ட்டுக்குப் பார்டியல்லாத காரணத்தால் பிரதிவாதிகள்மீது தாவா செய்ய பாத்தியதை ஏற்படாதென்றும் வாதிக்குக் கடனைக் கொடுப்பதாய் ஷேக் உமென் தரகனிடம் ஒப்புக்கொண்டபடியால் அந்தப்படி நடக்காத விஷயத்தைப் பற்றி தாவா செய்வதற்கு ஷை ஷேக் உமென் தரகன் தான் சரியான லாயக்குள்ளவனென்றும் சொல்லி வாதியின் 2-வது அப்பீலையும் தளளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட் தீர்ப்பில் சோன்ன காரணங்களாவன:—

அடமான தஸ்தவேஜு பிறந்த 20-வது தினத்தில் வாதிக்குறிய பாக்கித் தொகையைச் செலுத்தவேண்டியதில்லையென்றும் தான் நேரில் ரொக்கம் பற்றிக்கொண்ட தொகைமட்டும் அடமான தஸ்தவேஜுக்குப் பிரதிப்பிரயோஜனமாக பாவிக்கப்பட வேண்டுமென்றும் அடமானதாராகிய ஷேக் உமென் தரகன் பிரதிவாதிகளுக்கு நோடீஸ் கொடுத்திருக்கிறார். அடமான தஸ்தவேஜில் வைக்கப்பட்டிருக்கிற செல்லு விவரத்தையும் அதைச் செப்பியிருக்கிற ஒரு டிக்கிரீயில் கண்ட வசனங்களையும் கவனித்தால் அடமான தஸ்தவேஜின் பிரதிப்பிரயோஜனம் மேற்கண்ட நோடீஸ்படி தொகை செலுத்தப்பட்ட மட்டில் குறைந்துவிட்டதாக ருஜுவாகிறது. (ஷை நோடீஸினால் வாதியின் கடன்பாக்கிக்கு தாவா சொத்தில் யாதொரு ஹக்கும் ஏற்படுத்தக்கூடாதென்ற கருத்தாகுமென்று சொல்லத்தகும்.) கீழ்கோர்ட்டில் வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் தாவா ஒப்பந்தத்தில் சம்பந்தமுண்டா என்ற பாயிண்டுதான் முக்கியமாய் வாதிக்கப்பட்டது. அதே வாதம் இங்கும் செய்யப்பட்டதில் தஸ்தவேஜின் வசனங்களால் வாதிக்குத் தொகை செலுத்தவேண்டிய பொறுப்பை பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டதாகவும் ஆகையால் அவ்விஷயத்தில் அவர்கள் டிரஸ்டிகளாக பாவிக்கப்படவேண்டுமென்றும் டிரஸ்ட் ஆக்ட் 5-6-வது பிரிவுகளின்படி டிரஸ்டின் நன்மைக்குறிய வாதி டிரஸ்டியின்பேரில் தாவாசெய்ய நியாயமுண்டென்றும், காண்டிராக்டில் பார்டியல்லாதவன் அதில் கண்ட நிபந்தனையை வற்புறுத்த பாத்தியமில்லையென்றபொதுவான இங்கிலீஷ் சட்டமுறையானது 32 அலகபாத் 410-இல் பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தாலும் அந்தத்தீர்மானத்தை அனுசரித்த 17 கல்கத்தா வாரக்குறிப்புகள் 143-இல் ஏற்பட்டிருக்கிற கல்கத்தா ஹைகோர்ட் தீர்மானத்தா

லும் இந்தியாவில் கண்டிபாய் அனுஷ்டிக்கப்
வேண்டியதில்லையென்றும் எடுத்துச் சொல்லப்
பட்டதும் தவிற அந்தப் பிரிவிகௌன்ஸில் தீர்
மானம், 33 மதராஸ் 230, 21 மதராஸ் லா ஜர்
னல் 918, 22 மதராஸ் லா ஜர்னல் 159-இலும்
அனுசரிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. அந்த
வாதத்திற்கு எதிராக ஷை பிரிவிகௌன்ஸில்
கேஸும் அதை அனுசரித்த தீர்மானங்களும்
குடும்ப ஏற்பாட்டைப் பற்றிய உடன்படிக்கை
களை நிறைவேற்றுவதற்காகக் கொண்டுவரப்
பட்ட வியவகாரங்களில் கொடுக்கப்பட்ட தீர்மா
னங்களென்றும் அதில் பார்டிகள் ஒருவருக்கொ
ருவர் பந்துக்களாயிருப்பதாகவும் அந்நியர்கள் ஒரு
உடன்படிக்கையை நிறைவேற்றும் பொருட்டு
தாவா செய்யக்கூடாதென்று அந்தக் கேசுகளில்
ஒப்புக்கொள்ளப்படுகிறதாகவும் சமாதானம்
சொல்லப்படுகிறது. தவிற இந்தக்கேசில் அட
மானதார் வாதிக்குத் துகை செலுத்தும்படி
கேட்டுக்கொண்ட விஷயத்தை மாற்றிவிட லாய
க்குள்ளவனுகிற படியால் பிரதிவாதியின் மீது
டிரஸ்ட் என்றும் அந்தஸ்து ஏற்படுத்தப்பட்ட
தாக சொல்லக்கூடாதென்று 21 மதராஸ் லா
ஜர்னல் 3ப்9 & 883-இல் தீர்மானிக்கப்பட்டிருப்
பதாயும் ஒரு மரணபண்டின் துகையை தன்
மனைவிக்குச் செலுத்தப்படவேண்டுமென்று
எழுதிவைத்த பாபத்திலும் இன்ஷியூரன்ஸ் கம்
பெனியாரை டிரஸ்டியாக பாவிக்கக்கூடாதென்ற
தீர்மானங்களிருப்பதாயும் அதற்காதாரமாக 26
மதராஸ் லா ஜர்னல் 65—69-யும், 35 மதராஸ்
162-யும் எடுத்துக்காட்டி, வாதிதரப்புக்காக எடு
த்துக்காட்டிய பிரிவி கௌன்ஸில் கேஸுக்கும்
கல்கத்தா ஹைகோர்ட் தீர்மானங்களுக்கும் நியா
ய சமாதானம் சொல்லி அவைகளில் ஏற்பட்ட
சந்தர்ப்பங்கள் தாவா கேசில் கிடையாதென்று
எதிர்வாதம் செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் டிரஸ்டீகளாக பாவிக்கப்படுவ
தற்குத் தக்க நியாயங்களேற்படவில்லை. வாதி
தாவா கொண்டுவராத பட்சத்தில் பிரதிவாதிக
ளுக்கு டிரஸ்ட் நிலைமை ஏற்பட நியாயமில்லை.
ஏனெனில் டிரஸ்டிவசம் யாதொருபிரத்தியேக
மான சொத்தானது ஒப்புவிக்கப்படவில்லை. அவ
ர்களிடமிருப்புத்துகையில் ரூ. 450-ஐ வாதிக்
க்குக்கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.
பிரதிவாதிகள் வாதிக்கு ஷை துகையை ஒப்பந்
தப்படி கொடுத்துவிட்டால் மட்டும் டிரஸ்டி
என்ற நிலைமை ஏற்படும். டிரஸ்ட் ஆக்டின் கரு
த்துப்படி பிரதிவாதிகள் தங்கள் கையிருப்பான
துகை ரூ. 450-க்கு ஒருவித விநியோக மார்க்
கத்தை அமைத்து அதை சொந்தப் பணமல்ல
வென்று பாவித்திருந்தாலும் சரி அல்லது வாதி
க்கு தாங்கள் யாதொரு துகையைக் கொடுப்ப
தாக ஒப்பந்தம் செய்துகொண்டாலும் சரி அதை
வாதி தாவா செய்து வசூலிக்க நியாயமுண்டா
என்று கவனிக்கவேண்டியது முக்கியமாகும்.

பிரிவி கௌன்ஸில் கேசின் தீர்மானத்தில்
கல்லியாணப் பெண்மாப்பிள்ளைகளுடைய பெற்
றோர்கள் செய்துகொண்ட ஒப்பந்தப்படி பெண்
ணுக்கு சில சொத்துக்கள் மாப்பிள்ளையின் தகப்
பனால் கொடுக்கப்பட வேண்டியதாயிருக்க அந்த
ப்படி நடக்காத மாமனார் மீது மறுமகள் தாவா
செய்ய நியாயமுண்டென்று ஏற்பட்டிருக்கிறது.
பெண் ஒப்பந்தத்திற்குப் பார்டியல்லாத போதி
லும் பெண்ணுக்காக ஒரு ஸ்தாவர சொத்தை
எழுதிவைப்பதாய் எதிரி உடன்பட்டிருந்தமை
யாலும் அந்த ஏற்பாட்டினால் நன்மை அடைய
அந்தப் பெண்ணைத் தவிற வேறு யாரும் யோக்
கியமானவர்களல்லாதபடியாலும் வாதியாகிய
அந்தப்பெண் தாவா செய்யலாமென்று தீர்மா
னித்திருக்கிறார்கள். பிரிவி கௌன்ஸிலார் தீர்
மானத்திற்கு ஸ்பெஸிபிக் ரிலீப் ஆக்ட் 23-வது
பிரிவின்படி நியாயம் ஏற்பட்டிருக்கிறது. அதா
வது விவாக சம்பந்தமான ஏற்பாட்டில் நன்மை
க்குப் பாத்தியஸ்தனும் ஒப்பந்தத்தை நிறைவேற்
ற நடவடிக்கை யெடுக்கலாமென்று சட்டம் விதி
க்கப்பட்டிருக்கிறது. பிரிவி கௌன்ஸிலார்
அந்த ஆக்டின் பிரிவை ஆதாரங்கொள்ளவில்லை.
என்றாலும் தாவா கேசில் பிரிவி கௌன்ஸிலார்
எடுத்துச்சொன்ன சந்தர்ப்பங்கள் யாதொன்றும்
காணப்படவில்லை.

17 கல்கத்தா வாரக்குறிப்புகளின் தீர்மானத்
தைப் பார்க்குமிடத்து, அந்தக்கேசில் சில முக்
கிய அம்சங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவை
கள் தாவா கேசில் கிடையாது. அதாவது அந்
தக்கேசில் ஒப்பந்தத்தில் சேராத வாதி கொடு
த்த பிராதில் ஒப்பந்தம் செய்துகொண்ட இரு
தரத்தாரும் பிரதிவாதிகளாய்ச்சேர்க்கப்பட்டிருக்



கிறார்கள். ஒப்பந்தத்தில் கண்ட ஏற்பாடானது
வாதிக்குத் தெரிவிக்கப்பட்டு அது வாதியால் அங்
கீகரிக்கப்பட்டுமிருக்கிறது. அங்
கீகாரத்திற்காதாரமாக வாதிதன்னுடையபாக்கிக்
கு ஜாமீனாக டிபாஸிட் கட்டியிருந்த ஒரு பட்டாச்
சீட்டை தனக்குத்துகை கொடுத்துவிடுவதாக
ஒப்புக்கொண்ட பிரதிவாதியினிடம் கொடுத்து
விட்டிருக்கிறார். தவிற வாதியின் பாக்கிதார்
கள் சொத்து யாவற்றையும் எதிரியிடம் விக்கிற
யம் செய்து கொடுத்துவிட்டார்கள்; ஆகவே விக்
கிறயம்பெற்றபிரதிவாதி வாதிக்குச்செலுத்தவே
ண்டிய துகையைப்பிரத்தியேகமாய்எடுத்து அடை
யாளமிட்டு வைத்திருந்ததாக சொல்லவேண்டிய
தாகும். அவ்வித சந்தர்ப்பஙகள் தாவா கேசில்
கிடையாது. ஆகவே அந்தக்கேசின் சந்தர்ப்பங்
களைக் கவனித்து அந்தத் தீர்மான அபிப்பிராயத்
தை நிதானிக்கவேண்டும். கல்கத்தா கேஸில்
ஏற்பட்ட விதமாய் தாவாவில் ஒப்பந்தம் செய்து
கொண்டவர்களனைவருமபார்டிகளாயிருக்கவேண்
டும். அல்லது இங்கிலீஷ் கேஸ்களில் ஏற்பட்டி
ருக்கிற பிரகாரம் ஒப்பந்தம் செய்துகொள்ளுகி
றவனும் அந்நியனுடன் வாதியாகச் சேர்ந்திருக்க
வேண்டும். அப்படியில்லாத இங்கிலீஷ் கேசுகளி
ருப்பதாய் வாதிக்காக காட்டப்படவில்லை.

காண்டிராக்ட் ஆக்ட் 2-வது பிரிவின் கிளாஸ்
(d) யில், ஒப்பந்தத்தின் கடமையை நிறைவேற்
றும் பரிகாரம் தேடுகிற வாதியால் பிரதிவாதிக்
குப் பிரதிப்பிரயோஜனம் சென்றிருக்க வேண்டி
யதில்லையென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அதா
வது பிரதிவாதி வாதிக்குத் துகை செலுத்துவ
தற்குப் பிரதியோஜனம் வாதியால் பெற்றிருக்
கத் தேவையில்லையென்றும் அடமானதாரிடம்
சொத்தை அடமானம் பெற்று துகையை வாதிக்
குக் கொடுக்க ஒப்புக்கொண்டால் துகை பெறாத
வாதியால் பிரதிபிரயோஜனம் கொடுத்திருக்கப்
படவேண்டியதில்லையென்று ஷை பிரிவால்
விதிக்கப்பட்டிருக்கிறபடியால் பிரதிபிரயோஜ
னம் அளிக்காதவனும் ஒப்பந்தத்தில் பார்டியாக
யிராதவனும் தாவா செய்யலாமென்று வாதிக்க
ப்படுகிறது. அந்த விதியானது அந்நியன் கொண்
டுவரும் தாவாவக்கு ஏற்றதாகச் சொல்ல நியாய
மில்லை. அது ஒப்பந்தக்காரருக்குள் பிரயோகி
க்கப்படவேண்டிய அம்சமாகும். அதாவது A
என்பவனுக்கு C ரூ. 100 கொடுக்கும் பட்சத்தில்
A என்பவன் B என்பவனுக்கு ஒரு வீடுகட்டிக்
கொடுப்பதாய் ஒப்புக்கொண்ட விஷயத்தில் A-
யின்பேரில் ஒப்பந்தத்தை நிறைவேற்றுங்கால் A
என்பவன் தனக்கு துகை கொடுத்தது C என்று
சொல்லி B பரிகாரம்தேட பிரதிபிரயோஜனமில்
லையென்ற எதிர்வாதம் செய்யக்கூடாதென்றும்
அதாவது B பிரதிபிரயோஜனம் செலுத்தின
வரல்லாத போதிலும் ஒப்பந்தத்தை நிறைவேற்ற
நியாயமுண்டென்று விதிக்கப்பட்டிருக்கிறது.
அவ்விதியின் நியாயம் ஒப்பந்தக்காரர்களைத் தவிற
அந்நியன் கொண்டுவரும் தாவாவுக்குஏற்றதல்ல.
ஆகையால் அவ்விதியின் கருத்தைக் கொண்டு
அந்நியன் தாவா செய்யலாமென்று வாதிக்கக்கூ
டாது.

ஒப்பந்தம் செய்துகொண்டவனே தாவாசெய்
யவேண்டுமென்ற விதியானது பரிகாரம்தேடும்
முறைவிதியென்றும் நியாய பரிபாலனததிற்கு
அம்முறையை அனுஷ்டிக்கத் தேவையில்லையெ
ன்றும் வாதிக்கப்படுகிறது. ஆனால் அம்முறை
யானது அநீதியானதென்றும் ஆதலால் அதை
அவமதிக்கலாமென்றும் சொல்லக்கூடாது. எவ்
விதத்திலும் ஒப்பந்தக்காரர்கள் எல்லோரும் பார்
டிகளாய்ச் சேர்க்கப்படவேண்டிய அவசியமாகும்.
ஏனெனில் இருதரத்தாரும் சம்மதித்து ஒப்பந்த
விஷயங்கள் மாற்றப்பட்டதா, திருத்தப்பட்டதா
அல்லது நிலையாக நின்றதா என்ற பாயிண்டுகள்
தீர்மானமாக வேண்டியதாகும். அதற்கு எல்
லோரும் பார்டிகளாய்ச் சேர்ந்திருக்கவேண்டும்.
தாவாபிராது பிடிக்கத்தக்க தல்லவென்று மேல்
கண்டவிதமாக ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்
பட்டு 2-வது அப்பீலைத் தள்ளுபடிசெய்து விட்
டார்கள்.

ஜஸ்டிஸ் டையர்ப்ஜீ

திருச்சினாப்பள்ளி.

C. R. P. 793 of 1911—12 டிசம்பர் 1913.

சுப்பிரமணிய அய்யர் Vs சுப்பிரமணிய செட்டி

பிரதிவாதி சுப்பிரமணிய அய்யர் வாதியிடம்
வாங்கியிருந்த கடன் ரூ. 200-யும் சில குறித்த
வாய்தாக்களில் கொடுத்து விடுவதாகவும் வாய்

தாக்கள் எப்பொழுதாவது தவறிப்போகும் பட்சத்தில் செலுத்தின வாய்தாத்துகையைக் கவனியாமல்அசல்மொத்தம் ரூ 200-க்கும் 100 க்கு 36 வீதம்வட்டிசேர்த்துஅசல்பாக்கித்துகையைச் செலுத்துவதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்த தஸ்தவேஜில்வட்டி விஷயமாய்வேறுஷரத்துயாதொன்றும் கிடையாது. அதாவது தவணைப்படி ஒழுங்காய் வாய்தாத்துகை செலுத்தப்பட்டு வந்தால் வட்டியே கிடையாதென்ற ஏற்பாடிருந்ததாகச் சொல்லவேண்டியதாகும். [ஆனால் ஹாரைபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ அவர்கள் யூகிக்கிறபடி மொத்தமாய்கெடுவுக்குறியவட்டித்துகையை மார்வாடிகளைப்போல முந்தியே எடுத்துக்கொண்டு அசல் துகை ரூ 200-யும் பூராவாய் செலுத்தாமலிருந்திருக்கக்கூடும். அவ்வித ஏற்பாடில் அசல் துகை ரூ. 200 என்று கண்டு வட்டி யாதொன்றும் அதற்காகக் குறிக்கப்படாமலிருப்பதுமுண்டு]

எதிரி வாய்தாத்துகையை ஒழுங்காய்க் கட்டிவராதபடியால் வாதி திருச்சினுப்பள்ளி சப்கோர்ட்டில் 1909 ஆகஸ்ட் 1-இல் எதிரி செலுத்திய ரூ 100-போக அசல் பாக்கித் துகைக்காகவும், ஷரத்துப்படி பூராத்துகைக்கும் பாண்டு தேதி முதல் பிராது தேதிவரையில் 36-வட்டி விகிதம் கூடுகிற வட்டியில் எதிரியால் 1910 எப்ரல் 25-இல் செலுத்தப்பட்டதாகச் சொன்ன ரூ. 36-7-0 போகபாக்கி வட்டித்துகைக்காகவும் ஸ்மால்காஸ் தரப்பில் வியாஜ்ஜியம் செய்ததில் சப்கோர்ட்டார் வாதி கோறியபடி டிக்கிரீயளித்த மேல்எதிரி ஹைகோர்ட்டில் ஸி. பி. ஸி. 115-வது பிரிவின்ப்டி ரிவிஷன் மனு தாகல்செய்தார். ஹைகோர்ட்டார் பூராத்துகைக்கும் 100-க்கு 36 வட்டியாக ஏற்படுத்தினது அபராத வட்டியாகுமென்றுசொல்லி அசல் துகையை ஒழுங்காய்க்கட்டிவருவதற்கு ஒரு பயத்தை உண்டாக்கும்பொருட்டு ஏற்பட்ட ஷரத்தாகுமென்று அபிப்பிராயப்பட்டு இந்தியன் கண்டிராக்ட் ஆக்ட் 74-வதுபிரிவின்படி அவ்வித அபராத வட்டிக்காகப் பரிகாரம் கொடுக்க நியாயம் கிடையாதென்று சொல்லி எதிரி செலுத்தியிருக்கிற ரூ 136 7-0-க்கும் 100க்கு 12 விகிதம் எதிர் வட்டி கணக்கிட்டு அதே விகிதப்படிக்கு எதிர் வட்டி போக பாக்கி வட்டிக்கும் அசல்துகைக்கும் டிக்கிரீயளித்து சப்கோர்ட் டிக்கிரீயைமாற்றினார்கள். ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:—

இந்தியன் காண்டிராக்ட் ஆக்ட் 74-வது பிரிவில் சொல்லியபடி யாதொரு ஒப்பந்தம் (இந்தக் கேசில் அசல் துகையை வாய்தா தவறாமல் செலுத்திவரும் உடன்படிக்கையானது) தவறிப்போகும்பட்சத்தில் அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்திற்காக மீறுகிறவன் அல்லது தவறுகிறவன் ஒரு குறித்த துகையை அபராதமாகக் கொடுக்கவேண்டுமென்று ஒப்பந்தத்தில் கண்டிருந்தால் தவறுகிறவனிடம் வாதிக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தாலும் ஏற்பட்டிராதபோதிலும் நஷ்டத்திற்காகக் குறித்ததுகைக்கு மேல்படாமல் யுக்தம்போல்நஷ்டபரிகாரம் கொடுக்க அதிகாரமுண்டு. அவ்வித ஷரத்தானது தண்டவிகிதமென்றுசொல்லப்படுகிறது. தாவாகேசில் வட்டிக்காக ஏற்பட்டிருக்கிறஷரத்தானது அவ்வித அபராதவிகிதமென்பதில் சந்தேகமில்லை. 100-க்கு 36-விகிதம் வட்டி ஏற்படுத்தினது அபரிமிதமான வட்டியென்றும் அந்தக்காரணத்தால் வட்டி ஷரத்தை அபராதவிகிதமாக நிதானிக்கத்தேவையில்லை. 2 மதராஸ் வாரக்குறிப்புகளின் 367-இல் தீர்மானித்திருக்கிறபடி 3-வட்டி ஏற்பாடானது அபராத ஷரத்தென்று பாவிக்க நியாயமில்லை. இந்தக்கேசில் வட்டி ஏற்பாடே கிடையாது. வாய்தா ஒழுங்காய் செலுத்தி வரப்படாவிட்டால்தான் மொத்தத்துகைக்கும் 36-வட்டி விகிதம் ஏற்படுத்தியிருக்கிறது. எதிரி அசலுக்காக முதல் வாய்தாத்துகை ரூ 100 செலுத்தியும் அடுத்தவாய்தா தவறினபடியால் வாதி கேட்கிற வட்டியானது 100-க்கு 36 அல்ல; ரூ 200-க்கும் ரூ 72 ஆகிறது. அதாவது பாகியாகிற அசல் ரூ 100-க்கு வட்டி ரூ. 72 என்று சொல்லவேண்டும். 100-க்கு ஆறு வட்டி ஏற்பாடாக யூகிக்கவேண்டியதாகும். அவ்வித நிபந்தனையானது அபராத ஷரத்தாகவே நிதானிக்கப்படவேண்டியதாகும். ஆகவே 74-வது பிரிவின்படி கோர்ட்டார் யுக்தம்போல் பரிகாரம் அளிக்க நியாயமுண்டு. இந்தக் கேசின் சந்தர்ப்பத்தில் வாதிக்கு 100-க்கு 12 விகிதம்வட்டி கொடுப்பது நியாயமாகுமென்றுதீர்மானித்து முன்சொன்ன விதமாகசெலுத்தப்பட்டிருக்கிற துகைக்கு எதிர்வட்டி கழித்து வாதிக்கு 1-வட்டி விகிதம் டிக்கிரீயளிக்கப்பட்டது.

———o———



ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

குண்டூர் ஜில்லா.

C. M. A. 93 of 1912—21 நவம்பர் 1913.

கொப்புரவ்வுரி சுப்பராயடு Vs குண்டூர் காட்டன் மில் கம்பெனி.

குண்டூர் ஜில்லாகோர்ட்டில் கொப்புரவ்வுரி சுப்பராயடு என்ற வாதி மாகாண இன்ஸால்வென்ஸி ஆக்டின்படி தன்னுடைய ஆஸ்திக்கு மேல் கடனிருப்பதாகச் சொல்லி பாக்கிதார்களுடைய ஹிம்ஸையிலிருந்து நிவர்த்திக்கும்பொருட்டு இன்ஸால்வெண்டு விண்ணப்பம் கொடுத்தார். ஜில்லாகோர்ட்டார் வாதியின் ஆஸ்தியானது கடனுக்குமேலிருப்பதாக அபிப்பிராயப்பட்டு 15வது பிரிவின்படி விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார். அதன்மேல் மனுதார் ஹைகோர்ட்டில் சில்லரை மனு அப்பீல் செய்துகொண்டதில் மனுவைத் தள்ளுபடிசெய்தது நியாயமல்லவென்று தீர்மானிககப்பட்டு மறு விஜாரணைக்கு உத்தரவளித்த ஹைகோர்ட்டாருடைய தீர்மானத்தில் சொல்லப்பட்ட காரணமாவது:— மனுதார் ஷெடியூலில் கண்டிருக்கிற ஆஸ்தியின் இனவாரி மதிப்பு ரூ 7128-3-0 ஆகக் குறிக்கப்பட்டபோதிலும் அவைகள் உண்மையாகரூ4893 பெருமான முடையதென்று சொல்லப்படுகிறது. கடன் துகையோ ரூ 6652 ஆகிறது. 25 மதராஸ் லா ஜர்னல் 545-இல் தீர்மானித்திருக்கிறபடி ஒரு கடனாளி தன ஆஸ்தியை எளிதில் சேகரித்துத் துகையாக்கி தன் கடன் மொல்லைகளைத் தீர்க்க சக்தியுள்ளவனாகயிருந்தும் கோர்ட்டாருடைய நடவடிக்கையை அனுவசியமாய்ப் பிரயோகிக்க பிரயத்தனப்படுவதாய் கோர்ட்டாருக்குத் தோன்றினாலொழிய மனுதாரின் விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்ய நியாயமில்லை. மனுதாரின் ஆஸ்தியானது கடனுக்கு மேலிருப்பதாய்ச் சொல்வதற்குப் போதுமான ருஜூ அம்சம் இந்தக்கேசில் கிடையாது. மனுதார் கடனைத்தீர்க்க சக்தியிருந்தும் கோர்ட்மூலமாயத் தன்னுடைய காரியாதிகளை முடித்துக்கொள்ளும் கெட்ட எண்ணத்துடன் இன்ஸால்வென்ஸி விண்ணப்பம் கொடுத்திருப்பதாக ஜில்லாகோர்ட்டார் உத்தரவில் ஸ்பஷ்டமாய் சொல்லப்படவில்லை. ஆகையால் கீழ்கோர்ட்டார் உத்தரவை ரத்துசெய்து மனுவை மறு விஜாரணைசெய்து புதிய சாட்சியம் கேட்டு மேற்கூறிய இரண்டு பாயிண்டுகளைப்பற்றித் தீர்மானித்துப் பைசல் கொடுக்கும்படி உத்தரவளிக்கப்பட்டது. 5 கல்கத்தா லா ஜர்னல் 63-இல் கொடுக்கப்பட்டிருக்கிற அபிப்பிராயத்தைப் பார்க்கவும்.

——o:——

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

கோயமுத்தூர் ஜில்லா

C. M. S. A. 1 of 1913–18 டிசம்பர் 1913

முத்துக்கருப்பன் செட்டி Vs சின்னசாமிபிள்ளை என்கிற முத்துக்கருப்ப பிள்ளை.

ஈரோட் டி-மு-கோர்ட்டார் வாதியின் அடமானப்பிராதில் கொடுத்த தீர்ப்பையனுசரித்துடிக்கிரீயானது ஸி. பி. ஸி. டி-ஷெடியூலின் 4-வது பாரத்தில் கண்டபடி வரையப்பட்டிருக்கவேண்டியதாயிருக்க, அதாவது அடமான சொத்தின்மேல் வாதி தொடர்ந்து வசூலித்த துகைபோக மிகுதியான டிக்கிரீத்துகைக்காக மட்டும் எதிரியின் மேல் ஆளைப்பொருத்து நிறைவேற்று நடவடிக்கை எடுக்கக்கூடியதாயிருக்க, அந்தபாரத்தை அனுசரியாமல் டி-மு-கோர்ட்டார் பிசகாக எதிரியின்பேரிலும் அடமான சொத்தின்பேரிலும் உடனே ஏககாலத்தில் டிக்கிரீயளித்தார். வாதி அந்த டிக்கிரீயில்கண்டபடி, எதிரியைவாரண்டில் பிடித்துத்துகையை வசூலிக்க முதல் முதல்நிறைவேற்றுநடவடிக்கைநடத்தியதில்டி-மு-கோர்ட்டார்வாரண்டுக்கு உத்தரவளித்தார்கள். அதன்பிறகு எதிரிஷை உத்தரவின்பேரில் ஜில்லாகோர்ட்டுக்கு அப்பீல்செய்ததில்கீழ்கோர்ட் உத்தரவுரத்தாகிமுதலில் அடமானசொத்தின்பேரில் நிறைவேற்று நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. வாதி அதன்மேல் ஹைகோர்ட்டில் 2-வது மனு அப்பீல் செய்ததில் டி-மு-கோர்ட்டார் உத்தரவு சரியானதென்று சொல்லப்பட்டு ஜில்லாகோர்ட் தீர்மானம் ரத்தாச்சுது. ஜில்லாகோர்ட்டார் டிக்கிரீயை ஷெடியூலில் கண்டபடி எழுதப்பட்டிருந்ததாக நினைத்து முதலில் சொத்தை ஏலம்போடும்படி உத்தரவளித்ததாகத் தோன்றுவதாயும்,டிக்கிரீயானது பிசகாய் ஆளைப்பொறுத்தும் யாதொரு பாக்கிக்காக டிக்கியரீளிக்கப்பட்டால், அடமானசொத்தை ஏலம்

போடுமுன் எதிரியின்பேரில் முதலில் நிறைவேற்றலாமென்று 21 மதராஸ் லாஜர்னல்1036இல் தீர்மானித் திருக்கிறபடியால் டி-மு கோர்ட்டார் செய்த உத்தரவை மாற்றக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———:o:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

கிருஷ்ணா ஜில்லா

## C. R. P. 1026 of 1912–16 டிசம்பர் 1913.

*அதப்பசுப்பராயுடு Vs லட்சுமி நரசிம்மா*

டிக்கிரீ பாக்கிக்காக தாவா சொத்தானது ஏலம்போடப்பட்டபின் ஆனால் ஏலம் உறுதியாகுமுன் பிரதிவாதி அந்த சொத்தை ஒரு மூன்றுவது மனிதனுக்கு விக்கிரயஞ்செய்துவிட்டு கோர்ட்டார் போட்ட ஏலத்தை ரத்து செய்யும் பொருட்டு ஸி. பி. ஸி. ரூல் 21 ஆர்டர் 89-இன்படி ஏலதாருக்குறிய 100-க்கு 5 விகிதமான பவுண்டேஜ் தொகையையும் டிக்கிரீதாருக்குறிய ஏல இஸ்திரியாரில் கண்ட தொகையையும் கோர்ட்டில் டிபாஸிட் கட்டிவிடுவதாய்ச் சொல்லி பந்தர் டி-மு கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்ததில் டி-மு கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லா கோர்ட்டாரும் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தமையால் பிரதிவாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாகல் செய்ததில் கீழ்கோர்ட் பைசல் காயமாகி ரிவிஷன் மனு தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட்டார் சொன்ன காரணங்களாவன:— பிரதிவாதி டி-மு கோர்ட்டில் ஏலத்தை ரத்து செய்யும்படி விண்ணப்பம் கொடுத்தபொழுது தாவா சொத்திலிருந்தபாத்தியதையானது மூன்றுவது மனிதனுக்குச் சென்று விட்டது. சட்டமுறையால் தெளிவான ஆதாரம் ஏற்பட்டாலொழிய யாதொருவன் சொத்தில் யாதொரு பாத்தியதை இல்லாத சமயத்தில் அந்த சொத்து விஷயமாக வியவகாரம் நடத்தக்கூடாதென்ற சட்ட நியாயம் முதன்மையானதாகும். ஆர்டர் 21-ரூல் 89-இல்கண்டபடி விண்ணப்பம் கொடுக்கும் காலத்தில் ஏலம்போன சொத்துக்குடையவன் அல்லது அதில் யாதொரு ஹக்கை உடைத்தானவன் ஏலத்தை ரத்துசெய்ய அபேக்ஷிக்க லாயக்குண்டென்று அர்த்தமாகிறது. ஆகையால் ரூல் 89-இன்படி விண்ணப்பங்கொடுப்பதற்கு இரண்டு முக்கிய அம்சங்கள் ஏற்பட்டிருக்கவேண்டும். அதாவது (1) ஏலம் உறுதியாகுமுன் விண்ணப்பம் கொடுக்கப்படவேண்டும். (2) விண்ணப்பத்திற்கு முன் சொத்தில் தனக்குறிய சொந்த பாத்தியதையை அந்நியனுக்கு மாற்றியிருக்கக்கூடாது. இந்தக்கேசில் விண்ணப்பகாலத்தில் பிரதிவாதிக்கு சொத்திலுள்ள பாத்தியதையானது விலகிப்போய்விட்டது. ஏனெனில் அவன் சுதாவில் அந்நியனுக்கு விக்கிரயம் செய்துவிட்டான். ஆகையால் பாத்தியதை நீங்கிப்போன பிறகு ஏலத்தை ரத்துசெய்வதற்குப் பிரதிவாதிக்கு அதிகாரமில்லையென்று ஜில்லா கோர்ட்டார் தீர்மானித்தது நியாயமாகும்.

பிரதிவாதிக்காக 32 கல்கத்தா 107-ம், 25 பம்பாய் 631-ம் எடுத்துக்காட்டப்பட்டது. அந்தத் தீர்மானங்கள் பழய ஸி. பி. ஸி. 310-A-யின் கருத்தை கவனித்து ஏற்பட்டவைகளாகும். பழய கோடின்படி எவனுடைய சொத்தானது ஏலம் போடப்பட்டதோ அவன் ஏலம் உறுதியாகுமுன் தொகையைக்கட்டி ஏலத்தை ரத்துசெய்ய விண்ணப்பங்கொடுக்கலாம். அப்படிப்பட்டவன் சுதாவில் சொத்தை வேறொருவனுக்கு விக்கிரயம் செய்துவிட்டபோதிலும் விண்ணப்பங்கொடுக்க லாயக்குள்ளவனென்றும் (அதாவது எவனுடைய சொத்தானது ஏலம் போடப்பட்டதோ அவன், என்ற வசனங்களின் கருத்தில் சுதாவில் சொத்தை விக்கிரயம் செய்துவிட்டவனும் அடங்கியிருப்பதாகவும்) மேற்கூறிய இரண்டு தீர்மானங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சொத்தை விக்கிரயம் செய்தபின்னும் விண்ணப்பம் கொடுக்க பாத்தியமுண்டென்ற ஷை தீர்மானங்கள் சரியானதென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது அந்தத் தீர்மானங்களின் நியாயத்தைப் பற்றி அபிப்பிராயம் கொடுக்க அவசியமில்லை. ஏனெனில் புதுகோடில் கண்ட வசனங்களின்படி தாவா கேசின் அம்சங்களை யூகித்துப்பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்குமிடத்து பிரதிவாதிக்கு சொத்தில் விண்ணப்பகாலத்தில் பாத்தியதையாவது யாதொரு ஹக்காவது கிடையாதபடியால் ஏலத்தை ரத்துசெய்ய லாயக்கில்லை. (1913) மதராஸ் வாரக்குறிப்புகளின் 101-இல் தீர்மானித்தபடி பிரதிவாதியிடம் கிரயம் பெற்றவன்



ஏலத்தை ரத்துசெய்யக்கோறலாம். அப்படியிருக்க பிரதிவாதியும் அதேவித பரிகாரம்தேட அவசியமில்லை. 34 அலகபாத் 186-இல் சொத்து பாத்தியதையை விநியோகம் செய்துவிட்ட பிரதிவாதி ஏலத்தை ரத்து செய்ய லாயக்கில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தத்தீர்மானத்தில் கிரயம் பெற்றவனும் ஏலத்தை ரத்துசெய்ய லாயக்குள்ளவனல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த அபிப்பிராயமானது பிந்திய தீர்மானத்தில் அதாவது (1913) மதராஸ் வாரக்குறிப்புகள் 101-இல் மாற்றப்பட்டு எதிரியினிடம் கிரயம் பெற்றவன் ஏலத்தை ரத்து செய்யலாமென்று ஏற்பட்டிருக்கிறது. அதை அனுசரிக்கக்கடவதாகும். ஆகவே 89-வது ரூல்படி இந்தக்கேசில் பிரதிவாதி ஏலத்தை ரத்துசெய்ய விண்ணப்பம் கொடுக்க நியாயமில்லை. ஏலமான 30 தினங்களுக்குள், ஏலம் உறுதியாகுமுன் பிரதிவாதியிடம் விக்கிரயம் பெற்றவன் விண்ணப்பம் கொடுத்திருக்கவேண்டும்.

மேற்கூறிய சட்ட அபிப்பிராயம் (ஒருக்கால் பிசகாயிருந்தபோதிலும் அது ஒரு பிசகான சட்ட அபிப்பிராயமாகுமேயொழிய அவ்வித பிசகான சட்ட அபிப்பிராயத்தைக்கொண்டு ஜில்லா கோர்ட்டார் செய்த உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டார் 115-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்க நியாயமில்லை. கீழ்கோர்ட்டார் அதிகாரவரம்பில்லாமல் அல்லது முக்கியமான ஒழுங்கீனத்துடன் நடந்தாலும் சட்டவிரோதமாய் நடந்துகொண்டாலும் 115-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்க நியாயமுண்டு. ஒரு தப்பான சட்ட அபிப்பிராயத்தைப்பற்றி ரிவிஷனில் பிரவேசிக்கத்தகாது. சட்ட அபிப்பிராயம், அதாவது சொத்தை விக்கிரயம் செய்த பிரதிவாதி ஏலத்தை ரத்துசெய்ய யோக்கியமானவனல்லவென்ற பாயிண்டு, தப்பானபோதிலும் அதைப் பற்றி ரிவிஷனில் பிரவேசிக்க நியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. ரிவிஷன் கிடையாதென்ற சந்தேகத்தால் பிரதிவாதி 2-வது மனு அப்பீலாகவும் மிமோ கொடுத்ததில் அந்த அப்பீலில் எதிர் தரப்பாருக்குச் செலவு தொகையளிக்கப்பட்டதால் இந்த ரிவிஷன் மனு செலவில்லாமல் தள்ளுபடியாச்சுது. (ஹைகோர்ட்டாருடைய சட்ட அபிப்பிராயத்தை அனுசரித்தே 2-வது மனு அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுதுபோலும்)

## பிரிவி கௌன்ஸில் கேஸ்

(மதராஸ்)

19–12–1913

*நாயனி ரங்கராவ் Vs ராமகிருஷ்ணய்யா*

ஜில்லா கோர்ட் தீர்மானத்தின்பேரில் ஒரு நம்பர் ஹைகோர்ட்டில் அப்பீல் தாகலாகி ஈரங்கியாகுமுன் ஹைகோர்ட்டார் அப்பீல் வாதிக்கு விரோதமாக அப்பீலைச்சேர்ந்த ஒரு சில்லரை மனுவில் உத்தரவளிக்கவே அவ்வித உத்தரவின்பேரில் பிரிவி கௌன்ஸிலுக்கு மனு அப்பீல் செய்ய ஹைகோர்ட்டார் அனுமதி கொடுக்காதபடியால் அப்பீல் வாதி நேரில் பிரிவி கௌன்ஸிலுக்கு விண்ணப்பம் செய்துகொண்டதில், ஹைகோர்ட் அப்பீல் ஈரங்கியாகுமுன் சில்லரை மனு விஷயமாக பிரிவி கௌன்ஸிலார் பிரவேசித்து யாதொரு உத்தரவளிப்பது யுக்தமல்லவென்றும், ஆனால் ஹைகோர்ட்டாருடைய உத்தரவின்பேரில் அப்பீல் செய்யப்படாத பட்சத்தில் இந்தியாவில் வழங்கிவரும் சம்பிரதாயப்படி அந்த உத்தரவு காயமாக ஏற்பட்டுவிடுமென்ற காரணத்தால் மனுதார் பிரிவி கௌன்ஸில் அப்பீலில் அந்த உத்தரவை ஆக்ஷேபிக்க வந்தது அவசியமான நடவடிக்கைதானென்றும் சொல்லி ஹைகோர்ட்டாருடைய உத்தரவின்பேரில் இப்பொழுது பிரவேசிக்க இஷ்டமில்லையென்று கொடுக்கிற தீர்மானத்தால், இருதரத்தாருக்கும் யாதொரு சாதகபாதகமும் ஏற்பட்டதாக நிதானிக்கக்கூடாதென்றும், ஹைகோர்ட் அப்பீல் முடிவானபிறகு பிரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் வரும் சமயத்தில் மேற்கூறிய மனு உத்தரவில் ஏற்பட்ட அம்சங்களைப்பற்றியும் பரிபூரணமாய் வாதம் செய்ய லாயக்குண்டென்றும் சொல்லி பிரிவி கௌன்ஸிலார் இருகக்ஷிக்கும் பாதகமில்லாதபடி இந்த மனு அப்பீல் செலவானது முடிவான பைசலைப் பொறுத்ததாகுமென்று தீர்மானித்து மனு அப்பீலைத் தள்ளுபடியான பாவனையில்லாமல் பைசல் கொடுத்தார்கள்.

———:o:———

ஜஸ்டிஸ் ஏய்லிங்

கிருஷ்ணா ஜில்லா

C. R. P. 1019 to 1025 of 1912

6 ஜனவரி 1914

*சுப்பய்யா Vs வெங்கட்ராமய்ய அப்பாராவ்*

வாதி ஜமீன்தாரவர்கள் 25-30 வருஷங்களாக ஜமீன் நிலங்களில் நஞ்சை சாகுபடி செய்துகொண்டு ஏகர் 1-க்கு 15 அணா 10 பை விகிதம் தீர்வை செலுத்திவந்த சில ரயட்டுகள்பேரில் 1909 ஜூன் 30 உ-யோடு முடிந்த 1317, 1318-வது பசலிக்காக ஷை நிலங்களுக்கு முன் செலுத்திவந்த தீர்வை விகிதத்திற்கதிகமான தீர்வையை வசூலிக்கும்பொருட்டு கூடிவாடா டி-மு கோர்ட்டில் ஸ்மால்காஸ் தரப்பில் தாவா செய்ததில் 3-வதுஇஷுவைப்பற்றிய டி-மு கோர்ட்டார் தீர்மானத்தில், ரயட்டுகள் ஷை நிலங்களை தாவா பசலிகளுக்கு சாகுபடி செய்யத் தொடங்குமுன் அதிகத்தீர்வை வசூலிக்கப்போவதாய் ஜமீன்தார் அவர்களுக்கு நோடீஸ் கொடுக்கவில்லையென்று சொல்லியும், அவ்வித தீர்மானத்தின் கருத்தைப் பற்றி யோஜியாமல்' வாதி கோறியபடி அதிகத் தீர்வைக்காக டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் ரயட்டுகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனு தாகல் செய்ததில் ஏற்பட்ட தீர்மானமாவது:- 15 வருஷங்களாக ரயட்டுகள் ஏகர் 1-க்கு 15 அணா 10-பை வீதம் தீர்வை செலுத்தி தாவா நிலங்களில் நஞ்சை சாகுபடிசெய்து வந்ததாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதிகத்தீர்வை வசூலிக்கும் எண்ணத்தைப்பற்றி ரயட்டுகளுக்கு முந்தியே தெரிவித்திருந்தால் அவர்கள் நஞ்சை சாகுபடி செய்யாமல் புஞ்சை சாகுபடிசெய்து அதிகத்தீர்வை செலுத்தக் கடமையல்லாதபடி இந்த தாவாவை நிவர்த்தி செய்திருக்கலாம். அவ்வித சந்தர்ப்பத்தில் வாதிக்கு அதிக தீர்வைக்கு டிக்கிரீயளிக்க நியாயமில்லையென்று 28 மதராஸ் 391, 27.மதராஸ் 392-யும் அனுசரித்து மேற்கூறிய இரண்டு பசலிகளுக்கும் பழய விகிதமாகிய 15 அணா 10-பையாக டிக்கிரீயளித்தார்கள். தவிற வாதி தாவாவில் கோறின (கரணன் சலகம்) என்ற விகிதத்தைப்பற்றி முச்சலிக்கையில் குறித்திருக்கிற விஷயத்தைத் தவிற அவ்விகிதமானது 15-20 வருஷகாலமாய் வசூலிக்கப்பட்டுவந்ததாகருஜூபாகம் யாதொன்றும் கிடையாதபடியால் அந்த பரிகாரமும் வாதிக்குக் கிடைக்கத்தகாதென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

செங்கல்பட்டு ஜில்லா

S. A. 826 of 1911–25 ஜூலை 1913

*திருவேங்கடாச்சாரியார் Vs வெங்கடாச்சாரியார்*

1-2 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை வாதிக்கு விக்கிறயம் செய்துகொடுப்பதாய் உடன்படிக்கை செய்துகொண்டு 1905-இல் கிறய தஸ்தவேஜில் கையொப்பமிட்டபிறகு கிறயம் பூர்த்தி செய்யப்படாமல் 2-ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை 3-ம் பிரதிவாதிக்கு ரூ. 1250-க்கு விக்கிறயம்செய்துகொடுத்ததின்பேரில்வாதி1908-ம் வருஷத்தில் தனக்கு ஏற்பட்ட கிறயத்தை பூர்த்திசெய்து கொடுக்கவேண்டியதென்று 1-2 பிரதிவாதிகளுடன் பின்னால் கிறயம்பெற்றவனையும் 3-ம் பிரதிவாதியாகச்சேர்த்து செங்கல்பட்டு டி-மூ கோர்ட்டில் அசல் தாவா செய்து டிக்கிரீ பெற்றபிறகு ஜில்லா கோர்ட்டார் அப்பீலில் வாதியுடன் செய்யப்பட்ட விக்கிறய உடன்படிக்கையைத் தெரிந்தே 3-ம் பிரதிவாதி தாவா சொத்தைக் கிறயம் பெற்றதாக ருஜூப்படுத்தவேண்டிய பொருப்பு வாதியைச் சேர்ந்ததாகுமென்று அபிப்பிராயப்பட்டு அவ்விதமாய் வாதி ருஜூப்படுத்தாதபடியால் 3-ம் பிரதிவாதியின் விக்கிறயத்தை ரத்து செய்து வாதிக்குப் பரிகாரமளிக்க நியாயமில்லையென்றும் 1, 2 பிரதிவாதிகள்பேரில் ஒப்பந்தத்தை மீறி நடந்ததற்காக வாதி வேறு தாவாவில் பரிகாரம் தேடிக்கொள்ளலாமென்றும்சொல்லி, வாதியின் உடன்படிக்கையைப்பற்றியும் 3-ம் பிரதிவாதியின் விக்கிறயத்தைப்பற்றிய வாதியின் ஆக்ஷேபனையைக் குறித்தும் ஏற்பட்டிருக்கிற மற்ற இஷூக்களைப் பற்றி யாதொரு தீர்மானமும் கொடுக்காமல் வாதியின் தாவாவைத்தள்ளுபடிசெய்துவிட்டார்கள் அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஹைகோர்ட்டார் 36 பம்பாய் 446-இல் ஏற்பட்டிருக்கிற தீர்மானத்தின்படி பிந்திய கிறயதார் கிறயத்திற்குறிய பிரதிப்பிர



யோஜனமளித்த விஷயத்தையும், நல்லெண்ணத்துடன் கிறயம் பெற்றதாகவும், முந்தியதான வேறு விக்கிறய உடன்படிக்கையைப்பற்றி யாதொரு தகவலும் தனக்குத் தெரியாதென்றும் ருஜூபடுத்தவேண்டிய கடமையானது பிந்திய கிறயதாரைச்சேர்ந்ததாகுமேயொழிய, முன் உடன்படிக்கையை ஸ்தாபித்து ருஜூம்படுத்தின வாதியைச்சேர்ந்த கடமையாகாதென்றும் அபிப்பிராயப்பட்டு, 3-ம் பிரதிவாதிக்கு அனுகூலமாய் ஜில்லா கோர்ட்டார் தீர்மானித்தபோதிலும் அவருடைய விக்கிறயதுகை 1250-ம் மெய்யாய் செலுத்தப்பட்டதா அல்லது பொய்யான துகையா என்றும் தாவா உடன்படிக்கையின் சமயத்திலும் 3-ம் பிரதிவாதியின் விக்கிறய காலத்திலும் தாவா சொத்து என்னவிலை மதிப்பாகுமென்றும் தீர்மானிக்க அவசியமில்லையென்றுஜில்லாகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது முற்றிலும் பிசகென்றும், ஜில்லாகோர்ட்டார் வாதியின்பேரில்கிறயதஸ்தவேஜானது1905இல்வாஸ்தவமாய் பிறந்ததாகும் பினபடியால் அதைப்பற்றிய ஒப்பந்தமும் மற்ற பிராதில் கண்ட அம்சங்களும் தீர்மான முடிவடையத்தகுமென்றும் சொல்லி ஹைகோர்ட்டார் அப்பீலை ரிமாண்டுசெய்து மறு ஈரங்கிகேட்டு மேல்கண்ட ஒவ்வொரு பாயிண்டைப்பற்றியும் தீர்மானமளிக்கும்படிக்கும், 1-2-பிரதிவாதிகள் காலஞ்சென்றமையால் 2-ம்பிரதிவாதியின் மகள் தன் தகப்பனுடைய ஏற்பாட்டுக்குக் கட்டுப்பட நியாயமில்லை யென்று ஆக்ஷேபித்தால் அதைப் பற்றியும் ஈரங்கிகேட்டு பைசலளிக்கும்படியாகவும் உத்தரவளித்தார்கள்.

——— o ———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

நெல்லூர் ஜில்லா

S. A. 1539 of 1910—21 ஜனவரி 1914

*சின்னகொண்டையன் Vs நரஸப்ப நாயுடு*

வாதி சின்னகொண்டயனும் மூன்று பிரதிவாதிகளுமாக கூட்டு வியாபாரம் நடத்திவந்ததில் 1903 அக்டோபரில் எல்லாருடைய சம்மதத்தின் பேரில் கூட்டு வியாபாரம் கலைந்துபோய் வாதியும் 3-ம் பிரதிவாதியினுடைய வகை மனிதர்களுமாகச் சேர்ந்து கூட்டு வியாபாரத்திற்குறிய நிலுவை பாக்கிகளை 1903 நவம்பர் முதல் 1904 மே மாதத்திற்குள் வசூல்செய்து 1-2 பிரதிவாதிகளிடம் கொடுத்துவிட்டபின் அவ்விதமாய் வசூலாகி 1-2-பிரதிவாதிகளிடம் செலுத்தப்பட்ட துகைகளில் வாதி தன் விகிதத்திற்காக கணக்குப்படி ரூ 846-4-0 சேரவேண்டியதாக நிதானித்து அந்தத்துகையையாவது அல்லது கணக்கில் ஏற்படக்கூடிய துகையையாவது அடையும்பொருட்டு கானிகிரி டி-மு-கோர்ட்டில் 1907-ம் வருஷத்திய அசல் நம்பர் 458-இல் வியாபாரத்திற்குறிய கணக்குகளை கோர்ட்டில் வரவழைத்துக் கணக்குப்பார்த்து தனக்குறிய விகிதத்திற்காக 1-2 பிரதிவாதிகள் பேரிலும் அவர்களுடைய குடும்பசொத்தைப் பொறுத்தும் டிக்கிரீ அளிக்கவேண்டுமென்று தாவா செய்ததில் டி-மு-கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லாகோர்ட்டாரும் கூட்டு வியாபாரமானது வாஸ்தவமாக 1903 மே மாதத்திலேயே கலைந்துபோனதாகவும் அது முதல் 3-வருஷங்களுக்குள் கணக்குப்பார்த்து பங்கு விகிதம் பிரித்துக் கொடுக்கும்படி தாவா செய்யப்படவேண்டியதாயிருக்க 1907 ஜூலையில் செய்யப்பட்ட வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷமென்று தீர்மானித்துப் பிராதைத் தள்ளபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் வாதியின் பிராது தள்ளுபடியாகத் தக்கதல்லவென்று அபிப்பிராயப்பட்டு கேஸை ரிமாண்டுசெய்து அப்பீல் மவுண்டை வாபீஸ்செய்து சட்டப்படிக்கு மறு விஜாரணைசெய்து பைசல் கொடுக்கும்படி டி-மு கோர்ட்டாருக்கு உத்தரவளித்து புதிதாய் ஏற்படும் டிக்கிரீயில் முந்திய நடவடிக்கைகளின் செலவுக்குறிய பரிகாரங்களையும் நியாயப்படி தீர்மானிக்கவேணுமென்று சொன்னார்கள். ஹைகோர்ட்டார் தீர்மானத்தில் சொன்னதாவது:—

வாதி பிராதில் கேட்கிற பரிகாரம் தெளிவாய் எழுதப்படவில்லை. பிராதில் 10, 16-வது பாராக்களையும் பரிகாரத்தைக்குறித்திருக்கிற 17-வது பாராவையும் படித்துப்பார்க்குமிடத்து வாதியும் 3-ம் பிரதிவாதியும் வசூலித்து 1-2 பிரதிவாதியிடம் கொடுத்த துகையில் வாதி தனக்குறிய பங்குவிகிதத்தைக் கேட்பதாகத் தோன்றுகிறது. கலைந்துபோன பங்குவியாபாரத்தின் கணக்கு வழக்குகளைப் பரிசீலனைசெய்து பங்கு பிரித்துக்

கொடுக்கவேண்டுமென்ற பரிகாரத்துடன்கூட, பிராதுக்கு முன் மூன்று வருஷங்களுக்குள் 1-2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டிருந்த தொகையில் பங்குவிகிதம் வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருந்தால் 23 மதராஸ் 344, 32 மதராஸ் 203, 34 மதராஸ் 112 ஆகிய கேஸ்களில் தீர்மானித்திருக்கிறபடி பிராதுக்கு காலாவதிதோஷம் ஏற்பட நியாயமில்லை. வசூலான மூன்றுவருஷத்திற்குள் தாவாகொண்டுவரலாம். வாதியும் எந்தெந்த தொகைகள் வசூலாகி யிருக்கிறதென்று ருஜூப்படுத்த லாயக்குண்டு. பிரதிவாதிகளும் அவ்விதமாய் மூன்று வருஷங்களுக்குள்வசூலானதொகையிலிருந்து வாதிக்கு பங்குவிகிதம் கிடைக்க நியாயமில்லையென்று கூட்டுவியாபாரக் கணக்கின் நிலைமையையும் யோக்கியதையையும் குறித்துக் காட்டி எதிர்வாதத்தில் ருஜூப்படுத்த இடங்கொடுக்கப்படவேண்டும். வாதிக்காக இவ்வித பாயிண்டை டி-மு கோர்ட்டாரிடம் எடுத்துச்சொல்லப்பட்டதாகத் தோன்றவில்லை. அப்பீல் கோர்ட்டில் மட்டும் அதைப்பற்றி வாதிக்காகப் பேசப்பட்டிருக்கிறது. அதாவது எந்தந்த தொகை வசூலிக்கப்பட்டு எதிரிகள் வசம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று டி-மு கோர்ட்டார் விஜாரித்திருக்கவேண்டுமென்று அப்பீல் க்ரௌண்டில் சொல்லப்பட்டது. என்றாலும் இந்தக்கேசின் சந்தர்ப்பத்தில் காலாவதி பாயிண்டைத் தீர்மானிப்பது கஷ்டமாகிறதாய் தோன்றுகிறபடியாலும் வாதிக்கும் வாதி வக்கீலுக்கும் காலாவதியைப் பற்றி தெளிவான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்காதென்ற சந்தேகத்தாலும் வாதியின் தாவாவை காலாவதி யென்று தள்ளுபடிசெய்வது உசிதமல்லவென்று நினைத்து மேற்கூறிய விதமாய் டி-மு-கோர்ட்டாருக்கு மறுவிஜாரணைசெய்து பைசல் கொடுக்கும்படி ரிமாண்டு உத்தரவளித்தார்கள்.

---

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஏய்லிங்

திருச்சினாப்பள்ளி

L. P. A. 225 of 1912—23 ஜனவரி 1914

கோபாலய்யங்கார் *Vs* வெங்கடகிருஷ்ணய்யங்கார்

காலஞ்சென்ற வெங்கடவரதய்யங்கார் பேரால் பிறந்திருக்கிற ஒரு பிராமிஸரி நோட்டின் பேரில் ஏற்பட்ட பாக்கியை வசூலிக்கும்பொருட்டு அவருடைய குடும்பத்தைச்சேர்ந்த மற்ற பாகஸ்தர்கள் பாக்கிதாராகிய கோபாலய்யங்கார்மீது செய்த வியாஜ்ஜியத்தில் தாவா நோட்டுக்கடன் தொகையானது குடும்பத்திற்குச் சேரவேண்டியதென்று வாதம்செய்யப்பட்டது. குடும்பப்பொதுவான லேவாதேவி யல்லவென்றும் தாவா கடன் பாக்கியானது 1-ம் வாதியும் காலஞ்சென்றவெங்கட வரதய்யங்காரும் சேர்ந்துசெய்த கூட்டுக்குடும்ப வியாபாரத்திற்குச் சேரவேண்டியதாகவும் ஆகவே இரண்டு கூட்டுப்பங்காளிகளில் காலஞ்சென்றவர்போக மற்ற பங்காளியாகிய 1-ம் வாதி தாவா செய்ய லாயக்குண்டென்று சப்கோர்ட்டார் தீர்மானித்தார்கள். அதன்பேரில் எதிரி ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்ததில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் வாதிகளுக்கனுகூலமாய் பிராது செல்லத்தகுமென்று தீர்மானித்தார்கள். அந்தப்பைசலின்பேரில் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்ததில் 30 மதராஸ் 88-இன் தீர்மானத்தை அனுசரித்து தாவாகடன் குடும்பக்கடனல்லவென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதினால் வெங்கடவரதய்யங்கார் ஒருவர்பேரில் மட்டும் நோட் எழுதப்பட்டிருப்பதாலும் அவருக்கு சம்சாரம் அடுத்தவார்ஸாகிறபடியாலும் கூட்டுப்பங்காளியாகிய 1-ம் வாதியும் தாவாசெய்ய லாயக்கில்லையென்றும் மற்ற குடும்ப பாகஸ்தர்களும் தாவாசெய்ய நியாயமில்லையென்றும் தீர்மானித்து ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய தீர்மானம் மாற்றப்பட்டு வாதிகளின் தாவா தள்ளுபடியாச்சுது. செலவுதொகை அவரவர்களே வகிக்கவேண்டுமென்று உத்தரவாச்சுது.

---:o:---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

ராமனாதபுரம் ஜில்லா

C. R. P. 744 of 1910-10 டிசம்பர் 1913

முத்தைய்ய செட்டியார் *Vs* ஆதீனமுளகி

வாதி முத்தைய்ய செட்டியார் தர்மகாத்தா அந்தஸ்தில் தேவஸ்தான நிலங்களை சாகுபடிசெய்துவந்த ரயட்டுகள் மீது தீர்வை பாக்கிக்காக ராமனாதபுரம் சப்கோர்ட்டில் ஸ்மால்காஸ்தராயில் பிராது செய்ததில் தேவஸ்தானத்திற்கு தர்வாநிலங்களில் குடிவார பாத்தியதை கிடையாதென்றும் ஆகவே அவ்வித ஆக்ஷேபணையைப் பற்றி விஜாரித்துப் பைசலளிக்க ரெவினியூகோர்ட்டாருக்கு மட்டும் அதிகார முண்டாதலால் அந்த பாயிண்டு தீர்மானிக்கப்படாமல் இந்ததாவா ஸிவில்கோர்ட்டில் கொண்டுவரக்கூடாதென்றும் தவிர வாதி தர்மகர்த்தாவாக நின்று பிராது செய்ய லாயக்குள்ளவரல்லவென்றும், ஆகையால் வாதி பிராதுசெய்ய யோக்கியமுள்ளவரா என்று ஸ்மால்காஸ் தரப்பில் விஜாரித்துத் தீர்மானமுடிவு சொல்ல அதிகாரம் கிடையாதென்றும், எதிரிகளுடை எதிர் வாதத்தைக்கேட்டு, கோர்ட்டார் வாதியின் பிராதை மாகாண ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட் 23-வது பிரிவின் அம்சங்களை அனுசரித்து வாபிஸ்செய்து விட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுகொடுத்ததில் குடிகளின் எதிர்வாதம் சரியென்று அபிப்பிராயப்பட்டு ஹைகோர்ட்டார் ரிவிஷன் விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். மனுதாருக்காக வக்கில் மிஸ்டர் வரதாச்சாரியாரவர்கள் வாதியின் தீர்வை பாக்கியாகிய பரிகாரத்திற்கு குடிவார பாத்தியம் உண்டா என்ற பாயிண்டு தீர்மானிக்கப்படவேண்டிய தில்லையென்றும், ஸிவில்கோர்ட்டுக்கு அதிகாரவரம் புண்டாவெனத் தீர்மானிப்பதற்காக மட்டும்வாதியின்குடிவாரபாத்தியதையைப்பற்றிசரியானகோர்ட்டில் விஜாரணையாகியிருக்கவேண்டுமென்றும், ஆகவே மாகாண ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட் 23-வது பிரிவின் அம்சங்கள் இத்தகைய பிராதுக்கு ஏற்றதல்லவென்றும் வாதம் செய்தார். 23-வது பிரிவின் கருத்தையும் காரணத்தையும் கவனித்தால் ஸ்மால்காஸ் தரப்பில் நடக்கும் வியாஜ்ஜியத்தில் பாத்தியதையைப்பற்றிய விஷயமானது தீர்மானமாக வேண்டிய தவசியமாகத் தோன்றுமிடத்து அவ்விசத் தீர்மானம் அசல்கோர்ட்டாரால் கொடுக்கப்பட்டால் அதற்கு அப்பீல், 2-வது அப்பீல் என்ற முறைகள் ஏற்பட்டுக் கடைசிபைசலுக்கு இருதரத்தாரும் கட்டுப்பட்டுரிஜூடிகேடா தோஷத்திற் கிடமுண்டாகக் கூடியதானால், அவ்வித விஜாரணைசெய்து பைசல்கொடுக்க லாயக்குள்ள அசல்கோர்ட்டுக்கு அந்தப்பிராதை தாகல் செய்யும்படி வாபிஸ்செய்ய ஸ்மால்காஸ் கோர்ட்டாருக்கு யுக்தமுண்டென்று ஏற்படுகிறது. அதுபோலவே ஒரு அசையாப்பொருளைப்பற்றிய பாத்தியதையின் தீர்மானத்தை அனுசரித்து ஒரு தாவா ஸிவில்கோர்ட்டார் பிடிக்கத்தக்கதா அல்லது ரெவினியூகோர்ட்டார்பிடிக்கத்தக்கதா வென்று தகரார் வரும் கேசுகளிலும் அதே நியாயத்தை அனுசரித்து பிராதை வாபிஸ் செய்யலாகும். அதாவது வாதிக்குக் குடிவார பாத்தியதை உண்டென்று ஏற்பட்டால் ஸிவில் கோர்ட்டார் தீர்வைக்குறிய பிராதை விஜாரிக்கலாம். குடிவார பாத்தியதை இல்லாத விஷயத்தில் ரெவினியூகோர்ட்டில் தான் தீர்வை பாக்கிக்காக வியாஜ்ஜியம் செய்யவேண்டியதாகும். ஆகவே குடிவார பாத்தியதை உண்டா இல்லையா எனத் தீர்மானிக்க வேண்டியது ரெவினியூகோர்ட்டாரைச் சேர்ந்ததால் சப்கோர்ட்டார் பிராதை வாபிஸ்செய்தது சட்டவிரோதமல்ல. அந்த அபிப்பிராயம் பிசகானாலும் எதிரிகள் வாதியின் தர்மகர்த்தா அந்தஸ்தில் பிராது செய்யும் அதிகாரத்தை ஆக்ஷேபிக்கிறபடியால் அது விஷயமான தீர்மானம் ஸ்மால்காஸ் தரப்பில் கொடுக்க நியாயமில்லாதபடியால் 23-வது பிரிவின்படி பிராதை வாபிஸ் செய்தது சரியாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.



---o---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

திருச்சனாப்பள்ளி ஜில்லா

L. P. A. 102 of 1913-4 பிப்ரவரி 1914

கருப்பண்ண கவுண்டன் *Vs* கந்தசாமி கவுண்டன்.

மனுதாராகிய கருப்பண்ணகவுண்டனுடைய நிலத்திலிருக்கும் ஒரு பழய நடைபாதை வழியாய் எதிரி போகக்கூடாதென்று கிரிமினல் புரோஜிஸர் கோட் 144-வது பிரிவின்படி 1912 நவம்பர் 20 உ-யில் 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டார் அவ்வித கடத்தையால் கலகம், தீங்கு முதலிய சம்பவங்கள் நேராமல் தடுக்கும் பொருட்டு மறியல் கட்டளை யிட்டபிறகு மனுதார் அந்தப் பாதையின் குறுக்கில் ஒரு வேலியைக்கட்டி போக்குவரத்துக்கு இடையூருண்டாக்கினதின் பேரில் கரூர் சப் டிவிஷனில் மாஜிஸ்டிரேட்டாரவர்கள் இருதரத்தாருக்குமுள்ள தகராரினால்

ஷிவேலிபோட்டவிஷயத்தால்தால்சமாதானக்குறைவும்கலகமும்உண்டாகுமென்றுதெரிந்துகொண்டு,147-வதுபிரிவின்படி1912நவம்பர்25உ-யில் அந்த வேலியைப் பிரித்து போக்குவரத்துக்கு யாதொரு தடையும் செய்யக்கூடாதென்று மனுதாருக்கு உத்தரவளித்தமேல் மனுதார் அந்த உத்தரவு சட்ட விரோதமானதென்று ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்ததில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் துரையவர்கள் மனுதாரின் விண்ணப்பத்தைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் மனுதார் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்ததில் அந்த அப்பீலும் தள்ளுபடியாச்சுது. அப்பீல் தீர்மானத்தில்சொன்ன காரணங்களாவன:— 20 உ-யில் 144-வது பிரிவின்படி மறியல் உத்தரவு பிறந்திருக்க 25 உ-யில் கலகம் நேரிடுமென்ற சந்தேகம் ஏற்பட்டு 147-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்துவது அதிகார வரம்பின்றி செய்த உத்தரவாகுமென்று மனுதாருக்காக வாதிக்கப்படுகிறது. 144-வது பிரிவின்படி உத்தரவளிக்கப்பட்டும கலகத்திற்காஸ்பதமான சந்தர்ப்பங்கள் அடங்காமல் நிற்பதாய் சப் கலக்டரவர்களுக்கு ஒரு வாரத்திற்குள் தோற்றுமிடத்து அவ்விதமான மாற்றமுண்டாகக் கூடாதென்றாவது அவ்வித தோற்றத்தைக்கொண்டு 147-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்தக்கூடாதென்றாவது சொல்லத்தகாது. மாஜிஸ்டிரேட்டாரவர்கள் கலகமுண்டாகக்கூடியதாக சந்தேகிப்பதற்குப் போதுமான காரணங்களில்லையென்று ஏற்படும் விஷயத்தில் ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசித்து மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவை மாற்றலாம்.

மனுதார் கட்டியிருக்கிற வேலியைப் பிரித்துவிடும்படி உத்தரவளிப்பதற்கு 147-வது பிரிவின் அம்சங்கள் ஏற்காதென்று வாதிக்கப்படுகிறது. ஒரு நடபாதை, தண்ணீர்பாசனம் முதலிய ஒருவருடைய பாத்தியதையை மற்றொருவர் ஆக்ஷேபித்து அதனால் கலகம் வருமென்று தோன்றினால் மட்டும் 147-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்தலாமேயொழிய ஒரு கட்டடத்தை இடிக்கும்படி உத்தரவளிக்க (கட்டின வேலியைப் பிரிக்க) 147-வது பிரிவை அனுசரித்து உத்தரவளிக்கக் கூடாதென்று வாதிக்கப்பட்டு அதற்காதாரமாக 4 மதராஸ் 181-ம், 1 weir, 143, 144-ம் எடுத்துக்காட்டப்பட்டது. 4 மதராஸ் கேசில் ஒருவன் நடைபாதையில் ஸ்திரான இரும்பு கம்பியால் வேலி போட்டு ஆழமான அகழ்வெட்டி சுவரும் எழுப்பி பாதையைத் தடுத்திருந்த விஷயத்தில் மாஜிஸ்டிரேட்டார் போதுமான விஜாரணை செய்யாமல் ஒரு தலையாக 147-வது பிரிவுக்குச்சரியான பழய கிரி-பு-கோ. 532-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டார் உத்தரவளித்தது சரியல்லவென்று தீர்மானிக்கப்பட்டதும் தவிர அந்த விதமான சந்தர்ப்பத்தில் மாஜிஸ்டிரேட்டார் 10-வது அத்தியாயத்தில் 133-வது பிரிவின்படி நடவடிக்கையெடுத்து உத்தரவளிக்க வேண்டுமென்று, அதாவது ஜனப்பொதுவான புழக்கத்திற் கிடையூறாகிறதாகச் சொல்லி உத்தரவளிக்க வேண்டுமென்று அபிப்பிராயங்கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கேசில் மனுதார் போட்டிருக்கிற வேலியானது அதிக அற்பமான தடங்கலாகிறது. 133-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டார் உத்தரவளிக்கவேண்டிய சந்தர்ப்பத்தில் 147-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்தக்கூடாதென்று மேற்கூறிய 4 மதராஸ் கேஸின் தீர்மானத்தால் ஏற்படும் பட்சத்தில் அந்தத்தீர்மானத்தை அனுசரிக்க நியாயமில்லை. மற்றொரு கேசின் தீர்மானத்திற்கும் அதேவித சமாதானம் சொல்லவேண்டியதாகும். நடைபாதையானது பொது ஜனங்களுக்கு பாத்தியப்பட்டதானாலும் அல்லது ஒரு தனிமையான பார்ட்டிக்கும் பொதுவாய் பாத்தியப்பட்டதாயினும் 147-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்தி உத்தரவளிக்கலாமாகையால் 133-வது பிரிவின்படி ஜனப்பொதுமார்க்கத்தைப்பற்றி உத்தரவளிக்கவேண்டிய சந்தர்ப்பங்களிலும் 147-வது பிரிவின்படி உத்தரவளிக்கலாம். தவிர மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவானது சட்ட விரோதமாக ஏற்பட்டாலும், ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசிப்பது கோர்ட்டார் யுக்தமேயொழிய கட்டாயமில்லை. அதுவுமல்லாமல் ஹைகோர்ட்டில் ஒரு ஜட்ஜியவர்கள் ரிவிஷனில் பிரவேசிக்க மறுத்தால் அதன்மேல் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீலில் பிரவேசிக்க அதிக பலமான காரணங்களேற்பட்டிருக்கவேண்டும். மேற்கண்ட நியாயங்களைச் சொல்லி



ஹைகோர்ட்டார் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீலைத் தள்ளுபடிசெய்தார்கள்.

—o—

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

தஞ்சாவூர் ஜில்லா

S. A. 1355 of 1909—27 ஜனவரி 1914

அண்ணாமலைவேலன் *Vs* முருகப்பவேலன்

தஞ்சாவூர் சப்கோர்ட்டார் உத்தரவின்படி 1901-ம் வருஷத்திய அசல் நம்பர் 8-இல் தாவா கிராமத்திலுள்ள மேல்வாரம்தார்களுடைய பாத்தியாபாத்திய வியவகாரம் நடந்துகொண்டிருக்கும்பொழுது வியவகாரம் தீருமட்டும் மேல்வாரம்தார்களுடைய பாத்தியதையை வகித்து தீர்வை வசூல் செய்து சகல அதிகாரத்தையும் நடத்திவரும்பொருட்டு கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ரிஸீவர், வாதியின் வசத்திலும் அனுபோகத்திலுமுள்ள நிலத்திற்குறிய தீர்வை பாக்கி ஏற்பட்டு செலுத்தப்படாத காரணத்தால் ரெண்டு ரிகவரி ஆக்ட் 39-வது பிரிவின்படி 1-ம் பிரதிவாதி ஷை நிலங்களின் குடிவார பாத்தியதையுடையவனென்று நினைத்து அவருக்கு நோட்டீஸ் ஸர்வ் செய்தபின் ஷை நிலத்தின் குடிவார பாத்தியதையை சட்டப்படிக்கு ஏலத்திற்குக் கொண்டுவந்ததில் 2-ம் பிரதிவாதி ஏலமெடுத்தார். வாதி அந்த ஏலத்தை ரத்து செய்யும்பொருட்டு ஏல தேதிமுதல் 1-வருஷ கெடுவுக்குள் பட்டுக்கோட்டை டி-மு கோர்ட்டில் தாவா செய்து அதில் தாவா நில பாத்தியதையானது 1890-ம் வருஷத்தில் தனக்கும் 1-ம் பிரதிவாதிக்கும் பாகமானபொழுது தன்னுடைய பாகத்திற்கு வந்ததாகவும் தனக்கும் நோட்டீஸ் கொடுக்காமல் ஏலம் போட்டது சட்ட விரோதமென்றும் 1-ம் பிரதிவாதிக்குக்கொடுத்த நோட்டீஸ் தன்னைக் கட்டுப்படுத்தாதென்றும் ஏல சொத்தையும் அதிலுள்ள மரங்களையும பற்றின முச்சலிக்கையாவது ஏல இஸ்தியாராவது ஏற்பட்டில்லையென்றும் ஆகவே மேற்கூறிய ஒழுங்கீனங்களைக்காட்டி ஏலத்தை ரத்துசெய்யக் கோறினதில் 1, 2: பிரதிவாதிகளுடன் கிராமத்திலுள்ள மேல்வார பாத்தியதையுடைய மிராஸ்தார்களனைவரையும் 3 முதல் 80 பிரதிவாதிகளாகச் சேர்த்திருந்தார்கள். பிரதிவாதிகள் எதிர் ஆன்ஸராக மேல்வார பாத்தியதையை அனுபவித்து வருகிறவராயும் ஏலத்திற்குமுந்தி நோட்டீஸ் கொடுத்தவராயுமிருக்கிற ரிஸீவரையும் பிரதிவாதியாகசேர்த்திருக்கவேண்டுமென்றும் அவர் அவசியமான பார்டியாகிறபடியால் அவரைசேர்க்காமல்கொண்டுவந்த பிராது செல்லத்தகாதென்றும்ஆக்ஷேபித்தார்கள். டி-மு கோர்ட்டார் அந்த ஆக்ஷேபனையை நிராகரித்த உத்தரவின்பேரில் பிரதிவாதிகள் ஜில்லா கோர்டில் அப்பீல் செய்யவே அங்கு ரிஸீவரும் பார்டியாக சேர்க்கப்படுவது அவசியமென்று தீர்மானிக்கப்பட்டு கேஸ் ரிமாண்டாச்சுது. ஜில்லகோர்ட்டாரின் உத்தரவில் ரிஸீவருடைய நடத்தைகள் தாவாவில் ஒவ்வொரு மேல்வாரந்தாருடையநன்மைக்காகஏற்படாதபோதிலும் அல்லது அவர்கள் எல்லோருக்குமாவது அவர்களில்யாருக்காவதுபிரதிநிதியாக இராமல் போனாலும், அவர்கோர்ட்டாரால்நியமிக்கப்பட்டவராதலால் கோர்ட்டாருடையபிரதிநிதியென்றும எஸ்டேட்டுக்கு பாத்தியஸ்தன் இன்னாரென்று நிச்சயமாய் ஏற்படாதபடியால் அது ஏற்படுமட்டும் அவர் எஸ்டேட்டுக்கும் பிரதிநிதியாகிறாரென்றும், பாத்திய வியவகாரம் ஏற்படாமல் சட்டப்படிக்குள்ள மேல்வாரம்தாருடைய நடவடிக்கைகளையெல்லாம் நடத்த லாயக்குள்ளவராகிறாரென்றும், அப்படியிருக்க அவருடைய தகவலன்னியில் அவரை பார்டியாக சேர்க்காமல் வாதி விவாதம் செய்கிறமேல்வாரம்தார்களைமட்டும் எதிரிகளாகச்சேர்த்து யாதொரு நடவடிக்கை நடத்தினால் ரிஸீவர் நியமனத்தின் கருத்தே பயனற்றுப்போவதாயும் ஆகையால் அவர் அவசியமான பார்டியாகிறாரென்று பல காரணங்களைச் சொன்னார்கள். டி-மு கோர்ட்டார் மறு விஜாரணை செய்யும்பொழுது ரிஸீவரைப் பார்டியாக சேர்த்த தேதியில் பிராது தாகல் செய்யப்பட்டதாக பாவித்து பிராதுக்கு காலாவதி தோஷமெனத் தீர்மானித்து பிராதை எல்லாப் பிரதிவாதிகள்பேரிலும் நடத்தத்தக்கதல்லவென்று தள்ளுபடி செய்துவிட்டார்கள். காலாவதியைப்பற்றிய அந்தத்தீர்மானம் ஜில்லா கோர்ட் அப்பீலிலும் காயமாச்சுது. அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யவே அங்கு ரிஸீவரும் பார்டியாகவேண்டியதவசியமில்லையென்றும் மேல்வாரம்தார்களும் பார்டி-

களாய்ச் சேர்க்கப்படவேண்டியதில்லையென்றும் எலம் எடுத்த 2-ம் பிரதிவாதி ஒருவன்மட்டும் அவசியமான பார்டியாகிறானென்றும் அவரைப் பற்றினமட்டில் பிராதுக்கு காலாவதி தோஷம் கிடையாதபடியால் மற்றவர்களைப்பற்றி கவனிக்கத்தேவையில்லையென்றும் தீர்மானித்து ரிமாண்டு உத்தரவு பிசகென்று சொல்லியும் அது இச்சமயத்தில் ரத்தாகவேண்டிய அவசியமில்லையென்று சொல்லி சேர்க்கப்பட்டிருக்கிற எதிரிகளை நீக்காமலே காலாவதி பாயிண்டைப்பற்றியும் ரிஸீவர் விஷயத்தைப்பற்றியும் கொடுத்திருக்கிற அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு மற்ற வியவகாரங்களைப்பற்றி விஜாரணைசெய்து தீர்மானம் கொடுக்கும்படியாகவும் தாவா உவித்டிரா ஆகாமல், ராஜியாகாமல், அல்லது வாதியின் நடவடிக்கைக் குறைவால் தள்ளுபடியாகாமல் விஜாரணையாகும் பட்சத்தில் கேசுக்கு சம்பந்தப்பட்ட ருஜுபாயிண்டு விஷயங்கள் யாவற்றையும் பற்றி தீர்மானங்கொடுக்கும்படியும் டி-மு கோர்ட்டாருக்கு உத்தரவளித்தார்கள். வியாஜ்ஜியம் தொடுத்து ஒன்பது வருஷமாகிறபடியால் இன்னமும் சில பாயிண்டுகள் தீர்மானக்குறைவாகி மறுபடியும் ரிமாண்டாகி காலதாமத மாகாதபடிக்கு மேற்கண்டவிதமாய் உத்தரவளிக்கப்பட்டது.

ரிஸீவரும் மேல்வாரம்தார்களும் பார்டியாக சேர்க்கப்படத் தேவையில்லையென்ற ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்குச்சொன்ன காரணங்களாவன:— ரெவினியூ எலததை ரத்து செய்வதற்கு அவசியமான பிரதிவாதி எலமெடுத்தவனொருவனே. ரெண்ட் ரிகவரி ஆக்ட்படிக்கு பாக்கிதாரனுக்கு நோடீஸ் கொடுத்து எலத்துக்குக் கொண்டுவருகிற நிலச்சுவான்தார் அவசியமான பார்டியல்ல. யாதொரு டிக்கிரீயில் அவன் பார்டியாகயிருந்து அந்த டிக்கிரீப்படிக்குப்போடப்படும் எலமல்ல. சுவான்தார் நோடீஸ் கொடுத்து கலெக்டருக்குத் தெரிவித்தால் கலெக்டரவர்கள் ரெவினியூ பாக்கிக்காக எலம் போடுகிறார் அவ்வித எலத்தை சட்ட விரோமாக அல்லது ஒழுங்கீனமுறையால் நடத்தும்படி ஏற்பாடு செய்கிற சுவான்தாரையும் ஷை எலத்தை ரத்து செய்வதற்காக ஸிவில் கோர்ட்டில் கொண்டுவரப்படுகிற தாவாவில் பிரதிவாதியாகச் சேர்க்கவேண்டுமென்ற சட்ட முறையில்லை. குடிவார பாத்தியத்தை எலம் போட்டு ஒருவன் எலம் எடுத்தால் அந்த எலத்தை ரத்து செய்வதனால் எலதாருக்குக் கெடுதியுண்டாகுமேயொழிய வேறு யாருடைய பாத்தியதைக்கும் எவ்வித குறைவும் உண்டாகாது. ஸி. பி. ஸி-யின்படி டிக்கிரீயின் பேரில் எலம் போடும் பட்சத்தில் எலத்தை ரத்துசெய்வதில் எலம் எடுத்தவனுடன் டிக்கிரீ பாக்கிதாரனும் பார்டியாக சேர்க்கப்படவேண்டியதாகும். ஏனெனில் எலத்தில் வசூலான தொகையை டிக்கிரீதார் வாபிஸ் செய்து மறுபடியும் நிறைவேற்று நடவடிக்கை யெடுத்துத் தொகை வசூலிக்க பிரயத்தனப்படவேண்டும். அவ்வித கஷ்டங்களுக்காளாகிற டிக்கிரீதாரரையும் பார்ட்டியாக சேர்க்கவேண்டியது நியாயம்தான். பங்காளத்து டெனன்ஸி ஆக்டின்படி போடப்பட்ட எலத்தை ரத்து செய்வதில் கவர்ன்மெண்டாரையும் பார்டியாக சேர்க்கவேண்டுமாவென்ற விஷயத்தை 9 கல்கத்தா 271-இல் ஜஸ்டிஸ் மிட்டர் & ஜஸ்டிஸ் நார்ரிஸ் துரையவர்கள் கொடுத்த அபிப்பிராயத்தில் "ஆக்டின் 35-வது பிரிவின்படி ரெவினியூ எலம் ரத்தாகி முந்திய டெனெண்டுக்கு சுவாதீனம் திரும்பிக் கொடுக்கப்பட்டால் எலதாருக்கு செலுத்தின தொகையை அதிக வட்டிவிகிதத்துடன் கவர்ன்மெண்டார் கொடுக்கவேண்டிய தென்றவிதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விதியின்முறையால் கவர்ன்மெண்டாரையும் பிரதிவாதியாகச் சேர்த்திருக்கவேண்டியதவசியமென்று சொல்ல நியாயமில்லை. கவர்ன்மெண்டார் தொகையைக் கட்டவேண்டிய கடமையுடன் ரெவினியூ பாக்கியை வசூலிக்க திரும்பவும் வேறு நடவடிக்கை எடுக்கவேண்டிய சிரமம் இருப்பதால் எலம் ரத்தாகும் விஷயத்தில் கவர்ன்மெண்டாருக்கு கஷ்டம் நேரிடக்கூடுமாதலால் அவர்கள அவசியமான பார்டியல்லாதபோதிலும் கவன்மெண்டாரே விண்ணப்பம் செய்துகொண்டு பார்டியாக சேர்ந்து கொள்ளலாம்," என்ற கல்கத்தாதீர்மானப்படி கவ்ர்ன்மெண்டார் அவசியமான பார்டியல்லாதபொழுது அதே நியாயத்தைக்கொண்டு மதராஸ் ரெண்டு ரிகவரி ஆக்ட்படி எலத்தை ரத்து செய்யும் நடவடிக்கையில் எலத்திற்கு கொண்டுவரும் நிலச் சுவான்தார் அவசியமான பார்டியல்லவென்று சொல்லவேண்டும். மேற்கூறிய கல்கத்தா தீர்மான அபிப்பிராயத்தின் நியாயமானது 25 கல்கத்தா 823-இல் பிரிவி கௌன்ஸிலார் சரியென்று எடுத்துக்காட்டியுமிருக்கிறார்கள். ஆகவே இந்ததாவாவில் மேல்வாரம்தாரும் பார்டியாகத்தேவையில்லையென்றும் ரிஸீவரும் அவசியமான பார்டியல்லவென்றும் தீர்மானித்து மேல்கண்டவிதமாய் டி-மு கோர்ட்டாருக்கு மறு விஜாரணைக்கு உத்தரவளித்தார்கள்.



———:0:———

ஜஸ்டிஸ் பேக்வெல்

மதராஸ்

6 பிப்ரவரி 1914

எம்-விஜயராகவலு பிள்ளை—மனுதார்

1904-ம் வருஷத்திய மதராஸ் ஸிடி முனிசிபல ஆக்டின் 46-வது பிரிவின்படி மனுதாருடைய பெயரானது முனிசிபல் கமிஷனராக நியமிக்கப்படும் யோக்கியதை யுடையவரென்று அதற்காக ஏற்பட்டிருக்கும் ஜாபிதாவில் குறிக்கப்பட்டிருக்க சொற்பகாலத்திற்கு முன் சில கமிஷனர்கள் நியமனமாகவேண்டியிருந்த பொழுது மனுதாரரை கமிஷனராக நியமனம் செய்யவேண்டுமென்று ரூல்படி நாமினேஷன் ரோல் எழுதியனுப்பப்பட்டதின்பேரில் கமிஷனர் நியமனத்திற்காகத் தெரிந்தெடுக்கப்படவேண்டியவர்களுக்குள் அவருடைய பெயரையும் ஜாபிதாவில் குறித்திருந்தது. அந்த ஜாபிதாவானது பிரசுரமாகியிருந்தது. அவர் நியமனத்திற்கு யோக்கியமுள்ளவரல்லவென்றும் நியமனத்திற்காகக் குறிக்கப்பட்டிருக்கிற ஜாபிதாவிலிருந்து அவருடையபெயரை எடுத்துவிடவேண்டுமென்றுசெய்யப்பட்ட ஆக்ஷேபணையை கார்பொரேஷனுடைய அக்கிராஸனாதிபதி யவர்கள் ஆக்டின் 413-வது பிரிவின்படி கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற 5-வது ரூலில் கண்ட அதிகாரத்தைச் செலுத்தி நிராகரித்துவிட்டார்கள். அந்த 5-வது ரூல்படியே அக்கிராஸனாதிபதியின் உத்தரவின் பேரில் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்களிடம் ரிவிஷன் விண்ணப்பம் கொடுக்கலாம். அந்தமாஜிஸ்டிரேட்டாருடைய தீர்மானம் முடிவான பைசலாகும். அதுபோலவே அப்பாசாமி பிள்ளையென்ற ஒரு வோடர் (நியமனத்திற்காக தெரிந்தெடுக்கும் யோக்கியதையுள்ளவர்) மாஜிஸ்டிரேட்டாரவர்களுக்கு ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்தார். அந்த விண்ணப்பஈரங்கிகாலத்தில் இந்தத்தடவையில் நியமனத்திற்குப் பாத்திரர்களென்று தெரிந்தெடுக்கப்பட வேண்டிய ஜாபிதாவிலிருந்து நீக்கப்பட வேண்டியதைப்பற்றி விஜாரணைசெய்து பைசல் கொடுக்கவேண்டியதாயிருக்க பொதுவாய், கமிஷனர் நியமனத்திற்கு யோக்கியமாயுள்ளவர்களின் பெயரைக்குறிப்பிட்டிருக்கிற ஜாபிதாவிலிருந்தே அவருடைய பெயரை எடுத்துவிடவேண்டுமென்றும் அவருக்குத் தகுந்த அந்தஸ்து கிடையாதென்றும் ஆக்ஷேபிக்கப்பட்டு அதைப்பற்றி ஈரங்கிசெட்டு மாஜிஸ்டிரேட்டாரவர்கள் அதேவிதமாக மனுதார் கமிஷனர் நியமனத்திற்குறிய யோக்கியதையுடையவரல்லவென்று தீர்மானித்தார்கள். ஆனால் அந்தப் பொதுவான ஜாபிதாவிலிருந்து அவருடைய பெயரை எடுத்து விடவேண்டுமென்று கட்டளையிடவில்லை. மனுதாருடைய யோக்கியதையைப்பற்றி அபிப்பிராயத்தைமட்டும் கொடுத்தார். மனுதார் ஸ்பெஸிபிக்ரிலீவ் ஆக்ட், 45-வது பிரிவின்படி ஹைகோர்ட் அசல் தரப்பில் விண்ணப்பங் கொடுத்து மாஜிஸ்டிரேட்டாருடைய அபிப்பிராயத்தை அனுசரித்து யாதொரு நடவடிக்கையும் நடத்தாமல் முனிஸிபாலிடி யாருடைய கமிஷனர் நியமனயோக்கியர்களுடைய ஜாபிதாவில் தன்னுடைய பெயர் நீக்கப்படாமலிருந்து வரவேண்டுமென்று உத்தரவளிக்கும்படி கோறிக்கொண்டார். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள் மனுதாரின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்ததில் சொன்ன காரணங்களாவது:—

ஸ்பெஸிபிக் ரிலீவ ஆக்ட் 45-வதுபிரிவின்படி ஒரு குறித்த நடத்தையை நடத்தும்படியாவது அல்லது நடத்தாமல் நிறுத்தும்படியாவது மதராஸ் ஹைகோட்டார் யாதொரு கீழ்கோர்ட்டுக்காவது, ஒரு ஸர்கார் உத்தியோகஸ்தனுக்காவது அல்லது ஒரு சங்கத்தாருக்காவது உத்தரவளிக்கலாம். மனுதார் கொடுத்த விண்ணப்பத்தில் கோறிய உத்தரவை எவருக்கு அளிக்கவேண்டுமென்று காணவில்லை. அப்படிப்பட்டவன் மனு

தாருக்கு விரோதமாக எவ்வித நடத்தையை நடத்தவாவது அல்லது நடத்தாமலிருக்கவாவது ஏவப்படுகிருனென்றும் மனுவில் காணப்படவில்லை. [அதாவது கார்பொரேஷன் பிரவிடெண்டுக்குக் கட்டளையிட வேணுமென்ருவது அல்லது பிரவிடெண்டு ஜாபிதாவிலிருந்து மனுதாருடைய பெயரை எடுக்கப்போகிருர் என்றும் அப்படி எடுக்கக்கூடாதென்றும் விண்ணப்பத்தில் சொல்லப்படவில்லை.] இப்பொழுது நியமனமாக வேண்டியதற்காகக் குறிப்பிட்டவர்களின் ஜாபிதாவைப் பற்றி மனுவில் சொல்லப்படவில்லை. 33-வது பிரிவின்படி ஏற்பட்டிருக்கிற பொதுவான ஜாபிதாவைப்பற்றி விண்ணப்பத்தில் சொல்லியிருக்கிறது. அந்த ஜாபிதாவை மாற்றும்படி மாஜிஸ்டிரேட்டாராவது கார்பொரேஷன் பிரவிடெண்டாவது யாதொருநடவடிக்கையும் நடத்தவில்லை. ஆகையால் ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்டின் 45-வது பிரிவில் கண்ட அம்சங்கள் விண்ணப்பத்தில் குறிக்கப்படாததினுல் இந்த விண்ணப்பம் தள்ளுபடியாகவேண்டியதாகும். மாஜிஸ்டிரேட்டார் அவசியமில்லாத பாயிண்டைப்பற்றி அபிப்பிராயம் கொடுத்திருந்தால் அவர் தங்கள் உத்தியோக நிலமைக்கு புறம்பாக நடந்ததாகச் சொல்லக்கூடாது. அவர் பிசகாய் நடந்தால் கிரிமினல் ப்ரொஸிஜர் கோட் முறைப்படி ஹைகோர்ட்டுக்கு ரிவிஷூ விண்ணப்பம் கொடுக்க இடமுண்டு. வேறு சட்டபரிகாரம் இல்லாதபோனுல்தான் ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்டின்படி பரிகாரம் தேடவேண்டுமென்று 45 (d) யில் சொல்லியிருக்கிறது. ஆகவே தாவாவிண்ணப்பம் தள்ளுபடியாகவேண்டியதென்று உத்தரவளிக்கப்பட்டது.

———:O:———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்

மதராஸ்

C. M. A. 200 of 1913–5 பிப்ரவரி 1914

எம். ஏ. ஸ்ரீனிவாசய்யங்கார் *Vs* கந்தசாமி நாயகர்

வாதி ஸ்ரீனிவாசய்யங்கார் மதராஸ் ஸிடி ஸிவில் கோர்ட்டில் 1-2 பிரதிவாதிகள்பேரில் அடமான டிக்கிரீ பெற்றபின் 1-ம் பிரதிவாதிமட்டும் தாவா சொத்தை வாதிக்கு ரூ. 500-க்கு விக்கிறயம் செய்துவிட்டார் அந்தத்துகை போக மிகுதியான டிக்கிரீ துகைக்காக இரண்டு பிரதிவாதிகளின் பேரிலும் ஆளைப்பொறுத்து நிறைவேற்றத்தக்கபடி டிக்கிரீயளிக்கவேண்டுமென்று ஸிடி ஸிவில் கோர்ட்டில் ஸி. பி. ஸி. ஆர்டர் 34 ரூல் 6-இன்படி விண்ணப்பம் கொடுத்ததில் வாதி முதலில் அடமான சொத்துக்களைக் கோர்ட் மூலமாய் ஏலத்திற்குக் கொண்டுவந்து ஆர்டர் 34 ரூல் 5-இன்படி வசூலான துகை டிக்கிரீ பாக்கிக்குப் போதுமானதல்லவென்று கண்டால் மட்டும்பிரதிவாதிகள்பேரில் ஆளைப்பொறுத்தும் டிக்கிரீயளிக்க நியாயமேற்பட்டால் அந்தப்படிக்கு உத்தரவளிக்கலாமென்று சொல்லி வாதியின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன் பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஏற்பட்ட தீர்மானமாவது:—

ஆர்டர் 34 ரூல் 5-6-ஐப் பார்க்குமிடத்து அடமான சொத்தானது கோர்ட் மூலமாய் ஏலம் போடப்பட்டிருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. அதுபோக பாக்கித்து துகைக்குமட்டும் ஆளைப்பொருத்து டிக்கிரீயளிக்கலாம். ஆனுல் கோர்ட்டார் ஏலம் போடுவதைத் தடுத்து பிரதிவாதி டிக்கிரீ துகையை கோர்ட்டில் கட்டி ஏலத்தைநிறுத்தலாயக்குண்டாதலால் அவ்விதமாய் டிக்கிரீத்துகையைக் கோர்ட்டில் கட்டியும் அல்லது வேறு விதமாய் டிக்கிரீ பாக்கியை ஒருவருக்கொருவர் பைசல் செய்துகொண்டும் டிக்கிரீ செல்லானதாக கோர்ட்டில் ஸர்டிபிகேட் ஏற்படுத்தும்படி பிரதிவாதி விணணப்பம் கொடுக்கலாம். டிக்கிரீத்துகையைப் பூராவையும் தீர்த்து மேல்கண்டவிதமாய் செல்லுவைக்கக்கோறுவதுபோலவே டிக்கிரீத்துகையில் ஒரு பாகத்தை செலுத்தினுல் அம்மட்டிலும் டிக்கிரீ செல்லானதாக கோர்ட்டில் தெரிவித்து அதுபோக பாக்கிக்குமட்டும் பரிகாரம் தேடலாம். 1-ம் பிரதிவாதி ஒரு பாகத்தைச் செலுத்துவதற்கு பதிலாக அடமான சொத்தையே விக்கிறயம் செய்துவிட்டபடியால் வாதி அந்தத்துகைபோக பாக்கித்துகைக்கு 1-ம் பிரதியின் பேரில் ஆளைப்பொறுத்துப் பரிகாரம் தேட நியாயமுண்டு. ஆனுல் 2-ம் பிரதிவாதி விக்கிறயத்தில் சேராதபடியால் அந்த விக்கிறயத்தை அனுசரித்த நடவடிக்கை அவரைக் கட்டுப்படுத்தாது. ஆர்டர் 34 ரூல் 5-இன்படி வாதி நடவடிக்கை நடத்தவேண்டிய முறையை அனுசரிக்காமல் 2-ம் பிரதிவாதியின் பேரில் ஆளைப்பொறுத்து டிக்கிரீபெற நியாயமில்லை. 2 அலகபாத் லா ஜர்னல் 353-இல் விக்கிறயமானபிறகு பாக்கித்துகைக்காக கோர்ட் ஏல நடவடிக்கையும் நடந்து அதன்பின் ஆளைப்பொறுத்து டிக்கிரீயளிக்கப்பட்டது அகவே அந்தக்கேசின் தீர்மானம் வாதிக்குப் பிரயோஜனமில்லையென்று சொல்லி 1-ம் பிரதிவாதியின்பேரில் டிக்கிரியளிக்கும்படியாக உத்தரவளித்து 2-ம் பிரதிவாதியைப் பற்றினமட்டில் வாதியின் விண்ணப்பம் தள்ளுபடியானது சரியென்று தீர்மானித்தார்கள்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 MAY 1914
MADRAS.

———:O:———

புல்பெஞ்சு கேஸ்.

சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஒல்ட் பீல்ட்

தென்மலையாளம்.

S. A. 1972 of 1911–15 ஜனவரி 1914

மனவிக்கிரம ராஜா *Vs* அச்யுதமேனன்

ஒரு தர்வாடுக்குக் கார்னவனுகிய வாதி அச்யுதமேனன் என்றவர் ஷை தர்வாடுக்கு மாமூலாக ஆதி காலமுதல் ராஜ சமஸ்தானத்தால் வருஷம் தோறும் செலுத்திவரப்பட்ட அடிமை விகிதம் என்ற ஒரு விதமான வருஷாசலமானது தாவாவுக்கு முந்திய 8 வருஷ காலமாக செலுத்தப்படாமல் பாக்கி நின்றபடியால் அந்த 8 வருஷத்திய மொத்த பாக்கியை ஒரே தடவையாக வசூலிக்கும் பொருட்டு ஆலத்தூர் டி-மு கோர்ட்டில் 1909-ம் வருஷத்திய அசல் நெ. 3 3-இல் தாவா செய்தார். டி-மு கோர்ட்டார் 3 வருஷத்திய பாக்கி மட்டும் கொடுக்க நியாயமுண்டென்று காலாவதி ஆக்ட் 115-வது பிரிவின்படி, பிந்திய 5 வருஷங்களுக்குறிய வருஷாசலத்திற்குக் காலாவதி தோஷமென்று தீர்மானித்தார்கள். அப்பீலில் சப்கோர்ட்டார் காலாவதி ஆக்ட் 131-வது பிரிவின்படி வருஷா வருஷம் ஏற்படும் பாத்தியதையை அனுசரித்த பரிகாரத்திற்கு, அந்தப்படி செலுத்தப்படாத துகைக்கு 12 வருஷ காலாவதி உண்டென்று அபிப்பிராயப்பட்டு வாதி கோறியபடி பூரா துகைக்கும் டிக்கிரியளித்தார்கள். பிரதிவாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அப்பீலை ஈரங்கிகேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் எய்லிங் & ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜீ அவர்களும் தாவா கேசில் வாதி கேட்கிற பரிகாரத்திற்கு 115-வது ஆர்டிகிலின்படி 3 வருஷ காலாவதியாகாதென்றும், அதாவது பிரதிவாதி யாதொரு காண்ட்ராக்ட் ஒப்பந்தப்படிக்கு செலுத்திவரவேண்டிய துகை விஷயமாய் ஏற்பட்ட பாக்கிக்காகக் கொண்டுவரப்பட்ட தாவா என்று இந்தப்பிராதை அனுமானிக்கக்கூடாதென்றும், பிரதிவாதி ஆஜர்படுத்தியிருக்கிற A ஆதரவு, ஆதியில் வாதிக்குக் கொடுத்த கிராண்டாக நம்பத்தகாதபோதிலும் இந்தக் கேஸானது கிராண்டைப்பற்றிய பரிகாரமேயொழிய 115-வது ஆர்டிகிளின்படி யாதொரு காண்ட்ராக்டைப் பற்றிய தல்லவென்றும், 131-வது ஆர்டிகில்படிக்கு 12 வருஷ காலவதியுண்டென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயமும சரியல்லவென்றும், ஆகையால் காலாவதி குறிக்கப்படாத பரிகாரங்களுக்கேர்பட்ட 120-வது ஆர்டிகில்படி இந்தப்பிராதுக்கு 6 வருஷ காலாவதியுண்டென்று அபிபிராயப்பட்டு, ஆனல் 131-வது ஆர்டிகில்இந்தப் பிராதுக்கு ஏற்காதென்ற அபிப்பிராயமுடையவர்களாயினும் மதராஸ் ஹைகோர்ட்டாருடைய அந்த அபிப்பிராயத்திற்கு விரோதமான தீர்மானங்களின் நியாயத்தை எடுத்துக்காட்டி அவைகள் இதர ஹைகோர்ட்டுகளில் ஒரே மாதிரியாக அனுசரிக்கப்படாத விஷயத்தையும் எடுத்துக்காட்டி காலாவதி பாயிண்டைப்பற்றி பற்பல ஹைகோர்ட்டாருடைய தீர்மானத்தையும் கவனித்து முடிவான அபிப்பிராயங் கொடுக்கும்படி புல்பெஞ்சுக்கு ரிபர் செய்தார்கள். ரிபர் செய்த உத்தரவில், 131-வது ஆர்டிகிலைப்பற்றி எடுத்துச்சொன்ன வியவகாரமாவது:— குறித்தகாலங்களில் (அதாவது இந்தக் கேசின்படி வருஷா வருஷம்) அடுத்தடுத்து ஏற்படும் பாத்தியதையை ஸ்தாபிக்கவேண்டுமானுல் அவ்வித பாத்தியதையின் அனுபோகத்தை மறுதளித்த முதல் 12 வருஷங்களுக்குள் தாவா செய்யவேண்டுமென்று

131-வது ஆர்டிகில்படி சொல்லவேண்டியதாகும். வாதி கேட்கிற அடிமை விகித பாத்தியதையானது வருஷா வருஷம் உண்டாகிறதென்பதில் தடையில்லை. ஆனால் வாதி பிராதில் தர்வாடுக் குறிய பாத்தியதையை ஸ்தாபிக்கவேண்டுமென்று கேட்கவில்லை. பாக்கி ஏற்பட்ட அடிமை விகிதம் கிடைக்கவேண்டுமென்று ஒரு குறித்த தொகைக்காக தாவா செய்யப்பட்டிருக்கிறது. காலாவதி ஆக்டில் ஜீவனாம்ச விஷயமாக ஜீவனாம்ச பாத்தியதையை ஸ்தாபிக்க அதாவது ஜீவனாம் அடைய லாயக்குள்ளவனென்று தீர்மானமடைவதற்காக 128-வது ஆர்டிகிலும் பாக்கி ஏற்படும் ஜீவனாம்சத்தை அடைவதற்காக 129-வது ஆர்டிகிலும் தனித்தனியாக ஏற்பட்டிருக்கிறது. அதுபோலவே 131-வது ஆர்டிகிலின் வசனப்படி வருஷா வருஷம் ஏற்படும் பாத்தியதையை ஆக்ஷேபிக்கிறவன்பேரில் தாவா செய்து அந்த பாத்தியதை உண்டென்று தீர்மானமடைய ஒரு ஆர்டிகிலும், அவ்வித பாத்தியதையை அனுசரித்து பாக்கி ஏற்படும் தொகையை வசூலிப்பதற்காக ஒரு பிரத்தியேகமான ஆர்டிகிலுமிருக்கவேண்டுமென்று அப்பீல் வாதிக்காக (பிரதிவாதிக்காக) சொல்லப்பட்டு 131-வது ஆர்டிகில் வசனத்தைப் பார்க்குமிடத்து பாத்தியதை உண்டென்று தீர்மானமடைவதற்காக 12 வருஷ காலாவதி உண்டென்றும், இந்தப்பிராதில் வாதி கேட்கிற பாக்கி வசூலிக்கும் பரிகாரத்திற்கு அந்த 131-வது ஆர்டிகில் ஏற்காதென்றும் வாதிக்கப்பட்டது. வாதியோ, 131-வது ஆர்டிகில் வசனத்தைப் பார்க்குமிடத்து, ஜீவனாம்சத்திற்கு இரண்டு தனித்தனியான ஆர்டிகில் ஏற்பட்டிருப்பதுபோல் இத்தகைய பிராதுகளுக்கும் ஏற்படாதபடியால் 131-வது ஆர்டிகிலில் "பாத்தியத்தை ஸ்தாபிக்க" என்ற வசனத்தில் இருவித பரிகாரங்களும் கருதப்பட்டு காலாவதி குறிக்கப்பட்டிருப்பதாகவும் ஆகவே இந்தப் பிராதுக்கு 12 வருஷ காலாவதியுண்டென்று எதிர்வாதம் செய்கிறார். காலாவதி ஆக்டில் பற்பல ஆர்டிகில்களை கவனித்துப்பார்த்தால் பிரதிவாதி சொல்லுகிறபடி இந்தப்பிராதுக்கு 131-வது ஆர்டிகில் ஏற்காதென்றுதான் சொல்லவேண்டும். 131-வது ஆர்டிகிலில் "ஸ்தாபிக்க" என்ற வசனத்திற்குபலதிக "பாத்தியதையை ஊர்ஜிதப்படுத்த என்று ஏற்பட்டிருந்தால் பாத்தியதையைக் கொண்டாடி அதன்படி யாதொருபலனை அடையக் கோரும் பரிகாரமும் சேர்ந்தகருத்தாகும். வாதிக்காக சில மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. 7 மதராஸ் 341-இல் வாதிக்கு பாத்தியஸ்தாபனத்தைப் பற்றினமட்டில் டிக்கிரி பிறந்திருக்க அந்த விஷயமாய் ஹைகோர்ட்டார் காலாவதி பாயிண்டை வாதிக்கனுகூலமாய் 131-வது ஆர்டிகில்படி தீர்மானங்கொடுத்தார்கள். (அதில் வாதி தன்னுடைய பிராதில் இருவித பரிகாரங்களை கேட்டிருந்தும் டிக்கிரியானது பாத்தியஸ்தாபனத்தைப்பற்றி மட்டும் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லவேண்டும்.) 20 மதராஸ் 115-இல் வாதி பாத்தியதையைப்பற்றி பரிகாரம் கேட்காமல் அதன்படி ஏற்பட்ட பாக்கிக்காக பரிகாரம் கேட்டும் அந்தப் பரிகாரம் அடைவதற்கு யாதொரு சொத்தானது ஜாமீனாக ஏற்பட்டிருந்து அந்த ஆதாரத்தைப் பொறுத்து வாதியின் பிராதுக்கு 132-வது ஆர்டிகில்படி 12 வருஷ காலாவதியுண்டென்று தீர்மானித்ததில், 131-வது பிரிவின் அம்சத்தை அனுசரித்து தீர்மானம் கொடுத்ததாகவும் அதைப்பற்றி யோசித்ததாகவும் சொல்ல இடமில்லை. 16 மதராஸ் 2?4-ஐப் பார்க்குமிடத்து, அதில் வாதி வருஷா வருஷம் கவர்ன்மெண்டாரால் சில தீர்வை விகிதம் மன்னிப்பு செய்து கொடுக்கப்படவேண்டிய பாத்தியதையை ஸ்தாபிக்கும் பொருட்டு அதாவது கவர்ன்மெண்டார் பூரா தீர்வையையும் வசூலிக்க நியாயமில்லையென்று தீர்மானமடையும் பொருட்டு பிராது செய்ததில், 131-வது ஆர்டிகிலானது வருஷா வருஷம் ஏற்படுகிற பாத்தியதையை அனுசரித்து யாதொரு பரிகாரம அதாவது தொகை அடையவேண்டுமென்ற விதமான பரிகாரத்திற்குமட்டும் ஏற்குமென்றும் அந்தப் பிராதுக்கு 120-வது ஆர்டிகில்படி 6 வருஷ காலாவதி என்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் வாதிக்கு அனுகூலான அபிப்பிராயமாகிறது. பாத்தியஸ்தாபனத்திற்கு மட்டும் பிராது செய்ய 6 வருஷ காலாவதியென்றும், ஆனால் பாத்தியத்தை அனுசரித்து பாக்கியை வசூலிக்க 12 வருஷ காலாவதி என்றும் அதிசயமான நியாயம் மேற்கூறிய 16 மதராஸ் தீர்மானத்தால் விளங்குகிறது. 29 மதராஸ் 291-இலோ ஜஸ்டிஸ் பஷியமய்யங்காரவர்கள் பாத்தியஸ்தாபனவியாஜ்ஜியத்திற்கு மாத்திரமல்ல, வருஷாவருஷம் ஏற்படுகிற பாத்தியத்தை அனுசரித்துக் கேட்கும் பாக்கிதொகைக்காகவும் 131-வது ஆர்டிகில் ஏற்றதாகுமென்று, கேசில் சம்பந்தப்படாத இஷ்டா பாயிண்டில் சேராத அவசியமில்லாதபடி அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள்:

நான்கு மதராஸ் கேஸ்களும் மேற்கூறியவிதமாயிருக்க, அலகபாத் ஹைகோர்ட்டார் 33 அலகபாத் 245-இல், 7 மதராஸ் 341-க்கும் 26 மதராஸ் 291-க்கும் விரோதமாக பாக்கித்தொகையை வசூலிக்கும் பரிகாரத்திற்கு 131-வது ஆர்டிகில் ஏற்காதென்று தீர்மானித்திருக்கிறார்கள். 33 கல்கத்தா 908-இலும் அலகபாத் அபிப்பிராயம் அனுசரிக்கப்பட்டிருக்கிறது. பம்பாய் ஹைகோர்ட்டாரோ மதராஸ் ஹைகோர்ட்டாருக்கு ஒற்றுமையாக 34 பம்பாய் 349-இல், பாக்கித்தொகையைவசூலிப்பதற்காக ஆதியில் தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவன்பேரில் பரிகாரம் தேடமட்டும் 131-வது ஆர்டிகில் ஏற்குமென்று தீர்மானித்திருக்கிறார்கள். அதாவது ஒருவனால் பாக்கி செலுத்தப்படாத பட்சத்தில் அவனுடைய வாரிஸ்கள்பேரில் தாவாசெய்ய 131-வது ஆர்டிகில் உபயோகப்படுத்தக் கூடாதென்று பம்பாய் தீர்மானத்தால் ஏற்படுகிறது. ஆகவே பல ஹைகோர்ட்டார்கள் பலவித வித்தியாஸமான அபிப்பிராயங் கொள்வதால் பின்வரும் பாயிண்டானது புல்பெஞ்சுக்கு ரிபர் செய்யப்பட்டது.

"பிராதில் பாத்தியஸ்தாபனத்திற்காக தீர்மானம் வேண்டுமென்றபரிகாரம்கூட கேட்கப்பட்டிருக்கிற விஷயத்திலும், அவ்வித பரிகாரம் கேட்கப்படாமல் தனியாக பாக்கிக்கு மட்டும் பரிகாரம் கேட்கப்படும் பிராதின் விஷயத்திலும் 131-வது ஆர்டிகில் செல்லத்தகுமா?" என்ற மேற்கூறிய பாயிண்டைப்பற்றி ஈரங்கிகேட்ட புல்பெஞ்சில் கொடுக்கப்பட்ட அபிப்பிராயமாவது:—

ஒரு பாத்தியதை இருப்பதாகத் தீர்மானமடையும் விஷயம் வேறுதான், அவ்வித பாத்தியதை இருப்பதாக ஏற்படுங்கால் அதை அனுசரித்துயாதொரு தொகை அடையக்கோறும் விஷயம் வேறுதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இரண்டுவித வியவகாரங்களுக்கும் காலாவதி வித்தியாஸமாயிருக்கவேண்டிய அவசியமில்லை. ஜீவனாம்சவிஷயமாய்த் தேடும் இருவித பரிகாரங்களுக்கும் ஆர்டிகில் வெவ்வேறாயிருந்தும் காலாவதி இரண்டுக்கும் 3-வருஷம் தான் ஏற்பட்டிருக்கிறது. பிரதிவாதியின் ஆக்ஷேபனையை ஏற்றுக்கொள்வோமானால் இந்தப்பிராதுக்குக் காலாவதியைக்குறிக்கிற ஆர்டிகிலே கிடையாதென்று சொல்லவேண்டும். 131-வது ஆர்டிகிலின் வாசகத்தில் "ஸ்தாபிக்க" என்ற பதத்தின் கருத்தில் இருவித பரிகாரமும் அடங்கியிருக்கிறதாக வாதி சொல்வதையும், இரண்டுவிதமான ஆர்டிகில் பிறித்துக்குறிப்பிடாத காரணத்தையும் கவனிக்குமிடத்து சட்ட கர்த்தாக்கள் 131-வது ஆர்டிகிலே இரண்டுவித தாவாவுக்கும் ஒன்றாகவே ஏற்படுத்தியிருக்கிறார்களென்று சொல்லவேண்டும். [ஜீவனாம்சவிஷயமாய் 128-வது ஆர்டிகிலில் பாத்தியதை உண்டென்று தீர்மானமடைய காலாவதி ஏற்பட்டிருக்கிறது. அவ்வித வசனங்களால் ஜீவனாம்ச பாக்கியை வசூலிக்கும் வழக்குக்கும் அந்த ஆர்டிகிலின் முறை ஏற்படாது. 131-வது பிரிவில் பாத்தியதையை ஸ்தாபிக்க என்றுசொல்லும்பொழுது, பாக்கியைக் கேட்டாலே பாத்தியதையை ஸ்தாபிக்கக் கோறுகிறதாகச் சொல்லலாம். பாத்தியதை இல்லையென்று ஆக்ஷேபிக்கும் சமயத்தில்பாத்தியதையை அனுசரித்துதொகையைவசூலிக்கதாவாசெய்து டிக்கிரீபெற்றால் பாத்தியதையைஸ்தாபித்தானென்ற அர்த்தத்தையும் யூகிக்கலாம். ஆகவே 131-வது ஆர்டிகில் இரண்டுவித பரிகாரங்களுக்கும் ஏற்றதாகுமென்று சொல்லி புல்பெஞ்சுக்கு ரிபர் செய்யப்பட்ட பாயிண்டுக்கு 131-வது ஆர்டிகில் இருவகையான சந்தர்ப்பத்திலும் பிரயோகிக்கத் தக்கதென்றும், 34 பம்பாய் 349-யும் மற்ற மதராஸ் ஹைகோர்ட் தீர்மானங்களையும் அனுசரிக்க நியாயமாகுமென்றும் அபிப்பிராயப்பட்டு வாதியின் தாவாவுக்கு காலாவதி தோஷமில்லையென்று, 8-வருஷ விகிதத்திற்கும் சப்கோர்ட்டார் டிக்கிரீயளித்தது சரியென்று தீர்மானமாச்சுது.

ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

கிருஷ்ணா ஜில்லா

C. R. P. 598 of 1911—11 பிப்ரவரி 1914

பிச்சையா Vs மகம்மது அப்துல்கரீம்

கொண்டல வெங்கட பிச்சையா என்ற மனுதார் வாதிக்கு ஒரு குத்தகைச்சீட்டு எழுதி ரெஜிஸ்டர்செய்து கொடுப்பதாக எழுத்துமூலமான ஒரு ரெஜிஸ்டராகாத கடிதத்தில் ஒப்புக்கொண்டும் அந்தப்படி செய்யாத காரணத்தால் வாதி மனுதாரையும் அந்தலெட்டரில் கையொப்பம்செய்த மற்றும் சிலரையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்து பெஜவாடா டி-மு-கோர்ட்டில் ஷை குத்தகைச்சீட்டு எழுதிக்கொடுக்கும் உடன்படிக்கையை வற்புறுத்தும்பொருட்டு 1910-ம வருஷத்திய அசல் நம்பர் 360-இல் பிராதுகொடுத்ததில் 1-ம் பிரதிவாதியாகிய மனுதாருக்கு ஷை பிராதின் சம்மன்ஸ் நேரில் ஸர்வ் செய்யப்படாமல் 1-ம் பிரதிவாதியின் குமாஸ்தாவைக் கேட்டதில் அவர் குடும்ப ஸமேதராய் திருப்பதி யாத்திரைக்குச் சென்றிருப்பதாகச் சொன்னதால் அமீனா 2-ஜுலை 1910-ல் சம்மன்ஸை 1-ம் பிரதிவாதியின வீட்டுத் தெருக்கதவில் ஒட்டிவிட்டார். ஈரங்கி வாய்தாவாகிய 1910 ஆகஸ்ட் 16உ-இல் 1-ம் பிரதிவாதியின்பேரில் எக்ஸ்பார்டியாகவும் ஆஜரான மற்ற பிரதிவாதிகளின் பேரிலும் டிக்கிரி யளிக்கப்பட்டதின்பேரில் மனுதார் ஆகஸ்ட் 23உயில் டி-மு கோர்ட்டாரிடம் தன்பேரில் ஏற்பட்ட எக்ஸ்பார்டி டிக்கிரியை மாற்றவேண்டுமென்று சில்லரைமனு விண்ணப்பம்கொடுத்து அதற்காதாரமான பிரமாணப்பத்திரிகையில் மே மாதத்திலேயே தான் காசியாத்திரை போயிருந்து ஆகஸ்ட் மாதம் 13உ தான் பெஜவாடாவுக்குத்திரும்பி வந்ததாகவும் அப்பொழுது தன்பேரில் பிராது செய்யப்பட்டிருந்த தகவல் யாதொன்றும் தெரியாதென்றும் ஆகஸ்ட் 22உயில் (அதாவது விண்ணப்பம் கொடுக்கிற தேதியில்)தான், தன்பேரில் எக்ஸ்பார்டி டிக்கிரி பிறந்ததாகத் தெரியவந்ததாகவும் ஆகையால் அந்த டிக்கிரியை ரத்துசெய்து புனர் விஜாரணை நடத்தவேண்டுமெனக் கோறிக்கொண்டதில் டி-மு-கோர்ட்டார் பிரமாணப்பத்திரிகையில் சொல்லியிருக்கிறபடி மனுதார் காசியாத்திரை போயிருந்ததை நம்பாமல் அமீனா ரிட்டர்னில் அவர் திருப்பதிக்குப் போனதாக எழுதப்பட்டிருப்பதாலும் திரும்பிவந்த உடன் அவருடைய குமாஸ்தா ஜுலையில் சம்மன்ஸ் கதவிலொட்டியிருந்த தகவலைச் சொல்லியிருக்க வேண்டுமென்றும் தாவா உடன்படிக்கையில் மனுதார் கையொப்பம் செய்திருப்பதாலும், மனுதாரின் விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்து மறு விஜாரணைக்கு உத்தரவு கொடுக்கமறுத்துவிட்டார்கள். ஜில்லாகோர்ட்டார் அப்பீலில் அதே உத்தரவைக் காயம் செய்ததில் அமீனா ரிட்டர்னைப் பார்குமிடத்து மனுதார் டெம்பொரரியாக சொற்பதினங்களுக்கு ஊரில்லையென்று ஏற்படாமல் குறிக்காதகாலத்திற்கு ஊரைவிட்டுப் போயிருப்பதாக ஏற்படுவதால் டி-மு கோர்ட்டார் கதவிலொட்டினது சரியான சர்விஸ் என்று தீர்மானித்து எக்ஸ் பார்டி டிக்கிரியளித்தது சரியென்று, சொன்னார்கள். மனுதார் அதன்பேரில் 2-வது மனு அப்பீல் இடையாதபடியால் ஹைகோர்ட்டில் ஸி. பி. ஸி. 115-வது பிரிவின்படி ரிவிஷன் மனு தாகல்செய்ததில் (1) அமீனா ரிட்டர்னைப் பார்க்கும்பொழுதே 1-ம் பிரதிவாதியின்பேரில் சம்மன்ஸ் ஸர்வாக வில்லையென்று தீர்மானிக்க வேண்டியதாகுமென்றும் (2) ரெஜிஸ்டராகாத ஒரு லெட்டரை ஆதாரமாக ருஜுபாகத்தில் எடுத்து டிக்கிரியளித்தது சட்டவிரோதமென்றும் ஆகிய இரண்டு முக்கியமான கிரவுண்டுகள் எடுத்து வாதிக்கப்பட்டன. வாதிக்காக எதிர்வாதத்தில், ரெஜிஸ்டராகாத எழுத்து மூலமான உடன்படிக்கை ருஜுபாகத்தில் எற்றுக்கொள்ளப்பட்டு வந்த மதராஸ் கோர்ட்டுகளின் வழக்கமுறையானது 17 மதராஸ் லா ஜர்னல் 218-ல் ஜஸ்டிஸ் பென்ஸன் & ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரவர்களால் யுக்தமல்லவென்று சந்தேகிக்கப்பட்டு 1910 பிப்ரவரியில் அந்த பாயிண்டு புல் பெஞ்சுக்கு ரிபர்செய்த தகவல் மனுதாருக்கு எக்ஸ்பார்டி டிக்கிரியாகுமுன் தெரியாதபடியால், சம்மன்ஸ் கதவிலொட்டின சமாசாரம் குமாஸ்தாவால் தெரியவந்தும் எதிர்வாதம் செய்வதில் பிரயோஜன மில்லையென்று ஈரங்கிக்கு ஆஜராகாமல் புல் பெஞ்சுக்கு ரிபர் ஆன தகவல் தெரிந்தபிறகு எக்ஸ்பார்டி டிக்கிரியைமாற்றி ஷை ரெஜிஸ்டராகாத லட்டர் செல்லாதென்று



எதிர்வாதம் செய்யும்பொருட்டு தான் காசிக்குப் போயிருந்ததாகச் சொல்லி இந்த விண்ணப்பம் கொடுத்திருக்கிறதாகவும் ஆகவே அவ்வித உபாயத்தை பிரயோகிக்க இடங்கொடுக்கக்கூடாதென்றும், எதிர் ஆர்கியுமெண்டு செய்யப்பட்டது.

ஹைகோர்ட்டார் ரிவிஷன் மனுவைத் தள்ளுபடிசெய்த தீர்மானத்தின் காரணச்சுருக்கமாவது: 1-ம் பிரதிவாதி. பெஜவாடாவுக்கு எப்பொழுது திரும்பிவருவாரென்று தெரியாதென்றும் எப்பொழுது வருவார் என்று குறித்துச்சொல்ல முடியாதென்றும் அமீனா ரிட்டர்னில் எழுதாதபடியால், கதவிலொட்டின விஷயத்தால் ஆர்டர் 9-ரூல் 13-இன்படி சம்மன்ஸ் சரியானபடி சர்வ் செய்ததாகச் சொல்லக்கூடாதென்று மனுதாருக்காக வாதிக்கப்படுகிறது (பிரதிவாதி ஊரிலில்லாமல் அவர் திரும்பிவரும விஷயத்தைப் பற்றிக் குறிப்பாய்ச் சொல்லமுடியாத பட்சத்தில் சம்மன்ஸைக் கதவிலொட்டலாம். அது சரியான ஸர்விஸாகும். ஆனால் அவர் சீக்கிரம் வந்துவிடுவாரென்ற தகவல் அமீனாவுக்குத் தெரிந்தால் அமீனா அந்த விவரத்தைக் கண்டெழுதி சம்மன்ஸை வாபிஸ் செய்து பிரதிவாதி வந்தபின் மறு சம்மன்ஸ் பிறப்பித்து சர்வசெய்யப் பிரயத்தனப்பட வேண்டியது அமீனாவின் கடமையாகும்.) இந்தக்கேஸில் அமீனா எதிரி திருப்பதிக்குப்போயிருப்பதாக மட்டும் கண்டெழுதியிருக்கிறாரே யொழிய எப்பொழுது திரும்பி வருவார் என்ற விஷயத்தைக் கேட்டு எழுதவில்லை. கேட்டிருக்கலாம். ஆனால் அதைப்பற்றிக் குறிக்கவில்லை. அவ்விதமான ரிட்டர்னைப்பற்றி மனுதார் ஆக்ஷேபித்து சம்மன்ஸ் சரியானபடி ஸர்வ் செய்ததாகத் தீர்மானிக்கக்கூடாதென்று வாதிக்கிறார். வாதியோ திருப்பதிக்குப்போயிருப்பதாக மட்டும் எழுதியதினால் திரும்பிவரும் தேதி தெரியாதென்று எழுதப்படாவிட்டாலும் அக்கருத்துடன் தான் சம்மன்ஸ் கதவிலொட்டப்பட்டதாகவும் ஆகவே சம்மன்ஸ் சரியானபடி ஸர்வானதாகச் சொல்லவேண்டுமென்றும் வாதிக்கிறார். மனுதாருக்காக 20 மதராஸ் 324-ம், 24 அலகபாத் 302-ம் ஆதாரமாகக் காட்டப்பட்டது. வாதிக்காக 21 மதராஸ் லா ஜர்னல் 978-ம் 21 மதராஸ் 324-ம் எடுத்துக் காட்டப்பட்டது. 21 மதராஸ் 324-இல் பிரதிவாதி திரும்பிவரும் காலம் குறிப்பாய்த் தெரியாதபட்சத்தில் கதவில் ஒட்டுவது சரியான ஸர்விஸ் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அமீனாரிட்டர்னில் அவ்விதமான வார்த்தைகள் ஸ்பஷ்டமாய்க் குறிக்காதபோதிலும் கோர்ட்டார் மற்ற ரிட்டர்னில் கண்ட சந்தர்ப்பங்களினால் திரும்பிவரும் காலம் குறிப்பாய்த் தெரியாதென்ற தகவலை யூகிக்கலாமென்று சொல்லவேண்டும். 21 மதராஸ் 324-ல் பிரதிவாதி திருநெல்வேலிக்குப் போய் 2-தினங்களாச்சுதென்று ரிட்டர்னில் குறிக்கப்பட்டு சம்மன்ஸ் கதவிலொட்டினதால் திரும்பிவரும் தேதி குறிப்பாய்த் தெரியாதென்று யூகித்து சம்மன்ஸ் சரியான ஸர்விஸ் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கேஸில் மனுதார் திருப்பதிக்குப் போகாமல் காசிக்குப்போனது மெய்யாகயிருந்தால் அப்பொழுது திரும்பிவரும் தேதி இன்னும் சந்தேகமாகச் சொல்லத்தகும் காசியாத்திரை போகிறவன் திரும்பிவர அதிககாலம் செல்லும். அந்தத் தீர்மானத்தை அனுசரித்து மனுதாருக்கு சம்மன்ஸ் சரியாக ஸர்வாச்சுதென்றே தீர்மானிக்கவேண்டும். 17 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 909-ல் பிரதிவாதி ஒரு இலாகாவைவிட்டு வேறு இலாகாவுக்கு அதாவது கட்டாக்கிலிருந்து விசாகப்பட்டணத்திற்குப் போயிருப்பதாகச் சொன்னதில் திரும்பிவரும் தேதி குறிக்கப்படாத போதிலும் கதவிலொட்டினவிஷயம் சரியான சர்விஸ் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மனுதாருக்காகக் காட்டிய தீர்மானங்களைவிட மற்ற தீர்மானங்களை அனுசரிக்க மனமுள்ளவர்களாக மனுதாரின் சம்மன்ஸ் சரியாக ஸர்வாச்சுதென்று தீர்மானித்து அந்தவிஷயமான அபிப்பிராயம் சந்தேகத்திற்கிடமாகத்தோன்றினாலும் 115-வது பிரிவின்படி கொடுக்கப்பட்டிருக்கிற இந்த ரிவிஷன் மனுவில் ஹைகோர்ட்டார் சட்ட அபிப்பிராயத்தை மாற்றத் தலையிடக்கூடாதென்றும் கீழ்கோர்ட்டார் சட்ட அபிப்பிராயத்தில் பிசகாய்த் தீர்மானித்தாலும் அதிகாரவரம்பின்றி, சட்டவிரோதமாக அல்லது முக்கியமான அம்சங்களில் ஒழுங்கீனமாக நடந்தாலொழிய கீழ்கோர்ட் தீர்மானத்தில் 115-வது பிரிவின்படி பிரவேசிக்கக் கூடாதென்றும், 6 அலகபாத் லா ஜர்னல் 45-ல், மற்ற விஷயங்களிலும் ரிவிஷனில் பிரவேசிக்கலாமென்ற அபிப்பிராயம் சரியானதல்லவென்றும்,

ஆனால் அதிக தெளிவான கடுமையுள்ள அநியாயம் நடந்திருக்கும் சந்தர்ப்பங்களில் மட்டும் ஹைகோர்ட்டார் சார்டர் ஆக்ட் படிக்கு பிரவேசித்து கீழ்கோர்ட் தீர்மானத்தை மாற்றலாமென்றும் சொல்லிமேல்கண்டவிதமாய் ரிவிஷன் மனுவை தள்ளுபடிசெய்தார்கள். ரெஜிஸ்டராகாத உடன்படிக்கையைப்பற்றிய புல்பெஞ்சு அபிப்பிராயத்திற்காக 35 மதராஸ் 63-ஐப் பார்க்கவும்.

———c———

### ஜஸ்டிஸ் பேக்வெல்

மதராஸ் ஹைகோர்ட்

### O. S. No. 421—1912 12 பிப்ரவரி 1914

குருவய்யா Vs கோடய்யா

பிரதிவாதிகளாகிய குக்கிலம் கோடய்யா வகையறாக்கள் சென்னையிலும், சீராலா என்னும் வெளிஜில்லாவிலும் நடத்திவந்த வர்த்தகவிஷயமாய் 1912-ம் வருஷத்தில் கடன் மொல்லே அதிகமானதாகக் கண்டவுடன் சென்னையிலுள்ள பாக்கிதார்களில் 5-ப் ஆசாமிகள் சீராலாவுக்குச் சென்று பிரதிவாதிகளின் கணக்கு புஸ்தகங்களைப் பரிசீலனைசெய்து கம்பெனிக்கு வரவேண்டிய நிலுவை பாக்கி முதலிய சகல ஐவேஜுகளின் விவரத்தைக்கண்டறிந்து சென்னையிலுள்ள பாக்கிதார்கள் கம்பெனியின் சொத்துக்களில் ஒரு பாகத்தைத் தங்கள் கடனுக்காக ஏற்றுக்கொள்ளுகிறதென்றும், இதரமான சொத்துக்களை வெளிஜில்லாவிலுள்ள பாக்கிதார்கள் தங்கள் கடனுக்காக ஏற்றுக்கொள்ளுகிறதென்றும் ஏற்பாடு செய்துகொண்டு அந்த ஏற்பாட்டை எழுத்துமூலமான உடன்படிக்கையில் கண்டெழுதி சென்னையிலுள்ள பாக்கிதார்களனைவரையும் அந்த தஸ்தவேஜில் பார்டிகளாகச் சேர்த்து ஒவ்வொரு பாக்கிதாருடைய கடன் பாக்கி இவ்வளவென்று குறித்த ஜாபிதாவும் எக்ரீமெண்டுடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்டது. அந்த ஏற்பாடு செய்வதற்காக சென்னையிலிருந்து புறப்பட்ட ஐவரும் மற்ற பாக்கிதார்களுடன் கலந்துகொள்ளாமல் தாங்கள் மனப்பூர்வமாக கூடிய மட்டில் சாமர்த்தியமாக பிரதிவாதிகளின் சொத்துக்களையும் ஐவேஜுகளையும் விவரங்கண்டெடுத்துக் கடனைத் தீர்ப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்தால் அதை மற்றவர்கள் கட்டாயம் ஆக்ஷேபிக்காமல் ஒப்புக்கொள்வார்களென்று நம்பி இவ்விதமான ஏற்பாடு செய்திருக்கிறார்களேயொழிய முறைப்படி எல்லா பாக்கிதார்களையும் கலந்து மீட்டிங்கூடி எல்லாருடைய சம்மதத்தின்பேரில செய்யப்பட்டவேற்பாடல்ல. மற்றவர்களின் அபிப்பிராயத்தை அறிவதற்காக இவர்கள் யாதொரு பிரயத்தனமும் எடுக்கவில்லை. உடன்படிக்கையின் வசனத்தைக் கவனித்தால் மற்றவர்கள் அந்த ஏற்பாட்டை அங்கீகரிப்பதில் சந்தேகமற்றவர்களாயிருந்ததாகத் தோன்றுகிறது. அந்த உடன்படிக்கையில் சிலர் கையொப்பம் செய்தார்கள். சிலர் கையொப்பம் செய்யவில்லை. கையொப்பம் செய்யாதவர்கள் தனித்தனியாக தங்கள் பாக்கித்தொகை பூராவுக்கும் தாவாசெய்து டிக்கிரிபெற்று கையொப்பம் செய்தவர்களுடைய பாகத்திற்கு உடன்படிக்கையில் அமைக்கப்பட்டிருந்த பாகத்தையும் ஜப்திசெய்தார்கள். ஆகவே உடன்படிக்கையில் கையொப்பம் செய்தவர்களில் ஒரு பார்டியாகிய வாதி வகையறாக்கள் தாங்கள் உடன்படிக்கையில் கண்டபடி கடனுக்குக் குறைவாக விகிதப்படுத்தியிருக்கிற சொத்து பாகத்தைமட்டும் அடைய மனமில்லாமலும், அவைகள் ஜப்தியான அசந்தர்ப்பத்தாலும் தங்களுக்கும் பூராக் கடன்தொகையும் கிடைக்கவேண்டுமென்று மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் தாவா செய்ததில் பிரதிவாதி ஆன்ஸரில் வாதிகள் உடன்படிக்கையால் கட்டுப்படக் கடவர்களென்று வாதித்தார்கள். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள் வாதிக்குப் பூரா பாக்கிக்கும் டிக்கிரியளித்ததில் கையொப்பம் செய்தவர்கள் எல்லா பாக்கிதார்களும் சம்மதித்தால் மட்டும் தாங்களும் அதில் கண்ட ஏற்பாடுக்கு ஒப்புக்கொண்டதாய்ச் சொல்லவேண்டுமென்று அபிபிராயப்பட்டு கையொப்பம் செய்யாதவர்கள் உடன்படிக்கையின்படி ஒரு பாக்கிதாருக்கு அமைக்கப்பட்ட சொத்தை ஜப்திசெய்தால் அந்த ஏற்பாடு பயனற்றுப் போகுமென்று நிதானித்து, 9 அலகபாத் 330-இல் பிரிவி கௌன்ஸிலார் தீர்மானத்தை அனுசரித்து கையொப்பம் செய்தவர்கள் உடன்படிக்கைக்குக் கட்டுப்பட வேண்டியதில்லையென்று சொல்லி வாதிக்கு பூராவுக்கும் அரைவட்டி சேர்த்து டிக்கிரியளித்தார்கள்.

———:O:———



### ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்

செங்கல்பட்டு ஜில்லா

### C. M. A. No. 13 of 1913-13 பிப்ரவரி 1914

ஸ்ரீனிவாஸாச்சாரியார் Vs கோபாலன்

ஸ்ரீனிவாஸாச்சாரியார் செங்கல்பட்டு ஜில்லா கோர்ட்டில் காலஞ்சென்ற மூல புருஷனுடைய கடன் பாக்கிகளை வசூலிக்கும்பொருட்டு தனக்கு வாரிஸ் ஸர்டிபிகேட் கிடைக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டதில் அந்தக்கடன் பாபத்தில் வரவேண்டிய சொத்துக்கள் காலஞ்சென்றவருடைய சொத்தல்லவென்று எதிர் மனுதார்களிருவர் ஆக்ஷேபிக்கவே ஜில்லாகோர்ட்டார் அந்த ஆக்ஷேபனையை ஏற்றுக்கொண்டு வாரிஸ் ஸர்டிபிகேட் கொடுக்காமல் விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். எதிர் மனுதார்களிருவரில் யாதொருவருடைய சொத்தாகயிருக்கக் கூடுமென்று நம்பி அவ்வித தீர்மானம் செய்தார்கள்போலும், மனுதார் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் 28 பம்பாய் 119-இல் ஏற்பட்டதீர்மானத்தையும், 1906-ம் வருஷத்திய C. M. A. 42-இல் ஜஸ்டிஸ் பென்ஸன் & ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்களும் சேர்ந்து கொடுத்திருக்கிற அபிப்பிராயத்தை அனுசரித்து காலஞ்சென்றவருக்கு மனுதார் வாரிஸ்தாரா என்ற விஷயத்தைப்பற்றி கவனித்து ஸர்டிபிகேட்கொடுக்கப்படவேண்டியதாயிருக்க விண்ணப்பத்தில் சொல்லியிருக்கிற கடன்கள் யாருக்குச் சேரவேண்டியதென்று இந்த விண்ணப்ப ஈரங்கியில் விஜாரிக்கக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டு 25 கல்கத்தா 320-இல் கல்கத்தா ஹைகோர்ட் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் மாறாகக் கொண்ட அபிப்பிராயத்தை அனுசரிக்கப் பிரியப்படாமல் மனுதாரின் விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்தது பிசகென்று தீர்மானித்து மனுவைத் திரும்பவும் பயிலுக்கெடுத்து சட்டப்படி பைசல் செய்யவேண்டுமென்று ஜில்லாகோர்ட்டுக்கு உத்தரவளித்தார்கள்.

———:O:———

### ஜஸ்டிஸ் வாலிஸ்

மதராஸ் ஹைகோர்ட்

### O. S. No. 116 of 1911 23 ஏப்ரல் 1913.

K. திருவேங்கடியாள் Vs K. திருவேங்கடைய்யா

வாதி மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் பெற்ற அடமான டிக்கிரியின்பேரில் அடமான சொத்தானது ஏலம்போடப்பட்டு வாதிக்கு டிக்கிரிப்பிரகாரம் செலுத்தப்பட்டதுபோக பாக்கிநிற்கும் ஏலத்தொகையானது பிரதிவாதிக்கு ரூல்படி கொடுக்கப்பட வேண்டியதற்காக கோர்ட்டார் வசம் நிற்கிறகாலத்தில் அதே பிரதிவாதியின் பேரில் டிக்கிரிபெற்ற மனுதார் ஸி. பி. ஸி. ஆர்டர் 21-ரூல் 52-இன் படி பிரதிவாதிக்குச் சேரவேண்டிய மேற்கூறிய ஏலபாக்கித்தொகையை ஜப்திசெய்தார். வேறொரு டிக்கிரி பாக்கிதாரராகிய எதிர் மனுதார் மேற்கூறிய அடமானடிக்கிரி பிறந்தபின் ஆனால் ஏலம்போடப்பட்டு ஏலதார் தொகையைக் கோர்ட்டில் கட்டுமுன் அடமான டிக்கிரிபாக்கிதாருக்குச் செல்லவேண்டிய தொகைபோகபாக்கி ஏற்படும் ஏலத்தொகை தனக்குக்கிடைக்கவேண்டுமென்ற கருத்துடன் அந்த அடமான டிக்கிரியை ஆர்டர் 21-ரூல் 52 இன்படி ஜப்திசெய்தார். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் எதிர் மனுதாருடைய ஜப்தியானது செல்லத்தகாதென்று எனெனில், கோர்ட்டில் பிரதிவாதிக்குச் செல்லவேண்டிய தொகைவந்து சேருமுன் ஜப்திசெய்யப்பட்டதால் அந்த ஜப்தி, பிரயோஜனமில்லையென்று தீர்மானித்து மனுதாருடைய ஜப்தி சரியானதென்று சொல்லி கோர்ட்டிலிருக்கும் தொகையிலிருந்து மனுதாருக்குச் சேரவேண்டிய டிக்கிரிபாக்கித்தொகை பூராவையும் கொடுத்துவிடும்படி யாகவும் இந்த மனு ஈரங்கிக்காக நேர்ந்த செலவை எதிர் மனுதார் கொடுக்கவேண்டுமென்று உத்தரவளித்தார்கள். எதிர் மனுதார் ஸி. பி. ஸி. 73-வது பிரிவின்படி பங்குவிகிதம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டதில் 1909-ம் வருஷத்திய மதராஸ் ஹைகோர்ட்டு C. S A. 22 of 1909-இல் அப்பீல் கோர்ட்டார் கொடுத்த அபிப்பிராயப்படிக்கு கோர்ட்டிலிருக்கும் யாதொரு தொகையை பற்பல பாக்கிதார்கள் ஜப்திசெய்தால் அவர்களுக்கு 73-வது பிரிவின்படி பங்குவிகிதமளிக்க நியாயமாகாதென்றும் ஜப்திதார்களின் காலவரிசைக்கிரமமாக கோர்ட்டிலிருக்கும் தொகையைக் கொடுக்கவேண்டியதாகுமென்றும் அதாவது முதல் ஜப்திசெய்தவனுக்கு செலுத்தப்பட்ட தொகைபோக மிகுதியை அடுத்தவனுக்கும் பின்னும் மிகுதியான தொகையை அதற்குப்பின் ஜப்திசெய்தவனுக்குமாகக் கொடுக்கவேண்டியதாகுமென்றும், 73-

வது பிரிவின்படி பங்குவிகிதம் கிடைக்கவேண்டுமானல் கோர்ட்டில் துகைவந்து சேருமுன் பற்பல பாக்கிதார்கள் தங்கள் பாக்கிக்காக நிறைவேற்றும்பொருட்டு விண்ணப்பம் கொடுத்திருக்கவேண்டுமென்றும் எதிர் மனுதாரின் 73-வது பிரிவை அனுசரித்த ஆர்கியுமெண்டுக்குச்சமாதானம் சொல்லி மேல்கண்டவிதமாய் உத்தரவளித்தார்கள்.

———:o:———

ஜஸ்டிஸ் பேக்வெல்

மதராஸ்.

C S No 186 of 1913—3 பிப்ரவரி 1914

குப்பம்மாள் *Vs* குப்பணுச்சாரி

1?-வயதுள்ள மைனர் குப்பம்மாளுக்காக ஷெயாளின் தகப்பனர் தயசுந்தராச்சாரி என்றவர் ஷெயாளின் பர்த்தாவாகிய குப்பணுச்சாரியின் பேரில் 1913 ஆகஸ்ட் 4 இல் ஷெ மைனர்பெண்சாதியை எதிரி அழைத்துப்போய் தன்னுடைய வசத்தில் வைத்துக்கொண்டு புருஷன் பெண்சாதியாக வாழ்ந்திருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தும்பொருட்டு பிராது செய்ததில், பிரதிவாதி எதிர்வாதத்தில் தான் பெண்ணை 1913 எப்பிரல்மாதத்தில் தன்னிடம் அனுப்பும்படி கேட்டுக்கொண்டதற்கு அவளுடைய பெற்றோர் சம்மதித்து அனுப்பாமல் பெண்ணுக்கு அச்சமயம் புருஷனுடன்கூடி வாழ்வதற்குறிய தேகசவுக்கியமில்லையென்று சொல்லிவிட்டதால் இப்பொழுது பெண்ணுக்கு சரீர சவுக்கியம் ஏற்பட்டதாகவும் தன்னுடன் கூடிவாழ்வதற்குலாயக்குள்ளவளாகிவிட்டதாகவும் மைனரின் கார்டியன் ருஜுப்படுத்தாதபடியால் தான் இப்பொழுது பெண்ணை அழைத்துக்கொள்ளக் கடமைப்பட்டவனல்லவென்று ஆக்ஷேபித்தார். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள் வாதிக்கு டிக்கிரீயளித்ததில் தம்பதிகளிருவரும் ஒன்றாய்க்கூடி இதற்குமுன் வசித்ததில்லையென்று ஏற்பட்டபோதிலும் பெண்சாதியினுடைய சுகக்குறைவானது அவளை ஆதரிக்கவும் அவளை அழைத்து இல்லத்தில் இடமளிக்கவும் புருஷனுடைய கடமையை நிவர்த்திக்காதென்றும், எவ்வித சுகக்குறைவானாலும் அல்லது மனைவி புருஷனுக்குறிய சகலவிதமான பாத்தியதைக்கும் யோக்கியமில்லாத போனலும் புருஷன் மனைவியை ஏற்றுக்கொண்டு ஆதரிக்கக் கடமைப்பட்டவராகிருரென்றும் தீர்மானித்து, பிராதில் சில நகைகள் விஷயமாய்க் கேட்கப்பட்ட பரிகாரத்திற்கு யாதொரு உத்தரவும் அளிக்காமல் மைனர் வாதிக்குப் புருஷனே (பிரதிவாதியே) சட்டப்படி சரியான கார்டியனுவதால் நகைகள் அவள்வசமே யிருக்க நியாயமுண்டென்றும் அபிப்பிராயங் கொடுத்து மைனர் வாதியைப் பிரதிவாதி அழைத்துப்போகக் கடவதென்று வாதிக்கு செலவுடன் டிக்கிரியளித்தார்கள்.

————

சீவ் ஜஸ்டிஸ், & ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட்

மதராஸ்.

O. S. A. No 46 of 1912

13 ஜனவரி 1914

நம்பெருமாள் செட்டியார் *Vs* கிருஷ்ணஜீ

வாதி நம்பெருமாள் செட்டியார் மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் கொடுத்த பிராதில் பிரதிவாதியால் தனக்குச் சேரவேண்டிய பாக்கித்தொகை ரூ. 22, 700 என்று கண்டிருந்தும் பிரதிவாதியால் தனக்கு சப்ளை செய்யப்பட்ட மரங்களின் கிறயத்திற்காக தன்னல் பிரதிவாதிக்கு ரூ. 11, 800 சேரவேண்டியது நியாயமென்று ஒப்புக்கொண்டார். பிரதிவாதி ஆன்ஸரில் வாதிக்குத்தான் சப்ளைசெய்த சரக்குகளின் கிறயங்களுக்காகவும் வேறொரு ஒப்பந்தத்தில் வாதி தவறினபடியால் அதற்காக வாதியால் தனக்கு நஷ்டத் தொகையையும் கழித்துப் பார்க்குமிடத்து வாதிக்கு தான் கொடுக்கவேண்டிய தொகை ரூ870-ம் சில்லரை தான்பாக்கி ஏற்படுமென்றும் ஸ்டேட்மெண்டு கொடுத்தார். ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் வாதியால் பிரதிவாதிக்கு சரக்கு சப்ளை வகையால் ரூ. 14, 500 பாக்கி ஏற்படுகிறதாகத் தீர்மானித்து மற்ற வகையில் பிராதில் சொல்லப்பட்ட இரண்டு அயிடங்கள் தவிற மற்ற பாபத்துக்களைப் பற்றி வாதி திருப்திகரமாய் ருஜுப்படுத்தாதபடியால் அவைகளை நம்பவில்லை. கடைசியாக வாதிக்கு ரூ. 1220-க்கு டிக்கிரீ கிடைத்தது. செலவுதுகை விஷயமாய் "செலவானது பைசல் முடிவைப் பொறுத்ததாகும்" என்று கோர்ட்டார்



தீர்ப்பில் கண்டிருந்தார்கள். 1913 மார்ச்சு 28-ல் பிறந்த தீர்மானத்தை அனுசரித்து வழக்கம்போல் டிக்கிரீ தயாரிக்கப்பட்டு அந்த டிக்கிரியின் மசோதா இருதரப்பு லாயர்களுககும் அங்கிகாரத்திற்காக அனுப்பப்பட்டன. பிரதிவாதியின் லாயர் செலவுதுகை விஷயமாய் டிக்கிரி தயாரித்ததை ஆக்ஷேபித்தார். டிக்கிரியின் மசோதாவில், வாதிக்கு வியாஜ்ஜியத்தின் மொத்தச் செலவுதுயையும் பிரதிவாதியால் செலுத்தப்படவேண்டியதாய்க் கண்டிருந்தது. பிரதிவாதியின் லாயர் டிக்கிரி தயாரிக்கும் விஷயத்தைப்பற்றி கோர்ட்டார்முன் ஆக்ஷேபனை ஈரங்கிக்கு வாய்தா குறிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதில் எப்பிரல் 24-ம் தேதியில் அது ஈரங்கிக்காக குறிக்கப்பட்டிருந்தும் அதற்குள் யாதுகாரணத்தாலோ மசோதாவின் பிரகாரம், அதாவது எதிரியின் ஆக்ஷேபனையை மதியாமல் அசல் டிக்கிரி பிறப்பிக்கப்பட்டு கோர்ட்டாருடைய ஸீலும் வைக்கப்பட்டு டிக்கிரி ரூல்படி வெளியாகிவிட்டது. டிக்கிரி தேதியானது வழக்கம்போல் ஜட்ஜ்மெண்டு தேதியாகிய 28 மார்ச்சு என்று குறிக்கப்பட்டிருந்தது. எப்பிரல் 24-ல் ஈரங்கிக்கு குறிப்பிட்டிருந்தபடியால் அன்று கோர்ட்டாரவர்கள் அடுத்தவாரத்தில் ஈரங்கிக்கு வைக்கும்படி ஸ்பஷ்டமாய்க் கட்டளைபிட்டிருந்திருக்கிருர். எதிரியின்லாயருக்கு மேல்கண்டவிதமாய் டிக்கிரி பிறந்ததகவல் தெரிய வந்த உடன் இனி அதுவிஷயமாய் அக்ஷேபனை ஈரங்கி நடத்துவது பிரயோஜனமில்லையென்று கண்டு ரிவியூ விண்ணப்பம் கொடுப்பது உசிதமென்று நினைத்து எப்பிரல் 26-ல் ரிவியூ விண்ணப்பம் கொடுத்தார். மேற்படி ரிவியூ விண்ணப்பமும் கோர்ட்டாருடைய கட்டளையின்படி ஆக்ஷேபனை ஈரங்கிக்காக மாற்றிவைக்கப்பட்டிருந்த மசோதா டிக்கிரி விஷயமும் மேமீ 1உ யில் விஜாரணைக்குவந்த பொழுது கோர்ட்டாரவர்கள் டிக்கிரீ ஸீல்போட்டு பூர்த்தியான விஷயத்தைக்கண்டு மசோதா டிக்கிரீயின் பின்னுல் பின் வருமாறு இண்டார்ஸ்மெண்ட்செய்தார்கள்:- "போனவாரத்தில் இந்த மசோதா டிக்கிரீ என்முன் ஈரங்கிக்காக வந்தபொழுது அடுத்தவாரத்தில் திரும்பவும் என்முன் ஈரங்கிக்குக்கொண்டுவரப்படட்டுமென்று ஸ்பஷ்டமாய்க் கட்டளையிட்டிருந்தும் பிசகாய் டிக்கிரீ பிறந்துவிட்டது. அந்த டிக்கிரீயை திருப்பவேண்டும். கோர்ட்டாரால் அங்கீகரிக்குமட்டும் டிக்கிரீ யாதொன்றும் பிறக்கக்கூடாது" என்ற விதமாய் உத்தரவளித்து ரிவியூ விண்ணப்பத்தை கோடைலீவுக்குப்பின் ஈரங்கிக்காக வாய்தா போடும்படி உத்தரவளித்தார்கள். ரிவியூ விண்ணப்பம் ஜுலை 26, 27-ல் ஈரங்கிக்கு வந்தபொழுது சட்டப்படி டிக்கிரீ ஏற்பட்டதாகவே இருதரப்பாரும் ஒப்புக்கொண்டதாகச்சொல்லப்பட்டு ரிவியூ விண்ணப்பம், ஈரங்கியாகி செலவுதுகை விஷயமாய் டிக்கிரீயில் கண்ட விவரம் சரியானதல்லவென்று சந்தேகப்பட்டும், ஸி. பி. ஸி. ஆர்டர் 47-இன் பிரகாரம் பிரவேசித்து வேறுவிதமான டிக்கிரீயளிக்கும்படி தீர்ப்பை மாற்றப் போதுமான காரணமில்லை யென்று நினைத்து ரிவியூ விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்துவிட்டார்கள். (அதாவது ரிகார்டுகளின் வசனங்களினுல் யாதொரு பிசகு ஏற்பட்டதாகச்சொல்லி தீர்ப்பை மாற்றத்தக்க காரணமில்லையென்று அபிப்பிராயப்பட்டு அவ்வித உத்தரவளித்தார்கள்போலும்). தீர்ப்பில் செலவுதுகை விஷயமாய் கோர்ட்டார் எழுதியிருக்கிற வசனங்களைக்கொண்டு டிக்கிரீதயாரித்ததில் கோர்ட்டாருடைய எண்ணம் எவ்விதமென்று நிதானிக்கப்பட்டு அந்தப்படி டிக்கிரீ தயாரிக்கப்படாத விஷயம் ரிவியூவுக்குப் போதுமான காரணமாக வைத்துத் தீர்ப்பை மாற்றும் அதிகாரத்தை செலுத்தப் பிரியமில்லை யென்று அபிப்பிராயப்பட்டு ரிவியூ விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தாரென்று சொல்லத்தகும்.

மேற்கண்டவிதமாய் எதிரியின் ரிவியூவிண்ணப்பம் தள்ளுபடியாகவே எதிரி செலவுதுகையைப் பற்றினமட்டில் அப்பீல் செய்ததில் வாதி அந்த அப்பீலுக்கு இரண்டு முக்கியமானபிரதம ஆக்ஷேபனைசெய்தார்; அதாவது:— ரிவியூ விண்ணப்பத்தால் ஏற்பட்ட காலதாமதம் அப்பீல வாய்தாவுக்குக் கூடிவராதென்றும், செலவுதுகைக்காக மட்டும் அப்பீல் செய்யக்கூடாதென்றும் ஆக்ஷேபித்தார்.

இருவித பிரதம ஆக்ஷேபனைகளுக்கும் அப்பீல் கோர்ட்டார் சமாதானம் சொல்லி எதிரிக்கனுகூலமாய் அப்பீலைப் பைசல்செய்த தீர்மானச்சுருக்கமாவது:— செலவுதுகையைப்பற்றிய உத்தர

வின்பேரில் அப்பீல் கிடையாதென்று வாதிக்கப்படுகிறது. கீழ்கோர்ட்டார் வாதிக்கு சில துகைக்குமட்டும் டிக்கிரீயளித்து செலவானது முடிவைப்பொறுத்ததாகுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் இது செலவு துகையைப்பற்றிய உத்தரவின்பேரில் மட்டும் செய்த அப்பீல் என்ற போதிலும், ஜட்ஜ்மெண்டில் வாதிக்கு மொத்தத்தில் பொதுவாய் செலவு துகை கொடுக்கப்படவேண்டுமென்று கண்டிருப்பதாக பாவித்து அவ்விதக் கருத்துடைய ஜட்ஜ்மெண்டின் பேரில் செய்த அப்பீலென்று சொல்லவேண்டும். செலவுதுகையைப்பற்றி மட்டும் யாதொரு ஜட்ஜ்மெண்டு அல்லது உத்தரவு பிறந்து அதன் பேரில் செய்த அப்பீலென்று சொல்லக்கூடாது. செலவுதுகை விஷயமாய் செய்யப்பட்ட அப்பீலாயினும் செலவுதுகையைப்பற்றிய ஒரு உத்தரவின்பேரில் செய்யப்பட்ட அப்பீலல்ல. 17 மதராஸ் லா ஜர்னல் 569-ல் ஹைகோர்ட் அசல்தரப்பில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மோர் துரையவர்கள் ஒரு விண்ணப்பத்தை ஈரங்கிகேட்டு, "இந்த விண்ணப்பத்திற்கு செலவு துகையைத் தவிர்த்து வேறு யாதொரு உத்தரவும் அளிக்கவில்லை" யென்று பைசல் உத்தரவளித்திருக்கிறார்கள். விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்யாமல் அதில் கண்ட அம்சங்களைப்பற்றி இருதரப்பாருக்கும் பாதிக்கும்படியான யாதொரு தீர்மானமும் கொடுக்காமல் அதாவது யாதொரு வியவகார நியாயத்தைப்பற்றியும் தீர்மானம் கொடுக்காமல் செலவு துகையைப்பற்றி மட்டும் உத்தரவளித்திருக்கிறார்கள் போலும். அவ்விதமான உத்தரவின்பேரில் அப்பீல் செய்ததில் ஜஸ்டிஸ் பாஷியமய்யங்காரவர்கள் தீர்மானத்தில் அப்பீலுக்கு வந்த வியவகாரமானது அதாவது கீழ்கோர்ட் உத்தரவானது செலவுதுகையைப்பற்றினதாக மட்டுமேற்பட்டிருக்கிறதென்று சொல்லி அவ்விதமான உத்தரவின்பேரில் அப்பீல் கிடையாதென்று அபிப்பிராயங்கொடுத்திருக்கிறார்கள். கீழ்கோர்ட் உத்தரவை ஒரு வியவகார நியாயத்தைப்பற்றிய தீர்மானமென்றும் அந்தத்தீர்மானத்திற்குகந்தபடி செலவுதுகையைப் பற்றி டிகிரி ஏற்பட்டபோதிலும (அதாவது விண்ணப்பத்தின்பேரில் யாதொரு உத்தரவும் செய்யவில்லையென்ற விஷயமே ஒரு தீர்மானமாக பாவித்து) அதை ஆதாரமாகக்கொண்டு செலவுதுகைக்காக யாதொரு உத்தரவளித்திருந்தபோதிலும் அவ்வித தீர்மானம் லட்டர்ஸ்பேடெண்டு 15-வது பிரிவில் கண்டபடி அப்பீலுக்கிடமான தீர்மானமல்ல. ஆகையால் அந்தக்கேசில் கீழ்கோர்ட் தீர்மானம் வேறுவிதமான ஜட்ஜிமெண்டல்லாத செலவுதுகையைப் பற்றினமட்டில் பிறந்த உத்தரவென்று நிதானித்து அவ்வித உத்தரவின்பேரில் அப்பீலில் பிரவேசிப்பது யுக்தமல்லவென்று ஜஸ்டிஸ் பாஷ்ய மய்யங்கார் தீர்மானித்தது நியாயமே. செலவு துகைக்காகமட்டும் உத்தரவளிப்பது கீழ்கோர்ட்டார் யுக்தமாகையல் அந்த யுக்தானுசாரத்தைப்பற்றிய தீர்மானத்தின்பேரில் அப்பீல் கோர்ட்டார் தலையிடுவது யுக்தமில்லையென்றும் தவிர லட்டர்ஸ்பேடெண்டு 15-வது பிரிவின் கருத்துப்படியுள்ள ஜட்ஜ்மெண்டின்பேரில் மட்டும் அப்பீல் உண்டாகையால் அந்தக்கேசின் ஜட்ஜ்மெண்டு அப்படிப்பட்டதல்லவென்றும் தீர்மானித்து அவ்வித உத்தரவளித்திருக்கவேண்டும். இந்தக்கேசில் கீழ்கோர்ட் ஜட்ஜிமெண்டானது அப்பீலுக்கிடமுள்ளதாயிருக்க அதை ஆதாரமாகக்கொண்டு செய்த செலவு துகையைப்பற்றிய உத்தரவென்று சொல்லத்தகும். அவ்வித உத்தரவின்பேரில் செய்த அப்பீலை யாதொரு ஜட்ஜ்மெண்டின் அம்சத்தைப்பற்றிச்செய்த அப்பீலாக பாவிக்கவேண்டும். ஆகவே 17 மதராஸ் லா ஜர்னலில் ஏற்பட்ட புல்பெஞ்சு தீர்மானம் எதிரியின் ஆக்ஷேபணைக் காதாரமாகக்கூடியதல்ல. இங்கிலீஷ் கோர்ட்டுகளில் செலவுதுகைக்காக அல்லது செலவு துகை சம்பந்தமாகமட்டும் அப்பீல் செய்யக்கூடாதென்று 1873-ம் வருஷத்திய ஜூடிகேசர் ஆக்ட் 49-வது பிரிவில் சட்டமேற்பட்டிருக்கிறது. இந்தியாவில் அவ்விதமானசட்டமுறை கிடையாது. ஸி. பி. ஸி. 35-வது பிரிவில் அப்பீல் முறை ஏற்பட்டிருக்கிறது. அதில் செலவுதுகையைப்பற்றி அப்பீல் செய்யக்கூடாதென்று விதிக்கப்படவில்லை. இங்கிலீஷ் ஆக்ட் 49-வது பிரிவில் செலவுதுகையைப்பற்றியாகிலும் அல்லது இருகக்ஷிக்காரருடைய சம்மதத்தின்பேரிலுமாவது யாதொரு உத்தரவளிக்கப்பட்டால் அதன்பேரில் அப்பீல் கிடையாதென்று விதிக்கப்பட்டிருக்க சம்மதத்தின்பேரில் பிறந்த உத்தரவைப்பற்றிய இங்கிலீஷ்

151489



முறைக்குச் சரியாக ஸி. பி. ஸி. 96-வது பிரிவு ஏற்பட்டிருக்கிறதேயொழிய செலவுதுகை விஷயமாய் இங்கிலீஷ் சட்டத்திற்குச் சரியான ஸி. பி. ஸி. யின் சட்டமுறைகிடையாது. ஸி. பி. ஸி. 96-வது பிரிவும் 35-வது பிரிவும், ஸி. பி. ஸி. 120-வது பிரிவினால் ஹைகோர்ட்டுக்கு ஏற்காதென்று விலக்கப்பட்ட முறை விதிகளல்ல. ஆகவே அந்த 35, 96-வது முறைகளைக் கவனித்து இந்தக்கேசில் எதிரிக்கு செலவுதுகை விஷயமாய் அப்பீலுக்கிடமில்லையென்ற பிரதம ஆக்ஷேபணை ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல.'

அப்பீல் வாய்தாகடந்தபிறகு செய்யப்பட்டதென்று, அதாவது ரிவியூபைசலின் காலதாமதத்தைக் கூட்டிக்கொண்டுகாலாவதி கணித்தது பிசகென்று 2-வதாக ஆக்ஷேபிக்கப்படுகிறது. 14 மதராஸ் 81, 15 கல்கத்தா 242 & 18 பம்பாய் 84 ஆகிய பற்பல அதாரிடிகள் அந்த ஆக்ஷேபணைக்காதாரமாகச் சொல்லப்படுகிறது. ரிவியூ விண்ணப்பத்திற்காக அப்பீலைத் தாமதப்படுத்தகூடாதென்பது நியாயம்தான். ஆனால் இந்தக்கேசின் சந்தர்ப்பங்களைக்கவனிக்குமிடத்து குறித்த வாய்தாவுக்குள் அப்பீல் செய்யக்கூடாததற்குப் போதுமான காரணங்களிருப்பதாய்ச் சொல்லப்படுகிறது. மே மாதம் 1-வ யில் கீழ் கோர்ட்டார் செய்த உத்தரவினால் எதிரியின் அப்பீல் முறைக்குத் தடை ஏற்பட்டது. அதாவ்து பிசகாய்ப் பிறந்த டிக்கிரீயைத்திருப்பி கோர்ட்டார் உத்தரவில்லாமல் யாதொரு டிக்கிரீயும் பிறப்பிக்கக் கூடாதென்று சொல்லி மசோதா டிக்கிரியின் ஆக்ஷேபணை ஈரங்கியையும் ரிவியூ விண்ணப்ப ஈரங்கியையும் மேலீவுக்குப்பிந்தி விஜாரணைக்கு வாய்தா போடும்படி உத்தரவளித்தமையால் எதிரிக்கு அப்பீல் செய்ய இடம் கிடையாமல் போச்சுது: டிக்கிரி நகல்வாங்க தாமதமேற்பட்டால் அந்த காலம் கூடிவர நியாயமுண்டு. பிறந்த டிக்கிரியை வாபிஸ் வாங்கி அதாவது பயனற்றதாக்கின கோர்ட்டாருடைய உத்தரவு சரியானதாயிருந்தாலும் பிசகானதாயிருந்தாலும் அவ்வித உத்தரவளிப்பதற்கு அதிகாரமிருந்தாலும் இல்லாவிட்டாலும் வேறு உத்தரவு பிறக்குமட்டும் எதிரி யாதொரு அப்பீலும் செய்யத்தக்க நிலைமையில்லாதவனாகிறான். ரிவியூ விண்ணப்பம் தள்ளுபடியான இரண்டு தினங்களுக்குள் எதிரி அப்பீல் செய்திருக்கிறார். ஆகவே இந்தக்கேசின் சந்தர்ப்பத்தில் எதிரிக்கு ரிவியூ பைசலாகத் தாமதப்பட்டகாலம், முழுவதையும் நீக்கிவிட்டு அப்பீல் வாய்தாவுக்கு காலாவதி கணித்தது நியாயமாகும்.

பிரதம ஆக்ஷேபணைகளுக்குச் சமாதானம் சொல்லப்பட்டு மற்றப்படி அப்பீலின் செலவுதுகை விஷயமாய் கீழ்கோர்ட்டார் யுக்தத்தின்பேரில் பிரவேசிக்கலாமாவென்றும் அப்படிப் பிரவேசிக்க நியாயமுண்டென்றால் இந்தக்கேசில் பிரவேசித்து மாற்றுவதற்குத் தகுந்த காரணங்களிருக்கிறதாவென்றும் யோஜித்துச்செய்த அப்பீல் தீர்மானத்தில் சொன்னதாவது:— "இந்தக்கேசின் சந்தர்ப்பத்தில் செலவானது பைசலானமுடிவைப் பொருத்ததாகும்" என்று கீழ்கோர்ட்டார் உத்தரவளித்திருக்கிறார்கள். இங்கிலீஷில் Cost Must follow the Event என்று சொல்லியிருக்கிறது. Event (சம்பவம்) என்றபதம் பற்பல அர்த்தங்களைத்தரும். தீர்மான முடிவென்றும் சொல்லலாம். வாதிக்கு ஜெயமானமட்டில் செலவளிக்கப்படுமென்று யூகிக்கலாம். வாதிக்குக் சொஞ்சம் அனுகூலமும் எதிரிக்குக் கொஞ்சம் அனுகூலமுமாக தீர்மானம் ஏற்படின் செலவுதுகை ஜயமானமட்டில் ஒருவர் மற்றொருவருக்கு கொடுக்கவேண்டுமென்ற சந்தர்ப்பத்திலும் மேல்கண்ட வசனங்களால் செலவு துகையைப்பற்றி உத்தரவளிப்பது சம்பிரதாயமுண்டு. செலவுதுகை விஷயமாய், கீழ்கோர்ட்டார் யுக்தத்தில், அப்பீல் கோர்ட்டார் பிரவேசிக்கக்கூடாதென்பது நியாயமே. கீழ்கோர்ட்டார் அவ்வித யுக்தத்தைச் செலுத்தவில்லையென்று திருப்திகரமாய்த் தெரிந்தாலொழிய கீழ்கோர்ட்டார் யுக்தத்தைச் செலுத்தி உத்தரவளித்திருப்பதாகவே யூகிக்கவேண்டும். 2 சான்ஸரி 472-ஐப் பார்க்கவும். பிசகான ஆதாரத்தைக்கொண்டாவது அல்லது கேசின் விஷயங்களைப்பற்றி தப்பான நோக்கங்கொண்டு பிசகான முறையிலாவது கீழ்கோர்ட்டார் யுக்தத்தைச் செலுத்தியிருந்ததாகக் கண்டாலொழிய அப்பீல் கோர்ட்டார் பிரவேசிக்கக்கூடாதென்று 2 பம்பாய் 254-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக்கேசில் கீழ்கோர்ட்டார் அளித்த உத்தரவால் எவ்விதமாய் செலவுதுகை நிர்ணயிக்கப்படவேண்டுமென்று எண்ணியிருந்ததாகத் தெளிவாய்த் தெரியவில்லை.

மசோதா டிக்ரி கீழ்கோர்ட்டார்முன் உத்தரவுக்காக (ஆக்ஷேபணை ஈரங்கிதேதியில்) கொண்டுவரப்பட்ட பொழுதே டிக்ரி பிறந்தாக்கண்டு அது பிசகாய் எழுதப்பட்டிருக்கிறதென்றுசொல்லியிருக்கிறார்கள். ஆகையால் கீழ்கோர்ட்டாருடைய எண்ணப்படி டிக்ரியில் செலவுதுகை நிர்ணயிக்கப்படவில்லையென்று யூகிக்கவேண்டியதாகும். திரும்பவும் அதைப்பற்றி ஈரங்கி வாய்தாகுறிக்கும்படி உத்தரவளித்தமையால் டிக்ரியின் நிர்ணயத்தைப்பற்றி சந்தேகப்பட்டிருந்ததாகவும் சொல்லவேண்டியதாகும். ரிவியூ ஈரங்கி காலத்தில் இருகக்ஷிக்காரரும் பிசகாய்ப் பிறந்த டிக்ரியை சட்டப்படி ஒழுங்காய் எழுதப்பட்ட டிக்ரியாக பாவித்துக்கொண்டு ரிவியூ ஈரங்கி நடத்தியிருக்கிறார்கள். அவ்விதமாய் சம்மதித்து ஒப்புக்கொண்ட காரணம் ரிவியூ ஈரங்கியின் சவுகரியத்திற்காகவேயொழிய பின்னால் டிக்ரியின் அம்சங்களைப்பற்றி ஆக்ஷேபிக்கக்கூடாதென்று உடன்படிக்கை செய்துகொண்டதாகச் சொல்லத்தகாது. ரிவியூ ஈரங்கிகாலத்தில் இருவரும் சம்மதித்த சந்தர்ப்பத்தால் கோர்ட்டார் தங்களுடைய கருத்துக்கு இசைவாய் டிக்ரி பிறப்பிக்கப்படவில்லையென்ற விவரத்தைத் தெரிவிக்க ஏதுகரமில்லாமற் போய்விட்டது. ரிவியூவுக்குத் தகுந்த அம்சங்களிருக்கிறதா வென்று மட்டும் யோஜித்த அந்த நடவடிக்கையில் இருதாரத்தாரும் ஒப்புக்கொண்ட விஷயம் முடிவான அல்லது நிராக்ஷேபணையான ஏற்பாடென்று சொல்லத்தகாது. 47-வது பிரிவின்படி ரிவியூ செய்யத்தக்க கேஸல்லவென்று அபிப்பிராயப்பட்டபோதிலும் டிக்ரியின் செலவுதுகை நிர்ணயத்தைப் பற்றித் சந்தேகப்பட்டிருப்பதாக ரிகார்டில் குறித்துக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே டிக்ரியின் நிர்ணயத்தைப்பற்றி பிரவேசித்துப் பார்த்து, நியாயமான உத்தரவு செய்யத்தகுமென்று சொல்லி வாதிக்குக்கிடைத்த பரிகாரமாகிய ரூ. 1220-க்குறிய செலவைமட்டும் எதிரி கொடுக்க வேண்டுமென்றும், மற்றப்படிக்கு வியாஜ்ஜியத்தின் மொத்தச் செலவை அவரவர்களே வகித்துக்கொள்ள வேண்டுமென்றும், இந்த அப்பீல் செலவைமட்டும் எதிரிக்கு வாதி கொடுக்கவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள்.

---

ஜஸ்டிஸ் சேஷகிரியய்யர்

4 மார்ச்சு 1914

Crl R. case No. 568 & 582 & Crl R. P. No. 4?1 & 472 of 1913

மஞ்சுநாதய்யா & சுப்பராய பட்டர் மனுதாரர்கள்.

1, 2 எதிரிகளாகிய மனுதாரர்கள் குண்டப்பூர் தாலூகா கமலாக்ஷியம்மன் கோவில் திருட்டுக் கேஸில் திருட்டுக் குற்றத்திற்காகச் சார்ஜ் செய்யப்பட்டு சப் மாஜிஸ்டிரேட்டாரால் இருவரும் தண்டனையடைந்து அப்பீலில் அது காயமான பின் ஹைகோர்ட்டில் இருவரும் தனித்தனியாக ரிவிஷன் மனு தாகல் செய்தார்கள். 2-வது எதிரியின்பேரில் திருட்டுக் குற்றஞ் சாட்டுவதற்குப் போதுமான ருஜுபாகம்கிடையாதென்றும், அவரே ஒப்புக்கொண்டிருக்கிற ஸ்டேட்மெண்டை ருஜுபாகத்தில் ஏற்றுக்கொண்ட போதிலும், திருட்டுச் சொத்துக்களில் சில நாணயங்களை 1-வது எதிரியிடமிருந்து அவர் பெற்றுக்கொண்டதாகத் துலங்குகிறபடியால் திருட்டுச் சொத்தை அடைந்ததாகக் குற்றம் சாட்டப்படலாமேயொழிய திருட்டுக் குற்றத்திற்காக தண்டனையானது பிசகென்று அவரை விடுதலை செய்யும்படி ஹைகோர்ட்டார் உத்தரவளித்தார்கள்.

1-வது எதிரியைப்பற்றி தண்டனையைக் காயப்படுத்தி ரிவிஷன் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்த தீர்மானத்தில் சொன்னதாவது:—களவுபோன சொத்துக்கள் 1913 ஜூன் 6-இல் 1-வது எதிரியின் வீட்டண்டையிலுள்ள குப்பை மேட்டிலிருந்து எடுக்கப்பட்டன. 1-வது சாட்சியிடம் 1-ம் எதிரி குற்றம் நடந்த தேதிக்கு முன் தனக்கு தேவஸ்தானத்தார் சம்பளம் கொடுக்காதபடியால் பக்தர்களால் கோவில் காணிக்கையாகக் கொடுக்கப்பட்ட நகைகளையும் பொருள்களையும் வைக்கப்பட்டிருக்கிற டப்பியைத் திருடிக்கொண்டுபோய்விடுவதாகச் சொல்லியிருந்ததாகவும், 6-வது சாட்சியிடத்திலிருந்து ஷை டப்பி வைக்கப்பட்டிருக்கிற அறையின் சாவியை யாதொரு தந்திரமான காரணத்தைச்சொல்லி வாங்கி 7-வது சாட்சியாகிய ஒரு கம்மாளனைக்கொண்டு மறுசாவி தயாரித்துக் கொண்டதாகவும் ருஜுவாகிறது. தவிர 1-வது எதிரி போலீஸாரிடம் கோவில் நகை நாணயங்களைத்தானும் 2-வது எதிரியுமாகத் திருடினதாகவும், பொருளைத் தன் வீட்டண்டையிலுள்ள குப்பை மேட்டில் மறைத்துவைக்கப்பட்டிருக்கிறதாயும் ஸ்டேட்மெண்டுகொடுத்து, போலீஸாருடனும் மற்ற சிலசாட்சிகளுடனும் கூடச்சென்று குப்பைமேட்டிலிருந்து களவுபோன சொத்துக்களை எடுத்துக் கொடுத்ததாகவும் ஏற்படுகிறது. அவ்வித ருஜுபாகத்தையிட்டு 1-வது எதிரி திருட்டுக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்.





இந்த ரிவிஷன் விண்ணப்ப ஈரங்கியில் 1-வது எதிரிக்காக (1) எதிரி போலீஸாரிடம் தான் குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்ட ஸ்டேட்மெண்டை ருஜுவில் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும் ஏனெனில் அந்த ஸ்டேட்மெண்டுக்கும் திருட்டு சொத்துக்கள் கண்டெடுக்கப்பட்ட விஷயத்திற்கும் சம்பந்தமில்லையென்றும் (3) குப்பை மேட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்ட நகை நாணயங்கள்தான் கோவிலில் திருட்டுப்போனவைகளென்று சரியானபடி அடையாளமிட்டு ரூபிக்கப்படவில்லையென்றும் (2) 1-வது எதிரி திருட்டுப்போன நகைகள்தான் குப்பை மேட்டிலிருக்கின்றனவென்று போலீஸார் முன் கொடுத்த ஸ்டேட்மெண்டையும் ருஜுபாகத்தில் ஏற்றுக்கொண்டது பிசகென்றும் ஏனெனில் அவ்வித ஸ்டேட்மெண்டையனுசரித்து போலீஸாரே நேரில் திருட்டு நகைகளைக் கண்டெடுத்திருந்தால் அந்த ஸ்டேட்மெண்டை ஏற்றுக்கொள்ளக் கூடியதானாலும் இந்தக்கேசில் 1-வது எதிரியே நேரில்போய் அவைகளைக் காட்டி எடுத்தமையால் அவ்விதமான ஸ்டேட்மெண்டை ருஜுவில் ஏற்றுக்கொள்ளக் கூடாதென்றும் ஆகிய லா பாயிண்டுகள் எதிரிக்காக வாதிக்கப்பட்டன.

எதிரி திருடினதாக ஒப்புக்கொண்ட ஸ்டேட்மெண்டை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்ற வாதம் முந்தியசிலதீர்மானங்களை யனுசரித்திருக்கிறது. 31 மதராஸ் 127-ஐப் பார்க்கவும் (நகைகள் கண்டெடுக்கப்பட்ட இடம் வேறு எதிரியின் வீடுவேறு மற்ற விதமாகவும் 1-வது எதிரிக்கும் கண்டுபிடிக்கப்பட்ட சொத்துக்களுக்கும் சம்பந்தம் ஏற்படாதபடியால் எதிரி தன்னைக் குற்றப்படுத்திக்கொண்டஸ்டேட்மெண்டை ருஜுவில் ஏற்றுக்கொள்ளக்கூடாது.) ஆனால் களவுபோன டப்பியிலுள்ள நகைகள் குப்பைமேட்டிலிருப்பதாக எதிரி கொடுத்த ஸ்டேட்மெண்டை ருஜுபாகத்தில் ஏற்றுக்கொள்வதில் பிசகில்லையென்றே சொல்லவேண்டும். ஏனெனில் அந்த ஸ்டேட்மெண்டுக்கும் களவு சொத்துகண்டுபிடித்த விஷயத்திற்கும் சம்பந்தமிருக்கின்றன. கண்டெடுத்துக் கொடுத்தது எதிரியாக விருந்தபோதிலும் பரவாயில்லை. 14 பம்பாய் 260-ஐப் பார்க்கவும். போலீஸாராவது அல்லது அவர்களுடைய கட்டளைப்படி வேறு யாராகிலும் அந்த ஸ்டேட்மெண்டை அனுசரித்து நகைகளை எடுத்துக் கொடுத்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஆகவே ரிவிஷனில் பிரவேசித்து மாற்றத்தக்க லா பாயிண்டுகிடையாதென்று 1-வது எதிரியின் தண்டனையைக் காயப்படுத்தினார்கள்.

———:o:———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் பேக்வெல்

மதராஸ்.

C. S. No. 174 of 1913-5 மார்ச்சு 1914.

நரசிம்மாச்சாரியார் Vs கிருஷ்ணமாச்சாரியார்.

வாதி நரசிம்மாச்சாரியார் மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் பெற்ற டிக்ரி பாக்கிக்காக கவர்ன்மெண்ட் மராமத்து இலாகாவால் பிரதிவாதிக்கு பாக்கி ஏற்பட்டிருந்ததுகை எக்ஸிகியூடிவ் இஞ்சினியர் வசமிருப்பதை மதராஸ் ஹைகோர்ட்டார் ஜப்தி செய்தவுடன் பிரதிவாதியின்பேரில் இதரமான பற்பல கோர்ட்டில் பிறந்திருக்கிற டிக்ரிபாக்கிக்காக அதே துகை பற்பல கோர்ட்டாரால் ஜப்தி செய்யப்பட்டிருக்கிற தகவலை எக்ஸிகியூடிவ் இஞ்சினியவர்கள் மதராஸ் ஹைகோர்ட்டாருக்குத் தெரிவித்து தம்முடைய கைவசம் (பிரதிவாதிக்குச் செல்லவேண்டியதான) உள்ள துகையை ஹைகோர்ட்டுக்கு அனுப்பி இதரமான ஜப்தி விவரத்திற்குரிய ஜாபிதாவையும் எழுதியனுப்பினார். மதராஸ் ஹைகோர்ட் ஜப்திக்குமுன் ஜப்திசெய்திருந்த மற்றொரு டிக்ரிபாக்கிதார் தன்னுடைய டிக்ரியை நிறைவேற்றுவதற்காக மதராஸ் ஹைகோர்ட்டுக்கு மாற்றிக்கொள்ளாத போதிலும் தன் ஜப்தி முந்தியதால் தன் பாக்கி பூராவும் முதலில் செலுத்தப்பட வேண்டுமென்றாவது அல்லது தனக்கு பங்குவிகிதமாவது கிடைக்கவேண்டுமென்று ஹைகோர்ட்டில் விண்ணப்பம் செய்து கொண்டதில் இந்த விஷயத்தைப்பற்றி தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று வித்

தியாஸமாய் ஏற்பட்டிருப்பதாலும் அது முக்கியமான பாயிண்டாகிறபடியாலும் ஷை கேஸை இரண்டு ஜட்ஜிமார்கள் முன்னிலையில் ஈரங்கிக்காகக் குறிக்கப்பட வேண்டுமென்று ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் உத்தரவளித்த பிரகாரம் மேற்கூறிய பெஞ்சியில் ஈரங்கியாகி அளிக்கப்பட்ட தீர்மானச் சுருக்கமாவது:-

ஸி. பி. ஸி. 63-வது பிரிவின்படி யாதொரு கோர்ட்டார் டிக்கிரியை நிறைவேற்றி பிரதிவாதியின் யாதொரு சொத்தை ஜப்திசெய்து தொகை கோர்ட்டுக்கு வந்து சேருமுன் அதே சொத்தானது பற்பல கோர்ட்டாரால் ஜப்தியாகியிருக்கும் பட்சத்தில் ஜப்திநடைவடிக்கையை முடித்துத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு எல்லா கோர்ட்டாரும் லாயக்குள்ளவர்களாயினும் எல்லாவற்றிலும் அந்தஸ்திலும் அதிகாரத்திலும் மேலான கோர்ட்டார் அத்தொகையை வசூலித்து பாத்தியமனு, ஆக்ஷேபணை முதலிய விவாதங்களைக் கேட்டு பைசல் செய்யவேண்டுமென்றும் எல்லாம் ஒரே அந்தஸ்துள்ளகோர்ட்டுகளாயிருந்தால் முதல் முதல் ஜப்திசெய்த கோர்ட்டார் அந்த நடவடிக்கை நடத்தக்கடவதென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. இதரமான கோர்ட்டாருடைய ஜப்தியைப்பற்றி ஏற்படுகிற ஆக்ஷேபணைகளைக் கூட மேற்கூறிய நிறைவேற்று நடவடிக்கையை மேல் நடத்தும் கோர்ட்டாரே விஜாரிக்கலாம்.

ஸி. பி. ஸி. 73-வது பிரிவில் நிறைவேற்று நடவடிக்கை நடத்தி யாதொரு தொகை கோர்ட்டுக்குவந்து சேருமுன் இதரமான டிக்கிரி பாக்கிதார்கள் அதே கோர்ட்டில் நிறைவேற்று விண்ணப்பம் கொடுத்திருந்தால் அவர்களுக்கும் வசூலாகும் தொகையில் பங்குவிகிதம் கிடைக்கத்தகுமென்று ஏற்பட்டிருக்கிறது. 1859-ம் வருஷத்திய பழய ஸி. பி. ஸி யில் முதலில் ஜப்திசெய்தவனுக்கு வசூலான தொகையில் டாக்கி பூராவும் செலுத்தப்பட வேண்டுமென்றும், பிந்திய ஜப்திதார்களுக்கு அந்த சிலாக்கியமில்லாமல் பங்குவிகிதாசாரமுறை ஏற்பட்டிருக்கிறது. அதற்குபின் நமோதுக்கு வந்த 1877-ம் வருஷத்திய ஸி. பி. ஸியில் ஏலத்தில் வசூலாகும் தொகையில் டிக்கிரி பாக்கிதார்களனைவருக்கும் பங்கு விகிதமுண்டென்று விதிக்கப்பட்டு அதே முறையானது புது கோடிலும் மேல்கண்ட நிபந்தனையுடன் 73-வது பிரிவில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சரியானபடி டிக்கிரி பாக்கியுடையவர்களுக்குப்பங்கு விகித பாத்தியதையானது சட்டமுறையில் ஏற்பட்டிருப்பதில் யாதொரு சந்தேகமில்லை. 73-வது பிரிவின்படி பங்கு விகிதம் கிடைக்கவேண்டுமானால் பங்கை அபேக்ஷிக்கிறவர்கள் தொகை வசூலாகிய கோர்ட்டிலேயே நிறைவேற்று நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். அப்படியானால் 63-வது பிரிவின்படி இதர கோர்ட்டில் ஜப்திக்கட்டளை பிறப்பித்த டிக்கிரிபாக்கிதார்களுக்கு 73-வது பிரிவின்படி பங்குவிகிதம்கிடைக்க நியாயமுண்டாவென யோஜிக்கவேண்டும். தொகையை வசூலித்த கோர்ட்டார் இதரமான பாக்கிதார்களுக்காகவும் நடவடிக்கை நடத்தியிருப்பதாக பாவிக்கப்பட்டால் மட்டும் அவர்களுக்குப்பங்குவிகிதமுண்டாகும். உயர்ந்த நிலைமையிலுள்ள கோர்ட்டில் ஜப்தி செய்தவர்களுக்கு மட்டும் பங்குண்டென்றும் இதரமான கோர்ட்டில் அதற்கு முன் ஜப்தி செய்தவர்களுக்கும் அதைவிட அதிகமான தொகைக்கு டிக்கிரி பெற்றவர்களுக்கும் உயர்ந்த கோர்ட்டில் வசூலான தொகையில் பங்கு கிடையாதென்றும் சட்டகர்த்தாக்களுடைய கருத்தாகச்சொல்லக்கூடாது. 63-வது பிரிவில் தொகையை வசூலிக்கும்மேலான கோர்ட்டார் ஜப்தி நடவடிக்கைகளுக்குறிய ஆக்ஷேபணைகளையும் பாத்திய மனுக்களையும் விஜாரித்துப்பைசல் செய்யலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறதே யொழிய அவ்வித ஆக்ஷேபணைகளின் தீர்மானத்தின் பேரில் வசூலானதொகையை எவ்விதமாய் விநியோகம் செய்வதென்று விளக்கப்படவில்லை. ஒன்றும் குறிக்கப்படாதபடியால் அத்தொகையை 73-வது பிரிவின்படி இதரகோர்ட்டில் ஜப்தி செய்தவர்களுக்கும் பங்கு விகிதமாய் பிரித்துக்கொடுக்க வேண்டியது நியாயமென்றே சொல்லவேண்டும். அதாவது அவர்கள் மேலான கோர்ட்டுக்கு (தொகையை வசூலிக்கும் அதிகாரமுடைய கோர்ட்டுக்கு) டிக்கிரியை மாற்றிக்கொள்ளாதபோதிலும் அவர்களுக்குப்பங்கு விகிதமுண்டென்று சொல்லவேண்டும். 73-வது பிரிவின் கருத்துக்கு மேற்கூறிய நியாயம் இசைவில்லையென்றும் 73-ன்படி அதே கோர்ட்டில் நிறைவேற்றினவர்களுக்கு மட்டும் பாக்கித்தொகை கொடுத்து விட்டபின் தொகையில் மிகுதி யிருந்தால் அதை எவ்விதமாய் விநியோகம் செய்வதென்று



73-வது பிரிவில் குறிக்கப்படவில்லை. பிரதிவாதிக்குக்கொடுத்துவிடலாமா? இதரமான கோர்ட்டாருடைய ஜப்திக்காக வஜாசெய்து கொள்ளும்படி அனுப்பிவிடலாமா? எப்படி வஜாசெய்வது? ஆகிய விவரங்கள் யாதொன்றும் குறிக்கப்படாத காரணத்தால் அவர்களுக்கும் வசூலான கோர்ட்டில் நடவடிக்கை நடத்தினவர்களுக்குச் சமானமாக பாக்கித்தொகைக்குத்தக்கபடி பங்கு விகிதம் கொடுக்கப்படவேண்டியதென்றே யூகிக்கவேண்டும். 63-வது பிரிவானது சவுகரியத்திற்காக ஏற்பட்டமுறை விதியே யொழிய மற்ற பாக்கிதார்களுடைய பங்குவிகித பாத்தியதைக்கு யாதொரு நஷ்டமும் உண்டாக்கத்தக்க சட்ட விதியென்று சொல்லக்கூடாது. 21 கல்கத்தா 200-யும், 2 கல்கத்தாவாரக்குறிப்புகள் 126யும் பார்க்கவும். 14 கல்கத்தாவாரக்குறிப்புகளின் 395-ல் 63-வது பிரிவின் கருத்தை விபரீதமாய் அர்த்தங்கொள்கிறார்கள். அதுசரியானதல்லவென்று சொல்லவேண்டும். அதாவது மேலான கோர்ட்டார் ஜப்தி செய்தபிறகு இதரகோர்ட்டில் ஜப்தி உத்தரவு பெற்ற பாக்கிதார்களுக்குப் பங்குவிகிதம் கிடையாதென்றும், ஆனால் அதற்கு முன் இதரமான கோர்ட்டில் ஜப்தி செய்தவன் மேலான பிந்திய கோர்ட்டாருடைய ஜப்தியை, பிந்தியதாகவும் தனக்கு முன் பாத்தியதையுண்டென்றும், ஆக்ஷேபிக்கலாமென்றும் ஷை 14 கல்கத்தாவாரக்குறிப்புகளின் 395-ல், தீர்மான முடிவுக்கிடமில்லாத சந்தர்ப்பத்தில் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அந்தக்கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. 6 மதராஸ் 357-ல் சின்ன கோர்ட்டில் டிக்கிரி பெற்றவர் பெரிய கோர்ட்டில் வசூலானதொகையில் பங்கு விகிதமடைவதற்குத்தன் டிக்கிரியை பெரியகோர்ட்டுக்கு மாற்றிக்கொண்டிருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறபோதிலும் அந்த அபிப்பிராயத்திற்கு விரோதமாக ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரவர்கள் 35 மதராஸ் 598 இல் தீர்மானித்திருக்கிறார்கள். 6 மதராஸ் கேசின்படி மேலான கோர்ட்டில் பங்கு விகிதம் கேட்குமுன் நிறை வேற்று விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கவேண்டியது அவசியமான முறையாகச்சொல்லியும் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரவர்கள் தீர்ப்பில் யாதொரு தீர்மான அபிப்பிராயம் கொடுக்கவில்லை. ஆகவே மேற்கூறிய பலகாரணங்களால் ஒவ்வொரு டிக்கிரிபாக்கிதாரும் ஜப்திசெய்த காரணத்தால் வசூலான தொகையில் பங்குவிகிதம அடைய நியாயமுண்டென்று தீர்மானித்து மதராஸ் ஹைகோர்ட்டாரே அவ்வித பங்கு விகிதம் செய்துகொடுக்கவேண்டியதாகுமென்று சொல்லி எக்ஸிகியூடிவ் இஞ்சினியரால் தொகை கோர்ட்டுக்கு அனுப்பப்படுமுன் ஜப்தி செய்தஒவ்வொருவருக்கும் பங்கு விகிதம் கொடுக்கும்படி ஹைகோர்ட் ரெஜிஸ்டிரார் அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது

———:O:———

## சில தீர்ப்புச்சுருக்கங்கள்.

### ஜஸ்டிஸ் ஏய்லிங்

### C. R. P. 454 of 1913–17 மார்ச்சு 1914.

மதராஸ் எஸடேட்ஸ்லாண்ட் ஆக்ட் 211-வது பிரிவின்படி பாக்கி நிற்கும் ரெவினியூ பாக்கிக்காகப் போடப்பட்ட ரெவினியூ ஏலமானது சட்டவிரோதமென்ற காரணத்தால் அந்த ஏலத்தை ரத்துசெய்ய வேண்டுமென்று ஸிவில் கோர்ட்டில் பிராது செய்யவேண்டுமேயொழிய ரெவினியூ கோர்ட்டாருக்கு அந்தப்பிராதை ஏற்றுக்கொண்டு பைசல் செய்ய அதிகாரமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

———:O:———

### ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

### C. M. P. 710 & 711 of 1914

### 26 மார்ச்சு 1914

ஹைகோர்ட் அப்பீல் தரப்பில் ஒரு 2-வது அப்பீலானது எதிரிக்கு நோடீஸ் போகாமலே அட்மிஷன் கோர்ட்டில் ஒரு ஜட்ஜியவர்களால் தள்ளுபடியாகி லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்யப்பட்டு அந்த அப்பீல் விஜாரணை பாக்கியிருக்கும் போது எதிரி செலவுதொகைக்காக ஜாமீன் கொடுக்கும்படி விண்ணப்பம் கொடுத்தில், அவ்வித விண்ணப்பம் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் முறைக்குக் கிடையாதென்று ஆக்ஷேபிக்கப்பட்டதில் ஸிவில் புரோஸிஜர் கோடின் அம்சங்கள் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீலுக்கு ஏற்காதபோதிலும் ஹைகோர்ட் அப்பீல் தரப்புக்காக ஏற்பட்டிருக்கிற ரூல் 48 (3) இன்படி இத்தகைய விண்ணப்பம் கொடுக்கலாமென்றும் தீர்மானித்து 27 மதராஸ் 121-இல் ஏற்பட்டிருக்கிற மாறுன அபிப்பிராய நியாயத்திற்குச் சமாதானம் சொல்லப்பட்டது.

ஜஸ்டிஸ் எய்லிங் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

A. S. No. 13 of 1908–25 மார்ச்சு 1914

———:ம்:———

எஜமான் தன்னுடைய ஏஜண்டின்மீது கணக்குகளை ஆஜர்படுத்தி வரவு செலவு விவரங்களைத் தீர்மானிக்கும்படி தாவா செய்ததில் ஷை ஏஜண்டு காலஞ்சென்றபின் அவனுடைய வாரிஸ்கள்பேரில் ஷை தாவாவைத் தொடர்ந்து நடத்தலாமென்றும், (2) கஷ்டக்கூட்டாளியின் வசம் சேர்ந்திருக்கிற லாபத்தில் பங்கு வேண்டுமென்று கோறப்பட்ட பிராதில் மொத்த சொத்துக்களையும் பாகப்பிரிவினை செய்து கொடுக்கும்படியான பரிகாரமும் சேர்க்கப்படாததினுல் அந்தப் பிராது தள்ளுபடியாகத் தக்கதல்லவென்றும்' (3) எஜமானுக்காக ஒரு காரியத்தை நடத்தித்தில் ரும்பொழுது கோர்ட் விவகாரத்தில் வக்கி வகுமஸ்தாக்களுக்கும் மற்ற விதமான இனும் பாபத்துச் செலவுக்காகவும் ஏஜண்டு செய்திருக்கிற செலவை எஜமான் அங்கீகரிக்கத்தக்கதாகும். அவைகள் எஜமான் பத்து வழியில் எழுதப்படுவதில், பிசகில்லையென்றும் தீர்மானிக்கபட்டது

———:O:———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

L. P. A. 92 & 97 of 1913

20 மார்ச்சு 1914

———

ஒரு தேவஸ்தானத்திற்கு அநேக தர்மகர்த்தாக்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் அவர்களில் சிலர் மட்டும் தேவஸ்தானத்தை மானேஜமெண்டு செய்துகொண்டு வந்ததில் அவர்களுக்கு தேவஸ்தான சொத்துக்கள் விஷயமாய் முச்சலிக்கை எழுதிக் கொடுத்திருந்த பிரதிவாதிகள்பேரில் சில மிராசு பாக்கித் தொகைக்காக வியாஜ்ஜியம் செய்ததில் 3 மதராஸ் 234-ஐ அனுசரித்து மற்ற தர்மகர்த்தாக்களும் சேராமல் கொடுக்கப்பட்ட பிராது பிடிக்கத்தக்க தல்லவென்றும் 24 மதராஸ் லா ஜர்னல் 75-இன் தீர்மானம், 3 மதராஸ் கேஸின் கருத்துக்கு மீறியதாகத் துலங்குமானுல் அந்த லா ஜர்னல் தீர்மானம், அனுசரிக்கக்கூடியதல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

Crl M. P. 428 of 1913–13 மார்ச்சு 1914

———

போலீஸாருடைய ரிபோர்ட்டின்பேரில் மட்டும் ஒருவரை ப்ராஸிகியூஷன் செய்யும்படி மாஜிஸ்டிரேட்டார் அனுமதி (சாங்கிஷன்) கொடுக்கக்கூடாது. 10 மதராஸ்232-ஐப் பார்க்கவும். ஆனல் ஒருவன் போலீசாரிடம் கொடுத்த பிராதுக்கு மேல்எதிரிகௌண்டார் பிராது கொடுத்து அந்த கௌண்டர் பிராதில் வாதி'எதிரி)யின் விஜாரணையாகி அதன்பேரில் ஒரு தீர்மானமளிக்கபபட்ட பிறகு முதலில் போலீஸாரிடம் பிராது சொல்லிக்கொண்டவனை இ. பி. கோ. 211-வது பிரிவின்படி குற்றஞ் செய்ததாக அதாவது ஒருவனைக் கெடுக்கும்பொருட்டு தப்புபிராது சொல்லிக்கொண்டதற்காக பிராஸிகியூஷன் செய்யும்படி அனுமதிகொடுத்தால் அவ்வித சாங்கிஷன் அனுமதியானது சட்ட விரோதமான (போலீஸ் ரிபோர்ட்டின்பேரில் மட்டும்)ருஜுபாகத்தின் ஆதாரத்தைக்கொண்டு அளிக்கப்பட்டதாகச் சொல்லக்கூடாது. கௌண்டார் பிராதின் தீர்மானம்கூட அனுமதிகொடுக்கிறவருடைய மனதில் முக்கிய காரணமாய்த் தோற்றியிருக்கவேண்டுமாகையால் அவ்வித அனுமதி உத்தரவைச் சட்ட விரோதமென்று சொல்லக்கூடாது. போலீஸார் ரிபோர்ட்டின் பேரில் சாங்கிஷன் கொடுக்கும் சந்தரப்பத்தில் அந்த ரிபோர்ட்டில் கண்ட பிராதைப்பற்றி பிரதம விஜாரணை செய்துதான் கிரி. பி. ஸி. 195 அல்லது 476வது பிரிவுகளின்படி பிராஸிகியூஷன் செய்யவேண்டுமென்ற அவசியமில்லை. ஒரு சாங்கிஷன் அனுமதியானது சட்டரீதியான ருஜு அம்சத்தைச் சார்ந்ததாயிருக்கத் தேவையில்லை. ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களுடைய அபிப்பிராயத்தில் சாங்கிஷன் அனுமதி இரண்டு கோர்ட்டுகளில் காயமானுல் மூன்ருவது கோர்ட்டில் அதன்மேல் அப்பீலை வழக்கமுறையாகத் தள்ளுபடி செய்வதே நியாயமாகும்.

———



சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட்

மதராஸ்

O. S. A. 18 of 1913–பிப்ரவரி 1914

ஆதனூர் மலகொண்டய்யா

*Vs*

லட்சுமி நரசிம்மலு செட்டி

மூலபுருஷனுடைய உயில் சாஸனத்திற்கு பிரதிவாதி லட்சுமி நரசிம்மலு செட்டி எக்ஸிகியூடராக நியமிக்கப்பட்டிருந்ததில் காலஞ்சென்ற மூலபுருஷனுடைய சொத்துக்களைப் பரிபாலனம் பண்ணுவதற்காகவும் உயிலின்படி ஏற்பட்ட விநியோகங்களை நடத்தி முடிப்பதற்காகவும் எக்ஸிகியூடராகிய பிரதிவாதி உயிலை ருஜுப்படுத்தி கோர்ட் மூலமாய் அட்மினிஸ்ட்ரேஷன் பவர் அடையவேண்டியதற்காக விண்ணப்பம் கொடுத்து நடவடிக்கை நடதத தாமதப்பட்ட காரணத்தால் அந்த உயிலின்படி சில சொத்துக்களையும் வேறு சில வருஷாந்தர வருமானங்களையும் அடைய பாத்தியமுடைய வாதி மலகொண்டய்யா என்றவர் மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் அட்மினிஸ்ட்ரேஷன் டிக்கிரிபெற்று தான் சொத்துக்களைப் பரிபாலனம்செய்வதாகச் சொல்லி அசல் பிராது செய்த உடன் பிரதிவாதியாகிய எக்ஸிகியூடர் வாதிக்கு உயில்படி சேரவேண்டிய சொத்து பாகத்தையும் அவருக்கு வருஷாந்தர விகிதத்திற் காதாரமாகப் போதுமான ஒரு தொகையையும் கோர்ட்டில் டிபாஸிட் கட்டிவிட்டு வாதியின் பிராதை மேல்நடத்த விடக்கூடாதென்று ஆக்ஷேபிக்கவே கோர்ட்டாரவர்கள் இங்கிலீஷ் சட்டமுறையில் ஏற்பட்டிருக்கிற யுக்தத்தைச் செலுத்தினவர்களாக வாதியின் பிராதை செலவுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதிஅப்பீல் செய்ததில் அசல் கோர்ட்டாருடைய யுக்தானுசாரத்தின்படி பிறந்த உத்தரவை மாற்றப் பிரியமில்லாமல் அப்பீலைத் தள்ளுபடி செய்தார்கள். அப்பீல் தீர்மானத்தில் சொன்னதாவது:— ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள் இங்கிலாந்தில் ஸுப்ரீம் கோர்ட் ரூல்களின் ஆர்டா 55 ரூல் 10-ல் ஏற்பட்டிருக்கிற விதிப்படி பிறந்த இங்கிலீஷ் தீர்மானங்களில் சொல்லியபடி யுக்தானுசாரத்தைச் செலுத்தி வாதியின் தாவாவைத் தள்ளுபடி செய்திருக்கிருர்களென்று சொல்லவேண்டும். மேற்கூறிய ஆர்டர் 55 ரூல் 10-ன்படி அசல் தாவா செய்யாமல் ஒரு விண்ணப்பத்தாலேயேயாதொருவன் (எக்ஸிகியூடர்) அல்லது அதிகாரம் பெற்ற மனிதன் காலஞ்சென்றவனுடைய சொத்துக்களைப் பரிபாலனம் செய்து வரும்படி உத்தரவு அடைய லாயக்குண்டு. அவ்வித ரூல் ஏற்பட்டதால் அவனுக்கு ஷை சொத்துக்களிலுள்ள பாத்தியதைக்கு யாதொரு மாறுபாடும் ஏற்பட்டதாகச் சொல்லப்படவில்லை. அதிகாரம் பெற்றவன் மட்டும் விண்ணப்பம்போடலாமென்றும் வேறுவிதபாத்தியதையுடையவர்கள் யாதொரு வழக்கும் தொடரக்கூடாதென்றும் ஷை ரூலினுல் ஏற்பட்டால் அவ்விதமான ரூலை ஏற்படுத்துகிறவர்கள் தங்கள் அதிகாரத்தை மீறி நடந்ததாகச் சொல்லவேண்டும். [அதாவது ரூல்படி எக்ஸிகியூடர்தான் விண்ணப்பம்கொடுக்கவேண்டியதானுலும்உயிலில் கண்ட சொத்தில் பாத்தியதை அடையத்தக்கவன் நடவடிக்கை நடத்தக்கூடாதென்று சொல்லத்தகாது.] இந்தக்கேசில் எக்ஸிகியூடரல்லாத மற்றெரு பாத்தியஸ்தன் கொண்டுவந்த பிராதை கீழ்க்கோர்ட்டார்யுக்தத்தைச்செலுத்தி வாதிக்குச் சேரவேண்டிய தொகை டிபாஸிட் கட்டப்பட்ட சந்தர்ப்பத்தையும் கவனித்து பிராதைத் தள்ளுபடி செய்தது பிசகென்று சொல்ல இடமில்லை. 7 சான்ஸரி டிவிஷன் 58-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற ஒரு கேசில் உயில்படிக்கு சொத்திலிருந்து வருஷந்தோறும் யாதொரு சவரக்ஷணை விகிதத்தை அடையப் பாத்திரனுகிறவன் அட்மினிஸ்டிரேஷன் அதிகாரம் அடைவதற்காக தாவா செய்யலாமென்று சொல்லியிருக்கிறதை வாதிக்காக எடுத்துக் காட்டப்பட்டது. சொத்தில் வருஷ வருமானத்தை அடைய யோக்கியமுள்ளவன் அந்த நிலமையில் பிராது செய்யத்தகுமாவென்ற விஷயம் அந்தக்கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இங்கிலீஷ லா முறையின்படி அநேக பாக்கிதார்களில் ஒருவர் எல்லோருக்கும் பிரதிநிதியாக காலஞ்சென்றவனுடைய சொத்தைப் பரிபாலனம் செய்ய தாவா செய்யும் விஷயத்தில் பிரதிவாதி அந்த பாக்கிதாருக்குச் சேரவேண்டிய தொகையையும் வியாஜ்ஜிய செலவையும் கொடுத்துவிடும் பட்சத்தில் ஷை பிராதை தள்ளுபடி செய்யும்படி பிரதிவாதி கோரிக்



OFFICE OF THE ... 10 ... DR...

கொண்டு அவ்வித உத்தரவு பெறலாமென்று தெளிவாய் ஏற்பட்டிருக்கிறது. ஒரு பாக்கிதாருடைய தாவாவுக்கும் உயிலின் நன்மையைப் பெற யோக்கியமுள்ளவன் கொண்டுவரும் தாவாவுக்கும் வித்தியாசமுண்டென்று சொல்லப்படுகிறது. கோர்ட்டாருடைய யுக்தானுசாரத்தைப் பிரயோகிக்கும் விஷயத்தில் இருவித தாவாவுக்கும் வித்தியாஸம் ஏற்படவேண்டியதில்லை. இங்கிலீஷ் கோர்ட் முறைகளைக் கவனிக்குமிடத்து கோர்ட்டார் யுக்தப்படி பிராதைத் தள்ளுபடி செய்யும் சந்தர்ப்பங்களில் செலவு தொகைக்காக செய்யவேண்டிய உத்தரவைப்பற்றிமட்டும் யோஜிக்கவேண்டியது நியாயமாகும். கீழ் கோர்ட்டார் கேஸை விஜாரணை செய்யாமல் பிராதையும் ஆன்ஸரையும் கவனித்துப் பார்த்து பிராதை டிஸ்மிஸ் செய்து செலவுதொகை விஷயமாய் அளித்த உத்தரவும் யுக்தானுசாரத்தைப் பொறுத்தானபடியால் அப்பீலில் அதைப்பற்றி பிரவேசிக்க இஷ்டமில்லாமல் மேல்கண்ட விதமாய் இந்த அப்பீலையும் செலவுடன் தள்ளுபடி செய்தார்கள்.

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

*ராமநாதபுரம் ஜில்லா*

**S. A. 425 of 1912–18 மார்ச்சு 1914**

*சுப்பிரமணியன் செட்டியார் Vs பெரியசாமி தேவர்*

ராமனாதபுரம்ஜில்லா தவசிக்குடிகிராமத்திற்கு பாத்தியஸ்தர்களாகிய வாதியும் 2-ம் பிரதிவாதியும் ஜாயிண்டான மேல்வாரம்தார்களாக விருக்கையில் அந்த கிராமத்தைச் சேர்ந்த ஒரு நில பாகத்தில் குடிவார பாத்தியதையுடைய 1-ம் பிரதிவாதி தனக்குள்ள குடிவார பாத்தியதை முழுவதையும் மேல்வார பாகஸ்தராகிய 2-ம் பிரதிவாதிக்கு விக்கிறயம் செய்துவிடுவதாய் ஒப்புக்கொண்டு ஷை நிலங்களையும் சுவாதீனம் செய்துகொடுத்து 1910 ஜூன் 15-ல் கிறய தஸ்தவேஜும் எழுதி ரிஜிஸ்டர் செய்து கொடுத்துவிட்டார். வாதி தன்னுடைய பிராதில் சொல்லிக்கொள்ளுகிறபடி மேற்கூறிய விக்கிறய ஏற்பாட்டின் தகவல் யாதொன்றும் அறியாதவராக தாவா நிலங்களின் ஒரு பாகத்தில் 1910-இல் மே 29-ல் சாகுபடிக்கு யோக்கியமில்லாதபடி வீடு கட்டப்பட்டிருக்கிற காரணத்தால் 1-ம் பிரதிவாதி தனக்குரிய குடிவார பாத்தியத்தை மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்ட் 151-வது பிரிவின்படி இழந்துவிட்டதாகச் சொல்லி குடிவார பாத்தியதைக்குள்ளடங்கிய 1-ம் பிரதிவாதியின் வசமுள்ள நிலங்களிலிருந்து ஷை யாரை அப்புறப்படுத்தும் பொருட்டு ராமனாதபுரம் ஸ்பெஷல் டிப்டிகலெக்டரிடத்தில் ரெவினியூ தரப்பில் 1910 ஜூன் 17-ல் அதாவது கிறயமான தேதிக்கு இரண்டுதினங்களுக்குப்பின் இஜக்ட்மெண்டு பிராது தாகல் செய்து அதில் மற்றொரு மேல்வாரதார் வாதியாகச் சேராதபடியாலும் அவர் அந்த வீடு கட்டப்பட்டிருக்கும் பாகமுள்பட தாவா நிலங்களை சுவாதீனமடைந்து அனுபவித்து வருவதாலும் அவரை 2-ம் பிரதிவாதியாகச் சேர்த்து வியாஜ்ஜியம் நடத்தினதில் 1-ம் பிரதிவாதி பிராதுக்கு முந்தியே தாவா நிலங்களில் தன் குடிவார பாத்தியதையை 2-ம் பிரதிவாதிக்கு விக்கிறயம் செய்துவிட்டதாகவும் அந்த நிலத்தில் வீடு கட்டியது தானல்லவென்றும் ஆகவே வாதிக்குத் தன்மேல் வியாஜ்ஜியமூலம் கிடையாதென்றும் ஸ்டேட்மெண்டு கொடுத்தார். 2-ம் பிரதிவாதியே கிரயத்தை ஒப்புக்கொண்டதுமல்லாமல் அதில் தானேவீடு கட்டிக்கொண்டதாகவும் ஆன்ஸரில் சொல்லியிருக்கிறார். ரெவினியூ கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லா கோர்ட்டாரும் 35 கல்கத்தா 807-ல் ஏற்பட்டிருக்கிற தீர்மானத்தை அனுசரித்து இவ்வித இஜக்ட்மெண்டு பிராது செய்வதற்கு மேல்வார பாகஸ்தர்களிருவரும் வாதிகளாகச் சேர்ந்திருக்கவேண்டிய தவசியமாகுமென்று சொல்லி வாதி தனிமையாகச் செய்த பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்யவே அங்கு இரண்டு பாகஸ்தர்களும் சேர்ந்து பிராது செய்திருக்கவேண்டியதென்ற கீழ்கோர்ட்டாரின் அபிப்பிராயம் சரியானதல்லவென்றும் ஆனால் வாதி தாவா நிலங்களில் 2-ம் பிரதிவாதியுடன் கூட்டனுபோகத்திற்காக பிராது செய்திருக்கவேண்டுமே யொழிய சுவாதீனமிழந்த 1-ம் பிரதிவாதியின்பேரில் இஜெக்ட்மெண்டு பிராது செய்ய நியாயமில்லையென்றும் அவ்வித கூட்டனுபோகத்திற்காக பரிகாரம் கேட்கும்படி பிராதைத் திருத்திக்கொள்ள அனுமதி கொடுக்கலாமென்றால் அவ்விதமான பிராது ரெவினியூ கோர்ட்டில் நடத்தக்கூடாதென்றும் சொல்லி வாதி ரெவினியூ கோர்ட்டில் கொண்டுவந்த பிராது ஏற்றுக்கொள்ளத்தகாதென்று தீர்மானித்து 2-வது அப்பீலைத் தள்ளுபடி செய்தார்கள். ஹைகோர்ட்டாருடைய தீர்ப்பில் சொல்லப்பட்ட முக்கிய அம்சங்களாவன:— 35 கல்கத்தா 807-இல் ஏற்பட்ட தீர்மானம் அனுசரிக்கத் தக்கதல்ல. பல தர்மகர்த்தாக்கள் அல்லது டிரஸ்டிகளில் ஒருவர் மட்டும் அந்நியன் பேரில் நடத்துகிற வியாஜ்ஜியத்தில் மற்ற டிரஸ்டிகளையும் பிரதிவாதிகளாய்ச் சேர்க்கலாமென்றும் எல்லோரும் வாதிகளாய்ச் சேர்ந்து பிராது செய்யப்படவேண்டியதில்லையென்றும் மதராஸ் ஹைகோர்ட்டில் தொடர்ச்சியாக அநேக தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கூட்டு பாகஸ்தர்கள் விஷயமாகவும் அதேவிதமான தீர்மானங்களிருக்கின்றன. பிராதில்சொல்லியபடி 1-ம் பிரதிவாதி தாவா நிலத்தில் வீடு கட்டியது வாஸ்தவமாக ஏற்றுக்கொண்டாலும் 1-ம் பிரதிவாதி குடிவார பாத்தியதையை இழந்துவிடும் காரணத்தால் நிலத்திற்கு பாத்தியமுடையவன் அவரை அந்நியனாக பாவித்து அப்புறப்படுத்த நியாயமுண்டு. அந்த நடவடிக்கையில் 35 கல்கத்தா தீர்மானப்படி பாகஸ்தர்கள் எல்லோரும் சேர்ந்து வாதிகளாக ஏற்பட்டிருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. 29 மதராஸ் 29-ம், 25 மதராஸ் லா ஜர்னல் 315-ம், 35 கல்கத்தாவுக்கு விரோதமாக ஏற்பட்டிருக்கிறது. அவைகளில் எல்லோரும் வாதிகளாய்ச் சேர அவசியமில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 38 கல்கத்தா 370-ல் தீர்வையை உயர்த்தும் விஷயத்தில் குடிகளின் பேரில் தாவா செய்தால் எல்லாபாகஸ்தர்களும் வாதிகளாய்ச் சேரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அது நியாயமாகும். அந்த 38 கல்கத்தா தீர்மானம் தாவா கேஸுக்கு பாதகமல்ல. ஒரு குடியானவன்பேரில் அதிகபாரத்தை சுமத்தவேண்டுமானால் அதாவது செலுத்திவரும் தீர்வையை அதிகப்படுத்தவேண்டுமானால் பல பாகஸ்தர்களுடைய சம்மதமன்னியில் ஒருவர்மட்டும் தனிமையாக அவ்வித அதிகத் தீர்வை வசூலிக்கும்பொருட்டு பிரயத்தனப்படக்கூடாது. அது பரிஷ்காரமாய் ஏற்பட்டிருக்கிற சட்ட நியாயமாகும். முதல் முதல் ஒரு தீர்வை விகிதத்தை செலுத்துவதாய் எல்லா பாகஸ்தர்களுடனும் மொத்தமாக ஒப்பந்தம் செய்துகொண்டிருக்க அந்த விகிதத்தை மாற்ற (அதிகப்பப்படுத்த) எல்லோருடைய சம்மதமும் அவசியமாகும். பாகஸ்தர்கள் பங்கு பிரிந்து தனித்தனியாக தீர்வையை அனுபவிக்கும் விஷயத்தில் அவ்வித சம்மதம் அவசியமில்லை. ஆகவே ஒரு அந்நியனாகிய குடிவார பாத்தியதையை இழந்த 1-ம் பிரதிவாதியை இஜெக்ட் செய்ய (வெளிப்படுத்த)க் கொண்டுவந்த இந்தப் பிராதுக்குத் தீர்வை அதிகப்படுத்தும் விஷயத்தில் ஏற்பட்ட 38 கல்கக்தா தீர்மான அபிப்பிராயம் உதவக்கூடியதல்ல. அந்நியனை வெளிப்படுத்தவேண்டிய பிராதில் ஒரு பாகஸ்தன் தனிமையாய் நடவடிக்கை நடத்தினாலும் அவர் மற்றவர்களுக்காகவும் அவசியமான யாதொரு நடவடிக்கையை நடத்திவருகிறாரென்று சொல்லத்தகும். 8 அலகபாத் லா ஜர்னல் 272-ஐப் பார்க்கவும். 25 மதராஸ் லா ஜர்னல் 315-ல் தீர்மானித்திருக்கிறபடி இருவருக்கும் கூட்டாக யாதொரு ஒப்பந்தத்தின்படி தீர்வை செலுத்தப்பட வேண்டியதாயிருக்க அவர்களில் ஒருவர் தனிமையாக தன் விகிதத்திற்குரிய தீர்வைப் பங்கை வசூலிக்கும் பொருட்டு தாவா செய்யலாமென்று ஏற்படுகிறது. ஆகவே ஜில்லா கோர்ட்டார் 35 கல்கத்தா 807-ஐ அனுசரித்து இருபாகஸ்தரும் சேர்ந்து பிராது செய்திருக்கவேண்டுமென்று அதாவது வாதியும் 2-ம் பிரதிவாதியும் சேர்ந்து 1-ம் பிரதிவாதியின்பேரில் இஜெக்ட்மெண்டு பிராதை ரெவினியூ கோர்ட்டில் தாகல் செய்திருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு அந்தக் காரணத்தால் வாதியின் தனிமையான பிராதைத் தள்ளுபடி செய்த தீர்மானம் பிசகாகும்.

ஆனால் வாதியின் பிராது தள்ளுபடியாக வேறு காரணங்களுண்டு. மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 8-வது பிரிவின் (1)-வது உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடி மேல்வாரதார் விக்கிறயத்தாலாவது வார்சு முறையாலாவது அல்லது வேறு காரணத்தாலாவது குடிவார பாத்தியதை முழுவதையும் கூட அடைந்தவனாக ஏற்பட்டால் இருவித பாத்தியதையும் ஒருவரிடமே ஐக்கி

மாகிவிடுகிறதும் தவிர ஸ்வான்தாரென்றும் ரயட்டென்றும் வெவ்வேறான அந்தஸ்தானது நிலையற்றுப்போய்விடுகிறது. தாவா கேசின் சந்தர்ப்பம் அப்படிப்பட்டதல்ல. 8-வது பிரிவின் 2-வது உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடி பல பாகஸ்தர்களில் ஒருவர்மட்டும் குடிவார பாத்தியதையை கிரயம் பெற்று அனுபவித்தால் மற்ற பாகஸ்தர்களுக்குச் சேரவேண்டிய தீர்வை விகிதத்தின் பாகத்தைச் செலுத்தக்கடமைப்பட்டவராகி அந்தக்கடமை நிலைத்திருக்குமட்டும் கிரயம் பெற்ற பாகஸ்தர் குடிவாரம்தார் என்ற அந்தஸ்தை (ரயட்டென்ற அந்தஸ்தை) வகித்தவராகவே பாவிக்கப்படவேண்டும். (வீடு கட்டியிருக்கும் பாகத்தைத் தவிர்த்து மற்ற நிலத்தைப்பற்றின மட்டில் 2-ம் பிரதிவாதிக்குக் குடிவார பாத்தியதைவிக்கிரயத்தால் மாற்றப்பட்டிருக்கிறபடியால் தாவா நிலங்களிலிருந்து 2-ம் பிரதிவாதியை அப்புறப்படுத்த நியாயமேற்படாது. 1-ம் பிரதிவாதிக்கு அனுபோகமே நீங்கிவிட்டபடியால் அவர்பேரில் இஜெக்ட்மெண்ட் பிராது செய்த நியாயமில்லை. 2-ம் பிரதிவாதியோ ரயட்டென்னும் ஸ்தானத்தை வகித்தவராகிறார். தவிர சட்டப்படிக்கு (2)-வது பிரிவின்படிக்கு, வாதிக்குரிய தீர்வை விகிதத்தையும் செலுத்தக்கடமைப்பட்டவராகவு மிருக்கிறார். 2-ம் பிரதிவாதியின்பேரில் பரிகாரம் தேடும்படி பிராதைத் திருத்திக் கொடுக்க அனுமதி கொடுக்கலாமென்றால் அவரை அப்புறப்படுத்த நியாயம் ஏற்படாதபடியால் அவர்பேரில் இஜெக்ட்மெண்டு பிராதுக்கு வியாஜ்ஜியமூலம் கிடையாது. தாவா நிலங்களில் பாகப்பிரிவினை ஏற்படுமட்டும் இருவருக்கும் எந்த பாகத்தில் குறித்த பாத்தியதை உண்டென்று சொல்லத்தகாது. சாகுபடிக்கு லாயக்கான பாகத்திலும் இருவருக்கும்பாத்தியமுண்டு; வீடு கட்டியிருக்கும் பாகத்திலும் இருவருக்கும் பங்குண்டு; ஆகவே இவ்வித சந்தர்ப்பத்தில் பாகப்பிரிவினை ஏற்படாதபடியால் வாதி வீடு கட்டின பாகத்தில் கூட்டனுபோகத்திற்காக 2-ம பிரதிவாதியின்பேரில் பரிகாரம் தேட நியாயமாகும். அவ்விதமாய் பிராதைத் திருத்த அனுமதி கொடுக்கலாமென்றால் அந்த விதமான கூட்டுச்சுவாதீனப் பிராதை ரெவினியூ கோர்ட்டார் பிடித்து விஜாரிக்க அதிகாரமில்லை. ரெவினியூ தரப்பில் துவட்கப்பட்டு நடத்திவந்த தாவா பிராதை அவ்விதமாகத் திருத்தி மேல்நடத்த அனுமதி கொடுப்பதில் பிரயோஜனமில்லை. ஆகவே வாதி ரெவினியூ கோர்ட்டில் செய்த பிராது தள்ளுபடியாகவேண்டியதென்று செல்லி 2-வது அப்பீல் டிஸ்மிஸ் செய்யப்பட்டது.

———:O:———

### ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

தென் மலையாளம்

### C. M. S. A. No. 5 of 1913-19 டிசம்பர் 1913

*அப்துல் காதர் Vs கிருஷ்ணன் நாயர்*

ஒரு தர்வாட்டுக்குக் கார்ணவனாகிய கிருஷ்ணன் நாயர் பாலகாடு சப்கோர்ட்டில் 1903-ம் வருஷத்தில் பெற்ற டிக்கிரீயை நிறைவேற்றுவதற்காக 1911 ஜுலை 3-ல் கொடுத்த விண்ணப்பம் காலாவதி தோஷமென்று எதிரி ஆக்ஷேபித்ததில் மனுதார் இதற்குமுன் கொடுத்திருந்த நிறைவேற்று விண்ணப்பத் தேதியிலிருந்து 3-வருஷங்களுக்குள் தாவா மனு தாகல் செய்யப்படாதபோதிலும் முந்திய விண்ணப்பம் தாகலாகியும் அதை மேல் நடத்தி ஜப்தியான சொத்தை ஏலம்போடுவதற்கு வில்லங்க ஸர்டிபிகேட் தேவையாகயிருந்தமையால் 1908 ஆகஸ்ட் 7உயில் மனுதார் வாய்மொழியாக கோர்ட்டாரிடம் ஷை வில்லங்க ஸர்டிபிகேட் வாங்கி தாகல் செய்யகாலதாமதம் ஏற்படுமென்ற காரணத்தைச் சொல்லி விண்ணப்ப ஈரங்கிக்கு வாய்தாவைத் தள்ளிவைக்கும்படி கோர்ட்டாரை கேட்டுக்கொண்டதாகவும் அவ்வித வாய்மொழியான மனுவின்படி கோர்ட்டார் முந்திய விண்ணப்ப வாய்தாவைத் தள்ளிவைத்த தகவல் ரிகார்ட்டில் எழுதியிருந்தபடியால் அந்த வாய்மொழியான மனுத்தேதியாகிய 1908 ஆகஸ்ட் 7உ முதல் மூன்று வருஷத்திற்குள் தாவா விண்ணப்பம் தாகல் செய்யப்பட்டமையால் தாவா விண்ணப்பத்திற்குக் காலாவதி தோஷம் ஏற்படாதென்றும் அதாவது மேற்கூறிய வாய்மொழியின் விண்ணப்பமானது காலாவதி ஆக்ட் 179-வது பிரிவின்படி நிறைவேற்று நடவடிக்கையை அனுசரித்த உதவியாகிற நடவடிக்கையென்றும் அந்த உதவி நடவடிக்கையானது காலாவதி கணிப்புக்குப் பயன்படத்தக்



தாகுமென்று சமாதானம் சொல்லப்பட்டது. சப்கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லா கோர்ட்டாரும் தாவா நிறைவேற்று மனுவுக்குக் காலாவதி தோஷமில்லையென்று மனுதாரின் சமாதானத்தை ஒப்புக்கொண்டு மேற்கூறிய வாய்மொழியான விண்ணப்பத் தேதிமுதல் காலாவதி கணிக்கவேண்டியதாகுமென்று தீர்மானித்தார்கள். எதிரி அதன்பேரில் ஹைகோர்ட்டில் 2-வது சில்லரை மனு அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் தீர்மானமே காயமாகி 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட்டாருடைய தீர்மானச் சுருக்கமாவது:—எதிரிக்காக 27 கல்கத்தா 285 ஆதாரமாக எடுத்துக் காட்டப்பட்டு அதில் தீர்மானித்திருக்கிறபடி ஒரு விண்ணப்ப ஈரங்கிக்கு யாதொரு காரணத்தால் வாய்தா மாற்றிவைக்க வேண்டுமென்று கோரிக்கொண்டால் அவ்விதமான கோரிக்கையானது காலாவதிக்கு உதவக்கூடிய விண்ணப்பமாகப் பாவிக்கப்படக் கூடாதென்று வாதிக்கப்படுகிறது. அந்தக் கல்கத்தா தீர்மானத்தில் விண்ணப்ப ஈரங்கியை மேல் நடத்த முடியாமல் வாய்தா கேட்டால் நடந்தேறிவரும் நடவடிக்கையைத் தடைசெய்த பாவனையாக எண்ணவேண்டுமேயொழிய நிறைவேற்றுதலுக் கனுஸரணையான ஒரு நடை முறையாகச் சொல்லக்கூடாதென்று விளங்குகிறது. அப்படிப்பார்த்தால் வாய்தா கேட்கிற ஒவ்வொரு விண்ணப்பமும் நடவடிக்கையைமேல் நடத்துவதற்கு இடையூறாகவேற்படும். ஒரு டிக்கிரிதார் நிறைவேற்று நடவடிக்கையில் மூன்றுவிதமான விண்ணப்பம்செய்யக் கூடியதாகும். அதாவது நிறைவேற்று நடவடிக்கைக்கு அனுஸரணையான முறையாக விண்ணப்பம் கொடுக்கலாம்; அந்த நடவடிக்கைக்கு இடையூறாக, தடையாக, விண்ணப்பம் கொடுக்கலாம்; அல்லது ஸாதகமும் பாதகமும் இல்லாதபடி ஒரு விண்ணப்பம் கொடுக்கலாம். ஒரு ரிகார்டை அல்லது ருஜுபாகத்தை தாகல் செய்யும்பொருட்டு நிறைவேற்று நடவடிக்கையின் ஈரங்கியை மாற்றிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் அந்தக் கோரிக்கையாகிய வாய்தா விண்ணப்பமானது நிறைவேற்றுதலுக் கனுஸரணையான நடவடிக்கையாகும். நிறைவேற்று நடவடிக்கை ஈரங்கி பாக்கியிலிருக்கும்பொழுது (வேறுவிதமாய் டிக்கிரியின் அம்சத்தைத் தீர்த்துக்கொள்வதாகவும் அல்லது யாதொரு சொத்தின்பேரில் அல்லது நபரின்பேரில் தொடர்ந்து நடத்த இஷ்டமில்லையென்று தெரிவித்த சரியானபடி நடத்துவதற்காவது) அந்த விண்ணப்பத்தை மேல் நடத்துவதற்குத் தடையாக யாதொரு மனுச்செய்து கொள்ளலாம். ஸாதக பாதகமில்லலாமல் கோர்ட்டில், கட்டியிருக்கிற தொகையை வாங்குவதற்காகவும் அல்லது நிறைவேற்று நடவடிக்கையை மேல் நடத்துவதற்கு அவசியமென்று குறித்துச் சொல்லாதபடி யாதொரு வலவிவர ஜாபிதாவுக்கு நகல் வேண்டுமென்று விண்ணப்பம்செய்துகொள்ளலாம். இந்தக்கேசில் வாதி (மனுதார்) முந்திய நிறைவேற்று மனுவுக்கு ஆதாரமாக (அனுஸரணையாக) வில்லங்க ஸர்டிபிகேட் வேண்டுமென்ற காரணத்தைச் சொல்லி வாய்தா கேட்டுக்கொண்ட மனுவானது உதவி விண்ணப்பமென்று சொல்லத்தகும். அவ்வித விண்ணப்பமானது காலாவதி ஆக்ட் 179-வது பிரிவின் அம்சங்களின்படி காலாவதி கணிப்புக்கு உதவக்கூடியதாகுமென்று சொல்லவேண்டும். 37 பம்பாய் 317, 36 பம்பாய் 638, 29 அலகபாத் 302, 5 மதராஸ் 141 ஆகிய தீர்மானங்கள் மேற்கூறிய அபிப்பிராயத்திற்கு ஆதாரமாகின்றன. 14 கல்கத்தா வாரக்குறிப்புகளின் 486-ம் வாதிக்கனுகூலம்தான். ஆனால் அந்தத் தீர்மானத்தில் வாய்தாவேண்டுமென்று வாய்மொழி விண்ணப்பம் செய்யப்படாமல் எழுத்துமூலமாய் மனுக்கொடுக்கப்பட்டிருக்கிறதாயும் அந்தக்கேசில் வாய்தாவுக்குக் காரணமாக யாதொரு பிரமாணப்பத்திரிகை தாகல் செய்ய அவசியமாகிறதென்றுகண்டு அதற்குத் தாமத மேற்படுமென்று சொல்லப்பட்டிருப்பதால் தாவா மனுவின் சந்தர்ப்பத்தைப்போல் வில்லங்க ஸர்டிபிகேட் அவசியமாயிருக்கிறதாகச் சொல்லப்படவில்லையென்றும் ஆகவே அந்த கல்கத்தா வாரக்குறிப்புகளின் 486 வாதிக்கு உபயோகமில்லையென்று எதிரி ஆர்கியுமெண்டு செய்கிறார். காலாவதி ஆக்ட் 179-வது பிரிவில் கண்டபடி ஒரு உதவி விண்ணப்பம் எழுத்து மூலமாய் செய்யப்படவேண்டுமென்று சட்டமில்லை. 3 அலகபாத் 139-ம், 15 பம்பாய் 407-ம் அனுசரிக்கத்தகுந்தவைகளாகவும், அவைகளில் எழுத்து மூலமாய் உதவி விண்ணப்பம் கொடுக்கப்பட வேண்டியதில்லையென்று தீர்மா

ளிக்கப்பட்டிருக்கிறது. யாதொரு பிரமாணப்பத்திரிகையை ஆஜர்பத்தும் பொருட்டு செய்துகொள்ளும் வாய்தா விண்ணப்பம் காலாவதிக்கு உதவக்கூடியதாயிருக்கும்பொழுது வில்லங்க ஸர்டிபிகேட் தாகல் செய்வதற்காக வாய்தா கேட்டால் அது தாழ்ந்தபடியான அவசியமாகாது. அதுவும் உதவி விண்ணப்பமாகவே பாவிக்கப்படலாம். மேற்கூறிய காரணங்களால் தாவா நிறைவேற்று மனுவுக்கு 1908 ஆகஸ்ட் 17 வ முதல் காலாவதி கணிக்கலாமென்று தீர்மானிக்கப்பட்டு 2-வது அப்பீல் தள்ளுபடியானதில் முந்திய நடவடிக்கை தாகல் செய்த தேதிமுதல் 3 வருஷம் கணக்கிடுவது அதிக கடுமையான நிபந்தனையென்றும் முந்திய நடவடிக்கை எடுத்து ஒருவகையாய் முடிந்த தேதிமுதல் 3 வருஷம் கணக்கிட்டு காலாவதி கணிப்பது மிக்க உசிதமாவதால் அந்தப்படிக்கு சட்ட கர்த்தாக்கள் சட்ட முறையை சீர்திருத்தினால் அதிக மேன்மையாயிருக்குமென்றும் அபிப்பிராயம் கொடுத்து ஷை கடினமான முறைக்குக் கொஞ்சம் ஸகாயமாக நடவடிக்கை நடத்த ஆரம்பித்தபின் இடையில் யாதொரு உதவியான விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டால் காலாவதியை அது முதல் கணிக்கலாமென்று 179-வது ஆர்டிகிலில் ஏற்படுத்தியிருக்கிறது வாய்மொழியான விண்ணப்பங்களுக்கும் ஏற்றதாகுமென்று வியாக்கியானப்படுத்த நியாயமாகுமென்று ஹைகோர்ட்டார் தீர்மானித்தார்கள்.

———:o:———

## புல்பெஞ்சு கேஸ்

சீவ் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் &
ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்ட்

மதராஸ் ஹைகோர்ட்.

CMPNo. 585 of 1914–20 மார்ச்சு 1914.

ஹைகோர்ட் வக்கில் சங்கம்

*Vs*

ஒரு ஹைகோர்ட் வக்கில்

தஞ்சாவூரிலுள்ள ஒரு ஹைகோர்ட் வக்கில் கும்பகோணத்தில் மாதுவய்யர் என்கிற ஒரு ப்ரைவேட் வக்கிலுக்கு 1912 ஜூலை 23 வ-ல் பின்வருமாறு எழுதத்தகாத ஒரு கடிதத்தை எழுதியனுப்பினர். அதாவது:— "இதைப் படித்த உடன் கிழித்துப்போடவும். அனந்தகோடி நமஸ்காரம். தங்கள் கடிதம் கிடைத்தது. அதைப் பெற்று சந்தோஷமாச்சுது. திருக்களாவூர் தீக்கொளுத்தின கேஸானது சப் மாஜிஸ்டிரேட் சிங்காரவேலு முதலியார் முன் விஜாரணைக்கு வரப்போகிறது. அந்த முதலியார் இங்கு தஞ்சாவூரில் சப் மாஜிஸ்டிரேட்டாக இருந்தவர். இதற்குமுன் அவர் கும்பகோணத்திலேயே டவுன் சப் மாஜிஸ்டிரேட்டாகயிருந்திருக்கிறார். இங்கிருந்தபோது அவர் எனக்கு ரொம்ப விஹிதம். தங்களுக்கு அதிகமாய் எழுதவேண்டியதில்லை. தாங்கள் இங்குவந்து டவுனில் விஜாரித்தால் தெரியும். நம்முடைய கக்ஷிக்குக் கட்டாயம் எவ்விதத்திலும் ஜெயம் உண்டாக்கித் தருகிறேன். வக்கில் எவ்வளவு உயர்ந்தவராயினும் (எதிர்தரப்பு வக்கில் எவ்வளவு பெரியவராளுலும்) சப் மாஜிஸ்டிரேட்டிடத்தில் நான் அடையக்கூடிய சிலாக்கியம் வேறு தான். தாங்கள் நேரில் வந்தால் சொலுவேன்.......... .. ...மேற்கூறிய கேஸில் நாம் நிச்சயமாய் ஜயமடையலாம். அதைப்பற்றிக்கவலையே வேண்டாம். எனக்கு வக்காலத்து வாங்கிக் கொடுக்கக் கோருகிறேன்.) அதாவது என்னை அந்தக்கேசை நடத்தும் பொருட்டு வக்கிலாக நியமிக்க ஏற்பாடு செய்யவும். வேணுமானால் சப் மாஜிஸ்டிரேட்டையே விஜாரியுங்கள். எவ்விதத்திலும் பதிலை அபேக்ஷிக்கிறேன். இவ்விதமாய் எழுதப்பட்ட கடிதமானது மதராஸ் ஹைகோர்ட்டாருடைய நோடீஸுக்கு வந்து அதின் உண்மையைப்பற்றி விஜாரித்துரிபோர்ட் செய்யும்படி ஹைகோர்ட்டார் மதராஸ்ஹைகோர்ட்வக்கில்களுடைய சங்கத்தாருக்கு அனுப்பியதில் அக்கடிதம் எழுதிய வக்கிலை சமாதானம் சொல்லும்படி கேட்டுக்கொண்டதில் வக்கில் எழுதியனுப்பிய சமாதானமாவது:— "சென்ற ஜூலை அல்லது ஜூன் மாதக்கடைசியில் ப்ரைவேட் வக்கில் மாதுவய்யர் திருக்களாவூர் தீக்கொளுத்தின கேஸின் கக்ஷிக்காரருக்காக என்னிடம்வந்து சில ஏற்பாடுகள் சொன்னதில் அதை நான் ஒப்புக்கொண்டேன். அவர் அப்பொழுது ரிகார்டுகளொன்றும் கொண்டுவராதபடியால் கட்சிகளுடனும் கக்ஷிக்காரருடனும் பின்னால் வந்து சேருவதாகச் சொல்லிப்போய் சொற்பதினங்களுக்குப்பின் ஒரு கடிதம் எழுதினர். அதைக்காப்பாற்றிவைக்கவில்லை. ஆனால் ஞாபகமுள்ள மட்டில் அதில் கண்ட செய்தியாவது.— [நாம் செய்த ஏற்பாட்டின்படி கக்ஷிக்காரர்கள் தங்களுக்கு வக்காலத்து கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். ஆனால் பழய சப் மாஜிஸ்டிரேட் மாற்றிப்போவதாயும் அவருக்குப்பதிலாக வருகிற புது மாஜிஸ்டிரேட்டுக்கும் தங்களுக்கும் ஏதோ விரோதமிருப்பதாயும் அதனால் உங்களிடத்தில் அவருக்கு மனஸ்தாபம் நேரிட்டிருப்பதாயும் சில தகவல் கக்ஷிக்காரர்களுக்குத்தெரிந்து தங்களை நியமிக்கிற விஷயத்தில் இப்பொழுது தயமாட்டம் செய்கிறார்கள். சப் மாஜிஸ்டிரேட்டாரே அந்தத் தகவலைச் சொன்னதாக கக்ஷிக்காரர்கள் கேள்விப்படுகிறார்கள். மாஜிஸ்டிரேட்டிடத்தில் நல்ல முறையில்லாதவரை வக்கிலாக நியமித்ததால் நல்ல கேஸானது கெட்டுப்போய் விடுமென்று பயப்படுகிறார்கள். அப்படியெல்லாமிருக்காதென்று நான் கக்ஷிக்காரருக்கு உறுதி சொல்லியும் அவர்கள் தயங்கி நெடுநாளத்திய வக்கிலொருவரை வைப்பது மேலாகுமென்று யோஜனைசெய்கிறார்கள். மேற்கூறிய தகவல் வாஸ்தவமாவென்றும் கேஸைப்பற்றித் தங்கள் அபிப்பிராயத்தையும் பற்றி தயவுசெய்து எழுதவும். அதன்மேல் கக்ஷிக்காரரிடத்தில் பேசி, அவர்களோடு தங்களிடம் வந்து சேருகிறேன்.] மேற்கண்ட விதமான கடிதத்திற்கு உத்தரமாகத்தான் தாவா லட்டரை நான் எழுதியனுப்பினேன். வலங்கிமான் சப் மாஜிஸ்டிரேட்டாகிய சிங்காரவேலு முதலியார் என்ற ஒருவரிடத்தில் எனக்கு மனஸ்தாபமுண்டு. ஆனால் புதிதாக வரப்போகிற சப் மாஜிஸ்டிரேட் சிங்காரவேலு முதலியார் அவரல்ல புதிதாய் வருகிறவரிடத்தில் எனக்கு நல்ல பழக்கமுண்டு. முன் அவர் தஞ்சாவூரில் சப் மாஜிஸ்டிரேட்டாக இருந்தபோது அவ்விதபர்ச்சியமுள்ளவரென்றே சொல்லப்பட்டது. என்னை இந்தக்கேசில் வக்கிலாக நியமித்தால் கேஸானது தோல்வியடையாமல் நான் அதிக நன்மையை உண்டாக்குவேன் என்று எண்ணினேன். ஏனெனில் நான் இதற்குமுன் பலதடவைகளில் அவருடைய கோர்ட்டில் ஆஜராகி கேஸ் நடத்தியிருக்கிறேன். அவருடைய வழிதனெல்லாம் தெரியும். அந்தத் தீக்கொளுத்தின கேஸ் விஷயமாய் கக்ஷிக்காரர்களுக்கு உபயோகமான சில தகவல்கள் தற்செயலாய் எனக்குத் தெரியவந்தமையாலும் மற்றவர்களுக்கு அந்தத் தகவல் கிடைக்காதபடியாலும் அப்படி நினைத்தேன். தாவா கடிதத்தில் இதைத்தான் எழுதித் தெரிவித்து என்னை நேரில் வந்து பார்த்தால் கேஸ் விஷயமாய் என்னிடம் வந்த தகவலின்னதென்று சொல்வதாகவும் அதில் கண்டிருந்தேன் எனக்கும் மாஜிஸ்டிரேட்டுக்கும் மனஸ்தாபமில்லையென்ற விஷயத்தை மாஜிஸ்டிரேட்டிடம் நேரில் கேட்டறிந்து கொள்ளும்படியும் எழுதியிருந்தேன். மாதுவய்யர் மனதில் ஏற்பட்ட சந்தேகத்தை நிவர்த்திக்கும் பொருட்டு நான் இக்கடிதம் எழுதினபடியால் அதைக்கிழித்துப் போட்டுவிடச் சொன்னேன்".



மேற்கூறிய விதமான சமாதானத்தைப்பெற்ற வக்கில்சங்கத்தார் 1913 பிப்ரவரி 22-ல் ஆலோஜனைக் கூட்டம் கூடி சமாதானத்தில் சொல்லப்பட்ட சந்தர்ப்பங்களெல்லாம் வாஸ்தவமாகவே பாவித்தும் கடிதம் எழுதின வக்கிலுடைய நடத்தையானது வக்கில் உத்தியோக அந்தஸ்துக்குத் தகாத தப்பான நடத்தையாகுமென்று தீர்மானித்து அவர்பேரில் லட்டர்ஸ்பேடெண்டு ஆக்ட் 10-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்தி நீதிசெலுத்த வேண்டுமென்று ஹைகோர்ட்டாருக்குத் தெரிவித்துக் கொண்டதின்பேரில் ஷை விஷயமானது புல்பெஞ்சியில் ஈரங்கியாகி வக்கில் சமாதானத்தில் சொன்ன விஷயங்கள் எல்லாம் வாஸ்தவமாகவே பாவித்து பின்வருமாறு அபிப்பிராயங்கொடுத்தார்கள்:—

தாவா கடிதத்தை சந்தேக நிவர்த்திசெய்யும்பொருட்டு அதாவது தனக்கும் மாஜிஸ்டிரேட்டுக்கும் விரோதம் என்ற விஷயம் தப்பென்று தெரிவிக்கும்பொருட்டு எழுதியதாகவும் மற்றபடி கடிதத்தில் கண்டிருக்கிற விஷயங்களெல்லாம் தன்னைப் பற்றி சிலாக்கியப்படுத்திக்கொள்வதற்காகவும் தன்னுடைய வேலைத்திறமையை எடுத்துக்காட்டுவதற்காகவும் சொல்லப்பட்டதாக பாவித்தால் அவ்விதமாய் எழுதினது நல்ல முறையல்லவென்று மட்டும் அபிப்பிராயப்படலாமேயொழிய வக்கில் உத்தியோக அந்தஸ்துக்குத் தகாத தப்பு நடத்தையென்று நிதானிக்க நியாயமிராது. ஆனால் கடிதத்தின் வசனங்களைக் கவனித்தால்

கேஸை விஜாரித்துப் பைசல் செய்ய்போகிற மாஜிஸ்டிரேட்டுக்கும் கேஸை நடத்த உத்தேசிக்கிற வக்கிலுக்கும் மனத்தாங்கலிருப்பது மெய்யல்லவென்ற உறுதிமொழியைவிட இன்னும் அதிகமான கருத்தும் தற்பெருமையான சில வசனங்களுடன் கலந்திருப்பதாகத் தோன்றுகிறது. அந்தக்கடிதத்தை எழுதினவர் ப்ரைவேட் வக்கில் மாதுவய்யருடைய மனதில் தான் நியாயமல்லாத வழியாக மாஜிஸ்டிரேட்டாரை மனம் மாறச் செய்யக்கூடுமென்று விளக்கும்படி உத்தேசித்தாரென்றே தோன்றுகிறது. அவ்விதமாகத் தோன்றுமிடத்து கடிதம் எழுதினவர் தன் உத்தியோக அந்தஸ்துக்குத் தகாதபடி தப்பு நடத்தைக்குள்ளானாரென்பதில் சந்தேகமில்லை. ஆகவே கடிதம் எழுதினவக்கிலைக் குற்றப்படுத்தி இத்தகைய குற்றத்திற்கு எச்சரிக்கை செய்துவிட்டால் சரிப்போகாதென்று நினைத்து அந்த வக்கில் 3-மாதங்கள் மட்டும் ஸஸ்பெண்ட் செய்யப்படவேண்டுமென்று உத்தரவாச்சுது.

———:O:———

மதராஸ் ஹைகோர்ட் தீர்ப்பின்பேரில் செய்யபபட்ட

## பிரிவி கௌன்ஸில் தீர்மானம்,

ராஜாவெங்கட நரசிம்ம அப்பாராவ்

*Vs*

ராஜா பார்த்தசாரதி அப்பாராவ்

இ. பி. 1766ஹு-ல் ஹைதராபாத் நிஜாம் அவர்களுக்கும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையினால் நஸ்விட் எஸ்டேட்டானது பிரிட்டிஷ் ராஜாங்கத்திற்குள் சேர்க்கப்பட்டது. நஸ்விட் ஜமீன்தாரியை வெங்கடாத்திரி, நாரய்யா என்ற இரண்டு சகோதரர்கள் கூட்டாக அனுபவித்து வந்து 1769, 1770-ல் இருவரும் தனித்தனியாக ஒரு பாதியை ஜில்லா கலக்டரால் பிரித்துக்கொடுக்கப்பட்டு அனுபவித்து வந்ததில் 1771-ல் வெங்கடாத்திரி அப்பாராவ் என்ற ஒருவர் சந்ததியில்லாமல் காலஞ்சென்றமையால் முழுவதும் நாரய்யா அப்பாராவ் என்றவருடைய சுவாதீனத்தில் வந்து 1783-ல் ஷை யார் கவர்ன்மெண்டாருக்கு விரோதமாய் கலகம் செய்த காரணத்தால் அவர் ஜமீனை இழந்துபோகவே கவர்ன்மெண்டார் 1784-ல் ஷை யாருடைய மூத்தகுமாரனாகியவெங்கட நரசிம்ம அப்பாராய் என்றவருக்கு ஷை ஜமீனை கிராண்டாக அளித்தார்கள். ஜமீனை இழந்த நாரய்ய அப்பாராவ் அவர்களுடைய இளையதாரத்து மகனாகிய ராமசந்திர அப்பாராவ் என்ற மைனருடைய பாத்தியதையைப்பற்றி ஷை மைனரின் தாயார் வழக்காடினதில் 1795-ல் பிறந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஹிந்து லா முறைப்படிக்கு ஜமீன் எஸ்டேட்டை வெங்கட நரசிம்மாவும் ராமசந்திராவும் பாகித்துக்கொண்டார்கள். 1802-இல் ஸெட்டில்மெண்ட் ஏற்பாட்டில் மூத்தகுமாரனாகிய வெங்கடநரசிம்ம அப்பாராவ் என்றவருக்கு எஸ்டேட்டில் நிதடவோல் என்னும் பாகத்தையும் ராமசந்திர அப்பாராவ் என்றவருக்கு நஸ்விட் என்னும் பாகத்தையும் தனித்தனியான கிராண்டாக அளிக்கப்பட்டு ஜமீன் ஸன்னதும் கொடுக்கப்பட்டது. நாரய்யா என்றவருடைய இளையதாரத்தின் கனிஷ்டபுத்திரனும் ஷை ராமசந்திராவுக்கு இளைய சகோதரனுமாகிய நரசிம்மா ஒன்றவருக்கு யாதொரு கிராண்டும்பங்குவிகிதமும்ஏற்படாமலிருந்து 1816-ம் வருஷத்தில் அவர் தனக்கு மொத்த எஸ்டேட்டிலும் 3-ல் ஒருபாகம் கிடைக்கவேண்டுமென்று தாவா செய்ததில் தோல்வியடைந்தும் மற்ற இரண்டு ஜமீன்தார்களும் சேர்ந்து அவருக்கு வருஷந்தோறும் யாதொரு தொகை கொடுத்து விடுவதாய் ஒப்புக்கொண்டு செய்த ஏற்பாடானது பின்னால் மாறி அந்த வருஷாந்தர விகிதத்திற்குப்பதிலாக எஸ்டேட்டில் ஒரு பாகம் கிராண்டாகவே பிரித்துக்கொடுக்கப்பட்டது. ஆகவே நிதடவோல் ஜமீன்தார் வெங்கட நரசிம்மா என்றவரும், நஸ்விட் ஜமீன்தாராகிய ராமசந்திராவும், நரசிம்மா என்ற மூன்றாவது ஜமீன்தாரும் தனித்தனி கிராண்டுகளைப் பெற்று எஸ்டேட்டை அனுபவித்து வந்தார்கள். நிதடவோல் ஜமீன்தாருடைய குமாரன் நாரய்யா என்றவருக்கு பாபம்மாள் சின்னம்மாள் என்ற இரண்டுதாரங்களிருந்தும் அவர்களால் சந்ததி ஏற்படவில்லை. நஸ்விட் ஜமீன்தாருடைய புத்திரனுக்கு 6 குமாரர்கள் ஜனித்து அவர்களுக்குள் 1871-ல் பாக வியாஜ்ஜியம் நடந்து வெங்கட்ராமய்ய அப்பாராவ் என்ற 6-வது பேரப்பிள்ளை நஸ்விட்



ஜமீனில் 6 ல் ஒரு பாகத்திற்கு பாக டிக்கிரிபெற்று அதனால் கிடைத்த பாகமானது மேடேர் ஜமீன் என்ற பெயரிடப்பட்டு அந்த மேடேர் ஜமீனை வெங்கட்ராமய்யா அடைந்து அனுபவித்து வரும்பொழுது நிதடவோல் ஜமீன்தார் காலஞ்சென்றபின் ஷை-யார் எழுதிவைத்ததாக சொல்லப்பட்ட உயில் சாசனத்தில் கொடுக்கப்பட்ட அனுமதியின்படி பாப்பம்மாள், சின்னம்மாள் என்ற இரண்டு பெண்சாதிகளும் தங்களிஷ்டம்போல் அவசியமானபொழுது இருவருடைய சம்மதத்தின்பேரில் யாதொரு சமீப பந்துவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டியதாயிருக்க சின்னம்மாள் என்றவள் இறந்தபின் பாபம்மாள் ஜமீனை சுவாதீனப்படுத்திக்கொண்டு அனுபவித்துவந்து 1885-ல் ஷை மேடேர் ஜமீன்தாராகியவெங்கட்டராமய்யா என்றமைனரை ஸ்வீகாரம்எடுத்துக்கொண்டாள். வெங்கட்ராமய்யா, வெங்கயம்மாளென்ற ஸம்ஸாரத்தையும் அவளால் பிறந்த (சின்ன) நாரய்யா என்ற புத்திரனையும் விட்டுவிட்டு 1-88-ல் காலஞ்சென்றார். ஷை வெங்கட்ராமய்யாவின் மைனர் குமாரனுக்காக மேடேர் ஜமீன் எஸ்டேட்டானது கோர்ட் ஆப் உவார்ட்ஸினுடைய வசத்திலும் மானேஜ்மெண்டிலும் எடுத்துக்கொள்ளப்பட்டது. பாபம்மாள் வெங்கட்ராமய்யாவை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டது சட்டவிரோதமென்று நரசிம்மா என்ற மூன்றாவது ஜமீன் எஸ்டேட்தாருடைய பவுத்திரனாகிய வெங்கடாத்ரியென்றவர் ஆக்ஷேபித்தார். அதாவது வெங்கட்ராமய்யாவுடைய ஜனக தாய்தகப்பனல்லாத சிறியதாயார் ஷை யாரை ஸ்வீகாரமாகக் கொடுத்தது சாஸ்திர விரோதமென்று ஆக்ஷேபித்தார். பெரியநாரய்யா எழுதிவைத்த உயில் வாஸ்தவமென்று தீர்மானிக்கப்பட்டும் மேற்கூறிய ஆக்ஷேபனை நியாயமென்று ஏற்பட்டு வெங்கட்ராமய்யாவின் ஸ்வீகாரம் ரத்தாகிவிட்டது. அதன்மேல் பாபம்மாள் காலஞ்சென்ற வெங்கட்ராமய்யாவினுடைய மைனர் குமாரனாகிய சின்ன நாரய்யாவை ஸ்வீகாரமெடுத்துக் கொண்டாள். மேற்படி ஸ்வீகார பாத்தியதையால் நிதடவோல் ஜமீனும் மேடேர் ஜமீனும் ஒன்றாக ஷை மைனர் நாரய்யாவுக்குச் சொந்தமாகி 1895 ஆகஸ்டில் ஷை ஸ்வீகார புத்திரனாகிய நாரய்யாவும் விவாகமில்லாமல் காலஞ் சென்றமையால் ஸ்வீகாரத்தாயார் என்ற அந்தஸ்தினால் பாபம்மாள் ஷை ஸ்வீகார புத்திரனுடைய வாரிஸ்பாத்தியதையை அனுசரித்து இரண்டு ஜமீன்களுக்கும் ஸ்வதந்தரத்தை யடைந்தவளானாள். 1895 அக்டோபரில் காலஞ்சென்ற மைனர் நாரய்யாவினுடைய ஜனகதாயாரும் வெங்கட்ராமய்யாவினுடையபாரியாளுமாகிய வெங்கயம்மாள், தன்னுடைய மைனர் குமாரனை பாபம்மாள் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டது சட்டவிரோதமென்றும் அதாவது இரண்டு தாரங்களும் சேர்ந்து ஒருமனமாக சம்மதித்து அவசியமானால் யாதொருவனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமென்று உயிலில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்க சின்னம்மாள் இறந்தபின் பாபம்மாள் தனிமையாக அந்த அதிகாரத்தைச் செலுத்தி ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டது பிசகென்றும் ஆகவே ஷை மைனர் நாரய்யா இறந்தபின் ஷை யானுடைய வாரிஸ் பாத்தியதையை அனுசரித்து மேடேர் ஜமீன் தனக்குச் சுவாதீனமாக வேண்டுமென்றும் ஒருக்கால் ஸ்வீகாரம் சட்டவிரோதமல்லவென்று ஏற்பட்டபோதிலும் ஸ்வீகாரம் போன காரணத்தால் ஜனக வம்சத்தைச் சேர்ந்த மேடேர் ஜமீனில் அந்த ஸ்வீகார புத்திரனுக்கு சம்பந்தமும் பாத்தியதையும் நீங்கிவிட்டதாகச் சொல்லவேண்டுமென்றும் ஆகையால் பாபம்மாளுக்கு மேடேர் ஜமீனில் வாரிஸ் பாத்தியதை ஏற்பட நியாயமில்லையென்றும் சொல்லி மேடேர் ஜமீனைச் சுவாதீனப்படுத்திக்கொள்ளும்பொருட்டு பாபம்மாள் பேரிலும் ஷை ஜமீனை மானேஜ்மெண்டு செய்து வந்த கோர்ட் ஆப் உவார்ட்ஸ்யும் பிரதிவாதிகளாய்ச்சேர்த்து வியாஜ்யம் தொடுத்தாள். ஷை வியாஜ்ஜியம் நடைபெற்று வரும் காலத்தில் வெங்கயம்மாளென்ற வாதியும் காலஞ்சென்றமையால் அந்த வியாஜ்ஜியத்தை மேல் நடத்தும்பொருட்டு நஸ்விட் ஜமீன்தாராகிய ராமசந்திர அப்பாராவ் என்றவருடைய ஆறு பேரப்பிள்ளைகளில் பாகப்பிரிவினையால் மேடேர் ஜமீனை அடைந்த வெங்கட்ராமய்யாவைத் தவிர்த்த மற்ற ஐவரில் இளமையில் சந்ததியில்லாமல் காலஞ்சென்ற மூவர்போக நஸ்விட் ஜமீனை அனுபவித்து வருகிற ரங்கய்யா, நரசிம்மா என்ற இருவரும் வெங்கயம்மாளுடைய வாரிஸ்களாக ரிகார்டில் கொண்டுவரப்பட்டு அவ்விருவரும் வெங்கயம்மாள் தொடுத்த வியாஜ்ஜியத்தை

மேல் நடத்தி மேடூர் ஜமீனைசுவாதீனப்படுத்திகொள்ளும்பொருட்டு வியவகாரமாடினார்கள். கிருஷ்ணா சப்கோர்ட்டார் தீர்மானத்தில் நாரய்யாவினுடைய ஸ்வீகாரம் சட்டவிரோத மல்லவென்று ஏற்பட்டபடியால் அந்தத் தீர்மானத்தின்பேரில் வாரிஸ் வாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யும் சமயத்தில் பாபம்மாள் காலஞ்சென்றமையால் ஷெ யாளுக்கு வாரிஸாக நிடவோல் ஜமீன்தாராகிய வெங்கடநரசிம்மாவின் இளைய தாயாருடைய இரண்டு புத்திரர்களில் நஸ்விட் ஜமீனையடைந்த ராமசந்திராவின் கனிஷ்ட சகோதரரான நரசிம்மா அப்பாராவ் என்றவரின் பவுத்திரனாகிய பார்த்தசாரதி அப்பாராவ் என்றவரை அப்பீல் பிரதிவாதியாக ரிகார்டில் சேர்க்கப்பட்டது.

ஷெ பார்த்தசாரதி அப்பாராவ் என்றவரோ, கோதாவரி ஜில்லா கோர்ட்டில் பாபம்மாள் இறந்தபின் ஸ்வீகார புத்திரனாகிய சின்ன நாரய்யாவுக்கு தானும் ரங்கய்யா, நரசிம்மா என்ற, ராமசந்திராவின் பேரப்பிள்ளைகளும் அனந்தர வாரிஸ்களாகிறபடியால் ஷெ ஸ்வீகாரபுத்திரனுக்கு பாத்தியமாயிருந்த நிடவோல், மேடூர் ஜமீன்களிரண்டிலும் தனக்கு 3-இல் ஒரு பாகமுண்டென்று சொல்லி ரங்கய்யா, நரசிம்மா என்ற இருவரையும் பிரதிவாதிகளாய்ச் சேர்த்து பாக வியாஜ்ஜியம் செய்தார். ரங்கய்யா என்ற பிரதிவாதி ஆன்ஸரில் நிடவோல் ஜமீனில் மேடூர் ஜமீன் ஐக்கியமானது வாஸ்தவமென்றும் ஆனால் ஷெ ஜமீன் பாகப்பிரிவினைக்கு லாயக்கல்லவென்றும் ஜமீன் சமஸ்தானத்திற்கு தலைமையான வாரிஸ்தார் அதிபதியாக நியாயமுண்டென்றும் தான் ஜ்யேஷ்டனாயிருப்பதால் அந்த ஜமீனைத்தான் அடைந்து அனுபவிக்க பாத்தியமுண்டென்று வாதம செய்தார். தவிர அந்த வாதம் ஏற்றுக்கொள்ளத் தகாதபோதிலும் இரண்டு பிரதிவாதிகளுக்கும் பொதுவான எதிர். ஆன்ஸராக சின்ன நாரய்யாவை பாபம்மாள் ஸ்வீகாரம் எடுத்தது செல்லத்தகாதென்றும் ஆகையால் மேடூர் ஜமீனில் பார்த்தசாரதி அப்பாராவ் அவர்களுக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும் அதைத் தாங்களிருவரும் வெங்கயம்மாள் இறந்தபின் சமபாகமாய் பாகித்துக்கொள்ளபாத்தியமுண்டென்றும் வாதித்தார்கள். கோதாவரி ஜில்லா கோர்ட்டார் பெரிய நாரய்யாவினுடைய உயில் சிருஷ்டனையானதென்றும் 23 மதராஸ் 1-இன் 8-வது பக்கத்தில் ஏற்பட்டிருக்கிற ஹிந்து லா தீர்மானத்தின்படி இரண்டு பத்தினிகளுக்கும் ஜாயிண்டாக ஒரு பய்யனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி அதிகாரம் கொடுக்கக்கூடாதென்றும் தீர்மானித்து மேடூர் ஜமீனில் பார்த்தசாரதிக்கு பாத்தியம் கிடையாதென்றும் பிரதிவாதிகளுக்கனுகூலமாகவும் நிடவோல் ஜமீனைப் பற்றினமட்டில் அது பாகப் பிரிவினைக்கு லாயக்குளளதென்றும் அந்த ஜமீன் சமஸ்தான ராஜ்ஜியம் அல்லவென்றும் தீர்மானித்து அந்த ஜமீனில் வாதி பார்த்தசாரதிக்கு 3-ல் ஒருபாகமுண்டென்றும் தீர்மானித்தார்கள். மேற்படி சப்கோர்ட் தீர்ப்பின் பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் பெண்டிங்காயிருந்த பொழுது கோதாவரி ஜில்லா கோர்ட் தீர்மானத்தின்பேரில் இருதரப்பாரும் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். ஆகவே ஹைகோர்ட்டில் எல்லா அப்பீல்களும் ஒரே காலத்தில் ஈரங்கியாகி 1905 நவமபர் 20-ல் ஏற்பட்ட தீர்மானமாவது:— ரங்கய்ய அப்பாராவ் என்பவருடைய கக்ஷியானது சரியல்லவென்றும் அதாவது நிடவோல் ஜமீன் பாகப் பிரிவினைக்கு லாயக்கல்லாத சமஸ்தான ராஜ்ஜியமல்லவென்றும் பெரிய நாரய்யாவின் உயில் சாஸனம் சிருஷ்டனையல்லவென்றும் பாபம்மாள் உயிலில் கண்ட அதிகாரத்தை அனுசரித்துத் தனிமையாக சின்ன நாரய்யாவை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டது சட்டவிரோத மல்லவென்றும், தவிர சின்ன நாரய்யாவுக்கு மேடூர் ஜமீன் விஷயமாய் சமபாகஸ்தர்கள் யாருமில்லாதபடியால் ஜனக சொத்துடன் ஸ்வீகார சொத்தும் ஒன்றாகவே ஷெ சின்ன நாரய்யாவுக்குச் சென்றமையால் சின்ன நாரய்யா இறந்தபின் பாபம்மாள் இரண்டு ஜமீனுக்கும் பாத்தியமுடையவளாகிறபடியால் அவளுக்குப்பின் அனந்தர வார்ஸ்களாகிய பார்த்தசாரதிக்கும் ரங்கய்யாவுக்கும், நரசிம்மாவுக்கும், இரண்டு ஜமீன்களிலும் சமபாகமுண்டென்று சொல்லி பார்த்தசாரதி அப்பாராவ் அவர்கள் கோரியபடி அவருக்கு இரண்டுஜமீனிலும் 3-ல் ஒரு பாகத்திற்கு டிக்கிரீயளித்தார்கள். ஆகவே மதராஸ் ஹைகோர்ட்டார் கிருஷ்ணா சப்கோர்ட் தீர்மானத்தைக் காயப்படுத்தி கோதாவரி ஜில்லா கோர்ட் தீர்மானத்தை மாற்றி ஸ்வீகாரம் சரியானதென்றும்



மேடூர் ஜமீனிலும் பார்த்தசாரதிக்குப் பங்கு விகிதமுண்டென்றும் தீர்மானித்தார்கள். ராமசந்திராவின் பவுத்திரர்களாகிய ரங்கய்யாவும் நரசிம்மாவும் இரண்டு வழக்குகளிலும் தோல்வியடைந்து பிரிவி கௌன்ஸிலுக்குத் தனித்தனியாக அப்பீல் செய்தார்கள். ரங்கய்யாவின் அப்பீல் வாதத்தில் ஜமீன்கள் பாகப்பிரிவினைக்கு லாயக்குள்ளவைகளென்று முக்கியமாய் எடுத்துப் பேசப்பட்டது. மற்ற அப்பீலில் ஸ்வீகாரம் செல்லத்தக்க தல்லவென்று முக்கியமாக வாதிக்கப்பட்டது. இரண்டு அப்பீல்களும் ஒன்றாய் ஈரங்கியாகி முதல் பாயிண்டானது 1913 ஜுலை 24-ல் தீர்மானிக்கப்பட்டு ரங்கய்ய அப்பாராவ் என்றவர் செய்த அப்பீல் வாதம் அங்கீகரிக்கப்படாமல் நிடவோல் ஜமீன் பாகப்பிரிவினைக்கு யோக்கியமானதென்று ஏற்பட்டது தாவா ஜமீன் ஜேஷ்ட புத்திரனுடைய அனுபோகத்திலும் சுவாதீனத்திலுமிருக்கத்தக்க சம்பிரதாயமானது ருஜுவாகவில்லை என்று இரண்டு கீழ்கோர்ட்டாரும் அபிப்பிராயப்பட்டிருக்க அது லா பாயிண்டல்லாத ருஜு அம்சத்தைப்பற்றிய தீர்மானமாதலால், 1836-ம் வருஷமுதல் பிரிவிகௌன்ஸிலார் ருஜுபாயிண்டு விஷயமாய், இரண்டு கீழ்கோர்ட்டாருடைய ஒற்றுமையான அபிப்பிராயத்தை பிரிவிகௌன்ஸிலார் மாற்றும்படியோஜிக்கிற வழக்கமே கிடையாதென்றகாரணத்தையிட்டு முதல் பாயிண்டைப்பற்றி அப்பீல் வாதிக்கு விரோதம் செய்தார்கள். 1913 நவம்பர் 4-ல் பாபம்மாள் சின்ன நாரய்யாவை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டது செல்லுமா செல்லாதா என்ற 2-வது பாயிண்டைப்பற்றி ஈரங்கிகேட்ட பிரிவி கௌன்ஸிலார் மதராஸ் ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயம் பிசகென்று ஸ்வீகாரத்தை ரத்துசெய்த தீர்ப்பில் சொன்ன காரணச் சுருக்கமாவது:—

சின்ன நாரய்யாவை பாபம்மாள் ஸ்வீகாரம் செய்துகொண்டது செல்லத்தக்க நடவடிக்கையாக ஏற்பட்டு உயில் எழுதிவைத்த பெரிய நாரய்யாவுக்கு அவர் தத்துபுத்திரனாக பாவிக்கப்பட்டால் ஸ்வீகார புத்திரனுடைய ஜனகவம்சத்தைச்சேர்ந்த மேடூர் ஜமீனில் ஷெ யாருக்கு ஹக்குபாத்தியதை நீங்கிப்போய் விட்டதாகவும் யூகிக்கலாம். அப்படியானால் ரங்கய்யாவுக்கும் வெங்கட நரசிம்மாவுக்கும் வெங்கயம்மாளுடைய ஜீவியகாலத்திற்குப் பிறகு மேடூர் ஜமீன் சேரவேண்டியதாகும். ஸ்வீகாரம் செல்லத்தகாதென்று ஏற்பட்டாலும் காலஞ்சென்ற சின்ன நாரய்யாவின் வாரிஸாகிய ஷெ யாரின் தாயார் வெங்கயம்மாளுக்குப் பிறகு மேடூர் ஜமீன் ஷெ ரங்கய்யாவுக்கும் வெங்கட நரசிம்மாவுக்கும் சேரவேண்டியதாகும். அதாவது பார்த்தசாரதி என்றவருக்கு மேடூர் ஜமீனில் பாகம் ஏற்பட நியாயமில்லை. ஸ்வீகாரம் நிலைத்து ஆனால் சின்ன நாரய்யாவுக்கு ஜனக வம்சத்தில் அவிபக்த சகோதரர்கள் யாருமில்லாத காரணத்தால் மதராஸ் ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி மேடூர் ஜமீனிலுள்ள பாத்தியதையும் ஸ்வீகார சொத்துடன் சேர்ந்து இரண்டு ஜமீன்களும் சின்ன நாரய்யாவிடம் ஐக்கியமாயிருந்தால் அந்த சந்தர்ப்பத்தில் மூவருக்கும் இரண்டுஜமீன்களிலும் பாகம் ஏற்பட நியாயமாகும். ஆகவே முக்கியமாக ஸ்வீகாரம் செல்லுமாவென்றுகவனிக்கவேண்டியது முதலாவது பாயிண்டாகும். ஏனெனில் ஸ்வீகாரம் செல்லத்தகாதென்று ஏற்பட்டால் மேடூர் ஜமீனில் ஸ்வீகார புத்திரனுக்கு ஹக்கு விலகிப்போச்சுதா அல்லவாவென்ற விஷயத்தைப்பற்றி தீர்மானிக்க வேண்டியதில்லை.

பெரிய நாரய்யா இறந்தபிறகு பாபம்மாள்ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டது வாஸ்தவம். அந்த ஸ்வீகாரம் உயிலில் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தை அனுசரித்து எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்பீல் வாதிகளோ உயிலில் இரண்டு பெண்சாதிகளுக்கும் பொதுவாய் ஸ்வீகார அதிகாரம் கொடுத்தது சட்டவிரோதமென்றும் அவ்வித அதிகாரம் சட்டவிரோத மல்லவென்று சொன்னாலும் அவ்வித அதிகாரத்தின் கருத்துப்படி ஸ்வீகாரம் எடுக்கப்படாத படியால் அவ்வித ஸ்வீகாரம் பயனற்றதாகுமென்று ஆக்ஷேபிக்கிறார்கள். ஸ்வீகார விஷயமாய் உயிலில் கண்டிருக்கிற வசனங்களாவன:— "நம்முடைய சமஸ்தானம் நீடித்து வழங்கிவர வேண்டுமென்று (சின்னம்மாள், பாபம்மாள், என்ற என் மனைவிகளாகிய) உங்களுக்கு எப்பொழுதாவது தோற்றுமிடத்து நெருங்கிய பந்துவாகிய ஒரு பய்யனை நீங்கள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவேண்டும். எல்லா விஷயங்களிலும் நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் சச்சரவில்லாமல் நடந்

துகொள்ளவேண்டும். இந்த உயிலில் கண்ட விஷயமாய் இன்று கலக்டருக்கு விண்ணப்பம் எழுதி கையொப்பம் செய்தனுப்பியிருக்கிறேன். மேற்கூறிய பத்ததிப்படிக்கு நீங்களிருவரும் தவறாமல் நடக்கவேண்டும்'' என்று எழுதப்பட்டு அதனடியில் இரண்டு பத்னிகளும் அதில் கண்டவிதமாய் நடப்பதாக ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்துமிருக்கிறார்கள். உயில் சாஸனம் 1864-ல் எழுதப்பட்டது. அதே காலத்தில் பெரிய நாரய்யா காலஞ்சென்றுவிட்டார் 1881-ல் சின்னம்மாள் மறித்தாள். 1885-ல் பாபம்மாள் முதல் ஸ்வீகாரம் எடுக்க உத்தேசித்து சின்ன நாரய்யாவின் தகப்பனை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். அந்த ஸ்வீகாரம் கோர்ட்டாரால் ரத்தானபிறகு, 1890-ல் பாபம்மாள் சின்ன நாரய்யாவை ஸ்வீகாரம் செய்துகொண்டிருக்கிறாள். ஒருதாரம் மட்டும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளசாத்தியப்படு மாதலால் இருவரும் சேர்ந்து ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள அதிகாரம்கொடுப்பது சட்டவிரோதமென்று அப்படி இருவருக்குமசேர்த்து அதிகாரம் கொடுக்கலாமென்றும் இருவரும் சேர்ந்து ஸ்வீகாரம் எடுக்கவேண்டிய தவசியமென்று தீர்மானித்தால் ஒருவர் மட்டும் ஸ்வீகாரக்கிரியைகளை நடத்தினபோதிலும் அந்த நடவடிக்கை இருவருடைய பொதுவான, கூட்டான நடவடிக்கையென்று சொல்லத்தகுமென்று ஏற்றுக்கொண்டால் இருவருடைய நடத்தையாக பாவிக்கத்தகாதபடி ஒருவர் இறந்தபின் மற்றொரு பாரியாள் தன் ஸ்வய இச்சையாக ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் வண்ணமாய் உயிலின் அதிகாரத்தை யூகித்து நடத்தக்கூடாதென்றும் வாதிக்கப்படுகிறது. ஏனெனில் உயிலில் கண்டபடி இருவருடைய ஒற்றுமை, ஜாயிண்டான நடவடிக்கை என்ற அம்சங்களைப் பிரயோகிக்க இடமில்லாமற் போய் விடுகிறதென்று சொல்லப்படுகிறது. இவ்வித ஆக்ஷேபணைக்கு எதிரிகளின் சமாதானம் தெளிவாய்த் துலங்கவில்லை. இருவரும் ஜீவனோடிருந்தால் இருவருடைய சம்மதமன்னியில் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாதென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் விருப்பத்தையும இன்னாரை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வதென்ற விஷயத்தையும் பற்றி இருவரும் ஒற்றுமையாயிருந்தால் ஸ்வீகாரத்தை ஒருவர்மட்டும் எடுத்துக்கொள்ளத் தகுமென்றும் அதிலும் முதல்தாரம் அவ்விதமாய் எடுத்துக்கொள்ளப் பாத்திரமாவாளென்றும் சொல்லப்பட்டு அதனால் மூத்த தாரமே ஸ்வீகாரப்பயனுக்கு சட்டப்படி தாய் முறையில் வந்துவிடுகிறாளென்றும் ஆகவே ஹிந்துலாப்படி இருவருக்கும் பொதுவான (கூட்டான) அதிகாரம் கொடுக்கலாமென்றும், மேற்கூறிய கருத்தின்படி அந்த இரட்டியான அதிகாரத்தை யூகிக்கவேண்டுமென்றும் அப்படியிருக்க ஒருவர் இறந்துபோகும் பட்சத்தில் அதிகாரமானது மற்றொருவருக்குள் பரிபூரணமாய்ச் சென்றுவிடுகிறதென்றும் எதிர்வாதம் செய்யப்படுகிறது.

ஒரு விதவையானவள் பர்த்தாவின் ஜீவியகாலத்தில் கொடுத்த ஸ்பஷ்டமான அதிகாரம் அல்லது மரணசாஸனத்தில் கொடுத்த அதிகாரம் அன்னியில் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாதென்பதில் சந்தேகமில்லை. ஸ்வீகாரதாயென்னும் பதவிக்கு லாயக்காகும்படி ஒரு குழந்தையை ஒருமனைவிமட்டும் ஸ்வீகாரப்புத்திரனாக அடையக்கூடுமென்பதிலும் சந்தேகமில்லை. சட்டப்படிக்கு ஸ்வீகாரத்தாய் ஜனகதாயாருக்குச்சமானநிலைமைக்கு வந்து அவளுடைய பெற்றோருக்கு ஸ்வீகாரபுத்திரன் தாய் வழிப்பேரன் முறையில் வந்து விடுகிறான். அவ்வித பந்துத்வமானது இரண்டு தாரங்களும் சேர்ந்து எடுத்துக்கொள்ளும் ஸ்வீகாரபுத்திரனுக்கு ஏற்படாது. ஏனெனில் ஸ்வீகார புத்திரன் இரண்டு வெவ்வேறான தாய்வழிப்பாட்டனுக்கும் பாட்டியாருக்கும் பவுத்திரனாகிற அசந்தர்ப்ப நிலைமைக்கு வர இடமாகிறது. அதனால தாய்வழியில் பாட்டன்மாருக்கு வரிசைக்கிரமத்தில் வாரிஸ் நிலைமைக்கு லாயக்காகிற பேரனுடைய பாத்தியதையை நிதானிப்பதற்கு அதிக கஷ்டமும் மனக்குழப்பமும் நேரிடும். ஆகையால் ஸ்வீகாரத்தாயார் ஒருவராகவே ஏற்படுவது உசிதமாகும். அதனால் இருவருக்கும் ஜாயிண்டாகக் கொடுக்கிற அதிகாரம் சட்டவிரோதமென்று ஏற்பட அவசியமில்லை. தர்க்க நியாயத்திற்கிசையாத விஷயங்களை ஆசார ஒழுக்கங்களால் தீர்மானிக்கலாம். என்றாலும் ஜாயிண்டாக இரண்டு தாரங்களுக்கு ஸ்வீகார அதிகாரம் கொடுத்தால் அது செல்லுமா செல்லாதா என்ற விஷயத்தை



ப்பற்றி அபிப்பிராயம் கொடுப்பதற்குப் போதுமான தகவல்கள் இந்தக்கேசின் ரிகார்டுகளில் ஏற்படவில்லை. அந்த பாயிண்டானது ஹிந்துலாவைப் பற்றிய முக்கியமான அம்சமாகும். ஆகவே அதைப்பற்றி முடிவான அபிப்பிராயத்தீர்மானம் யாதொன்றும் கொடுக்காமல் இருவருக்கும் அதிகாரம் கொடுக்கலாமென்றும் அவ்வித அதிகாரத்தைக்கொண்டு இருவரும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமென்றும பாவித்துக்கொண்டாலும தாவா கேஸில் இருவரில் ஒருவர்காலஞ்சென்ற பிறகு மற்றொருவர் தன்னிச்சையாய் யாதொரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாதென்று அபிப்பிராயங்கொடுக்கத்தகும். இருவரும் சேர்ந்து யோஜித்து அவசியமென்று சம்மதப்பட்டால் மட்டும ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள உயிலில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பையனையும இருவரும் சம்மதித்துத்தெரிந்தெடுத்திருக்கவேண்டும். மூலபுருஷன் தன்னுடைய சடங்காசாரங்களை நடத்திவரும் அவசியத்திற்காக ஸ்வீகார அதிகாரம் கொடுத்ததாகச் சொல்ல நியாயமில்லை. தனக்கு ஸ்வீகாரத்தால் ஒரு புத்திரன் ஏற்பட்டு தன்னுடைய வைதீகக்கிரியைகளை நடத்திவர உத்தேசித்திருந்தால், இருவருக்கும் ஜாயிண்டாகக்கொடுக்கப்பட்ட அதிகாரத்தை ஒருவர் மறித்தபின் மற்றொருவர் செலுத்திமுடிக்க சாத்தியப்படாமல போகும் அசந்தர்ப்பமானது, சாஸன கர்த்தாவின் கருத்துக்கிடையூறாகக்கூடாதென்று வாதிக்கப்படுகிறது. அந்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மரணசாஸன கர்த்தாவின் நோக்கத்தைக் கோர்ட்டார் யூகித்தறியவேண்டியதவசியம்தான். அந்தக்கருத்தை அறிய உயிலின் வசனங்களை மட்டும் கவனித்தால் போதாது. இதரமான சந்தர்ப்பங்களையும் கலந்து யோஜித்துப்பார்க்கவேண்டும். கர்த்தாவின் ஐவேஜுகளையும், பந்துக்களின் பாவங்களையும் ஷியார் பிரயோகிக்கும் வழக்கமான வசனங்களின் அர்த்தபாவத்தையும் இன்னும் இதரமான பற்பல விஷயங்களையும் யோஜித்துப் பார்க்கவேண்டும். அதாவது கோர்ட்டார் உயில் எழுதுகிறவனுடைய ஸ்தானத்திலிருப்பதாக எண்ணிக்கொண்டு அவனுடைய கருத்தை இன்னவிதமென்று கண்டறியவேண்டியதாகும். அவ்வித சந்தர்ப்பங்களில் ஜாதி மதாசார அபிப்பிராயங்களும் கவனிக்கத்தக்கதாகும். அவ்வித ஜாதி மதாசார விதிகளைப்பற்றி சாஸன கர்த்தாவின் மனம் யாதொரு விதமான பாவத்தை அடைந்திருக்குமென்று கோர்ட்டார் யூகித்துப் பார்க்கவேண்டும். உயிலின் வசனம் அர்த்தமான பிறகு கர்த்தாவின் கருத்தைக்கண்டறியவேண்டும். கர்த்தா உயில் சாஸனத்தால் செய்திருக்கிற விநியோகங்களுக்குமேல் அதிகமாக கோர்ட்டார் கூட்ட நியாயமில்லை. சாஸனத்தில் சட்ட நியாயத்திற்கு விபரீதமான முறைகள் குறிக்கப்பட்டிருந்தால் கோர்ட்டார் அவைகளை அவமதிக்கலாம். யாதொரு சம்பவத்தை முன்னோக்காமல் உயிலில் விட்டுப்போன அம்சத்தைக் கோர்ட்டார் பூர்த்தி செய்யக்கூடாது. அப்படி விட்டுப்போன சந்தர்ப்பத்தில் சொத்து பாத்தியதையானது லாப்படிக்குள்ள வாரிஸுக்குச் செல்லுமேயொழிய வேறு விதமாக விநியோகப்படுத்த இடங்கொடுக்கத்தகாது. ஆனால் உயிலின் அம்சத்தில் அவசியமாய் ஏற்படவேண்டிய விஷயங்களைப் பற்றி உயிலில் எழுதப்படாத பட்சத்தில் கோர்ட்டார் அதை உயிலோடு சேர்ப்பிக்கிறதில்லை. ஸர்வமதஸ்தர்களும் சகல விதமான நிலைமையிலுள்ளவர்களும் எழுதிவைக்கிற உயில் சாஸனத்தை அர்த்தப்படுத்தும் கோர்ட்டாருடைய கடமை ஒரே விதம்தான். இங்கிலீஷ் சட்ட முறையில் உயிலின் வசனங்களை அர்த்தப்படுத்தி அதுபோலவே தீர்மானம் கொடுக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பதத்திற்குப் பற்பல அர்த்தங்கள் ஏற்படலாமென்று கோர்ட்டாருக்குத் தோன்றினாலொழிய அந்தப்பதத்திற்கு ஒரே குறித்த அர்த்தம் தான் கொடுக்கப்படுகிறது. இந்தியாவில் உயில் எழுதுகிறவர்களுக்கு சரியான வசனங்களை உபயோகப்படுத்த அனுபோகமில்லாதவர்களநேகருண்டு. ஆகையால் இந்தியாவிலுள்ள உயிலை எழுதுகிறவர்களின் கருத்தை உயிலின் வசனங்களைத் தவிர்த்து இதரசந்தர்ப்பங்களையும கவனித்து அபிப்பிராயம் அடையத்தகும். உயிலில் சில வசனங்கள் விட்டுப்போச்சுதென்று சொல்லி அவ்வசனங்களிருந்ததாக பாவிக்கும்படி கோரிக்கொண்டால் கோர்ட்டார் அதற்கு இடங் கொடுக்கக்கூடாது. எழுதியிருக்கிறவனுடைய கருத்தை அறியவேண்டுமானால், விட்டுப்போனதாக யாதொரு வசனங்க

ளையும் சேர்க்கக்கூடாது. உபயோகப்படுத்தியிருக்கிற வசனங்களின் கருத்தைக் கொண்டே எழுதினவனுடைய உட்கருத்தை யூகிக்கவேண்டும். தாவா உயிலில் சமீப பந்துவாகிய ஒரு பய்யனை உங்களுக்கு "சமஸ்தானம் நீடித்து நடைபெறவேணுமென்று தோன்றினால் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமென்று" கண்டிருக்கிறது. வழக்கமாய் ஸ்வீகாரத்தால் சொத்து பாத்தியதையை ஏற்படுகிறதும் தவிர மத ஸம்பந்தமான சிரார்த்தபிண்டங்களும் ஸ்வீகார புத்திரனால் ஸ்வீகார வம்சத்தைச் சேர்ந்த பித்ருக்களுக்கு ஏற்படுகிறது. இவ்விருவிதமான பாத்தியதையானது ஸ்வீகாரத் தாய்க்குப்பின், மூலபுருஷன் உயில் எழுதிவைக்காவிடில் ஏற்படுகிற அனந்தர வார்சுகளுக்குச் செல்லாமல் ஸ்வீகார புத்திரனுடைய வாரிஸ்களுக்குச் செல்லுகிறது. இந்தகேஸில் சாஸன கர்த்தா தன்னுடைய சிரார்த்த கிரியைகளைச் செய்யவேண்டிய கருத்துடன் ஸ்வீகார அதிகாரம் கொடுத்ததாக யூகிக்கவேண்டுமென்று வாதிக்கப்படுகிறது. அவ்வித கருத்திருந்ததாக உயிலின் வசனங்களால் துலங்கவேயில்லை. லௌகீகமான எண்ணத்தை உடைத்தாயிருந்ததாகவே சொல்லவேண்டும். கட்டாயம் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. தனக்கு சடங்கு நடக்கவேண்டுமென்று விரும்பியிருந்தால் அப்படியே கட்டளையிட்டிருக்கலாமே. பத்னிகளுடைய இஷ்டத்தைப் பொருத்ததாய் ஸ்வீகார அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுககு இஷ்டமில்லாவிடில் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் அவசியமே உயிலினால் ஏற்படாது.

தவிர உயிலில் எழுதப்பட்ட தேதியிலேயே ஜில்லா கலெக்டருக்கும் ஒரு விண்ணப்பம் எழுதியனுப்பப்பட்டிருக்கிறது. உயிலில் கண்ட வார்த்தைகளையே அந்த மனுவிலும் திரும்பிச் சொல்லியிருக்கிறது. அதாவது சமஸ்தானம் தொடர்ந்து நடைபெறவேணுமென்று என் இரண்டு மனைவிகளுக்கும் விருப்பமுண்டானால் அவர்கள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமென்று கண்டெழுதியிருக்கிறது. அதனால் மூலபுருஷன் தனக்கு அவசியமாய் ஸ்வீகார புத்திரன் ஏற்படவேண்டுமென்று எண்ணியிருந்ததாகச் சொல்ல நியாயமாகாது. தனக்குப்பின்னும் தன் தாரங்களுக்குப்பின்னும் சட்டப்படிக்கு தன் தாயாதிகள் அல்லது வேறு எவராகிலும் நிதடவோல் ஜமீனை அடையக்கூடாதென்று எண்ணியிருந்தால் கட்டாயம் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டிருக்கக் கூடும். அவ்வித எண்ணமிருந்தால் உயிலில் கண்டவிதமாக அதிகார வசனங்கள் ஏற்பட்டிராது. இருவர் சம்மதத்தை அனுசரித்த அதிகாரம் ஏற்பட்டிராது. உயில் சாஸனத்தில் இரண்டு பெண்சாதிகளும் தாங்கள் யுக்தப்படி நடப்பதாயும் சொல்லி இருவரும் கலந்து இஷ்டம்போல் எல்லா விஷயங்களிலும் நடந்துகொள்வதாக ஒப்புக்கொண்டு கையொப்பமும் செய்திருக்கிறார்கள். மூலபுருஷன் 1864-ல் இறந்து, 1881ல் சின்னம்மாளும் இறந்து, 1885 வரையில் ஸ்வீகாரவிஷயமான யோஜனையே ஏற்படாதபடியால் ஸ்வீகாரமெடுக்கத் தங்கள் இஷ்டத்தைப்பொருத்ததாகுமென்று நம்பி இருவரும் உயிலில் கையொப்பம் செய்திருக்கிறார்களென்று சொல்லவேண்டும். ஆகையால் இருவரும் ஜாயிண்டாக உயிலினால் ஸ்வீகாரம் எடுக்க அதிகாரம் பெற்றிருக்க இருவருடைய சம்மதத்தையும் அபிப்பிராயத்தையும் அனுசரித்தே ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவேண்டியதாகும். ஆகையால் இருவரில் ஒருவர் மரித்தபின் அந்த ஸ்வீகார அதிகாரம் நீங்கிவிடுகிறதாகும். இதற்கு இங்கிலீஷ் லா முறையும் அவசியமில்லை. இங்கிலீஷ் தீர்மானங்களும் தேவையில்லை. ஜாயிண்டான அதிகாரத்தின் தன்மையே இவ்வித முடிவடையத்தகும். A, B என்ற இருவருக்கும் கூட்டாக ஒரு காரியத்தை முடிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தால் A இறந்தபின் B அந்த அதிகாரத்தின்படி நடக்கத்தகாது. A-யினிடமிருந்து B யாதொரு அதிகாரமும் பெறவில்லை. தவிர இருவரும் சேர்ந்து சம்மதித்து முடிக்கவேண்டிய காரியமானது ஒருவரால் முடிக்கத்தகாது. இரண்டு பேர்வழிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படுவதற்கு பதிலாக, இரண்டு உத்தியோகத்தை வகித்து வருகிறவர்களுக்கு ஜாயிண்டாக அதிகாரம் கொடுத்தால் அதாவது ஒரு தர்மத்தை நடத்திவரும் பலருக்கும் பொதுவான அதிகாரம் ஏற்பட்டிருந்தால் ஒருவர் மரித்தபோதிலும் தர்மத்தை நடத்திவரும் மற்றவர்கள் அந்த அதிகாரத்தைச் செலுத்தி யாதொரு நடவடிக்கை நடத்தலாம். அது வேறு விஷயமாகும்.



அதிக சுருக்கமாகச் சொல்லுமிடத்து உயில் சாஸனத்தில் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவேண்டிய காலத்தைக் குறிக்காதபடியால் இருவரில் ஒருவர் இறந்த பின் மற்றொருவர் எடுக்கும் ஸ்வீகாரத்தைக் கோர்ட்டார் அங்கீகரித்தால் உயிலில் ஏற்படாத கால தாமதத்திற்குக் கோர்ட்டார் இடமுண்டாக்கினது போலாகும். அதாவது உயிலின் அம்சத்தைக் கோர்ட்டார் விருத்தி செய்த விதமாகும். கோர்ட்டாருக்கு அவ்வித அதிகாரம் கிடையாது. ஆகையால் சின்னம்மாள் இறந்தபின் பாபம்மாள் சின்ன நாரய்யாவை ஸ்வீகாரம் எடுக்க அதிகாரமில்லையென்று அபிப்பிராயப்பட்டு மேற்கண்டவிதமாய் மேடூர் ஜமீன் அப்பீல் வாதிகளாகிய ரங்கய்யாவின் புத்திரனுக்கும் வெங்கடநரசிம்மாவின் புத்திரர்களுக்கும் சமபாகமாகப் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டியதென்றும் அதில் பார்த்தசாரதி அப்பாராவ் அவர்களுக்குயாதொருபாத்தியதையும் கிடையாதென்றும் தீர்மானிக்கப்பட்டு நிதடவோல் ஜமீனில் மூவருக்கும் பாகமுண்டென்று ஏற்பட்டது. அதனால் நிதடவோல் ஜமீனில் பார்த்தசாரதிக்கு 3-ல் ஒரு பாகம் கிடைத்தது.

## மேற்கூறிய ஸ்வீகார வழக்கில்

### வம்சாவளி விபரமாவது




———:o:———

### ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

### மதராஸ்.

**C. R. P. 354 of 1913–24 பிப்ரவரி 1914**

**P. ராமஸாமி நாயுடு Vs வெங்கட்ராமாஞ்சுலு நாயுடு.**

1897 ஜூன் 14-ல் ராமஸாமி நாயுடு வென்ற பிரதிவாதி வாதியின் நிலத்தைக் குத்தகைத்தீர்வைக்கு ஒப்புக்கொண்டு அதில் வீடுகட்டிக்கொண்டு அனுபவித்துவருவதாக எழுதிக்கொடுத்த எக்ரீமெண்ட் பிரகாரம் அந்த தேதிமுதல் 15-வருஷகாலம் பிரதிவாதி ஷை நிலத்தின் சுவாதீனத்திலிருக்கலாமென்றும் அதற்குப்பின் வாதிக்கு நிலம் தேவையானால் வாதி கட்டியிருக்கும் வீட்டைப்பிரித்துக்கொண்டுபோகும் சௌகரியத்திற்காக 6 மாத முன் நோடீஸ் கொடுக்கவேண்டுமென்றும் ஏற்பட்டிருந்தது. வாதி 1911 அக்டோபரில் அதாவது 15-வருஷங்கள் முடியுமுன்னமேயே நிலத்தைச் சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று ஒரு முன் நோடீஸும், 1913

டிசம்பர் 13-இல் வேறொருநோட்டீஸ்கொடுத்து அதில் 1913 டிசம்பர் 31உ-ல் நிலத்தைச் சுவாதீன மடையவேண்டுமென்று தெரிவித்திருந்தார். பிரதிவாதி நோட்டீஸ்படி வீடைப்பிரித்துக்கொண்டுபோய் நிலத்தை வாதியிடம் சுவாதீனப்படுத்திக் கொடுக்கத் தவறினபடியால் மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டில் வாதி இஜெக்ட்மெண்டு பிராது கொடுத்ததில் பிரதிவாதி தனக்கு 1912 ஜூன் 14 மட்டும் தாவா நிலத்தை அனுபவிக்க நியாயமுண்டென்றும் அதற்குப்பின் 6-மாத தவணைகொடுத்து வாதி நோட்டீஸ் கொடுக்க வேண்டியதாயிருக்க 1911 அக்டோபரில் கொடுத்த நோட்டீஸ் செல்லாதென்றும், 1913 டிசம்பரில் கொடுத்த நோட்டீஸில் 6-மாததவணை கொடுக்கப்பட வில்லையென்றும், ஆக்ஷேபித்தார். தவிர மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட் 41-வது பிரிவின்படி இவ்விதமான இஜெக்ட்மெண்ட்பிராதை ஏற்றுக்கொண்டு வாதிக்கு தாவா ஸ்தாவரசொத்தைச் சுவாதீனப்படுத்தும்படி பரிகாரமளிக்க ஸ்மால்காஸ் கோர்ட்டாருக்கு அதிகாரவரம்பில்லையென்றும் வாதிக்கப்பட்டது. ஸ்மால்காஸ் கோர்ட் 3-வது ஜட்ஜ் மிஸ்டர் ராமஸ்வாமி அய்யங்காரவர்கள் எதிரியின் ஆக்ஷேபனைகளை ஏற்றுக்கொள்ளாமல் வாதிக்கனுகூலமாக, பிரதிவாதி 1913 மே 1-க்குள் கட்டடத்தைப் பிரித்துக்கொண்டுபோய் நிலத்தை வாதியின் வசப்படுத்தவேண்டுமென்று டிக்கிரீயளித்தார்கள். அதன்பேரில் பிரதிவாதி ஹைகோர்ட்டில் ஸி. பி. ஸி. 115-வது பிரிவின்படி ரிவிஷன் விண்ணப்பம்கொடுத்ததில் மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட் உத்தரவின்பேரில் ஹைகோர்ட்டார் ரிவிஷன் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாதென்று வாதி பிரதம ஆக்ஷேபனை செய்தார். அந்த பிரதம ஆக்ஷேபனையை நிராகரித்து ஸ்மால்காஸ் கோர்ட்டாருடைய உத்தரவு பிசகென்று அபிப்பிராயப்பட்டு அதை ரத்து செய்த ஹைகோர்ட்டாருடைய தீர்மானச் சுருக்கமாவது:-

ஹைகோர்ட்டாருக்கு மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட் உத்தரவின்பேரில் 115-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்க அதிகாரம் கிடையாதென்பதற்கு 31 பம்பாய் 138 ஆதாரமாக எடுத்துக் காட்டப்பட்டது. அதில் ஜஸ்டிஸ் பீமான் துரையவர்கள் 115-வது பிரிவுக்குச் சரியான பழய ஸி. பி. ஸி. 622-வது பிரிவின்படி ஹைகோர்ட்டார் ஸ்மால்காஸ் கோர்ட் டிக்கிரீயையும் நடவடிக்கைகளையும்பற்றி ரிவிஷனில் பிரவேசிக்கலாமாவென்று சந்தேகப்பட்டிருக்கிறது வாஸ்தவம். ஆனால் அவ்வித சந்தேகத்திற்கு வந்த காரணம் அந்தத் தீமானத்தில் சொல்லப்படவில்லை. ஸி. பி. ஸி. 8-வது பிரிவில் ஸ்மால்காஸ் கோர்ட்டார் அனுசரிக்கவேண்டிய ஸி. பி. ஸி. யின் பிரிவுகள் இன்னவை யென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது ஸ்மால்காஸ் கோர்ட் தாவாக்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் ஸி. பி. ஸி. யின் (குறிக்கப்பட்டிருக்கிற) சிற்சில பிரிவுகள் தான் ஏற்குமென்று ஸி. பி. ஸி. 8-வது பிரிவில் சொல்லியிருக்கிறது ஆனால் அந்த ஜாபிதாவில் 115-வது பிரிவும் சேர்க்கப்படாத காரணத்தால் ஸ்மால்காஸ் உத்தரவின் பேரில் 115-வது பிரிவின்படி ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசிக்கக் கூடாதென்று வாதிக்கப்படுகிறது. ஹைகோர்ட்டார்முன் வந்திருக்கிற ரிவிஷன் விண்ணப்பமானது ஒரு ஸ்மால்காஸ் கோர்ட் தாவா அல்லது நடவடிக்கையல்ல. அது ஒரு ரிவிஷன் விண்ணப்பம் என்ற நிலைமையை உடைத்தானதாகும். ஆகவே ஸி. பி ஸி. 8-வது பிரிவின் அம்சங்களைக் கவனித்து ஷை விண்ணப்பத்திற்கு 115-வது பிரிவினபடி யாதொரு உத்தரவு செய்யக்கூடாதென்று சொல்ல நியாயமில்லை. தவிர 1882-ம் வருஷத்திய மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்ட் 23-வது பிரிவில், ஸி. பி ஸி-யின் சில பிரிவுகள் ஸ்மால்காஸ் கோர்ட் நடவடிக்கைகளில் அனுசரிக்கப் படவேண்டுமென்று குறிப்பிட்டு அந்த ஜாபிதாவில் ஸி. பி. ஸி. 115-வது பிரிவுக்குச்சரியான பழய ஸி. பி. ஸி. 622-வது பிரிவும் சேர்க்கப்பட்டிருந்தது. 1895-ம் வருஷத்திய மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்டில் பழய ஆக்ட் 23-வது பிரிவு முழுவதும் எடுபட்டுப் போனபடியால் 622-வது பிரிவும், (115-வது பிரிவும்) ஸ்மால்காஸ் கோர்ட் நடவடிக்கைக்கு ஏற்காதென்று வாதிக்கப்படுகிறது. அந்த வாதம் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. ஏனெனில் ஸி. பி. ஸி யில் ஹைகோர்ட்டாருக்கு சில சமயோஜிதமான அதிகாரங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் புது ஸ்மால்காஸ் கோர்ட் ஆக்டில் ஹைகோர்ட்டாருக்குரிய



ரிவிஷன் அதிகாரம் அவசியமில்லையென்று விலக்கப்பட்டிருப்பதாகச் சொல்லவேண்டும்.

அந்த முறையானது ஸி. பி. ஸி. 115-வது பிரிவின் வசனங்களால் மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டிலிருந்து வரும் கேஸ்களுக்கும் ஏற்றதாகுமென்பதில் சந்தேகம் ஏற்படவில்லை. மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டானது ஹைகோர்ட்டின் அதிகாரத்திற்குத் தாழ்ந்ததாகும். ஸி. பி. ஸி, 3-வது பிரிவைப் பார்க்கவும். யாதொரு தெளிவான முறைகளால் ஹைகோர்ட்டாருடைய ரிவிஷன் அதிகாரம் விலக்கப்பட்டிருந்தாலொழிய ஹைகோர்ட்டார் ஸ்மால்காஸ் கோர்ட் நடவடிக்கைகளை மாற்ற அதிகாரமுண்டென்றே சொல்லவேண்டும். ஸ்மால்காஸ் கோர்ட் டிக்கிரியின்பேரில் ரிவிஷன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது வழக்கமாயுமிருக்கிறது. 30 கல்கத்தா 589-ஐப் பார்க்கவும். 37 கல்கத்தா 714, 30 கல்கத்தா 930-ல் கல்கத்தா ஹைகோர்ட்டார் கொடுத்த அபிப்பிராயத்தில் ஸ்மால்காஸ் டிக்கிரீயின் பேரில் ஹைகோர்ட்டார் ரிவிஷனில் பிரவேசிக்கலாமென்றும், ஆனல் அவ்வித விண்ணப்பங்கள் ஹைகோர்ட் அசல்தரப்பு வேலையை நடத்தும் கோர்ட்டார் விஜாரித்துப் பைசல் செய்யவேண்டுமென்றும் சொல்லியிருக்கிருர்கள். மதராஸ் ஹைகோர்ட்டில் அப்பீல் தரப்பில் தான் அவ்வித விண்ணப்பங்கள் ஈரங்கியாகி முடிவு பெறுகின்றன. ஆகையால் வாதியின் பிரதம ஆக்ஷேபனை ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

எக்ரீமெண்டின் ஷரத்துக்களைக் கவனிக்குமிடத்து, 15 வருஷங்கள் முடியும்ட்டும் பிரதிவாதியை நிலத்தைவிட்டுக் காலிசெய்யும்படி நோட்டீஸ் கொடுக்கவே அதிகாரம் கிடையாதென்று சொல்லவேண்டும். அந்த வாய்தா கடந்தபின் வாதிக்கு நிலம் தேவையாயிருந்தால் மட்டும் 6 மாத தவணைக்குள் காலிசெய்து கொடுக்கும்படி நோட்டீஸ் கொடுக்கலாம். 15-வருஷங்கள் முடிந்த உடன் வாதி நிலத்தைச் சுவாதீனப்படுத்திக்கொள்ள எண்ணங்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கும் பொருட்டு 6-மாத முன்நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று ஷரத்து ஏற்பட்டிருக்கிறதாகவும் அவ்வித நோட்டீஸை 15-வருஷங்கள் முடியுமுன்னமேயே கொடுக்கலாமென்றும், அவ்வித நோட்டீஸ்படிக்கு 6-மாதத்தவணை கொடுக்கப்பட்டிருந்தால் அந்த நோட்டீஸ் சரியான நோட்டீஸ் என்று பாவிக்கப்படவேண்டுமென்று வாதம் செய்யப்படுகிறது. அவ்விதமாக எக்ரீமெண்டின் ஷரத்துக்களை யூகிக்கத்தகாது. ஸந்தேகத்திற்கிடமில்லாத தெளிவான வசனங்களால் ஏற்பட்டிருக்கிற உடன்படிக்கையில் 15 வருஷங்கள்கடந்தபின்தான் 6-மாத நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள கோர்ட் தீர்மானங்கள் மாருக யாதொன்றும் ஏற்பட்டதாகக் காணப்படவில்லை. இங்கிலீஷ் தீர்மானங்களும் அந்த பாயிண்டுவிஷயமாக ஒரே விதமாயில்லை. (Ha'sbury's Laws of England)18-வது வாலியூம், 444-வது பக்கத்தில் சொல்லியிருக்கிறபடி யாதொரு குத்தகை முதலிய உடன்படிக்கைக்கு காலம் குறிக்கப்பட்டு அதற்குப்பின் நோட்டீஸின்பேரில் அந்த ஏற்பாடு முடிவடைய வேண்டியதாக ஒப்பந்தமிருந்தால் குறித்தகாலத்திற்கு முன் நோட்டீஸ் கொடுக்கக்கூடாதென்றேசொல்லவேண்டும். அந்த விதியானது நீதிக்கும் நியாயத்திற்கும் ஒத்ததாகவே யிருக்கிறது. ஆகையால் 1911 அக்டோபரில் வாதி கொடுத்த நோட்டீஸ் செல்லாதென்றும் 1913 டிசம்பரில் கொடுத்த நோட்டீஸில் 6-மாத வாய்தா கொடுக்கப்படாதபடியால் அதுவும் செல்லாதென்றும் தீர்மானிக்கவேண்டும்.

கடைசியாக மதராஸ் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கு 41-வது பிரிவின்படி ஸ்தாவர சொத்தை சுவாதீனம்செய்து கொடுக்கும்படி உத்தரவளிக்க அதிகாரமுண்டாவென்று யோஜிக்குமிடத்து அவ்வித அதிகாரத்தைச் செலுத்துவதற்குமுன் எக்ரீமெண்டானது தீர்ந்து பரஸ்பர சம்பந்தம் நீங்கியிருக்கவேண்டும். குத்தகை உடன்படிக்கை முடிவாகாமல் சுவாதீன டிக்கிரீயளிக்க அதிகாரவரம்பு கிடையாது. தாவா கேசில் குத்தகை உடன்படிக்கை முடிவானதாக அபிப்பிராயப்படாததால் சுவாதீன டிக்கிரீயளித்த உத்தரவும் ரத்தாகவேண்டிய தவசியமாகும். சுவாதீன டிக்கிரீயை மாற்றுவதற்கு வேறுவித பரிகாரம் பிரதிவாதிக்கு ஏற்பட்டிருப்பதால் ஹைகோர்ட்டில் ரிவிஷனில் அந்தப்பரிகாரம் தேடக்கூடாதென்று சொல்லப்படுகிறது. வேறுவித பாரிகாரங்களிருக்கும்பொழுது ஒருவன் ஹைகோர்ட்டில் பரிகாரம் தேடினல் சாதாரணமாக ஹைகோர்ட்

டார் யுக்தானுசாரத்தைச் செலுத்தி பார்டியின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்வதே வழக்கமாகும். ஆனால் அதிகாரவரம்பில்லையென்று அபிப்பிராயப் படும்பொழுது வேறு வித பரிகாரமிருந்த போதிலும் ஹைகோர்ட்டார் ரிவிஷனில் யுக்தானுசாரத்தைச் செலுத்தி கீழ்கோர்ட் தீர்மானத்தை மாற்றவேண்டிய தவசியமாகும். கீழ்கோர்ட்டார் அதிகாரத்தைச் செலுத்துவதில் ஒழுங்கீனம் அல்லது சட்ட விரோதம் யாதொன்றும் ஏற்பட்டால் அப்பொழுது 115(c) யின்படி ஹைகோர்ட்டார் பிரவேசிக்கவேண்டுமானால் வேறுபரிகாரம் யாதொன்றும் இடையாமலிருக்கவேண்டும். முற்றிலும் அதிகார வரம்பில்லாமல் யாதொரு உத்தரவு செய்யப்பட்டால் அதைப்பற்றி பார்ட்டிக்கு வேறுவித பரிகாரம் ஏற்பட்டிருந்தாலும் ஹைகோர்ட்டார் பிரவேசிக்கத்தகும். ஆகையால் இந்தக்கேசில் ஸ்மால்காஸ் கோர்ட்டார் சுவாதீன டிக்கிரீயளித்தது சரியல்லவென்று தீர்மானிக்கப்பட்டு ரிவிஷன் விண்ணப்பம் பிரதிவாதிக்கனுகூலமாக உத்தரவாச்சுது. [கட்டின கட்டடத்தை இடித்து சாமான்களை அப்புறப்படுத்தும் சௌகர்யத்திற்காகவே 6-மாத காலத்தவணை கொடுக்கப்பட்டதாக யூகிக்கலாம். அப்படியானால் 15-வருஷங்களுக்குள் இடித்துப் பிரித்து 15-வருஷ வாய்தா முடிந்த மறுதினமே நிலத்தை சுவாதீனப்படுத்திக் கொடுக்கச்சொல்வது நியாயமாகாது.

———:0:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

திருநெல்வேலி ஜில்லா

**C. M. P. No 2122 of 1912-20 பிப்ரவரி 1914**

ஜில்லா கலக்டரவர்கள்

*Vs*

சங்கரபாண்டியன் பிள்ளை

திருநெல்வேலி அடிஷனல் டி-மு கோர்ட்டில் 1907-ம் வருஷத்திய அசல் நெ. 385-ல் சாட்சி வாக்குமூலம் கொடுத்த சங்கரபாண்டியன் பிள்ளை என்ற எதிரி பொய் சாட்சி சொன்னதாகச் சொல்லி அவரை ப்ராஸிகியூஷன் செய்யவேண்டுமென்று கி. பு. கோ. 195-வது பிரிவின்படி சாங்கிஷன் அனுமதி கொடுக்கப்பட்டதின் பேரில் எதிரி ஜில்லா கோர்ட்டிலும் அதன்மேல் ஹைகோர்ட்டிலும் அப்பீல் செய்ததில் அனுமதி உத்தரவானது ஹைகோர்ட்டாரால் 2-வது அப்பீலில் காயமாச்சுது. ஹைகோர்ட் உத்தரவு பிறந்த சொற்பகாலத்திற்குள் வாதி எதிரியின்பேரில் அனுமதியின்படி பிராது கொடுக்க அனும்தி கிடைத்தமுதல் 6-மாத வாய்தா விதிக்கப்பட்டிருப்பதால், அப்பீல் நடவடிக்கைகளால் காலதாமதம் ஏற்பட்ட காரணத்தைச் சொல்லி 6-மாத வாய்தாவை அதிகரித்து (தாமதத்தை மன்னித்து) பிராதை ஏற்றுக்கொள்ளும்படி மாஜிஸ்டிரேட்டாருக்கு உத்தரவளிக்க வேண்டுமென்று வாதி 2-வது அப்பீலைப் பைசல் செய்த சாங்கிஷன் அனுமதியைக் காயப்படுத்தின ஹைகோர்ட்டாரிடம் மன்னிப்பு மனுசெய்து கொண்டதில் ஹைகோர்ட்டார் தாமதத்தை மன்னித்து வாதிக்கு அனுகூல உத்தரவளிததார்கள். உத்தரவில் சொன்ன காரணங்களாவன:—

6-மாத வாய்தாவை அதிகப்படுத்த ஹைகோர்ட்டாருக்கு அதிகாரம் இடையாதென்று எதிரிக்காக ஆக்ஷேபிக்கப்படுகிறது. ஆனால் 26 மதராஸ் 190, 23 மதராஸ் 482 இவைகளில் ஏற்பட்டிருக்கிற தீர்மானம் மேற்கூறிய ஆக்ஷேபனைக்கு விரோதமாயிருப்பதாகவே எதிரி ஒப்புக்கொள்ளுகிறார். எதிரி 12 கல்கத்தா லா ஜர்னல் 382-ஐ அனுசரித்து மேற்கண்ட விதமாய் ஆக்ஷேபிக்கிறார். மதராஸ் ஹைகோர்ட்டாருடைய தீர்மான அபிப்பிராயத்தை அனுசரிக்கத்தகும். ஆகையால் இந்த எதிரியின் ஆக்ஷேபனை ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. புதிய லி. பி. லி. 148-வது பிரிவின் கருத்தை கவனித்துப் பார்க்கவேண்டும். தவிர வாதி 4 வருஷ காலமாய் எதிரியை ப்ராஸிகியூஷன் செய்வதாய் பயங்காட்டி வருவதாயும் அப்படியிருக்க காலதாமதத்தை மன்னிப்பது நியாயமல்லவென்றும் எதிரிக்காக சொல்லப்படுகிறது. எதிரியின் நடத்தையாலேயே காலதாமதம் நேரிட்டிருக்கிறது. ஏனெனில் அனுமதி உத்தரவின்பேரில் அப்பீலும் அதன்பின் 2-வது அப்பீலும் செய்திருக்கிறார். ஹைகோர்ட்டில் இந்த மன்னிப்பு விண்ணப்பம் 1912ல் கொடுக்கப்பட்டு 1912 டிசம்பர் 6 ல் எதிரிக்கு நோடீஸ் அனுப்பும்படி உத்தரவளிக்கப்பட்டும் அந்த நோடீஸ் உத்தரவளித்த இரண்டு ஹைகோர்ட் ஜட்ஜிமார்களில் ஒருவர் ரஜாவில் சென்றமையால் அவர் திரும்பி வருமட்டும் இந்த விண்ணப்பத்தைப் பைசல் ஈரங்கிக்குக் கொண்டுவராமல் தாமதப்படுத்தினது ஹைகோர்ட் ஆபீஸாருடைய நடத்தையாகிறது. ரஜாவில் சென்றவர்கள் திரும்பி வருமட்டும் இத்தகைய கிரிமினல் வியவகாரத்தை நிறுத்திவைப்பது நல்லதல்ல. ஆனால் பொய் வாக்குமூலம் கொடுத்த எதிரியை அனுமதி விண்ணப்ப நடவடிக்கைகளினால் ஏற்படும் தாமதத்தையிட்டு கிரிமினல் விஜாரணையில்லாமல் தப்பித்துக்கொள்ளும்படி விடக்கூடாது. வாதி 2 வது அப்பீல் முடியுமுன்னமேயே பிராது கொடுத்திருக்கலாம். அப்படிச் செய்யாத காரணமானது வாதியின் வாய்தா மன்னிப்பு விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்வதற்குப் போதுமானதல்லவென்று சொல்லவேண்டும். ஏனெனில் 2 வது அப்பீலில் சாங்கிஷன் அனுமதி காயமான சொற்பகாலத்திற்குள் இந்த மன்னிப்பு விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வாதியின் விண்ணப்பம் அனுகூலமாக உத்தரவளிக்கப்பட்டு 1914 மார்ச்சு 20-க்குள் பிராது தாகல் செய்யப்படவேண்டுமென்று கட்டளையிடப்பட்டது.



———:0:———

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் ஏய்லிங்

ஆர்காட் ஜில்லா

**C. M. S. A. 31 of 1913—4 மார்ச்சு 1914**

அப்துல்லதீவ் சாகிப் *Vs* பாதுலாபீ. பீ. அம்மாள்

வாதி பெற்ற டிக்கிரீயில் வாதிக்கு சில தொகைகள் செலுத்தப்பட்டதின்பேரில் வாதி யாதொரு ஸ்தாவர சொத்தைப் பிரதிவாதிக்கு சுவாதீனப் படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கண்டிருக்க, டிக்கிரீயின்படி பிரதிவாதி தொகை செலுத்தத் தவரினபடியால் வாதி டிக்கிரீயை நிறைவேற்ற விண்ணப்டம் கொடுத்தபொழுது பிரதிவாதி தான் ரூ. 500 போல தொகையை செலுத்திவிட்டதாகச் சொல்லி நிறைவேற்றுதலுக்காக்ஷேபனை செய்யவே, வாதி தொகை செலுத்தின விஷயத்தை ஒப்புக்கொள்ளாமல் அவ்விதமாய் தொகை செலுத்தினது கோர்ட்டில் ரிகார்டாகாதபடியால் நிறைவேற்று நடவடிக்கையைத் தடுக்க நியாயமில்லையென்று, எதிர்வாதம் செய்தார். டி-மு கோர்ட்டாரும் ஜில்லா கோர்ட்டாரும் ஒரே அபிப்ராயமாய் கோர்ட்டில் செல்லுவைக்கப்படாத காரணத்தால் எதிரி தொகை செலுத்தின விஷயத்தை ஏற்றுக்கொள்ளாதபடியால் நிறைவேற்று நடவடிக்கையைநடத்தும்படி உத்தரவளித்தார்கள். ஹைகோர்ட்டார் 2-வது மனு அப்பீலிலும் அதே அபிப்பிராயப்பட்டு அப்பீலைத்தள்ளுபடிசெய்தார்கள். லி. பி. லி. ஆர்டர் 21 ரூல் 2-(3)-ல் யாதொரு தொகை செலுத்தும்படியாக டிக்கிரீ பிறந்தால் தொகை செலுத்தின விஷயமானது கோர்ட்டில் ரிகார்ட் செய்யப்பட வேண்டுமென்றுவிதிக்கப்பட்டிருக்கிறது. தாவா டிக்கிரீயில் ஸ்தாவர சொத்து யாதொன்றை ஒப்புவிக்க வேண்டுமென்று கண்டிருப்பதால் அந்தரூலின் அம்சத்தை தாவாடிக்கிரீ விஷயமாய் பிரயோகிக்கக் கூடாதென்று பிரதிவாதிக்காக சொல்லப்படுகிறது. ஆனால் ஷை ரூலின் வசனங்களை முந்திய வாக்கியங்களுடன் சேர்த்துப்படித்தால் தாவா டிக்கிரீயைப்பாலொத்தவைகளுக்கும் அந்த ரூல் ஏற்குமென்று சொல்லத்தகும். தொகை செலுத்த வேண்டியதென்று எவ்விதமான டிக்கிரீயிலும் கட்டளை யிடப்பட்டிருந்தால் தொகை செலுத்தின விஷயம் ரிகார்ட் செய்யப்பட வேண்டுமென்று மிகவும் தெளிவாக ஷை ரூலின் வசனங்கள் பின்னால் சீர்திருத்தப்பட்டிருக்கின்றன. ஆகையால் எதிரி எடுத்துக்காட்டிய 16 கல்கத்தா 786-ஐ அனுசரியாமல் திருத்தப்பட்ட ரூலின் வசனங்களைக் கவனித்து தாவா டிக்கிரீக்கும் ஷை ரூல் பிரகாரம் தொகையின்செல்வகை கோர்ட்டில் பதிவாயிருக்க வேண்டுமென்று தீர்மானித்து எதிரியின் செல்வழி வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் வாதிக்கனுகூலமாக நிறைவேற்றுதலுக்குத்தரவளித்தார்கள். ஆகவே எப்பேர்ப்பட்ட டிக்கிரீயின் வகைக்கு யாதொரு தொகை செலுத்தப்பட்டால் அது கோர்ட்டில் ரிகார்ட்டாகாமற்போனால் அந்தத் தொகையையும் சேர்த்து டிக்கிரீயை நிறைவேற்றலாமென்று ஏற்படுகிறது. (ஆனால் செலுத்தின தொகையைத் திரும்பியடைய வேறுபரிகாரம் தேடிக்கொள்ளலாம்.)

———:0:———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்,
கோதாவரி ஜில்லா

## C. M. P. No. 1223 of 1911–28 ஜனவரி 1914

*தங்கலமல்லண்ணு Vs ராமராஜு*

கோதாவரி ஜில்லாவில் நந்திகாமா என்னும் எஸ்டேட் நிலச்சுவான்தார், மதராஸ்எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட்படிக்கு, எஸ்டேட்டில் மேல்வார பாத்தியதையை மட்டும் உடைத்தானவராக இருக்கையில் ஷை யாரிட மிருந்து ஷை எஸ்டேட்நிலங்கள் விஷயமாய் சாசுவத கவுல்பெற்ற வாதி ராமராஜு என்றவர் கவுல் தஸ்தவேஜில் கண்ட ஷரத்துக்களின்படி ஷை நிலங்களை சுவாதீனமடைய வேண்டியதென்றும் சர்க்கார் கிஸ்தியையும் எஸ்டேட்டின் சிப்பந்திச் செலவுகளையும் தானே செலுத்தி வரவேண்டுமென்றும் சுவான்தாருக்கு வருஷந்தோரும் ரூ 800 லாபமாக செலுத்திவரவேண்டியதென்றும் ஏற்பட்டிருக்க வாதி ஷை நிலங்களை சுவாதீன மடையும்பொருட்டு அவைகளை அனுபவித்து வரும் பிரதிவாதியின் பேரில் ரெவினியூகோர்ட்டில் பிராது செய்ததில் அங்கும் அப்பீலில், ஜில்லா கலக்டருக்குச் சமானமுள்ள காகிஞடா கவர்ன்மெண்ட் ஏஜண்டாரவர்களும் ஒரே அபிப்பிராயமாய் வாதிக்கனுகூலமாக சுவாதீன டிக்கிரீயளித்தார்கள். அதன்பேரில் பிரதிவாதி ஹைகோர்ட்டில் சில்லரை மனுதாகல் செய்து கவர்ன்மெண்ட் ஏஜெண்ட் கொடுத்ததிர்மானத்தை ரிவியூ செய்யும்படி கட்டளையிடவேண்டுமென்று கோறிக்கொண்டதில் ஹைகோர்ட்டார் செய்த உத்தரவாவது:—

பிரதிவாதி தாவா நிலங்களில் குடிவார பாத்தியதையுடைய ரயட்டா அல்லவா என்று தீர்மானிக்கவேண்டியது முக்கியமான பாயிண்டாகும். அப்படியானல் வாதிக்கு அவரை அப்புறப்படுத்த சட்டமில்லை. நிலச்சுவான்தாரிடம் கவுல்பெற்ற வாதி ரயட்டாக பாவிக்கப்பட நியாயமில்லை. கவுலின் ஷரத்துக்களைக் கவனித்தால் அவைகள் நிலக்குத்தகைச் சீட்டுக்குறியவைகளென்று சொல்லத்தகாது. ரயட்டுகளிடமிருந்து தீர்வையை வசூல் செய்கிறவர் யாவரும் நிலச்சுவான்தாரென்றபதத்திற்கு யோக்கியமாகிறார். கவுல்பெற்ற வாதியும் சுவான்தாருடைய பாத்தியதையை அடைந்து தீர்வையை வசூலிக்க லாயக்குள்ளவராதலால் அவரையும் நிலச்சுவான்தார் என்றேசொல்லவேண்டும். நிலச்சுவான்தாருக்கு பதிலாக வாதி வசூலிப்பதால் நிலச்சுவான்தாருடைய பாத்தியதை வாதிக்கு ஏற்படுமேயொழிய வாதி நிலத்தைச் சுவாதீனமடைந்து அனுபவிக்க லாயக்குள்ள ரயட்டென்னும் ஸ்தானத்தை அடையத்தக்கவராக மாட்டார். சர்க்கார் கிஸ்தியைச் செலுத்துவதும் சிப்பந்திச் செலவுசெய்வதும் நிலத்தீர்வையை வசூலிப்பதும் வாதிக்கு மாறிவிட்டபடியால் அக்காரணத்தால் வாதி நிலச்சுவான்தாரென்று ஏற்பட்டால் பிரதிவாதி ரயட்டாக பாவிக்கப்படவேண்டுமென்றே ஒப்புக்கொள்ளப்படுகிறது. எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் 6-வது பிரிவின்படி பிரதிவாதிக்குசாசுவதமான குடிவாரபாத்தியதை கிடையாதென்றும் தாவா நிலங்கள் 4 வது பிரிவின் 7 (2) வது கிளாஸில் கண்டபடிபழயதரிசுகளென்றும் அவைகளில் பிரதிவாதிக்கு குடிவார பாத்தியதை ஏற்பட நியாயமில்லையென்றும் வாதிக்காக சொல்லப்படுகிறது. எஸ்டேட்ஸ் ஆக்ட் நமோதுக்குவந்த பிறகு நிலத்தை சுவாதீனமடைந்த ரயட்டுகள் விஷயமாய் மட்டும் மேற்கூறிய சட்ட அம்சத்தின்படி, பழய தரிசுநிலத்தின் குடிவாரபாத்தியம் மேல்வாரதாருக்கு ஏற்படுகிறதாகும். ரயட்டானவன் நிலத்தை விட்டுப்போனாலும் அல்லது வேறு காரணத்தாலும் நிலச்சுவான்தார் நிலத்தைச் சுவாதீனப் படுத்திக்கொண்டு ஆக்ட் நமோதுக்கு வந்தபிறகு அதை எவருக்கும் குத்தகைக்கு ஒப்படைத்தால் ஷை நிலம் ஒப்படைப்புக்கு முந்தி 10 வருஷகாலமாக குடிவார பாத்தியதையன்னியிலிருக்கும்பட்சத்தில் ஷை நிலம் பழயதரிசென்று சொல்லப்பட்டு அதில் குத்தகைக்கு அனுபவிக்கிற ரயட்டுக்குக் குடிவார பாத்தியதை கிடையாதென்று சொல்லலாம் பிரதிவாதி அவ்விதமான சந்தர்ப்பங்களில் தாவா நிலத்தை சுவாதீனமடைந்து அனுபவிக்காதபடியால் அவருக்கு தாவா நிலத்தில் குடிவார பாத்தியதை உண்டென்றே சொல்லவேண்டும். வாதி ரயட்டல்லவென்றும் நிலச்சுவான்தார் நிலமையிலுள்ளவரென்றும் முந்தியே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே பிரதிவாதியை அப்புறப்படுத்த நியாயமில்லையென்ற அபிப்பிராயத்தை கவனித்து முன்செய்த தீர்மானத்தைத் திரும்பவும் யோஜித்துப்பார்த்துப் பைசல் கொடுக்கும்படி கோதாவரி கவர்ன்மெண்ட் ஏஜண்டுக்குக் கட்டளையிடப்பட்டது.

———o———



ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்
சேலம் ஜில்லா.

## C. R. P. 661 of 1913—18 பிப்ரவரி 1914

*வெங்கோபராயர் Vs கதிரப்ப கவுண்டர்*

கிருஷ்ணகிரி டி-முகோர்ட் 1910-ம் வருஷத்திய அசல் நெ 16 ல் பிரதிவாதிக்கு ஸம்மன்ஸ் ஸர்வாகி ஈரங்கி வாய்தாதேதியில் உபயவாதிகளும் ஆஜராகாமல் வாதியின் வக்கில் மட்டும் ஆஜராகி வாதியும்வாதியின் சாட்சிகளும் ஆஜராகக்கூடவில்லையென்ற அசந்தர்ப்பத்தைச் சொல்லி வேறு வாய்தாவுக்கு ஈரங்கியை மாற்றிவைக்கவேண்டுமென்று மட்டும் கோர்ட்டாரை கேட்க அனுமதிபெற்ற வக்கிலுடையமனுவை ஏற்றுக்கொள்ளாமல் கோர்ட்டார் பிராதை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஈரங்கி காலத்தில் தான் ஆஜராகாத காரணத்தைப்பற்றி பிரமாணப்பத்திரிகையில் விவரமாய்க்கண்டெழுதி நம்பரைபயிலுக்கெடுத்து விஜாரணைசெய்து பைசலளிக்கவேண்டுமென்று சில்லரை மனுக்கொடுத்ததில் டி-மு கோர்ட்டார் நம்பரை பயிலுக்கு எடுத்துமறுவிஜாரணைசெய்வதாய் உத்தரவளித்தார்கள். பிரதிவாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன்மனுக்கொடுத்து டி-மு கோர்ட்டார், டிஸ்மிஸ்செய்த நம்பரைத்திரும்பவும் பயிலுக்கெடுத்து விஜாரிக்கக் கூடாதென்றும், டி-மு கோர்ட்டார் டிஸ்மிஸ் செய்த உத்தரவில் "இந்தப்பிராதின் அம்சங்களை ருஜுப்படுத்தவேண்டிய பொருப்பு வாதியைச்சேர்ந்ததென்றவசனங்களால் துவக்கி தீர்ப்பை அனுசரித்த டிக்கிரீயும்பிரத்தியேகமாய் பிறந்தமையால் டி-மு கோர்ட்டார் தீர்மானம் ஸி. பி. ஸி. ஆர்டர் 17 ரூல் 3-ன்படி செய்யப்பட்டதாகவும் அதன்மேல் அப்பீல் பரிகாரம் உண்டேயொழிய அந்த உத்தரவை ஆர்டர் 9 ரூல் 3-ன்படி இருகக்ஷிக்காரரும் ஆஜராகாதபடியால் கேஸ்டிஸ்மிஸ் செய்யப்பட்டதாக பாவித்து டி-மு கோர்ட்டார் நம்பரை ஆர்டர் 9 ரூல் 4-ன் படி திரும்பவும் பயிலுக்கெடுக்கக் கூடாதென்றும் வாதித்தார். ஹைகோர்ட்டார் பிரதிவாதியின் ரிவிஷன் விண்ணப்பத்தை செலவுடன் தள்ளுபடிசெய்த தீர்மானத்தில் சொன்ன காரணச்சுருக்கமாவது:— வாதியின் பிரமாணப்பத்திரிகையில் தானும் தன் சாட்சிகளும் ஈரங்கி வாய்தாவுக்கு ஆஜராகவில்லையென்று கண்டிருக்கிறது. அந்த விஷயத்தை பிரதிவாதி பொய்யென்று ஆக்ஷேபிக்கவில்லை. வாதியின் வக்கிலுக்கு வாய்தாகேட்க அதிகாரம் கொடுக்கப்பட்டதேயொழிய கேஸை நடத்தும் சவுகரியம் கிடையாது. அப்படியிருக்க டி-மு கோர்ட்டார் பிராதை திரும்பவும் பயிலுக்கெடுத்ததில் பிசகில்லையென்று சொல்லவேண்டும். 30 மதராஸ் 274-ல் சீவ் ஜஸ்டிஸ் துரையவர்கள்சொல்லியிருக்கிறபடி யாதொரு உத்தரவின் வசனங்கள் அல்லது முறைகளால் அதை ஆர்டர் 9 ரூல் 3-ன்படி பிறந்த உத்தரவல்லவெனத்தீர்மானிக்கக்கூடாது. அவ்வித உத்தரவின்படி டிக்கிரீயும் பிறந்தபோதிலும் வேறுவிதமான கருத்தாக அதாவது ஆர்டர் 9 ரூல் 3 ன்படி பிறந்த உத்தரவல்லவென்று சொல்லத்தகாது. ஒரு நம்பரைத் திரும்பி பயிலுக்கெடுக்கும் விஷயமாய் ஏற்பட்டிருக்கிற சட்டமுறைகளை அதிக தயாளமான சிந்தனையோடு கோர்ட்டார் பிரயோகிக்கவேண்டுமென்று மேற்கூறிய 30 மதராஸ் கேஸில் ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் குறித்துக்காட்டியிருக்கிறார்கள். வாதி ஆஜராகாதபடியாலும் வக்கிலுக்கு வாய்தா வாங்குவதைத்தவிர கேஸை நடத்தக்கூடிய சாதனம் யாதொன்றும் கிடையாதபடியாலும் டி-மு கோர்ட்டார் ஆர்டர் 9 ரூல் 3ன்படி பிராதை டிஸ்மிஸ் செய்தாரென்றே சொல்லவேண்டும். அப்படியானல் திரும்பி நம்பரை பயிலுக்கெடுக்க அதிகாரமுண்டு. 30 மதராஸ் 274 ஐப்பார்க்கவும்.

———:———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் பேக்வெல்
மங்களூர் ஜில்லா

## S. A. 2527 of 1912—19 நவம்பர் 1913

*நாசரேத் Vs ஜாபர் மேக்ஜி சேட்*

நாசரேத் என்னும் பிரதிவாதி சர்வே நெ 15 16, 18 ல் அடங்கிய சில சொத்துக்களையும் இரண்டு வீடுகளையும், சில மரங்களையும் வாதிக்கு ஒரு குறித்த தொகைக்கு விக்கிரயம்செய்வதாய் ஒப்புக்கொண்டு பிரதமத்தில் ஒரு அடமான தஸ்தவேஜ் எழுதிக்கொடுத்து விக்கிரயத்தொகையில் ஒருபாகத்தைப் பெற்றுக்கொண்டான். ஒப்பந்தப்படிக்கு விக்கிரயம்செய்து கொடுக்கத்தவறினபடி

யால் வாதி மங்களூர் டி-மு கோர்ட்டில் மேற்கூறிய சொத்துக்கள் யாவற்றையும் பிரதிவாதி விக்கிரயம்செய்து கொடுக்கவேண்டுமென்று தீர்மான டிக்கிரீ யடையும்பொருட்டு அசல் தாவாசெய்தார் பிரதிவாதியோ எதிர் ஆன்ஸரில் குறித்தகாலத்திற்குள் வாதி பாக்கித்தொகையைச் செலுத்தி கிரயம் பெற்றுக்கொள்ளவில்லையென்றும் பிராதில் கண்டிருக்கிறதைவிட அதிகமான விக்கிரயத்தொகை தனக்குச் சேரவேண்டியதாகுமென்றும் ஆக்ஷேபித்தார். கீழ்கோர்ட்டுகளில் வாதிக்கு 15 நெ அயிடமும் சில மரங்களும் கிரயமாகவேண்டியதென்று மட்டும் டிக்கிரீயாச்சுது. பிரதிவாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்து வாதி பிராதில் கண்டிருக்கிற விக்கிரய ஒப்பந்தத்தைப்பூராவும் ருஜுப்படுத்தாதபடியால் வாதிக்கு ருஜுப்படுத்தின பாகத்தை மட்டும் விக்கிரயம் செய்து கொடுக்கும்படி டிக்கிரீயளிக்கக்கூடாதென்றும் பிராது முற்றிலும் தள்ளுபடியாகியிருக்கவேண்டுமென்றும் வாதம்செய்தார். ஹைகோர்ட்டார் பிரதிவாதியின் வாதத்தை ஏற்றுக்கொள்ளாமல் ருஜுப்படுத்தின மட்டில் டிக்கிரீ பெற நியாயமுண்டென்று சொல்லி ஆனால் விக்கிரய பாக்கித்தொகை ரூ 500-ம் வாதி செலுத்தக்கடவதென்று தீர்மானித்து அந்தத்தொகையை மூன்று மாதத்திற்குள் வாதி பிரதிவாதிக்குச் செலுத்தத்தவறினால் வாதியின் பிராது முற்றிலும் தள்ளுபடியாக வேண்டுமென்று உத்தரவு செய்தார்கள். மற்றப்படிக்கு ஜில்லா கோர்ட் டிக்கிரீ காயமாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் அம்சங்களாவன:—

வாதிக்கு எழுதிக்கொடுத்த அடமான தஸ்தவேஜில், விக்கிரய உடன்படிக்கையில்கண்ட சொத்துக்கள் யாவற்றும் கண்டிருக்கிறதா என்பதுதான் முக்கியமாய் கவனிக்கவேண்டிய பாயிண்டாகும். அடமான தஸ்தவேஜில் 15-வது அயிடம் குறிப்பிட்டிருக்கிறது. 16-வது அயிடம் வாஸ்தவமாய் தஸ்தவேஜில் கண்டிருப்பதாய்த் துலங்கினாலும் நம்பரை 16-க்குப் பதிலாக 15 என்று கண்டிருப்பதால் வாதி 16-வது நம்பரைப் பற்றி அப்பீலில் வாதிக்கவில்லை. இரண்டு வீடுகள் அந்நியர்களுடைய சுவாதீனத்திலிருப்பதால் அவைகள் விலக்கப்பட்டதாக அடமான தஸ்தவேஜில் கண்டிருக்கிறது. பிராதில் வாதி கேட்ட சொத்து விவரங்களுக்கும் வாதியால் ருஜுப்படுத்தப்பட்ட சொத்துக்களுக்கும் விலை மதிப்பு வித்தியாஸம் அதிக சொற்பம்தான். தவிர வாதி பொய்யென்று தெரிந்து ஒப்பந்தமில்லாத சொத்துக்களையும் பிராதில் சேர்த்ததாகச் சொல்லத்தகாது. அன்றியும் ஒப்பந்தத்தில் ஏற்படாத சொத்துக்கள் டிக்கிரீயில் சேர்க்கப்படவுமில்லை. வாதி ருஜுவான சொத்துக்களைமட்டும் அடைய சம்மதித்தமையால் அந்தப்படிக்கு டிக்கிரீ செய்தது சட்ட விரோதமல்ல. ஆனால் விக்கிரயத்தொகை பூராவும் செலுத்தப்பட வேண்டியதாகும். ஆகவே அடமான காலத்தில் செலுத்தின தொகை போக பாக்கித்தொகை ரூ 500-ம் வாதி மேற்கண்டவிதமாய் பிரதிவாதிக்குச் செலுத்தவேண்டுமென்று டிக்கிரீயாச்சுது.

---

சீவ் ஜஸ்டிஸ் & ஜஸ்டிஸ் டையர்ப்ஜீ

மங்களூர் ஜில்லா

**A. S. No. 155 of 1910—31 மார்ச்சு 1913**

மங்களூர் ஜில்லா கலக்டர் Vs ஸந்து ராஜசெட்டி

(மங்களூர் ஜில்லாவிலுள்ள ஸாரஸ்வத் குலத்தைச் சேர்ந்தவர்களுக்குரிய அலிய ஸந்தான லாவைப்பற்றிய ஓர் ஸ்வீகார வழக்கு இந்தக் கேசில் பைசலாகியிருக்கிறது. நமது தென் ஜில்லாக்களுக்கு அந்த லா முறைகள் அவசியமில்லாதபடியால் இந்தக்கேசின் விவரம் பூராவும் எழுதப்படாமல் நமக்கு அவசியமான சாராம்சத்தை மட்டும் எடுத்துக்காட்டியிருக்கிறது.

ஒரு குறித்தஜாதியார், குலத்தாருடைய ஜாதி மதாசாரத்தையும் சட்ட முறைகளையும் குறித்தெழுதியிருக்கிற கிரந்தங்கள் அடிக்கடி கோர்ட்டுகளில் தாகலாகி அதில் கண்ட விஷயங்கள் அங்கீகரிக்கத் தக்கவைகளென்று ருஜுப்படுத்தப்பட்டிருந்தால் பின்னால் வரும் ஒவ்வொரு கேசுக்கும் அந்த கிரந்தங்களின் நியாயத்தைப்பற்றி ருஜுப்படுத்த அவசியமில்லையென்று. புஸ்தகத்தை ருஜுபாகமில்லாமலே ரிகார்ட்டில் சேர்த்துக்கொண்டு அதைக்கேசின் தீர்மானத்திற்கா உபயோகிக்கலாமென்றும் மற்றப்படிக்கு யாதொரு ஜாதி வழக்கமுறையானது ஒவ்வொரு கேசிலும் பிரதியேகமாய் ருஜுப்படுத்தப்பட வேண்டுமென்றும், அவ்வித ஜாதி மதாசார வழக்கமானது



இரண்டொரு கேசுகளில் ருஜுவாகியிருந்தபோதிலும் பிந்திய கேசுகளில் அவைகளை ருஜுப்படுத்துவ தவசியமாகுமென்றும், ஒரு குலத்தாருடைய ஆசார ஒழுக்கங்களையும் சட்ட சம்பிரதாயத்தையும் பற்றி எழுதப்பட்டிருக்கிற கிரந்த புஸ்தகங்களைக் கோர்ட்டார் ருஜுபாகமில்லாமல் அங்கீகரிக்கவேண்டிய தவசியமில்லையென்றும் ஒரு விதமான ஆசாரமுறையானது ஒரே சீராக அனுஷ்டிக்கப்பட்டு வருகிற விஷயமானது ருஜுபாகமில்லாமல் அங்கீகரிக்கத்தக்கவையல்லவென்றும், இந்த அப்பீல் தீர்ப்பின் அம்சங்களில் எடுத்துச் சொல்லப்பட்டன.

———:o:———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

திருநெல்வேலி ஜில்லா

**Crl M. P 428 of 1913-18 மார்ச்சு 1914**

நாராயண நாடார்—எதிரி, மனுதார்.

கால் நடைகள் விஷயமாய் நடந்த சச்சரவில் 1912 செப்டெம்பர் 28-ல் அஸ்தமன சமயத்தில் எதிரி-மனுதார் நாராயண நாடார் ஒருவனைக் குத்தினதாக சார்ஜ் செய்யப்பட்டு அந்தக்கேஸானது ஸ்ரீவைகுண்டம் சப் மாஜிஸ்டிரேட்முன் விஜாரணையாகி எதிரி மனுதார் தண்டனையுமடைந்தார். ஷை குற்றம் நடந்த தேதியிலேயே எதிரியின் மாமனார் தூத்துக்குடி போலீஸ் சூப்ரண்டெண்டெண்டுக்கு விபரீதமான ஒரு தந்தி கொடுத்து அதில் பெயர் தெரியாத சிலர் (எதிரியில்லாத சமயத்தில், இந்த வசனம் தந்தியில் ஸ்பஷ்டமாய்க் குறிக்கப்படவில்லை.) எதிரியின் வீட்டில் புகுந்து கொள்ளையடித்துக்கொண்டு ஓடிப்போய் விட்டார்களென்று தெரிவித்திருக்கிறார் எதிரியே நேரில் ஷை தந்தி கொடுத்த தகவலுக்கனுசரணையாக ஆனால் மூன்று வாரம் பொருத்து அதே சப் மாஜிஸ்டிரேட்டிடம் ஒரு பிராது கொடுத்து அதில் தன்பேரில் குற்றஞ்சாட்டியிருக்கிற மனிதனும்(தான் குத்திவிட்டதாக ஏற்பட்டு தண்டனைவிளைவித்த வாதியும்)மற்றும்சிலரும்தான் தூரப்பயணம்போயிருந்த சமயத்தில் தன்வீட்டில் புகுந்து கொள்ளையடித்துப்போய்விட்டார்கள் என்று கண்டிருந்தார். சப் மாஜிஸ்டிரேட்டார் மேற்கூறிய எதிரியின் பிராதில் கண்ட அம்சங்களைப்பற்றி எதிரியிடம் பிரமாண வாக்குமூலம் வாங்கினபிறகு அந்தப் பிராதின் உண்மையைப்பற்றி சந்தேகப்பட்டு அதைப்பற்றி தீரவிஜாரணைசெய்து ரிபோர்ட் அனுப்பும்படி ஷை பிராதை போலீஸாருக்கு அனுப்பிவிட்டார். எதிரியின்பேரில் கொண்டுவரப்பட்டு விஜாரணையான கேஸானது எப்படிப்பைசலாகிறதென்று தெரிந்துகொண்டு, அந்தக்கேசில்எதிரி வாதியைக்குத்தினதாகக் குற்றஞ் சாட்டப்பட்டதற்கு எதிர் ஆன்ஸராக (டிபென்ஸாக) தான் குற்றம் நடந்த தேதியில் ஊரிலேயே இல்லையென்றும் அன்று தன்வீட்டில் வாதியும் மற்றுமனேகரும் புகுந்து கொள்ளையடித்துப் போய்விட்டார்களென்றும் (தந்தியிலும் தான்கொடுத்திருக்கிற பிராதிலும் சொல்லப்படாத அம்சமாக) ஷை கொள்ளையடிக்கும் சமயத்தில் வாதியை யாரோ குத்தியிருக்கிறார்கள் என்றும், சமாதானம் சொல்லி தன்பிராதில் குறிப்பிட்டிருக்கிற சாட்சிகளில் நால்வரையும் மற்றும் சிலரையும் டிபென்ஸ் சாட்சிகளாகவிஜாரித்ததில் சப்மாஜிஸ்டிரேட்டார் அந்த சாட்சிகளையும் எதிரியின் டிபென்ஸ் கதையையும் நம்பாமல் அதைமுற்றிலும் பொய்யென்று அபிப்பிராயப்பட்டு மேல்கண்டவிதமாய் எதிரி தண்டனையடைந்த விஷயத்தைக்கவனித்து, போலீஸார் தங்களிடம் விஜாரணைக்கனுப்பப்பட்டிருந்த பிராதைப் பொய்யென்று சொல்லி மாஜிஸ்டிரேட்டாருக்கு ரிபோர்ட் செய்துவிட்டார்கள். புதிய சப் மாஜிஸ்டிரேட்டாரர் அதாவது எதிரியின்மேல் வந்த கேஸை விஜாரணைசெய்து தண்டித்தவர் மாறிப்போய் அவருக்குப்பதிலாக அதே கோர்ட்டுக்கு நியமிக்கப்பட்டிருந்த வேறொரு சப் மாஜிஸ்டிரேட்டார் போலீஸ் ரிபோர்டைக்கவனித்து எதிரியின் பிராது பொய்யென்றும், எதிரியின்பேரில் செய்யப்பட்டிருக்கிற பிராதில் தப்பிக்கும் பொருட்டு கட்டுமானமாய் இந்தப் பிராதை டிபென்ஸாக எதிரி ஜோடித்திருப்பதாய்ச் சொல்லி கி. பு. கோ 203-வது பிரிவின்படி 1913 ஜனவரி 14-ல் எதிரியின் பிராதை மேல்நடத்தாமல் டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். எதிரி தப்புப்பிராது கொடுத்ததற்காக அவரை கி. பு. கோட் 195-வது பிரிவின்படி ப்ராஸிகியூஷன் செய்யும்படி சப் மாஜிஸ்டிரேட்டார் 1913 ஏப்பிரல் 16-ல் சாங்ஷன் அனுமதியும் கொடுத்தார். மாஜிஸ்டிரேட்டார் தன்னுடைய

பிராதையும் அதில் கண்ட சாட்சிகளையும் சரியானபடி விஜாரணை செய்யாமல் தன் பிராது பொய்யென்று தள்ளுபடி செய்தது பிசகென்று எதிரி ஆக்ஷேபித்தும் அது எற்றுக்கொள்ளப்படவில்லை. எதிரி அதன்மேல் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரிடமும் ஜில்லா ஜட்ஜியவர்களிடமும் விண்ணப்பம் கொடுத்ததில் சாங்கிஷன் உத்தரவு காயமாகி எதிரியின் அப்பீல் இரண்டு கோர்ட்டிலும் தள்ளுபடியாச்சுது. அதன்பேரில் எதிரி மதராஸ் ஹைகோர்ட்டில் மனுச் செய்துகொண்டதில் அங்கும் சாங்கிஷன் அனுமதி காயமாகி எதிரியின் விண்ணப்பம் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் உத்தரவில் சொல்லப்பட்ட முக்கிய அம்சங்களாவன:—

10 மதராஸ் 232-ல் புல்பெஞ்சார் தீர்மானித்திருக்கிறபடி சப் மாஜிஸ்டிரேட்டார் போலீஸ் ரிபோர்ட்டை ஆதாரமாகக்கொண்டு சாங்கிஷன் கொடுத்தது பிசகென்று வாதிக்கப்படுகிறது. ஆனால் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரும் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்களும் தங்கள் உத்தரவில் சொல்லிக்காட்டியிருக்கிறபடி போலீஸார் தங்கள் ரிபோர்டில் முந்திய சப்மாஜிஸ்டிரேட்டினுடைய தீர்மானத்தில் கண்டிருக்கிற அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதிரியின் பிராதில் கண்ட விஷயங்களை குத்துப்பிராதில் டிபன்ஸ் தரப்பில் பரிபூரணமாக விஜாரணையாகி அது முற்றிலும பொய்யென்று முந்திய மாஜிஸ்டிரேட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்க அதே ருஜுபாகத்தைத் திரும்பவும் விஜாரணை செய்து எதிரியின்பேரில் சாங்கிஷன் கொடுக்கவேண்டியது அவசியமில்லையென்று கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். அந்த அபிப்பிராயம் சரியே. 195 (b)-ல் சாங்கிஷன் அனுமதியை கோர்ட்டார் என்னவிதமான ஆதாரத்தைக்கொண்டு கொடுக்கவேண்டுமென்றாவது அல்லது கோர்ட்டார் மறுபடியும் விஜாரணை செய்து சாங்கிஷன் அனுமதி கொடுப்பதவசியமென்றாவது விதிக்கப்படவில்லை. கோர்ட்டார்முன் யாதொரு நடவடிக்கை நடந்து அதில் யாதொரு விஷயத்தின் உண்மை தெளிவாய்த் துலங்கினபிறகு அதே விஷயத்தைப்பற்றிப் பின்னால் புனர்விஜாரணைசெய்து அந்த விஷயத்தைப்பற்றி சாங்கிஷன் அனுமதி கொடுப்பது முற்றிலும் அனாவசியமென்று சொல்லவேண்டும். 10 மதராஸ் தீர்மானத்தில் போலீஸார் ரிபோர்ட்டின்பேரில் மட்டும் சாங்கிஷன் அனுமதி கொடுக்கக்கூடாதென்று சொல்லியிருக்கிறது. தவிர கோர்ட்டார் சரியான ருஜுபாகத்தை அனுசரித்து சாங்கிஷன் உத்தரவளிக்கவேண்டுமென்று ஷை புல்பெஞ்சு தீர்மானத்திலும் அதை அனுசரித்த பிந்திய பற்பல கேஸ்களிலும் சொல்லியிருக்கிறது வாஸ்தவம்தான். ஆனால் அவ்விதமான ருஜுபாகமானது சாங்கிஷன் விண்ணப்ப நடவடிக்கையிலேயே எற்பட்டிருக்க வேண்டிய கட்டாயமில்லை. அல்லது பொய் பிராதாகச் சொல்லப்பட்ட பிராதைப்பற்றி வாதியை (எதிரியை) விஜாரிக்கையில் அவ்வித ருஜுபாகம் எற்பட்டிருக்கவேண்டுமென்ற அவசியமுமில்லை. அந்த 10 மதராஸ் புல்பெஞ்சு கேசின் அம்சத்தைக் கவனித்தால் "ஒரு போலீஸ் கான்ஸ்டேபில் பேரிலும் மற்றும் சிலர் பேரிலும் ஒருவன் கன்னக்களவு குற்றம் சாட்டி பிராது கொடுத்ததில் அது பொய்ப்பிராதென்று போலீஸார் ரிபர் செய்து வாதியை பொய்ப்பிராது கொடுத்ததற்காக ப்ராஸிகியூஷன் செய்யத்தகுமென்று ரிபோர்ட்டில் கண்டிருந்தார்கள். மாஜிஸ்டிரேட்டார் மேற்கூறிய ரிப்போர்ட்டில் கோரப்பட்ட சாங்கிஷன் விண்ணப்பத்தைப் பைசல் செய்யுமுன் ஷை கான்ஸ்டேபிலும் மற்ற எதிரிகளும் அதே வாதிகளை அடிக்கவந்ததாகக் கொண்டுவரப்பட்ட பிராதை விஜாரித்து எதிரிகளை விடுதலை செய்திருக்கிறார்கள். இந்த விடுதலையான கேசின் தீர்மானத்தையும் போலீஸ் ரிபோர்ட்டையும் ஆதாரமாகக்கொண்டு மாஜிஸ்டிரேட்டார் வாதியின்பேரில் பொய்யாக கன்னக்களவுப் பிராது கொடுத்ததாக சாங்கிஷன் கொடுத்தது சட்ட விரோதமல்லவென்று புல்பெஞ்சார் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள்." இந்தக்கேசில் போலீஸார் எதிரியின் கேஸை பொய்யென்று ரிபோர்ட் செய்ததில் முந்திய கேசின் மாஜிஸ்டிரேட்டாருடைய அபிப்பிராயத்தையும் ருஜுபாகத்தையும் ஆதாரமாகக் காட்டியிருக்கிறார்கள். போலீஸார் ரிபோர்ட் செய்யுமுன்னமேயே மாஜிஸ்டிரேட்டார் முந்திய கேசில் எதிரியின் டிபென்ஸ் வாதத்தைப்பற்றி சாட்சி விஜாரணை செய்து முடித்துவிட்டார்கள். ஆகவே போலீஸார் எதிரியின் பிராதைப் பொய்யென்று ரிபர் செய்ததற்கு முந்திய கேசின் நடவடிக்கையே முக்கியமான காரணமாகிறது. முன் எதிரியை தண்டித்த மாஜிஸ்டிரேட் வேறாகவும் சாங்கிஷன் அனுமதி கொடுத்த மாஜிஸ்டிரேட் வேறாகவும் இருக்கிறபோதிலும் கோர்ட் ஒரே கோர்ட்தான். முந்திய தீர்மானம் அதே கோர்ட்டிலுள்ள ரிகார்டாக இருக்கிறது. ஆகவே அந்தத் தீர்ப்பை உபயோகப் படுத்திக்கொண்டு கோர்ட்டார் சாங்கிஷன் அனுமதி கொடுத்தது சரியான நடவடிக்கையாகும். ஆகையால் எதிரியின் மனு தள்ளுபடியாக வேண்டியதென்று ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்யவர்கள் தீர்மானம் செய்தார்கள்.



ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் அதே அபிப்பிராயங்கொடுத்து செய்த உத்தரவில் சில முக்கிய காரணங்கள் எடுத்துக் காட்டப்பட்டன. அவைகளாவன:—

இந்த விண்ணப்பம் கிரிமினல் தரப்பில் செய்யப்பட்ட சில்லரை மனுவாகக் காணப்பட்டபோதிலும் இதை 3-வது அப்பீல் என்று சொல்லவேண்டும். சப் மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவின்பேரில் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டிடமும் அதன்பின் ஜில்லா ஜட்ஜியவர்களிடமும் அப்பீல் செய்தபிறகு ஹைகோர்ட்டில் அதே விஷயத்தைப்பற்றி மனுக் கொடுத்தமையால் அந்த மனுவை 3-வது அப்பீலென்றே சொல்லலாம். சட்டப்படிக்கு எதிரி ஹைகோர்ட்டில் இவ்விதமான பரிகாரம் தேட பாத்தியமுடையவனாக யிருந்தாலும் ஹைகோர்ட்டார் ஒரு வழக்கமுறையாக ரிகார்டுகளில் சட்ட விரோதமான முறை அம்சங்கள் அல்லது ஒழுங்கீனங்கள் மட்டும் எற்படாமல் குற்றமற்ற யாதொருவனை பகைஞர்களுடைய ஹிம்ஸைக்கு ஆளாகாத வண்ணம் ஹைகோர்ட்டார் இத்தகைய 3-வது அப்பீலாக கொண்டுவரப்படும் விண்ணப்பங்களில் பிரவேசித்து உத்தரவளிக்கலாமேயொழிய மற்றப்படி ஹைகோர்ட்டார் இரண்டு கீழ்கோர்ட்டார் கொடுத்த சாங்கிஷன் அனுமதியை ரத்துசெய்ய யத்தனிக்கக்கூடாது. 195-வது பிரிவின் 6-வது கிளாஸின்படி சாங்கிஷன் அனுமதி கொடுக்கப்பட்டால் அப்பீல் அதிகாரி அதை மாற்றலாமென்றாலும் கீழ்கோர்ட் நடவடிக்கைகளில் யாதொரு ஒழுங்கீனம் அல்லது சட்ட விரோதமிருப்பதாய்க் கண்டால் சாங்கிஷன் அனுமதியை ரத்துசெய்ய வேண்டியது கடமையென்று சட்ட கர்த்தாக்கள் உத்தேசித்ததாகச் சொல்லக்கூடாது. அவ்வித சட்டவிரோதமான பாயிண்டுகளும் இந்தக் கேசில் காணப்படவில்லை. எதிரி வக்கில் வாதத்தில் கோர்ட்டார் 476-வது பிரிவின்படி ஒருவனை ப்ராஸிகியூஷன் செய்யும்படி மாஜிஸ்டிரேட்டாரிடம் அனுப்புமுன் பிரதம விஜாரணை செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறதாகவும் ஆகையால் 195-வது பிரிவின்படி கோர்ட்டார் பிராஸிகியூஷனுக்கு அனுமதி கொடுக்குமுன் பிரதம விஜாரணை செய்வதவசியமாகுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் 476-வது பிரிவில் "அவசியமென்று தோன்றினால் பிரதம விஜாரணை செய்தபிறகு" உத்தரவளிக்கலாமென்று சொல்லியிருக்கிறபடியால் கட்டாயமாய் பிரதம விஜாரணை செய்யவேண்டியதவசியமில்லை. 195-வது பிரிவிலோ பிரதம விஜாரணை என்ற வசனமே கிடையாது. ஆகையால் மாஜிஸ்டிரேட்டார் விஜாரணை செய்யாத சட்டக்குறைவென்ற வாதம் பிரயோஜனமில்லை. 34 அலகாபாத 267-ல் 476-வது பிரிவின்படி பிராஸிகியூஷனுக்காக அனுப்புமுன் பிரதம விஜாரணை அவசியமில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க 195-வது பிரிவின்படி சாங்கிஷன் உத்தரவளிக்குமுன் பிரதம விஜாரணை அவசியமில்லையென்றே சொல்லவேண்டும். 26 மதராஸ் 592-ல் 195-வது பிரிவின்படி சாங்கிஷன் கொடுத்ததில் எதிரிக்கு நோடீஸ் அனுப்பாதபடி உத்தரவளித்த குறைவு பாதகமில்லையென்றும், அவ்வித சாங்கிஷன் ரத்தாகத்தக்கதல்லவென்றும் தீர்மானிக்கபட்டிருக்கிறது. போலீஸார் விஜாரித்து அடைந்த அபிப்பிராயத்தை மாஜிஸ்டிரேட்டார் அனுசரிக்கக்கூடாதென்று 10 மதராஸ் தீர்மானத்தால் எற்படுகிறது. இந்தக் கேசில் சாங்கிஷன் கொடுத்த மாஜிஸ்டிரேட்டார் எதிரியின் பிரமாண வாக்குமூலத்தையும் முந்திய கேஸ் தீர்மானத்தையும் கவனித்திருக்கிறார்களென்று சொல்லவேண்டும். போலீஸாருடைய ரிபோர்ட்டையும் கவனித்திருந்தால் அதை கவனித்த பிசகால் சாங்கிஷன் அனுமதி ரத்தாகத்தக்கதல்ல. அப்பீல் கோர்ட்டாராக

தீர்மானித்தபோதிலும் மாஜிஸ்டிரேட்டார் போலீஸ் ரிப்போர்ட்டைக் கவனித்த பிரகாரம் இந்தக்கேசில் பாதகமில்லையென்று சொல்லவேண்டியதாகும். முதல் பார்வையிலேயே எதிரியை தண்டிக்க நியாயமில்லையென்று தோன்றினாலொழிய, அல்லது எதிரி குற்றமற்றவனென்று விளங்கினாலொழிய, அல்லது எதிரியை பிராஸிக்யூஷன் செய்வது யுக்திக்குறைவான காரியமென்று தோன்றினாலொழிய, கீழ்கோர்ட்டார் கொடுக்கிற சாங்கிஷன் அனுமதியை மாற்றக்கூடாது. மேற்கூறிய காரணங்களால் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் எதிரியின் மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

———:0:———

## சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

——()——

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.

S. A. 213 of 1909 – 31 மார்ச்சு 1914

காலாவதி ஆக்ட் 20 (1)-வது பிரிவில் கடன் தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவனாகிலும் அல்லது அவனிடம் ஸ்பெஷலான பவர்பெற்ற ஏஜண்டாகிலும் கடன் தொகைக்குரிய வட்டியைச் செலுத்தின தேதி முதல் ஷை கடன்பாக்கிக்குக் காலாவதி கணிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க கடனாளியானவன் மற்றொருவனுக்கு ஷை கடன் பாக்கியைத் தீர்த்துபத்திரத்தை வாபீஸ் வாங்கிக்கொள்ளும்படி அனுமதி கொடுத்திருந்த காரணத்தால் அந்த மனிதன் கடனுக்குரிய வட்டித்தொகையாதொன்றைமட்டும் செலுத்தியிருந்தால் அவ்வித செல்லானது காலாவதிக்குதவாதென்று தீர்மானிக்கப்பட்டது.

———⌣———

ஜஸ்டிஸ் டையாப்ஜீ & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

S. A. 299 of 1911—31 மார்ச்சு 1914

கூட்டுக் குடும்ப சொத்துக்களை அடமானம் வைத்து அல்லது விக்கிரயம் செய்து அந்தத்தொகையைக் கொண்டு தகப்பன் தன்பேரில்கொண்டுவரப்பட்ட கிரிமினல் கேஸை எதிர்த்து நடத்தும்போது செலவுசெய்தால் அவ்வித அடமானம் அல்லது விக்கிரய நடவடிக்கையானது மகனையும் கட்டுப்படுத்துமென்று தீர்மானிக்கப்பட்டது. குடும்பசொத்தில் மகனுடைய பாத்தியதையானது அந்த அடமான விக்கிரயநடவடிக்கைகளுக்குட்பட்டதாகும். 34 அலகபாத் தீர்மானத்தை அனுசரித்து மேற்கண்ட அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது.

———⌣———

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

C. R. P. 477 of 1913—17 எப்பிரல் 1914

ஒரு டெனண்டானவன் ஒருவன் குத்தகைச் சீட்டு எழுதிக்கொடுத்தபின் ஷை குத்தகைச் சீட்டு விஷயமாய்க் கொண்டுவரப்பட்ட வியவகாரத்தில், சொத்து பாத்தியஸ்தன் வேறென்றும் குத்தகைச் சீட்டு எழுதி வாங்கினவன் பெயரிரவல்காரனென்றும் ஆகையால் அவன் வியாஜ்ஜியம் நடத்த அதிகாரமில்லையென்றும் டெனண்டு ருஜூப்படுத்தி எதிர்வாதம் செய்யலாமென்றும் எவிடென்ஸ் ஆக்ட் 116-வது பிரிவின்படி குத்தகைச்சீட்டை எழுதிவாங்கினவன் பெயரிரவல் காரனென்று ருஜூப்படுத்தலாமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

———( )———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர்

C. S. 448 of 1912—9 எப்பிரல் 1914

மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் ரூபா. 2500-க்கு மேல்பட்ட வியாஜ்ஜியங்கள் நடத்தவேண்டியதில், அவ்வித கேஸ்களை ஹைகோர்ட் வக்கில்கள் தனிமையாக வக்காலத்து வாங்கி நடத்தலாம். பாரிஸ்டர் அவ்வித வியாஜ்ஜியங்களை நேரில் கக்ஷிக்காரனுடைய தகவலின்பேரில் நடத்துகிற வழக்கமும் முறையும் கிடையாது. அட்டார்னியென்ற பெயரால் வழங்கும் லாயர்கள் அவ்வித வியாஜ்ஜியங்களையும் மற்ற அசல் தரப்பு நடவடிக்கைகளையும் நடத்துவதற்காக வக்காலத்து வாங்கிக்கொண்டு பிராது விண்ணப்பம் முதலிய ரிகார்டுகளைத் தயாரித்து கோர்ட்டில் தாகல் செய்து! அதற்குரிய சில்லரை நடவடிக்கைகளையும் நடத்தி ஈரங்கி பேசுவதற்காக பாரிஸ்டர் யாதொருவரை நியமிக்கவேண்டும். அதாவது அட்டார்னிகள் நேரில் கேஸை நடத்தி ஈரங்கி பேசக்கூடாது. ஆனால் சொற்பகாலங்களுக்கு முன்



ஒரு ஹைகோர்ட் வக்கில் தானே ஷை வழக்குகளை நடத்தக்கூடுமானாலும் அவர் ஒரு பாரிஸ்டருக்கு கேஸின் அம்சங்களைத் தெரிவித்து அந்த பாரிஸ்டருக்கு உதவியாகவிருந்து அவரைக்கொண்டு கேஸை நடத்தலாமென்று கோர்ட்டாரால் அனுமதி கொடுக்கப்பட்டது. அட்டார்னியானவர் பாரிஸ்டரைக்கொண்டு நடத்தும் வழக்குகளின் தீர்மானத்தில் செலவுதொகை விஷயமாக வக்கில் பீஸ் வகைக்காக அட்டார்னிக்கு இன்னவிகிதமென்றும் பாரிஸ்டருக்கு இன்ன விகிதமென்றும் ஏற்பட்டிருக்கிற பிரகாரம் டிக்கிரீயில் உத்தரவளிக்கப்படுகின்றன. ஆனால் ஒரு வக்கில் தனிமையாக நடத்தக்கூடியதாக யிருக்க அவர் ஒரு பாரிஸ்டரையும் கூடவைத்துக்கொண்டு கேஸை நடத்தினால் தோல்வியடைந்த எதிரி இருவருக்குமுள்ள பீஸைக் கொடுக்கவேண்டுமென்ற பாயிண்டானது மேற்படி வியாஜ்ஜியத்தில் வாதம் செய்யப்பட்டு கேஸை விஜாரணைசெய்யும் கோர்ட்டார், யாதொரு கேஸானது பாரிஸ்டரைக்கொண்டு நடத்தத் தகுந்ததென்று அபிப்பிராயப்பட்டு அந்தப்படி ஸர்டிபிகேட்கொடுத்தால் மட்டும் வக்கில் பாரிஸ்டர் இருவருக்குமுள்ள பீஸ் தொகையை எதிரி கொடுக்கும்படி டிக்கிரீயளிக்கலாமென்று தீர்மானமாச்சுது.

———⌢———

ஜஸ்டிஸ் ஏய்லிங் & ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்

C. M. A. 8 to 12 of 1913

16 எப்பிரல் 1914

ஒரு இனாம்தார் தன்னுடைய இனாம் நிலங்கள் எஸ்டேட் லாண்ட்ஸ் ஆக்ட் 3-வதுபிரிவின் 2-வது உட்பிரிவில் கண்டபடி எஸ்டேட் நிலங்களைச் சேர்ந்தவைகளல்லவென்று ஸ்தாபிக்கவேண்டுமானால் நிலத்தை அனுபவிக்கிற ரயட்டுகளுக்கு குடிவார பாத்தியதை (சுவாதீன பாத்தியதை) கிடையாதென்ற விஷயமும் குடிவார பாத்தியதையானது இனாம்தாரிடமிருக்கிற விஷயமும் போதுமான ருஜூபாகமல்லவென்றும், ஆதியில் கிராண்டு கொடுக்கப்படும் காலத்திலேயே இனாம்தார் கிராம முழுவதிலும் குடிவார பாத்தியதையை உடைத்தாயிருந்ததாகச் சொல்லத்தக்கவிதமாய் அந்த கிராமத்திலுள்ள சாகுபடிக்கு லாயக்கான நிலங்களெல்லாவற்றையும் இனாம்தாரே சாகுபடி செய்துவந்த ரயட்டாக இருந்தாரென்றும், அல்லது கிராண்டுக்குப்பின் இனாம்தார் ஒரு மூன்றாவது மனிதனிடமிருந்து குடிவார பாத்தியதையை கிரயம் அல்லது மற்ற விதமான வகையால் அடைந்திருப்பதாகவும் ருஜூப்படுத்தவேண்டியதவசியமாகுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

———o———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

Crl A. 50 & 51 of 1914—16 எப்பிரல் 1914

கிரிமினல் புரொஸிஜர் கோட் 195 வது பிரிவின் 6-வது கிளாஸில் ஏற்பட்டிருக்கிறபடி ஒருவனை ப்ராஸிக்யூஷன் செய்யவேண்டுமென்று அனுமதிகேட்டு அனுமதி கொடுக்கப்பட்டால் அதுமுதல் 6-மாதகால தவணைக்குள் ப்ராஸிக்யூஷன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டியதாகும். மனுதார் அனுமதி கேட்டும் முதல் கோர்ட்டார் மறுத்துவிட்டால் அதன்பேரில் அப்பீல் செய்து அனுமதிபெறலாம். 6 மாத வாய்தாவானது அப்பீல் கோர்ட்டாருடைய அனுமதி உத்தரவு பிறந்த நாள் முதல் கணிக்கப்படவேண்டுமென்றும் முதல்கோர்ட்டார் அனுமதிகொடுத்திருந்தால் அதன்பேரில் எதிரி அப்பீல்செய்து அப்பீல் தள்ளுபடியாகியிருக்கும்பட்சத்தில் 6-மாத வாய்தா, அப்பீல் தள்ளுபடியாகி அனுமதி உத்தரவு காயமான தேதி முதல் கணிக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. எதிரி அப்பீல் செய்த காரணத்தால் அப்பீல் பைசலாகுமட்டும் மனுதார் நடவடிக்கை நடத்த ஏதுவாமில்லாமற் போய்விடுகிறதால் அப்பீல் பைசல் தேதியிலிருந்து வாய்தாவை கணிக்கவேண்டியது நியாயமாகும்.

———o———

ஜஸ்டிஸ்சதாசிவய்யர்&ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

ராமனாதபுரம் ஜில்லா

C. R. P. 95 & 96 of 1913–13 மார்ச்சு 1914

வெள்ளையப்ப செட்டி

*Vs*

சுப்பிரமணியஞ் செட்டி

பிரதிவாதி 1908 மே 18-ல் வாதிக்குக் கொடுத்த உண்டியில் பாக்கித் தொகையை உண்டி எழுதிய தேதிமுதல் 180 தினங்கள் கடந்ததும் செலுத்திவிடுவதாகவும் சட்டப்படி ஏற்பட்டிருக்

கிறபடி கெடுவுக்குமேல்பட்ட மன்னிப்பு வாய்தா தினங்கள் தேவையில்லையென்றும், கண்டிருந்தது. 180 தினங்கள் 1908 நவம்பர் 14௳-யோடு முடிந்தமையால் காலாவதி ஆக்ட்படிக்கு வாதி உண்டியில் கண்ட தொகையை வசூலிக்க கெடு தேதியாகிய 1908 நவம்பர் 14-முதல் மூன்று வருஷத்திற்குள் பிராது செய்யவேண்டியதாயிருக்க 1911 நவம்பர் 15௳-யில் பிராது செய்யவே பிரதிவாதி அந்தப் பிராதுக்குக் காலாவதி தோஷமென்று எதிர்வாதம் செய்தார். வாதியோ உண்டியில் கண்ட ஒப்பந்தப்படி மன்னிப்பு வாய்தா 3-தினங்கள் தேவையில்லையென்று ஏற்பட்டிருந்தபோதிலும் அந்த ஒப்பந்தமானது சட்டத்தில் ஏற்பட்டிருக்கிற சிலாக்கியத்திற்கு விரோதமாயிருக்கிறதென்றும், ஆகையால் அந்த ஒப்பந்தம் செல்லத்தகாதென்றும், ஆகையால் 180 தினங்கள் 14 நவம்பரில் முடிந்தபோதிலும் மன்னிப்பு தினங்களைக் கூட்டிப்பார்த்தால் சரியான கெடுத்தேதி 17 நவம்பர் 1908-என்றும், அதுமுதல் 3-வருஷ காலாவதி கணிக்கப்படவேண்டுமென்றும், ஆகையால் 15 நவம்பர் 1911-ல் கொடுக்கப்பட்ட பிராதுக்குக் காலாவதி தோஷம் கிடையாதென்றும், சமாதானம் சொன்னார். ராமனாதபுரம் சப்கோர்ட்டார் வாதியின் சமாதானத்தை ஒப்புக்கொள்ளாமல் வாதியின் பிராதுக்கு காலாவதி தோஷமென்று தீர்மானித்ததும் தவிர பிராதுக்கு இரண்டு வாதிகள் ஏற்பட்டிருக்க அதில் 2-ம் வாதிமட்டும் கையொப்பம் செய்து தாகல் செய்தமையால் 1-ம் வாதியின் கையொப்பமும் செய்யவேண்டியதற்காகபிராதைவாபிஸ்செய்தது மேல் 1-ம் வாதியின் கையொப்பத்துடன் பிராதை திரும்பவும் தாகல் செய்யும் தேதியில் பிராதுக்கு காலாவதி கடந்துவிட்டமையால் அந்தக் காரணத்தாலும், பிராதுக்கு தோஷம் சொல்லி, 2-ம் வாதி 1-ம் வாதிக்காக பிராதில் கையொப்பம் செய்ய அதிகாரம் பெற்றிருந்ததாக ருஜூப்படுத்தப்படவில்லையென்றும் சொல்லி கடைசியாக வாதியின் பிராதை செலவுடன் டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்ததில் ஷை விண்ணப்பத்தை விசாரங்கேட்ட ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்களும் இரண்டாவது பாயின்டைப்பற்றி ஒரே அபிப்பிராயமாக 1-ம் வாதி பிராதில் கையொப்பம் செய்து பிராதை கோர்ட்டில் தாகல் செய்யும்பொழுது பிராதுக்குக் காலாவதி தோஷமாச்சுதென்றும், 1-ம் வாதிக்காக பிராதில் கையொப்பம் செய்ய 2-ம் வாதிக்கு அதிகாரமுண்டென்று நம்பாமல், 2-ம் வாதி 1-ம் வாதிக்காகக் கையொப்பம் செய்ததை 1-ம் வாதி அங்கீகரித்தபோதிலும் அவ்வித அங்கீகாரமானது பிராதுக்குக் காலாவதி கடந்தபின் ஏற்பட்டதாகுமென்றும், அவ்வித அங்கீகாரத்தை பிரதிவாதியின் ஆக்ஷேபனைக்கு சமாதானமாகப் பிரயோகிக்கக்கூடாதென்றும் தீர்மானித்து வாதியின் ரிவிஷன் மனுவைத் தள்ளுபடி செய்தார்கள்.

மன்னிப்பு வாய்தா தினங்களைக் காலாவதி கணிப்பதில் கூட்டலாமா கூடாதா என்ற முதலாவது பாயின்டைப்பற்றி இரண்டு நியாயாதிபதிகளும் வித்தியாசமான அபிப்பிராயம் கொடுத்தார்கள். ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் அபிப்பிராயமாவது:—

''ஒரு பிராமிஸரி நோட் தொகையை உடையவர் வேண்டும் போதாகிலும் நோட்டைக்கண்ட உடனாவது செலுத்திவிட வேண்டுமென்ற வசனங்கள் காணப்படாதபக்ஷத்தில் அந்தநோட்டில் குறிப்பிட்ட வாய்தாவுக்குமேல் 3-நாள் அதிகவாய்தா கொடுக்கப்பட வேண்டுமென்று (Negotiable-Instruments Act) சட்டத்தின் 22-வதுபிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறது. அவ்விதமான நோட் வகையில் உண்டியும் சேர்ந்ததாகும். ஆகவே ஒரு உண்டியில் தொகை செலுத்தவாய்தாக் குறிப்பிட்டிருக்கிற கெடுவுக்குமேல் 3-தினங்கள் அதிகவாய்தா ஏற்பட்டு, காலாவதி கணிப்பதற்கு அந்த மூன்று மன்னிப்பு வாய்தா தினங்களும்சேர்க்கப்படவேண்டியதாகும். தாவா உண்டியில் மன்னிப்பு வாய்தாதினங்கள் கிடையாதென்று ஸ்பஷ்டமாய்க்குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே ஒரு சட்டமுறையில் ஏற்பட்டிருக்கிற அம்சத்தைத்தேவையில்லையென்று செய்துகொண்ட ஒப்பந்தம் செல்லுமாவென்று யோஜிக்குமிடத்து சட்டத்தின்வசனங்களுக்கு மாறி ஒப்பந்தம் செய்யக்கூடாதென்றே சொல்லவேண்டும். காண்ட்ராக்ட் ஆக்ட், ப்ராபர்டி ஆக்ட் முதலிய ஆக்ட்களில் ஒப்பந்தம் செய்துகொள்ளும் இருதரத்தாரும் வேறுவிதமான ஏற்பாடுசெய்து கொள்ளாதபக்ஷத்தில் ஷை ஆக்ட்களின் முறைப்படிக்கு நடந்துகொள்ளவேண்டுமென்று பற்பல பிரிவுகளில் சொல்லியிருக்கிறது. ஆனால் (Negoitable Instruments Act) 22-வது பிரிவில் உண்டி அல்லது நோட்டில் குறிப்பிட்ட வாய்தாவுக்குமேல் 3நாள் அதிகவாய்தா உண்டென்று தெளிவாய்ச் சொல்லப்பட்டு அதில் பார்டிகள் வேறுவித ஏற்பாடு செய்துகொள்ளக்கூடிய சவுகரியம் வசனிக்கப்படவில்லை. அதனால் சட்டத்தின் அம்சத்திற்கு விரோதமாக மூன்று தினங்கள் மன்னிப்பு வாய்தாகெடுவுடன் சேர்க்கத் தேவையில்லை என்ற ஏற்பாடு செல்லத்தகாதென்று சொல்லவேண்டும். இங்கிலீஷ்லாவில் (Bill of Exchange Act Section 14) பார்டிகள் இஷ்டப்பட்டால் மன்னிப்பு வாய்தாமுறையை நீக்கி கெடுவை இஷ்டமான ஒரு தேதியாகக் குறிப்பிடலாம். தவிர இங்கிலீஷ் லாப்படிக்கு மன்னிப்பு வாய்தாவைப்பற்றி உண்டியில் யாதொரு வசனமும் ஏற்படாமலிருந்தால் அந்த மன்னிப்பு வாய்தாவைச் சேர்க்கலாமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தியன் ஆக்டில் அவ்வித சவுகரியமில்லை. ஆகையால் சட்ட முறையை விலக்கின ஏற்பாடு செல்லாதென்று தாவா உண்டியில் மன்னிப்பு தினங்கள் விலக்கப்பட்டபோதிலும் இந்த பிராதுக்கு காலாவதி 17 நவம்பர் 1908-முதல் கணிக்கப்பட வேண்டுமென்றும் ஆகையால் வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷமில்லையென்று சொல்லவேண்டும்.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்களோ அந்த அபிப்பிராயத்திற்கு மாறாக ஜனங்களுடைய பரஸ்பர சவுகரியத்திற்காக ஏற்பட்டிருக்கும் சட்டமுறைக்கு மாறான ஒப்பந்தத்தால் பாதகமில்லையென்றும், ஒருவன் சட்டத்தில் அளிக்கப்பட்டிருக்கிற 3 தினமாகிய மன்னிப்பு வாய்தா அவசியமில்லையென்று ஒப்புக்கொள்ளும்பொழுது வாதிக்குக் காலாவதி சவுகரியம்கூடிவரும்பொருட்டு அந்த மன்னிப்பு வாய்தாவையும் ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தக் கூடாதென்றும் ஆனால் ஜனங்களுடைய பொது நன்மையை உத்தேசித்து ஏற்பட்டிருக்கிற ஒரு சட்ட முறையை மீறி ஒப்பந்தம்செய்தால் அது பிசகாகுமென்றும், (திருஷ்டாந்தமாக ஞாயிற்றுக்கிழமை முதலிய ரஜா நாட்கள் பொது நன்மையை உத்தேசித்து ஏற்பட்டிருப்பதால் அது விஷயமாய் பார்டிகள் விபரீத ஏற்பாடு செய்துகொள்ளக் கூடாது.) ஒருவன் யாதொரு உத்தியோகஸ்தானத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டால் அது சட்ட முறைகளுக்கு விரோதமாகயிருக்கக்கூடாதென்றும் தாவா உண்டி விஷயமாய் ஏற்பட்டிருக்கிற சட்ட முறையானது இரு கக்ஷிக்காரருடைய சவுகரியத்திற்காக ஏற்பட்டிருக்கிறபடியால் அதை மீறி அதற்கு மாறான ஏற்பாடு செய்துகொள்வதில் யாதொரு பிசகுமில்லையென்றும், ஆகையால் தாவா உண்டிக்கு கெடுவாய்தா ஒப்பந்தப்படிக்கு 1908 நவம்பர் 14௳ ஆனதால் தாவா பிராது 1911 நவம்பர் 14-ல் செய்யப்பட வேண்டியதாயிருக்க 15௳-யில் கொடுத்த பிராது காலாவதி தோஷமென்று சொல்லவேண்டும்.

இந்தப் பாயின்டு விஷயமாய் இரண்டு நியாயாதிபதிகளும் வித்தியாஸ அபிப்பிராயங்கொடுத்தும் மற்றொரு பாயின்டில் இருவரும் ஒற்றுமையாக வாதியின் பிராது காலாவதி தோஷமென்று அபிப்பிராயப்பட்டபடியால் ரிவிஷன் விண்ணப்பம் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

விசாகப்பட்டணம்.

S. A. 2299 of 1912—12 மார்ச்சு 1914

சரியாகு சின்னமகாதேவ வாஜாலு

*Vs*

முத்தர சூரியபிரகாசம்

விசாகப்பட்டணத்தைச்சேர்ந்த சேமூடு ஜமீன்தாரியில் ஜமீன்தார்களுடைய வம்சத்தாருக்கும் ஜமீன் கிராமங்களிலுள்ள ஜனங்களுக்கும் வாதி வகையறாக்கள் பரம்பரையான புரோகிதர்களென்றும் (பூர்வக்கிரியைகளையும் உத்திரகிரியைகளையும் மந்திர தந்திர பூர்வமாக நடத்திவைக்கிற உபாத்தியாயர்களென்றும்) மாமூலாக வாதிகள் பிரதிவாதியை அந்த உத்தியோகத்தை நடத்திவரும்படி நியமித்து பிரதிவாதி வாதிகளுக்காக ஷை ஜமீனில் புரோகிதம் நடத்திவந்து வருஷந்தோறும் வாதிக்கு ரூ. 12 விகிதம் (நீர்வை) யாக செலுத்திவருவதாய் பிரதிவாதி ஒப்புக்கொண்டிருப்

பதாயும் அவ்விதமான வருஷவிகிதத்தைசெலுத்த பிலவங்க வருஷத்திற்குச் சரியான (1907-08) வருஷத்திற்கு பிரதிவாதி செலுத்தத்தவறினபடியால் அந்தத்தொகையை அடையும்பொருட்டு வாதிகள் பார்வதிபுரம் டி—மு கோர்ட்டில் பிரதிவாதியின்பேரில் பிராது செய்யவே அங்கும் அப்பீலில் விசாகப்பட்டணம் சப்கோர்ட்டாரும் வாதி பிராதில் சொன்ன ஒப்பந்தத்தைப் பற்றி சரியானபடி ருஜுப்படுத்தாதபடியால் பிலவங்கவருஷத்திற்குறிய விகிதத்தை வாதி அடைய பாத்தியமில்லையென்று சொல்லி பிராதை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கும் வாதிக்குப் பிரதிகூலமாக ஏற்பட்ட தீர்மானச்சுருக்கமாவது:—

பிலவங்க வருஷத்திற்காக பிரதிவாதியுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் ருஜுவாகவில்லையென்ற காரணத்தால் வாதியின் பிராதை சப்கோர்ட்டார் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்வதற்கு அந்தக் காரணம் அவசியமில்லை. யாதொருவன் புரோகித உத்தியோகத்தைத் தானே நடத்திவர பாத்தியமுடையவனென்றும் யாதொரு கிராமத்திற்கு அல்லது கிராமங்களுக்கு ஒருவனே புரோகிதம் நடத்திவர பாத்தியமுடையவனென்றும் சொல்லி அவ்வித பாத்தியதையைக் கோர்ட் மூலமாய் ஸ்தாபிக்கக் கூடாதென்றும், அவ்வித உத்தியோகத்தைக் கோர்ட்டார் மேல்கண்டவிதமாய் பிரயோகிக்கும் பொருட்டு அங்கீகரிக்கக் கூடாதென்றும், உறுதியாகச் சொல்லத்தகும். 21 மதராஸ் லா ஜர்னல் 57-ன் 63-வது பக்கத்தில் அட்வொகேட் ஜெனரல் அவர்கள் வாதித்தபடி புரோகித உத்தியோகத்தில் யாதொருவனுக்கு ஏகபோகமான பாத்தியதையைக் கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அப்படிச் செய்வது ஜனப்பொது நலத்திற்கு விரோதமாகும். பிராமண ஜாதியில் ஒவ்வொரு புமானும் உபாத்தியாயத்திற்குறிய மந்திர தந்திர விதிகளைக் கற்றறிந்து பரஸ்பரமாக உதவி செய்யவேண்டியது சாஸ்திரமுறையாகும். உபாத்தியாயம் பண்ணிவைக்கிறவனுக்கு யஜமான கர்த்தா ஸ்வய இச்சையாக பிரதிப்பிரயோஜனமாக என்ன தக்ஷிணை கொடுத்தபோதிலும் அதைப் பெற்றுக்கொள்வதும் பண்ணிவைக்கிறவனுடைய கடமையாகும். அப்படியிருக்க அதாவது பிராமணர்களனைவருக்கும் பொதுவான ஒரு விருத்தியை (தொழிலை) ஒருவன்மட்டும் தனிமையாக அனுசரித்து நடத்திவர பாத்தியம் கொண்டாடுவது சாஸ்திர விரோதமாகவும் ஜனப்பொதுவான தர்ம நியாயத்திற்கு விபரீதமுமாகவும் ஏற்படுவதால் அதைப் பற்றிய வியவகாரத்தைக் கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளக்கூடாது. புரோகித உத்தியோகத்தை மற்றவன் பேரில் மாற்றி அவன் அடையும் பலனில் பங்கு விகிதம் பெறும்படியான பாத்தியதையின் கருத்து சாஸ்திர அனுமதியுடையதல்லவென்று சொல்லவேண்டும். யாவருக்கும் பொதுவான தொழிலில் ஒருவன் பிரத்தியேகமான சுதந்தரத்தை அடையக்கூடாது. ஆனால் ஒரு தொழிலை நடத்திவந்த வாதியுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட மற்றொருவனுக்கு விரோதமாக வாதி யாதொரு பாத்தியதையை அடையக் கூடும். ஏனெனில் வாதி அத்தொழிலை நடத்திவந்த காரணத்தால் யாதொரு நன்மை லாபத்தை ஒப்பந்தம் செய்துகொண்டவன் அடைந்திருக்கும் சந்தர்ப்பங்களுண்டு. இந்தக்கேசில் வாதிகள் தாவா ஜமீனில் உத்தியோகபாத்தியதையை கேட்பது மன்றி அதைப் பாரம்பரையாக நடத்திவரும்பாத்தியதையையும்பிராதில்கோரியிருக்கிறார்கள். அது கிடைக்கத்தக்க பரிகாரமல்ல. 1911-ம் வருஷத்திய 2-வது அப்பீல் 1470, 1471-ல் எவ்வித உத்தியோகத்திற்கும் முக்கியமாய் ஆத்ம நன்மைக்குறிய கிரியைகளை அனுசரித்த தொழிலுக்கும் பரம்பரை பாத்தியதை அளிக்கக்கூடாதென்று ஸ்பஷ்டமாய் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் ஆத்ம நன்மைக்குறிய கிரியைகளை நடத்திவருகிற உத்தியோகிகளுக்கு தகுந்த யோக்கியதை இருக்கவேண்டுமென்றும் அவ்வித யோக்கியதை இல்லாவிடில் பரம்பரை பாத்தியதை பயனற்றதாகுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 13 கல்கத்தா லா ஜர்னல் 449-ன் 451 முதல் 453ம் பக்கங்களில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் முகர்ஜீயவர்கள் ஒரு தேவாலயத்திலுள்ள விக்கிரகத்தைத் தொட்டு பூஜை செய்யும் பிரத்தியோக பாத்தியதையைக் கோர்ட்டார் அங்கீகரிக்கலாமென்ற போதிலும் அவ்வித பூஜை அர்ச்சனை முதலிய கிரியைகளை நடத்தும்



பாத்தியதையுள்ளவர்களுக்கு யாத்திரிகளும் பக்தர்களும் ஸ்வய இச்சையுடன் அர்ப்பிக்கிற காணிக்கைகளில் பாத்தியதையை கோர்ட்டார் அங்கீகரிக்கக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்

பம்பாய் ராஜதானியில் சில குடும்பத்தாருக்கும் சில கிராமங்களுக்கும் புரோகித பாத்தியதை குறித்த சிலருக்கு ஏற்படக்கூடியதாகுமென்று சொல்லி அது விஷயமாய் கோர்ட்டாரும் தலையிட்டு தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். வரும்படிகளிலும் அவ்வித புரோகிதர்களுக்கு பாத்தியம் ஏற்பட்டிருக்கிறது. பக்தர்கள் ஸ்வய இச்சையாகக்கொடுக்கும் காணிக்கைகளிலும் அவர்களுக்கு பாத்தியம் உண்டென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. புரோகித பாத்தியஸ்தர்களல்லாத மற்றவர்கள் உத்தியோகத்தை நடத்தி யாதொரு வரும்படியைப் பெற்றால் அவைகளை பாத்தியஸ்தர்கள் அடைய தாவாசெய்து வசூலித்துத் தங்கள் பாத்தியதையைக் கோர்ட் மூலமாய் ஸ்தாபித்திருக்கிறார்கள். பம்பாயில் வெகு காலமாய் அனுஷ்டிக்கப்பட்டுவரும் இந்த வழக்கத்தை மாற்ற சாத்தியமாகாது. புரோகிதத்தை ஸ்வதந்தரமாய் ஒருவனே நடத்திவரும்படியாக, அதிகாரமும் பாத்தியதையையும் கொடுக்கப்படக் கூடாதென்றே தெளிவாகத் தோன்றுகிறது. அது விஷயமாய்க் கோர்ட்டார் வியவகாரத்தை ஏற்றுக்கொள்ளத்தகாது. ஆனால் யாதொரு புரோகித கைங்கரியம் செய்வதற்காக வெகுமதி வாக்களிக்கப்பட்டு அந்தக்காரியம் முடிந்தபிறகு வெகுமதியை அடைய தாவா செய்யலாம். இவ்வித உத்தியோகத்தை மற்றவர்களுக்கு ஒப்படைக்கவாவது அடமானம் வைக்கவாவது கூடாது. அது சாஸ்திர விரோதமாகவும் ஜனப்பொது நலத்திற்கு விபரீதமாகவுமிருக்கிறது. (ஆகவே வாதிகள் பிரதிவாதியோடு ஒப்பந்தம் செய்துகொள்வது சாஸ்திரவிரோதமாகும்.) மேற்கூறிய காரணங்களால் வாதியின் தாவா தள்ளுபடியாக வேண்டியதென்று தீர்மானமாகி 2 வது அப்பீலும் தள்ளுபடியாச்சுது.

மேற்கூறிய அபிப்பிராயத்திற்கு ஒற்றுமையாகத் தீர்மானங்கொடுத்த ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் சொன்ன வேறு சில காரணங்களாவன:- வாதிகள் தாவா கிராமத்திற்குப் பரம்பரையாய் புரோகிதம் செய்துவருவதாய் சப்கோர்ட்டார் நம்புகிறார்கள். அதனால் தாவா கிராமத்திய ஜனங்கள் வாதிகளின் வம்சதாரரையே வழக்கமாய் வைதிககாரியங்களுக்கு உதவிசெய்யும்படி அழைத்து வந்ததாகவென்று ஏற்படுமேயொழிய அதற்கு மேலான கருத்து யாதொன்றும் ஷை சப் கோர்ட் அபிப்பிராயத்தால் துலங்கக்கூடியதல்ல. 25 வருஷங்களுக்கு முன் அதாவது 7 மதராஸ் 424 ல் வழக்கமாய் ஒரு குறித்த புரோகிதரைக்கொண்டு வைதீகத்தை நடத்திவருகிறவர்கள் இதரமான புரோகிதர்களைக் கொண்டு அவைகளை நடத்திக்கொள்ளக் கூடாதென்று கோர்ட்டார் தடுக்க நியாயமில்லையென்று தீர்மானமாகி அதே தீர்மானம் நாளதுவரையில் அனுசரிக்கப்பட்டுவருகிறது. 21 மதராஸ் லா ஜர்னல் 57 ஐப்பார்க்கவும். புரோகிதம் ஒரு உத்தியோகமேயல்ல, அது பரம்பரையான உத்தியோகமுமல்ல. அது குத்தகைக்கு ஒப்படைக்கப்படக்கூடிய அசையாப் பொருளுக்கொப்பாகாது. தவிர இந்தக்கேசில் யாதொரு வைதீக காரியங்களை நடப்பித்ததற்காக பிரதிவாதிகள் அடையும் பிரயோஜனங்களில் வாதிகளுக்கு யாதொரு பாகமும் கொடுப்பதாய் பிரதிவாதி ஒப்புக்கொண்டதாக வாதிகள் ருஜுப்படுத்தவேயில்லை. இரண்டுவருஷங்களுக்குறிய எழுத்துமூலமான யாதொரு உடன்படிக்கையை எக்காலத்திலும் பிரயோகிக்கத்தக்கப்படி பிரதிவாதிகள் வசூலிக்கும் புரோகித வருமானத்திலிருந்து எக்காலத்திலும் பாகம் கொடுக்கவேண்டியதாக அனுமானிக்கக் கூடாதென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். அந்த அபிப்பிராயத்திற்கு விரோதமாய்த் தீர்மானிக்க நியாயமில்லை. ஆகையால் சப்கோர்ட்டார் தீர்ப்பு சரியென்று சொல்லி இந்த 2 வது அப்பீல் தள்ளுபடியாச்சுது.

———:O:———

## அலகபாத் ஹைகோர்ட் தீர்ப்பின் மேல் பிரிவி கௌன்ஸிலில் அப்பீல்

முஸ்ஸம்மாத் பக்தவார்பேகம்

*Vs*

முஸ்ஸம்மாத் ஹுஸேய்னி கானம்

1830 ஜனவரி 6-ல் வாதி ஹுஸெய்னிகானம் என்றவருடைய தகப்பனார் அமான் அலி

என்ற ஒரு சமீப பந்துவுடன் சேர்ந்து கான்பூர் ஜில்லாவிலுள்ள 12 கிராமங்களை காலஞ்சென்ற அடாவுல்லாகான் சாகிப் என்றவருக்கு அடமானம்வைத்து வாங்கிய கடனை 9 வருஷங்களுக்குள் கொடுத்து அடமானத்தை மீட்டுக்கொள்வதாயும் தவறினால் அடமானம் சொத்து விக்கிறயமானதாக பாவிக்கப்படவேண்டுமென்று ஒப்புக்கொண்டிருந்தார்கள். அடமான சொத்துக்கள் அடமானதார்களுடைய சுவாதீனத்திலும் அநுபோகத்திலும் விடப்பட்டிருந்தது. 1899-ம் வருஷம் ஜனவரி 6-ல் வாதி கான்பூர் சப்கோர்ட்டில் அடமான சொத்துக்கள் மீட்டுக்கொள்ளும் பொருட்டு செய்த பிராதில் 9 வருஷ காலத்திற்குள் அடமான சொத்தின் வருமானத்திலிருந்து சர்க்கார் தீர்வை, மிகுதி ஏற்படும் தொகைகளை கொண்டு அடமானக் கடன் பூராவும் தீர்க்கப்படுமானால் 9 வருஷ காலத்திற்குள்ளாகவே தாவா சொத்துக்களைத் திரும்பியடைய பாத்தியமுண்டென்றும் இருவருக்குமுறிய ஏற்பாட்டின்படி மேற்கண்டவிதமாய் அடமானக் கடன் தீர்ந்தாலும் அல்லது அடமானதொகையை 9 வருஷங்களுக்குள்ளாகவும் அல்லது அதற்குப்பின்னும் செலுத்தி விட்டாலும் சொத்தை அடமானதார் திருப்பிக்கொடுத்துவிடக் கடவதென்றுசொல்லி 1833லேயே அடமானதாருக்கு தாவா சொத்தின் வரும்படியிலிருந்து அசல் தொகை பூராவும் செல்லாகி விடப்பட்டபடியால் வாதி அடமான சொத்தை மீட்பதற்கு லாயக்காகி விட்டதாகவும் அன்றியும் தனக்கு அடமானதார்களால் தொகை சேரவேண்டியதாகுமென்றும் பிராதில் கண்டிருந்தார். சப் கோர்ட்டார் வாதியின் பிராதுக்கு காலாவதி தோஷம் சொல்லி அதாவது அடமானம் பிறந்த தேதி முதல் 60 வருஷங்களுக்குப்பின் இந்தப்பிராது செய்யப்பட்டதினால் பிராது செல்லத்தகாதென்று தீர்மானித்தார்கள். அலகாபாத் ஹைகோர்ட்டார் அப்பீலில் வேறு அபிப்பிராயம் கொண்டு அடமான சொத்துக்களாகிய 12 கிராமங்களில் அடமானதார்கள் கிறயம் அல்லது வேறு ஏற்பாட்டினால் 5 கிராமங்களை அந்நியர்களுக்குப் பராதீனம் செய்ததைபால் அந்த 5 கிராமங்களை வாதி திரும்பி அடைவதற்குக் காலாவதி தோஷம் ஏற்பட்டது நியாயமானதென்றும் ஆனால் அடமானதார்களுடைய வாரிசுகளின் வசத்திலும் அநுபோகத்திலுமிருக்கிற 7 கிராமங்களைப்பற்றிய மட்டில் வாதியின் தாவாவுக்கு காலாவதிதோஷம் இடையாதென்றும் அதாவது அடமானத்தில் ஏற்பட்ட 9 வருஷ கெடு தீர்ந்த பிறகுதான் சொத்தைத் திரும்பியடையும் பாத்தியதைவாதிக்குண்டாகுமாதலால் 1839 ஜனவரி 6 முதல் 60 வருஷங்களுக்குள் செய்யப்பட்ட பிராது காலாவதிதோஷமாகாதென்றும் ஆகவே 1899 ஜனவரி 6 ல் கொண்டுவந்த இந்த பிராதுக்கு காலாவதி தோஷமில்லையென்றும் தீர்மானித்து வாதிக்கு 7 கிராமங்களைப் பற்றியமட்டில் டிக்கிரியளித்தார்கள். பிரதிவாதிகள் அதன்பேரில் பி.ரி.வி கௌன்ஸிலில் அப்பீல் செய்தார்கள். வாதியும் 5-கிராமங்களைப்பற்றி க்ராஸ் அப்பீல் செய்தார். பிரிவி கௌன்ஸிலார் சப்கோர்ட் அபிப்பிராயம் சரியென்று வாதியின் பிராது முற்றிலும் காலாவதி தோஷத்தால் தள்ளுபடியாகவேண்டியதாகுமென்று தீர்மானித்தார்கள். பிரிவி கௌன்ஸில் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:—

———c———

## அறிக்கை.

இப்பத்திரிகையின் அபிவிர்த்தியின் பொருட்டு அடியேன் வெளிஜில்லாக்களுக்குப் போக நேரிட்ட சந்தர்ப்பத்தால் ஏப்ரல் மாதத்திய வாரப்பிரசுரங்கள் ஒழுங்கீனமாயிற்று அதற்காக நமது நேயர்களின் மன்னிப்பைக் கோருகிறேன். பிந்திய மாதங்களில் நின்ற பிரதிகள் பர்த்திசெய்யப்படும்.

இங்ஙனம் தங்கள் விதேயன்,

*N.* சுப்பிரமணிய அய்யர்.

பத்திராதிபர்,



1830 ஜனவரி 6உயில் பிறந்ததாகச் சொல்லப்பட்ட தாவா அடமான தஸ்தவேஜானது ஆஜர் படுத்தப்படவில்லை. (அது ஜாக்கிறதையாய் பத்திரப்படுத்தப்படாமல் தவறியிருக்கக்கூடும்.) ஆனால் 1830 செப்டெம்பர் 18-ல் ரெவினியூ ரெஜிஸ்டரில் பட்டா மாற்றல் விஷயமாய்க் கொடுக்கப்பட்டிருந்த விண்ணப்பநடவடிக்கையின் ரெவினியூ ரிகார்டுகளின் ஆதாரத்தைக் கொண்டு அடமான தஸ்தவேஜிலுள்ள விவரங்களின்னவகையென்று கீழ்கோர்ட்டாரால் யூகிக்கப்பட்டிருக்கிறது. அடமான உடன்படிக்கையின்படி ஷை சொத்துக்களின் வருமானங்களிலிருந்து வட்டி, சர்க்கார் தீர்வை, சிப்பந்திச் செலவு முதலியவைகளுக்குச் செல்லானதுபோக மிகுதி அசலுக்குச் செல்லாகவேண்டியதாகும். விக்கிறய நிபந்தனையுடன் கூடிய அடமான ஒப்பந்த விவரமானது ப்ராபர்டி ஆக்ட் 58-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. வழக்கமாக அடமான சொத்தை விக்கிறயமாகவே எழுதிக்கொடுத்து அதற்கு எதிர் நடையாக அடமானக்கடன் தீர்ந்த உடன் கிறயம் ரத்தாகவேண்டியதென்றும் மறு விக்கிறயம் எழுதி ரெஜிஸ்டர்செய்து கொடுத்துவிடவேண்டியதென்றும் கண்டு வேறொரு தஸ்தவேஜை கிறயதாரிடமிருந்து எழுதிவாங்குவதுண்டு. கடனைத் திரும்பிக் கொடுக்கப்படுவதில் தவறுதல் ஏற்பட்டால் கிறயம் நிலைத்து அது பூரணமாகப் போய்விடும். தாவா தஸ்தவேஜில் அடமானத் தொகையை 9-வருஷங்களுக்குள் செலுத்தி விடுவதாய் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறபடியால் அதை சுத்த விக்கிறயமென்று சொல்லாமல் விக்கிறயநிபந்தனையுடன்கூடிய அடமான தஸ்தவேஜென்று சொல்லவேண்டுமென்று வாதிதரப்பு லாயர் எதிரியின் கேள்விக்கு உத்தரம்கொடுத்திருக்கிறதாக ஹைகோர்ட் தீர்மானத்தில் சொல்லப்படுகிறது. தவிர தாவா அடமானக்கடன் தொகை அசல் பூராவும் 9-வருஷங்கள் முடியுமுன்னமேயே சொத்துவரும்படியிலிருந்து செல்லாகி விட்டதென்று வாதியின் பிராதில் சொல்லப்படுகிறது. அப்படியிருக்க தாவா அடமான சொத்துக்களை வாதி திரும்பவும் சுவாதீனமடைவதற்கு 60-வருஷ காலாவதி எது முதல் கணிக்கப்படவேண்டும். அடமானத் தேதியிலிருந்தா, அல்லது 9-வருஷங்கள் கடந்த தேதி முதலா அல்லது அசல்தொகை பூராவும் செல்லான தேதியிலிருந்தா கணிக்கப்படவேண்டும்; சப் கோர்ட்டார் அடமானத் தேதிமுதல் கணிக்கப்படவேண்டுமென்று எண்ணி வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷம் சொல்லுகிறார். ஹைகோர்ட்டாரோ 9 வருஷ கெடுவுக்குப்பின் தான் வாதிக்கு சொத்துக்களைத் திரும்பியடைய பாத்தியம் ஏற்படுமென்று சொல்லி எதிரியின் சுவாதீனத்திலிருக்கிற சொத்துக்களைத் திரும்பியடைய 60 வருஷகாலாவதி 1839 ஜனவரி 6-லிருந்து கணிக்கப்படவேண்டுமென்றும் அந்நியர்களுக்குச் சென்ற சொத்துக்களை வாதி திரும்பியடையும் பாத்தியதையானது காலாவதியாகிவிட்டதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். பிரதிவாதியோ தன்வசமிருக்கிற 7 கிராமங்களைப்பற்றியும் பிராதுக்குக் காலாவதிதோஷமாகுமென்று வாதிக்கிறார். எதிரியினிடம் சுவாதீனப்படுத்திக் கொடுக்கப்பட்ட அடமான சொத்துக்களை மீட்டுக்கொள்வதற்கு அடமானத்தேதிமுதல் 60 வருஷ காலாவதியென்று தீர்மானிக்கப்பட்டால் வாதியின் பிராது முற்றிலும் காலாவதிதோஷமென்று தள்ளுபடியாகவேண்டியது நியாயமே. ஹைகோர்ட்டார் இந்தபாயிண்டு விஷயமாக கொடுத்த அபிப்பிராயத்தில்:—"9 வருஷ கெடுவுக்குள் எக்காலத்திலாவது வாதி (அடமானதார) அடமான சொத்துக்களை மீட்டுக்கொள்ளலாமென்று உடன்படிக்கை ஏற்பட்டிருந்தால் வாதியின் தாவா காலாவதியாகவேண்டியது நியாயமாகுமென்றும் (ஏனெனில் 9 வருஷங்களுக்குள்ளாகவே கடன் தொகை செல்லான நிமித்தம் மேற்கூறிய ஒப்பந்தப்படி செல்லானதேதியிலேயே மீட்கும் பாத்தியம் ஏற்பட்டு அது முதல் காலாவதி கணிக்கப்படவேண்டியதாகும். அப்படிப்பார்த்தால் வாதியின் பிராது காலாவதி தோஷமாகும்.) அப்படியல்லாமல் 9-வருஷ காலம் அடமானக்கடன் பாக்கியாகவே தீராமலே நிற்கவேண்டுமென்றிருந்தால் மீட்கும் பாத்தியதை அதற்குப்பின் தான் ஏற்படவேண்டுமென்றும், சாதாரணமாக அடமான கெடு வாய்தா தீருமுன் அடமானதார் தொகையைச் செலுத்தி சொத்தை மீட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கக்கூடாதென்றும் ஏனெனில் 9வருஷகாலம் அடமானக்கடனுக்கு ஈடாக சொத்தானது வாதியின் வசம் ஒப்புவிக்கப்படுவ

தால் அந்த வாய்தா தீருமட்டும் வாதியின் அனுபோகத்தை நிறுத்த யத்தனிக்கக்கூடாதென்றும்; ஆகையால் 9 வருஷம் முடியுமட்டும் வாதி அனுபவிக்கக்கடவதாகுமென்றும் எதிரி இடையில் தொகை செலுத்தவும் அல்லது சுவாதீனத்தை அடையவும் பாத்தியம் ஏற்படக்கூடாதென்றும் சொல்லியிருக்கிறார்கள்." சாதாரணமாக வேறுவிதமான ஏற்பாடில்லாவிடில் குறித்தகாலத்திற்குள் அடமான சொத்தை மீட்டுக்கொள்ள பாத்தியம் ஏற்படாது. ஆனால் கெடு வாய்தாவுக்குள்ளாகவே கடன் தீர்க்கப்பட்டால் சொத்தைத் திரும்பியடைய லாயக்குண்டென்ற ஒப்பந்தம் செய்துகொள்வது சட்ட விரோதமல்ல. அவ்வித ஏற்பாடானது அடமானதாருக்கனுகூலமான முறையாகும். ரெவினியூ நடவடிக்கையில துலங்கும் ஏற்பாட்டின் கருத்தை யோஜித்து இந்தக்கேசின் அம்சத்தைத் தீர்மானிக்க வேண்டியதானல் ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயம் சரியானதென்றே சொல்லத்தகும். 9-வருஷங்களில் அடமானத்தொகை செலுத்தப்பட்டால் கிரயம் ரத்தாகுமென்ற ஒப்பந்தமிருந்ததாக ரெவினியூ ரிகார்டுகளால் துலங்குகிறது. அவ்வசனம் இரண்டர்த்த முடையதாகும். 9-வருஷங்களில் என்றால் 9 வருஷங்களுக்குள் என்றும் அல்லது 9-வருஷங்கள் கடந்தபின் என்றும் இருவகையாக அர்த்தப்படுத்தலாம்.

ஆனால் தாவா பிராதில் அடமான சொத்து வரும்படியிலிருந்து 9-வருஷங்களுக்குள் கடன் தீர்ந்துபோகும்விஷயத்தில் அந்தகெடுவுக்குள்ளாகவே சொத்தைத் திரும்பியடைய பாத்தியமுண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிர ஸ்பஷ்டமாய் பிராதின் 8-வது பாராவில் சொத்து வரும்படியிலிருந்து மற்றவகையான செலவுகள் போக கடனுக்குரிய அசல் பூராவும் 1245-ம் பசலியில் தீர்ந்துபோய்விட்டதென்றும் சொல்லி அதற்காதாரமாக சாகுபடி விவரக் கணக்கும் பிராதுடன் தாகல் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது கெடுவுக்குள்ளாகவே அடமானக்கடன் தீர்ந்துவிட்டதாகவே ஸ்பஷ்டமாய் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தக் கேசில் உடன்படிக்கையின் கருத்தை சந்தேகமான அர்த்தம் கொள்ள இடமில்லை. வாதி சுவாதீனமடையும் பாத்தியதை எக்காலத்தில் ஏற்படுகிறதென்ற ருஜுவாயின்டானது இந்தப் பிராதில் நிர்ணயிக்க வேண்டியதாகும். 1897-லேயே அதாவது 1245-ம் பசலியிலேயே கணக்குப்படி கடன் பாக்கிபூராவும்தீர்ந்துவிட்டது. அதுமுதல் ஏற்பட்ட வரும்படிமிகுதியானது வாதிக்குச் சேர வேண்டியதாகுமென்று சொல்லத்தகும். யாதொரு பாத்தியமும் நியாயமும் இல்லாமல் எதிரி அந்த வருமானத்தை அடைந்து வருகிறார்களென்று வாதி பிராதில் சொல்லியிருக்கிறார். ஆகவே வாதி சொல்லுகிறபடி பார்த்தாலுமே 1838-ல் வாதிக்கு சுவாதீன பாத்தியம் ஏற்பட்டமையால் அதுமுதல் 60-வருஷ காலாவதி கணிக்கப்பட்டு பிராதுக்கு தோஷம் சொல்லவேண்டும். ஆகையால் வாதியின் பிராது முற்றிலும் தள்ளுபடியாவது நியாயமென்று சப்கோர்ட் தீர்ப்பைக் காயப்படுத்தினார்கள்.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &
ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.
கிருஷ்ணா ஜில்லா.

S. A. No. 599 of 1911–2 மார்ச்சு 1914.

ஸூர்யப்ரகாசநாயுடு Vs லட்சுமிநரசிம்மாச்சார்லு

1-ம் பிரதிவாதி ஆர்தி லட்சுமி நரசிம்மாசார்லு என்றவர் 1904 நவம்பர் 4ல் எழுதிக்கொடுத்த A-அடையாளமிடப்பட்ட ஆதாரவாகிய விக்கிரய உடன்படிக்கையின்படி தாவா சொத்துக்களை ஒருமாதத்திற்குள் வாதிக்கு ரூ. 400-க்கு சுத்த விக்கிரயம் செய்துகொடுப்பதாய் ஒப்புக்கொண்டதில் எக்ரீமெண்டு தேதியில் அட்வான்ஸாக செலுத்தப்பட்ட ரூ. 40 போக பாக்கி விக்கிரயதொகையை கிரயதஸ்தவேஜ் எழுதிக்கொடுக்கப்பட்ட உடன்வாதிசெலுத்தக்கடவதென்ற ஷரத்தும் கண்டிருந்தது. 1-ம் பிரதிவாதி ஒப்பந்தப்படி ஒருமாத தவணைக்குள் கிரயத்தை முடித்துக்கொடுக்காமலிருந்து மூன்று வருஷம் பொருத்து அதே சொத்துக்களை 2-ம் பிரதிவாதிக்கு விக்கிரயம் செய்துகொடுத்துவிடவே, வாதி 2-ம் பிரதிவாதிக்கு விக்கிரயமான தகவலைத் தெரிந்த 2-மாதத்திற்குள் தனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தை வற்புறுத்தி தனக்குக் கிரயம் செய்து கொடுக்கவேண்டுமென்று தாலுகா டி-மு கோர்ட்டில் 1907 டிசம்பர் 2-ல் இரண்டு பிரதிவாதிகள் பேரிலும் தாவா செய்தார் எக்ரீமெண்டில் குறித்த ஒரு மாத கெடுத்தேதிமுதல் மூன்று வருஷங்களுக்குள் வாதி பிராது கொடுத்தமையால் பிராதுக்குக்காலாவதிதோஷம் கிடையாதென்றும், ஒப்பந்தத்தில் கண்ட ஷரத்துப்படி 1-ம் பிரதிவாதிக்குக் கிரயம் செய்துகொடுத்து அதன் பிறகு விக்கிரய பாக்கித் தொகையைப் பெற்றுக்கொள்ளவேண்டியது நியாயமாகுமென்றும், அப்படிச்செலுத்தவாதியால் யாதொரு தவக்கமும் கிடையாதென்றும் அபிப்பிராயபட்டு வாதிக்குஅனுகூலமாய் டிக்கிரீயளித்து தாவாசொத்துகளை 1, 3 4 பிரதிவாதிகள்வாதிக்கு விக்கிரயம்செய்து கொடுக்கவேண்டுமென்று கட்டளையிட்டு 2-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரயம் செல்லத்தகாதென்று தீர்மானித்தார்கள். சப்கோர்ட்டார் அப்பீலில் டி-மு கோர்ட் தீர்ப்பை மாற்றி வாதியின் தாவாவைத் தள்ளுபடிசெய்ததில் முக்கியமாய் 3-காரணங்கள் சொன்னார்கள். அதாவத :– (1) 1-ம் பிரதிவாதி கிரயம் செய்துகொடுத்த உடன் வாதி விக்கிரய பாக்கித்தொகையைச் செலுத்தத் தயாராயிருப்பதாய்ச் பலதடவைகளில் சொன்னபோதிலும் வாதியின் கையில் வாஸ்தவமாய் அப்படி செலுத்துவதற்கு ரூ. 360 ஒருபொழுதும் தயாராயிருந்ததில்லையென்றும், (2) வாதி தனக்கு எழுதிக்கொடுத்த ஒப்பந்தத்தை நிறைவேற்றி கிரயம் பெறுவதற்காக சுமார் 3 வருஷங்கள் வரையில் கவலைத்தாழ்ச்சியாக இருந்தமையால் கோர்ட்டார் யுக்தானுசாரத்தைச் செலுத்தி இவ்வித காலதாமதத்தின் பேரில் செய்யப்பட்ட பிராதைத் தள்ளுபடி செய்வது நியாயமாகுமென்றும், (3) வாதியின் அசட்டையாலும் கவலைத் தாழ்ச்சியினாலும் வாதி தாவா சொத்தை கிரயம் பெறுகிற பாத்தியதையைக் கைவிட்டதாக அல்லது வேண்டாமென்று விலகிக்கொண்டதாக அனுமானிக்கத்தகுமென்றும், ஆகிய மூன்று காரணங்களைச் சொல்லி வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்தார்கள். வாதி அதன்மேல் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கு சப்கோர்ட் தீர்மானம் ரத்தாகி டி-மு கோர்ட் அபிப்பிராயம் சரியென்று ஏற்பட்டு, ஆனல் தாவா சொத்தில் கிரய பாத்தியதையை அடைந்த 2-ம் பிரதிவாதி வாதிக்கு விக்கிரயம் செய்து கொடுப்பது நியாயமாகுமென்றும் சொல்லி அந்தப்படிக்கு டி-மு கோர்ட்டாருடைய டிக்கிக்யை மாற்றும்படி உத்தரவளித்தார்கள். ஹைகோர்ட் தீர்ப்பில் சொன்ன காரணங்களாவன:—

வாதியின் கையில் விக்கிரய பாக்கித்தொகை ரூ. 360 எப்பொழுதும் தயாராயில்லையென்று சப் கோர்ட்டார் தீர்மானித்ததற்கு சட்ட சம்பந்தமான ருஜுபாகம் கிடையாது. 1-ம் பிரதிவாதி கிரயத்தை முடித்துக் கொடுத்தால் தன் கையில் பாக்கித்தொகை தயாராயிருக்குமென்ற விஷயத்தை வாதி ருஜுப்படுத்தவில்லையென்று அபிப்பிராயப்பட நியாயமுண்டு. ஆனல் முன் அடமான வில்லங்கத்தைத் தீர்க்கும்பொருட்டு 1-ம் பிரதிவாதியாகிலும் அடமானதாராகிலும் தொகையைக் கேட்டபொழுது வாதியினிடத்தில் தொகையே கிடையாதென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப் பட்டதற்குப் போதுமான ருஜுபாகமே ரிகார்டில் கிடையாது. 1-ம் பிரதிவாதி ஒப்பந்தப்படி விக்கிரயம் செய்து கொடுக்கும் வரையில் வாதி தொகையை செலுத்தக் கடமைப்பட்டவரல்ல. விக்கிரயம் செய்து முடிக்காத பட்சத்தில் வாதி ஒப்பந்தத்தை மீறி நடந்ததாகச் சொல்ல நியாயமாகாது. வாதி அசட்டையாயிருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒரு மாத தவணைக்குள் 1-ம் பிரதிவாதி கிரயதஸ்தவேஜை எழுதி முடிக்கவேண்டியதாயிருக்க தாவா தேதி வரையிலும் அந்தப்படி 1-ம் பிரதிவாதி நடக்காமலிருக்கையில் வாதி அசட்டையாயிருந்ததாகக் குற்றம் சாட்டக்கூடாது.

வாதி இந்ததாவாவை அதிக காலதாமதத்தின் பிறகு செய்ததைப்பற்றி எதிர்வாதம் செய்யப்பட்டு அதற்காதாரமாக 27 அலகபாத் 678-ல்கொடுக்கப்பட்டிருக்கிற தீர்மானம் எடுத்துக்காட்டப்பட்டது. அந்தக்கேசில் பிரதிவாதி தாவாதேதிக்கு மூன்றுவருஷங்களுக்கு முந்தியே தனக்குக் கிரயம்செய்ய இஷ்டமில்லையென்று பரிஷ்காரமாய்த் தெரியப்படுத்தியிருக்கிறார். தவிர அந்தக்கேசில் 1-ம்பிரதிவாதி தாவா சொத்தில் அதிக தொகையை செலவுசெய்து அபிவிர்த்திசெய்துமிருக்கிறார். அப்படியிருக்க ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்ட் 22-வது பிரிவின் 2-வது கிளாஸில் சொல்லியிரு

க்கிறபடி யாதொரு ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி கட்டளையிடுவதால் யாதொருவனுக்கு அதிக கஷ்டம் நேரிட்டாலும் அப்படிக் கட்டளையிடாத பட்சத்தில் வாதிக்கு நஷ்டம் யாதொன்றும் நேராத சந்தர்ப்பத்திலும் கோர்ட்டார் டிக்கிரீயளிக்கத்தேவையில்லையென்ற சட்ட முறையை அனுசரித்து அந்த அலகபாத் கேஸில வாதியின்பிராதைத் தள்ளுபடி செய்தது நியாயமாகும். இந்தக்கேஸில் அவ்வித சந்தர்ப்பம் யாதொன்றும் கிடையாது. 1-ம் பிரதிவாதி 2-ம்பிரதிவாதிக்கு விக்கிரயம்செய்து முடித்த 2 மாதத்திற்குள் வாதி தாவா செய்திருக்கிறார். 1-ம் பிரதிவாதி வாதிக்குக் கிரயம்செய்ய மறுத்துவிட்டதாக ருஜுவாகவுமில்லை. அவ்விதமாக மறுத்த பிறகு அதிக காலதாமதம் செய்து இந்த பிராது கொடுத்திருந்தால் காலதாமதத்தைப்பற்றி வாதிக்கு விரோதமாய் அனுமானிக்கலாம். அவ்வித ருஜுபாகம் கிடையாது. 1905 ஜனவரி 6-ல் 1-ம்பிரதிவாதி வாதிக்கு ஒரு நோட்டீஸ்கொடுத்து அந்த நோட்டீஸ்கிடைத்த ஒரு வாரத்திற்குள் வாதி ஒப்பந்தத்தில் கண்டபடி நடக்கத்தவறினால் உடன்படிக்கை ரத்தாகி விட்டதாக பாவிக்கப்படவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார். அதற்குபதில் நோட்டீஸ் கொடுத்தவாதியோதான் எப்போதும் ஒப்பந்தப்படிக்கு நடக்கத்தயாராயிருப்பதாய்த் தெரிவித்திருக்கிறார். இவ்வித பதில்நோட்டீஸைப்பெற்ற காரணத்தால் வாதிஒப்பந்தத்தை மீறினதாகவும் அல்லது 1-ம் பிரதிவாதி ஒப்பந்தத்தை ரத்துசெய்து விட்டதாகவும் அனுமானிக்க நியாயமாகாது. 21 மதராஸ் 42-யும், 33-கல்கத்தா 633-யும் பார்க்கவும். ஆகவே அலகபாத் தீர்மானத்தை ஆதாரமாகக்காட்டி சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டபடி பிராதின் காலதாமதத்தை வாதிக்கு விரோதமாக நிதானிக்கக்கூடாது. ஆகையால் அக்காரணத்தால் பிராதைத்தள்ளுபடிசெய்யத்தகாது.

மூன்றாவதாக வாதி அசட்டையாகயிருந்தமையால் கிரயமடையும் பாத்தியதையைக் கைவிட்டதாகவும் இழந்ததாகவும் அல்லது வேண்டாமென்று விலகிக்கொண்டதாக நிதானித்து 1-ம்பிரதிவாதி வேறு விக்கிரய ஏற்பாடு செய்து முடித்தது நியாயமாகுமென்று சொல்லப்படுகிறது. வேறுகாரணங்களும் சந்தர்ப்பங்களுமில்லாமல் கேவலம் காலதாமதப்படுத்தின காரணமே அவ்வித அபிப்பிராயமடைவதற்குப்போதுமான முகாந்தரமாகாது. இந்தக்கேஸில்வேறு சந்தர்ப்பங்கள் யாதொன்றும் ருஜுவாகயில்லை. ஆகவே இந்த எதிர்வாதம் பிரயோஜனமில்லை.

கடைசியாக 2-ம் பிரதிவாதிக்கு விக்கிரய தஸ்தவேஜினால் சொத்தில் பாத்தியதை உண்டாகியிருக்கிறபடியால் வாதிக்கு அவரையும் கட்டுப்படுத்தி டிக்கிரீயளிக்கவேண்டிய கருத்துடன் அவரையும் இந்தப்பிராதில் பார்ட்டியாக சேர்த்திருக்கிறபடியால் நியாயப்படி வாதிக்கு டிக்கிரீயளிக்கும் விஷயத்தில் 2-ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட பாத்தியம் நீங்கி அது வாதிக்குச் செல்லவேண்டியதானால் வாதிக்கு 2-ம் பிரதிவாதி விக்கிரய தஸ்தவேஜை எழுதிக்கொடுக்கவேண்டிய தவசியமாகும். ஆகையால் டி-மு கோர்ட்டார் 1, 3, 4-பிரதிவாதிகளால் கிரயம் செய்து கொடுக்கப்படவேண்டுமென்று டிக்கிரீயில் செய்த உத்தரவை மாற்றி 2-ம் பிரதிவாதி கிரயம்செய்து கொடுக்கவேண்டுமென்று டி-மு கோர்ட் டிக்கிரீயைத்திருத்தும்படி கட்டளையிடப்பட்டது.

மேற்கூறிய ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ்சதாசிவய்யரவர்களுடைய அபிப்பிராயத்திற்கு அனுஸரணையாக ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ்சேஷகிரி அய்யரவர்கள் தீர்ப்பில் சொன்ன காரணங்களாவன:—1-ம் பிரதிவாதி கிரயத்தை முடித்துக்கொடுத்து விக்கிரய பாக்கித்தொகையைக் கேட்டதாக ருஜுபாகமே இந்தக்கேஸில் கிடையாது. 1-ம் பிரதிவாதி கிரயம்செய்து கொடுக்க விருப்பமுடையவராயிருப்பதாகவும்சொல்லப்படவில்லை. அப்படியிருக்க வாதி ஒப்பந்தத்தைத் தவரி நடந்ததாகச் சொல்லத்தகாது. 5. P. C. 221-ல் ஏற்பட்ட தீர்மானப்படிக்கு இவ்வித தாவாக்களுக்குக்காலதாமதம் சட்டப்படிக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க எதிர்வாதமாகாது. அந்தத்தீர்மானம் 21 மதராஸ் 42, 33 கல்கத்தா 633, 29 பம்பாய் 234 இவைகளில் அனுசரிக்கப்பட்டிருக்கிறது. தவிற காலாவதி ஆக்டில் இத்தகைய வியாஜ்ஜியங்களுக்குப் பிரத்தியேகமான காலாவதிகுறிக்கப்பட்டிருக்க காலதாமதத்தைப்பற்றி எதிரி ஆக்ஷேபிக்க நியாயமில்லை.



ஆகவே 2-வது அப்பீல் வாதிக்கனுகூலமாகப் பைசலாச்சுது.

---

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் டையாப்ஜீ

செங்கல்பட்டு ஜில்லா.

C. M S. A. 113 of 1912 19 பிப்ரவரி 1914.

முத்துசாமி செட்டி Vs சின்னம்மாள்.

திருவள்ளூர் டி-மு கோர்ட்டில் வாதி பிராது கொடுத்தகையோடு எதிரியின் சொத்துக்களை உடன் ஜப்திசெய்தார். வாதிக்கு டிக்கிரீயான பிறகு பிரதிவாதி காலஞ்சென்றமையால் ஜப்தியான சொத்தின் பாத்தியதையானது எதிரியின் அடுத்த வாரிஸுக்குச் சென்றமையால் பிரதிவாதியின் பேரில் வாதி பெற்ற டிக்கிரியை நிறைவேற்றுவதற்காக டிக்கிரிக்கு முன் உடன் ஜப்தியான சொத்துக்களை ஏலம்போட விண்ணப்பம் கொடுத்ததில் டி-மு கோர்ட்டாரும் அப்பீலில் செங்கல்பட்டு ஜில்லா கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக தாவா சொத்தில் பிரதிவாதிக்குள்ள பாத்தியதை நீங்கிப்போனபடியால் அந்த சொத்தை டிக்கிரீபாக்கிக்காக ஏலம்போடக்கூடாதென்று தீர்மானித்து நிறைவேற்று மனுவைத் தள்ளுபடி செய்தார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்டில் 2-வது மனு அப்பீல் செய்ததில் அங்கு கீழ்கோர்ட் தீர்மானங்கள் ரத்தாகி ஜப்தியான தாவா சொத்துக்களை ஏலத்துக்குக்கொண்டுவரலாமென்று சொல்லி வாதியின் விண்ணப்பத்தை திரும்பவும் பயிலுக்கெடுத்து சட்டப்படி நடவடிக்கை நடத்தும்படி டி-மு கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்மானத்தின் காரணங்களாவன:— 4 மதராஸ் 302-ன் 307-ம் பக்கத்தில் சொல்லியிருக்கிறபடி மதராஸ் ஹைகோர்ட்டில் பல தடவைகளில் ஒரே அபிப்பிராயமாக ஜப்திக்குப்பின்னும் ஏலதிற்கு முன்னும் டிக்கிரி பாக்கிதார் காலஞ்சென்றால் ஷை சொத்தில் பாத்தியதையானது எதிரியின் வாரிஸுகளுக்கு மாறிப்போகாதென்றும் ஆகையால் ஜப்தியான சொத்தை டிக்கிரீபாக்கிக்காக ஏலத்திற்குக்கொண்டுவரலாமென்று தீர்மானங்கள் ஏற்பட்டிருக்கின்றன. டிக்கிரீயாகுமுன் எதிரி காலஞ்சென்ற சந்தர்ப்பத்தில் டிக்கிரிக்கு முன் உடன் ஜப்தியான சொத்தின் பாத்தியதையானது எதிரியின் வாரிஸுக்குச் சென்று விடுமென்பது வாஸ்தவம் தான். ஏனெனில் டிக்கிரிக்கு முன் ஜப்தி செய்வதில் எதிரி தன சொத்தை அந்நியர்களுக்குப் பராதீனம் செய்யாதபடி தடுப்பதே முக்கியமான கருத்தாகும். அப்படியிருக்க அவ்வித ஜப்தியானது வாரிஸ் பாத்தியதைக்கு பாதகம் உண்டாக்க நியாயமில்லை. 17 மதராஸ் 144-ன் 145-ம்பக்கத்தைப்பார்க்கவும். உடன் ஜப்தியான சொத்தை டிக்கிரிக்குப்பின் ஏலத்துக்குக் கொண்டுவரவேண்டுமானால் மறுபடியும் ஜப்திசெய்வது அனாவசியமாகும். அதே சொத்து ஏலத்துக்கு லாயக்குள்ளதாகும். ஆகையால் டிக்கிரி பிறந்தபின் யாதொரு சொத்து ஜப்தியானால் அந்த சொத்தின் வாரிஸ் பாத்தியதைக்கு பாதகம் ஏற்படுவது போல் உடன் ஜப்தியாகி டிக்கிரியும் பிறந்துவிட்டால அதன்பிறகு மறு ஜப்தி அனாவசியமாக ஏற்படுவதால் வாரிஸ் பாத்தியதைக்கு ஜப்தி உத்தரவு பாதகமாகும். அதாவது டிக்கிரிக்குப்பின் பிரதிவாதி காலஞ்சென்றால் சொத்து பாத்தியதை வாரிஸுகளுக்கு மாறி முந்திய ஜப்தி பிரயோஜனமற்றதாகுமென்று சொல்லக்கூடாது. ஆகையால் வாதி டிக்கிரிபாக்கியை வசூலிக்கும் பொருட்டு டிக்கிரிக்கு முன் ஜப்தியான சொத்தை ஏலம்போடலாயக்குண்டென்றும், பிரதிவாதியின் வாரிஸ்களுக்கு அந்த சொத்தில் டிக்கிரிபாக்கிதாருக்கு விரோதமாக, அதாவது வாதி அதன்பேரில் தொடராவண்ணம், பாத்தியதையயானது மாறிப்போகாதென்று தீர்மானிக்கப்பட்டு மேற்கண்டவிதமாய் உத்தரவளிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

பல்லாரி ஜில்லா,

S. A. 1464 of 1909-5 மார்ச்சு 1914

ரங்கப்பா Vs தம்மையப்பர்.

1900 ஜூன் 30-ல் 1-2 பிரதிவாதிகள் வாதிக்கு மூன்று அயிடம் நிலங்களை ஈடுகாட்டி தஸ்தவேஜ் எழுதிக்கொடுத்து வாங்கிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு வாதி தாவா சொத்துக்களை ஏலம் போடவேண்டுமென்று கோரிக் கொண்ட பிராதில் அம்மூன்று அயிடம் நிலங்க

ளில் ஒரு அயிடம் வாதியின் சுவாதீனத்திலும் அனுபோகத்திலும் விடப்பட்டிருந்ததாகவும் அந்த நிலத்தின் சுவாதீனத்தை பிரதிவாதிகள் நிராகரித்துப் பிடுங்கிக் கொண்டதாகச் சொல்லி அடமானக்கடனை வசூலிக்கும் விதமாக பெனுகொண்டா டி-மு கோர்ட்டில் வாதி செய்த வியாஜ்ஜியம் பல்லாரி சப்கோர்ட்டில் அப்பீலாகி அங்கு வாதியின் தாவா தள்ளுபடியாச்சுது. சப்கோர்ட்டார் அபிப்பிராயத்தில், தாவா கடன் பத்திரத்தில் கண்ட சொத்துக்கள் மூன்றில் ஒரு அயிடமானது இன்னமும் வாதியின் வசமேயிருப்பதாகவும் பத்திரத்தில் கண்ட ஷரத்தின் படிக்கும் இந்தக்கேசின் அம்சத்திற்குறிய சட்ட முறைப்படிக்கும் வாதி கடன் தொகையை வசூலிக்கும்பொருட்டு பிரதிவாதிகள்பேரில் ஆளைப்பொருத்து டிக்கிரீபெறவாவது அல்லது தாவா சொத்துக்களை ஏலத்திற்குக் கொண்டுவரும்படி தாவா செய்யவாவது லாயக்கில்லையென்றும் (அதாவது வாதியின் கடனுக்கு பதிலாக ஒரு அயிடம் நிலத்தின் அனுபோகம் வாதியிடம் விடப்பட்டிருப்பதால் பிரதிவாதிகள் இஷ்டப்பட்டு கடன் தொகையைச் செலுத்தினாலொழிய வாதி ஷை நிலத்தின் சுவாதீனத்திலும் அனுபோகத்திலும் நிராக்ஷேபணையாக நிற்குமட்டும் கடன் தொகையை வாபிஸ்கேட்க நியாயமில்லையென்றும் பத்திரமானது அவ்வித கருத்துடன் எழுதப்பட்டே ஒரு அயிடம் நிலமானது வாதியின் சுவாதீனத்தில் விடப்பட்டதென்றும் சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டு) மேல்கண்ட விதமாய் வாதியின் பிராது தள்ளுபடியாச்சுது.

அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் சப்கோர்ட் தீர்ப்பு காயமாகி 2-வது அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் தீர்மானமடைந்த காரணச் சுருக்கமாவது:— இவ்விதமான தாவாக்களில் பத்திரத்தின் கருத்து இன்னவிதமானதென்று கண்டுபிடிப்பது அதிக கஷ்டமாகும். வாதியின் சுவாதீனத்தில் விடப்பட்டிருக்கிற ஒரு அயிடம் நிலத்தைப் பற்றியமட்டில் தாவா தஸ்தவேஜை ஒத்திப் பத்திரமென்று சொல்லத்தகும். (அதாவது பிரதிவாதி தொகையைக் கொடுக்குமட்டும் வாதி நிலத்தை அனுபவிக்கவேண்டிய கருத்துடன் ஏற்பட்ட கடன் பத்திரமாகும்.) வாதிதானாகவே கடனை வாபிஸ் அடையும்படி பரிகாரம் தேடக்கூடாதென்று சொல்லத்தகும். மற்ற இரண்டு அயிடம் நிலங்களைப்பற்றி யோஜிக்குமிடத்து அவைகள் தாவா கடன் தொகைக்காக அடமானம் வைக்கப்பட்டதா அல்லது வாதியின் கடன் தொகைக்காக அந்த அயிடங்களில் யாதொரு ஹக்கு ஏற்பட்டிருக்கிறதா என்று நிதானித்தறியவேண்டும். 21 மதராஸ் லா ஜர்னல் 562-ல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரவர்கள் ஒரு அடமான தஸ்தவேஜுக்கும் ஒரு சொத்தில் ஹக்கு ஏற்படுத்தப்படும் தஸ்தவேஜுக்குமுள்ள வித்தியாஸத்தைக் கண்டுபிடிக்க அதிக சந்தேகமான யோஜனைகளுண்டாகி கடைசியாக அடமான தஸ்தவேஜில் கடன் தொகையைத் திரும்பிக் கொடுக்கவேண்டுமென்ற ஷரத்தானது அவசியமாகக் குறிக்கப்படவேண்டுமென்றும் ஹக்கு ஏற்படும் தஸ்தவேஜில் அவ்வித நிபந்தனை அவசியமான கண்டிஷனல்லவென்றும் அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். இந்தக்கேசில் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிற தஸ்தவேஜில் 1-2 பிரதிவாதிகள் வாதிக்குக் கடன் தொகையைத் திரும்பிக்கொடுப்பதாய் ஒப்புக்கொண்ட கருத்துடைய வசனங்களே காணப்படவில்லை. 15 மதராஸ் 304-ல் ஏற்பட்ட தஸ்தவேஜின் வசனங்களைப் பார்த்து வாதிக்குக் கடன் தொகையைத் திரும்பிக் கொடுப்பதாய் ஒப்புக்கொண்ட கருத்தே அந்த தஸ்தவேஜில் கிடையாதென்று தீர்மானித்திருக்க தாவா தஸ்தவேஜின் வசனங்களைப் பார்த்தால் அந்த 15 மதராஸ் கேசின் தஸ்தவேஜைவிட வாதிக்கு அதிக பிரதிகூலமானபடி வசனங்கள் அமைந்திருக்கிறது. அதாவது கடனைத் திரும்பிக்கொடுக்கும் கருத்தே தாவா தஸ்தவேஜில் கொஞ்சமேனும் துலங்கவில்லை. ஆகவே கடனைத் திரும்பிக் கொடுக்கும் நிபந்தனையில்லாவிடில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் கிருஷ்ணசாமி அய்யரவர்கள் அபிப்பிராயப்பட்டபடி ஷை இரண்டு அயிடங்களைப் பற்றினமட்டில் தாவா தஸ்தவேஜானது அடமானப் பத்திரமாகாது. அந்த சொத்துக்களில் வாதிக்கு அடமான பாத்தியதை ஏற்படாது. வாதிக்குறிய கடனுக்காக அந்த சொத்தின்பேரில் செல்லும்படியான ஹக்கு ஏற்பட்டிருப்பதாகமட்டும் சொல்லவேண்



டும். [அடமான தஸ்தவேஜைக் கொண்டு கடனைவசூலிக்க ஆளைப்பொருத்து டிக்கிரீவாங்கலாம். ஹக்கு ஏற்படும் சொத்துமேல் பரிகாரம் தேடலாமேயொழிய ஆளைப்பொருத்து டிக்கிரீ வாங்கக்கூடாது. தொகையைக் கொடுத்துவிடுவதாய் ஒப்பந்தம் அடமானத்தில்மட்டும் ஏற்படுவது அவசியமாதலால் ஆளைப்பொருத்தும் டிக்கிரீ வாங்கலாம். அடமானதார் காலஞ்சென்றால் அவனுடைய வாரிஸ்களும்கடனைத்தீர்க்கபல்யப்பட்டவர்களாகிறார்கள். ஹக்கு ஏற்படும் சொத்தோடு கடன்பாத்தியம் செல்லுமேயொழிய வேறுவித பரிகாரம் கிடையாது.] ஆனால் ஹக்குண்டாக்கும் ஏற்பாட்டுக்கு ப்ராபர்டி ஆக்ட் 100-வது பிரிவின் முறைகள் செல்லத்தகும். அதில் கண்டபடி யாதொரு சொத்தின்பேரில் ஹக்கு ஏற்படுத்தி கடன் வாங்கியிருந்தால் அந்தக்கடனை வசூலிப்பதற்காக வியாஜ்ஜியம் செய்யும் சந்தர்ப்பமானது அடமான தஸ்தவேஜின்பேரில் கொடுத்தகடனை வசூலிக்கும் வண்ணமாக கூடியமட்டில் ஏற்படும். அடமானக் கடனை வசூலிக்க தாவா செய்ய முக்கியமாய் 3 சந்தர்ப்பங்களுண்டு. (a) கடனைக் கொடுப்பதாய் ஒப்பந்தமிருந்திருக்கவேண்டும். தாவா தஸ்தவேஜில் அவ்வித ஒப்பந்தமில்லை, (b) வாதிக்கு ஏற்பட்ட ஆதாரம் முழுவதும் அல்லது யாதொருபாகமானது கடனாளியின் தப்பு நடத்தையால் அல்லது தவருதலால் குறைவுபட்டுப்போகவேண்டும். அவ்வித சந்தர்ப்பம் இந்தக்கேசில் கிடையாது; (c) வாதிக்கு அடமான சொத்தை சுவாதீனப்படுத்திககொடுக்க வேண்டியதாயிருக்கும் பக்ஷத்தில் அப்படிச்செய்யத தவறினால் அல்லது வாதியின் சுவாதீனத்திலிருக்கும் சொத்தை நிராக்ஷேபணையாக அனுபவிக்கவேண்டிய சாதனங்கள் உண்டாக்கத்தவறினால் வாதி கடன்தொகையை வசூலிக்க தாவாசெய்யலாம். அடமானக் கடனை வசூலிக்க மூன்று சந்தர்ப்பங்கள் உண்டு. ஹக்கு ஏற்படும் கடன்பாபத்திற்கும் அதே சந்தர்ப்பமிருக்கவேண்டும். ஆனால் இந்தக்கேசில் வாதிக்கு தொகையை வசூலிக்க அம்மூன்று சந்தர்ப்பங்களில் ஒன்றாவது கிடையாது. ஆகையால் வாதி இந்ததாவாவைக் கொண்டுவந்து கடன் பாக்கியைவசூலிக்க சொத்துக்களை ஏலம்போடவேண்டுமென்றாவது அல்லது ஆளைப்பொருத்து டிக்கிரீபெற வேண்டுமென்றாவது பரிகாரம் தேடுவதற்கு வியாஜ்ஜியமூலமும் காரணமும் கிடையாதென்று சொல்லி வாதியின் பிராதை சப்கோர்ட்டார் தள்ளுபடி செய்தது சரியென்று தீர்மானித்தார்கள்.

ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் தாவா தஸ்தவேஜின் வசனங்களைக்கவனித்தால் பிரதிவாதிகள் தொகை கொடுப்பதாய் ஒப்பந்தம் செய்துகொண்டதாகச் சொல்லவேண்டுமென்றும் அதாவது "எப்பொழுதாவது நாங்கள் கடன் தொகையைத் திரும்பிக்கொடுத்தால் அதைப்பெற்றுக்கொண்டு பத்திரத்தை வாபிஸ் செய்யக்கடவீராகவும் என்று தஸ்தவேஜில் எழுதப்பட்டிருக்கிறபடியாலும் அடமானம் என்ற வசனமும் தஸ்தவேஜில் கண்டிருப்பதாலும் தாவா தஸ்தவேஜானது அடமானமென்றே சொல்லத்தகுமென்றும் ஆகவே வாதி கடன் தொகையை வசூலிக்க தாவா செய்யலாமென்றும் ஆனால் வாதிக்கு ஒரு அயிடம் சுவாதீனத்திலும் அனுபோகத்திலும் விடப்பட்டிருக்க அது பிடுங்கிக்கொள்ளப்பட்டதென்ற பொய்யான வியாஜ்ஜியமூலத்தைக்கொண்டு இந்த பிராதுகொடுத்தமையால் பிராது தள்ளுபடியாகவேண்டியது நியாயமாகுமென்று அபிப்பிராயப்பட்டு மொத்தத்தில் 2-வது அப்பீல் தள்ளுபடியாகவேண்டியது நியாயமென்று ஒத்தபிப்பிராயம்கொடுத்தார்கள். தவிர கடனைக்கொடுப்பதாக ஒப்புக்கொண்டும் காலத்தைக்குறிக்காதபோதிலும் ஒப்பந்தம் ஒப்பந்தமேயென்றும் அவ்வித ஒப்பந்தம் சரியானதல்லவென்று 15 மதராஸ் 304-ல் தீர்மானித்திருக்கிறது சரியல்லவென்றும் அபிப்பிராயம் கொடுத்தார்கள்.

ஆகவே வாதியின் கடனுக்குபதிலாக 1-அயிடம் சொத்தானது வாதியின் அனுபோகத்தில் விடப்பட்டிருக்க வாதி தொகையை வசூலிக்கப்பிரயத்தனப்படக் கூடாதென்றும் மற்ற இரண்டு அயிடங்கள் விஷயமாய் தஸ்தவேஜானது ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள் சொல்லுகிறபடி ஹக்குப்பத்திரமென்று மதிக்கப்பட்டால் தொகையை வசூலிக்கும் சந்தர்ப்பம் நேரிடவில்லையென்றும் ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்

யரவர்கள் சொல்லுகிறபடி அது அடமானபத்திமாக பாவிக்கப்பட்டால் கடன் தொகையை வசூலிக்க நியாயமேற்பட்டபோதிலும் வாதி பிசகான வியாஜ்ஜியமூலத்தைப் பிராதில் காட்டியபடியால் பிராதை டிஸ்மிஸ் செய்வது நியாயமாகுமென்றும் ஏற்பட்டதுபோலும்.

———( )———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

திருநெல்வேலி ஜில்லா.

A. S. No. 213 of 1909—31 மார்ச்சு 1914.

அளகப்ப செட்டியார் *Vs* சுப்பிரமணியபாண்டிய தேவர்

வாதியின் மேடோவர்தாருக்கு 1-2 பிரதிவாதிகள் 1896 டிசம்பரிலும் 1897 மார்ச்சிலும் எழுதிக்கொடுத்த கடன் பத்திரங்களின்படி அசல்வட்டியுள்பட பாக்கி ரூ 10, 920-யும் செலுத்தும்பொருட்டும் வேறு சில பாபத்துக்காகவும் 1, 2 பிரதிவாதிகளும் மேற்படியார்களுடைய தாயாரும்சேர்ந்து தங்கள் சொத்துக்கள் யாவற்றையும் 3-ம் பிரதிவாதிக்கு 1901 ஆகஸ்டில் அடமானம் வைத்து எழுதிக்கொடுத்த தஸ்தவேஜின் இணைபற்று விவரத்தில் "வாதியின் மேடோவர்தாருக்காகச் செல்லவேண்டிய கடன் பாக்கி ரூ 10,920-யும் தாங்களே செலுத்தி இரண்டு பத்திரங்களையும் வாபிஸ்பெற்றுக்கொள்ளும்படியாகத் தாங்கள் ஒப்புக்கொண்டவர்கையில் எங்கள் பத்தான ரூ 10, 920 போக" என்று கண்டிருக்க 3-ம் பிரதிவாதி வாதிக்குறிய கடன் பூராவையும் செலுத்தாமல் இரண்டு வருஷங்கள் பொருத்து தன் ஏஜண்டைக்கொண்டு வாதிக்குறியவட்டி பாக்கி ரூ 4,170-ஐ மட்டும் செல்லுவைத்தார். அவ்விதமாய் 3ம் பிரதிவாதியின் ஏஜண்டு செல்லுவைத்தமையால் வாதியின் பத்திரங்களுக்கு காலாவதி தோஷம் நிங்கிப்போனதாகச்சொல்லி வாதி அசல்வட்டிபாக்கித்தொகையை வசூலிக்கும் பொருட்டு திருநெல்வேலி சப்கோர்ட்டில் பிராது செய்ததில் சப்கோர்ட்டார் வாதியின் பிராதுக்குக் காலாவதிதோஷம் சொல்லி 3-ம் பிரதிவாதியின் ஏஜண்டுவைத்த செல்லானது காலாவதிக்குதவக் கூடியதல்லவென்று தீர்மானித்து வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்தார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் அங்கும் அதே அபிப்பிராயம் கொடுக்கப்பட்டு அப்பீல் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட காரணமாவது:— சப்கோர்ட்டார் அபிப்பிராயத்தில் வாதிக்குறிய கடனைத்தீர்ப்பதற்காக 3-ம் பிரதிவாதி அடமான தஸ்தவேஜில் அனுமதி பெற்ற விஷயத்தில் 3-ம் பிரதிவாதி அவ்விதமாய் வாதியின் கடனைத்தீர்ப்பது அவருடைய இஷ்டத்தைப் பொருத்ததாகுமென்றும் கடனைத்தீர்க்கவேண்டிய கட்டாயமில்லை யென்றும், ஆகையால் 3-ம் பிரதிவாதி 1-2 பிரதிவாதிகளிடம் பவர்பெற்ற ஏஜண்டாக மாட்டாரென்றுசொல்லப்படுகிறது. கடனைச்செலுத்துவது இஷ்டத்தைப் பொருத்ததானாலும் 3-ம் பிரதிவாதி அதிகாரம் பெற்ற ஏஜண்டாகவே பாவிக்கப்பட நியாயமாகும். ஆனால் இந்தக்கேஸின் சந்தர்ப்பத்தில் 3-ம் பிரதிவாதியைப் பூராபாக்கியையும் செலுத்தி பத்திரங்களை வாபிஸ் வாங்கும்படி அனுமதிகொடுத்திருக்க அப்படிச்செய்யாமல் காலாவதிதோஷத்தை நிவர்த்திக்கும்விதமாக 2-வருஷம்பொருத்து வட்டியை மட்டும் 3-ம் பிரதிவாதி செலுத்தின விஷயமானது ஏஜண்ட் ஹோதாவில் நடந்த பாவனையாகாது ஆகையால் 3-ம பிரதிவாதியின் ஏஜண்ட் வட்டிக்காக செல்லுவைத்த விஷயமானது 1, 2 பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தாது. வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷமென்று சப்கோர்ட்டார் தள்ளுபடிசெய்தது சரியென்று ஏற்பட்டு இந்த அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

———( )———

## புல்பெஞ்சு கேஸ்.

——()——

ஜஸ்டிஸ் வாலிஸ், ஜஸ்டிஸ் சதாசிவய்யர் &

ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்.

வடமலையாளம் ஜில்லா.

Crl. A. Nos. 50 & 51 of 1915

16 ஏப்பிரல் 1914.

ஸர்க்கார் வாதி *Vs* ராவர் உணித்தி

எதிரிகளை கிரிமினல் புரொஸிஜர் கோட் 195 வது பிரிவின்படி பொய்சாட்சியம் சொன்னதற்காக பிராஸிக்யூஷன் செய்யும்படி சாங்ஷன் அனுமதிகொடுத்த அடிஷனல் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டா ரவர்களுடைய உத்தரவின்பேரில் எதிரிகள் ஜில்லா ஜட்ஜியவர்களிடம் அப்பீல் செய்யாமல் மதராஸ் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஹைகோர்ட்டார் அப்பீல் அதிகார வரம்பைப்பற்றி எதிர் ஆக்ஷேபனை செய்யப்படாதசந்தர்ப்பத்தால் எதிரிகளின்பேரில் பிறந்த சாங்ஷன் அனுமதியைக் காயப்படுத்தினார்கள். அவ்வித அனுமதியின்பேரில் எதிரிகள் பிராஸிக்யூஷன் செய்யப்பட்டு தண்டனையடைந்த பின் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் அப்பீலில் அந்ததீர்மானத்தை மாற்றி எதிரிகளை விடுதலை செய்ததற்குக் காரணமாக எதிரிகளின்பேரில் பிராஸிக்யூஷன் நடவடிக்கையானது டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாரவர்களுடைய அனுமதி உத்தரவு பிறந்ததேதிமுதல் 6 மாதங்களுக்குள் நடத்தப்படவேண்டியதாயிருக்க ஹைகோர்ட்டார் சாங்ஷன் மனு அப்பீலைப் பைசல் செய்யுமட்டும் காத்திருந்து அதற்குப்பின் எதிரிகளின் பேரில் பிராது தாகல் செய்த காலத்தில் மேற்கூறிய 6 மாத வாய்தா கடந்துவிட்டதென்று அபிப்பிராயங் கொடுத்தார்கள். மேற்கண்டவிதமாய் எதிரிகள் விடுதலையானதின்பேரில் கிரிமினல் புரொஸிஜர்கோட் 423-வது பிரிவின்படி கவர்ன்மெண்டார் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். ஹைகோர்ட்டார் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்களுடைய அபிப்பிராயம் பிசகென்று சொல்லி விடுதலை உத்தரவை ரத்துசெய்து அப்பீலை மறு விஜாரணை செய்து பைசலளிக்கும்படி ஜில்லா ஜட்ஜியவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். ஹைகோர்ட் உத்தரவில் சொன்ன காரணச்சுருக்கமாவது:— மதராஸ் ஹைகோர்ட்டில் ஏற்பட்ட இரண்டு புல்பெஞ்சு தீர்மானங்களின்படி அதாவது 30 மதராஸ் 382, 22 மதராஸ் லா ஜர்னல் 419 இவைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கிற தீர்மானப்படி 6 மாதகாலத்தவணையானது ஹைகோர்ட்டார் சாங்ஷன் அனுமதியை காயப்படுத்தின தேதிமுதல் கணிக்கப்படவேண்டியதாகும். ஒரு கோர்ட்டார் சாங்ஷன் அனுமதியைக் கொடுத்தால் அதன்பேரில் அடுத்த மேலதிகாரமுடைய கோர்ட்டாருக்கு அப்பீல் முறை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஹைகோர்ட்டாருக்குக் கீழ்பட்ட ஒவ்வொரு கோர்ட்டாருக்கும் அடுத்த கீழ்படியான கோர்ட்டாருடைய உத்தரவின்பேரில் அப்பீல் முறை உண்டாதலால் ஹைகோர்ட்டைத் தவிர்த்த ஒவ்வொரு கீழ்கோர்ட்டாருடைய அனுமதி உத்தரவும் புதிதாய்க் கொடுக்கப்பட்ட உத்தரவாக பாவிக்கப்படவேண்டும். அதாவது சப் மாஜிஸ்டிரேட் உத்தரவின்பேரில் டிப்டி மாஜிஸ்டிரேட்டிடம் அப்பீல் செய்தும் சாங்ஷன் அனுமதி காயமானால் டிப்டி மாஜிஸ்டிரேட்டார் புதிதாக சாங்ஷன் அனுமதிகொடுத்ததாக பாவிக்கப்படவேண்டும். அதுபோலவே இந்தக்கேசில் ஹைகோர்ட்டார் சாங்ஷன் அனுமதியை அப்பீலில் காயப்படுத்தினபோதிலும் ஹைகோர்ட்டார் புதிதாய் அனுமதி கொடுத்த பாவனையாக அந்த உத்தரவு தேதிமுதல் 6 மாத காலத்திற்குள் பிராஸிக்யூஷன் நடவடிக்கையைத் துவக்கவேண்டும். ஆகையால் அனுமதி கொடுக்கப்பட்ட 6 மாதத்திற்குள் என்ற சட்ட வசனத்தில் கொடுக்கப்பட்ட என்ற பதத்திற்கு முதல் கோர்ட்டார் கொடுத்த என்ற குறுகின கருத்தைக் கொடுக்கவேண்டிய தவசியமில்லை. ஆகவே இந்தக் கேஸில் வாதி கொடுத்த பிராது காலாவதி கடந்ததல்லவென்று சொல்லத்தகும். சாங்ஷன் அனுமதியின்பேரில் ஜில்லாகோர்ட்டில் அப்பீல் செய்யப்படாத விஷயத்தைப் பற்றி வாதி ஹைகோர்ட்டில் ஆக்ஷேபிக்காதபடியால் ஹைகோர்ட்டார் அளித்த உத்தரவை நிராகரிக்க நியாயமில்லை. தவிர ஹைகோர்ட்டார் சாங்ஷன் அனுமதியைக் காயப்படுத்தினதில் அப்பீல் அதிகாரத்தையாவது அல்லது 439-வது பிரிவின்படி ரிவிஷன் அதிகாரத்தையாவது செலுத்தினார்களென்று சொல்லக் கூடாது. 195-வது பிரிவின்படி தாழ்ந்த கோர்டார் அளித்த உத்தரவின்பேரில் மேல்கோர்ட்டார் பிரவேசித்து யாதொரு உத்தரவளிக்க அதிகாரம் உண்டு. ஹைகோர்ட்டாருக்கு டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டார் தாழ்ந்தவர்களாதலால் மேல்கோர்ட்டார் அவ்வித உத்தரவின்பேரில் பிரவேசித்து அளிக்கும் உத்தரவானது அப்பீல் உத்தரவுமல்ல. ரிவிஷனில் செய்த உத்தரவுமல்ல. 195-வது பிரிவின்படி அசல் மனுவாக எதிரியின் அப்பீலை பாவித்து உத்தரவளித்ததாகச் சொல்லவேண்டும். ஆகையால் ஹைகோர்ட்

டார் சாங்கிஷன் அனுமதியைக் காயப்படுத்தினது புதிதாய் அளித்த சாங்கிஷன் அனுமதியென்று சொல்லப்படவேண்டும். ஆகவே ஹைகோர்ட்டார் உத்தரவளித்த முதல் 6 மாதத்திற்குள் பிராஸிக்யூஷன் நடவடிக்கை நடத்தினது பிசகல்லவென்று மேல்கண்டவிதமாய் அப்பீலை மறு ஈரங்கி கேட்டு சட்டப்படி பைசல் செய்ய வேண்டுமென்று ஜில்லா ஜட்ஜியவர்களுக்கு உத்தரவளிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

திருநெல்வேலி ஜில்லா.

**S. A. 1348 of 1912—11 மார்ச்சு 1914.**

*சுப்பா நாயுடு Vs வெங்கட்ராம நாயுடு*

வாதி வெங்கட்ராம நாயுடுவின் தகப்பன் குடும்பத் தலைவனாகயிருந்து குடும்ப சொத்துக்களை மானேஜ்மெண்டு செய்துவரும் பொழுது தன் பேரில் சில சொத்துக்களை கிறயத்திற்கு வாங்கியிருந்தார். அவர் காலஞ்சென்ற பிறகு வாதி அந்த சொத்துக்களை வாரிஸ் பாத்தியதையால் அடைய லாயக்குள்ளவரென்றும், தவிர அவைகள் பூர்வீக சொத்தின் வரும்படியிலிருந்து வாங்கப்பட்ட சொத்தாதலால் அவைகள் தன் தகப்பனுடைய ஸ்வயார்ஜிதமாகமாட்டாதென்றும் ஆகவே அதில் பிரதிவாதிகளுக்கு எவ்விதமான ஹக்கும் ஏற்பட நியாயமில்லையென்றும் சொல்லி மேற்படி சொத்தில் தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்கும் பொருட்டு திருநெல்வேலி டி-மு கோர்ட்டில் தாவா செய்தார். பிரதிவாதிகள் மேற்கூறிய சொத்துக்களை வாதியின் தகப்பனுடைய ஸ்வயார்ஜிதமென்று ஸ்தாபிக்க ஆவலுடையவர்களாக யிருந்து அந்தக்காரணத்தால் ஷை சொத்தில் யாதொரு பாத்தியம் கொண்டாடும் நிலைமையுடையவர்களாய் எதிர்வாதம் செய்ததில் வாதி கோயாளியென்றும் ஹிந்து லாப்படிக்கு சொத்தில் வாரிஸ் பாத்தியதையடைய யோக்கியமில்லாதவனென்றும் ஆக்ஷேபித்தார். டி-மு கோர்ட்டார் வாதியின் வியாதி ஜன்மரோகமல்லவென்று அபிப்பிராயப்பட்டு ஆகையால் குடும்ப சொத்தில் வாரிஸ் பாத்தியதையை அடைய லாயக்குள்ளவனென்றும், பூர்வீக சொத்தின் ஐவேஜானது வாதியின் தகப்பன் வசமிருந்தமையால் அவைகளை உபயோகப்படுத்தி தாவா சொத்துக்களைச் சம்பாதிக்காமல் ஸ்வயார்ஜிதமான தனத்தைக்கொண்டு அவைகளை வாங்கியதாக ருஜுப்படுத்தவேண்டிய கடமை பிரதிவாதிகளைச் சேர்ந்ததாகுமென்றும் அவ்விதமான ருஜுபாகம் பிரதிவாதிகளால் ஏற்படவில்லையென்றும் அபிப்பிராயப்பட்டு எதிர்வாதத்தை ஒப்புக்கொள்ளாமல் வாதிக்கனுகூலமாய் டிக்கிரீயளித்தார்கள். அப்பீலில் ஜில்லா கோர்ட்டாரும் வாதியின் வியாதியைப்பற்றி யாதொரு அபிப்பிராயம் கொடுக்காமல் தாவா சொத்துக்கள் வாதியின் தகப்பனுடைய ஸ்வயார்ஜிதமென்ற ருஜுபாகம் பிரதிவாதிகளால் ஏற்படவில்லையென்று டி-மு கோர்ட்டாருடன் ஒத்தபிப்பிராயப்பட்டு அப்பீலைத் தள்ளுபடி செய்தார்கள். அதன் பேரில் எதிரிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஸ்வயார்ஜிதமென்ற எதிர்வாதத்திற்குத் தகுந்த ருஜுபாகமில்லையென்று கீழ் கோர்ட் தீர்மானத்தைக் காயப்படுத்தினதுமல்லாமல் வாதியின் ரோக நிலைமையைப்பற்றியும் அதையிட்டு வாரிஸ் பாத்தியதைக்கு லாயக்கில்லாத விஷயத்தைப்பற்றியும் ஜில்லா கோர்ட்டில் எதிரிகள் வாதம் செய்யாதபடியால் ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயம் கொடுக்க நேரிடவில்லையென்றும் அது விஷயமாய் தீர்மானிக்கவேண்டுமானால் டி-மு கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்குமாறாக வேறு அபிப்பிராயமடைய நியாயமாகாதென்றும் வாதிக்கு நாவித்துவாரத்திலும் நாவியின்மேலும் ஒருவிதமான கட்டியுண்டாயிருக்க அது ஜன்மவியாதியல்லவென்றும் ஆகையால் ஹிந்து லாப்படிக்கு அது வாரிஸ் பாத்தியதையைக் கெடுக்கத்தக்க ரோகமாகாதென்றும் குருடு, ஊமை முதலிய குறையுடையவர்கள் மட்டும் ஜன்ம தோஷிகளாகிறார்களென்றும் 26 மதராஸ் 133, 15 மதராஸ் லா ஜர்னல் 251 இவைகளில் மேற்கூறிய ஜன்மக்குறைவுகளும் வாரிஸ் நிலைமைக்கு பாதகரமென்ற சாஸ்திர முறையின் நியாயமானது சந்தேகப்பட்டு வருகின்றதாகவும் ஆகவே வாதி, தகப்பன் சம்பாதித்த சொத்தில் வாரிஸ் முறையால் பாத்தியமடைய லாயக்குள்ளவனென்றும் தீர்மானித்து ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலையும் செலவுடன் தள்ளுபடி செய்தார்கள்.



---

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர்

விசாகப்பட்டணம் ஜில்லா.

**Crl R. Case 774 & Petition 625 of 1913**

**27 பிப்ரவரி 1914**

*பிரதி அப்பலராஜு Vs முத்தராஜு·ஸூப்பராஜு*

மதராஸ் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்ட் நமோதுக்கு வருமுன் தாவா நிலத்தை அனுபவித்து வந்த மனுதாரின் தகப்பனுக்குப்பின் மனுதாரும் டெனெண்டாக அனுபவித்துவரும்பொழுது நிலச்சுவான்தார் மனுதாரை அப்புறப்படுத்தும்படி நோடீஸ் கொடுத்து கோர்ட் மூலமாய் இஜெக்ட்மெண்டு டிக்கிரீயும் பெற்றபிறகு மனுதார் தாவா நிலத்தைவிட்டுப்போகாத நிமித்தம் நிலச்சுவான்தார் பித்தபுரம் சப் மேஜிஸ்டிரேட்டுமுன் கிரிமினல் தரப்பில் பிராதுகொடுத்ததில் மாதராஸ் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்ட் 212-வது பிரிவின்படி மனுதார் தண்டனையடைந்தார். டிப்டி மாஜிஸ்டிரேட்டாரவர்கள் அந்த தண்டனையைக் காயப்படுத்தினதின்பேரில் மனுதார் ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்ததில் ஹைகோர்ட்டார் மனுதார்பேரில் கிரிமினல் குற்றம் சாட்டினது பிசகென்று தீர்மானித்து தண்டனையை ரத்து செய்தார்கள். ஹைகோர்ட் உத்தரவின் சுருக்கமாவது:— மனுதாரின் தகப்பன் நிலத்தை அனுபவித்து வந்து அவனுக்குப் பிறகு மனுதார் வாரிஸ் பாத்தியதையை அனுசரித்து, தாவா நிலத்தை அனுபவித்து வந்திருக்கிறார். மதராஸ் எஸ்டேட்ஸ்லாண்ட் ஆக்ட் 163-வது பிரிவின்படி ஒரு டெனெண்டின் பேரில் இஜெக்ட்மெண்ட் டிக்கிரீ பெற்றும் அவன் காலிசெய்துவிட்டுப் போகாவிடில் மட்டும் 212-வது பிரிவின்படி கிரிமினல் தரப்பில் பிராஸிக்யூஷன் செய்து தண்டிக்கலாம். 163-வது பிரிவின்படி இஜெக்ட்மெண்ட் டிக்கிரீயடைவதற்கு ஒரு அந்நியன் வாரிஸ் பாத்தியதையில்லாமல் அல்லது முந்திய டெனெண்டிடமிருந்து பெற்ற சட்டப்படி ஒப்புக்கொள்ளத்தக்க விக்கிறயம் முதலிய பாத்தியதையை அனுசரியாமல் நிலச்சுவான்தாருடைய அனுமதியன்னியில் ஒரு எஸ்டேட் நிலத்தில் பிரவேசித்திருக்கவேண்டும். சுவான்தார் 163-வது பிரிவின் அம்சங்களையிட்டு இஜெக்ட்மெண்ட் டிக்கிரீயடையாதபடியால் மனுதாரை பிராஸிக்யூஷன் செய்ய சட்டமில்லையென்று தீர்மானித்து மேற்கண்டவிதமாய் உத்தரவளித்தார்கள்.

---

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

குண்டூர் ஜில்லா.

**S. A. 2397 of 1912—12 மார்ச்சு 1914.**

*போடி முத்தய்யா Vs காவிரி கோதண்டராமய்யா*

வெங்கய்யா என்ற மூல புருஷன் தன்னுடைய சொத்துக்களை தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு தனித்தனி பாகங்களை நன்கொடையாகப் பிரித்துக்கொடுத்ததில் விதவையாய்ப்போன தன் மருமகளுக்கு ¼ பங்கு ஏற்பட்டு அவள் அதை சர்வ சுதந்தர பாத்தியதையுடன் அனுபவித்துவந்து அவள் காலஞ்சென்ற பிறகு அவளுடைய வாரிஸ்கள் அதை அடைந்ததில் குடும்பத்தைச்சேர்ந்த மற்ற மெம்பர்கள் நன்கொடையை ஆக்ஷேபித்து நன்கொடையளித்தது யதார்த்தமாக பாவிக்கப்பட்டபோதிலும் ஒரு ஹிந்து தன் மருமகளுக்கு நன்கொடையளித்தால் அந்த சொத்தில் ஷை யாளுக்கு ஜீவதசைமட்டும் பாத்தியம் ஏற்பட நியாயமுண்டே யொழிய ஸர்வஸ்வதந்தர பாத்தியதை ஏற்படாதென்றும் ஷை சொத்துக்கள் அவளுக்குப்பின் தங்களுக்குச் சேரவேண்டுமென்றுசொல்லி சப்கோர்ட்டில் பிராதுசெய்தார்கள்.

சப்கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லாகோர்ட்டாரும் வாதிகளின்பிராதைத்தள்ளுபடிசெய்ததின் மேல் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கும் வாதிகள் அபஜெய மடைந்தார்கள். ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:—40 வருஷங்களுக்கு முன் மூலபுருஷனாகிய வெங்கய்யா தன் மருமகளுக்கு வாய்மொழியாய் சொத்தின் கால்பங்கை நன் கொடையளித்ததாக ஜில்லாகோர்ட்டார் நம்புகிறார். மற்றப்படி இரு கக்ஷியிலும் வாதிக்கப்பட்ட பற்பல நன்கொ

டையம்சங்களைப்பற்றி விடப்பட்ட சாட்சியங்களை ஜில்லா ஜட்ஜியவர்கள் நம்பவில்லை. ஆகவே இருதரப்பு சாட்சியங்களையும் நம்பாதபட்சத்தில் அச்சம்மாள் என்ற மருமகள் யாதொருபாத்தியதையும் நிலமையுமில்லாதபடி மாமனுருடைய சொத்தில் ¼ பங்கை சுவாதீனமடைந்து அனுபவித்துவந்ததாக சொல்லவேண்டும். அப்படியானல் பிரிவிகௌன்ஸில் தீர்மானத்தில் ஏற்பட்ட நியாயப்படிக்கு அவள் 12-வருஷங்களாக நிராக்ஷேபணையான அனுபோகமடைந்த காரணத்தால் அவளுக்கு விரோதமாய் பாத்தியங்கொண்டாடக்கூடிய அடுத்தவாரிஸை நிராகரித்து அந்தசொத்தில் ஸர்வஸ்வதந்தரபாத்தியதை யடைந்தவளாகிருளென்று சொல்லவேண்டும். அப்படிப்பட்ட ஸ்வதந்தர பாத்தியதை ஏற்பட்டால் வாதிகளின் தாவா செல்லத்தகாதென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. நன்கொடை விஷயமாய் பிரதிவாதிகளுடைய சாட்சியம்சம் பிரயோஜனமில்லையென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் அபிப்பிராயப்பட்டபோதிலும், மற்ற சந்தர்ப்பங்களும் சம்பாவிதங்களும் எதிரி தரப்பு சாட்சியம்சங்களுக்கு அனுஸரணையாக இருக்கிறதென்று ஜில்லா கோர்ட்டார் ஒப்புக்கொள்ளுகிருர்கள். அப்படிப் பார்த்தாலும் வாதியின் வழக்கு செல்லத்தகாதென்று சொல்லவேண்டும்.

வாதி 2-வது அப்பீலில் செய்கிற வாதத்தில் அச்சம்மாளுக்கு நன்கொடையளித்த விஷயம் வாஸ்தவம் என்று ஒப்புக்கொண்டபோதிலும் நன்கொடை அவளுக்கு ஸர்வஸ்வதந்தரமாய்க் கொடுக்கப்பட்டதல்லவென்றும் சட்டவிதிப்படிக்கு ஹிந்து தன் மருமகளுக்கு ஜீவதசைமட்டும் அனுபவிக்கும்படி யாதொரு சொத்தை நன்கொடையளிக்கலாமேயொழிய அத்தரீதியாய் விநியோகம் செய்யக்கூடாதென்று தீர்மானிக்கவேண்டுமென்று கோறப்படுகிறது. பிரதிவாதியின் எதிர் வாதத்திற்காக விட்டசாட்சியத்தில் ஒருபாகத்தைமட்டும் எடுத்துக்கொண்டு மற்றதைத்தள்ளுவது உசிதமல்ல. வாதிக்காகச்சொல்லப்பட்ட சட்டமுறையும் அனுமானிக்கத்தக்கதல்ல. முன்காலத்தில் ஏற்பட்ட தீர்மானங்கள் எவ்விதமிருந்தபோதிலும் சொற்பகாலமாய்க் கொடுக்கப்பட்டுவருகிற தீர்மானங்களில் மகளுக்காவது மற்ற பெண்ஸினங்களுக்காவது நன்கொடையளிக்கப்படுங்கால் அவர்களுக்கு ஸர்வஸ்வதந்திர பாத்தியதை உண்டாக்கக் கூடாதென்ற கருத்துடன் அவ்வித நன்கொடையளிக்கப்பட்டதாக ஒரு விபரீதமான அர்த்தங்கொள்ளக்கூடாதென்று சொல்லப்படுகின்றன. அவ்விதமான கருத்துடன் நன்கொடையளிக்கப்பட்டதாக யூகிக்கலாமென்றுலும் ஜில்லா ஜட்ஜியவர்கள் வேறு சில சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டியதில் தாவா நன்கொடையால் மருமகளுக்கு அத்தரீதியான தானம் செய்யப்பட்டதாக அனுமானிக்கவேண்டியதாகிறது. குடும்பசொத்தில் சட்டப்படிக்கு ஒருபாகத்தையடைய வேண்டியவனுக்கும் அதே பங்குவிகிதமானது நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கிறது. தவிர நன்கொடை லாபமடைந்த மற்றபெண்டுகளிடம் கிரயம்பெற்று அனுபவிக்கிறவர்களை, இந்தப்பிராது கொண்டுவருமுன் எவ்விதமாகவும் தடுக்கவில்லை. மேற்கூறிய இரண்டு சந்தர்ப்பங்களைக் கவனித்தால் அச்சம்மாள் அடைந்த நன்கொடைச்சொத்தில் ஸ்வதந்தர பாத்தியதை ஏற்பட்டு அவளுக்குப்பின் எதிரிகள் அதை சட்டப்படி அடைந்தனுபவிக்க யோக்கியராகிருர்கள். ஆகவே வாதிகளின் தாவா தள்ளுபடியானது நியாயமென்று சொல்லி 2-வது அப்பீல்லும் தள்ளுபடி செய்யப்பட்டது.

———:O:———

ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

(ராமனுதபுரம் ஜில்லா)

C. M. P. No 804 of 1914 in A. S. 179 of

29 ஏப்பிரல் 1914

அளகாபுரி ராக்கப்ப செட்டியார் (மனுதார்)

*Vs*

நாச்சியப்ப செட்டியார் (எதிர்மனுதார்)

அவிபக்த ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்த வாதி ராக்கப்ப செட்டியாரவர்கள் குடும்பத்தலைவரும் ஜ்யேஷ்டருமான நாச்சியப்ப செட்டியாரின் பேரில் ராமனுதபுரம் சப்கோர்ட்டில் 1911-ம் வருஷத்திய அசல் நெ. 124-ல் பாகவியாஜ்ஜியம் செய்ததில் பிராதில்கண்ட சில அயிட்டங்களை ரூ. 88,000-மாக மதிப்பிட்டு அதில் சமபாதி விகிதத்தை பிரதிவாதி வாதிக்குக் கொடுக்கக்கடவதென்று தீர்மானிக்கப்பட்டு அத்துடன் அரைவட்டி சேர்த்து பிரதிவாதியின்பேரில்டிக்கிரியளிக்கப்பட்டது. எதிரி அதன்பேரில் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து ஷை அப்பீல் பைசலாகுமட்டும் வாதி கீழ்கோர்ட் டிக்கிரியை நிறைவேற்றுமல் மறியல் உத்தரவு பிறக்கவேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்ததில் ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவாகள் 1913 செப்டெம்பர் 8-ல் எதிரி கோறியபடி மறியல் உத்தரவளித்ததில் எதிரியின் பேரிலும் அவருடைய ஜங்கம சொத்துக்களின்பேரிலும் தொடரக்கூடாதென்றும் ஆனல் எதிரிக்கு வரவேண்டிய நிலுவை பாக்கிகளை ரிஸீவர் மூலமாக வசூலித்து வாதி டிக்கிரியின் வகைக்குச் செல்லுவைத்துக்கொள்ளலமென்றும் அனுமதி கொடுத்திருந்தார்கள். அப்படியிருக்க எதிரி, ரிஸீவர் நியமன உத்தரவை மதியாமல் உபயவாதிகளுக்கும் பொதுவாய்ச் சேரவேண்டிய நிலுவை பாக்கிகளைத் தானே வசூலித்து அந்தத் துகையை தன்னிஷ்டப்படிக்கு பந்தோபஸ்து செய்தமையால் எதிரியின ஷை நடத்தையானது ஹைகோர்ட்டாருடைய உத்தரவுக்கு விபரீதமாயிருப்பதாகச் சொல்லி வாதி ஹைகோர்ட்டில் சில்லரை மனுக்கொடுத்து அதில் எதிரியின் நடத்தைக் குறைவால் முன் மறியல் உத்தரவின் சிலாக்கியத்தை எதிரி இழந்துபோகக்கடவனென்று சொல்லி மறியல் உத்தரவை ரத்து செய்யவேண்டுமென்று கோறிக்கொண்டார். ஷை சில்லரை மனுவை ஈரங்கி கேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்கள வாதிக்காக (மானுதாருக்காக) வக்கில் மிஸ்டர் S. முத்தையா முதலியாரவர்களுடைய தாவத்தையும் எதிரிக்காக மிஸ்டர் ஸி. வி அனந்தகிருஷ்ணய்யரவர்களுடைய எதிர்வாதத்தையும் கேட்டு அளித்த உத்தரவின் சுருக்கமாவது:— எதிரி நிலுவைபாக்கியை மேற்கண்டவிதமாய் வசூலித்தது மறியல் மனுவில் பிறந்த கட்டளையின் கருத்துக்கு விரோதமாயிருக்கிறதென்றும் ஆகையால் அப்படி வசூலித்ததுகை முழுவதையும் ராமனுதபுரம் சப்கோர்ட்டில் கோடைலீவ் கழிந்துதிறந்த அன்றய தினத்திலேயே கட்டிவிட்டு தன் வசத்திலிருப்பதாய் ஒப்புக்கொள்ளப்பட்ட தஸ்தவேஜுகள் யாவற்றையும் அதே கோர்ட்டில் பயில் செய்யவேண்டுமென்றும் அவ்விதமாய் நடக்கத் தவறினல் வாதி பெற்ற டிக்கிரியை நிறைவேற்றக்கூடாதென்று முன் செய்யப்பட்ட மறியல் உத்தரவானது செல்லத்தகாதென்று தீர்மானிக்கப்படவேண்டுமாய் உத்தரவாச்சது.

———:O:———

ஜஸ்டிஸ் டையாப்ஜி & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

நெல்லூர் ஜில்லா.

A. S. No 213 of 1911—11 மார்ச்சு 1914.

பொனகபல ராமிரெட்டி *Vs* ஹாஜீ மஹம்மத் அப்துல் பாட்ஷா சாஹெப்

நெல்லூர் ஜில்லாவில் நான்கு வம்சத்தாருக்கும் பொதுவாய்ச் சொந்தமாயிருந்த தாவா சொத்துக்களை 1901 ஜுலையில் வாதுவகையராக்கள் ஷை யார்களிடமிருந்து விக்கிரயம்பெற்றதாகச் சொல்லி அதே சொத்துக்களை, கோர்ட் வலத்திலெடுத்து அதில் பாத்தியம் கொண்டாடுகிற பிரதிவாதிகளின் பேரில் வழக்கெடுத்து நெல்லூர் ஜில்லாகோர்ட்டில் பிராதுசெய்ததில் ஜில்லா ஜட்ஜியவர்கள் 11-வது ஆக்ஷேபணைப் பிரதிவாதிகளால் தாகல்செய்யப்பட்ட ஒரு உத்தரவானது வாதியின் வழக்குக்கு இடையூறாயிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டு பிராதை டிஸ்மிஸ்செய்துவிட்டார்கள். அதன்மேல் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜில்லாகோர்ட் தீர்மானம் பிசகெனறு ஏற்பட்டு பிராதை மறு விசாரணை செய்து பைசல்கொடுக்கும்படி ஜில்லா கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது.

தாவாசொத்துக்கு பாத்தியஸ்தர்களாயிருந்த மேற்கூறிய நான்கு வம்சத்தாரில் ஒரு வம்சத்தலைவராகிய நரஸா ரெட்டியின்பேரில் 1-2 பிரதிவாதிகள் பெற்ற வெண்ணலைடிக்கிரியை நிறைவேற்றும்பொருட்டு தாவாசொத்துக்களை ஜப்தி செய்த உடன் வாதி தன் விக்கிரயபாத்தியதையை அனுசரித்து C. M. P. 451 of 1903-ல் பாத்திய மனுக்கொடுத்து ஜப்தியை ஆக்ஷேபித்தார். அதே சொத்துக்களில் முன் அடமான பாத்தியமுடைய வேறு சிலரும் 440-வது மனு நம்பரில் விண்ணப்பம் கொடுத்து ஜப்தியானது தங்கள் அடமானத்திற்குட்பட்டிருக்கவேண்டுமென்று கோறிக்கொண்டார்கள். இந்த இரண்டு விண்ணப்பங்களையும் ஒரே காலத்தில் ஜில்லா கோர்ட்டார் ஈரங்கிகேட்டதில், ஜப்திக்கு முன்

காலஞ்சென்ற நரஸா ரெட்டிக்குப்பின் தாவா சொத்துக்களின் பாத்தியதையானது, அவிபக்த தாயாதியாகிய, மற்ற மூன்று வம்சத்திற்கும் வாரிஸாகவும், ஏற்பட்ட கேசவரெட்டிஎன்றவருக்குச்சென்றுவிட்டமையால் நரஸா ரெட்டியினுடையடிக்கிரீபாக்கிக்காக அந்த சொத்துக்களை ஜப்தி செய்ய நியாயமில்லையென்று சொல்லி ஷை கேசவரெட்டியும் ஆக்ஷேபனைசெய்தார். ஜில்லா ஜட்ஜியவர்கள் கேசவரெட்டியின் ஆக்ஷேபனை நியாயமானதென்று சொல்லி மேற்கூறிய இரண்டுபாத்திய மனுக்களின்பேரிலும் ஒரே உத்தரவாக ஜப்தியை விடுதலைசெய்ததில் வாதியின் விக்கிறயமானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட யதார்த்தமான நடவடிக்கையாகக் காணப்படவில்லையென்றும் முன் அடமான பாதார்களுடையத்தியதைக்கு தாவா சொத்துக்கள் பந்தகப்படவேண்டியது நியாயமேயென்றும் ஷை உத்தரவில் அபிப்பிராயங்கொடுத்திருந்தார்கள். இந்த உத்தரவுதான் தாவா கேசில் II வது ஆதரவாக தாகல் செய்யப்பட்டு அது வாதிக்குப் பிரதிகூலமாக ஏற்பட்டது. அதாவது ஷை உத்தரவில் வாதியின் கிறய பாத்தியதையைப்பற்றி கோர்ட்டார் விரோதமான அபிப்பிராயம் கொடுத்தமையால் ஜப்தி விடுதலையாகி யிருந்தபோதிலும் அந்த உத்தரவின் அம்சம்வாதிக்குப் பிரதிகூலமானபடியால் அவ்வித அபிப்பிராயத்தை மாற்றி தன் கிறயபாத்தியதையை ஸ்தாபித்துக்கொள்வதற்கு ஷை உத்தரவு ஏற்பட்ட தேதிமுதல் ஒரு வருஷத்திற்குள் அசல் தாவாசெய்யத்தவறினபடியால் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை கோர்ட் ஏலத்திலெடுத்தபிறகு இந்ததாவா கொண்டுவரக்கூடாதென்று வாதியின் பிராதைத் தள்ளுபடிசெய்ததற்குக் காரணமாகச் சொல்லப்பட்டது.

மேற்கூறிய உத்தரவின்படி ஜப்தி விடுதலையானகாரணத்தால் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் மேற்கூறிய இரண்டு பாத்திய மனுக்களைகொடுத்த வாதியையும், அடமானதார்களையும் பார்ட்டிகளாய்ச்சேர்க்காமல் கேசவரெட்டி என்பவரை மட்டும் அப்பீல் பிரதிவாதியாக்காட்டி சில்லரை மனு அப்பீல் செய்ததில் ஹானரபில் ஜஸ்டிஸ் டேவிஸ் & ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்களும் இந்தப்பிராதில் 4-ம் பிரதிவாதியாகச்சேர்க்கப்பட்டிருக்கிற மேற்கூறிய கேசவரெட்டியாரைப்பற்றின மட்டில் ஜப்தியை விடுதலைசெய்த ஜில்லாகோர்ட் உத்தரவு ரத்தாகவேண்டியதென்று தீர்மானம் கொடுத்தார்கள். இந்தத்தீர்மானம் 1904 அக்டோபரில் ஏற்பட்டது. அதன்மேல் பிரதிவாதிகள் ஜப்திக்கட்டளை உறுதியானகாரணத்தால் தாவாசொத்துக்களை ஏலத்திற்குக்கொண்டுவர மேல் நடவடிக்கை நடத்தினதில் வாதி 1906-ம் வருஷத்திய 441-வது சில்லரை மனுக்கொடுத்து ஏலத்தை நிறுத்தும்படியாகவும் II வது ஆதரவில் கண்ட உத்தரவால் ஜப்தியானது ரத்தாகியிருக்க அந்த உத்தரவினால் வாதியின் பாத்தியதைக்கு யாதொரு குறைவுமேற்படவில்லையென்றும், பிரதிவாதிகள் ஷை உத்தரவு ஏற்பட்ட முதல் ஒரு வருஷத்திற்குள் அசல் தாவாசெய்து ஜப்திவிடுதலையை ரத்துசெய்து வாதிகளின் பாத்தியதையை நிராகரிக்காதபடியால் வாதியின் பாத்தியதையானது நிலைத்துப்போய் விட்டதென்றும் பிரதிவாதிகள் தாவா சொத்துக்களை ஏலத்திற்குக்கொண்டுவரக்கூடாதென்றும் ஆக்ஷேபித்தார். ஜில்லா கோர்ட்டார் வாதியின் ஆக்ஷேபனையை ஒப்புக்கொண்டு ஏலவிண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். பிரதிவாதிகள் அதன்பேரில் ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் தாகல்செய்ததில் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்கள் II வது ஆதரவு தஸ்தவேஜை மூன்றுவித உத்தரவுகளாக பாவிக்கவேண்டுமென்றும் வாதிக்கு தாவாசொத்தில் (விக்கிறயத்தால்) யாதொருபாத்தியதையும் கிடையாதென்ற தீர்மானமும் அந்த உத்தரவில் அடங்கியிருப்பதாகச் சொல்லி ஆகையால் அந்த உத்தரவால் யாதொரு நன்மையுமடையாதிருக்க தாவாசொத்தை ஏலம்போடுவதில் யாதொரு ஆக்ஷேபனையும் செய்ய நியாயமில்லையென்றும், அன்றியும் வாதிக்கு யாதொரு விக்கிறயபாத்தியதை இருந்தபோதிலும் அதை ஸ்தாபித்துக்கொள்வதற்காக ஷை உத்தரவு பிறந்தது முதல் ஒருவருஷத்திற்குள் வாதி அசல்தாவாசெய்யாதபடியால் அவ்வித பாத்தியதையை வாதி இழந்துபோய் விட்டாரென்றும் அபிப்பிராயங்கொடுத்து ஏலத்தைத் தடைசெய்தது பிசகென்று தீர்மானித்து, ஏலத்தை நடத்தும்படி உத்தரவளித்தார்கள். ஜஸ்டிஸ் வாலிஸ் துரை



யவர்களுடைய உத்தரவின்பேரில் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்யப்பட்டு ஹானரபில் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்களும் ஜஸ்டிஸ் பின்ஹே துரையவர்களும் அப்பீலைத் தள்ளுபடிசெய்த தீர்மானத்தில் வாதியின் கிறய பாத்தியதைக்கு விரோதமாக II வது ஆதரவில் கண்ட உத்தரவு யூகிக்கப்பட வேண்டுமென்று ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்களுடன் ஒத்தபிப்பிராயமடைந்தும் அதன் பிறகு வாதி ஒரு வருஷத்திற்குள் அசல் வியாஜ்ஜியம்செய்யத் தவறினபடியால் வாதியின் பாத்தியதை கெட்டுப்போச்சுதா வென்று ஏல நடவடிக்கையின் விஷயமாய் வந்திருக்கிற இந்த அப்பீலில் தீர்மானிக்கவேண்டியதவசியமில்லையென்றும், பிரதிவாதிகள் II வது ஆதரவாகிய உத்தரவுக்குமேல் ஒரு வருஷத்திற்குள் அசல் தாவாசெய்யத் தேவையில்லை யென்றும் அந்த விஷயத்தையும், ஜஸ்டிஸ் டேவிஸ்துரையவர்களும் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்களும் நாலாம் பிரதிவாதியாகிய கேசவரெட்டியைப்பற்றினமட்டில் ஜப்தியை உறுதிப்படுத்தி ஏலத்திற்கு அனுமதிகொடுத்த காரணத்தையும், கவனித்தால் தாவா ஏலத்தை வாதி ஆக்ஷேபித்து ஏலம் நிறுத்தப்படுவது நியாயமாகாதென்றும் அபிப்பிராயங்கொடுத்தார்கள். ஆகவே தாவா ஏலம் நிறைவேறி 190) அக்டோபரில் பிரதிவாதிகளே ஏலமெடுத்து சொத்து பாத்தியதையை அடைந்தார்கள். வாதி ஷை யார்கள்பேரில் இந்ததாவா கொண்டுவந்ததில் ஜில்லா கோர்ட்டார்பிராதுக்கு காலாவதி ஆக்ட் 11-வது பிரிவின்படி தோஷம் சொல்லி பிராதைத் தள்ளுபடிசெய்தார்கள். ஹைகோர்ட்டார் அப்பீலில் பிராதுக்குக் காலாவதி தோஷமில்லையென்று தீர்மானித்து மறுவிஜாரணைக்கு உத்தரவளித்த உத்தரவில் சொன்னகாரணச் சுருக்கமாவன:—II-வது ஆதரவில் ஜில்லாகோர்ட்டார் மூன்று பிரத்தியேகமான பாத்தியமனுக்களைப்பற்றி ஒரே ஒட்டு உத்தரவாக ஜப்தியை விடுதலைசெய்த காரணத்தால் இந்தவழக்கின் அம்சங்கள் அதிக குழப்பமாகின்றன. அந்த உத்தரவின்பேரில்செய்யப்பட்ட ஹைகோர்ட்அப்பீல்உத்தரவுக்கு வாதி கட்டுப்படவும் நியாயமில்லை. ஏனெனில் வாதி அதில் பார்டியாகச்சேர்க்கப்படவில்லை. அப்பீலில் ஜப்தி விடுதலையைக்காயப்படுத்துவதில் அக்கரையுடைய வாதி அதில் பார்டியாக சேர்க்கப்படாமலிருக்க ஜப்தி விடுதலை உத்தரவை மாற்றின ஹைகோர்ட்டாரால் வாதியின் பாத்தியதைக்கு யாதொரு கெடுதியும் சம்பவிக்கத்தகாது. ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்களோ II-வது ஆதரவு தஸ்தவேஜை மூன்று பிரத்தியேகமான உத்தரவென்றும் வாதிக்கு விரோதமான உத்தரவு அதிலடங்கியிருக்கிறதாயும் சொல்லுகிறார்கள். லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் தீர்மானத்தில் பிரதிவாதி அசல் தாவா செய்யாமல் தாவா சொத்தை ஏலத்துக்குக் கொண்டுவரலாமாவென்ற வாதியின் 441- நெ விண்ணப்பத்தில் கண்ட ஆக்ஷேபனையைப் பற்றித் தீர்மானம் கொடுக்கும்பொழுது II-வது ஆதரவின் அம்சங்கள் வாதிக்கு விரோதமாக ஏற்பட்டிருப்பதாய் அபிப்பிராயம் கொடுத்தும் வாதி அசல் தாவா செய்யக் கடமைப்பட்டவரா என்ற விஷயத்தைப்பற்றி யாதொரு தீர்மானமும் கொடுக்கப்படவில்லை II-வது ஆதரவைப் பார்த்தால் அது ஒரே உத்தரவாக ஜப்தி விடுதலையாகி யிருக்கிறது. மூன்று மனுதார்களும் ஜப்தி விடுதலையாகவேண்டுமென்று கோறிக்கொண்டதில் ஜப்தி விடுதலையானபடியால் அந்த உத்தாவால் வாதிக்குக் கெடுதி ஏற்பட்டு அசல் வியாஜ்ஜியம் செய்ய அவசியம் நேரிடத்தகாதென்று சொல்லத்தகும். ஆகவே II-வது ஆதரவின் கருத்தை ஹைகோர்ட் அப்பீல்களில் ஏற்பட்ட அபிப்பிராயங்களைக் கொண்டு யூகிக்கலாமா அல்லது முதல்பார்வையில் தோன்றுகிறபடி அது வாதிக்குப் பிரதிகூலமல்லவென்று தீர்மானிக்கலாமாவென்றும் யோஜிப்பதற்குமுன் இந்த அப்பீல் ஈரங்கியில் இருதரப்பாராலும் எடுத்துக்காட்டப்பட்ட சில தீர்மானங்களைக் கவனித்துப்பார்ப்பதவசியமாகும்.

நிறைவேற்று நடவடிக்கைகளில் ஜப்தியாகும் சந்தர்ப்பங்களில் அநுசரிக்கவேண்டிய சட்டமுறைகளைப்பற்றி ஸி-பி-ஸி 278 முதல் 283-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறது. ஜப்தி நடவடிக்கையை ஆக்ஷேபிக்கிற அந்நியர்களுடைய மனுக்களைக் கோர்ட்டார் அதிக தாமதமன்னியில் தீர்மானிக்கவேண்டிய தவசியமாகும். டிக்கிரியை நிறைவேற்றும் கோர்ட்டார் டிக்கிரியின் பலனை அடைவதற்குக் கால தாமதமுண்டாக்காமல் பாத்தியமனுக்களைப் பற்றி தீர்மானங்கள் கொடுக்கவேண்டும். விரோதமடைகிற பாத்தியமனுதார்கள் அசல் வழக்கெடுப்பதற்கும் நெருக்கமாக ஒரு வருஷ காலாவதி விதிக்கப்பட்டிருக்கிறது. யாதொரு காரணத்தால் நிறைவேற்று

நடவடிக்கை நடைபெற்றபோனால் பார்டிகள் ஜப்திக்கு முன்னிருந்த நிலைமையில் வைக்கப்படுகிறார்கள். அந்த நடவடிக்கை நடைபெறாமல் நின்றுபோய் விடும்பட்சத்தில் இடையில் ஏற்பட்ட நடவடிக்கைகளெல்லாம் ரிகார்டில் ஏற்பட்டதபாவனையாக அவமதிக்கப்படவேண்டும். பற்பல தீர்மானங்களில் அதே கருத்து விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. (தாவாகேசுக்கு அக்கருத்தை ப்ரயோகித்தால் II-வது ஆதரவினால் ஜப்தி விடுதலையாகவே வாதியைப் பற்றினமட்டில் யாதொரு மேல் நடவடிக்கையும் அவசியமில்லை. எதிரி எடுத்த மற்ற நடவடிக்கையில் வாதி பார்டியல்ல.) 13 பம்பாய 72-ல் பாத்திய மனுதாரல்லாத ஒரு அந்நியனுடைய விண்ணப்பத்தின்பேரில் நிறைவேற்றுமனு வாபிஸ் வாங்கிக்கொள்ளப்பட்டதால் பாத்திய மனுதாருக்கு அசல் வியாஜ்ஜியம் தொடுக்க அவசியமில்லையென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஜப்தி உத்தரவானது அந்நியனுடைய நடவடிக்கையால் நிவர்த்தியாகி நிறைவேற்று மனுவே வாபிஸ் வாங்கப்பட்டதால் பாத்திய மனுதாரின் கோரிக்கை நிறைவேறிப் போய்விட்டதாகும். அதன்பிறகு, பாத்திய மனுவில் பிரதிகூல உத்தரவாகி யிருந்தபோதிலும் அசல் வியாஜ்ஜியம் தொடுக்க அவசியமில்லை. 18 பம்பாய் 24-ல் அதே தீர்மானம் அனுசரிக்கப்பட்டிருக்கிறது. ஜப்தி விண்ணப்பம் உவித்டிரா செய்யப்பட்டால் பார்டிகள் முன்னிருந்த நிலைமைக்கு சென்றுவிடுகிறார்களென்று அதில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 8 கல்கத்தா 279-லும் அதே அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறதாகத் தோன்றுகிறது. அந்தத் தீர்மானத்தில் பிரதிவாதி டிக்கிரி தொகையைச் செலுத்திவிட்டபடியால் ஏலம் நடக்கவில்லையென்றும் ஏலத்திற்குமுன் ஏற்பட்ட ஜப்தியானது நீங்கிப்போச்சுதென்றும் வாதியின் தாயார் ஜப்தி கமோதிலிருக்கும்போது அந்த சொத்தைக் கிறயத்திற்கு வாங்கியிருந்தபோதிலும் அந்தக்கிறயம் சட்டப்படி செல்லத்தகுமென்றும் கிறய பாத்தியதைக்கு யாதொருகுறைவும் ஏற்படாதபடியால் அவளுக்கு தாவா செய்யும் அவசியமில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 15 கல்கத்தா 674-ஐப் பார்க்கவும்.

II-வது ஆதரவின் கருத்தை வாதிக்கு விரோதமாக பாவிப்பதற்காக 29 மதராஸ் 225-ல் சொல்லப்பட்டிருக்கிற சில அபிப்பிராயங்கள் எடுத்துக் காட்டப்பட்டன: அந்தக்கேசில் பாத்திய மனுதாருக்கு விரோதமாக உத்தரவு பிறந்த ஒரு வருஷ காலத்திற்குப்பின் டிக்கிரி தொகை செல்லாதபடியால் பாத்திய மனுதாருக்கு அசல் வியாஜ்ஜியம் செய்ய அவசியமில்லையென்றும் டிக்கிரி பாக்கிதார் சொத்தை ஏலம் போடாமல் தடுப்பதற்கும் அல்லது ஏலம் எடுத்தவனுடைய பாத்தியதைக்கு விரோதமாகவும் அசல் வியாஜ்ஜிய சந்தர்ப்பம் நேரிட்டாலொழிய ஒரு வருஷ கெடுவுக்குள் அசல் வழக்கெடுக்காத குறையானது பாத்திய மனுதாருக்கு பாதகமாகாதென்றும் வாதிக்கப்பட்டது. மதராஸ் ஹைகோர்ட்டார் அபிப்பிராயத்தில் டிக்கிரி தொகை பாத்திய மனு தள்ளுபடியான ஒரு வருஷத்திற்குள் செலுத்தப்படாதபடியால் பாத்திய மனுவில் பிறந்த உத்தரவானது பாத்திய மனுதாரரையும் எதிரியையும் கட்டுப்படுத்துமென்றும் அதாவது உத்தரவில் கண்ட தீர்மானம் இருவரையும் கட்டுப்படுத்துமென்றும் ஜப்தி சொத்தில் பாத்தியமனுதாருக்கு ஒறக்கு நீங்கிவிடுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்தக் கேசில் பாத்திய மனுதாருக்கு நேர்விரோதமாகவே உத்தரவளிக்கப்பட்டு ஜப்தி ரத்தாகாமல் ஏலம், நடத்தப்படவேண்டுமென்று ஏற்பட்டிருந்தது அப்படியிருக்க பாத்திய மனுதார் ஒரு வருஷம் வரையில் காத்திருந்து வாதி ஏல நடவடிக்கையை மேல்நடத்துகிறானென்று அறியக் காத்திருக்குமட்டும் தன்னுடைய பாத்தியதையை ஸ்தாபிக்க அசல்நடவடிக்கை நடத்தாமல் தாமதிக்கவிடக்கூடாதென்பது சரியே (பாத்திய மனுதார் ஒரு வருஷத்திற்குப் பின்னும் வழக்கெடுப்பார் என்ற பயம் மற்றபார்டிகளுக்கு இருக்குமானால் ஒரு வருஷத்திற்குப்பின் சமாதானமாக டிக்கிரியைப் பைசல் செய்ய யோஜிக்கிறவர்களுக்கு சமாதானத் தொகையை தைரியமாய்த் தீர்மானம் செய்ய ஏதுகரமாகாது.) இந்தக்கேசில் II-வது ஆதரவில் பிறந்த உத்தரவானது வாதியின் விக்கிறய பாத்தியதை யிருந்தபோதிலும் பரவாயில்லை, ஏலம்நடக்கட்டுமென்ற விதமான உத்தரவாகஏற்படவில்லை. மற்ற கேசுகளின் தீர்மானங்களுடைய நியாயத்தையும் அவமதிக்கக்கூடாது. அதிக ஜாக்கிறதையோடு ஆராய்ந்து பார்த்து அந்தத்தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் 29 மதராஸ் கேசின் சந்தர்ப்பம் II-வது ஆதரவின் கருத்தை நிதானிப்பதற்கு உபயோகப்படுத்தத்தக்கதல்ல.

II-வது ஆதரவின் கருத்தில் வாதிக்குப் பிரதிகூலம் ஏற்பட்டதாகவும் ஆகவே ஒரு வருஷத்திற்குள் வாதி அசல் வியாஜ்ஜியம் செய்திருக்கவேண்டுமென்றும் சொல்லத்தகாது. அந்த உத்தரவில் சொல்லப்பட்ட அபிப்பிராயத்தைத் திருத்துவதற்காக அசல் வியாஜ்ஜியம் செய்யத்தேவையில்லை. மற்ற இரண்டு ஹைகோர்ட் அப்பீல் தீர்மானங்களாலும் வாதியின் நிலைமைக்கு யாதொருபாதகமும் ஏற்படவில்லை. முதல் அப்பீலில் வாதி பார்டியல்ல, 2-வது அப்பீலில் வாதி அசல் தாவா செய்யவேண்டுமா வென்ற பாயிண்டு தீர்மானிக்கப்படவேயில்லை. அதில் பிரதிவாதி அசல் வியாஜ்ஜியம் செய்யாமல் ஏலநடவடிக்கையெடுக்கலாமாவென்றுமட்டும் யோஜிக்கப்பட்டது. மேற்கூறிய காரணங்களைச் சொல்லி ஹைகோர்ட்டார் வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷமில்லையென்று தீர்மானித்து மறுவிஜாரணைக்கு உத்தரவளித்தார்கள்.



ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

(கிருஷ்ணா ஜில்லா)

C. R. P. No. 150 of 1913-12 பிப்ரவரி 1914

வெங்கடநரசிம்ம ராயுடு Vs நஸ்விட் ஜமீன்தார்.

வாதியாகிய நஸ்விட் ஜமீன்தாரவர்களுடைய நிலங்களில் சிலவற்றை அனுபவித்துவந்த பிரதிவாதிகளையராக்கள் ஜமீன்தாருக்குச் செலுத்திவந்த நிலத்தீர்வையல்லாத கட்டுதுமுலு என்ற பெயரால் வழங்கின ஒருவித வருஷாந்தர கட்டணத்தையும் 1909-ம் வருஷம் வரையில் செலுத்திவந்தார்கள். பிரதிவாதிகள் சாகுபடிசெய்துவந்த ஷெ நிலங்களுக்கு தண்ணீர்பாசனத்திற்காதாரமான ஜமீன் குளத்தை மராமத்து செய்து எப்போதும் நீர்ப்பாசனத்திற்கு யோக்கியமான ஸ்திதியில் வைக்கவேண்டிய பொறுப்பை ஜமீன்தாரவர்கள் ஏற்றுக்கொண்டு அதற்குப் பிரதிப்பிரயோஜனமாக பிரதிவாதிகளிடமிருந்து வருஷந்தோறும் மேற்கூறிய கட்டுதுமுலு என்னும்கட்டணத்தை வசூலித்து வந்தார்கள். ஷெ நிலங்களில் சர்வசுதந்தர பாத்தியமானது பிரதிவாதிகளுக்கே 1909-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டாரால் இனமாக அளிக்கப்பட்ட காரணத்தால் அவைகளுக்குறிய தீர்வையை அது முதல் பிரதிவாதிகள் கவர்ன்மெண்டாருக்குநேரில்செலுத்திவரும்படிநேரிட்டது. கட்டுதுமுலுஎன்றகட்டணத்தை இனாம்தார்களாகிய பிரதிவாதிகள் ஜமீன்தாருக்கு வழக்கம்போல் செலுத்திவரவேண்டிய கடமையை உத்தேசித்து பிரதிவாதிகள் இனாம் டிப்டிகலக்டரவர்களிடத்தில் விண்ணப்பம்கொடுத்துத் தாங்கள் ஸர்க்காருக்குச் செலுத்திவரவேண்டிய தீர்வையில் கொஞ்சம் சகாயம்செய்து குறைவுபடுத்த வேண்டுமென்று கோரிக்கொண்டார்கள். அதற்குகட்டுதுமுலு என்னும் தீர்வையை ஜமீன்தார் வசூலிக்க நியாயமில்லையென்று அபிப்பிராயப்பட்டு இனாம்தார்களுடைய தீர்வையைக் குறைக்க முடியாதென்று உத்தரவளித்துவிட்டார்கள். ஆகவே எதிரிகள் 1909-முதல் ஜமீன்தாருக்குகட்டுதுமுலுஎன்னும் கட்டணத்தைச் செலுத்திவராமல் ஸர்க்காருக்குறிய தீர்வை விகிதத்தை மட்டும் செலுத்திவந்தார்கள். ஜமீன்தாரவர்கள் 1909-முதல் செலுத்தப்படாமல் பாக்கி ஏற்பட்ட கட்டுதுமுலு என்னும் கட்டணத்தை வசூலிக்க ஸாயக்குள்ளவர்களென்று சொல்லி அதை வசூலிக்கும் பொருட்டு பெஜவாடா டி-மு கோர்ட்டில் 1912-ம் வருஷத்தில் ஸ்மால்காஸ் தரப்பில் பிராது கொடுத்து டிக்கிரிபெற்றதின்பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்ததில் டி-மு கோர்ட் தீர்ப்பு காயமாகி ரிவிஷன் மனு தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் உத்தரவில் சொல்லப்பட்ட காரணங்களாவன:—தாவா நிலங்களில் ஸ்வதந்தர பாத்தியதையானது ஜமீன்தாரிடமிருந்து மாறிப்போய்விட்டபடியால் ஜமீன்தாருக்கும் இனாம்தாருக்கும் ஷெ நிலங்கள் விஷயமான சம்பந்தம் நீங்கிப்போய் விட்டதென்றும் ஆகவே ஜமீன்தார் மேற்கூறிய கட்டணத்தை வசூலிக்க பாத்தியப்பட்டவரல்லவென்றும் பிரதிவாதிக்காக ஆக்ஷேபிக்கப்படுகிறது. மேற்கூறிய கட்டணமானது 1909-க்கு முன் சட்டப்படிக்கு ஜமீன்தாரால் வசூலிக்கத்தக்க ஒரு தீர்வை விகிதமென்று ஏற்பட்டிருந்தால் இனாம் டிப்டிகலக்டரவர்களுடைய அபிப்பிராயத்தாலாவது? அல்லது அவருடைய நடவடிக்கையாலாவது ஜமீன்தாருடைய ஷெ தீர்வையை வசூலிக்கும்பாத்தியதைக்கு யாதொரு குறைவும் ஏற்படக்கூடியதல்ல. 1869-ம் வருஷத்திய 8-வது ஆக்டில் தெளிவாய் முறையிட்டிருக்கிறபடி ஸெட்டில் மெண்டுக்கு முன்னுள்ளபாத்தியதையானது ஸெட்டில் மெண்டினால் கெடாதென்று சொல்லத்தகுமென்று எதிரியே ஒப்புக்கொள்ளுகிறார். பிரதிவாதி அந்தவாதத்தைக் கைவிட்டு 1802-வது ரெகுலேஷன் 25-ன் 4, 12-வது பிரிவுகளின் அம்சங்களால் ஜமீன்தாருக்கு கட்டுதுமுலு என்னும் தீர்வையை வசூலிக்கும் பாத்தியதையானது எடுபட்டுப்போய் விட்டதென்றும், ஜமீன்தாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சன்னதிலேயே குறித்துக்காட்டியிருக்கிற போர்ட்டாருடைய ஸ்டாண்டிங் ஆர்டர்களில் யாதொரு தீர்வை விகிதமானது ஸெட்டில்மெண்டு காலத்தில் விலக்கப்பட்டிருந்தால் அதைத்திரும்பவும் ஜமீன்தார் வசூலிக்க நியாயமில்லையென்றும் வாதிக்கப்பட்டது. கட்டுதுமுலு என்னும் தீர்வையானது லக்கிராஜ் என்னும் நிலங்களின்பேரில் வசூலிக்கத்தக்கவைகளென்று சொல்லப்பட்டால் அவ்விதமான தீர்வை ஸெட்டில் மெண்டுகாலத்தில் விலக்கப்பட்ட காரணத்தால் ஜமீன்தார் அவைகளைப் பின்னால்

வசூலிக்கக்கூடாதென்ற எதிர்வாதம் ஒப்புக்கொள்ளத்தக்கதாகும். தாவா கட்டணமானது ஒரு விதமான தீர்வையென்று சொல்லவே நியாயமில்லை. அது யாதொரு ஒப்பந்தத்தின்பேரில் ஏற்பட்ட கடமையாகுமென்று சொல்லத்தகும்; ஜமீன்தார் குளத்தை மராமத்து செய்து நல்ல ஸ்திதியில் வைத்திருக்கவேண்டும். அதற்காக பிரதிவாதிகள் ஒரு கட்டணத்தொகையை வருஷா வருஷம் ஜமீன்தாருக்குச் செலுத்திவரவேண்டும். இது ஒரு ஒப்பந்த விஷயமாகிறது. மராமத்து விஷயத்தில் ஜமீன்தார் தவறுதலாய் நடந்ததாகச் சொல்லப்படவில்லை: ஆகையால் ஷை கட்டணத்தைச் செலுத்தவேண்டியதும் பிரதிவாதிகளின் கடமையாகும். நிலச்சுதந்தரம் மாறிப்போன சந்தர்ப்பமானது அந்த ஒப்பந்தத்தின் கடமைகளை நிவர்த்திக்காது. 1891-ம் வருஷத்திய 2-வது அப்பீல் 541, 1909-ம் வருஷத்து C. R. P. 286, 1908-ம் வருஷத்திய 2-வது அப்பீல் 616, இவைகளில் மேற்கூறிய கட்டுது ... லு என்னும் கட்டணத்தை ஜமீன்தார் வசூலிப்பது சட்டவிரோதமாவென்றும், அதை எதிரிகள் ஸ்வய இச்சையாகச் செலுத்திவரப்பட்டதாவென்றும் யோஜிக்கப்பட்டு அவைகள் யாதொரு ஒப்பந்தத்தின்படி செலுத்திவரப்பட்டதாகவும் ஸ்வய இச்சையாகச் செலுத்தப்பட்டதல்லவென்றும் அதை வசூலிப்பது சட்டவிரோதமல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானங்களை யனுசரித்து தாவா கட்டணத்தை ஜமீன்தார் வசூலிக்க நியாயமுண்டென்றும் ஆகையால் டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் வாதிக்கனுகூலமாய் டிக்கிரியளித்தது சரியென்றும் ஏற்பட்டு ரிவிஷன் விண்ணப்பம் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

---

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

திருநெல்வேலி ஜில்லா

C. R. P. No. 390 of 1913—21 பிப்ரவரி 1914.

சுப்பராய ரெட்டியார் *Vs* ராஜகோபால ரெட்டியார்

தாவா சொத்துக்குடையவராயிருந்த சுப்பராய ரெட்டியாரென்ற மூலபுருஷன் காலஞ்சென்ற பிறகு, அவருடைய பெண்சாதி காந்தம்மாள் அவருடைய சொத்துக்களைக் கைவசப்படுத்திக்கொண்டு அந்த சொத்தில் ஜீவனும்ச பாத்தியத்தை உடைத்தாயிருந்த, தன் மாமியாரும் காலஞ்சென்ற சுப்பராய ரெட்டியாரின் தாயாருமாகிய ஞானம்மாளென்றவளிடத்தில் 1892-ம் வருஷத்தில் தன்பேருக்கு ஹக்கு விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு ஷை சொத்துக்களை அனுபவித்துவந்தாள். காந்தம்மாள் 1900 ஆகஸ்ட் 23-ல் ஷை சொத்துக்களில் தனக்குறிய பாத்தியதை, யாவற்றையும் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பன் பேருக்கும் மைனராயிருந்த 3-ம் பிரதிவாதியின் பேருக்கும் மாற்றி விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டாள். இந்த விடுதலைப் பத்திரத்தில், ஞானம்மாள் எழுதிக் கொடுத்திருந்த விடுதலைப்பத்திர விஷயமானது குறித்துக் காட்டிப்பட்டிருந்தது. 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனும் மைனராயிருந்த 3-ம் பிரதிவாதியின் தாயார் கார்டியனுகவும் சேர்ந்து தாவா சொத்துக்களை வாதிகளுக்கு அதே தேதியில் அதாவது தாங்கள் காந்தம்மாளிடமிருந்து விடுதலை பெற்ற தினத்திலேயே விக்கிறயம் செய்து வாதிகளுக்கு சொத்தையும் சுவாதீனப் படுத்திவிட்டார்கள். 1904-ல் காந்தம்மாள் காலஞ்சென்றுவிடவே ஞானம்மாள் தாவா சொத்தில் பாத்தியங்கொண்டாடி தன்னுடைய ஜீவனும்ச பாத்தியதையை மட்டும் மருமகளுக்கு விடுதலை செய்து கொடுத்ததாகவும் மருமகளுக்குப்பிறகு சொத்தானது தனக்குச் சேரவேண்டியதென்றும் அதாவது தன் ஜீவதசைமட்டும் அதை அனுபவிக்க பாத்தியமுண்டென்றும் வழக்காடி 1910-ல் சுவாதீன ப்பிராது செய்து அனுகூல டிக்கிரி பெற்று தாவா சொத்துக்களையும் சுவாதீனமடைந்தாள். சுவாதீனத்தை இழந்த வாதிகள் தங்களுக்கு விக்கிறயம் செய்த 1-2 பிரதிவாதிகளின் தகப்பன் காலஞ்சென்றமையால் 1, 2, பிரதிவாதிகளின்பேரிலும் மெஜாரிடி அடைந்த 3-ம் பிரதிவாதியின்பேரிலும் திருநெல்வேலி சப்கோர்ட் ஸ்மால்காஸ் தரப்பில் தாங்கள் செலுத்திய விக்கிறயத் தொகையை வாபிஸ் அடையும்பொருட்டு பிராது கொடுத்ததில் ஷை பிராதுக்கு காலாவதி தோஷம் ஏற்பட்டதாக; அதாவது விக்கிறயத் தொகையைத் திரும்பியடைய கிறயமான தேதிமுதல் காலாவதி கணித்த 3 வருஷத்திற்குள்



வியாஜ்ஜியம் செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு வாதிகளின் பிராது தள்ளுபடியாச்சுது. அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாகல் செய்ததில் வாதிக்கு வியாஜ்ஜியமூலம் சுவாதீனமிழந்த தேதியில் உண்டானதாகவும் அது முதல் 3 வருஷத்திற்குள் வாதி விக்கிறயத் தொகையை வாபிஸ் அடைய தாவா செய்யலாமென்றும் ஆகவே வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டு பிராதைத் திரும்பவும் பயிலுக்கெடுத்து பைசலளிக்கும்படி சப்கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட் அபிப்பிராயத்தின் காரணச் சுருக்கமாவது:— மூன்று பிரதிவாதிகளும் மூலபுருஷனுகிய சுப்பராய ரெட்டியாருக்கு அனந்தர வாரிஸ்களாகிறார்கள். ஞானம்மாள் செய்த சுவாதீனப் பிராதில் கிறயம் பெற்ற வாதிகளும் பிரதிவாதிகளும் எதிரிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இந்தப் பிராதுக்கு எதிரிகளின் ஆக்ஷேபனையாவது:- வாதிக்கு வியாஜ்ஜியமூலமே கிடையாதென்றும் அப்படிக்குண்டானாலும் கிறயமான தேதியாகிய 1900 ஆகஸ்ட் 23-ல் வியாஜ்ஜியமூலம் ஏற்பட்டிருக்கவேண்டுமாதலால் 1911-ல் வாதி கொண்டுவந்த பிராதுக்கு காலாவதி தோஷம் என்று வாதிக்கப்படுகிறது. வாதி கிறயம் பெற்ற பொழுது சொத்து பாத்தியஸ்தர்களின்னுரென்றும் அதில் வழக்காடக்கூடிய பாத்தியஸ்தர்களின் நிலமையையும் நன்றாய்த்தெரிந்திருந்ததாயும், கிறயதஸ்தவேஜில் சொத்து பாத்தியதைக்கு யாதொரு குறைவு ஏற்பட்டால் நஷ்டத்திற்கு ஜவாப்தாரியாகிற ரக்ஷத்தாரத்தானது காணப்படவில்லையென்றும் ஆகையால் வாதிக்கு தாவா சொத்தை இழந்த காரணத்தால் விக்கிறயத் தொகையை அடையும்படி பரிகாரம் தேட நியாயமே கிடையாதென்று சொல்லப்படுகிறது. அது சரியான வாதமல்ல. இந்தியாவில் சொத்தை விக்கிறயம்செய்கிறவன் ஷை சொத்தில் தனக்கு பரிபூரணமான பாத்தியதையிருக்கிறதென்று கிறயம் பெறுகிறவனுக்கு உறுதிசொல்லி அதில் யாதொரு கலன் ஏற்பட்டு நஷ்டமடையக் கூடாதபடிக்கு உத்தரவாதம் செய்யவேண்டிய கடமையானது சட்ட முறையில் யூகிக்கத்தக்கதாகும்: தஸ்தவேஜில் அந்த ஷரத்து குறிக்கப்படாதபோதிலும் அந்தக் கடமை நீங்காது. ஆனால் பத்திரத்தில் ஸ்பஷ்டமான வசனங்களால் சொத்து பாத்தியதை விஷயமாய்ப் பின்வரும் வியவகாரங்களுக்குட்பட்டு கிறயம் பெற்றுக்கொள்வதாய் ஏற்பாடு செய்யலாம். அவ்வித ஒப்பந்தமில்லாவிடில், ஏற்படும் கலனைத் தீர்த்துக் கொடுக்கவேண்டியது கிறயதாரின் கடமையாகும். ப்ராபர்டி ஆக்ட் 55-வது பிரிவின் 2-வது கிளாஸைப் பார்க்கவும். குறைவிருப்பதாக கிறயம் பெறுகிறவனுக்குத் தெரிந்திருந்தபோதிலும் அதை நிவர்த்திக்கும் கடமை கிறயதாரனைவிட்டு நீங்க நியாயமில்லை. அப்படி நிவர்த்திக்காவிடில் கிறயத்தொகையை (வாதிக்கு நேர்ந்த நஷ்டத்தை)த் திரும்பிக்கொடுக்கக் கடவதாகும். தாவா கிறயதஸ்தவேஜைப் பார்க்கையில் அதில் ஆக்ஷேபிக்கத்தக்க வசனங்களே கிடையாது. ஞானம்மாள் விடுதலையெழுதிக்கொடுத்திருக்கிற தகவல் குறிக்கப்பட்டிருந்த காரணத்தால் அவளுக்கு ஏற்பட்டிருந்த ஒரு பாத்தியதையைப் பற்றி வாதி அறிந்திருப்பதாகச் சொல்லவும் ஆகையால் கிறய சொத்தின் பாத்தியதைக்கு யாதொரு குறைவிருப்பதாய்த் தெரிந்தே வாதி கிறயம் பெற்றதாக சொல்லத்தகாது. வாதிக்கு ஞானம்மாள் பெற்ற சுவாதீன டிக்கிரியினால் ஏற்பட்ட நஷ்டத்தையிட்டு பிரதிவாதிகள் விக்கிறயத் தொகையைத் திரும்பிக்கொடுக்க நியாயமாகும்.

வியாஜ்ஜியமூலம் எப்பொழுது ஏற்படுமென்று யோஜிக்கும் பட்சத்தில்; கிறயத் தொகையைத் திரும்பியடைய 3-வித சந்தர்ப்பங்களுண்டு; (*a*) கிறயதாருக்கு கிறயம் செய்து கொடுக்கும் பாத்தியதையே கிடையாதென்று துலங்கி கிறய சொத்தானது சுவாதீனப்படுத்திக் கொடுக்கப்படாமலிருக்கவேண்டும்; (*b*) மூன்றுவது மனிதன் ஆக்ஷேபித்தால் கிறயம் ரத்தாகத்தக்கதாயிருக்கவேண்டும். அவ்வித ஆக்ஷேபனையால் ரத்தாகக்கூடிய விக்கிறய தஸ்தவேஜை யனுசரித்து கிறய சொத்தை சுவாதீனமடைந்திருக்க வேண்டும். அவ்விதமாய் மூன்றுவது மனிதன் ஆக்ஷேபித்து சுவாதீன அனுபோகத்தை அபகரித்துக்கொண்டால் கிறயத்தொகையைத் திரும்பியடையும் சந்தர்ப்பம் நேரிடும்; (*c*) சொத்து பாத்தியதையில் குறைவிருப்பதாய்த் தெரிந்தபோதி

லும் கிரய ஏற்பாட்டை அனுசரித்து சொத்தானது சுவாதீனம் செய்து கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே மேற்கூறிய மூன்று சந்தர்ப்பங்களால் வாதிக்குக் கிரய சொத்தின் சுவாதீனமும் பாத்தியதையும் நீங்கிப் போனால் வாதி விக்கிரயத் தொகையைத் திரும்பிக் கேட்க வியாஜ்ஜியமூலம் ஏற்படும். முதலாவது சந்தர்ப்பத்தில் வியாஜ்ஜியமூலமானது கிரயத்தேதியிலேயே ஏற்படக்கூடியதாகும. தாவா கேசானது அதிலடங்கியதல்ல. மதராஸ் வாரக்குறிப்புகளின் 1029-ஐப் பார்க்கவும். 2-வது சந்தர்ப்பத்தில் மூன்ருவது மனிதன் தன் பாத்தியதையை ஸ்தாபித்து வாதியின் சுவாதீனத்தைப் பிடுங்கிக் கொள்ளுமட்டும் வாதிக்கு வியாஜ்ஜியமூலம் ஏற்பட நியாயமில்லை. 19 கல்கத்தா 123, 11 அலகபாத் 47, இவைகளில் ஏற்பட்டிருக்கிற பிரிவி கௌன்ஸில் தீர்மானங்களைப் பார்க்கவும். மூன்ருவது சந்தர்ப்பத்திலும் வாதியின் சுவாதீனத்திற்குத் தடை ஏற்பட்டால் மட்டும் வியாஜ்ஜியமூலம் ஏற்படும் தாவா கேசானது நியாயமாய்ப் பார்க்குமிடத்து 2-வது சந்தர்ப்பத்தை அனுசரித்ததாகுமென்று சொல்லலாம். ஞானம்மாள் வாதியின் சுவாதீனத்தை நிராகரிக்காத பட்சத்தில் வாதிக்கு யாதொருகெடுதியும் நேரிட்டிருக்காது. ஞானம்மாளால் ஆக்ஷேபிக்கப்பட்டாலொழிய வாதியின் விக்கிரய பாத்தியதைக்கும் அனுபோகத்திற்கும் யாதொரு குந்தகமும் நேரிட நியாயமில்லை. விக்கிரய காலத்தில் கிரயம் ஆக்ஷேபனைக்கிடமானதாகச் சொல்லக்கூடாது. 2rவது சந்தர்ப்பம் சரியல்லாத போதிலும் 3-வது சந்தர்ப்பத்தையிட்டு வாதிக்கு வியாஜ்ஜியமூலம் ஏற்பட்டு சொத்து பாத்தியதைக்குக் குறைவென்று தெரிந்தும் கிரயம் பெற்றவனுக்குசுவாதீனப்படுத்தி விக்கிரயத்தொகையைப் பெற்றுக்கொண்டால் சுவாதீனத்திற்கு இடையூரு நேரிட்ட உடன் கிரயத் தொகையை வாபிஸ் செய்யும் கடமை துவக்கமாகிறது. வியாஜ்ஜியமூலமும் அதுமுதல் வாதிக்கு ஏற்படக்கூடியதாகும். சுவாதீனத்தை ஆக்ஷேபிக்குமட்டும் வாதி விக்கிரயத்தொகையை வாபிஸ் கேட்க நியாயமில்லை. ஆகையால் ஞானம்மாள் டிக்கிரி பெற்றமுதல் வாதிக்கு வியாஜ்ஜியமூலம் ஏற்பட்டு அதுமுதல் காலாவதி கணிக்கப்படவேண்டும். அப்படியானல் வாதியின் பிராதுக்குக் காலாவதிதோஷம் கிடையாது. 25 பம்பாய் 513, 26 பம்பாய் 489, 40 கல்கத்தா 187 ஆகிய கேஸ்களில் கிரய சொத்தானது சுவாதீனம் செய்யப்படவேயில்லை. ஆகவே அந்தக் கேசுகளில் வியாஜ்ஜியமூலமானது கிரயத் தேதியில் ஏற்பட்டதாகத் தீர்மானிக்கப்பட்டு காலாவதியும் அதுமுதல் கணிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கேசுகள் தாவா கேசுக்கு உதவக்கூடியதல்ல. வாதிக்கனுகூலமாயிருக்கிற 17 மதராஸ் லா ஜர்னல் 149, 25 மதராஸ் 396, 18 மதராஸ் 173, இவைகளைப் பார்க்கவும். மேற்கூறிய காரணங்களால் வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷமில்லையென்று தீர்மானிக்கப்பட்டு பிராதை மறு விஜாரணைக்காக அனுப்பப்பட்டது.

---

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஏய்லிங்

கிருஷ்ணு ஜில்லா

Crl A. No. 691 of 1913–27 பிப்ரவரி 1914

நந்தமூரி அனந்தய்யா—எதிரி

அனந்தய்யா என்பவர் போலீஸாரிடம் 5 பேர் வழிகள் பேரில் கொள்ளையடித்ததாக ரிபோர்ட் செய்து எழுத்துமூலமாய் ஸ்டேட்மெண்டும் கொடுத்தபிறகு அது முற்றிலும்பொய்யானரிபோர்ட் என்று போலீஸ்விஜாரணையில் ஏற்பட்டபடியால் எதிரி இ. பி. கோ. 211-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டப்பட்டு கம்மிட்டாகி பந்தர் என்னும் மசுலிப்பட்டணத்திலுள்ள கிருஷ்ணு ஜில்லா ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்களால் தண்டனையுமடைந்தான். அதன்பேரில் எதிரி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து அங்கு முக்கியமாய் மூன்று விதமான ஆக்ஷேபனை சொல்லி ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்களுடைய தீர்மானத்தை ரத்து செய்ய பிரயத்தனப் பட்டான். அவையாவன;—(1) எதிரி கொடுத்த எழுத்துமூலமான ரிபோர்ட்டாகிய B-ஆதாரவில் கண்ட பிராது பொய்யென்று ஏற்பட்டு அந்தப் பொய்ப்பிராது சொல்லிக்கொண்டதற்காக எதிரியை 211-வது பிரிவின்படி குற்றஞ் சாட்டினது பிசகென்றும் ஏனெனில் ஷை B-ஆதாரவாகிய ஸ்டேட்மெண்டானது 1912-மே 5-ல் பிறந்திருக்க, அதற்கு முந்தியே எதிரி



எப்பிரல் 27-ல் கொள்ளைக் கேஸ் நடந்ததாகபோலீஸாருக்கு ஒரு தந்தி கொடுத்தமையால் அந்த தந்தியில் கண்ட ரிபோர்டை அனுசரித்து நடந்த போலீஸ் விஜாரணையில் B-ஆதரவின் ஸ்டேட்மெண்டு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்டதென்றும் ஆகவே 211-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டத்தக்க விதமாக B-ஆதரவை உபயோகப்படுத்தக்கூடாதென்றும்; (2) B-ஆதரவை முதலில் கொடுத்த பிராதாக ஏற்றுக்கொண்டாலும் அதன்பேரில் ஷை ஸ்டேட்மெண்டை எழுதி வாங்கின கூடிவாடா ஸ்டேஷன் ஆபீஸர் அந்தப்பிராதைப் பற்றி ஆராய்ச்சி விஜாரணை செய்ய அதிகாரமில்லையென்றும், ஏனெனில் கொள்ளைக் குற்றமானது வுய்யூர் என்னும் ஸ்டேஷனைச் சேர்ந்த வெளி இலாகாவில் நடந்ததாக B-ஆதரவில் சொல்லப்பட்டிருக்கிறாயுதம் ஆகையால் B-ஆதரவைக்கொண்டு 211-வது பிரிவின்படி எதிரியின்பேரில் குற்றஞ்சாட்டக் கூடாதென்றும்; (3) எதிரியை கமிட் செய்த மாஜிஸ்டிரேட்டார் தந்தியையும் எதிரியிடம் பின்னுல் வுய்யூர் ஸ்டேஷன் ஆபீஸர் வாங்கின ஸ்டேட்மெண்டையும் ஆதாரமாகக்கொண்டு எதிரியின் பேரில் சார்ஜ படித்து கமிட் செய்திருக்க ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் A ஆதரவாகிய தந்தியை நீக்கி அதற்கு பதிலாக B-ஆதரவையும் பிந்திய ஸ்டேட்மெண்டாகிய C-ஆதரவையும் சார்ஜியில் குற்றத்திற்கு ஆதாரமாகக் குறித்துக்காட்டி எதிரியை தண்டனை செய்தது சட்ட விரோதமென்றும் ஆக மூன்று க்ரௌண்டுகள் அப்பீலில் எதிரிக்காக எடுத்துப் பேசப்பட்டது.

இந்தக்கேஸின் வரலாறு தெரியவேண்டியதவசியமாகும். எதிரி கூடிவாடாவிலிருந்து பெஜவாடா போலீஸ் இன்ஸ்பெக்டரவர்களுக்கு வுய்யூர் என்னும் (கூடிவாடாவுக்கு வெளியிலுள்ள) ஸ்டேஷனைச்சேர்ந்த கலவபாமுலா வென்னும் இடத்தில் கொள்ளைக்கேஸ் நடந்துவிட்டதாக எப்பிரல் 27-ல் தந்தி கொடுத்திருக்கிறுர். பெஜவாடா இன்ஸ்பெக்டரவர்கள் தந்தியைக் கண்ட உடன் கலவபாமுலா என்னுமிடத்திற்குச் சென்று கிராம அதிகாரிகளையும்மற்றும் சிலரையும் விஜாரித்ததில் அங்கு கொள்ளையாதொன்றும் நடக்கவில்லையென்றும் நந்தமூரி அனந்தய்யா என்ற பெயருடையவர் யாரும் கிராமத்தாருக்குத் தெரியவராதென்றும் கண்டறிந்து ஷை தந்தியை கூடிவாடா இன்ஸ்பெக்டரவர்களுக்கு இண்டார்ஸ் செய்தனுப்பி தந்தியடித்தவரின்னாரென்றும் அதில் கண்ட விஷயத்தின் உண்மையைப்பற்றியும் விஜாரித்து ரிபோர்ட் செய்யும்படி கேட்டுக்கொண்டார். கூடிவாடா இன்ஸ்பெக்டர் அந்த தந்தியை கூடிவாடா ஸ்டேஷனுபீஸரிடம் அனுப்பியதில் அவரிடம் தந்திரிபோர்ட் பெண்டிங்கிலிருக்கும்பொழுது எதிரி சுதாவில் கூடிவாடா ஸ்டேஷனுபீஸரிடம் ஆஜராகி மேற்கூறிய B-ஆதரவு ஸ்டேட்மெண்டை எழுதிவைத்து அதில் ஐவர்பேரில் கொள்ளைக்குற்றம் சாட்டினுர். அந்த ஸ்டேட்மெண்டை கூடிவாடா இன்ஸ்பெக்டர் பெஜவாடா இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவே கொள்ளைக்குற்றம் நடந்ததாகச்சொல்லப்பட்ட இலாகாவாகிய வுய்யூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஷை B-ஸ்டேட்மெண்டை அனுப்பி விஜாரித்து ரிபோர்ட் செய்யும்படி உத்தரவளித்தார். வுய்யூர் ஸ்டேஷனுபீஸர் எதிரியிடம் திரும்பவும் ஒரு ஸ்டேட்மெண்டு வாங்கிக்கொண்டு எதிரி கொடுத்த பிராது முற்றிலும் பொய்யென்று ரிபோர்ட் செய்தார். ஆகவே எதிரி போலீஸாரிடம் பொய் பிராது சொல்லிக்கொண்டதாகமேற்கண்டவிதமாய் சார்ஜ் செய்யப்பட்டு தண்டனையடைந்திருக்கிறுர்.

எதிரியின் மூன்று அப்பீல் க்ரௌண்டுகளுக்கும் சமாதானம் சொல்லி ஹைகோர்ட்டார் தண்டனையைக் காயப்படுத்தின தீர்மானத்தின் காரணச் சுருக்கமாவது:— இ. பி. கோ. 211-வது பிரிவில், யாதொருவன் மற்றொருவனுக்குக் கெடுதியுண்டாக்கும்பொருட்டு அவன்பேரில் சரியான காரணம் அல்லது நியாயமில்லாமல் கிரிமினல் நடவடிக்கையை நடத்த ஆரம்பித்தாலாவது அல்லது ஒருவன்பேரில் பொய்க்குற்றம் சாட்டிபிராதுகொடுத்தாலாவது தண்டனைக்குள்ளாகிருனென்று விதிக்கப்பட்டிருக்கிறது. எதிரி கொடுத்த தந்தியின்பேரில் போலீஸ் விஜாரணை நடந்து அதில் B-ஆதரவு ஸ்டேட்மெண்ட் கொடுக்கப்பட்டதாகவும் ஆகையால் B ஆதரவு ஸ்டேட்மெண்டைப் பொய்பிராதாக எடுத்துக்கொண்டு எதிரியை தண்டிக்கக்கூடாதென்று எதிரிக்காக வாதிக்கப்படுகிறது. எதிரி கொடுத்த தந்தியில் கொள்ளைக்குற்றம் செய்தவர்களின் பெயர் குறிக்கப்படாத படியால் அதைப் பொய்பிராதென்று

சொல்லத்தகாது. ஆனால் கிரிமினல் நடவடிக்கையைத் துவக்கும் அம்சமாக தந்தியை பாவிக்கலாமா வென்று யோஜித்துப்பார்க்க வேண்டும். கிரிமினல் புரொஸிஜர் கோட் 154-வது பிரிவின்படி யாதொருவர் போலீஸாரிடம் வாய்மொழியாகவாவது அல்லது எழுத்துமூலமாயாவது கிரிமினல் குற்றம் நடக்கிற விஷயத்தைப்பற்றி தகவல் கொடுக்கலாம். போலீஸார் அந்தத்தகவலை புஸ்தகத்தில் பதிந்துகொண்டு 157-வது பிரிவின்படி விஜாரணைசெய்து சட்டப்படி மேல் நடவடிக்கை நடத்தலாம். 157-வது பிரிவின்படி போலீஸாருக்குக் கிடைக்கும் தகவல்பேரிலும் விஜாரணை நடக்கலாம்; அல்லது வேறுவித முகாந்தரத்தையிட்டும் விஜாரணை நடத்தலாம். வேறுவிதமாய் என்ற வசனத்தில் தந்தியால் கிடைத்ததகவலும் சேர்ந்திருப்பதாகச் சொல்லக்கூடாது. ஆனால் போலீஸார் A-ஆதாரவாகிய தந்தி கிடைத்த உடன் அதை ரிகார்டு செய்துகொண்டு 157-வது பிரிவில் கண்டபடி விஜாரணைசெய்தார்களா என்று கவனித்துப்பார்த்தால் இந்தக்கேசில் போலீஸார் தந்தியின்பேரில் அவ்வித நடவடிக்கை நடத்தினதாகச் சொல்ல நியாயமில்லை. ரிகார்டில் பதியவுமில்லை. ஸ்தலத்திற்குப்போய்ப் பார்த்து யாதொரு குற்றமும் நடக்கவில்லையென்று கண்டறிந்துவிஜாரணைசெய்யவும் ரெஜிஸ்டரில்பதிவு செய்யவும் யோக்கியமானதல்லவென்று எண்ணி தந்தி பிறந்த இலாகாவுக்கு அதை அனுப்பியிருக்கிறார். சட்டப்படி பெஜவாடா இன்ஸ்பெக்டர் தந்தியின்பேரில் விஜாரணை செய்திருந்தால் அதைப்பற்றி உடனே மாஜிஸ்டிரேட்டருக்குரிபோர்ட் அனுப்பியிருக்கவேண்டும். அப்படிப்பட்ட ரிபோர்ட்டும் அனுப்பப்படவில்லை. போலீஸார் செய்கிற ஒவ்வொரு விஜாரணையும் சட்டப்படியுள்ள பிரதம விஜாரணையென்று சொல்லத்தேவையில்லை. அநேக விஜாரணைகள் 154-வது பிரிவின்படி கிடைத்ததகவலின்பேரில் நடத்தப்படும். சிலவைகள் அரை குறையான (அக்கப்போர்) தகவலின்பேரிலும் விஜாரணை நடத்தப்படுவதுண்டு. தந்தி சமாசாரமானது ஒரு அக்கப்போர் சமாசாரத்திற்கு மேலான நிலைமையில் வைக்கத்தகாது. அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் போலீஸார் யுக்தப்படி நடந்து கொள்ளலாம். ரிகார்டுசெய்து பிரதம விஜாரணை நடத்தலாம். அல்லது அப்படி நடத்த லாயக்குண்டாவெனத் தெரியும்பொருட்டு மேலான விஜாரணைசெய்து அதன்பின் தக்கபடி நடந்துகொள்ளலாம். பெஜவாடா இன்ஸ்பெக்டர் தந்திகிடைத்த உடன் அதை 154-வது பிரிவின்படி கிடைத்ததகவலாக எண்ணிப்பதிவு செய்யாமல் பிரதம விஜாரணைக்கு யோக்கியமாவென்று அறியும்பொருட்டு ஸ்தலத்திற்குப்போய் விஜாரித்திருக்கிறாரேயொழிய அவர் 157-வது பிரிவின்படி விஜாரணை செய்ததாக சொல்லக்கூடாது. கூடிவாடா ஸ்டேஷன் ஆபீஸரும் தந்தியடித்தவன் இன்னாரென்று அடையாளம் கண்டுபிடிக்கும் பொருட்டு பிரதம விஜாரணை செய்திருக்கிறாரேயொழிய மற்றப்படி ரெஜிஸ்டரில் குற்றத்தைப்பதிவு செய்து விஜாரணை நடத்தவில்லை. ஆகவே எதிரி B ஆதாரவில் ஸ்டேட்மெண்டு கொடுத்து ஐவர் மேல் சொன்னைப்பிராது சொல்லிக் கொள்ளுமட்டும் எதிரி யாதொரு கிரிமினல் நடவடிக்கையைத்துவக்கினாரென்று சொல்ல நியாயமில்லை.

எதிரியின் 2வது அப்பீல் க்ரௌண்டைகவனித்தால் புரொஸிஜர்கோடில். குற்றம்நடந்த இலாகாவல்லாத இதரமான ஸ்டேஷனில் ஒருவர் பிராது சொல்லிக்கொண்டால் அல்லது குற்றம் நடக்கும் தகவலைக்கேள்விப்பட்டால் அந்த ஸ்டேஷனாபீஸர் செய்யவேண்டிய முறை இன்னதென்று குறிக்கப்படவில்லை. ஆனால் 154-வது பிரிவின்படி கொடுக்கப்படும் தகவலை அவர்கள் எடுத்துக்கொள்ளக் கூடாதென்ற சட்டமில்லை. அதை மேல் விஜாரணை நடத்த அதிகாரமில்லாவிடினும் தகவலை ஏற்றுக்கொள்ளலாம். இந்தக்கேசில் கூடிவாடா ஸ்டேஷனாபீஸர் எதிரியின் ஸ்டேட்மெண்டை வாங்கித்தன்மேல் அதிகாரியாகிய இன்ஸ்பெக்டருக்கு அனுப்பியிருக்கிறார். அவர் பெஜவாடா இன்ஸ்பெக்டருக்கு அனுப்பினதின்பேரில் குற்றம் நடந்ததாகச் சொல்லப்பட்ட இலாகாவில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு விஜாரணையாகி ரிபோர்ட் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே எதிரி B ஆதாரவால் கிரிமினல் நடவடிக்கையைத துவக்கினார் என்பதில் சந்தேகமில்லை. அந்த ஆதரவு பொய்யென்று ஏற்பட்டு அதையிட்டு தண்டனையானது சட்டவிரோதமல்ல.

கடைசியாக எதிரியின் வாதத்தில் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் A & C என்ற ஆதாரவை சார்ஜியில் B & C யாகமாற்றி எதிரியின் பேரில் குற்றஞ்சாட்டினது பிசகென்று சொல்லப்பட்டது. ஸெஷன்ஸ் விஜாரணை துவக்கப்படும்பொழுதே A என்றதை B யாக மாற்றினதை எதிரி வக்கில் ஆக்ஷேபிக்கவில்லை. தவிற அவ்வித மாற்றுதலால் எதிரிக்கு அநீதி நடந்திருப்பதாகத்தோன்றவுமில்லை. ஆகவே எதிரியின் அப்பீல் தள்ளுபடியாக வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டு தண்டனை காயமாச்சுது.

———( )———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.

மதுரை ஜில்லா.

A. S. Nos. 262 & 269 of 1909 & 122of1910

26 மார்ச்சு 1914

அனந்த நாராயணய்யர் Vs ஆதிமுத்துவய்யர்.

மதுரை மீனாக்ஷியம்மன் கோவிலில் அதிகார பாரபத்தியமென்னும் உத்தியோகத்தை ஆதிமுத்து அய்யர் என்ற வாதியின் வம்சத்தவர்களே பாரம்பரையாக வகித்து ஷை உத்தியோகத்திற்குறிய மரியாதைகளையும் வருமானங்களையும் அடைந்து அனுபவித்து வருகையில் 2 முதல் 9 பிரதிவாதிகளாகிய ஸ்தானீகர்கள் தங்கள் இஷ்டம்போல் 10 ம் பிரதிவாதியாகிய ஒரு அந்நியவம்சத்தாரை ஷை உத்தியோகத்திற்கு நியமனம்செய்து ஷையார் உத்தியோகத்தை நடத்திவந்தமையால் வாதி தன்னுடைய பாரம்பரை பாத்தியதையை ஸ்தாபித்து அந்த உத்தியோகத்தை அடையும்பொருட்டு தேவஸ்தானம் தர்மகர்த்தாவையும் 1-ம் பிரதிவாதியாகச்சேர்த்து மதுரை ஜில்லா கோர்ட்டில் கொடுத்த பிராதில் பிந்திய காலத்து வருமானமும் தாவா தேதி முதல் உத்தியோகம் கிடைக்குமட்டும் ஏற்படுகிற வருமானமும் தனக்குப் பிரதிவாதிகள்பேரில் டிக்கிரீயாக வேண்டுமென்றும் கோறிக்கொண்டார். ஜில்லா கோர்ட்டார் வாதிக்கனுகூலமாக வாதியின் பாரம்பரை பாத்தியதையை அங்கீகரித்து தாவா உத்தியோகத்தை வாதி வகித்து நடத்திவரவேண்டியதென்றும் அதற்குறிய மரியாதைகளையும் வருமானங்களையும் வாதியே அடைந்தனுபவிக்க வேண்டியதென்றும் தீர்மானித்து பிரதிவாதிகள் அவ்வித அனுபோகத்தையும் உத்தியோகநடப்பையும் தடைசெய்யக் கூடாதென்றும் இஞ்சங்ஷன் உத்தரவளித்து வாதிக்குறிய பிந்திய காலவருமானங்களுக்கும் வியாஜ்ஜியச் செலவுதொகைக்கும் பிரதிவாதிகளனைவரும் கடமைப்பட்டவர்களென்று பிரதம டிக்கிரீயளித்து, முடிவான டிக்கிரீயில் பிந்தியகாலத்து வருமானம் ரூ 100-யும் தாவா தேதி முதல் ஷை உத்தியோகத்தை வாதி ஒப்புக்கொள்ளுமட்டும் அதே விகிதமான வருமானத்தொகையையும் தவிற வியாஜ்ஜியச் செலவு ரூ 294-15-5 யும் வாதிக்குப் பிரதிவாதிகள் அனைவரும்செலுத்தக்கடவதென்றும் உத்தரவளித்தார்கள். அதன்பேரில் 1-ம் பிரதிவாதியாகிய தர்மகர்த்தா அவர்கள் தன்னையும் பொருத்துவருமானதிற்காகவும் செலவுதொகைக்காகவும் இஞ்சங்ஷன் கட்டளையிலும் டிக்கிரீயளித்தது பிசகென்றும், 10 ம் பிரதிவாதியை நியமனம் செய்த ஸ்தானீகர்களைப் பொருத்து மேற்கூறிய அம்சங்களுக்காக டிக்கிரீயளிப்பது நியாயமானாலும் தன்பேரில் டிக்கிரீயளிக்கக் கூடாதென்றும் சொல்லி தனியாக பிரதம டிக்கிரீயின் பேரில் நெ 262 of 1909 அப்பீல் செய்தார். ஸ்தானீகர்களும் 10 ம் பிரதிவாதியும் சேர்ந்து பிரதம டிக்கிரீ பிறந்த உடன் ஒரு அப்பீலும் பைசல் டிக்கிரீ ஏற்பட்டபின் ஒரு அப்பீலுமாக ஹைகோர்ட்டில் இரண்டு பிரத்தியேகமான அப்பீல் தாகல் செய்தார்கள். மூன்று அப்பீல்களும் ஒன்றாக் ஹைகோர்ட்டில் ஈரங்கியாகி ஜில்லாகோர்ட் தீர்மானம் சரியென்று தீர்மானிக்கப்பட்டு அப்பீல்கள் மூன்றும் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:—தாவா உத்தியோகமானது வாதியின் வம்சத்தாரால் பரம்பரையாக நடத்திவரப்பட்டதா அல்லது அந்த உத்தியோகத்திற்கு ஸ்தானீகர்கள் தங்களுக்கிஷ்டமான யாதொருவரையும் நியமனம் செய்யவும் அவர்களை நீக்கிவிடவும் அதிகார முண்டாவென்று தீர்மானிக்கவேண்டியது முக்கியபாயிண்டாகும். வக்கில் ம-ள-ள-ஸ்ரீ, டி. ரெங்காச்சாரியாரவர்கள் ஸ்தானீகர்களுக்காக வாதம் செய்ததில் ருஜுபாகம யாவற்றையும் தெளிவாய்ப்படித்துக் காட்டினார்கள். ஆனால் மேற்கூறிய விஷயமாய் ஜில்லா ஜட்ஜியவர்கள் அடைந்த அபிப்பிராய முடிவுக்கு விரோதமாக வேறு அபிப்பிராயங்கொள்ள நியாயமில்லையென்று சொல்ல

வேண்டும். ஜில்லா ஜட்ஜியவர்கள் கொடுத்த அபிப்பிராயத்தில் தேவஸ்தான உத்தியோகங்களை பரம்பரையாக வகித்துவருவது வழக்கமாய் ஏற்பட்டிருக்கிறதென்று பொதுவாய்ச் சொல்லியிருக்கிறார்கள். அது சரியான அபிப்பிராயமல்ல. ஹானரபில ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களே பல தீர்மானங்களில் தேவஸ்தான உத்தியோகங்களுக்கு பரம்பரை பாத்தியதையைக் கோர்ட்டார் பிரதானமாக அங்கீகரிக்கக்கூடாதென்று அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். தவிர 1802-ல் சொக்கய்யன் அல்லது சொக்கப்பன் என்றவர் தாவா உத்தியோகத்தை நடத்திவந்ததாக ஏற்பட்டிருக்க வாதி சொக்கப்பனுடைய வம்சத்தில் உற்பத்தியானவனென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் கூசாமல் (அதிகயோஜனைசெய்யாமல்) சந்தேகப்படாமல் நம்பியிருக்கிறார். ஆனால் வாதிக்குத் தாயாதியாகிய எதிர் தரப்பு 3-வது சாட்சிக்காரர் தாவா உத்தியோகத்தை ஒருகாலமும் நடத்திவரவில்லையென்று காணப்படுகிறது. என்றாலும் இந்தக்கேசில் தாவா உத்தியோகமானது பரம்பரை பாத்தியதையாக அனுபவிக்கப்பட்டு வருகிறதென்ற ஜில்லாகோர்ட்டார் தீர்மானத்திற்காதாரமான ருஜூபாகங்கள் போதுமானபடி ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லவேண்டும். வாதியின் பாட்டனாராகிய ஜெவந்தி அய்யர் தாவா உத்தியோகத்தில் பரம்பரை பாத்தியதையல்லாமல் வேறுவிதமாய் நுழைந்துகொண்டபோதிலும் அவருடைய சந்ததியாராகிலும் பரம்பரை பாத்தியதையை அனுசரித்து தாவா உத்தியோகத்தைப்பார்த்து வந்தார்களென்று சொல்லவேண்டும். அநேக தடவைகளில் ஜவந்தி அய்யருடைய சந்ததியார் தங்களை ஷை உத்தியோகத்திற்கு நியமனம் செய்யவேண்டுமென்று தேவஸ்தான மானேஜருக்கு விண்ணப்பம் செய்துகொண்டிருந்தாலும் இந்தக்கேசில் தாகலாகியிருக்கிற சில தஸ்தவேஜுகளினால் தாவா உத்தியோகம் பரம்பரையாக அனுபவிக்கப்பட்டு வந்ததாகவும் மானேஜர் அல்லது ஸ்தானீகர்களால் நியமனம் செய்யப்பட்டுவரும் உத்தியோகமல்லவென்றும் அவர்களுடைய இஷ்டம்போல நீக்கப்படக்கூடியதல்லவென்றும் பரிஷ்காரமாய்த் துலங்குகிறது. 7-மதராஸ் 499-ல் ஒரு தேவஸ்தான தர்மகர்த்தா உத்தியோகமானது தகப்பனுக்குப்பின் மகனால் நடத்திவரப்பட்ட காரணத்தால் ஷை உத்தியோகம பரம்பரையாகாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதுவாஸ்தவமே. ஆனால் அவ்விதமாய்த் தகப்பனுக்குப்பின் மகன் பார்த்துவந்த விஷயமானது பரம்பரை பாத்தியதையை ருஜுப்படுத்துவதற்கு ஒருவிதமான ஆதாரமாகலாமென்று அதே தீர்மானத்தில் ஒப்புக்கொள்ளப்படுகிறது. என்றபோதிலும் அந்த 7 மதராஸ் கேசில் ஒரு உத்தியோகமானது பரம்பரையாக அனுபவிக்கப்பட்டு வந்ததல்லவென்பதற்குப் போதுமான இதர சந்தர்ப்பங்கள் பரிஷ்காரமாய் ஏற்பட்டிருந்தமையால் தகப்பனுக்குப்பின் மகன் பார்த்துவந்த விஷயமானது ருஜூபாகத்தில் பயன்படாமல் போச்சுது. இந்தக்கேசில் தாவா உத்தியோகம்பரம்பரையாக வகித்து வரப்பட்டிருப்பதாய் ருஜூபாகம் ஒன்றுக்கொன்று இசைவாக ஒத்திருக்கிறதென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் தீர்மானத்தில் குறித்துக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு மாறான அபிப்பிராயம் கொடுக்கப்போதுமான காரணம் இல்லை. ஆகவே ஸ்தானீகர்கள் செய்த இரண்டு அப்பீல்களும் செலவுடன் தள்ளுபடியாகவேண்டும். தர்மகர்த்தா அவர்கள் தனிமையாய்ச் செய்த அப்பீலை கவனித்தால் அவர்கொடுத்திருக்கிற ஸ்டேட்மெண்டானது மற்றபிரதிவாதிகளின் ஸ்டேட்மெண்டைவிட அதிக யுக்தியாகவும் ஜாக்கிரதையாகவும் எழுதப்பட்டிருக்கிறபோதிலும், கடைசியில் வாதியின் பிராது முற்றிலும் தள்ளுபடியாகவேண்டியது நியாயமாகுமென்று சொல்லியிருக்கிறார். அதாவது வாதிக்குப்பரம்பரை பாத்தியதை கிடையாதென்றே மற்றவர்களைப்போல்எதிர்வாதம்செய்திருக்கிறார். தவிர அப்பீல் க்ரௌண்டில் 9, 10-வது பாராவில்வாதி ஸ்தானீகர்களுடைய வேலைக்காரன் என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் எல்லாப்பிரதிவாதிகளும் சேர்ந்து வாதியின் பாத்தியதையை நிராகரித்தமையால் தர்மகர்த்தாவாகிய 1-ம் பிரதிவாதியும் மற்றவர்களைப்போல் டிக்கிரீயில் வாதிக்குக் கிடைத்த பரிகாரத்திற்குடன்படவேண்டியது நியாயமாகும். ஆகவே மூன்று அப்பீல்களும் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

———o———



ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் எய்லிங்.

செங்கல்பட்டு ஜில்லா.

C. M. A. 13 of 1913—13 பிப்ரவரி 1914.

ஸ்ரீனிவாஸாச்சாரியார் Vs கோபாலன்.

ஸ்ரீனிவாஸாச்சாரியார் என்ற மனுதார் செங்கல்பட்டு ஜில்லா கோர்ட்டில் காலஞ்சென்ற மூலபுருஷனுடைய நிலுவை பாக்கிகளை வசூலிக்கும்பொருட்டு வாரிஸ் ஸர்டிபிகேட் கிடைக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்ததில் ஜில்லாகோர்ட்டார் ஷை நிலுவை பாக்கிகள் வாரிஸ் விண்ணப்பத்தை ஆக்ஷேபிக்கிற எதிரிகளில் ஒருவனுக்குச் சேரவேண்டியதாகுமென்றும் ஆகையால் அவை காலஞ்சென்ற மூலபுருஷனுடைய சொத்தல்லவென்றும் அபிப்பிராயப்பட்டு வாரிஸ் மனுவைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். அதன்பேரில் மனுதார் ஹைகோர்ட்டில் மனு அப்பீல் செய்ததில் ஜில்லாகோர்ட் தீர்மானம் பிசகென்று ஏற்பட்டு மனுவைத்திரும்பவும் பயிலுக்கெடுத்து சட்டப்படி பைசல்செய்ய வேண்டுமென்று ஜில்லா கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்ப்பில் சொன்ன காரணமாவது:— தாவாகடன்கள் யாருக்குச் சேரவேண்டியதென்ற விஷயமானது வாரிஸ் விண்ணப்ப ஈரங்கியில் தீர்மானிக்கவேண்டிய விஷயமல்ல. 28 பம்பாய் 119-ன் தீர்மானத்தை அனுசரித்து ஹானரபில் ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்களும் ஜஸ்டிஸ் வாலிஸ் துரையவர்களும் C. M. S. A. 42 of 1906-ல் அதே அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். 25 கல்கத்தா 320-ல் கல்கத்தா ஹைகோர்ட் சீவ் ஜஸ்டிஸ் துரையவர்கள் கொடுத்திருக்கிற மாறான அபிப்பிராயம் அனுசரிக்கத்தக்கதல்ல. ஆகவே ஜில்லாகோர்ட்டார் வாரிஸ் மனுவைத் தள்ளுபடிசெய்த காரணம் சரியானதல்லவென்று சொல்லி மேற்கண்டவிதமாய் மருவிஜாரணைக்கு உத்தரவளிக்கப்பட்டது.

———

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

C. R. P. 994 of 1912—24 பிப்ரவரி 1914.

ராமனுஜன் பட்டர் Vs அச்யுதவாரியர்

ஒரு ரெஜிஸ்டரான குத்தகைச்சீட்டின்பேரில் வாதி தீர்வை பாக்கிக்காக பாலக்காடு சப்கோர்ட்டில் கொண்டுவந்த பிராதுக்கு மூன்றுவருஷ



காலாவதியென்று அபிப்பிராயப்பட்டு பிராதை டிஸ்மிஸ்செய்து விட்டார்கள். அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனு தாகல் செய்ததில் ரெஜிஸ்டரான குத்தகைச் சீட்டின்பேரில் செய்யும் தாவாவுக்கு ஆர்டிகில் 116-ன்படி ஆறு வருஷ காலாவதியுண்டென்று 3 மதராஸ் 76, 19 மதராஸ் 52, 24 மதராஸ் லா ஜர்னல் 54, 7 மதராஸ் லா டைம்ஸ் 419 ஆகிய கேஸ்களில் தீர்மானிக்கப்பட்டிருக்கிற படியால் அவைகளை அனுசரித்து வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷம் கிடையாதென்று சொல்லி சப்கோர்ட்டாருக்கு பிராதை மறுவிஜாரணை செய்யும்படி உத்தரவளித்தார்கள். ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்களுடைய சொந்த அபிப்பிராயம் வேறுவிதமாகயிருக்கக்கூடியதானாலும் மேற்கூறிய பற்பல தீர்மானங்களை அனுசரிக்கவேண்டியது கோர்ட்டாரின் கடமையென்று மேற்கண்டவிதமாய் தீர்மானிக்கப்பட்டது.

———:o:———

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

தஞ்சாவூர் ஜில்லா.

C. R. P. No. 122 of 1912-13 பிப்ரவரி 1914

சேஷப்பய்யர் Vs சுப்பிரமணிய செட்டியார்

நகை வியாபாரம் செய்கிற வாதி சுப்பிரமணிய செட்டியாரிடத்தில் 1-ம் பிரதிவாதியின் கணவனும் 2-ம் பிரதிவாதியின் தகப்பனுமாகிய கோனந்தசாமி பத்தர் என்றவர் 1907 மே 19-ல் தாவா நகைக்கு யாதொரு கிராக்கியிருப்பதாயும் அதை கிராக்கிப்புள்ளியிடம்காண்பித்து வாதியின் முன்னிலையில் விலை தீர்த்து முடிப்பதாய்ச் சொன்ன காரணத்தால் வாதி தாவாநகையை ஷை யாரிடம் அதே தேதியில் கொடுத்துவிட்டார். கோனந்தசாமி பத்தர் தான்சொன்ன வார்த்தைப்படி நடக்காமல் ஷை நகையை ஒருமாதகாலம் தன் வசமே வைத்திருந்து 1907 ஜூன் 20-ல் சேஷப்பய்யர் என்ற 3-ம் பிரதிவாதியினிடம் அதை அடகுவைத்து ரூ. 175 கடன் வாங்கித் தன் சொந்தச்செலவுக்காக உபயோகப்படுத்திக்கொண்டார். சொற்பதினங்களுக்குப்பின் கோனந்தசாமி பத்தரும் காலமாயினர். சேஷப்பய்யர் வெகு காலம் காத்திருந்து ஷை நகையை மீட்டுக்கொள்ளப்படாத காரணத்தால் அதை கிரயப்படுத்தித் தன் தொகையைச் செல்லுவைத்துக் கொள்ளுங் கருத்துடன்

நகை வியாபாரத்தில் பழக்கமாயுள்ள வாதியினிடத்தில் ஷை நகையைக் காட்டி அதை விற்பனை செய்து கொடுக்கவேண்டுமென்று கோறிக்கொண்டார். வாதி ஷை நகை தன்னுடையதாகக் கண்டு அதைத்தன்னிடம் கொடுத்துவிடவேண்டுமென்று வாதித்தும் பிரதிவாதி மறுத்தளித்தமையால் நாகப்பட்டணம் சப்கோர்ட்டில் 1911-ம் வருஷத்திய ஸ்மால்காஸ் நம்பர் 1023-ல் கொளந்தசாமிப்பத்தருடைய மனைவியையும் மகனையும் 1, 2 பிரதிவாதிகளாகவும், நகையை உடைத்தாயிருந்த சேஷப்பய்யரை 3-ம் பிரதிவாதியாகவும் சேர்த்து ஷை நகையைத்திரும்பியடையவேண்டுமென்று பிராது கொடுத்தார். வாதி கொளந்தசாமிபத்தரிடம் நகையை விற்பனைக்காக 1907 மே 19-ல் கொடுத்திருக்க அதை அவர் 3-ம்பிரதிவாதியினிடம் 1907 ஜூன் 20-ல்கொதுவைவைத்தமையால் கொதுவைவைத்த தேதி முதல் 3-வருஷங்களுக்குள் இந்ததாவா செய்யப்படாத காரணத்தால் பிராதுக்குக் காலாவதி தோஷமென்றும், அப்படிக் காலாவதி தோஷமில்லை என்று ஏற்பட்டாலும் 3-ம் பிரதிவாதி நல்ல எண்ணத்துடன் ஷை நகையின் பேரில் கொளந்தசாமிபத்தருக்குக் கடன் கொடுத்திருந்தமையால் அந்தத் தொகையை வாபீஸ் பெருமல் நகையை கொடுத்துவிடுகிறது நியாயமில்லையென்றும் ஆகிய இரண்டு முக்கியமான எதிர்வாதம் செய்யப்பட்டது. 1, 2 பிரதிவாதிகள் எக்ஸ்பார்டிகளாயிருந்து விட்டார்கள். சப்கோர்ட்டார் வாதிக்கனுகூலமாக பிராதுக்குக் காலாவதி தோஷமில்லையென்றும் வாதிக்கு தாவா நகை 3-ம் பிரதிவாதியினிடமிருந்ததகவல் தெரியவந்தது முதல் 3 வருஷ காலாவதி கணிக்கப்படவேண்டுமென்றும், தவிரவாதி விற்பனைக்காகக் கொடுத்திருந்த நகையை கொளந்தசாமிபத்தர் அடமானம் வைத்து தன் சொந்தச்செலவுக்காகக் கடன் வாங்கிய காரணத்தால் வாதி அந்த நடவடிக்கைக்கு உடந்தையாயிருந்தவரல்லவென்றும் ஆகையால் 3-ம் பிரதிவாதி நல்லெண்ணத்துடன் கடன் கொடுத்திருந்தபோதிலும் வாதியின் நகையை 3-ம் பிரதிவாதி திரும்பி கொடுக்கவேண்டியது நியாயமாகுமென்றும், தான் கொடுத்த கடன் தொகையை வாதியிடம் வசூலிக்க நியாயமில்லையென்றும் தீர்மானித்து வாதிக்கு நகையைக் கொடுத்துவிடும்படி டிக்கிரீயளித்தார்கள். 3-ம் பிரதிவாதி அதன்பேரில் ஹைகோர்ட்டில் ரிவிஷன் மனுக்கொடுத்ததில் சப்கோர்ட் தீர்மானம் காயமாகி ரிவிஷன் விண்ணப்பம் தள்ளுபடியாச்சுது. ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:- பிரதிவாதிக்காக வக்கில் மிஸ்டர் குப்புசாமி அய்யரவர்கள் தாவா பிராதுக்கு 49-வது ஆர்டிகில்படி காலாவதி கணிக்கப்பட வேண்டுமென்றும் அதாவது ஒருவனுடைய ஜங்கமசொத்தை மற்றொருவன் தப்பாக அபகரித்துக்கொண்டாலும், அதற்குத் தீங்குசெய்தாலும் அல்லது அதை தப்பிதமாக தன்னிடம் வைத்துக்கொண்டிருந்தாலும் அதனுல் நேரிடும் நஷ்டத்தையாவது அல்லது அந்தப்பொருளையாவது அடைவதற்கு 49-வது ஆர்டிகில்படி ஏற்பட்டிருக்கிற 3-வருஷ காலாவதியானது சொத்தானது மேற்கண்டவிதமாய் அபகரிக்கப்பட்ட, கெடுதி செய்யப்பட்ட அல்லது அக்கிரமமாய் வைத்துக்கொள்ளப்பட்ட காலம் முதல் கணிக்கப்படவேண்டுமென்றிருக்க, தாவா கேஸில் பிரதிவாதி நகையை 1907 ஜூன் 20-ல் அடைந்த நிமித்தத்தினுல் வாதி அந்தத் தேதி முதல் மூன்று வருஷத்திற்குள் பிராதுசெய்திருக்க வேண்டுமென்று வாதிக்கிருர். தாவா நகையானது வாதியின் கையைவிட்டு முதலில் கிரமமான காரணத்திறகாகச் சென்றதேயொழிய வேரல்ல. அதாவது ஒருவர் அதைக்கிறயத்திற்கு வாங்க உத்தேசித்திருப்பதாகவும் அவரிடம் காட்டவேண்டுமென்ற நியாயமான கருத்துடன் வாதியால் கொடுக்கப்பட்டது. கொளந்தசாமி பத்தர் அதைத் தன் சொந்தமாக பாவிக்க 1907 ஜூன் 20-ல் தான் எண்ணி மேற்கண்ட விதமாக அடமானம்வைத்துக்கடன்வாங்கி தன் செலவுக்காக உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிருர். ஆகையால் முதல் முதல் நியாயமான கருத்துடன் வாங்கின நகையைப்பின்னுல் அக்கிரமமாக உபயோகித்துக்கொண்டால் அவ்வித சந்தர்ப்பத்தில் நகையை அல்லது அதின் கிறயத்தை வாபீஸ் அடைய 48-வது ஆர்டிகிலின்படி 3 வருஷ காலாவதி கணிக்கவேண்டுமென்றும் அதாவது நகையானது தப்பிதமாய் ஒருவனிடம் சென்ற தகவல்தெரிந்தது முதல் கணிக்கவேண்டுமென்றும் ஆகையால் வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷம் இல்லையென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது சரியே. 29 அலகபாத் 579 ம், 22 மதராஸ் லா ஜர்னல் 152ம் 11 பம்பாய் 926-ம், 12 பம்பாய் 316ம் மேற்கூறிய அபிப்பிராயத்திற்குறிய அதாரிடிகளாயிருக்கின்றன. பிரதிவாதிக்காக எடுத்துக் காட்டப்பட்ட 3 மதராஸ் லா டைம்ஸ் 324-ல் கண்டிருக்கிற தீர்மானம் இந்தக்கேஸின் அம்சங்களுக்கு உதவக்கூடியதல்ல.



48-வது ஆர்டிகிலின் அம்சமாவது:— ஒருகுறித்த ஜங்கமசொத்தானது காணமற்போனுலும் அல்லது ஒருவன் திருடிக்கொண்டுபோய் அல்லது கெட்ட எண்ணத்துடன சொந்த உபயோகத்திற்குப்பிரயோஜனப்படுத்திக் கொண்டாலும் அல்லது சொந்த உபயோகத்திக்காக மாற்றிக் கொண்டாலும் அந்த சொத்தைத் திரும்பியடைய 3 வருஷ காலாவதியானது வாதிக்கு சொத்து யார்வசமிருக்கிறதென்று தெரியவந்த தேதிமுதல் கணிக்கப்படவேண்டும். [தாவா கேஸில் 3-ம் பிரதிவாதிக்கு அடமானம் வைத்த தகவல் தெரியுமுன் வாதி தாவா செய்ய முகாந்தரம் ஏற்படவில்லை. பத்தரிடம் கொடுத்ததைத் திரும்பிக்கேளாமல் தாமதித்த குற்றம் மன்னிக்கத்தக்கதாகும். ஏனெனில் பத்தர் நகையைப்பெற்ற சொற்பகாலத்திற்குள்காலமாயினர். அவருடைய மனைவிக்கும் மகனுக்கும் நகையின் தகவல் தெரியாதிருந்திருக்கலாம். வாதி நல்ல குணமுள்ளவராதலால் பத்தரின் வாரிஸ்கள்பேரில் நகையைப்பற்றி வழக்காடவில்லைபோலும். ஆனுல் தன்னுடைய நகையே தன்கைக்கு வந்துசேர்ந்தபோது அதை அடைவதற்குறிய பரிகாரம்தேட நியாயமும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது. ஆகையால் அவ்வித பரிகாரம்தேட நகையிருக்கும் தகவல் தெரிந்தமுதல் காலாவதி கணிப்பது நியாயமாகும். 49-வது பிரிவின்படி காலாவதி கணிப்பதற்கு வாதி பத்தரிடம் கொடுக்கும்போது நியாயமான காரியம் ஏற்பட்டிருந்தது. பத்தரிடம் நகையை பிரதிவாதி வாங்கும்பொழுது தப்பான நடவடிக்கை ஏற்பட்டதால் அந்தத் தப்பான நடவடிக்கையால் சொத்து பிரதிவாதியினிடம் சேர்ந்த விஷயத்தை வாதியின் பிராதுக்கு ஆதாரமாகக் கொண்டு பிரதிவாதி வசம் நகை சென்ற தேதி முதல் காலாவதி கணிக்கக்கூடாது. ஆகையால் வாதியின் பிராதுக்குக் காலாவதி தோஷமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது

இரண்டாவதாக வாதி பிரதிவாதிக்கு அடமானத்தொகையைச்செலுத்திநகையை திருப்பிக்கொள்வது நியாயமாகுமென்றும் பிரதிவாதிநல்லெண்ணத்துடன் அதாவது நகையானது பத்தருக்குச் சொந்தமானதென்று நம்பி அதன்மேல் கடன் கொடுத்தபடியால் கடன் தொகையைத் திரும்பியடையாமல் நகையைக் கொடுப்பது தர்மமல்லவென்றும் அதற்காதாரமாக காண்டிராக்ட் ஆக்ட் 178-வது பிரிவை எடுத்துக்காட்டி வாதிக்கப்பட்டது. 178-வது பிரிவின் ஷரத்தில் சொத்துக்காரனிடமிருந்தாவது அதை சட்டவிரோதமல்லாதபடி வைத்துக்கொண்டிருக்கிற வேறொருவனிடமிருந்தாவது யாதொருவன் மோசக்கருத்தாக அல்லது குற்றமான நடவடிக்கையாலாவது அந்தசொத்தை அடைந்திருக்கும் பட்சத்தில் அந்த நகையை சொந்தக்காரன்வசம் திரும்பிக் கொடுக்கும்பொழுது அதுவிஷயமாய் ஷையான் கைவிட்டுப்போன தொகையைத் திரும்பியடைய நியாயமேற்படாதென்ற கருத்தாய் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல் இந்தக்கேஸில் பத்தராகிலும் பிரதிவாதியாகிலும் நகையை வாங்கும்பொழுது மோச நடவடிக்கை யாதொன்றும் ஏற்படாதபடியால் பிரதிவாதி செலுத்தியிருக்கிற தொகையைப் பெருமல் நகையைக் கொடுத்துவிடக்கூடாதென்று வாதிக்கப்படுகிறது. இப்தப்பாயிண்டு விஷயமாய் ஏற்பட்டிருக்கிற சில தீர்மானங்களைப் பற்றி யோஜிக்குமுன் கண்டிராக்ட் ஆக்ட் 108, 178-வது பிரிவுகளும், ப்ராபர்டி ஆக்ட் 41-வது பிரிவும் இன்ஸால்வென்ஸி ஆக்டில் சொத்துக்குடையவன் விஷயமாய் ஏற்பட்டிருக்கிற பற்பல பிரிவிகளும் ஏற்பட்டிருக்கிற கருத்தைக் கவனித்தால் சட்டப்படி யாதொரு சொத்துக்குடையவனின் பாத்தியதையைக் காப்பாற்றிக் கொடுக்கவேண்டியது முக்கிய கடமையாகும். சொத்தை வைத்திருக்கிற இடையிலுள்ளவன் சொத்துக்கு நிஜமான பாத்தியஸ்தன் என்று நம்பும்படிசொந்தக்காரன்யாதொரு தூண்டுதல் செய்திருந்தாலொழிய அவனுடைய பாத்தியதைக்கு யாதொரு குறைவும் வராமல் பாதுகார்க்கவேண்டியதாகும். நல்லெண்ணத்துடன் அடமானம் வாங்கியிருந்தால் போதாது. சொத்துக்

குடையவன் நடத்தையால் அல்லது தவறுதலால் தான் சொத்தைத் திரும்பியடையும் பாத்தியதையையிழந்ததாகருஜுப்படுத்தினாலொழியநல்லெண்ணத்துடன்அடமானம்அல்லதுகிறயம்பெற்றவனுடைய நியாயத்தை கவனிக்கத்தகாது. சொத்துக்காரனுடைய பாத்தியதையை ஆக்ஷேபிக்கிறவன் தான் சொத்தின்பேரில் பணத்தைக் கொடுக்கும்விதமாக ஷையான்நடந்துக்கொண்டிருப்பதாக அல்லது அசட்டையாயிருப்பதாகருஜுப் படுத்தவேண்டும். தாவாகேசில்பிரதிவாதி அடமானத்தின்பேரில் பத்தருக்குக் கடன்கொடுத்த தகவல் வாதிக்கு முற்றிலும் தெரியவராது. 12 பங்காளலா ரிபோர்ட் 42-ல் தீர்மானித்திருக்கிறபடிபத்தர் தாவா நகையின்பேரில் எவ்விதமான அதிகாரமும் உடைத்தாயிருக்கவில்லை. அதைக்காட்டும் பொருட்டுதன்வசத்தில் வைத்திருந்திருக்கிறான். பத்தருக்கு அதில் என்ன பாத்தியம் உண்டோ அந்த பாத்தியதையை மட்டும் மற்றொருவருக்கு மாற்றிவிடலாம். ஆனால் பத்தருக்கே யாதொரு பாத்தியதை இல்லாதபொழுது பிரதிவாதிக்கு அதில் எவ்வித பாத்தியதையும் செல்லத்தகாது. ஒரு குறித்த காலத்திற்கு அல்லது குறித்த காரியத்திற்கு ஒருவன் யாதொரு பொருளை மற்றொருவனிடம் கொடுத்தாலும்கூட அவர் அந்தப்பொருளை பிறருக்குக்கொடுத்து அதில் எவ்வித பாத்தியதையும் உண்டாக்க நியாயமில்லையென்று ஷை பங்காளத்து ரிபோர்ட்டில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 24 பம்பாய் 458-ல் சொல்லியிருக்கிறபடி ஒருவனுக்கு சொத்தில் ஸிவில் பாத்தியம் ஏற்பட்டிராத பட்சத்தில் அதில் அவனிடமிருந்து பெற்ற மூன்றாவதுமனிதனுக்குயாதொருபாத்தியதையும்உண்டாகாது. காண்டிராக்ட் ஆக்ட் 108-வது பிரிவின்படி பிரதிவாதிக்கு பாத்தியதை ஏற்படுவதற்கு பத்தரிடத்தில் நகையிருந்தபொழுது அவருக்கு அதில்சொந்தம்பாராட்டத்தக்க நிலைமை யிருந்திருக்கவேண்டும்.

பத்தர் வாதிக்கு ஏஜண்டாகயிருந்து நகையை விற்றுக்கொடுக்க ஒப்புக்கொண்டபடியால் பத்தர் மோசக்கருத்தாய் நகையை வாங்கி உபயோகப்படுத்தினதாகச் சொல்லக்கூடாதென்று வாதிக்கப்படுகிறது. பத்தர் வாதிக்கு ஏஜண்டென்றுசொல்லக்கூடாது. அதை வாங்குவோருக்குக் காட்டும் வேலையைத்தவிர்த்து வேறுவிதகடமை பத்தருக்கில்லை. கிறயம் முடிப்பதும் வாதியின் முன்னிலையில் ஆகவேண்டிய காரியமாச்சுது. ஆகையால் வாதிக்கு பத்தர் விக்கிறயம் செய்யும் பொருட்டு ஏஜண்டாகிற வாதம் பிரயோஜனமில்லை. ஆகவே பிரதிவாதி நகையைக் கொடுக்குமுன் தான்கொடுத்த தொகையை வாதியிடம் பெற்றுக்கொள்ள அபேக்ஷிக்கிறது நியாயமில்லை. வாதிக்கு 3-ம் பிரதிவாதியின்பேரில் செலவுதுகைக்காகவும் டிக்கிரி யடையவேண்டுமென்று ஹைகோர்ட்டில் க்ராஸ் அப்பீல் கொடுத்திருந்தார். பிதிவாதி ஆதிமுதல் நல்லெண்ணத்துடன் நடந்ததாக ஏற்படுவதால் அவரை வாதியின் செலவுக்குட்படுத்துவது நியாயமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

---

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

தஞ்சாவூர் ஜில்லா.

**C. R. P. 920 of 1912—13 பிப்ரவரி 1914.**

*மதுரத்தாச்சி Vs சொக்கலிங்கம் பிள்ளை*

மாயவரம் சப்கோர்ட்டில் வாதி சொக்கலிங்கம்பிள்ளை கொடுத்த ஸ்மால்காஸ் நம்பர் 530 of 1912-ல் 3-பிரதிவாதிகளுக்கும் சம்மன்ஸ்கள் நேரில் ஸர்வ்செய்ய சாத்தியப்படாத காரணத்தால் அவர்களுடைய வாஸ ஸ்தலத்தின் கதவிலொட்டப்பட்டு அது சரியான ஸர்விஸ் என்று சப் ஜட்ஜியவர்களால் அங்கீகரிக்கப்பட்டு வாதிக்குப் பிரதிவாதிகளின்பேரில் எக்ஸ்பார்டி டிக்கிரியும் பிறந்தது. பிரதிவாதி எக்ஸ்பார்டி டிக்கிரியைமாற்றி மறுவிஜாரணையில் தங்கள் எதிர்வாதத்தைக்கேட்டுப் பைசல்கொடுக்க வேண்டுமென்று கொடுத்த விண்ணப்பத்தில் சம்மன்ஸைக் கதவிலொட்டினது சரியான சர்விஸ் அல்லவென்று ஆக்ஷேபித்தார்கள். சப்கோர்ட்டார் விண்ணப்பத்தைத்தள்ளுபடிசெய்துவிடவே பிரதிவாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்தார்கள். ஹைகோர்ட்டாரும் பிரதிவாதிகளுடைய சம்மன்ஸைக் கதவிலொட்டினது சரியான ஸர்விஸென்று அபிப்பிராயப்பட்டு ரிவிஷன் விண்ணப்பத்தைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள். ஹைகோர்ட் தீர்ப்பின் காரணச்சுருக்கமாவது:— அமீனா பிரதிவாதிகள் வசிக்கும் கிராமமாகிய மேயலூருக்குச்சென்று 2-ம் பிரதிவாதியின் காரியஸ்தனாகிய பசுபதி என்றவரிடத்திலும் கிராம முனிசிப் அவர்களிடத்திலும் மற்ற அக்கம்பக்கத்தாரிடத்திலும் பிரதிவாதிகளைப்பற்றி விஜாரித்ததில் அவர்கள் மூவரும் வெவ்வேறு இடங்களுக்குப் போயிருப்பதாயும் அவர்கள் திரும்பிவரும் காலம் தெரியாதென்றும் கேழ்விப்பட்டு அந்தப்படிக்கு இண்டார்ஸ்செய்து சம்மன்ஸ்களை ரிட்டர்ன்செய்துவிட்டார். பிரதிவாதிகள் திரும்பிவருவதற்குக்கொஞ்சம் காலதாமத மாகுமென்று நிதானித்து வாதி 4-மாதகாலம் பொருத்து 2-வது சம்மன்ஸ்களுக்காகப் படி கட்டினார். இரண்டாவது தடவையும் அமீனா முன்போலவே பிரதிவாதிகள் வழக்கமாய் வசித்துவரும் ஷை கிராமத்திற்குச்சென்று விஜாரித்ததில் முன்போலவே பிரதிவாதிகள் வெளியூருக்குப் போயிருப்பதாகவும் திரும்பிவரும் காலம் தெரியவராதென்றும் சொல்லப்பட்டதால் சம்மன்ஸை பிரதிவாதிகளின் மேல் நேராக ஸர்வ்செய்ய சாத்தியப்படாதென்று எண்டார்ஸ்செய்து சம்மன்ஸ்களை ரிட்டர்ன் செய்துவிட்டார். இவ்வித சந்தர்ப்பத்தில் கோர்ட்டார் சம்மன்ஸ்களை இருப்பிடத்தின் கதவில் ஒட்டினதை சரியான ஸர்விஸ என்று ஒப்புக்கொண்டது சட்டவிரோதமாவென்று கவனிக்கவேண்டும். ஸி. பி. ஸி. ஆர்டர் 5-ரூல் 12-ல் சாத்தியப்பட்டால் சம்மன்ஸை நேரில் ஸர்வ்செய்ய வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக்கேசில் அமீனா முதல் தடவை விஜாரித்ததில் பிரதிவாதிகள் ஒரு குறித்த இடத்திற்குச் சென்றிருப்பதாகச் சொல்லப்பட்டதால் அந்த இடத்திற்கு வாதி மறுசம்மன்ஸை அனுப்பியிருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படியானால் பிரதிவாதிகள் சென்றதாகச் சொன்ன இடத்திலும் இல்லையென்று கண்டால் அங்கிருந்து வேறிடங்களுக்குப் போனதகவலையும் அறிந்து அந்த இடத்திற்கும் சம்மன்ஸ் அனுப்பவேண்டியதாகும் அதாவது எதிரிகள் போயிருந்த இடமெல்லாம் வாதி பின்தொடர வேண்டியதாகும். அப்படிச்செய்வது வாதியின் கடமையென்று சொல்லத்தகாது. ஆனால் எதிரிக்கு இதரமான வாஸஸ்தலம் அல்லது வர்த்தகம்செய்யுமிட மிருப்பதாகத் தெரியவரின் வாதி அந்த இடத்திற்கும் சம்மன்ஸ் அனுப்பி நேரில் ஸர்வ்செய்யப் பிரயத்தனப்படவேண்டியது நியாயமாகும்.



23 மதராஸ் 324-ல் ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரன் நாயரவர்கள் கொடுத்த அபிப்பிராயத்தில் பிரதிவாதி சம்மன்ஸ் பிறந்த தகவல் தெரிந்து அதைப் பெற்றுக்கொள்ளாதபடிக்கு மறைந்துகொண்டிருப்பதாக நம்புவதற்கு நியாயமான காரணங்களிருந்தாலொழிய அல்லது வழக்கமான முறையில் பிரதிவாதிக்கு சம்மன்ஸை ஸர்வ் செய்யக்கூடவில்லையென்று ஏற்பட்டாலொழிய பிரதிவாதி சம்மன்ஸை வீட்டுக்கதவிலும் கோர்ட் வாசலிலும் ஒட்டும்படி உத்தரவளிக்கக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்கேசில் பிரதிவாதிகளுக்கு வழக்கமுறையில் ஸர்வ் செய்யக்கூடவில்லையென்றே சொல்லவேண்டும். பிரதிவாதிகளுடைய இருப்பிடத்திற்கு இரண்டு தடவைகள் சம்மன்ஸ் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர்கள் மற்ற இடங்களுக்குப் போயிருப்பதாயும் திரும்பிவரும்காலம் தெரியவராதென்றும் இரண்டு தடவைகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. 1914மதராஸ்வாரக்குறிப்புகளின் 79-ல் சொல்லியிருக்கிறபடி முதல்தடவையிலேயே வாதிக்குப் பிரதிவாதியின் இருப்பிடம் புலப்படாவிடில் வாதி மனுக்கொடுத்து வீட்டுக்கதவிலும் கோர்ட் வாசலிலும் சம்மன்ஸை ஒட்டி ஸர்வ் செய்ய அனுமதி கேட்க பாத்தியமுண்டாகும். வாதி இந்தக்கேசில் அப்படியும் செய்யாமல் திரும்பிவரும் காலம் தெரியாதென்ற தகவலால 4 மாதம் காத்திருந்து ஒருக்கால் எதிரிகள் ஊர்வந்து சேர்ந்திருக்கலாமென்று உத்தேசித்து மறு சம்மன்ஸ அனுப்பியும் பார்த்திருக்கிறார் ஆகவே வாதி கூடிய பிரயத்தனம் எடுத்தபின் சம்மன்ஸ நேரில் ஸர்வ் செய்ய சாத்தியப்படவில்லையென்ற காரணத்தால் முதல்தடவையில் சம்மன்ஸைக் கதவிலொட்டினது சரியான ஸர்விஸ் என்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது சரியாகும்.

தவிரவும் முதல்தடவை அமீனா சம்மன்ஸைக் கொண்டுபோன தகவல் 2-ம் பிரதிவாதியின் ஏஜண்டு பசுபதிக்குத் தெரிந்திருக்கிறது. பிரதிவாதிகளை எக்ஸ்பார்டியாகத் தீர்மானித்து கோர்ட்டார் கேஸைநடத்தும் சமயத்திலும் அதே ஏஜண்டு கோர்ட்டுக்கு வேறு வியவகார விஷயமாய் வந்திருக்கிறார். பிரதிவாதிகளின் பெயரைக் கூப்பிட்டது அவருக்குத்தெரியும். அப்படியிருந்தும் எக்ஸ்பார்டிடிக்கிரீயை மாற்றுவதற்கு ஏற்பட்டிருக்கிற வாய்தாவின் கடைசி நாள்

வரையில் பிரதிவாதிகள் விண்ணப்பம் கொடுக்கவுமில்லை. கொடுத்த விண்ணப்பத்திற் காதாரமான பிரமாணப் பத்திரிகையிலாவது தங்களுக்கு வாதியின் தாவாவைப் பற்றி எதிர்வாதம் செய்வதற்குச்சரியான ஆதாரங்களிருப்பதாகவும் சொல்லப்படவில்லை. ஆகவே வாதிக்கு நியாயமாய்க் கிடைத்த டிக்கிரீப்படி தொகையை வசூலிக்காமல் தடுக்கும்பொருட்டு பிரதிவாதிகள் எடுத்தபிரயத்தனமென்று இந்த நடவடிக்கைகளை மதிக்கலாம். சரியான எதிர்வாதமிருந்தால் முந்தியே அவர்கள் ஆஜராகி கேஸை நடத்தியிருப்பார்கள். மேற்கூறிய காரணங்களால் எதிரிகளின் ரிவிஷன் விண்ணப்பம் செலவுடன் தள்ளுபடியாக்சுது.

---

ஜஸ்டிஸ் டையாப்ஜீ & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

தென் ஆர்காட் ஜில்லா

## S. A. 299 of 1911—6 எப்பிரல் 1914

ராமலிங்கம் பிள்ளை Vs முத்தய்யன்.

முத்தய்யன் என்ற மைனருடைய தகப்பனார் கூட்டுக்குடும்பத்தலைவராயிருந்து மானேஜ்மெண்டு செய்துவந்த காலத்தில் அவர் பேரில் இ. பி. கோ. 232-வது பிரிவின்படி பொய்யான நாணயங்கள் சிருஷ்டனை செய்ததாக கிரிமினல் கேஸ் வந்து அந்தக்கேசிலிருந்து தப்புவதற்காக வக்கில் பீஸ்முதலிய செலவுகளுக்கு ஏராளமான தொகைவேண்டியிருந்தபடியால்1906ஆகஸ்ட் 20-ல் வாதியின் தகபபன் தாவாசொத்தை 2-5 பிரதிவாதிகளுக்கு சுத்தவிக்கிறயம் செய்துவிட்டார் கிரிமினல் கேஸ் விஜாரணையாகி அதில் வாதியின் தகப்பன் விடுதலையானார். மைனர்வாதி சிதம்பரம் டி-மு கோர்ட்டில் தன் தகப்பன் செய்த விக்கிறயம் அனுவசியமென்றும் ஆகவேவிக்கிறயத்தைப் பூராவும் ரத்து செய்யவேண்டுமென்று சொல்லித்தன்தகப்பனை 1-ம்பிரதிவாதியாகச்சேர்த்து 2-5 பிரதிவாதிகளின்பேரில் அசல் வியாஜ்ஜியம்செய்தார். டி-மு கோர்ட்டார் முதல் விஜாரணையிலும் அப்பீலில்ரிமாண்டாகிநடந்தமறுவிஜாரணையிலும் ஒரே விதமாக தாவா விக்கிறயம் வாதியைக் கட்டுப்படுத்தாதென்று அபிப்பிராயப்பட்டும் வாதியின் கோறிக்கைக்கு விரோதமாக தாவாகிறயம் ரத்தாகத்தக்க தல்லவென்று இரண்டு தடவைகளிலும் தீர்மானம் செய்தார்கள்.

அதன்மேல் வாதி கூடலூர் ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்ததில் அங்கு தாவா விக்கிறயம் வாதியைக் கட்டுப்படுத்தாதென்று டி-மு. கோர்ட்டாருடன் ஒத்தபிப்பிராயப்பட்டதுமதவிற தாவா விக்கிறயம் ரத்தாகவேண்டியதென்று வாதிக்கனுகூலமாய்த் தீர்ப்பளித்தார்கள். அதன்மேல் கிறயம்பெற்ற பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் அங்கு ஜில்லா கோர்ட் தீர்மானம் ரத்தாகி தாவா விக்கிறயம் ரத்தாகத்தக்கதல்லவென்று ஏற்பட்டு வாதியின் பிராது எல்லா கோர்ட் செலவுடன் தள்ளுபடியாகவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்ப்பின் முக்கிய அம்சங்களாவன:-

அப்பீல் பிரதிவாதிக்காகஎடுத்துக் காட்டப்பட்டிருக்கிற 34 அலகாபாத் கேசில் கூட்டுக்குடும்பத்தைச் சேர்ந்தவன்பேரில் வந்த கிரிமினல் பிராதில் அவரைத் தப்பவைக்கும்பொருட்டு செய்கிற செலவானது சட்டப்படி குடும்பச்சொத்திலிருந்து வகிப்பதற்குத் தகுதியான அவசியமான செலவாகுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு செலவுசெய்து கேஸை நடத்தியும் எதிரி கிரிமினல் கேஸில் தண்டனையடைந்தார். அப்படியானாலும் ஷை செலவுதொகை (குடும்பப் பொதுவான செலவாக மதிக்கத்தக்கபடி) சட்டப்படி ஒப்புக்கொள்ளத்தக்க அவசியமானதென்றும் அந்தத் தீர்மானத்தில் ஏற்பட்டிருக்கிறது. தாவா கேஸிலோ வாதியின் தகப்பன் கிரிமினல் குற்றத்தினின்று விடுதலையடைந்திருக்கிறார். 33 அலகபாத் 472-ல் தீர்மானிக்கப்பட்டபடி வாதியின் தகப்பன் குடும்ப சொத்தை கிறயம் செய்யாமல். தன் கேஸ் செலவுக்காகக் கடன் வாங்கியிருந்தால் பாக்கிதார்கள் மைனரின் பாகத்தையும் சேர்த்து நிறைவேற்றுநடவடிக்கை நடத்திக் கடன் தொகையை வசூலிக்கலாம். ஒரு அடமான நடவடிக்கை அல்லது விக்கிறய நடவடிக்கையானது சட்டப்படி அவசியமான நடவடிக்கையா என்ற பாயிண்டைப்பற்றித் தீர்மானம் கொடுக்கும் சந்தர்ப்பத்தில் பிரிவி கௌன்ஸிலார் 5 மோர் இந்தியன் அப்பீல் 393-ன் 454-வது பக்கத்தில் சொல்லியிருக்கிற அபிப்பிராயங்களைக் கவனிக்கத் தக்கதாகும்:—"ஒரு எஸ்டேட்டை ஈடுகொட்டிக் கடன் வாங்கும் பட்சத்தில் கடன் தொகைக்கு தகுந்த ஆதாரம் ஏற்பட்டுவிடுகிறபடி



யால் குறைந்த வட்டிக்கும் சகாயமான ஷரத்துகளுடன் கடன் வாங்கலாம். நபர் ஜாமீனில் அவ்வளவு எளிதில் கடன் வாங்குவது கடினமாகும். ஆகவே சரியானசெலவுக்காக ஒருவன் வாங்கும் கடனுக்கு ஆதாரமாய் யாதொரு சொத்தை ஈடாகக்காட்டுவது யுக்திக்குறைவான மானேஜ்மெண்ட் என்று சொல்லக்கூடாது. தவிற வாங்கும் கடனைப் பின்வரும் செலவுக்காக உபயோகப்படுத்துவதே அடிக்கடி ஏற்படும் சந்தர்ப்பமாகும். அப்படியிருக்க கடன்கொடுத்தவன் குடும்ப மானேஜ்மெண்டை தன்மேல் ஏற்றுக்கொண்டு செலவுசெய்தாலொழியகடனாளி எவ்விதம்தொகையை உபயோகிக்கிறான் என்று அறியவாவது அவனை அடக்கி வீண் செலவு செய்யாமல் தடுக்கவாவது அனுகூலமான சந்தர்ப்பம் கிடைப்பது அறிதாகும். ஆகவே சரியான விஷயத்திற்காக கடன கொடுத்த பாக்கிதார போசு நடவடிக்கைகளால் நஷ்டப்படுவது நியாயமல்ல." இந்தப் பிரிவிகௌன்ஸில் கேஸானது ஒரு அடமானத்தைப்பற்றியதாயினும் அதில் கொடுக்கப்பட்ட மேற்கூறிய அபிப்பிராய நியாயங்கள் விக்கிறய நடவடிக்கைகளுக்கும் ஏற்றதாகும். அப்பீல்வாதிக்காக 29 மதராஸ் 200 எடுத்துக் காட்டப்பட்டது. அந்தக் கேசில் தாவா அடமானம அல்லது விக்கிறய காலத்தில் ஏற்பட்டகடனுக்கும் பூர்வீககடனுக்கும் உள்ளவித்தியாஸமானது யோஜிக்கப்பட்டது. தாவாகேஸுக்கு அந்தக்கேசின் தீர்மானம் உதவக்கூடியதல்ல. தாவாகேசில்விக்கிறயமானதுபிந்திய செலவுவகைக்காக ஏற்பட்டதென்று அப்பீல் வாதிகளே ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் மைனர்வக்கிலுடையவாதத்தில் பூர்வீகசொத்தைவிக்கிறயம் செய்வதற்குப்போதுமான சட்டப்படி ஒப்புக்கொள்ளத்தக்க அவசியமிருக்கிறதாவென்று தீர்மானிப்பது அவசியமென்று சொல்லப்பட்டும் அந்தப் பாயிண்டானது கீழ்கோர்ட்டுகளில் பிரதிவாதிகளுக்காக எடுத்துச் சொல்லப்படவில்லையென்றும் ஆகையால் அதைப்பற்றி ஹைகோர்ட்டில் பிரஸ்தாபிக்கவிடக்கூடாதென்று ஆக்ஷேபிக்கப்பட்டது.

ஆனால் இந்தக் கேஸின் பிராதிலும் பிரதிவாதிகள் கொடுத்திருக்கிற ஆன்ஸரிலும் அந்த விஷயமானது பரிஷ்காரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. பிராதின் 6-வது பாராவில் தாவா விக்கிறயத் தொகையானது சட்டப்படி தன்னை கட்டுப்படுத்தத்தகாதென்றும் ஆன்ஸரின் 3-வது பாராவில் வாதியின் தகப்பன் கிறயத்தொகையை துர்விநியோகம் செய்யவில்லையென்றும் அவர் துர்நடத்தையுள்ளவரல்லவென்றும் ஆகையால் விக்கிறயமானது சட்டப்படி செல்லத்தகுமென்று கண்டிருக்கிறது. மேற்கூறிய அம்சங்களின்பேரில் டி-மு கோர்ட்டார் ஏற்படுத்தின 2-வது இஷ்யூவில் தாவா விக்கிறயமானது வாதி பிராதில் சொல்லியிருக்கிற விதமாய் எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று குறிக்கப்பட்டிருக்கிறது. தீர்மானிக்கவேண்டியதற்காக டி-மு கோர்ட்டார் இவ்வித பொதுவான வசனங்களால் இஷ்யூ ஏற்படுத்தினது மிகவும் அதிருப்தியான முறையாகும். நியாயமாக பின்வருமாறு இஷ்யூ ஏற்பட்டிருக்கவேண்டும். அதாவது:—"(1) பிரதிவாதிகள் கிறயம் பெற்றதற்குமுன் விக்கிறயம் செய்யவேண்டிய அவசியமான சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்ததாவென்ற விஷயத்தை சரியானபடி மனப்பூர்வமாக விஜாரித்தறிந்தார்களா? (2) அவ்வித விஜாரணை செய்யாவிடில் தாவாகிறயம் செய்யவேண்டியிருந்த காரணமும் அவசியமும் வாதியையும் கட்டுப்படுத்தத் தக்கவைகளா? விக்கிறயத் தொகையானது தஸ்தவேஜில் கண்ட விஷயத்திற்காகவே உபயோகப்படுத்தப்பட்டதா?

ஷை இஷ்யூ பாயிண்டுகளைப்பற்றித் திரும்பவும் விஜாரணை செய்து பைசல் தீர்மானமடையவேண்டியது நியாயமாயினும் தாவா விக்கிறயத்திற்கு மைனர்வாதி கட்டுப்பட்டவனல்லவென்ற கீழ்கோர்ட் தீர்மான அபிப்பிராயங்களைப் பற்றி பிரதிவாதிகள் அப்பீல்க்ரௌண்டில் ஆக்ஷேபனை செய்யாதபடியால் மேற்கூறிய விஷயங்களைப்பற்றி மறு விஜாரணை செய்யும்படி அனுமதி கொடுக்கக்கூடாதென்று எதிர்வாதம் செய்யப்படுகிறது. என்றாலும் விக்கிறயம் செய்த தொகை சேகரிக்க அவசியம் நேரிட்டதா என்ற விஷயத்தைக் கீழ்கோர்ட்டார் தீர்மானிக்கவேண்டியது அவசியமென்றாலும், அந்த விஷயம் லா பாயிண்டாகிறபடியாலும், அதைப்பற்றி 2-வது அப்பீல் ஸ்டேஜில் இருதரப்பாருடைய வாதங்களையும் கேட்டபடியாலும் அதைப்பற்றி இங்கேயே அபிப்பிராயங் கொடுக்கத்தகும். மறு விஜாரணைக்

கனுப்பத் தேவையில்லை. விக்கிறய தஸ்தவேஜையும் பிராதையும் கவனித்துப் பார்க்குமிடத்து விக்கிறய நடவடிக்கை அவசியமான காரியத்திற்காகஏற்பட்டதென்றும் ஆகையால் அது மைனாவாதியையும் கட்டுப்படுத்துமென்றும் தீர்மனிக்கப்படவேண்டியதாகும். ஆகவே 2-வது அப்பீல் பிரதிவாதிகளுக் கனுகூலமாகி தாவா விக்கிறயம் காயமாச்சுது. மைனர் வாதியின் பிராது எல்லா கோர்ட் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

———( )———

ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் & ஜஸ்டிஸ் ஏயிலிங்

கோயமுத்தூர் ஜில்லா

L. P. A. 93 of 1913—6 மார்ச்சு 1914

முத்துராமகிருஷ்ண நாய்க்கர் Vs மாரிமுத்து கவுண்டன்.

கோயமுத்தூர் ஜில்லாவில் படையாச்சி வம்சத்தைச் சேர்ந்த மொட்டைய்ய கவுண்டன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த குத்தகைச் சீட்டின்படி 1-ம் பிரதிவாதி தாவா நிலங்களை அனுபவித்து வந்ததில் மொட்டய்ய கவுண்டன் காலஞ்சென்ற பிறகு ஷை யாருடைய வாரிஸ்கள் 1-ம் பிரதிவாதியை விலக்கி சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ளவேண்டுமென்று ஈரோட் டி-மு கோர்ட்டில் இஜெக்ட்மெண்டு பிராது கொடுத்ததில் தாவா சொத்தானது மொட்டய்ய கவுண்டனுடைய மனைவியாகிய அய்யம்மாளுடையதென்றும் அவள் காலஞ்சென்றபிறகு அவளுடைய வாரிஸாகிய வேலாயுதகவுண்டன் தாவா சொத்துக்களை 2-ம் பிரதிவாதியாகிய முத்து ராமகிருஷ்ண நாயக்கனுக்கு விக்கிறயம் செய்துவிட்டதாயும் ஆகையால் மொட்டைய கவுண்டனுடைய வாரிஸ்களாகிய வாதிகளுக்கு தாவா சொத்தில் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்றும் ஆகையால் இந்த இஜெக்ட்மெண்ட் பிராது செல்லத்தகாதென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது. ஈரோட் டி-மு. கோர்ட்டாரும் அப்பீலில் கோயமுத்தூர் ஜில்லா கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக வாதிக்கு அனுகூல டிக்கிரீயளித்து தாவா நிலங்களை 1-ம்பிரதிவாதி வாதியின்வசம்ஒப்புவிக்கவேண்டியதென்று உத்தரவளித்தார்கள். எதிரிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்ததில் ஹானரபில் ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்கள் கீழ்கோர்ட் தீர்மானத்தைக் காயப்படுத்திவிட்டார்கள். [ஆனால் 2வது அப்பீலை சாங்கிகேட்ட இரண்டு ஜட்ஜிமார்களில் மற்றவர்களுடைய அபிப்பிராயம் பிரதிவாதிக் கனுகூலமாயிருந்தும் ரூல்படி ஜஸ்டிஸ் மில்லர் துரையவர்களுடைய அபிப்பிராயம் நிலையாச்சுது.] ஆகையால் பிரதிவாதிகளுக்கு விரோதமாய்த் தீர்ப்பளித்த ஒரு ஜட்ஜியவர்களின் தீர்மானத்தின்பேரில் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்ய சட்டமிருப்பதால் அய்யம்மாளுடைய வாரிஸினிடத்திலிருந்து கிறயம் பெற்ற 2-ம் பிரதிவாதி லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்ததில் கீழ்கோர்ட் தீர்மானங்கள் பிசகென்று ஏற்பட்டு தாவா சொத்தானது மொட்டய்ய கவுண்டன் அய்யம்மாள் ஆகிய இருவருடைய பொதுவான சம்பாத்தியத்தைக் கொண்டு வாங்கப்பட்டதாகையால் இருவருக்கும் அதில் சமபாகமுண்டென்றும் அவர்களுக்குப்பின் அவர்களுடைய வாரிஸ்களுக்கும் அதில் பாத்தியதை உண்டென்றும் ஆகையால் 1-ம் பிரதிவாதி தாவா நிலத்தை வாதிகளுக்கும் அய்யம்மாளுடைய புத்திரிகளுக்கும் பொதுவாக சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டியது நியாயமாகுமென்றும் ஆகையால் அய்யம்மாளுடைய புத்திரிகளையும் தாவாவில் பார்டிகளாய்ச் சேர்த்து சட்டப்படி டிக்கிரீயளிக்க வேண்டுமென்று டி-மு கோர்ட்டாருக்கு பிராதை ரிமாண்டு செய்யப்பட்டது. லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் தீர்மானத்தின் முக்கிய அம்சங்களாவன:—

தாவா சொத்தானது மொட்டய்ய கவுண்டன் அவன் பெண்சாதி அய்யம்மாளும் சேர்ந்து நடத்திவந்து இருவரும் ஸமமாகப் பிரயாசையெடுத்து சம்பாதித்த லாபத்துகையைக்கொண்டு வாங்கப்பட்டதாகவும் படையாச்சி ஜாதியாரில் பெண்சாதியும் புருஷன்கூட கஷ்டப்பட்டு வேலைசெய்து குடும்ப சவரக்ஷணையையும் சொத்தின் அபிவிர்த்தியையும் நடத்திவருவது வழக்கமுறையென்றும் இரண்டு கீழ்கோர்ட்டாரும் ருஜு அம்சத்தைக் கவனித்து நம்பினபோதிலும் டி-மு கோர்ட்டார் மனு ஸ்மிருதியின் கண்டிப்பான முறைப்படி ஒருவனுடைய மனைவி தன் சொந்த சரீரப்பிரயாசையினால் (கைத்தொழில்மூலமாய்) பிரத்தியேகமான சம்பாத்தியம்செய்துவந்தபோதிலும் அந்த சொத்தானது கணவனுடைய ஆதீனத்திற்குட்பட்டதாகுமென்றும் ஆகையால் தாவாநிலங்களை கிறயத்திற்கு வாங்கின துகையானது அய்யம்மாளுடைய ஸ்வதந்திரமாய் விநியோகம் செய்யத்தக்கசம்பாத்தியல்லவென்றும் தாவாசொத்தைமொட்டய்யகவுண்டன்தன்பேருக்குக்கிறயம்பெறாமல் தன் பெண்சாதிபேருக்கு வாங்கினதற்கு, தன்னுடைய சகோதரர்கள் அதில் பாத்தியங்கொண்டாடக் கூடாதென்ற கருத்தும் தன்னைவிட தன் பெண்சாதி அதிக சாமர்த்தியமுள்ளவளென்ற விஷயமும் காரணமாகச் சொல்லத்தகுமேயொழிய அவளுடைய பணத்தைக்கொண்டு வாங்கினபடியால் அவள்பேருக்குக் கிறயம் எழுதி வாங்கப்பட்டதாகச் சொல்லக்கூடாதென்றும் தீர்மானத்தில் அபிப்பிராயங்கொடுத்திருக்கிறார். தவிற தாவா நிலங்கள் இருவருடைய கூட்டான சம்பாத்தியமென்று வைத்துக்கொண்டாலும் அய்யம்மாள் காலஞ்சென்றபிறகு அவள் புருஷனுக்கு அதில் பூரண பாத்தியதையும் உண்டாயிருக்கவேண்டுமென்றும் ஆகையால் மொட்டய்ய கவுண்டனுடைய வாரிசுகளாகிய வாதிகளுக்கு அந்த நிலங்கள் சேரவேண்டியது நியாயமாகுமென்றும் டி-மு கோர்ட்டாரால் அபிப்பிராயங்கொடுக்கப்பட்டது. கீழ்கோர்ட்டுகளில் தாவா நிலங்கள் முற்றிலும் அய்யம்மாளுடையதென்றதாக முக்கிய வாதம் செய்யப்பட்டது. இங்கு அதாவது ஹைகோர்ட் 2-வது அப்பீலில் தாவா நிலங்கள் மொட்டய்ய கவுண்டனுடைய தனிமையான சொத்தாகாதென்று அதாவது இருவருக்கும் கூட்டான பாத்தியமுண்டென்ற பாயிண்டை முக்கிய வாதமாக எடுத்துப் பேசப்பட்டு அய்யம்மாளின் வாரிஸுக்கும் மொட்டய்ய கவுண்டன் வாரிஸ்களாகிய வாதிகளுடன் கூட்டனுபோகமும் பாத்தியதையும் உண்டென்று சொல்லப்பட்டது.

இரண்டு புருஷர்கள் சேர்ந்து யாதொருபொருளைத் தேடினால் அந்த சொத்தானது இருவருக்கும் கூட்டு பாத்தியமுண்டென்று சொல்லத்தகும், ஆனால் புருஷனும் அவனுடைய பெண்சாதியுமாகச் சேர்ந்து சம்பாதித்த சொத்தில் அதேவிதமான கூட்டு பாத்தியதை ஏன் இருக்கக்கூடாதென்று யோஜித்துப் பார்க்கவேண்டும். பெண்சாதி தன் கணவனைவிட்டுப் பிரிந்திருக்கும் காலத்தில் தன் சொந்த முயற்சியினால் தனக்காக யாதொரு சொத்தை சம்பாத்தியம் செய்துகொள்ள மார்க்கமிருந்தால் அவளே அதே முயற்சியைத் தன் கணவனுடன் சேர்ந்து செலுத்தி அதனால் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு சொத்து வாங்கப்பட்டால் அதில் இருவருக்கும் கூட்டான பாத்தியதை உண்டென்று அனுமானிக்கத்தகும். மிதாக்ஷர தர்மசாஸ்திரத்தை அனுசரித்து வருகிற நமது ராஜதானியில் ஸ்திரீயானவள் எவ்விதமாக சம்பாதியம் செய்தபோதிலும் அதனால் ஏற்படும் சொத்தானது அவளுடைய ஸ்ரீதனம் என்று அழைக்கப்படுகிறது. அவளுக்குப்பின் அதை அவளுடைய வாரிஸ்கள் அடைகிறார்கள். தாயபாகதர்மசாஸ்திரத்திலோஸ்ரீதனத்திற்கு முற்றிலும் விரோதமானகருத்தாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது ஒருஸ்திரீயானவள் எந்த சொத்தைத் தன் கணவனுடைய அதிகாரமில்லாமல்உபயோகிக்க, தானங்கொடுக்க, அல்லது விக்கிறயம் செய்யக்கூடுமோ அவைகள் மட்டும் அவளுடைய ஸ்ரீதனமாகுமேயொழிய மற்றவைகள் ஸ்ரீதனமாகாதென்பது பம்பாயில் அனுசரிக்கப்பட்டு வரும் தாயபாக சாஸ்திர விதியாகிறது. மேயின் துரையவர்களின் ஹிந்து லா 7-வது பதிவின் 610-ம் பக்கத்தைப் பார்க்கவும். ஒரு ஸ்திரீக்கு மணமகள் என்ற அந்தஸ்திலாவது அதாவது விவாககாலத்தில் கொடுக்கப்படுகிற நன்கொடைப்பொருள்களும் தன் கணவனாலாவது, தன்னுடைய பந்துக்கள் அல்லது தன் கணவனுடைய பந்துக்கள் முதலியவைகளாலாவது கொடுக்கப்படுகிற சொத்துக்களில் அவளுக்கு ஸ்வதந்தர பாத்தியதை உண்டென்பதில் சந்தேகமில்லை. ஆனால் கணவன் தன் மனைவிக்கு யாதொரு ஸ்தாவர சொத்தை நன்கொடையாகக் கொடுத்தால் சில சந்தர்ப்பங்களில் அவ்வித ஸ்வதந்தர பாத்தியதை உண்டாவதைப்பற்றி சந்தேகமாய்ச் சொல்லவேண்டியதாகும். பங்காளத்திலும் மதராஸிலும் ஸ்திரீகளுக்கு வாரிஸ் பாத்தியதையால் கிடைக்கும் சொத்தில் ஸர்வ ஸ்வதந்தர பாத்தியதை கிடையாதென்று இப்பொழுது தீர்மானமாக ஏற்பட்டிருக்கிறது. தவிற அன்னியர்களிடத்திலிருந்தும் ஸ்திரீகள் புருஷனைவிட்டு விலகியிருக்கிற காலத்திலும் நன்கொடையாகயாதொரு சொத்தை அடைந்தால் அது அவளுக்குப்பின் அவளுடைய வாரிஸ்களுக்குச் செல்லுமென்றும் தீர்மானமாக ஏற்பட்டிருக்கிறது. 36 மதராஸ் H. C. R. 272-ஐப் பார்க்கவும். 1 மதராஸ் 307ல் தீர்மானித்திருக்கிறபடி நன்கொடையாக ஒரு

சொத்தை புருஷன் பெண்சாதி இருவருக்கும் கூட்டாக்கொடுக்கலாம். அவர்கள் இருவரும் சேர்ந்து யாதொரு சொத்தையும் கூட்டாக கிறயத்திற்கு வாங்கலாம். 27 மதராஸ் 498-ல் சொல்லியிருக்கிறபடி ஒருவன் யாதொரு சொத்தை இருவருக்குமென்று ஏற்படுத்திவைக்கலாம். 21 மதராஸ் 100-ல் கொடுக்கப்பட்டிருக்கிற தீர்மானம் 2-ம் பிரதிவாதியின் வாதத்திற்கு மிகவும் ஒற்றுமையாக இருக்கிறது. அந்தக்கேஸில் ஒரு ஸ்திரீக்கு யாதொரு சொத்தானது இனும் கிராண்டளிக்கப்பட்டதில் அந்த இனும் சொத்தானது அவளுடைய வாரிஸ்களுக்குச்செல்லத்தக்க ஸ்ரீதனமா அல்லவா என்ற விஷயம் யோஜிக்கப்பட்டு மிதாக்ஷரத்தில் சொல்லியிருக்கிறபடி ஸ்திரீயானவள் அன்னியனிடமிருந்து அடைந்த சொத்துக்கள் எப்படிப்பட்டவைகளானாலும் அவைகள் ஸ்ரீதனம்தானென்றும் ஆகையால் அவளுக்குப்பின் அவளுடைய வாரிஸ்கள் அடையவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஹிந்து லாவில் சொல்லப்பட்டிருக்கிறபடி பற்பல கிரந்தங்களைக் கவனித்துப பார்த்ததில் அவைகளில் ஸ்திரீகளுக்கு தங்கள் சொந்தப் பிரயாசையினால் யாதொரு சொத்துக்களை சம்பாதித்துக் கொள்ளலாமென்றும் ஆனால் அதை அவர்கள் விற்பனை செய்வதற்குத் தங்கள் பர்த்தாவின் அதிகாரம் தேவையாகுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதை மேயின் துரையவர்கள் ஷை கிரந்த நியாயங்களைப்பற்றி 663-வது பாராவில்பின்வருமாறுவியாக்கினித்திருக்கிறார். அதாவாது ஒரு ஸ்திரீ தன் சொத்தைப் பிறருக்குக் கொடுத்துவிடும் விஷயத்தைப்பற்றி தன் புருஷனிடம் தெரிவித்து அவரிடம் அனுமதி பெற வேண்டியதென்ற நியாயமானது தர்மநியாயமேயொழிய கட்டாயமாய் அனுசரிக்கவேண்டிய நீதிமுறையல்லவென்றும் ஸ்திரீகளுக்கு ஸ்வதந்தர அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்க வசனங்கள் ஷை கிரந்தங்களில் மிக்க ஸ்பஷ்டமாயும் யாதொரு உறுதியோடும் சொல்லப்பட்டிருக்கிறதென்று எழுதியிருக்கிறார். புருஷன் பெண்சாதியின் விக்கிறய நடவடிக்கையைத் தடுக்க பாத்தியமுண்டாவென்ற பாயிண்டு இந்தக் கேஸுக்கு அவசியமில்லை. மற்றப்படி மேயின் துரையவர்களின் அபிப்பிராயம் சரியானதாகும். மிதாக்ஷரத்தின்படி ஸ்திரீயின் ஸ்வயார்ஜிதம் அவளுடைய ஸ்ரீதனம். அதை அவளுக்குப்பின் அவளுடைய வாரிஸ்கள் அடையவேண்டும்.

ஆகையால் தாவா சொத்தானது அய்யம்மாளுக்கும் அவள் புருஷனுக்கும் கூட்டுபாத்தியதையுள்ளதென்றும் ஆகையால் அய்யம்மாள் இறந்தபின் அவளுடைய பாத்தியதையானது அவளுடைய புருஷனுக்குச் சென்றதாகச் சொல்லக்கூடாதென்றும் அவளுடைய பெண் குழந்தைகளுக்குச் சேரவேண்டியதென்றும் சொல்லவேண்டும். ஆகவே அவளுடையபெண்கள் தகப்பனுடன் தாவா சொத்தில் கூட்டுப்பங்காளிகளாகிறார்கள். அய்யம்மாளுடைய பெண்மக்களுடைய பாத்தியதையானது காலாவதி தோஷத்தால் கெட்டுப்போச்சுதென்று சொல்லப்படவுமில்லை. மொட்டய்ய கவுண்டன் தன் குமாரத்திகளுடைய பங்கை மதியாமல்தானே அனுபவித்துவந்தகாரணத்தையிட்டு அவர்களுக்கு காலாவதி தோஷத்தை யூகிக்கக்கூடாது. கூட்டுப்பங்காளியின் வசமிக்கும் அனுபோகம் மக்களுக்கு விரோதமாகாது. ஆகையால் தாவா சொத்து வாதிகளுக்கும் அய்யம்மாளுடைய வாரிஸ்களுக்கும் அதாவது குமாரத்திகளுக்கும் பொதுவாக பாத்தியப்பட்டதால் 1 ம்பிரதிவாதி தாவாநிலத்தை அவர்களுக்குப் பொதுவாய் சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டுமாகையால் இந்தப்பிராதை வாதிகள் மற்ற பங்காளிகளையும் சேர்க்காமல் தாங்கள் தனிமையாக இந்தப்பிராது கொண்டுவந்தது பிசகாயினும் அதைப்பற்றி கீழ்கோர்ட்டுகளில் ஆக்ஷேபிக்காதபடியால் அந்த ஆக்ஷேபனையை ஏற்றுக்கொள்ளாமல் மேற்கண்டவிதமாய் அய்யம்மாளுடைய குமாரத்திகளையும் பார்ட்டியாகச் சேர்த்து சட்டப்படி தீர்ப்பளிக்கும்படி உத்தரவளிக்கப்பட்டது. [2-ம் பிரதிவாதி வேலாயுத கவுண்டன் என்றவரிடம் கிறயம் பெற்றிருக்கிறான். கோர்ட்டாரே அவரை அய்யம்மாளுடைய வாரிஸ் அல்லவென்று தீர்மானித்திருக்கிறார். ஆகையால் 2-ம் பிரதிவாதியின் விக்கிறயம் பயனற்றுப்போகும்.]

—o—



ஜஸ்டிஸ் டையாப்ஜீ & ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர்

திருச்சிறாப்பள்ளி

S. A. No. 263 of 1911—13 மார்ச்சு 1914

செட்டிகுளம்பிரஸன்னவெங்கடாஜலரெட்டியார்

*Vs*

ஜில்லா கலக்டர் &(காலஞ்சென்ற)ஸ்ரீரங்கம்மாள்

திருச்சிறாப்பள்ளி ஜில்லா கலக்டரவர்கள் வஸியில் புரொஜிஸர்கோட் 92-வது பிரிவின்படி திருச்சிறாப்பள்ளி சப்கோர்ட்டில் சில சத்திரங்களை நடத்திவருவதற்காக ஏற்பட்டிருக்கிற தர்ம சொத்துக்களைப் பரிபாலனம் பண்ணிவரும் டிரஸ்டியாகிய 1-ம் பிரதிவாதி ஸ்ரீரங்கம்மாள் என்றவளை விலக்கி அவளுக்குப்பதிலாகவேறுடிரஸ்டை ஏற்படுத்த வேண்டுமென்றும் ஷை ஸ்ரீரங்கம்மாள் தர்ம சொத்துக்களில் சிலவற்றை 2-ம் பிரதிவாதியாகிய பிரஸன்ன வெங்கடாசல ரெட்டியாரவர்களுக்கு விக்கிறயம் செய்தது பிசகென்னும் ஆகையால் 1899 ஜனவரியின் பிறந்த ஷை விக்கிறயம் செல்லத்தகாதென்று தீர்மானிக்கவேண்டுமென்றும், ஸ்ரீரங்கம்மாள் காலத்தில் வரவு செலவு கணக்குகளை வரவழைத்துப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் அசல் வியாஜ்ஜியம் செய்தார்கள். வாதி கோரியபடி சப்கோர்ட்டார் டிக்கிரீயளித்தார்கள். அதன்மேல் 1-ம்பிரதிவாதி ஸ்ரீரங்கம்மாளும், 2-ம் பிரதிவாதி வெங்கடாசல ரெட்டியாரும் ஹைகோர்ட்டில் தனித்தனியாக அப்பீல் செய்ததார்கள். 1-ம் பிரதிவாதி காலஞ்சென்றமையால் அவளுக்காக வாரிஸ்கள் யாதொருவரும் ரிகார்ட்டில் கொண்டுவரப்படாமையால் (அப்பீலை யாரும் மேல்நடத்த ஹேதுவில்லாதபடியால்) 1-ம் பிரதிவாதி தாகல் செய்த அப்பீல் தள்ளுபடிசெய்யப்பட்டு 2-ம் பிரதிவாதியின் அப்பீல்மட்டும் ஈரங்கிக்கு வந்தபொழுது ஜில்லா கலக்டராகிய வாதிக்காக கவர்ன்மெண்ட் வக்கிலவர்கள் பிரதம ஆக்ஷேபனையாக 2-ம்பிரதிவாதி செய்த அப்பீலில் 1-ம் பிரதிவாதியும் பார்ட்டியாக அதாவது அப்பீல் பிரதிவாதிகளில் ஒருவராகச் சேர்க்கப்பட்டிருக்க அவள் காலஞ்சென்றபின் அவளுடையவாரிஸ்களைரிகார்ட்டில்கொண்டுவராதகாரணத்தால் இந்த அப்பீலும் 1-ம் பிரதிவாதியின் அப்பீலைப்போலவே மேல்நடத்தப்படாமல் டிஸ்மிஸ் செய்யப்படவேண்டுமென்று வாதம் செய்யப்பட்டது. ஹைகோர்ட்டார் அந்த ஆக்ஷேபனையை ஏற்றுக்கொள்ளாமல் 2-ம் பிரதிவாதி அப்பீல் க்ரௌண்டில் சொல்லிக்கொண்ட முக்கிய வாதமாகிய காலாவதி தோஷத்தை வாதிக்கு விரோதமாய்த் தீர்மானித்து அதாவது வாதி 2-ம் பிரதிவாதியின் விக்கிறயத்தை ரத்து செய்வதற்காகக் கோருகிற பரிகாரத்திற்குக் காலாவதி தோஷமேற்பட்டதாகத் தீர்மானித்து 2-ம் பிரதிவாதியைப் பற்றினமட்டில் வாதிக்குக் கிடைத்தகீழ்கோர்ட்டிக்கிரீயை ரத்து செய்துவிட்டார்கள்.

ஹைகோர்ட் தீர்மானத்தில் சொல்லப்பட்ட முக்கிய அம்சங்களாவன:—

2-ம் பிரதிவாதி அப்பீலில் தான் இந்த தாவாவுக்கு அவசியமான பார்ட்டியல்லவென்றும் தன் பெயரை ரிகார்டிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்றும் அப்படிக்கேதாகிலும் வாதிக்குத் தன்மேல் வியாஜ்ஜியமூலமிருந்தபோதிலும் அதற்குக் காலாவதி தோஷமாகுமென்றும் ஆகையால் இரண்டு காரணங்களாலும் தன்னைப் பொருத்தமட்டில் வாதியின் பிராது தள்ளுபடியாகவேண்டுமென்றும் சொல்லிக்கொள்ளுகிறார். 2-ம் பிரதிவாதி கேட்கும் மேற்கூறிய அம்சங்கள் அவரையடுத்த பாத்தியதையேயொழிய வேறல்ல. தவிர அவைகள் வாதியின் பேரில் தான் கோறப்படுகிறது. 1-ம் பிரதிவாதி காலஞ்சென்றபோதிலும் 2-ம் பிரதிவாதியின் மேற்கூறிய எதிர்வாதங்கள் எவ்விதத்திலும் மாற்றப்படத்தேவையில்லை. 2-ம் பிரதிவாதியின்பேரில் ஏற்பட்டிருக்கிற சப்கோர்ட் டிக்கிரீயை மாற்றினால் 1-ம் பிரதிவாதியின் வாரிஸ்கள் ரிகாடில் கொண்டுவரப்படாமலிருக்கும் விஷயமானது மாற்றின டிக்கிரீயின் வசனத்தை எவ்விதமும் பாதிக்க நியாயமில்லை. 2-ம் பிரதிவாதி கோரிக்கொள்ளும் விஷயங்கள் 1-ம் பிரதிவாதியை பாதிக்கத்தக்கவைகளேயல்ல. 30 மதராஸ் 67. 68, 69-ஐப் பார்க்கவும். 2-ம் பிரதிவாதிக்கு அப்பீல் விரோதமாகும் பட்சத்தில் 1-ம் பிரதிவாதியின்பேரில் 2-ம் பிரதிவாதி நஷ்டத்திற்காகத் தொடர நியாயமேற்படுமாதலால் 2-ம் பிரதிவாதியின் அப்பீல் நடவடிக்கையில் 1-ம் பிரதிவாதிக்கு ஒருவித சிரத்தையும் அக்கரையுமிருக்க வேண்டியதாகுமாகையால்2-ம் பிரதிவாதியின் அப்பீலில் 1-ம்பிர

திவாதி பார்டியாக இருப்பதவசியமென்றும் அப்படிப் பார்ட்டியாகச் சேர்க்கப்படாவிட்டால் 2-ம் பிரதிவாதி அப்பீலில் தோல்வியடைந்த காரணத்தை வியாஜ்ஜியமூலமாக வைத்துக்கொண்டு 1ம் பிரதிவாதியின்பேரில் நஷ்டப்பிராது செய்யக்கூடாமற்போகுமென்றும் ஒரு தந்திரமான வாதம் செய்யப்பட்டது. அதனுல் 1-ம் பிரதிவாதி இந்த அப்பீலுக்கு அவசியமான பார்ட்டியென்றும் அந்தப்பார்ட்டி அல்லது அவரின் வாரிஸ் ரிகார்ட்டில் இல்லாவிடில் அப்பீல் நிஷ்பிரயோஜனமென்று சொல்லப்படுகிறது. அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ள நியாயமில்லை. ஆகவே 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதி செய்த அப்பீலில் பார்டியாகச் சேர்க்கப்பட்டிருந்து அவர் காலஞ்சென்றபின அவருடைய வாரிஸை ரிகார்டில் கொண்டுவராத காரணம் அப்பீலை விலக்கத்தக்கதல்ல. அதாவது 2-ம் பிரதிவாதி தன்னுடைய அப்பீலை வாதியின்பேரில் மட்டும் மேல்நடத்திப் பைசலடைய நியாயமிருக்கிறது.

அன்றியும் வி. பி. வி. ஆர்டர் 22 ரூல் 4-ல் சொல்லியிருக்கிறபடி ஒரு பிராதில் இரண்டு பிரதிவாதிகளிருந்து அதில் ஒருவர் இறந்தபின் மற்றப் பிரதிவாதியின்பேரில் வாதி அதே வியாஜ்ஜியத்தை நடத்தும் பாத்தியதை குறைவுபட்டால் மட்டும் காலஞ்சென்ற பிரதிவாதியின் வாரிஸ்களை ரிகார்டில் கொண்டுவந்து அதன்பின் வாதி பிராதை மேல்நடத்த வேண்டியதாகும். மேற்கூறிய சட்ட முறையில் பிராது என்ற வசனத்திற்கு அப்பீலும் வாதி என்ற வசனத்திற்கு அப்பீல் வாதியும் பிரதி வாதி என்றதற்கு அப்பீல் பிரதிவாதியும் அர்த்தமாகவேண்டுமென்று 11-வது ரூலில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோலவே தாவா செய்யும் பாத்தியதை என்றதற்கு அப்பீல் செய்யும் பாத்தியதை என்ற கருத்தும் அடங்கியிருப்பதாக யூகிக்கவேண்டும். 26 பம்பாய் 602, 603, 607-யும், 26 மதராஸ் 499-யும் பார்க்கவும். (ஆகையால் 2-ம் பிரதிவாதியின் அப்பீல் பாத்தியதைக்கு 1-ம் பிரதிவாதியின் மரணத்தால் யாதொரு குந்தகமும் ஏற்படாத பக்ஷத்தில் அப்பீலை வாதியின்பேரில் மேல்நடத்துவது நியாயமாகும். வாதியின் பிரதம ஆக்ஷேபனை பிரயோஜமில்லை.

இரண்டாவதாக வாதிக்கு 2-ம் பிரதிவாதியின் பேரில் வியாஜ்ஜியமூலமே கிடையாதென்றும் அப்படிக்கிருந்தாலும் அதற்குக்காலாவதி கடந்துவிட்டதென்றும் அப்பீலில் சொல்லிக்கொள்ளப்படுகிறது. வாதிக்கு 2-ம் பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியமூலமுண்டாவென்ற விஷயத்தைப்பற்றி யாதொரு அபிப்பிராயங் கொடுக்காமல், இந்தக்கேஸின் சந்தர்ப்பங்களை உத்தேசித்து இந்த தாவாவை ஜில்லா கலக்டரவர்கள் வி. பி. 92-வது பிரிவின்படி செய்தபோதிலும் அதாவது ஒரு டிரஸ்டியை நீக்கி அவருக்குப்பதிலாக வேறு டிரஸ்டி நியமனம் செய்யவேண்டுமென்று கோரிக்கொண்டு செய்த பிராதான போதிலும் வாதி கேட்கும்விதமான பரிகாரத்தை டிரஸ்டியினிடமிருந்து மேடோவர் பெற்றவனுகிய 2-ம் பிரதிவாதியின்மீது தேடிக்கொள்ளலாமென்று வைத்துக்கொண்டாலும் அவ்வித பரிகாரம் தேடுவதற்க்கு காலாவதி கெடு உண்டா இல்லையாவென்று யோஜிக்குமிடத்து காலாவதி ஆக்ட் 10-வது பிரிவின்படி 2-ம் பிரதிவாதியின் கையிலிருக்கிற தர்ம சொத்தின் பேரில் வாதி தொடர்ந்து வழக்காடுவதற்குக் காலாவதிகெடுவேகிடையாதென்று அதாவது டிரஸ்டிக்கள் பேரிலாவது அவர்களுடைய வாரிஸ்கள்பேரிலாவது அல்லது அவர்களிடமிருந்து யாதொரு பிரதிபிரயோஜனமும் செலுத்தாமல் சொத்தை மேடோவர் பெற்றனுபவிக்கிறவர்கள் பேரிலும் தாவாசெய்வதற்கு காலாவதி கெடுவே கிடையாதென்று (எக்காலத்திலும் தாவாசெய்யலாமென்று) முதலில்வாதிக்காகச் சொல்லப்பட்டது. 2-ம் பிரதிவாதி தாவா நிலங்களை பிரதிப்பிரயோஜனம் செலுத்திக் கிறயம் பெற்றதாக சப்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். அது தப்பான தீர்மானமென்று சொல்லப்படவில்லை. ஆகையால் தொகை கொடுத்துக் கிறயம் பெற்ற 2-ம் பிரதிவாதியின்பேரில் வாதி வழக்கெடுக்க காலாவதி ஆக்ட் 10-வது பிரிவின் அம்சத்தை உபயோகிக்க நியாயமில்லை. ஆனுல் தொகை கொடுத்துக் கிறயம் பெற்றும் சொத்தானது விக்கிறயத்திற்கு யோக்கியமானதென்று நம்பி ஸ்ரீரங்கம்மாளுக்கு விற்பனை செய்ய அதிகாரமுண்டென்று நம்பி நல்லெண்ணத்துடன் வாங்கியிருந்தால்மட்டும் 2-ம் பிரதிவாதி இந்தப் பிராதுக்குக் காலாவதிகெடு உண்டென்று ஆக்ஷேபிக்கத் தகுமென்றும் அவ்வித நல்லெண்ணத்துடன் வாங்கியிருப்பதாக ருஜுவாகாதபடியால் 2-ம் பிரதிவாதிக்கு காலாவதி கெடுவைப் பிரயோகித்து வாதியின் பிராதுக்கு ஆக்ஷேபனை செய்யக் கூடாதென்று சொல்லப்பட்டது. அந்த வாதம் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. டிரஸ்ட் ஆக்ட் 64-வது பிரிவின்படி தர்ம சொத்தென்ற தகவல் தெரியாமல் நல்லெண்ணத்துடன் கிறயத்தொகையை செலுத்தி யாதொரு தர்ம சொத்தைக் கிறயமடைந்தவன்பேரில் தர்மத்திற்குறிய நன்மையை அடைந்தனுபவிக்கவேண்டியவர்கள் வழக்காடவே நியாயமில்லை. நல்லெண்ணமில்லாமல் கிறயம் பெற்றால்மட்டும் சொத்தின்பேரில் தொடர பாத்தியமேற்படும். தர்மசொத்தை டிரஸ்டியிடத்திலிருந்து மாற்றிக்கொண்டவன் அதற்காக யாதொரு பிரதிபிரயோஜனமும் செலுத்தியிராத பட்சத்தில் அவன்பேரில் காலாவதி ஆக்ட் 10-வதுபிரிவின் அம்சங்களை அனுசரித்து எக்காலத்திலும் தாவா செய்யலாம். ஆனுல் பொருள் செலுத்தி (பிரதிபிரயோஜனத்திற்காக) சொத்தை தர்ம சொத்தென்று தெரியாமல் நல்லெண்ணத்துடன் அடைந்திருந்தால் அப்படிப்பட்டவருக்கு அந்த சொத்தில் டிரஸ்ட் ஆக்ட் 64-வது பிரிவின்படி கிறயமான தேதியிலேயே பாத்தியதை ஏற்படுகிறது. ஆனுல் தர்ம சொத்தென்று தெரிந்தும் பொருள்கொடுத்துக் கிறயம் பெற்றவனுக்கு பாத்தியதையானது காலாவதி ஆக்ட் 23-வது பிரிவின்படி தர்மத்தின் பிரயோஜனத்தை அடைய வேண்டியவர்களுக்குறிய பாத்தியதையானது காலாவதி தோஷத்தால் நீங்கிப்போன உடன் ஏற்படுகிறது. அதாவது வழக்காடவேண்டியவர்கள் ஏற்பட்ட கெடுவுக்குள் வழக்காடத்தவறினுல் தர்ம சொத்தென்றுதெரிந்தும் தொகை கொடுத்துக் கிறயம் பெற்றவனுக்கு ஆக்ஷேபனைகெடு நீங்கின உடன் அந்த சொத்தில் பாத்தியதை உண்டாகிறது. இது நியாயமான முறையாகும். ஆகவே தாவா கேசில் 2-ம் பிரதிவாதி கிறயம் பெற்ற தர்ம சொத்தின் பேரில் வாதி வழக்கெடுக்க காலாவதிகெடு உண்டென்று சொன்னுல் (அதாவது 2-ம் பிரதிவாதி பொருள் கொடுத்து வாங்கியும் அது தர்ம சொத்தென்று தெரிந்தே அதை வாங்கியிருப்பதாகச் சொல்லி அதற்காக வழக்கெடுக்க கெடு ஏற்பட வேண்டியிருப்பதற்காக) 120-வதுஆர்டிகிலை பிரயோகித்து காலாவதி நிர்ணயம் செய்வது நியாயமாகும். யாதொரு கெடுவும் ஏற்படாத அம்சங்களுக்கு 120-வது ஆர்டிகில்படி 6-வருஷ கெடுவென்று விதிக்கப்பட்டிருக்கிறது. வாதியின் பிராதுக்கு 6 வருஷ காலாவதியை வாதிக்கு 2ம் பிரதிவாதி கிறயம் பெற்ற தகவல் தெரிந்தமுதலா அல்லது விக்கிறய தேதிமுதலா கணிக்க வேண்டுமென்று கேட்டால், வாதிக்காகத் தாங்கள் பப்ளிக் ஆபீஸராகிய நிலைமையில் வி. பி. வி. 92-வது பிரிவின் அம்சங்களை அனுசரித்துக்கொண்டுவந்த இந்தப்பிராதுக்குத் தாங்கள் 2-ம் பிரதிவாதி கிறயம்பெற்ற தகவல் தெரிந்தமுதல் காலாவதியை கணிக்கவேண்டுமென்றும பப்ளிக் ஆபீஸருக்கு தர்ம சொத்துக்களை யார் யார் மாற்றிக்கொள்ளுகிறார்களென்பதை ஆராய்ந்தறியும் கடமை யில்லையென்றும் சொல்லப்படுகிறது. 134-வது ஆர்டிகில்படி ஒரு டிரஸ்டியினிடம் கிறயம் பெற்றவனிடத்திலிருந்து சொத்தை சுவாதீனமடைவதற்கு 12 வருஷ காலாவதி விக்கிறயத்தேதிமுதல் கணிக்கப்பட வேண்டுமென்று குறிப்பாய் விதிக்கப்பட்டிருக்கிறது. 120-வது ஆர்டிகிலில் 6 வருஷ காலாவதியானது "வியாஜ்ஜியம்மூலமேற்படும் தேதிமுதல்" என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வசனத்தால் கவர்ன்மெண்டு வக்கில் சொல்லுகிறபடி வாதிக்கு வியாஜ்ஜியம்செய்ய பாத்தியம் ஏற்பட்டதாகத் தெரிந்தமுதல் என்று யூகிக்கக்கூடாது. ஆகையால் வி. பி. வி. 92-வது பிரிவின்படி ஜில்லா கலக்டருக்கு தர்ம சொத்தைக் கிறயம் பெற்றவன்பேரில் டிக்லேரேஷன் தாவா செய்யக்கூடுமானுல் அந்த தாவா கிறயத்தேதிமுதல் 6 வருஷங்களுக்குள் கொண்டுவரப்படவேண்டும். (ஆனுல் 92-வது பிரிவின்படி கலக்டர் இவ்வித பிராது 2-ம் பிரதிவாதியின்பேரில் கொண்டுவரலாமா கூடாதா என்பதைப் பற்றி யாதொரு அபிப்பிராயமும் கொடுக்கப்படவில்லை). வாதியின் தாவா 1899 ஜனவரிமுதல் 6 வருஷத்திற்குள் செய்யப்படாதபடியால் தள்ளுபடி யாகவேண்டியது நியாயமாகுமென்று தீர்மானிக்கப்பட்டது. செலவுதொகை தர்ம சொத்திலிருந்து இருதரப்பாருக்கும் செலுத்தப்படவேண்டுமென்றும் ஆனுல் முதலில் அப்பீல் வாதியாகிய2ம் பிரதிவாதி செலவுதொகையை வசூலித்தபிறகு மிகுதியான தர்ம சொத்தின் வருமானத்திலிருந்து வாதி செலவுதொகையை அடைய வேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது. ஆகையால் 2-ம் பிரதிவாதிக்குக் கிறயம் நிலை[illegible]

———( )———

## சில தீர்ப்புச்சுருக்கங்கள்.

ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

S. A. 2124 of 1912 ஏப்ரல் 1914

வாதி பெற்ற டிக்கிரியை நிறைவேற்றுமுன் டிக்கிரி பாக்கிதார் காலஞ்சென்றுவிடவே அவனுடைய இரண்டு வாரிஸ்கள் நிறைவேற்று நடவடிக்கையில் ரிகார்ட் செய்யப்பட்டார்கள். இருவரில் ஒருவருக்கு நிறைவேற்றுதலுக்காக எலம் போடப்படவேண்டிய சொத்தில் யாதொரு பாத்தியதையும் கிடையாதென்று ஏற்பட்டது. மற்றொரு வாரிஸ்தார் மைனராகயிருக்க அவனை மேஜரென்று காட்டி சொத்தை எலம் போட்டு முடிந்தது. எலமெடுத்தவனுக்கும் மைனர் என்ற ரகசியம் தெரியும். அப்படியிருக்க ஷை எல நடவடிக்கையானது முற்றிலும் வியர்த்தமாகுமென்று தீர்மானிக்கப்பட்டது. காலாவதி ஆக்ட் 12-வது ஆர்டிகில்படியாவது 166-வது ஆர்டிகில்படியாவது குறித்த காலத்திற்குள் எலத்தை ரத்து செய்யாதபட்சத்தில் எலம் நிலைத்ததாகுமென்ற வாதம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. 31 அலகபாத் 572 அனுசரிக்கப்பட்டு, 25 பம்பாய் 337 உதவக்கூடியதல்லவென்று பேதப்படுத்திக் காட்டப்பட்டது.

———:○:———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் ஓல்ட்வீல்ட்

C. M. A. 253 of 1913—24 ஏப்ரல் 1914

அடமான சொத்தை கலக்டரவர்கள் ரெவினியூ பாக்கிக்கா எலம் போட்டு வசூலான தொகையில் ரெவினியூ பாக்கிக்காகச் செல்லுவைத்துக் கொண்டதுபோக பாக்கித்தொகையைவரவழைத்துத்தன் அடமான டிக்கிரி பாக்கிக்காகக் கொடுக்கவேண்டுமென்று செய்துகொள்ளுகிற விண்ணப்பமானது காலாவதிக் குதவக்கூடிய நிறைவேற்று நடவடிக்கையைச் சேர்ந்த நடவடிக்கையாகுமென்று தீர்மானிக்கப்பட்டது.

———o———

ஜஸ்டிஸ் வாலிஸ் & ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்ட்.

S. A. 2044 of 1912—22 ஏப்ரல் 1914.

பாகப்பிரிவினைக்கு யோக்கியமில்லாத ஒரு எஸ்டேட்டின் பாத்தியதையானது புருஷனுக்குப்பின் பெண்சாதிக்குச் சென்றதில் ஒருவன் புருஷனிடத்தில் பத்திரப்படுத்திவைக்கும்படி டிபாஸிட் செய்திருந்த சில ஆபரணங்களைப்பற்றிப்பெண்சாதி ஷையானுக்கு உத்தரவாதம் செய்யக் கடமைப்பட்டவளல்ல. ஷை நகைகள் அவளிடத்திலிருந்ததாக ருஜுவாகும்பட்சத்தில் அவைகளை மாற்றி தான் உபயோகப்படுத்திக் கொண்டமட்டில் அதன் கிரயத்திற்கு அவள் ஜவாப்தாரி யாகிறாள்.

———:O:———

ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.

S. A. 2215 of 1912—21 ஏப்ரல் 1914

1860-ம் வருஷத்திய இனாம் கிராண்டினால் ஒரு தேவஸ்தானத்தைச் சேர்ந்த தேவதாஸிக்கு சில நிலங்கள் ஊழிய இனாமாகக் கொடுக்கப்பட்டது. அதற்காக அந்த தாஸி ஸாரதி என்றும் வெண்சாமரம் போடுவதும் ஸ்வாமிக்கு மற்ற பணிவிடை ஊழியங்கள் செய்வதும் கடமையாக ஏற்பட்டிருந்தது. ஷை ஊழிய இனாம் நிலங்களை தாஸியானவள் பிரதிவாதிக்கு விக்கிரயம் செய்து விடவே தேவஸ்தான தர்மகர்த்தா வாதியாக அந்த விக்கிரயம் சட்ட விரோதமென்று தீர்மானிக்கும் பொருட்டும் அந்த நிலங்களை சுவாதீனப்படுத்திக் கொள்ளும்பொருட்டும் கிரயம் பெற்ற பிரதிவாதியின் பேரில் தாவா செய்ததில் தேவஸ்தானத்திற்கு இது காலபரியந்தம் ஷை ஊழியங்கள் செய்துவரப்பட்டிருந்தபோதிலும் கிரயம் பெற்றவர்பேரில் தர்மகர்த்தா யாதொரு தாவாவும் செய்ய பாத்தியமில்லையென்று தீர்மானிக்கப்பட்டது. (அதாவது இனி அந்த ஊழியங்கள் நடந்தேறி வருவதற்குறிய ஆதாரம் தேவதாஸியை விட்டு விலகிப்போனதால் அந்த ஊழியத்தை முன் போல் கண்டித்து வாங்க ஏதுகரப்படாதென்று தர்மகர்த்தா சந்தேகப்பட்டு ஷை நிலங்களைக்கிரயம் பெற்றவன்பேரில் தொடரநியாயமில்லையென்று தீர்மானிக்கப்பட்டதுபோலும்.)

————

ஜஸ்டிஸ் மில்லர் & ஜஸ்டிஸ் சதாசிவய்யர்

S. A. 2617 of 1912—20 ஏப்ரல் 1914

ஒரு சுதேசகிறிஸ்தவஸ்திரீயானவள்யாதொரு மரணசாஸனமும் எழுதிவைக்காமல்இறந்துபோன தன் கணவனுடைய சொத்தில் தனக்கு பாகம் கிடைக்கவேண்டுமென்று ஷை யாருடைய குமாரர்கள் பேரில் பிராது செய்ததில் இறந்துபோனவருடைய எஸ்டேட்டுக்கு யாரும் லட்டர்ஸ் ஆப் அட்மினிஸ்டிரேஷன் அதிகாரத்தை கோர்ட் மூலமாய் அடையாத காரணத்தால் அந்தப்பிராதுக்கு காலாவதி ஆக்ட் 123-வது ஆர்டிகிலின் அம்சம் ஏற்காதென்றும் அதாவது வாதியின் பிராதுக்கு பங்கு விகிதமடைய வியாஜ்ஜியமூலம் ஏற்பட்ட முதல் 12 வருஷ காலாவதி யுண்டென்றுசொல்லக்கூடாதென்று 34 மதராஸ் 511-ஐ அனுசரித்துத் தீர்மானிக்கப்பட்டது.



————

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

C. R. P. 477 of 1913—17 ஏப்ரல் 1914.

குத்தகைச் சீட்டை எழுதிக்கொடுத்த ரயட்டின் பேரில் எழுதிவாங்கினவன் தாவா செய்யும்பொழுது நிலத்திற்குச் சொந்தக்காரன் வேறென்றும் தன்னிடம் எழுதி வாங்கிக்கொண்டவன் பெயரிரவல் காரனே யொழிய அவனுக்கு சொத்தில் யாதொரு பாத்தியதையு மில்லையென்றும் ஆகையால் அவன் குத்தகை தஸ்தவேஜை ஆதாரமாகக்கொண்டு தாவாசெய்ய நியாயமில்லையென்று ரயட்டானவன் ஆக்ஷேபிக்கலாம். எவிடென்ஸ் ஆக்ட் 116-வது பிரிவின் அம்சங்கள் அவ்வித ஆக்ஷேபனைக் கிடங்கொடுக்கிறது. 30 மதராஸ் 345-யும் 31 மதராஸ் 461-யும் பார்க்கவும்.

————

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஜஸ்டிஸ் டையாப்ஜி

திருச்சினாப்பள்ளி ஜில்லா

C. M. P. 923 of 1913 in S. A. 1333 of 1912

28 ஜனவரி 1914

சுந்தராம்பாள் அம்மாள் & கமலம்பாள் அம்மாள்

Vs

யோகவனக்குருக்கள்

திருச்சினாப்பள்ளி மலைக்கோட்டையிலுள்ள தேவஸ்தானத்தில் அர்ச்சக பாத்தியையப்பற்றியும் பூஜைக்குறிய மிராசு பாத்தியதைப்பற்றியும் உபயவாதிகளுக்குள் தகரார் ஏற்பட்டு சுந்தராம்பாளம்மாள், கமலாம்பாள் அம்மாள் என்ற இருவரும் வாதிகளாக யோகவனக் குருக்கள் என்றவர் பேரில் திருச்சினாப்பள்ளி டி-மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்து பிரதிவாதிக்கு யாதொரு பாத்தியதையும் கிடையாதென்று தீர்மானமடையப் பிரயத்தனப்பட்டதில் டி-மு கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லா கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாய் 1-ம் பிரதிவாதிக்கு பூஜாக்கிரியைகளை நடத்தவும் அதற்குறிய சம்மானங்களையும் மிராசுகளையும் அடையவும் பாத்தியதைஉண்டென்று டிக்கிரீயளித்தபின் வாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் செய்து அப்பீல் ஈரங்கிக்கு வருமுன் உபயவாதிகளும் ராஜீநாமா செய்துகொண்டார்கள். அந்த ராஜீநாமா உடன்படிக்கையின் பிரகாரம் டிக்கிரீயளிக்கவேண்டுமென்று அப்பீல் வாதிகள் ஹைகோர்ட்டில் சில்லரை மனுக்கொடுத்ததில் அந்த மனுவை 1-ம் பிரதிவாதி ஆக்ஷேபித்து அதற்கு 3 விதமான காரணங்களை எடுத்துச் சொன்னார்கள்:— (1) 2-ம் வாதியினுடைய கட்டாயத்தின் பேரிலும் ஏவுதலின்பேரிலும் தான் ராஜீநாமாவில் கையொப்பம் செய்ததாகவும் அதில் கண்டபடி நடக்க மனப்பூர்வமாய்த் தனக்குச் சம்மதமில்லையென்றும், (2) ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தீர்மானத்தில் தனக்கு பிரதிகூலமாகுமென்று பயந்து தனக்குள்ள பாத்தியதையானது நிலைக்குமோ நிலைக்காதோ என்ற சந்தேகத்தால் இவ்வித ராஜீநாமா உடன்படிக்கையில் கையொப்பம் செய்தவனல்லவென்றும் ஆனால் அது தனக்குறிய பாத்தியதையைமிகவும் குறைந்த விலைக்கு விக்கிரயம் செய்த ஏற்பாடாகிறதென்றும், ஆகையால் தகுதியான பிரதிபிரயோஜனமில்லாத விக்கிரயமானது செல்லத்தகாதென்றும், (3) ராஜீநாமாவே சட்டவிரோதமென்றும் ஏனெனில் ஒருமத சம்பந்தமான உத்தியோகத்தை சட்டப்படி நடத்திவர யோக்கியமில்லாத ஸ்திரீகளுக்கு மாற்றினதே பிசகென்றும், ஆக மூன்றுவிதமான ஆக்ஷேபனை செய்தார்கள். ஹைகோர்ட்டார் 1, 2 ஆக்ஷேபனைகளை ஏற்றுக்கொள்ளாமல் கடைசியாயின்டை கவனித்து பூஜையை நடத்த யோக்கியமில்லாத பெண்ணினங்களாகிய வாதிகளுக்கு 1-ம் பிரதிவாதி தான் கீழ்கோர்ட்டில் பெற்ற டிக்கிரீப்படி கிடைத்த பாத்தியதையை-கிரயம் செய்துமாற்றினது சட்ட விரோதமென்றும் சாஸ்திர விரோதமென்றும் ஜனப்பொது நலத்திற்கும் குறைவென்றும் அபிப்பிராயப்பட்டு ராஜீநாமாவை அங்கீகரிக்காமல் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஹைகோர்ட்டாருடைய தீர்மானத்திலடங்கிய முக்கிய காரணங்களாவன:— ராஜிநாமா 1913 மார்ச்சில் கையொப்பம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குமுன் அதாவது பிப்ரவரி மாதத்தில் 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியின் கணவனோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறார். அதில் தனக்கு கீழ்கோர்ட்டில் டிக்கிரீப்படி கிடைத்த அர்ச்சக பாத்தியதையில் சிலவற்றை வாதிகளுக்குமாற்றிவிடுவதாயும் மற்ற மிகுதியான பாத்தியதையை 2-ம் வாதியின் புருஷனுக்கே மாற்றிவிடுவதாயும் ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த இரண்டு ஏற்பாடுகளும் 2-ம் வாதியின் புருஷன் ரூ 2500 கொடுப்பதாய் வாக்குக் கொடுத்ததின் பேரில் ஒரே காலத்தில் பிரதிவாதியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த ஏற்பாட்டை அனுசரித்தே மார்ச்சு மாதத்தில் ராஜிநாமா உடன்படிக்கையானது ஏற்பட்டிருக்கிறது. அதில் 2வது அப்பீலை நடத்துவதினால் நேரும் செலவுகளையும் நஷ்டங்களையும் தொந்தரவுகளையும் எதிர்பார்த்து பின்வருமாறு ராஜிநாமா செய்து கொள்ளப்பட்டதென்று கண்டிருக்கிறது. அதாவது பிரதிவாதியின் கடன்களை வாதிகள் தீர்த்துவிடுகிறதென்றும் அதற்காக பிரதிவாதி தனக்குக் கிடைத்த அர்ச்சக பாத்தியதையில் ஒரு பாகத்தை வாதிகளுக்கு மாற்றி விடுகிறதென்றும் ராஜிநாமாவில் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது. மேற்கூறிய சந்தர்ப்பத்தால் ஏற்பட்ட ராஜீ நாமாவை மூன்றுகாரணங்களால் பிரதிவாதி இப்பொழுது ஆக்ஷேபிக்கிறார். முதல் இரண்டு காரணங்களில் யாதொரு பிரயோஜனமுமில்லை. அவைகளை ஏற்றுக்கொள்ள நியாயமில்லை. ராஜிநாமா ஏற்படும் காலத்தில் பிரதிவாதிக்கு அதிக நிர்பந்தமான பணக்கஷ்டமிருந்தது வாஸ்தவமே. அச்சமயத்தில் ஒரு கடன்காரனும் பாக்கிக்காக பிரதிவாதியை வாரண்டில் பிடித்தமையால் அவர் இன்ஸால்வென்ஸி விண்ணப்பம் கொடுக்கவும் நேரிட்டிருக்கிறது. ஆனால் தன்னுடைய கஷ்ட தசையில் குறைந்தவிலைக்கு சுனக்கிரயமாக ஒருவன் தன் சொத்தை விக்கிரயம் செய்து கொடுத்தால் ஒரு ஒப்பந்தத்தின்பேரில் தன் பாத்தியதையை மாற்றிக்கொடுத்திருக்க அதை பிறனுடைய எவுதலால் செய்துமுடித்ததாகச் சொல்லக்கூடாது. 1-ம் பிரதிவாதி அதிகமான மனக்கிலேசத்தினால் சித்தம் கலங்கியிருந்ததாகவாவது அல்லது 2-ம் வாதியின் புருஷன் 1-ம் பிரதிவாதியை அடக்கியாளும் மேலதிகார முடைய ஸ்திதியிலிருக்கிறானென்றாவது ஏற்படவில்லை. ஆகையால் பிரதிவாதி தான் எழுதிக் கொடுத்திருக்கிற ஒப்பந்தத்தை இவ்வித காரணங்களால் நிராகரிப்பது நியாயமல்ல.

முக்கியமாக மூன்றாவது ஆக்ஷேபணையைப்பற்றி கவனிப்பது நியாயமாகும். அதாவது சட்டவிரோதமான ஒரு ஏற்பாட்டை பார்டிகள் ராஜிநாமாவில் கண்டிருந்தால் அதைக்கோர்ட்டார் அங்கீகரிக்கக் கூடாதென்பதேயாம். ஆகையால் ஸ்திரீகளுக்கு ஒரு அர்ச்சக உத்தியோகத்தை மாற்றி விடுவது சட்டவிரோதமென்றும் ஏனெனில் ஸ்திரீகள் அந்த உத்தியோகத்தை நடத்திவர யோக்கியமானவர்களல்லவென்றும அவ்விதசட்டவிரோதமான ஏற்பாட்டை ராஜிநாமாவில் காண்பது பிசகென்றும் சொல்லப்படுகிறது. தவிற ஒரு தேவஸ்தான உத்தியோக விஷயமாக அல்லது ஜனப்பொதுவான உத்தியோக விஷயமாக வழக்குகள் ஏற்பட்டு கோர்ட்டுக்கு வந்தால் அந்த வியவகாரத்தை ராஜிநாமாவின்படி பைசல் செய்து கொள்ள கோர்ட்டார் அனுமதிகொடுக்கக்கூடாதென்றும் சொல்லப்படுகிறது. மேற்கூறிய இரண்டு பாயிண்டுகளுக்கும் வாதிகள் சமாதானமாக, ராஜீநாமா உடன்படிக்கையானது ஒரு மத சம்பந்தமான உத்தியோகத்தை மாற்றும் வகையான ஏற்பாடல்லவென்றும் வாதிகளுக்கு தாவாவில் கண்டபடி கொஞ்சம் பாத்தியதையிருப்பதாக ராஜீநாமாவில் ஒப்புக்கொள்ளப்படுவதால் சந்தேகமான வழக்கை மேல் நடத்திப்பார்க்காமல் சமாதானமாய் முடித்துக்கொள்ளும் ஏற்பாடென்றும், அர்ச்சக உத்தியோக பாத்தியதையானது ஆளைப்பொருத்த வகையில் பாத்தியதையாகிறபடியால் வியவகாரத்திற்கு வந்திருக்கும் ஷை பாத்தியதையைப்பற்றி ராஜிநாமா செய்து முடித்துக்கொள்வது சட்டவிரோதமல்லவென்றும், அப்படிக்கு ஷை உத்தியோக பாத்தியதையானது ப்ரைவேட்டான வகையில் பாத்தியதையல்லாதபோதிலும் அதைப்பற்றி ஏற்படும் வழக்கை சமாதானமாய் ராஜிநாமாவில் முடித்துக்கொள்வது சட்டவிரோதமல்லவென்றும் சொல்லப்பட்டது.

ராஜீநாமாவை முற்றிலும் படித்துப்பார்த்ததில் யாதொரு பிரதி பிரயோஜனத்தை அடைந்து அதற்காக 1-ம் பிரதிவாதி சிற்சில ஆலயங்களில் தனக்குள்ள அர்ச்சகபாத்தியதையை வாதிகளுக்கு விநியோகம் செய்து விட்டதாகத்தெரிகிறது.

3L

161989
Z 21 m M13